REPRINT

ஸ்ரீ மஹாபாரதம்

சாந்திபர்வம்

(முதற்பாகம்)

(ராஜதர்மம், ஆபத்தர்மம்.)

கும்பகோணம், அத்வைதஸபாபண்டிதர்

வேதாந்தகேஸரி மஹாமஹோபாத்யாயர்

பைங்காநாடு

கணபதிசாஸ்திரிகள்

ஈவர்களால்

மொழிபெயர்க்கப் பெற்று,

கும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் தமிழ்ப்பண்டிதர்

ப. வீ. இராமாநுஜாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா 3-8-0 : தபால்சார்ஜ் வேறு.

MADRAS:

PRINTED AT THE VAJAYANTI PRESS.

1930

(All Rights Reserved)

T his Title Page Printed at The Kesari Printing Works, Madras.

ஸ்ரீ :

ஸ்ரீ மஹாபாரதம்.

சாந்திபர்வ

விஷயஸூசிகை.

ராஜதர்மம்.

அத்யாயம்.		பக்கம்.
1	கடவுள் வாழ்த்து	1
	யுதிஷ்டிரர் நீர்க்கடன்கழித்தபின் ரிஷிகள் அவரைச்சூழ்ந்தது	2
	நாரதர் தர்மபுத்ரரை ஞாதிவதத்தைக்குறித்து விஞவியது	2
	தர்மபுத்ரர் வருந்தியதும், கர்ணனுக்குச் சாபம் வந்த காரணத்தை விஞவியதும்	2 - 5
2-5	நாரதர் கர்ணன்வரலாற்றைக் கூறியது	5 - 13
	கர்ணன், ப்ரம்மாஸ்த்ரத்தை உபதேசிக்கும்படி த்ரோணரைக் கேட்டதும், அவர் மறுத்ததும்	6
	கர்ணன், பரசுராமரை அடைந்து அஸ்த்ரவித்தைகற்றது	6
	கர்ணனுக்கு ப்ராம்மணசாபம் நேர்ந்தது	6 - 7
	பரசுராமர் கர்ணனுக்கு ப்ரம்மாஸ்த்ரத்தை உபதேசித்தது	8
	பரசுராமர் கர்ணன்துடையில் துயின்றதும், அவன் துடையைப் புழு துளைத்ததும், பரசுராமர் விழித்துக்கொண்டு கர்ணனை விஞவியதும்	8
	புழு ராக்ஷஸவடிவமடைந்து தன் வரலாற்றைக் கூறியது	8 - 9
	பரசுராமர் உண்மைசொல்லும்படி கேட்க, கர்ணன் தன் பிறப்பின் உண்மையைக் கூறியது	9 - 10
	பரசுராமர் கர்ணனைச்சபித்ததும், அவன் ஊருக்குத திரும்பியதும்	10
	கர்ணன் முதலியோர் ராஜபுரத்தில் ஸ்வயம்வரத்திற்காகக் கூடியது	10 - 11
	துர்யோதனன் கர்ணனுடன் சேர்ந்து கன்னிகையைத் தூக்கிச்சென்றது	11 - 12
	கர்ணனும் ஜராஸந்தனும் யுத்தஞ்செய்ததும், ஜராஸந்தன் கர்ணனை மெச்சி மாலினி நகரத்தை அவனுக்குக் கொடுத்ததும்	12
	கர்ணனுடைய மரணத்துக்குக் காரணங்கள் ...	12 - 13
6	குந்தி தர்மபுத்ரரைத் தேற்றியது	13 - 14

விஷய வரிசை

அத்யாயம்.		பக்கம்.
	தர்மபுத்திரர், ஸ்திரீகளைச்சபித்ததும், ராஜ்யத்தில்வெறுப் படைந்ததும்	14
7	தர்மபுத்ரர், ப்ரலாபித்து, முனியாகிவனம்செல்வேனென்றது	15- 18
8	அர்ஜுனன் இல்லறத்தின்சிறப்பைக்கூறி அச்வமேதம் செய்யும்படி வற்புறுத்தியது	19- 21
9	தர்மபுத்ரர் ஸந்யாஸத்தைப்பாராட்டி உலகவியல்புகளைக் கூறியது	22- 25
10	பீமஸேனன் ஸந்யாஸத்தைமறுத்துக் கர்மாவைச் சிறப் பித்துச் சொல்லியது	25- 27
11	பக்ஷிரூபியான இந்த்ரனுக்கும் ரிஷிகளுக்கும் நடந்த ஸம் பாஷணை	28- 30
12	நகுலன் கர்மா செய்யத்தக்கதென்பதையும் இல்லறத்தின் சிறப்பையும் கூறியது	31- 35
13	ஸஹதேவன் ஸந்யாஸத்தின் ப்ரமத்தையும் கர்மாவே செய்யத்தக்கதென்பதையும் கூறியது	35- 36
14	த்ரௌபதி தண்டநீதியின் சிறப்புமுதலியவற்றையும் அர சாள வேண்டுமென்பதையும் கூறியது	37- 46
15	அர்ஜுனன் திரும்பவும் செங்கோலின் சிறப்பைக்கூறி அரசாளும்படி தர்மபுத்திரருக்குச் சொல்லியது ...	46- 50
	யார்யாருக்கு எவைஎவை தண்டமாகுமென்பது ...	47
16	பீமஸேனன் தர்மபுத்ரரைஇடித்துரைத்து அச்வமேதம் செய்யும்படி கூறியது	51 53
17	தர்மபுத்திரர் வைராக்யமேசிறந்ததென்று பீமனுக்குச் சொல்லியது	53 55
18	அர்ஜுனன் கர்மாவேசிறந்ததென்று சொல்லியது ...	55 59
	ஜனகரின்மனைவி இல்லறத்தின்சிறப்பைக் கூறியது ...	56 58
19	தர்மபுத்ரர் ஸந்யாஸமேசிறந்ததென்று அர்ஜுனனுக்குச் சொல்லியது	59 61
20	தேவஸ்தானர் யாகம்செய்யும்படி தர்மபுத்திரருக்குக் கூறியது.	61 63
21	தேவஸ்தானர் ஸ்வதர்மத்தைஅனுஷ்டிப்பது சிறந்த தென்றது	63 64
22	அர்ஜுனன் க்ஷத்ரியதர்மம் சிறந்ததென்றும் போன தைக்குறித்துத் துயரப்படலாகாதென்றும் கூறியது	65 66
23	வ்யாஸர் செங்கோலின்மேன்மையைக்கூறியது ...	66 67
	லிகிதர் சங்கர்ஆச்ரமத்தில் பழத்தைப்பறித்துத் தின்றது	67 68
	ஸுத்யும்னன் லிகிதர்கையை அறுத்தது ...	68
	மஹாபாதகங்கள் இவையென்பது ...	69
	திருட்டுச்செய்தவர்களுக்கு இன்னதண்டனையென்பது	69
	லிகிதர் இழந்தகையைப் பெற்றது	69

அத்யாயம்.		பக்கம்.
24	வ்யாஸர் தர்மபுத்ரரை அரசாளும்படி சொல்லியது ...	70
	வ்யாஸர் தர்மபுத்ரருக்கு ராஜநீதிமுறையைக் கூறியது	71- 72
	ஹயக்ரீவராஜன் சரித்ரம்	72- 73
25	தர்மபுத்ரர் தம்சோகம் நீங்கவில்லையென்று வ்யாஸருக்குச் சொல்லியது	73- 74
	காலத்தின் வன்மை	74- 76
	நீதியுள்ள அரசன் ஸ்வர்க்கம்அடைவானென்பது ...	76
அதிகபாட அத்யாயம்---தர்மராஜர் அர்ஜுனனுக்கு நீதி சொன்னது		77- 79
	மனிதன் எப்பொழுது ப்ரம்மமாகிறானென்பது ...	78
	பொருள் யாகதானங்கட்கே உரியதென்பது ...	79
26	தர்மபுத்ரர் பந்துக்களைக்குறித்துப் பலவாறு புலம்பியது	79- 81
	தர்மபுத்ரர் ப்ராயோபவேசத்துக்கு ரிஷிகளிடம் அனுமதி கேட்டது	81
	வ்யாஸர் கர்மாவே செய்யத்தக்கதென்றது ...	81- 82
27	வ்யாஸர், அஸ்மர் ஜனகருக்குச்சொன்ன ஞாநோபதேசத்தைத் தர்மபுத்ரருக்குச் சொல்லியது ...	82- 86
28	அர்ஜுனன் தர்மபுத்ரரைத் தேற்றும்படி க்ருஷ்ணனுக்குச் சொன்னது	86- 87
	க்ருஷ்ணன் தர்மபுத்ரரைத் தேற்றியது	87- 98
	நாரதர் ஸ்ருஞ்சயனுக்குப் பதிநேறு அரசர்களின் கதையைக் கூறியது	88- 97
	நாரதர் இறந்தபுத்ரனைப் பிழைப்பித்தது ...	98
29	தர்மபுத்ரர் க்ருஷ்ணனை ஸ்வர்ணஷ்டீவியின் சரித்ரத்தைவிஞவியது	98
	நாரதபர்வதர்களைப்பற்றிய சிலகதைகள்	99-101
30	பர்வதர் ஸ்ருஞ்சயனுக்குப் புத்ரனுண்டாகவரமளித்தது	102
	ஸ்ருஞ்சயனுக்குப் புத்ரனுண்டானது	103
	இந்த்ரன்கட்டளையால் ஸ்வர்ணஷ்டீவியை வஜ்ராயுதம் கொன்றது	103
	ஸ்ருஞ்சயன் நாரதரால் புத்ரனை மறுபடியும் அடைந்தது	104
31	வ்யாஸர் தர்மபுத்ரருக்குத் தத்வோபதேசம்செய்தது ...	105-107
	தர்மபுத்ரர், ஆஸ்ரமதர்மத்தைச் சொல்லும்படி வ்யாஸரைக் கேட்டது	107
32	காலத்தின்வன்மை	108
	தேவாஸுரயுத்தம்	109
	வ்யாஸர், இறந்தஅரசர்களின் ஸந்ததிகளை அரசாளச் செய்வித்து, அஸ்வமேதம்செய்யும்படி தர்மபுத்ரருக்குச் சொல்லியது	110
33	எவர்கள் பாபமுள்ளவர்களென்பது	111-112

அத்யாயம்.		பக்கம்.
	கெட்டகார்யத்தைச்செய்தும் பாபம்வராதிருக்கும் காரணங்கள்	... 112-113
34	ப்ரம்மஹத்திமுதலிய தோஷங்களுக்கு ப்ராயச்சித்தங்கள்	113-117
	வெண்கலப்பாத்ரத்தின் சுத்திமுறை ...	... 116
35	எவைஎவை மனிதனைச் சுத்தனுக்குமென்பது	... 118-119
	தர்மலக்ஷணம்	... 119
	தர்மஸந்தேஹம்வந்தால் யார்யாரிடத்தில் கேட்கலா மென்பது	... 120
	ப்ராம்மணருக்குப் புஜிக்கத்தகாதவை ...	... 120-121
	தானம்பெறத்தகாதவர்களும் தக்கவர்களும்	... 121-122
36	தர்மபுத்திரர் ராஜதர்மமுதலியவற்றை விரிவாகக் கேட்க விரும்பியது	... 123
	வ்யாஸர், பீஷ்மரிடம்சென்று தர்மங்களைக்கேட்கும் படி, தர்மபுத்ரருக்குக் கூறியது ...	... 123-124
	க்ருஷ்ணன் வ்யாஸர்சொற்படி நடக்கச்சொன்னது	... 124
	தர்மபுத்திரர்முதலியோர் ஹஸ்திநாபுரம்வந்தது	... 126
37	தர்மபுத்திரர் அரண்மனையில் ப்ரவேசித்தது	... 127
	தர்மபுத்ரர் ராஜஸபையில் ப்ரவேசித்தது	... 127-128
	சார்வாகன் தர்மபுத்ரரைத் தூஷித்தது	... 128
	தர்மபுத்திரர் ப்ராம்மணர்களிடம் க்ஷமைகேட்டது	... 128
	ப்ராம்மணர்கள் சார்வாகனை எரித்தது	... 129
38	க்ருஷ்ணன் சார்வாகன்வரலாற்றைக் கூறியது	... 129-130
39	தர்மபுத்ரர் ராஜ்யாபிஷேகம் ...	... 130-131
40	தர்மபுத்திரர் ப்ரஜைகளுக்கு விடைகொடுத்தனுப்பியது	133
	தர்மபுத்திரர் விதுரர்முதலியோரை ஏற்றவேலைகளில் நியமித்தது	... 133
41	தர்மபுத்ரர் இறந்தவர்களைக்குறித்து ச்ராத்தங்களையும் பல தர்மங்களையும் செய்தது ...	... 134
	தர்மபுத்திரர் யுத்தத்திலிறந்தவர்களின் பந்துக்களைக் காப்பாற்றியது	... 134-135
42	தர்மபுத்ரர் க்ருஷ்ணனைச் சதநாமங்களால் துதித்தது	135-136
43	தர்மபுத்ரர், பீமஸேனன்முதலியோர்களுக்குத்தர்யோத னாதிகளுடையஅரண்மனைகளைக் கொடுத்தது	... 137
	பீமன்க்ருஷ்ணன்முதலியோர் மறுநாட்காலையில் தர்ம புத்ரரிடம் வந்தது	... 137
44	தர்மபுத்ரர் உறவினர்களுக்கும் குடிகளுக்கும் பொருள் முதலியன கொடுத்தது	... 138
	தர்மபுத்ரர் கிருஷ்ணனைக் குசலப்ரச்னஞ்செய்தது	... 139
	க்ருஷ்ணன் நிஷ்டையிலிருந்தது ...	... 139
45	தர்மபுத்ரர், க்ருஷ்ணனை நிஷ்டையின்காரணம் கேட்டது	139-140

அத்யாயம்.		பக்கம்.
	க்ருஷ்ணன் நிஷ்டையின்காரணத்தைச் சொல்லி, பீஷ்மரிடம் ஸகல தர்மங்களையும்கேட்கும்படி தர்மபுத்திரருக்குக் கூறியது	140-141
	தர்மபுத்ரர் க்ருஷ்ணதர்சனம் பீஷ்மருக்கு அவஶ்யம் என்றது	141
46	பீஷ்மர் க்ருஷ்ணனைப் பலவாறு துதித்தது ...	143-153
	பீஷ்மஸ்தவராஜம்	145-153
	க்ருஷ்ணன் பீஷ்மருக்குத் திவ்யஜ்ஞானம் அளித்தது ...	153
	பீஷ்மஸ்தவராஜத்தைப் படித்தல்கேட்டல்களின் பயன்	153
47	தர்மபுத்ரர் க்ருஷ்ணன்முதலியவரோடு குருக்ஷேத்திரம் சென்றது	154
	க்ருஷ்ணன் தர்மபுத்ரருக்குப் பரசுராமருடைய பராக்ரமத்தைச் சுருக்கமாகக் கூறியது	154
	தர்மபுத்ரர், பரசுராமரால் க்ஷத்ரியர்கள் அற்றுப் போனதையும் பிறகு உண்டானதையும் விரித்துரைக்கக் கேட்டது	154-155
48	ரிசீகர், தம்மனைவிக்கும் மாமிக்கும் புத்ரோத்பத்திக்காகச் சரு அளித்தது	156
	ரிசீகரின்மாமி சருவை மாற்றியது	156
	ரிசீகருக்கும் அவர்மனைவிக்கும் ஸம்பாஷணம் ...	156
	அக்நி, வஸிஷ்டரின் ஆஶ்ரமத்தை எரித்தது ...	158
	வஸிஷ்டர் கார்த்தவீர்யார்ஜுனனைச் சபித்தது ...	158
	பரசுராமர், கார்த்தவீர்யார்ஜுனனுடைய கைகளை அறுத்தது	159
	கார்த்தவீர்யார்ஜுனனுடைய குமாரர்கள் ஜமதக்னியைக் கொன்றது	159
	பரசுராமர், கார்த்தவீர்யார்ஜுனன்புத்ரர்களையும் மற்றுமுள்ள க்ஷத்ரியர்களையும் கொன்றது ...	159
	பராவஸு பரசுராமரை இகழ்ந்தது ...	159
	பரசுராமர் இருபத்தொருமுறை க்ஷத்ரியர்களைக் கொன்றது	160
	பரசுராமர், பூமியைக் கஶ்யபருக்குக் கொடுத்துச் சென்றது	160
	பூமிதேவி, கஶ்யபரிடம் க்ஷத்ரியர்களை யாசித்தது ...	161
	கஶ்யபர், க்ஷத்ரியர்களுக்கு அபிஷேகம்செய்தது ...	162
49	க்ருஷ்ணதர்மபுத்ராதியோர் பீஷ்மரிருக்கும் இடம் அடைந்தது	163
	க்ருஷ்ணன் பீஷ்மரைத் துதித்து, தர்மபுத்ரருக்கு தர்மத்தை உபதேசிக்கும்படி சொல்லியது ...	163-165
50	பீஷ்மர், க்ருஷ்ணனைப் புகழ்ந்தது	165-166
51	பீஷ்மர் தர்மோபதேசஞ்செய்யச் சக்தியில்லையென்றது ...	167-168
	க்ருஷ்ணன் பீஷ்மருக்கு வரமளித்தது ...	168-169

அத்யாயம்.		பக்கம்.
	மஹரிஷிகள் விடைபெற்றுச் சென்றதும், க்ருஷ்ணதர்ம புத்ராதியோர் மாலயில் ஹஸ்திநபுரம்சேர்ந்ததும் ...	169-170
52	க்ருஷ்ணதர்மபுத்ராதியோர் காலக்கடன் முடித்துப் பீஷ்மரிடம்வந்தது	170-172
53	நாரதர், தர்மபுத்ரர்முதலியோரைப் பீஷ்மரிடம் தர்மங் களை விரைவில் கேட்கும்படி சொல்லியது ...	172-173
	பீஷ்மர் தர்மபுத்ரருக்கு க்ருஷ்ணன் தர்மோபதேசஞ் செய்யாத காரணத்தை க்ருஷ்ணனிடம் கேட்டது ...	174
	க்ருஷ்ணன் தாம்உபதேசியாதகாரணத்தைக் கூறி, பீஷ் மரை உபதேசிக்கும்படி சொல்லியது	174-175
54	பீஷ்மர் தர்மபுத்ரரைப் புகழ்ந்தது	175-176
	க்ருஷ்ணன், தர்மபுத்ரர் வெட்குவதாகப் பீஷ்மருக்குச் சொல்லியது	176
	பீஷ்மர், க்ஷத்ரியருக்கு யுத்தம் தர்மமென்பதைக்கூறித் தர்மபுத்ரரை ஸமாதானஞ்செய்தது ...	176-177
	தர்மபுத்ரர் பீஷ்மரைவணங்கியது	177
	பீஷ்மர், தம்மிடம் தர்மங்களைக்கேட்கும்படி, தர்மபுத்ர ருக்கு அனுமதிகொடுத்தது	177
55-57	தர்மபுத்ரர், பீஷ்மரிடம் ராஜதர்மத்தைக்கேட்டது	177-178
	பீஷ்மர், தர்மபுத்ரருக்கு ராஜதர்மங்களை உபதேசித்தது.	178-188
	க்ருஷ்ணதர்மபுத்ராதியோர் ஹஸ்திநபுரம்வந்தது ...	189
58	தேவர்கள், ப்ரம்மதேவரிடம் பூமி அராஜகமாயிருப் பதைப்பற்றி முறையிட்டது	190-191
	ப்ரம்மதேவர், தண்டநீதிநூல் இயற்றியதும் அதிலடங் கிய விஷயங்களும்	191-194
	சிவன்முதலியோர் தண்டநீதிநூலை முறையே சுருக்கியது	195-196
	விராஜஸ், கீர்த்திமான், கர்த்தமர், அனங்கன், அதிபலன், ஸுநீதை, வேனன் இவர்களின்வரலாறு ...	196
	ப்ருதுராஜசரித்ரம்	197-198
	ராஜா, க்ஷத்ரியன், ப்ருதிவிஎன்னும் பெயர்களின் பொருள்	199
	பொருளும் தர்மமும் லக்ஷ்மியும் ராஜ்யத்தில் ஸ்தாபிக்கப் பட்டது	199
59	நான்குவர்ணங்களின் தர்மங்கள்	201-204
60	நான்குஆஸ்ரமங்களின் தர்மங்கள்	205-207
61	இழிதொழிலச்செய்பவருக்கு வரும்கதிமுதலியன ...	207-208
62	ப்ராம்மணருக்குத் தகாதவை	208-209
	க்ஷத்ரியர்முதலியோருடைய தர்மங்கள் ...	209-210
	ராஜதர்மத்தின்சிறப்பு	210-211
63-64	இந்திரனுக்கும் மாந்தாதாவுக்கும் ராஜதர்மத்தைப் பற்றிய ஸம்பாஷணை	212-217

அத்யாயம். பக்கம்.

65 ராஜதர்மத்தில் மற்றைத்தர்மங்களும் அடங்கியிருக்கின்றன என்பது 217-220
66 அரசன்இருத்தல் இல்லாமைகளால் ராஜ்யத்துக்குவரும் நன்மைதீமைகள் 220-221
மனுசரித்ரச்சுருக்கம் 222-223
67 வஸுமனஸுக்கும் ப்ருஹஸ்பதிக்கும் நடந்த ஸம்பாஷணை 224-228
அரசன் காவாமையால் ராஜ்யத்திற்குவரும் தீமைகளும் காத்தலால்வரும் நன்மைகளும் 224-226
அரசன் ஜந்துதேவரூபியென்பதும், இன்னஇன்ன செய்கையால் இந்தஇந்தத்தேவரூபிஎன்பதும் ... 226-227
அரசனுக்குக் கீழ்ப்படிந்து, அவனைப் பூஜிக்கவேண்டுமென்பது 227-228
68 அரசாட்சியின்முறை 228-235
69 தண்டநீதியின்சிறப்பு 236
அரசன், இன்னஇன்னவிதமாகத் தண்டம்செலுத்துங்கால் இன்னஇன்னயுகம் நடைபெறுமென்பது ... 236-237
இன்னஇன்னயுகத்தைநடத்தும் அரசனுக்கு இன்ன இன்ன பதவிஎன்பது 237
70 அரசனுக்குரிய முப்பத்தாறுகுணங்கள் 238-239
71 அரசன் கவலைப்படாதிருக்கத்தக்க உபாயங்கள் ... 239-241
அரசன் பஞ்சகாலத்தில் குடிகளுக்குப் பொருளுதவி செய்யவேண்டுமென்பது 240
அரசன் தர்மம்தவறுமலிருக்க உபாயங்கள் ... 241
ப்ரஜைகளைப் பயத்தினின்று காவாதவனுக்கும் காப்பவனுக்கும் வரும் நரகமும் ஸ்வர்க்கமும் 241-242
72 நான்குவர்ணத்தார்களும் ப்ரம்மதேவரின் எந்தஎந்த அங்கங்களிலிருந்து உண்டாஞர்களென்பது ... 242-243
புரோஹிதராயிருக்கத்தக்கவரின் குணங்களும் நான்கு ஜாதிகளின் தாரதம்யமும் 243-244
73 புரோஹிதரின்லக்ஷணங்கள் 245-247
அரசனுக்குவரும் அழிவிதப்பாவங்கள் 245
புரோஹிதனுக்கும் கர்ப்யபருக்கும் ஸம்பாஷணை ... 248-251
ப்ராம்மணரை ரக்ஷியாத அரசனுக்குவரும்துன்பங்கள் ... 248-249
ப்ரஜைகளின்புண்யபாபங்கள் அரசனைச்சேருமென்பது 249-250
74 முசுகுந்தன் புரோஹிதபலத்தால் குபேரசேனையை ஜயித்தது 252
குபேரனுக்கும் முசுகுந்தனுக்கும் ஸம்பாஷணை ... 252-253
புரோஹிதரால் அரசருக்கு நேரும்நன்மைகள் ... 253
ப்ராம்மணரும் க்ஷத்ரியரும் முறையே தீர்த்தமும் ஆயுதமுமுள்ளவராயிருக்கவேண்டுமென்பது ... 253

விஷயஸூசிகை.

அத்யாயம்.		பக்கம்.
75	அரசன் எவ்விதஒழுக்கமுள்ளவனாக இருக்கவேண்டு மென்பது	254-255
	பிறர்துக்கத்தைப் பொறாத அரசன் மேன்மையடையா னெனபது	255
	கர்மங்களைச்செய்வது அவஸ்யமென்பது ...	256
76	எந்தஎந்தத்தொழிலைச் செய்யும் ப்ராம்மணர், யார் யாருக்கு ஒப்பாவார்என்பது	257-258
	யார்யாரிடத்தில் மந்த்ரங்களை உபயோகிக்கக்கூடா தென்பது	258
	ப்ராம்மணலக்ஷணம்	259
77	அரசன், யார்யாருடைய பொருளுக்குஉரியன் என்பது	260
	கேகயராஜனுக்கும் ரக்ஷஸுக்கும் ஸம்பாஷணை ...	260-263
	அரசன் அந்தணரை நன்றாகக் காக்கவேண்டுமென்பது	263
78	ப்ராம்மணர்கள், வைஸ்யதர்மத்தாலும் ஜீவிக்கலாமென் பது	263
	ப்ராம்மணர்கள், எவற்றை விற்கக்கூடாதென்பது ...	263-264
	எந்தக்காலத்தில் எந்தஜாதியாரும் ஆயுதம்எடுக்கலாம் என்பது	264
	ப்ராம்மணர்கள் தீயவொழுக்கமுள்ள அரசனை அடக்க வேண்டுமென்பது	265
	ப்ராம்மணர்களை ரக்ஷித்தவருக்குவரும் உலகங்கள் ...	265-266
	ஆபத்காலத்தில் ப்ரஜைகளை எவரும் காக்கலாமென்பது	266-267
79	ரித்விக்குக்களின்கார்யமும் லக்ஷணமும்	267
	யாகதக்ஷிணங்களின் சிறப்பு	268-269
80	சத்ரு, மித்ரன், உதாஸீனன், ஜாதிமுதலியோரின் லக்ஷணமும், அவர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய விதமும்	269-273
81	க்ருஷ்ணனுக்கும் நாரதருக்கும் ஜாதிவிஷயமாக நடந்த ஸம்பாஷணை	273-276
82	அமாத்ய பரீக்ஷணையைப்பற்றிய காலகவ்ருக்ஷீயோபாக் யானம்	276-282
83	சபையோரின்லக்ஷணம்	282
	ஸஹாயர்களின்லக்ஷணம்	282
	சேனைத்தலைவர் முதலியோரின் லக்ஷணங்கள் ...	282-283
	மந்த்rமுதலியோரின் லக்ஷணங்கள்	283-284
	அதிகாரத்தில் நியமிக்கத்தகாதவர்களின் லக்ஷணங்கள் ...	284-285
	ஆலோசனைகேட்கத்தகாதவர்களும் தக்கவர்களும் ...	285-286
	அரசன் ஆலோசிக்கவேண்டிய முறை	286-287
84	இன்சொற்சொல்வதைப்பற்றி ப்ருஹஸ்பதிக்கும் இந்திர னுக்கும் சம்பாஷணை	287-288

அத்யாயம்.		பக்கம்.
85	எந்தஎந்தவர்ணத்தாரில் எத்தனைஎத்தனைபேரை மந்த்ரியாக்கவேண்டுமென்பது	289
	வ்யவஹாரவிசாரணைமுறைமுதலியன	290
	தூதனைக்கொன்றவருக்கு வரும் தோஷம் ...	290-291
	தூதன், வாயில்காப்பவன், அரசனைக்காப்பவன், கோட்டை முதலியவற்றைக் காப்பவன், அமாத்யன், ஸேனாபதி இவர்களின் லக்ஷணம்	291
	அரசன் ஒருவரையும் நம்பக்கூடாதென்பது ...	291
86	அரசன்வஹிக்கவேண்டிய நகரமுதலியவற்றின் லக்ஷணங்கள்	292
	அரசன் நகரமுதலியவற்றை வைத்துக்கொள்ளவேண்டிய முறை	292-294
87	அரசன் ராஜ்யத்தை ரக்ஷிக்குமுறை	294-295
	அரசன் பொருள்சேர்க்குமுறைமுதலியன ...	295-298
88	குடிகளிடம் வரிவாங்குமுறை	298-299
	துஷ்டர்களை அடக்கவேண்டுமென்பது	299-300
89	ராஜ்யத்தின்இயல்பும் காப்புமுறையும்	301-303
90-91	உசத்யர் மாந்தாதாவுக்கு ராஜதர்மத்தை உபதேசித்தது	303-311
	தர்மம்என்பதன்பொருளும் சிறப்பும்	304-305
	துர்ப்பலர்களைக்காத்தல் அவஸ்யமென்பது ...	307-308
	பொய்க்குற்றம்சாட்டல் தோஷமென்பது ...	308
	அரசன், துஷ்டர்களை அடக்குவது அவஸ்யமென்பது ...	309
	அரசனுக்குரியபலதர்மங்களும் நீதிகளும்	309-311
92-94	வாமதேவர் ஸோமனஸோக்கு ராஜதர்மங்களை உபதேசித்தது	312-319
	செங்கோலின்சிறப்பும் கொடுங்கோலின்இழிவும் ...	312-313
	அரசனுக்குரியசிலநீதிகள்	313-319
95	யுத்தமுறைமுதலியன	319-320
	அதர்மயுத்தம் தகாதென்பது	321
96	சிலயுத்தமுறைகளும் ஜயலக்ஷணங்களும்	321-323
97	க்ஷத்ரியர்களுக்கு யுத்தம் தர்மமென்பது ...	324
	அடைக்கலம்புக்கவர்களைக்காத்தல் அவஸ்யமென்பது ...	324-325
	க்ஷத்ரியர்களுக்குத் தகாதவை	325
	போரில்மரித்தவர்களுக்குவரும் உலகங்கள் ...	326
98	ஸோதேவன் ஸ்வர்க்கம்அடைந்ததைப்பற்றி, அம்பரீஷன் இந்த்ரனிடம்கேட்டது	326-327

அத்யாயம். பக்கம்.

இந்த்ரன், ஸுதேவன்சரித்ரத்தை அம்பரீஷனுக்குச் சொல்லியது 327-329
இந்த்ரன் யுத்தத்தை யாகத்தோடு உருவகப்படுத்தியதும், யுத்தத்தில் மரித்தவனுக்குவரும் உலகங்களும் ... 329-332
யுத்தத்தில்மரிப்பவனுக்காக ஸ்நானமுதலியன வேண்டா மென்பது 332
99 ஜனகர் தம்சேனையை உத்ஸாஹப்படுத்தி யுத்தத்திற்கு அனுப்பி வெற்றிபெற்றது 332-333
அணிவகுத்தலும் யுத்தமுறையும் 333
சூரனே மேலானவனென்பது 334
100 யுத்தத்திற்குச் சேகரிக்கவேண்டிய ஆயுதமுதலியன ... 335
யுத்தத்திற்குத் தக்ககாலம் இடம் க்ரஹபலமுதலியன ... 335-336
யுத்தமுறைமுதலியன 336-338
101 எந்தஎந்தத்தேசத்துவீரர் எந்தஎந்தயுத்தத்தில் வல்லவ ரென்பது 339
போர்வீரரின் லக்ஷணங்கள் 339-341
102 ஜயம்பெறத்தக்கஅடையாளங்கள் 341-342
யுத்தத்தில் அரசன் நடத்தவேண்டிய சிலநீதிகள் ... 343-344
103 ப்ருஹஸ்பதி இந்த்ரனுக்குப் பகைவர்களை வெல்லுதற் குரிய உபாயங்களையும் துஷ்டன், நண்பன், பகைவன் இவர்களின் லக்ஷணங்களையும் கூறியது ... 345-349
104-106 க்ஷேமதர்சிக்கும் காலகவ்ருக்ஷீயருக்கும் ஸம்பாஷணை 350-357
உலகம் நிலையற்றதென்பது 350-351
பொருள் நிலையாமை, அறிவுள்ளவனும் செல்வத்தை இழந்தவனுமான அரசனுக்குரிய ஒழுக்கமுதலியன ... 352-354
பகைவரைஜயிக்கும் கபடஉபாயங்கள் ... 355-356
காலகவ்ருக்ஷீயர், வைதேஹனுக்கும் க்ஷேமதர்சிக்கும் நட்புச் செய்வித்தது 357-358
வைதேஹன் தன்குமாரியை க்ஷேமதர்சிக்குக் கொடுத்து அவனைப்பூஜித்தது 359
107 கூட்டங்களின்வளர்ச்சி ஒற்றுமைமுதலியன ... 360-362
108 மாதா பிதா குரு இவர்களைப்பூஜித்தல்அவச்யமென்பது 362
தாய் தந்தை ஆசிரியர்களுள் யார்யாரைப் பூஜிப்பவன் எந்தஎந்தஉலகத்தை அடைவானென்பது ... 362
ஆசார்யர், உபாத்யாயர், பிதா, மாதா இவர் முறையே ஒருவரின்ஒருவர் மேலானவரென்பது ... 363
குரவரை அலக்ஷ்யஞ்செய்பவனுக்குவரும் பாபம் ... 364

அத்யாயம்.		பக்கம்.
	யார்யாருக்கு ப்ராயச்சித்தம்இல்லையென்பது	... 364
109	எந்தவிஷயத்தில் மெய்யையும் எந்தவிஷயத்தில் பொய் யையும் சொல்லலாமென்பது ...	... 365
	தர்மம் எத்தன்மைத்தென்பது ...	... 365
	எவை தர்மமென்பதும் தர்மத்தின்பொருளும்	... 366
	மெய்சொல்லத்தகாதவிஷயங்கள் ...	... 366-367
	தன்னிடம் பிறர்ஒழுகல்போலத் தானும் பிறரிடம் ஒழு கல்வேண்டுமென்பது	... 368
110	கடினமானதுன்பங்களைத் தாண்டத்தக்க உபாயங்கள்	... 368-371
111	பௌரிகன் நரியாய்ப்பிறந்தது ...	... 372
	நரி வ்ரதமுதலியனசெய்ததும், அதன்சுற்றம் அதைத் தடுத்ததும்	... 372
	நரி சுற்றத்துக்கு மறுமொழிகூறியது ...	... 372-373
	நரிபுலிகளின்கதை ...	.. 373-379
	பொருள்களைப் பரீக்ஷித்தறிவது அவர்யமென்பது	... 377
112	ஒட்டகத்தின்கதை	... 379-380
	சோம்பல் தகாதென்பது	... 380
113	ஸமுத்ரத்துக்கும் நதிகளுக்கும் ஸம்பாஷணை	... 381-382
	பலவானுனசத்ருவை வசப்படுத்த விநயங் காரணமாகு மென்பது	... 382
114	பொறுமையுள்ளவன் தன்னைநிந்திப்பவனுக்குத் தன் பாபத்தைக் கொடுத்து அவன்புண்யத்தைத் தான் அடைவானென்பது	... 382-383
	பொறுமையுள்ளவன் துஷ்டர்கள்நிந்திப்பதைப் பொறுக்கவேண்டுமென்பதும், நிந்திப்பவருக்கு வரும் தோஷமுதலியவையும்	... 383-384
115	அரசர்கள் நல்லதுணைவரைச் சேர்க்கவேண்டுமென்பது	385-386
116-117	நாயின்கதை	... 387-391
	நாய் பயந்து ரிஷியைச்சரணமடைந்து வரவர மேற்பிறப் பை அடைந்தது	... 388-390
118	சரபமானநாய் ரிஷியைக்கொல்லநினைத்ததும், அவர் அதை மறுபடியும் நாயாக்கியதும் ...	... 390-391
	அரசன் மந்த்ரிமுதலியோருக்குரிய நூறுகுணங்கள்	... 393-395
	அரசன் எப்படிஎப்படியிருந்தால் அவனுக்குப் பூமி நிலைத் திருக்குமென்பது	... 395
119	நியமிக்கத்தக்கவேலைக்காரர்களும், அவர்களின்லக்ஷணங் களும்	... 396-397

விஷயஸூசிகை.

அத்யாயம்.		பக்கம்.
120	மயிலுக்கும் அரசனுக்கும் ச்லேஷையும், ப்ரஜைகளை ரக்ஷிக்குமுறை பகைவெல்லும் உபாயமுதலியனவும் ...	398-404
121	தண்டத்தின்ஸ்வரூபமுதலியன	405-410
122	வஸுஹோமன் மாந்தாதாவுக்குத் தண்டத்தின்உத்பத்தி முதலியவற்றை உபதேசித்தது	411-416
	கூர்மபுராணத்தின்பிறப்பும், ப்ரம்மாவின்யாகமும், தண்டம் மறைந்ததும், பலஅநீதிகளுண்டானதும் ...	411-412
	ப்ரம்மதேவர் சங்கரரைவேண்டியதும், சங்கரர் தண்டத்தையும் தண்டநீதியையும் உண்டாக்கியதும் ...	412
	சங்கரர் பலநூல்களை இயற்றியது	412-413
	யார்யார் வேதபாரகரென்பது	413-414
	சங்கரர் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொருவரைத் தலைவராக்கியது	414-415
	சங்கரரிடமிருந்து தண்டமானது யார்யார்வழியாய் உலகில் வந்ததென்பது	415
	யார்யாரிடமிருந்து யார்யார் விளங்குகின்றனரென்பது	415-416
123	அறம்பொருள்இன்பங்களின் பயன்முதலியன ...	417-418
	ஆங்கரிஷ்டனுக்கும் காமந்தகருக்கும் அறம்பொருள்இன்பங்களைவிடுவது முதலியவற்றைப்பற்றிய ஸம்பாஷணை	418-419
	துஷ்டநிக்ரஹம்செய்யாதஅரசனுக்கு ப்ராயச்சித்தங்கள்	419
124	த்ருதராஷ்ட்ரனுக்கும் துர்யோதனனுக்கும் செல்வம் அடைவதைப்பற்றிய ஸம்பாஷணம்	420-426
	இந்த்ரன்ப்ரஹ்லாதனிடம் குருகுலவாஸம்செய்துஶ்ரேயவின்தன்மையை அறிந்தது	422-423
	ப்ரஹ்லாதன் சீலத்தை இந்த்ரனுக்குக் கொடுத்தது ...	423
	சீலமுதலியன ப்ரஹ்லாதனைவிட்டு வெளிவந்து அவனுக்கு உத்தரம்சொல்லிச் சென்றது	423-425
125	ஸுமித்ரன் வேட்டையாடியது	427
126	ஸுமித்ரன் ரிஷிகளின் ஆஶ்ரமஞ்சென்று ஆசையின் பெருமையைப்பற்றி விசாரித்தது	428-429
127	ரிஷபர் நரநாராயணாஶ்ரமத்துக்குச்சென்று தனுரிஷியைக் கண்டது	429-430
	வீரத்யும்னன் தனுரிஷியினிடம் வந்தது	430
	தனுரிஷி, வீரத்யும்னனுடையபுத்ரன் காணாமற்போன காரணத்தை அவனுக்குச் சொல்லியது ...	431
128	தனுரிஷி, ஆசை இழிவானதென்பதை வீரத்யும்னனுக்குச் சொல்லியது	432-433

அத்யாயம். பக்கம்.

தனுர்விஷி பூரித்யும்னனை அழைத்து வீரத்யும்னனுக்குக் கொடுத்தது 433
129 யமன் பெற்றோர்கடனைநிவ்ருத்திக்கும் உபாயத்தைக் கௌதமருக்குக்கூறியது 435
130 ஆபத்காலத்தில் அதர்மமும் தர்மமாகுமென்பது ... 436
அரசன், ஆபத்காலத்தில் ப்ரஜைகளின்பொருளை எடுத் துக்கொள்ளலாமென்பது 437
பொருளே எல்லாவற்றிற்கும் மூலமென்பது ... 438
அரசன், ஆபத்காலத்தில் ப்ரஜைகளைத் துன்பப்படுத்தி யாவது பொருளைச்சேர்க்கவேண்டுமென்பதும், அதனால் தோஷமில்லையென்பதும் 438

ஆபத்தர்மம்.

131 ஆபத்காலத்தில் எல்லாப்பொருளையும் கொடுத்தாவது தன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டுமென்பது ... 441
சத்ருவிஷயத்தில் நடந்துகொள்ளவேண்டியவழி ... 441
132 அரசன் துஷ்டர்களின்பொருளைக்கவர்ந்தாவது ஆபத் தைஅடைந்த ஸாதுக்களை ரக்ஷிக்கவேண்டுமென்பது ... 442
தர்மத்தை நிச்சயிக்கும்விதம் 443-444
133 அரசன் எவ்விதத்திலும் பொக்கசத்தை வ்ருத்திசெய்ய வேண்டுமென்பது 444-445
திருடரும் செய்யத்தகாத கார்யங்கள் 445
திருடரும் மிச்சமின்றித் திருடலாகாதென்பது ... 446
134 பத்துவிதபலத்தையும் அடையவேண்டுமென்பதும், பலத் தின் சிறப்பும் 446-447
அதர்மத்தால் பொருளைத்தேடியஅரசன் பாபத்தைப் போக்குவதற்காகச் செய்யத்தக்க கார்யங்கள் ... 447
135 காபச்யன்சரித்ரம் 448-450
திருடர்கள் காபச்யனைத் தலைவனாக்கியது ... 449
காபச்யன் திருடர்களுக்குத் திருட்டுவிஷயமாகச் சில ஏற்பாடுகள் செய்தது 449-450
136 பொக்கசத்தைப்பெருக்குவதற்காக அரசன் அபஹரிக் கத்தக்க பொருளும் தகாதபொருளும் ... 450-451
137 பின்வரும்ஆபத்தை முன்னமே விலக்குமுபாயவிஷய மான மூன்றுமீன்களின்கதை 451-453
காலதேசங்கள் எத்தன்மையவென்பது 453
138 பகைவனைஸ்நேஹித்தாவது ஆபத்தைவிலக்கவேண்டு மென்பதற்கு உதாரணமான எலிபூனைகளின்கதை ... 455-469

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

பீஷ்மர் சில ராஜதந்த்ரங்களைச் சொல்லியது ... 470-471

139 அரசன் ஒருவரையும் நம்பலாகாதென்பதற்கு உதாரண மான ப்ரம்மதத்தனுக்கும் பூஜனிக்கும் ஸம்வாதம் ... 471-481

140 பாரத்வாஜர் சத்ருந்தபனுக்கு உபதேசித்த ஆபத்தர்மங்கள் 481-487

141 ஆபத்காலத்தில் புஜிக்கத்தகாததைப்புஜித்தாவது ஆத் மாவை ரக்ஷிக்கவேண்டுமென்னும்விஷயத்தில் விச்வா மித்ரருக்கும் சண்டாளனுக்கும் ஸம்பாஷணை ... 488-496

பஞ்சகாலவர்ணனை 488-489

பறைச்சேரிவர்ணனை 489-490

142 சிலநீதிகள் 497-500

அரசன்இரண்டுவிதமானஅறிவையும் அறியவேண்டுமென் பது 497

அரசன் ப்ராம்மணர்களை வழிபடவேண்டுமென்பது ... 500

143-148 சரணமடைந்தவனை ரக்ஷிப்பது தர்மமென்னும் விஷயத்தில் உதாரணமான வேடனையும் புறாவையும் பற்றியகதை 501-511

149-151 அறியாமற்செய்தபாபத்தை நிவ்ருத்திக்கும்விஷயத் தில் உதாரணமான ஜனமேஜயன்கதை ... 512-519

ஜனமேஜயன் ப்ரம்மஹத்தி தோஷத்தை அடைந்து இந்த்ரோதரிடம் வந்தது 512

இந்த்ரோதர் ஜனமேஜயனை நிந்தித்தது 512-513

ஜனமேஜயன் தனக்கு அனுக்ரஹம்செய்யும்படி இந் த்ரோதரை வேண்டினது 513-514

இந்த்ரோதர் ஜனமேஜயனை ப்ராம்மணர்களுக்குத் தீங்கு செய்வதில்லையென்று ப்ரதிஜ்ஞை செய்யச்சொல்லிய தும், அவன் அங்ஙனமே செய்ததும் 515

இந்த்ரோதர் தர்மங்களையும் பாபப்ராயச்சித்தங்களையும் ஜனமேஜயனுக்குச் சொல்லியது 515-519

இந்த்ரோதர் ஜனமேஜயனுக்கு அச்வமேதயாகஞ் செய் வித்ததும், அவன் தன் ராஜ்யத்தை அடைந்ததும் ... 519

152 கழுகும் நரியும் ஸ்வயநயம்பாராட்டிச் சொல்லியதும், இறந்த குழந்தை பிழைத்ததும் 519-528

153-155 பலிஷ்டனைப் பகைத்தல் கூடாதென்னும்விஷயத் தில் உதாரணமான இலவமரத்தின்கதை ... 529-534

156 லோபத்திலிருந்தே கெட்டகுணங்களும் பாபச்செயல் களுமுண்டாகின்றனவென்பது 535-536

அயோக்யர்களின் கெட்டகுணங்களும் செயல்களும் 536-537

அத்யாயம். பக்கம்.

யோக்யர்களின் நல்லகுணங்களும் செயல்களும் ... 537-538
157 அஜ்ஞானமடைந்தவன் இஹபரங்களில் துன்புறுவா னென்பது 538
எவ்வளவை அஜ்ஞானமென்பதும் அஜ்ஞானத்தின் உத் பத்தி முதலியனவும் 539
158 தமமே தர்மமுதலியவற்றிற்கு முக்யகாரணமென்பது ... 540
தமமுள்ளவருக்கும் இல்லாதவருக்கும் வரும் ஸுகதுக் கங்கள் 540
தமத்தின்குறிகள் 541
தமமுதலியவற்றையுடையவர்கள் இம்மைமறுமை ஸுகங் களைப் பெறுவரென்பது 541-542
159 தவத்தின்பெருமை 543-544
160 ஸத்யத்தின்பெருமை 544-546
ஸத்யத்தின் உருவமுதலியன 545-546
161 கோபமுதலியவற்றின் உத்பத்திமுதலியன ... 547-548
162 எத்தன்மையர் க்ரூரரென்பது 549-550
163 யாகமுதலியவற்றிற்காகப் பொருளீட்டுமுறைமுதலியன 551
பாபங்களும் அவற்றிற்கு ப்ராயச்சித்தங்களும் ... 552-557
எப்பொழுதுஎப்பொழுது சொல்லும்பொய் பாதகமாகா தென்பது 553
164 நகுலன் கத்தியின்உத்பத்திமுதலியவற்றைப் பீஷ்மரிடம் விஞ்ஞாபித்தது 558
பீஷ்மர் கத்தியின்உத்பத்திமுதலியவற்றை நகுலனுக்குச் சொல்லியது 558-564
165 தர்மபுத்ரர் தர்மார்த்தகாமங்களைப்பற்றி ஸஹோதரர் களையும் விதுரரையும் விஞ்ஞாபித்தது 565
விதுரர் தர்மம்சிறந்ததென்றது 565
அர்ஜுனன் பொருள்சிறந்ததென்றது 566
நகுலஸஹதேவர்கள், அறம் பொருளிரண்டும் சிறப் புடையன வென்றது 567
பீமன் காமம் சிறந்ததென்றது 567-568
தர்மபுத்ரர் மோக்ஷமே யாவற்றினும் சிறந்ததென்றது 569-570
166 ஸ்நேஹியாமல் விலக்கத்தக்கவர் 570-571
ஸ்நேஹிக்கத்தக்கவர்களும் அவர்களின் குணமுதலிய வும் 571-572
யார்யார் அதமரென்பது 572
167-172 கெட்டஒழுக்கமுள்ள ஒரு ப்ராமணன்கதை ... 573-586
நன்றிகொன்றவனுக்கு ப்ராயச்சித்தமில்லையென்பது ... 587

ஸ்ரீ :

ஸ்ரீகூஷாய வாஸுதேவாய நம: |

ஸ்ரீகூஷ்ணபரமாத்மனே நம: |

ஸ்ரீ மஹாபாரதம்.

சாந்திபர்வம்.

முதலாவது அத்யாயம்.

ராஜதர்மம்.

1 நாராயணம் நமஸ்க்ருத்ய நரம்சைவ நரோத்தமம் |
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ||

(தர்மபுத்திரரிடம் ரிஷிகள்வந்ததும், நாரதர் தர்மபுத்திரரை விஜயபதும், தர்மபுத்திரர் தமதுமனக்குறைகளைச் சொல்லிச் சில சந்தேகங்களைக்கேட்டதும்.)

வைசம்பாயனர், ஜனமேஜயரைப்பார்த்து, "எல்லாச்சினேகிதர் களுக்கும் தர்ப்பணம்செய்தபிறகு, பாண்டவர்களும் விதுரரும் திருத ராஷ்டிரனும் பரதவம்சத்திய எல்லாஸ்திரீகளும் மஹாத்மாக்களான அந்த மற்றக்கௌரவர்களும் சுத்தியைச் செய்துகொள்ளவேண்டிப் பட்டணத்திற்கு வெளியில்அந்தக்கங்கைக்கரையில் [2]ஒருமாஸம்வஸித்

---

1 இதன் உரை விசேஷத்தை ஆதிபர்வம் முதற் பக்கம் குறிப்பிற் காண்க.

2 'சில சமயங்களில் கபடயுத்தஞ்செய்த தோஷநிவர்த்திக்காகப் புண்ணியதிதீரத்தில் ஒருமாஸம்வஸித்தார்களேயன்றி ஆசௌசநிவர்த் திக்கு அன்று' என்றும், 'யுத்தம்நடந்த பதினெட்டுநாள்களில் சேர்ந்த மரணங்களுக்கு அன்றன்றே சுத்தியாகின்றது ; (மநுஸ்ம்ருதி, 5-வது அத்யாயம், கஅ-வது சுலோகம்.) பதினெட்டாநாள் ஸைன்யத்திகவதத்தில் மரித்தவர்களுக்காகப் பன்னிரண்டுநாள் ஆசௌசம் அனுஷ்டிக்க வேண் டும் ; யுத்ததினம் பதினெட்டு, ஆசௌசதினம் பன்னிரண்டு, இப்படி இரண்டும்சேர்ந்து முப்பதுநாள் என்று ஒருபக்ஷம்உண்டு' என்றும் பழையஉரை கூறுகிறது.

'ப்ராம்மணன் பத்துநாளிலும் க்ஷத்ரியன் பன்னிரண்டு நாளி லும் வைசியன் பதினைந்து நாளிலும் சூத்ரன் ஒரு மாதத்திலும் சுத்தி அடைகிறார்' என்கிற மநுவசனப்படி (மநுஸ்ம்ருதி, 5-வது அத்யாயம், அந-வது சுலோகம்) விதுரர் சூத்ராராகையால் அவருக்கு ஒரு மாஸம்

தார்கள். மஹாத்மாக்களும் ஸித்திபெற்றவர்களும் பிரம்மநிஷ்ட
ளில் உத்தமர்களுமான வ்யாஸரும் நாரதரும் தேவலரும் மஹரி
யான தேவஸ்தானரும் கண்ணுவரும் அவர்களுடைய சிறந்தசிஷ்ய
ரும், தர்ப்பணஞ்செய்தவரும் தர்மாத்மாவுமான யுதிஷ்டிரரிடம் வ
தார்கள். இன்னும், வேதம் தெரிந்தவர்களும் ஞானமுடையவ
ரும் 1 ஸ்நாதகர்களும் கிருஹஸ்தர்களுமான பிராம்மணர்கள் கு
ஸ்ரேஷ்டரான தர்மபுத்திரரைக் கண்டார்கள். அந்த மஹரிஷிக
மஹாத்மாவான தர்மபுத்திரரை அடைந்து விதிப்படி பூஜிக்கப்பெற்
மிகவும் உயர்ந்தஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். பிறகு, பிராம்மண
கள், அந்தஸமயத்திற்குத் தக்கபடி பூஜையைப் பெற்றுக்கொண்
பரிசுத்தமான கங்காதீரத்தில் அப்பொழுது சோகத்தால் துயரமுற்
சிந்தையையுடைய தர்மபுத்திரமஹாராஜாவை நாலுபிரம்விதமா
ஆஸ்வாஸப்படுத்த அவரைச்சூழ்ந்து நாற்புறமும் நெருங்கி உட்கார்
தார்கள். நாரதரானவர் வ்யாஸர்முதலிய ரிஷிகளுடன்பேசிக்கொண்
தர்மபுத்திரரைப் பார்த்து ஸமயத்தில் சொல்லலானார். "ஓ! தர்
புத்திரனே! அர்ஜுனனுடைய கைவன்மையினாலும் கிருஷ்ண
னுடைய அனுக்ரஹத்தினாலும் தர்மத்தாலும் இந்தப் பூமிமுழுது
ஜயிக்கப்பட்டது. உலகத்திற்குப் பயத்தைதருண்டுபண்ணுகின்ற இ
தப்போரிலிருந்து பாக்கியத்தால் விடுபட்டீர்கள். க்ஷத்திரியர்களி
தர்மத்தில் விருப்பத்தை அடைந்தவனாகஇருக்கிறாய். ஓ! பாண்டவனே
ஸந்தோஷிக்கிறாயா? ஓ! அரசனே! சத்துருக்களைக் கொன்றவனாகி
நீ நண்பர்களைத் திருப்தியடைவிக்கிறாயா? இந்தச்செல்வத்தை
அடைந்தபிறகுஉன்னைச் சோகம் பீடிக்காமலிருக்கிறதா?" என்றார்.

யுதிஷ்டிரர், "ஓ! பகவானே! கிருஷ்ணனுடைய புஜபலத்தை
அடைந்ததாலும் பிராம்மணர்களின் அனுக்ரஹத்தினாலும் பீமார்ஜு
னர்களுடையபலத்தினாலும் இந்தப்பூமிமுழுமையும் ஜயிக்கப்பட்டது
ஆனால், என்னுடையமனத்தில் இந்தப் பெரிய துக்கம் எப்பொழுது
இருக்கிறது. பார்க்கப்பயங்கரமான இந்தப் பெரியஅநாதிகளின் நாச
தைச்செய்தும் பிரியமுள்ளபிள்ளைகளாகிய அபிமன்யுவையும் உ
பாண்டவர்களையும் கொல்வித்துவிட்டும் அடைந்த இந்த ஜயமானது

ஆசௌசமுண்டென்றும், அவருடன் எல்லாரும் ஒருமாஸம் அங்கே
வஸித்தார்களென்றும் கொள்வதும் பொருந்தும்.

1 பிரம்மசாரிவிரதம் முடித்துக் குருவினால் விடைகொடுக்கப்பெற்
பிறகும் கிருஹஸ்தாச்ரமம் எடுத்துக்கொள்வதற்கு முன்னும் ஸ்நாதகர்
ஆவார். அவர்களுக்கு ராஜாவுக்குமேற்பட்ட மரியாதைசெய்யும்படி தர்ம
சாஸ்திரம் விதிக்கிறது. ஸபாபர்வம் எஉ-வது பக்கம் குறிப்பிற்காண்க.

அபஜயமாகவே எனக்குத் தோன்றுகிறது. துவாரகையில் வஸிக்கும் என் மருமகளாகிய ஸுபத்ரையானவள், க்ருஷ்ணன் இங்கிருந்து போனவுடன் என்னசொல்லப்போகிறாளோ? பிள்ளைகள் கொல்லப் பட்டும் உறவினர்கள்கொல்லப்பட்டும் கஷ்டப்படும் திரௌபதியான வள் நமக்குப் பிரியத்தையும் ஹிதத்தையுமே திரும்பவும் நடத்திக் கொண்டிருப்பதானது என்னைப் பீடிப்பதுபோலவேயிருக்கிறது. பூஜ்யரானநாரதரே! மற்றும் இஃதொன்றும் உம்மிடம் சொல்லுகி றேன். குந்தி ரஹஸ்யத்தை மறைத்துவைத்தமையால் நான் துக்கத் தோடு சேர்க்கப்பட்டவனாக இருக்கிறேன். உலகத்தில் பதினாயிரம் யானை பலமுள்ளவனும், யுத்தத்தில்ஒப்பற்றவனும், ஸிம்மம்போன்ற சௌரியமுள்ள நடையுடையவனும், ஜயசீலனும், மாறுதநியமமுள்ள வனும், திருதராஷ்டிரனுடைய பிள்ளைகளுக்கு ஆதாரமானவனும், மானியும், கொடுமையான பராக்ரமமுடையவனும், பகைவரைப் பொறுதவனும், எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவனும், ஒவ்வொரு யுத்தத்திலும் எங்களைஎறிந்தவனும், அதிவேகமான அஸ்த்ரமுள்ள வனும், ஆச்சரியமான யுத்தம்செய்கிறவனும், ஸமர்த்தனும், ஆச் சரியமான பராக்ரமமுள்ளவனும், குந்திக்கு ரஹஸ்யத்திலுண்டான புத்ரனுமான அந்தக்கர்ணன் எங்களுக்குத் தமையனன்றே? அந்த ஸமயம் தர்ப்பணம்செய்யும்போது, அந்தக்கர்ணனை எல்லாக் குணத்தோடும் கூடியவனும் முந்தி ஜலத்தில்விடப்பட்டவனுமான தன்னுடைய குமாரனென்று குந்தி எனக்குச்சொன்னாள். எவனைப் பெட்டியில்வைத்துக் கங்கையின்பிரவாகத்தில் முழுகச்செய்தாளோ, எவனைத் தேர்ப்பாகன்பிள்ளையென்றும் ராதையின்பிள்ளையென்றும் உலகம் நினைத்ததோ, அந்தக்கர்ணன் குந்தியிடமிருந்து ஸூர்யனுக் குப் பிறந்தவன்; தாய்வழியில் எங்களுக்குத் தமையனாயிருந்தவன்; ராஜ்யத்தில் ஆசையுள்ளவனும் தெரியாதவனுமான என்னால் யுத்தத் தில் கொல்லப்பட்டான். அந்தவதமானது பஞ்சுப்பொதியைத் தியெரிப்பதுபோல என் அங்கங்களைஎரிக்கிறது. ஸ்வேதவாஹனனை அர்ஜுனனும் அவனைத் தமையனென்று அறியவில்லை; நானும் அறிய வில்லை; பீமனும் அறியவில்லை; நகுலஸஹதேவர்களும் அறியவில்லை. அவனே உண்மையாய் எங்களைத்தெரிந்துகொண்டான். எங்களுக்கு ஸந்தியை விரும்பிய குந்தியானவள், 'நீயும் என்னுடைய குமாரன் தான்' என்று சொல்லிக்கொண்டு அவனுடைஸமீபம்சென்றாளென்று எங்களுக்குக்கேள்வி. பிறகு, மஹாத்மாவான அவனால் குந்தியின் விருப்பம் செய்யப்படவில்லை. அவன், 'தாயே! மிகவும் அயுக்தமான வார்த்தையைச் சொன்னாய்' என்றும், 'யுத்தத்தில் துரியோதனனைவிடு

கிறதற்கு நான் சக்தனேஅல்லன். அயோக்கியத்தன்மையும் குரூரத் தன்மையும் நன்றியற்றதன்மையும் எனக்கு வந்துவிடும். உன்னுடைய இஷ்டத்திற்காக யுதிஷ்டிரனேடு ஸந்தியைச்செய்தேனகில் என்னை உலகமானது யுத்தத்தில் அர்ஜுனனுக்குப் பயந்தவனென்று நினைக் கும். அப்படியாயின், க்ருஷ்ணனேடுகூடின அர்ஜுனனை யுத்தத்தில் ஜயித்தபிறகு தர்மபுத்திரனேடு சேருகிறேன்' என்றுஞ் சொன்னன். மறுபடியும், குந்தியானவள் அகன்றமார்பையுடைய அந்தக்கர்ணனை, 'நாலுபேர்களுக்கு அபயங்கொடு; இஷ்டம்போல அர்ஜுனனேடு போர்செய்' என்று சொன்னளாம். புத்திசாலியான அவன் நடுங்கு கின்ற தாயைப்பார்த்து அஞ்சலிசெய்துகொண்டு, 'தேவியே! உன் னுடைய நான்கு குமாரர்களை அவர்கள் கொல்லக்கூடியவர்களாக வந் தாலும் நான் கொல்லேன்; கர்ணன் அடிபட்டால் அர்ஜுனனைக்கூட் டியோ, அர்ஜுன்ன் அடிபட்டால் கர்ணனைக்கூட்டியோ உனக்குப் பிள்ளைகள் ஐவர்கள்தாம் ஸ்திரமாக இருக்கப்போகிறார்கள்' என்று சொன்னன். பிறகு, பிள்ளைகளிடம்பாசம்வைத்த தாயானவள், திரும் பவும், 'எந்த ப்ராதாக்களுக்கு க்ஷேமத்தைச்செய்ய விரும்பு கிறையோ அவர்களுக்கு க்ஷேமத்தைச்செய்' என்று சொன்னள். இவ் விதம்சொல்லிக் குந்தியானவள் அவனைநீங்கி வீடுசென்றுளாம். உடன் பிறந்த தமையனென அந்தவீரன், தம்பியான அர்ஜுனனுல் கொல் லப்பட்டான். ஓ! ரிஷியே! குந்தியினுடைய ரஹஸ்யம் வெளியாக வில்லை. அவனுடைய ரஹஸ்யமும் வெளியாகவில்லை. ஆகையால், பெரியவில்லாளியான சூரன் அர்ஜுனனுல் யுத்தத்தில் வீழ்த்தப்பட் டான். ஓ! பிராம்மணஸ்ரேஷ்டரே! பிறகு, குந்தியினுடைய வசனத் தினுல் கர்ணனை ஸஹோதரனென்றும் முன்பிறந்த தமையனென்றும் நான் தெரிந்துகொண்டேன். ஆகையால், தமையனைக் கொலைசெய்தவ னென என்னுடையமனம் மிகவும் தபிக்கின்றது. கர்ணனையும் அர் ஜுனனையும் துணையாகப்பெற்றுல் நான் இந்திரனையும் ஜயிப்பேன். துஷ்டபுத்தியுள்ளவர்களான திருதராஷ்டிரபுத்ரர்களால் ஸபையில் பீடிக்கப்பட்டு உடனே (எனக்கு) வெளிவந்தகோபம் கர்ணனைக் கண்டு தணிவடையும். ஸபையில் சூதாடுவதில் துர்யோதனனுக்கு ஹிதத்தை விரும்புகிறவனுகப் பேசுகிற இந்தக்கர்ணனுடையகடுமை யானஆரம்பமுள்ளனவும் கொடுமையுள்ளனவுமான சொற்களைக்கேட் டபோது உண்டான என்னுடையகோபமானது, அவனுடையபாதங் களைக் கண்டவுடன் நீங்கிவிடும். கர்ணனுடையபாதங்கள் குந்தியி னுடைய பாதங்களுக்கு ஒப்பானவையென்பது என்னுடைய எண் ணம். குந்திக்கும் அவனுக்கும் ஒற்றுமைக்குக் காரணத்தைத்தேடி

யும் சிந்தித்தும் எவ்விதத்திலும் நான் அதைத் தெரிந்துகொள்ள வில்லை. யுத்தத்தில் பூமியானது அவனுடைய தேருருளையை எங்ஙனம் விழுங்கிற்று? என்னுடையதமையன் எவ்விதம் ஜயிக்கப்பட்டான்? இதில் உண்மையைச் சொல்ல நீரே தக்கவர். ஓ! பகவானே! உள்ளபடி உம்மிடத்திலிருந்து எல்லாவற்றையும் கேட்க விரும்புகிறேன்.. எல்லாம்தெரிந்த வித்வானுகிய நீர் உலகத்தில் செய்ததையும் செய்யப்போகிறதையும் அறிகிறீர்" என்று சொன்னர்.

இரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(நாரதர், கர்ணன் துரோணரைப்பிரம்மாஸ்த்ரம் வேண்டியதையும் அவர்மறுத்ததையும் அவன் பரசுராமரை அடுத்ததையும் அவனுக்குப் பிராம்மணசாபம் நேர்ந்ததையும் கூறியது.)

இப்படி (தர்மபுத்திரரால்) கேட்கப்பட்டவரும் பேசுகிறவருட் சிறந்தவருமான அந்தநாரதர், அப்பொழுது அந்தக்கர்ணன் செபிக்கப்பட்ட வரலாற்றையெல்லாம் சொல்லத்தொடங்கினர். "ஓ! மஹாபாஹுவானபாரதனே! நீசொல்லுகிறது சரிதான். கர்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தத்தில்ஜயிக்கமுடியாதது ஒன்றுமிராது. ஓ! அரசனே! ஆனல், தேவரஹஸ்யமான இதனை உனக்குச் சொல்லுகிறேன். ஓ! புஜபலமுள்ளவனே! முன்பு இம்மது எப்படி நடந்ததென்பதைத் தெரிந்துகொள். ஓ! பிரபுவே! க்ஷத்திரியஜாதியானது ஆயுதங்களால் பரிசுத்தியடைந்து எவ்விதம் ஸ்வர்க்கத்தையடையுமென்று ஆலோசித்து அந்தக்காரணத்திற்காகக் கன்னிகையாகிய குந்தியினிடத்தில், வைரத்தையுண்டுபண்ணத்தக்க கர்ப்பமானது உண்டுபண்ணப்பட்டது. அந்தக்கர்ப்பத்திலுண்டான குழந்தையானவன் பராக்ரமத்துடன் கூடியவனுகவும் ஸாரதிக்குப்பிள்ளையாகவும் ஆனன். ஆங்கிரஸகுலத்தவருள்சிறந்தவரும் உன்னுடைய குருவுமான துரோணரிடத்தில் தனுர்வேதத்தை அப்யாஸம் செய்தான். ஓ! ராஜச்ரேஷ்டனே! அவன், பீமஸேனனுடைய பலத்தையும் அர்ஜுனனுடைய அஸ்த்ரஸாமர்த்தியத்தையும், உன்னுடைய புத்தியையும், அப்படியே நகுலஸஹதேவர்களுடைய விநயத்தையும், காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனுக்கு இளமைப்பருவத்திலேயே க்ருஷ்ணேரிடு உண்டான ஸ்நேஹத்தையும், பிரஜைகளுடைய அன்புடைமையையும் சிந்தித்து மிகவும் தாபமடைந்தான். அவன் ஸ்வபாவத்தாலும் தேவர்களின் ஸங்கல்பத்தாலும் உங்களோடு

எப்போதும் பகைமையுள்ளவனுகிய அரசனை துரியோதனனேனும் இளமையில் ஸ்நேஹத்தைஅடைந்தான். பிறகு, கர்ணனவன், அர்ஜுனனைத் தனுர்வேதத்தில் ஞானத்தால் சிறந்தவனென்று தெரிந்து கொண்டு, ரஹஸ்யத்தில் துரோணரை அடைந்து பின்வருமாறு வார்த்தையைச் சொல்லலானுன்.

'பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகமுறை நிவிர்த்திமுறைகளோடு தெரிந்துகொள்ள விரும்புகிறேன். யுத்தத்தில் அர்ஜுனனேனு ஸமமாக இருத்தல் வேண்டுமென்பது எனது விருப்பம். உமக்குப் பிள்ளைகளிடத்திலும் சிஷ்யர்களிடத்திலும் ஸ்நேஹம்ஸமமாயிருப்பது நிச்சயம். உம்முடைய அனுக்ரஹத்தால், என்னை அஸ்த்ராப்யாஸமில்லாதவனென்று தெரிந்தவர்கள் சொல்லாமலிருக்கவேண்டும்' என்றுன். அப்படிக் கர்ணனுல் சொல்லப்பட்ட துரோணர், அர்ஜுனனிடத்தில் விருப்பமுள்ளவராதலாலும் கர்ணனுடைய துஷ்டபுத்தியை அறிந்ததாலும் அவனைப்பார்த்து, 'விதிப்படி விரதத்தையனுஷ்டித்த பிராம்மணன் பிரம்மாஸ்திரத்தைத் தெரிந்துக்கொள்ளத்தக்கவன்; அல்லது, மிகுந்ததவத்தையுடைய க்ஷத்திரியனும் தெரிந்துகொள்ளத்தக்கவன்; மற்றவன் எவ்விதமும் தெரிந்துகொள்ளத்தக்கவனல்லன்' என்றார். ஓ! வேந்தனே! இவ்விதம் சொல்லப்பட்ட கர்ணன் அங்கிரஸ ப்ரேஷ்டரான துரோணரைப்பூஜித்து விடைபெற்றுக்கொண்டு மஹேந்திரமென்னும் மலையைநோக்கி உடனே சென்றுன். அந்தக் கர்ணனே பரசுராமரை அடைந்து தலையால்வணங்கி, 'நான் ப்ருகுவம்சத்திற்பிறந்த பிராம்மணன்' என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டு வந்தனஞ்செய்தான். பரசுராமரானவர் கோத்திரம் முதலியவற்றையெல்லாங்கேட்டு அவனை அங்கீகரித்துக்கொண்டார். நல்வரவுகூறி, 'நீ இங்கேயிருக்கலாம்' என்றுசொல்லி மிகவும் அன்புடையவராயிருந்தார். ஸ்வர்க்கத்துக்கு ஒப்பாகிய அந்தமஹேந்திரபர்வதத்தில் வஸிக்கின்ற கர்ணனுக்கு, கந்தர்வர்கள், ராக்ஷஸர்கள், யக்ஷர்கள், தேவர்களாகிய இவர்களோடு சேர்க்கையுண்டாயிற்று. அவன் அந்தஇடத்தில் விதிப்படி ப்ருகுஶ்ரேஷ்டரான பரசுராமரிடமிருந்து பாணத்தையும் அஸ்த்ரத்தையும் அப்யஸித்தான்; தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் மிகப்பிரியனுகவும் இருந்தான். அந்த ஸூதகுமாரனுனகர்ணன் ஒருகால் ஸமுத்திரத்தினருகிலுள்ள ஆஶ்ரமத்திற்குஸமீபத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு தனியே கத்தியும் வில்லும் கையிற்பிடித்து உலாவினன். ஓ! பார்த்தனே! அவன் அக்னிஹோத்ரஞ் செய்துகொண்டிருக்கும் ஒரு வேதமோதும் பிராம்மணருடைய ஹோமத்திற்காக இருந்த பசுவை அறியா

மையால் தற்செயலாகக் கொன்றுன். அவன், தான் அறியாமையால் செய்ததைஅறிந்து பிராம்மணருக்குத் தெரிவித்தான். அவரைக் கோபமில்லாதவராகச் செய்யவேண்டி இந்தவார்த்தையைச் சொல்லலானுன். 'ஓ! பகவானே! உம்முடைய இந்தப்பசுவானது முன்னமே தெரியாததால் என்னல் கொல்லப்பட்டது. எனக்கு அனுக்கிரகஞ்செய்யவேண்டும்' என்று மறுபடியும்மறுபடியும் சொன்னுன். கோபமுற்ற அந்தப்பிராம்மணர், அந்தக்கர்ணனைப் பார்த்து வார்த்தையால் மிகவும் அதட்டுகிறவர்போலச்சொன்னர். 'கெட்டகடையுடையவனே! நீ கொலைக்கு யோக்கியன். கெட்டபுத்தியுடையவனே! இதன்பயனை அடையப்போகிறுய். பாபி! எப்பொழுதும் எவனோடு பகைகொண்டிருக்கிறுயோ, எவனுக்காக எப்பொழுதும் முயற்சிசெய்கிறுயோ அவனோடு யுத்தஞ்செய்கிறபொழுது உன்னுடைய தேருருளையைப் பூமி விழுங்கப்போகிறது. மனிதர்களில் இழிவானவனே! பிறகு, சக்கரமானது பூமியால்விழுங்கப்பட்டவுடன், தடுமாறிக்கொண்டிருக்கும் உன்னுடையதலையைச் சத்துருவானவன் ஆக்ரமித்துத்தள்ளப்போகிறுன்; போ. மூடனே! அஜாக்ரதையாயிருந்த என்னுடைய இந்தப்பசுவானது உன்னுல் எப்படிக்கொல்லப்பட்டதோ அப்படியே என்னுடைய வசனத்தினுலேயே அஜாக்ரதையாயிருக்கும் உன்னுடைய தலையை அவன் தள்ளப்போகிறுன்' என்று சபித்தார். (அப்படி) சபிக்கப்பட்ட கர்ணன் அந்தப் பிராம்மணஸ்ரேஷ்டரைப் பசுக்களாலும் பொருள்களாலும் ரத்தினங்களாலும் திருப்தியடைவித்தான். அவரும், இவனைப்பார்த்துத் திரும்பவும், 'இந்தச் சொல்லைப் பிரம்மலோகத்திலும் சொல்லாததாகச் செய்யமுடியாது. நீ போனலும் சரி; நின்றலும் சரி; அல்லது எதுசெய்யவேண்டுமோ அதைச் செய்' என்று சொன்னர். இவ்விதம் பிராம்மணரால் சொல்லப்பட்ட கர்ணன், பிறகு, சோகத்தால் தலைகுனிந்து மனத்தால் அதையே நினைத்துக்கொண்டு பயமடைந்து பரசுராமரிடம் வந்தான்.

மூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பரசுராமர் கர்ணன்தொடையில் தலைவைத்துத்தூங்கியதும், அவன் தொடையில்கிருமிதுளைத்ததும், அவர் அவனைச் சபித்ததும், அவன் தன்னூருக்குத் திரும்பியதும்.)

கர்ணனுடைய கைவன்மையினுலும் வணக்கத்தாலும் அடக்கத்தாலும் அப்படியே குருவானதமக்குச் செய்தபணிவிடையாலும்

ப்ருகுஸ்ரேஷ்டரானபரசுராமர் ஸந்தோஷமடைந்தார். பிறகு, பெரிய பராக்ரமமும் மிக்கஞானமும் தவமுமுடையவரான அந்தப்பரசுராமர் தவத்தையுடைய அந்தக்கர்ணனுக்குப் பிரம்மாஸ்திரத்தை நிவர்த்தனமந்திரத்துடன் உபதேசித்தார். பிறகு, அஸ்த்ரமறிந்த கர்ணன் ப்ருகுவின் ஆஸ்ரமத்தில் விளையாடிக்கொண்டு ஆச்சரியமான பராக்ரமமுடையவனாகித் தனுர்வேதத்தைப் பயிற்சிசெய்துகொண்டிருந்தான். பின்பு, ஒருகாலத்தில் புத்திமானானபரசுராமர் கர்ணனேடுகூடி ஆஸ்ரமத்தின் அருகில் ஸஞ்சாரஞ்செய்துகொண்டிருந்தார். உபவாஸத்தால் கிலேசமடைந்து வாட்டமுற்றமனத்தையுடைய குருவான ஜாமதக்னியர் விசுவாஸத்தினாலுண்டான ஸ்நேஹமுள்ளவராக அந்தக்கர்ணனுடையமடியில் தலையைவைத்துக்கொண்டு நித்திரை செய்தார். பிறகு, பயங்கரமானதும் பயங்கரமான வடிவமுள்ளதும் ரக்தமாம்ஸங்களை ஆகாரஞ்செய்வதும் சிலேஷ்மவிகாரமுள்ளதுமான ஒரு புழுவானது கர்ணனுடையஸமீபம் வந்தது. பிறகு, ரக்தத்தையுண்ணும் அந்தப்புழுவானது அவனுடையதாடையையடைந்து துளைக்கத்தொடங்கிற்று. குருவினிடமுள்ளபயத்தால் கர்ணன் அதைத்தள்ளுவதற்குச் சக்தியற்றவனாயிருந்தான். ஓ! பரதகுலத்திலுதித்தஅரசனே! அப்படி அந்தப்புழுவினாற்கடிக்கப்படும் ஸௌர்யகுமாரனை அந்தக்கர்ணன் குருவிடத்துக்கொள்ளுதலை எதிர்பார்த்துக்கொண்டு அதை உபேக்ஷித்திருந்தான். கர்ணன் ஸஹிக்கமுடியாத அந்தத்துன்பத்தைத் தைரியத்தால் அடக்கிக்கொண்டு அசையாமலும் பயத்தை உண்டுபண்ணுமலும் பார்க்கவரைத் தரித்துக்கொண்டிருந்தான். குருவான அந்தப்பார்க்கவர் ரக்தத்தால் சரீரத்தில் ஸ்பரிசிக்கப்பட்டபொழுது விழித்துக்கொண்டார். பராக்ரமமுடைய பரசுராமர் கோபமுற்று, 'கஷ்டம்! அசுத்தியையடைந்தவனாகிறேன்; இஃது என்னகார்யம் உன்னாற்செய்யப்பட்டது? பயத்தைவிட்டு எனக்கு இதனை உண்மையாகச்சொல்லு' என்று கர்ணனைக்கேட்டார். கர்ணன் புழுவினால் அப்படிக்கடிக்கப்பட்டதை அவருக்குச்சொன்னன். ராமரும், எட்டுக்காலும் கூர்மையானபல்லுமுடையதும் ஊசிபோன்றமயிர்களால் எங்கும்நிறைந்ததும் சுருங்கின அவயவமுள்ளதும் அளர்க்கமென்னும்பெயரால் பிரஸித்தியுள்ளதும் பன்றிபோன்றதுமான அந்தப் புழுவைப்பார்த்தார். ராமரால் பார்க்கப்பட்டவுடன், அந்தப் புழுவானது அந்தஉதிரத்திலேயே நனைந்துகொண்டு உயிரைவிட்டது. அஃது ஆச்சரியம்போலாயிற்று. பிறகு, ஆகாயத்தில் எல்லாஉருவமுமெடுக்கச் சக்தியுடையவனும், குரூபமான உருவமுடையவனும்,

சிவந்த கழுத்தும் கறுத்த அங்கமுமுடையவனுமான ஒரு ராக்ஷஸன் மேகத்தைவாகனமாகக் கொண்டவனைக் காணப்பட்டான். அந்தராக்ஷஸன், கைகூப்பிக்கொண்டு நிறைந்த மனமுடையவனாகிப் பரசுராமரைப்பார்த்து, 'ப்ருகுக்களில்சிறந்தவரே! உமக்கு க்ஷேமமுண்டாகட்டும்; நான் வந்தபடியே போகிறேன். ஓ! முனிஸ்ரேஷ்டரே! உம்மால் இந்தநரகத்திலிருந்து விடுவிக்கப்பட்டேன். உமக்கு க்ஷேமமும் ஸித்தியுமுண்டாகட்டும்; என்னுடைய இஷ்டம் உம்மால் நிறைவேறியது' என்று சொன்னான். கைவண்மையுள்ளவரும் பிரதாபமுள்ளவருமான பரசுராமர், அந்தராக்ஷஸனைநோக்கி, 'நீ யார்? எங்கிருந்து நரகத்தை அடைந்தாய்? அதனைச்சொல்' என்று கேட்டனர். அவன், 'ஓ! பிதாவே! முன் கிருதயுகத்தில் ப்ருகுரிஷிக்குச் சினேகிதனுக்கு ஒப்பாகத் தம்சனென்னும் பெயரையுடைய பெரிய அஸுரனாக நான் இருந்தேன். அந்தநான் ப்ருகுவுக்கு மிகவும் பிரியமான மனைவியைப் பலாத்காரமாக அபகரித்தேன்; மஹரிஷியான அவருடைய சாபத்தால் புழுவாகிப் பூமியில்விழுந்தேன். உமக்கு முந்தியபாட்டனரான அவர், கோபமுற்று, என்னைநோக்கி, 'ஓ! பாபி! மூத்திரத்தையும் ச்லேஷ்மத்தையும் உண்ணுகிறவனாகி நரகத்தை அடையப் போகிறாய்' என்று சபித்தார். பிறகு, அவரைப்பார்த்து, 'ஓ! பிராமணரே! சாபத்திற்கு முடிவுவேண்டும்' என்று பிரார்த்தித்துக்கேட்டேன். பின்பு ப்ருகுவானவர், 'ப்ருகுவம்சத்திலுண்டான ராமனிடத்திலிருந்து விமோசனமுண்டாகும்' என்று எனக்குச் சொன்னர். ஓ! ஸாதுவே! நான் க்ஷேமமில்லாதவன் அடைவதுபோல இந்தக்கதியை அடைந்து உம்மிடம் சேர்ந்தபிறகு பாபயோனியிலிருந்து விடுபட்டேன்' என்று சொன்னன். இவ்விதம்சொல்லிப் பரசுராமரை நமஸ்கரித்துப் பெரிய அஸுரன் சென்றான்.

ராமர், கர்ணனைக் கோபத்துடன் பார்த்து, 'ஏ! மூடனே! இந்தப் பெரியதுக்கத்தை ஒருபோதும் பிராம்மணன் ஸஹிக்கமாட்டான். க்ஷத்திரியனைப்போல உனக்குத் தைரியமிருக்கிறது. கபடமின்றி ஸத்தியம் சொல்லவேண்டும்' என்று சொன்னர். உடனே, கர்ணன், சாபம்வருமெனப் பயந்து ஸந்தாஷமுள்ளவனாகச் செய்யவிரும்பி அவனைநோக்கி, 'ஓ! பார்க்கவரே! பிராமணருக்கும் க்ஷத்திரியருக்கும் வேறான இடத்தில்பிறந்த [1] ஸூதஜாதியாக என்னை அறியும். பூமியில் ஜனங்கள் என்னை ராதையினுடையபிள்ளையான

[1] ஆதிபர்வம் முதல்பக்கம் குறிப்பு.

கர்ணனென்று சொல்லுகிறார்கள். ஓ! ப்ருகுவம்சத்திலுண்டான பிராம்மணரே! அஸ்த்ரத்தில் பராசை அடைந்த எனக்கு அனுக்ரஹம்செய்யும். வேதவித்தையைக் கொடுக்கஸமர்த்தரான குருவானவர் பிதாவென்பதில் ஸந்தேஹமில்லை. ஆகையால், உங்களிடத்தில் பார்க்கவனென்று என்னல் கோத்திரம்சொல்லப்பட்டது' என்று சொன்னேன். பூமியில் விழுந்தவனும் சோகமுடையவனும் நடுங்குகிறவனும் அஞ்சலிசெய்தவனுமான அந்தக்கர்ணனை, ப்ருகுஸ்ரேஷ்டரான ராமர், கோபத்தோடு எரிக்கிறவர்போலப் பார்த்து, 'ஏ! மூடனே! அஸ்த்ரத்தில் பராசையுற்ற உன்னல் இங்கு நான் பொய்யாக உபசரிக்கப்பட்ட காரணத்தினல் இந்தப்பிரம்மாஸ்திரமானது ஸமானமானவனிடத்தில் யுத்தஞ்செய்யும்போது உன்னுடைய வதகாலத்தைத்தவிர மற்றக்காலத்தில் தோன்றுமலிருக்கவேண்டாம். பிராம்மணரல்லாதவனிடத்தில் ஒருகாலத்திலும் பிரம்மாஸ்திரமானது நிலைத்திருக்கமாட்டாது; போ. இப்பொழுது பொய்யனை உனக்கு இங்கு இடமில்லை; யுத்தத்தில் உன்னோடு ஸமமான க்ஷத்திரியன் பூமியிலிருக்கமாட்டான்' என்று சொன்னர். இங்ஙனம் பரசுராமரால்சொல்லப்பட்ட அந்தக்கர்ணன் நியாயப்படி நமஸ்காராதிகள் செய்துவிட்டுத் துர்யோதனனை அடைந்து, 'அஸ்த்ரங்களைக் கற்றவனுயிருக்கிறேன்' என்று சொன்னன்.

நான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் ராஜபுரம்சென்று கன்னியைப் பலாத்காரமாகத்தூக்கியதும், அரசர்கள் அவனை எதிர்த்ததும், அவன் கர்ணனுடைய உதவியால் வெற்றியடைந்து அஸ்தினபுரம் சேர்ந்ததும்.)

ஓ! பரதஸ்ரேஷ்டனே! கர்ணன் இங்ஙனம் பார்க்கவரின்புத்திரரான ராமரிடமிருந்து அஸ்த்ரத்தை அடைந்து துர்யோதனனோடு கூடிக் களித்திருந்தான். ஓ! ராஜனே! பிறகு, ஒருகாலத்தில் கலிங்கதேசத்தில் சித்ராங்கதராஜாவின் ஸ்வயம்வரத்தில் அரசர்கள்வந்து சேர்ந்தார்கள். ஓ! பாரதனே! அந்தத்தேசத்தில் சோபையையுடையதான ராஜபுரமென்னும் பட்டணத்தில் அங்குள்ள கன்னிகை நிமித்தம் அரசர்கள் நூற்றுக்கணக்காக வந்துசேர்ந்தார்கள். அங்கு எல்லா அரசர்களும் வந்து சேர்ந்திருப்பதைக் கேள்வியுற்று, துர்யோத

னன் கர்ணனுடன்கூடப் பொன்னுருளையுள்ள ரதத்திலேறிச் சென்றனன். ஓ! ராஜஸ்ரேஷ்டனே! பிறகு, பலதேசங்களிலுமுள்ள மஹாரதர்களான அரசர்கள் கன்னிகை நிமித்தமாக அந்த ஸ்வயம்வரத்தில் வந்துசேர்ந்தார்கள். தக்ஷிண திக்கையடைந்த சிசுபாலன், ஜராஸந்தன், பீஷ்மகன், வக்கிரன், கபோதரோமா, நீலன், உறுதியான பராக்கிரமமுள்ள ருக்மி, ஸ்திரீ ராஜ்யத்திற்கதிபதியான ஸ்ருகாலனென்னும் மஹாராஜன், விசோகன், சததந்வா, போஜன், வீரன் இவர்களும் மற்றும் அனேகர்களும் அப்படியே கிழக்கு வடக்குத் திக்குகளிலுள்ள மிலேச்ச ராஜர்களும் ஆரிய அரசர்களும் வந்தார்கள். எல்லாரும் பொன்னிலாகிய தோள்வளையுடையவர்களும் சுத்தமான பொன்போன்ற மேனியுடையவர்களும் பளபளப்பான சரீரமுள்ளவர்களும் புலிகள்போல மிக்க பலமுடையவர்களுமாயிருந்தார்கள். பரதவம்சத்திய அரசனே! பிறகு, அந்த அரசர்கள் உட்கார்ந்தவுடன், அந்தக் கன்னிகையானவள் செவிலித்தாயுடனும் நபும்ஸக வேலைக்காரர்களுடனும் அந்த மண்டபத்தில் பிரவேசித்தாள். பாரதனே! பிறகு, அரசர்களுடைய பெயரை அறிவிக்கும்பொழுது, உத்தமமான அழகுள்ள அந்தக் கன்னிகையானவள் திருதராஷ்டிரன் புத்திரனுரியோதனனைத் தாண்டிச் சென்றாள். குருவம்சத்திலுண்டான துரியோதனனே, அவ்விதம் தாண்டிச்சென்றதைப் பொறுக்கவில்லை; மற்ற அரசர்களை நிந்தித்துக்கொண்டு அந்தக் கன்னிகையைத் தடுக்கவும்செய்தான். பீஷ்மரையும் துரோணரையும் அடைந்த அந்தத் துரியோதனன் வீரியக்கொழுப்பினால் அந்தக் கன்னிகையைத் தேரில் தூக்கிவைத்துக்கொண்டு அரசர்களை யுத்தத்திற்கு அழைத்தான். ஓ! புருஷஸ்ரேஷ்டனே! ஆயுதம் தரித்தவர்களுள் சிறந்தவனான கர்ணன் தேரிலேறிக் கத்தியையேந்தி உடும்புத்தோலாலாகிய விரலுறையையும் பூண்டு துரியோதனனைப் பின்தொடர்ந்து சென்றான். பிறகு, ரதங்களைப்பூட்டுகிறவர்களும் கவசங்களைக்கட்டுகிறவர்களும் போர்செய்ய விருப்பமுள்ளவர்களுமான அரசர்களுடைய நெருக்கமானது அதிகமாக உண்டாயிற்று. அதிக கோபமுள்ள அந்த அரசர்கள் சாரமாரிகளைப் பொழிந்துகொண்டு மேகங்கள் இரண்டு மலைகளின்மேற் செல்லுவதுபோலக் கர்ணன் துர்யோதனன் இவ்விருவர்களையும் எதிர்த்து ஓடினர்கள். ஓடிவரும் அவர்களுடைய வில்லுகளையும் சரக்கூட்டங்களையும் கர்ணன் ஒவ்வொரு பாணத்தால் பூமியில்விழும்படிசெய்தான். பிறகு, யுத்தம் செய்கிறவர்களுள் ஸ்ரேஷ்டனான கர்ணனவன், சிலரை வில்லற்றவராகவும், சிலரை நிமிர்ந்து நின்ற

வில்லுடையவராகவும், சிலரைப் பாணத்தை இழந்தவராகவும், சிலரைத் தேர் வேல் கதை இவைகளைவிட்டவர்களாகவும், பலரை ஸாரதியற்றவர்களாகவும்செய்து துயரத்தை உண்டுபண்ணி அவ்வரசர்களை எளிதில்வென்றான். அந்த அரசர்கள் மனமுறிந்தவர்களாகித் தாமே குதிரைகளை ஓட்டிக்கொண்டு, 'ஓடு, ஓடு' என்று சொல்லிக்கொண்டு யுத்தத்தைவிட்டு விலகிச்சென்றார்கள். அப்பொழுது, துர்யோதனன் கர்ணனால் காப்பாற்றப்பட்டு சந்தோஷமுடையவனாகிக் கன்னிகையை எடுத்துக்கொண்டு அஸ்திநாபுரம் சேர்ந்தான்.

ஐந்தாவது அத்யாயம்.

ராஜ்தர்மம். (தொடர்ச்சி.)

(ஜராஸந்தன் கர்ணனை எதிர்த்ததும், கர்ணனுடைய பராக்ரமத்தை மெச்சி அவனோடு ஜராஸந்தன் தோழமை கொண்டதும், கர்ணனுடைய மரணத்துக்குக் காரணங்களும்.)

யுத்தத்தில் பலத்தை வெளியிட்ட கர்ணனைக்கண்டு மகத தேசத்திற்கதிபதியான ஜராஸந்தனென்னும் அரசன் தேரிலேறி யுத்தத்திற்கழைத்தான். யுத்தத்தில் பல ஆயுதங்களால் ஒருவர்க்கொருவர் வர்ஷிப்பவர்களும் திவ்யமான அஸ்த்ரங்கள் தெரிந்தவர்களுமான அவ்விருவர்க்கும் பெரிய யுத்தமானது உண்டாயிற்று. அதிக பலத்தோடுகூடின அவ்விருவர்களும் பாணம் அற்றவர்களும் வில்லற்றவர்களும் கத்தி ஓடிந்தவர்களுமானபின் பூமியிலிருந்துகொண்டு கைகளால் கலந்துகொண்டார்கள். ஜரையென்பவளால் சேர்க்கப்பட்ட ஜராஸந்தனது சரீரத்தினுடைய ஸந்தியைக் கர்ணனவன் [1] பாஹு கண்டகமென்று சொல்லப்பட்ட சண்டையினால் பிளந்தான். அந்த அரசன் தன் சரீரத்தினுடைய (பிளப்பாகிய) விகாரத்தைக்கண்டு பகையை நெடுந்தூரம்விலக்கி, 'ஸந்தோஷப்படுகிறேன்' என்று கர்ணனப்பார்த்துச் சொன்னான். பிறகு, அவன் கர்ணனிடம் ஸந்தோஷத்தால் மாலினியென்னும் பட்டணத்தை அவனுக்கு அளித்தான். ஓ! நரச்ரேஷ்ட! சத்துருவை ஜயிக்கும் அந்தக் கர்ணன் அங்க தேசத்தின் அரசனாக இருந்தான். சத்துருசேனையைத் தொலைப்பவனான அவன் துர்யோதனனுடைய இஷ்டப்படி எல்லா ஜாதிகளையும்

---

1 ஒரு முழங்காலை மிதித்துக்கொண்டு மற்றொரு காலைப் பிடித்துத் தூக்கிக் கிழிப்பது.

பாதுகாத்துவந்தான். அப்படியிருந்தது உனக்கும் தெரியும். இங்ஙனம் ஆயுதவலிமையால் அந்தக்கர்ணன் பூமியில் பிரஸித்தனானன். அந்தக் கர்ணன் உன்னுடைய சேஷமநிமித்தம் தேவேந்திரனுல் கவசத்தையும் குண்டலங்களையும் யாசிக்கப்பட்டவுடன், தேவர்களின்மாயையால் மயக்கப்பட்டுத் திவ்யமானவைகளையும் உடன்பிறந்தவையும் மிகவும் பூஜிக்கப்பட்டவையுமான குண்டலங்களையும் உடன்பிறந்தகவசத்தையும் கொடுத்துவிட்டான். குண்டலங்களாலும் உடன்பிறந்தகவசத்தாலும் விடுபட்ட கர்ணன், பிராம்மணருடைய சாபத்தாலும், மஹாத்மாவான பரசுராமருடைய சாபத்தாலும், குந்திக்குக் கொடுத்தவரத்திணுலும், இந்திரனுடைய மாயையாலும், ரதிகர்களைக் கணக்கிட்டகாலத்தில் அர்த்தரதனென்றுசொல்லிப் பீஷ்மர்செய்த அவமானத்தாலும், சல்லியன்செய்த தேஜோபங்கத்தாலும், ஸ்ரீ வாஸுதேவரின் நீதியாலும், வாஸுதேவர் பார்த்துக்கொண்டிருக்கையில் யுத்தத்தில் அர்ஜுனனுல் அடிக்கப்பட்டான். ருத்திரர், தேவராஜன், யமன், வருணன், குபேரன், துரோணர், மஹாத்மாவான கிருபர் இவர்களுடைய திவ்யமான அஸ்த்ரங்களைப் பெற்றுக்கொண்டு காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனுல் ஸூர்யனுக்குப் புத்திரனும் ஸூர்யனுக்குச்சரியான காந்தியுடையவனுமான கர்ணன் யுத்தத்தில் கொல்லப்பட்டான். புருஷச்ரேஷ்டனே! இவ்விதம் பலபோர்களால் சபிக்கப்பட்டும் வஞ்சிக்கப்பட்டும் உனக்குத் தமையனான கர்ணன் யுத்தத்தில் மூடனை அடைந்தான். நீ துக்கிக்கவேண்டாம்" என்று சொன்னர்.

ஆறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(குந்தி தர்மபுத்திரருடைய துக்கத்தைஆற்றியதும், அவர் பெண்களுக்கு ஒரு சாபம் கொடுத்ததும், அவர் பந்துமித்திரர்களுடைய மரணத்தைநினைத்து ராஜ்யத்தில் வெறுப்படைந்ததும்.)

தேவரிஷியான அந்த நாரதர், இவ்வளவும் சொல்லிவிட்டு, மௌனமாக இருந்தார். ராஜரிஷியான யுதிஷ்டிரரோ சோகத்தால் பீடிக்கப்பட்டவராகிச் சிந்தையை அடைந்தார். சோகத்தால் சூழப்பட்ட சரீரமுடையவளும் துக்கத்தால்கெடுக்கப்பட்ட புத்தியுடையவளுமான குந்தியானவள், தீனமானமனமுடையவரும் சோகப்படு

கிறவரும் முகம்குவிந்து ஸர்ப்பம்போலப் பெருமூச்சுவிடுகிறவரும் ஜலம்தளும்பும் கண்களுடையவரும் தீரருமான அந்தத்தர்மபுத்திரரைப்பார்த்து, இனிமையானவார்த்தையுடன் ஸமயத்திற்குத்தக்கபடி அர்த்தமுள்ளவார்த்தையைச் சொல்லத்தொடங்கினள்.

"ஓ! புஜபலமமைந்த யுதிஷ்டிரனே! இந்தக்கர்ணனைக்குறித்து நீ சோகப்படுவது நியாயமன்று. மிகுந்த புத்தியுடையவனே! சோகத்தைவிட்டுவிடு. என்னுடைய இந்தவார்த்தையையும் கேள். தர்மத்தைக் காப்பவர்களுள் சிறந்த அந்தக்கர்ணன், முன்பு என்னாலும் தகப்பனான ஸூர்யனாலும் உன்னை அறிவிக்கவேண்டியதன் பொருட்டு [1]யாசிக்கப்பட்டான். நன்மையையேவிரும்புகிறவனும் ஸம்பத்தை இச்சிக்கிறவனுமான மனிதனால் ஸ்நேஹிதர்களுக்கு எது சொல்லத்தக்கதோ அவ்விதம் அவன் ஸ்வப்னாவஸ்தைகளிலும் என் எதிரிலும் ஸூர்யபகவானால் சொல்லப்பட்டான். சிலைகாரணங்களாலே மூந்தியே இவனை உன்னோடு ஒற்றுமையடையும்படிசெய்யவாவது ஸமாதானப்படுத்தவாவது ஸூர்யனுக்கும் சக்தியில்லை; எனக்கும் சக்தியில்லை. பிறகு, வைரத்தைதவிளிப்படுத்துவதில் கருத்துடையவனும் காலத்தால் சூழப்பட்டவனுமான அந்தககாணன, உங்களுக்கு விரோதம் செய்கிறவனைதால், என்னாலும் உபேக்ஷிக்கப்பட்டான்' என்று சொன்னாள். தர்மபுத்தியுள்ளவரும் கண்ணீரால் கலக்கப்பட்ட கண்ணையுடையவரும் மிக்கதேஜஸையுடையவருமான தர்மபுத்திரர், தாயாரால் இப்படிச்சொல்லப்பட்டவுடன், சோகத்தால் மிகுதியாகத் துன்பப்படும் கண்ணையுடையவராய், 'ரஹஸ்யத்தை மூடிவைத்துக்கொண்டபடியால் உன்னால் அப்பொழுது நாங்கள் மிகவும் வஞ்சிக்கப்பட்டோம்' என்றுசொல்லி மிகவும் துக்கத்தை அடைந்து, 'எல்லா உலகங்களிலும் இன்றுமுதல் பெண்கள் ரஹஸ்யத்தை வைத்துக்கொள்ளாமலிருக்கட்டும்' என்று சாபமிட்டார். அந்தத் தர்மபுத்திரரானவர் அப்பொழுது பிள்ளைகளையும் பேரர்களையும் ஸம்பந்திகளையும் சினேகிதர்களையும் நினைத்துக்கொண்டு மனதடுங்கிப் புத்திகலங்கினவரானார். பிறகு, சோகத்தால்சூழப்பட்ட புத்தியையுடைவரும் தாபத்தால் பீடிக்கப்பட்டவரும் புகையுடன்கூடின அக்கினிபோலிருக்கும் புத்திமானுமான தர்மபுத்திரர் ராஜ்யத்தில் வெறுப்பை அடைந்தார்.

---

1 'உடன்பிறந்தவர்களைக் காப்பாற்றவேண்டுமென்று போதிக்கப்பட்டான்' என்பது வேறுபாடம்.

ஏழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் பந்துநாசத்தைப்பற்றிப் பிரலாபித்து முனியாக வனஞ்செல்வேனென்றது.)

தர்மாத்மாவும் சோகத்தால் கஷ்டப்படும் புத்தியுடையவரு மான தர்மபுத்திரரோ, மஹாரதனைகர்ணனை நினைத்துத் துக்கத்தால் தாபத்தைஅடைந்து வருந்தினர். துக்கத்தாலும் சோகத்தாலும் ஆக்ரமிக்கப்பட்டவரும் அடிக்கடி பெருமூச்சுவிடுகிறவரும் சோகத் தால் வாட்டமடைந்தவருமான தர்மபுத்திரர், அர்ஜுனனைப்பார்த்து, இந்த வசனத்தைச் சொல்லத்தொடங்கினர்.

"நாம் விருஷ்ணி அந்தகவீரசத்தில் பிக்ஷாடனஞ்செய்துகொண் டிருந்தோமாயல் ஞாதிகளில் புருஷர்களில்லாமற்செய்து இந்தக் கெட்டகதியை அடைந்திருக்கமாட்டோம்: குருவம்சத்தார்களு டைய பயன் போயிற்று. நமது சத்துருக்கள் பூர்ணமான பிர யோஜனமுள்ளவர்களாயினர்கள். நாமே நம்மைக் கொன்றுகொண்டால் எந்தத்தர்மத்தினுடைய பயனைஅடைவோம்? க்ஷத்திரியர்களுக்கு ஏற்பட்டமுறை நிந்திக்கத்தக்கது. சேனையும் ஆண்மையும் செல்வ மும் நிந்திக்கத்தக்கவை. அர்த்தமென்னும் காரணத்தால் நாம் இவ் வித ஆபத்தை அடைந்தோம். வனத்தில் ஸஞ்சரிப்பவர்களுக்குப் பொறுமை, அடக்கம், சுத்தி, பகையின்மை, மாற்சரியமில்லாமை, ஹிம்ஸையில்லாமை, ஸத்தியவசனம் இவைகள் எப்பொழுதும் இருக்கவேண்டிய தர்மங்கள். இவை மிகவும்நல்லவை. நாமோ லோபத்தாலும் அவிவேகத்தாலும் கர்வத்தையும் அகங்காரத்தையும் அடைந்து அரசாட்சியிலுள்ள கஷ்டத்தைஅனுபவிக்கவிரும்பி இந்த அவஸ்தையைஅடைந்தோம். பூமியில் போகத்தைவிரும்பிய நம்மை யும் கொல்லப்பட்ட பந்துக்களையும் பார்த்தால் மூவுலகத்திலுமுள்ள அரசாட்சியாலும் ஒருவனும் புகழமாட்டான். அப்படிப்பட்ட நாம் பூமியினிமித்தம் கொல்லத்தகாதவர்களைக்கொன்று பந்துக்களையிழந் தும் பொருளையிழந்தும் பூமியில் ஜீவித்திருக்கிறோம். போகத் தில்விருப்பங்கொண்ட நமக்கு நாய்களுக்கு நேர்வதுபோல (பந்து வதரூபமான) அசுபகாரியம் ஸம்பவித்தது. ஆனால், அவைகள் தமக்குரியபோகத்தைஅடைகின்றன. போகத்தை விரும்புகிறவர் களாகியநமக்கோ போகமும் நஷ்டமாயிற்று. கொல்லப்பட்டவர்க

ளாகிய இந்த ஜனங்கள் இந்தப் பூமிமுழுமைக்குமாகவும் இழக்கத் தக்கவர்களல்லர்; ஸுவர்ணக்குவியல்களுக்காகவும் எல்லாயானை குதிரைகளுக்குமாகவும் இழக்கத்தக்கவர்களல்லர். ஆசையாலும் சோகத்தாலும் மூடப்பட்டவர்களும் கோபத்தோடும் அஸூயையோடுங்கூடினவர்களுமான அவர்கள் மிருத்தியுவென்னும் வாகனத்தில் ஏறிக்கொண்டு யமனுடைய கிருஹமட்போய்ச்சேர்ந்தார்கள். பலவிதமான சேஷமத்தைவிரும்புகிறவர்களான தந்தைகள் தவத்தாலும் ப்ரம்மசரியத்தாலும் பெரியோர்களை வணங்குவதனாலும் பொறுமையாலும் பிள்ளைகளை அடைய முயலுகிறார்கள். தாய்களோ அப்படியே உபவாஸங்களாலும் தெய்வவழிபாடுகளாலும் விரதங்களாலும் உத்ஸவங்களாலும் (மற்றுமுள்ள) சுபகாரியங்களாலும் கர்ப்பங்களை அடைகிறார்கள்; அவைகளைப் பத்துமாஸம் சுமக்கின்றார்கள். 'சேஷமமாகப் பிரஸவித்து, பிறந்தவைகள் ஜீவித்துமிருந்து, ஜீவிப்பவர்கள் கௌரவமுள்ளவர்களும் பலமுள்ளவர்களுமாஞல், நமக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஸுகத்தைச் செய்வார்கள்' என்று தீனர்களாய்ப் பிரயோஜனத்தைக் காரணமாகக்கொண்டு பிரார்த்திக்கிறார்கள். அவர்களுடைய இந்தப் பிரயத்தனமானது மிகவும் பயனற்றதாக முடிந்தது. மெருகிட்ட குண்டலங்களையணிந்த யௌவனமுடையவர்களான இவர்களுடைய பிள்ளைகள் இவ்விதம் கொல்லப்பட்டார்கள். பூமியிலுள்ளபோகங்களை அனுபவியாமலும் பித்ருக்கள் தேவர்கள் இவர்களுடைய கடனைத் தீர்க்காமலும் யமனுடைய வீடுசென்றார்கள். அம்மா! இவர்களுடைய தாய்தந்தைகள் பிறந்தகுழந்தைவடிவமுடைய இவர்கள்விஷயத்தில் எப்போழுது ஜாதகர்மத்தைச் செய்தார்களோ அப்பொழுதே இந்த அபசார்கள் கொல்லப்பட்டவர்களானார்கள். ஆசையும் தீனத்தனமுமுடையவர்களும் கோபம் அஸூயை இவைகளுடன் கூடினவர்களுமானவர்கள் எவ்விடத்திலும் எக்காலத்திலும் ஜயத்தின்பயனைச் சிறிதேனும் அனுபவிக்கப்போகிறதில்லை. பாஞ்சாலர்கள் கௌரவர்கள் இவர்களுள் எவர்கள் கொல்லப்பட்டார்களோ அவர்கள் கொல்லப்பட்டவர்கள்தாம்; எவ்விதபோகமும் அற்றவர்கள்தாம். நாமும் ஆசையின்பயனை அடைந்தவர்களில்லை; அவர்களும் அப்படித்தான். நம்மாலும் ஜயிக்கப்படவில்லை; அவர்களாலுமில்லை. இந்தப் பூமிபானது அவர்களால் அனுபவிக்கப்படவில்லை; ஸ்திரீகளும் பாட்டும் வாத்தியமும் அனுபவிக்கப்படவில்லை; மந்திரிகள் ஸ்நேஹிதர்கள் இவர்களின் வார்த்தையும் கேட்கப்படவில்லை; கற்றோர்களின் வார்த்தையும் கேட்கப்படவில்லை; உயர்ந்த ரத்தினங்களும் அடையப்பட

வில்லை; பூமியும் அடையப்படவில்லை; பொருள்வருவாயுமில்லை; நமது கர்மங்களால் தர்மம் தவறுமலிருந்து அடையக்கூடிய இவ்வுலகங்களையும் அடையவில்லை; நினைத்துப்பார்த்தால், திருதராஷ்டிரரின் புத்திரர்களால் அவமதிக்கப்பட்ட நாமே இவ்வுலகத்தின் நாசத்திற்குக் காரணமாகிறோம். குற்றஞ்செய்யாத நம்மிடங்களில் அந்தத் துர்யோதனன், எப்பொழுதும் அவமதிக்கும் புத்தியுடையவனும் பகையுள்ளவனும் த்வேஷத்தையே ஜீவனமாயுடையவனும் பொய்ந்நடக்கையுடையவனுமாயிருந்தான்; நம்மிடத்திலுள்ள பெருமையைக்கண்டு அவன் நிறம்மாறியும் வெளுத்தும் இளைத்துமிருந்தான். (இதைப் பற்றித்) திருதராஷ்டிரராஜாவும் சகுனியால் தெரிவிக்கப்பட்டார். தகப்பனரான திருதராஷ்டிரரும் பிள்ளையினிடத்திலுள்ள ஆசையினால் பிதாவான பீஷ்மரையும் அப்படியே விதுரரையும் கேளாமல் கெட்ட நடையுள்ள அவனுக்கு இணங்கினர். இந்த ராஜாவான திருதராஷ்டிரரும், அசக்தனும் லோபமுள்ளவனும் காமத்திற்கு ஈடுபட்டவனுமான பிள்ளையை அடக்காமல் ஸந்தேஹமின்றி நாம் எப்படியோ அப்படியே போய்விட்டார். எப்பொழுதும் நம்மிடத்தில் பகைமையால் தபிக்கப்பட்டவனும் பாபபுத்தியுள்ளவனுமான துர்யோதனன், பிரகாசிக்கும் புகழைவிட்டுவிலகி உடன்பிறந்தார்களைக் கொல்வித்து (இந்தத் திருதராஷ்டிரரும் காந்தாரியுமாகிய) முதியோர்களையும் சோகத்தீயில் வீழ்த்திவிட்டுத் தானும் சென்றான். சண்டை செய்யவேண்டுமென்று விருப்பமுள்ள இவன் கிருஷ்ணனுடைய ஸந்நிதானத்தில் எவ்விதமான வார்த்தையைச் சொன்னானே அவ்வசனத்தை நல்லகுலத்தில் பிறந்தவனும் பந்துவுமான எந்த மனிதன் ஒரு நண்பனிடம் பேசுவான்? தேஜஸினாலே எல்லாத்திக்குக்களையும் கொளுத்துகிறவர்கள்போலப் பிரகாசிக்கும் நாம் [1] நம்முடைய தோஷத்தால் மிகப் பலவருஷங்களுக்கு நாசமடைந்தோம். கெட்டபுத்தியுள்ள நம்முடைய அந்தப் பகைமையென்னும் புருஷன் உறுதியான கட்டுள்ளவனன். துர்யோதனன் நிமித்தமாக நம்முடைய இந்தக்குலமானது விசேஷமாய் நசிக்கும்படி செய்யப்பட்டது. கொல்லத்தகாதவர்களைக் கொலைசெய்து உலகத்தில் நிந்திக்கக்கூடிய ஸ்திதியை அடைந்திருக்கிறோம். கெட்டபுத்தியுடையவனும் இந்தக்குலத்தின் நாசத்திற்குக் காரணனும் பாபபுருஷனுமான துர்யோதனனைத் திருதராஷ்டிரராஜாவானவர் ராஜ்யத்திற்குஅதிபதியாகச் செய்துவிட்டு இப்பொழுது துக்கப்படுகிறார். சூரர்கள் கொல்லப்பட்டார்கள். பாவம் செய்யப்பட்டது. இந்தத்தேசம் அழிக்கப்

1 துரியோதனனைக்குறித்து இங்ஙனம் சொல்லியது.

பட்டது. கொன்றபிறகு நமக்குக் கோபம்போயிற்று. இந்தச்சோக மானது என்னைப் பிளக்கிறது. அர்ஜுன! செய்தபாவமானது [1] உப காரத்தால் போக்கப்படுகிறது; வெளியிட்டுச் சொல்வதினாலாவது பச்சாத்தாபத்தாலாவது தானத்தினாலாவது தவத்தினாலாவது விரக் தியினாலாவது புண்ணியதீர்த்தங்களுக்குச் செல்லுவதினாலாவது ஸ்ருதிஸ்மிருதிகளை ஜபிப்பதனாலாவது விலக்கப்படுகிறது. தியாக முள்ளவன் மறுபடியும் பாவத்தைச் செய்யமாட்டானென்றும் ஜனன மரணங்களை அடையமாட்டானென்றும் வேதம் உபதேசிக்கிற கார ணத்தினால் [2] தியாகமென்னும் வழியை அடைந்தவன் ஞானத்தை அடைந்து அப்பொழுதே பிரம்மமாகிறான். ஓ! சத்துருக்களைத் தபிக் கச்செய்யும்அர்ஜுன! அந்தநான் உங்கள்யாவரையும் கேட்டுக்கொண்டு (ஸுகதுக்கம் மானவமானம் முதலிய) இரட்டைகளிலிருந்தும் விலகி ஞானத்தோடு கூடினவனாகி முனியாகக் காடுபோய்ச் சேருகிறேன். கிருஹஸ்தாச்ரமமுள்ளவனால் எல்லாத்தர்மங்களையும் அடையமுடி யாதென்று வேதம் சொல்லுகிறது. ஏ! சத்துருக்களைக் கொல்லும் அர்ஜுன! அஃது எனக்குப் பிரத்தியக்ஷம். என்னால் செய்யப்பட் டது பாவந்தான். கிருஹஸ்தாச்ரமத்தை விரும்பும் மனிதனால் ஜனனமரணத்திற்குக்காரணமான தர்மந்தான் அடையக்கூடுமென்று வேதஞ்சொல்லுகிறது. ஆகையால், அந்தநான் கிருஹஸ்தாச்ரமத் தையும் எல்லாராஜ்யத்தையும் ஸுகங்களையும்விட்டு, விடுபட்டவனும் சோகமில்லாதவனும் ஓரிடத்திலும் பற்றில்லாதவனுமாகப் போய்ச் சேருகிறேன். ஏ! குருவம்சத்தில் பிறந்தவனே! ராஜ்யத்தினாலாவது போகங்களாலாவது எனக்குப் பிரயோஜனமில்லை. சத்துருக்களில் லாமலிருக்கிற இந்தப்பூமியை க்ஷேமமாய் நீங்கள் ஆளுங்கள்" என்று சொன்னார். குருச்ரேஷ்டரான தர்மபுத்ரர் இவ்வளவு வார்த்- தையைச் சொல்லிவிட்டு ஓய்வடைந்தார். பிறகு, இளையவனான பார்த்தன் மறுமொழி சொல்லத் தொடங்கினன்.

எட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், இல்லறஒழுக்கத்தின் சிறப்பை எடுத்துக்காட்டி அஸ்வ மேதம் செய்யும்படி தர்மபுத்திரருக்கு வற்புறுத்திக் கூறியது.)

பிறகு, உறுதியானசொல்லும் பராக்ரமமுடையவனும் குரூர மான பராக்ரமமுள்ளவனும் இந்திரகுமாரனும் மிக்கதேஜஸுள்ள

---

1 மூலத்தில் 'கல்யாணை' என்றிருக்கிறது.

2 'யோகமார்க்கத்தையடைந்தவன்' என்பது பழையவுரை.

வனுமான அர்ஜுனன், நிந்திக்கப்பட்ட பொறுமைக்காரன்போலத் தன்னைக் குரூரனைகக் காண்பித்துக்கொண்டும் கடைவாயை நக்கிக் கொண்டும் புன்சிரிப்புடன் மிக்கநீதியுள்ள இந்தவாக்கியத்தைச்சொல் லத்தொடங்கினன்:— "மனிதர்கள்செய்யமுடியாத காரியத்தைச் செய்துவிட்டு உயர்ந்ததான ஸம்பத்தை விடுகிறீரே. இந்தத்துக்க மும் ஆச்சர்யம்; பிரயாஸமும் ஆச்சர்யம். இவ்வளவு அதிகமான பயமும் ஆச்சர்யம். சத்துருக்களைக்கொன்ற உமது தர்மத்தால் கிடை த்த பூமியை அடைந்தும் எப்படிவிடுகிறீர்? இது புத்திக்குறைவன் மோ? பயப்படுகிறவனுக்கு ராஜ்யம் ஏது? சோம்பலுடையவனுக்கும் ராஜ்யம் ஏது? கோபத்தால் விவேகமற்றவராய் அரசர்களை என்னகார ணத்துக்காகக் கொன்றீர்? எந்தமனிதன் லோகமற்றவனும் ஒன்று மில்லாதவனும் எல்லாஉலகத்திலும் பிரஸித்தியில்லாதவனும் பிள்ளை களும் பசுக்களுமில்லாதவனுமாயிருக்கிறானோ அவன் பிச்சை யெடுத்து ஜீவிக்கவிரும்புவான். அவன் முயற்சியால் எவனுடைய பொருள்களையும் அடைய விரும்பமாட்டான். நிறைந்தராஜ்யத்தைத் தள்ளிவிட்டு மிகவும் இகழ்ச்சியான ஓடெடுக்கும் விருத்தியை அடைந்து பிழைக்கும் உம்முடையவிஷயத்தில் இவ்வுலகம் என்ன சொல்லும்? ஓ! பிரபுவே! எல்லாமுயற்சிகளையும் தள்ளிவிட்டு க்ஷேமமற்றவராகவும் ஒன்றுமில்லாதவராகவும் அவிவேகிபோல என்னகாரணத்தால் பிச்சையெடுக்க விரும்புகிறீர்? ராஜகுலத்தில் பிறந்து பூமிமுழுமையும் ஜயித்தபிறகு அறம்பொருள்களெல்லா வற்றையும் விட்டு என்ன மூடத்தனத்தால் காட்டுக்குப் புறப்படு கிறீர்? நீர் இல்லாமல்போனதால் தீயவர்கள் இந்தஹவிஸ்ஸுகளைக் கெடுப்பார்களானால் அந்தப் பாவம் உம்மைத்தான் அடையும். ஒன்று மில்லாமலிருப்பது முனிகளுடைய தருமமாகும். பொருளில்லாத காலத்தில் கொடுமையான காரியத்தைச் செய்துவிட்டு, 'பொரு ளில்லாமை நிந்திக்கத்தக்கது' என்று நகுஷன் சொன்னன். [1] ஆப வஸ்தன்யவிருத்தியானது ரிஷிகளுக்குமாத்திரம் கூறப்படுகிறது. அதனை நீர் அறிவீர். தர்மமென்று பிரஸித்தமாய் எதைச்சொல்லு கிறார்களோ அது பொருளால் நடைபெறுகின்றது. எவனுடைய பொருளை எவன் அபகரிக்கிறானோ அவனுடையதர்மத்தை அவன் அபகரிக்கிறான். ஓ! அரசரே! பொருளானது அபகரிக்கப்படும் பொழுது நாம் எதைப் பொறுக்கமுடியும்? ஜனங்கள், பக்கத்திலிருக் கும் தரித்திரனைத் தோஷமுள்ளவனைப் போலப் பார்க்கிறார்கள். உலகத்தில் பொருளில்லாமை பாதகம். அதைக் கொண்டாடத்தக்க

1 அடுத்தநாளைக்கு ஒன்றுமில்லாமலிருத்தல்.

வன்: எவன்? ஓ! வேந்தரே! பதிதன் துக்கிக்கப்படுகிறான். பொருளில்லாதவன் துக்கிக்கப்படுகிறான். பதிதனுக்கும் பொருளில்லாதவனுக்கும் வேறுபாட்டை நான் அறியவில்லை. ஆங்காங்கிருந்து சேர்க்கப்பட்டவையும் மிகுதியாகப் பெருகியவையுமான பொருள்களிலிருந்துதான், மலைகளிலிருந்து நதிகள் பிரவிருத்திப்பதுபோல, எல்லாக்கார்யங்களும் பிரவிருத்திக்கின்றன. ஓ! நரஸ்ரேஷ்டரே! அர்த்தத்திலிருந்து தர்மமும் காமமும் ஸ்வர்க்கமும் ஸித்திக்கின்றன. உலகத்தின் பிராணயாத்திரையும் பொருளில்லாமல் ஸித்திபெறாது. அர்த்தத்திலிருந்துவிலகின அல்பபுத்தியுள்ள மனிதனுக்கு எல்லாக்காரியங்களும் கோடைக்காலத்திய சிறுநதிகள் போல அற்றுவிடும். எவனுக்குப் பொருளிருக்கிறதோ அவனுக்கு ஸ்நேகிதர்களுண்டு; எவனுக்குப் பொருளிருக்கிறதோ அவனுக்குப் பந்துக்களுண்டு; எவனுக்குப் பொருளிருக்கிறதோ அவனே உலகத்தில் புருஷன்; எவனுக்குப் பொருளிருக்கிறதோ அவனே வித்துவான். பொருளாசையுடையவனுக்குப் பொருளின்றிப் பொருள் ஸம்பாதிக்கமுடியாது. யானைகளால் பெரியயானைகள் கட்டப்படுவதுபோலப் பொருள்களால் பொருள்கள் கட்டப்படுகின்றன. ஓ! நராதிபரே! தர்மம், காமம், ஸ்வர்க்கம், ஸந்தோஷம், கோபம், கல்வி, அடக்கம்ஆகிய இவைகளெல்லாம் அர்த்தத்திலிருந்து உண்டாகின்றன. ஓ! புருஷர்களுள்உத்தமரே! தனத்தால் குலமானது பெருமையுள்ளதாகிறது; தனத்தால் தர்மம் வளருகிறது. பொருளில்லாதவனுக்கு இவ்வுலகமுமில்லை; பரலோகமுமில்லை. பொருளில்லாதவன் தர்மகாரியங்களை உள்ளபடிசெய்யமுடியாது. மலையிலிருந்து நதியானதுபெருகுவதுபோலத் தனத்திலிருந்துதான் தர்மம்பெருகுகிறது. ஓ! அரசரே! எந்தமனிதனுக்குப் பொருளும் பசுக்களும் வேலைக்காரர்களும் அதிதிகளும் குறைந்திருக்கிறார்களோ அவன்தான் இளைத்தவனென்பது பிரஸித்தம். சரீரமிளைத்தவன் இளைத்தவனல்லன். ஓ! ராஜரே! நியாயத்தைப்பாரும்; தேவர்களும் அஸுரர்களும் எப்படி இருக்கிறார்களென்பதைப் பாரும். தேவதைகள் ஞாதிகளின்வதத்தால் பொருளையன்றி வேறுளதைவிரும்புகிறார்கள்? அயலானுடைய பொருள் அபகரிக்கத்தகாததாயிருந்தால் எப்படித் தர்மத்தைச் செய்யமுடியும்? ஸுக்ஷ்மதரிசிகளால் வேதங்களிலிருந்து இவைகள் தாம் நிச்சயம்செய்யப்பட்டன. அவை:— 'எப்போதும் வேதம் ஓதவேண்டும். எப்போதும் தெரிந்தவரை இருக்கவேண்டும்; எல்லாவிதத்தாலும் பொருள் ஸம்பாதிக்கவேண்டும்; பிரயத்தனத்துடன் யாகமுஞ் செய்யவேண்டும்' என்பன. ஸ்வர்க்கத்

திலுள்ள பதவிகள்யாவும் ஞாதிகளைத் துரோகம்செய்தலாலேயே அடையப்பட்டன. எந்தக் காரணத்தால் தேவர்கள் தம் இஷ்டஸித்தியை விரும்புகிறார்களோ அது ஞாதிகளின் துரோகமல்லாமல் வேறு யாது? இங்ஙனம் தேவர்களின் நிச்சயமிருப்பதுடன் வேதவாதங்களும் சாசுவதமாயிருக்கின்றன. அத்யயனம் யாகம் இவைகளைச் செய்பவும் செய்விக்கவும் செய்கிறார்கள். உலகத்திலுள்ள பொருள்கள்யாவும் பிறரிடமிருந்து பெற்றவைதாம். அதுதான் நற்கதிக்கும் காரணம். பிறருக்கு அபகார மில்லாததான எவ்விதப் பொருளையும் எவ்விடத்திலும் நாம் காணும். இவ்விதமாகவேதான் அரசர்கள் இப்பூமியை ஆளுகிறார்கள். அவர்கள் ஜயித்தபிறகு பிள்ளைகள் தகப்பனுடைய பொருளைச் சொல்வது போல், 'இஃது என்னுடையது' என்று சொல்லுகிறார்கள். அந்த ராஜரிஷிகளும் ஸ்வர்க்கத்துக்குரியவர்கள்தாம். இவர்களுடைய தர்மமானது உயர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. எப்படி நிறைந்த கடலிலிருந்து ஜலமானது பத்துத்திக்குக்களிலும் பெருகுகிறதோ அப்படியே ராஜகுலத்திலிருந்து பொருளானது பூமியில் புறப்படுகிறது. இந்தப்பூமியானது திலீபனுடையதாயிருந்தது; நிருகனுடையதாயிருந்தது; நஹுஷனுடையதாயிருந்தது; அம்பரீஷனுடையதாயிருந்தது; மாந்தாதாவினுடையதாயிருந்தது; அதுவே உம்மிடத்திலுமிருக்கிறது. பலவிதமான தக்ஷிணையுள்ளதும் திரவ்யரூபமுள்ளதுமான இந்தயாகம் உம்மை நன்றாய் அடைந்திருக்கிறது. ஓ! வேந்தரே! அதை நீர் செய்யாவிட்டால் அரசனன்று சொல்லப்படுகிற பாவத்தை அடைந்தவராகிறீர். எவர்களுடைய அரசன் தக்ஷிணையுடன் அசுவமேதமென்னும் யாகத்தைச் செய்கிறானோ அவர்களெல்லாரும் அவனுடைய அவபிருதத்தில் பரிசுத்தர்களாகிறார்கள். விஷ்ணுரூபியான மஹாதேவர் ஸர்வமேதமென்னும் பெரிய யாகத்தில் எல்லாப் பிராணிகளையும் அழைத்தார். அப்படியே தம்மையும் தாமே அழைத்துக்கொண்டார். இது சாசுவதமான தர்மமார்க்கம். இதற்கு அழிவில்லையென்று கேட்டிருக்கிறோம். ஓ! வேந்தரே! [1]மஹாஜனங்கள் சென்றவழியேசெல்லும்; குமார்க்கத்தை அடையவேண்டாம்" என்று சொன்னான்.

---

1 'தாசரதிः பந்தாः' என்று பாடங்கொண்டு, 'பசுவென்று, யஜமானனும் பத்னியும் இருவர், வேதங்கள் மூன்று, ரித்விக்குக்கள் நால்வர், ஆகப் பத்து ஸாதனங்களால் நடைபெறும்யாகம்' என்று பொருள் கூறுவது பழையவுரை.

ஒன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர், ஸந்யாஸத்தில் தமக்கிருக்கும் உறுதியையும் அதன் தன்மையையும் உலகஇயல்புகளையும் கூறியது.)

தர்மபுத்திரர், அர்ஜுனனைப்பார்த்து, "மனத்தையும் செவியையும் [1]அந்தராத்மாவில் அடக்கிக்கொண்டு முதலில் ஒருமுகூர்த்தம் ஒருவழிப்பட்ட மனமுடையவனாக இரு. பிறகு கேட்டால் என் வார்த்தையானது உனக்குப் பிரியமாயிருக்கும். விஷய ஸுகங்களைத் தள்ளிவிட்டுப் [2]பெரியோர்களின் கூட்டத்தால் அடையத்தகுந்த வழியை அடையப்போகின்றேன். உனக்காக மறுபடியும் அந்த அரசாட்சியை ஒருபோதும் அடையமாட்டேன். மோக்ஷமத்திற்குக் காரணமும் ஒருவனுயிருந்து அடையக் கூடியதுமான வழி எஃதிருக்கிறதென்று என்னைக்கேள். அல்லது, கேட்கவிருப்பமில்லாதனால் நீ (வலியக்) கேளாமலிருந்தாலும் என்னுடைய வசனத்தைக் கேள். விஷயஸுகங்களின் நடையைத்தள்ளிவிட்டுப் பெரிய தவத்தைச்செய்கிறவனும், கனிகிழங்குகளைப் புசிப்பவனும், காலந்தவறாமல் அக்னியைத் திருப்தியடைவிப்பவனும், இரண்டுகாலங்கள் ஸ்நானம்செய்கிறவனும், சரீரமிளைத்தவனும், அளவுபட்ட ஆகாரமுடையவனும், தோல் மரவுரி சடை இவைகளைத் தரிப்பவனும், குளிர் காற்று வெயில்களைப் பொறுப்பவனும், பசி தாக சிரமங்களைப் பொறுப்பவனும், சாஸ்திரத்தில்கூறிய தவத்தால் சரீரத்தை வாட்டுகிறவனும், மனத்துக்கும் செவிக்கும் இனிமையான காட்டிலுள்ள மிருகம் பறவை இவைகளின் பலவிதமான சந்தோஷ சப்தங்களை எப்போதும் கேட்கிறவனும், மலர்ந்தமரம் கொடி இவைகளுடைய அழகானவாஸனைகளை மோக்கிறவனும், பல உருவங்களுடையனவும் அழகுள்ளனவும் காட்டிலுள்ளனவுமான பிராணிகளைப் பார்க்கிறவனுமாக அரண்யத்தில் மிருகங்களோடு ஸஞ்சரிக்கப் போகிறேன். நதிக்கரையில் வசிக்கும் வானப்ரஸ்தஜனங்களைத் தரிசனஞ் செய்வதன்றி அவர்களுக்கு அப்ரியத்தைச் செய்யப் போகிறதில்லை. கிராமத்தில் வஸிப்பவர்கள் விஷயத்தில் அப்ரியஞ் செய்வதில்லையென்பது சொல்ல வேண்டுமோ? ரஹஸ்யத்தில் யோகாப்பியாஸமுள்ளவனும் தியானம்பண்ணுகிறவனும் [3]பாகமானதும் பாகமாகாததுமான பதார்த்தத்தால் ஜீவிக்கிறவனும், பிதிருக்களையும்

---

1 'வேறு விஷயத்தில் மனத்தைச்செல்லவிடாமல்' என்பது கருத்து.

2 ஸாதுக்கள் என்பது வேறுபாடம். 3 கனிவர்க்கங்கள்.

தேவர்களையும் காட்டிலுண்டானவஸ்துவாலும் [1]வாக்குக்களாலும் ஜலங்களாலும் திருப்திசெய்கிறவனும், இவ்வளவுகடுமையும் இதிலும் அதிகக்கடுமையுமாகிய அரண்யவாஸிகளுக்குள்ள சாஸ்திரங்களின் விதியை அனுஷ்டிப்பவனுமாயிருந்து இந்தச்சரீரத்தினுடைய முடிவை எதிர்பார்க்கப்போகிறேன். அல்லது, நான் தனியே ஒவ்வொரு மரத்தடியிலும் ஒவ்வொருநாள் பிக்ஷைசெய்துகொண்டு முண்டனஞ் செய்துகொண்ட ஸந்யாஸியாகிச் சரீரத்தை நசிக்கச்செய்யப்போகிறேன். புழுதிகளால் மூடப்பட்டவனும், சூன்யமானஇடத்தை அடைந்தவனும், மரத்தினடியை வீடாகக்கொண்டவனும், எல்லாவற்றிலும் வேண்டுதல்வேண்டாமையை விட்டவனும், சோகமற்றவனும், ஸந்தோஷமற்றவனும், ஆத்மாவின் இகழ்ச்சிபுகழ்ச்சிகளை ஸமமாகக்கொண்டவனும், ஆசையும் மமதையுமற்றவனும், ஸுகதுக்கம் முதலிய [2] த்வந்துவங்களிலிருந்து விலகியவனும், [3] பரிக்ரஹமற்றவனாக இருந்துகொண்டு ஆத்மாவிலேயே கிரீடிப்பவனும், தெளிந்த புத்தியுடையவனும், ஜடனும் குருடனும் செவிடனும்போன்ற ஆகிருதியுள்ளவனும், பிறரோடு எந்தச்சமயத்திலும் எவ்வித ஸல்லாபத்தையும் செய்யாதவனும், நடப்பதும் நடவாததுமான [4] நான்குவித மாயுள்ள எல்லாப்பிராணிகளுக்கும் துன்பஞ்செய்யாதவனும், தம்முடைய தர்மத்திலிருப்பவர்களும் இந்திரியங்களைப் போஷிப்பவர்களுமான பிரஜைகளைக்குறித்து ஸமபுத்தியுள்ளவனும், எதையும் பரிஹஸியாதவனும், எந்தவிஷயத்தைப்பற்றியும் புருவத்தின் [5] கோணல்களைச் செய்யாதவனும், எப்பொழுதும் தெளிந்தமுகமுடையவனும் எல்லா இந்திரியங்களையும் நன்றுகக்கட்டினவனும், எவனுடையவழியையும் வினவாதவனும், எவனேடும் சேராதவனும், குறிப்பிட்டு ஒரு தேசத்திலும் ஒருதிக்கிலும் செல்ல விரும்பாதவனும், போவதில் விருப்பமற்றவனும், திரும்பிப்பாராதவனும், உண்மையுள்ளவனும், தியானத்துடன்போகிறவனும், [6]ஸ்திரீஉருவத்தை விலக்குகிறவனு

---

1 வேதமந்திரங்கள். 2 இரட்டைகள்.

3 மனைவி ; உலகவாழ்க்கைக்குரிய மற்றைப்பொருள்களுமாம்.

4 ஜராயுஜம் ஸ்வேதஜம் அண்டஜம் என ஜங்கமங்கள் மூன்றும் உத்பிஜ்ஜம் என ஸ்தாவரம் ஒன்றும் ஆகநான்குவகை.

5 கோபமடையாதவன் என்பது கருத்து.

6 ‘த்ரஸ்ஸ்தாவரவர்ஜக ः’ என்று பாடங்கொண்டு, ‘பயமுள்ள ஸூக்ஷ்மசரீரத்திலும் இவ்வுலகத்திலேயேயிருக்கும் ஸ்தூலசரீரத்திலும் அபிமானத்தைவிட்டவன்’ என்பது பழையவுரை.

மாக ஸஞ்சரிக்கப்போகிறேன். (முன்செய்தகருமத்தின் வாஸனையென் னும்) ஸ்வபாவம் முந்திச்செல்லுகிறது. உணவுகளும் கிடைக்கின்றன. ஆனால், விரோதிகளான அந்த த்வந்துவங்கள்யாவற்றையும் சிந்தியா தவனும், புஜிக்கத்தக்கது கொஞ்சமானாலும் ருசியுள்ளதானாலும் ஒரு சமயம் முதல்இடத்தில் கிடைக்காவிட்டால் வேறுஇடங்களில் கிடைத்ததைச் சாப்பிடுகிறவனும், கிடைக்காவிட்டால் ஏழு இடங் களில் பூர்த்திசெய்துகொண்டும் புகையில்லாததும் உலக்கை வைக்கப் பட்டதும் நெருப்பு அவிந்ததும் ஜனங்கள் சாப்பிட்டானதும் பாத்தி ரங்களின் ஸஞ்சாரம்நின்றதும் பிக்ஷைக்காரர்கள் நின்றுபோனது மான காலத்தில் இரண்டு அல்லது மூன்று அல்லது ஐந்துவீடுகளில் ஒருகாலம் பிக்ஷைசெய்கிறவனுமாயிருந்துகொண்டு ஸ்நேஹமென் னும்பாசத்தை நீக்கிவிட்டு நான் இந்தப்பூமியில் ஸஞ்சரிக்கப் போகி றேன். கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒரேவிதமாகப்பார்க்கிற வனும், பெரியதவமுடையவனும், ஜீவிக்கவேண்டுமென்றுவது மரிக்க வேண்டுமென்றுவது ஆசையுள்ளவன்போல ஒன்றும்செய்யாதவனும், ஜீவனத்தையும் மரணத்தையும் ஸ்பிருஹியாதவனும் பகையாதவ னும், வாய்ச்சியால் ஒருகையைவெட்டுகிறவனும் சந்தனத்தால் ஒரு கையை அபிஷேகஞ்செய்கிறவனுமான இருவருக்கும் தீங்கையும் நன் மையையும் நினையாதவனும், ஜீவிப்பவன் க்ஷேமத்திற்காகச் செய்யத் தக்ககாரியங்கள் எவைகளோ அவைகள்யாவற்றையும் தள்ளிவிட்டுக் கண்ணிமைத்தல் முதலியவைகளில்மாத்திரம் இருப்பவனும், அவை களிலும்எப்பொழுதும்பற்றில்லாதவனும், எல்லாக்கருவிகளின் தொழி லையும் விட்டவனும், மனத்தில்ஸங்கல்பத்தைப் போனவழி விடாதவ னும், புத்தியின் அழுக்குக்களை நன்றாய்ச் சுத்தம்பண்ணினவனும், எல்லாஸம்பந்தங்களிலிருந்தும் விடுபட்டவனும், எல்லாவலையையும் தாண்டினவனும், ஒருவனுடைய வசத்திலுமில்லாதவனும், வாயுவுக் குச்சமானமான தன்மையுடையவனும் ஆசைகளற்றவனுமாக இவ்வி தம் ஸஞ்சரித்துக்கொண்டு மனத்திற்குவேண்டிய ஸ்நேஹாஷத்தை அடையப்போகிறேன்; அறிவின்மையாலுண்டான ஆசையினலன்றோ பெரியபாவத்தைச் செய்தவனாகிறேன். சிலமனிதர்கள் க்ஷேமமுள்ள னவும் க்ஷேமமில்லாதனவும் புண்ணியபாபம் கலந்தனவுமான கர்மங் களைச்செய்து (தம்காரியத்திற்கு அவர்கள் காரணமாகவும் அவர்கள் காரியத்திற்குத் தாம் காரணமாகவும்) காரியகாரண ஸம்பந்தத்தி லுள்ள ஜனங்களைப் போஷிக்கிறார்கள். ஒருவன் ஆயுள்முடிவில் பிரா ணன் நசித்துப்போன இந்தச்சரீரத்தைவிட்டு அந்தப் பாவத்தைப்

புசிக்க எடுத்துக்கொள்ளுகிறான். எனெனில், அந்தக்கர்மத்தின் பயனை னது செய்தவனுக்கன்றே? இப்படி வண்டியின்உருளைபோலச் சுற் றிக்கொண்டிருக்கும் இந்தஸம்ஸாரமென்னும் சக்கரத்தில் இந்தப் பிராணிஸமூஹமானது காரியநிமித்தமாகப் பிராணிஸமூஹத்துடன் சேருகிறது. பிறப்பு இறப்பு கிழத்தனம் வியாதி வேதனை இவைக ளால் பீடிக்கப்பட்டதும், கரையில்லாதகடல்போன்றதும், நிலையில் லாததுமான ஸம்ஸாரத்தை விடுகிறவனுக்கு ஸுகம்உண்டு. ஸ்வர்க் கத்திலிருந்து தேவர்கள்விழுகின்றதையும் மஹரிஷிகளும் தமது பத வியை இழந்துநசிப்பதையும் இவற்றின்உண்மையானகாரணத்தையும் அறிந்த எந்தமனிதன்தான் பிறப்பில் ஆசையுடையவனையிருப்பான்? சிற்றின்பத்தில் ஆசைவைத்தகாரணத்தால் பற்பல லக்ஷணமுள்ளன வும் பலவகைப்பட்டனவுமான கார்யங்களைச்செய்தன்றே அற்பர்க ளான அரசர்களால் ஓர் அரசன் கொல்லப்படுகிறான்? ஆகையால், இந்த அறிவென்னும் அமிர்தமானது நெடுநாளாக என்னை அடைந் திருக்கிறது. அதை அடைந்து குறைவற்றதும் எப்பொழுதும் நிலைத் ததும் ஒரே விதமுமான ஸ்தானத்தை நான் பிரார்த்திக்கின்றேன். இவ்விதமான தைரியத்தோடு எப்பொழுதும் ஸஞ்சரித்துப் பயமில் லாத வழியை அடைந்து ஜனனம், மரணம், ஜரை, வியாதி, வேதனை இவைகளால் பீடிக்கப்பட்டசரீரத்தை முடிவுபெறச் செய்யப்போகி றேன்" என்று சொன்னார்.

பத்தாவது அத்யாயம்.

ராஜதர்மம்.(தொடர்ச்சி.)

(பீமஸேனன், க்ஷத்திரியனுக்கு ஸந்யாஸம்கூடாதென்பதை எடுத்துக் காட்டி, கர்மாவேசெய்யத்தக்கதென்று வற்புறுத்திக்கூறியது.)

பீமஸேனன், "ஓ! அரசரே! மந்தனும் அறிவற்றவனுமான வேதமோதுகிறவனுடைய [1]குருட்டுப்பாடத்தால் அடிபட்டபுத்தி போல உம்முடைய இந்தப்புத்தியானது உண்மையான விஷயத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. பரதஶ்ரேஷ்டரே! சோம்பேறித்தனத்தில் புத்திசென்றவராயும் (அதுகொண்டு) ராஜதர்மங்களில் அஸூயை யுள்ளவராயுமிருக்கிற உமக்குத் திருதராஷ்டிரர்பிள்ளைகளைக்கொன்ற தில் என்னபயன்? க்ஷத்திரியர்களுக்குரிய வழியில்நடக்கும் எவனுக் கும், பந்துவாயிருந்தாலும் உமக்கிருப்பதுபோலப் பொறுமையும்

---

1 'மூலத்தில், 'அநுவாக:' என்றிருக்கிறது.

தையையும் பரிதாபமும் தாக்ஷிண்யமும் இவ்விதம் இரா. நாங்கள் இவ்விதமான உம்முடைய இந்தப்புத்தியைத் தெரிந்துகொண்டிருந்தாமானால், ஆயுதத்தை எடுக்கவேமாட்டோம்; ஒருவரையும் கொல்லவுமாட்டோம்; சரீரத்தை விடுங்காலம்வரை பிக்ஷாடனத்தையே செய்வோம். அரசர்களுக்குப் பயங்கரமான இந்தச்சண்டையும் நடந்திராது. அறிந்தவர்கள் இவ்வுலகெல்லாம் [1]வலிமையுள்ளவனுக்குஅன்னமென்றறிகிறார்கள். ஸ்தாவரஜங்கமமெல்லாம் பலவானுடையபோக்கியவஸ்துக்களாகும். க்ஷத்திரியதர்மந்தெரிந்த பெரியோர்கள், ராஜ்யத்தை அடைகிறவனுக்கு எவர்கள்விரோதிகளோ அவர்கள் கொல்லத்தக்கவர்கள்' என்று அறிவிக்கிறார்கள். ஓ! யுதிஷ்டிரரே! நம்முடைய அன்னத்துக்கு விரோதிகளும் அதனல் தோஷமுள்ளவர்களுமான அந்தத் துர்யோதனாதியர்கள் நம்மால் கொல்லப்பட்டார்கள். அவர்களைத் தர்மப்படி கொன்றநீர் இந்தப்பூமியை அனுபவிக்கவேண்டும். ஒருமனிதன் கிணற்றைத்தோண்டி ஜலத்தையடையாமையோடு சேற்றல் பூசப்பட்டவனாகவும் திரும்புவது போலவே நம்முடைய இந்தக் கார்யமுமாகிறது. பெரியமரத்திலேறி அங்கிருந்து தேனைக்கொண்டுவந்து அதைப்புசியாமல் மரணமடைவது எப்படியோ அப்படியே இந்த நம்முடைய் காரியமுமிருக்கிறது. ஒருமனிதன் பெரியவழியில் சென்று அவனே ஆசை நிறைவேறுமல் திரும்புவது எங்ஙனமோ அங்ஙனமே இந்த நம்முடைய காரியமும் ஆயிற்று. குருநந்தனரே! ஒரு புருஷன் சத்துருக்களைக் கொலை செய்துவிட்டுப் பிறகு தன்னையும் கொலைசெய்துகொள்வது எப்படியோ அப்படியே நமது காரியமுமிருக்கிறது. பசியுள்ளவன் அன்னத்தை அடைந்தும் எக்காரணத்தாலாவது அதைப்புசியாமலிருப்பதும் ஆசையுள்ளவன் இஷ்டமானஸ்திரீயைஅடைந்தும் அவளை அனுபவியாமலிருப்பதும் எவ்விதமோ அவ்விதமே நம்முடைய காரியமுமிருக்கிறது. ஓ! பாரதராஜாவே! ஆகையால், மந்தபுத்தியான உம்மைத் தமையனென்று பின்தொடரும் நாங்கள் தாம் இந்தவிஷயத்தில் நிந்திக்கப்படத்தக்கவர்கள். கைவன்மையுள்ளவர்களும் கல்விகற்றவர்களும் பெரியமனமுடையவர்களுமான நாங்கள் சக்தியற்றவர்கள் போல் ஆண்மையற்ற உம்முடையவார்த்தையில் கட்டுப்பட்டிருக்கிறோம். கதியற்றவர்களையும் பாதுகாக்கும்நாமே பொருள்நஷ்டமுள்ளவர்களானல் ஜனங்கள் பொருளடைவதில் எவ்விதம் ஆலோசிக்கமாட்டார்கள்? இதனை எவ்விதமென்று பாரும். கிழத்தனத்தால்மிகவும்

1 'ப்ராணஸ்ய' என்பது மூலம்.

சூழப்பட்டவனும் சத்துருக்களால் பீடிக்கப்பட்டவனும் ஆபத்துச் சமயத்திலன்றோ ஸந்யாஸமானது செய்யத்தக்கதென்று கூறப்படுகிறது? ஆகையால், கற்றறிந்தவர்கள் க்ஷத்திரியர்விஷயத்தில் ஸந்யாஸத்தைப் புகழ்கிறதில்லை. ஸூக்ஷ்மமறிந்தவர்கள் ஸந்யாஸத்தைத் தர்மத்தவறுதலாகவே கருதுகிறார்கள். க்ஷத்திரியஜாதியில் பிறந்து அதிலிருந்துகொண்டு அதனையே ஆஸ்ரயித்து அந்த க்ஷத்திரியஜாதியின்தர்மத்தையே நிந்தித்துப்பேசுதல் எங்ஙனம்கூடும்? அந்தத்தர்மத்தைக் கற்பித்ததெய்வத்தையே ஏன் நிந்திக்கக்கூடாது? (ஸந்யாஸமென்பது) வேதம்பிதரியாதவர்களும் பொருளில்லாதவர்களுமான நாஸ்திகர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. அது வேதத்தின் [1]அர்த்தவாதத்தால் வெளியானது. அஃது உண்மைபோலத் தோற்றுமேயன்றிப் பொய்தான். ஸந்யாஸத்தை அடைந்து தன்னைத்தானே சுமக்கிறமனிதன் பொய்யான தர்மத்தை அடைந்து மரிக்கிறவனே தவிர ஜீவிக்கமுடியாது. புத்ரபௌத்ரர்கள் தேவர்கள் ரிஷிகள் அதிதிகள் பிதிருக்கள் இவர்களைத் திருப்திசெய்யாமல் தனியாயிருந்து காடுகளில் ஸுகமாகஜீவிக்கமுடியுமானால் இவ்விதமிருக்கிறமிருகங்கள் ஸ்வர்க்கத்தை ஜயிக்கவில்லையே? பன்றிகள் ஜயிக்கவில்லையே? பறவைகள்ஜயிக்கவில்லையே? தனிமையாயிருக்கிறஜனங்களும் (பசுபக்ஷிகளுக்கில்லாததான) வேறுவிதத்தால் தங்களுக்குப் பெருமையைக்கூறவில்லையே? அரசனுயிருக்குமொருவன் ஸந்யாஸத்தால்ஸித்திபெறுவானுகில் மலைகளும் மரங்களும் சீக்கிரம் ஸித்தியடையக்கூடும். இவைகள் ஸ்திரீஸங்கமில்லாதவைகளாயும் உலகவாழ்க்கைக்குரிய ஒருபொருளுமில்லாதவைகளாயும் உபத்திரவமற்றவைகளாயும் நித்யஸந்யாஸிகளாயும் காணப்படுகின்றனவே? ஆகையால், தமக்குரிய அதிருஷ்டங்களால் பிராணிகள் ஸித்திபெறவேண்டும். பிறருடைய கர்மத்தால் ஸித்திபெறமுடியாது. ஆனதால், கர்மத்தையேசெய்யவேண்டும். கர்மத்தைவிட்டவனுக்கு ஸித்திகிடைப்பதில்லை. (கர்மத்தைவிட்டு ஆத்மாவொன்றையே ரக்ஷிக்கவேண்டுமென்றிருப்பவர்க்கு ஸித்திகிடைக்குமானால்) ஜலத்திலிருக்கும் மீன்முதலியவைகளும் ஸ்தாவரங்களுமான ஜந்துக்களும் ஸித்தியடையலாம். அவைகளுக்கு ஆத்மா ஒன்றே ரக்ஷிக்கத்தக்கது. வேறு ஒன்றுமில்லையே? உலகம் எங்ஙனமிருக்கிறதென்று பாரும். பிராணிகள் தம்தம் கர்மாக்களால் வியாபரிக்கப்பட்டனவாயிருக்கின்றன. ஆகையால், கர்மமேசெய்யத்தக்கது. கர்மத்தைவிட்டவனுக்கு ஸித்தி கிடைப்பதில்லை" என்று சொன்னன்.

---

1 விதிநிஷேதங்களை வற்புறுத்துவதற்காக மிகுத்துக்கூறுவது.

உஅ

ஸ்ரீ மஹாபாரதம்.

பதினேராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், தர்மபுத்திரரைப்பார்த்துக் கர்மமார்க்கமே சிறந்த தென்றுகூறி, ஒருபக்ஷிக்கும் ரிஷிகளுக்கும்நடந்த ஸம்வாதத் தைத் திருஷ்டாந்தமாகச் சொல்லியது.)

அர்ஜுனன், "ஓ! பரதஶ்ரேஷ்டரே! (கர்மம்பெரிதா, ஸந்யா ஸம்பெரிதா என்கிற) இந்தவிஷயத்திலேயே இந்திரனுக்கும் ரிஷி களுக்கும்நடந்த ஸம்வாத ரூபமான பழைய இவ்விதிஹாஸத்தை (பெரியோர்கள்) உதாகரிக்கிறார்கள். நல்லகுலத்தில் பிறந்தவர்களும் ஸம்பத்துடையவர்களும் தர்மஞ்செய்யத்தக்கவர்களுமான சில பிராம் மணர்கள், புத்திக்குறைவால், மீசையுண்டாகாதபருவத்திலேயே ஸந் யாஸம் நல்லதர்மமென்றும் அதனால் காடுகளில் ஸுகமாக ஜீவிக்க முடியுமென்றுமெண்ணி உடன்பிறந்தவர்களையும் தாய்தந்தைகளையும் வீடுகளையும்விட்டுக் காடுநோக்கிச் சென்றார்கள். அவர்கள்விஷயத் தில் இந்திரனுக்குத் தயைஉண்டாயிற்று. அந்த இந்திரன், பொன் னுருவமுள்ள பறவைவேஷம்பூண்டு, அந்தப்பிராம்மணர்களை நோக்கி, 'ஓமம் செய்து மிச்சமான 'விகஸம்' என்னும் அன்னத்தைப் புஜிக் கும் மனிதர்கள்செய்யும்புண்ணியம் மற்றவர்களால் செய்ய இயலாது. அவர்களுடையகர்மம் புண்ணியமானது. ஜீவனமும் மிகவுயர்ந்தது. அவர்கள் இஷ்டஸித்தி அடைகிறவர்கள். கர்மத்தை முக்கியமாகக் கொண்டவர்கள்தாம் உயர்ந்தகதியடைவார்கள்' என்று சொன்னான்.

அந்தரிஷிகள், (விகஸாசி-என்றபதத்திற்கு, அன்னமில்லாதகாய் கிழங்கு சருகுமுதலியவற்றைப் புஜிப்பவர்களென்று பொருள்கொ ண்டு,) 'ஆச்சர்யம்! ஸந்தோஷம்! இந்தப்பக்ஷியானது விகஸத்தைப் புஜிப்பவர்களைப் புகழ்கிறது. இது நம்மையே அறிவிக்கிறது. ஸந் தேகமில்லை. நாம் விகஸத்தைப் புஜிப்பவர்கள்' எனப் பேசிக்கொண் டார்கள். பக்ஷி, 'அழுக்கடைந்தவர்களும் தோஷமுள்ளவர்களும் எச்சிலைப்புஜிப்பவர்களும் மூடர்களுமான உங்களை நான் புகழவில்லை. விகஸத்தைப் புஜிப்பவர்கள் வேறு' என்று சொல்லிற்று. ரிஷிகள், 'நாங்கள் இது மிகவும் நல்லவழியென்று நினைத்திருந்தோம். ஓ! பக்ஷியே! உன்னை நாங்கள் நம்புகிறோம். எங்களுக்கு நல்லவழியைச் சொல்லு' என்று கேட்டார்கள். பக்ஷி, 'நீங்கள், [1] (உள்ளொன்றும் புறமொன்றுமாக) உங்களை இரண்டுவிதமாகச் செய்துகொண்டு என்

1 மூலத்தில், 'ஆத்மாநம் ஆத்மநாவிபஜ்ய' என்றிருக்கிறது. 'ப்ரத்தை யுள்ள சொல்லுகிற ஆத்மாவேறுஎன்றும் சந்தேகிக்கிறவனை மனனஞ்

னைப்பற்றிச் சங்கியாமலிருப்பீர்களானால் உங்களுக்கு உண்மையும் ஹிதமுமான வசனத்தை நான் சொல்லுகிறேன்' என்றது. ரிஷிகள், 'ஓ! தர்மபுத்தியுள்ள பகூஷியே! அப்பா! உனக்கு வழிகள் தெரிந்திருக்கின்றன. உன் வார்த்தையைக் கேட்கிறோம். உன்னுடைய கட்டளைப்படியே இருக்கவிரும்புகிறோம். எங்களைக் கற்பிக்கவேண்டும்' என்றார்கள்.

பகூஷி சொல்லத்தொடங்கிற்று:—'நாற்கால் பிராணிகளுள் பசு சிறந்தது. உலோகங்களுள் தங்கம் சிறந்தது. சப்தங்களுள் வேதம் சிறந்தது. இரண்டுகால் பிராணிகளுள் பிராம்மணன் சிறந்தவன். பிராம்மணனுக்கு ஜனனமுதல் மரணம்வரையில் காலத்துக்குத்தக்கபடி ஜாதகர்மமுதல் ஸ்மசானத்தில்செய்கிற முடிவானகார்யம் வரையிலுள்ளவையெல்லாம் வேதத்தால் விதிக்கப்பட்டன. பிராம்மணனுக்கு வேதத்தில்விதித்த கர்மங்கள் ஸ்வர்க்கத்தைஅடையத்தக்க எல்லா வழிகளிலும் மேலான வழி. கர்மங்கள்யாவும் மந்திரஸித்தங்களென்று வேதவாக்கியங்கள் உறுதியாகக் கூறுகின்றன. அப்படியே இந்தக் கர்மமார்க்கத்தில் 1 பகூஷிதேவதைகள், மாஸிதேவதைகள், ருதுதேவதைகள் முதலிய தேவதைகளை முன்னிட்டுச் சந்திரமண்டலமென்ற பிதிருலோகபதவி, ஸூர்யமண்டலமென்கிற தேவலோகபதவி, ஸம்ஸாரத்தைத் தாண்டுவிக்கும் பரமாத்துமபதவியென்னும் மூன்றுவித ஸித்திகளடையப்படுகின்றன. பிராணிகள் கர்மத்தையே அனுபவிக்கின்றன. கர்மவழியை விரும்புகிறவர்களுக்கு இந்தக் கர்மமானது எல்லா ஸித்தியுமடையக்கூடிய புண்ணியமான இடமாகும். இந்தக் கர்மவழிதான் பெரிய ஆஸ்ரமம். இப்பெரிய கர்மவழியை இகழ்ந்து எந்தமனிதர்கள் வேறு கீழானவழியை அடைகிறார்களோ மூடர்களும் பொருளிழந்தவர்களுமான அவர்களுக்குப் பாவந்தான் உண்டாகும். (கீழ்ச்சொன்ன கர்மவழியை

செய்கிற ஆத்மா வேறென்றும் ஆத்மாவிலேயே விஷமமான இரண்டு பாகஞ்செய்து' என்பது பழையவுரை. 'நீங்கள் தார்த்தர்களாயில்லாமலிருந்தால்' என்று அதற்குக் கருத்தும் அதுவே கூறுகிறது.

1 'கர்மவழியிற் செல்லும் சிலர், கிருஷ்ணபகூஷ தேவதைகள், சிராவணம் முதலிய ஆறு மாஸங்களுக்கதிபதிகளாகிய தேவதைகள், வருஷருது முதலிய ருதுதேவதைகள், தகூஷிணையனதேவதை இவர்களால் சந்திரமண்டலத்திலிருக்கும் பிதிருலோகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுகிறார்கள்; தேவதைகளின் உபாஸ்தியுடன்சேர்த்துக் கர்மத்தைச்செய்தவர்கள் சுக்லபகூஷம் முதலிய தேவதைகளால் ஸூர்யமண்டலத்திலிருக்கும் தேவலோகம் சேர்ப்பிக்கப்படுகிறார்கள்; ஞானத்தைஅடைந்தவர்கள் பரமாத்துமாவை அடைகிறார்கள்' என்பது கருத்து.

விட்டு) நிலைபெற்றதான தேவபதவி, பிதிருபதவி, பிரம்மபதவியென்னும் ஸ்திதிகளை இழந்திருக்கிறவர்கள் மூடர்களாவார்கள். அவர்கள் அக்காரணத்தால் (நாய், நரி, புல், பூண்டு முதலிய பிறப்புக்குரிய) அசுத்தமான வழிகளை அடைகிறார்கள். கொடுக்கிறேனென்று வேத வாக்கியத்தால் விதிக்கப்பட்ட இந்தக் கர்மவழியானது உபாஸனத் தோடுசேர்ந்து உங்களுக்கு இருக்கவேண்டும். ஆகையால், அந்தக் கர்மவழியிலிருப்பவர்தாம் தவமுடையவரென்பது வேதத்தில்சொல் லப்படுகிறது. நிலைபெற்றதான தேவகாரியம், பித்ருகாரியம், ப்ரம் மத்தின்காரியம் இவைகளையும், குருவின்கார்யத்தையும் பகுத்தறிந்து செய்யும் அந்தக் கர்மந்தான் செய்தற்கரிய தவமென்று சொல்லப் படுகிறது. செயற்கரிய கர்மத்தைச்செய்துதான் தேவர்கள் உயர்ந்த ஸம்பத்தை அடைந்தார்கள். ஆகையால், செய்யமுடியாத கிருஹஸ் தாஶ்ரமதர்மத்தை நீங்கள் வகிக்கவேண்டுமென்று உங்களுக்குப் போதிக்கிறேன். பிரஜைகளுக்கு இந்தக் கர்மந்தான் மூலமாகும். ஆகையால், அஃது உயர்ந்தது; ஸந்தேகமில்லை. குடும்பவிதி எல் லாம் முறைப்படி இந்தக்கர்மத்தில் நிலைபெற்றிருக்கின்றன. த்வந்து வங்களைவிட்டவர்களும் மாற்சரியமில்லாதவர்களுமான பிராம்மணர் கள், இந்தக் கிருஹஸ்ததர்மத்தைத் தவமென்று அறிகிறார்கள். உல கங்களில் வனத்தின் நடுவில் செய்யும் தவமானது இதற்கு அடுத்த படியென்றே சொல்லப்படுகிறது. விகஸாசிகளாயிருப்பவர்கள் பிறர் களால் ஆக்கிரமிக்கமுடியாத பதவியை அடைகிறார்கள். தம்குடும்பத் தில் காலைமாலை இரண்டுபோதும் விதிப்படி அன்னத்தைப் பங்கிட்டு அதிதிகள், தேவர்கள், பிதிருக்கள், உறவினர்களென்னும் இவர்க ளுக்குக்கொடுத்து மிச்சத்தைப் புசிப்பவர்கள் விகஸாசிகளென்று சொல்லப்படுகிறார்கள். ஆகையால், தமக்குரிய கர்ம மார்க்கத்தி லிருந்து நல்ல நியமமுடையவர்கள் உண்மைஉரைப்பவர்களும் உலகத் திற்குக்குருக்களுமாகிச் சந்தேகமற்றவர்களாயிருக்கிறார்கள். செய்தற் கரிய கர்மமார்க்கத்தைச் செய்யும் ஜனங்கள் மூன்றுவதான இந்திர னுடைய உலகத்தை அடைந்து ஸுவர்க்கலோகத்தில் மாத்ஸர்யமற்ற வர்களாகி நீடித்தகாலம் வாஸஞ்செய்கிறார்கள்' என்றுசொல்லிற்று. அறமும் பொருளுமடங்கிய ஹிதமான அந்தவார்த்தையைக் கேட்ட பிறகு, அவர்கள் நாஸ்திக புத்தியைவிட்டுக் கிருஹஸ்த தர்மத்தை அடைந்தார்கள். எல்லாமறிந்த புருஷஶ்ரேஷ்டரே! ஆகையால், நீரும் உறுதியான தைரியத்திலிருந்துகொண்டு விரோதிகளற்ற இந்தப் பூமி முழுமையும் ஆளக்கடவீர்" என்றுசொன்னன்.

பன்னிரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(நகுலன், கர்மாவே செய்யத்தக்கதென்பதையும், இல்லறத்தின் சிறப்பையும், ஸந்யாஸத்திலுள்ள சிரமத்தையும் தர்மபுத்திரருக்குக் கூறியது.)

அர்ஜுனனுடைய வார்த்தையைக் கேட்டபிறகு, எல்லாத் தர்மங்களையும் காப்பாற்றுகிறவர்களுள் சிறந்த ராஜாவான தர்மபுத்திரரைநோக்கி, சிறந்த புத்தியையும் விசாலமான மார்பையும் பெரிய கையையும் சிவந்த முகத்தையுமுடையவனும் சுருக்கமாகப் பேசுகிறவனுமான நகுலன், தமையனான அர்ஜுனனுடைய சித்தத்தை அனுஸரித்துப் பேசத்தொடங்கினன். "ஓ! மஹாராஜரே! விசாகயூபமென்னும் க்ஷேத்திரத்தில் எல்லாத் தேவர்களாலும் கட்டப்பட்ட யாகாக்னியின் இடங்களானவை (இன்னுமிருக்கின்றன.) ஆகையால், தேவர்கள் கர்மத்தின்பயனிலிருக்கிறார்களென்று தெரிந்துகொள்ளும். ஆஸ்திகபுத்தியில்லாத பிராணிகளுக்குக்கூட (மழையின் வழியாக) அன்னத்தைக்கொடுக்கும் தந்தைகளாகிய தேவர்களும் கர்மத்தையே செய்கிறார்கள். ஓ! வேந்தரே! விதியின் பெருமையைப் பாரும். வேதத்தைவிட்டவர்களும் அர்ஜுனனால் உதாகரிக்கப்பட்டவர்களுமான அந்தப்பிராம்மணர்களை மிகவும் நாஸ்திகர்களாக அறிந்துகொள்ளும். ஓ! பாரதரே! பிராம்மணன் வேதத்தில்சொல்லிய கர்மத்தைத் தள்ளிவிட்டு மற்ற எல்லாக்கர்மங்களாலும் தேவயானமென்னும் வழியாய் ஸ்வர்க்கத்தின்மேலெல்லையான பிரம்மலோகத்தை அடையமாட்டான். வேதங்களின் நிச்சயம் தெரிந்தவர்களும் சாஸ்திரங்களை நன்றாகக் கற்றவர்களுமான பிராம்மணர்கள் இந்தக் கிருஹஸ்தாச்ரமமானது எல்லா ஆச்ரமங்களிலும் உயர்ந்ததென்றுசொல்லுகிறார்கள். அவர்களிடமிருந்து நீர் அறிந்துகொள்ளும். ஓ! மஹாராஜரே! தர்மத்தால் அடையப்பட்ட பொருள்களை உத்தமமான யாகங்களில் தானஞ்செய்யும் மனிதன்தான் மனத்தை ஜயித்தவன். அந்தமனிதன்தான் (ஸாத்விகமான) தியாகமுள்ளவன். ஓ! மஹாராஜரே! கிருஹஸ்த தர்மத்திலுள்ள ஸுகபோகங்களைப் பாராமல் அப்படியே (அரண்யத்தில்) உயர்ந்த நிஷ்டையை அடைபவனுகிச் சரீரத்தை விடுகிறவன் எவனே அவன் 1 தாமஸமனத் தியாகியாவான். வீடற்றவனும் பிக்ஷைக்கு ஸஞ்சரிப்பவனும் மரத்தினடியை இட

1 வேறுபாடம் கொள்ளப்பட்டது.

மாகக் கொண்டவனும் மனனஞ்செய்பவனும் எப்பொழுதும் யோக முள்ளவனும் [1] பிறரை யாசியாதவனுமாயிருப்பவன் எவனே அவன் ஸன்யாஸத்திற்குத்தக்க பிராம்மண ஜாதியிலுள்ள தியாகியாவான். கோபத்தையும் ஸந்தோஷத்தையும் தள்ளிவிட்டு விசேஷமாகப் பிறர் தூஷணத்தையும் விலக்கி எந்தப் பிராம்மணன் வேதம் ஓதுகிறானே அவன் குருவைப் பூஜிக்கும் தியாகியாவான். ஓ! வேந்தரே! கற்றறிந்தவர்கள் எல்லா ஆஸ்ரமங்களையும் தராசில் தூக்கிப்பார்த்து மூன்று ஆஸ்ரமங்களும் ஒருபக்கமும், கிருஹஸ்தாஸ்ரமமொன்றும் ஒருபக்கமுமென்று சொல்லுகிறார்கள். ஓ! பார்த்தரே! காமமும் ஸ்வர்க்கமும் ஸமமாயிருப்பதைக்கண்டு உலகனைத் தெரிந்த மஹரிஷிகளுக்கு இந்தக் கிருஹஸ்தாஸ்ரமமே நல்வழியென்றும் நற்கதியென்றும் இவ்விதம் எவன் தெரிந்துகொள்ளுகிறானே அவன் தியாகியாவான். ஓ! பரதஸ்ரேஷ்டரே! ஒருவன் வீடுகளைவிட்டுக் காடுசென்றபிறகு, மூடனைப்போல் ஒருசமயத்தில் போகங்களை நினைப்பானுகில் அவன் தர்மவேஷம் பூண்டவனுகிறான். இவனை மிருத்யுவானவன் தன்கயிற்றால் கழுத்தில் கட்டியிழுப்பான். ஓ! மஹாராஜரே! ஆசையை வைத்துக்கொண்டு செய்யப்படும் கருமம் பயனற்றதென்றுசொல்லப்படுகிறது. ஆசையைவிட்டுச்செய்யும் கர்மமெல்லாம் பெரிய பயனுடையவையாகும். [2] சமம், [3] தமம், தைர்யம், உண்மை, சுத்தி, நேராயிருப்பது, யாகம், உற்சாகம், தர்மம் ஆகிய இவை ரிஷிகளுக்குவேண்டிய நித்தியமானவிதியென்று கூறப்படுகின்றன. இந்தக் கிருஹஸ்தாஸ்ரமத்தில் பிதிருக்கள், தேவர்கள், அதிதிகள் என்னும் இவர்களுக்கென்ற எண்ணத்துடன் செய்யும் முயற்சி சிலாகிக்கப்படுகிறது. ஓ! மஹாராஜரே! கிருஹஸ்ததர்மமென்னும் இவ்வழியிலேயே அறம் பொருள் இன்பமென்னும் இம்மூவகைப்பயனும் தவறுமலுண்டு. அபிமானத்தைவிட்டுப் பிராமணர்களாலனுஷ்டிக்கப்பட்ட இவ்விதிப்படி முயலுகிறவனுக்கு எவ்விடத்திலும் நாசம் உண்டாகிறதில்லை. தர்மாத்மாவும் தோஷமற்றவருமான பிரம்ம தேவர், 'பலவிதமான தக்ஷிணையுள்ள யாகங்களால் நம்மை ஆராதிப்பார்கள்' என்றன்றோ பிராணிகளைச் சிருஷ்டித்தார். யாகத்திற்காகவே கொடிகளையும் செடிகளையும் மரங்களையும் அப்படியே பரிசுத்தமான பசுக்களையும் ஹவிஸ்களையும் ஸ்ருஷ்டித்தார். அந்த யாகமென்னும் கர்மமானது கிருஹஸ்தாஸ்ரமமுள்ளவன்தான் செய்யத்தக்கது. ஆகையால், கிருஹஸ்த தர்மமொன்றுதான் அடையவும் செய்யவும்

---

1 'அபாசக:' என்றும் பாடமுண்டு.

2 இந்திரியங்களின் அடக்கம். 3 சரீரத்தின் அடக்கம்.

அரிதானது. அப்படிப்பட்ட கிருஹஸ்தாச்ரமத்தை அடைந்து பசுவையும் தனதான்யங்களையும்பெற்றும் எவர்கள் யாகம்செய்யவில்லையோ அவர்களிடத்தில் பாவமானது நிலைபெற்றிருக்கும். சிலரிஷிகள் வேதாத்தியயனமென்னும் யாகத்தையே செய்கிறார்கள். மற்றுஞ்சிலர் ஞானமென்னும் யாகஞ்செய்கிறார்கள். வேறுசிலர் மனத்திலேயே யோகமென்னும் பெரியயாகத்தைச் செய்கிறார்கள். ஓ! மஹாராஜரே! கற்றோர்களால் எனக்கு வேறொன்று சொல்லப்பட்டது. அதாவது:—'இவ்வுலகம் உண்டாவதற்குமுன் ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள், திக்குக்கள், காலம், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் இவையொன்றுமில்லை. இவைகளை அறிவிக்கத்தக்க பிரத்யக்ஷம், அநுமானம், உபமானம், ஆகமம், அர்த்தாபத்தி, ஐதிஹ்யம் என்னும் பிரமாணங்களும் உதாஹரணமும் இல்லை. எவ்விடத்தும் சந்தேஹமும் நிச்சயமுமில்லை. தர்மமும் அதர்மமுமில்லை. தேவர், மனிதர், ஸ்தாவரம், ஜங்கமம், ஜாதி, ஆச்ரமம், இவைகளின்பிரிவுகள், வேலைசெய்பவர், பொருள், காமம், வேறுசம்பத்து, அதன்பயன் இவைகளில் யாதொன்றுமில்லை. இவ்வுலகெல்லாம் பிரகாசமற்று இருளாகவே இருந்தது. ஆத்மாவிருந்தும் மனத்துடன் சேர்க்கையைவிரும்பவில்லை. மனமானது அறிவற்றது. ஆத்மாவொன்றுதான் அறிவுள்ளது. இவ்வுலகெங்கும் வியாபரித்தவராயும் ஒருவராயுமிருக்கிற ஈசுவரர் பிராணிகளுக்கும் மந்திரங்களுக்கும் தக்க உருவத்தை உண்டுபண்ணவில்லை. மந்திரங்களுக்குத் தேவதைகளாய்விளங்கும் ஸ்ருஷ்டிகர்த்தர்களென்னும் பெயர்வாய்ந்த சிலரிஷிகள் அக்காலத்தில் ஈச்வரரால்உண்டுபண்ணப்பட்டார்கள். அவர்கள் ஈச்வரரிடமிருந்து தக்க அறிவுபெற்றுக்கொண்டு இப்பிரம்மாண்டத்தைக் கற்பித்து விச்வஸ்ருஜமென்னும் யாகத்தைச்செய்து பிதாமஹரென்னும்ஒருவரைஉண்டுபண்ணினார்கள். அந்தப்பிதாமஹர், ஈச்வரர் அனுக்கிரஹத்தால் இவ்வுலகைச் சிருஷ்டிக்கத்தொடங்கினர். இவ்வுலகின் அறிவெல்லாம் ஈச்வருடைய அறிவுதான். ஈச்வரரான அந்தச்சம்பு தம்சக்தியால் இவ்வுலகெல்லாம் வியாபரித்திருக்கிறார். அந்த ஈச்வரரால் பிரளயகாலத்தில் பிரம்மதேவருக்கு அறம் பொருள் இன்பம் வீடென்னும் இவைகள் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அறிவற்றனவும் சக்தியற்றனவும் ஸுகதுக்கங்களுக்கிருப்பிடமுமானதால் ஜந்துக்கள் ஈசரால்ஏவப்பெற்று ஸ்வர்க்கத்தையும் நரகத்தையும் அடைகின்றன. பிராணிகள் ஈசராலும் மனத்தாலும் விஷயங்களாலும் கர்மங்களாலும் ஏவப்பட்டுப் பிரகிருதியையும் புருஷனையும் ஸுகதுக்

கங்களையும் அடைகின்றன. தேவர், அஸுரர், கந்தர்வர் இவர்களுடன் கூடிய இவ்வுலகைப்படைத்த ஈச்வரே ஜாதியையும் ஆச்ரமங்களையும் இவைகளின் பிரிவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். ஓ! மஹாராஜரே! நீரும் மற்றுமுள்ளவர்களும் எவ்வகையாலும் ஈச்வரவசத்திலிருப்பவர்களே. பிராணிகளெல்லாம் அந்த ஈச்வரவசத்திலிருந்துகொண்டே ஜீவனத்தையும் மரணத்தையும் அடைகின்றன. தேவர்கள் பிராணிகளையும் இவ்வுலகத்தையும்கொன்று யாகஞ்செய்கிறார்கள். அவர்கள் பாவத்தையே அடையவில்லை. தேவர்களாலும் ரிஷிகளாலும் கிருஹஸ்தாச்ரமம்பெற்றவர் எவர்க்கும் கர்மங்கள் ஹிம்சையுள்ளனவாகவே இருக்கின்றன. அந்தக்கர்மஞ்செய்யும் கிருஹஸ்தர்கள் உயர்ந்தகதியை அடைகிறார்கள். பிரஜைகளுக்கும் தமக்கும் ஹிதத்தைவிரும்பிய அரசர்கள் முன்காலத்தில் பலவிடங்களில் சத்துருக்களைக் கொன்றிருக்கிறார்கள். அதில் பாவமிருக்குமாலல் அவர்கள் எப்படி ஸ்வர்க்கத்தைஅடைவார்கள்? என்அவ்விதப்பாவங்களால் சூழப்பட்டவர்களாகி நரகத்தை அடையவில்லை? ஓ! வேந்தரே! ஆகையால், கிருஹஸ்தாச்ரமத்தில் யாதொருதோஷமுமில்லை. அஃது உயர்ந்ததென்று இவ்விதம் மனத்துக்குச் சமாதானத்தைச்செய்துகொண்டு இந்தக்கர்மவழியிலிருந்து பிரம்மத்தைஅடையத்தக்க பிராம்மணர்முதலியவர்களைக்கண்டு தேவர்களும் ஆசைப்படுகிறார்கள். அவ்வளவுந்தெரிந்தநீர் அங்குமிங்குமிருந்து ஸம்பாதிக்கப்பட்ட ஆச்சரியமான ரத்தினங்களை யாகங்களில் தானஞ்செய்யத்தொடங்காமல் நாஸ்திகவாதம் பேசுகிறீர். ஓ! அரசரே! குடும்பத்தைஅடைந்தவனுக்குத்தியாகமென்பது கிடையாது. ஆகையால், தேவராஜாவான இந்திரனுக்கு ஒப்பாகியநீர் பிராம்மணர்களால் பூஜிக்கப்பட்ட ராஜஸூயம், அசுவமேதம், ஸர்வமேதமுதலான மற்றுமுள்ள சிறந்தயாகங்களைச் செய்யும். அரசனுடைய அஜாக்ரதையென்னும் குற்றத்தால் திருடர்களால் உபத்ரவப்படும் பிரஜைகளைப் பாதுகாவாத அரசன் கலியின் உருவமென்று சொல்லப்படுகிறான். ஓ! அரசரே! அலங்கரிக்கப்பட்டகுதிரை, யானை, பசு, தாஸி, கிராமங்கள், ஊர்கள், நிலங்கள், வீடுகள் இவைகளைப் பிராம்மணர்களுக்குத் தானஞ்செய்யாமல் மனத்தில் ஞாதிகளிடத்தில்பகைகொண்ட நாம் அரசரென்றுசொல்லப்படும் கலிகளாகப்போகிறோம். கொடாதவர்களும் பாதுகாவாதவர்களும் அரசர்களுக்குள்ள பாவத்தைஅடைந்தவர்களுமான நாம் நரம்படையப்போகிறோமேதவிர ஒருபோதும் ஸுகத்தை அடையப்போகிறதில்லை. ஓ! பிரபுவே! பெரியயாகங்களையும் பித்ருக்களின் ச்ராத்

தத்தையும் புண்ணியதீர்த்தஸ்நானங்களையும்செய்யாமல் ஸன்யாஸம் அடைவீராஞல் இவ்வுலகம் மேலுலகம் இரண்டையும்விட்டு நழுவிப் பிசாசமாயிருந்துகொண்டு, காற்றினல்அலைக்கப்பட்டுச் சிதறின்மேகம் போல நாசமடைவீர். மனத்திற்குக் கவலையை உண்டாக்குகின்ற உள் ளும் புறமுமிருக்கும் வஸ்துக்கள் யாவற்றையும் மனத்தால்விட்ட வன் ஸந்யாஸியாவன். வீட்டைவிட்டு வெளிப்பட்டவன் ஸந்யாஸி யாகமாட்டான். ஓ! மஹாராஜரே! பிராம்மணர்களால் உபாஸிக்கப் பட்ட இந்தக்கர்மமார்க்கத்திலிருப்பவனுக்கு எவ்விடத்திலும் கெடுதி உண்டாகிறதில்லை. ஓ! பார்த்தரே! யுத்தத்தில் இந்திரன் அஸுர சேனையைக்கொல்வதுபோல் வலியபகைவர்களை வேகமாகக்கொன்று, முன்னோர்களால் கூறப்பட்டதும் நீதிதவறுதஅரசர்களால் அனுஷ் டிக்கப்பட்டதுமான ஒழுக்கந்தவறுமலிருக்கும் எவன் இப்படிப்பட்ட சோகத்தை அடைவான். ஓ! பிருதையின் குமாரரே! க்ஷத்திரியர் களுக்குரிய முறைப்படி பராக்கிரமத்தால் இந்தப்பூமியை ஜயித்து, வேதந்தெரிந்தவர்களுக்குத் தானஞ்செய்து, (அந்தப்புண்ணியத்தால்) ஸ்வர்க்கலோகத்திற்கு மேலானபதத்தை அடையப்போகிறீர். இந்தச் சமயத்தில் நீர் சோகமுறுவது அழகன்று'' என்று சொன்னன்.

பதின்மூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(ஸஹதேவன், ஸந்யாஸத்திலுள்ள சிரமத்தையும், முன்னோர்கள் அனுஷ்டித்தபடியே கர்மமார்க்கத்தை அனுஷ்டிக்கவேண்டு மென்பதையும் தர்மபுத்திரருக்குக்கூறியது.)

ஸஹதேவன், '' ஓ! பாரதரே! வெளியிலுள்ள (பிள்ளைபெண் டிர்முதலிய) வஸ்துக்களைவிடுவதால் ஸித்தியுண்டாகிறதில்லை. சரீ ரத்திலுள்ள (காமக்குரோதம்முதலிய) வஸ்துக்களைவிடுவதால் ஸித்தி வந்தாலும் வரலாம். வெளியிலுள்ளவஸ்துக்களிலிருந்து விடுபட்டும் சரீரத்திலுள்ள வஸ்துக்களில் பற்றுள்ளவனுக்கு எந்தத்தர்மமும் எந்தஸுகமும் உண்டாகுமோ அந்தத்தர்மமும் அந்தஸுகமும் அப் படியே நமது விரோதிகளுக்கு உண்டாகட்டும். சரீரத்திலுள்ள வஸ் துவைவிட்டுப் பூமியைப்பாதுகாப்பவனுக்குள்ள தர்மமும் ஸுகமும் அப்படியே நமது நண்பர்களுக்கு உண்டாகட்டும். இரண்டெழுத் துள்ளது மிருத்தியுவின் வழியாகும். மூன்றெழுத்துள்ளது நிலை

பெற்றதான பிரம்மத்தின் வழியாகும். [1]மமவென்னும் இரண்டெழுத்துள்ளது மிருத்தியுவின் வழியாம். [2]நமமவென்னும் மூன்றெழுத்துள்ளது சாஶ்வதமான பிரம்மத்தின்வழியாம். ஓ! வேந்தரே! ஆகையால், பிரம்மம் மிருத்தியு இவ்விரண்டும் காணப்படாமலே மறைந்து புத்தியிலிருந்துகொண்டு பிராணிகளைத் தம்வசமாக்கிக் கொள்ளுகின்றன; ஸந்தேதகமில்லை. ஓ! பாரதரே! சரீரத்திற்கு நாசம்வந்தாலும் சரீரத்திலுள்ள இந்தப்புத்திக்கு நாசமில்லையென்பது நியதியாயிருந்தால் சரீரத்தைவிடுவதால் பிராணிகளுக்கு யாதொரு துன்பமும் நேரக்கூடாது. இந்தச்சரீரத்துடன்கூடவே புத்திக்கும் பிறப்பு இறப்புக்களிருக்குமானால் இந்தச்சரீரம் போனவுடன் புத்தியும் போய்விடும். அங்ஙனமானால், இக்கர்மவழி பயனற்றதாகிவிடும். ஆகையால், அறிவுடையோர் இதில் ஒருமுடிவையுங் கைக்கொள்ளாமல் முன்னோர்களும் அவர்களுக்கும் முன்னுள்ளவர்களுமான ஸாதுக்களால் அனுஷ்டிக்கப்பட்டவழியே செல்லவேண்டும். இந்தக் கர்மவழியானது தாழ்ந்ததாயிருந்தால் ஸ்வாயம்புவமனுவாலும் அப்படியே மற்றுமுள்ள பற்பலசக்கரவர்த்திகளாலும் எந்தக்காரணத்தால் இந்தவழி அனுஷ்டிக்கப்பட்டது? ஓ! பாரதராஜரே! கிருதயுகம், திரேதாயுகம்முதலிய காலங்கள் பெரும்பாலும் நற்குணம் பொருந்தியவைகள். அக்காலத்திலுள்ள அரசர்களால் விசேஷமாக இப்பூமியானது ஆளப்பட்டது. ஸ்தாவரஜங்கமங்களுடன் இந்தப் பூமிமுழுவதையும் அடைந்தும் இதனை ஒழுங்காக அனுபவியாத அரசனுடைய ஜன்மாவுக்கே பயன் எது? ஓ! வேந்தரே! அல்லது, காடுசென்று அங்குள்ளவஸ்துவால் ஜீவிக்கும்மனிதனுக்குத் திரவியங்களில் மமதையுண்டானால் அவன் மிருத்தியுவின்வாயில் அகப்பட்டவனுவான். ஓ! பாரதரே! அகத்தும் புறத்துமிருக்கிற வஸ்துக்களுடைய தன்மையைப்பாரும். எவர்கள் அதன்உண்மையைக் காண்கிறார்களோ அவர்கள் பெரியபயத்திலிருந்து விடுபடுகிறார்கள். (எனக்கு) தந்தை, தாய், உடன்பிறந்தார், ஆசார்யர் எல்லாம் நீரே. வருத்தத்தால்பிதற்றிய எனது வீண்வார்த்தைகளை நீர் பொறுக்கவேண்டும். ஓ! பரதஶ்ரேஷ்டரே! மெய்யாயிருக்குமோ, அல்லது பொய்யாயிருக்குமோ, பக்தியால்மாத்திரம் என்னால் இப்படிச்சொல்லப்பட்டது. ஓ! அரசரே! இதனைஅறிந்துகொள்ளும்" என்றுசொன்னான்.

---

1 எனதென்னும்பற்று - மமதை. 2 மமதையின்மை.

பதினன்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(திரௌபதி, தர்மபுத்திரரைப்பார்த்து ஸமாதானஞ்செய்து தண்டநீதியின் சிறப்பையும், அதன்இன்றியமையாமையையும், அரசரின் சிறப்பையும், துர்யோதனரியனைக்கொன்றது நியாயமென்பதையும்கூறி அரசாட்சீபுரியும்படி சொன்னது.)

பலவகைப்பட்ட அந்தஅந்த வேதங்களின் ஸித்தாந்தங்களைச் சொல்லும் தம்பிமார்களின்முன் குந்தியின்குமாரரான தர்மபுத்திரர் மௌனமாயிருந்தபொழுது, பெரியகுலத்தில் பிறந்தவளும் ஸ்திரீகளுள் சிறந்தவளும் நீண்டகண்களுடையவளுமான திரௌபதியானவள் தர்மபுத்திரரைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினள். யானைகளால்சூழப்பட்ட யூதபதிபோலச் சிங்கம் புலி யானைகளுக்கொப்பான தம்பிமார்களால் சூழப்பெற்று உட்கார்ந்திருக்கும் ராஜஸ்ரேஷ்டரான தர்மபுத்திரரை, அவரிடத்தில் எப்போதும் விசேஷ அபிமானமுள்ளவளும் அவரால் எப்போதும் ஆதரிக்கப்பட்டவளும் தர்மாதர்மம் தெரிந்தவளுமான திரௌபதியானவள் மிகவும் அழகான நல்லசொல்லாலழைத்து அவரைநோக்கிப் பிறகு வார்த்தைசொல்லுகிறாள்.

"ஓ! பார்த்தரே! உம்முடைய இந்தத்தம்பிமார்கள் வாடுகிறார்கள்; சாதகப்புட்கள்போலக் கதறிக்கொண்டு நிற்கிறார்கள். இவர்களைச் சந்தோஷப்படுத்தாமலிருக்கிறீரே. ஓ! மஹாராஜரே! எப்பொழுதும்துக்கப்பட்ட இவர்களைத் தகுதியான வார்த்தையைச் சொல்லி மதமுள்ள பெரியயானைகளைப்போலச் சந்தோஷமுள்ளவர்களாகச்செய்யும். ஓ! வேந்தரே! முண்டு த்வைதவனத்தில் சேர்ந்துகொண்டு குளிர் காற்று வெயில்களால் கஷ்டப்பட்ட இந்தத்தம்பிமார்களை நோக்கி, 'ஓ! சத்துருக்களை அடக்குகிறவர்களே! யுத்தத்தில் ஜயத்தை விரும்புகிறநாம், பலஅரசர்களையும் ரதங்களையும் பெரியயானைகளையும் அடித்து, தேர்ப்பாகர்களாலும் தேர்களாலும் பூமியைநிரப்பி, துர்யோதனனைக்கொன்று போக்கியவஸ்துக்கள்யாவும் நிறைந்த இந்தப் பூமியை அனுபவிப்போம். நல்லதக்ஷிணையுள்ள பலவிதயாகங்களைச் செய்வோம். வனவாஸத்தாலுண்டான துன்பம் நமக்கு ஸுகமாகமுடியும்' என்றும் இன்னும் பலவிதமாகவும் வார்த்தைகளைச்சொல்லிவிட்டு, தர்மம்தெரிந்தவர்களுள் சிறந்தவரும் தீரருமாகியநீர் இப்பொழுது எங்களுடையமனத்தை எப்படித் துன்பப்படுத்துகிறீர்? தைரியமில்லாதவன் பூமியை ஆளமாட்டான்; பொருளையும் அடைய

மாட்டான். சேற்றிலுள்ளமீன்கள்போலத் தைரியமில்லாதவன்வீட்டில் பிள்ளைகள் நன்முயிருக்கமாட்டார்கள். தண்டநீதி தெரியாத க்ஷத்திரியன் விளங்கமாட்டான். தண்டமில்லாதவன் பூமியைஅடையமாட்டான். ஓ! பாரதரே! தண்டமில்லாத அரசனைச்சேர்ந்த பிரஜைகள் ஸுகப்படமாட்டார்கள். தேவர், அஸுரர், கந்தர்வர், அப்ஸரஸ், குஹ்யகர், ராக்ஷஸர், நாகர், மனிதர் இவர்களால் அலங்கரிக்கப்பட்டும் அறம்பொருளின்பங்களால் நிரப்பப்பட்டுமிருக்கும் இவ்வுலகம்முழுதும் தண்டத்தாலடக்கப்பட்டுப் புஜிக்கக்கூடியதாகிறது. ஓ! ராஜரே! ஸ்வயம்புவினிடமிருந்துவந்த சாஸ்வதமான நீதிசாஸ்திரத்தைக் கேளும். இஃது எல்லாப்பிராம்மணர்களுக்கும் உமக்கும் தெரிந்தவிஷயமே. அரசனில்லாமலிருந்தால் இவ்வுலகம் பயந்து நடுங்கி ஓடவேண்டுமென்று இவ்வுலகத்தைக் காப்பதற்காக ஈஸ்வரரானவர் இந்திரன், அக்கினி, யமன், வருணன், வாயு, குபேரன், சந்திரன், ஸூர்யன் இவர்களுடைய உறுதியான தேஜஸின் அம்சங்களை ஒன்றுசேர்த்து வலிமையான சரீரமும் பராக்ரமமுமுள்ளவனைஉலகத்தைப் பரிபாலிக்கத்தக்க அரசனை உண்டுபண்ணினர். தேவர்களிற் சிறந்த இந்திரன்முதலியவர்களுடைய அம்சத்தாலுண்டான அரசன் எந்தப்பிராணிகளையும் பராக்ரமத்தால் அடக்குபவன். அரசன் ஸூர்யனைப்போலக் கண்களையும் மனங்களையும் தபிக்கச்செய்பவன். இவனைக் கண்ணெடுத்துப்பார்க்கச் சக்தியுள்ளவன் உலகத்தில் ஒருவனுமில்லை. அந்தஅரசன் உலகத்தில் அக்கினியும் வாயுவும் ஸூர்யனும் சந்திரனும் யமனும் வருணனும் குபேரனும் தேவேந்திரனுடனாகப் பிரகாசிக்கிறான். அரசனிடத்தில் எல்லாரிஷிகளுடையதேஜஸும் பிரம்மா விஷ்ணு சிவனென்னும் மும்மூர்த்திகளுடையதேஜஸும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அரசன் இளமைப்பருவத்திலிருந்தாலும் மனிதனென்றெண்ணி அவமதிக்கத்தக்கவனல்லன். பெரிய ஒருதேவதை அரசனென்னும் மனிதவுருவங்கொண்டு நிற்கிறதென்று நினைக்கவேண்டும். நெருப்பானது தவறிநெருங்கின ஒருமனிதனைச் சுடும். அரசனென்னும் அக்கினியோ பசு பொருள் முதலியவைகளைநாடுகுலத்தையே சுடுமென்பதில் ஸந்தேஹமில்லை. உங்களுடைய கோபாக்கினியினல் திருதராஷ்டிரருடையகுலமே தஹிக்கப்பட்டது. இஃது உலகமறிந்தது. ஸம்சயமென்பதில்லை. நல்லகுலத்திற்பிறந்தவனும் நன்னடையுள்ளவனும் தர்மபுத்தியுள்ளவனும் பிரஜைகளைரக்ஷிப்பதில் முயற்சியுள்ளவனுமான அரசன், தேவர்களாலும் பூஜிக்கப்படுகிறான். காரியத்தையும் சக்தியையும் இடத்தையும் காலத்தையும் உண்மைபோ

கப்பார்த்துத் தர்மத்திற்காக எவன் அடிக்கடி பல உருவத்தையெடுத் துக்கொள்ளுகிறானே அவனுடைய அனுக்ரஹத்தில் லக்ஷ்மியும், பராக்ரமத்தில் ஜயமும், கோபத்தில் மிருத்யுவும் வஸிக்கிறார்கள். அரசன் எல்லாத்தேஜஸுடம்பொருந்தியவன்; அறியாமையால் அவ னைப் பகைக்கிறமனிதன் நாசமடைவான். பகைக்கிறமனிதனை, அரச னும் விரைவில் கொல்வதற்கு நினைப்பான். ஆனதால், அரசன் நண் பர்களிடத்திலும் பகைவர்களிடத்திலும் நன்மையோ தீமையோ எதைத் தீர்மானிப்பானே அதை மாற்றக்கூடாது. எல்லா உலகங்களை யும் ரக்ஷிக்கும் பிரம்மதேஜோரூபமானதும் தம்மிடமிருந்துண்டான தும் தண்டநீதியென்னும் தர்மத்தை அரசனுக்காக ஈச்வரர் உண்டு பண்ணியிருக்கிறார். ஸ்தாவரமும் ஜங்கமமுமான எல்லாப்பிராணிகளும் தண்டநீதியின்பயத்தால் போகத்தைக்கொடுக்கின்றன. தர்மத்தை விட்டுச் சலிக்கிறதில்லை. அரசன் அநியாயஞ்செய்யும் பிராணிகளைக் காலம், தேசம், சக்தி, கார்யம் இவைகளைக்கண்டு தக்கபடி அடக்க வேண்டும். (உலகத்திற்கு) அரசனும் அடக்குகிறவனும் ஆஞ்ஞை செய்கிறவனுமாயிருப்பது தண்டநீதியே. அதுவே ஜாதிகள், ஆச்ர மங்கள் இவைகளின் தர்மத்திற்கு அழிவில்லாத பிரபுவாயிருக்கிறது. தண்டமானது பிரஜைகளையெல்லாம் அடக்குகிறது; ரக்ஷிக்கவும்செய் கிறது. உலகங்கள் தூங்கினாலும் தண்டம் விழித்துக்கொண்டேயிருக் கிறது. அறிஞர்கள் தண்டத்தைத் தர்மமென்று அறிவிக்கிறார்கள். நன்றாக ஆலோசித்துப் பிரயோகித்த தண்டமானது எல்லாப்பிராணி களையும் ஸந்தோஷப்படுத்தும். ஆலோசியாமல்செய்யும் தண்ட மானது எல்லாவற்றையும் நாசஞ்செய்யும். அரசன் சோம்பலின்றிக் குற்றவாளிகளிடம் தண்டத்தைச்செலுத்தாவிட்டால் ஜலத்திலுள்ள மீன்களைப்போல உலகத்தில் பலசாலிகள் பலவீனர்களை விழுங்கிவிடு வார்கள். காக்கையும் புரோடாசத்தைத் தின்னும். நாயும் ஹவிஸை நக்கும். ப்ரஜைமானத்தன்மையென்பது எங்குமிராது. உலகம் கீழ்மே லாகிவிடும். உலகத்தில்உண்மையுள்ளநல்லமனிதன் மிகவும் அரிய னவான். உலகம்யாவும் தண்டத்தால் அடக்கப்பட்டு, அதன்பயத் தால் பயனுள்ளதாகிறது. தேவர்களும் அஸுரர்களும் கந்தர்வர்களும் ராக்ஷஸர்களும் உரகர்களும் பறவைமுதலியவைகளும் தண்டத்தால் பீடிக்கப்பட்டுத்தான் ஸுகவழிக்கு வருகின்றனர். தண்டம்மாறினால் ஜாதிகள்யாவும் கெட்டுப்போம். எவ்விதவரம்புகளும் உடைந்துபோம். உலகம்யாவும் கோபமுள்ளதாகும். கறுத்தஉருவமும் சிவந்தகண்ணும்

1 ஹோமத்திற்குரிய மா.

பாவத்தை அடக்குந்திறமையுமுள்ள தண்டபுருஷன் எங்குஸஞ்சரிக்கிறானே அங்குள்ளபிராணிகள் அவிவேகத்தைஅடைவதில்லை. அவ்விதமான தண்டத்திற்கு, நன்குஆராய்ந்துசெய்பவனும் அறிவுள்ளவனும் அறம் பொருள் இன்பங்களைப் பகுத்தறிந்தவனும் உண்மையுரைப்பவனுமான அரசன் காரணமாகிறான். அப்படித்தண்டத்தைச்செலுத்தும் அரசன் ஸுவர்க்கலோகத்தைநோக்கிச் செல்லுகிறவனாகிறான். காமத்தில்புத்திசெலுத்தும் நீசனானஅரசன் தண்டத்தால்அடிக்கப்படுகிறான். நல்ல புத்தியில்லாதவர்களால் வகிக்கத்தகாததும், பெரிய தேஜஸையுடையதுமான தண்டமானது, தர்மத்திலிருந்துவிலகினஅரசனை இனத்தார்களுடன்கொல்லும். (அது) அரசனைக்கொன்று துர்க்கத்தையும், ராஜ்யத்தையும், ஸ்தாவரஜங்கமமான உலகத்தையும், ஆகாயத்திலுள்ள முனிவர்களையும், தேவர்களையும் துன்புறுத்தும். தண்டமானது புத்தியில்லாதவனும் பொருளாசையுள்ளவனும் சிற்றின்பத்தில் ஆசையுள்ளவனும் மூடனும் துணையற்றவனுமான மனிதனால் விதிப்படி செலுத்தமுடியாது. சுத்தனும் உண்மையுள்ளவனும் நீதிசாஸ்திரத்தைஅனுஸரிப்பவனும் நல்லதுணையுள்ளவனும் புத்திமானுமாயிருப்பவனால் தண்டம் நன்குசெலுத்தமுடியும். (அரசன்) தன்ராஜ்யத்தில் நியாயப்படியிருப்பவனும் சத்ருக்களிடம் கொடுமையான தண்டமுள்ளவனும் அன்புள்ளநண்பர்களிடத்தில் ஒழுங்கானவனும்பிராம்மணர்களிடம் பொறுமையுள்ளவனுமாயிருக்கவேண்டும். இவ்விதமிருக்கும் அரசன் [1] பிச்சையெடுத்துப்பிழைப்பானாலும், ஜலத்தில் எண்ணெயின்துளி பரவுவதுபோல உலகத்தில் அவனுடையபுகழ் பரவுகின்றது. இதற்குமாறுபாடான நடையுள்ள புத்தியில்லாத அரசனுடைய கீர்த்தியானது ஜலத்தில் நெய்த்துளிபோல உலகத்தில் சுருங்கும். ஓ! வேந்தரே! தர்மத்தைவிட்டுவிலகினபடியினாலேதான் திருதராஷ்டிரருடைய புத்திரர்கள் தேவதேவரானருத்திராலும் பிரம்மாவினாலும் தேவரானவிஷ்ணுவினாலும் மஹாத்மாவான இந்திரனாலும் திக்குப்பாலகர்களாலும் பஞ்சபூதங்களாலும் மஹாத்துமாக்களான பாண்டவர்களாலும் கொல்லப்பட்டார்கள். தர்மமில்லாதவர்களும் கெட்டநடையுள்ளவர்களுமான திருதராஷ்டிரகுமாரர்கள் சேனைகளுடன் கொல்லப்பட்டார்கள். ஓ! அரசரே! வ்யாஜத்தாலோ மாயையாலோ அல்லது க்ஷத்திரியர்களுக்குள்ளநீதியாலோ அவர்களைக்கொன்றதால் உமக்குக் கொஞ்சமாவது தோஷமில்லை. எல்லாப்பிராணிகளிடத்தும் ஸ்நேஹமும் கொடுப்

---

1 மூலத்தில், 'ஜிலோஞ்சம்' என்றிருக்கிறது.

பதும் வேதமோதுவதும் தவமும் பிராம்மணர்களுக்குத்தான் தர்ம மாகும். ஓ! ராஜஸ்ரேஷ்டரே! அரசர்களுக்கு இவை தர்மமாகா. அரசர்களுக்குத் துஷ்டர்களைத்தடுப்பதும் ஸாதுக்களைக்காப்பதும் புத்தத்தில் ஓடாமலிருப்பதுமாகிய இவை முக்கியதர்மங்களாகும். எவனிடத்தில் பொறுமையும் கோபமும், கொடுப்பதும் வாங்குவதும், அஞ்சுவதும் அஞ்சாமையும், சிக்ஷையும் ரக்ஷணையும் இருக்கின் றனவோ அவன்தான் தர்மந்தரிந்தவனென்று சொல்லப்படுகிறான். இந்தப்பூமியானது, கல்வியினாலும் தானத்தினாலும் யாகத்தினாலும் நல்வார்த்தையினாலும் யாசகத்தினாலும் உம்மாலடையப்பட்டதன்று. உலகத்தில் பிரஸித்திபெற்றனவும் பலவீரர்களால் சூழப்பட்டனவும் யானை குதிரை தேர்களால் நிறைந்தனவும் [1] மூன்று அங்கங்களால் மிகவும் சிறந்தனவும் துரோணர், கர்ணன், அஸ்வத்தாமா, கிருபர் இவர்களால் காக்கப்பட்டனவுமான சத்துருக்களின் சேனைகளானவை உம்மால் கொல்லப்பட்டன. ஓ! வீரரே! ஆகையால், பூமியை நீர் அனுபவிக்கவேண்டும். ஓ! புருஷப்புலியாகிய மஹாராஜரே! பல ஊர்களோடுகூடிய ஜம்பூத்வீபமானது உம்மால் தண்டத்தால் அடக் கப்பட்டது. ஓ! அரசரே! இத்தீவுக்கொப்பானதும் மேருவுக்கு மேல்புறமுள்ளதுமான கிரௌஞ்சமென்னுந்தீவும் உம்மால் தண் டத்தால் அடக்கப்பட்டது. ஓ! வேந்தரே! மேருவுக்கு முன்பக்க முள்ளதும் கிரௌஞ்சத்தீவுக்குச் சரியானதுமான சாகத்தீவும் தண் டத்தால் உம்மால் அடக்கப்பட்டது. ஓ! புருஷப்புலியே! மேரு வுக்கு வடபாகத்திலிருப்பதும் சாகத்தீவுக்குச் சரியானதுமான பத் திராஸ்வமென்னும் தீவும் தண்டத்தால் உம்மால் அடக்கப்பட்டது. ஓ! வீரரே! பலஊர்களுக்கு இருப்பிடமானதீவுகளும் இடையி லுள்ள சிறுதீவுகளும் ஸமுத்திரத்தில் பிரவேசித்து உம்மால் தண் டத்தால் அடக்கப்பட்டன. ஓ! மஹாராஜரே! பாரதரே! ஒப் பற்ற இவ்விதக்காரியங்களைச்செய்து பிராம்மணர்களால் பூஜிக்கப்படு கிற நீர் ஸந்தோஷப்படவில்லையே. ஓ! பாரதரே! கர்ஜிக்கும் காளை கள்போலவும் மதம்பிடித்த யானைகள்போலவுமிருக்கும் இந்தத் தம்பிகளைக்கண்டு ஸந்தோஷப்படும். சத்துருக்களை ஜயிக்கத்தக்க வர்களும் பிறரைத் தபிக்கச்செய்பவர்களுமான இவர்களெல்லாரும் தேவர்களுக்கொப்பானவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் எனக்கு நன்மையைச்செய்பவரென்பது என்னுடைய எண்ணம். சரீரத்தை நடத்துவதில் இந்திரியங்கள்யாவும் சேர்ந்திருப்பதுபோல மனிதர்க ளுள் சிறந்தவர்களும் புலிபோன்ற சூரர்களுமான பதிகள்யாவரும்

[1] பிரபுசக்தி, உத்ஸாஹசக்தி, மந்த்ரசக்தி.

என்விஷயத்தில் சேர்ந்திருப்பதில் என்னசொல்லவேண்டும்? எல்லாம் அறிந்தவளும் எல்லாம் பார்த்தவளும் மாமியுமான குந்தியானவள், 'ஓ! பாஞ்சாலி! வேகமானபராக்ரமமுள்ள யுதிஷ்டிரன் விரோதிகளான பல்லாயிரம் அரசர்களைக்கொன்று உன்னை உயர்ந்தஸுகத்தில் வைக்கப்போகிறான்' என்றுசொன்னது பொய்யாயிராது. ஓ! அரசரே! உம்முடைய அவிவேகத்தால் அது வீணாகுமென்று நினைக்கிறேன். தமையனானநீர் உன்மத்தராயிருப்பதால் உம்மை அனுஸரிக்கும் மற்றப்பாண்டவர்கள் யாவரும் உம்முடைய பைத்தியத்தால் பைத்தியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஓ! வேந்தரே! உம்முடையதம்பிகள் பைத்தியமில்லாதவர்களாயிருப்பார்களானால் உம்மை நாஸ்திகரோடுகூடக் கட்டிப்போட்டுவிட்டுப் பூமியை ஆளுவார்கள். தனக்குரிய ஸுகவழியை அடையாதிருக்கும் மூடனன்றே இவ்வாறுசெய்வான்? ஓ! அரசரே! புகைகளாலும் கூட்டினமைகளாலும் நஸ்யங்களாலும் உமதுபைத்தியத்தை விலக்கவேண்டும். வழிதப்பிச்செல்லும் மனிதன் மருந்துகளால் பரிகாரஞ்செய்யத்தக்கவன். ஓ! பரதஸ்ரேஷ்டரே! உலகத்திலுள்ள ஸ்திரீகளுள் நான் மிகக் கீழானவள். திருதராஷ்டிரரின் பிள்ளைகளால் அவ்விதம் அவமதிக்கப்பட்டும் நான் உயிரோடிருக்க விரும்புகிறேன். ஓ! வேந்தரே! திருதராஷ்டிரபுத்திரர்கள் எப்பொழுதும் தீயவழியிற் செல்லுகிறவர்கள். அவர்களைக்கொல்லுவதில் எவ்விதமான தோஷத்தையும் ஒருபோதும் காணவில்லை. ஓ! அரசரே! சுக்கிராசாரியரால் சொல்லப்பட்ட இந்தச்சுலோகங்களைக் கேளும். (அவற்றின் பொருளாவது) 'தன்னைக்கொல்லுகிறவன், தன்பொருளையழிப்பவன், பந்துக்களைக்கொல்லுபவன், விஷத்தைப்போடுகிறவன், காரணமின்றிக் கொல்லுகிறவன், மனைவியை இழுப்பவன் இவர்கள் அறுவரும் [1]ஆததாயிகளென்றுசொல்லப்படுவார்கள். இவர்களைக்கொல்லுவதில்தோஷமேயில்லை' என்பது. இம்மஹாத்மாவான பார்க்கவரின்பொருட்டுப் ப்ரம்மதேவர் (இதைச்) சொன்னார். நல்வழியிலிருக்கும் பிராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன் இவர்களுடைய வீடுசென்று பலாத்காரமாக அடிப்பவனையும் விஷம்போடுபவனையும் புழிக்கையும் குடிக்கவும் தகாதவஸ்துவைப் போடுபவனையும் தீயிடுபவனையும் கொல்லவேண்டும். பசுவையும் பிராம்மணனையும் கொல்லும்போதும் மாதர்களை மயிரைப்பிடித்திழுக்கும்போதும் பிதாமஹரான பிரம்மதேவராயிருந்தாலும் அடிக்கவேண்டும். மற்றப் பாவிகள்விஷயத்தில்

---

1 விராடபர்வம் 175-ம்பக்கம் சல்யபர்வம் 87-ம்பக்கம் குறிப்புக்களில் காண்க.

ன்னசொல்லவேண்டும்? இஃது அரசர்களுக்குள்ள வழியாகும். பசு வுக்கும் பிராம்மணர்களுக்கும் அரசர்களுக்கும் துன்பம்நேரிடுங் காலத் திலும் ராஜ்யத்திற்கு அழிவுநேருங் காலத்திலும் தனது சரீரத்தை ரக்ஷிப்பதற்காகவும் மங்கையர்களின் அழுகைச்சத்தங்கேட்டபோதும் பெருமைபொருந்திய பிராம்மணனும் சண்டை செய்யவேண்டும். தர்மத்தை விட்டுவிலகிய ஆததாயியான பிராம்மணனைக்கொல்லலாம். அறிந்தவன் பிராம்மணவதத்தை வேறெங்கும் மனத்தாலும் சிந்திக் கக்கூடாது. பசுவையும் பிராம்மணனையும் கொலைசெய்யத் துணிந்த பிராம்மணனை க்ஷத்திரியன் கொல்லலாம். மந்திரத்தைக் காப்பாற் றுவதற்காகவும் தன்குடும்பத்தை அடைவதற்காகவும் க்ஷத்திரியன் பிராம்மணனைக் கொல்லலாம். தர்மம் விட்டுவிலகினவனும் குரூர னும் திருடனுமான பிராம்மணனுடன் க்ஷத்திரிய ஜாதியில் பிறந்த வன் யுத்தத்தில் சண்டைசெய்யலாம். வேதாந்தத்தில் கரைகண்டவ னையும் தன்னைக் கொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் வரும் ஆததாயியை ஒருவன் கொலைசெய்வதால் [1]ப்ரூணஹத்தியென்னும் தோஷமுள்ளவனாகமாட்டான். பிராம்மணன், க்ஷத்திரியன், வைசி யன், சூத்திரன், சண்டாளன், மற்றுமுள்ள எவனும் எந்தச் சமயத் திலும் சாந்தனான பிராம்மணனை ஒரு புல்லாலும் அடிக்கக்கூடாது. பிராம்மணனைப் பெரிய தடியையெடுத்து அடிக்க ஓங்கினபாவி முந் நூறு வருஷங்கள் நல்ல நிலையை அடையமாட்டான். அடிப்பவன் ஆயிர வருஷம் நரகத்தில் விழுவான். ஆகையால், பிராம்மணர்களை அடிக்க ஓங்குவதும் ஆயுதத்தால் அடிப்பதும் ஆகா. (பிராம்மணன் சரீரத்திலிருந்துவரும்) உதிரம் எவ்வளவு அணுக்களைப் பற்றக் கூடுமோ அவ்வளவு வருஷங்கள் அடித்தபாவி நரகத்தில் சுழலு கிறான். பிராம்மணனுடைய தோல் எலும்புகளைப் பேதிக்கச்செய்த வனும் செய்வித்தவனுமான கெட்ட மனிதன் ப்ரம்மஹத்திசெய்தவ னைப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளத் தக்கவனாகிறான். வேத மோதின பிராம்மணனையும் ஆத்ரேய கோத்திரத்தில் உதித்த பிராம்மணஸ்திரீயையுங் கொன்றால் அது ப்ரம்மஹத்தியில் இரட் டிப்புத் தோஷமுள்ளதென்று ரிஷிகளால் சொல்லப்பட்டிருப்பதால் இருபத்துநான்கு வருஷம் அதற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். அவ்விதம் பிராயச்சித்தஞ் செய்து கொள்ளாதவனை அடையாளஞ் செய்து தேசத்தைவிட்டு வெளிப்படுத்தவேண்டும். பிராம்மணனைக் கொன்றவனும் திருட்டுத்தனமுள்ளவனுமான

---

1 வேதத்தை ஸாங்கமாக அத்தியயஞ்செய்த பிராம்மணனைக் கொல்வது. வனபர்வம் 137-ம் பக்கம் உத்யோக129, 147-ம் பக்கம் குறிப்புக்களில் காண்க.

ஒருவன் பிராம்மணனையும் க்ஷத்திரியனையும் வைசியனையும் சூத்திரனையும் அவனை அரசன் சிக்ஷை செய்யவேண்டும். இவர்களில் சூத்திரனையும் வைசியனையும் க்ஷத்திரியனையும் கைகால் உதடு மூக்குக்களை அறுத்துவிட்டு இனி இவ்விதம் நடக்கையில்லாமலிருக்கும்படி செய்யவேண்டும். இவர்களை பிராம்மணனைக் கொலை செய்தவர்களானால் இவர்களின் கண்ணைப் பிடுங்கவேண்டும். இப்படிப்பட்ட தோஷமுள்ள பிராம்மணனைத் தேசத்தைவிட்டுத் துரத்தவேண்டும். பிராம்மணனைக்கொன்ற க்ஷத்திரியனையும் வைசியனையும் சூத்திரனையும் அரசன் ஆயுதத்தால் கொல்லவேண்டும். பிராம்மணனைக்கொன்ற பிராம்மணர்களை அரசன் அடையாளஞ் செய்து வெளியில் துரத்தவேண்டும். பிரம்மஹத்திசெய்த தாழ்ந்த மூன்று ஜாதிக்காரர்களையும் [1]இந்திரியக்குறைவுள்ளவர்களாகச்செய்து சண்டாளர்களுடன் கூடி வஸிக்கும்படி செய்யவேண்டும். அவர்களோடுசேர்ந்து புஜிக்கும் மனிதனும் அந்தப்பாவமுள்ளவனுவான். அவர்கள் இறந்தாலும் அவர்களுக்கு எவனும் பிண்டமுதலியவைகள் கொடுக்கக்கூடாது. கருநிறமும் விகாரமான உருவமுமுடையதும் தொங்குகிற மயிருள்ளதுமான பிரம்மஹத்தியென்பது காணுமலே பின்தொடர்ந்து செய்தவனைப் பீடிக்கிறதென்று பெரியோர்கள் அறிகிறார்கள். பிரம்மஹத்திசெய்தவனோடு புஜித்துக்கொண்டிருந்தால் அப்படியிருக்கும் பிராம்மணர்களும் அவர்களிருக்கும் ஊர்களும் தேசங்களும் பஞ்சத்தாலும் வியாதியாலும் திருடர்களாலும் தாமதமின்றிப் பீடிக்கப்படுகிறார்கள். பிராம்மணர்களைக் கொல்லத் துணிந்தவர்களும் பாவிகளுமான பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களுடைய கண்ணைப் பிடுங்கிவிடவேண்டும். பலமில்லாதவர்களானாலும் பலமுள்ளவர்களானாலும் ஸாதுக்களுக்கு அரசன் பலமாகிறான்; வலியவர்களானாலும் வலிமையில்லாதவர்களானாலும் பாவிகளுக்கு யமனாகிறான். ஓ! அரசரே! வலிமையுள்ளவனும் வலிமையில்லாதவனுமான மனிதனைத் தோஷமுள்ளவனானாலும் அரசனுக்குத் தெரிவியாமல் அடிப்பவன் சிக்ஷிக்கத் தக்கவனுவான். அரசன் கட்டளையையும் அதிகாரியையும் மீறினவனும் ஸாக்ஷியையும் நியாயவார்த்தையையும் விட்டு விலகினவனும் குற்றமுள்ளவராவார். சிறையிலிருந்து வெளிக் கிளம்பினவனும் குற்றவாளியைக் கொடாத பிணையாளியும் நல்லகுலத்திற் பிறந்தவரானாலும் பிரபுக்களானாலும் குற்றமுள்ளவராவார். அரசன் கட்டளையால் அழைக்கப்பட்டும் பலமுள்ள ஒருவனைத் துணையாக அடுத்து ஆயுதமெடுத்துக்

1 கண் காது மூக்கு முதலியவற்றைக் குறைத்தல்.

கொண்டு (மாறுபட்டு) ஸபைக்கு வராமலிருப்பவன் குற்றவாளி யாவான். அவ்விதமான பெரிய குற்றமுள்ள மனிதனை அவனுடையபொருளையும் சரீரத்தையும் இழக்கும்படிசெய்து பரலோகத்திற்கு அனுப்பிவிடவேண்டும். அப்படி இறந்துபோன அவனுக்கு எவனும் பிண்டமுதலியவைகள் கொடுக்கக்கூடாது. கட்டளையை மீறிக் கொடுப்பவன் இரண்டாவது [1] குற்றத்திற்குத்தக்க அபராதம் விதிக்கத் தகுந்தவன். பலாத்காரமாகக் குலஸ்திரீகளைக்கெடுப்பதும் ராஜ்யத்தைக்கெடுப்பதும் பிராம்மணனைக்கொல்லுவதும் திருடுவதும் அரசனைப்பகைப்பதும் யுத்தமில்லாதகாலத்தில் கொல்லுவதும் கள்ளுக் குடிப்பதும் குருவின் பத்னியைக்கெடுப்பதும் மித்திரத்ரோஹம் செய்வதுமாகிய இவ்விதமஹாபாவத்தைச் செய்பவன் பெருங்குற்றவாளியாவான். அவனைச் சற்றேனும் உபேக்ஷியாமல் பொருளையெல்லாம் பறித்து உடனே கொலைசெய்யவேண்டும். இவ்விதத் தண்டமானது சூத்திரன் முதலிய மூன்று வருணத்தாருக்கென்றும் இப்பெருங் குற்றவாளியாகிய பிராம்மணனை அடையாளஞ்செய்து வெளியில் துரத்தவேண்டுமென்றும் பிரம்மதேவரால் முன்பு விதிக்கப்பட்டிருக்கிறது. பெரிய புத்தியுள்ள சுக்கிராசாரியர் நான்கு வர்ணத்தார்களுக்கும் ஸ்திரீகள் சிறுவர்கள் முதியோர்கள் இடையர்கள் இவர்களுக்கும் ஆயிரம்பொன் அபராதம் விதிக்கலாமென்றார். மிக்க ஐசுவரியமுள்ளவரே! பிருகஸ்பதி இந்தத் தீயவொழுக்கமுள்ள பெருங்குற்றவாளிகளுக்கும் ஆததாயிகளான யாவர்களுக்கும் மரணதண்டம் விதிக்கிறார். ஆகையால், கெட்டபுத்தியுள்ளவர்களும் பாபகார்யத்தையே செய்தவர்களுமான திருதராஷ்டிரர்பிள்ளைகள் அனைவர்களுக்கும் மரணதண்டனை செய்ததில் யாதொரு குற்றமுமில்லை. ஓ! வேந்தரே! ஒரே வஸ்திரமுள்ளவளும் ரஜஸ்வலையுமான என்னை உமது குற்றத்தால் உங்கள் கண்முன் பலவீரர்கள் பார்க்கும்படி ஸபையில் சூதாடிய அப்பொழுது இழுத்துவரச்செய்த துஷ்டர்களான கர்ணன், ஸௌபலன், துரியோதனன் முதலியவர்களைக் கொலை செய்ததில் தோஷமேயில்லை. கோபாக்கினியால் பசுக்களோடு திரவியக்குவியல்களைக் [2] கொளுத்தித் திருதராஷ்டிரருடைய குலத்தை நாசஞ்செய்ததால் உமக்குத் தர்மக்குறைவு உண்டாகாது. உம்முடைய

---

1 குற்றங்கள் மூவகையாகும்; அவைகளில் முதலாவதற்கு ஆயிரம் பொன்னும், இரண்டாவதற்கு ஐந்நூறு பொன்னும், மூன்றுவதற்கு நூறு பொன்னும் குறைந்த அபராதமாக விதிக்கப்பட்டிருக்கின்றன. இதை யாஜ்ஞவல்கியஸ்மிருதி, வியவகாரகாண்டம், ஸாஹஸப்பிரகரணம், முதல் சுலோகம் டீகையில் காண்க. 2 கவர்ந்து.

நிமித்தம் நான் இவ்விதத் துன்பத்தை அடைந்திருக்கிறேன். அந்த ஸமயத்தில் உலகத்திற்குக் காலத்தையுண்டுபண்ணும் தேவரீரான ஸூர்யபகவானால் நான் ஆடையற்றவளாகாமலிருக்கும்படி காக்கப்பட்டேன். ஆதித்யருடைய அனுக்ரஹத்தால் பிராணன்கள் என்னைவிட்டு விலகாமலிருந்தன. எனது வார்த்தை பொய்யன்று. நீரோ இவ்வளவு முயற்சியுள்ள தம்பிகளை அனுதாவுசெய்து இப் பூமி முழுமையும் தள்ளிவிட்டுத் தாமாகவே துன்பத்தை உண்டு பண்ணிக்கொள்ளுகிறீர். ஓ! அரசஸ்ரேஷ்டரே! மாந்தாதாவையும் அம்பரீஷரையும்போல இந்தப் பூமியில் அரசர்களால் நன்குமதிக்கப் பெற்று விளங்குகிறீர். ஓ! அரசரே! தர்மப்படி பிராணிகளைக் காப்பாற்றிக்கொண்டு காடு மலை தீவுகளோடு இந்தப் பூமிதேவியை நன்றாக ஆளும். மனத்தில் இந்தச் சோர்வு வேண்டாம். ஓ! உத்தம அரசரே! பலவகையான யாகங்களைச் செய்யும். பகைவர்களை வெல்லும். பொருள்கள் ஆடைகள் மற்றுமுள்ள பல போக்ய வஸ்துக்கள் இவைகளைப் பிராம்மணர்களுக்குக் கொடும்" என்று சொன்னாள்.

பதினைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் திரும்பவும் தர்மபுத்திரரைப் பார்த்துச் செங்கோலின் சிறப்பைக்கூறி அரசாளும்படி சொன்னது.)

அர்ஜுனன், திரௌபதியின் வசனத்தைக்கேட்டு, அரசரும் மஹாபாஹுவுமான தமையனுரை அனுஸரித்து, பின்னும் சொல்லத் தொடங்கினான். "பிரஜைகள் பாவற்றையும் அடக்குவதும் காப்பதும் தண்டமே. உலகம் தூங்கினாலும் தண்டம் விழித்துக்கொண்டிருக்கிறது. தண்டமென்பதே தர்மமென்று அறிஞர்கள் அறிகிறார்கள். அறம் பொருள் இன்பமென்னும் மூன்றையும் ரக்ஷிப்பது தண்டமாகையால் அது த்ரிவர்க்கமென்று கூறப்படுகிறது. தனமும் தான்யமும் தண்டத்தால் ரக்ஷிக்கப்படுகின்றன. இதனை நன்றாக ஏற்றுக்கொண்டு உலகஇயல்பைப் பாரும். சில மனிதர்கள் அரசன் தண்டிப்பானென்றுபயந்து குற்றஞ்செய்யாமலிருக்கிறார்கள். சிலர் யம தண்டனைப்பயத்தாலும் சிலர் பரலோகபயத்தாலும் பாவஞ்செய்யாமலிருக்கிறார்கள். ஒருவரிடம் ஒருவருக்குள்ளபயத்தினால் சிலர் பாவஞ் செய்யாமலிருக்கிறார்கள். இப்படி உலகமிருப்பதைக்கண்டால் யாவும் தண்டத்தில் நிலைபெறவேண்டும். சிலர் தண்டத்திற்குப் பயந்துதான்

ஒருவனையொருவர் விழுங்காமலிருக்கிறார்கள். தண்டம் ரக்ஷியா விடில் இவ்வுலகம் பேரிருளில் முழுகிவிடும். அடங்காமலிருப்பவர்களை அடக்குவதாலும் குற்றமுள்ளவர்களைச் சிக்ஷிப்பதாலும் அறிஞர்கள் தண்டமென்று சொல்லுகிறார்கள். பிராம்மணர்களுக்குச் சொல் தண்டமாகும். [1] க்ஷத்திரியர்களுக்குக் கூலிகொடுப்பது தண்டமாகும். வைச்யர்களுக்குப் பணம்தண்டமாகும். (சூத்திரனுக்கு ஊழியத் தைத்தவிர) வேறுதண்டமில்லையென்று சொல்லப்படுகிறது. ஓ! அரசரே! மனிதர்களுக்கு அவிவேகம்வராமலிருப்பதற்கும் திரவியங்களை ரக்ஷிப்பதற்கும் உலகத்தில் தண்டமென்னுங்கரை போடப்பட்டிருக் கிறது. எந்தத்தேசத்தில் அரசன் நன்குகவனிப்பதால் கரிய உருவ மும் சிவந்தகண்ணுமுள்ள தண்டபுருஷன் கிளம்பிச் சஞ்சரிக்கிறானே அங்குள்ள பிரஜைகள் அவிவேகத்தைஅடையமாட்டார்கள். பிரம்ம சாரி, கிருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்யாஸியென்னும் இந்தமனி தர்கள் தண்டத்தில் பயந்துதான் தம்தம்வழியில் நிற்கிறார்கள். பய மில்லாதவன் யாகஞ்செய்யமாட்டான்; தானஞ்செய்ய விரும்பமாட் டான். பயமில்லாதளவனும் தன்னிலைமையிலிருக்கமாட்டான். எதிரி யின் மர்மங்களை அறுக்காமலும் செய்தற்கரியகாரியத்தைச் செய்யா மலும் மீன்பிடிப்பவனைப்போலக் கொல்லாமலும் பெரியஸம்பத்தை அடையமுடியாது. கொல்லத்துணியாதவனுக்கு இவ்வுலகத்தில் கீர்த் தியும் பொருளும் பிரஜைகளுமில்லை. இந்திரன், விருத்திரனென்னும் அஸுரனைக்கொன்றுதான் மஹேந்திரன் என்கிற பெயரையும் அதற்குத்தக்க வீட்டையும் அடைந்து, உலகங்களுக்கு ஈசனுமானான். அடிக்கக்கூடிய தேவர்களைத்தாம் உலகம் மிகவும் பூஜிக்கிறது. ருத்தி ரர், ஸ்கந்தர், அக்கினி, இந்திரன், வருணன், யமன், காலன், வாயு, மிருத்யு, குபேரன், ஸூர்யன், வஸுக்கள், மருத்துக்கள், ஸாத்தியர் கள், விச்வேதேவர்கள் இவர்கள் அடிக்குந் தன்மையுள்ளவர்களான தால் அவர்கள் பராக்ரமத்திற்குவணங்கி ஜனங்கள் அவர்களைப் பூஜிக் கிறார்கள். பிரம்மாவையும் தாதாவையும் பூஷாவையும் ஒருவரும் பூஜிக்கிறார்களில்லை. அடக்கமுள்ளவர்களும் மிக்கபொறுமையுள்ள வர்களும் எல்லாப்பிராணிகளிடத்தும் விருப்புவெறுப்பில்லாதவர்களு மான தேவர்களைச் சிலமனிதர்கள்மாத்திரம் பூஜிக்கிறார்கள். உலகத் தில் ஹிம்ஸையில்லாமல் ஜீவிக்கும்எவனையும் காணோம். பலமுள்ள பிராணிகள் பலமில்லாப்பிராணிகளால் ஜீவிக்கின்றன. கீரி எலிகளைத் தின்கிறது. கீரியைப் பூனைதின்கிறது. பூனையை நாய் தின்கிறது.

---

1 ஸ்வதந்திரமின்றிப் பிறர்பொருளால் ஜீவிப்பது க்ஷத்ரியர்களுக்கு இகழ்ச்சியானது.

நாயை ஒருவகைப்புலி தின்கிறது. அந்தப்புலிகளையெல்லாம் மனிதன் கொல்லுகிறான். தர்மம் எப்படிப்போகிறது பாரும்! [1] ஸ்தாவர ஜங்கமம் யாவும் பிராணனுக்கு அன்னமென்று தெய்வம் விதிக்கிறது. அறிந்தவர்கள் இதில் சந்தேகப்படமாட்டார்கள். ஓ! அரசஸ்ரேஷ்டரே! எவ்விதம் [2] (சூரத்தன்மை, தேஜஸ், தைரியம், ஸாமர்த்தியம் முதலிய க்ஷத்திரியஜாதிக்குள்ள தன்மையுள்ளவராக) ஈசனால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறீரோ அவ்விதமிருக்கக்கடவீர். மூடர்களான க்ஷத்ரியர்கள் கோபத்தையும் ஸந்தோஷத்தையும்விட்டுக் காடுசென்று தவஞ்செய்கிறவர்களாயிருந்தும் காய்கிழங்குகளின்வதமின்றிக் காலக்ஷேபஞ் செய்கிறார்களில்லை. ஜலத்திலும் பூமியிலும் பழத்திலும் பலஉயிர்களிருக்கின்றன. உலகத்தில் அவைகளைக் கொல்லாமலிருப்பவன் எவன்? பிராணிகளின் ஹிம்ஸையில்லாத ஜீவனம் என்னஇருக்கிறது? மிகச்சிறிய உருவமுள்ளவைகளும் அனுமானத்தால் அறியத்தக்கவைகளும் கண்ணிமைத்தலாலும் உயிரிழக்கத்தக்கவைகளுமான சிலபிராணிகள் இருக்கின்றன. கோபத்தையும் அஸூயையையும்விட்டுக் கிராமத்திலிருந்து வெளிப்பட்டும் சிலமுனிவர்கள் அவிவேகத்தால் வனத்திலும் குடும்பமுறையுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். பூமியைக்கல்லி ஓஷதிகள் மரம் முதலியவைகளையும் பறவைகளையும் பசுக்களையும்வெட்டி மனிதர்கள் யாகஞ்செய்கிறார்கள். அவர்கள்ஸ்வர்க்கத்தையும் அடைகிறார்கள். ஓ! கௌந்தேயரே! தண்டநீதி நன்முகச் செலுத்தப்பட்டால் எல்லாப் பிராணிகளுக்கும் எல்லா முயற்சிகளும் நன்கு பயன்படும். அதில் எனக்குச் சந்தேகமில்லை. உலகத்தில் தண்டமில்லாவிட்டால் இந்தப் பிராணிகள் நாசமடைந்துவிடும். ஜலத்திலுள்ள மீன்களைப்போல வலிமையில்லாதவர்களை வலிமையுள்ளவர்கள் விழுங்கிவிடுவார்கள். நன்குசெலுத்தப்பட்ட தண்டமானது பிரஜைகளை ரக்ஷிக்கிறதென்று முன்னொருகாலத்தில் பிரம்மதேவர்சொன்னது உண்மையே. அக்கினிகள் நாற்றமுள்ள இந்தமாம்சபிண்டத்தின் ஊதலினால் அதட்டப்பட்டனவாய்ப் பயந்து எரிவதும் தண்டத்தின் பயத்தினாலேதான். நன்மை தீமைகளை விளக்கிக்காட்டும் இந்தத் தண்டம் உலகத்திலில்லாவிடில் இவ்வுலகம் ஒரே இருளாகிவிடும். ஒன்றுந்தெரியாது. மரியாதையைவிட்டு வேதத்தைப்பழித்து நாஸ்திகராயிருப்பவரும் தண்டத்தால் பீடிக்கப்பட்டால் எளிதில்

---

1 பிருஹதாரண்யகம், ஆறுவது அத்தியாயம் முதலாவது பிராம்மணம் 14 - வது கண்டத்தில் இவ்விதம் கூறப்படுகிறது.

2 பகவத்கீதை, 18 - வது அத்யாயம் 43 - வது சுலோகம்.

மரியாதையைக் காப்பாற்றத்தக்கவர்களாவார்கள். உலகம்முழுதும் தண்டத்தால் ஜயிக்கப்பட்டது. உண்மையாகவே சுத்தனுயிருப்பவன் மிகவும் அரியன். தண்டத்தில் பயமுடையதாயிருத்தலால்தான் உலகம் மரியாதையுடன் அனுபவிக்கத்தக்கதாகிறது. நான்குவர்ணத்தார்களின் சந்தோஷத்திற்கும், நல்லநியாயம் வெளியாகிறதற்கும், அறம்பொருள்களைக் காப்பதற்கும் இந்தத்தண்டமானது பிரம்மாவினால் விதிக்கப்பட்டது. தண்டபயமில்லாவிட்டால் பக்ஷிகளும் துஷ்டமிருகங்களும், பசுக்களையும் மனிதர்களையும் யஜ்ஞத்திற்குரிய ஹவிஸுகளையும் தின்றுவிடும். பிரம்மசாரி அத்தியயனஞ் செய்யமாட்டான். ஸமயத்திற்குப் பசுக் கறக்கமாட்டாது. கன்னியானவள், மணம்புரிந்து கொள்ளமாட்டாள். இந்தத்தண்டம் பரிபாலியாவிட்டால் எல்லாமரியாதைகளும் அழிந்துபோம். எல்லாவரம்புகளும் உடைந்துபோம். [1]எனதுஎன்னும் எண்ணத்தை ஜனங்கள் கணக்கில் வைக்கமாட்டார்கள். விதிப்படி தக்ஷிணையுள்ள பலவருஷங்களில் செய்யத்தக்க ஸத்ரமென்னும் யாகங்களைப் பயமில்லாமல் அனுஷ்டிக்கமாட்டார்கள். ஆஶ்ரமம்பெற்றவர்கள் தம்தம் ஆஶ்ரமத்துக்குரிய தர்மத்தைச் சொன்னபடி செய்யமாட்டார்கள். ஒருவனும் கல்வியைக் கற்கமாட்டான். தண்டமில்லாவிட்டால் வண்டியில்கட்டிய காளை, குதிரை, ஒட்டகம், கழுதை, கோவேறுகழுதை இவைகள் (வண்டிமுதலிய) வாகனங்களை இழுக்கமாட்டா. வேலைக்காரர்கள் தலைவன்சொன்னதைச் செய்யமாட்டார்கள். தகப்பன் போதிக்கும் தருமத்தில் இளைஞன் எப்போதும் இருக்கமாட்டான். பிரஜைகள்யாவும் தண்டத்திலிருக்கின்றன. அறிஞர்கள் தண்டத்தில் பயமிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். மனிதர்களுக்கு இவ்வுலகமும் ஸ்வர்க்கமும் தண்டத்தில் நிலைபெற்றிருக்கின்றன. நன்குசெலுத்தப்பட்டு விரோதிகளை நாசஞ்செய்யும் தண்டம் எந்தத்தேசத்தில் நடையாடுகிறதோ அங்கு பொய்யும் பாவமும் வஞ்சகமும் காணப்படுகிறதில்லை. தண்டம் ஓங்கிநில்லாவிட்டால் ஹவிஸைக்கண்டு நாய் நக்கிவிடும்; காகம் புரோடாசத்தைக் கொண்டுபோய்விடும். இந்த ராஜ்யமானது தருமமாகவோ அதருமமாகவோ அரசனுக்குவிதிக்கப்பட்டபடியால் இதில் சோகப்படக்கூடாது. புஜிக்கக்கூடியவைகளைப் புஜியும்; யாகங்களைச் செய்யும். செல்வவான்கள் பரிசுத்தமான உடையுள்ளவர்களும் அன்புள்ள மனைவிகளோடுசேர்ந்து வஸிப்பவர்களும்

---

[1] 'எவனும் எல்லாவற்றையும் தன்னுடைமை என்று நினைப்பான்' என்பது கருத்து.

உத்தமமான அன்னத்தைப் புஜிப்பவர்களுமாயிருந்துகொண்டு லோக மாகத் தருமத்தைச்செய்கிறார்கள். எல்லாமுயற்சிகளும் பொருளைப் பற்றியிருக்கின்றன; ஸந்தேஹமில்லை. அந்தப்பொருளோ தண்டத்தைப்பற்றியிருக்கிறது. தண்டத்தின் சிறப்பைப்பாரும். (பசுவைக் கொல்லுவதற்குக் கொட்டிலில் புகுந்தபுலியைக்) கொல்லாமலிருப்பது (அப்பசுவின்) பெரிய கொலையாய் முடியும். ஆகையால், தருமத்தை மேற்கொள்ளவேண்டியதுதான் மேலானது. இவ்விதமான தர்மோபதேசம் உலகம் நடைபெறுவதற்காகவே செய்யப்பட்டிருக்கிறது. முழுமையும் குணமேயுள்ளதும் முழுமையும் குணமேயில்லாததுமானபொருள் ஒன்றுமில்லை. நல்லதும் கெட்டதுமான இவ்விரண்டும் எல்லாக்கார்யங்களிலும் காணப்படுகின்றன. பலஜனங்கள் எருதுகளை விருஷணத்தைநசுக்கிப் பிறகு அவைகளின் மூக்குக்களில் துளையிட்டுப் பலசுமைகளைத் தூக்கச்செய்து கட்டவும் அடிக்கவும் செய்கிறார்கள். மஹாராஜரே! இப்படிஉலகமானது பலவிதமான அந்தஅந்த [1] நியாயங்களால் கலகலத்துப் பயந்துகொண்டிருக்கிறது. நீரும் பழமையான தருமத்தைச்செய்யும். ஓ! கௌந்தேயரே! யாகம் செய்யும்; தானம் செய்யும்; பிராணிகளைக் காப்பாற்றும்; தருமத்தை நன்முகப் பரிபாலனஞ்செய்யும்; பகைவர்களைக் கொல்லும்; இஷ்டர்களை ரக்ஷியும். அரசரே! பகைவர்களைக் கொல்லும்விஷயத்தில் உமக்குச் சோகம்வேண்டாம். ஓ! பாரதரே! பகைவர்களைக்கொல்லும் அரசனுக்குச் சிறிதும் பாதகமில்லை. ஆயுதமெடுத்து அடிக்கவருகிறவனை ஆயுதமெடுத்து எவன் அடிக்கிறானோ அவன் கொலைபாதகமுள்ளவனுகான். கோபம் கோபத்தைச்சேருகிறது. எல்லாப் பிராணிகளினுள்ளுமிருக்கும் ஆன்மா வதஞ்செய்யப்படத்தக்கதன்று; ஸந்தேஹமில்லை. அடிபடக்கூடாத ஆத்மா யாரால்எப்படிஅடிக்கப்படும்? ஒருமனிதன் (பழையவீட்டைவிட்டுப்) புதிதாகக்கட்டியவீட்டில் பிரவேசஞ்செய்வதுபோல ஜீவன் பழையசரீரங்களைத் தள்ளிவிட்டுப் புதிய அந்தஅந்தச் சரீரங்களைஅடைகிறது. இதுதான் மரணமென்று உண்மையறிந்தவர்கள் கூறுகிறார்கள்" என்று இங்ஙனம்சொன்னன்.

---

1 தண்டப்பிரயோகத்தால்.

பதினுறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீமஸேனன் தர்மபுத்திரரை இடித்துரைத்து அசுவமேதம் செய்யும்படி சொன்னது.)

அர்ஜுனன் சொல்லிய வார்த்தையைக்கேட்டு, மிகவும் பொறுமைக்காரனும் தம்பியுமான பீமன், தைரியங்கொண்டு, தமையனரான அந்தயுதிஷ்டிரரைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினன். "ஓ! ராஜரே! நீர் தர்மந்தெரிந்தவர். உலகில் உமக்குத்தெரியாதது ஒன்றுமில்லை. உம்முடையகடமையை எப்பொழுதும் நாங்களும் கற்றுக்கொள்ளுகிறோம். ஆகிலும், அவ்விதமே செய்யமுடியாதவர்களாயிருக்கிறோம். 'சொல்லவேண்டாம், சொல்லவேண்டாம்' என்ற எண்ணம் என் மனத்திலிருந்தது. மிக துக்கத்தால்மாத்திரம் சொல்லத்தொடங்கினேன். அதைத் தெரிந்துகொள்ளும். உமக்குண்டான அவிவேகத்தால் எல்லாம் ஸந்தேஹமுள்ளதாகிவிட்டது. எங்களுக்கும் அதைரியமும் அப்படியே பலக்குறைவும் உண்டாயின. உலகத்திற்கு ராஜாவும் எல்லாச்சாஸ்திரங்களையும் நன்குதெரிந்தவருமான நீர் சிறியமனிதன்போலச் சோகத்தால் இப்படிப்பட்ட அவிவேகத்தை எப்படி அடையக்கூடும்? உலகத்தின் [1]ஆபத்தும்ஸம்பத்தும் உமக்குத்தெரிந்திருக்கின்றன. நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் உமக்குத்தெரியாதது ஒன்றுமில்லை. ஓ! மஹாராஜரே! ஓ! ஜனாதிபரே! இப்படியிருக்கும்பொழுது, ராஜ்யஞ்செய்யவேண்டுமென்ற விஷயத்தில் சில காரணமாத்திரம் நான்சொல்லுகிறேன். அதை மனத்தேதாடும் கேளும். உலகில் சரீரத்தைப்பற்றினதென்றும் மனத்தைப்பற்றினதென்றும் இருவகை வியாதிகள் உண்டாகின்றன. அவைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டாகிறது. ஒன்றைப்பற்றாமல் மற்றொன்று உண்டாவதாகக் காணப்படவில்லை. சரீரவியாதியால் மனோவியாதியும் மனோவியாதியால் சரீரவியாதியும் உண்டாவது நிச்சயம். சாரீரம் மானஸமென்ற இந்த வியாதிகளைக்குறித்து முன்பு போனதற்காக எவன் சோகப்படுகிறானோ அவன் அந்தச்சோகத்தால் துக்கத்தையும் அந்த இருவகைவியாதிகளையும் திரும்பவும் அடைகிறான். சீதம் உஷ்ணம் வாயுவென்னும் இம்மூன்று குணங்களும் சரீரத்திலுண்டானவைகள். இம்மூன்றுகுணங்களும் ஸமமாயிருப்பதுதான் நோயில்லாமையின் லக்ஷணமென்று சொல்லப்படுகிறது. அவைகளில் ஒன்று

1 'நல்ல வழியும் கெட்டவழியும்' என்பது பழையவுரை.

அதிகமானுல் சிகித்ஸை விதிக்கப்படுகிறது. அதாவது, உஷ்ணத் தால் சீதமும் சீதத்தால் உஷ்ணமும் இவ்விரண்டுகளாலும் வாயுவும் முறையே விலகுவதாகச் சொல்லப்படுகின்றன. ஸத்துவம், ரஜஸ், தமஸ்என இந்த மூன்றுகுணங்களும் மனத்திலுண்டானவை. இம் மூன்று குணங்களும் ஸமமாயிருப்பது மரணவியாதியில்லாமையின் லக்ஷணமென்று சொல்லப்படுகிறது. மூன்று குணங்களில் ஒன்று அதிகமானுல் அதன்பரிகாரத்துக்கு விதிசொல்லப்படுகிறது: 'ஸந் தோஷத்தால் துக்கமும் துக்கத்தால் ஸந்தோஷமும் இவ்விரண்டுக ளாலும் அவிவேகமும் முறையே நிவ்ருத்திக்கின்றன' என்று விதி சொல்லப்படுகிறது. ஸுகத்திலிருக்கும் சிலமனிதர்கள், அறியாமை யால், அந்த ஸுகத்தைவிலக்கத் துக்கத்தைநினைக்க விரும்புகிறார்கள். துக்கத்திலிருக்கும் சிலமனிதர்கள், அதைவிலக்க ஸுகத்தை நினைக்க விரும்புகிறார்கள். நீர் துக்கமுள்ளவராகவுமில்லை; துக்கமில்லாதவ ராகவுமில்லை. ஸுகமுள்ளவராகவுமில்லை; ஸுகமில்லாதவராகவுமில்லை. துக்கத்தை நினைக்கத்தக்கவராகவுமில்லை; ஸுகத்தை நினைக்கத்தக்கவ ராகவுமில்லை. என்னசெய்கிறது? தெய்வம் பெரிதாயிருக்கிறது. அல்லது இவ்விதம் ஸந்தோஷப்படுவது உம்முடைய ஸ்வபாவமோ? பாண்டவர்களின் கண்ணெதிரே, வீட்டுக்கு விலக்காயிருந்தவளும் ஒரேவஸ்திரமுள்ளவளுமாயிருந்த திரௌபதி ஸபையிலிழுபட்ட தைக்கண்டும் அதை நினையாமலிருக்கிறீரே. பட்டணத்தைவிட்டு ஓடினதும் தோல்களைக் கட்டிக்கொண்டதும் பரிபவனத்தில் வஸித் ததும் நீர் நினைக்கவில்லையே. ஜடாஸுரனிடத்தில் பட்டபாட்டை யும் சித்திரஸேனனோடுநடந்த யுத்தத்தையும் ஸைந்தவனிடமிருந்து நேர்ந்தகஷ்டத்தையும் எப்படி மறந்துவிட்டீர்? திரும்பவும் அஜ்ஞாத வாஸத்தில் ராஜகுமாரியான திரௌபதியைக் கீசகன் காலால்உதைக் குமபடிநேர்ந்த கஷ்டத்தையும் எப்படிமறந்தீர்? ஓ! சத்துருவை அடக்குகிறவரே! துரோணபீஷ்மர்களுடன் முன்பு உமக்கு நேர்ந்த யுத்தம்போல இப்பொழுது மனமென்னும் ஒரு சத்துருவோடு யுத் தஞ்செய்யும்படி நேர்ந்திருக்கிறது. இந்தச்சண்டையில் பாணங்களா லும் நண்பர்களாலும் உறவினர்களாலும் ஆகவேண்டியதொன்று மில்லை. நீர் ஒருவராகவே செய்யவேண்டிவந்திருக்கிறது. இந்தச் சண்டையில் மனத்தைஜயிக்காமல் பிராணனைவிடுவீராஞல் வேறு சரீரமெடுத்தபிறகும் இந்தச்சண்டை செய்யவேண்டிவரும். பிரபுத் தனமில்லாதவன் பதிதன். அவன் எச்சிலுக்கொப்பானவன். அவன் அல்பன். பலமுள்ளவனும் அதிக அபத்தியஞ்செய்தால், அவன்

பலம் அவனைக் காப்பாற்றமாட்டாது. ஓ! பரதஸ்ரேஷ்டரே! ஆகையால், கண்ணிற்காணும் இந்த ஸ்தூலசரீரத்தைதவிட்டுக் காணக்கூடாத உருவமுடையமனத்திற்கும் புறத்திலுள்ளதான பதத்தை அடையவேண்டி. யமமுதலிய யோகானுஷ்டானத்தால் இப்பொழுதே மனத்தோடு யுத்தஞ்செய்யும். யுத்தத்தில் அந்தமனத்தை ஜயிக்காவிட்டால் என்னகதியை அடைவீர்? ஓ! மஹாராஜரே! மனத்தை ஜயித்தால் கிருதார்த்தராவீர். இவ்விதமான எண்ணத்தை உறுதியாகக்கொண்டு பிராணிகளின் ஆபத்துஸம்பத்தைத் தெரிந்து தகப்பன்பாட்டன் பரம்பரையில்வந்த ஒழுக்கத்திலிருந்துகொண்டு நியாயப்படி ராஜ்யத்தைப் பரிபாலனஞ்செய்யும். பாபியானதுரியோதனன் இனத்தாரோடுகூடத் தெய்வபலத்தாலும் திரௌபதியின் கூந்தல்முடி அதிர்ஷ்டத்தாலும் யுத்தத்திலடிக்கப்பட்டான். ஓ! பார்த்தரே! விதிப்படி தக்ஷிணையுள்ள அஸ்வமேதமென்ற யாகத்தைச்செய்யும். நாங்கள் உமக்குத் தாஸர்களாயிருக்கிறோம். வீரியம்பொருந்தியவாஸுதேவரும் உமக்குவேண்டியதைச்செய்வார்" என்று சொன்னான்.

பதினேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்தீரர் வைராக்கியமடைவதே சிறந்ததென்று பீமனுக்குச் சொன்னது.)

யுதிஷ்டிரர், "ஸந்தோஷமில்லாமை, தவறுதல், மதம், ஆசை, பொறுமையில்லாமை, பலம், அவிவேகம், அபிமானம், பரபரப்பு, இப்படிப்பட்ட பாவங்களால் பிடிக்கப்பட்டு, நீ ராஜ்யத்தில் போராசைகொண்டிருக்கிறாய். இவைகளிலிருந்துவிடுபட்டுப் போக்யவஸ்துக்களைவிட்டுப் பொறுமையடைந்து நல்லஸுகமாயிரு. இந்தப்பூமிமுழுமையும் ஒரே குரசுனை இருந்து ஆளுபவனுக்கும் வயிறுஒன்றுதானே. ராஜ்யத்தை நீ என்ன கொண்டாடுகிறாய்? ஓ! பரதஸ்ரேஷ்டனே! ஒரு நாளாலும் பலமாஸங்களாலும் பூர்த்திசெய்யமுடியாத இவ்வாசையை ஆயுள்முழுமையாலும் பூர்த்திசெய்யமுடியாது. அக்கினியானது (விறகுகளால்) எரிக்கப்பட்டால் மிகவும் ஜ்வாலையுள்ளதாகும்; எரிக்கப்படாவிட்டால் தானேகவே சாந்தமாகும். அதுபோல, எரியத்தொடங்கும் வயிற்றிலுள்ள அக்கினியை ஆகாரத்தைக்குறைத்து நீ சாந்தமாகச்செய். புத்தியில்லாதவன் தன்வயிற்றினிமித்தம் பலஹிம்ஸையைச் செய்கிறான். வயிற்றைஜயித்தால் அதனாலுண்டாகும் நற்

ஸ்ரீ மஹாபாரதம்.

கதியால் இந்தப்பூமியும் உனக்கு ஜயிக்கப்பட்டதாகும். மனிதர்களுக்குரிய பலவிஷயபோகங்களையும் ஐசுவரியத்தையும் நீ கொண்டாடுகிறாய். போகத்தைவிட்டவர்களும் தவத்தால் இளைத்தவர்களுமான பலர் மிகவும் உத்தமமானபதவியை அடைகிறார்கள். தன்னிடத்தில் இல்லாத திரவியத்தைஅடைவதும் அடைந்ததைப்பரிபாலிப்பதுமான ராஜ்யத்தின் யோகக்ஷேமமும் புண்ணியபாபங்களும் உன்னிடத்திலிருக்கின்றன. இப்பெரியசுமையிலிருந்து விடுபட்டுத் தியாகமென்னும் ஸந்யாஸத்தைப் பெற்றுக்கொள். புலியானது தன் ஒருவயிற்றுக்காகப் பலஹிம்ஸையைச்செய்கிறது. அந்த மிருகம்போன்ற புத்திகெட்ட சிலமனிதர்களும் அவ்வழியிற்செல்லுகிறார்கள். அரசராகவிருந்தும் ஸந்தோஷமில்லாமலிருப்பவர் பலர். உள்ளவிஷயஸுகங்களைத்தள்ளிவிட்டு ஸந்யாஸத்தில் புத்தியைவைத்துச் சந்தோஷிப்பவன் ஒருவனே. புத்திகளின் வேற்றுமை எப்படியிருக்கிறது பார்! இலையை ஆகாரமாகக்கொண்டவர்களும், கிடைத்ததைக் கல்லால் தேய்த்துப் புஜிப்பவர்களும், பல்லை உரலாகக்கொண்டவர்களும் தண்ணீரையும் காற்றையும் புஜிப்பவர்களுமான் ஸந்யாஸிகளால் இந்நரகம் ஜயிக்கப்பட்டது. மிச்சமின்றி இந்தப்பூமிமுழுமையும் ஆளுகிறவனும் தனும் கல்லையும் பொன்னையும் ஸமமாகப்பார்க்கும் ஸந்யாஸியுமாகிய இவ்விருவர்களில் அந்த ஸந்யாஸி பயன்பெற்றவனாவான். அரசன் அங்ஙனமாகான். எந்தக்காரியங்களிலும் முயற்சியில்லாதவனும் ஆசையும் அபிமானமும் அற்றவனுமாயிரு. இவ்வுலகிலும் மேலுலகிலும் அழிவற்றதும் துன்பமற்றதுமான பதத்தை அடை. போகத்தில் விருப்பமுள்ளவன் சோகப்படுகிறான். போகவிருப்பமற்றவனுக்குச் சோகமில்லை. ஆகையால், இப் போகவிருப்பமனத்தையும்விட்டு (ராஜ்யத்திலுள்ளவனும் தியாகிதானென்ற) பொய்வாதத்திலிருந்து விடுதலையடை. பித்ருயானம் தேவயானமென இவ்விருவழிகளும் பிரஸித்தமானவைகள். இவைகளில் யாகமுதலிய கர்மாவைச்செய்கிறவர்கள் பித்ருயானமென்ற வழியாலும் ஆசையைவிட்ட ஸந்யாஸிகள் தேவயானமென்றவழியாலும் செல்லுகிறார்கள். மஹரிஷிகள் தவத்தாலும், பிரம்மசரியத்தாலும், வேதாத்தியயனத்தாலும் காலங்கழித்துச் சரீரங்களைவிட்டு மிருத்தியுவின் பயமில்லாத இடத்தை அடைகிறார்கள். இவ்வுலகில் ஆசையும் அப்படியே கர்மாவும் போகத்திற்குரியபாபமென்று சொல்லப்படுகின்றன. இவ்விரண்டு பாபங்களிலிருந்தும் விடுபட்டவன் அந்தப் பெரியபதவியை அடைகிறான். த்வந்துவமற்றவரும் இப்பாவங்களிலிருந்து விடுபட்டவரும் மோக்ஷத்

ஸதக் கண்டவருமான ஜனகமஹாராஜரால் முன்பு ஒரு காலத்தில் சொல்லப்பட்ட 'என்னுடைய செல்வம் அளவற்றது; எனக்கு ஒன்றுமில்லை; மிதிலை எரிக்கப்பட்டால் எனக்கு ஒன்றும் எரிக்கப் படவில்லை' என்னும் இந்த வசனத்தைச் சொல்லுகிறார்களே. 1 ஞான மென்னும் உப்பரிகையிலேறினவன், சோகப்படும் ஜனங்களைக்கண்டு, தான் சோகமடையான். மந்தபுத்தியுள்ளவன் பூமியிலிருந்தாலும் மலையின் மேலிருந்தாலும் (உண்மையைக்) காணமாட்டான். தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்துகொள்ளுகிறவன்தான் கண் ணுள்ளவனும் புத்தியுள்ளவனுமாவான். அறியாதவைகளை அறிவிப் பதனாலும் ஸந்தேஹங்களைத் தெளிவிப்பதனாலும் புத்தியென்று சொல் லப்படுகிறது. த்யான நிஷ்டையுள்ளவர்களும் ஞானமடைந்தவர்க ளும் பிரம்மத்தன்மை பெற்றவர்களுமான பெரியோர்களுடைய உண் மையை எவன் அறிகிறானே அவன் பெருமையை அடைவான். எப் பொழுது ஆகாச முதலிய இந்தப் பூதங்களின் பலவித வேற்றுமை ஒரு வஸ்துவிலிருப்பது (அதாவது பிரபஞ்சம்யாவும் பிரளயத்தில் ஒரே வஸ்துவாயிருப்பது)என்றும் அதுபோலவே அவ்வொரு வஸ்து விலிருந்தே பலவித வேற்றுமையுண்டாவதென்றும் தெரிந்து அனுப விக்கிறானே அப்பொழுது 2 பிரம்மமாகிறான். அந்தப் புத்தியுள்ள ஜனங்கள் அந்தக்கதி அடைகிறார்கள். தவமில்லாதவர்களும் புத்தியில் லாதவர்களும் ஞானமில்லாதவர்களும் அதனை அடையமாட்டார்கள். எல்லாம் புத்தியில் நிலைபெற்றிருக்கின்றன" என்று சொன்னார்.

பதினேட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், ஜனகருக்கும் அவர் மனைவிக்கும் நடந்த ஸம்வாதத்தை எடுத்துக்கூறிக் கர்மமார்க்கத்தை அனுஷ்டிக்க வேண்டு மென்று தர்மபுத்திரருக்குச் சொன்னது.)

இப்படிச்சொல்லிப் பேசாமலிருந்த தர்மபுத்திரரை நோக்கி, அவரது வசனமென்னும் பாணத்தால் பீடிக்கப்பட்டுச் சோகத்தாலும்

---

1 'ஞானமென்னும் உப்பரிகையேறினவன் சோகப்படத்தகாதவர் களைக் குறித்துச் சோகப்படும் மனிதர்களை, மலையிலிருப்பவன் கீழி ருப்பவர்களைப் பார்ப்பதுபோலப் பார்க்கிறான். புத்திக்குறையுள்ளவன் இப்படிப் பார்க்கமாட்டான்' என்பது வேறுபாடம்.

2 'ப்ரம்மஸம்பத்யதே' என்பதுமூலம்; 'பிரம்மத்தைச் சேரு கிறான்' என்பது ஒருவகையாருடைய கொள்கை.

துக்கத்தாலும் வருந்தும் அர்ஜுனன், திரும்பவும் சொல்லத்தொடங்கினன். "ஓ! பாரதரே! விதேஹராஜாவான ஜனகருக்குத் தம்மனைவியோடு நடந்த ஸம்பாஷணமென்னும் இந்த இதிஹாஸத்தை ஜனங்கள் சொல்லுகிறார்கள். ராஜ்யத்தை நீக்கிப் பிச்சையேற்கத் துணிந்த விதேஹராஜரைப் பார்த்து அவர்மனைவி துக்கத்துடன் மறுமொழி சொன்னள். செல்வங்களையும் பலவகை ரத்தினங்களையும் குழந்தைகளையும் நண்பர்களையும் துறந்து, இப்படிப் பரிசுத்தமான வழியையும் விட்டு, ஜனகர் மயக்கமடைந்தார். ஆசையையும் அஸூயையையும் விட்டு ஒன்று மில்லாதவராய்ப் பிச்சைத்தொழிலை மேற்கொண்டு ஒரு பிடி அவல் அல்லது அரிசி எப்பொழுது வருமென்று எதிர்பார்த்திருக்கும் அந்த ஜனகரை அன்புள்ள அவருடைய மனைவி கண்டாள். மானமுள்ள அவர்மனைவி, எவ்விடத்திலும் பயத்தைவிட்டிருக்கும் தன்னுயகரைச் சமீபித்துக் கோபங்கொண்டு ஒருவருமில்லாவிடத்தில் யுக்தியுள்ள இவ்வார்த்தையைச் சொல்லத்தொடங்கினள்.

'பொருளுந் தானியமும் நிறைந்த சொந்தமான ராஜ்யத்தைத் தள்ளிவிட்டு ஓரிடத்துக்குந் தொழிலடைந்து ஒரு பிடி தான்யம் எப்பொழுது கிடைக்குமென்று என் எதிர்பார்க்கிறீர்? ஓ! அரசரே! உமதுகொள்கை வேறு உமது நடக்கை வேறுயிருக்கின்றன. பெரிய ராஜ்யத்தைத் தள்ளிவிட்டு அற்பத்தில் ஆசைப்படுகிறீர். ஓ! அரசரே! இப் பிடி அரிசியைக்கொண்டு அதிதிகளை ஆராதிக்கத்தகுமோ? அல்லது தேவர்களையும் ரிஷிகளையும் பிதிர்க்களையும் ஆராதிக்கக் கூடுமோ? உம்முடைய இந்த ப்ரமமானது வீண். ஓ! அரசரே! கர்மாவை விட்டபடியால் தேவர்களும் அதிதிகளும் பிதிர்க்களுமாகிய எல்லோராலும் விடப்பட்டவராகச் செல்லுகிறீர். மூன்றுவேதமறிந்தவர்களும் பெரியோர்களுமான பல்லாயிரம்பிராம்மணர்களை ரக்ஷிப்பவராயிருந்துவிட்டு அப்படிப்பட்ட நீர் இப்பொழுது பிறர்களிடமிருந்து(வயிறு வளர்ப்பதற்குப்)பொருளைவிரும்புகிறீரே. விளங்கிக்கொண்டிருக்கும் லக்ஷ்மியைத் தள்ளிவிட்டு நாய்போல இப்பொழுது காணப்படுகிறீர். இப்பொழுது உமதுதாய் பிள்ளையில்லாதவளாகிறாள். கௌஸல்யையும் உம்மால் பதியற்றவளாகிறாள். தர்மத்தையும்மற்றுமுள்ள பலபிரயோஜனத்தையும் விரும்பும் பலஅரசர்கள் தீனர்களாகி உமதுபிரியத்தை விரும்பிக்கொண்டு உம்மையேஆஸ்ரயித்து உபாஸிக்கிறார்களே; அவர்களையும் பயனற்றவர்களாகச்செய்துவிட்டு நீர் எந்த உலகத்தை அடையப்போகிறீர்? ஓ! வேந்தரே! பராதீனர்களாயிருக்கும் மனிதர்களுக்கு மோக்ஷம் ஸந்தோஷப்படக் கூடியது. ஆகை

யால், இவ்விதமான பாவஞ்செய்யும் உமக்கு மேலுலகமுமில்லை; கீழுலகமுமில்லை. தர்மந்தவறுத தாரங்களைத் தள்ளிவிட்டு ஜீவிக்க விரும்பும் உமக்கு நல்ல லோகம் எது? பலவித ஆடைகள், ஆபரணங்கள், மாலைகள், வாஸனைப்பொருள்கள் இவைகளை நீக்கிவிட்டு வேலையின்றி எதற்காகப் போகிறீர்? தண்ணீர்த்தொட்டிபோலவும் பழங்கள் நிறைந்த பெரிய மரம்போலவும் பிராணிகள் யாவற்றிற்கும் பெரிய பரிசுத்தமான போஷகராயிருந்த நீர் பிறரை யாசிக்கப் புறப்படுகிறீரே. வேலையைவிட்டு ஸந்யாஸியாயிருந்தால் யானையைக்கூட மாம்ஸந்தின்னும் பல மிருகங்களும் பல புழுக்களும் தின்றுவிடுகின்றன. ஒருபயனும்அற்ற உம்மைத் தின்னக் கேட்கவும் வேண்டுமா? ஒருவன் உமது இந்தக் கடத்தையுடைத்தாலும் மூன்றுகச்சேர்ந்த இந்தத்தண்டத்தையும் உமது காஷாயத்தையும் பிடுங்கினாலும் உமது மனம் அவன்மீது எங்ஙனமிருக்கும்? யாவற்றையும்விட்ட உமக்கு இப்பிடி அரிசியில் என்ன ஆசை வேண்டியிருக்கிறது? இந்த அரிசிக்குச் செய்யும்வேலையும் ராஜ்யமுழுவதற்குஞ் செய்யும்வேலையும் ஒன்றன்றே? அங்ஙனமிருக்கையில் இதனை எதற்காக நிச்சயித்தீர்? சரீரத்தைக் காப்பாற்ற விரும்பி இந்தப் பிடிஅரிசிக்குப் பாடுபட்டீராஞல் உமது எண்ணம் வீண். (இதற்கு ராஜ்யத்தை வகிப்பது நல்லது.) உமக்கு நான் யார்? எனக்கு நீர் யார்? என்னிடம் உமக்கு என்ன ஸ்நேஹம்? (இவைகளை அல்லவோ விடவேண்டும்; இல்லாவிட்டால்) உமது ஆசைக்குத் தக்கபடி உப்பரிகையும் படுக்கையும் வாகனமும் ஆடையும் ஆபரணமுமுள்ள ராஜ்யத்தை ஆளும். பொருளில் ஆசையைவிட்டவர்களும் பொருளற்றவர்களும் நண்பர்களைவிட்டவர்களும் ஒன்றுமில்லாதவர்களுமான துறவிகளாயிருந்தும் இன்பத்தை விரும்பிக் குடம் தடி முதலியவற்றைச் சேர்த்து வைத்திருப்பவர்களைக் கண்டு ஆசைப்படுகிற மனிதன் ராஜ்யத்தை எங்ஙனம் விரும்பாமலிருப்பான்? எப்பொழுதும் வாங்குகிறவனுக்கும் எப்பொழுதுங் கொடுக்கிறவனுக்குமுள்ள வேற்றுமையைத் தெரிந்துகொள்ளும். இவர்களுள் எவன் சிறந்தவன்? எப்பொழுதும் யாசிப்பவர்களும் டம்பமுள்ளவர்களுமான ஜனங்களிடத்தில் கொடுத்த தக்ஷிணை காட்டுத்தீயில் செய்த ஆகுதிபோலாகும். ஓ! வேந்தரே! அக்கினியானது விறகை எரிக்காமல் அடங்காததுபோல எப்பொழுதும் யாசிக்கும் தொழிலுள்ள பிராம்மணன் சாந்தமுள்ளவனுகமாட்டான். ஸாதுக்களுக்கு அன்னமிடும் மனிதனுடைய ஜீவனந்தான் இவ்வுலகில் நிலைபெற்றது. அன்னங் கொடுக்கும் அரசனில்லா

விட்டால் மோக்ஷத்தை விரும்பும் துறவிகள் எங்கிருக்கமுடியும்? இவ்வுலகத்தில் கிருஹஸ்தர்கள் அன்னத்தை ஆஸ்ரயித்து ஜீவிக்க வேண்டும். அவ்வன்னங்கொண்டே ஸந்யாஸிகளும் ஜீவிக்கவேண்டும். பிராணனுனது அன்னத்தால் நிலைபெறுகிறது. அன்னமளிப்பவன் பிராணனைக் கொடுத்தவனுகிறன். கிருஹஸ்தர்களிலிருந்து விடுபட்டு ஸந்யாஸியாயிருப்பவர்களும் அந்தக் கிருஹஸ்தர்களையே ஆஸ்ரயித்துச் சிலபெருமையையும் சில பிரதிஷ்டையையும் பிடித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். யாசிப்பதாலும் விடுவதாலும் அறியாமையாலும் ஸந்யாஸியாகமுடியாது. நேராகவே திரவியங்களை விடுகிறவன் எவனே அவனை முக்தனென்றும் ஸந்யாஸியென்றும் அறியும். ஆசையுள்ளவன்போல நடக்கிற ஆசையற்றவனும் பந்தத்திலிருந்து விடுபட்டவனும் சத்துருவினிடமும் மித்திரனிடமும் ஸமபுத்தியுள்ளவனுமாயிருப்பவன் முக்தனுவான். (சிலர் மடம், பிக்ஷை, புஸ்தகம் முதலிய) பலவகைப்பாசங்களால் கட்டப்பட்டவர்களும் வீணில் பல போகத்தைத் தேடுகிறவர்களுமாகி முண்டனஞ் செய்துகொண்டு காஷாயவுடையுள்ளவர்களாய்த் தமக்குத் தானம் கிடைக்கவேண்டி ஸந்யாஸம்பெறுகிறார்கள். வேதத்தையும் தம்பெயரையும் பிள்ளைகளையும் தள்ளிவிட்டுப் புத்தியில்லாதவர்கள் மூன்று தண்டத்தையும் காஷாயத்தையும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். தர்மவேஷம் பூண்ட மோட்டைகளுக்கு மனத்திலிருக்கும் [1]கஷாயம் நீங்காமலிருக்கையில் உடுக்கப்படும் காஷாயம் வயிறு வளர்க்கவேண்டியென்றே எனது அபிப்பிராயம். ஓ! மஹாராஜரே! ஜிதேந்திரியர்களாய்க் காஷாயம், தோல், மரவுரி இவைகளையுடுத்தவர்களும் அவதூதர்களும் ஜடை தரித்தவர்களும் சிகையற்றவர்களுமான ஸாதுக்களைப் பரிபாலனஞ் செய்துகொண்டு உலகங்களை ஜயிப்பீர். அக்னியாதானமென்னும் கர்மாவையும் குருவுக்காக நல்லதக்ஷிணையுள்ள பலயாகங்களையும் ஒவ்வொருநாளும் செய்பவன்எவனே அவனைக்காட்டிலும் தர்மத்திற் சிறந்தவன் யார்?' என்று சொன்னுள். இவ்வுலகில் ஜனகனென்னுமரசர் உண்மை அறிந்தவரென்று சொல்லப்படுகிறார். அவரும் இப்படிப்பட்ட அவிவேகம் அடைந்தவராஞர். ஆகையால், நீர் அவிவேகத்துக்குள்ளாகவேண்டாம். நாம் எப்பொழுதும் இவ்விதத் தர்மத்தைச்செய்பவர்களும் தானத்தையும் தவத்தையும் மேற்கொண்டவர்களும் ஆசையையும் சினத்தையும் விட்டவர்களும் நல்ல எண்ணமுள்ளவர்களும் மிகவும் அடக்கமுள்ளவர்களும் பிராணிகளைப் பாதுகாப்பதில்

---

1 காமக்குரோத முதலிய கல்மஷம்.

முயற்சியுள்ளவர்களும் பெரியோர்களையும் குருக்களையும் பூஜிப்பவர்களுமாயிருந்து யாகங்களைச் செய்து நல்ல உலகங்களை அடைவோம்; பிராம்மணர்களுக்கு அனுகூலர்களாயும் உண்மையுரைப்பவர்களாயும் தேவர்களுக்கும் அதிதிகளுக்கும் மற்றப்பிராணிகளுக்கும் விதிப்படி திருப்தி செய்கிறவர்களாயுமிருந்து இஷ்டமான பதத்தைப் பெறுவோம்" என்று சொன்னன்.

பத்தொன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் ஸந்யாஸமே சிறந்ததென்று அர்ஜுனனைப் பரீக்ஷித்துச் சொன்னது.)

தர்மபுத்திரர், "அப்பா! கர்மசாஸ்திரங்களையும் பிரம்மசாஸ்திரங்களையும் நானறிகிறேன்; கர்மத்தைச் செய்யென்றும் கர்மத்தை விடென்றும் சொல்லுகிற இரண்டுவிதமான வேதவசனத்தையும் அறிகிறேன். பலயுக்திகளால் விசாரித்தாலும் சாஸ்திரங்கள் ஒன்றுக்கொன்று பொருந்தாதவையாகக் காணப்படும். இப்படிப்பட்ட சாஸ்திரத்தில் எது ஸித்தாந்தமோ அதையும் முறைப்படி நானறிகிறேன். நீயோ சாஸ்திரத்தைமாத்திரம் படித்தவன்; பெரிய பிடிவாதமுள்ளவன். சாஸ்திரத்தின்கருத்தை உண்மையாக அறிந்துகொள்ள நீ எவ்விதத்திலும் வல்லவனல்லன். தர்மத்தைக் கண்டவனைனல் நீ இப்படிப் பேசமாட்டாய். உண்மையான சாஸ்திரத்தின் கருத்தைக் கண்டவனும் தர்மத்தின் நிச்சயம் தெரிந்தவனும் எவனே அவன் இப்படிப் பேசுவேமாட்டான். ஏ! அர்ஜுன! ஆகிலும், உடன் பிறந்த ஸ்நேஹத்தை முன்னிட்டு நியாயப்படி உன்னுபதேசிக்கப்பட்ட வசனத்தைக்கேட்டு நான் ஸந்தோஷப்படுகிறேன். பிரம்மா, வாஸுதேவர், மஹேசுவரர் இவர்களுக்குச் சமமாக எவருமில்லையென்பதுபோல யுத்தவீரர்களில் உனக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. இந்திரனிடத்திலும் வாயுவினிடத்திலும் ஜலர்த்தனரிடத்திலும் எந்த வன்மையிருக்கிறதோ அந்தவன்மை உன்னிடத்திலும் பீமனிடத்திலுமிருக்கிறது. ஏ! பாண்டவனே! அர்ஜுன! ஆச்சர்யமாக யுத்தஞ்செய்வதிலும் வெகுதூரத்திலிருந்து வீழ்த்துவதிலும் திவ்யமான அஸ்திரவித்தைகளிலும் உனக்குச்சரியான வேறுமனிதன் எவனிருக்கிறான்? யுத்தமுறையெல்லாவற்றிலும் பலவேலத்திறமைகளிலும் உன்னைப்போன்ற ஒருவன் மூவுலகிலுமில்லை. தர்மமும் தர்மத்தைச் சேர்ந்ததும் மிச்சமின்றி எனக்குத் தெரியும். உண்மையான தர்மத்

தின் ஸாமர்த்தியத்தைச் சொல்லுகிறவிஷயத்தில் உன்னால் என்னை வெல்லக் முடியாது. ஏ! அர்ஜுனா! எனக்குத் தோன்றுகிற விஷயத்தில் நீ ஸந்தேஹப்படவேண்டாம். நீ யுத்தசாஸ்திரத்தைக் கற்றவனே தவிரப் பெரியோர்களை உபாஸித்தவன் அல்லன். (தர்மத்தின்) சுருக்கத்தையும் விரிவையுமறிந்த அந்தப்பெரியோர்களின் நிச்சயத்தை நீ அறிந்தவனல்லன். அப்பா! தவம், தியாகம், அவிதி யென இம்மூன்றும் புத்திமான்களால் நிச்சயிக்கப்பட்டவை. இவைகளில் ஒன்றைக்காட்டிலும் மற்றொன்று சிறந்ததென்பது எங்களபிப் பிராயம். செல்வத்துக்கு மேற்பட்டதில்லையென்று நீ நினைக்கிறாய். ஏ! பார்த்தனே! இந்தச்செல்வமானது சிறந்ததன்றென்று உனக்கு அறிவிக்கிறேன். உலகத்தில் தவத்தையும் வேதாத்தியயனத்தை யும் இயற்கையாகச் செய்யும் பலஸாதுஜனங்கள் காணப்படுகிறார்கள். அவ்விதம் தவஞ்செய்யும் ஜனங்களுக்கு அழிவற்றதான உலகம் ஸித்திக்கிறது. அருணரென்றும் கேதுக்களென்றும் சிலரிஷிகள் மீசையுண்டாகாத பருவத்தில் தைரியத்துடன் காடுசென்று வேதாத் தியயனஞ்செய்து திவ்யலோகம் அடைந்திருக்கிறார்கள். தவத்தின் பெருமை இப்படியிருக்கிறது. விஷயங்களைத் தள்ளிவிட்டு அஞ் ஞானத்தாலுண்டான இருளை விலக்கிக்கொண்டு சில ஆர்யர்கள் தேவயானமென்னும் உத்தமமார்க்கத்தால் ஸந்யாஸிகளுக்குரிய சாச்வதமான லோகங்களை அடைந்திருக்கிறார்கள். (தியாகத்தின் பெருமை இவ்விதமிருக்கிறது.) பித்ருயான மென்னும் தக்ஷிண வழியிற்சென்று சந்திரலோகம் போகிறவர்கள் கர்மத்திலிருக்கிறவர் கள்தாம். அவர்கள்தாம் ஸ்மசானம் செல்லுகிறார்கள். மோக்ஷத்தை அடைகிறவர்கள் எதை அனுபவிக்கிறார்களோ வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத அந்தப் பிரம்மபதந்தான் கீழ்ச்சொன்ன அவிதியென்னும் மூன்றுவதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதம் உத்தமபதத்திற்குக் காரணமாயிருப்பதால் தியாகமானது ஸ்தானங் களில் முக்கியமென்பது என் அபிப்பிராயம். அஃது உன்னைப் போன்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கு மிகக்கடினமானது. ஸார ஸாரங்களைக் காணவிரும்பிய கவிகள், 'இங்கு இருக்குமோ, இங்கு இருக்குமோ' என்று பல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து இவ்வித மான தீர்மானத்தை அடைந்திருக்கிறார்கள். இதனுண்மைதெரியாத ஜனங்கள் வேதங்களையும் சாஸ்திரங்களையும் உபநிஷத்துக்களையும் தள்ளிவிட்டு வாழைமரத்தைத்பிளந்து ஸாரத்தைக்காணுததுபோலக் கண்டுகொள்ளவில்லை. அவ்வித ஜனங்கள் ஏகாந்தமாயிருப்பதென் னும் தியாகமார்க்கத்தைத் தள்ளிவிட்டுப் பஞ்சபூதத்தாலுண்டான

இச்சரீரத்திலிருக்கும் ஆத்மாவைப் பல அடையாளங்களால் ஆசை த்வேஷங்களோடு கூடினதாகச் சொல்லுகிறார்கள். அஃது அவ்விதமன்று. கண்முதலிய இந்திரியங்களுக்குப் புலப்படாததும் வாக்கால் சொல்லத்தகாததுமான ஆத்மாவானது கர்மத்துக்குக் காரணமான அஜ்ஞானத்தை முன்னிட்டுச் சரீரங்களில் சுற்றிவருகிறது. (மனிதன்) ஆசையை அடக்கி இந்தக் கர்மப்பிரவாஹத்தைத் தள்ளிவிட்டு அகங்காரமற்றவனாகி மோக்ஷமார்க்கத்தில் சென்று ஸுகமுள்ளவனாயிருக்கவேண்டும். ஏ! அர்ஜுன! ஸாதுக்களால் அனுஷ்டிக்கப்பட்டதும் ஸூக்ஷ்மமாயறியத்தக்கதுமான இந்த மோக்ஷவழி இருக்கும்போது பலதுன்பங்கள் நிறைந்தபொருளை நீ எங்ஙனம் கொண்டாடுகிறாய்? ஓ! பாரத! கர்மசாஸ்திரம் கற்றவர்களும் எப்பொழுதும் தானம் யாகம்முதலிய கர்மங்களில் ஆசையுள்ளவர்களுமான ஜனங்களும் இப்படிப் பொருள் துன்பமுள்ளதென்றும் மோக்ஷவழி உயர்ந்ததென்றும் பார்க்கிறார்கள். யுக்திதெரிந்த பண்டிதர்களும் உறுதியான பூர்வகர்மத்தின் தோஷத்தால் மோக்ஷமில்லையென்றே சொல்லிக்கொண்டு மூடர்களாயிருக்கிறார்கள். அவர்களை நல்வழிக்குத் திருப்புவது மிக்க கடினம். பல சாஸ்திரங்களைக் கற்றுப் பலவிதமாகப் பேசுஞ்சிலர், ஜனக்கூட்டத்தில் பொய்சொல்லுகிறவர்களும் பிறரை அவமதிக்கிறவர்களுமாகி இந்தப் பூமியில் ஸஞ்சரிக்கிறார்கள். ஏ! பார்த்தா! எந்த விஷயங்களை நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளவில்லையோ அவைகளை மற்றவன் எங்ஙனம் தெரிந்துகொள்ளத்தக்கவன்? சாஸ்திரங்கற்ற பெரிய பண்டிதர்களும் இவ்விதம் நன்றாகத் தெரிந்துகொள்ளாதவர்கள்தாம். ஏ!. கௌந்தேய! தர்மந்தெரிந்தவன் தவத்தால் பெரிய வைராக்கியமடைகிறான்; அதன்மூலமான ஞானத்தால் பிரம்மத்தை அடைகிறான்; தியாகத்தால் எப்பொழுதும் ஸுகத்தை அடைகிறான்" என்று சொன்னார்.

இருபதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தேவஸ்தானர் தர்மபுத்திரைப்பார்த்து யாகஞ் செய்யும்படி சொல்லியது.)

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், பெரிய தவமுள்ளவரும் பேசுந்திறமையுள்ளவருமான தேவஸ்தானரென்பவர், தர்மபுத்திரைப்பார்த்து, மிகவும் யுக்தியுள்ள வாக்கியத்தைச் சொல்லத்தொடங்கினர். "செல்வத்திலும் பெரியது வேறில்லையென்று அர்ஜுனன்

சொன்ன விஷயத்தில் உமக்குக் கொஞ்சம் தெரிவிக்கிறேன். கவனித்து முழுமனத்துடன் கேளும். ஓ! அஜாதசத்துருவே! ராஜதர்மப்படி இந்தப் பூமிமுழுதும் உம்மால் ஜயிக்கப்பட்டது. இப்படி ஜயிக்கப்பட்ட பூமியை நீர் விஷ்ணுகவிடுவது நியாயமில்லை. பிரம்மத்தை அடையப் பிரம்மசரியம் முதலிய நான்கு ஆஸ்ரமங்களும் நான்குபடியுள்ள ஏணியாய் ஏற்பட்டிருக்கின்றன. ஓ! அரசரே! அந்த நான்கு படியையும் முறையே விதிப்படி ஜயிக்கவேண்டும். ஏ! பார்த்தரே! ஆகையால், அதிக தக்ஷிணையுள்ள பெரிய யாகங்களைச் செய்யும். (நான்குபடிகளிலுள்ளவர்கள்) வேதமோதுதலையே யாகமாகக்கொண்ட பிரம்மசாரிகளும் சித்தசுத்திக்குத்தக்க நல்ல கர்மங்களைச்செய்யும் கிருஹஸ்தர்களும் காடுசென்று தவத்திலிருக்கும் வானப்ரஸ்தர்களும் பிரம்மஜ்ஞானத்தையே யாகமாகக்கொண்ட ஸந்யாஸிகளும் என்று தெரிந்துகொள்ளும். ஓ! குந்திபுத்ரரே! 'ஆசைப்பட்டுப் பொருளைச் சம்பாதித்துக் கர்மத்தைச் செய்வதைக்காட்டிலும் ஆசையை விடுவதுதான் பெரிது' என்று வானப்ரஸ்தப் பிராம்மணர்கள் சொல்லுவதாய்க் கேள்விப்படுகிறோம். க்ஷத்ரியனாயிருப்பவன் அந்தக் கர்மாவைச் செய்ய மேற்கொள்வானானால் மிகவும் தோஷமுள்ளவனாவான். கற்றோர்கள் கர்ம சாஸ்திரத்தின் விதிப்படி, தானியங்களை யெல்லாம் ஒன்றுசேர்த்துக்கொள்ளுகிறார்கள். மனத்தில் கெட்ட ஆசைகொண்டு யோக்கியம் அயோக்கியம் இவைகளின் பகுத்தறிவற்றவர்கள் தம் சரீரம் பொருள் முதலியவற்றை யோக்கியமான யாகாதி கர்மத்திற்கு ஈடுசெய்யாமல் அயோக்கிய விஷயத்திற்கு உபயோகிக்கிறார்கள். அவர்கள் தமக்கு நேரும் இவ்விதமான பெரிய தோஷத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. அவர்களுக்குச் சித்தசுத்தி உண்டாவது கஷ்டம். பிரம்மதேவர் யாகத்திற்காகப் பொருள்களை ஸ்ருஷ்டித்தார்; அவைகளைப் பாதுகாக்கும் மனிதனையும் யாகஞ்செய்யக்கருதியே நியமித்தார். ஆகையால், பொருள்களையெல்லாம் யாகத்திலேயே உபயோகப்படுத்தவேண்டும். யாகஞ்செய்தால் உடனே வேண்டிய ஸித்திபெறலாம். அதிக தேஜஸுள்ள இந்திரன் ரத்தினங்களைத் தக்ஷிணையாகக்கொண்டு பல யாகங்களைச் செய்து ஸகல தேவர்கட்கும் மேலான இந்திர பதவியை அடைந்து விளங்குகிறான். ஆகையால், பொருள்களை யாகத்தில் உபயோகிக்கவேண்டும். தோலாடையுள்ளவரும் தேவர்களுக்கும் தேவரும் மஹாத்மாவுமான மஹாதேவர், ஸர்வமேதமென்னும் யாகத்தில் தம்மையே ஹோமஞ்செய்து இவ்வுலகையெல்லாம் தம் கீர்த்தியால் நிரம்பச்செய்து தேஜஸுள்ளவராய்ப் பிரகாசிக்கிறார். மருத்த

னென்னும் அரசன் தன் புண்ணியமிகுதியால் தேவராஜனை இந்திரனையும் ஜயித்தான். அவன் செய்த யாகத்தில் பாத்திரங்கள்யாவும் பொன்னுற் செய்யப்பட்டனவாகவே இருந்தன. லக்ஷ்மிதேவி நேரிலேயே யாகத்திற்குவந்தாள். ஹரிச்சந்திரனென்னும் வேந்தன் பல யாகங்களைச்செய்து பெரிய புண்ணியத்தை அடைந்து சோகமற்றுத்தான் மானிடப்பிறவியாயிருந்தும் தன்லம்பத்தால் தேவேந்திரனையும் ஜயித்தானென்று கேட்டதில்லையோ? ஆகையால், எல்லாப்பொருள்களையும் யாகத்தில் உபயோகிக்கவேண்டும்" என்றுசொன்னர்.

இருபத்தோராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தேவஸ்தானர் ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பது சிறந்ததென்று தர்மபுத்திரருக்குச் சொன்னது.)

தேவஸ்தானர், க்ஷத்ரியனுக்கு யாகம்முதலிய கர்மந்தான் நியாயமென்றவிஷயத்தில் ஒருஸமயம் இந்திரன்கேட்க, பிருஹஸ்பதி சொல்லிய இப்பழையஇதிஹாஸத்தையும் சொல்லத்தொடங்கினர்.

"ஸந்தோஷமென்பது பெரியஸுகமும் ஸ்வர்க்கத்துக்கு ஒப்பானதுமாம். ஸந்தோஷத்திற்குமேற் சிறந்தது ஒன்றுமில்லை. ஆமையானது தன்னுடைய அங்கங்களைச் சுருக்கிக்கொள்வதுபோலக் காமங்களை எல்லாவற்றிலுமிருந்தும் ஒருவன் எப்போது உள்ளடக்குகிறானோ அப்போது பிரகாசரூபமான ஆத்மா தன்னிலையிலிருந்தே உடனே தெளிவடையும். அப்பொழுது ஸந்தோஷம் நிலைபெறுகிறது. ஒருவன் எப்போது தான் பிறரிடமிருந்தும் பிறர் தன்னிடமிருந்தும் பயப்படவில்லையோ, எப்போது விருப்பு வெறுப்புக்களை ஜயிக்கிறானோ அப்போது ஆத்மாவைப் பார்க்கிறன். எப்போது கர்மத்தாலும் மனத்தாலும் வாக்கினாலும் எந்தப்பிராணிகளைப்பற்றியும் அபகாரமும் உபகாரமும்செய்யப் பிரியத்திக்கவில்லையோ அப்போது மனிதன் பிரம்மமாகிறன். ஏ! குந்திபுத்ரரே! இப்படிப் பிராணிகள் அந்த அந்த மாதிரிசெய்யப்படும் தமக்குரிய அந்தஅந்தத் தர்மங்களை அப்போது அப்போது தாமே அனுபவிக்கின்றன. ஆகையால், நீரும் உமக்குரியதர்மத்தைத் தெரிந்துகொள்ளும். சிலர் இன்சொற்சொல்லுதலைக் கொண்டாடுகிறார்கள். மற்றஜனங்கள் முயற்சியைக்கொண்டாடுகிறார்கள். இதிலொன்றைச் சிலர் கொண்டாடவில்லை. மற்றொன்றைச் சிலர் கொண்டாடவில்லை. சிலர் இவ்விரண்டையும் கொண்டாடுகிறார்கள். சிலர் யாகமுதலியகர்மத்தைக் கொண்டாடுகிறார்கள். வேறு

சிலர் ஸங்யாஸத்தைக் கொண்டாடுகிறார்கள். இவைகளில் ஒன்றைச் சிலரும் மற்றொன்றைச்சிலரும் கொண்டாடுகிறதில்லை. சிலர் இவ் விரண்டையும் முறையே கொண்டாடுகிறார்கள். கொடுப்பதைச்சிலரும் ஏற்பதைச் சிலரும் புகழுகிறார்கள். சிலர் எல்லாவற்றையும்விட்டு மௌனிகளாய்த் தியானஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். சிலர் கொன் றும் அறுத்தும் பிளந்தும் பிராணிகளைப்பாதுகாப்பதாகிய அரசாட்சி யைக் கொண்டாடுகிறார்கள். சிலர் ஒன்றுமில்லாவிடத்தில் தியானஞ் செய்கிறார்கள். இவைகளெல்லாம் நன்றுகக்கண்டறிந்த பண்டிதர்க ளின் நிச்சயமோ, பிராணிகளுக்குத் துரோஹஞ்செய்யாமல் செய்யப் படும் தர்மமே ஸாதுக்களுக்கு ஸம்மதமென்பதுதான். துரோகமில் லாமை, உண்மையுரைத்தல், கொடை, தயை, அடக்கம், தன்மனைவி யிடம் புத்திரோத்பாதனம், மென்மை, லஜ்ஜை, பொறுமை, ஆசை யில்லாமை ஆகிய இவை முக்கியமானதர்மமென்று ஸ்வாயம்புவமனு சொன்னர். ஓ! குந்திபுத்ரரே! ஆகையால், இதனை எல்லமுயற்சி யுடன் எதிர்பாரும். ராஜ்யத்திலிருக்கும் எந்தஅரசன் எப்பொழுதும் அடக்கமுள்ளவனும் விருப்புவெறுப்புக்களைச் சமமாகநினைப்பவனும் யாகஞ்செய்து மிஞ்சினதை உண்பவனும் சாஸ்திரத்தின் உண்மை யான கருத்தை அறிந்தவனும் ஸாதுக்களைரக்ஷிப்பதிலும் துஷ்டர் களைச் சிக்ஷிப்பதிலும் முயற்சியுள்ளவனும், நீதிதவறுமல் பிராணி களைத் தர்மவழியில் நிலைநிறுத்துகிறவனும், அப்படிபே கடைசியில் ராஜ்யத்தைப் புத்திரனிடம்வைத்துவிட்டுக் காடுசென்று வனத்தி லுண்டாகும் பொருள்களால் ஜீவிப்பவனும், தர்மத்தில் உறுதியுள்ள வனும், சோம்பலின்றித் தன் ஆச்ரமத்திற்குரிய கர்மங்களைச்செய் கிறவனுமாயிருக்கிறானே அந்தஅரசனுக்குத்தான் இவ்வுலகும் மேலு லகும் நன்குபயன்படும். மோக்ஷமென்பது பல இடையூறுள்ளதும் அடையமுடியாததுமென்பது எனதுகருத்து. கீழ்ச்சொன்ன தர்மத் தைச்செய்த பலஅரசர்கள் ஸத்யமும் தானமும்தவமுமுள்ளவர்களும் ஆசை கோபம் முதலிய தோஷமற்றவர்களும் பொறுமையுள்ளவர்க ளும் பிராணிகளை ரக்ஷிப்பவர்களும் பசுக்களுக்காகவும் பிராம்மணர் களுக்காகவும் போர்செய்கிறவர்களுமாயிருந்து மிகவும்மேலானகதியை அடைந்திருக்கிறார்கள். இப்படியே, வஸுக்களும் ருத்திரர்களும்ஆதித் தியர்களும் ஸாத்தியர்களும் பலராஜரிஷிகளும் இந்தத்தர்மத்தை அடைந்து பரிசுத்தமான தமது கர்மங்களால் தவறுமல் ஸ்வர்க்க லோகத்தை அடைந்திருக்கிறார்கள்" என்றுசொன்னர்.

இருபத்திரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் க்ஷத்திரியதர்மம் சிறந்ததென்றும் நடந்ததைப்பற்றி வ்யஸனிக்கவேண்டாமென்றும் தர்மபுத்திராருக்குக் கூறியது.)

இப்படியிருக்கும் ஸமயத்திலேயே, வெறுத்தமனத்தையுடைய வரும் தர்மம்தவறுதவரும் ஜ்யேஷ்டருமான தர்மபுத்ரரைநோக்கி, அர்ஜுனன், திரும்பவும் சொல்லத்தொடங்கினன். "ஓ! தர்மந் தெரிந்த புருஷச்ரேஷ்டரே! அரசர்களுக்குள்ள நீதிப்படி பகைவர் களைவென்று மிக்க அரிதான இந்தராஜ்யத்தைப் பெற்றபிறகும் நீர் ஏன் துயரப்படுகிறீர்? ஓ! மஹாராஜரே! அரசர்களுக்கு யுத்தத்தில் மூடிவடைவது சிறந்ததாகும். பலயாகங்களோடுகூடிய க்ஷத்திரியர் களுக்குரிய தர்மத்தை நினைத்துப்பாரும். ப்ராம்மணர்களுக்கு ஸந்யா ஸத்தால் மரணமடைவது தர்மமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. க்ஷத்திரியர்களுக்கோ யுத்தத்தில் மரணம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஒருபொழுதும் ஆயுதம்விட்டுப்பிரியாத க்ஷத்திரியதர்மமானது மிக்க பயங்கரமென்று சொல்லப்படுகிறது. பரதச்ரேஷ்டரே! க்ஷத்திரிய தர்மத்தைக் கைக்கொண்டவன் ப்ராம்மணனுயிருந்தாலும் அவன் ஆயு தத்தால் யுத்தத்தில் கொல்லப்படுவது நியாயமாயிருக்கிறது. க்ஷத் திரியஜாதியில் பிறப்பது உயர்ந்ததாகும். க்ஷத்திரியஜாதியானது வேதத்திலிருந்து உண்டானதாகும். ஸந்யாஸமும் யாகமும் தவ மும் பிறர்பொருளால் பிழைப்பதும் க்ஷத்திரியனுக்கு விதிக்கப்பட வில்லை. ஓ! பரதச்ரேஷ்டரே! அந்த க்ஷத்திரிய ஜாதியிற் பிறந்தவரும் தர்மங்களெல்லாந்தெரிந்தவரும் தர்மபுத்தியுள்ளவரும் ராஜாவும் ஸாமர்த்தியமுள்ளவரும் உலகத்தில் முன்பின்தெரிந்தவருமான நீர் இப்படிப்பட்ட தாபத்தாலுண்டான சோகத்தைத் தள்ளிவிட்டு ஸ்வ தர்மத்தில் கட்டுப்பட்டவராயிரும். க்ஷத்திரியனுடையமனம் விசேஷ மாக வஜ்ரத்துக்கு ஒப்பாயிருக்கவேண்டும். க்ஷத்திரியதர்மப்படி சத்துருக்களைஜயித்து இடையூறின்றி ராஜ்யத்தைப்பெற்றபிறகு, இந் திரியஜயமுள்ளவராயும் யாகதானங்களைச்செய்பவராயும் இரும். கச்ய பப்பிரஜாபதியின் பிள்ளையான இந்த்ரன், க்ஷத்திரியத்தொழிலைமேற் கொண்டு, கெட்டஇடையுள்ள எண்ணூற்றுப்பத்து ஞாதிகளைக்கொன் றான். வேந்தரே! அவனுடைய அந்தச்செய்கையானது பெருமையுள் ளதும் கொண்டாடத்தக்கதுமாயிற்று. அந்தக்காரணத்தால் அவன் தேவர்களுக்கு அரசனுமானனென்று நமக்குக்கேள்வி. மஹா

ராஜரே! மனிதர்களுக்கு இந்திராகியநீர் இந்திரனைப்போல யாதொரு கஷ்டமுமின்றி நெடுங்காலம் அதிகதக்ஷிணையுள்ள பலயாகங்களைச் செய்துகொண்டிருரும். க்ஷத்திரியஸ்ரேஷ்டரே! க்ஷத்திரியதர்மப்படி ஆயுதத்தால் சுத்திபெற்றுப் பரலோகத்தில் நற்கதிபெற்ற ஞாதிகளைக்குறித்து இவ்விதம் கொஞ்சமும் துக்கப்படவேண்டாம். ஓ! பரதஸ்ரேஷ்டரே! எதுநடந்ததோ அஃது அப்படியே நடக்கவேண்டுவதுதான். ஓ! ராஜஸ்ரேஷ்டரே! விதியைவெல்ல முடியாதன்றோ?" என்று சொன்னன்.

இருபத்துமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் செங்கோல் செலுத்துவதின் மேன்மையையும் ஸுத்யும்னராஜன் சரித்திரத்தையும் கூறியது.)

பாரதரே! இப்படி அர்ஜுனனுற் சொல்லப்பட்ட குந்தியின் குமாரரான தர்மபுத்திரர் யாதொன்றும் பேசவில்லை. உடனே, வ்யாஸர் சொல்லத்தொடங்கினர்.

"ஸௌம்யனான தர்மபுத்திரனே! அர்ஜுனன்சொன்னது உண்மையே. சாஸ்திரத்தில் கிருஹஸ்தாச்ரமமானது உயர்ந்ததர்மமென்று காணப்படுகிறது. தர்மந்தரிந்தவனே! சாஸ்திரத்தில் சொல்லிய விதிப்படி உன்னுடையதர்மத்தையே நீசெய். கிருஹஸ்தாச்ரமத்தை விட்டுக் காடுசெல்வது உனக்கு விதிக்கப்படவில்லை. தேவர்களும் பிதிருக்களும் அதிதிகளும் வேலைக்காரர்களும் எப்பொழுதும் கிருஹஸ்தனையடைந்து பிழைக்கிறார்கள். அரசனே! அவர்களைக்காப்பாற்று. பசுக்களும் பக்ஷிகளும் மற்றுமுள்ள பிராணிகளும் கிருஹஸ்தர்களாலேதான் ரக்ஷிக்கப்படுகின்றன. ஆகையால், கிருஹஸ்தாச்ரமத்திலிருப்பவன் சிறந்தவன். இந்த நான்குஆச்ரமங்களுள்ளும் அந்தக்கிருஹஸ்தாச்ரமம் ஒழுங்காக நடத்தமுடியாது. ஓ! பார்த்த! இந்திரியபலமில்லாதவர்களுக்கு அனுஷ்டிக்க அரிதான அவ்விதமான விதியை நீ (ஒழுங்காக) நடத்து. உனக்கு வேதங்களில் ஞானம் பூர்ணமாயிருக்கிறது. உன்னால் பெரியதவம் செய்யப்பட்டிருக்கிறது. (ஆகையால்) பிதிருபிதாமஹர் பரம்பரையாய்வரும் இந்த ராஜ்யத்தைப் பாரத்தை வஹிப்பதுபோல நீ வஹிக்கக்கடவாய். மஹாராஜனே! தவம், யஜ்ஞம், ஆத்மஞானம், பிக்ஷாடனம், இந்திரியஜயம், தியானம், கல்

வியில் மூபத்தி, பொருளில் திருப்தி, தனிமையாயிருப்பது, ஸந்தோஷம், தன் சக்திக்குத்தக்க தானம் இவ்விதமான தர்மங்களெல்லாம் பிராம்மணர்களுக்கு ஸித்தியைக் கொடுப்பனவாக விதிக்கப்பட்டவைகள். க்ஷத்திரியர்களுக்குரிய தர்மத்தை உனக்குத்தெரிந்திருந்தாலும் திரும்பவும் சொல்லுகிறேன். யாகமும் வித்தையும் முயற்சியும் பொருளில் திருப்தியில்லாமையும் செங்கோலும் தாக்ஷிண்யமின்மையும் பிராணிகளைப் பாதுகாப்பதும் வேதமனத்தையுமறிவதும் தவமும் நன்னடக்கையும் விசேஷமாகப் பொருள்சம்பாதிப்பதும் நல்ல பாத்திரத்தில் கொடுப்பதுமாகிய இந்த நல்லகர்மங்கள் அரசர்களுக்கு இவ்வுலகையும் மேலுலகையும் பயனுள்ளவையாகச் செய்கின்றன வென்று நாம் கேட்டிருக்கிறோம். ஓ! கௌந்தேய! செங்கோலென்னும் தண்டமானது இவைகளில் சிறந்ததென்று சொல்லப்படுகிறது. க்ஷத்திரியனிடத்தில் பலமும் பலத்தில் தண்டமும் எப்பொழுதும் நிலைத்திருக்கின்றன. இவ்விதக் காரியங்கள் தாம் க்ஷத்திரியர்களுக்கு ஸித்தியைக் கொடுக்கக்கூடியவை. ப்ருஹஸ்பதியானவர், 'யுத்தஞ் செய்யாத க்ஷத்திரியனையும் தேசஸஞ்சாரஞ்செய்யாத பிராம்மணனையும், பாம்பு எலிகளை விழுங்குவதுபோல, பூமியானது விழுங்குகிறது' என்று இந்தக் காதையைப் பாடினர். ஸுத்யும்னனென்னும் ராஜரிஷியும் பிரசேதஸின் புத்திரரான தக்ஷரைப்போல ஒழுங்காகச் செங்கோல் செலுத்தியதால் உயர்ந்த ஸித்தியைப் பெற்றனென்று கேள்வி" என்று சொன்னர்.

தர்மபுத்திரர், "ஓ! பகவானே! ஸுத்யும்னனென்னும் அரசன் எந்தக் கர்மத்தால் உத்தமஸித்திபெற்றனென்பதைக் கேட்க விரும்புகிறேன்" என்றுகூறினர். வ்யாஸர், "(தெரிந்தவர்கள்) இந்த விஷயத்திலும் இந்தப்பழைய இதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள். உக்ரமான தவமுள்ள சங்கனென்றும் லிகிதனென்றும் இரண்டு ஸஹோதரர்களிருந்தார்கள். அவர்களுக்குப் பாஹுமதியென்னும் நதிக்கரையில் பூக்களும் கனிகளும் எப்பொழுதும் நிறைந்த பல மரங்களால் சூழப்பட்டவையும் அழகானவையுமான இரண்டு ஆச்ரமங்கள் தனித்தனியே இருந்தன. அவ்விதம் இருக்கும்பொழுது, ஒரு காலத்தில் லிகிதர் சங்கருடைய ஆச்ரமத்துக்கு வந்தனர். அப்பொழுது சங்கரும் தற்செயலாக ஆச்ரமம்விட்டு வெளியிற்சென்றிருந்தார். ஸஹோதரரின் ஆச்ரமஞ்சென்ற அந்த லிகிதரும், அப்பொழுது உலாவிக்கொண்டு, அங்கு நன்றுப்பழுத்த சில பழங்களைப் பறித்தனர். அந்தப் பழங்களை எடுத்துச் சங்கையில்லாமல் அந்தப் பிராம்மணர் புஜிக்கத்தொடங்

கிஞர். அவர் பூஜித்துக்கொண்டிருக்கும் ஸமயத்திலேயே சங்கரும் ஆச்ரமம் வந்துசேர்ந்தார். பழங்களைத்தின்னும் தமது தம்பியான லிகிதரைப்பார்த்து, அவர், 'இப்பழங்கள் எங்கிருந்துகிடைத்தன? ஏன் தின்கிறாய்?' என்றுகேட்டனர். உடனே, அந்த லிகிதர், ஜ்யேஷ்டரான சங்கரின் அருகிற்சென்று நமஸ்கரித்து, 'இங்கிருந்துதான் இப்பழங்களை நான் எடுத்துக்கொண்டேன்' என்று வெடிக்கையாகச் சிரித்துக்கொண்டு சொன்னர். உடனே, சங்கர், கடுங்கோபங்கொண்டு, 'தானுகவே பழங்களை எடுத்தமையால் நீசெய்த இக்காரியம் திருட்டாகும். ஆகையால், அரசனிடம்போய், 'ஓ! ராஜச்ரேஷ்டனே! கொடாத பழத்தை எடுத்ததால் நான் திருடனுகிறேன். என்னைத் திருடனுக அறிந்துகொண்டு திருடனை எனக்குத் தக்க தண்டத்தைச் சீக்கிரம் விதித்து உனது நீதியைக் காப்பாற்று' என்று தெரிவித்துக்கொள்' என்று சொன்னர். இவ்விதம் சொல்லப்பட்ட லிகிதர், கடுமையான நியமமுள்ளவராகையால், தமயனர்சொற்படி ஸுத்யும்னனென்னும் அரசனிடம்சென்றார். ஸுத்யும்னனும் வாயில்காப்பவன் மூலமாக லிகிதர் வந்திருப்பதாகக்கேட்டு மந்திரியுடன் கால்நடையாக எதிர்கொண்டு வந்தான். அவ்வரசன், தர்மம் அறிந்தவர்களுள் உத்தமரான லிகிதரிடம் வந்து, 'ஓ! பகவானே! நீங்கள் எதற்காக வந்தீர்களோ அதைச் சொல்லவேண்டும். உடனே செய்கிறேன்' என்றுசொல்ல, உடனே அந்தப் பிரம்மரிஷியானவர் ஸுத்யும்னனை நோக்கி, 'நான் சொல்வதைக் கேட்டுச் செய்கிறேனென்று அங்கீகரித்தபடி செய்துவிடவேண்டும். ஓ! மஹாராஜனே! தமையனரால் கொடுக்கப்படாத பழங்களை நானுக எடுத்துத் தின்றுவிட்டேன். அந்தக் குற்றத்திற்காக என்னைத் தாமதமின்றித் தண்டிக்கவேண்டும்' என்றுசொன்னர். ஸுத்யும்னன், 'ஓ! பிராம்மணச்ரேஷ்டரே! தண்டம் விதிப்பது அரசனைச்சேர்ந்ததென்பது உமக்குப் பிரமாணமாக இருந்தால் அனுமதிகொடுப்பதும் அரசனைச்சேர்ந்ததாகும். ஆகையால், பெரிய விரதத்தையுடைய நீர் என்னால் அனுமதிகொடுக்கப்பட்டுக் குற்றமற்றவரானீர். ஆகையால், வேறு வேண்டியவைகளைக் கேட்டாலும் உமது இஷ்டம்போற் செய்கிறேன்' என்றுசொன்னன். மஹாத்மாவான அரசனால் இவ்விதம் பிரார்த்திக்கப்பட்டும், அந்தரிஷியானவர் தமக்குச் சிக்ஷையைக்காட்டிலும் வேறு எதையும் வேண்டவில்லை. பிறகு, அவ்வரசன் மஹாத்மாவான லிகிதரின் கையை அறுத்துவிட்டான். இப்படிச் சிக்ஷையடைந்த லிகிதர், தமையனரான சங்கரிடஞ்சென்று,'எனது குற்றத்திற்குச்

சிலேஷ்மபடைந்தேன். என்புத்திக்குறைவை நீங்கள் க்ஷமிக்கவேண்டும்' என்று வருத்தத்துடன் தெரிவித்தார்.

சங்கர், 'ஓ! தர்மந்தெரிந்தவனே! உன்னிடத்தில் எனக்குக் கோபமில்லை. நீ எனக்கு யாதொரு குற்றமுஞ்செய்யவில்லை. நமது குலம் மிகவும் பரிசுத்தமானதென்று இவ்வுலகில் பிரஸித்தமாயிருக்கிறது. அதில் பிறந்த நீ தர்மந்தவறினபடியால் அந்தக்குற்றத்திற்காக உனக்குப் பிராயச்சித்தஞ்செய்யப்பட்டது. நீ சீக்கிரம் பாஹுதையென்னும் நதிக்குச்சென்று விதிப்படி தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பித்ருக்களுக்கும் தர்ப்பணஞ்செய். இனி அதர்மத்தில் மனத்தைச்செலுத்தாதே. அறிந்தவர்கள் ப்ரம்மஹத்தியும் ஸுராபானமும் திருட்டும் குருபத்நிகமனமும் இவைசெய்தவர்களுடன் சேர்க்கையுமாகிய இவைகளை மஹாபாதகங்களென்று சொல்லுகிறார்கள். இவைகளிலும் திருட்டுக்கு ஒப்பான பெரும்பாவம் வேறுஇல்லை. திருட்டு இவ்வுலகில் ப்ரம்மஹத்திக்கு ஒப்பாகும். பாதகம் யாவுக்கும் பெரும்பாலும் சரீரதண்டனை கூறப்படுகிறது. திருட்டுக்குச் சரீரதண்டத்தைத்தவிர வேறுதண்டனை விதிக்கப்படவில்லை. ப்ராம்மணனும் க்ஷத்ரியனும் வைசியனும் சூத்ரனுமாகியயாவரும் விரும்பிச் செய்தபாவத்திற்குச் சிக்ஷிக்கத்தக்கவர்களென்பதில் ஸந்தேஹமில்லை. பாவஞ்செய்தமனிதர்கள் அரசர்களால் தண்டனை பெற்றால் அந்தப்பாவம் விலகிப் புண்ணியமுள்ளஸாதுக்கள்போல ஸ்வர்க்கம் அடைகிறார்கள். நீ அரசனால் தண்டனையை அடைந்தபடியால் நமது குலம் உயர்ந்ததாயிற்று' என்றுசொன்னர். சங்கருடைய அந்தவார்த்தையைக்கேட்டு லிகிதரும் பரிசுத்தமான அந்தநதிக்குச்சென்று ஸ்நானஞ்செய்து தர்ப்பணஞ்செய்யத்தொடங்கினர். உடனே, தாமரைப் புஷ்பங்கள்போல இருகரங்களும் அவருக்குஉண்டாயின. அதுகண்டு ஆச்சரியமடைந்த லிகிதர் அக்கைகளை ஜ்யேஷ்டரான சங்கருக்குக் காண்பித்தார். உடனே, சங்கர், 'இது தபோமஹிமையால் என்னால் செய்யப்பட்டது; இதில் உனக்குச் சந்தேகம்வேண்டாம். அதிருஷ்டம் இவ்விதமிருக்கிறது' என்றுசொன்னர். உடனே, லிகிதர், 'ஓ! பெரியதேஜஸுள்ள ப்ராம்மணஶ்ரேஷ்டரே! உமது தவத்துக்கு இப்படிப்பட்ட மஹிமையிருக்குமானால் என்னை முன்னமே என் பரிசுத்தனைச் செய்திருக்கக்கூடாது?' என்றுகேட்டார். சங்கர், 'இப்படி என்னால் செய்திருக்கமுடியுமானாலும் நான் உனக்குத் தண்டனை விதிக்கும் அதிகாரமுள்ளவனல்லேன். அவ்வாசனும் பரிசுத்தனென். நீயும் உன்முன்னோர்களுடன் பரிசுத்தனாய்' என்றுசொன்னர்.

ஓ! பாண்டவஸ்ரேஷ்ட! உத்தமனை ஸுத்யும்னனென்னும் அந்த அரசன் அந்தத்தண்டவிதி செலுத்தியதனல் பிரசேதஸின் புத்ராகிய தக்ஷிணைப்போல உத்தமமான ஸித்திபைப்பெற்றான். அரசர்களுக்குப் பிராணிகளைத் தியவழியிற் செல்லாமல்பாதுகாப்பது பெரியதர்மமாகும். ஓ! மஹாராஜனே! சோகத்தில் மனத்தைச் செலுத்தவேண்டாம். ஓ! தர்மந்தெரிந்தவர்களிற் சிறந்தவனே! தம்பியாகிய இந்த அர்ஜுனன்சொல்லும் ஹிதவசனத்தைக்கேள். க்ஷத்திரியர்களுக்குச் செங்கோல்செலுத்துவது தர்மமேயொழிய முண்டனஞ் செய்துகொள்வது தர்ம்மன்று" என்று சொன்னர்.

இருபத்துநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் ராஜநீதிமுறையையும் ஹயக்ரீவராஜன் சரித்திரத்தையும் கூறியது.)

வ்யாஸ மஹரிஷியானவர், அஜாதசத்துருவான தர்மபுத்திரரைப்பார்த்து, நல்ல அர்த்தமுள்ள இந்தவசனத்தைத் திரும்பவும் சொல்லத் தொடங்கினர். "ஓ! தர்மபுத்திரமஹாராஜனே! பரதஸ்ரேஷ்டனே! அப்பா! மனத்தை அடக்கிக்கொண்டு காட்டில் வஸிக்கும்போது தம்பிகளுக்கு என்னமேனுதங்களிருந்தனவோ அவைகளை மஹாரதர்களான இவர்களடையட்டும். பார்த்த! ந்குஷன்குமாரனை யயாதிபோல இந்தப்பூமியையாளு. நரஸ்ரேஷ்டனே! தம்பிகள் தவமுடையவர்களாகக் காட்டில் மிகத் துன்பப்பட்டிருந்தார்கள். அந்தத்துன்பத்தின் முடிவுக்காலமான இந்தஸமயத்தில் அவர்கள் ஸுகங்களை அனுபவிக்கட்டும். ஓ! பாரத! மனிதர்களுக்குத் தலைவனே! தம்பிகளுடன் தர்மார்த்த காமங்களை அனுபவித்தபின் நீ புறப்படலாம். ஓ! கௌந்தேய! தேவர்களும் பிதிருக்களும் அதிதிகளுமாகிய இவர்களின்கடன்களைத் தீர்த்துவிட்ட பிறகு, நீ ஸ்வர்க்கத்தை அடையலாம். மஹாராஜனே! குருநந்தன! அசுவமேதம் ஸர்வமேதம் என்னும் யாகங்களைச் செய்தபிறகு, உயர்ந்த கதிபெறுவாய். ஓ! பாண்டவனே! தம்பிகளுக்கும் விசேஷதக்ஷிணையுள்ள யாகங்களைச்செய்வித்து உலகில் ஒப்பில்லாத கீர்த்திபெற்றபிறகு (இஷ்டம் போலப்) போகலாம். ஓ! குருஸ்ரேஷ்ட! புருஷப்புலியே! உனது

வசனத்தின்கருத்தை நானறிகிறேன். அரசனே! ஆகிலும், எவ்விதம்செய்தால் தருமவழிவிட்டு நழுவாமலிருப்பாயோ அவ்விதம் சொல்லுகிறேன்; கேள். யுதிஷ்டிரனே! நரேஸ்வரனே! யுத்தஞ் செய்து ஜயமடைந்து ராஜ்யம் பெற்றவனுக்குரிய தருமத்தை ஒழுங்கானதருமந்தரிந்தவர்கள் (இங்ஙனம்) உறுதிப்படுத்துகிறார்கள். பிரத்தியக்ஷம், அனுமானம், உபமானம், ஆகமம், அர்த்தாபத்தி, ஐதிஹ்யம், ஸம்தேஹம், நிச்சயம், ஆகாரம், இங்கிதம், நடை, சேஷ்டை, பிரதிஜ்ஞை, ஹேது, திருஷ்டாந்தம், உபநயம், உக்தி, நிகமனம், இவைகளின் விஷயம், இவற்றின் பயன் ஆகிய இவைகள் பல பிரயோஜனங்களை ஸாதிக்கத்தக்க ஸாதனங்களாகக் கூறப்படுகின்றன: இவைகளில், பிரத்தியக்ஷமும் அனுமானமும் மற்றயாவுக்கும் காரணமென்று கூறப்படுகின்றன. பிரமாணமறிந்தவன்தான் தண்டவிதி செலுத்த வல்லவனுவான். பிரமாணமறியாமல் செலுத்தப்படும் தண்டம் அரசனைக் கொல்லும். சாஸ்திரத்தின் கருத்தைத் தெரிந்து அரசன் தேசகாலங்களுக்குத் தக்கபடி குற்றவாளிகளை க்ஷமிப்பானில் அவ்வரசனுக்குப் பாவமில்லை. ஆறிலொருபாகம் வரிபெற்றுக் கொண்டு, எந்த அரசன் ராஜ்யத்தை ரக்ஷிக்கவில்லையோ அவன் அந்தப் பிரஜைகளின் பாவத்தில் நாலிலொருபாகத்தை அடைகிறான். அரசன் தருமம் தவறுமல் நடக்கவேண்டிய முறையைச் சொல்லுகிறேன்; தெரிந்துகொள். தருமசாஸ்திரத்துக்கொத்தபடி தண்டனை செய்து கொண்டு யாதொரு பயமுமில்லாதவனும், காமத்தையும் கோபத்தையும் விலக்கிவிட்டுப் பிராணிகளிடம் தகப்பன்போல ஸமமான பார்வையுள்ளவனுமாயிருக்கவேண்டும். மிக்ககாந்தியுள்ளவனே! அரசன் நியாயமான ஒரு கார்யத்தைத் தொடங்கித் தெய்வவசத்தினால் அந்தக்கார்யம் முடிவுபெறுவிடினும் அவ்வரசன் அதில் தவறுதலுள்ளவனுகமாட்டான். தன்புத்திசக்தியாலும் வலிமையாலும் பகைவர்களை அடக்கவேண்டும். பாவமுள்ளவர்களுடன் ஸந்திசெய்வது நியாயமன்று. ராஜ்யத்தைத் தருமமாக நடத்தவேண்டும். சூரர்களையும் பெரியோர்களையும் வித்வான்களையும் கௌரவிக்கவேண்டும். யுதிஷ்டிரனே! பொருளுள்ளவர்களும் பசுக்களுள்ளவர்களுமான பிரபுக்களை விசேஷமாகப் பாதுகாக்கவேண்டும். விசேஷமாகச் சாஸ்திரம் கற்றவர்களை வியவகார விஷயத்திலும் தர்மகார்யங்களிலும் அதிகாரிகளாக நியமிக்கவேண்டும். உண்மையான வேதத்தின் கருத்தையறிந்தவனும் பூமியை ஆளுகிறவனுமாகிய அரசனே! நீதிசாஸ்திரத்திலும் தர்க்கசாஸ்திரத்திலும் விசேஷப் பயிற்சியுள்ளவர்களும் பிரமாணங்

களை நன்கு உணர்ந்தவர்களுமான வித்வான்களை அறிவுள்ளவன். ஆலோசனஸபையிலும் வியவகாரஸபையிலும் அதிகாரிகளாக நியமிக்கவேண்டும். தருமசாஸ்திரத்திலும் நீதிசாஸ்திரத்திலும் மிக்க தேர்ச்சியுள்ள புத்திமான்கள் செலுத்தும் தண்டநீதி இம்மூவுலகையும் ஜயிக்கும். அரசனே! வேதத்தின் உண்மையை அறிந்தவர்களை யாகங்கள் செய்யும்படி செய்யவேண்டும். வேதசாஸ்திரங்களை அறிந்தவர்கள் நல்லபுத்தியுள்ளவர்கள். தர்க்கசாஸ்திரத்திலும் வேதங்களிலும் தண்டநீதியிலும் கரைகண்ட பண்டிதர்களை எல்லாக்கார்யங்களிலும் நியமிக்கவேண்டும். அவர்கள் அறிவின்கரையை அடைந்தவர்கள். எவ்வளவு குணமுள்ளவனுனலும் ஒரே மனிதனை நம்புவது நியாயமன்று. பிராணிகளை ரக்ஷியாமலும் பூஜிக்கத்தக்கவர்களைப் பூஜியாமலும் அடக்கமில்லாமலுமிருப்பவனும் அகங்காரம் அஸூயைகளை உடையவனுமான அரசன் பாவத்தை அடைவதோடு கெட்டவனென்றும் சொல்லப்படுவான். ரக்ஷிக்கப்படாமல் எவர்கள் பஞ்சமுதலிய தெய்வக்குற்றத்தாலும் திருடர்களாலும் கஷ்டப்படுகிறார்களோ அவர்களுடைய கஷ்டமெல்லாம் அரசனைச்சேர்ந்த பாவமாகும். ஓ! யுதிஷ்டிர! நன்றாக ஆலோசித்து நீதிதவறாமல் மனுஷ்ய முயற்சியை எங்கும் உபயோகப்படுத்திவிட்டால் அரசனுக்குப் பாவமில்லை. முயற்சிகள் தெய்விகமாய் முடிவுபெறுவதுமுண்டு; பயனற்றனவாவதுமுண்டு. முயற்சியைச் செய்துவிட்டால் அரசனைப் பாவமணுகாது. ஓ! ராஜஸிம்மமே! பாண்டவனே! இதுவிஷயத்தில் சூரனும் குரூரமற்ற நடக்கையுள்ளவனும் ஸஹாயமின்றி யுத்தத்தில் பகைவர்களைக் கொன்று பின்பு தானும்முடிக்கப்பட்டவனுமான ஹயக்ரீவனென்னும் பழைய அரசனுடைய இந்தக்கதையைச் சொல்லுகிறேன்; கேள்.

ஹயக்ரீவன் மனிதர்களைப் பாதுகாப்பதிலும் சத்துருக்களை அடக்குவதிலும் தக்கமுயற்சிசெய்து இவ்வுலகில் புகழ்பெற்று யுத்தத்தால் தேவலோகம்சென்று ஸுகித்திருக்கிறான். அகங்காரம் விட்டவனும் பகைவர்களுக்குத் தன்பஞ்சிசெய்பவனும் மஹாத்மாவுமான ஹயக்ரீவன் ஆயுதங்களாலறுக்கப்பட்டும் திருடர்களால் அடிக்கப்பட்டும் தன்தர்மம்தவறாமல் யுத்தத்தில் முன்சென்று ஸித்திபெற்றுத் தேவலோகத்தில் ஸந்தோஷப்படுகிறான். அரசர்களுக்கு யுத்தமென்பது ஓர்யாகம். அதில், வில் யூபமும், நாண் அதிலுள்ள கயிறும், பாணம் [1] ஸ்ருக்கும், கத்தி ஸ்ருவமும், உதிரம் நெய்யும், தேர் வேதியும், கோபம் அக்னியும், நான்கு குதிரைகளும் நான்கு ரித்விக்குகளுமாயிருக்கின்றன. அரசர்களுள் சிங்கம்போன்ற பலசாலியான

1 ஸ்ருக் ஸ்ருவம் என்பன ஓமம் செய்ய எடுக்கும் அகப்பை.

ஹயக்ரீவன் யுத்தமென்னும் யாகத்தீயில் சத்துருக்களை ஹோமஞ் செய்து பிறகு முடிவில் தன்உயிரையும் ஹோமஞ்செய்து பாவமற்ற வனுகித் தேவலோகமடைந்து ஸந்தோஷமடைகிறான். நன்முகத் தெரிந்து நீதிதவறுமல் ராஜ்யத்தைரக்ஷித்து யாகங்களைச்செய்து உல கெல்லாம்பரவிய புகழ்பெற்று அகங்காரமற்ற ஹயக்ரீவன் தேவலோ கத்தில் களிப்புற்றிருக்கிறான். நல்லஉத்ஸாஹத்தை அடைந்தும் அபி மானத்தைவிட்டும் யாகம்முதலிய தெய்வகாரியத்தையும் மனிதர்களுக் குச் செய்யவேண்டியகாரியத்தையும் தண்டநீதியையும் பூமியையும் காப்பாற்றித் தானும் பலதர்மங்களைச்செய்து மஹாத்துமாவான ஹயக்ரீவராஜன் தேவலோகத்தில் ஸந்தோஷிக்கிறான். அறிந்தவ னும் கொடையாளியும் ஸ்ரத்தையுள்ளவனும் நன்றியறிந்தவனுமாக வேதங்களையோதிச் சாஸ்திரங்களையும் நன்முகக்கற்றுணர்ந்து கர்மாக்க ளைச்செய்து ராஜ்யத்தை நன்முகப்பரிபாலித்து நான்குவர்ணங்களை யும் தம்தம்தர்மத்தில் நிலைநிறுத்தி மானிடலோகத்தைவிட்டு, பூஜ்யர் களான வித்வான்களுக்குரிய நல்லுலகஞ்சென்றுஹயக்ரீவன் ஸந்தோ ஷிக்கிறான். பிரஜைகளைப் பாதுகாத்து யுத்தத்தில் ஜயமடைந்து 1 ஸோமரஸத்தைப்பானஞ்செய்து பிராம்மணஸ்ரேஷ்டர்களைத் திரு ப்தி அடைவித்து நீதிப்படி பிராமணனிடம் தண்டம்செலுத்தி யுத்தம் முடிவுபெற்றதும் ஹயக்ரீவன் தேவலோகத்தில் ஸந்தோஷிக்கிறான். ஸாதுக்களும் வித்வான்களுமான மனிதர்கள் அவனுடைய புகழ்மிக்க சிறந்த சரித்திரத்தை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். பரிசுத்த மான கீர்த்திபெற்ற மஹாத்துமாவான ஹயக்ரீவன் வீரர்களுக்குரிய உலகங்களை அடைந்து ஸ்வர்க்கத்தை ஜயித்து ஸித்தியை அடைந்தான்" என்றுசொன்னார்.

இருபத்தைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் தமக்குச் சோகம்அதிகரிக்கிறதென்றுசொல்ல, வ்யாஸர், காலத்தின்வலிமையையும் நீதியோடு செங்கோல்செலுத்தும் அரசன் ஸ்வர்க்கமடைவானென்பதையும் அவருக்குச் சொன்னது.)

குந்தியின்புத்ரரானயுதிஷ்டிரர், வ்யாஸரும் இவ்விதம் சொல்லிய தைக்கேட்டு, அர்ஜுனனும் கோபித்துக்கொண்டிருக்கையில், வ்யா ஸரைக்கேட்டுக்கொண்டு, "இப்பூலோகமென்னும்ராஜ்யமும் இதி

---

1 ஸோமயாகஞ்செய்து என்பது பொருள்.

ளுள்ள பலவிதபோகங்களும் இப்பொழுது என்மனத்திற்கு ஸந்தோ ஷத்தைக்கொடுக்கவில்லை. பதிகளையும் புத்ரர்களையும் இழந்து கதறு கிற ஸ்திரீகளின் அழுகைக்குரலைக்கேட்டு சோகமானது என்னைப் பிளக்கிறது. என்மனத்தால் சிந்தித்தும் அது நிவிர்த்தியை அடைய வில்லை" என்று மறுமொழிசொன்னர். இவ்விதம் சொல்லப்பட்ட வரும் வேதத்தின் கரைகண்டவரும் தர்மந்தெரிந்தவரும் நிர்ணயம் தெரிந்தவர்களுள் சிறந்தவரும் மஹாப்ராஜ்ஞருமான வியாஸர், தர்ம புத்திரரைக்குறித்துப் பிரதிவசனம் சொல்லத்தொடங்கினர்.

"ஸ்திரீகள், போனபுருஷனைக் கர்மத்தாலும் யாகத்தாலும் அடைகிறதில்லை. புருஷனைக்கொடுக்கவும் எவனுமில்லை. இது காலத் தின்முறைப்படி தெய்வத்தால் விதிக்கப்பட்டது. மனிதன் காலத் தால் எல்லாவற்றையும் அடைகிறான். புத்திசக்தியாலும் கல்வியாலும் மனிதன் அகாலத்தில் ஒரு [1] விசேஷத்தையும் அடையமுடியாது. மூடனுயிருப்பவனும் ஒருகாலத்தில் பலபொருள்களை அடைகிறான். மனிதனுக்கு எல்லாவற்றையுங்கொடுப்பது காலந்தான். பூமியும் மருந்துகளும் மந்திரங்களும் மற்றத்தொழில்களும் அகாலத்தில் பயன்படுகிறதில்லை. அவைகளை காலத்தால் வளர்ச்சியடைந்து நல்ல காலத்தில் பயனைத்தருகின்றன. காற்று வேகமாகவீசுவதும் காலத் திலேதான். மேகங்கள் மழைபெய்வதும் காலத்திலேதான். குளம்முதலியவைகளில் தாமரை நீலோத்பலங்கள் உண்டாவதும் காலத்திலேதான். காடுகளில் மரங்கள்செழிப்பதும் காலத்திலே தான். ராத்திரிகள் முழுமையே கறுத்தும் வெளுத்துமிருப்பதும் காலத் திலேதான். சந்திரன் பூர்ணமான மண்டலம்பெறுவதும் காலத்தி லேதான். அகாலத்தில் மரங்களில் பூவுங்கனியும் உண்டாகிறதில்லை. அகாலத்தில் ஆறுகள் வேகமாகப்பெருகுவதில்லை. அகாலத்தில் மலை யிலும் கிராமத்திலுமிருக்கும் பக்ஷிகளும் பாம்புகளும் மிருகங்களும் யானைகளும் மதமடைகிறதில்லை. அகாலத்தில் ஸ்திரீகளிடம் கர்ப்ப முண்டாகிறதில்லை. அகாலத்தில் குளிரும் வெயிலும் மழையும் வரு கிறதில்லை. அகாலத்தில் மனிதன் பிறப்பதும் இறப்பதுமில்லை. அகா லத்தில் குழந்தை பேசுகிறதில்லை. அகாலத்தில் யௌவனப்பருவத் தை அடைகிறதில்லை. அகாலத்தில் விதைக்கப்பட்டவிதை முளைக்கிற தில்லை. அகாலத்தில் ஸூர்யன் உதயத்தையும் அஸ்தமனத்தையும் அடைகிறதில்லை. அகாலத்தில் சந்திரனும் பெரிய அலைகள்சூழ்ந்த ஸமுத்திரமும் மிகுவதுமில்லை; குறைவதுமில்லை. ஓ! யுதிஷ்டிரா! இது

1 'புத்ரலாபமுதலியவை' என்பது பழையவுரை.

விஷயத்திலும் துக்கத்தால் கஷ்டப்பட்ட ஸைனஜித்தென்னும் அரசன்பாடின இப்பழைய இதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள். பொறுக்கமுடியாத இக்காலகதியானது எல்லாமனிதர்களையும் பிடிக்கிறது. எல்லா அரசர்களும் காலத்தால் முதிர்ச்சியடைந்துதான் மரிக்கிறார்கள். அரசனே! சிலர் சில மனிதர்களை அடிக்கிறார்களென்பதும் அப்படியே அவர்களைச் சிலர் அடிக்கிறார்களென்பதும் உலகத்தில் வழங்கும் வெறும் பேர். ஓ! அரசனே! அடிக்கிறவனுமில்லை; அடிபடுகிறவனுமில்லை. ஒருவன் அடிக்கிறானென்றெண்ணுகிறான். மற்றொருவன் அடிக்கவில்லையென்றெண்ணுகிறான். உண்மையோ பிராணிகளின் பிறப்பும் இறப்பும் காலத்தால் ஏற்படுகின்றன. பொருள் நஷ்டமானாலும் பிள்ளை பெண்டிர் தந்தை மரித்தாலும் அப்பொழுது கஷ்டமென்று தோன்றுகிற துக்கத்தை நன்றாக ஆலோசித்து விலக்கிக்கொள்ளவேண்டும். விவேகமற்று என் சோகப்படுகிறாய்? சோகப்படும் ஜனங்களைப்பார்த்து அவர்களை (ஸமாதானஞ் செய்யாமல்) என் நீயும் சேர்ந்து சோகத்தை அடைகிறாய்? ஒரு துக்கத்தால் மற்றொரு துக்கம் விளைகிறதையும், ஒரு பயத்திலிருந்து வேறு பயமுண்டாவதையும் (உன்னிடத்திலேயே) பார்த்துக்கொள். (ஸுகதுக்கம்) நமக்கு எப்படியோ அப்படியே மற்றவர்களுக்கும் ஸமம். ஆகையால், தனிமையாக, இந்த, 'நான் என்ற தன்னைப் பற்றிய அபிமானங்கூடாது. அபிமானித்தால் இந்தப் பூமி முழுவதும் நம்முடையதாகிறது' என்பதை அறிகிறவன் அவிவேகமடையமாட்டான். 1 சோகத்திற்கிடமாக ஆயிரமும் ஸந்தோஷத்திற்கிடமாக நூறும் ஒவ்வொரு தினமும் மூடனைப் பிடிக்குமேயொழியப் பண்டிதனிடமணுகா. இப்படிக் காலகதியால் இஷ்டங்கள் அனிஷ்டமாயும், அனிஷ்டங்கள் இஷ்டமாயும், துக்கம் ஸுகமாயும், ஸுகம் துக்கமாயும் பிராணிகளிடம் மாறிக்கொண்டு வருகின்றன. உண்மையில் துக்கமிருக்கிறதேயல்லாமல் ஸுகமில்லை. ஆகையால், அதுதான் அனுபவிக்கப்படுகிறது. ஆசையின் கொடுமையால் துக்கமுண்டாகிறது. துக்கம் முடிவடைந்தால் ஸுகம் தோன்றுகிறது; ஸுகத்திற்குப் பின் துக்கமும் துக்கத்திற்குப் பின் ஸுகமும் உண்டாகின்றன. நிலைமையான ஸுகத்தையும் நிலைமையான துக்கத்தையும் அடைகிறதில்லை. ஒரு ஸமயம் ஸுகமே துக்கமாகமுடியும். துக்கமே ஸுகமாகவுமுடியும். ஆகையால், அதிக துக்கமடைந்து நிலைமையான ஸுகத்தை விரும்புகிறவன் ஸுகத்தின் முடிவிலுண்டாகும் துக்கத்

1 இங்கு, ஆத்மஜ்ஞானத்தைப்பற்றியதென்று பழையஉரை கூறுகின்றது.

தையும் துக்கத்தின் முடிவிலுண்டாகும் ஸுகத்தையும் விடவேண்டும். சோகமும், தாபமும், அதிகத் துன்பத்தைத்தரும் ஆயாஸமும் எந்தக் காரணத்தால் உண்டாகின்றனவோ அந்தக் காரணம் சரீரத்தில் ஓர் அங்கமாயிருந்தாலும் அதைத் தள்ளவேண்டும். ஸுகமோ துக்கமோ பிரியமோ அப்பிரியமோ எது வந்தாலும் மனம் மாறுபடாமல் அனுபவிக்கவேண்டும். ஐயனே! பிள்ளை பெண்டிர்களுக்குச் சற்றேனும் பிரியத்தைச்செய்யும் எவன் எந்தக் காரணத்தால் எங்ஙனம் என்ன ஸம்பந்தமுடையவனென்று தெரிந்துகொள். ஓ! யுதிஷ்டிர! தர்மமும் ஸுகதுக்கமும் தெரிந்தவனும் உலகத்தில் முன் பின் அறிந்தவனும் மிக்க ஞானமுள்ளவனுமான ஸனஜித்தென்னும் அரசன், 'உலகத்தில் மிக்க அறிவற்றவர்களும் கல்வியில் கரைகண்டவர்களும் செழிப்படைந்து ஸுகிப்பார்கள். நடுத்தரத்திலுள்ள மனிதர்கள் தாம் கஷ்டப்படுகிறார்கள்' என்று சொன்னான். பிறர் துக்கத்தைக்கண்டு (அதை நிவிர்த்தி செய்யாமல்) தானும் துக்கப்படும் மனிதன் ஒரு காலத்திலும் ஸுகமுள்ளவனாகமாட்டான். துக்கத்துக்கு முடிவில்லையன்றே? ஒரு துக்கத்திலிருந்து மற்றொரு துக்கமுண்டாகும். உலகத்தில் ஸுகமும் துக்கமும் ஸம்பத்தும் ஆபத்தும் லாபமும் நஷ்டமும் இறப்பும் பிறப்புமாகிய யாவும் காலத்தால் வருகின்றன. ஆகையால், மோகத்தையும் ஸந்தோஷத்தையும் அடையக்கூடாது. அரசர்களுக்கு யுத்தத்தில் தீக்ஷைபெறுவதும் ராஜ்யத்தைப் பரிபாலிப்பதும் தண்டநீதியை நன்றாகச்செலுத்துவதும் யாகத்தில் தக்ஷிணைகொடுப்பதும் நல்ல தானஞ்செய்வதும் மிகப்பரிசுத்தமான தர்மமென்று தெரிந்துகொள்ளவேண்டும். நன்றாகத்தெரிந்துகொண்டு நீதிப்படி ராஜ்யத்தை ரக்ஷிப்பவனும் அகங்காரம்விட்டுயாகங்களைச்செய்பவனும் பிராணிகளையெல்லாம் தர்மக்கண்ணால் ஸமமாகப் பார்ப்பவனும் மஹாத்மாவுமான அரசன் தேஹத்தைவிட்டபின் தேவலோகத்தில் ஸந்தோஷிக்கிறான். யுத்தங்களில் வெற்றியடைந்து ராஜ்யங்களைப் பாதுகாத்து [1] ஸோமத்தைப்பானஞ்செய்து நீதிப்படி செங்கோல் செலுத்திப் பிராணிகளை வளர்க்குமரசன், ஆயுள் முடிந்தபின், தேவலோகமடைந்து ஸந்தோஷிக்கிறான். அரசன் யாகங்களைச்செய்து ராஜ்யத்தை ஜயித்து அதிலுள்ள பிரஜைகளையும் அவர்களிஷ்டங்களையும் ரக்ஷித்து வேதசாஸ்திரங்களை நன்குணர்ந்து நான்கு வர்ணத்தாரையும் தம்தம் தர்மத்தில் நிலைநிற்கச்செய்து ராஜ்யத்தை நன்குபாதுகாத்துப் பரிசுத்தியுள்ளவனாகித் தேவலோகத்தில் விளங்குகிறான். எந்த அரசன் ஸ்வர்க்கத்திலிருக்கும்போதும் அவனுடைய சரித்

1 ஸோமயாகஞ்செய்து என்பது கருத்து.

திரத்தை மந்திரிகளும் ராஜ்யத்திலுள்ளமனிதர்களும் கொண்டாடு கிறார்களோ அவ்வரசன் அரசர்களில் மிகச்சிறந்தவனுவான்'' என்று சொன்னர்.

---

1 அதிகபாடமான அத்யாயம்.

(தர்மபுத்திரர், பொருளானது யாகதானங்களுக்காகவே படைக்கப் பட்டதென்றும் போகத்துக்கு அன்றென்றும் அர்ஜுனனுக்குச் சொன்னது.)

இந்தஸமயத்திலேயே, மிக்கபுத்திமானை யுதிஷ்டிரர், அர்ஜுனனைநோக்கி நல்லநீதியுள்ளவாக்கியத்தைச் சொல்லத்தொடங்கினர். ''ஏ! பார்த்தனே! 'பொருளுக்கு மேற்பட்டது ஒன்றுமில்லை. பொருளில்லாதவனுக்கு ஸ்வர்க்கமும் ஸுகமும் பயனுமில்லை' என்று நீ நினைப்பது வீண். வேதங்களிலும் யஜ்ஞங்களிலும் ஸித்திபெற்றதாலும் தவம்செய்ததாலும் சாச்வதமான லோகமடைந்த பலஜனங்களும் ரிஷிகளும் காணப்படுகிறார்கள். ஏ! தனஞ்சய! பிரம்மசர்யாச்ரமம்பெற்றுத் தர்மத்தையெல்லாந் தெரிந்துகொண்டு ரிஷிகளின் ஸமயநெறியை ரக்ஷித்துவரும் ஜனங்களைத் தேவர்கள் பிராம்மணர்களாக அறிகிறார்கள். ஏ! அர்ஜுன! ரிஷிகளில்சிலர் வேதநிஷ்டையுள்ளவர்களென்றும் சிலர் ஞானநிஷ்டையுள்ளவர்களென்றும் சிலர் தர்மநிஷ்டையுள்ளவர்களென்றும் எப்பொழுதும் தெரிந்துகொள். ஏ! பாண்டவ! எவ்விதக்காரியங்களும் ஞானநிஷ்டையுள்ள ரிஷிகளிடங்கேட்டுத் தீர்மானிக்கத்தக்கவையென்று வைகானஸரென்னும் ரிஷிகளின் வசனத்தை நாம்கேட்டிருக்கிறோம். ஏ! தனஞ்சய! தானம் அத்தியயனம் யாகம் தாங்குவதற்குஅரிதானதண்டம் என்கிற வேதத்திற்சொல்லிய இக்காரியங்களைச்செய்து அஜர்களும் பிருச்னிகளும் ஸிகதர்களும் அருணர்களும் கேதுக்களுமாகியரிஷிகள் ஸ்வர்க்கலோகம் அடைந்தார்கள். கர்மநிஷ்டையுள்ளவர்கள் ஸூர்யனுக்குத் தக்ஷிணமானமார்க்கஞ்சென்று அடையும் இவ்வுலகங்களை நான் முந்தியே சொல்லியிருக்கிறேன். உத்தமயாகஞ்செய்த உபாஸகர்கள் அடையக்கூடியதும் என்றும்அழிவில்லாததுமான உலகத்திற்குச் செல்லும்வழி உத்தரமார்க்கமென்று சொல்லப்படும். ஏ! பார்த்த! தெரிந்தவர்கள் அவ்விரண்டிலும் உத்தரமார்க்கத்தைக் கொண்டாடுகிறார்கள். ஆனால், ஸந்தோஷமென்பதுதான் ஸ்வர்க்கத்திலுஞ்சிறந்ததும் ஒப்பற்றஸுகமுமாகும். ஸந்தோஷத்தைக்காட்டிலும் பெரிது

---

1 இதற்கு, கிருஷ்ணசார்யர் பதிப்பிலும் அத்யாயஎண் கொடுக்கப்படவில்லை.

ஒன்றுமில்லை. அந்தச்சந்தோஷமானது கோபத்தையும் ஆசையையும் விட்டமனிதனிடம் நிலைத்திருக்கும். இதுவிஷயத்திலும் யயாதியென்னும் அரசனுல் சொல்லப்பட்ட இக்காதையைச் சொல்லுகிறார்கள்:— 'மனிதன், ஆமை தன் அங்கங்களை அடக்குவதுபோல வெளியில் நீண்ட ஆசையாவற்றையும் எப்பொழுது உள்ளடக்குகிறானே, எப்பொழுது தான்பயமற்றவனுகவும் பிறர்பயத்திற்குக் காரணமாகாதவனுகவும் பகையும் நட்பும் விட்டவனுகவுமிருக்கிறானே அப்பொழுது பிரம்மரூபமாகிறன். எப்பொழுது மனிதன் எல்லாப்பிராணிகளிடத்திலும் மனம், வாக்கு, தொழில் இம்மூன்றலும் தீங்குசெய்யவில்லையோ அப்பொழுது அவன் பிரம்மரூபமாகிறன். அபிமானத்தையும் மோகத்தையும் பலவித ஆசைகளையும் விட்டு (உண்மையான) ஆன்மாவைக்கண்ட 1ஸாது மோக்ஷம்பெறுவான்.' ஏ! பார்த்த! இந்திரியங்களை அடக்கிக்கொண்டு நான்சொல்லுவதைக்கேள். சிலர் தர்மத்தையும், சிலர் சீலத்தையும், சிலர் பொருளையும் விரும்புகிறார்கள். ஒருவன் தர்மத்திற்குக்காரணமென்றுவது பொருளைவிரும்புவதைக்காட்டிலும் விரும்பாமையே மிகச்சிறந்தது. பொருளிலும் பொருளை மூலமாகக்கொண்ட தர்மத்திலும் பலதோஷமிருப்பதை நேரில்பார்க்கிறேன்; நீயும் பார்க்கத்தக்கவன்தான். பொருளாசையுள்ளவன் விலக்கக்கூடிய கர்மங்களை விலக்குவது மிகக்கடினம். பொருளில் ஆசைபற்றியவர்களுக்கு நற்காரியம் நடப்பது மிகவரிது. பிறருக்குத் துரோகஞ்செய்கிறவர்களுக்குப் பொருள்உண்டாகிறதென்று சொல்லுகிறார்கள். எக்காரணத்தாலுண்டானலும் பொருளென்பது பயத்தைத்தரும். நல்லஸ்வபாவங்கெட்டுச் சோகம் பயம் இவைகளை நினையாமல் அற்பப்பொருள்நிமித்தம் ஆசைகொண்டமனிதன், ப்ரூணஹத்திசெய்வதனுலுண்டாகும் பெருங்கொலைக்குற்றத்தையும் நினைக்கிறனில்லை; அடையமுடியாத பொருளை அடைந்து வேலைக்காரர்களுக்குக்கொடுப்பதைக்கூடத் திருட்டுப்போவதுபோல நினைத்துப் பயந்து மிகவும் மனவருத்தமடைவான். கூலிவாங்கும் வேலைக்காரர்களும் தோஷமுள்ளவர்களாகத் தோற்றுவார்கள். பொருளில்லாதவனை எவன் என்னசொல்லக்கூடும்? பொருளில்லாதவன்தான் எவ்விதத்தோஷத்திற்கும் இடமில்லாமல் ஸுகித்திருப்பான். பொருளென்பது தேவர்களின்ஸொத்தாகையால் அதனை அடைபவன் ஸுகமாயிருக்கமாட்டான். இதுவிஷயத்தில் முன்னேர்கள், 'பிரம்மதேவர் பொருள்களை யாகத்திற்காகப்படைத்தார்; அப்பொருளைக்காக்கும்

1 இங்கு, 'ஸாதோः' என்ற பாடங்கொள்ளப்பட்டது.

மனிதனையும் யாகத்திற்கே உண்டுபண்ணினர். ஆகையால், பொருள் யாவும் யாகத்திலேயே உபயோகிக்கத்தக்கன. பொருளைத் தன் இஷ்டத்திற்கு உபயோகிப்பது நீதியும் ஹிதமுமன்று' என்று யாகத்தை உறுதிப்படுத்திச்சொல்லும் யஜுர்வேதபியான பகவான் கூறின வேதத்திலுள்ள வசனத்தைச் சொல்லுகிறார்கள். தனமுள்ளவர்களிற் சிறந்த கௌந்தேய! பிரம்மதேவர் இப்பொருளைத் தம்தம்காரியத்தையும் யாகத்தையுமுத்தேசித்து மனிதர்களுக்குக் கொடுக்கிறரென்று தெரிந்துகொள். ஆகையால்தான், அப்பொருள் ஒருமனிதனுக்கும் சொந்தமில்லையென்று மனிதர்கள் அறிகிறார்கள்; ஆகையால், கிடைத்த பொருளை மனிதன் ஸ்ரத்தையுள்ளவனாகித் தானத்திலும் யாகத்திலும் உபயோகிக்கவேண்டும். பொருளைத் தானம்செய்வதன்றிப் புஜிப்பதும் அழிப்பதும் நீதியல்ல. யாகம் தானம் எனச் சிறந்தகாரியம் செய்யவிருக்கும்பொழுது பொருளைச்சேர்த்துவைப்பதும் பயனற்றது. எவர்கள் புத்திக்குறைவால் பொருளை ஒழுக்கம்விட்டவரிடம் கொடுக்கிறார்களோ அவர்கள் சரீரம்விட்டபின் பலநூற்றுண்டு மலத்தைத்புசிக்கிறார்கள். யோக்கியன் அயோக்கியன் என்கிற பகுத்தறிவில்லாமையால் அயோக்கியனிடம் தானமும் யோக்கியனிடம் தானமில்லாததும்பற்றித் தானம் விதிப்படி நடப்பதும் மிகவரிது. அடைந்தபொருள்களுக்கும் அயோக்கியனிடம்கொடுப்பதும் யோக்கியனிடம் கொடாமையுமென இவ்விரண்டு தோஷங்களும் உண்டென்று தெரிந்துகொள்" என்றுசொன்னர்.

இருபத்தாறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் பலவாறுபுலம்பிப் பிராயோபவேசஞ் செய்வேனென்றதும், வியாஸர் கர்மாவே செய்யத்தக்கதென்றதும்.)

யுதிஷ்டிரர், "குழந்தை அபிமன்யுவும் கொல்லப்பட்டு, திரௌபதியின் பிள்ளைகளும்இறந்து, திருஷ்டத்யும்னனும் விராடனும் த்ருபதனும் விருஷ்ணியனும் தர்மந்தெரிந்த திருஷ்டகேதுவும் மற்றும் பல தேசத்து வீரர்களான அரசர்களும் யுத்தத்தில் மாண்டுபோகும்படி நாதிகளைக்கொலைசெய்து, ராஜ்யத்தில் ஆசைகொண்டு, தன் குலத்தையேயழிக்கக்காரணனும் மிகக்கொடியவனுமாகிக்கஷ்டப்படும் என்னைச் சோகம்விடவில்லை. நான் எவ்வடிமீது புரண்டு விளையாடிக்கொண்டிருந்தேனோ அந்தப்பீஷ்மரை அந்த நானே ராஜ்யத்தில் பேராசைகொண்டு யுத்தத்தில் கொன்றேன். சிகண்டியைப் பார்க்கும்

போது வஜ்ரத்துக்கொப்பான அர்ஜுனன்பாணங்களால் என்னிமித் தம் அடிபட்டு மூர்ச்சையடையும் இந்தப்பீஷ்மரை எப்பொழுது கண் டேனே அப்பொழுது பிரகாசிக்கும் பாணங்களால் சூழப்பட்டகிழச் சிங்கம்போலிருக்கும் மஹாத்மாவும் பாட்டனுருமான பீஷ்மரைப் பார்த்ததும் என்மனம் நடுக்கமுற்றது. எதிராளிகளைக்கொல்லும் சக்திபெற்ற பாட்டனரான பீஷ்மர் மலைபோல ரதத்திலிருந்துவிழுந்த பொழுதே எனக்குப் பாவம்வந்தது. அம்பும்வில்லும் கையிலெடுத் துப் பரசுராமரோடும் பலநாள் போர்புரிந்தவரும் காசியில் கன்னி கையைவேண்டிக் கூடின பலஅரசர்களை ஒரு தேருடன்சென்று யுத் தத்திற்கு அழைத்தவீரரும் ஒருவராலும் அடக்கமுடியாத உக்ராயுத னென்னும் சக்கரவர்த்தியைத் தம் அஸ்திரத்தின் அக்னியால் ஒரு நொடியில் எரித்தவருமான அந்தப்பீஷ்மர் என்னல் யுத்தத்தில் வீழ்த் தப்பட்டார். தம்மிஷ்டம்போல மிருத்யுவை இருக்கச்செய்ய வல்லவ ராயினும் பாஞ்சாலதேசத்தாளுகிய சிகண்டியைத் தம்பாணங்களால் கீழேவிழச்செய்யாத அந்தப்பீஷ்மர் அர்ஜுனனல் வீழ்த்தப்பட்டார். ஓ! முனிஸ்ரேஷ்டரே! பூமியில்விழுந்து உதிரம்பெருகும்படி இவரை எப்பொழுது கண்டேனே அப்பொழுதே மிக்க கொடூரமான தாபம் என்னைப் பிடித்துக்கொண்டது. இளமைப்பருவத்தில் எங்களை வளர்த் துப் பாதுகாத்துவந்த பாட்டனரான அந்தப்பீஷ்மர், சிறுதுகாலம் சிற்றின்பத்தைத்தரும் இவ்விராஜ்யத்தினிமித்தம் பேராசைகொண்டு பெரியோர்களைக் கொலைசெய்யத்துணிந்த பாவியும் மூடனுமான என் னல் வீழ்த்தப்பட்டார். பெரியவில்லாளியும் அரசர்கள் யாவராலும் பூஜிக்கப்பட்டவரும் ஆசாரியருமான துரோணரிடம் அவர் புத்திர ரைக்குறித்து யுத்தத்தில் எதிர்சென்று பாவி பொய்யைச்சொன் னேன். 'ஓ! அரசனே! என்குமாரன் உயிரோடிருக்கிறனு? நீ ஸத்தி யத்தைச்சொல்' என்று ஆசிரியர் என்னைக்கேட்டவசனம் என் அங்கங் களைக் கொளுத்துகிறதே. நான் உண்மைசொல்லுகிறவனென்ற பெரு நம்பிக்கையுடன் பிராம்மணர் என்னிடம் அதைக்கேட்டனர். குரு வான அவரிடம் ஸத்யமென்னும் கவசம்பூண்டு ராஜ்யத்தில் பேராசை பற்றிப் பெரியோர்களைக் கொல்லத்துணிந்த பாவியாகிய என்னல், யானை அடிபட்டவுடன் யானையென்பதை மறைவாகவைத்து, 'அஸ்வத் தாமா அடிக்கப்பட்டார்' என்று பொய்சொல்லப்பட்டது. மிகவும் செய்யத்தகாத இக்கர்மத்தைச் செய்தநான் எவ்வுலகங்களை அடையப் போகிறேனே? யுத்தங்களில் புறங்கொடாத தமையனை கர்ணனைக் கொன்றேன். என்னைவிடக் கொடும்பாவி இவ்வுலகில் எவனிருக்கி

ருன். மலைகளில் சிங்கம்போலுதித்த குழந்தையாகிய அபிமன்யுவை யும் போராசைகொண்டு துரோணரால் ரக்ஷிக்கப்படும் சேனைக்குள் பிரவேசிக்கச்செய்தேன். அதுமுதல், பெருங்கொலைசெய்த பாவி போல, அர்ஜுனனையும் தாமரைக்கண்ணரான கிருஷ்ணபகவானையும் பார்க்கமுடியாதவனானேன். துக்கப்படத்தகாத திரௌபதி ஐந்து மலைகளை இழந்த பூமிபோல ஐந்து பிள்ளைகளையும்இழந்ததை நினைத் துத் தவிக்கிறேன். இவ்விதம் இவ்வுலகத்திற்கே நாசத்தை உண்டு பண்ணின நான் பராபராதியும் பெரும்பாவியுமானேன். நான் இவ் விதமே இருந்துகொண்டு இச்சரீரத்தை வாடச்செய்கிறேன். பெரி யோர்களைக் கொலைசெய்த நான் மறுபிறவிகளிலாவது இங்ஙனம் குல பாதகனாகாதிருக்கவேண்டி இப்படிப் பிராயோபவேசம் அடைந்திருக் கிறேனென்று தெரிந்துகொள்ளுங்கள். ஓ! மஹரிஷிகளே! இனி உண்பதில்லை; எவ்விதமும் ஜலமும் உபயோகிக்கிறதில்லை. இப்படியே இருந்துகொண்டு நான் இனிய பிராணனைப் போகச்செய்கிறேன். ஓ! மஹரிஷிகளே! நீங்கள் இஷ்டப்படி போகலாம். உங்களை நமஸ்கரித் துக் கேட்டுக்கொள்ளுகிறேன்; இந்தச் சரீரத்தை இவ்விதமே விடப் போகிறேன். எல்லாரும் எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும்" என்று சொன்னார்.

பந்துக்களின் சோகத்தால் பீடிக்கப்பட்டு இவ்விதஞ்சொல்லும் அந்தத் தர்மபுத்திரரை, 'அப்படியல்ல' என்றடக்கி, ரிஷிகளிற் சிறந்தவரான வியாஸபகவான், (திரும்பவும்) சொல்லத்தொடங்கினர். "ஓ! மஹாராஜனே! நீ கரைகடந்து சோகப்படுவது நியாயமன்று. ஓ! பிரபுவே! இஃது அதிருஷ்டமென்று சொல்லியிருந்தும் திரும் பவும் சொல்லுகிறேன். உலகில்பிறந்த பிராணிகளுக்கு ஜலத்தில் குமிழிபோலச் சேர்க்கையும் பிரிவும் வருவதும் போவதுமாயிருக்கு மென்பது நிச்சயம். கூட்டங்களின் முடிவு நாசமே. உயர்வதின் முடிவு விழுவதே. சேர்க்கையின் முடிவு பிரிவதே. ஜீவித்தலின் முடிவு மரணமே. சோம்பலாயிருத்தல் (அக்காலம் ஸுகமாயிருப்பி னும்)முடிவில் துக்கமே. முயற்சி (அந்தஸமயம்) துக்கமாயினும் ஸுகத் தைத் தரும். அணிமாதிஸித்திகளும் ஸம்பத்தும் லஜ்ஜையும் தைரிய மும் கீர்த்தியும் முயற்சியுள்ளவனிடம் இருக்குமேயல்லாது சோம் பேறியிடம்இரா. நண்பர்கள் ஸுகத்தைச்செய்யவுமுடியாது. விரோதி கள் துக்கத்தைச் செய்யவுமுடியாது. புத்திசாலித்தனத்தால் பொருளை அடையவுமுடியாது. பொருளால் ஸுகம்பெறவுமுடியாது. ஏ! கௌந்தேய! தெய்வத்தால் எவ்விதக்கர்மஞ்செய்யும்படி பிறப்பிக்கப்

பட்டாயோ அவ்விதக்கர்மத்தைச்செய். அதுகொண்டுதான் நீ ஸித்தி பெறவேண்டும். ஓ! அரசனே! உனக்கே நீ வல்லவனல்லன்" என்று சொன்னார்.

இருபத்தேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர், தர்மபுத்திரருடைய சோகத்தை விலக்கக்கருதி, அஸ்மர் ஜனகருக்குக்கூறிய ஞானோபதேசத்தைக் கூறியது.)

ஞாதிகளின் சோகத்தால் கஷ்டப்பட்டுப் பிராணனையும்விடத் துணிந்த பாண்டுகுமாரர்களில் முதல்வரான தர்மபுத்திரரின் சோகத்தை விலக்கவேண்டி வியாஸபகவான் சொல்லத்தொடங்கினர். "ஓ! புருஷஸ்ரேஷ்டனை யுதிஷ்டிரனே! இதுவிஷயத்தில் முன் ஒரு ஸமயம் துக்கத்தால் சோகப்பட்ட விதேஹதேசத்திற்கு அரசரான ஜனக மஹாராஜர் அறிவிற்சிறந்த அஸ்மரென்னும் பிராமணரிடம் ஸந்தேஹத்தைக்கேட்க, அந்த அஸ்மர் பாடிய பழைய இவ்விதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள்.

ஜனகர், 'பந்துக்களும் பொருளும் வரும்பொழுதும் நீங்கும் பொழுதும் ஸுகத்தை விரும்பும் மனிதன் எவ்விதமிருக்கக்கடவன்?' என வினவினர். (அதனைக்கேட்ட) அஸ்மர் உபதேசிக்கத் தொடங்கினர். 'மனிதனுக்கு இச்சரீரம் உண்டான பின் சரீரத்தைத்தொடர்ந்து பல துன்பங்களும் இன்பங்களும் உண்டாகின்றன. அவைகளில் எதாவதொன்றுண்டாகும் பொழுது அதில் மனம் பற்றிச்செல்வாயின், உடனே, வாயு மேகத்தை இழுப்பதுபோல, அஃது அவன்புத்தியை இழுத்துவிடும். 'நான் நற்குலத்திற் பிறந்தவன்; ஸித்தியுள்ளவன்; ஸாதாரண மனிதனல்லேன்' என்ற மூன்றுவகை (அபிமான ரூபமான) காரணங்களால் மனம் கர்வமடையும். மனத்தில் அதிக ஆசைகொண்டு தகப்பன் தேடின பொருள்களை இழந்து தாழ்மையடைந்த மனிதன் பிறர்பொருளைக் கரஹிப்பதை நலமெனக் கருதுகிறான். அக்கருத்துக்கொண்டவனும் உலகத்திலுள்ள மரியாதையைவிட்டு நியாயமின்றிப் பிறர்பொருளை எடுப்பவனுமான அவனை அரசர்கள், வேடர்கள் அம்புகளால் மிருகத்தை அடிப்பதுபோல அடிக்கிறார்கள். ஓ! அரசனே! இருபது பிராயத்திலும் மூப்பது பிராயத்திலுமிருக்கும் அவ்வித மனிதர்கள் நூறுபிராயம் வரையிலும் ஜீவிக்கமுடியாது. இவ்விதம் அதிககஷ்டப்படும் மனிதர்களுக்கு

எல்லாப்பிராணிகளுடைய நடக்கையையும்தெரிவித்து முறையே உப தேசமென்னும் வைத்தியத்தைச் செய்யவேண்டும். சித்தத்தின் விகாரமோ வேண்டாததின்வரவோ இவ்விரண்டும்தாம் மனத்திலிருக்கும் துக்கங்களுக்குக் காரணங்களேதவிர மூன்றுவதிருக்க நியாயமில்லை. இவ்விதமுள்ள அந்தத்துன்பங்களும்விஷயஸம்பந்தத்தாலுண்டாகும் பற்பலதுன்பங்களும் மனிதனைத்தொடர்கின்றன. இப்படியிருக்கும் பொழுதே பலமுள்ளனவும் பலமில்லாதனவும் பெரியனவும்சிறியனவுமாகிய பிராணிகள்யாவற்றையும் சென்றாய்களுக்கொப்பான ஜரையும் மரணமும் விழுங்குகின்றன. ஸமுத்திரஞ்சூழ்ந்த இந்தப்பூமி முழுமையும் ஜயித்தவனுலும் இந்தஜராமரணங்களை ஜயிக்கும் மனிதன் ஒருவனுமில்லை. பிராணிகளுக்கு நேரிடும் ஸுகதுக்கமெல்லாம் பரவசமாக அனுபவிக்கவேண்டுமேதவிர அதைவிலக்க உபாயங் கிடையாது. ஓ! அரசனே! இளமையிலோ நடுவயதிலோ முதுமையிலோ தனக்கு வேண்டியனவும் வேண்டாதனவுமான விஷயங்கள் மனிதனுல் விலக்கத்தக்கவைகளல்ல. அனிஷ்டங்களுடன்சேருவதும் இஷ்டங்களை விட்டுவிலகுவதும் ஸம்பத்தும் ஆபத்தும் ஸுகமும் துக்கமும் அதிருஷ்டத்தை அனுஸரித்துவரும். அப்படியே பிராணிகளின் பிறப்பும் சரீரத்தைவிடுவதும் வேண்டியதை அடைவதும் அதற்குத்தக்கமுயற்சியுமாகிய யாவும் (அதிருஷ்டத்திற்குத்தக்கபடி) நிலைபெறும். கந்தமும் ரூபமும் ரஸமும் ஸ்பர்சமும் இயற்கையால் மாறுவதுபோல ஸுகமும்துக்கமும் அதிருஷ்டத்தை அனுஸரித்து வருகின்றன. உட்காருவதும் படுப்பதும் போவதும் கிளம்புவதும் குடிப்பதும் புசிப்பதும் பிராணிகள்யாவுக்கும் காலத்தாலேயே கிடைக்குமென்பது நிச்சயம். வைத்தியர்கள் நோயாளிகளாயும் பலவான்கள் பலமற்றவர்களாயும் நபும்ஸகர்கள் பெண்டிருள்ளவர்களாயும் இருப்பதைநோக்க, காலத்தின்முறை ஆச்சரியமாயிருக்கிறது. நற்குடிப்பிறப்பும் நோயின்மையும் அழகும் வீரியமும் நல்லஉருவமும் போகங்களும் விதிப்படியே அடையப்படும். விருப்பமில்லாத ஏழைகளுக்குப் பலபிள்ளைகள் உண்டாகிறார்கள். விசேஷமாகச் செல்வமிக்க மனிதர்களுக்குப் புத்திரன் இல்லை. விதியின்செய்கை அற்புதமானது. வியாதி, ஜலம், ஆயுதம், அக்னி, பசி, விஷம், ஜ்வரம், மரணம், மேலிருந்துவிழுதல் முதலிய எந்தஆபத்தில் எந்த மனிதன் போகும்படி விதியிருக்கிறதோ அவன் அதே வழியிற்செல்லுகிறான். விதியைத்தாண்டினவனும் விதியிலிருந்து வெளிப்பட்டவனும் எவனுமில்லை. விதியில்அகப்படாதமனிதனே இல்லை. மிக்க

ஸ்ரீ மஹாபாரதம்.

பொருளடைந்த மனிதன் யௌவனப்பருவத்திலேயே நாசமடைவது காணப்படுகிறது. மிகவும் கஷ்டப்படும்வழைகள் கிழத்தனத்துடன் நூறுபிராயமிருக்கிறார்கள். பொருளற்றபுருஷர்கள் சிரஞ்சீவிகளாகக் காணப்படுகிறார்கள். பிரபுத்தனமுள்ள குலத்திலுதித்தவர்கள் விட்டிற்பூச்சிபோல நசிக்கிறார்கள். உலகத்தில் பெரும்பாலும் பொருளுடையவர்களுக்குப் புசிக்கும்சக்தி இருக்கிறதில்லை. வழைகளுக்கு மிகவிசேஷமாகக் கட்டையும் கல்லுங்கூட ஜீர்ணமாகும். காலத்தால் வலப்பட்டு (மனிதன்) 'நான் இதைச்செய்கிறேன்' என்று எண்ணுகிறான். கெட்டபுத்தியுள்ளவன் வேண்டாதகாரியத்தையும் வேண்டியதுபோல ஸந்தோஷமில்லாமலே செய்வதும் காலத்தாலேயே; வேட்டையும் சூதும் வேசைகளும் குடியும் விவாதங்களும் அறிஞர்களால் இகழப்பட்டனவாயினும் மிகக்கற்றவர்களான புருஷர்களும் இவைகளில் பிரவிருத்திப்பது காணப்படுகிறது. இவ்வாறு சிந்திக்கையில், இஷ்டம் அனிஷ்டம்முதலிய பயன்கள்யாவும் காலத்தாலேயே எல்லாப்பிராணிகளையும் தொடருகின்றன. வேறுகாரணம் காணப்படவில்லை. வாயு, ஆகாசம், அக்னி, சந்திரன், ஸூர்யன், பகல், இரவு, நக்ஷத்திரங்கள், ஆறுகள், மலைகள் இவைகளை எவன் படைக்கிறான்? எவன் பரிபாலிக்கிறான்? குளிரும் வெயிலும் மழையும் காலத்தாலேயே உண்டாகின்றன. ஓ! நரச்ரேஷ்ட! இங்ஙனமே, மனிதர்களுக்கு ஸுகமும் துக்கமும் காலத்தாலுண்டாகின்றன. மருந்துகளும் ஆயுதங்களும் ஹோமங்களும் ஜபங்களும் மனிதனுடைய கிழத்தனத்தையும் மரணத்தையும் விலக்கி ரக்ஷிக்கத்தக்கவைகளல்ல. கருங்கடலில் எப்படிக் கட்டையும்கட்டையும் சேர்ந்து பிறகு பிரிவடைகின்றனவோ அப்படியே பிராணிகளின்சேர்க்கையும் உண்டாகிறது. இனிமையான கானம் வாத்தியம் முதலியவைகளால் உபசரிக்கப்படும் அரசர்களிடமும் ஒருவிதகதியுமற்று எப்பொழுதும் பரான்னம்புஜித்துப்பிழைக்கும் வழைகளிடமும் காலன் ஒரேவிதச் செய்கையுள்ளவன். இந்தஸம்ஸாரத்தில் இதுவரையில் பல்லாயிரம் தாய்தந்தைகளும் பலநூறுபிள்ளைபெண்டிர்களும் அனுபவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் யாருடையவர்கள்? நாம் யாருடையவர்கள்? மனிதனுக்கு ஒருவரும் நிலைத்திருப்பவரில்லை. இவனும் ஒருவருக்கும் நிலைத்திருக்கிறவனல்லன். பெண்டிர் பந்துக்கள் நண்பர்களுடன் இந்தச்சேர்க்கையானது வழியில்நேரும் சேர்க்கைதான். மனிதன், 'எங்கிருக்கிறோம்? எங்குப் போகப்போகிறோம்? நாம் யார்? இங்கு எதற்காக வந்தோம்? எதைப்பற்றி எக்காரணத்தால்

சோகத்தை அடைகிறேம்?' என்று ஆலோசித்து மனத்தை உறுதிப் படுத்தவேண்டும். இஷ்டவஸ்துக்கள்உள்ளனவாயினும் நிலையின்றித் தேருருளேபோல உருளும் இந்தஸம்ஸாரத்தில் தாய் தந்தை உடன் பிறந்தார் நண்பர்களெல்லாம் வழியில்நேரும் சேர்க்கைகளே. (ஆகையால், பந்துக்களின் மரணத்தைப்பற்றித் துக்கிப்பது நியாயமன்று.) 'பரலோகமோ கண்ணுக்கெதிரில் காணத்தக்கதில்லை. அவ்வுலகில் சுகித்திருக்கவிரும்புவோன் சாஸ்திரத்தின் விதியை விடாமல் நம்பிக்கையுடனிருக்கவேண்டும்' என்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அறிந்தவன் பிதிருதேவதைகளுக்குரியகர்மத்தைச் செய்ய வேண்டும். மற்றுமுள்ள தர்மகாரியங்களையும் யாகத்தையும் மூவகைப்பயனையும் விதிப்படிஅடையவேண்டும். கிழத்தனமும் மரணமுமாகிய பெருமுதலையுள்ள ஆழ்ந்த இக்காலக்கடலில் மூழ்கியிருக்கும் இவ்வுலகில் அறிவுள்ளவன் யாருமில்லை. ஆயுள்வேதம்கற்று வீணில் பலஸாதனங்களைத்தேடி வைத்தியரான பலர் தாமே வியாதியால் கஷ்டமுள்ளவர்களாய்க் காணப்படுகிறார்கள். அவர்கள் பல விதநெய்களையும் கஷாயங்களையும்குடித்தும் கடலானது கரையைக் கடவாததுபோல மிருத்யுவைக் கடந்துபோகமாட்டார்கள். சிலர் [1] ரஸாயனமென்னும் மருந்தைத்தெரிந்துகொண்டு அதை விதிதவறாமல் உபயோகித்தும் யானைகள் தமக்கு மேலான யானைகளாலடிக்கப்படுவதுபோலக் கிழத்தனத்தால் அடிக்கப்படுகிறார்கள். அங்ஙனமே, வேதமோதுவதில் விடாமுயற்சிசெய்தும் தவஞ்செய்தும் தானத்தையும் யாகத்தையும்செய்தும் ஜராமரணங்களைத் தாண்டினார்களில்லை. பகலும் மாஸமும் வருஷமும் எப்பொழுதும் ஓழிவடைவதில்லை. பிறந்தபிராணிகள் எல்லாவற்றிற்கும் திரும்பவும் சேர்க்கையுண்டாவதென்பது கிடையாது. பிராணிகள் யாவற்றாலும் அடையப்படுவதும் நீண்டதும் நிலைபெற்றதுமான (இந்தஸம்ஸார) வழியைப் பிராணியானவன் காலமென்னும் பெருவெள்ளத்தாலிழுக்கப்பட்டு நிலைமையில்லாதவனாகி அடைகிறான். ஜீவனிடமிருந்து சரீரம்விலகுகிறதோ சரீரத்திலிருந்துதான் ஜீவன்விலகுகிறதோ எப்படியானாலும் பந்துக்கள் தாரங்கள் மற்றஜனங்கள் ஆகியவர்களின்சேர்க்கை வழியில் சேர்க்கைதான். இந்தச்சேர்க்கையானது எப்போதும் எவனாலும் நிலைமையாய் அடையப்படமுடியாது. தன்சரீரத்துடன் சேர்க்கையே நிலைமையாயிருக்கவில்லை. மற்றமனிதனுடன் சேர்க்கை எங்ஙனம்

---

1 வியாதியையும் கிழத்தனத்தையும்விலக்கி ஆயுளை நிலைக்கச்செய்வது ரஸாயனத்தின் குணம்.

நிலைத்திருக்கமுடியும்? ஓ! பாபமற்றஅரசனே! இப்பொழுது உனது தகப்பனெங்கே? இப்பொழுது உனது பாட்டனெங்கே? நீ அவர்களைப் பார்க்கவில்லை. அவர்கள் உன்னைப் பார்க்கிறார்களில்லை. ஸ்வர்க்கத்தையும் நரகத்தையும் நேரில்கண்டமனிதன் இல்லை. ஓ! அரசனே! இவ்விஷயங்களில் வேதமே ஆஸ்திகர்களுக்குக் கண்ணாகும். நீ அக்கண் காட்டியபடி நடக்கவேண்டும். பிரம்மசரியமென்னும் ஆஸ்ரமத்தை நிறைவேற்றிப் பிதிருக்கள் தேவர்கள் ரிஷிகள் இவர்களின் கடனைத் தீர்க்கவேண்டி அஸூயையின்றிப் புத்திரனை உண்டுபண்ணவேண்டும்; யாகங்களையும் செய்யவேண்டும். முதலில் பிரம்மசாரியாயிருந்து பிசைஷ்முதலிய தர்மங்களைநடத்திப் பிறகு மனத்திலுள்ள [1] கஷ்டங்களை விலக்கிக்கொண்டு யாகங்களைச்செய்து புத்திரர்களையும் உண்டுபண்ணி இவ்வுலகையும் மேலுலகையும் பரமாத்மாவையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். நீதிப்படி பொருள்களைச் சம்பாதித்துத் தன்தர்மத்தை நன்றாகச்செலுத்தி ராஜ்யத்தைப் பெருகச்செய்யும் அரசனுடையகீர்த்தி ஸ்தாவரஜங்கமங்களான எல்லாஉலகங்களிலும் ஓங்கிச்செழிக்கும்' என்றுசொன்னார்.

இங்ஙனம் யுக்திகள்நிரம்பிய அஸ்மாின்வாக்கியம் முடிவுபெறக் கேட்டு, புத்திதெளிந்து சோகமும்விலகி, விதேஹதேசத்திற்கு அரசராகியஜனகர், அந்தஅஸ்மாிடம் விடைகேட்டுக்கொண்டு தம்வீடு சென்றார். ஓ! இந்திரனுக்கு ஒப்பான குந்தியின் குமாரனே! நீயும் இப்பொழுது அப்படியே சோகத்தைவிட்டுக் கிளம்பு; ஸந்தாபத்தை அடையாதே; க்ஷத்திரியர்களுக்குரியதர்மப்படி ஜயிக்கப்பட்ட இந்தப்பூமியைப் பரிபாலனம்பண்ணு; அவமதிக்கவேண்டா" என்றுசொன்னார்.

இருபத்தெட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன், நாரதரால் ஸ்ருஞ்சயனுக்கு உபதேசிக்கப்பட்ட பதினாறு அரசர்களின் சரித்திரத்தைத் தர்மபுத்ரருக்குச் சொல்லியது.)

(இவ்விதம் சொல்லப்பட்ட) அரசஸ்ரேஷ்டரும்தர்மபுத்திரருமான யுதிஷ்டிரர் பேசாமலிருக்கும்போது, பாண்டவனான அர்ஜுனன், கிருஷ்ணபகவானைநோக்கி, "ஓ! மாதவரே! ஞாதிகளின் சோகத்தால் மிகவும்கஷ்டப்படுபவரும் சத்துருக்களைத் தபிக்கச்செய்பவருமான இந்தத்தர்மபுத்திரர் சோகக்கடலில் மூழ்கிவிட்டார். அவரை

---

1 'சரீரஜாதிகளில் ஆத்மாவென்னும் பிரமத்தை' என்பது பழையவுரை.

ஸமாதானஞ் செய்யவேண்டும். ஏ! ஜனர்த்தனரே! (இவரது சோகத்தால்) நாங்கள் யாவரும் திரும்பவும் ஸந்தோஷமுள்ளவர்களாகேணும். பிராஜ்ஞர்களிற் சிறந்தவரே! (ஆகையால்,) நீரே இவருடைய சோகத்தை விலக்கத்தக்கவர்" என்றுசொன்னன். இங்ஙனம் மஹாத்மாவான அர்ஜுனனால் சொல்லப்பட்டவரும் தாமரைக்கண்ணரும் அழிவற்றவரும் பகவானுமான கிருஷ்ணன், ராஜாவாகிய தர்மபுத்திரரை நோக்கித் திரும்பினர். கேசவர் தர்மபுத்திரருக்கு மீறத்தக்கவரல்லர். தர்மபுத்திரருக்கு இளமைப்பருவ முதல் அர்ஜுனனிடத்திற்காட்டிலும் கிருஷ்ணனிடத்தில் பிரீதி அதிகமுண்டு. (அந்தக் காரணம்பற்றி) கிருஷ்ணன் சந்தனத்தால் அலங்கரிக்கப்பட்டதும் கல்லுத்தூணுக்கொப்பானதுமான தர்மபுத்திரருடைய கையைத் தமது நீண்ட கரங்களால் பிடித்துக்கொண்டு வேடிக்கையாகப் பேச நினைத்தார். (அந்த ஸமயத்தில்) அழகான பற்களும் கண்களுமுடைய தர்மபுத்திரருடைய முகம், ஸூர்யனால் தொடப்பட்டதும் நன்றாய் மலர்ந்ததுமான தாமரை மலர்போல விளங்கிற்று. வாஸுதேவர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! புருஷப்புலியே! அங்கங்களை வாடச்செய்யும் சோகத்தை நீர் அடையவேண்டாம். இந்த யுத்தகளத்தில் கொல்லப்பட்ட மனிதர்களைத் திரும்பவும் அடைவது முடியாதன்றோ? ஓ! அரசரே! கனவில் அடையப்பட்ட வஸ்துக்கள் விழித்துக்கொண்டவனுக்கு எங்ஙனம் பொய்யோ அப்பெரிய யுத்தத்தில் கொல்லப்பட்ட க்ஷத்திரியர்களும் அங்ஙனமேதான். யுத்தத்தில் விளங்கும் சூர்களான யாவரும் எதிரில் நின்று கொல்லப்பட்டார்களே தவிர இவர்களில் ஒருவனும் பின்புறத்திலாவது ஓடும்பொழுதாவது கொல்லப்பட்டவனல்லன். வீரர்களான யாவரும் பெரிய யுத்தத்தில் சண்டை செய்து தம்முயிரைவிட்டு ஆயுதங்களால் பரிசுத்திபெற்றுத் தேவலோகமடைந்தார்கள். அவர்களைக் குறித்து நீர் சோகப்படுவது நியாயமன்று. வேதவேதாங்கங்களில் கரைகண்டவர்களும் க்ஷத்திரியர்களுக்குரிய தர்மத்தில் முயற்சியுள்ளவர்களுமான அந்தச்சூர்கள் புண்ணியமான வீரர்களுக்குரிய கதியை அடைந்தார்கள். மஹானுபாவர்களான அரசர்கள் இவ்விதம் இறந்து போனதைக்கேட்டு நீர் சோகப்படுவது நியாயமன்று. இது விஷயத்தில் புத்திரசோகத்தால் கஷ்டப்படும் ஸ்ருஞ்சயனுக்கு நாரதர் சொன்னதான இப்பழைய இதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள்.

நாரதர், 'ஓ! ஸ்ருஞ்சய! நானும் நீயும் மற்றுமுள்ள பிரஜைகளும் ஸுகதுக்கங்களிலிருந்து விடுபடாமலே மரிக்கப்போகிறோம்.

அதில் என் அழவேண்டும்? முன்னிருந்த அரசர்களின் மஹிமையை நான் சொல்லுகிறேன். சற்றுக் கவனத்துடன் கேள். அரசனே! இறந்துபோன மஹானுபாவர்களான அரசர்களைக் கேட்டமாத்திரத்தில் உனது துக்கம் விலகிவிடும். தாபத்தைப் பொறுத்துக்கொள். நான் சொல்லுகிறதை விஸ்தாரமாகக்கேள். முன்னோர்களான அரசர்களின் சரித்திரம் பெருமையுள்ளதும் மனத்தைக் கவரத்தக்கதும் கிரஹங்களின் கொடுமையை அடக்கி ஆயுளை வளரச்செய்வதும் உத்தமமுமானது. ஸ்ருஞ்சய! அவிக்ஷித்தின் குமாரனை மருத்த னென்னும் அரசன் இறந்ததைக் கேள்விப்படுகிறோம். மஹாத்மா வான அவனுடைய யாகத்தில் இந்திரன் வருணன் பிருஹஸ்பதி முதலிய தேவர்களும் ஸ்ருஷ்டிகர்த்தர்களும் பிரத்தியக்ஷமாக வந்தார்கள். அவன் தான்செய்த யாகங்களால் தேவராஜாவாகிய இந்திரனையும் அஸூயைப்படும்படி செய்வித்தான். இந்திரனுடைய பிரியத்திற்காக விக்வானன பிருஹஸ்பதியானவர் அவனிடஞ் சென்று (இனி யாகஞ்செய்யாதிருக்க வேண்டுமெனத்) தடுத்தார். அப்படியிருந்தும், அவர்தம்பியான ஸம்வர்த்தரென்னும் ரிஷி தேவ குருவின் இஷ்டம் நிறைவேற வண்ணம் அவனுக்கு யாகஞ்செய் வித்தனர், ஓ! அரசஸ்ரேஷ்டனே! மருத்தன் அரசனுகிப் பூமியை ஆண்டுவருங் காலத்தில் பூமி உழவுமுதலிய வேலையின்றியே பயிர்கள் வளர்ந்தோங்கிச் செழித்து விளங்கிற்று. மஹாத் துமாவான மருத்தன் செய்த ஸத்ரயாகத்தில் விசுவேதேவர்கள் ஸத ஸ்யர்களாகவும் மருத்தென்னும் தேவர்கள் ஸோமபானஞ்செய்யும் ரித்விக்குக்களாகவும் ஸாத்தியர்களும் மற்றத்தேவர்களும் பரிசாரகர் களாகவும் இருந்தார்கள். (அவன்கொடுத்த) தக்ஷிணைகள் தேவர் களுக்கும் மனிதர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் அதிகமாயிருந்தன. ஸ்ருஞ்சய! உன்னையும் உனது புத்ரனையும் விடத் தர்மம், ஞானம், ஐசுவரியம், வைராக்கியம் இந்நான்கிலும் மிகச்சிறந்தவனும் அதிக புண்யவானுமான அந்த மருத்தனே இறந்துபோய் விட்டானுகில் உனது புத்திரன் போனதைப்பற்றி வருத்தப்படவேண்டாம். விதி தன் புத்திரனுகிய ஸுஹோத்திரனும் இறந்ததாகக் கேள்விப்படு கிறோம். அவன் அரசனுயிருக்குங்காலம் இந்திரன் அவனுடைய பிரியத்திற்காக ஒரு வருஷம் பொன்மாரிபெய்வித்தான். பூமியானது அவன் காலத்தில் வஸுமதியென்னும் உண்மைப்பெயர் வாய்ந்ததா யிற்று. ஆறுகளில் பொன்னீரோடிற்று. உலகங்களில் பூஜிக்கப்பட்ட இந்திரன் ஆறுகளில் மீன், நண்டு, ஆமை, முதலை, திமிங்கிலம் இவை

களைப் பொன்னுருவமுள்ளனவாகப் படைத்தனன். அற்புதமான பொன்னுருவமுள்ள பல்லாயிரங்களான அவைகளைக்கண்டு விதிதபுத்ரன் வியப்படைந்தான். இவ்விதம் நிரம்பிய அளவில்லாத ஸ்வர்ணத்தையும் அவன் குருக்ஷேத்திரத்தில் தான்செய்த விஸ்தாரமான யாகத்தில் பிராம்மணர்களுக்கு அளித்துவிட்டான். ஸ்ருஞ்சய! உன்னையும் உனதுபுத்திரனையும்விடத் தர்மம்முதலிய நான்கிலும் மிகச்சிறந்தவனும் அதிகபுண்ணியவானுமான அந்தஸோமதத்திரனே மரணமடைந்தான். ஸ்ருஞ்சய! யாதொருயாகமும் தக்ஷிணையுமில்லாத உனது புத்திரன் இறந்ததைக்குறித்து வருத்தப்படவேண்டாம். சோகம்வேண்டாம். பொறுத்துக்கொள். ஸ்ருஞ்சய! பிருஹத்ரதனென்னும் அங்கதேசத்தரசன் இறந்ததையும் கேள்விப்படுகிறோம். அவன் வெண்மைநிறமான பத்துலக்ஷம்குதிரைகளையும் ஸுவர்ணஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பத்துலக்ஷம்கன்னிகைகளையும் தானஞ்செய்தான். விஸ்தாரமாகத் தான்செய்தயாகத்தில் பத்மமாலை அணிந்த பத்துலக்ஷம்யானைகளையும் ஸுவர்ணபரணமுள்ளனவும்ஆயிரம் பசுக்களைத் தொடர்ந்தனவுமான கோடிக்காளைகளையும் அவன் தக்ஷிணையாகக் கொடுத்தான். விஷ்ணுபதம்என்னும் மலையில் அவன் செய்தயாகத்தில் ஸோமபானஞ்செய்து இந்திரன் மதத்தைஅடைந்தான். தக்ஷிணைகளால் பிராம்மணர்களும் களித்தார்கள். அவனுடைய நூற்றுக்கணக்கான யாகங்களில் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் தக்ஷிணைகள் மிகவும் அதிகப்பட்டன. ஸோமஸம்ஸ்தையென்னும் [1] ஏழுயாகங்களில் அந்த அங்கராஜன் கொடுத்த தக்ஷிணைபோலத் தக்ஷிணைகொடுக்கும்மனிதன் சென்றகாலத்திலும்இல்லை; வருங்காலத்திலுமில்லை. தர்மமுதலிய நான்கிலும் உன்னையும் உனதுபுத்திரனையும்விட மிகச்சிறந்தவனும் அதிகபுண்ணியவானுமான அந்தஅங்கராஜனே மரணமடைந்தான். உனதுபுத்ரன் போனதைக்குறித்து நீ வருத்தப்படவேண்டாம். ஸ்ருஞ்சய! உசீநரன்புத்ரனை சிபியென்னும்அரசன் இறந்ததைக் கேள்விப்படுகிறோம். அவன் ஒருதேராலப்போல இந்தப்பூமிமுழுமையும் சுருட்டினன்; கம்பீரமான தன்ரதத்தின் சப்தத்தால் பூமி சப்திக்கும்படிசெய்தான்; ஜயம்பெறக்கூடிய ஒருதேரின்மீதிருந்துகொண்டு பூமியைத் தன் ஒருகுடைக்குள்ளாக்கினன். உசீநரன்புத்ரனை அந்தச்சிபி காட்டிலிருக்கும் பசுக்களோடுகூடத் தனக்குள்ளபசுக்கள் குதிரை

1 அக்நிஷ்டோமம், அத்யக்நிஷ்டோமம், உக்தியம், ஷோடசி, அதிராத்ரம், வாஜபேயம், அப்தோர்யாமம் என்னும் யாகங்கள்.

கள் யாவற்றையும் யாகத்தில் தானஞ்செய்தான். 'எல்லாஅரசர்க ளுள்ளும் இந்திரனுடைய பராக்ரமம்போன்ற பராக்ரமமுள்ளவனும் உசீநரன்புத்ரனுமான சிபியென்னும் ராஜரிஷியைவிட இவனதுபாரத் தைவஹிக்க வேறுஅரசன் உண்டானதுமில்லை ; உண்டாகப்போவது மில்லை' என்று பிரம்மதேவரும் நினைத்தார். உன்னையும் உனதுபுத் திரனையும்விடத் தர்மமுதலிய நான்கிலும் நிரம்பவும்சிறந்தவனும் அதிகபுண்ணியவானுமான அந்தச் சிபிராஜனே இறந்துவிட்டான். ஒருதக்ஷிணையும் ஒருயாகமுமில்லாத உனதுபுத்ரன் இறந்துபோன தைநினைத்து நீ சோகப்படவேண்டாம் ; தபிக்கவேண்டாம். ஓ! ஸ்ருஞ்சய! துஷ்யந்தனுக்குச் சகுந்தலையிடம் உண்டானவனும் மஹாத்மாவும் திரவிபக்குவியல்களை மிகுதியாகவுடையவனுமான பர தனும் காலஞ்சென்றானெனக் கேட்கிறோம். அதிகபராக்கிரமம் பெற்ற அந்தப்பரதன் முன்பு தேவர்களைக்குறித்து யமுனைக்கரையில் மூன்றும், ஸரஸ்வதியின்கரையில் இருபதும், கங்கைக்கரையில்பதி னைந்தும் மற்றவிடங்களில்பலவும்ஆக ஆயிரம் அசுவமேதயாகங்களை யும் நூறுராஜஸூயயாகங்களையும் செய்திருக்கிறான். மனிதர்கள் ஆகாயத்தைக் கைகளால் (கட்டிப்பிடிக்கமுடியாதது) போல ஸகல மானஅரசர்களும்ஆச்சர்யமானபரதனுடைய கார்யத்தைப்பின்தொட ரச் சக்தர்களல்லர். அவன் 1வேதிகளை விஸ்தாரமாகப்போட்டு ஆயி ரத்துக்குஅதிகமான குதிரைகளைக்கட்டினான். அந்தயாகசாலையில் பரதன் கண்வரின்பொருட்டு ஆயிரம் 2பத்மக்கணக்கான பசுக்களைக் கொடுத்தான். உன்னையும்உனதுபுத்ரனையும்விடத் தர்மமுதலிய நான் கிலும் எவ்வளவோமேலானவனும் அதிகபுண்யவானுமான அந்தப் பரதனே இறந்துபோனான். உனதுபுத்ரன்இறந்ததில் தாபமடைய வேண்டாம். ஸ்ருஞ்சய! தசரதகுமாரராகிய ராமரும் இறந்ததாகக் கேள்விப்படுகிறோம். அவர் எப்பொழுதும் பிராணிகளிடம் ஔரஸ புத்திரன்மீதுபோலப் பிரீதி பாராட்டிவந்தார். அவருடைய தேசத் தில் பொருளில்லாதமனிதனும் கஷ்டப்படும்மனிதனும்இல்லை. ராமர் எல்லோருக்கும் தகப்பனுக்குச் சமமாயிருந்துகொண்டு ராஜ்யத்தை ஆண்டுவந்தார். ராமர் அரசாளும்பொழுது காலத்தில் மழைபெய்து பயிர்கள் செழித்து எப்பொழுதும் ஸுபிக்ஷமாகவேயிருந்தது. ராமர் ராஜ்யபரிபாலனஞ்செய்புங்காலத்தில் பிராணிகளுக்குஜலத்தில்மூழ்கு வது, தீபால் கொளுத்தப்படுவது, துஷ்டமிருகங்களிடமிருந்து பய மடைவதுமுதலிய தீங்குகள் இல்லை. ஸ்திரீகளும் புருஷர்களும்

1 யாகத்திற்குச்செய்துகொண்ட இடங்கள். 2பத்மம் = நூறுகோடி.

யாதொரு வியாதியுமின்றி வேண்டிய ஸித்திகள் பெற்று ஆயிரம் வருஷம் ஸுகித்திருந்தார்கள். ஒருவருக்கொருவர் விவாதமென்பது ஸ்திரீகளிடத்திலுங் கிடையாது; புருஷர்களிடம் எது? பிரஜைகள் யாதொரு பயமுமின்றி இஷ்டப்படி ஸஞ்சரிப்பவர்களும் வேண்டிய ஸித்திபெற்று ஸந்தோஷமடைந்தவர்களும் உண்மையான நியமத்துடன் எப்பொழுதும் தர்மஞ்செய்கிறவர்களுமாயிருந்தார்கள். அவருடைய ராஜ்யத்தில் மரங்கள்யாவும் இடையூறின்றி எக்காலத்திலும் பூவும் கனியும் நிரம்பிச்செழிக்க பசுக்கள்யாவும் பதக்குப்பால் கறப்பவைகளாயிருந்தன. பெரியதவமுள்ள அந்த ராமர் பதினைந்து வருஷம் வனவாஸஞ்செய்து பிறகு யாதொருதடையுமின்றி யாவருங் கொண்டாடத்தக்க பத்து அசுவமேதயாகங்களைச் செய்தார். அழகான முகமும் சிவந்த கண்ணும் சிங்கம்போன்ற மார்பும் முழங்காலளவு நீண்ட பருத்தகைகளும் யூதபதியான யானைபோலக் கறுத்த உருவமும் யௌவனப்பருவமுமுள்ள ராமர் பதினாராயிரம் வருஷம் அயோத்திக்கு அதிபதியாயிருந்து அரசாட்சிசெய்து வந்தார். உன்னையும் உனது புத்திரனையும் விடத் தர்மம் முதலியவைகளில் மிகவுஞ் சிறந்தவரும் புண்ணியவானுமான அந்த ராமரே இறந்துவிட்டார். ஒரு யாகமும் தக்ஷிணையுமில்லாத உனது புத்திரன் இறந்ததில் தாபப்படவேண்டாம். ஸ்ருஞ்சய! பகீரதனென்னும் அரசனும் இறந்ததாகக் கேள்விப்படுகிறோம். அவனது விஸ்தாரமான யாகத்தில் தேவர்களுக்கு அரசனை இந்திரன் ஸோமரஸத்தைப் பானஞ்செய்து மதம்பெருகித் தன் கைவன்மையால் பல்லாயிரம் அஸுரர்களை ஜயித்தான். அந்தப் பகீரதன் ஸுவர்ணபரணம் பூண்ட பத்து லக்ஷம் கன்னிகைகளைத் தன் யாகத்தில் தக்ஷிணையாகக்கொடுத்தான். தானம் கொடுத்த ஒவ்வொரு கன்னிகைக்கும் நான்கு குதிரைகள் கட்டிய ஒவ்வொரு ரதமும், ஒவ்வொரு ரதத்திற்கும் பின் தொடர்வனவும் ஸுவர்ணபரணம் பூண்டனவுமான நூறு யானைகளும், ஒவ்வொரு யானைக்கும் பின் ஆயிரம் குதிரைகளும், ஒவ்வொரு குதிரைக்கும் பின் ஆயிரம் பசுக்களும், ஒவ்வொரு பசுவுக்கும் பின் ஆயிரம் ஆடுகளும் தானஞ்செய்தான். அவனது மடியில் முன்பு ரஹஸ்யத்தில் வஸிக்கும் பாகீரதியென்னும் கங்கை குழந்தைபோல உட்கார்ந்திருந்தாள். அவனது துடையின்மீது உட்கார்ந்த காரணத்தால் கங்கை ஊர்வசியென்னும் பெயருள்ளவளானாள். மூவுலகையும் பரிசுத்தமாகச்செய்யும் கங்கையும் அதிக தக்ஷிணையுள்ள யாகங்களைச்செய்த பகீரத ராஜாவுக்குப் பெண்ணானாள். ஸ்ருஞ்சய! உன்னையும் உனது

புத்ரனையும் விடத் தர்ம முதலிய நான்கிலும், மிகச் சிறந்தவனும் அதிக புண்ணியவானுமான அந்தப் பகீரதராஜாவும் மரணமடைந் தான். உனது புத்திரனைக் குறித்துப் பரிதாபப்படவேண்டாம். ஓ! ஸ்ருஞ்சய! மஹாத்மாவான திலீபனென்னும் அரசனும் இறந்ததாகக் கேள்விப்படுகிறோம். அவன் காரியங்களைப் பிராம்மணர்கள் பெரிய வையாகச் சொல்லுகிறார்கள். அவன் தான் செய்த பெரிய யாகத்தில் பொருள்கள் நிறைந்த இந்தப் பூமியைச் சந்தோஷத்துடன் பிராம் மணர்களுக்குத் தானஞ்செய்தான். அவன் செய்த ஒவ்வொரு யாகத் திலும் உபாத்தியாயர் ஸுவர்ணத்தால் செய்த ஆயிரம் யானைகளைத் தக்ஷிணையாகப்பெற்றார். அவன் செய்த யாகத்திலிருந்த பெரிய யூப மானது தங்கத்தால் செய்யப்பட்டதும் ஒளியுள்ளதுமாயிருந்தது. இந்திரன் முதலிய தேவர்கள் அவனுக்குவேண்டிய காரியத்தைச் செய்துகொண்டு அவனை ஆராதித்தார்கள். பொன்னாற்செய்த அந்த யூபத்தின்மேலிருக்கும் சஷாலமென்னும் தங்கஸ்தூபியில் ஆறுயிரந் தேவர்களும் கந்தர்வர்களும் நடனஞ்செய்தார்கள். அதன் நடுவில் விஸ்வாவஸுவென்னும் கந்தர்வன் தானே ஏழுஸ்வரங்களுடன் வீணாகானஞ்செய்தான். எல்லாப்பிராணிகளும் அவன்செய்யும் வீணாகானம், 'எனக்கு' என்று நினைத்தன. திலீபமஹாராஜன் செய்த இந்தக்காரியத்தை நடத்தத்தக்க அரசர்கள் இருந்தேதே இல்லை. தங்கக்கவசம்பூண்ட அவனுடைய யானைகள் மதம்பிடித்து வழியில் படுத்திருந்தன. ஸத்தியவாதியும் பெரிய வில்லாளியும் மஹாத்துமாவுமான திலீபமஹாராஜனைத் தரிசனஞ்செய்த மனிதர் களும் ஸுவர்க்கலோகத்தை ஜயித்தார்கள். திலீபனுடைய அரண் மனையில் வேதசப்தமும் வில்லின் சப்தமும் கொடுவென்ற சப்தமும் குறைந்தகாலமில்லை. ஸ்ருஞ்சய! உன்னையும் உனது புத்திரனையும் விடத் தர்மமுதலிய நான்கிலும் மிகச்சிறந்தவனும் அதிக புண்ணிய வானுமான அந்தத்திலீபனை மரணமடைந்தான். உனது புத்ரனை நினைத்துத் தாபப்படவேண்டாம். ஸ்ருஞ்சய! யுவனஸ்வன் புத்திர னான மாந்தாதாவும் மரணமடைந்ததாகக் கேள்விப்படுகிறோம். அவன், மஹாத்மாவான யுவனஸ்வன்வயிற்றில் பிருஷதாஜ்யத்தி லிருந்து உதித்து விருத்தியடைந்தவனும் காந்தியுள்ளவனும் மூன்று உலகங்களையும் ஜயிக்கத்தக்கவனுமான அரசன். கர்ப்பரூபமாயிருந்த அவனை மருத்தென்னுந்தேவர்கள் தந்தையின் பார்ச்வத்திலிருந்து வெளிப்படுத்தினார்கள். தேவவடிவமான அந்தக் குழந்தை தந்தை யான யுவனஸ்வன்மடியில் படுத்திருப்பதைக் கண்டு இக்குழந்தை

யாரிடம் பால்குடிக்குமென்று தேவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, இந்திரன், 'என்னிடம் குடிக்கும்' என்ற பொருளடங்கிய 'மாம் தாதா' என்னும் வார்த்தையைச் சொல்லிக் கொண்டு வந்தான். அந்தக் காரணத்தால் அந்தக் குழந்தைக்கு மாந் தாதாவென்று பெயருண்டாயிற்று. பிறகு, மஹாத்மாவான அந்தக் குழந்தையை ரக்ஷிக்கவேண்டி இந்திரன் குழந்தையின் வாயில் தன் கையை வைத்துப் பால்பெருகச் செய்தான். இந்திரனுடைய கையைப் பானஞ்செய்த அந்த மாந்தாதாவின் சரீரம் நாளொன்றுக்கு நூறு பலம் வீதம் வளர்ந்து பன்னிரண்டு நாளில் பன்னிரண்டு பிராயமுள்ள அழகிய அரசவடிவமாயிற்று. மஹாத்மாவும் யுத்தத் தில் இந்திரனுக்கொப்பான சௌரியமுள்ளவனும் தர்மபுத்தியுள்ள வனுமான அந்த மாந்தாதா இந்தப் பூமிமுழுமையும் ஒரே நாளில் கைப்பற்றிக்கொண்டான். அவன் யுத்தத்தில் அங்காரன், மருத்தன், அஸிதன், கயன், அங்கன், பிருஹத்ரதனென்னும் அரசர்களை ஜயித் தான். மாந்தாதா அங்காரனென்னும் அரசனை எதிர்த்து யுத்தஞ் செய்யுங்காலம் அவன் வில்லின் தொனியால் தேவர்கள் தேவலோகம் இடிந்துபோயிற்றென நினைத்தார்கள். ஸௌர்யனுடைய உதயாஸ்த மயங்களுக்குட்பட்ட பூமியாவும் மாந்தாதாவின் நிலமென்று சொல் லப்படுகிறது. ஓ! அரசனே! மாந்தாதா நூற்றுக்கணக்கான அசுவ மேதங்களையும் ராஜஸூயங்களையுஞ்செய்து அவைகளில் பிராம்மணர் களுக்கு ஒரு யோஜனை பருமனும் பத்துயோஜனை நீளமுமுள்ள பொன்னாற்செய்த மத்ஸ்யங்களைத் தானஞ்செய்தான். அந்த யாகத் தில் அதிகமாயிருந்த பொருள்களை மற்ற ஜனங்கள் தாங்கள் பிராம் மணர்களுக்குத் தானஞ்செய்தார்கள். ஸ்ருஞ்சய! உன்னையும் உனது புத்ரனையும் விடத் தர்மமுதலிய நான்கிலும் மிகச் சிறந்தவனும் அதிக புண்யவானுமான அந்த மாந்தாதாவே மரணமடைந்தான். உனது புத்திரனைக்குறித்துத் தாபப்படவேண்டாம். ஸ்ருஞ்சய! நஹுஷன் புத்ரனை யயாதி இறந்ததாகக் கேள்விப்படுகிறோம். அவன் ஸமுத்திரங்களோடு கூட இந்தப் பூமிமுழுமையும் ஜயித்து, [1] சம்யை போகுந்தூரமுள்ள பூமியை ஒவ்வொரு வேதியாகச்செய்து அவ் வேதிகளால் பூமியை அலங்கரித்து உயர்ந்த பல யாகங்களைச்செய்து இப்பூமிமுழுமையும் யாகசாலையாகச் செய்தான். நூறுவாஜபேய

---

1 'அடிபருத்து நுனி சிறுத்த தடி சம்யை என்று சொல்லப்படும்' என்பது பழைய உரை. நுகத்தடியின் நுனியில் போடும் முளை சம்யை யென்று சொல்லப்படும். அதைப் பலமுள்ள ஒரு மனிதன் எறிந்தால் எவ்வளவுதூரம் போகுமோ அவ்வளவுதூரம் என்பது மூலத்தின்கருத்து.

யாகங்களையும் வேறு ஆயிரம் யாகங்களையுஞ்செய்து யயாதி மூன்று தங்கமலைகளைத் தானஞ்செய்து பிராம்மண ஸ்ரேஷ்டர்களைச் சந்தோஷப்படுத்தினன். நகுஷனின் புத்ரனை யயாதி பூமியிலுள்ள அஸுராக்ஷஸர்களை யுத்தத்தில் அடித்துவிட்டு இந்தப் பூமியை முழுவதுங்கைப்பற்றி த்ருஹ்யுமுதலிய புத்திரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களை ராஜ்யத்தின் கோடியிலிருக்கும்படிசெய்து பூரு வென்னும் புத்திரனுக்கு ராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ்செய்துவிட்டு மனைவியுடன் முதுமைப் பருவத்தில் காடுசென்றான். ஸ்ருஞ்சய! உன்னையும் உனது புத்திரனையும் விடத் தர்மம் முதலிய நான்கிலும் மிகவும் மேலானவனும் அதிக புண்ணியவானுமான அந்த யயாதியே காலஞ்சென்றான். உனது புத்திரனைக் குறித்துத் தாபப்படவேண்டாம். ஸ்ருஞ்சய! நாபாகனுடைய புத்ரனை அம்பரீஷனும் இறந்ததாகக் கேள்விப்படுகிறோம். ஜனங்கள் புண்ணியாத்மாவும் ராஜ ஸ்ரேஷ்டனுமான அவனை ரக்ஷிகனுக வரித்தார்கள். அவன் தான் செய்த பெரிய யாகத்தில் யாகஞ்செய்விக்கும் பிராம்மணர்களுக்கு யாகஞ்செய்தவர்களான பத்துலக்ஷம் அரசர்களைப் பணிவிடைசெய்யக் கட்டளையிட்டான். 'இங்ஙனம் செய்தவர்கள் முன்னுமில்லை; பின்னுமில்லை' என்று அறிஞர்கள் நாபாகபுத்ரனை அம்பரீஷனை மிகக்கொண்டாடினர்கள். அவனுடைய யாகத்தில்(பிராம்மணர்களுக்கு ஊழியஞ்செய்த) அரசர்கள்யாவரும் அசுவமேதயாகஞ் செய்தவர்கள் போல உத்தராயணமென்னும் தேவயானமார்க்கஞ்சென்று பிரம்ம லோகமடைந்தார்கள். ஸ்ருஞ்சய! உன்னையும் உனதுபுத்ரனையும்விடத் தர்ம முதலிய நான்கிலும் மிகமேலானவனும் அதிக புண்யவானுமான அந்த அம்பரீஷனும் இறந்துவிட்டான். உனது புத்திரனைக்குறித்துச் சோகப்படவேண்டாம். ஸ்ருஞ்சய! சித்ரரதன் புத்திரனை சசபிந்து வென்னும் அரசனும் இறந்ததாகக் கேள்விப்படுகிறோம். மஹாத்மாவான அவனுக்கு லக்ஷம்பாரியைகளிருந்தார்கள். அந்தப் பாரியைகளிடம் அவனுக்குப் பத்துலக்ஷம் புத்திரர்கள் உண்டானார்கள். அந்தப் புத்திரர்கள் யாவரும் தங்கக்கவசம்பூண்ட பெரிய வில்லாளிகளாயிருந்தார்கள். தனித்தனியே ஒவ்வொரு புத்திரனுக்கும் நூறுநூறு கன்னிகைகளும் ஒவ்வொரு கன்னிகைக்கும் நூறுநூறு யானைகளும் ஒவ்வொரு யானைக்கும் நூறுநூறு தேர்களும் ஒவ்வொருதேருக்கும் ஸுவர்ணபரணமணிந்த உயர்ந்த நூறுநூறுகுதிரைகளும் ஒவ்வொரு குதிரைக்கும் நூறுநூறுபசுக்களும் ஒவ்வொருபசுவுக்கும் நூறுநூறு வெள்ளாடுகளும் ஒவ்வோர் ஆட்டுக்கும் நூறுநூறுசெம்மறியாடுகளும் அடங்கிய அளவில்லாத இப்பெரிய பொருளை அசுவமேத யாகத்தில்

சசபிந்து மஹாராஜன் பிராம்மணர்களுக்கு அளித்தனன். ஸ்ருஞ்சய! உன்னையும் உனதுபுத்திரனையும்விடத் தர்மம்முதலிய நான்கிலும் மிகச்சிறந்தவனும் அதிக புண்ணியசாலியுமான அந்தச்சசபிந்துவே இறந்துவிட்டான். உனது புத்திரனைக்குறித்துத் தாபப்படவேண்டாம். ஸ்ருஞ்சய! அதூர்த்தரஜஸினுடையபுத்ரனை கயனும் மரணமடைந்ததாகக் கேள்விப்படுகிறோம். அந்தஅரசன் மஹாமஞ்செய்தமிச்சத்தை நூறுவருஷம் புசித்துக்கொண்டிருந்தான்; அக்னிபகவான் (தானுகவே) அவனுக்கு வரங்கொடுக்கவேண்டி வந்தான். 'நான் எவ்வளவுதானஞ்செய்தாலும் எனதுபொருள் அழிவற்றதாயிருக்கவேண்டும். எனக்குத் தர்மத்தில் ப்ரத்தை விருத்தியடையவேண்டும். ஓ! அக்னிபகவானே! உனது அனுக்ரஹத்தால் என்மனம் ஸந்தோஷமாக ஸத்தியத்திலேயே செல்லவேண்டும்' என இவ்வரங்களைக் கேட்டுக்கொண்டான். அக்னிபகவானும் அவனிஷ்டப்படியே அவ்வரங்களையெல்லாம் கொடுத்தானென்று எங்களுக்குக் கேள்வியுண்டு. அவன் தர்சம், பூர்ணமாஸம், சாதுர்மாஸ்யம், அசுவமேதமென்ற யாகங்களைப் பலஆயிரம்வருஷங்கள் செய்துகொண்டிருந்தான். நூறுயிரம் பசுக்களையும் பதினுயிரம்குதிரைகளையும் ஆயிரம்வருஷம்வரையில் திரும்பவும் திரும்பவும் கொடுத்துக்கொண்டிருந்தான். புருஷஶ்ரேஷ்ட! அவன் ஸோமயாகத்தால் தேவர்களையும், தனங்களால் பிராம்மணர்களையும், ப்ராத்தங்களால் பிதிருக்களையும், காமங்களால் தம்மனைவிகளையும் திருப்தியடைவித்தான். அசுவமேதமென்னும் பெரியயாகத்தில் ஐம்பதுமுழஅகலமும் நூறுமுழநீளமுமுள்ளதான பொற்பூமியையுண்டுபண்ணித் தக்ஷிணையாகஅளித்தான். கயன் கங்கைக்கரையிலிருக்கும் மணல்களுக்குச்சரியான எண்ணுள்ள பசுக்களைத் தானஞ்செய்தான். ஸ்ருஞ்சய! உன்னையும் உனதுபுத்திரனையும்விடத் தர்மம்முதலியநான்கிலும் மிகச்சிறந்தஅந்தக்கயனும் மரணமடைந்தான். உனதுபுத்திரனைக்குறித்துத் தாபப்படவேண்டாம். ஸ்ருஞ்சய! ஸங்கிருதியின்புத்திரனை ரந்திதேவனும் இறந்ததாகக் கேள்விப்படுகிறோம். அவன் பெரியதவஞ்செய்து இந்திரனை ஆராதித்து அவனிடமிருந்து, 'எங்களுக்கு மிகவும் அன்னமிருக்கவேண்டும். நாங்கள் அதிதிகளையும் அடையவேண்டும். எங்களுக்குப்ரத்தை விலகாமலிருக்கவேண்டும். நாங்கள் ஒருவரையும் யாசியாமலிருக்கவேண்டும்' என்னும் வரங்களைப்பெற்றான். கடுமையான நியமமுள்ள மஹாத்மாவும் கீர்த்தியுள்ளவனுமான ரந்திதேவனிடம் தங்களை நல்லகாரியத்தில் உபயோகிக்கவேண்டுமென்று வனத்திலும் கிராமத்திலுமிருக்கும் பசுக்கள் தாமாகவே வந்தன. அவனல்

யாகத்தில் உபயோகிக்கப்பட்ட பசுக்களின் தோற்சுமையிலிருந்து கசியும் ஜலம் சர்மண்வதியென்னும் பெயர்கொண்ட பெரியநதியாகிப் பிரஸித்திபெற்றிருக்கிறது. அந்த அரசன் பெரியஸைபையில் பிராம்மணர்களுக்கு அதிகமானஸுவர்ணங்களைத் தானஞ்செய்தான். அந்தக்காலத்தில் பிராம்மணர்கள், 1 'உமக்கு நூறுஸுவர்ணங் கொடுக்கப்போகிறார்; உமக்கு நூறுகொடுக்கப்போகிறார்' என்று சொல்லும்பொழுதே, 'உமக்கு ஆயிரம்ஸுவர்ணம்' என்றுசொல்லிக் கொடுத்துப் பிராம்மணர்களை அவன் சந்தோஷமாக அடைந்தான். புத்திமானந்திதேவன்வீட்டில் யாகத்திற்குள்ள பாத்திரங்கள், பற்றப்பண்டங்களுக்குள்ள பாத்திரங்கள், குடங்கள், தோண்டிகள், ஸ்தாலிகள், அண்டாக்கள், தாளக்கூடைகள் இவைகளில் தங்கமல்லாதது ஒன்றுமில்லை. ஸங்க்ருதியின்புத்திரனானந்திதேவன்வீட்டில் ஓர் இராத்திரிக்கு ஆயிரத்துநூற்றிருபதுபசுக்கள் உபயோகிக்கப்பட்டன. அங்கு மெருகிட்ட ரத்தினகுண்டலம்பூண்ட பரிசாரகர்கள் போஜனஞ்செய்பவர்களை, 'இப்பொழுது முன்போல மாம்ஸமில்லை. வேண்டியபடி பருப்புமுதலியவைகளைச் சாப்பிடுங்கள்' என்று கூவினர்கள். ஸ்ருஞ்சய! உன்னையும்உனதுபுத்ரனையும்விடத் தர்மமுதலியநான்கிலும் மிகசிறந்த அந்த ரந்திதேவனும மர்தது்வுட்டான. உனது புத்திரனைக்குறித்துப் பரிதபிக்கவேண்டாம். ஸ்ருஞ்சய! மஹாத்துமாவான ஸகரனும் இறந்ததாகக் கேள்விப்படுகிறோம். இக்ஷ்வாகுகுலத்திற்பிறந்து மனிதர்களுக்கில்லாத பராக்கிரமம்பெற்றுப் புருஷர்களில் புலிபோலவிளங்கும் அந்த ஸகரன் புறப்படும்பொழுது அவனுடைய அறுபதினாயிரம் புத்திரர்களும், சரத்காலத்தில் மேகமில்லாதஆகாயத்தில் சந்திரனை நக்ஷத்திரக்கூட்டங்கள் பின்தொடருவதுபோலப் பின்தொடர்ந்தார்கள். முற்காலத்தில் அவனது பராக்ரமத்தால் பூமி ஓரேகுடையின்கீழிருந்தது. ஆயிரம்அஸ்வமேதயாகங்களால் அவன் தேவர்களைத் திருப்தியடையச்செய்தான். தாமரையிதழ்போன்ற கண்களையுடைய ஸ்திரீகளாலும் படுக்கைகளாலும் நிறைந்தனவும் பொன்மயமான தூண்களுள்ளனவும் பொன்மயமுமான உப்பரிகைகளையும், மற்றும் பலபோக்கியவஸ்துக்களையும் தக்கபிராம்மணர்களுக்குத் தானஞ்செய்தான். அவன்கட்டளையின்படி பிராம்ம

---

1 'அவன் ஸதஸில் நூறுஸுவர்ணம் கொடுக்கத் தொடங்கும்பொழுது பிராம்மணர்கள் அதைப்பெற்றுக்கொள்ளாமல் நாங்கள் உமக்கு நூறுஸுவர்ணங்கள் கொடுக்கிறோமென்று சொல்லவும், பிறகு ஆயிரக்கணக்கான ஸுவர்ணத்தைக் கொடுத்து அவன் பிராம்மணர்களை அடைந்தான்' என்பது பழைய உரை.

ணர்கள் அப்பொருளைப் பிரித்து எடுத்துக்கொண்டார்கள். சமுத்திரத்தால் அடையாளம் பண்ணப்பட்ட பூமியைக் கோபத்தால் அவன் தோண்டும்படி செய்த காரணத்தால் அவன் பெயர் ஸம்பந்தமாக ஸாகரமென்னும் பெயரை ஸமுத்திரம் அடைந்தது. ஸ்ருஞ்சய! உன்னையும் உனது புத்திரனையும்விடத் தர்ம முதலிய நான்கிலும் மிகவும் மேலான அந்த ஸகரனே மரணமடைந்தான். உனது புத்திரனுக்காகத் தாபப்பட வேண்டாம். ஸ்ருஞ்சய! வேனபுத்திரனான பிருதுவென்னும் அரசனும் மரித்தானென்று கேள்விப்படுகிறோம். பெரியகாட்டில் மஹரிஷிகள் ஒன்றுசேர்ந்து, உலகங்களை இவன் பெருகச் செய்வானென்று எண்ணி, பிருதுவென்று பெயரிட்டு, அவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தார்கள். அவன் உலகத்தை [1] கஷ்டத்திலிருந்து காப்பதால் க்ஷத்திரியனென்றும், அவனைக்கண்ட பிராணிகள் யாவும் அவனிடம் [2] ராகம்கொண்ட காரணத்தால் ராஜாவென்றும் பெயருள்ளவனானான். அவன் உலகத்தை ஆளுங்காலத்தில் பூமி உழவின்றிப் பயிர்செழித்தது. மரங்களில் ஒவ்வோர் இலையிலும் தேனிழுகிற்று. பசுக்கள் யாவும் பதக்குப் பால் கறந்தன. மனிதர்கள் நோயில்லாமலும் ஒருவிதப் பயமுமில்லாமலும் வேண்டிய ஸித்திபெற்று வீட்டிலும் வெளிகளிலும் இஷ்டம்போல வஸித்துக்கொண்டிருந்தார்கள். அவன் ஸமுத்திரத்தில் செல்லுங்காலத்தில், ஜலமும் கல்லுப்போல நிலைத்திருந்தது. அவன் வில்லால் மலைகளும் பிளக்கப்பட்டன. அவனது கொடிக்குப் பங்கமுண்டாகவில்லை. அவன் தான்செய்த அச்வமேதமென்னும் பெரிய யாகத்தில் மூன்று ஆள் உயரமுள்ள இருபத்தொரு தங்க மலைகளைப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்தான். ஸ்ருஞ்சய! உன்னையும் உனது புத்திரனையும்விடத் தர்மம் ஞானம் வைராக்கியம் ஐச்வரியம் இந்நான்கிலும் எவ்வளவோ மேலான அந்தப் பிருதுவும் மரணமடைந்தான். உனது புத்திரனைக்குறித்துத் தாபப்படவேண்டாம். ஓ! ஸ்ருஞ்சய! என்ன நீ பேசாமல் தியானஞ்செய்கிறாய்? என்னுடைய இந்த வார்த்தையைக் கேட்கவில்லையா? என்னுடைய இந்த வார்த்தையானது மரணமடைபவனுக்கு முயற்சியாற் செய்யப்படும் பத்தியம்போலப் பயனற்றதாகாததாயிருக்குமா?' என்று சொன்னார்.

ஸ்ருஞ்சயன், 'ஓ! நாரதரே! ஆச்சர்யமான அர்த்தமுள்ளதும் நல்ல வாஸனையுள்ள மாலைபோன்றதும், மஹாத்மாக்களும் கீர்த்தியுள்ளவர்களும் புண்ணியஞ்செய்தவர்களுமான அரசர்ரிஷிகளைப்

---

1 ஆபத்து. 2 விருப்பம்.

பற்றியதும் சோகங்களை விலக்குவதுமான அந்த உமது வார்த்தை யைக் கேட்கிறேன். ஓ! மஹரிஷியே! உமது வார்த்தையானது பயனற்றதன்று. வேதத்தை உபதேசிக்கும் மஹரிஷியே! நாரதரே! உம்மைக் கண்டவுடன் நான் சோகமற்றவனானேன். அமிருதபானத்தில் போதுமென்னும் திருப்தியுண்டாகாததுபோல உமது வசனத்தைக் கேட்பதில் நான் திருப்தியடையவில்லை. திரும்பவும் கேட்க விரும்புகிறேன். குற்றமற்ற ஞானமுள்ள பிரபுவே! தாபத்தால் கொளுத்தப்பட்ட என்மீது உங்களுக்கு அனுக்ரஹமிருக்குமானால் இப்பொழுது எனது புத்திரன் ஜீவிக்கவேண்டும். உங்களுடைய அனுக்ரஹத்தால் நான் புத்திரனுடன் சேரவேண்டும்' என்று கேட்டான். நாரதர், 'பர்வதனென்னும் ரிஷியால் உனக்குக் கொடுக்கப்பட்டவனும் இவ்விதம் படுத்திருப்பவனும் ஸுவர்ணஷ்டீவி யென்று சொல்லப்பட்டவனும் உனது புத்திரனுமான ஹிரண்யநாப னென்பவனை ஆயிரம் பிராயமுள்ளவனைத் திரும்பவும் நான் உனக்குக் கொடுக்கிறேன்' என்று சொன்னார்.

இருபத்தொன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன், நாரதருக்கும் பர்வதருக்கும் சாபம் நேர்ந்ததையும், அதன் நிவிருத்தியையும் தர்மபுத்திரருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "அந்த ஸ்ருஞ்சயபுத்திரன் எங்ஙனம் ஸுவர்ணஷ்டீவியென்று சொல்லப்பட்டான்? அவன் பர்வதனென்னும் ரிஷியால் கொடுக்கப்படவும் மரிக்கவும் காரணமென்ன? மனிதன் ஆயிரம் வருஷம் ஆயுள்பெற்றிருக்கும் அக்காலத்தில் இளமைப்பருவமும் நிரம்பாத ஸ்ருஞ்சயபுத்திரன் மரித்ததெப்படி? அவனுக்கு ஸுவர்ணஷ்டீவியென்பது வேறும்பெயரா? அல்லது காரணமுள்ளதா? இவற்றை அறியவிரும்புகிறேன்" என்றுசொன்னார்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லத்தொடங்கினர். "ஓ! அரசரே! இதுவிஷயத்தில் நடந்தபடி உமக்குச் சொல்லுகிறேன். பிரபுவே! உலகத்தில் சிறந்த நாரதர் பர்வதரென மாமனும் மருமானுமான இரண்டு ரிஷிகள் முன்னொருகால் மானிடதேசங்களில் விளையாட விரும்பித் தேவலோகமிருந்து ப்ரீதியோடு இவ்வுலகம் வந்தார்கள். தவத்தையுடையவர்களும் அம்மானும் மருமானுமான அவ்விரண்டு ரிஷிகளும் பூதலத்தில் சஞ்சரித்து, தேவர்களுண்ணத்தக்க நெய்யையும் ஹவிஸ் முதலிய பரிசுத்தமான அன்னங்களையும் புஜித்து இஷ்

டப்படி இம்மானிட போகங்களை அடைந்து, பலவிடங்களிலும் சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். உலகத்தால் பூஜிக்கப்படும் அவ்விரண்டு முனிவர்களும், 'நம்மில் நல்லதோ கெட்டதோ மனத்திலுதிக்கும் எண்ணம் யாவற்றையும் ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்ளவேண்டும். இம்முறை தவறியவர் சாபத்திற்குள்ளாவோம்' என்று சந்தோஷமாகவே பிரதிஜ்ஞை செய்துகொண்டார்கள். இங்ஙனம் சபதம் செய்துகொண்ட அவ்விருவர்களும், ஸ்ருஞ்சயனென்னும் அரசனிடம்சென்று, 'ஓ! அரசனே! நாங்களிருவரும் உனது நன்மைக்காக உன்னிடம்சிலகாலம் வஸிக்கவிரும்புகிறோம். உள்ளபடிஎங்களுக்கு நீ அனுகூலமாயிருக்கவேண்டும்' என்று சொன்னார்கள். அரசனும் அங்ஙனமே அங்கீகரித்து அம்முனிவர்களை மரியாதைசெய்து உபசரித்துவந்தான்.

பின்னொருகாலத்தில், அவ்வரசன், தவத்தையே பொருளாகக்கொண்ட மஹாத்மாக்களான அந்த முனிவர்களைநோக்கி, விசேஷப்பிரீதியுடன், 'தேவ வடிவமுள்ள ஸுகுமாரி என்னும் இவ்வொரு பெண்தான் எனது கன்னிகை. இவள் குற்றமற்ற அங்கங்களுள்ளவளும் நன்னடக்கையும் நல்லசீலமுமுள்ளவளும் தாமரைமலரின் உள்ளிதழுக்கொப்பான நல்ல காந்தியுள்ளவளும் பார்க்கத்தக்கவளும் இளமைப்பருவமுள்ளவளும் மேனியுள்ளவளுமான கன்னிகையாயிருக்கிறாள். இவள் உங்களிருவரையும் உபசரித்துக்கொண்டிருக்க விரும்புகிறேன்' என்று தெரிவித்தான். உடனே, 'மிகவும் உத்தமம்' என்று அம்முனிவர்களால் சொல்லப்பட்ட அரசன், அந்தக் கன்னிகையை அழைத்து, 'பெண்ணே! இந்தப் பிராம்மணர்களைத் தேவர்களைப்போலவும் பிதிர்க்களைப்போலவும் உபசரித்துக்கொண்டிருக்க வேண்டும்' என்று கட்டளையிட்டான். தர்மத்தைச்செய்யும் தன்மையுள்ள அந்தக் கன்னிகையும் பிதாவினிடம், 'அப்படியே செய்கிறேன்' என்றுசொல்லி அவன் கட்டளைப்படி அம்முனிவர்களை மரியாதையுடன் உபசரித்துவந்தாள். அவ்வுபசாரத்தாலும் ஒப்பற்ற அவளது லாவண்யத்தாலும் காமன் பலாத்காரமாக நாரதரை விரைவில் அடைந்தான். பிறகு, அந்த மஹாத்மாவின் மனத்திலுள்ள காமம் சுக்லபக்ஷத்தின் தொடக்கத்திலிருக்கும் சந்திரனைப்போலக் கிரமமாக ஓங்கிவளர்ந்தது. தர்மம் தெரிந்த அந்த நாரதர், கொடுமையான காமத்தை வெட்கத்தால் மஹாத்மாவும் மருகருமான பர்வதரிடம் தெரிவிக்கவில்லை. பிறகு, பர்வதரோ இங்கிதங்களாலும் தமது தவவலிமையாலும் அந்த நாரதரைக் காமவிடாயுள்ளவராயறிந்துகொண்டார். உடனே, மிகக்கோபங்கொண்டு இந்த நாரதரைச்சபிக்கத்தொடங்கினர். 'ஓ! பிராம்மணரே!

'நல்லதோ கெட்டதோ மனத்திலுதித்த எண்ணம் யாவற்றையும் நாம் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள வேண்டும்' என்று என்னுடன் மனப்பூர்வமாக நீர் பிரதிஜ்ஞைசெய்துவிட்டு இப்பொழுது நீரே அதை மாற்றிவிட்டீர். ஸுகுமாரியென்னும் பெண்ணிடம் உமக்குண்டான காமத்தை நீர் எனக்குச் சொல்லவில்லை. பெரியவரும் பிரம்மசாரியும் தவமுள்ளவரும் பிராம்மணருமாயிருந்தும் நாம் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட சபதத்திலிருந்து நீர் நழுவினது எனக்குப் பொறுக்கவில்லை ; அந்தக்காரணத்தால் கோபங்கொண்டு நான் உம்மைச் சபிக்கிறேன். ஸுகுமாரி உமக்குப்|பாரியையாவாளென்பதில் சந்தேகமில்லை. பிரபுவே! மணம்புரிந்த க்ஷணமுதல், உமது சொந்த உருவம் நீங்கிக் குரங்கு உருவமாக உம்மை அந்தப் பெண்ணும் மற்ற மனிதர்களும் பார்ப்பார்கள்' என்றுசபித்தார். அம்மானை அந்தநாரதர் மருகரான பர்வதரின் சாபவாக்கியத்தைக் கேட்டு, 'அடா! தவம், பிரம்மசரியம், ஸத்தியம், தமம் இவைகளிருந்தும், நிலைத்த தருமமிருந்தும் உனக்கு ஸ்வர்க்கமில்லாமல் போகட்டும்' என்று பிரதிசாபங் கொடுத்தார். பொறுமையால் மிகக் கோபங்கொண்டு அந்த முனிவர்கள் ஒருவருக்கொருவர் சாபமிட்டது, இரண்டு சிறந்தயானைகள் கோபத்துடன் ஒன்றுக்கொன்று எதிர்த்தது போலிருந்தது. ஓ! பாரதரே! பேரறிவுள்ள பர்வதர் தமக்குத் தேஜஸுள்ள காரணத்தால் நியாயப்படி பூஜிக்கப்பட்டவராய் இந்தப் பூமியெங்கும் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார். பிறகு, பிராம்மண ச்ரேஷ்டரான நாரதர் குற்றமில்லாத ஸ்ருஞ்சயனுடைய புத்திரியான ஸுகுமாரியென்னும் அக்கன்னிகையைத் தர்மப்படி மணம்புரிந்துகொண்டார். அக்கன்னிகையோ, பர்வதரது சாபத்திற்கேற்றபடி உடனே அந்த நாரதர் வானர உருவமாயிருப்பதைக் கண்டாள். ஆகிலும், அன்புள்ள ஸுகுமாரி குரங்குபோன்ற முகமுள்ள அந்த நாரதரிஷியைச் சற்றும் அவமதியாமல் விவாகத்திற்குரிய மந்திரங்களின் விதிப்படியே விசேஷப் பிரீதியுடன் பர்த்தாவாக உபசரித்து வந்தாளே தவிர வேறு தேவனையும் ரிஷியையும் யக்ஷனையும் மனத்திலும் பதியாக நினைத்தாளில்லை. பின்னொருகாலத்தில் பூஜ்யரான பர்வதர் ஒருவருமில்லாத ஓர் அரண்யம் செல்லும்பொழுது அங்கு நாரதரைக் கண்டார். உடனே, பர்வதர், நாரதரிடம் சென்று நமஸ்கரித்து, 'பிரபுவே! நான் ஸ்வர்க்கலோகஞ் செல்லும்படி நீங்கள் எனக்கு அனுக்ரஹஞ் செய்யவேண்டும்' என்று வேண்டினர். உடனே, பயந்து வருத்தத்துடன் கைகட்டி வணக்கமாக நிற்கும் பர்வதரைக்கண்டு, நாரதர், தாமும் மிக வருத்த

மூற்று, 'அப்பா! குரங்கு உருவமாக என்னை நீ முதலில் சபித்த காரணத்தால் நானும் கோபத்தால், 'இதுமுதல் உனக்கு ஸுவர்க்கத்தில் வாஸமில்லாமற்போகட்டும்' என்று உன்னைச் சபித்தேன். எனக்குப் புத்திரனென்றுசொல்லத்தக்க உனக்கு இந்தக்காரியம் அழகோ?' என்றுசொன்னர். உடனே, அவ்விரண்டுமுனிவர்களும் ஒருவருக்கொருவர் சாபங்களை விலக்கிக்கொண்டார்கள். உடனே, தமது உருவம் வந்து தேவவடிவத்தால்ஜ்வலிக்கும் அந்தநாரதரைக் கண்டு பரபுருஷரென்றுசங்கைகொண்டு ஸுகுமாரி விலகத்தொடங்கினள். குற்றமில்லாத ஸுகுமாரி அவ்விதம் விலகுவதைக்கண்ட பர்வதர், 'இவர் உன்பர்த்தாவென்பதில் ஸந்தேகம்வேண்டாம். தர்மத்தில் உத்தமமானபுத்தியுள்ளவரும் உலகெல்லாம் பூஜிக்கப்படுபவருமான நாரதரிஷியென்னும் இந்தப்பிரபு உன்னிடத்திலேயே உறுதியான மனமுடையவர். இதில் உனக்குச் சந்தேகம்வேண்டாம்' என்று பலவிதமாகத் தேர்ச்சியடையும்படிசெய்தார். மஹாத்மாவானபர்வதர் சொன்னதைக்கேட்டுத் தன்பர்த்தாவுக்கு நடுவில் தோன்றிய உருவம் சாபதோஷத்தால் வந்ததென்று தெரிந்துகொண்டு ஸுகுமாரியும் முன்போல ஸ்வபாவமாயிருந்தாள். உடனே, பர்வதர் ஸ்வர்க்கஞ்சென்றார். நாரதரும் வீடுசென்றார். ஓ! அரசரே! எல்லாவற்றையும் நேரில்கண்ட பூஜ்யரான அந்தநாரதரிஷி இதோ இருக்கிறார். கேட்டால், நடந்தபடி உமக்குச்சொல்வார்" என்று சொன்னர்.

முப்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(நாரதர், தர்மபுத்திரருக்கு ஸ்வர்ணஷ்டீவியின்சரித்திரதைதைக் கூறியது.)

பிறகு, பாண்டுபுத்திரரான தர்மபுத்திரர், நாரதரைப்பார்த்து, "பகவானே! ஸுவர்ணஷ்டீவியின் உத்பத்தியைக் கேட்கவிரும்புகிறேன்" என்றுசொன்னர்.

தர்மராஜரால் இவ்விதஞ்சொல்லப்பட்ட அந்தநாரதமுனிவர் ஸுவர்ணஷ்டீவியைக்குறித்து நடந்தபடி சொல்லத்தொடங்கினர்: "ஓ! மஹாபாஹுவே! ஸ்ரீகிருஷ்ணபகவான் சொன்ன இந்தக்கதை இங்ஙனமே நடந்தது. இந்தக்கதையின் மிச்சத்தை உனக்குச் சொல்லுகிறேன். நானும் என்மருமானபருவதனும் ஜயமுள்ளவர்களிற் சிறந்த ஸ்ருஞ்சயனிடம் வஸிக்கவிரும்பிச் சென்றோம். அப்பொழுது, அவனால் விதிப்படிபூஜிக்கப்பட்டநாங்கள் எங்களிஷ்டம்போல அவன்

வீட்டில் வஸித்துக்கொண்டிருந்தோம். மழைக்காலஞ்சென்று வெளியிற்புறப்படவேண்டியஸமயத்தில், பர்வதன், 'நாம் இவ்வரசன் வீட்டில் மிகவும் பூஜிக்கப்பெற்று வஸித்துக்கொண்டிருந்தோம்; ஆகையால், அவன்க்ஷேமத்தைக் கருதவேண்டும்' என்று என்னிடம் தெரிவித்தான். பிறகு, நான், 'மருகனே! இதெல்லாம் செய்யவல்லவன் நீ. ஸ்ருஞ்சயன் எவ்விதவரத்தை விரும்புகிறானே அதைக்கேட்டு உனக்கு இஷ்டமிருந்தால், நம்மிருவர்களுடையதவத்தாலும் அவ்வரம் ஸித்திபெறும்படி செய்துகொடு' என்று பர்வதனுக்குச்சொன்னேன். ஓ! குருபுங்கவ! உடனே, பர்வதன், ஜயமுள்ளவர்களிற்சிறந்த ஸ்ருஞ்சயனைப் பிரியமாயழைத்து, 'ஓ! அரசனே! உண்மையாகச் செய்யப்பட்ட உனதுபூஜைகளால் நாங்களிருவரும் ஸந்தோஷமடைந்தோம். நாங்கள் உனக்கு ஒருமரியாதைசெய்ய விரும்புகிறோம். மஹாராஜனே! தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் யாதொருகேடும் வராதிருக்கும் வண்ணம் உனக்கிஷ்டமானவரத்தைக் கேட்டுக்கொள்' என்றுசொன்னன். உடனே, ஸ்ருஞ்சயன், 'நீங்கள் ஸந்தோஷமுள்ளவர்களாயிருப்பீர்களானால் அதுவே எனக்குப் போதுமானது. எனக்கு அதுவே உத்தமமான பயனைக்கொடுக்கத்தக்க பெரியலாபம்' என்றுசொன்னன்.

இவ்விதஞ்சொன்ன அரசனைப்பார்த்து, பர்வதன், 'ஓ! அரசனே! வெகுகாலமாக உன்மனத்திலிருக்கும் எண்ணத்தைக் கேள். நீ இந்திரனுக்கொப்பான காந்தியுள்ளவனும் உறுதியானநியமமுள்ளவனும் பராக்கிரமசாலியும் சிரஞ்சீவியுமான புத்திரனை விரும்பிக்கொண்டிருக்கிறாய். உன்னுடைய விருப்பம் நிறைவேறும். உனதுமனத்தில் இவ்வண்ணம் தேவராஜனை அவமதிக்கவேண்டுமென்றிருக்கிறது. ஆகையால், அந்தப்புத்திரன் சிரஞ்சீவியாயிருக்கமாட்டான். அப்புத்திரன் ஸுவர்ணத்தைத்தக்கக்குவதால் ஸுவர்ணஷ்டீவி என்று சொல்லப்படுவான். தேவராஜன்போன்ற காந்தியுள்ள அந்தக்குமாரனைத் தேவராஜனிடமிருந்து ரக்ஷிக்கவேண்டும்' என்று திரும்பவும்சொன்னன். மஹாத்மாவான பர்வதனுடையவாக்கியத்தைக்கேட்ட ஸ்ருஞ்சயன், அப்பொழுது, 'ஓ! மஹரிஷியே! இந்தஇவ்விதம் இல்லாமலிருக்கவேண்டும்; உங்களிருவர்களின் தவவலிமையாலும் எனதுபுத்திரன் சிரஞ்சீவியாயிருக்கவேண்டும்' என்று மிக்க அனுக்ரஹத்தைவேண்டினன். பர்வதன் இந்திரனைவேண்டி அவ்வரசனுக்கு யாதொருமறுமொழியும் சொல்லவில்லை. அப்பொழுது, வருத்தமுற்றுநிற்கும் அவ்வரசனைப்பார்த்து நான், 'மஹாராஜனே! அந்தச் சமயம் என்னை நினை; யமன்வசம் போனாலும் உன் அருமைமந்

புத்திரனே யாதொரு குறைவுமின்றி அங்ஙனமே திரும்ப உனக்குக் கொடுக்கிறேன்; நீ வருத்தப்பட வேண்டாம்' என்று திரும்பவுஞ் சொன்னேன். அரசனுக்கு இவ்விதம் சொல்லிவிட்டு, நாங்களிருவரும் இஷ்டம்போலச் சென்றோம். ஸ்ருஞ்சயனும் தன்னிஷ்டப்படி தன் அரண்மனை வந்துசேர்ந்தான். பின்பு, ஒருசமயத்தில் ஸ்ருஞ்சயனுக்கு மிகவும் பிரகாசிக்கும் தேஜஸுள்ள வீரனை ஒரு புத்திரனுண்டானான். அந்தப் புத்திரன் பெரிய குளத்தில் தாமரைப்பூ வளர்வதுபோலக் காலத்திற்குத்தக்கபடி வளர்ச்சியடைந்தான். அந்தப்புத்திரன் ஸுவர்ணத்தைக்கக்கும் காரணத்தால் ஸுவர்ணஷ்டீவி என்னும் பெயரைஅடைந்தான். அஃது இவ்வுலகெல்லாம் பெரிய விந்தையாயிருந்தது. அறிஞர்களான மஹரிஷிகள் ஸ்ருஞ்சயனுக்கு அளித்தவரத்தை அறிந்த தேவேந்திரன், தனக்கு அவமதிநேருமோ வெனப் பயந்து ஆசார்யராகிய பிருஹஸ்பதியின் அபிப்பிராயப்படி எப்பொழுதும் அந்தப் புத்திரனின் ஆபத்திற்கு இடம்தேடிக்கொண்டேயிருந்தான். பின்பு, ஒருகாலத்தில், அவன், உருவங்கொண்டு எதிரிலிருக்கும் தன் திவ்யாஸ்த்ரமான வஜ்ரத்தைநோக்கி, 'ஓ! வஜ்ரமே! பர்வதரிஷி சொன்னபடி ஸ்ருஞ்சயனுடைய புத்திரன் வளர்ந்து தன்வலிமையால் என்னை அவமதிப்பாஞ்கையால், நீ இப்போதே புலி வேஷம்பூண்டு அவ்வரசன் புத்திரனைக் கொல்லவேண்டும்' என்று கட்டளையிட்டான். பகையாளிகளை வெல்லும் வல்லமையுள்ள வஜ்ரமும் இந்திரனுல் இங்ஙனம் ஏவப்பட்டு அந்தக் குமாரனைக்கொல்ல எப்பொழுதும் இடம்பார்த்துக்கொண்டேயிருந்தது. ஸ்ருஞ்சயனும், இந்திரனுக்கு ஒப்பாகவிளங்கும் புத்திரனை அடைந்து ஸந்தோஷமுள்ளவனுகி அந்தப்புரத்திலிருந்தவர்களுடன் எப்பொழுதும் அரணியவாஸம் செய்துகொண்டிருந்தான். பின்னொருகால், கங்கைக்கரையில் ஒருவருமில்லாத ஒரு வனத்தில் அந்தப் பாலன் விளையாடவேண்டித் தாதியுடன் சென்றான். எறக்குறைய ஐந்துபிராயமுள்ளவனும் பெரிய யானையின் பலமுள்ளவனுமான அப்பாலகன் வேகமாக ஓடிவரும் ஒரு புலியைக்கண்டான். உடனே, நடுக்கமுற்ற அப்பாலகனை அரசகுமாரன் புலிபாலடிக்கப்பட்டு உயிரிழந்து பூமியில் விழுந்தான். உடனே, தாதியும் கூச்சலிட்டாள். தேவராஜாவின் மாயையால்வந்த அந்தப் புலியும் அரசகுமாரனைக் கொன்றவுடன் அங்கேயே மறைந்துபோயிற்று. மிகவும் கஷ்டத்துடன் கூச்சலிடும் தாதியின் ஒலியைக்கேட்டு ஸ்ருஞ்சயனென்னும் அரசன் தானே அவ்விடம் ஓடினன். உதிரங்களுறிஞ்சப்பட்டு உயிரிழந்து, ஆகாயத்திலிருந்து நழுவிவிழுந்த சந்திரமண்டலம்போல,

ஆனந்தமில்லாமல் படுத்திருக்கும் அந்தக் குழந்தையை அவன் கண்டான். உடனே, அடிபட்ட மார்புடன் உதிரத்தால் நனைக்கப்பட்டிருக்கும் அந்தப் புத்திரனை மடியிலெடுத்துப் போட்டுக்கொண்டு ஸ்ருஞ்சயன் கஷ்டத்துடன் கதறினான். உடனே, அந்தக் குழந்தையின் தாய்களனும் சோகத்தாலழுதுகொண்டு ஸ்ருஞ்சயனிருக்கும் அவ்விடத்திற்கு ஓடிவந்தார்கள். பிறகு, ஸ்ருஞ்சயன் என்னிடத்தில் மனத்தைச்செலுத்தி என்னையே சிந்தித்தான். அப்பொழுது, அவனுடைய சிந்தனையை அறிந்து நான் அவனுக்கெதிரில் தரிசனம்கொடுத்தேன். சோகத்தால் கஷ்டப்படும் ஸ்ருஞ்சயனை, யதுவீரானகிருஷ்ணன் உனக்கு உபதேசித்த இக்கதைகளைக் கேட்பித்தேன். உடனே, இந்திரனுக்கெதிர்ப்ப இருக்கவேண்டுமேயல்லாமல் வேறுவிதமிருக்க முடியாதென்று சொல்லி அந்தப் பிள்ளையையும் பிழைக்கச்செய்தேன். அதற்குப்பிறகு, ஸுவர்ணஷ்டீவியென்னும் குமரன் மிக்க புகழையும் வீரியத்தையும் அடைந்து தாய்தந்தைகளையும் ஸந்தோஷிப்பித்தான். பயங்கரமான பராக்ரமமுள்ள ஸுவர்ணஷ்டீவியானவன் தகப்பன் ஸுவர்க்கஞ்சென்றதும் ஆயிரத்துநூறு வருஷம் அரசாட்சிசெய்திருந்தான். அந்தக்காலத்தில் அதிக தக்ஷிணையுள்ள பல பெரிய யாகங்களைச்செய்து தேவர்களுக்கும் பிதிர்க்களுக்கும் திருப்தியைச் செய்தான். அவன் தன் வம்சத்தின் தொடர்ச்சிக்குக் காரணமான பல புத்திரர்களையுண்டுபண்ணி நெடுங்காலஞ் சென்றபின் பரலோகமடைந்தான். ஓ! ராஜஶ்ரேஷ்டனே! நீயும் உனக்குண்டான இந்தச் சோகத்தை விலக்கிக்கொள். ஸ்ரீகிருஷ்ணபகவானும் மஹரிஷியான வியாஸரும் சொல்லுகிறபடி உனது தகப்பன் பாட்டன் பரம்பரையாய்வந்த ராஜ்யத்தை ஒப்புக்கொண்டு பரிபாலனம் பண்ணு. பரிசுத்தமான பெரிய யாகங்களைச்செய்து இஷ்டமான லோகத்தை நீ அடையலாம்" என்றுசொன்னார்.

முப்பத்தோராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வியாஸர் தர்மபுத்திரருக்குத் தத்வோபதேசம் செய்ததும், தர்மபுத்திரர் ஆஶ்ரமங்களின் சிறப்பைக் கூறும்படி வியாஸரை விஜ்ஞாபித்ததும்.)

மௌனமாகச் சோகப்படும் தர்மபுத்திரராஜரை நோக்கி, தர்மத்தின் உண்மையையறிந்த வியாஸமஹரிஷி, திரும்பவும் சொல்லத் தொடங்கினர். "ஓ! தர்மரைக்கண்ணனே! க்ஷத்திரியர்களுக்குப்

பிராணிகளைக் காப்பதுதான் தர்மம்; உலகத்திற்குத் தர்மமே பிரமாணம். எப்பொழுதும் தர்மத்தை அனுஸரிக்கவேண்டும். ஆகையால், தர்மத்தைச்செய். அரசனே! உனது குலபரம்பரையில் வந்த ராஜபதத்தைக் காப்பாற்று. ஓ! பரதஸ்ரேஷ்ட! வேதத்தால் நிச்சயிக்கப்பட்டுப் பிராம்மணர்களிடம் நிலைபெற்றிருக்கும் தர்மம் யாவும் பிரமாணங்களுள் சாஸ்வதமான பிரமாணமாகும். அந்தத் தர்மத்தையெல்லாம் ரக்ஷிக்கக் கடமைப்பட்டவன் க்ஷத்திரியனே. அங்ஙனமிருக்க, அரசன் கட்டளையை மீறுகிறவனும் உலகநடைக்கு இடையூறு செய்கிறவனுமான ராஜ்யத்திலுள்ள அந்த மனிதனது கையை வெட்டிவிட வேண்டும். அவிவேகமுள்ள ஸைவகனனும் புத்திரனனும் ரிஷியானனும் பிரமாணமான தர்மத்தை அப்பிரமாணமாகச்செய்கிற அந்தப்பாவியை எல்லா உபாயத்தாலும் அடக்கவேண்டும்; அல்லது, கொல்லவேண்டும். இந்த முறைப்படி நீதி செலுத்தாமலிருந்தால் அரசனைப் பாவமடையும். நாசத்தையடையும் தர்மத்தைப் பாதுகாவாத அரசனே தர்மத்தைக் கொன்றவனாவான். தர்மத்தைக் கெடுத்தவர்களான துர்யோதனாதியர்கள் தாம் தங்கள் சேனையுடன் உன்னால் கொல்லப்பட்டார்கள். ஓ! பாண்டவ! ஸ்வதர்மத்தில் ஸ்திரமாயிருக்கும் நீ என் சோகப்படுகிறாய்? அரசன் அடிக்கவும் வேண்டும்; கொடுக்கவும் வேண்டும்; தர்ம முறைப்படி பிரஜைகளைப் பாதுகாக்கவும் வேண்டும்" என்று சொன்னார்.

தர்மபுத்திரர், "தர்மங்கள் யாவும் அறிந்தவர்களிற் சிறந்த மஹரிஷியே! நீங்கள் சொல்லும் வசனத்தில் நான் சங்கைப்படவில்லை. தர்மமென்பது உங்களுக்குப் பிரத்தியக்ஷமன்றோ? ஆனால், கொல்லத்தகாத அனேகர்களை ராஜ்யநிமித்தம் நான் கொன்றுவிட்டேன். பிராம்மணரே! அந்தக் காரியங்கள் என்னைத் தகிக்கவும் வேகவும் செய்கின்றன" என்று சொன்னர். வியாஸர் சொல்லத் தொடங்கினர்: "ஓ! பாரத! மனிதன் நன்மையோ தீமையோ எவற்றையும் ஈச்வரனல் ஏவப்பட்டுச் செய்கிறனை? அல்லது, ஸ்வதந்திரனுகவே செய்கிறனை? உலகத்தில் ஸுகதுக்கமென்னும் பயன் காரணமின்றிப் பலாத்காரமாகச் செய்யப்படுகிறதா? அல்லது, முன்செய்த கர்மத்தாலுண்டாகிறதா? இவைகளில் மனிதன் நல்லதையும் கெட்டதையும் ஈச்வரனல் ஏவப்பட்டே செய்கிறனென்பது உண்மையாயிருந்தால் காட்டிலிருக்கும் மரத்தைக் கோடாலியால் மனிதன் வெட்டுவானகில் அப்பாவம் வெட்டின மனிதனுக்கே தவிர அவனேவிய கோடாலிக்குச் சிறிது

மில்லையென்பது எங்ஙனமோ, அங்ஙனமே அக்காரியங்களின் பயன் ஈஸ்வரனைச் சேரவேண்டும். அறிவுள்ள மனிதன் ஆயுதத்தை எடுத்துப் போடுவதால் அறிவற்ற ஆயுதம்போலல்லாமல் அந்தக் கர்மத்தின் பயன் அவனைத் தொடருமென்று சொன்னால், அவ்வாயுதங்களை உண்டுபண்ணின அறிவுள்ள மனிதனை அப்பாவம் ஏன் தொடராது? கௌந்தேய! அங்ஙனம் தொடர்வது நியாயமா? ஒருவன் செய்த கர்மத்தின் பயன் மற்றொருவனை எங்ஙனம் அடையக் கூடும்? ஆகையால், கர்மத்தின் பயன் யாவும் ஈஸ்வரனையே சேரவேண்டும். மனிதன் புண்ணிய பாவமெனக் கர்மங்களைத் தானே ஸ்வதந்திரனாகச் செய்கிறான்; இவனை ஏவும் ஈசனென்பவனை இல்லையென்றால், அப்போதும் நீ செய்தது கெட்டதன்று. எனெனில், எந்த மனிதனும் எப்போதும் முன் செய்த கர்மத்திற்கு மாறாக நடக்க வல்லவனல்லன். இந்தக் காரியத்திற்கு மூலமான முன் கர்மத்தையும் நாமே செய்திருந்தாமாகிலும் ஆயுதஞ் செய்தவனுக்கு அச்செய்கைபோல அது நமக்குப் பாவமாகாது. கர்மப்ரவாகம் அனாதிபாம்.

மனிதனுக்குப் பலாத்காரமாகவே கொலைபுண்டாவது உறுதியென்று எண்ணுவாயானால், அப்பொழுதும் நீ செய்தது கெட்ட காரியமன்று. இவ்வபிப்பிராயத்தில் முன்னும் பின்னும் யாதொரு நன்மையும் தீமையும் உண்டாகக் காரணமில்லை; அல்லது, உலகத்தில் புண்ணிய பாவமென்னும் காரணத்தாலே ஸுகமும் துக்கமும் வருமென்று சொல்லுவது யுக்தமென்று நினைப்பாயானால், அப்புண்ணிய பாபங்களும் சாஸ்திரம் ஒன்றாலேயே வெளியாகிறபடியால் அரசர்களுக்கு ஆயுதமெடுப்பது புண்ணியமென்று சாஸ்திரத்தில் சொல்லியபடி யுக்தமென்று உலகத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டதுதான். உலகத்திலுள்ள விதிப்படி அரசனுக்கு ஆயுதமெடுப்பது நியாயமானாலும் அவ்விதமிருப்பதில் நல்ல காரியம்போலக் கெட்ட காரியமும் அவனறியாமல் வந்துவிடுமென்று உனக்குத் தோற்றுமானால், ஓ! அரசப்புலியே! அதற்காகக் கெட்ட காரியத்துக்குக் காரணமாயிருப்பதைத் தள்ளிவிட்டு நிலைத்ததான சுபகாரியத்தின் பயனைத் தெரிந்துகொள். அதைவிட்டுச் சோகத்தில் இங்ஙனம் மனத்தைச் செலுத்தவேண்டாம். பிறர் இகழத்தக்கதாயினும் விதிப்படியுள்ள ஸ்வதர்மத்திலிருக்கும் நீ இங்ஙனம் சரீரத்தை விடத்துணிவது உனக்கு அழகன்று. ஓ! பாரத! சரீரத்துடன் ஜீவித்திருப்பவன் கெட்ட கர்மங்களை விலக்கத்தக்க பிராயச்சித்தங்களை விதிப்படி செய்துகொள்ள முடியும். சரீரத்தைஇழந்தவன் அவ்விதம் செய்யமுடியாமல் தாழ்வை அடையவேண்டும். ஆகை

யால், ஓ! அரசனே! நீ உயிரோடிருந்தால் பிராயச்சித்தம் செய்து கொள்ளக்கூடும். பிராயச்சித்தம் செய்துகொள்ளாமல் சரீரத்தை விட்டுக் கஷ்டப்படப்போகிறாயே" என்று சொன்னர்.

அந்த வார்த்தையைக்கேட்டுத் தர்மபுத்திரர் சொல்லத்தொடங் கினர். "ஓ! பிதாமஹரே! ராஜ்யத்தில் ஆசைபிடித்த என்னிமித்தமாகப் பிள்ளைகளும் பேரர்களும் உடன்பிறந்தார்களும் தந்தைகளும் பிதாமஹர்களும் மாமனர்களும் குருக்களும் அம்மான் களும் மருமான்களும் ஸம்பந்திகளும் [1]சினேகிதர்களும் தாழர்களும் ஞாதிகளுமாகிய மஹாத்மாக்களான க்ஷத்திரியர்கள் பலதேசங்களி லிருந்துவந்த பல அரசர்கள் யாவரும் கொல்லப்பட்டார்கள். ஓ! தபோதனரே! அடிக்கடி யாகம்செய்பவர்களும் தர்மத்தில் விடா முயற்சியுள்ளவர்களும் வீரர்களுமான அவ்வித அரசர்களைக்கொன்ற நான் எந்தக்கதி அடையப்போகிறேனோ? திரும்பவும் திரும்பவும் நினைத்து நினைத்து அந்தச்சோகத்தால் எப்பொழுதும் நான் தகிக் கப்படுகிறேன். ஸ்ரீமான்களும் அரசர்களிற் சிங்கம்போன்றவர்களு மான அந்த வீரர்களை இழந்த இந்தப்பூமியையும் கடோரமான ஞாதி களின் வதத்தையும் பலவிதமாகக் கொல்லப்பட்ட மற்றக்ஷத்திரியர் களையும் கோடிக்கணக்காக மாண்டுபோன மற்றப்பிராணிகளையும் பார்த்துப் பரிதபிக்கிறேன். ஓ! பிதாமஹரே! பதிகளையும் பிள்ளை களையும் உடன்பிறந்தாரையும் இழந்த அந்த உத்தமஸ்திரீகளின் அவஸ்தை இப்பொழுது எவ்விதமாக இருக்கிறதோ? 'விருஷ்ணி களுடன் சேர்ந்தவர்களும் பாவிகளுமான பாண்டவர்கள் நாசஞ் செய்தார்கள்' என்று பாண்டவர்களான எங்களைத் திட்டிக்கொண்டு மெலிந்தவர்களும் துயரமுள்ளவர்களுமாகி அவர்கள் பூத லத்தில் விழுந்து புரளுவார்கள். பிராம்மண ஸ்ரேஷ்டரே! பதி களையும் புத்திரர்களையும் தந்தைகளையும் உடன்பிறந்தார்களையும் காணுத அந்த ஸ்திரீகள்யாவரும் பிரியத்திலுல் தம்முயிரையும் இழந்து அந்தகன்வீடு செல்வார்களென்பதில் எனக்குச் சற்றேனும் ஐயமில்லை. தர்மத்தை நன்கு ஆராய்ந்து கவனித்தால் நாம் ஸ்த்ரீவதத்தையும் அடையப்போகிறோம். அவ்விதமான நாம் நண்பர் களைக் கொலைசெய்து அழிவில்லாப் பாவத்தைஅடைந்து தலைகீழாய் நரகத்தில் விழப்போகிறோம். ஓ! பரமபூஜ்யரே! கடுந்தவஞ்செய்து இச்சரீரத்தை ஒழித்துவிடுகிறேன். ஓ! பிதாமஹரே! ஆகிலும், ஆச்ரமங்களின் விசேஷத்தை நீர் எனக்குச் சொல்லவேண்டும்" என்று சொன்னர்.

---

1 'ஸுஹ்ருதஃ வயஸ்யாஃ' என்பது மூலம்.

ஸ்ரீ மஹாபாரதம்.

முப்பத்திரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வியாஸர், போரில்மடிந்த அரசர்களின் ஸந்ததிகளை அவரவர் நாட்டை ஆளச்செய்து அஸ்வமேதம் செய்யும்படி தர்ம புத்திரருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரரின் அந்த வசனத்தைக்கேட்ட வியாஸமஹரிஷி, புத்தியால் நன்றுயாலோசித்துத் திரும்பவும் பாண்டவரான தர்மபுத்திரரைநோக்கிச் சொல்லத்தொடங்கினர். "ஓ! க்ஷத்திரியஸ்ரேஷ்டனை அரசனே! க்ஷத்திரியர்களுக்குரிய தர்மத்தை நினைத்துப்பார்த்து நீ இச்சோகத்தை விலக்கிக்கொள்ளவேண்டும். ஸ்வதர்மத்தை முன்னிட்டல்லவோ இந்த க்ஷத்திரியர்கள் கொல்லப்பட்டார்கள். பூர்ணமான ஸம்பத்தையும் இப்பூமியில் பெரியகீர்த்தியையும் விரும்பிப் பிறர்களைக் கொல்லமுயன்ற அந்தக்ஷத்திரியர்கள் காலத்தால்முடிவடைந்தார்கள். நீயும் பீமனும் அர்ஜுனனும் இரட்டையரும் அவர்களைக் கொன்றவர்களல்லர். காலம், தான்செய்யும் மரணவிதிப்படி அந்த மனிதர்களினுயிரைக் கொண்டுபோயிற்று. காலத்துக்குத் தாயென்றும் தந்தையென்றும் அல்லது வேறெதுவென்றும் அபிமானப்படக் கூடியதில்லை. பரதஸ்ரேஷ்டனே! பிராணிகளின் புண்ணிய பாபங்களுக்குச் சாக்ஷியாயிருக்கும் அக்காலம் இந்த உங்களுடைய யுத்தத்தைப் பேருக்குக் காரணமாகக்கொண்டு அவர்களை ஸம்ஹாரம்பண்ணிற்று. பிராணிகளைக்கொண்டு பிராணிகளைக் கொல்லும்படிசெய்வது காலத்துக்குள்ள ஈஸ்வரத்தன்மையாகும். ஸுகதுக்கங்களைக்கொடுப்பதும் புண்ணியபாபங்களுக்குச் சாக்ஷியாயிருப்பதுமாகிய இக்காலத்தையே கர்மத்தின் பிரத்தியக்ஷ உருவமெனத் தெரிந்துகொள். சிறந்த கைகளையுடையவர்களான அவர்களைக் காலனுக்குவசமாக்கி நாசமடையச்செய்ய அவர்களுடைய முன்செய்த கர்மங்கள் காரணங்களென்றும் தெரிந்துகொள். விதியின் ஏவுதலால் இவ்விதமான கர்மத்தைச்செய்த நீயும் உன்னைக் காலத்தில் அடங்கிய ஆசாரமுள்ளவனென்று தெரிந்துகொள். தச்சனால் செய்யப்பட்ட யந்திரம் அதைச்சுழற்றிவிடும் மனிதனிடம் அடங்கியிருப்பதுபோல இவ்வுலகனைத்தும் காலத்துடன்சேர்ந்த கர்மத்தால்சுழற்றப்படுகிறது. காரணம் தெரியாமல் மனிதனுக்குநேரும் பிறப்பையும் இறப்பையும் கண்டால் இச்சோகமும் சந்தோஷமும் பயனற்றனவாகும். ஓ!

ராஜனே! இதுவிஷயத்தில் இல்லாததான பந்தத்தை உனது மனத்துக்கு உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறாய். அதை விலக்கிக்கொள்ள வேண்டி, நீ, வேண்டுமானால், பிராயச்சித்தத்தைச் செய்துகொள். ஓ! பார்த்தா! முன்னொருகாலத்தில் தேவாஸுரர்களுள் யுத்தம்நடந்ததாகக் கேள்விப்படுகிறோம். அவர்களில் அஸுரர்கள் தமையன்மார்களும் தேவர்கள் அவர்களுக்குத் தம்பிமார்களுமாயிருந்தார்கள். அவர்களுக்கும் ராஜ்யலக்ஷ்மி நிமித்தமாகவே உண்டான பெரியவிரோதத்தைமுன்னிட்டு முப்பத்தீராயிரம் வருஷம்வரையில் யுத்தம்நடந்தது. அதில் தேவர்கள் இந்தப்பூமிமுழுமையும் ஒரேஉதிரக்கடலால் நிரம்பச்செய்து அஸுரர்களைக்கொன்று ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். அந்தயுத்தத்தில் அகங்காரத்தால் அஸுரர்களுக்கு உதவிசெய்பவந்தவர்களும் சாலாவிருகர்களென்று இம்மூவுலகிலும் பிரஸித்திபெற்றவர்களும் வேதத்தின் கரைகண்டவர்களுமான பூமியிலிருந்த எண்பத்தெண்ணாயிரம் பிராம்மணர்களையும் தேவர்கள் கொன்றார்கள். அதர்மத்தைவிருத்திசெய்து தர்மத்துக்கு இடையூறுசெய்யவிரும்பும் கெட்டமனிதர்களை அரசன், கொடியவர்களான அஸுரர்களைத் தேவர்கள் கொலைசெய்வதுபோலக் கொலைசெய்யவேண்டும். ஒருகூட்டத்தில் ஒருவனைக் கொல்வதனால் மற்றவர்களுக்கு க்ஷேமம்வருமானாலும், அங்ஙனமே ஒரு கூட்டத்தைக் கொல்வதனால் ஒரு தேசத்துக்கு க்ஷேமமுண்டாகுமானாலும் அந்தக் கொலைகள் தர்மவிரோதமாகமாட்டா. ஓ! நரபதியே! தர்மமானசில அதர்மம்போலவும் அதர்மமானசில தர்மம்போலவுமிருக்கும். பகுத்தறியத் திறமையுள்ளவன் அதனை ஊகமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். ஆகையால், ஓ! பாண்டவனே! கல்விமானுயிருக்கும்நீ மனத்தைத் திடப்படுத்திக்கொள். ஓ! பாரத! முன் தேவர்களால் நடைபெற்றவழியில் சென்றவனுயிருக்கிறாய். இவ்விதமிருப்பவர்கள் நரகமடையமாட்டார்கள். பகையாளிகளைத் தபிக்கச்செய்யும் பாண்டவவீர! இந்தத் தம்பிகளையும் ஸ்நேஹிதர்களையும் ஸமாதானஞ்செய். எந்தமனிதன் கெட்டஎண்ணங்கொண்டு கெட்டகாரியத்தையும் செய்துவிட்டு மனவருத்தமும் லஜ்ஜையும் அற்றவனுயிருக்கிறானே அவனிடம் அக்காரியம்யாவுமே பாவமென்று சொல்லப்படும். அவ்விதப் பாவத்திற்கு பிராயச்சித்தமுமில்லை. பிராயச்சித்தத்தால் அப்பாவம்குறைவதுமில்லை. நீயோ நல்லகுலத்தில் பரிசுத்தமான பிறப்புடையவன். பகையாளியான துரியோதனனுடைய தோஷத்தால் உனக்கிஷ்டமில்லாமலே இந்தக் காரியம் செய்யும்படி நேர்ந்தது. செய்தபிறகும் இவ்விதம் பரிதபிக்கிறாய். அஸ்வமேதமென்னும் பெரியயாகம் உத்தமமானபிராயச்சித்தமெனக்

கூறப்படுகிறது. ஓ! மஹாராஜ! அந்தயாகத்தைச்செய். உனதிஷ்டப்படி பாவமற்றவனையிருப்பாய். மருத்துக்களுடன்கூடின பகவானை தேவேந்திரன் பகைவர்களைக்கொன்று ஒவ்வொரு யர்கமாய் முறையே நூறுஅஸ்வமேதயாகங்களைச்செய்து பாவங்களற்று ஸுகித்துவாழும் ஸுவர்க்கமென்னும் லோகத்தைஅடைந்து அம்மருத்துக்களுடன் திசைகளை விளங்கச்செய்கிறான். அப்படி அமரர்களுக்கு அரசனாக ஸ்வர்க்கலோகத்தில் அப்ஸரஸ்திரீகளுடன் விளங்கும் சசிபதியான இந்திரனை ரிஷிகளும் தேவர்களும் ஆராதிக்கிறார்கள். ஓ! குற்றமற்றவனே! நீயும் பராக்ரமத்தால் அரசர்களைவென்று இப்பூமியை அடைந்திருக்கிறாய். அரசனே! உன்னால் ஜயிக்கப்பட்ட அரசர்களுடைய பட்டணங்களுக்கும் ராஜ்யங்களுக்கும் சேனைகிதர்களுடன் சென்று அங்குள்ள அவ்வரசர்களின் புத்திரர்கள், பேரர்கள், அல்லதுஸஹோதரர்களை அந்தஅந்த ராஜ்யத்திற்கு அரசராகஅபிஷேகஞ்செய். குழந்தைகளையும் கர்ப்பத்திலிருப்பவர்களையும் ஆதரவுடன் நன்மொழி கூறிச் சந்தோஷப்படுத்துவதோடு பிரஜைகள்யாவரையும் பிரியமாய் வைத்துக்கொண்டு பூமியைப் பரிபாலனஞ்செய். எந்த அரசர்களுக்குக் குமாரரில்லையோ அவர்களுடைய பெண்களை அந்தராஜ்யத்தில் முடிசூட்டி அரசாளச்செய். இங்ஙனம்செய்தால், இயற்கையில் போக விருப்பமுள்ள ஸ்திரீகள் சோகத்தைத் தள்ளிவிடுவார்கள். ஓ! பாரத! இவ்விதம் எல்லாராஜ்யங்களிலும் ஸமாதானஞ்செய்துவிட்டு ஜயத்தையுடைய இந்திரன் முன்னஞ்செய்ததுபோல அஸ்வமேதயாகத்தைச் செய். ஓ! க்ஷத்திரியஸ்ரேஷ்டனே! யமனுக்கொப்பான வன்மையுள்ளவர்களென்கிற அகங்காரங்கொண்டு தம் கர்மத்தாலேயே நாசமடைந்த மஹாத்மாக்களான அந்த அரசர்களைக்குறித்து வருத்தப்படவேண்டாம். க்ஷத்திரியர்களுக்குரிய தர்மமும் விரோதிகளில்லாத ராஜ்யமும் உன்னால் அடையப்பட்டன. கௌந்தேய! பரலோகத்தில் பாதுகாக்கத்தக்கதும் சிறந்ததுமான உனக்குரிய தர்மத்தை ரக்ஷித்துக்கொள்" என்று சொன்னார்.

முப்பத்துமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வியாஸர் விதிவிலக்குகளைத் தர்மபுத்திரருக்குக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! மனிதன் இங்கு எந்தக்காரியங்களைச்செய்து பிராயச்சித்தஞ்செய்துகொள்ள வேண்டியவனாகிறான்

னென்பதையும் எதைச்செய்து அந்தப்பாவத்திலிருந்து விடுதலை பெறுகிறானென்பதையும் எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, வியாஸமகரிஷி சொல்லத்தொடங்கினர்.

"விதிப்படியுள்ள கர்மத்தைச் செய்யாததாலும் விலக்கப்பட்ட கர்மங்களைச் செய்வதாலும் மனிதன் பொய்கடத்தையுள்ளவனாகிப் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியவனாகிறான். ஸூர்யன் உதயமாகும்காலத்திலும் அஸ்தமயமாகுங்காலத்திலும் படுத்துறங்கும் பிரம்மசாரி, சொத்தைதருகமுள்ளவன், கறுத்தபல்லுள்ளவன், [1] தமையன்பிரம்மசாரியாயிருக்கத் தான் மணம்புரிந்ததம்பி, [2] தம்பி மணம்புரிந்திருக்கப் பிரம்மசாரியாயிருக்கும்தமையன், பிராம்மணர்களின் பெருமையைநிந்திப்பவன், முன்பிறந்தவள் கன்னியாயிருக்கத் தங்கையைமணம்புரிந்தவன், பின்பு, முன்பிறந்தவளை மணம்புரிந்தவன், விரதத்தைதவிட்டவன், துவிஜாதிகளென்னும் மூன்றுவர்ணத்தாரையும்கொன்றவன், அபாத்திரத்தில் தானஞ்செய்தவன், பாத்திரத்தில் கொடாதவன், ஸமுதாயத்திற்கு யாகம்செய்து வைத்தவன், [3] மாம்ஸத்தைதவிற்றவன், ஔபாஸனமுதலிய அக்கினிகளைவிட்டவன், வேதத்தைதவிற்றவன், சூத்திரஸ்திரீயைக்கொன்றவன், இவர்களில் முன்முன்சொன்னவர்கள் அதிகபாபமுள்ளவர்கள். யாகத்திற்கல்லாமல் பசுவைக்கொன்றவன், காட்டை எரித்தவன், பொய்சொல்லி ஆடுத்தவன், குருவைத்தடுத்தவன், வாக்காலாவது மனத்தாலாவது தாரைவார்த்தாவது தான்கொடுத்ததை அபகரித்தவன், [4] பிறர்கொடுப்பதைத்தடுத்தவன், ஒருபந்தியில் வேறுபாகத்தாலுண்டவன், புஜிப்பவரை அவமதித்தவன், உறவினர்களிடம் கலகஞ்செய்தவன், அடுத்தவனைக்காவாதவன், ஆசாரத்தைதவிட்டவன் இவர்களியாவரும் தம்தம்பாவத்திற்குத்தக்கபடி பிராயச்சித்தஞ் செய்துகொள்ளத்தக்கவர்கள்.

இனி, உலகத்திற்கும் வேதத்திற்கும் விரோதமாயிருக்கும் அகார்யங்களை உனக்கு உபதேசிக்கிறேன்; கவனித்துக் கேள். தனக்குரியதர்மத்தைதவிடுதல், பிறர்தருமத்தைச்செய்தல், அயோக்கியனுக்குயாகஞ்செய்வித்தல், புஜிக்கத்தகாதவைகளைப்புஜித்தல், சரணமென்றுவந்தவனைக்கைவிடுதல், காப்பாற்றவேண்டியவர்களைக் காப்பாற்றாமை, உப்புப்புளிமுதலிய ரஸவஸ்துக்களை வியாபாரஞ்செய்தல்,

---

1 இவனுக்குப் 'பரிவேத்தா' என்றுபெயர்.

2 இவனுக்குப் 'பரிவித்தி' என்றுபெயர்.

3 ஆடு மாடுமுதலியவைகளை.

4 இங்குஇரண்டுசொற்கள் விடப்பட்டன.

பசுபக்ஷிகளைக்கொல்லுதல், சக்தியிருந்தும் [1] ஆதானம்முதலிய கர்மங்
களைச்செய்யாமை, (பசுக்களுக்கு ஆகாரம்முதலிய) நித்தியமாய்க்
கொடுக்கவேண்டியவைகளைக்கொடாமை, தக்ஷிணைகொடாமை, பிராம்
மணர்களின் பொருளைத்திருடுதல், இவைகளையெல்லாம் தருமமறிந்
தோர்கள் அகார்யமென்று அறிவிக்கிறார்கள். தகப்பனுடன்சண்டை
போடும்புத்ரனும், குருவின்தாரத்தைச்சேருமவனும், தர்மபத்நியிடம்
நியாயப்படிசேராமலிருப்பவனும் அதர்மமுள்ளவர்களாவார்கள். இங்
ஙனம் எவைகளைச்செய்தும் செய்யாமலும் மனிதன் பிராயச்சித்தஞ்
செய்துகொள்ளவேண்டுமோ அக்காரியங்கள் வேதங்களில் விரிவாக
வும் சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விதமான கார்யங்
களைச்செய்தும் மனிதனைப் பாவம்தாடராதிருக்கச் சிலகாரணங்க
ளுண்டு. அவைகளைச் சொல்லுகிறேன். யுத்தத்தில் ஆயுதமெடுத்
துத் தன்னைஅடிக்கவருமவன் பிரம்மஜ்ஞானியானாலும் அவனைக்கொல்
வது பிரம்மஹத்தியாகாது. இவ்விதி வேதங்களிலுள்ள மந்திரத்
தால் உபதேசிக்கப்பட்டது. வேதத்தில்விதிக்கப்பட்டதர்மமுறையை
நான் உனக்கு உபதேசிக்கிறேன். தன்னொழுக்கத்தை விட்டுவிலகிய
ஆததாயியான பிராம்மணனைக்கொல்வது கொலைப்பாவமுள்ளதன்று.
ஒருவனுடையகோபம் மற்றொருவனுக்குக் கோபத்தை உண்டுபண்
ணிற்று. உயிருக்கபாயம்நேருங்கால் தர்மமறிந்தவர்களின்அனுமதி
பெற்று, தெரிந்து [2] ஸுரையையுபயோகிப்பவன், பின்பு, சுத்தி
பெறத்தக்கவனாவான். கௌந்தேய! புஜிக்கத்தகாததைப் புஜிப்பதா
லுண்டாகும் இந்தப்பாவம்யாவும் பிராயச்சித்தவிதிப்படி சுத்திபெறு
மென்பதை உனக்குச்சொன்னேன். குருவின் கட்டளைப்படி குருதா
ரத்தைச்சேருவதால் மனிதன்குற்றமுள்ளவனாகமாட்டான். உத்தா
லகரென்னுமரிஷி சிஷ்யனைக்கொண்டு ப்ரவேதகேதுவென்னும் புத்தி
ரனை உண்டுபண்ணிக்கொண்டார். குருவின்நிமித்தம் ஸங்கடகாலத்
தில் திருட்டைச்செய்வது குற்றமென்றுதடுக்கப்படவில்லை. ஆனால்,
(இவ்விதியைமூலமாகக்கொண்டு) ஆசைபிடித்தாவது பலவிடங்களி
லாவது பிராம்மணர்களின்பொருளையாவது கவரப்போவதும் அப்
பொருளை ஆசிரியருக்கன்றித் தான்புஜிப்பதும் எப்பொழுதும் நியாய
மாகா. தனக்காவது பிறருக்காவது உயிரைக்காப்பாற்றவேண்டியும்
குருவின்நிமித்தமும் ஸ்திரீகள்நிமித்தமும் விவாகநிமித்தமும் பொய்
சொல்வது பாவமாகாது. ஸ்வப்னகாலத்தில் சுக்லம்போவதால் திரு

---

1 ஔபாஸனமென்னும் ஸ்மார்த்தாக்கினியை வைதிகமான மூன்று அக்னிகளாகச் செய்யும்விதி.

2 கள்.

ம்ப உபநயனஞ்செய்யவேண்டுமென்ற பிராயச்சித்தமில்லை. அக்நியை வளர்த்து அதற்குரிய மந்திரத்துடன் நெய்யை ஓமம்செய்யவேண்டும். தமையன் பதிதனாகவும் ஸந்யாஸியாகவும் போய்விட்டால் தம்பிக்கு [1] பாரிவித்தியமென்னும் தோஷமாகாது. தர்மநிமித்தம் ஸ்திரீகளின் வேண்டுகோளின்படி அவர்களைச் சேருதல் பரதாரத்தைச் சேர்ந்த பாவமாகாது. சாஸ்திரவிதியல்லாமல் பசுக்களைக் கொல்வதும் கொல்லச்செய்வதும் கூடா. விதிப்படியுள்ள பசுக்களின்வதம் அவைகளுக்குள்ள அனுக்ரஹமாம். அறியாமையால் அயோக்கியப்பிராம்மணனிடம் தானஞ்செய்வதும் யோக்கியனிடத்தில் எப்பொழுதும் மரியாதையுடன் தானஞ்செய்யாமையும் தோஷமாகா. [2] குற்றமுள்ள ஸ்திரீயை விலக்கிவைப்பது தோஷமாகாது. அவளை அங்ஙனமிருக்கும்படிசெய்வித்தல் அவள்பரிசுத்திக்குக் காரணமாகும். அப்படிச் செய்யும்புருஷனுக்குப் பாவமில்லை. சாஸ்திரத்திற் சொல்லியபடி ஸோமரஸத்தின் பெருமையாகிய உண்மையைஅறிந்து ஸோமமென்னும் கொடியைவிக்கிரயஞ்செய்வது தோஷமாகாது. வேலைக்குத்திறமையில்லாதவேலைக்காரனை விலக்குவதிற் பாவமில்லை. பசுக்களினிமித்தம் காடுகளைஎரிப்பது பாவமாகாது. இங்ஙனம் உபதேசிக்கப்பட்டபடி இக்காரியங்களைச்செய்வதில் தோஷமில்லை. ஓ! ராஜனே! தோஷங்களைவிலக்கிப் பரிசுத்தியைக்கொடுக்கும் பிராயச்சித்தவிதிகளைவிரிவாக உனக்குச் சொல்லுகிறேன்" என்று பின்னும் சொல்லலானார்.

முப்பத்துநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வியாஸர் பாபபரிஹாரமான ப்ராயச்சித்தங்களைத் தர்மபுத்திராருக்கு உபதேசித்தது.)

வியாஸர், "மனிதன் சாந்த்ராயணமுதலிய தவத்தையும்யாகமுதலிய கர்மங்களையும் கோதானமுதலிய தானங்களையும் செய்தும் திரும்ப அப்பாவங்களில் போகாமலுமிருந்தால் பாவம்விலகிப் பரிசுத்தனுவான். பிரம்மஹத்தியென்னும் பாவமுள்ளவன் அஸ்வமேதமுதலிய தோஷங்களைவிட்டு எப்பொழுதும் பிரம்மசாரியாய்த் தனக்கு வேண்டியதைத் தானேசெய்துகொண்டும், தன்பாவத்தை உலகத்

---

[1] தமையனுக்கு விவாஹமாகாமல் தம்பிவிவாஹம்செய்துகொள்ளும் தோஷம்.

[2] குற்றமுள்ளஸ்திரீக்கு ஆகாரம் வஸ்திரம்முதலியவற்றை மாத்திரம் கொடுத்து உடனுண்ணல் சேர்க்கைமுதலியவற்றை நிறுத்துவது.

தாருக்குத் தெரிவித்துக்கொண்டும், ஒருகையில் கட்வாங்கமென்னும் தடியும் ஒருகையில் ஓடுமெடுத்துப் பிச்சையெடுத்த அன்னத்தை ஒருவேளை உண்டும், பூமியில்படுத்தும், பன்னிரண்டுவருஷகாலமிருப்பாகில் அப்பாவத்திலிருந்து விடுபடுவான். வேண்டுமென விரும்பிப் பிரம்மஹத்தியைச் செய்தவனைல்ஆயுதமுள்ளஒருமனிதனிடஞ் சென்று தன்னைக் கொல்லும்படி சொல்லவேண்டும்; அல்லது, அறிந்தவர்களுடைய கட்டளைப்படியோ தன்னிஷ்டப்படியோ அக்கினியை வளர்த்து அதில் தன்தேகத்தை விட்டுவிடவேண்டும். விருப்பமின்றிச்செய்த அப்பாவத்தைதவிலக்கத் தலைகுனிந்து எதாவது ஒரு வேதத்தை ஜபித்துக்கொண்டு முந்நூறுயோஜனைதூரம் யாத்திரை செய்யவேண்டும். அல்லது, தன்னுடைய திரவியமனைத்தையும் வேதமறிந்த பிராம்மணருக்கு அளிக்கவேண்டும். அல்லது, ஜீவனத்திற்குப் போதுமான பொருளையும் வேண்டிய வஸ்துக்கள்நிறைந்த வீட்டையும் தானஞ்செய்து பசுக்களையும் பிராம்மணர்களையும் போஷித்துவந்தால் பிரம்மஹத்தியென்பது நிவிருத்தியடையும். அல்லது,[1] கிருச்சிரமென்னும்தவத்தை ஆறுவருஷகாலம் தொடர்ச்சியாகச் செய்துவந்தால் பிரம்மஹத்தியுள்ளவன் பரிசுத்தனுவான். அல்லது, ஒருமாஸத்தை நான்காகப்பகுத்து முன்சொல்லிய ஆகாரநியமப்படி மூன்றுவருஷகாலம் புஜித்துவந்தால் அப்பாவத்திலிருந்து விடுபடுவான். அல்லது, ஒவ்வொருமாஸத்தில் ஒவ்வொருநியமப்படி நாலுமாஸத்தில் கீழ்ச்சொல்லிய கிருச்சிரவிதியை அனுஷ்டிப்பாகில் ஒரேவருஷத்தில் பரிசுத்தனுவதில் ஸந்தேகமில்லை. அங்ஙனமே, உறுதியான உண்ணுவிரதமிருப்பாகில் பின்னுங் குறைந்தகாலத்திலும் சுத்திபெறலாம். அப்வமேதயாகமும் இப்பாவத்தைவிலக்கிச் சுத்தியைக்கொடுப்பதில் ஸந்தேகமில்லை. அப்வமேதத்தைச்செய்து அவபிருதஸ்நானஞ்செய்த மனிதர்கள்யாவரும் இவ்விதப்பாவங்களிலிருந்து விடுபட்டுப் பரிசுத்தர்களாகிறார்களென்பது வேதத்தின் முக்கியமான கருத்து. பின்னும்,பிராம்மணனிமித்தம் யுத்தத்தில்அடிபட்டாலும் லக்ஷம்பசுவைவேயோ அல்லது கறக்கத்தக்க இருபத்தையாயிரம் காரான்பசுக்களையோ நல்ல பாத்திரத்தில் தானஞ் செய்தாலும் பிரம்மஹத்தி முதலிய பாவங்களிலிருந்து நிவிருத்தியடைவான். உயிருக்குச் சந்தேகமுள்ள காலத்தில் நன்றாகக் கறக்கும் ஆயிரம் பசுக்

1 மூன்றுநாள் காலையில்மாத்திரமும் பின்மூன்றுநாள் மாலையில்மாத்திரமும் பின்மூன்றுநாள் தன்முயற்சியின்றிக் கிடைத்ததைமாத்திரமும் புஜித்துக்கொண்டு பின்மூன்றுநாள் உண்ணுவிரதமுள்ளவனாக இருக்கவேண்டுமென்பது கிருச்சிரவிதி.

களைக் கன்றுடன்கூட யோக்கியர்களான ஏழைகளுக்குத் தானஞ்செய்தால் பாவங்கள் யாவும் விலகிப் பரிசுத்தனுவான். அரசனே! எவன் நியமமுள்ள பிராம்மணர்களுக்குக் கம்போஜ தேசத்திலுண்டான நூறு குதிரைகளைத் தானஞ்செய்தும் அல்லது ஒரு பிராம்மணனுக் காவது அவன் வேண்டியதையெல்லாம் தானஞ்செய்வதுடன் அத் தர்னத்தைத் தான் சொல்லிக்கொள்ளாமலு மிருக்கிறனே அவன் எல்லாப் பாவங்களிலுமிருந்து விடுபடுகிறன். ஒருமுறை ஸுரை யைப் பானஞ்செய்தவன் அந்த ஸுரையை நெருப்புப்போலக் காய்ச் சிப் பானஞ்செய்தோ அல்லது மலையிலிருந்து பாலநிலத்தில் விழுந்தோ அல்லது அக்னியில் விழுந்தோ அல்லது [1]மஹாபத யாத் திரை செய்தோ தன் சரீரத்தைத் தியாகஞ்செய்தால் பாவங்களி லிருந்து விடுபட்டு இரண்டு உலகிலும் சுத்திபெறுவான். பிருகஸ் பதிஸவமென்னும் யாகத்தைச் செய்தால் ஸுராபான தோஷம் விலகி ஸபையில் செல்ல யோக்கியதை பெறுவானென்று வேதத்திற் சொல்லியிருக்கிறது. அல்லது, அரசனே! மாத்ஸ்ய முதலிய தோஷமில்லாதவனுகித் திரும்பவும் பானத்தில் மனம் வையாமல் பூதானஞ் செய்தானுகில் ஸுராபான தோஷத்திலிருந்து சுத்திபெறு வான். குருதாரத்திற்சென்ற பாபி பழுக்கக்காய்ச்சிய இரும்புப் பாவையைக் கட்டிக்கொண்டோ அல்லது தனது ஆண்குறியை அறுத்துவிட்டு ஆகாயத்தைப் பார்த்து நடந்துகொண்டோ தன் சரீ ரத்தை விடுவானுகில் அக்கொடிய பாவத்திலிருந்து மீளுவான். அவ் விதப் பாவமுள்ள ஸ்திரீகள் ஓராண்டு ஆகாரமுதலியவற்றை விலக்கி விரதமிருப்பார்களாகில் அப்பாவத்திலிருந்து விலகுவார்கள். எந்த மனிதன் ஒரு மாஸம் நீருங்குடியாத கடுநியமமுள்ளவனே அல்லது தன் திரவியமனைத்தையும் தானஞ்செய்கிறனே அல்லது ஆசிரிய னிமித்தம் யுத்தத்திலடிபட்டவனுகிறனே அவன் பாவத்திலிருந்து விடுபடுவான். பொய்யாக ஒருவனை அடித்தவனும் குருவைத் தடுத்த வனும் அவர்கள் சொல்லும் இஷ்டத்தைச் செய்துகொடுத்தால் அப் பாவத்திலிருந்து விலகுவார். பிரம்மசரிய விரதத்தைஇழந்தவன் பிரம்மஹத்திக்குரிய பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளவேண்டும். அல்லது, ஆவின் தோலைத் தரித்துக்கொண்டு ஆறுமாஸம் கிருச்சிர மென்னும் தவத்தைச்செய்தால் அப்பாவம் நீங்கிச் சுத்தனுவான். பரதாரத்தைப் பின்சென்றவன் ஒருவருஷம் தவநியமத்துடனிருந்

---

1 கேதாரமென்னும் க்ஷேத்திரஞ் சென்று இமயமலையில் ஏறுவது மஹாபதயாத்திரை என்று சொல்லப்படும். அதற்கு மஹாப்ரஸ்தானம் என்றும் பெயர்.

தும் மற்றும் பல நற்காரியங்களைச் செய்தும், பிறர் பொருளை அப கரித்தவன் அப்பொருளை அவரிடங் கொடுத்துவிட்டு ஒரு வருஷம் தவநியமத்துடனிருந்தும் மற்றும் பல நல்ல காரியங்களைச் செய்தும் அப்பாவத்தை விலக்கிக்கொள்ள வேண்டும். பரிவித்தியும் பரிவேத் தாவும் தமையனுக்கு விவாஹமானபின் நியமத்துடன் பன்னிரண்டு நாளில் செய்யவேண்டிய கிருச்சிரமென்னும் விரதத்தைச் செய்து கொள்ளவேண்டும். அவர்களில் தம்பி பிதிர்க்களைக் கரையேற்ற வேண்டி வேறு பெண்ணை விவாகஞ் செய்துகொள்ள வேண்டும். முத லில் கொண்ட பெண்ணுக்கு அத்தோஷத்தின் ஸம்பந்தமில்லையாகை யால் அவள் அசுத்தமுள்ளவளல்லள். விபசாரக் குற்றமுள்ள ஸ்திரீகள் நான்குமாஸம் உபவாஸ விரதமிருந்து சுத்திபெறவேண்டு மென்று தர்மமறிந்தோர் அறிவிக்கிறார்கள். குற்றமுள்ளவளோ வென்று சங்கையுள்ள ஸ்திரீகளுடன் சேருவது அறிந்தவனுக்கு நியாயமன்று. அங்ஙனமுள்ள ஸ்திரீகள், பாத்திரம் சாம்பலால் சுத்தி யாவதுபோல், ரஜஸ்கொண்டு விலகுவதால் சுத்தர்களாகிறார்கள். சூத் திரன் எச்சில் பட்டதும் பசுக்களால் மோக்கப்பட்டதும் வாயி லுள்ள எச்சில் பட்டதுமான வெண்கலப் பாத்திரத்தைக் கோவின் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம் இவ்வைந்தும் மண், ஜலம், சாம்பல், புளி, நெருப்பு இவ்வைந்தும் ஆகிய பத்துப்பொருள்களா லும் சுத்தி செய்யவேண்டும். இவ்விதமான சுத்திவிதிகளில் பிராம் மணனுக்கு முழுமையும் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் இவர் களுக்கு முறையே நாலில் ஒவ்வொருபாகங் குறைந்ததாயும் தார தம்மியத்துடன் விதித்திருக்கிறதென்றுத் தெரிந்துகொள்ளவேண்டும். பசுபக்ஷிகளைக்கொன்றாலும் வளரக்கூடிய பலவிருக்ஷங்களை வெட்டி னாலும் அப்பாவத்தை வெளியிட்டுக்கொண்டு மூன்றுநாள் காற்றைப் புஜித்தவனுக நியமத்துடனிருக்கவேண்டும். அரசனே! சேரத்தகாத ஸ்திரீகளைச் சேர்ந்ததாலுண்டாகும் பாவத்தை விலக்கவேண்டி ஆறு மாஸம் ஈரவஸ்திரத்துடன் [1] திருநீற்றுமுட்டில் படுத்திருக்கவேண் டும். இவ்விதமே, மற்ற அகாரியங்களெல்லாவற்றிற்கும் அவ்வவைக ளின்தாரதம்மியத்திற்குத்தக்கபடி வேதத்திற்சொல்லிய விதிபோலப் பரிசுத்தமான தேசத்தில் ஹிம்ஸை காமம் குரோத முதலிய தோஷங் களில்லாமல் குறைந்த ஆகாரமுள்ளவனுக மௌனத்தோடு காயத்

---

1 'பஸ்மசாயிநா' என்பதுமூலம். பஸ்மாவைச் சொன்னதால் ருத்ரஜபமும் செய்யவேண்டுமென்பதும் அங்ஙனம் வ்ருத்தசாதாதபரென் னும் ரிஷி கூறுகிறாரென்பதும் பழையவுரை.

திரியென்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருக்க வேண்டும். இவ்வித நியமத்தோடிருக்குங்காலத்தில் தினந்தோறும் பகலில் மூன்று முறையும் இரவில் மூன்றுமுறையும் வஸ்திரத்தோடு ஸ்நானஞ் செய்து ஸ்திரீகளும் சூத்திரர்களும் பதிதர்களுமாகிய இவர்களுடன் பேசாதவனும் மறைவில்லாத இடத்தில் பகல் முழுவதும் உறங்காதவனும் அவ்விடத்திலேயே ராத்திரியில் தூங்குகிறவனுமாயிருக்க வேண்டும். இவ்வித விரதத்தை அனுஷ்டிப்பவன் அறியாமையால் செய்த பாவங்களைப்போக்கிப் பரிசுத்தியடைகிறான். மனிதன் பஞ்சபூதங்களைச் சாக்ஷியாகக்கொண்டு தான்செய்த புண்ணியபாவங்களின் பயனை இச்சரீரத்தை விட்டபின் அடைகிறான். கர்மத்தைச்செய்யும் மனிதன் தான்செய்த புண்ணியபாவங்களில் எஃது அதிகமோ அதன் பயனை முந்தி அடைகிறான். குறைந்தது பயனைக்கொடுக்க ஸமயத்தை எதிர்பார்த்திருக்கும். ஆகையால், மனிதன் அகாரியத்தைச் செய்திருந்தாலும் புண்ணியத்தை அதிகப்படுத்தவேண்டித் தானத்தாலும் தவத்தாலும் யாகத்தாலும் சுபத்தை விருத்திபண்ணிக்கொள்ளவேண்டும். பாபகர்மங்களில் பயந்து அக்காரணத்திற்காவது எப்பொழுதும் தனங்களைத் தானஞ்செய்யவும் மற்றச் சுபகர்மங்களைச்செய்யவும் வேண்டும். அவ்விதம்செய்தவன் அப்பாவத்திலிருந்து விடுபடுகிறான். பாபத்திற்குத் தக்கபடி செய்யவேண்டிய தாகஉபதேசித்த பொதுவான இந்தப் பிராயச்சித்தம் மஹாபாதகங்களென்னும் பெரும்பாவங்களைத்தவிர மற்றவைகளுக்குத்தான் உபதேசிக்கப்படுகிறது. இப் பிராயச்சித்த விதியானது, புஜிக்கத்தக்கது புஜிக்கத்தகாதது பேசத்தக்கது பேசத்தகாதது அறிவு அறியாமை இவைகளின் விஷயமான சாஸ்திரத்தின் விதிகளுக்கு உள்ளாகும் மனிதனுக்குத்தான் உபதேசிக்கப்படுகிறது. பிராயச்சித்தமென்பது, அறியாமையால் ஒருமுறை செய்த தோஷத்தை விலக்க விதிக்கப்படுவதேயன்றி அறிவுடன் வேண்டுமென்று செய்த பாபத்தை விலக்கத்தக்கதன்று. பாபம்யாவும் அறிவுடன்செய்தால் அதிகக் கொடுமையுள்ளதாகும். இவ்விதிகள்யாவும் ஆஸ்திகனும் ப்ரத்தையுள்ளவனுமாயிருப்பவனால் விதிப்படி செய்யப்படுமாகில் பாவத்தை விலக்கத் திறமையுள்ளவையாகும். டம்பத்தையும் துவேஷத்தையும் மேற்கொண்டு அப்ரத்தையுள்ள நாஸ்திகமனிதர்களிடம் எக்காலத்திலும் இவை பயன்படா. தர்மஞ்செய்கிறவர்களுள் சிறந்த புருஷஸ்ரேஷ்டனே! இம்மையிலும் மறுமையிலும் ஹிதத்தையே விரும்புகிறமனிதன் பெரியோர்களின் நடத்தையையும் தர்மத்தையும்

தெய்வத்தையும் எப்பொழுதும் அனுஸரிக்க வேண்டும். அவ்விதம் அனுஸரிக்கும் மனிதன் அதையே முக்கிய காரணமாகக் கொண்டு பாவங்களை விலக்கிக்கொள்வான். ஓ! அரசனே! கொல்லப்பட்டமனிதர்களின் க்ஷேமத்தைக்கருதியோ அல்லது அரசர்களின் கடமையென்றெண்ணியோ அல்லது ஒருவகையாக அருள்பற்றியோ பிராயச்சித்தத்தைச் செய்துகொள். அங்ஙனமில்லாமல் அறிவீனர்களான மூடர்கள் சென்றவழியிற்சென்று மரணத்தால் முடிவடைய எப்போதும் நினைக்கவேண்டாம்" என்றுசொன்னர். இவ்விதம் வியாஸபகவானால் உபதேசிக்கப்பட்ட யுதிஷ்டிரர் ஒருமுகூர்த்தம் சிந்தையுள்ளவராயிருந்து பின் அம்முனிவரைநோக்கிச் சொல்லத்தொடங்கினர்.

மூப்பத்தைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வியாஸர், புஜிக்கத்தக்கவை தகாதவைகளையும், தானத்துக்குத் தக்கவர் தகாதவர்களையும் யுதிஷ்டிரருக்குச் சொன்னது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! எது புஜிக்கத்தக்கது? எது புஜிக்கத்தகாதது? கொடுக்கத்தக்க வஸ்துக்களிற் சிறந்தது எது? எது பாத்திரம்? எது அபாத்திரம்? இவைகளை எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, வியாஸர் சொல்லத்தொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் மனுவுக்கும் ரிஷிகளுக்கும்நடந்த ஸம்பாஷணைமாகிய இப்பழைய இதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள். முன்காலத்தில் தவத்தில்சிறந்த சிலரிஷிகள், ஏகாந்தமாயிருக்கிற மனுப்பிரஜாபதியினருகிற்சென்று, 'எது புஜிக்கத்தக்கது? தானம்எப்படி? இவைகளையும் [1] அத்தியயனம், தவம், காரியம், அகாரியம், இவைகளையும் நீங்கள் சொல்லவேண்டும்' என்று கேட்டார்கள். அவர்களால் இவ்விதம் கேட்கப்பட்ட பகவானான ஸ்வாயம்புவமனு, 'ஓ! ரிஷிகளே! உள்ளதர்மத்தைச் சுருக்கமாயும் விரிவாயும் கேளுங்கள்' என்று சொல்லத்தொடங்கினர். 'விசேஷவிதிஇல்லாவிடத்தில் ஜபம், ஹோமம், உபவாஸம், ஆத்மஜ்ஞானம் இவைகளுள்ள பெரியோர்களிருக்கும் இடம், புண்ணிய நதிகள், பரிசுத்தமான பர்வதங்கள் ஸுவர்ணம் நெய் இவைகளைப்புஜிப்பது, [2] ரத்நஸ்நானம், தேவாலயத்

---

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

2 தீர்த்தத்தில் ரத்நத்தைப்போட்டு ஸ்நானம் செய்வது.

துக்குப்போவது இவைகள் மனிதனைச் சீக்கிரத்தில் சுத்தனைகச்செய்வதில் ஸந்தேதகமில்லை. அறிவுள்ள மனிதன் எந்தக் காலத்திலும் அகங்காரம் அடையக்கூடாது. அகங்காரமடைந்தவன், ஆயுளுக்குக் குறைவின்றி இருக்கவேண்டுமானால், [1] தப்தகிருச்சிரமென்னும் தவத்தைச் செய்யவேண்டும். கொடுக்கப்படாத வஸ்துவைவடாமையும் தானமும் அத்தியயனமும் தவமும் ஹிம்ஸையில்லாமையும் ஸத்தியமும் கோபமில்லாமையும் பொறுமையும் தர்மத்திற்குரிய லக்ஷணமாகும். தேசகாலங்களின் வேற்றுமையால் தர்மம் அதர்மமாயும், அதர்மம் தர்மமாயும் முடியும். திருட்டும் பொய்யும் ஹிம்ஸையும் [2] ஒரு ஸமயத்தில் தர்மமென்று உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அறிந்தவர்களுக்கு இந்த இரண்டுவிதமான தர்மாதர்மங்களும், பிரவிருத்தியென்றும் நிவிருத்தியென்றும் இரண்டுவிதங்களாகும். பிரவிருத்தி நிவிருத்தியாகிய இவ்விரண்டும் லௌகிகமென்றும் வைதிகமென்றும் இவ்விரண்டு வகைப்படும். இவைகளுள், வைதிகமான நிவிருத்தியின்பயன் அழிவில்லாத பதவியும் அவ்விதப் பிரவிருத்தியின் பயன் அழிவுள்ள பதவியுமாகும். லௌகிகமான அவ்விரண்டுக்கும் அது சுபமானால் சுபமான பயனும் அசுபமானால் அசுபமான பயனும் உண்டாகுமெனத் தெரிந்துகொள்ள வேண்டும். செய்யும் மனிதன் நீசனையிருந்தாலும், தெய்வம், சாஸ்திரத்திற் சொல்லிய கர்மம், ஜீவனம், [3] மரணம் இவைகளைக் காரணமாகக்கொண்டு செய்யப்படும் கர்மம் குற்றமில்லாததாகும். பரலோகத்திற் சந்தேகத்துடன் கர்மத்தைச் செய்வானாகிலும் அவ்விதமே சத்துருவத முதலிய பயனைக்கருதி, ச்யேன முதலிய ஆபிசார கர்மத்தைச் செய்வானாகிலும் அவைகளுக்குரிய பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். கோபத்தாலும் அவிவேகத்தாலும் தன்மனத்தின் பிரியத்தையும்தள்ளி அப்பிரியத்தைச்செய்த மனிதன் செய்த காரியத்திற்குத் தக்கபடி ஆகமத்திற்சொல்லிய விதியை அனுஸரித்துச் சரீரம் வாடும்படி உபவாஸம், மந்திரஜபம் சுத்தமான அன்னங்களின் போஜனம்

---

1 முதல் மூன்றுநாள் ஆறுபலம் வெந்நீரும் பின் மூன்றுநாள் மூன்றுபலம் காய்ந்த பாலும், பின் மூன்றுநாள் ஒருபலம் சூடுள்ள நெய்யும் புஜித்துப் பின் மூன்றுநாள் ஒன்றும் உண்ணாமலிருப்பது தப்தகிருச்சிரவிரதத்தின் லக்ஷணம்.

2 இங்கு 'ஆத்யந்திகஃ' என்பதைவிட்டு, 'ஆவஸ்திகஃ' என்னும் பாடம் கொள்ளப்பட்டது.

3 'ப்ராணதஃ' என்பது வேறுபாடம்; அதற்கு, 'ஜீவனத்தைக் கொடுக்கிற வேலை' என்பது பொருள்.

இவைகளைச்செய்து அப்பாவத்தை விலக்கிக்கொள்ள வேண்டும். அறியாமையால் தண்டஞ்செய்யத் தவறின அரசன், ஒருநாள் உபவாஸமிருந்து தன்னைச் சுத்திசெய்துகொள்ள வேண்டும். அவ்வரசனுக்குத் தர்மாதர்மத்தை உபதேசிக்கும் ஆசிரியன் மூன்றுநாள் உண்ணாவிரதமிருக்கவேண்டும். தனக்கு நேர்ந்த ஆபத்தால் மனவருத்தங்கொண்டு ஆயுதமுதலிய உபாயங்களால் தன்மரணத்திற்கு இடந்தேடிய மனிதனும் மூன்றுநாள் உபவாஸவிரதம் இருக்கவேண்டும். சாஸ்வதமான ஜாதி, ஆச்ரமம், கிராமம், குலம் இவைகளின் தர்மமனத்தையும்விட்ட மனிதர்களுக்கு வேறு எவ்விதத் தர்மமுமில்லை. தர்மத்திற் சந்தேகமுண்டானால் வேதசாஸ்திரங்களை அறிந்த பத்துப்பண்டிதர்களையாவது அல்லது தர்மசாஸ்திரம் நன்றுயறிந்த மூன்றுபேர்களையாவது விசாரித்து அவர்கள் சொன்னபடி தீர்மானித்துக்கொள்ளவேண்டும். [1] எருது, சிற்றெறும்புகள், நாயுவிலிக்காய், வத்ஸநாபமுதலிய விஷம், சல்கமென்னும் சிறகில்லாத மீன்கள், ஆணையல்லாத நாற்கால்பிராணிகள், ஜலத்திலுண்டான தவளைகள், பாஸமென்னும் பக்ஷிகள், ஹம்ஸங்கள், கருடன், சக்ரவாகம், மீன்கொத்திக் குருவிகள், கொக்கு, காகம், நீர்க்காகம், கழுகு, பருந்து, கோட்டான், மாம்ஸம்உண்ணும் கோரப்பல்லுள்ள நாலுகால் பிராணிகள், இரண்டுவரிசை பல்லுள்ள பிராணிகள், நாலு கோரப்பல்லுள்ளவைகள், செம்மறியாடுகள் இவைகள் யாவும் பிராமணர்களுக்குப் புஜிக்கத்தக்கவைகளல்ல. மான், கழுதை, பன்றி, [2] பசு, ஒட்டகம், மனிதஸ்திரீ இவைகளின்பாலைப் பிராம்மணன் குடிக்கலாகாது. பிராம்மணன் மரணம்நேர்ந்த வீட்டிலும் பிரஸவித்த வீட்டிலுமுள்ள அன்னத்தைப் பத்துநாள் வரையிலும் புஜித்தல் கூடாது. கன்றைஈன்று பத்துநாளாகாத [3] பசுவின் பாலும் உண்ணத்தக்கதன்று. க்ஷத்திரியனுடைய அன்னம் உண்டவனுடைய தேஜஸ்ஸையும், சூத்திரனுடைய அன்னம் பிராம்மணமகிமையையும், தட்டானுடைய அன்னமும் புத்ரனும் பதியுமில்லாதமடந்தையருடைய அன்னமும் ஆயுளையும் அபகரிக்கும். (நீதிதவறி) வட்டிக்கிட்டுப் பிழைப்பவன் அன்னம் மலத்துக்கு ஒப்பாகும். வேசையின் அன்னமும் தன் மனைவிக்குள்ள வேறு பதியைப்

---

1 'அநட்வாந்' என்ற பாடம் கொள்ளப்பட்டது.

2 'ஸ்ரௌதிகாநாம் கவாம்' என்பது வேறுபாடம். 'கன்றுபோட்டுநாளாகாத பசு' என்பது அதன் பொருள்.

3 'பாயஸ முதலியவற்றில் கலக்கப்பட்டாலும்' என்று ஒரு விசேஷணமும் பழையவுரை சேர்க்கிறது.

பொறுப்பவன்அன்னமும் ஸ்திரீயால்ஜயிக்கப்பட்டவன் அன்னமும் சுக்லத்துக்கு ஒப்பாகும். யாகத்தில் 1 தீக்ஷைபெற்றவன், யாகத்தை விற்றவன், லோபி, தச்சன், சக்கிலியன், வண்ணான், வைத்தியன், ஊர்காப்பவன், வியபிசாரமுள்ள ஸ்திரீ, கூத்தாடி, ஸ்திரீயால் ஜீவிப்பவன், அபவாதமுள்ளவன், கூட்டம், கிராமம், தம்பிக்கு விவாஹமாயிருக்க விவாஹமாகாத தமையன், ஆண்தன்மையில்லாதவன், கட்டியம் கூறுபவன், சூதாடுவோன்ஆகிய இவர்களின்அன்னம் புஜிக்கத்தக்கதன்று. இடக்கையால் கொண்டுவரப்பட்டதும் காய்ந்ததும் பழையதும் கள்ளம்பந்தப்பட்டதும் புசித்தமிச்சமும் தனக்கென்று தனியாய் வைக்கப்பட்டதுமான அன்னம் புஜிக்கத்தக்கதன்று. மா, கரும்பு, கீரை, பால், ஸத்துமா, வறுத்தஅரிசி, 2 தயிர்சேர்ந்த ஸத்துமா இவைகளால் செய்யப்பட்டவைகள் நாளானவைகளானால்புஜிக்கத்தக்கவைகளல்ல. தேவதைகளுக்கல்லாமல் செய்யப்பட்ட பாயஸம், எள்ளன்னம், மாம்ஸம், அப்பம், வடை இவை கிருஹஸ்தர்களான பிராம்மணர்களால் புஜிக்கத்தக்கவைகளல்ல. கிருஹஸ்தனுயிருப்பவன் தேவர்கள், ரிஷிகள், பிதிருக்கள், வீட்டிலுள்ளதேவதைகள், மனிதர்கள் யாவரையும் பூஜைசெய்து அதற்குப்பின் தான் போஜனம் செய்யவேண்டும். வீடுவிட்டு வெளிச்சென்ற ஸந்யாஸிபோலக் கிருஹஸ்தன் தன்வீட்டிலிருக்கவேண்டும். இவ்விதமிருக்கும்கிருஹஸ்தன் இஷ்டமானதாரத்துடன் கூடியிருந்து தர்மத்தை அடைவான்.

பெருமைக்காகவும் (கொடாவிட்டால் என்னசொல்லுவாரோ வென்ற) பயத்தாலும் தானஞ்செய்வது கூடாது. தனக்கு உபகாரம்செய்த மனிதனுக்குத் தானஞ்செய்வது கூடாது. பாடகன், நர்த்தனஞ்செய்பவன், விதூஷகன், கொழுப்புள்ளவன், பைத்தியமுள்ளவன், திருடன், நிந்திப்பவன், ஊமை, குரூபி, அங்கங்குறைந்தவன், குள்ளன், துஷ்டன், கெட்டகுலத்திற்பிறந்தவன், வைதிகஸம்ஸ்காரமில்லாதவன் இவர்கள்பொருட்டுத் தானஞ்செய்வது கூடாது. வேதாத்தியயனமில்லாத பிராம்மணனிடம் தானஞ்செய்யக்கூடாது. சரியானபடி செய்யப்படாததானம் கொடுத்தவனுக்கும், அவ்விதம் வாங்குதல் வாங்குகிறவனுக்கும், தீங்கைவிளைவிக்கும். கருங்காலிக் கட்டையையாவது கல்லையாவது பிடித்துக்கொண்டு கடலைக்கடக்க முயன்றவன் எப்படி முழுகிவிடுவானோ அப்படியே கொடுத்தவனும் பெற்றவனும் முழுகிவிடுவார்கள். ஈரமானகட்டைகளால் நிறைக்கப்

---

1 தீக்ஷிதனின் அன்னம் வபாயாகம்செய்யும்வரையில் புஜிக்கத்தக்கதன்று. 2 மூலத்தில், 'கரம்பம்' என்றிருக்கிறது.

பட்டஅக்நி எங்ஙனம் பிரகாசியாதோ அங்ஙனமே, வேதம்ஆசாரம் தவங்களில்லாத பிராம்மணன், தானம்வாங்குவதால் பிரகாசமற்றவ னுவான். மண்டையோட்டிலுள்ள ஜலமும் நாயின்தோலாற்செய்த துருத்தியிலுள்ள பாலும் இடத்தின்குற்றத்தால் குற்றமுள்ளவையா வதுபோல ஆசாரமில்லாத மனிதனிடமுள்ள சாஸ்திரமும்கெட்டதா கும். வேதசாஸ்திரங்களைஅறியாதிருந்தாலும் அஸூயைமுதலிய தோஷமில்லாதவனும் நற்குணமுள்ளவனுமாயிருப்பவனிடமும்விர தமில்லாத தாழ்ந்தமனிதர்களிடமும் கருணையால் செய்யும்தானம் யுக்த மாகும். கெட்டகுணமுள்ளபிராம்மணன் ஏழையாயிருந்தாலும் நமக்கு இஷ்டத்தைச் செய்கிறனென்றெண்ணியோ தர்மமென்றெண்ணியோ தயையுடன் அவன்பொருட்டுத் தானஞ்செய்வது கூடாது. வேதமறி யாத பிராம்மணனிடங்கொடுத்த தானம் பயனற்றதாகும். அது, பெற்றவன்தோஷத்தால் பயனற்றதாகுமென்பதில் ஸந்தேகம்வேண் டாம். மரத்தால்செய்தயானை தோலால்செய்தமிருகம் வேதமோதாத பிராம்மணன் இம்மூன்றும் முறையே யானை மிருகம் பிராம்மணன் என்ற பெயரைத்தவிர வேறு அவைகளின்பயனை அடையமாட்டா. ஸ்திரீகளிடத்தில் நபும்ஸகனும் பசுவினிடத்தில்பசுவும் பயனற்ற வாயிருப்பதுபோலவும் சிறகில்லாதபக்ஷிபோலவும் வேதமில்லாதபிரா ம்மணன் பயனற்றவனுவான். மனிதர்களில்லாத கிராமமும் ஜலமற்ற கிணறும் அக்னியில்லாதவிடத்திற்செய்த ஹோமமும் எவ்விதமோ அவ்விதமே மூர்க்கனிடம்செய்த தானமும் பயன்படாது. தேவர்கள் பிதிருக்கள் இவர்களுக்குரிய காரியங்களைக்கெடுப்பவனும் பலவிதத் தாலும் பிராணிகளுக்குக் கெடுதிசெய்பவனுமான மூர்க்கன் நல்ல லோகங்களை அடையமாட்டான். ஓ! யுதிஷ்டிரனே! உள்ளபடி இந் தத் தர்மம்எல்லாம் உனக்குச் சுருக்கமாகஉபதேசிக்கப்பட்டன. பரத ஸ்ரேஷ்டனே! இது மிகவும் விரிவாய்க்கேட்கத்தக்கது" என்று சொன்னர்.

முப்பத்தாருவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வியாஸரும் கிருஷ்ணபகவானும் கூறியபடி, யுதிஷ்டிரர் மனத்தில் சாந்தியடைந்து அஸ்தினபுரத்தில் பிரவேசித்தது.)

யுதிஷ்டிரர், "பிராம்மணஸ்ரேஷ்டரும் மஹாமுனிவருமான பக வானே! புஜிக்கத்தக்கவை புஜிக்கத்தகாதவை இவைகளுடன் தாம் உபதேசித்த பிராயச்சித்தமுறை குலாசாரத்தை உண்டுபண்ணி என்

மனத்தைக்களிப்பிப்பதுபோல் ஆயிற்று. என்மனம் எப்பொழுதும் எவ்விதமாக ஆலோசித்தும் ராஜ்யமும் தர்மமும் ஒன்றோடொன்று சேராத விரோதமுள்ளனவென்று மயங்குகிறது. ஆகையால், பிராம்மணோத்தமரே! தர்மம் விட்டு விலகாத வழியில் சென்று இந்தப் பூமியை எங்ஙனம் ஜயிப்போமோ அங்ஙனம் அரசர்களுக்குரிய தர்மங்களையும் நான்கு ஜாதிகளுக்குள்ள தர்மங்களனைத்தையும் ஆபத்துச் சமயத்தில் செலுத்தவேண்டிய நீதிமுறையையும் விரிவாகக் கேட்க விரும்புகிறேன்" என்று சொன்னார்.

ஜனமேஜயமஹாராஜரே! வேதமறிந்தவர்களிற் சிறந்தவரும் சென்ற காலத்திலுள்ள யாவற்றையும் அறிந்தவருமான வியாஸர், நாரதரைப் பார்த்துத் தர்மபுத்ரருக்குச் சொல்லத் தொடங்கினர். "ஓ! மஹாபாஹுவான ராஜனே! தர்மம் யாவற்றையும் கேட்க விருப்பமிருந்தால் கௌரவர்களின் பெரியபாட்டனரும் கிழவருமான பீஷ்மரிடம் போய்ச்சேர். எல்லாமறிந்தவரும் தர்மங்களையெல்லாம் அறிந்தவரும் கங்காதேவியின் புத்ரருமான அந்தப் பீஷ்மர் உனது மனத்திலுள்ள ஸூக்ஷ்மமான தர்மத்தைப்பற்றிய ஸந்தேஹங்களைத் தெளிவிப்பார். தேவலோகத்தின் நதியாகிய கங்காதேவியால் உண்டு பண்ணப்பட்ட அந்தப் பீஷ்மர் இந்திரன் முதலிய தேவர்கள் யாவரையும் நேரில் பார்த்திருக்கிறார். பிரபுவான அவர் பிருஹஸ்பதி முதலான தேவரிஷிகளைப் பலமுறை உபசரித்து ஸந்தோஷப்படுத்தி அவர்களிடமிருந்து ராஜநீதியை அப்யஸித்தார். குருச்ரேஷ்டரான அவர், தேவாஸுரர்களின் ஆசாரியரும் பிராம்மணருமான சுக்ரர் அறிந்த நீதிசாஸ்திரத்தை உரையுடன் அறிந்திருக்கிறார். பெரிய புத்தியுள்ள பீஷ்மர் பிருகுகுலத்திலுதித்த ச்யவனரிடமிருந்தும் வஸிஷ்டரிடமிருந்தும் விதிப்படி வேதங்களையெல்லாம் வியாகரண முதலிய அங்கங்களுடன் அப்யஸித்தார். புருஷச்ரேஷ்டரான அவர் ஜ்வலிக்கின்ற தேஜஸுள்ளவரும் ஆத்மவித்தையின் உண்மை தெரிந்த வரும் பிரம்மாவின் முதல்புத்ரருமான ஸனத்குமாரரிடமிருந்து ஆத்மவித்தையையும் மார்க்கண்டேயரிடமிருந்து ஸந்யாஸ தர்மம் எல்லாவற்றையும் பரசுராமரிடமிருந்தும் இந்திரனிடமிருந்தும் அஸ்த்ரவித்தைகளையும் நன்றாக அறிந்துகொண்டார். மனிதஜன்மமாயிருந்தும் அவருக்கு மரணம் அவரிஷ்டம்போலிருக்கிறது. புத்திரனில்லாதிருந்தும் அவருக்குப் புண்யலோகமுண்டென்பது மிகப்ரஸித்தம். பரிசுத்தர்களான பிரம்மரிஷிகள் அவருக்கு எப்போதும் ஸபையோராயிருந்தார்கள். அறிய வேண்டிய விஷயங்களில் அவர் அறியா

கது எதுவுமில்லை. தர்மங்களின் ஸூக்ஷ்மத்தையும் மற்றுமுள்ள தத்வத்தையும் அறிந்த அந்தப் பீஷ்மர் உயிரைவிடுவதற்கு முன்னமே அவரிடம் சென்றுயானல் அவர் உனக்கு உபதேசஞ்செய்வார்'' என்று சொன்னர்.

இவ்விதம் சொல்லப்பட்டவரும் பெரிய புத்தியுள்ளவரும்விசாலமான அறிவுள்ளவருமான யுதிஷ்டிரர், பேசுகிறவர்களிற் சிறந்தவரும் ஸத்யவதிபுத்ரருமான வியாஸரைநோக்கி, ''பூமியை நாசமாக்கினவனும்எல்லாமனிதர்கட்கும் குற்றத்தைச் செய்தவனுமான நான் மாபிர்க்கூச்சமுண்டாக்கத்தக்கதும் பெரியதுமான ஞாதிகளின் வதத்தைச் செய்து, கபடமில்லாமல் யுத்தஞ்செய்யும் அந்தப் பீஷ்மரையும் கபடமாக அடிக்கும்படி செய்துவிட்டு, எப்படி அவரிடம் சென்று கேட்பது தகுதியாகும்?'' என்று சொன்னர்.

பிறகு, இப்படிச்சொன்ன ராஜஸ்ரேஷ்டரான யுதிஷ்டிரரைநோக்கி, நான்குஜாதிகளுக்கும் ஹிதத்தைச்செய்ய விரும்பி, சிறந்தகைகளையுடைய யதூத்தமரான ஸ்ரீகிருஷ்ணபகவான், திரும்பவும், சொல்லத்தொடங்கினர். ''ஓ! ராஜஸ்ரேஷ்டரே! சோகத்தைநினைத்து நீர் அதிக நிர்ப்பந்தஞ்செய்வது இப்பொழுது உசிதமன்று. நீர் வியாஸபகவான் சொன்னபடி செய்யவேண்டும். சிறந்த கைகளையுடையவரே! மிக்க பராக்ரமசாலிகளான தம்பிகளும் பிராம்மணர்களும் யுத்தத்தில் மிஞ்சின அரசர்களும் உம்மைக் கோடைக் காலத்தின் முடிவில் மேகத்தைப்போல யாசித்துக்கொண்டு உபாஸிக்கிறார்கள். மஹாராஜரே! நான்குஜாதியுமடங்கிய குருஜாங்கலமென்னும் ராஜ்யமுழுமையும் உம்மைவேண்டி வந்துநிற்கிறது. சத்ருக்களைத்தபிக்கச்செய்து கொல்லுகிறவரே! மஹாத்மாக்களான இந்தப்பிராம்மணர்களின் பிரியத்திற்காகவும் ஒப்பற்ற மஹிமையுள்ள குருவான இந்த வியாஸருடைய கட்டளைக்காகவும் நான்முதலிய ஸ்நேஹிதர்களுக்கும் திரௌபதிக்கும் பிரியத்தையும் உலகத்திற்கு க்ஷேமத்தையும் நீர் செய்யவேண்டும்'' என்று சொன்னர். தாமரைக்கண்ணரான அந்த யுதிஷ்டிரராஜர் இவ்விதம்ஸ்ரீகிருஷ்ணரால்சொல்லப்பட்டு, எல்லாஉலகங்களின் க்ஷேமநிமித்தமும் பெரியமனங்கொண்டு எழுந்திருந்தார்.

புருஷப்புலிபோன்றஜனமேஜயரே! பெருங்கீர்த்தியுள்ள அந்த யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணபகவான், வியாஸர், தேவஸ்தானர், அர்ஜுனன் இவர்களாலும் மற்றுமுள்ளபலராலும் நல்வார்த்தைகளால் ஸமாதானஞ்செய்யப்பட்டு மனத்திலுள்ள துக்கத்தையும் தாபத்தையும் விலக்கிக்கொண்டார். வேதத்திலும் அதன் கருத்திலும் மற்றுமுள்ள

சாஸ்திரங்களிலும் ஸமர்த்தரும் பாண்டுபுத்திரருமான யுதிஷ்டிரர் தம் மனத்தால் நிச்சயஞ்செய்துகொண்டு துக்கத்திலிருந்து சாந்தரானர். நக்ஷத்திரங்களாற் சூழப்பட்ட சந்திரன்போல அவர்களால் சூழப் பட்ட அந்தஅரசர் திருதராஷ்டிரனை முன்னிட்டுத் தமது பட்டணம் செல்லப் புறப்பட்டார். புறப்படுங்காலத்தில் தருமந்தெரிந்த குந்தி யின் குமாரரான யுதிஷ்டிரர் பலஆயிரம் தேவர்களையும் பிராம்மணர் களையும் பூஜித்தார். பிறகு, நல்லலக்ஷணமுள்ள பதிறு வெள்ளைக் குதிரைகள் கட்டியதும் கம்பளமும் தோலும் விரித்ததும் புண்ய மந் திரங்களால் ஜபிக்கப்பட்டதுமான புதிய வெள்ளரதத்தில், தேவ தாமயமானரதத்தில் ஸோமதேவன்போல, யுதிஷ்டிரர் வந்திகளால் கட்டியங் கூறப்பட்டவராக ஏறினர். குந்திபுத்திரனும் பயங்கர மான பராக்ரமமுள்ளவனுமான பீமன் குதிரைகளின்கடிவாளங்களைப் பிடித்தான். அர்ஜுனன் காந்தியுள்ள வெள்ளைக்குடையைப் பிடித் தான். ராஜாவின் சிரசில் பிடிக்கப்பட்ட அந்த வெள்ளைக்குடையா னது, வெண்மையான மேகமுள்ள ஆகாசத்தில் நக்ஷத்திரங்களால் சூழப்பட்ட சந்திரன்போல விளங்கிற்று. வீரர்களான நகுல ஸஹ தேவர்களிருவரும் சந்திரகிரணங்கள்போலப் பிரகாசிப்பனவும் அலங் கரிக்கப்பட்டனவும் அழகுள்ளனவுமான இரு சாமரங்களை வீசினர் கள். அரசரே! ஸஹோதரர்களான அவர்கள் ஐவரும் அலங்கரிக்கப் பட்டு ஒருரதத்திற் சேர்ந்தது, ஐந்துபூதங்களும் ஓரிடத்திற்சேர்ந்தது போலக் காணப்பட்டது. ராஜரே! திருதராஷ்டிரனின் புத்திரனை யுயுத்ஸுவென்பவன் மேகுவேகமுள்ள (நான்கு) குதிரைகட்டிய சிறந்த ரதத்தின்மேலிருந்துகொண்டு பாண்டவர்களில் மூத்தவரான தர்மபுத்திரரைப் பின்செல்லத் தொடங்கினன். ஸ்ரீ கிருஷ்ணபகவா னும், ஸாத்யகியுடன் கூட, சைப்யம் ஸுக்ரீவம் என்னும் குதிரை கட்டிய சுத்தமான பொற்றேரிலேறிப் பாண்டவர்களுக்குப்பின் புறப் பட்டார். பாரதரே! தர்ம புத்ரருக்குப் பெரியதகப்பனான திரு தராஷ்டிரன், காந்தாரியுடன் கூட, [1] நரயானத்திலேறி முந்திப் புறப்பட் டான். குந்தி, திரௌபதி, ஸுபத்ரைமுதலிய கௌரவஸ்திரீகள் யாவரும் விதுரரை முன்னிட்டுக்கொண்டு பலவிதமான வாகனங்க ளோடு புறப்பட்டார்கள். உடனே, [2] நன்முயலங்கரிக்கப்பட்ட பல ரதங்களும் யானைகளும் குதிரைகளும் பதாதிக்கூட்டங்களும் பின் தொடர்ந்து புறப்பட்டன. பிறகு, [3] வைதாளிகர்களாலும் ஸூதர்க

---

1 பல்லக்கு. 2 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது

3 ஆதிபர்வம், 678-வது பக்கம் குறிப்பிற்காண்க.

ளாலும் மாகதர்களாலும் நல்லவசனங்களால் துதிக்கப்படும் யுதிஷ்டிர ராஜர் ஹஸ்திநாபுரம் நோக்கிச் சென்றார். மிகவும் ஸந்தோஷம் பூரித்த பலஜனங்களால் நிறைந்ததும் கணக்கில்லாத கூட்டத்தால் மிகவும் நெருக்கமுள்ளதுமான யுதிஷ்டிரராஜரின் அந்தப்பிரயாணமானது உலகில் ஒப்பற்றதாயிருந்தது. பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் குந்தி புத்ரரான அவரை எதிர்கொண்டழைக்கவேண்டிப் பட்டணத்தையும் ராஜவீதிகளையும் வேண்டியபடி பலவிதமாக அலங்கரித்தார்கள். தோரணங்களாலும் வெளுப்பான தோரணமாலைகளாலும் அகில்முதலிய வாசனைத்தூபங்களாலும் ராஜவீதிமுதலியஇடங்களியாவும் நன்றாக அலங்கரிக்கப்பட்டன. அவ்விதமே, அரண்மனையைச்சுற்றிய இடம் உயர்ந்த பலவகைப் புஷ்பங்களாலும் வாஸனைப் பொடிகளாலும் அநேகமாலைகளாலும் நன்றாயலங்கரிக்கப்பட்டது. பட்டணத்து வாயில்களில் புதியனவும் உறுதியுள்ளனவும் வெளுப்புமான பூர்ணகலசங்களும் வெண்மையான புஷ்பங்களும் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டன. ஸ்நேஹிதர்களுடன்கூடின யுதிஷ்டிரராஜர் சுபவசனங்களால் துதிக்கப்பட்டு அவ்விதம் அலங்கரிக்கப்பட்ட ஹஸ்திநபட்டணத்தில் பிரவேசித்தார்.

மூப்பத்தேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் நகரத்துஜனங்கள் புகழ்ந்ததும், யுதிஷ்டிரர் ராஜஸபையில் பிரவேசித்ததும், யுதிஷ்டிரரைநிந்தித்த சார்வாகனென்னும் ராக்ஷஸன் பிராம்மணர்களுடைய கோபத்தால் நாசமடைந்ததும்.)

பாண்டவர்களின் பிரவேசத்தைப் பார்க்க விருப்பமுள்ளவர்களான பட்டணத்துஜனங்கள் ஆயிரமாயிரங்கூட்டமாக வரத்தொடங்கினர்கள். அரசரே! நாலுபக்கமும் அலங்கரிக்கப்பட்டு ஜனக்கூட்டம் பெருகின அந்தராஜவீதியானது சந்திரனுதிக்குங்காலத்தில் பெருகும் பெருங்கடல்போல விளங்கிற்று. பாரதரே! பார்க்கவந்த ஸ்த்ரீகளால் நிறைந்தனவும் இரத்தினமயமும் ராஜவீதிகளிலுள்ளனவும் பெரியனவுமான வீடுகள் பாரத்தால் அந்தச்சமயம் சலிப்பனபோலாயின. அந்தஸ்திரீகள், வெட்கத்துடன், யுதிஷ்டிரர் பீமன் அர்ஜுனன் நகுலன் ஸஹதேவன் இவர்களை மெதுவாய்க் கொண்டாடினர்கள். 'ஓ! பாஞ்சாலி! மஹரிஷியை அடைந்து விளங்கும் கௌதமியைப்போல புருஷர்களில் மிகச் சிறந்த இப்பதிகளையடைந்துவிளங்கும் நீயே பாக்கியமுள்ளவள். கல்யாணி! உன்காரியங்கள் பழுதில்

லாதவை. உன்னுடைய தவமே தவம்' என்று திரௌபதியை அந்த ஸ்திரீகள் மிகவும் கொண்டாடினர்கள். ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் பெண்களின் ஸ்துதிவசனங்களாலும் ஸந்தோஷத்தாலுண்டாகும் மற்ற ஜனங்களின் சப்தங்களாலும் அப்பட்டணமுழுமையும் அந்தச் சமயம் கோலாகலமாயிருந்தது. யுதிஷ்டிரர், யுக்தம்போல அவ்விதமுள்ள ராஜஸ்திரீகளைக்கடந்து அலங்காரங்களால் விளங்கும் அரண்மனைக்கருகில் வந்துசேர்ந்தார். அந்தச்சமயம் பட்டணங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் அங்குவந்துகூடிய ஜனங்கள் யாவரும், 'சத்துருக்களைக் கொல்லத்தக்க ஓ! ராஜேந்திரரே! பாக்கியத்தால் சத்துருக்களை ஜயித்தீர். தர்மத்துடனும் பலத்துடனும் எங்கள் பாக்கியத்தால் திரும்பவும் இந்த ராஜ்யத்தைஅடைந்தீர். ஓ! மஹாராஜரே! இங்கு இருந்துகொண்டு ஆயிரங்காலம் நீர் எங்களுக்கு அரசராய் இந்திரன் ஸுவர்க்கத்தைப் பரிபாலனம் செய்வதுபோலத் தர்மப்படி பிராணிகளைப் பரிபாலனம் செய்யவேண்டும்' என்று சேவிகளுக்குச் சுபமான வசனங்களைச் சொன்னர்கள். இவ்விதம் அரண்மனைவாசலில் பிராம்மணர்களால் நாலுபக்கங்களிலும் சொல்லப்படும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, மங்களோபசாரங்களால் பூஜிக்கப்பட்ட யுதிஷ்டிரராஜர், தேவராஜாவின் அரண்மனைக்கொப்பான ராஜகிருஹத்தில் பிரவேசித்து ஜயசப்தங்களைக் கேட்டபின், ரதத்திலிருந்து இறங்கினர். லக்ஷ்மிவிலாஸமுள்ளவரும் சோபையுள்ளவரும் பெருங்கீர்த்தியுள்ளவருமான தர்மபுத்திரர் உள்ளே பிரவேசித்து அங்குள்ள தேவதாமூர்த்திகளினருகிற்சென்று அவைகள் யாவற்றையும் சந்தனம் புஷ்பம் ரத்னமுதலிய வஸ்துக்களால் பூஜித்தவுடன் திரும்பவும் வெளியில் வந்தார். அங்கு, மங்கள வஸ்துக்களைக் கையிற்கொண்டு தம்மைக்காணவேண்டி வந்துநிற்கும் பிராம்மணர்களைக் கண்டார். ஆசீர்வாதஞ்செய்ய விருப்பமுள்ள அந்தணச்ரேஷ்டர்களால் சூழப்பட்ட அந்த யுதிஷ்டிரர் நக்ஷத்திரக்கூட்டங்களால் சூழப்பட்ட சந்திரன்போல் அப்பொழுது பரிசுத்தராய் விளங்கினர். ராஜச்ரேஷ்டரே! குந்தியின் குமாரரான அரசர் புஷ்பங்கள் மோதகங்கள் ரத்னங்கள் அதிகமான ஸுவர்ணங்கள் பசுக்கள் வஸ்திரங்கள் இவைகளாலும் மற்றுமுள்ள பல வஸ்துக்களாலும் அந்தப் பிராம்மணர்களை விதிப்படி ஆராதித்தார். ஸேவகர்களைக்கொண்டு அவர்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் விசாரிக்கவுஞ்செய்தார். பிறகு, குருவான தௌம்யரையும் பெரிய தந்தையான திருதராஷ்டிரனையும் முன்னிட்டுக்கொண்டு இந்திரன் ஸுதர்மையென்னும் ஸபையில் பிரவேசிப்பதுபோல யுதிஷ்டிரர் ராஜஸ்பையில்

பிரவேசித்தார். பாரதரே! உடனே இஷ்டர்களுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதும் கேட்பதற்கு மிகவும் இனிமையானதும் புண்ணியமுமான புண்ணியாஹவாசன த்வனியான து தேவலோகத்தை வியாபிக்கத்தக்கதாக உண்டாயிற்று. அரசரே! ஹம்ஸத்திற்கொப்பான த்வனியுள்ள வேதமறிந்த பிராம்மணர்களின் வாக்குக்களும் பூர்ணமான பொருளடங்கிய பதங்களுள்ளனவாய்க் கேட்கப்பட்டன. ராஜரே! பின்பு, துந்துபிவாத்தியத்தின் த்வனியும் அழகான சங்க த்வனியும் அங்குள்ள கட்டியங்கூறுவோர்களின் ஜயத்வனியும் உண்டாயின. அரசஸ்ரேஷ்டரே! அந்தப் பிராம்மணர் முதலிய ஜனங்களின் சப்தங்கள் யாவும் ஓய்ந்தவுடன், துர்யோதனனுக்குச் சகாவான சார்வாகனென்னும் ராக்ஷஸன், சிகையும் மூன்றுதண்டமும் [1] ஜபமாலையுமுள்ள ஸந்யாஸிப் பிராம்மணவேஷத்துடன், ஆசீர்வாதம் சொல்ல இச்சிப்பவர்களும் பெரிய தவமுள்ளவர்களுமான அங்குள்ள பல்லாயிரம் பிராம்மணர்களுடன் கூட்டத்திலிருந்துகொண்டு, தைரியத்துடன் யுதிஷ்டிரராஜரைப்பார்த்துப் பயமில்லாமல் பேசத் தொடங்கினன். அந்தத் துஷ்டன் அங்குள்ள பிராம்மணர்கள் ஒருவரையுங்கேளாமல் மஹாத்மாக்களான பாண்டவர்களைப் பாபிகளெனச் சொல்லக்கருதி, 'ஏ! குந்தியின் குமாரா! இங்குள்ள பிராம்மணர்கள் யாவரும் தங்கள் அபிப்பிராயத்தை என்முகமாக உனக்குச் சொல்லுகிறார்கள். ஞாதிகளைக் கொலைசெய்த கெட்ட அரசனை நீ நிந்திக்கத்தக்கவன். இது நிற்க. இவ்விதம் ஞாதிகளைநாசஞ்செய்த உனக்கு ராஜ்யம் எதற்காக? பெரியோர்களையும் கொலைசெய்த உனக்கு மரணமே நல்லது; ஜீவனம் நன்றன்று' என்றுசொன்னன். துஷ்டனை அந்த ராக்ஷஸனுடைய இந்த வார்த்தையைக்கேட்ட அங்குள்ள பிராம்மணர்கள்யாவரும் அவன் வாக்கியத்தால் பயந்து நடுங்கிக் கதறினர்கள். அரசரே! பின்பு அங்குள்ள பிராம்மணர்களும் அந்த யுதிஷ்டிரரும் மிகவும் லஜ்ஜைஅடைந்து வருத்தமுற்றவர்களாய்ச் சிறிதுநேரம் பேசாமலிருந்தார்கள். உடனே, யுதிஷ்டிரர், "ஓ! பெரியோர்களே! நீங்கள், மிகவும் நமஸ்கரித்து யாசிக்கும் என்னை அனுக்ரஹிக்கவேண்டும். கிட்டினபந்துக்களின் துன்பம் பொறுமல் ராஜ்யத்திற்குவந்த என்னைத் திக்காரஞ்செய்யாமலிருக்க நீங்கள் தயைசெய்ய வேண்டும்" என்றுசொன்னர்.

உடனே, அந்த பிராம்மணர்கள் யாவரும், 'ஓ! ராஜரே! இவன் எங்களுடன்சேர்ந்த பிராம்மணனேயல்லன். இவன் எவனோ வேறே

---

1 இங்கு 'ஸாங்க்ய:' என்பதைவிட்டு, 'ஸாக்ஷ:' என்னும் பாடம் கொள்ளப்பட்டது.

ஒருவன்' என்று சொல்லிவிட்டு, மிக்கதவங்களால் பரிசுத்திபெற்ற வர்களும் வேதமறிந்தவர்களுமான அம்மஹாத்மாக்கள் ஞானக்கண்ணால் அவனை இன்னனென்று தெரிந்துகொண்டு, 'ஓ! ராஜரே! இவன் துர்யோதனனுக்குத் தோழனென்று பிரஸித்தனை பிரம்ம ராக்ஷஸன். அந்தத் துர்யோதனனுக்கு நன்மையைச் செய்யவிரும்பி இவன் ஸந்யாஸிஉருவங்கொண்டு வந்துநிற்கிறான். இந்தவார்த்தையை நாங்கள் சொல்லவில்லை. ஓ! தர்மபுத்திபுள்ளவரே! நீர் இவ்விதப் பயத்தை அடையவேண்டாம். தம்பிகளுடன்கூட உமக்கு க்ஷேமம் உண்டாகவேண்டுகிறோம்' என்று சொன்னார்கள். உடனே, மிகவும் கோபங்கொண்ட பரிசுத்தர்களான அந்தப்பிராமணர்கள் யாவரும் பாபியான அந்தராக்ஷஸனை, 'ஹும்' என்னும் சப்தங்களால் அதட்டி அடித்தார்கள். அந்தப்பிராம்மணர்களுடைய தேஜஸால் கொளுத்தப்பட்டு அந்தராக்ஷஸன் இடிவிழுந்தெரிக்கப்பட்ட தளிருள்ளமரம் போலக் கீழே விழுந்தான். பின்பு, அந்தயுதிஷ்டிரராஜரை ஸந்தோஷப்படுத்தி அவரால் பூஜிக்கப்பட்ட அந்தப்பிராம்மணர்கள் வீடு சென்றார்கள். யுதிஷ்டிரரும் ஸ்நேகிதர்களுடன்கூடிச் சந்தோஷம் அடைந்தார்.

மூப்பத்தேட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(ஸ்ரீ கிருஷ்ணபகவான் யுதிஷ்டிரருக்குச் சார்வாக னுடைய வரலாறு கூறியது.)

பிறகு, தம்பிகளுடன் சேர்ந்திருக்கும் யுதிஷ்டிரராஜரைநோக்கி, தேவகியின் புத்திரரும் எல்லாமறிந்தவருமான ஸ்ரீகிருஷ்ணபகவான், சொல்லத்தொடங்கினர். "ஐயா! எப்பொழுதும் எனக்கு இவ்வுலகில் பிராம்மணர்கள் பூஜிக்கத்தக்கவர்கள். இவர்கள் விசேஷமாக அனுக்ரஹசக்தியுள்ளவர்களும் வாக்கில் விஷமுள்ளவர்களுமான பூமியில் ஸஞ்சரிக்கும் தேவர்களாவார்கள். சிறந்தகைகளையுடைய ராஜரே! முன்காலத்தில் கிருதயுகத்தில் சார்வாகனென்னும் ராக்ஷஸன் பதரீக்ஷேத்திரத்தின்கண் பலவருஷங்கள் தவஞ்செய்துகொண்டிருந்தான். பாரதரே! பிறகு, 'வேண்டியவரத்தைக்கேள்' என்று பிரம்மதேவரால் பலமுறை சொல்லப்பட்ட அந்தராக்ஷஸன் எந்தப்பிராணியிடமிருந்தும் தனக்குப் பயமுண்டாகாமலிருக்கவேண்டுமெனக் கேட்டுக்

கொண்டான். உலகங்களுக்குப்பதியான பிரம்மதேவரும் பிராம்மணர்களை அவமதியாதிருக்கும்வரை எல்லாப்பிராணிகளிடமிருந்தும் பயமில்லாமையென்னும் மிகவுத்தமமான இவ்வரத்தை அவனுக்கு அளித்தனர். அந்தப்பாபியான ராக்ஷஸன் வரம்பெற்றுப் பெரியவன்மையும் கொடுஞ்செய்கையும் ஒப்பற்ற பராக்ரமமுமுள்ளவனுய்த் தேவர்களைத் தபிக்கச்செய்யத் தொடங்கினன். பின்பு, அவ்வரக்கன்பலத்தால் பீடிக்கப்பட்ட தேவர்கள் ஒன்றுசேர்ந்து அவனைக் கொல்லவேண்டுமென்று பிரம்மதேவரிடம் அறிவித்துக்கொண்டார்கள். பாரதரே! உடனே, பிரம்மதேவர், 'தாமதமின்றி இவனுக்கு மிருத்யுவுண்டாக நான் கட்டளையிட்டிருக்கிறேன். மனிதர்களில் துர்யோதனனென்னும் ஓர்அரசன் இவனுக்கு நண்பனுவான். அவனிடமுள்ள அன்புக்கடங்கி இவன் அந்தணர்களை அவமதிப்பான். அப்போது, இவன் அவமதித்தகாரணத்தால், வாக்கில் பலமுள்ள பிராம்மணர்கள் மிக்கசோபங்கொண்டு பாபியான இவனைக் கோபத்தீயாலெரித்து நாசஞ்செய்யப்போகிறார்கள்' என்று தேவர்களுக்குச் சொன்னர். ஓ! பரதஸ்ரேஷ்டரே! அந்தச்சார்வாகனென்னும் ராக்ஷஸன் இதோபிராம்மணர்களின் தண்டத்தாலடிக்கப்பட்டுப்படுத்திருக்கிறன். அரசஸ்ரேஷ்டரே! சோகப்படவேண்டாம். ஓ! ராஜரே! க்ஷத்திரியர்களுக்குள்ள தர்மப்படி உம்மாலடிக்கப்பட்ட க்ஷத்திரியஸ்ரேஷ்டர்களும் வீரர்களுமான ஞாதிகள் மஹாத்மாக்களாய் ஸ்வர்க்கலோகமடைந்தார்கள். இதுவிஷயத்தில் உமக்கு வேறுவிதமான எண்ணம் வேண்டாம். வேண்டியகாரியங்களைச் செய்யத்தொடங்கும்; சத்துருக்களை வெல்லும்; பிராணிகளைக் காப்பாற்றும். பிராம்மணர்களைப் பூஜியும்" என்றுசொன்னர்.

முப்பத்தொன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரருக்கு ராஜ்யாபிஷேகம் நடந்தது.)

பிறகு, குந்திபுத்ரரான யுதிஷ்டிரர், சோகத்தையும் தாபத்தையும்விட்டுச் சந்தோஷமடைந்து, உயர்ந்தபொற்பீடத்தில் கிழக்குமுகமாக உட்கார்ந்தார். அவருக்கெதிரில் அழகாகவிளங்கும் ஒருபொற்பீடத்தில் சத்துருக்களை அடக்குகிறவர்களான ஸ்ரீகிருஷ்ணபகவானும் ஸாத்யகியும் உட்கார்ந்தார்கள். யுதிஷ்டிரராஜரை நடுவில்வைத்

துக்கொண்டு பின்புறமாயுள்ள அழகான மணிப்பீடங்களில் மஹாத் மாக்களான அர்ஜுனனும் பீமனுமாகிய இருவர்களுமிருந்தார்கள். யானைத்தந்தத்தாற் செய்யப்பட்டுத் தங்கக்கட்டுக்களுடன் விளங்கும் அழகானகட்டிலில் நகுலஸஹதேவர்களும் குந்தியும் உட்கார்ந் தார்கள். (துர்யோதனனுக்கு ஆசிரியரான) ஸுதர்மாவும் விதுரரும் தௌம்யரும் கௌரவனைதிருதராஷ்டிரனும் அக்னிபோலப்பிரகா சிக்கும் ஆஸனங்களில் தனித்தனியே உட்கார்ந்தார்கள். திருதராஷ் டிரனிருக்கும் இடத்திற்கருகில் யுயுத்ஸுவும் கீர்த்தியுள்ளகாந்தாரி யும் ஸஞ்சயனும்உட்கார்ந்தார்கள். அங்கு உட்கார்ந்ததர்மபுத்தியுள்ள யுதிஷ்டிரரானவர் வெண்மையான புஷ்பங்கள்,பல அடையாளமுள்ள தேவதாபீடங்கள், அக்ஷதைகள், பூமி, பொன், வெள்ளி, ரத்தினங் கள் இவைகளை ஸ்பர்சஞ்செய்தார். பிறகு, பிரஜைகள்யாவரும் பல மங்களத்திரவியங்களை எடுத்துக்கொண்டு புரோஹிதரை முன்னிட்டு யுதிஷ்டிரராஜரைக் கண்டார்கள். உடனே, பூமி, தங்கம், பல ரத்தி னங்கள், தங்கம் வெள்ளி தாமிரம் மண்இவைகளால் செய்தபூர்ண கலசங்கள், புஷ்பங்கள், பொரிகள், தருப்பங்கள், பால், தயிர், நெய், தேன், வன்னி, அரசு, பலாசு இவைகளின்ஸமித்துக்கள், அத்திமரத் தால் செய்தஸ்ருவம், தங்கக்கட்டுள்ளசங்கம் இவைகளும் அபிஷே கத்திற்குவேண்டிய மற்றுமுள்ள ஸர்வஸம்பாரங்களாலும் நிறைந்த பாத்திரமும் சேகரிக்கப்பட்டன. பிறகு, ஸ்ரீகிருஷ்ணபகவான் கட்ட ளைப்படி புரோஹிதரும் புத்திமானுமான தௌம்யர் வடகிழக்குப் பாகத்தில் சற்றுப்பள்ளமானவிடத்தில் லக்ஷணப்படி வேதியைஅமை த்துப் புலித்தோல்போடப்பட்டதும் உறுதியானகால்களால் நிலை பெற்றதும் அக்கினிக்குச்சரியான காந்தியுள்ளதுமான ஸர்வதோபத் ரமென்னும் வெண்மையான ஆஸனத்தில் மஹாத்மாவான யுதிஷ் டிரராஜரையும் திரௌபதன்புத்திரியான கிருஷ்ணையையும் உட்கார வைத்து விதிப்படி மந்திரங்களைச்சொல்லி அக்கினியில்ஹோமஞ்செய் தார். உடனே, ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்திருந்து பூர்ணமானசங் கத்தை எடுத்துக்கொண்டு குந்தியின்புத்திரரான யுதிஷ்டிரரைப் பூமி க்குப்பதியாகப் பட்டாபிஷேகம்செய்தார். அப்படியே, கிருஷ்ணனால் அனுமதிகொடுக்கப்பெற்று ராஜரிஷியான திருதராஷ்டிரனும் பிரஜை கள் யாவரும் அபிஷேகம்செய்தார்கள். பாஞ்சஜன்யமென்னும் சங்கத் தை எடுத்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் அபிஷேகம்செய்தவுடன், தம்பி களுடன்கூடிய யுதிஷ்டிரராஜர் அமிருதத்திற்கொப்பான அழகிய முகமுள்ளவராஞர். உடனே, பணவம், ஆநகம், துந்துபிமுதலிய

வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன. யுதிஷ்டிரராஜரும் அங்கே செய்த கார்யங்கள்யாவற்றையும் தர்மப்படி அங்கீகரித்தார். விசேஷமான தக்ஷிணைகளைக்கொடுத்து விதிப்படி அவர்களைப் பூஜிக்கவுஞ்செய்தார். உடனே, நன்முக வேதாத்தியயனஞ்செய்தவர்களும் நல்ல ஆசாரமும் உறுதியுமுள்ளவர்களுமான பிராம்மணர்களை ஆயிரம் [1] நிஷ்கங்களால் ஸந்தோஷப்படுத்தி ஆசீர்வதிக்கும்படி செய்துகொண்டார். அரசரே! அந்தப்ராம்மணர்கள், ஸந்தோஷமுற்று ஹம்ஸங்கள்போல அழகானத்வனியுள்ளவர்களாய் க்ஷேமத்தையும் ஜயத்தையும் சொல்லியபின், யுதிஷ்டிரரைநோக்கி, 'ஓ! மஹாபாஹுவான யுதிஷ்டிர ராஜரே! பாக்கியத்தால் ஜயமுள்ளவரானீர். பெரியதேஜஸுள்ள பாண்டவரே! உமது பராக்ரமத்தால் ஸ்வதர்மத்தை நீர்அடைந்தது பாக்கியமே. பலவீரர்களைஒழித்த அப்பெரியசண்டையிலிருந்து பகைவர்களைவென்று ஒருகுறைவுமின்றி க்ஷேமமாகவே அர்ஜுனன், பீமன், நகுலன், ஸஹதேவன் இவர்களுடன் நீர் விடுபட்டு ஸுகமாயிருப்பது பெரியபாக்கியம். ஓ! பாரதரே! சீக்கிரமாக மேற்செய்யவேண்டிய எல்லாக்காரியங்களையும் செய்யும்' என்று புகழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டார்கள். பிறகு, ஸாதுக்களான பிராம்மணர்களால் ஸந்தோஷத்துடன் பூஜிக்கப்பட்ட யுதிஷ்டிரராஜர் இஷ்டர்களோடுகூடப் பெரிய ராஜ்யத்தைப் பெற்றிருந்தார்.

நாற்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் பிராம்மணர்முதலியோர்களுக்கு விடைகொடுத்ததும், பீமஸேனன்முதலியோர்களை அவரவர்களுக்குரிய வேலைகளில் அமர்த்தியதும், திருதராஷ்டிரனைக் கௌரவித்து நடத்தும்படி நியமித்ததும்.)

தேசகாலங்களுக்கு ஒத்ததான பிரஜைகளின் அவ்வார்த்தையைக் கேட்ட யுதிஷ்டிரராஜர் மறுமொழிசொல்லத் தொடங்கினர். "ஓ! பிராம்மணஸ்ரேஷ்டர்களே! நீங்கள் யாவர்களும்சேர்ந்து உண்மையாகவோ உண்மையில்லாமலோ இவ்விதக் குணங்களைச் சொன்ன காரணத்தாலேயே பாண்டவர்கள் பாக்கியம்பெற்றவர்களென்பதிற் சந்தேகமில்லை. பொறுமையின்றி எங்களை இவ்விதம் பெருமையானகுணமுள்ளவர்களாகச் சொல்லும் உங்களுக்கு எங்களிடத்தில்

---

[1] ஒருவகைத் தங்கநாணயம்.

நிச்சயமான அனுக்ரகமிருக்கிறதென்பது என்னுடையவெண்ணம். எங்களுடைய பெரியதந்தையான திருதராஷ்டிர மஹாராஜர் எங்களுக்குப் பெரியதெய்வம். என்இஷ்டத்தை விரும்பியபாவருடும், அவருத்தரவின்படியும் அவரிஷ்டப்படியும்இருக்கவேண்டும். பெரியஞாதிவதத்தைச் செய்தும் இவருக்காகவே நான் ஜீவித்திருக்கிறேன். எப்பொழுதும் சோம்பலின்றி நான் இவருக்குப் பணிவிடைசெய்ய விரும்பிக்கொண்டிருக்கிறேன். ஸ்நேஹிதர்களான உங்களுக்கு என்னிடம் அனுக்ரஹமிருப்பது உண்மையாயிருந்தால் திருதராஷ்டிரரிடத்தில் நீங்கள் முன்போலவே இருக்கவேண்டும். உலகத்திற்கும் உங்களுக்கும் எங்களுக்கும் இவரே அரசர். பூமியும் பாண்டவர்களெல்லாரும் இவரனுக்ரஹத்திலிருக்கிறார்கள். என்னுடைய இந்த வசனத்தை எப்பொழுதும் நீங்கள் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்" என்று சொல்லிக் குருநந்தனரான அரசர் பட்டணத்திலுங் கிராமத்திலுமிருந்துவந்த பிரஜைகள் யாவரையும் இஷ்டப்படி போகலாமென்று உத்தரவு கொடுத்துஅனுப்பிவிட்டு இளவரசுப்பட்டத்தில் கௌந்தேயனை பீமஸேனனை இருக்கும்படி செய்தார்.

அவர், விசேஷமான ஞானசம்பத்துள்ள விதுரரை ஆலோசனையிலும் நிச்சயத்திலும் ஸந்தி விக்கிரஹமுதலிய ராஜாங்க ஆலோசனைகளிலும் இருக்கும்படி ஸந்தோஷத்துடன் நியமித்தார். எல்லாக்குணங்களுமுள்ளவனும் பெரியவனுமான ஸஞ்சயனை, செய்தது செய்யாதது வரவு செலவுகளை ஆலோசிக்கும் அதிகாரத்திலிருக்கச்செய்தார். அரசரான யுதிஷ்டிரர், சேனைகளின் கணக்கையும் அவைகளின் வேலைகளையும் அவைகளின் சாப்பாடுகூலிகளையும் கவனிக்கும்படி நகுலனுக்குக் கட்டளையிட்டார். அன்னிய ராஜாங்கத்தாலுண்டாகும் இடையூறுகளையும் அகங்காரமுள்ளவர்களையும் அடக்குமதிகாரத்தில் அர்ஜுனனை ஆஜ்ஞாபித்தார். பிராம்மணர்களையும் தேவர்களையும் ஆராதிப்பதிலும் மற்ற வைதிககாரியங்களிலும் எப்பொழுதுமிருக்கும்படி புரோஹிதர்களிற்சிறந்த தௌம்யருக்கு அனுமதி கொடுத்தார். ஸஹதேவனை எப்பொழுதும் தமதுஅருகிலிருக்கும்படி கட்டளையிட்டார். ஸஹதேவன் எவ்விதஸமயத்திலும் அரசனைக் காப்பாற்றச் சக்தியுள்ளவனுவான். இன்னும் எந்தஎந்தக்காரியங்களை எவரெவர்கள் செய்யவல்லமையுள்ளவர்களோ அவரவர்களை அந்தஅந்தக் காரியங்களிலிருக்கும்படி யுதிஷ்டிரர் ஸந்தோஷத்துடன் கட்டளையிட்டார். தர்மபுத்தியுள்ளவரும் தர்மத்திலாசையுள்ளவரும் சத்துருக்களை அடக்குகிறவருமான தர்மபுத்திரரானவர் விதுரர், ஸஞ்சயன், பெரிய

புத்தியுள்ள யுயுத்ஸு ஆகியஇவர்களைக் குறித்து, "நமது பிதாவான திருதராஷ்டிர ராஜாவின் காரியத்தை நீங்கள் கவனித்துக் கவனித்துச் செய்யவேண்டும். என்காரியத்தைப்போல அவர் காரியம்யாவற்றை யும் ஒரு குறையுமின்றி நீங்கள் தவறுமல் செய்யவேண்டும். பட் டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள ஜனங்களுக்குச் செய்யுங்காரியங் கள் யாவற்றையும் எப்பொழுதும் அவரிடம் தெரிவித்துவிட்டுத் தர்மமாகச் செய்யவேண்டும்" என்று கட்டளையிட்டார்.

நாற்பத்தோராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் யுத்தத்திலிறந்தவர்களுக்கு ஸ்ராத்தங்களைச் செய்வித்து அவர்களை உத்தேசித்து அனேகதர்மகாரியங்களைச் செய்ததும், அவர்களுடைய பந்துக்களை ரக்ஷித்ததும்.)

பின்பு, உதாரபுத்தியுள்ள யுதிஷ்டிரர் யுத்தத்தில் அடிபட்ட ஞாதிகள் யாவருக்கும் தனித்தனியே ஸ்ராத்தங்களைச் செய்வித்தார். திருதராஷ்டிரராஜன், தன் புத்திரர்களைக் குறித்து மரணத்துக்குப் பின் கொடுக்கத்தக்க அநேகவஸ்துக்களுடன்கூடின ருசியுள்ள அன் னம், பசுக்கள், பொருள்கள், அதிகவிலையுள்ள ஆச்சர்யமான ரத்தி னங்கள் இவைகளைத் தானம்செய்தான். பெரியகீர்த்தியுள்ள யுதிஷ் டிரராஜர் திரௌபதியுடன்கூட மஹாத்மாவான தௌம்யர், கர்ணன், திருஷ்டத்யும்னன், அபிமன்யு, ஹிடிம்பிகுமாரனும் ராக்ஷஸனுமான கடோத்கசன், உபகாரம்செய்த விராடன் முதலிய ஸுஹ்ருத்துக் கள், துருபதன், உபபாண்டவர்கள் இவர்கள் யாவரையும் உத்தே சித்துத் தனித்தனியே பசுக்கள் தனங்கள் ரத்தினங்கள்வஸ்திரங்கள் இவைகளைப் பல்லாயிரம் பிராம்மணர்களுக்குக் கொடுத்துத் திருப்தி அடைவித்தார். பின்னும், யுத்தத்தில் அடிபட்ட பந்துக்களல்லாத அர சர்களை உத்தேசித்து உத்தேசித்து அவர்களுக்கு வேண்டிய பரலோ கக்கிரியைகளைச் செய்தார். பாண்டவரான தர்மபுத்திரர், இறந்து போன எல்லா ஸ்நேஹிதர்களையும் குறித்து, அவர்களின் பரலோகத் திற்கு வேண்டி, பலஸபைகளையும் பலகுளங்களையும் பலதண்ணீர்ப் பந்தல்களையும் செய்வித்தார். இவ்விதமாக அந்த அரசர்கள்விஷயத் தில் தாம் கடனில்லாதவராயும் உலகத்திலும் குற்றமான சொல்லற்ற வராயும் தர்மப்படி பிராணிகளைப் பாதுகாத்துக்கொண்டு அந்த அரசர் கிருதகிருத்யரானார். அவர், முன்போலவே திருதராஷ்டிரன், காந்தாரி

விதுரர் முதலிய பூஜிக்கத்தக்க கௌரவர்களையும் மற்றும் போஷிக்கத் தக்கவர்களாகிய யாவரையும் பூஜித்தார். கௌரவரும் தயையுள்ள வருமான அரசர், யுத்தத்தில் பதியையும் புத்திரனையுமிழந்த ஸ்திரீகள் யாவரையும் தயையுடன் பூஜித்துப் பாதுகாத்துவந்தார். கருணை மேற்கொண்ட யுதிஷ்டிரராஜர், ஏழை குருடன் முதலிய கஷ்டப்படும் ஜனங்களை ஆடை ஆகாரம் வீடு முதலியவைகளைக் கொடுத்து ரக்ஷித்துவந்தார். அந்தப் பிரபுவான யுதிஷ்டிரராஜர், பூமிமுழுமையும் ஜயித்துச் சத்துருக்களிடம் கடனில்லாமையையடைந்து விரோதியற்றவராயும் ஸுகியாயும் மனமகிழ்ந்து வாழ்ந்தார்.

நாற்பத்திரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் கிருஷ்ணபகவானைச் சதநாமங்களால் துதித்தது.)

ராஜ்யத்தை அடைந்து அபிஷேகஞ் செய்யப்பெற்ற புத்திமானை யுதிஷ்டிரர், பரிசுத்தராய்க் கைகூப்பிக்கொண்டு, சந்தாமரைக் கண்ணரான ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கிச் சொல்லத் தொடங்கினர். "யதுக்களில் புலிபோன்ற கிருஷ்ணபகவானே! உம்முடைய அனுக்கிரகத்தாலும் நீதியாலும் புத்தியாலும் அதுபோன்ற பராக்கிரமத்தாலும் தகப்பன் பாட்டன் பரம்பரையாய்வந்த இந்த ராஜ்யம் திரும்பவும் அடையப்பட்டது. சத்துருக்களை அடக்கும் தாமரைக் கண்ணரே! உமக்குப் பலமுறை நமஸ்காரம். பரிசுத்தர்களான பிராம்மணர்கள் உம்மை ஒருவரையே [1]புருஷரென்றும் பக்தர்களைப் பாதுகாப்பவரென்றும் சொல்லுகிறார்கள்; பலவிதப் பெயர்களால் உம்மைத் துதிக்கிறார்கள். விஸ்வகர்மாவே! விஸ்வாத்மாவே! ஓ! விஸ்வஸம்பவ! விஷ்ணுவே! ஜிஷ்ணுவே! ஹரியே! கிருஷ்ணரே! வைகுண்டரே! புருஷோத்தமரே! உமக்கு நமஸ்காரம். புராணரான நீர் அதிதியிடனிடம் ஏழுதரம் கர்ப்பத்திலிருந்தவர். நீர் ஒருவரே ப்ருஸ்னிகர்ப்பராயிருந்தவர். உம்மை த்ரியுகரென்றும் சொல்லுகிறார்கள். நீர் ஒருவரே சுசிஸ்ரவஸ், ஹ்ருஷீகேசர், க்ருதார்ச்சிஸ், ஹரம்ஸர், த்ரிசக்ஷுஸ், சம்பு, விபு, தாமோதரர் என்றும் சொல்லப்படுகிறீர். நீரே வராஹர்; அக்நி; ப்ருஹத்பானு; வ்ருஷபர்; தார்க்ஷ்யலக்ஷணர்; அநீகஸாஹர்; புருஷர்; சிபிவிஷ்டர்; உருக்ரமர்; வரிஷ்டர்; உக்ரஸேநாநீ; ஸத்யர்; வாஜஸநி; க்ருஹர்; அச்சுதர்; சத்ருக்

1 எல்லாப்பிராணிகளின் ஹ்ருதயத்திலுமிருப்பவர்.

கஜ நழுவச்செய்பவர்; ஸம்ஸ்கிருதர்; விக்ருதி; வ்ருஷர்; கிருஷ்ண தர்மர்; ஆதி; வ்ருஷதர்ப்பர்; வ்ருஷாகபி; ஸிந்து; விதூர்மி; த்ரிககுப்; த்ரிதாமா; த்ரிவ்ருத்; அச்சுதர்; ஸம்ராட்; விராட்; ஸ்வராட்; ஸ்வாராட்; பூதமயர்; பவர்; விபு; பூ; அதிபூ; கிருஷ்ணர்; கிருஷ்ணவர்த்மா. நீரே ஸ்விஷ்டகிருத்; பிஷஜாவர்த்தர்; கபிலர். வாமனரும் நீரே. யஜ்ஞர், த்ருவர், பதங்கர், ஜயத்ஸேனர் என்றும் நீர் சொல்லப்படுகிறீர். நீரே சிகண்டி; நஹுஷர்; பப்ரு; திவிஸ்பிருக்; புநர்வஸு; ஸுபப்ரு; ருக்மயஜ்ஞர்; ஸுஷேணர்; துந்துபி. நீர் கபஸ்திநேமி, ஸ்ரீ பத்மர், புஷ்கரர், சுஷ்மதாரணர், ருபு, விபு, ஸர்வ ஸுமக்ஷமர், தரித்ரீ என்றும் சொல்லப்படுகிறீர். அம்போநிதியும் நீரே. பிரம்மாவும் பவித்ரதாமாவும் தாமவித்தும் ஹிரண்யகர்ப்பரும் புருஷரும் ஸ்வதாவும் ஸ்வாஹாவும் கேசவரும் நீரே. கிருஷ்ணரே! நீரே இவ்வுலகத்திற்கு உத்பத்திகாரணரும் லயகாரணருமாயிருக்கிறீர். நீரே முதலில் இந்த உலகத்தைப் படைக்கிறீர். உலகங்களுக்கு உற்பத்திகாரணரே! இந்த உலகமும் உமது வசத்திலிருக்கிறது. சார்ங்கத்தையும் சக்ரத்தையும் கத்தியையும் கையில் தரித்தவரே! உமக்கு வந்தனம்" என்று இவ்விதம் ஸபையின் நடுவில் யுதிஷ்டிரராஜரால் துதிக்கப்பட்ட யாதவஶ்ரேஷ்டரும் கமலலோசனருமான கிருஷ்ணபகவான், ஸந்தோஷத்துடன், பாரதரும் பாண்டவர்களில் மூத்தவருமான தர்மபுத்திரரை நிறைந்த சுபவசனங்களால் ஸந்தோஷப்படுத்தினர். யுதிஷ்டிரராஜரால் சொல்லப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய இந்த நூறு பெயர்களையும் படிப்பவரும் கேட்பவரும் பாவங்களனைத்தையும்விட்டு மோக்ஷமடைகிறார்கள்.

நாற்பத்துமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் பீமன் முதலியோருக்குத் துரியோதனாதியர் அரண்மனைகளைக் கொடுத்ததும், அவர்கள் ராத்திரி அவைகளில் தங்கி மறுகாலையில் தர்மபுத்திரரிடம் வந்ததும்.)

பிறகு, அங்கு வந்த மனிதர்கள் யாவரும் யுதிஷ்டிரரால் அனுமதிகொடுக்கப்பெற்றுத் தம்தம் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். செல்வவானான யுதிஷ்டிரராஜர், கடுமையான பராக்கிரமமுள்ளபீமனையும் அர்ஜுனனையும் நகுலஸஹதேவர்களையும் நோக்கி, நல்ல வார்த்தைகளால்

ஸமாதானஞ்செய்து, "ஓ! பரதஸ்ரேஷ்டர்களே! பெரிய யுத்தத்தில் சத்துருக்களின் பல ஆயுதங்களால் உங்கள்தேகம் அடிபட்டிருக்கிறது. சோகத்தாலும் தாபத்தாலும் மிகவும் துன்பமடைந்திருக்கிறீர்கள். என்னிமித்தமாக மிகத்தாழ்ந்த மனிதர்களுக்கு ஒப்பாகக் காடுசென்று கஷ்டமான நிலைமை உங்களால் அனுபவிக்கப்பட்டதன்றோ? ஆகையால், உங்களிஷ்டப்படி ஸுகமாக இந்த ஜயத்தின் பயனை அனுபவியுங்கள். சிரமபரிகாரஞ் செய்துகொண்டு, விசுவாஸத்தை அடைந்த உங்களுடன் திரும்பவும் நாளைக்குச் சேருகிறேன்" என்று சொன்னார்.

உடனே, கைவன்மையுள்ள விருகோதரன், திருதராஷ்டிரனால் சம்மதிக்கப்பட்டுத் தமையனால் கொடுக்கப்பட்டதும் தாதிகளாலும் வேலைக்காரர்களாலும் சூழப்பட்டதும் பல ரத்னங்கள் நிறைந்ததும் பல உப்பரிகைகளால் விளங்குவதுமான துர்யோதனனுடைய அரண்மனையை, இந்திரன் தன் அரண்மனையை அடைந்ததுபோல, அடைந்தான். அவ்விதமே, தர்மபுத்திரருடைய உத்தரவுப்படி, பல மாடிகளுள்ளதும் தங்கத்தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டதும் பல தாதிகளும் வேலைக்காரர்களும் நிறைந்ததும் அளவற்ற தனதான்யங்களுள்ளதுமான துச்சாஸனனது அரண்மனையைப் பெரிய கைகளையுடைய அர்ஜுனன் அடைந்தான். ஜனமேஜயராஜரே! துச்சாஸனன்அரண்மனைக்கு மேலானதும் குபேரனரண்மனைபோல விளங்குவதும் தங்கத்தாலும் பல ரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டதுமான துர்மர்ஷணனுடைய அரண்மனையை, பெருங்காட்டிலிருந்து கஷ்டப்பட்டவனும் வரங்கொடுக்கத்தக்கவனுமான நகுலனுக்கு ஸந்தோஷமாகக் கொடுத்தார். தாமரை மலர்போன்ற கண்ணுள்ள ஸ்திரீகளாலும் படுக்கை முதலிய பல வஸ்துக்களாலும் நிறைந்ததும் பொன்னுபரணங்களால்அலங்கரிக்கப்பட்டு விளங்குவதுமான துர்முகனுடைய அரண்மனையை எப்பொழுதும் பிரியத்தைச் செய்யும் ஸஹதேவனுக்கு ஸந்தோஷமாகக் கொடுத்தார். இந்த ஸஹதேவனும் குபேரன் கைலாஸத்தைஅடைந்ததுபோல அவ்வரண்மனையை அடைந்துஸந்தோஷித்தான். ஜனமேஜயராஜரே! யுயுத்ஸுவும் விதுரரும் ஸஞ்சயனும் ஸுதர்மாவும் தௌம்யரும் தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். புலியானது மலைக்குகையில் பிரவேசிப்பதுபோல, புருஷப்புலியான கிருஷ்ணபகவான், ஸாத்யகியுடன் அர்ஜுனனரண்மனையில் பிரவேசித்தார். அங்கு, பலவிதமான பக்ஷியங்களாலும் அன்னங்களாலும் பானங்களாலும் திருப்தி

அடைந்த அவர்கள் யாவரும் மிகவும் இனிதாக அன்றிரவு வாஸஞ் செய்து ஸுகமாக எழுந்திருந்து யுதிஷ்டிரராஜரிடம் வந்து சேர்ந்தார் கள்" என்றார்.

நாற்பத்துநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் பிரஜைகளுக்கும் பந்துக்களுக்கும் திரவியமுதலியவை கொடுத்ததும், கிருஷ்ணனைக் தசலப்ரஸ்னம் செய்ததும், கிருஷ்ணன் நிஷ்டையிலிருந்ததும்.)

ஜனமேஜயர், "ஓ! வைசம்பாயனரிஷியே! மஹாபாஹுவான யுதிஷ்டிரராஜர் ராஜ்யத்தையடைந்தபின் வேறுஎன்னசெய்தார்? மூவுலகிற்கும் பெரியகுருவும் வீரருமான ஸ்ரீகிருஷ்ணபகவான் என்ன செய்தார்? இந்த விஷயங்களை எனக்கு நீங்கள் விரிவாகச்சொல்ல வேண்டும்" என்று கேட்டனர்.

வைசம்பாயனர், "ஓ! குற்றமற்றராஜேந்திரரே! வாஸுதேவரை முன்னிட்டுப் பாண்டவர்கள் செய்தகாரியத்தை நடந்தபடி சொல்லுகிறேன்; கேளும். மஹாராஜரே! ராஜ்யத்தை அடைந்த குந்திபுத்ரரான யுதிஷ்டிரராஜர் எல்லாச்சாதி மனிதர்களையும் தர்மமாயும் வணக்கமாயுமிருக்கும்படி உறுதிப்படுத்தினர். பாண்டவரான யுதிஷ்டிரர் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ஸுவர்ணங்கொடுத்து மஹாத்மாக்களான ஆயிரம் ஸ்நாதகப் பிராம்மணர்களைத் திருப்தியடைவித்தார். அவ்விதமே, வேலைக்காரர்களும் ஆஸ்ரிதர்களும் உடனிருப்பவர்களும் அதிதிகளும் ஏழைகளும் குறி சொல்லுகிறவர்களுமாகிய யாவரையும் அவர்களாசைக்குத் தக்கபடி திருப்தியடைவித்தார். மஹாராஜரே! அவர் பதினாலாயிரம் பசுக்கள், தனம், பொன், வெள்ளி, பலவித வஸ்திரங்கள் இவைகளைப் புரோஹிதரான தௌமியருக்குத் தானஞ்செய்தார். விதாநுஷ்டானமுள்ள ராஜாவான அந்தத் தர்மபுத்திரர், கிருபர் விதுரர் முதலியவர்களைப் பிதாவைப் போலப் பூஜித்து ஸந்தோஷிப்பித்தார். கொடுப்பவர்களிற் சிறந்த தர்மபுத்திரர், தம்மைச் சேர்ந்த ஜனங்கள் யாவரையும் பலவிதமான பக்ஷியம் அன்னம் பானம் வஸ்திரம் படுக்கை ஆஸனம் இவைகளால் மிக்க சந்தோஷமடையச் செய்தார். ராஜஸ்ரேஷ்டரே! இவ்விதம் அடைந்த ராஜ்யத்தில் சில திரவியங்களைத் தானஞ்செய்ததால் சாந்தியைச்செய்து பெரிய கீர்த்திபெற்ற அந்த அரசர், யுயுத்ஸுவுக்கும் திருதராஷ்டிரனுக்கும் தக்க மரியாதை செய்தார். யுதிஷ்டிரரான வர், திருதராஷ்டிரர் காந்தாரி விதுரர் இவர்களிடம் இந்த ராஜ்

யத்தை ஒப்படைத்துவிட்டுத் தாம் சிந்தையின்றி ஸுகித்திருந்தார். பரதரேறே! அப்படி ராஜ்யமுழுமையும் ஸுகித்திருக்கும்படி செய்த தர்மபுத்திரராஜர் அஞ்சலிசெய்துகொண்டு மஹாத்மாவான ஸ்ரீவாஸுதேவரிருக்குமிடஞ் சென்றார். அங்கு, மேருமலையிலிருக்கும் கறுத்தநீருண்டமேகம்போல ரத்னங்களிழைத்த பெரியதங்கக் கட்டிலில் வீற்றிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானைக் கண்டார். உக்ரஸூர்ய மண்டலத்தால் உதயகிரிவிளங்குவதுபோல மார்பிலுள்ளகௌஸ்துப மணியால் விளங்குகிறவரும் பீதாம்பரஉடையால் தங்கத்துடன் சேர்ந்த ரத்னம்போலப் பிரகாசிப்பவரும் பலதிவ்யாபரணங்களணிந்த சரீரத்தால் மிகவும்ஜ்வலிப்பவருமான அந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் மூன்று உலகங்களிலும் உபமானமற்றவராயிருந்தார். மஹாத்மாவான ஸ்ரீ புருஷோத்தமரருகிற்சென்ற அந்தயுதிஷ்டிரர், புன்சிரிப்புடன், இனியஇவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கினர்.

"புத்தியுள்ளவர்களிற்சிறந்தவரே! இந்தராத்திரி உமக்கு ஸுகமாகவிடிந்ததா? ஓ! அச்சுதரே! உமதுஞானேந்திரியங்கள் யாவும் தெளிவடைந்தனவா? அறிவுள்ளவர்களிற்சிறந்தவரே! அவ்விதமே, உம்மை அடைந்த பிரகாசமுள்ள புத்தியானது தெளிவாயிருக்கிறதா? மூவுலகங்களிலும் பிரகாசிக்கும் பராக்ரமமுள்ள பகவானே! உம்முடைய அனுக்ரஹத்தால் நாங்கள் ராஜ்யத்தை அடைந்தோம். பூமி எங்கள் வசமாயிற்று. தர்மம்தவறுதநாங்கள் ஜயத்தையும் உயர்ந்த கீர்த்தியையும் பெற்றோம்" என்றுசொன்னர். அப்படிச்சொன்ன சத்துருக்களை அடக்கவல்லமையுள்ள தர்மபுத்திரரைப் பார்த்து யாதொன்றுஞ்சொல்லாமல் ஸ்ரீகிருஷ்ணபகவான் தியானநிஷ்டையிலிருந்தார்.

நாற்பத்தைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் கிருஷ்ணனை நிஷ்டையின்காரணம் கேட்டதும், அதனைச் சொல்லித் தர்மபுத்திரரைப் பீஷ்மரிடஞ்சென்று ஸகலதர்மங்களையும் கேட்தும்படி சொல்லியதும், தர்மபுத்திரர் கிருஷ்ண தரிசனம் பீஷ்மருக்கு அவசியமென்றதும்.)

யுதிஷ்டிரர், "ஒப்பில்லாதபராக்ரமமுள்ளபகவானே! தாங்கள் தியானநிஷ்டையிலிருப்பதானது பெரியவிந்தையாயிருக்கிறது. தங்கள் இந்திரியங்கள்ஐந்தும் மனமும் புத்தியில் லயப்பட்டிருக்கின்றன. ஓ! புருஷஶ்ரேஷ்டரே! ஜாக்ரம் ஸ்வப்னம்ஸுஷுப்தி என்ற மூன்று

மல்லாத நான்காவதான தியானவழியைஅடைந்து உங்கள் ஜீவன் ஸ்தூலம் ஸூக்ஷ்மம் காரணம்என்னும் மூன்றுசரீரங்களுக்கும் அப்புறமிருப்பதுபற்றி என்மனம் ஆச்சரியப்படுகிறது. சரீரத்திலிருந்துகொண்டு ஐந்துவிதமேலைகளைச்செய்யும் பிராணவாயு அடங்கியிருக்கிறது. உங்கள் இந்திரியங்கள்யாவும் மனத்தில் நிலைபெற்றிருக்கின்றன. வாக்குமுதலிய இந்திரியங்களும் மனமும் மகத்தத்துவமென்ற ஸமஷ்டிபுத்தியில் லயப்பட்டிருக்கின்றன. சத்தமுதலியகுணங்களும் அவைகளை அறியும் இந்திரியங்களும் ஆன்மாவிலடங்கியிருக்கின்றன. யோகநிலையை அடைந்த உமதுபுத்தியும் மனமும் சரீரத்திலுள்ள ரோமங்களும் அசைவற்றனவாயிருக்கின்றன. ஓ! மாதவரே! கட்டையையும் சுவரையும் கல்லையும்போல யாதொருசேஷ்டையுமில்லாதவராயிருக்கிறீர். ஓ! பகவானும் தேவருமான அச்சுதரே! காற்றில்லாவிடத்திலுள்ள விளக்கு அசைவின்றிப் பிரகாசிப்பதுபோல ஸமாதியிலுறுதிபெற்ற நீர் அசைவின்றிப் பிரகாசிக்கிறீர். இந்தவிஷயத்தைக்கேட்க நான் அருகனையிருந்தால் தங்களுக்கும் இதுவெளியிடத்தக்கதாலுல் தங்களை அடைந்து பிரார்த்தனைசெய்யும் என்ஸந்தேகம் நீங்க உபதேசிக்கவேண்டும். ஓ! புருஷோத்தமரே! நீர் இவ்வுலகைப்படைப்பவரும் அழிப்பவரும் நித்தியம்அநித்தியமென்னும் இருவிதப்பொருளும் ஆதி அந்தமில்லாதவரும் ஒருவருமாயிருக்கிறீர். ஓ!. தர்மத்தைரக்ஷிப்பவர்களிலுத்தமரே! உம்மை அடைந்து தலையால் வணங்கிப் பக்திபண்ணும் எனக்கு இச்சமாதிநிலையின் உண்மையைச் சொல்லவேண்டும்" என்று சொன்னர். பிறகு, உபேந்திரரான ஸ்ரீகிருஷ்ணபகவான் மனம் புத்தி இந்திரியங்களை அவைகளுக்குரிய நிலையில்வைத்துக்கொண்டு புன்னகையோடு சொல்லத்தொடங்கினர்.

" அவியுங்காலத்து அக்னிபோலச் சரதல்பத்தில் சயனித்துக்கொண்டிருக்கிற புருஷச்ரேஷ்டரான பீஷ்மர் என்னைத் தியானம் பண்ணுகிறார். ஆகையால், அவரிடம் என்மனம் சென்றது. எவருடைய பெரிய இடிமுழக்கம்போன்றநாணொலியை இந்திரனும் ஸகிக்கமுடியாதவரோ அந்தப்பீஷ்மரிடம் என்மனம் சென்றது. அரசரே! முன்காலத்தில்அரசர்கூட்டம்அனைத்தையும் தமதுபலத்தால்ஜயித்து மூன்றுகன்னிகைகளை மணம்புரிவித்தவரும் இருபத்துமூன்றுநாள் போர்செய்தும் பரசுராமரால்வெல்லத்தகாதவில்லாளியாயிருந்தவரும் கர்ப்பமுறைப்படி கங்காதேவியால்சுமக்கப்பட்டு ஜனித்தவரும் வஸிஷ்டமஹரிஷியின்சிஷ்யருமான அந்தப்பீஷ்மரிடம் என்மனம் சென்றது. ஆறு அங்கங்களுடன் நான்குவேதங்களையும் திவ்யாஸ்திரங்களையும் தரித்துப் பெரியதேஜஸுள்ளவரும் அறிவுள்ளவரும் பரசுராம

ருக்கு அன்புள்ள சிஷ்யரும் எல்லாக்கல்விகட்கும் இருப்பிடமான வரும் இந்திரியக் கூட்டங்களை ஒன்றுசேர்த்து மனத்தைக் கட்டிப் புத்தியால் என்னைச் சரணமடைந்தவருமான அந்தப் பீஷ்மரிடம் என்மனம் சென்றது. பரதரேறே! இவ்வுலகத்தில் நடந்ததையும் நடக்கின்றதையும் நடப்பதையும் அறிந்தவரும் தர்மந்தெரிந்தவர் களில் உத்தமருமான அந்தப் பீஷ்மரிடம் என்மனம் சென்றது. பார்த்தீர! புருஷர்களிற் சிறந்த மஹாத்மாவான அந்தப் பீஷ்மர் ஒழிவடைந்தால் பூமியானது சந்திரனில்லாத இரவு போலாகும். ஆகையால், ஓ! யுதிஷ்டிரராஜரே! பயங்கரமான பராக்ரமமுள்ள வரும் கங்காபுத்திரருமான பீஷ்மரிடம் சென்று வணங்கிக் காலைப் பிடித்துக்கொண்டு தர்மார்த்த காமமோக்ஷங்களையும் வைதிக தர்மத் தையும் நான்கு ஆஸ்ரமங்களையும் க்ஷத்திரியதர்மங்க ளெல்லாவற்றை யும் மற்றும் உமது உள்ளத்திலிருப்பதையும் கேட்டுத் தெரிந்துகொள் ளும். கௌரவர்களில் மூத்தினவரான அந்தப் பீஷ்மர் காலஞ்சென் றால் உலகில் கல்விகள் மிகக்குறைவடையும். ஆகையால், உம்மை அவரிடம் போகும்படி ஏவுகிறேன்" என்று சொன்னர்.

வாஸுதேவருடைய உண்மையான அந்த உத்தமவசனத்தைக் கேட்டுத் தர்மந்தெரிந்த அந்த யுதிஷ்டிரர் கண்ணீரால் தழுதழுத்தகுர லுடன் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் சொல்லத்தொடங்கினர். "ஓ! மாதவரே! பீஷ்மரின் பெருமையைப்பற்றித் தாங்கள் சொன்னவை யாவும் உண்மையே. அதில் எனக்குச் சந்தேகமில்லை. மிக்க காந்தி யுள்ள மாதவரே! பீஷ்மரின் பெருமையும் அவர்பாக்கியமும் மஹாத் மாக்களான பிராம்மணர்கள் மூலமாக நான் கேட்டதுண்டு. சத்ருக் களை நிக்ரஹிக்கும் பகவானே! உலகங்களுக்குக் கர்த்தரான நீரும் இவ்விதம் சொல்லுகிறீர். யாதவர்களைச் சந்தோஷிக்கச் செய்கிற வரே! உம்முடைய வாக்கியத்தை உண்மையோவென்று விசாரிக்கவும் வேண்டுமோ? மாதவரே! என்னை அனுக்ரஹிக்கவேண்டுமென் னும் எண்ணம் உங்களுக்கிருக்குமாயல் உங்களைமுன்னிட்டுக்கொண்டு நாங்கள் பீஷ்மரிடம் போகிறோம். ஸூர்யன் உத்தர மார்க்கத்தில் திரும்பினதும் அவர் லோகாந்தரமடையப் போகிறார். ஆகையால், ஓ! மஹாபாஹுவே! உங்களுடைய தரிசனத்தை அவர் அடையத் தக்கவர். உலகத்திற்கு முதல்வரும் நித்தியம் அநித்தியமென்னும் இரண்டு உருவமாய் விளங்குகிறவருமான உமது தரிசனம் அவருக் குப் பெரிய லாபமாகும். நீர் பிரம்மரூபியான நிதியன்றோ?" என்று சொன்னர்.

இவ்விதம் தர்மராஜர் சொன்ன வசனத்தைக்கேட்ட மதுஸூத னர், பக்கத்திலிருக்கும் ஸாத்யகியை நோக்கி, 'எனது ரதம் ஸஜ்ஜு

மாகவேண்டும்' என்று சொன்னார். உடனே, ஸாத்யகி கிருஷ்ணனருகிலிருந்து சீக்கிரமாக வெளியில் வந்து, 'ஸ்ரீ கிருஷ்ணனுடைய ரதம் ஸஜ்ஜமாக வேண்டும்' என்று தாருகனிடம் சொன்னன். ராஜஸிம்மமே! ஸாத்யகியின் வசனத்தைக் கேட்ட தாருகன், பொன்னால் அலங்கரிக்கப்பட்ட அங்கங்களையுடையதும் மரகதமணியாலும் சந்திரகாந்த ஸூர்யகாந்தங்களாலும் இழைக்கப்பட்ட பல பாகங்களால் அலங்கரிக்கப்பெற்றதும் தங்கக்கட்டுள்ள உருளையுள்ளதும் ஸூர்ய கிரணம்போன்ற காந்தியுள்ளதும் ஆச்சரியமான பலரத்னங்களால் அலங்கரிக்கப்பட்ட மத்தியபாகமுள்ளதும் புதிதாயுதித்த ஸூர்ய மண்டலம் போலப் பிரகாசிப்பதும் அழகான கருடக்கொடி கட்டினதும் கொடிச்சீலையுள்ளதும் அதிவேகமாகச் செல்லக் கூடியதுமான ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய சிறந்த ரதமானது, ஸுவர்ணபரணம் பூண்டனவும் மனோவேகமுள்ளனவுமான ஸுக்ரீவம் சைப்யம் முதலிய உத்தமமான குதிரைகளைப் பூட்டி ஸஜ்ஜமாயிருப்பதாக ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் வந்து கைகட்டி நின்று தெரிவித்தான்" என்றார்.

நாற்பத்தாறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் ஸ்ரீ கிருஷ்ணனைப் பலவாறு துதித்ததும், கிருஷ்ண தர்ம புத்ராதியோர் பீஷ்மரிடம் வந்ததும், பீஷ்மர் கிருஷ்ணனைத் தரிசித்து முக்தியடைந்ததும்.)

ஜனமேஜயர், "பாரதர்களின் பிதாமஹரான பீஷ்மர் சரதல்பத்தில் படுத்து எவ்விதமான ஸமாதி அடைந்தாரென்பதையும் எவ்விதமாகச் சரீரத்தை விட்டாரென்பதையும் சொல்ல வேண்டும்" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

"ஓ! குருகுலப்புலியான ராஜரே! மஹாத்மாவான பீஷ்மர் சரீரம் விட்டதைச் சுத்தராயும் கவனமுள்ளவராயும் கேளும். பூபதியே! ஸூர்யன் உத்தராயணம் என்னும் வழியில் சென்றதும், மாசிமாஸம் சுக்லபக்ஷம் அஷ்டமிதிதியில் மிருகசீர்ஷநக்ஷத்திரத்தின் மத்திய பாகத்தைஸூர்யன் அடைந்தபொழுது, பீஷ்மர் ஸமாதியுள்ளவராய்மனத்தை ஆத்மரூபத்திலேயே லயிக்கச்செய்தார். பலபாணங்களால் நிறைந்த சரீரமுள்ள பீஷ்மர் பரவியபலகிரணங்களுள்ள ஸூர்யமண்டலம் போல அதிககாந்தியுள்ளவராய் விளங்கினர். வியாஸர், தேவஸ்ரவஸ், தேவரிஷியானநாரதர், தேவஸ்தானர், வாத்ஸ்யர், ஸுமந்து, அக்ரம

கர், ஜைமினி, மஹாத்மாவானபைலர், சாண்டில்யர், தேவலர், புத்தி மானுன மைத்திரேயர், அஸிதர், வஸிஷ்டர், மஹாத்மாவானகௌசி கர், ஹாரீதர், லோமசர், அறிவுள்ளவரான ஆத்ரேயர், பிருஹஸ்பதி, சுக்கிரர், மஹரிஷியான ச்யவனர், ஸனத்குமாரர், கபிலர், வால்மீகி, தும்புரு, குரு, மௌனத்கல்யர், பரசுராமர், பெரியமுனிவரான திருண பிந்து, பிப்பலாதர், வாயு, ஸம்வர்த்தர், புலகர், கசர், காஸ்யபர், புலஸ்தியர், கிரது, தக்ஷர், பராசரர், மரீசி, அங்கிரஸ், காஸ்யர், கௌதமர், காலவமுனிவர், தௌம்யர், விபாண்டர், மாண்டவ் யர், தௌம்ரர், கிருஷ்ணதுபௌதிகர், பிராம்மணத்தமரான உலூ கர், மார்க்கண்டேயமாமுனிவர், பாஸ்கரி, பூர்ணர், கிருஷ்ணன், பெரியதர்மிஷ்டரானஸுதர்முதலியவர்களும் ஸ்ரத்தை, சமம், தமம் முதலியநற்குணங்களுள்ளவர்களும் மஹாத்மாக்களுமான பலரிஷிக் கூட்டங்களால் சூழப்பட்டபீஷ்மர், கிரகநக்ஷத்திரங்களால் சூழப் பட்டசந்திரன்போலப் பிரகாசித்தார். சரதல்பத்தைஅடைந்த புருஷ ஸ்ரேஷ்டரான பீஷ்மர் பரிசுத்தராகக் கைகூப்பிக்கொண்டு கர்மத் தாலும் வாக்காலும் மனத்தாலும் ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தியானஞ் செய்து உலகங்களுக்குப்பதியும் எங்கும்நிறைந்தவரும் ஜயசீலரும் யோகேசரும் மதுவைக்கொன்றவரும் பத்மநாபருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கம்பீரமான ஆனந்தமுழக்கத்தோடு துதிக்கத் தொடங் கினர். வாக்கைஅறிந்தவர்களில் உத்தமரும் உத்தமமான தர்மத்தில் மனமுள்ளவரும் பிரபுவுமான பீஷ்மர் அஞ்சலிசெய்துகொண்டு ஆதி யும்அந்தமுமற்றவரும் ஸுதனரும் தமக்குத்தாமே காரணருமான ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் துதிக்கத்தொடங்கினர்.

" ஸ்ரீகிருஷ்ணனை ஆராதிக்கக்கருதி விரிவாகவும் சுருக்கமாகவும் எவ்வித மொழியைச் சொல்லவிரும்புகிறேனோ அம்மொழியால் அந்தப் புருஷோத்தமர் ஸந்தோஷப்படவேண்டும். பரிசுத்தரும் பரிசுத்தமான ஸ்தானத்திலிருப்பவரும் உத்தமபதத்திலிருப்பவரும் எல்லாவற்றிற்கும் மேலானவரும் பிரம்மரூபியும் உலகங்களுக்குப் பதியுமான அந்தப் பரமாத்மாவை என்முழுஆத்மாவுடன் ஸமாதி யால் ஒன்றுசேர்த்துச் சரணமடைகிறேன். தேவர்களும் ரிஷி களும், ஆதியும் அந்தமுமில்லாத பரப்பிரம்மத்தை அறிந்தவர் களில்லை; உலகத்தைப்படைத்த பகவான் நாராயணர் ஒருவர் தாம் அறிந்திருக்கிறார். துன்பங்களைவிலக்கும் ஔஷதமான பர மாத்மாவைத் தேவர்களும் தேவரிஷிகளும் ஸித்தர்களும் மற்று முள்ள ரிஷிக்கூட்டங்களும் மஹாரகர்களும் நாராயணரிட

மிருந்து தெரிந்துகொண்டார்கள். தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், பன்னகர்கள்ஆகிய இவர்கள் யாவரும்,'இவர் எவ்வுருவமுள்ளவர்? எக்காரணத்தால் இவருக்குப் பகவத்தன்மை?' என்று உண்மையாயறிந்துகொண்டவர்களில்லை. பறவைகள் வலையில் அடங்கியிருப்பதுபோல இவ்வுலகங்களும் பிராணிகளும் அவருள்ளடங்கி விளங்கும்காரணத்தால் இவ்வுலகங்களுக்கு அவர் [1] கோசமென்று சொல்லப்படுகிறார். [2] சேஷபூதங்களான இவ்வுலகங்கள்யாவும் நூலில்கோத்தமணிக்கூட்டங்கள்போலப் பிராணிகளுக்கு ஈசரான அவரிடம் நிலைபெற்றிருப்பதோடு அவரிடமே லயமடைகின்றன. இந்தச்சரீரத்திலுள்ள தத்துவங்களை விசாரித்தறிந்தவர்கள் அவரை இவ்வுலகைப்படைத்தவராயும் ஸ்தாவரஜங்கமங்களுக்குப் பதியாயும் உலகத்திற்குப் பிரத்தியக்ஷமாயும் சொல்லுகிறார்கள். உலகத்திற்குஇருப்பிடமும் உலகத்தைநடைபெறச்செய்பவரும் நிலைபெற்றவருமாயிருக்கும் அவரிடம் உறுதியான நீண்டநூலில் மாலைபோலக் காரியமானஸூத்ராத்மாவாலும் காரணமான அந்தர்யாமியாலும் தரிக்கப்படும்உலகம் நிலைபெற்றிருக்கிறது. கிரீடந்தரித்தஆயிரந்தலையுள்ளவரும் ஆயிரம் கை கால் கண்ணுள்ளவரும் ஆயிரமுகங்களால்விளங்குகிறவரும் உலகத்திற்குஉத்தமகதியும் தேவருமான ஸ்ரீநாராயணராக அவரை அறிந்தோர் அறிவிக்கிறார்கள். அவர் அணுக்களில் மிக அணுவாயும் பெரியவைகளில் அதிகப்பெரியவராயும் கனமுள்ளவைகளில் அதிக கனமுள்ளவராயும் உயர்ந்தவைகளில் மிக உயர்ந்தவராயுமிருக்கிறார். மந்திரங்களிலும் பிராம்மணங்களிலும் உபாஸனவிதிகளிலும் உபநிஷத்துக்களிலும் உண்மையைச்சொல்லும் ஸாமங்களிலும் அவர் ஸத்தியமான கர்மமுடையவராயும் எக்காலத்திலும் அழியாத தத்துவப்பொருளாயும் கூறப்படுகிறார். உள்ளத்திலிருந்து உபாஸகர்களை ரக்ஷிப்பவரான அந்தத்தேவர் பிரத்யும்னர், அனிருத்தர், ஸங்கர்ஷணர், வாஸுதேவர் என்கிற நான்குஉருவமுள்ளவராய்த் திவ்யமானவைகளும் ரஹஸ்யமானவைகளுமான நான்கு சிறந்த நாமங்களாலும் பூஜிக்கப்படுகிறார். அரணியில்ஜ்வலிக்கின்ற அக்னியைப்போலப் பூமியிலுள்ளவேதம், பிராம்மணர், யாகம்என்னும்பிரம்மத்தைக்காப்பாற்றவேண்டி, தேவகிதேவி வஸுதேவரிடமிருந்துஅந்தத்தேவரைப் பெற்றாள். எல்லாமறிந்தவரும் எல்லாஉருவமுமுள்ளவரும் யாவற்றையும் படைத்தவருமான அந்தத்தேவருக்கு அர்ப்பணஞ்செய்து பயனைக்கருதாதுசெய்த தருமம் செய்தவனுள்ளத்தைப்

1 தனசாலை. 2 ஈஸ்வரருடைய சொத்துக்கள்.

பரிசுத்திசெய்கிறது.காமங்களையெல்லாம் விட்டுக் கல்மஷமற்று மனத்தில்விளங்கும் அந்தப் பரமாத்மாவை வேற்றுமையின்றி யோகத்தால் தன்னுருவமாகக் கண்டவன், அழிவில்லாப் பதமடையத் தக்கவன். அறியத்தகாதவரும் அனுமானத்திற்கும் எட்டாதவரும் எங்குமிருப்பவரும் ஸூர்யனுக்கும் அக்னிக்கும் மேலான தேஜஸுள்ளவரும் இந்திரனுக்கும் வாயுவுக்கும் மேலான செய்கையுள்ளவரும் புத்திக்கும் இந்திரியங்களுக்கும் புலப்படாத உருவமுடையவரும் உலகங்களுக்குப் பதியுமான அந்த நாராயணரைச் சரணமடைகிறேன். சென்ற கல்பத்தில் புருஷரென்றும் யுகங்களின் துவக்கத்தில் பிரம்மாவென்றும் முடிவில் ஸங்கர்ஷணரென்றும் சொல்லப்பட்டவரும் உலகங்களுக்கு உபாஸிக்கத் தக்கவருமான அந்தத் தேவரை உபாஸிக்கிறேன். ஒருவராயும் பல உருவமுள்ளவராயும் அவதரிப்பவரும் [1] அதோக்ஷஜரும் இஷ்டங்கள் யாவற்றையும் கொடுப்பவருமான அந்தத் தேவரைக் கர்மத்தைச்செய்கிறவர்கள் வேறிடத்துப் பக்தியில்லாதவர்களாகி ஆராதிக்கிறார்கள். ஸத்யரும் ஓரெழுத்தான ஓங்கார ரூபமுள்ளவரும் பிரம்மமும் காரியகாரணங்களைக் கடந்தவரும் அடி நடு முடிவற்றவருமான அந்த ஈசரைத் தேவர்களிலும் ரிஷிகளிலும் உண்மையாயறிந்தவர்களில்லை. தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், ரிஷிகள், உரகர்கள் யாவரும் பரிசுத்தியுள்ளவர்களாய் ஸுகத்திற்குப் பரம ஔஷதமான அந்தப் பகவானை எப்பொழுதும் ஆராதிக்கிறார்கள். ஆதியும் அந்தமும் இல்லாதவரும் தேவரும் எப்பொழுதுமிருப்பவரும் இந்திரியங்கள் மனம் இவைகளுக்குப்புலப்படாதவரும் தமக்குத் தாமே காரணரும் பிரபுவும் நாராயணசப்தவாச்யருமான அந்த ஹரியை யாவரும் பூஜிக்கிறார்கள்.

பீஷ்மஸ்தவராஜம்.

அஸுரர்களை நாசஞ்செய்யவேண்டி அதிதியிடம் பொன்னிறமான ஒரு கர்ப்பமாயிருந்து பன்னிரண்டு விதமாக வெளிவந்தஸூர்யனாக விளங்கும் அந்தப்பகவானுக்கு நமஸ்காரம்.சுக்லபக்ஷத்தில்தேவர்களையும் கிருஷ்ணபக்ஷத்தில் பித்ருக்களையும் அமிர்தத்தால் திருப்தி அடைவிப்பவரும் அந்தணர்களுக்குஅரசருமான சந்திரரூபமாய்விளங்கும் அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். அக்நிமுதலிய தேவர்களால் தரிக்கப்படும் இவ்வுலகில் முதல்ஹவிஸை உண்ணும் ஹோதா என்ற உருவமுள்ள அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். அஜ்ஞானமென்னும்

---

1 இந்திரியங்களால் அறியமுடியாதவர்.

ஸ்ரீ மஹாபாரதம்.

பெரிய இருளுக்கப்புறம் எங்கும்நிறைந்த உத்தமஒளியாய் விளங்கும் எந்தப்புருஷரைக்கண்டவன் மரணமற்றவனாகிறானே அந்த அறியத் தக்க வஸ்துவாயிருப்பவருக்கு நமஸ்காரம். ஸாமகர்கள் பிருஹத் என்னும் ஸாமத்திலும் ரிக்வேதிகள் உக்தமென்னும்மந்திரத்திலும் யஜுர்வேதிகள் அக்நிசயனம் என்ற பெரியயாகத்திலும் உபாஸித்து வரும் பெரியஸ்வரூபமுள்ள வேதஉருவமான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். பதங்களைக் கால்முதலிய அங்கங்களாகவும் அந்தப்பதங் களின் சேர்க்கையை விரலின்கணுவாகவும் உயிர்மெய்யெழுத்துக்களை அலங்காரமாகவும்கொண்டஅக்ஷரஉருவமாகவும் வாக்குஉருவமாகவும் பிராம்மணர்களால் அறியப்படும் அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். இந்த மூவுலகின் நன்மையையும்கருதி யஜ்ஞாங்கமான வராஹவேஷ மெடுத்துப் பூமியைக்கொண்டுவந்த வீர்யமுள்ள அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். ரிக், யஜுஸ், ஸாமமென்னும் மூன்றுவேதங்களை ஆதார மாக அடைந்ததும் (தானு, கரம்பம், பரிவாபம், புரோடாசம், பால் என்னும்) ஐந்து விதமான ஹவிஸுள்ளதும் காயத்ரிமுதலிய ஏழு சந்தஸுள்ளதுமாகச் செய்யப்படும் யாகரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். [1] நான்கு, [2] நான்கு, [3] இரண்டு, [4] ஐந்து, [5] இரண்டுஎழுத் துள்ள மந்திரங்களால் செய்யப்படும் ஹோமரூபியான அந்தப்பகவா னுக்கு நமஸ்காரம். காயத்ரிமுதலிய சந்தஸை அங்கங்களாகவும் யாகத் தைத் தலையாகவும் ரதந்தரம் பிருஹத் என்றஸாமங்களைச் சிறகாகவும் அடைந்த யஜுஸ்என்ற வேதபக்ஷிரூபியாய்விளங்கும் ஸ்தோத்திரரூபி யானஅந்தப்பகவானுக்கு நமஸ்காரம். விஸ்வஸ்ருட் என்னும் பிரஜா பதிகளால் ஆயிரம்வருஷம் செய்யப்பட்ட ஸத்ரயாகத்தில் பொற்சிற குள்ள கருடபக்ஷியாய் ஆவிர்ப்பவித்த ரிஷியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். தர்மமொன்றைக்கருதி முக்திக்குக்காரணமான வேதத்தி லுள்ள உபாயத்தால் ஸாதுக்கள் இந்திரியங்களை அடக்கிச் செல்லத் தக்கயோகமுறைஎன்னும் கரையைக்கட்டிய ஸத்யரூபியானஅந்தப்பக வானுக்கு நமஸ்காரம். வேறுவேறான பயனவிரும்பி வேறுவேறான ஆசாரங்களுடன் வேறுவேறானகர்மங்களால்ஆராதிக்கப்படும்தர்மரூபி யான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். பிராணிகளனைவரும் உண்டா கக் காரணமும் அவர்கள் தம்அங்கங்களில் ஆசைதரும்பிப்பித்தர்க ளாகக் காரணமுமாயிருக்கும் அந்தக்காமரூபியான பகவானுக்கு நமஸ் காரம். இந்திரியங்களுக்குப் புலப்படும் சரீரத்திலிருந்தும் மஹரிஷி

---

1 ஆப்ராவய, 2 அஸ்துஸ்ரௌஷட், 3 யஜ, 4 யேயஜாமஹே, 5 வஷட் என்னும் மந்திரங்கள்.

களுந் தேடத்தக்க ஸூக்ஷ்மரூபியாய் இச்சரீரத்துக்குச் சாக்ஷியாய்ப் புத்தியிலிருந்து விளங்கும் க்ஷேத்திரரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். 'ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனம், ஐந்து பூதங்கள் இப்பதினாறுகளாலும் மறைக்கப்பட்டும் தம்மூருவம் மாறுமல் பதினேழாவது ஞானரூபியாய் விளங்குகிறார்' என்று ஸாங்க்யர்கள் சொல்லும் ஸாங்க்யரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். கருவிகளை அடக்கிச் சுவாஸத்தை ஜயித்து நித்திரையை விட்டுச் சந்தோஷமாக யோகஞ்செய்பவர்களால் (ஞானச்) சுடராகக் காணப்படும் யோகரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். எல்லா வற்றையும்விட்ட சாந்தர்களான ஸந்யாஸிகள் புண்ணியபாபம் இரண்டையுமொழித்து மறுபிறப்பென்னும் பயமின்றி எதைஅடைகிறார்களோ அந்த மோக்ஷரூபியான பகவானுக்கு நமஸ்காரம். அக்நி முகமும், ஸ்வர்க்கலோகம் தலையும், ஆகாயம் நாபியும், பூமி காலும், ஸூர்யன் கண்ணும், திக்குக்கள் செவியுமாக இவ்வுலகங்களைச் சரீரமாகக்கொண்ட அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். மாதம், ருது, அயனம், வருஷம் என்னும் பலஅம்சங்களால் யுகங்களில் சுற்றுகிறவரும் ஸ்ருஷ்டிப் பிரளயங்களைச் செய்கிறவருமான காலரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். ஆயிரம் யுகங்களின் முடிவில் அதிகமாக ஜ்வலிக்கும் ஜ்வாலையுள்ள அக்நியாகி உலகங்களை எரிக்கும் கடோர ரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். எல்லாப் பூதங்களையும் எரித்து உலகெல்லாம் ஒரேகடலாகச் செய்து தாம் ஒரு குழந்தை வடிவமாய் உறங்கும் மாயாரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். 1 நாலுகடலின் நடுவில் ஆயிரம் தலையுள்ள ஒப்பற்ற சரீரமுள்ள புருஷராய் யோகநித்திரை செய்யும் அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். உலகங்களுக்கு இருப்பிடமான தாமரைப்பூவை நாபியிலுடைய பத்மரூபியான பிறப்பற்ற அந்தத் தாமரைக்கண்ணருக்கு நமஸ்காரம். கேசங்களில் மேகங்களும் அங்கஸந்திகளிலெல்லாம் ஆறுகளும் உதரத்தில் நான்கு ஸமுத்ரங்களுமுள்ள ஜலரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். உத்பத்தி ஸ்திதி பிரளயமுதலிய காரியங்களை உண்டுபண்ணும் காரணரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். இரவில் தூங்குங்காலத்தில் தூங்காதவரும் பகலில் பற்றில்லாத கர்த்தாவும் இஷ்டஅநிஷ்ட மிரண்டிற்கும் ஸாக்ஷியுமாயிருக்கும் ஆத்மரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். தனக்குப்பயனின்றித் தர்மம்நிலை

---

1 'தூக்கம், மூளை, மறைவு, வளர்ச்சி என்ற நான்கு படியுள்ள காமங்களும்அற்ற யோகநித்திரை' என்பது பழையஉரை.

பெறவேண்டி எல்லாக்காரியங்களிலும் தடையில்லாத முயற்சியென்ற ஈசத்தன்மையுள்ள கார்யரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். முகத்தில் பிராம்மண ஜாதியும் புஜங்களில் க்ஷத்ரியஜாதியும் உதரம் தொடை இவைகளில் வைசிய ஜாதியும் கால்களில் சூத்ரஜாதியுமுள்ள ஜாதிரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். அன்னபானங்களைச் சாதனமாகக்கொண்டு ஸாரமான இந்திரியங்களை வளரச் செய்வதும் சரீரங்களைத் தரிப்பதுமான பிராணரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். பிராணன்களைத் தரிக்கவேண்டிப் பக்ஷ்யம், போஜ்யம், லேஹ்யம், சோஷ்யம் என்னும் நான்குவிதமான உணவுகளைப் புஜித்துப் பக்குவமாகச் செய்யும் உதரத்திலுள்ள அக்நியின் பாகரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். விஷயத்திற் பற்றுள்ள மனிதர்களுக்கு அவர்களுக்குரிய விருப்பு வெறுப்பென்னும் குணத்துக்குத் தக்கபடி அவ்விஷயங்களைக் காக்கும் ரூபமுள்ள அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். அள்வில்லாத உருவமுள்ளவரும் எங்குமிருக்கும் இந்திரியங்கள் புத்தி இவைகளை உடையவரும் முடிவில்லாத அளவுள்ளவருமான திவ்யரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். காலம், யஜ்ஞம், காரியம், காரணம் இவைகளுக்கு மேலானவரும் காரணமற்றவரும் உலகத்திற்காதியுமான விஶ்வரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். இடியிலுள்ளதும் உதரத்திலுள்ளதும் [1]ஜலத்திலுள்ளதும் வெளியிலுள்ளதுமாக யாவற்றையும் பக்ஷிக்கத் தக்க அக்நிரூபமான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். அணிமா முதலிய ஐசுவரியம் உள்ளவராய்ப் பாதாளத்திலிருந்து இப்பூமியைச் சுமக்கும் அனந்தனென்னும் ஆதிசேஷரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். திவ்யரூபம் பெற்ற அக்னி ஸூர்யன் சந்திரன் நக்ஷத்திரங்களென்னும் ஒளிகளுக்கும் பிரகாசத்தைக்கொடுக்கும் தேஜோரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். சப்தம் முதலிய ஐந்து விஷயங்களுடன் விளங்கும் அறிவில் அவ்விஷயங்களை விலக்கிச் சுத்தஅறிவான எந்த ஆத்மாவைச் சாஸ்த்ரஜ்ஞானத்தால் அறிகிறார்களோ அந்தஞானரூபியான பகவானுக்கு நமஸ்காரம். கர்மநிஷ்டையும் ஞானநிஷ்டையுமுள்ள உத்தமரிஷிகளும் தேவர்களும் ஸந்தேஹம்தெளிய விசாரித்து எவரது உண்மையை அறிகிறார்களோ அந்த ரஹஸ்யரூபியான பகவானுக்கு நமஸ்காரம். ஜடையுள்ளவரும் தடியுள்ளவரும் தொங்கும் தொந்தியுள்ள சரீரமுள்ளவரும் கமண்டலத்தை அம்புக்கூடாகக் கொண்டவருமான அந்தப் பிரம்மரூபியான

1 வடவைத்தீ.

பகவானுக்கு நமஸ்காரம். கையில் சூலமுள்ளவரும் மூன்றுகண்ணுள்ள வரும் திருநீற்றுப்பூச்சுள்ள உயர்ந்தலிங்கரூபியும் தேவர்கட்கு ஈசரும் மஹாத்மாவுமான அந்த ருத்ரரூபியான பகவானுக்கு நமஸ்காரம். சந்திரகலையால்விளங்கும் முடியுள்ளவரும் அரவத்தைப் பூணூலாய்த் தரிப்பவரும் பிநாகமென்னும் வில்லையும் சூலத்தையும் கையிலெடுத்த வருமான உக்ரரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். வஸுதேவ ரால் தேவகியிடம் அவதரிப்பித்தவரும் கையில் சங்கமும் சக்கரமும் கதையுமுள்ளவருமான வாஸுதேவரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். தலைமாலையுடையவரும் புலித்தோல் தரிப்பவரும் திருநீறுபூசினசரீரமுள்ளவருமான ருத்ரரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். யாவற்றையும் ரக்ஷிக்கவேண்டிப் பிராணிகளைப் பலவிதப் பாசக்கட்டுகளால் மதிமயங்கச்செய்யும் மோகரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். எல்லாப்பிராணிகளின் இருதயத்திலுமிருப்பதும் யாவற்றையும் விட்டுவிலகினதும் அழிவற்றதும் ஸூக்ஷ்மமுமான சைதன்யரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். குரோதம்துரோஹம் மோஹமுதலிய தோஷமில்லாததும் ஐந்துபூதங்கட்கும் ஆத்மாவும் அப்பூதங்களின் ஆதியும்முடிவுமாயிருக்கும் சாந்தரூபியுமான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். எல்லாம் எவரிடத்திலுள்ளனவோ எல்லாம் எவரிடமிருந்துண்டாகின்றனவோ எவர் எல்லாவிடத்திலுமிருந்துவிளங்குகின்றாரோ எல்லாம் எவர்உருவமோ எவர்எல்லாஉருவமுமோ அந்தஸ்வரூபியான பகவானுக்கு நமஸ்காரம். ஆயிரம்படங்களுள்ள ஆதிசேஷனென்றதிவ்யநாகத்தாலலங்கரிக்கப்பட்ட பாற்கடலென்னுங்கட்டிலில் சயனித்திருக்கும் நித்ராரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். விச்வேதேவர்கள் மருத்துக்கள் ருத்திரர்கள் ஆதித்யர்கள் அச்வினிதேவர்கள் வஸுக்கள் ஸித்தர்கள் ஸாத்யர்கள் என்னும் தேவரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். பிரகிருதி, மஹத், அஹங்காரம், மனம், புத்தி, இந்திரியங்கள், ஐந்துபூதஸூக்ஷ்மங்கள், விசேஷங்கள் என்னும்தத்வரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். இறந்தகாலம் நிகழ்காலம் வருங்காலமென்னும் மூன்றுகாலத்திலுமிருப்பதும் பூதங்களின் ஆதியும்முடிவுமாயிருப்பதும் எல்லாப்பிராணிகளுக்கும் முந்தி இருந்ததுமான நிலைத்தவஸ்துரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். ஸூக்ஷ்மத்தைஅறியும் ஜனங்கள் ஸூக்ஷ்மத்திலும்ஸூக்ஷ்மமான எந்தப்ரம்மரூபத்தைத்தேடி அறிகிறார்களோ அந்தஸூக்ஷ்மரூபியான பகவானுக்கு நமஸ்காரம். பாதாளத்திற்போன வேதங்களை மிகவும்வேகமாக எடுத்துவந்து பிரம்மதே

வரிடம்கொடுக்கத்தக்க மத்ஸ்யாவதாரம்செய்த அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். அழுதங்கடையுங்காலத்தில் மந்தரமென்னும் மலையை வஹிக்கத்தக்க மிகக்கடினமானசரீரத்துடன் அமைந்த ஆமைஉருவம் கொண்ட அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். காடுமலைகளுடன் பூமியை ஓரேகோரப்பல்லிலெடுத்து வெளிவந்த அற்புதமான அந்தப்பன்றி உருவங்கொண்ட பகவானுக்கு நமஸ்காரம். உலகம்யாவும் நடுங்கத் தக்க நரசிங்க உருவங்கொண்டு ஹிரண்யகசிபுவென்பவனைக் கொன்ற அந்தச்சிங்கரூபியான பகவானுக்கு நமஸ்காரம். பொன்னிறமானகண் ணும் சடையுமுள்ளதும் கோரப்பல்லும் நகங்களுமுள்ளதும் அஸுர ராஜனை ஹிரண்யன்முடிவிற்குக்காரணமுமான அந்தக்கர்வரூபியான பகவானுக்கு நமஸ்காரம். தேவர்களும் கந்தர்வர்களும் தானவர் களும் தைத்யர்களும் உண்மையையறியமுடியாதஸூக்ஷ்மரூபமுள்ள அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். மாயையால் வாமனரூபமெடுத்துப் பலிசக்ரவர்த்தியை அடக்கி மூவுலகங்களையும் காலடிகளால் கடந்த அந்தச்சூரரூபியானபகவானுக்கு நமஸ்காரம். ஆயுதமெடுப்பவர்களிற் சிறந்த ஜமதக்நிகுமாரரும் பூமியை க்ஷத்ரியரின்றிச்செய்தவருமான பரசுராமராகஅவதரித்த அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். தர்மத்தை மிகவும்விட்ட குற்றத்திற்காக யுத்தத்தில் ஒருவராக இருபத்தொரு முறை க்ஷத்ரியர்களைவதஞ்செய்த கோபரூபமான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். சரீரத்தில் தாம் [1] ஐந்துவிதமாய்ப் பிரிந்துகொண்டு பிராணிகளைச் சேஷ்டையுள்ளனவாகச்செய்யும் பிராணவாயுரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். தசரதகுமாரரான ராமராய் அவ தரித்து, புலஸ்தியகுலத்திற்பிறந்த இராவணனை யுத்தத்திற்கொன்ற க்ஷத்ரியரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். கலப்பையும் உலக்கையுந் தரித்துக் கறுத்த ஆடையுடுத்து ரோஹிணியின் புத்ர ரான பலராமராயவதரித்த அந்தப்போகரூபியான பகவானுக்கு நமஸ் காரம். சார்ங்கமென்னும் வில்லும் சங்கமும் சக்கரமும் ஏந்திய வரும் பீதாம்பரந்தரித்தவரும் வனமாலையணிந்தவருமான ஸ்ரீகிருஷ் ணரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். கம்ஸனைக்கொல்ல வேண்டிக் கோகுலத்தில் வஸுதேவரின்குமாரராயவதரித்து விளையா டும் ஸ்ரீமானும் லீலாரூபியுமான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். யதுவம்சத்திலுதித்து வஸுதேவரின் புத்ரராயிருக்குந்தன்மையை அடைந்து பூமியின்பாரத்தைக்குறைத்த ஸ்ரீகிருஷ்ணரூபியான அந்தப்பகவானுக்கு நமஸ்காரம். யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரதி

1 ப்ராணன் அபானன் வ்யானன் உதானன் ஸமானன்.

யாகி மூவுலகங்களுக்கும் க்ஷேமத்திற்காகக் கீதையென்னும் அமிர்தத்தையளித்த அந்தப் பிரம்மரூபியான பகவானுக்கு நமஸ்காரம். திரும்பவும் உலகத்தை ரக்ஷிக்கவேண்டி அஸுரர்களைத் தம் வசமாக்கிப் புத்தரூபம்பெற்ற அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். கலி வந்தபின் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகக் குதிரைவாஹனமேறி மிலேச்சர்களைத் தொலைக்கக் கல்கிரூபமாய் அவதரிக்கப்போகிற அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். தாரவம்சத்திற்பிறந்த காலநேமி யென்னும் அஸுரஸ்ரேஷ்டனைக் கொன்று இந்திரனுக்கு ராஜ்யத் தைக்கொடுத்த ஸாங்கியரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். நாசமுள்ள வஸ்துக்களுக்கு ஸாக்ஷியாய் ஸர்வப் பிராணிகளின் சரீ ரத்திலுமிருந்து நாசமற்றவராய் விளங்கும் ஸாக்ஷிரூபியான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். ஓ! மஹாதேவரே! உமக்கு நமஸ்காரம். அடியார்களிடத்தன்புள்ள பகவானே! உமக்கு நமஸ்காரம். பிராம் மணர்களுக்கு ஹிதஞ்செய்யும் ஓ! பரமேஸ்வரரே! எனக்கு அனுக் கிரகஞ் செய்யும். பிரபுவே! ஸ்தூலமும் ஸூக்ஷ்மமுமான இருவித ரூபமுள்ள உம்மால் உலகமனைத்தும் வியாபிக்கப்பட்டது. ஆயிரங் கண்ணுள்ளவரும் எங்குமிருக்கும் முகமுள்ளவரும் உலகங்கள் யாவுக் கும் ஈசரும் யாகங்களால் ஆராதிக்கப்பட்டவரும் நாசமற்றவரும் ஹிரண்யகர்பருமான நாராயணரை நமஸ்கரிக்கின்றேன். தேவர் களுக்கு ஈசரும் மங்களங்களுக்கு இருப்பிடமுமாயிருக்கும் ஹரியை மனத்தில்பாவிக்கும் மனிதர்களுக்கு எப்பொழுதும் எக்காரியத்திலும் அமங்களம் வராது. பகவானை விஷ்ணுவே மங்களம். மதுஸூத னரே மங்களம். தாமரைக் கண்ணரே மங்களம். கருடத்வஜரே மங்களம். உலகங்களை ரக்ஷிக்கும் உமக்கு நமஸ்காரம். உலகரூபியான உமக்கு நமஸ்காரம். உலகத்தைப் படைத்த உமக்கு நமஸ்காரம். ஐந்துபூதங்களுக்கும் அப்புறமிருக்கும் நித்யமுக்தரான உமக்கு நமஸ் காரம். மூன்று உலகங்களிலுமிருக்கும் உமக்கு நமஸ்காரம். இம் மூன்றுக்கும் அப்புறமிருக்கும் உமக்கு நமஸ்காரம். எல்லாத்திக்குக் களிலுமிருக்கும்உமக்குநமஸ்காரம். உலகங்களைப்படைப்பவரும் அழி ப்பவருமான விஷ்ணுபகவானே! உமக்கு நமஸ்காரம். ஒருவராலும் ஜயிக்கப்படாத நீரே உலகங்களுக்குக் கர்த்தர். நீரே [1]ஹ்ருஷீகேசர். நீரே ஸம்ஹாரம்செய்பவர். ஆகையால், மூன்று காலங்களிலும் திவ்யமாக விளங்கும் உமதுபெருமைகளைப் பார்க்கிறேன். பழமை யான உமது அந்த உருவத்தையும் உள்ளபடி பார்க்கிறேன். உமது தலையால் தேவலோகமும் கால்களால் பூமிதேவியும்காலடியால் மூன்று

[1]இந்திரியங்களுக்கு ஈசர்.

உலகங்களும் வியாபிக்கப்பட்டன. நீர் புராதன புருஷராயிருக்கிறீர். திக்குக்கள் கைகளும் ஸூர்யன் கண்ணும் சுக்ரர் வீரியமுமாக உம்மிடம் நிலைபெற்றிருக்கின்றனர். ஒப்பற்ற தேஜஸுள்ள வாயுரூபியான உம்மால் ஏழுவிதமான வாயுமார்க்கங்களும் வியாபிக்கப்பட்டன. பிரபுவே! வியக்தமான ஸ்தாவர ஜங்கமரூபமும் அவ்யக்தமான பிரம்மரூபமுமுள்ள உம்மால் உலகமனைத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறது. காயாம்பூப்போன்ற காந்தியுள்ளவரும் பீதாம்பரமுடுத்தவரும் அழிவற்றவருமான ஸ்ரீகோவிந்தரைப் பணிந்தவர்களுக்கு எவ்விதப் பயமுமில்லை. ஸ்ரீகிருஷ்ணனைக்குறித்துச் செய்த நமஸ்காரம்ஒன்றுனும் பத்துஅஸ்வமேத யாகங்களைச் செய்து அவபிருதஸ்நாநஞ்செய்ததற்கு ஒப்பாகும். பத்து அஸ்வமேதயாகங்களைச் செய்தவனுக்கு மறுபிறப்புண்டு. பகவானைப் பணிந்தவனுக்கு மறுபிறப்பில்லை. கிருஷ்ணனைக் குறித்து விரதங்களைச் செய்பவர்களும் இரவும் பகலும் கிருஷ்ணமூர்த்தியைத் தியானஞ் செய்பவர்களும் அக்னியில் மந்திரத்தால் ஹோமஞ்செய்த நெய்போலக் கிருஷ்ணஸ்வரூபிகளாய் ஸ்ரீ கிருஷ்ணனை அடைகிறார்கள். நரகமென்னும் பயத்திலிருந்து பாதுகாக்கக் கங்கணம் பூண்டவரும் ஸம்ஸாரமென்னும் ஆற்றின் சுழலைத் தாண்டுவிக்கும் [1]துடுப்புப் போன்றவருமான ஸ்ரீ விஷ்ணுவுக்கு நமஸ்காரம். வேதத்தையும் தர்மத்தையும் காப்பாற்றுந் தேவராயும் பசுக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் நன்மைபுரிபவராயும் உலகத்தை ரக்ஷிப்பவராயும் கோவிந்தராயுமுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு அநேக நமஸ்காரம். ஹரியென்னும் இரண்டெழுத்து, பிராணவாயுக்களென்னுங்காட்டுவழிச் செல்லுகிறவனுக்குக் கையிலிருக்குங் கட்டுசோறும், ஸம்ஸாரத்தை ஓழிக்கும் ஔஷதமுமாகும்; கஷ்டசோகங்களினின்றும் ரக்ஷிப்பனவாகும். நாராயணரே பரப்பிரம்மம். நாராயணரே பெரியதவம். நாராயணரே உயர்ந்த ஸத்யம். நாராயணரே பரதத்திலும்பரம். ஸத்யமும்தர்மமும் எல்லாஉலகமும் விஷ்ணுரூபமாயிருப்பது உண்மையானால் என்பாவம் நசிக்கட்டும். அளவற்ற தேஜஸுள்ள யஜ்ஞவராஹரான ஸ்ரீவிஷ்ணுபகவானை வணங்கும் அடியார்களுக்கும் நமஸ்காரம். தேவர்களில் உத்தமரான புண்டரீகாக்ஷரே! உம்மைச் சரணமடைந்து நற்கதிபெற விருப்பமுள்ள பக்தனை எனக்கு எது க்ஷேமமோ அதை நீரே நினைக்கவேண்டும். இவ்விதம் வித்யைக்கும் தவத்துக்கும் காரணராயும் தாம் காரணமற்றவராயுமிருக்கிற விஷ்ணு பகவான் ஸ்துதிக்கப்பட்டார். துதியென்னும் யஜ்ஞத்தால் ஆரா

---

[1] மூலத்தில். 'தரிகாஷ்டாய' என்றிருக்கிறது; தெப்பம் என்பது சிலர் அபிப்பிராயம்.

திக்கப்பட்ட ஸ்ரீ ஜனர்த்தனர் என்னிடம் அனுக்ரஹமுள்ளவரா யிருக்கவேண்டும்" என்றுசொன்னர். கிருஷ்ணனிடஞ்சென்ற மன முள்ள பீஷ்மர் இத்தனை சொற்களையும் சொல்லிவிட்டு, அப்பொழுது 'ஸ்ரீ கிருஷ்ணபகவானைக்குறித்து நமஸ்காரம்' என்றுசொல்லி நமஸ் கரித்தார்.

பீஷ்மரின் அந்தவார்த்தைதன்றவுடன், அங்குள்ள வேதமறிந்த பிராம்மணஸ்ரேஷ்டர்கள், உத்தம தேஜஸுள்ள அந்தப் பீஷ்மரைக் கண்ணில் நீர்தளும்ப வாயாரக்கொண்டாடினர்கள். பிராம்மணர்கள் யாவரும், புருஷோத்தமரான ஸ்ரீகிருஷ்ணபகவானையும் ஸ்ரீ பீஷ்மரை யும் திரும்பவும் திரும்பவும் கொண்டாடினர்கள். யோகமஹிமை யால் பீஷ்மரின்பக்தியை அறிந்த ஸ்ரீகிருஷ்ணன், மூவுலகையுமறிவிக் கக்கூடிய திவ்யஞானத்தை அவருக்குக் கொடுத்துவிட்டுத் தாமிருக்கு மிடஞ்சென்றார். பீஷ்மரின் அந்தப் பக்தியோகத்தை அறிந்த ஸ்ரீகிருஷ்ணன் வேகமாக எழுந்திருந்து ஸந்தோஷித்து அந்த வாஹ னத்திலேறினர். கிருஷ்ணனும் ஸாத்யகியும் ஒருரதத்திலேறிச் சென் றார்கள். மஹாத்மாக்களான யுதிஷ்டிரரும் அர்ஜுனனும் ஒரு ரதத் திலும், பீமனும் நகுலனும் ஸஹதேவனும் ஒருரதத்திலும், திருபரும் புடித்ஸுவும் ஸஞ்சயனும் ஸுதரும் மற்றொருரதத்திலும் ஏறிச்சென் றார்கள். பட்டணம்போன்ற விஸ்தாரமுள்ள தேர்களோடு புறப்பட்ட அந்தப்புருஷஸ்ரேஷ்டர்கள் கம்பீரமான உருளையின் ஒலியால்பூமியை நடுங்கச்செய்தார்கள். அந்தக் கிருஷ்ணன் வழியில் செல்லும்போது, பிராம்மணர்களால் சொல்லப்படும் புருஷோத்தம ஸ்துதிவசனங்களை மெல்லக் கேட்டார். அவற்றைக்கேட்டு மனத்தில் ஸந்தோஷமுள்ள ஸ்ரீகிருஷ்ணன், பிறகு, அங்கு கைகட்டி வணக்கத்துடனிருக்கும் பீஷ்மரைக்கண்டு ஸந்தோஷித்தார். இவ்விதம் பீஷ்மரால் சொல்லப் பட்ட ஸ்ரீகிருஷ்ணஸ்துதியைப் பக்தியுடன் படிப்பவனும் கேட்பவ னும் ஸ்ரீகிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் பாபங்களெல்லாம்அற்று முடிவில் ஸ்ரீகிருஷ்ணபகவானை அடைகிறன். யோகிகள் உயிர்நீங்குங் காலத்தில் மிக்கபிரயத்தனத்துடன் மனத்தில் எந்தப்பகவானை நிலைக் கப் பாவனைசெய்கிறார்களோ அந்த ஹரியைப் பீஷ்மர் எதிரிற்கண்டு கிருதார்த்தராய்த் தம்முயிரைவிட்டார். முன்காலத்தில் ஸ்ரீபீஷ்மரால் சொல்லப்பட்டதும் மஹாபாபங்களை நாசஞ்செய்வதும் ஆச்சர்யமான செய்கையுள்ள ஸ்ரீ விஷ்ணுவைப்பற்றியதுமான இந்த ஸ்தவராஜம் முடிவுபெற்றது. பரிசுத்தனாகி மோக்ஷவிருப்பமுள்ள மனிதன் நிந் திக்கப்பட்ட பாவங்களைவிலக்கும் இந்த ஸ்தவராஜத்தைப் படித்துத்

தாமாகக்கிடைத்த அழிவுள்ள உலகங்களைக்கடந்து மஹாத்மாவி னுடைய அழிவற்ற பதத்தைப் பெறுகிறான்.

நாற்பத்தேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன் பரசுராமருடைய பராக்ரமத்தைக்கூற, யுதிஷ்டிரர் அதனை விளக்கிக் கூறும்படி கிருஷ்ணனை வேண்டியது.)

பிறகு, அந்தக் கிருஷ்ணபகவானும் யுதிஷ்டிரராஜரும் மற்ற நான்கு பாண்டவர்களும் கிருபர்முதலிய யாவரும் அதிவேகமாகச் செல்லும் குதிரைகட்டியவைகளும் துவஜ முதலியவைகளால் அலங் கரிக்கப்பட்டவைகளும் பட்டணங்களுக்கிசைப்பானவைகளுமான இரதங் களிலேறி வேகமாகக் குருக்ஷேத்திரஞ்சென்றார்கள். கேசம், மஜ்ஜை, எலும்பு இவைகளால் நிறைந்த குருக்ஷேத்திரத்திற் பிரவேசித்து மஹாரதர்களான அரசர்கள் சரீரத்தைவிட்ட இடமும், மலைகள் போன்ற யானை குதிரைகளுடைய எலும்புக்கூட்டங்களால்நெருங்கிய தும், மனிதர்களுடைய அன்னப்பறவைகள்போன்ற மண்டையோடுக ளால் எங்கும் சூழப்பட்டதும், பல கவசங்களும் பல ஆயுதங்களும் பல்லாயிரம் சிதைகளும் நிறைந்திருப்பதும், பூதராக்ஷஸக்கூட்டங்க ளால் ஸஞ்சரிக்கப்பட்டதும், புஜித்துவிடப்பட்ட அந்தகனுடைய பானசாலைபோன்றதுமான குருக்ஷேத்திரத்தைப் பார்த்துக்கொண்டு மஹாரதர்களான அவர்கள் வேகமாகப் போனார்கள். போகுங்காலத் தில், மஹாபாஹுவான ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரருக்குப் பரசுராம ருடைய பராக்ரமமனைத்தையும் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! பார்த்தரே! சிறிது தூரத்தில் இதோகாணப்படும் ஐந்து குளங்களும் பரசுராமரால் செய்யப்பட்டவைகள். க்ஷத்திரியர்களின் உதிரங்களால் நிறைந்த இக்குளங்களில் அவர் பிதிருக்களுக்குத் தர்ப் பணஞ்செய்தார். பிரபுவான பரசுராமர் பூமியை இருபத்தொருமுறை க்ஷத்திரியர்களற்றதாகச்செய்து இவ்விடத்தில் இப்பொழுது அக்காரி யத்திலிருந்து ஓழிவடைந்தார்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "முன்காலத்தில் பரசுராமரால் இப்பூமியானது இருபத்தொருமுறை க்ஷத்திரியர்களில்லாததாகச் செய்யப்பட்டதென்று தாங்கள்சொன்ன விஷயத்தில் எனக்குப் பெரிய சந்தேகம். ஓ! அளவற்ற பராக்ரம முள்ள யதுஸ்ரேஷ்டரே! ராமர் க்ஷத்திரியஜாதியின் வித்துமில்லாமல் உலகத்தை எரித்தபின் திரும்பவும் எங்ஙனம் க்ஷத்திரியஜாதி உத்

பத்தியடைந்தது? யதுஸ்ரேஷ்டரே! மஹாத்மாவும் பகவானுமான பரசுராமரால் க்ஷத்திரியஜாதி எப்படி அழிக்கப்பட்டது? அது திரும்பவும் எப்படி வளர்ந்தது? ஓ! பேசுகிறவர்களிற் சிறந்தவரே! பெரிய ரதயுத்தத்தால் கோடிக்கணக்காக க்ஷத்திரியர்கள் கொல்லப்பட்டார்கள். அப்படியே மறுபடியும் பூமி க்ஷத்திரியர்களால் வியாபிக்கப்பட்டது. யாதவப்புலியே! பிருகுவம்சத்தில் உதித்தவரும் மஹாத்மாவுமான பரசுராமரால் முன் இந்த க்ஷத்ரியஜாதி குருக்ஷேத்திரத்தில் எதற்காகக் கொல்லப்பட்டது? ஓ! விருஷ்ணி குலத்தில் உதித்தவரே! கருட த்வஜரே! எனது இந்தச் சந்தேகத்தை விலக்கவேண்டும். இந்திரனுக்கு உடன்பிறந்த ஓ! கிருஷ்ண! வேதமும் உமது வசனத்திற்கு மேலானதன்று" என்று சொன்னார். பிறகு, பிரபுவான வாஸுதேவர், க்ஷத்திரியர்களால் அப்பூமி நிறைந்த விஷயத்தை முழுமையும் உள்ளபடி ஒப்பற்ற பராக்கிரமசாலியான யுதிஷ்டிரருக்கு நடந்துகொண்டே சொல்லத் தொடங்கினர்.

நாற்பத்தெட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணபகவான் யுதிஷ்டிருக்குத்பராசுராமருடையவரலாறுகூறியது.)

ஸ்ரீகிருஷ்ணன், "ஓ! கௌந்தேயரே! பரசுராமர், பிறந்த காரணத்தையும் அவர்பெருமையையும் அவரால் கோடிக்கணக்கான க்ஷத்திரியர்கள் அடிபட்டதையும் திரும்பவும் ராஜவம்சத்தில் இப்பாரத யுத்தத்தில் அடிபடத்தக்கபடி க்ஷத்திரியர்கள் வளர்ந்ததையும் மஹரிஷிகள் சொல்ல நான் கேட்டபடி உமக்குச் சொல்லுகிறேன்; கேளும்" என்று சொல்லத்தொடங்கினர்.

"அரசரே! ஜஹ்நுவின் புத்திரரான அஜருக்குப் பலாகாஸ்வர் என்னும் ஒரு புத்திரர் இருந்தார். அவருக்குக் குசிகரென்று பிரஸித்தராய்த் தர்மந்தரிந்த ஒரு புத்திரரிருந்தார். உலகத்தில் இந்திரனுக்கொப்பான அந்தக்குசிகர் மூவுலகங்களுக்கும் ஈசரும் யாவராலும் ஜயிக்கத்தகாதவருமான ஒரு புத்திரரை அடையவிரும்பிப் பெருந்தவஞ் செய்யத்தொடங்கினர். பாரதரே! புத்திரனைஉண்டுபண்ண வல்லவரான கடுந்தவமுள்ள அந்தக் குசிகரைக்கண்டு உலகபதிகளுக்கும் பதியான ஆயிரங்கண்ணுள்ள இந்திரன் தானேவந்து அந்தக்குசிகருக்குக் குமாரனாகப் பிறந்தான். குசிகரானவர் குமாரனுதித்த இந்திரனுக்குக் காதியென்று பெயரிட்டனர். பிரபு

வான அரசரே! அந்தக் காதிக்கு ஸத்யவதியென்று பெயருள்ள பெண் பிறந்தாள். பிரபுவான காதியானவன் அந்தக் கன்னிகையைப் பிருகுவின் புத்திரரான ரிசீகருக்கு மணம்புரிவித்தான். கௌரவர்களை ஸந்தோஷிப்பிக்கிற கௌந்தேயரே! பிறகு, புத்திரனை விரும்பி ஸத்தியவதியால் வேண்டப்பட்ட ரிசீகர் காதிக்கும் தமக்கும் புத்திரனுண்டாகக்கருதி வெவ்வேறான இரண்டுசருவைப் பக்குவஞ்செய்தார். உடனே, பிருகுபுத்திரரான ரிசீகர், பாரியையை அழைத்து, ‘இந்தச்சருவை நீயும் மற்றொன்றான இதை உன் தாயும் உபயோகித்துக்கொள்ள வேண்டும். இந்தச் சருவானவை, அவளுக்கு உலகத்தில் க்ஷத்திரியர்களால் வெல்லத்தகாதவனும் க்ஷத்ரிய ச்ரேஷ்டர்களை வெல்லத்தக்கவனும் க்ஷத்திரிய ச்ரேஷ்டனும் காந்தியுள்ளவனுமான புத்திரனையும், உனக்குத் தைரியம் சமம் தவமுதலிய நற்குணங்கள் பொருந்திய அந்தணர்சிகாமணியான புத்திரனையும் உண்டுபண்ணும்’ என்று சொன்னர். பிருகுநந்தனரும் ச்ரீமானான அந்த ரிசீகர், பாரியையான ஸத்யவதியிடம் சருவைக்கொடுத்து இவ்விதம் சொல்லிவிட்டுத் தவத்தை விரும்பிக் காட்டுக்குச் சென்றார். இந்தச் சமயத்திலேயே தீர்த்தயாத்திரை செய்யப்புறப்பட்ட அரசனான காதியும் தன் மனைவியுடன் ரிசீகராச்ரமம் வந்து சேர்ந்தான். அரசரே! அப்பொழுது ஸத்யவதியானவள் அனுக்ரஹத்துடன் பதியாலளிக்கப்பட்ட இரண்டு சருக்களையும் எடுத்துக்கொண்டு சந்தோஷத்துடன் தாயிடம்சென்று அதைத் தெரிவித்தனள். ஓ! கௌந்தேயரே! அவள்மாதாவோ, தனக்கென்றசருவைப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு அவளுக்குரிய சருவை அறியாமல் தான்உபயோகித்துக்கொண்டாள். பிறகு, ஸத்யவதியானவள் க்ஷத்திரியதேஜஸால் பிரகாசிக்கும் சரீரத்துடன் க்ஷத்திரியர்களைக் கொல்லத்தக்கதும் கோரமான தரிசனமுள்ளதுமான கர்ப்பத்தைத் தரித்தாள். பாரதரே! அப்ஸரஸ்திரீயைப்போல அழகுள்ள தம்மனைவியைக்கண்டரிசீகர் தியானக்கண்ணால் உண்மையைஅறிந்துகொண்டு, ‘மங்களம்பொருந்திய பெண்மணியே! சருவைமாற்றிய காரணத்தால் உன்தாயால் நீ வஞ்சிக்கப்பட்டாய். அந்தக்காரணத்தால், மிக்க பொறுமையுள்ளவனும் கொடுஞ்செய்கையுள்ளவனுமான புத்திரன் உன்னிடம் உண்டாகப்போகிறான். உன்தாயானவள் தவத்தையேதனமாகக் கொண்ட உத்தமப்பிராம்மணனை உண்டுபண்ணப்போகிறாள். பிராம்மணஜாதிக்குரிய வீரியம் யாவும் உனக்கென்றசருவில் வைக்கப்பட்டிருந்தது. க்ஷத்ரிய ஜாதிக்குரிய பராக்ரமம் யாவும் உன்மாதாவின் பொருட்டுக் கொடுக்கப்பட்டது. சுபமானவளே! இதை உன்தாய்

மாற்றியகாரணத்தால் இஃது இவ்விதமில்லாமல் உன்தாயிடம் பிராம் மணனும் உன்னிடம் க்ஷத்திரியனும் உண்டாகப்போகிறார்கள்' என்றுசொன்னர். பதியான ரிசீகரால் இவ்விதம் சொல்லப்பட்ட பெரியபாக்கியமுள்ள ஸத்யவதி நடுக்கமுற்றுத் தலைவணங்கித் தண்ட னிட்டு, 'பிரபுவான பகவானே! 'பிராம்மணஜாதிக்குஇகழ்ச்சியான புத்திரனை அடைவாய்' என்ற இவ்வசனத்தை என்னைக்குறித்துத் தாங்கள் சொல்லத்தகாது' என்றுசொன்னள். ரிசீகர், 'பெண்ணே! உன்விஷயத்தில் நான் இவ்வித ஸங்கல்பத்தைச் செய்தவனல்லேன். சருவைமாற்றியகாரணத்தால் க்ரூரமானசெய்கையுள்ளபுத்திரன் உண் டாவான்' என்றார். ஸத்யவதி, 'முனிவரே! உங்களுக்குமனமிருந் தால் உலகங்களையும் படைக்கவல்லவராவீர்; ஒருபுத்திரனைக்கொடுப் பது எவ்வளவு? பிரபுவே! ஆகையால், என்பொருட்டுச் சாந்தகுண முள்ள ரோனபுத்திரனைக் கொடுக்கக்கடவீர்' என்றுசொன்னள். ரிசீ கர், 'பெண்ணே! விளையாட்டுவேளையிலும் என்னல் இதுவரையில் பொய்யானவசனம் சொல்லப்பட்டதில்லை. அக்னியைமுன்னிட்டு மந்திரஜபத்துடன் ஸாதித்தசருவில் என்வசனம் எங்ஙனம் பொய்யா குமி? சுபமுள்ளவளே! உன்தந்தையின்குலம்யாவும் பிராம்மணகுல மாகுமென்பது, முன்னமே எனக்குத் தவவலிமையால்; தெரிந்தது தான்' என்றுசொன்னர். ஸத்யவதி, 'மந்திரசக்தியுள்ளவர்களிற் சிறந்தபிரபுவே! தங்களுடையஎண்ணப்படி இஷ்டம்போலப் பௌத் திரனுண்டாகட்டும். புத்திரன் இவ்விதம் உண்டாகவேண்டாம். சாந்தகுணமுள்ள ரோனபுத்திரனை அடையவேண்டுகிறேன்'என்று சொன்னள். ரிசீகர், 'அழகுள்ளபெண்மணியே! புத்திரனென்றும் பௌத்திரனென்றும் விசேஷம் எனக்கில்லை. நீ எங்ஙனம்சொல்லு கிறாயோ அங்ஙனம் உண்டாகட்டும்' என்று சொன்னர். பிறகு, ஸத்யவதியினிடம் தவத்தில்ஆசையுள்ளவரும் சாந்தகுணமுள்ள வரும் நல்லநியமமுள்ளவருமான ஜமதக்னியென்னும்புத்திரர் உண்டா னர். குசிகரின்குமாரனைகாதியிடம் பிரம்மதேஜஸ்யாவும்நிறைந்து பிரம்மரிஷிக்கொப்பான விசுவாமித்திரரென்னும் புத்திரர்உதித்தார். தவங்களுக்கிருப்பிடமானவரும் ரிசீகபுத்திரருமான ஜமதக்னி கல்வி யெல்லாம்கரைகண்டவரும் தனுர்வேதத்தின்கரையை அடைந்தவரும் க்ஷத்திரியர்களைக்கொல்லத்தக்கவரும் அக்நிபோலப் பிரகாசிப்பவரும் மிக்க பயங்கரரூபமான பரசுராமரைப்பெற்றார். அந்தப்பரசுராமர் கந்தமாதனம் என்னும்மலையில் மஹாதேவரை ஸந்தோஷப்படுத்தி அவரிடமிருந்து அதிகதேஜஸுள்ள கோடாலியையும் அஸ்த்ரங்களை யும் வரமாக அடைந்தார். ஜ்வாலையுள்ள அக்கினிபோலவிளங்குவதும்

மழுங்காதமுனையுள்ளதும் சொல்லமுடியாத சக்தியுள்ளதுமான அந்தக் கோடாலியால் அந்தராமர் உலகங்களில் ஒப்பற்றவராயிருந்தார்.

இவ்விதமிருக்குங்காலத்தில் ஹைஹயதேசத்திற்கராசனை கிருதவீரியனின்புத்திரனும் மிக்கபராக்ரமசாலியும் தேஜஸ்ஸுள்ளவனுமான அர்ஜுனன் தத்தாத்ரேயரின் அனுக்ரஹத்தால் ஆயிரங்கைகளைப் பெற்றுப் பெரியபராக்ரமமுள்ள சக்ரவர்த்தியாயுமிருந்து அசுவமேதமென்னும் யாகஞ்செய்தான். உத்தமமான தர்மந்தெரிந்த அர்ஜுனன் (அந்தயாகத்தில்) தன்புஜபலத்தாலும் அஸ்த்ரபலத்தாலும் யுத்தத்தில்ஜயிக்கப்பட்ட பூமியாவற்றையும் மலைகளுடனும் ஏழுதீவுகளுடனும் பிராம்மணர்களுக்குத் தானஞ்செய்தான். ஓ! கௌந்தேயரே! பராக்ரமசாலியும் வீரனுமான ஆயிரங்கையுள்ள அவ்வர்ஜுனராஜன் தாகமுள்ள அக்னிபகவானுல்யாசிக்கப்பட்டுப் பலகிராமங்களையும் பட்டணங்களையும் ராஜ்யங்களையும் இடைச்சேரிகளையும் அவர் பொருட்டுப் பிக்ஷையாகக் கொடுத்தான். மஹாபராக்ரமமுள்ள அந்த ராஜாவின் பிரபாவபலத்தால் யாவற்றையும் தகிக்க விருப்பங்கொண்டு ஜ்வலிப்பவரும் பாணத்தால் விருத்திபண்ணப்பட்டவருமான அக்கினியானவர் மலைகளையும் பூமியையுங்கூட எரிக்கத்தொடங்கினர். அவ்விதம் மூண்ட அக்கினி, வாயுவால் மிகவளர்ச்சியடைந்து அர்ஜுனராஜாவின் உதவியைக்கொண்டு மஹாத்மாவான வஸிஷ்டமஹரிஷியின்ஒருவருமில்லாத ஆஸ்ரமமிருக்கும்அரண்யத்தையும்எரித்துவிட்டார். தளராதவிரதமுள்ளவரே! பெரியகைகளையுடையவரே! தம்ஆஸ்ரமம்எரிக்கப்பட்டதும், அதற்கு மூலகாரணமான அர்ஜுனராஜனிடம் மிக்ககோபங்கொண்டவரும் வீர்யமுள்ளவருமான வஸிஷ்டமஹரிஷி, 'அடா! அர்ஜுன! இந்தப்பெரியதான என்னுடைய ஆஸ்ரமத்தை விலக்காமல்எரிச்சச்செய்த காரணம்பற்றி உன்கைகளை யுத்தத்தில் பரசுராமர் அறுக்கப்போகிறார்' என்று அர்ஜுனனைச் சபித்தார். பாரதரே! பெரியபராக்ரமமுள்ளவனும் பலசாலியும் எப்பொழுதும் பொறுமையுள்ளவனும் பிராம்மணர்களுக்குஹிதனும் அடுத்தவர்களிடம்அன்புள்ளவனும் தாதாவும் சூரனுமான அர்ஜுனராஜரே, அந்தமஹாத்மாவானவஸிஷ்டர்கொடுத்தசாபத்தைக்கவனியாமலிருந்தான். நல்லபலமுள்ளவர்களும் எப்பொழுதும் அகங்காரமும் கொடுஞ்செய்கையுமுள்ளவர்களுமான அர்ஜுனராஜன்புத்திரர்கள் அச்சாபம்காரணமாகத் தந்தையின்வதத்திற்கு மூலமானார்கள். தளராதவிரதமுள்ளவரே! அவர்கள் புத்திமானும் ஹைஹயராஜனுமான கார்த்தவீரியனுக்குத் தெரியாமல் ஜமதக்னிரிஷியின் பசுவின் கன்றை ஓட்டிவந்தார்கள். பாபமற்றவரே! அந்தக் காரணம்பற்றி

மஹாத்மாவான ராமருக்கும் அர்ஜுனனுக்கும் நேர்ந்த பெரிய யுத்தத்தில் பரசுராமர் மிக்க கோபத்துடன் அர்ஜுனன் கைகளை அறுத்துவிட்டார். ராஜஸ்ரேஷ்டரே! பிறகு, அவர்களுடைய அந்தப்புரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் கன்றுக்குட்டியைப் பிரபுவான பரசுராமர்தம்ஆஸ்ரமத்துக்கு ஓட்டிவந்தார். மனிதர்களுக்கு அதிபதியே! அப்பொழுது, புத்தியில்லாத அந்த அர்ஜுனன்புத்திரர்கள் ஒன்றுசேர்ந்து, கீர்த்திமானை பரசுராமர் ஸமித்தும் குசமும் கொண்டுவர வெளியில் போயிருக்கும் ஸமயத்தில் ஒருவருமறியாமல் மஹாத்மாவான ஜமதக்னியின் ஆஸ்ரமம் சென்று அவ்வாஸ்ரமத்திலிருப்பவர்களும் ஜமதக்னியின்பாரியையும் பார்க்கும்பொழுது அர்த்த சந்திர பாணங்களின் முனைகளால் அவர்தலையை அறுத்துச் சரீரத்திலிருந்து தள்ளினர்கள். தனுர்வேதத்தில் ஈடில்லாதவரும் திவ்யமான பல அஸ்த்ரங்களைப் பெற்றவருமான பார்க்கவராமர், அந்தச் செயலைக் கேட்டு, பிரளயகாலத் தீப்போல ஜ்வலிக்கும் கோபாக்னியுள்ளவராய்த் தந்தையின் வதத்தைப் பொறுமல் மிக்ககோபங்கொண்டு, 'பூமியை க்ஷத்திரிய ஜாதியற்றதாகச் செய்கிறேன்' என்ற சபதத்துடன் அர்த்தசந்திரன்போல விளங்கும் பரசுவென்னும் ஆயுதத்தைக் கையிலெடுத்தார். பிருகுவம்சத்துப் புலியான அந்தப்பராக்ரமமுள்ள பரசுராமர் மிகவிரைவாகச்சென்று அர்ஜுனன் பிள்ளைகளையும் பேரர்களையும் மிச்சமில்லாமல் அடித்தார். அதிகோபமுள்ள அந்த ராமர் ஹைஹயதேசத்துப் பல ஆயிரம் க்ஷத்திரியர்களைக் கொன்று பூமிபைக் கடல்வரை உதிரவெள்ள முள்ளதாகச் செய்தார். அதிக வீரியமுள்ள அந்தப் பரசுராமர் அப்படியே பூமியை க்ஷத்திரிய ஜாதியற்றதாகச் செய்து மிக்ககருணையுள்ளவராய் வனமே சென்றார். இயல்பாகவே கோபமுள்ளவரும் பிரபுவுமான அந்தப் பரசுராமர் பிறகு, சில்லாயிரம் வருஷங்கள் சென்றபின், அங்கு கோபமுள்ளவரானர். மஹாராஜரே! யயாதிபதனமென்னும் க்ஷத்திரத்தில் யாகத்திற்காகச்சேர்ந்த ஜனக்கூட்டத்தில் விஸ்வாமித்திரர் பேரரும் ரைப்யரின் புத்ரரும் பெரிய தவமுள்ளவருமான பராவஸு என்பவர், ராமரை நோக்கி, 'ராம! பொய்யான சபதஞ்செய்த நீர் இந்த ஜனக்கூட்டத்தில் பெருமையாக உம்மைப்புகழ்ந்து பேசுகிறீர். இந்த யாகத்திற்கு வந்திருக்கும் பிரதர்த்தனன் முதலியவர்கள் உமக்கு க்ஷத்திரியர்களல்லரோ? பலநூறு க்ஷத்திரியர்களால் இந்தப்பூமி எங்கும் திரும்பவும் நிறைந்திருக்கிறது. க்ஷத்திரிய வீரர்களிடம் பயந்து ஒருமலையில் குடிபுகுந்திருக்கிறீரே' என்று இகழ்ச்சியாகப்

பேசினர். பராவஸுவின் வசனத்தைக்கேட்டதும், பார்க்கவர் ஆயுதத்தைக் கையிலெடுத்தார். ராஜரே! உடனே, நூற்றுக்கணக்காக முன் கொல்லாதுவிடப்பட்டவர்களும் பின்பு பலவிதமாக விருத்தி அடைந்தவர்களும் அதிக வீரியமுள்ளவர்களுமாயிருந்த க்ஷத்திரியர்கள் அனைவரையும் பாலர்கள்முதல் வேகமாகத் திரும்பவுங்கொன்றார். ஓ! நராதிபரே! அப்பொழுது, கர்ப்பத்திலிருக்கும் க்ஷத்திரியர்களால் திரும்பவும் பூமி நிறைந்ததாயிற்று. கர்ப்பங்கள் உண்டாக உண்டாகத் திரும்பவும் ராமர் வதஞ்செய்துவந்தார். அப்பொழுது, க்ஷத்திரியஸ்திரீகள் சில பிள்ளைகளை ரக்ஷித்தார்கள். இவ்விதம் இருபத்தொருமுறை பூமியை க்ஷத்திரிய ஜாதியற்றதாகச்செய்த பிரபுவான ராமர் பிறகு தாம்செய்த அசுவமேதயாகத்தின் முடிவில் இந்தப் பூமியைக் கஸ்யபருக்குத் தக்ஷிணையாகக் கொடுத்தார். ராஜரே! அந்தக் கஸ்யபர், ஸ்ருக்கை எடுத்த கையால் தக்ஷிணையைப் பெற்றுக்கொண்டு மிச்சமான க்ஷத்திரியர்களைக் காக்கவேண்டிப் பரசுராமரை நோக்கி, 'ஓ! முனிவரிற் சிறந்தவரே! நீர் தென்கடலின் கரையைநோக்கிச் செல்லவேண்டும். என்னுடைய தேசத்தில் எவ்விடத்திலும் நீர் வஸிப்பது நியாயமாகாது. பூமியானது உம்மால் அஸ்வமேதயாகத்தில் தக்ஷிணையாக எனக்குக் கொடுக்கப்பட்டது. கொடுத்த இப்பூமியைத் திரும்பவும்பெற நீர் அதிகாரமுள்ளவரல்லர்' என்றுசொன்னர்.

உடனே, அங்ஙனம்சென்ற பரசுராமரிடம்பயந்து மேற்றிசையில் ஒருபாகமான [1] சூர்ப்பாகரமென்னும் ஒருதேசத்தை ஸமுத்திராஜன் அவருக்கு உண்டுபண்ணிக்கொடுத்தான். ஓ! மஹாராஜரே! கஸ்யபர் அந்தப்பூமியைத் தானமாகப் பெற்றுக்கொண்டு அதைப் பிராம்மணர்களிடம் அளித்துவிட்டுத் தாம் மிக்கபெரியவனம் போய்ச்சேர்ந்தார். பிறகு, இவ்வுலகம் அராஜகமானதும், சூத்திரர்களும் வைச்யர்களும் தம்மிஷ்டப்படி மேற்குலத்தார் தாரங்களிடம் செல்லத்தொடங்கினர்கள். ஓ! பரதரேறே! பலமுள்ளவர்கள் பலம்குறைந்தவர்களை அடிக்கத்தொடங்கினர்கள். அக்காலம் பொருள்களால் பிரபுத்தன்மை எவனிடமும் நிலைத்திருக்கவில்லை. மூர்க்கர்களான சில பிராம்மணர்கள் தாம் பண்டிதரென்னும் அகங்காரமுள்ளவராய்க் கள்ளைக்குடிக்கத் தலைப்பட்டார்கள். பிராம்மணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் சூத்திரர்கள்யாவரும் கெட்டவழியிற்சென்று ஒருவரையொருவர் அடுத்துக் கொலைசெய்ய முயன்றார்கள். கெட்டவழியிற்சென்ற பிராம்மணர்கள் தம்தர்மத்தைவிட்டுப் பாஷண்டர்களானார்கள். எல்லோரும்

1 இவ்விடத்தில் சூர்ப்பாரகமென்பது வேறுபாடம்.

திருட்டு பொய் மாயைகளைச் செய்தார்கள். தமது ஜாதிதர்மங்களையும் ஆஸ்ரமதர்மங்களையும் ஸரிவரநடத்தி நல்வழிச்செல்லும் பிராம்மணர்களிடமும் வைசியர்களையும் தர்மஞ்செய்யும் சூத்திரர்களையும் கெட்டநடையுள்ளசிலர் யாதொரு பயமுமின்றிக் கொலைசெய்தார்கள். வேறுசிலர் யாகத்தையும் அத்தியயனத்தையும் செய்பவர்களையும், ஆஸ்ரமத்திலிருக்கும் தவஞ்செய்பவர்களையும், பசுக்கள், பாலர்கள், கிழவர்கள், ஸ்திரீகள் ஆகிய இவர்களையும் நாசஞ்செய்தார்கள். வேதமும் தர்மசாஸ்திரமும் ராஜநீதியும் அக்காலம் ஒளித்துப்போயின. கீழ்மேலான கெட்டசெய்கையால் பல துவிஜர்கள் பெரும்பாலும் விராத்தியர்களும் மிலேச்சர்களுமானர்கள். தர்மத்தைப் பாதுகாக்கும் க்ஷத்திரியர்களால் நீதிப்படி காக்கப்படாத பூமிதேவியும் அக்காலத்தில் துஷ்டமனிதர்களின் தீச்செயல்களால் பீடிக்கப்பட்டுப் பாதாளஞ் செல்லத்தொடங்கினள். அப்படிப்பயந்து ஓடிப் பாதாளத்தில் முழுகக்கூடிய பூமியைக்கண்டு பெரியமனமுள்ள கஶ்யபர் தமது தொடையில் தாங்கித் தூக்கினர். ஓ! ராஜரே! அந்தக் காரணத்தால் இப்பூமி உர்வியென்னும் பெயருள்ளவளானள். அப்பொழுது, பூமிதேவியானவள் கஶ்யபரை ஸந்தோஷப்படுத்தி, தன்னை ரக்ஷிப்பதை உத்தேசித்துக் கைவன்மையுள்ள க்ஷத்திரியர்களை யாசிக்கத்தொடங்கினள்.

'ஸ்ருஷ்டிகர்த்தராகிய முனிவரே! ஹைஹயவம்சத்தில் உதித்த க்ஷத்ரியஶ்ரேஷ்டர்கள் ஸ்திரீகளிடத்தில் என்னால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் என்னை ரக்ஷிக்கட்டும். ஓ! பிரபுவான பிராம்மணரே! விதூரதனுடைய புத்திரனை புருவம்சத்தில் உதித்த ஓர் அரசன் ரிக்ஷவானென்னும் மலையில் கரடிகளால் வளர்க்கப்பட்டவனாகி இருக்கிறான். அப்படியே, ஸௌதாஸபுத்திரன், அதிக வீரியமுள்ளவரும் விதிப்படி யாகஞ்செய்தவரும் தயையுள்ளவருமான பராசரமுனிவரால் பாதுகாக்கப்பட்டிருக்கிறான். அவன், க்ஷத்ரியனையிருந்தும், அந்தப்பராசரருக்குச் சூத்திரன்போல எல்லாக் கார்யங்களையும் செய்வதால் ஸர்வகர்மாவென்று பிரஸித்தனனன். அவ்வரசன் என்னைக் காக்கட்டும். முனிவரே! சிபியின் புத்திரன் மஹாபராக்ரமசாலி. அவன் அரண்யத்தில் பசுக்களால் வளர்க்கப்பட்ட காரணத்தால் கோபதியென்னும் பெயருள்ளவனானன். அவன் என்னை ரக்ஷிக்கட்டும். பிரதர்த்தனன்புத்திரன் மாடுகட்டும் இடத்தில் கன்றுகளால் வளர்க்கப்பட்ட காரணத்தால் வத்ஸனென்று பெயர்கொண்டவன். மஹாபலசாலியான அந்த அரசன் என்னை ரக்ஷிக்கட்டும். திவிரதரின் பௌத்ரனும் ததிவாஹனனுடைய புத்

திரனுமான அங்கனென்னும் அரசன் கங்கைக்கரையில் கௌதமரால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறான். க்ருத்ரகூடமென்னும் மலையில் விசேஷமான தேஜஸும் பெரிய பாக்யமுமுள்ளவனும் அதிக ஸம்பத்தால் அலங்கரிக்கப்பட்டவனுமான பிருஹத்ரதனென்னும் அரசன் 1 மந்திகளால் காப்பாற்றப்பட்டிருக்கிறான். மருத்தரின்வம்சத்தில் உதித்தவர்களும் 2 இந்திரனுக்கொப்பான பராக்ரமமுள்ளவர்களுமான க்ஷத்திரியகுமாரர்கள் ஸமுத்திரத்தால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கங்கே ப்ரஸித்தர்களான இந்த க்ஷத்திரியகுமாரர்கள் சிற்பி தட்டான் முதலிய ஜாதியை எப்பொழுதும் அடைந்திருக்கிறார்கள். இவர்கள் என்னை ரக்ஷிப்பார்களானால் நான் பயமின்றி நிலைபெற்றிருப்பேன். இவர்களின் பிதிர்க்களும் பிதாமஹர்களும் சலிக்காத சக்தியுள்ள பரசுராமரால் யுத்தத்தில் என்னிமித்தம் அடிக்கப்பட்டார்கள். ஓ! முனிவர்களிற்பெரியவரே! அவர்களுக்கு மரியாதை செய்யவேண்டிய கடமை எனக்குண்டு. 3 காலஞ்சென்ற அரசர்களால் எனக்கு உதவியை நான் விரும்பவில்லை. இக்காலத்திலுள்ள க்ஷத்ரியர்களால் நான் இருக்கவிரும்புகிறேன். இதைச் சீக்கிரம் செய்துகொடுக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தாள்.

பிறகு, கச்யபர், பூமிதேவியால் குறிப்பிடப்பட்ட வீரியசாலிகளான அந்த க்ஷத்திரியர்களை வரவழைத்து அரசர்களாக அவர்களுக்கு அபிஷேகஞ்செய்தார். அவர்களுடைய வம்சங்கள் புத்ர பௌத்ர பரம்பரையாய் உலகில் நிலைபெற்றிருக்கின்றன. ஓ! பாண்டவரே! என்னைக்கேட்ட இப்பழைய கதையை உமக்குச்சொன்னேன்" என்று இவ்விதம் தர்மத்தைப் பரிபாலிப்பவர்களிற் சிறந்த யுதிஷ்டிர ராஜரிடம் பேசிக்கொண்டு, ஸ்ரீகிருஷ்ணபகவான், ஸூர்யன் தன்னொளியால் மூவுலகிலும் பிரவேசிப்பதுபோல அந்த ரதத்திலேயே வேகமாகச் சென்றார்.

நாற்பத்தோன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரர் முதலியோர் பீஷ்மரை அடுத்ததும், ஸ்ரீகிருஷ்ணன் பீஷ்மருக்கு உபசாரவார்த்தை சொல்லித் தர்மபுத்திரருக்குத் தர்மோபதேசஞ் செய்யும்படி வேண்டியதும்.)

பரசுராமருடைய அந்தச் செய்கையைக்கேட்ட யுதிஷ்டிரராஜர் மிக்க ஆச்சரியமுள்ளவராய்க் கிருஷ்ணபகவானை நோக்கி, "ஓ! பக

---

1 ஒருவகைக் குரங்கு. 2 இங்கு ஒருசொல் விடப்பட்டது.

3 'நீதியற்ற மனிதரால் எனக்கு உதவியை விரும்பத்தக்கதில்லை' என்பது பழையவுரை.

வானே ! கோபத்தால் பூமியை க்ஷத்திரியஜாதியற்றதாகச்செய்த வரும் இந்திரனுக்குஒப்பானவரும் மஹாத்மாவுமான பரசுராமருடைய பராக்ரமம் ஆச்சரியமாகஇருக்கிறது. அவரிடமிருந்து பயந்து நடுக்கமுற்ற க்ஷத்திரியவீரர்கள் பசுக்களாலும் ஸமுத்திரத்தாலும் காடிகளாலும் மந்திகளாலும் குரங்குகளாலும் காப்பாற்றப்பட்டார்கள் ; ஆச்சரியம் ! அச்சுதரே ! பிராம்மணஸ்ரேஷ்டர்கள் தர்மமான இவ்விதக் காரியத்தைச்செய்த இடமான இம்மானிடலோகமானது பாக்யமுள்ளது. பூமியிலுள்ளமனிதர்களும் மிக்கபாக்யம் பெற்றவர்களே " என்றுசொன்னர்.

ஐய ! இவ்விதம் கதையைப்பேசிக்கொண்டே அந்தயுதிஷ்டிர ராஜரும் ஸ்ரீகிருஷ்ணபகவானும், சரதல்பத்தில்படுத்திருக்கும் பிரபுவான பீஷ்மரிருக்கும்இடஞ் சென்றார்கள். அங்குசென்ற அவர்கள் புண்ணியபூமிகளிற்சிறந்த ஓகவதியென்னும் நதிக்கரையில் சரதல்பத்தில்படுத்தவரும் தேவர்களாற்சூழப்பட்ட இந்திரன்போலப் பலமுனிவர்கள்சூழ்ந்து ஆராதிக்கப்பெற்றுவிளங்குகிறவரும் தன்கிரணங்கள் ஒன்றுசேர்ந்து நிறைந்த ஸாயங்காலத்துஸூர்யன்போலப் பிரகாசிப்பவருமானபீஷ்மரைக் கண்டார்கள். ஸ்ரீகிருஷ்ணபகவானும் தர்மபுத்திராஜரும் மற்றுமுள்ளநான்குபாண்டவர்களும் கிருபர்முதலியவர்களும் சிறிதுதூரத்திலேயே பீஷ்மரைக்கண்டவுடன் வாகனங்களிலிருந்துஇறங்கிச் சென்றார்கள். பிறகு, ஸ்ரீகிருஷ்ணபகவானும் ஸாத்யகியும் அந்தயுதிஷ்டிரர்முதலிய அரசர்களும் சஞ்சலமான மனத்தைஅடக்கி இந்திரியக்கூட்டத்தை ஒருவழிப்படுத்திக்கொண்டு அங்குள்ள வியாஸர்முதலிய உத்தமரிஷிகளினருகிற்சென்றுவந்தனஞ்செய்தபின், பீஷ்மரிடஞ் சென்றார்கள். சென்றவுடன், ஸ்ரீகிருஷ்ணபகவான், பீஷ்மரைநோக்கி, தவத்தின்பெருமையைப் பிரம்மனுஞ் செய்துவிட்டு உட்கார்ந்தார். மற்றுமுள்ள புருஷவீரர்களியாவரும் அவரைச்சுற்றி உட்கார்ந்தார்கள். பிறகு, ஸ்ரீகேசவர், அவியுங்காலத்து அக்னிபோலிருக்கும் பீஷ்மரைப்பார்த்துச் சற்றுமனவருத்தமுற்றுப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

" பேசுகிறவர்களிற்சிறந்தவரே ! இந்திரியங்களெலலாம் முன்போலத் தெளிந்து ஸுகமாயிருக்கின்றனவா ?உமதுபுத்தியும் சோர்வின்றித் தெளிவாயிருக்கின்றதா ? அம்புகளின் அடிகளால் பீடிக்கப்பட்டசரீரம் தாபமின்றிஇருக்கிறதா ? மனத்திலிருக்கும் துன்பத்தைவிடச் சரீரத்திலுள்ள துக்கம் மிகப்பெரிதாயிற்றே. ஓ ! பிரபுவே ! எப்பொழுதும் தர்மத்தைஅனுஷ்டித்த தந்தையான சந்தனுவிடமிருந்து வரம்பெற்றகாரணத்தால் மரணமானது உமதிஷ்டப்படி

இருக்குமென்ற பெருமையுள்ளவராயிருக்கிறீர். ஆகிலும், இந்தச் சரீரவேதனையை விலக்க இது காரணமாகாதே. சரீரத்திலிருக்கும் சல்பம் மிக நுட்பமாயினும் பீடையையுண்டுபண்ணும். சரக்கூட்டங்களால் சரீர முழுவதும்நிறைந்த உமதுவேதனை எவ்விதமிராது? பாரதரே! தேவர்களுக்கும் வேண்டியஹிதத்தை உபதேசிக்கவல்லவரான உமக்குப் பிராணிகளின் ஜனனமரணங்களைப்பற்றிப் பிறர் சொல்லவேண்டியதில்லையே. புருஷஶ்ரேஷ்டரே! சென்றதும் நிகழ்கின்றதும் வருவதுமானயாவும், ஞானத்தில்பெரியவரானஉமக்குக் கையிலுள்ள கனிபோலாகும். பிராணிகளின் இல்லறவாழ்க்கையும் அதிலுண்டாகும் தர்மத்தின்பயனும் உமக்குத் தெரிந்திருக்கின்றன. பிராஜ்ஞர்களுள் சிறந்தவரே! நீர் தர்மரூபமானநிதியாகிறீர். பெரிய ராஜ்யத்திலிருந்து ஒருவிதமான பிணியுமின்றி நிறைந்த அங்கங்களுடன் ஆயிரம்ஸ்திரீகளால் சூழப்பெற்றிருந்தும், நீர்ஒருவர் 'ஊர்த்வரேதஸ்' என்று நான் அறிகிறேன். ஸத்தியமானதர்மமுள்ளவரும் பெரியசக்தியுள்ளவரும் சூரரும் தர்மத்தைவிட்டுவிலகாதவரும் சரதல்பத்தில் படுத்தவரும் சந்தனுவின்புத்திரருமான பீஷ்மர் ஒருவரைத்தவிர மூவுலகங்களிலும் தபோபலத்தால் மிருத்யுவைஜயிக்கத் தக்க அரசன் உண்டானதாகக் கேட்டதில்லை. ஐய! ஸத்தியத்திலும் தவத்திலும் தானத்திலும் வேதத்திலும் யாகத்திலும் தனுர்வேதத்திலும் தர்க்கசாஸ்திரத்திலும் உம்மைப்போன்ற அறம்பொருள் இன்பங்களுக்குக் காரணரான ஒருவரை நான் இதுவரையில் கேட்டதில்லை. கொடுமையற்றவரும் பரிசுத்தரும் அடக்கமுள்ளவரும் ஸர்வப்பிராணிகளுக்கும் ஹிதஞ்செய்பவரும் மஹாரதருமான உமக்குச் சரியான ஒருமனிதனையுங் கேட்டதில்லை. தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள் ஆகிய இவர்கள்யாவரையும் ஓரேரதத்தோடு நீர் ஒருவராய் ஜயிக்கச் சக்திபெற்றவரென்பதிற் சந்தேகமில்லை. ஓ! மஹாபாஹுவான பீஷ்மரே! இந்திரனுக்கொப்பான அந்த நீர் வஸுக்களென்னும் எட்டுத்தேவர்களின் அம்சங்களும் ஒன்றுசேர்ந்து ஒன்பதாவதுவஸுவாக உண்டானவரென்றும், குணங்களால் யாவருக்கும் உத்தமரென்றும் பிராம்மணர்கள் உம்மை எப்போதும் சொல்லுகிறார்கள். ஓ! புருஷஶ்ரேஷ்டரே! நானும் உம்மை நேரிலே அறிந்திருக்கிறேன். புருஷோத்தமரானநீர் தேவர்களிலும் சக்தியிலுல்பிரஸித்தரானவர். நரேந்திரரே! பூமியிலுள்ளமனிதர்களில் குணங்களால் உமக்கொப்பான புருஷனை எங்கும் நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. ஓ! ராஜரே! நீர் எல்லாக்குணங்களாலும் தேவர்களுக்கும் மேலானவர்.

நீர் உமது தபோபலத்தால் ஸ்தாவரஜங்கமமான உலகங்களையும் படைக்கச் சக்தியுள்ளவர். உத்தமமான குணங்களால் உமக்குவேண்டிய உத்தம உலகங்களை அடைவது உமக்கு மிக எளிதாகும். ஆகையால், ஓ! பீஷ்மரே! ஞாதிகளின்நாசத்தால் பரிதபிப்பவரும் பாண்டுவின் மூத்தகுமாரருமான இந்தத் தர்மபுத்திரரின் சோகத்தை நீர் விலக்கவேண்டும். நான்கு ஜாதிக்குமுள்ள தர்மங்களும் நான்கு ஆஸ்ரமத்திற்குமுள்ள தர்மங்களும் தர்மார்த்தகாம மோகூஷங்களாகிய இந்நான்கு வித்தைகளிலுமுள்ள தர்மங்களும் வைதிகர்களுக்குள்ள. விசேஷ தர்மங்களும் யோகம் ஸாங்கியம் இவைகளைச்சேர்ந்த பழைய தர்மங்களும் ஆகிய எல்லாம் உமக்கு நன்றுகத்தெரியும். ஓ! காங்கேயரே! நான்கு ஜாதிகளுக்குரியதும் விரோதமில்லாததும் அனுஷ்டிக்கப்படுவதுமான தர்மநூல் உரையுடன் உமக்குத் தெரியும். பிரதிலோம ஜாதிகளுக்கும் மிலேச்சர்களுக்குமுரிய தர்மமும் தேச ஜாதிகுலங்களுக்குரிய தர்மலகூஷணமும் வேதத்தில்சொல்லியதும் பெரியோர்களால் சொல்லப்பட்டதுமாகிய யாவும் உமக்கு எப்போதும் நன்றுகத் தெரியும். பிரவிருத்தி நிவிருத்தியென்னும் இவ்விருவழிகளும் உமக்குத்தெரியும். இதிஹாஸபுராணங்களின் தர்மமும் தர்மசாஸ்திரமுமாகிய யாவும்குறைவின்றி உமதுமனத்தில்நிலைபெற்றிருக்கின்றன. புருஷஸ்ரேஷ்டரே! இவ்வுலகில் சந்தேகப்படும் விஷயங்களனைத்தையும் அந்தச் சந்தேகமறத் தெளிவாக உபதேசிக்க உம்மைவிட உலகில் ஒருவருமில்லை. அரசரே! அறிவிற்சிறந்த அந்த நீர் யுதிஷ்டிரரின் மனத்திலுதித்த சோகத்தை ஞானத்தால் விலக்கவேண்டும். சிறந்தஞானம் நிரம்பிய உம்மைப்போன்ற பெரியோர்கள்தாம் மோகமுள்ள ஜனங்களைச் சமாதானஞ்செய்ய வல்லவர்கள்" என்றுசொன்னார்.

ஐம்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் கிருஷ்ணனைப் புகழ்ந்ததும், கிருஷ்ணன் தர்மோபதேசம் செய்யும்படி கூறியதும்.)

எல்லாமறிந்தவரான வாஸுதேவருடைய வசனத்தைக்கேட்டு, பீஷ்மர், கைகூப்பி முகத்தைச் சிறிதுதூக்கிக்கொண்டு சொல்லத் தொடங்கினர்.

"உலகங்களுடைய பிறப்பு இறப்புக்களுக்குக் காரணரான ஸ்ரீகிருஷ்ணபகவானே! ஹ்ருஷீகேசரே! உமக்கு நமஸ்காரம். ஒருவ

ராலும் ஜயிக்கப்படாதநீரே உலகத்திற்குக் கர்த்தரும் ஸம்ஹாரஞ் செய்பவருமாயிருக்கிறீர். ஐம்பெரும்பூதங்கட்கும் அப்புறத்துள்ள வரும் மோக்ஷபதத்திலிருப்பவரும் உலகங்களைப்படைப்பவரும் பரி பாலிப்பவரும் உலகரூபியாயிருப்பவருமான பகவானே! உமக்கு நமஸ்காரம். எல்லாவற்றிற்கும் இருப்பிடமும் யோகிகளுக்கு ஈசரு மான பகவானே! மூன்றுலகங்களிலும் மூன்றுகாலங்களிலுமிருக்கும் உமக்கு நமஸ்காரம். மூன்றுலகங்களுக்கும் அப்புறமிருக்கும் உமக்கு நமஸ்காரம். புருஷஸ்ரேஷ்டரே! என்னைப்பற்றிய விருத் தாந்தத்தை நீர் சொல்லும்காரணத்தால், மூன்றுகாலங்களிலும் விளங்கும் திவ்யமான உமது பிரபாவங்கள் எனக்குத் தெரியவரு கின்றன. புராதனமான உமதுரூபத்தை உள்ளபடி நான் பார்க் கிறேன். அளவற்றதேஜஸுள்ள [1]ஏழுவிதமான வாயுமார்க்கங் களும் உம்மால் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. உமது தலையால் தேவ லோகமும் கால்களால் பூமியும் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. திக்குக் கள் உமது கைகளும், ஸூர்யன் கண்ணும், சுக்ரர் வீரியமுமாக நிலை பெற்றிருக்கிறார்கள். காயாம்பூப் போன்ற அழகுள்ளதும் அழிவற்ற தும் பீதாம்பரந்தரித்ததுமான உமதுசரீரத்தை மின்னலுடன் விளங் கும் மேகத்தைப்போலப் பார்க்கிறேன். தேவர்களிற்சிறந்ததாம ரைக் கண்ணரே! பக்தியுடன் உம்மைச்சரணமடைந்து நற்கதியை விரும்பும் எனக்கு நீர் க்ஷேமத்தைச் சிந்திக்கவேண்டும்" என்று சொன்னர்.

வாஸுதேவர், "புருஷர்களிற்சிறந்தராஜரே! என்னிடத்தில் உமக்கு உத்தமமான பக்தியிருப்பதால்தான் என்திவ்யரூபம் உமக்குக் காண்பிக்கப்பட்டது. ஓ! ராஜஸ்ரேஷ்டரே! பக்தியில்லாதவனுக் கும் பக்தியிருந்தும் நேராகச்செல்லாதவனுக்கும் பக்தியும்நேர்மையு மிருந்தும் அடக்கமற்றவனுக்கும் நான் தரிசனம்கொடுப்பதில்லை. ஓ! பாரதரான பீஷ்மரே! நீரோ என்னிடம் எப்பொழுதும் பக்திபுள்ள வரும், நேர்மையுள்ளவரும், அடக்கம் தவம் ஸத்தியம் தானம் இவைகளில் சிறந்தவரும், பரிசுத்தருமானதுபற்றி என்னைக்காணத் தக்க யோக்யதை பெற்றிருக்கிறீர். அரசரே! உமதுதவத்தால் திரும் பவும் ஸம்ஸாரத்திற்குவரத்தகாத உத்தமஉலகங்கள் உமதுவரவை எதிர்பார்க்கின்றன. ஓ! குருஸ்ரேஷ்டரே! உமதுஜீவகாலம் இன்று முதல் இன்னும் [2]மூப்பதுநாட்களிருக்கின்றன. அவை நூறுநாட்களைக்

---

1 ஸபாபர்வம் உஎ-வது பக்கத்தின் குறிப்பிற் காண்க.

2 பீஷ்மர், தாம் படுத்ததுமுதல் ஐம்பத்தெட்டுநாளென்று சொல் லப்போகிறார். அவைகளில் இதுவரைசென்ற நாட்கள் இருபத்தெட்டு;

குச் சமமானவை. அதன்பின், இந்தச் சரீரத்தைவிட்டு நீர் உமது நற் கர்மங்களின் பயனை அடைந்து விளங்கப்போகிறீர். ஸூர்யன் வடக்கு நோக்கிச் செல்லும்காலத்தை எதிர்பார்க்கும் உம்மை ஜ்வலிக்கும் அக் கினிகளுக்கொப்பான வஸுக்களென்னும் இந்தத் தேவர்கள் யாவரும் மறைந்துகொண்டு விமானத்துடன் எதிர்பார்க்கிறார்கள். ஓ! புருஷ ஸ்ரேஷ்டரே! காலனுக்குள்ளாகும் இவ்வுலகைக் கணக்கிடும் ஸூர்ய பகவான் வடதிசை சென்றவுடன், அறிஞர்களுக்குரிய அழிவற்ற உலகங்களை அடையப்போகிறீர். ஓ! பீஷ்மரே! நீர் மேலுலகம் சென்றதும், உலகத்தில் ஞானங்களெல்லாம் மிகக் குறைவுள்ளன வாகும். அந்தக் காரணம்பற்றியே யாவரும் தருமத்தைப் பகுத்தறி யக்கருதி உமக்கு அருகில் வந்திருக்கிறார்கள். ஆகையால், உண்மை யான எண்ணமுள்ளவரும் ஞாதிகள் இறந்தசோகத்தால் அறிவுமாறுத லுற்றவருமான யுதிஷ்டிரருடைய சோகத்தை விலக்கத்தக்க அறம் பொருள் ஞானங்களடங்கிய உண்மையான வசனத்தை உபதேசஞ் செய்யும்" என்றுசொன்னர்.

ஐம்பத்தோராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் தனக்குத்தச் சக்தியில்லையென்றதும், அவருக்குக் கிருஷ்ணன் அனுக்ரஹஞ்செய்ததும், வந்தவர்கள் தம்தம் இடம் சென்றதும்.)

பிறகு, அறம்பொருள்களடங்கியதும் உலகத்திற்கு நன்மை விளைப்பதுமான ஸ்ரீகிருஷ்ணனுடைய அந்த வாக்கியத்தைக்கேட்டுப் பீஷ்மர் அஞ்சலிசெய்துகொண்டு கிருஷ்ணனைநோக்கி மறுமொழி சொல்லத்தொடங்கினர். "ஓ! மஹாபாஹுவான உலகநாத! அச் சுத! நாராயண! ஓ! சிவனே! உமது வாக்கியத்தைக்கேட்டு சந்தே ஹத்தில் மூழ்கினவனுகிறேன். வாக்குக்குப்பதியே! உமது ஸந்நிதி யில் நான் என்ன சொல்லப்போகிறேன்? வாக்கால் சொல்லத்தகுந்த யாவும் உமது வாக்கானவேதத்தில் அடங்கியிருக்கின்றன. இவ்வுலகி லும் புத்திமானுக்குப் பிரியமான தேவலோகத்திலும் செய்யப்பட்ட

விவரம் வருமாறு:—பீஷ்மர் படுத்தபின்பு யுத்தம் நடந்தநாள் எட்டு; பிறகு துர்யோதனன் இறந்த ஆசௌசதினம் பதிறை; இருபத்தைந் தாவதுநாள் ஸ்ராத்தம்; இருபத்தாறுவதுநாள் பட்டணப்ரவேசம்; இருபத்தேழாவதுதினம் பட்டாபிஷேகம்; இருபத்தெட்டாவதுதினம் பிரஜைகளை ஆச்வாஸப்படுத்தியது; இருபத்தொன்பதாவதுநாள் பீஷ்மரிடம் வந்தது; அன்றுமுதல் மிச்சம் மூப்பதுநாள் என்றறிக.

தும் செய்யப்படுகிறதும் செய்யவேண்டியதுமான யாவும் உம்மிட மிருந்து வெளியாயின. உமது முன்னிலையில் அறம் பொருள் இன்பம் வீடுகளுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறவன், தேவராஜனான இந்திரனுக்குமுன் தேவலோகத்தைப்பற்றிச் சொல்லுகிறவனுக்கு ஒப்பாவான். ஓ! மதுஸூதனரே! என்மனமோ அம்புகளின் அடிகளால் துன்பப்பட்டிருக்கிறது. என் அங்கங்கள் கஷ்டப்படுகின்றன. புத்தியானது தெளிவடையவில்லை. எவ்வித விஷயத்தைச்சொல்லவும் என்புத்தியில் தோன்றும்சக்தி சிறிதும் இல்லை. கோவிந்தரே! விஷத்தீக்கொப்பான சரங்களால் பீடிக்கப்படும் என்னுடைய பலமெல்லாம் போயிற்று. பிராணன்கள் வெளியிற்செல்ல வேகத்துடனிருக்கின்றன. உயிர்நிலையான அங்கங்கள் பரிதபிக்கின்றன. என்புத்தி மயக்கமடைகிறது. பலக்குறைவால் எனதுவாக்கு தடைப்படுகிறது. அப்படிப்பட்ட நான் எவ்விதம் பேச உற்சாகமடைவேன்? தசார்ஹரின் குலத்தை வளர்த்த பிரபுவே! நீர் என்னை நன்றாக அனுக்கிரஹிக்கவேண்டும். ஓ! அச்சுதரே! நான் ஒன்றும் சொல்லாததைப்பற்றி க்ஷமிக்கவேண்டும். சிறந்த கைகளையுடையவரே! பிருகஸ்பதியும் உமது ஸந்நிதியில் பேசவல்லவரல்லர். இந்தச்சமயம் பூமியென்றும் ஆகாயமென்றும் திக்கென்றும் பகுத்தறியச் சக்தியுமில்லாத நான் உமது பலத்தால்மாத்திரம் இவ்விதமிருக்கிறேன். ஓ! மதுஸூதனரே! ஆகையால், எல்லா வேதங்களுக்கும் வேதமாய்விளங்கும் நீரே யுதிஷ்டிரனுக்கு வேண்டிய ஹிதத்தைச் சொல்லவேண்டுகிறேன். உலகங்களுக்குக் கர்த்தரும் சாஸ்வதருமான உமக்குமுன் என்போன்ற ஒருவன், குருவின்முன் சிஷ்யன்போல, எங்ஙனம் பேசக்கூடும்?" என்றுசொன்னர்.

கிருஷ்ணன், "கௌரவர்களிற் சிறந்தவரும் யாவுமறிந்தவரும் வீர்யமும் ஸத்வகுணமும் மிகமேலாக நிலைபெற்றவருமான உமக்கு இவ்விதமான வசனம் யுக்தமானதுதான். ஓ! காங்கேயரே! பிரபுவான பீஷ்மரே! அம்புகளின் அடிகளால் பீடையிருப்பதாக என்னிடம்சொன்னதற்கு இதோ நான் அனுக்ரஹித்து உமக்கு வரம்தருகிறேன்; பெற்றுக்கொள்ளும். கங்காபுத்ரரே! உமது சரீரத்திலுள்ள சோர்வும் நோயும் எரிச்சலும் மயக்கமும் மற்றுமுள்ள பீடைகளும் விலகுவதுடன் உமக்குப் பசிதாகமும் உண்டாகாமலிருக்கட்டும். குற்றமற்றவரே! உமதுபுத்திக்குச் சிறிதும் களைப்புண்டாகாமல் வித்தையெல்லாவும் தெளிந்துவிளங்கட்டும். பீஷ்மரே! மேகங்களால் விடுபட்டசந்திரமண்டலம்போல ரஜஸ் தமஸ் என்னும் குணங்களால்விடு

பட்ட உம்மது மனம் எப்பொழுதும் ஸத்வகுணமுள்ளதாகவே இருக்கட்டும். அறம்பொருள்களைப்பற்றி எவ்வித விஷயத்தை நீர் ஆலோசித்தாலும் அவைகளில் உம்முடைபுத்தி கூர்மையாகச்செல்லட்டும். ஒப்பில்லாத சக்தியுள்ள அரசப்புலியே! ஞானமென்னும் திவ்யக்கண்ணை அடைந்து இவ்வுலகிலுள்ள நான்குவிதப்ராணிக் கூட்டங்களையும் பார்க்கப்போகிறீர். ஓ! பீஷ்மரே! அழுக்கின்றித்தெளிந்த ஜலத்தில் மீனைப்போல ஞானக்கண்ணுடன்கூடின நீர் நான்குவிதமான ஜனக்கூட்டங்களையும் உள்ளபடி பார்க்கப்போகிறீர்" என்று சொன்னர்.

இவ்விதம் சொல்லும்காலத்தில், வியாஸர் முதலிய மஹரிஷிகளனைவரும் ரிக், யஜுஸ், ஸாமம் என்னும் வேதவாக்கியங்களால் ஸ்ரீகிருஷ்ணபகவானைப் போற்றினர்கள். எல்லாக்காலங்களிலும் உண்டாகக்கூடிய திவ்யமான புஷ்பங்களின் வர்ஷம், பாண்டவர்களும் பீஷ்மரும் ஸ்ரீகிருஷ்ணபகவானும் இருக்குமிடத்தில், ஆகாயத்திலிருந்து பொழிந்தது. வாத்தியங்கள் யாவும் வாசிக்கப்பட்டன. அப்ஸரஸுகளின் கூட்டங்கள் ஆனந்தகானம் செய்தன. நல்லமணமுள்ளதும் பரிசுத்தமும்மங்களமுமான காற்று இனிமையாக வீசிற்று. திக்குக்கள் தெளிந்து அழகாயிருந்தன. மிருகங்களும் பக்ஷிகளும் சாந்தமான மங்களத்வனியை வெளியிட்டன. எவ்வித வஸ்துவும் அந்தச்சமயத்தில்விரும்பத்தகாதனவும் அமங்களமுமாகக் காணப்படவில்லை. பிறகு, ஒரு முகூர்த்தத்தில் ஆயிரங்கிரணமுள்ள ஸூர்யபகவான் ஏகாந்தமானவிடத்தில் அரண்யத்தை எரிப்பவர்போல மேற்றிசையில்காணப்பட்டார். உடனே, மகரிஷிகள் யாவரும் எழுந்து ஸ்ரீகிருஷ்ணபகவானையும் பீஷ்மரையும் யுதிஷ்டிரராஜரையும் விடைகேட்டுக்கொண்டார்கள். பிறகு, பாண்டவர்களோடுகூடிய ஸ்ரீகிருஷ்ணபகவானும் ஸாத்யகியும் ஸஞ்சயனும் சாரத்வதரான கிருபரும் மஹரிஷிகளை நமஸ்கரித்தார்கள். இவ்விதம் பூஜிக்கப்பட்டவர்களும் தர்மத்தில் விருப்பமுள்ளவர்களுமான மஹரிஷிகள் யாவரும் நாளை இங்கு வந்துசேருவோம் என்று சொல்லிக்கொண்டு இஷ்டப்படி வேகமாகச் சென்றார்கள்.

அங்ஙனமே, ஸ்ரீகிருஷ்ணபகவானும் பாண்டவர்களும் பீஷ்மரிடம் விடைபெற்றுக்கொண்டு பிரதக்ஷிணமாகத் திரும்பி அழகான தேர்களில் ஏறினர்கள். பிறகு, ஸுவர்ணமயமாயும் அழகாயுமிருக்கிற [1] கூபரமென்னும் அங்கத்தையுடைய தேர்களும் மலைகள்போன்ற மதமுள்ள யானைகளும் கருடன்போல வேகமாகச்செல்லும் குதிரைகளும் கையில் வில் முதலியவற்றையேந்திய காலாட்களும் சேர்ந்த

[1] நுகத்தைத் தாங்கும் ஓர் உறுப்பு.

சேனையானது, ரிக்ஷவான் என்னும் மலைக்கு முன்னும் பின்னும் நர்மதையென்னும் நதிபோல, ரதங்களுக்கு முன்னும் பின்னும் வேகமாகப் பெருகிச்சென்றது. அவ்விதம் சென்ற அச்சேனையை, சந்தோஷப்படுத்துவதும் ஸௌர்ய வெப்பத்தால் ரஸம்குறைந்த ஓஷதிகளைத் திரும்பவும் அவைகளின் குணத்துடன் சேர்த்து வைப்பதுமான பெருமைதங்கிய சந்திரமண்டலம் கிழக்குத்திக்கில் உதித்தது. பிறகு, அமராவதிக்குச் சமமான காந்தியுள்ள பட்டணஞ்சென்று அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானும் பாண்டவர்கள் யாவரும், சிரமமுற்றசிங்கங்கள் குகைகளைஅடைவதுபோல, தந்தம் அரண்மனைகளை அடைந்தார்கள்.

ஐம்பத்திரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். தொடர்ச்சி.)

(கிருஷ்ணபகவான் யுதிஷ்டிரர் முதலியோர் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பீஷ்மரிடம் சென்றது.)

பிறகு, வீடுசென்று சயனித்து நித்திரைசெய்த ஸ்ரீகிருஷ்ணபகவான் பொழுதுவிடிய ஒரு ஜாமமிருக்கையில் விழித்துக்கொண்டார். அந்த மாதவர் தியானநிஷ்டையிலிருந்து அறியவேண்டியவற்றையெல்லாம் அறிந்தபின் ஸநாதனமான பிரம்மத்தைத் தியானஞ் செய்தார். நல்ல கல்விமான்களும் இனிமையானகுரலுள்ளவர்களும் ஸ்தோத்திரங்களையும் புராணங்களையும் அறிந்தவர்களுமான ஸூதர்கள் உலகங்களுக்குக் கர்த்தரும் பிரஜைகளுக்கு ஈசுவரருமான வாஸுதேவரைத் துதித்தார்கள். சிலபாடகர்கள் கைத்தாளத்துடன் பாடினர்கள். சிலர் சங்கம் மிருதங்கம் முதலிய பல வாத்தியங்களை வாசித்தார்கள். வீணை வேணு பணவமுதலிய வாத்தியங்களின் மிக இனிமையான த்வனியானது மிகுதியாய் ஸ்ரீகிருஷ்ணனுடைய சிரிப்பதுபோன்றவீட்டிற்கேட்கப்பட்டது. பிறகு, யுதிஷ்டிரமஹாராஜாவின் அரண்மனையிலும் மங்களமானவைகளும் வாத்தியங்களாலும் பாட்டுக்களாலும் விரிவானவைகளும் மதுரமானவைகளுமான வாக்குக்கள் ஒங்கிவிளங்கின. பிறகு,எழுந்து ஸ்நானஞ்செய்தவரும் தாசார்ஹரும் சிறந்தகைகளையுடையவருமான அச்சுதர், அஞ்சலியுடன் ரஹஸ்யமாக மந்திரங்களை ஜபித்துப் பின்பு அக்னிகளை ஆஸ்ரயித்து நின்றார். பிறகு, மாதவர் நான்குவேதங்களுமறிந்த ஆயிரம் பிராம்மணர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ஆயிரம் பசுக்களளித்து அவர்

களின் ஆசீர்வாதங்களைப் பெற்றார்; பிறகு, பசுமுதலியமங்களத் திரவியங்களைத்தொட்டு அழுக்கற்ற கண்ணாடியில் தம்மையும் பார்த்த பின் ஸாத்யகியைநோக்கி, 'ஓ! சினியின்புத்திரனே! பெரியதேஜஸ்ஸுள்ளயுதிஷ்டிராராஜர் பீஷ்மரைக்காணஸித்தராயிருக்கிறாரோவென்று அரண்மனைசென்று அறிந்துவா' என்றார். ஸ்ரீகிருஷ்ணபகவானின் வசனத்தைக்கேட்ட ஸாத்யகி வேகமாக யுதிஷ்டிராராஜாவின் அருகிற் சென்று, 'ஓ! ராஜரே! யாவுமறிந்தவாஸுதேவருடையதேர் குதிரை பூட்டி ஸஜ்ஜமாயிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணபகவான் பீஷ்மரிடஞ் செல்ல உங்கள்வரவை எதிர்பார்த்திருக்கிறார். அதிக காந்தியுள்ள தர்மராஜரே! மேல்நடக்கத்தக்க காரியத்தை நீர் யுக்தம்போற்செய்ய வேண்டும்' என்றான். இவ்விதஞ்சொல்லப்பட்ட தர்மபுத்திரரான யுதிஷ்டிரர், 'ஒப்பற்றகாந்தியுள்ள ஓ! அர்ஜுன! எனது சிறந்த ரதம் ஸஜ்ஜமாகட்டும். சேனைகள் கூடவராமல் நாம் மாத்திரம் போவோம். தர்மிஷ்டர்களிற் சிறந்த பீஷ்மருக்குப் பீடையின்றி முன் செல்லும் நமதுபரிஜனங்கள்யாவும் விலகவேண்டும். குந்திபுத்திரனே தனஞ்சய! இன்றுமுதல் பீஷ்மர் மிகவும்ரஹஸ்யமான தத்துவத்தைப் உபதேசிக்கப்போகிறபடியால் விவேகமற்ற ஜனங்கள் அங்கு வராமலிருக்க விரும்புகிறேன்' என்றார். யுதிஷ்டிரருடைய அந்த வசனத்தைக்கேட்டு, நரஸ்ரேஷ்டனும் குந்தி புத்திரனுமான தனஞ்சயன் உடனே சிறந்தரதம் ஸஜ்ஜமாயிருப்பதாக அவரிடம் வந்து தெரிவித்தான். பிறகு, யுதிஷ்டிரர்முதலிய ஐந்துபாண்டவர்களும் ஐந்துபூதங்கள்போல ஒன்றுசேர்ந்து ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய விடுதிசென்றார்கள். மஹாத்மாக்களான பாண்டவர்கள் வருதலும் புத்திமானான ஸ்ரீகிருஷ்ணனும் ஸாத்யகியுடன் தேரிலேறினர். அந்தப் புருஷஸ்ரேஷ்டர்கள் ரதத்திலிருந்து இன்னஇன்ன செய்வதென்று ஸங்கேதம்செய்துகொண்டபின், 'இரவு இனிதாகக் கழிந்ததா' என்று வினவிக்கொண்டு மேகம்போலக் கர்ஜிக்கும் ரதங்களுடன் புறப்பட்டார்கள். ஸ்ரீவாஸுதேவரின் தேர்ப்பாகனான தாருகன் வலாஹகம், மேகபுஷ்பம், சைப்யம், ஸுக்ரீவமென்னும் குதிரைகளைத் தூண்டினான். ராஜரே! தாருகனால் ஏவப்பட்டனவும் பெரிய பலமுள்ளனவுமான வாஸுதேவருடைய குதிரைகள் குளம்பின்முனைகளால் பூமியைப் பறித்துக்கொண்டு ஆகாயத்தை விழுங்குவனபோல அதிவேகமாகச் சென்றன. உடனே, எல்லாத்தர்மங்களுக்கும் இருப்பிடமான குருக்ஷேத்திரம் வந்திறங்கித் தேவர்களுடன் பிரம்மதேவர் விளங்குவதுபோல மஹரிஷிகளுடன் சாதல்

பத்தில் விளங்கும் பீஷ்மரிருக்கும்இடஞ்சென்றார்கள். அங்கு சென்ற ஸ்ரீகிருஷ்ணனும் ஸாத்யகியும் யுதிஷ்டிரரும் பீமஸேனனும் அர்ஜுனனும் இரட்டையரும் ரதத்திலிருந்துஇறங்கித் தமதுவலக்கரங்களைத் தூக்கி அங்குள்ளரிஷிகளைப் பூஜித்தார்கள். நக்ஷத்திரங்களால் சூழப்பட்ட சந்திரன்போல அவர்களால்சூழப்பட்ட யுதிஷ்டிரராஜர் இந்திரன் பிரம்மதேவரிடம் வருவதுபோலப் பீஷ்மரிடம் வந்தார். ஆகாயத்திலிருந்து கீழேவிழுந்த ஆதித்யன்போலச் சரதல்பத்தில் படுத்திருக்கும் பெரியகைகளையுடைய அந்தப்பீஷ்மரை யுதிஷ்டிரராஜர் பயத்தால்நடுக்கமுற்றுக் கண்டனர்" என்றுசொன்னர்.

ஐம்பத்துமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(நாரதர், தர்மபுத்திரர்முதலியோரைப் பார்த்துப் பீஷ்மரிடம் தர்மத்தைப்பற்றி விஜ்ஞாபிக்கும்படி கூறியதும், தர்மபுத்திரர்சொற்படி ஸ்ரீகிருஷ்ணன் பீஷ்மரைப்பார்த்துத் தர்மத்தை உபதேசிக்கும்படி சொல்லியதும்.)

ஜனமேஜயர், "ஓ! மஹரிஷியே! சேனைகளெல்லாம் கொல்லப்பட்டபிறகு, தர்மபுத்தியுள்ளவரும் மஹாபராக்ரமசாலியும் ஸத்யஸந்தரும் மனத்தைஜயித்தவரும் மஹாபாக்யம்பெற்றவரும் சந்தனுகுமாரரும் அழிவற்றவரும் தேவவ்ரதரும் கங்காபுத்ரருமான பீஷ்மர் வீரசயனமான சரதல்பத்தில்படுத்திருக்கவும் புருஷப்புலியான அவரைப் பாண்டவர்கள்வந்து ஆராதிக்கவும் வீரர்களின் ஸமாஜம் சேர்ந்தவுடன் எவ்விதக்கதைகள் நடந்தனவென்பதை எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

"அரசரே! பாரதரே! கௌரவர்களின் பாட்டனரான பீஷ்மர் சரதல்பத்திலிருக்கும்பொழுது, ஸித்திபெற்ற நாரதர்முதலிய ரிஷிகளும், யுதிஷ்டிரர்முதலிய யுத்தத்தில்மிஞ்சின அரசர்களும், திருதராஷ்டிரன், ஸ்ரீகிருஷ்ணபகவான், பீமன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன்ஆகிய இவர்களும் அவரிடம் வந்துசேர்ந்தார்கள். மஹாத்மாக்களான அவர்கள்யாவரும், பூமியில் இறங்கிய ஸூர்யபகவான் போலவிளங்கும் பாரதர்களின்பிதாமஹரானபீஷ்மரைக்கண்டுசற்றுச் சோகமுள்ளவராஞர்கள். பிறகு, திவ்யஞானமுள்ள நாரதர், ஒரு முகூர்த்தநேரம் ஆலோசித்துப் பின் பாண்டவர்களையும் கொல்லப்

பட்டவர்களைத்தவிர மிஞ்சிய அரசர்கள் யாவரையும்நோக்கி, ' அரசர்களே ! காலத்திற்குத்தக்கபடி சொல்லுகிறேன். பீஷ்மரிடம் அறியவேண்டியவைகளையெல்லாம் ப்ரச்னஞ்செய்யலாம். பிராணனைவிடவிருப்பமுள்ள இந்தப் பீஷ்மர் ஸூர்யன்போல அஸ்தமயமடையப் போகிறார். ஆகையால், யாவரும் அவரிடம் வேண்டியதைக்கேளுங்கள். நான்குஜாதிகளுக்குமுள்ள பலவிதமானதர்மங்களனைத்தையும் இவர் அறிகிறார். கிழவரானஇவர் சரீரத்தைவிட்டுப் பரலோகத்தை அடையுமுன்னமே மனத்திலுள்ள ஸந்தேகங்களையெல்லாம் வேகமாகக் கேட்டுத் தெளிந்து கொள்ளுங்கள் ' என்றுசொன்னர். நாரதர் இவ்விதஞ்சொன்னவுடன், அரசர்கள் யாவரும் பீஷ்மரை அடைந்தார்கள். அருகில் சென்றும், அரசர்கள், பீஷ்மரிடம் ப்ரச்னம் பண்ணத் தைர்யமில்லாதவர்களாகி, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடனே, பாண்டுகுமாரரான யுதிஷ்டிரராஜர், ஸ்ரீகிருஷ்ண பகவானை நோக்கி, " ஓ ! தேவகிபுத்ரரே ! பிதாமஹரிடம் பிரச்னஞ்செய்ய உம்மைத்தவிர வேறு எவரும் இங்கு சக்தியுள்ளவரல்லர். மதுவைக்கொன்றவரும் யதுக்களில் சிறந்தவருமான ஐயா ! இங்குள்ள எங்கள்யாவருக்கும் உத்தமரும் எல்லாத் தருமமும் தெரிந்தவருமான நீர் முதலில் பிதாமஹரிடம் பேசவேண்டும் " என்று சொன்னர்.

யுதிஷ்டிரரால் இப்படிச் சொல்லப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவான், அப்போது தடுக்கத்தகாதபடி பீஷ்மரெதிரில் சென்று, " ஓ ! ராஜஸ்ரேஷ்டரே! ராத்திரிகாலம் உமக்கு ஸுகமாகச் சென்றதா ? நன்றுகத் தெளிந்து விளங்கும் புத்தி உமக்கு உண்டாயிற்று ? குற்றமற்றவரே ! ஞானங்கள்யாவும் உமது மனத்தில் தோன்றுகின்றனவா ? உமதுமனம் சோர்வின்றி உற்சாகமுள்ளதாயிருக்கிறதா ? " என்று விணவினர். பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். " விருஷ்ணிகுலத்திலுதித்தவரே! உமது அனுக்கிரஹத்தால் என் சரீரத்திலுள்ள எரிச்சலும் ச்ரமமும் மயக்கமும் வாட்டமும் தளர்ச்சியும் நோயுமாகியயாவும் உடனே விலகின. உத்தமமான ஒளியுள்ளவரே ! சென்றது நிகழ்கின்றது வருவதுயாவற்றையும் கையிலுள்ள கனியைப்போலப் பார்க்கிறேன். அழிவற்றவரே ! வேதத்திற் சொல்லிய அக்நிஹோத்ரமுதலிய தருமங்களும் வேதாந்தத்தில் சொல்லிய சமம் தமமுதலிய தர்மங்களும் பெரியோர்களால் சொல்லப்படும் தர்மமுமாகியயாவும் நீர் வரமளித்தபடி என் மனத்தில் பிரகாசிக்கின்றன. ஜனர்த்தனரே ! கேசவரே ! தேசம் ஜாதி குலம் இவைகளின் தர்மங்களும் நான்கு ஆச்ரமங்களுக்குமுள்ள தர்மங்களும் ராஜதர்மங்களுமாகிய எல்லா

வற்றையும் நன்முக அறிகிறேன். ஜனார்த்தனரே! எந்தத்தர்மத்தில் எந்தப்பிரிவைக் கேட்கிறார்களோ அதையெல்லாம் சொல்லுகிறேன். உம்முடைய அனுக்ரஹத்தால் சுபமானபுத்தி என்மனத்தில் உண்டாயிருக்கிறது. உம்முடைய மூர்த்தியைச் சிந்தித்த புண்ணியத்தால் நான் திரும்பவும் இளமைப்பருவத்திலிருப்பவன்போல ஆகிறேன். ஓ! ஜனார்த்தனரே! உம்முடைய பிரஸாதத்தால் நற்கதியைச்சொல்ல வல்லவனுயிருக்கிறேன். ஆனல், நீர் நேரில் யுதிஷ்டிரனுக்குத் தர்மோபதேசம் செய்யாததற்கு யாதுகாரணம்? மாதவரே! இது விஷயத்தில் உம்முடைய உத்தேசம் என்னவென்பதை விரைவாகச் சொல்ல வேண்டுகிறேன்" என்று சொன்னர்.

கிருஷ்ணபகவான் சொல்லத்தொடங்கினர். "ஓ! கௌரவரே! கீர்த்திக்கும் ஸ்ரேயஸுக்கும் நானே மூலமென்று தெரிந்துகொள்ளும். உத்தமமும் அதமமுமான வஸ்துக்களியாவும் என்னல் உண்டுபண்ணப்படுகின்றன. சந்திரன் குளிர்ந்த கிரணங்களுள்ளவனென்றல் ஆச்சர்யப்படும் மனிதன் உலகத்தில் யாராவது உண்டா? அதுபோல எனக்கு உலகம்நிறைந்த கீர்த்தியுண்டென்பது எவனுக்கு ஆச்சர்யமாகும்? ஆகையால், பெரிய சோபையுள்ள உமக்கு (இன்னும்) அதிகமான கீர்த்தியுண்டாகக்கருதி விஸ்தாரமான புத்தியை உமக்குக் கொடுத்தேன். அரசஸ்ரேஷ்டரான பீஷ்மரே! இந்தப்பூமி நிலைபெற்றிருக்குங்காலம் வரையில் உம்முடைய கீர்த்தி அழிவற்றதாகி உலகங்களில் பரவி எங்கும் ஸஞ்சரிக்கப்போகிறது. பாண்டவரின் பிரம்மணங்களுக்கு நீர் அளிக்கும் விடையாவும் வேத வசனம்போலப் பூதலத்தில் உறுதியாயிருக்கப் போகின்றன. உமது வசனத்தைப் பிரமாணமாகக்கொண்டு தன்மனத்தால் தன்னை அறியும் மனிதன் சரீரஞ் சென்றபின் எல்லாப் புண்ணியங்களின் பயனையும் அனுபவிப்பான். ஓ! பீஷ்மரே! இவ்வாறு உம்முடைய கீர்த்தி மிகப்பெருமையாக உலகத்தில் பரவவேண்டி நான் உமக்குத் திவ்ய ஜ்ஞானத்தைக் கொடுத்தேன். பூதலத்தில் மனிதன் கீர்த்தி விளங்குங்காலம்வரையில் அவன்பெருமை அழிவற்றதாயிருப்பது நிச்சயம். யுத்தத்தில் மிச்சமான அரசர்கள் யாவரும் பலதர்மங்களையும் கேட்க விருப்பத்துடன் உம்மைச்சுற்றி நான்குபுறத்திலும் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீர் உபதேசஞ் செய்யும். நீர் பிராயத்தில் பெரியவரும் கல்வியும் நன்னடையுமுள்ளவரும் க்ஷத்ரியதர்மங்களும் மற்றுமுள்ள தர்மங்களுமாகிய எல்லாவற்றிலும் ஸமர்த்தருமாயிருக்கிறீர். உமது பிறப்புமுதல் பாபமென்பது சிறிதும் உம்மிடம் இருந்ததைக் காணேன். அரசர்கள் அனைவரும்

உம்மை எல்லாத்தர்மங்களையும் அறிந்தவரென்று அறிகிறார்கள். அரசரே! தகப்பன் புத்திரர்களுக்கு உபதேசிப்பதுபோல நீர் அவர்களுக்கு நல்ல நீதியை உபதேசிக்கவேண்டும். மஹரிஷிகளையும் தேவர்களையும் எப்பொழுதும் உபாஸித்த நீர் இவர்களுக்கு இந்தத் தருமங்களை மிச்சமின்றி அவசியம் உபதேசிக்கவேண்டும். தருமத்தைத் தெரிந்துகொள்ள விருப்பத்துடன் கேட்பவர்களுக்குக் கேட்கப்பட்டவனை தெரிந்தவன் தர்மத்தை உபதேசிக்கவேண்டியது கடமையாகுமென்பது பெரியோர்களின் கருத்து. பிரபுவே! அவ்விதம் உபதேசியாவிட்டால் கொடுமையான தோஷம் உண்டாகும். ஆகையால், வித்வானை பரதஸ்ரேஷ்டரே! தெரிந்துகொள்ளும்விருப்பத்துடன், புத்திரர்களாலும் பௌத்திரர்களாலும் கேட்கப்பட்ட ஸநாதனதர்மங்களை அவர்களுக்கு உபதேசஞ்செய்யும்" என்று சொன்னர்.

ஐம்பத்துநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் தர்மபுத்திரரைக் கொண்டாடியதும், ஸ்ரீகிருஷ்ணன் தர்மபுத்திரர் நாணுவதாகக்கூற, பீஷ்மர் க்ஷத்திரியன்யுத்தத்தில் கொல்லுதல் தருமமென்று ஸமாதானஞ் சொல்லியதும், தர்மபுத்திரர் பீஷ்மரை வணங்கியதும்.)

குருவம்சத்திலுதித்த மஹாதேஜஸ்ஸுள்ள பீஷ்மர் சொல்லத் தொடங்கினர். "ஓ! கோவிந்தரே! நீர் ஸர்வப்பிராணிகளினுள்ளுமிருக்கும் சாச்வதமான ஆத்மாவாகிறீர். உம்முடைய அனுக்ரஹத்தால் என்வாக்கும் மனமும் உறுதியாயிருக்கின்றன. இப்போது தர்மங்களைச்சொல்லத் தொடங்குகிறேன். தருமபுத்தியுள்ள யுதிஷ்டிரன் என்னிடம் தர்மங்களைக்கேட்பாரில் நான் மிக்க சந்தோஷத்துடன் அவைகளெல்லாவற்றையும் சொல்லுகிறேன். தருமபுத்தியுள்ள மஹாத்மாவான எவன் அரசனுயிருப்பதைஅறிந்து மஹரிஷிகள் யாவரும் மிகக்களிக்கிறார்களோ அந்த யுதிஷ்டிரன் என்னைக் கேட்கட்டும். தருமங்களைச்செய்து உலகத்தில் விளங்கும் கீர்த்திபெற்ற கௌரவர்களியாவரிலும் எவனுக்குச் சமமாய் ஒருவருமில்லையோ அந்தயுதிஷ்டிரன் என்னை ப்ரச்னம்பண்ணட்டும். தைரியமும் பொறுமையும் அடக்கமும் பிரம்மசர்யமும் தர்மமும் பராக்ரமமும் பெருமையுமாகிய இக்குணங்கள் எப்பொழுதும் எவனிடம் நிலைபெற்றிருக்கின்றனவோ அந்த யுதிஷ்டிரன் என்னைக் கேட்கட்டும்.

அதிதிகள், அடுத்தவர்கள், ஸம்பந்திகள், வேலைக்காரர்கள் ஆகிய இவர்களை மிகவும்பெருமையுடன் ஆதரித்துவரும் யுதிஷ்டிரன்னென்ன வினவட்டும். ஸத்யம், தானம், தவம், சௌர்யம், பொறுமை, சுறு சுறுப்பு, பரபரப்பில்லாமை ஆகிய இவைகள்யாவும் யாரிடம்கூடி விளங்குகின்றனவோ அந்த யுதிஷ்டிரன் என்னைக்கேட்கட்டும். ஆசையாலும் அவஸரத்தாலும் பயத்தாலும் பொருள்கிடைக்கும் காரணத்தாலும் அதருமத்தினிடம் அணுகாத தருமபுத்தியுள்ள யுதிஷ்டிரன் என்னைக் கேட்கட்டும். அதிதிகளிடம் அன்புள்ளவனும் ஸாதுக்களிடம் நித்தியதானமிடுபவனும் ஸத்தியம், பொறுமை, ஞானம், யாகம், அத்தியயனம் மற்றுமுள்ள தருமமுமாகிய இவை களில் கூணைமும் தவறுமல் நிலைத்தவனும் பொறுமையுள்ளவனும் பெரியோர்களிடமிருந்து ரஹஸ்யமான தத்துவங்களைக் கேட்டவனு மான யுதிஷ்டிரன் என்னைக் கேட்கவேண்டும்" என்றுசொன்னர். ஸ்ரீகிருஷ்ணபகவான், "ஓ! ராஜரே! யுதிஷ்டிரர் மிக்க வெட்கத்தா லும் சாபம்வருமென்ற பயத்தாலும் உமது அருகில் நெருங்காமலிருக் கிறர். உலகத்திற்கு அரசரான யுதிஷ்டிரர், உலகத்தை நாசஞ்செய்த காரணத்தாலும், பூஜிக்கத்தக்க பெரியோர்களையும் மரியாதைசெய்யத் தக்க ஸம்பந்திகளையும் பந்துக்களையும் ரக்ஷிக்கத்தக்க பக்தர்களையும் பூஜிக்கத்தக்க ஆசார்யர்களையும் பாணங்களால் அடித்தகாரணத்தா லும் தமக்குச் சாபம் நேரிடுமோவெனப்பயந்து உமது ஸமீபத்தில் வராமலிருக்கிறர்" என்றுசொன்னர்.

(அதனைக்கேட்ட) பீஷ்மர், "கிருஷ்ண! தானமும் அத்தியயன மும் தவமும் பிராம்மணர்களுக்குத் தருமமாவதுபோல க்ஷத்திரியர் களுக்கு யுத்தத்தில் [1] சரீரத்தைவிடுவது தருமமாகும். தந்தையும் பாட்டனும் உடன்பிறந்தாரும் ஆசாரியரும் ஸம்பந்திகளும் பந்துக்க ளும்கெட்ட எண்ணத்துடன் யுத்தஞ்செய்ய வருவார்களானால் அவர் களைக்கொல்வது தர்மந்தான். கேசவரே! ஆசையால் நெறிதவறி யுத் தத்திற்குவரும்பாபிகள் குருக்களானாலும் அவர்களைக்கொல்லும் க்ஷத் திரியன் தர்மந்தெரிந்தவனுவான். போராசைபிடித்து ப்ராசீனமான தர்மத்தின் மரியாதையைப்பாராமல்செல்லும் மனிதனை யுத்தத்தில் கொல்லும் அரசன் தர்மந்தெரிந்தவனுவான். யுத்தங்களில் உதிர மென்னும் வெள்ளமுள்ளதும் கேசங்களென்னும் புல்லுகளுள்ளதும் யானைகளென்ற மலையுள்ளதும் த்வஜங்களென்னும் மரங்களுள்ளதுமா கப் பூமியைச்செய்யும் க்ஷத்திரியன்தான் தர்மந்தெரிந்தவன். யுத்த த்திற்கழைக்கப்பட்ட க்ஷத்திரியன் அவச்யம் யுத்தஞ்செய்யவேண்

1 பகைவர்களின் சரீரத்தை வீழச்செய்வது என்றும் கொள்ளலாம்.

டும். க்ஷத்திரியனுக்கு இவ்வித யுத்தம் தருமமென்றும் இவ்வுலகம் விண்ணுலகம் இரண்டிலும் நற்கதிக்குக் காரணமென்றும் மனுகூறினர்" என்றுசொன்னர். பீஷ்மரால் இவ்விதஞ் சொல்லப்பட்டபின், யுதிஷ்டிரர் மிகவணக்கமாக அவர் கண்ணுக்கெதிரிற்சென்று அவர் பாதங்களைத்தொட்டு வந்தனஞ்செய்தார். வில்லாளிகளிற் சிறந்த பீஷ்மரும், ஸந்தோஷத்துடன், யுதிஷ்டிரரை உச்சிமோந்து பிரியமாக உட்காரச்சொல்லி, "குருஸ்ரேஷ்டனே! அப்பா! சிறிதும் அச்சமின்றி விசுவாஸத்துடன் உனக்கு வேண்டியதை என்னிடம் கேள்" என்றுசொன்னர்.

ஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு ராஜதர்மத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், ஸ்ரீகிருஷ்ணபகவானையும் பிதாமஹரான பீஷ்மரையும் வணங்கி, அங்குள்ள பெரியோர்கள் எல்லாருடைய அனுமதியும் பெற்று, ப்ரஸ்னஞ்செய்யத் தொடங்கினர். "ஓ! ராஜரே! தர்மமறிந்தோர்கள் க்ஷத்திரியர்களுடைய தருமமே சிறந்ததென்று கூறுகிறார்கள். இஃது எனக்குப் பெரிய சுமையாகத் தோன்றுகிறது. [1] ஆகையால், ஓ! பிதாமஹரே! க்ஷத்திரியதர்மங்களை எனக்கு விரிவாக உபதேசிக்கவேண்டும். ராஜதர்மமானது உலகத்திலுள்ள பிராணிகள் யாவற்றிற்கும் முக்கிய ஆதாரமானது. கௌரவரே! அறமும் பொருளும் இன்பமுமாகிய மூன்றுவகைப் பயன்களும் ராஜதர்மத்தில் நிலைபெற்றிருக்கின்றன. மோக்ஷத்திற்குரிய தர்மம்யாவும் மிகத்தெளிவாக இதிலடங்கியிருக்கின்றன. கடிவாளம் குதிரையை அடக்குவதுபோலவும், அங்குசம் யானையை அடக்குவதுபோலவும், ராஜநீதி உலகத்தை அடக்குவதாகக் கூறப்படுகிறது. பரம்பரையாக அரசர்கள்செலுத்திவரும் இந்நீதி முறையினின்று மாறுபடுமானால் உலகம் யாவும் நிலைபெறுமல் மிகக்கஷ்டமுள்ளதாகும். உதயமடைந்த ஸூர்யன் அசுபமான இருளைவிலக்குவதுபோல ராஜநீதி உலகத்திற்குக் கெடுதியை உண்டுபண்ணும் தீங்குகளை விலக்கும். ஆகையால், பரதஸ்ரேஷ்டரான பிதாமஹரே! தர்மங்களைக் காப்பவர்களில் உத்தமரான நீர் எனக்காக (இவ்விதக் குணம்பொருந்திய) ராஜதர்மங்களை முதலில் உபதேசிக்க வேண்டும். சத்துருக்களைத் தபிக்கச்செய்கிறவரே!

---

1 இங்கு ஒருசொல் விடப்பட்டது.

எங்கள் யாவருக்கும் ரகஸ்யமான சாஸ்திரங்கள் உம்மால் ஏற்படுத்தப்படட்டும். ஸ்ரீகிருஷ்ணபகவான் உம்மையே அறிவிற் சிறந்தவராக அபிமானிக்கிறார்" என்றார்.

பீஷ்மர் உபதேசத் தொடக்கம்.

பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "உத்தமமான தர்மத்தையும் உலகத்துக்குக் கர்த்தாவான ஸ்ரீகிருஷ்ணபகவானையும் பிராம்மணர்களையும்வணங்கிச் சாஸ்வதமான தர்மங்களைச்சொல்ல ஆரம்பிக்கிறேன். ஓ! யுதிஷ்டிர! என்னால் விவரிக்கப்படும் க்ஷத்திரியதர்மங்களனைத்தையும் உனக்கு இஷ்டமான மற்றுமுள்ள தர்மத்தையும் கவனத்துடன் கேள். ஓ! குருஸ்ரேஷ்ட! பிரஜைகளை ஸந்தோஷிப்பிப்பதை விரும்பும் அரசன் முதலிலேயே விதிப்படி தேவர்களையும் பிராம்மணர்களையும் ஆராதிப்பவனாயிருக்கவேண்டும். குருஸ்ரேஷ்ட! தேவர்களையும் பிராம்மணர்களையும் ஆராதிப்பதால் அரசன் தருமத்தை செய்யாமையாலுண்டாகும் தோஷத்திலிருந்து விடுபடுவதோடு உலகத்தாலும் பூஜிக்கப்படுகிறான். மகனே! யுதிஷ்டிர! எப்பொழுதும் பௌருஷத்துடன் முயற்சியுள்ளவனாயிரு. அரசர்களுக்குப் பௌருஷமின்றித் தெய்வம் எவ்விதக்கார்யத்தையும் ஸாதிக்கமாட்டாது. தெய்வமும் பௌருஷமுமாகிய இவ்விரண்டும் (வண்டிக்கு உருளைகள்போல) எல்லாக் கார்யங்களுக்கும் பொதுவான ஸாதனங்களாகும். (இவ்விரண்டிலும்) பௌருஷமென்பது மேலானதென்று நான் எண்ணுகிறேன். (தன்முயற்சியால்செய்த கர்மத்தின்முடிவில், அது பயனுள்ளதாஞலும் பயனற்றதாஞலும்) தெய்வத்தை உறுதியாகநினைத்து, துக்கம் அல்லது ஸுகம் இவ்வகளிலிருந்து மனிதன் [1] விடுபடுகிறான். நீ செலுத்திய பௌருஷம் பயனற்றதாஞலும் அதில் உனக்கு மனவருத்தம் வேண்டாம். எப்பொழுதும், இவ்விதம் விடாமுயற்சியுள்ளவாயிருப்பது அரசர்களுக்குப் பெரிய நீதியாகும். ஸத்தியமன்றி வேறெதுவும் அரசர்களின் காரியசித்திக்குக் காரணமாகாது. ஸத்தியத்தில் உறுதியாயிருக்கும் அரசன் இம்மையிலும் மறுமையிலும் ஸுகித்திருப்பான். ராஜஸ்ரேஷ்டனே! தவஞ்செய்யும் முனிவர்களுக்கும் ஸத்தியமொன்றே பெரும்பொருளாகும். அவ்விதமே, அரசர்களுக்கும் ஸத்தியந்தவிர வேறெதுவும் நம்பிக்கையைக் கொடுக்கத்தக்கதில்லை. நற்குணமும் நன்னடக்கையும் அடக்கமும் கடுமையில்லாத தண்டமும் இந்திரியங்களின் ஜயமும் முகத்தில் தெளிவும் நன்

---

1. இங்கு, 'முஹ்யதே' என்பதைவிட்டு, 'முச்யதே' என்றபாடம் கொள்ளப்பட்டது.

கொடையுமுள்ள அரசன் எப்பொழுதும் ராஜ்யலக்ஷ்மியைவிட்டு விலகமாட்டான். ஓ! குருஸ்ரேஷ்டனே! நீதியை நன்றாக விசாரித்து வெளியிடத்தகாத ராஜாங்கத்திற்குரிய ரஹஸ்யங்கள் தவிர, மற்ற எவ்விதக் காரியங்களிலும் நேராக உண்மையைப் பேசவேண்டும். உண்மையைப் பேசுங் குணமுள்ள பல முனிவர்கள் தேவலோகத்தில் ஸந்தோஷமாயிருக்கிறார்கள். எப்பொழுதும் சாந்தமாயிருக்கும் அரசனை எல்லாவிஷயத்திலும் உலகம் மீறி நடக்கும். அரசன், எப்பொழுதும் கடுமையுள்ளவனாயிருந்தால் உலகம் அவனிடம் நடுக்கமுள்ளதாகும். ஆகையால், அரசன் ஸமயம்போல இரண்டுவித ஸ்வபாவமுள்ளவனாயிருக்கவேண்டும். புத்ர! உனக்குப் பிராம்மணர்கள் (எப்பொழுதும்) தண்டிக்கத்தக்கவர்களல்லர். கொடுப்பவரிற் சிறந்த பாண்டவ! உலகத்தில் பிராம்மணர்கள் உத்தம தெய்வரூபியாவார்கள். ஓ! கௌரவ்ய! அரசர்களின் தர்மத்தைக் குறித்து மஹாத்மாவான மனு இரண்டு சுலோகங்களைப் பாடினர். ராஜஸ்ரேஷ்டனே! அவற்றை உள்ளத்தில் உறுதியாக வைத்துக்கொள். (அவற்றின் பொருளாவது:) 'ஜலத்திலிருந்து அக்னியும் பிராம்மணனிடமிருந்து க்ஷத்திரியனும் கல்லிலிருந்து இரும்பும் உண்டானார்கள். அக்னி முதலிய இம்மூன்றுகளின் சக்தி எங்கும் செல்லத்தக்கதாயினும் தம் காரணங்களில் நாசமடையும். கல்லை அடிக்கச்சென்ற இரும்பும் ஜலத்தைக் கொளுத்தச்சென்ற அக்கினியும் பிராம்மணர்களை த்வேஷிக்கமுயன்ற க்ஷத்திரியனும் அப்பொழுதே நாசமடைவார்கள்' என்பது. மஹாராஜனே! ஆகையால், இவ்விதமான தர்மத்தை அறிந்த அரசன், வேதத்தையும் வைதிகதர்மத்தையும் வஹிப்பவர்களும் பொறுமையுள்ளவர்களுமான பிராம்மணர்களை எப்பொழுதும் வணங்கவேண்டும். ஓ! புருஷஸ்ரேஷ்டனே! இப்படிப்பொதுவிதி இருந்தாலும் உலகநடைக்கு இடையூறுசெய்யும் பிராம்மணர்களை அரசன் கைகளாலேயே அடக்கவும் வேண்டும். முன்காலத்தில் மஹரிஷியான சுக்கிராசாரியர், 'யுத்தத்தில் ஆயுதமெடுத்துத் தன்னை எதிர்த்துவரும் பிராம்மணன் வேதாந்தமறிந்தவனாலும் தர்மத்தை விரும்பும் அரசன் அவனை ஆயுதத்தால் அடக்கவேண்டும். தர்மத்திற்குக் குறைவுவராமல் பாதுகாக்கும் தர்மம் அறிந்த அரசன் அக்காரியத்தால் தர்மத்தைக் கெடுத்தவனாகமாட்டான். ஏனெனில், அந்தப் பிராம்மணன்மேகாபமே அரசனுடைய கோபத்தை உண்டுபண்ணுகிறது' என்று சொன்ன இவ்விரண்டு சுலோகப் பொருள்களை நீ மிகக்கவனித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். ஓ! நரஸ்ரேஷ்டனே! இவ்விதமிருந்தாலும், பிராம்மணர்களை

ரக்ஷிக்கவே வேண்டும். குற்றவாளிகளும் தோஷத்தால் விலக்கப் பட்டவர்களுமான அவர்களை அரசன் அடிக்காமல் தன் தேசத்தை விட்டு விலக்கவேண்டும். நரபதியே! பிரம்மஹத்தி, [1]ப்ரூணஹத்தி, குருதாரத்தைச்சேருதல், அரசனைப் பகைத்தல் இவ்விதக் குற்ற முள்ள பிராம்மணர்களையும் அரசன் தேசத்தைவிட்டு விலக்கவேண் டுமே தவிர அவர்களுக்குச் சரீரதண்டனை விதிப்பது எப்பொழுதும் நீதியாகாது. பிராம்மணர்களிடம் பக்தியுள்ளவர்களிடத்தும் அன் புள்ளவனாக இருக்கவேண்டும். [2] அரசர்களுக்கு மனிதர்களின் சேர்க்கையன்றே சோகமின்றிப் பெரிய ஸந்தோஷத்திற்குக் காரணமாகும். மஹாராஜனே! சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட (பூமி, ஜலம், பாலிவனம், காடு, மலை, மனிதர்கள் என்னும் அரசர் களுக்குரிய) ஆறுவகை அரண்களுள் மனிதர்களென்னும் அர ணைத விரோதிகள் வெல்லத்தகாததாகும். ஆகையால், பகுத்தறி வுள்ள நரபதி நான்கு ஜாதிகளிலும் எப்பொழுதும் தயையுள்ளவனாக இருக்கவேண்டும். தர்மபுத்தியுள்ளவனும் ஸத்தியவாக்குள்ளவனு மான அரசன் பிரஜைகளை மகிழ்விக்கிறன். ஓ! புருஷச்ரேஷ்டனே! அரசன் எப்பொழுதும் பொறுமையுள்ளவனாகவே இருப்பதும் நியாய மன்று. யானைபோலப் பொறுமையுடன் சாந்தனாக இருக்கும் அர சன் தர்மத்திற்கு விரோதியாவான். பிரபுவே! இவ்விஷயத்தைக் குறித்துப் பிருஹஸ்பதிபகவான் இயற்றிய நீதிநூலில் ஒரு சுலோ கம் நிச்சயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது; சொல்லுகிற என்னிட மிருந்து அதன் கருத்தைக்கேள். அதாவது:— 'யானையின் தலையில் மாவுத்தன் ஏறுவதுபோலத் தாழ்ந்த மனிதனும் பொறுமையுள்ள அரசனை அவமதித்துத் தலையிலேற விரும்புவான்' என்பது. ஆகை யால், ஸ்ரீமானான அரசன் எப்பொழுதும் சாந்தனாகவும் எப்பொழு தும் குரூரனாகவுமிராமல் அதிகக் குளிர்ச்சியும் அதிக வெப்பமு மில்லாத வஸந்தகாலத்து ஸூர்யன்போல இருக்கவேண்டும். ஓ! மஹாராஜனே! தன்னைச் சேர்ந்தவர்களும் பரர்களுமான மனிதர் களை அவர்கள் செய்யுங்காரியங்களை நேரில் பார்ப்பதாலும் முகக் குறி விழிக்குறிமுதலிய அடையாளங்களாலும் வேறிடத்திலுள்ள அவர்கள் செய்கையை உபமானமாகக் கொண்டும் புருஷலக்ஷ ணங்கூறும் ஸாமுத்ரிகாசாஸ்திரங்களாலும் எப்பொழுதும் பரீக்ஷிக்க

---

1 ஸாங்கமான வேதத்தைக்கற்ற பிராம்மணன் ப்ரூணன் எனப்படு வான்; சிசுவென்பதும் பொருள். இதன் 43-ம் பக்கம் குறிப்பில்காண்க.

2 இங்கு வேறு பாடத்துக்கு, 'அரசர்களுக்கு இவ்விதப் புருஷர் களைச் சேர்ப்பதைவிடச் சிறந்த பொக்கசம் வேறில்லை' என்பது பொருள்.

வேண்டும். நிறைந்த தக்ஷிணைகொடுப்பவனே! காமம் கோபமுதலிய வைகளாலுண்டாகும் [1] பதினெட்டுவிதமான வ்யஸனங்களையும் முழுதும் விலக்கவேண்டும். இவ்விதமான வ்யஸனங்களில் ஆசைபற்றி இவைகளைச்செய்ய முயல்வது எந்தச்சமயத்திலும் நீதியன்று. வ்யஸனமுள்ள அரசன் உலகத்தில் அவமதிக்கப்படுவான். அரசன் பிறரைப் பகைக்கும் குணமுள்ளவனுல் அவனைக் கண்டு உலகம் நடுங்கியோடும். ஓ! மஹாராஜனே! எப்பொழுதும் அரசன் கர்ப்பிணியின் தர்மத்திலிருக்கவேண்டும். இப்படிச் சொல்வதற்குக் காரணத்தையும் கேள். கர்ப்பிணியானவள் தன்மனத்திற்கும் காவுக்கும் ருசியான வஸ்துவைப் புசியாமல் அந்தக் கர்ப்பத்தை வளர்க்கத்தக்க வழியிலிருப்பதுபோல, அரசனும், ஸந்தேகமின்றி, தனக்குவேண்டுமென்ற காரியத்தைத் தள்ளிவிட்டு உலகத்திற்கு நன்மையான தர்மவழியில் எப்பொழுதுஞ் செல்லவேண்டும். ஓ! பாண்டவ! அரசன் தைரியத்துடன் தெளிவாகத் தண்டம்செலுத்திவருவானுயின் அவனுத்தரவு எங்கும் தடையின்றிச் செல்லும். ஆகையால், நீ எந்தச்சமயத்திலும் தைரியத்தை விடாமலிருக்கவேண்டும். பேசுகிறவர்களிற் சிறந்தவனே! வேலைக்காரருடன் அதிகமான பரிஹாஸவார்த்தை பேசக்கூடாது. புலிபோன்ற அரசனே! இதிலுண்டாகும் குற்றத்தை உனக்கு அறிவிக்கிறேன்; கேள். வேலைக்காரர்கள் எஜமானனிடம் பயமின்றி உத்ஸாஹத்துடன் அவனை அவமதிக்கத் துணிவார்கள்; தமக்குரிய நிலையிலிராமல் அரசனுத்தரவை மீறிநடப்பார்கள்; கட்டளையிட்டு அனுப்பினலும் அக்காரியத்தில் ஸந்தேகப்படுவார்கள்; கேட்கத்தகாத ரஹஸ்யத்தையும் கேட்பார்கள்; யாசிக்கத்தகாத வஸ்துவையும் யாசிப்பார்கள்; எஜமானன் புஜிக்கத்தக்க வஸ்துக்களைத் தின்பார்கள்; அரசன் பிரபுத்தன்மையை வஹிப்பதிலும் கோபங்

---

1 வ்யஸனங்கள் பதினெட்டு. அவைகளில் வேட்டை, சொக்கட்டான், பகலிலுறக்கம், பிறரை நிந்தித்தல், பெண்மயக்கம், மதம், வீணைபாட்டு, கூத்து, வாத்தியங்கள், குடி இப்பத்தும் காமத்தாலுண்டாவன. தெரியாத குற்றத்தை வெளியிடுவது, குற்றமில்லாதவனைத் தண்டிப்பது, கபடமாகக் கொலைசெய்வது, பிறர்பெருமையில் பொறுமை, பிறர்குணங்களைத் தோஷமாகக் கூறுதல், பிறர்பொருளை அபகரித்தல், கடுஞ்சொல், கொடுமையான தண்டம் இவ்வெட்டும் கோபத்தாலுண்டாவன. இவைகளில் முதல்வகுப்பிலுள்ள குடி, சொக்கட்டான், பெண்மயக்கம், வேட்டை இந்நான்கும், இரண்டாவது வகுப்பில் பிறர்பொருளை அபகரித்தல், கடுஞ்சொல், கடுமையான தண்டம் இம்மூன்றும் மிகக் கஷ்டமானவை. இவை மனுதர்மசாஸ்திரம் ஏழாவது அத்தியாயத்தில் நாற்பத்தைந்தாவது சுலோகமுதல் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

கொண்டு ஜ்வலிப்பார்கள்: பரிதானம் வாங்கியும் கபடங்கள் செய்தும் ராஜகாரியங்களைக் கெடுப்பார்கள்; அரசன் உத்தரவுபோன்ற பொய்யான பத்திரிகைகளால் ராஜ்யத்தைப் பயனற்றதாகச் செய்துவிடுவார்கள்; அரசனைப்போல ஆடையுடுத்து அந்தப்புரக் காவலாளர்களுடன் நேசம்பாராட்டுவார்கள்; அரசன் முன்னிலையில் அச்சமின்றி வாய்திறந்து கொட்டாவி விடவும் 'தூ'எனத்துப்பவுஞ் செய்வார்கள். அரசப்புலியே! அரசனுடைய வசனத்தை ரஹஸ்யமாயிருந்தாலும் வெட்கமின்றிப் பலவிடங்களிலும் சொல்லுவார்கள்; அரசன் சாந்தனுயிருந்தால் அவனை அவமதித்து அரசன் ஏறத்தக்க குதிரையானை தேர்களில் ஸந்தோஷத்துடன் ஏறுவார்கள்; ஸபையிலிருந்துகொண்டு நண்பர்கள்போல, 'ராஜரே! இஃது உம்மால் செய்யமுடியாது; இவ்விதம் நடப்பது நீதாகும்' என்றுசொல்வார்கள்; அச்சொல்லில் அரசன் கோபங்கொண்டால் தாங்கள் நகைப்பார்கள்; மரியாதை பெற்றுக்கொண்டும் ஸந்தோஷப்படமாட்டார்கள்; ஒருவருக்கொருவர் மேலாகவேண்டி மிகப் பொறுமையுள்ளவர்களாயிருப்பார்கள்; மந்திராலோசனையை மாற்றுவார்கள்; அரசாட்சியின் குறைகளை வெளியிடுவார்கள்; அரசன் உத்தரவை அவமதிப்புடன் வேடிக்கையாகச் செய்வார்கள்; புலிபோன்ற அரசனே! அச்சமின்றி அவமதிப்புடன் அரசனுடைய ஆபரணம் அன்னம் ஸ்நானத்திற்குரிய வஸ்துக்கள் சந்தனம் முதலியவற்றையும் உபயோகிப்பார்கள்; பாரத! தம்மதிகாரத்தை வெறுப்புடன் விலக்கிக்கொள்வார்கள்; தமது ஜீவனத்தில் ஸந்தோஷிக்கமாட்டார்கள்; ராஜபாகமான பொருளையும் எடுத்துக்கொள்வார்கள்; கயிற்றில்கட்டிய பக்ஷியோடு விளையாடுவதுபோல அரசனுடன் விளையாடவிரும்புவார்கள்; 'அரசன் என்னிஷ்டப்படியிருப்பான்' என்று உலகத்தில் சொல்விக்கொள்ளுவார்கள். யுதிஷ்டிர! அரசன் பரிஹாஸவார்த்தை பேசிக்கொண்டு மெதுவாயிருப்பானுகில் இவ்விதத்தோஷங்களும் மற்றும் பலதோஷங்களும் உண்டாகும்" என்றுசொன்னர்.

ஐம்பத்தாறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு ராஜதர்மங்களைச் சொல்லியது.)

பீஷ்மர் உபதேசிக்கத்தொடங்கினர். "ஓ! யுதிஷ்டிர! அரசன் விடாமுயற்சியுள்ளவனுயிருக்கவேண்டும். ஸ்திரீபோல முயற்சியற்றவனை அரசனை மனிதர்கள் கொண்டாடமாட்டார்கள். நரபதியே!

இதுவிஷயத்தில், 'வேதமோதவெளியே போகாத பிராம்மணன் ராஜ்யத்தில் முயற்சியற்ற அரசன் ஆகிய இவ்விருவர்களையும், பாம்பு எலிகளை விழுங்குவதுபோல, இப்பூமி விழுங்குகிறது' என்று பெருமை தங்கிய சுக்கிராசாரியர் பாடிய இக்கவியின் பொருளை நன்கு அறிந்து தெளிந்து மனத்தில் வைத்துக்கொள். நரஸ்ரேஷ்டனே! சேரத்தக்கவர்களுடன் சேரவேண்டும். விரோதிக்கத்தக்கவர்களை மலைமுதலிய இடங்களில் தகையவேண்டும். ராஜ்யத்துக்குரிய எஜமானன், மந்திரி, ஸ்நேஹிதன், கோசம், தேசம், கோட்டை, படையென்னுமெழு வகை அங்கங்களிலும் எவ்வித அங்கத்திற்காவது தீங்குசெய்த மனிதன் நண்பனையும் குருவானையும் அவனைக் கொல்லவேவேண்டும். ராஜேந்திரனே! மருத்தனென்னும் அரசன், முன்காலத்தில், 'காரியாகாரியங்களை அறியாமல் அகங்காரங்கொண்டு தப்புவழிச்செல்லும் மனிதனைக் குருவாயிருந்தாலும் விலக்கவேண்டும்' என்றதும் பிருஹஸ்பதிக்கு ஸம்மதமுமான இப்பழையகவியை ராஜ்யாதிகார விஷயத்தில் வெளியிட்டான். பாஹுவின்குமாரனை அறிவிற்சிறந்த ஸகராஜனும் பிரஜைகளின் ஹிதத்தைக்கருதி முதல் குமாரனை அஸமஞ்சனைத் தள்ளிவிட்டான். ராஜனே! அஸமஞ்சன் நகரிலுள்ள சிறுவர்களை ஸரயூவென்னும் நதியில் தள்ளினகாரணத்தால் தகப்பனை ஸகரன் அவனைப் பலவாறு இகழ்ந்து வெளியில் தூரத்தினன். உத்தாலகரென்னும் முனியும் பிராம்மணர்களுக்கு அபசாரஞ் செய்த காரணத்தால் சுவேதகேதுவென்னும் பெரிய தவமுள்ள தம் அருமைப் புத்திரனை விலக்கிவிட்டார். அரசர்களுக்கு உலகத்தைச் சந்தோஷப்படுத்துவதும் உண்மையைக் காப்பதும் கபடமின்றி வ்யவகாரங்கள் செய்வதும் ஸநாதனமான தர்மமெனக் கூறப்படும். கப்பத்திற்காகத் தான்யங்களைத் தகைவது முதலிய காரணங்களால் பிறர் பொருளுக்குக் கேடுவரும்படி செய்வது கூடாது. கொடுக்கவேண்டிய கூலிமுதலியவைகளைக் காலத்தில் கொடுக்கும்படி செய்யவேண்டும். பராக்ரமமுள்ளவனும் உண்மையான வசனஞ் சொல்பவனும் பொறுமையுள்ளவனுமான அரசன் நல்வழியினின்று தவறமாட்டான். அரசன் எப்பொழுதும் மந்த்ராலோசனையைப் பிறரறியாமல் மறைப்பவனும், கோபத்தை ஜயிப்பவனும், நீதிசாஸ்த்ரத்தின் உண்மைப்பொருளில் உறுதியுள்ளவனும், பகலின் முதல் பாகத்தில் தர்மத்திலும் மறுபாகத்தில் பொருளிலும் இரவின் முதற்பாதியில் காமத்திலும் பிற்பாதியில் மோக்ஷத்திலும் விசேஷமாக முயற்சியுள்ளவனுமாக இருக்கவேண்டும். அரசன் மந்த்ராலோசனையை நீதிசாஸ்த்ரப்படி மறைவாயிருக்கச் செய்துகொள்ளவேண்டும். ராஜாங்கத்துக்குரிய ரஹஸ்ய யோசனையை வெளிவராமல் காப்பதைவிட

வேறெதுவும் அரசர்களுக்குக் கடினமன்று. அரசன் நான்கு ஜாதிகளின் தர்மங்களையும் ரக்ஷிக்கவேண்டும். தர்மங்களை ஒன்றோடொன்று சேராமல் பாதுகாப்பது அரசர்களுக்கு ஸனாதன தர்மமாகும். அரசன் ஒருவனையும் நம்பக்கூடாது. ஆனாலும், ஆப்தர்களை நம்பலாம். அவர்களிடமும் விசேஷநம்பிக்கைபாராட்டலாகாது. 1 சந்தி, விக்கிரஹம், யானம், ஆஸனம், த்வைதீபாவம், ஆஸ்ரயம், என்னும் ஆறுகுணங்களுக்குமுரிய குணதோஷங்களை எப்போதும் தன் புத்தியால் கவனிக்கவேண்டும். எப்பொழுதும் தன் ராஜ்யத்தில் பிறன் பிரவேசிக்க இடங்கொடாதவனும் பரராஜ்யத்தில் தனக்கு உண்டாகும் இடத்தைத் தேடுகிறவனுமான அரசன் கொண்டாடத்தக்கவன். ராஜ்யத்தின் குறைவு வளர்ச்சி ஸமநிலையென்னும் ராஜாங்கத்திலுள்ள 2உண்மையை அறிந்தவனும் 3வெளியாகாத தூதர்களைக்கொண்டு அன்யராஜ்யத்தைப் பேதிக்கத்தக்க நீதியில் முயன்றவனுமான அரசன் புகழத்தக்கவனாவான். தர்மராஜனையும் குபேரனையும்போலப் பொருளைச் சம்பாதிப்பதில் முயற்சியுள்ளவனும் மந்திரியும் ராஜ்யமும் கோட்டையும் தனசாலையும் யானை குதிரை முதலிய சதுரங்கமுமாகிய தன் ராஜ்யத்திலுள்ள இவ்வைந்திற்கும் பரராஜ்யத்திலுள்ள இவ்வைந்திற்கும் ஸமநிலை, குறைவு, வளர்ச்சி என்னும் வேற்றுமையையறிகிறவனும் சம்பளமில்லாத ஜனங்களைக் காப்பவனும் சம்பளமுள்ளவர்களைக் கவனிப்பவனும் தெளிந்த முகமுள்ளவனும் மந்தஹாஸத்துடன் முந்திப் பேசுகிறவனும் பெரியோர்களை ஆராதிப்பவனும் சோம்பலும் சாபல்யமும் இல்லாதவனும் ஸஜ்ஜனர்களின் ஆசாரத்தையறிந்து அதில் உறுதியான மனமுள்ளவனுமாக அரசனிருக்கவேண்டும். எந்தச் சமயத்திலும் ஸாதுக்கள் கையிலுள்ள பொருள்களை அரசன் அடையக்கூடாது. கெட்ட மனிதர்களிடமிருந்து பொருளை வாங்கி ஸத்புருஷர்களுக்கு அளிக்கவேண்டும். அரசன் நேரில் சிக்ஷை செய்பவனும் கொடுப்பவனும் தன் பரிவாரங்களையும் தன் மனத்தையும் அடக்கி ஆளுபவனும் ஸத்யமறிந்து கொடுப்பதும் புஜிப்பதுமுள்ளவனும் குற்றமற்ற நடையுள்ளவனுமாயிருக்கவேண்டும். நற்குலத்திலுதித்தவர்களும் ரோகமில்லாதவர்களும் மஹிமைபோல அசைவற்றவர்களும் பெரியோர்களிடம் சேர்க்கையுள்ளவர்களும் தன்னிடம் பக்தியுள்ளவர்களும் சூரர்களும் பகைவர்களால் வஞ்சிக்கமுடியாதவர்களும் மானிகளும் இவ்வுலகத்தையும் சாஸ்

---

1 ஸபாபர்வம் 14-வது பக்கம் குறிப்பிற் காண்க.

2 ‘ அறம்பொருள் இன்பமென்னும் மூவகைப் பயன்களின் உண்மையை ’ என்பது பழைய உரை.

3 ஆதிபர்வம் 578-வது பக்கம் குறிப்பிற் காண்க.

தரத்தையும் பரலோகத்தையும் அறிந்தவர்களும் சிஷ்டர்களும் பிற ருக்கு அவமானஞ்செய்யாதவர்களும் தர்மம்விட்டு விலகாதவர்களும் ஸாதுக்களும் அதிக ஸம்பத்தாலலங்கரிக்கப்பட்டவர்களுமான தகுந்த மனிதர்களை அரசன் எப்பொழுதும் தனக்குச் சகாயமாக வைத்துக் கொள்ளவேண்டும். வெண்கொற்றக் குடையுடன்கூடின ராஜாஜ்ஞை ஒன்றுநீங்க மற்ற எவ்விதப்போகங்களும் நடையும் நேரிலும் மறை விலும் எவ்விடத்திலும் தனக்கும் அவர்களுக்கும் வேற்றுமையின்றிச் சமமாயிருக்கும்படி செய்யவேண்டும். இவ்விதஞ்செய்யும் அரசன் இங்கு துன்பத்தை அடையமாட்டான். யாவரிடத்தும் சங்கையுள்ள வனும் பராசைகொண்டு எல்லாருடைய பொருளையும் அபகரிப்பவ னும் பொய்யான குற்றத்தைச் சுமத்துபவனுமான அரசன் இனத் தார்களாலேயே விரைவில் பீடிக்கப்படுவான். அங்ஙனமின்றிப் பரிசுத்தனும் உலகத்தைக்காப்பதில் கவனமுள்ளவனுமாயிருக்கும் அரசன் சத்துருக்களால் பிடிக்கப்பட்டுக் கீழேவிழமாட்டான். விழுந் தாலும், உடனே உயர்ந்து நிற்கத்தக்கவனுவான். கோபமும் வ்ய னமுமில்லாதவனும் லகுவாகத் தண்டஞ்செலுத்துகிறவனும் இந் திரிய ஜபமுள்ளவனும் நீதிக்குரிய குணங்கள் பொருந்தினவனும் பராஜ்யத்தின் [1] ரந்திரங்களைக் கவனிப்பவனும் புத்திசாலியும் எளி தில் காணக்கூடியவனும் எல்லா ஜாதிகளுக்குமுள்ள நீதி அநீதிகளை நன்றுக அறிந்தவனும் செய்யவேண்டிய வேலைகளை வேகமாகச்செய் யும் இயற்கைக் குணமுள்ளவனும் கோபத்தைஜயித்தவனும் தன்னைப் புகழாதவனும் பிணியற்ற சரீரமுள்ளவனும் பெரிய மனமுள்ள வனும் நல்ல அருளுள்ளவனும் முயற்சியுடன் வேலைசெய்பவனுமான அரசன் இமயமலைபோலப் பிராணிகளுக்கு விசுவாஸத்துடன் அடுக் கத்தக்கவனுவான். எந்த அரசனுடைய காரியங்களின் ஆரம்பமும் முடிவும் [2] நன்றுகக் காணப்படுகின்றனவோ அவன் அரசர்களில் உயர்ந்தவனுவான். எந்த அரசனுடைய ஆளுகையிலுள்ள மனிதர்கள் தகப்பன் வீட்டில் பிள்ளைகளிருப்பதுபோலப் பயமின்றி ஸுகித் திருக்கிறார்களோ அந்த அரசன் அரசர்களிற் சிறந்தவனுவான். எவனுடைய ராஜ்யத்தில் வலிப்பவர்களும் நீதி அநீதிகளறிந்தவர் களுமான நகரவாஸிகள் (அரசனிடம் பயந்து) தம்பொருளைஒளிக்க முயலவில்லையோ அவ்வரசன் உத்தமனுவான். எவன்தேசத்தி லுள்ள ஜனங்கள் விதிப்படி பரிபாலிக்கப்பட்டு ஐம்பொறிகளுக்கு வேலைசெய்யாமல் அடக்கம் வணக்கம் முயற்சி முதலிய குணங்க ளுடன் அரசனுக்கு அடங்கினவர்களும் சரீரத்தில் ஆசையற்றவர்

1 ஆபத்துக்காலம். 2 இங்கு வேறுபாடங்கொள்ளப்பட்டது.

களுமாய்த் தமக்குரிய தர்மத்தில் நிலைபெற்று ஒருவரையொருவர் அவமதிக்கும் இயல்பின்றித் தானஞ்செய்ய விருப்பமுள்ளவர்களாக விளங்குகிறார்களோ அந்தத் தேசத்தின் அரசனே அரசனுவான். எவனுடைய ராஜ்யத்தில் டம்பமும் பொய்யும் பிறர்பெருமையில் பொறுமையும் மாயையும் இல்லையோ அவ்வரசனுக்கு ஸநாதனமான தர்மம் ஸித்திக்கும். அறிவுடையோரான பெரியோர்களை ஆதரிப்பவனும் [1] உலகத்திற்கு இதமான சாஸ்திரங்களில் மிக்க விருப்பமுள்ளவனும் ஸாதுக்களின் வழிச்செல்லுகிறவனும் தியாகமுள்ளவனுமான அரசன் ஸுவர்க்கம்பெறுவான். தூதர்களையும் ஆலோசனைகளையும் [2] செய்ததையும் செய்யப்போவதையும் எப்பொழுதும் சத்துருக்கள் அறியத்தகாதவண்ணம் நடத்திவரும் அரசன் ராஜ்யத்திற்குரியவனுவான். பாரதனே! முன்காலத்தில் [3]ஓரரசனைக்குறித்து ராஜதர்மங்களை உபதேசித்த மஹாத்மாவான பரசுராமர் இரண்டு சுலோகங்களை உபதேசித்தார். அவற்றின் பொருளாவது:—'உத்தமனை அரசனைமுந்தி அடைந்து பிறகு பொருளையும் பெண்டிர்களையும் அடையவேண்டும். அரசன் அஸத்தாயிருப்பானுகில் இவ்வுலகில் பெண்டிரும் பொருளும் எங்ஙனமிருக்கக்கூடும்? ஆகையால், ராஜ்யத்தை விரும்பும் அரசர்களுக்கு உலகம் நிலைபெறத்தக்கபடி பிராணிகளை நன்கு பாதுகாப்பதைவிட வேறு சாஸ்வதமான தர்மம் எதுவுமில்லை' என்பது. ஓ! ராஜஸ்ரேஷ்டனே! ராஜதர்மங்களைக் கூறுமிடத்தில் பிராசேதஸமனு இரண்டு சுலோகங்களை எடுத்துக்கூறினர். அவைகளைக் கவனித்துக்கேள். (அவற்றின் பொருளாவது :—) 'ஓதுவியாத ஆசிரியன், ஓதாதகரித்விக்கு, பாதுகாவாத அரசன், அப்பிரியத்தைச் சொல்லும் மனைவி, கிராமத்திலிருக்க விரும்பும் இடையன், வனத்திலிருக்க விரும்பும் நாவிதன் ஆகிய இவ்வாறுபேர்களையும் கடலில் உடைந்த கப்பலைப்போலத் தள்ளிவிட வேண்டும்' என்பது.

ஐம்பத்தேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் முதலுள் யுதிஷ்டிரருக்கு ராஜதர்மங்களைச்சொல்லியதும், மாலயில் கிருஷ்ணன் முதலியோர் தத்தம் இருப்பிடஞ்சென்றதும்.)

ஓ! யுதிஷ்டிர! நீதியைவிட்டுவிலகாத இந்த ரக்ஷணமென்பது ராஜதர்மங்களுள் வெண்ணெய்போல ஸாரமானதென்று பிருஹஸ்பதி

---

1 இங்கு வேறுபாடங்கொள்ளப்பட்டது.

'செய்யப்பட்டிருந்தாலும் செய்யப்படாதவைபோல' என்பது பழைய உரை. 3 'ராமசரிதே' என்பது வேறுபாடம்.

பகவானும் பகவான் விசாலாக்ஷரும் மஹாதவம்பொருந்திய சுக்கிராசாரியரும் ஆயிரங்கண்ணுள்ள தேவேந்திரனும் பிராசேதஸமனுவும் பரத்வாஜரும் கௌரசிரஸ் என்கிற ரிஷியும் ஆகிய யாவரும் இதைப் புகழ்கிறார்கள்; வேறுதர்மத்தைக் கொண்டாடுகிறார்களில்லை. நீதி சாஸ்திரங்களைச்செய்த வேதமறிந்த பிராம்மணர்களும் இந்தப்பாலன தர்மத்தைக் கொண்டாடுகிறார்கள். தர்மத்தைப் பரிபாலிப்பவர்களிற் சிறந்தவனும் தாமரைமலர்போன்ற சிவந்தகண்ணுள்ளவனுமான ஓ! ராஜனே! இப்பாலனம் நிறைவேறத்தக்க யுக்திகளைச் சொல்லுகிறேன்; கேள். ஓ! யுதிஷ்டிர! வெளிப்படையாகவும் மறைவாகவுமுள்ள இருவிதச்சாரர்கள், ஸமயத்தில் (அன்னம கூலி இவை) கொடுப்பது, பொறுமையில்லாமை, யுக்தியால் வரி வாங்குவது, உபாயமின்றி வரி வாங்காமை, யோக்கியர்களைச்சேர்ப்பது, சூரத்தனம், சுறுசுறுப்பு, ஸத்யம், பிரஜைகளின் ஹிதம், நேராகவும் கபடமாகவும் சத்துருபக்ஷம் வளராமற்செய்வது, பழுதாகஇடியும்வீடுகளைப் பழுதுபார்ப்பது, காலத்திற்குத்தக்கபடி சரீரதண்டனை பொருள்தண்டனை என்ற இருவித தண்டஞ்செலுத்துவது, ஸாதுக்களைவிடாமை, நற்குலத்திற் பிறந்தவர்களைப் போஷிப்பது, சேர்க்கவேண்டிய தான்யமுதலியவைகளைச்சேர்ப்பது, அறிவிற்சிறந்தோரை அடுப்பது, சேனைகளை எப்பொழுதும் ஸந்தோஷப்படுத்துவது, பிரஜைகளைக் கவனித்தல், கார்யங்களில் சோர்வில்லாமை, பொக்கசத்தைப் பெருகச்செய்வது, நகரைப் பாதுகாப்பது, காவற்காரர்களிடம் நம்பிக்கையில்லாமை, வியாபார முதலிய தொழில்கொண்டு சத்துருக்களால் தம்சார்பிலிழுக்கப்பட்ட பட்டணத்திலுள்ள ஜனக்கூட்டத்தை அவ்விதமின்றிப் பேதித்தல், நண்பன் விரோதி உதாஸீனன் என்னும் மூவகை மனிதர்களையும் உள்ளபடி பகுத்தறிதல், வேலைக்காரர்களிடம் நம்பிக்கையின்றி அவர்களைப் பகையாளிகளுடன் சேராதிருக்கும்படி செய்வித்தல், நேரில் நகரைப் பார்ப்பது, கஷ்டப்படும் பிறருக்கு ஆறுதல்செய்வது, சத்துருக்களை அலக்ஷியஞ்செய்யாமை, இழிவான காரியங்களை விலக்குதல், நியாயவழியை அனுஸரித்த விடாமுயற்சி இக்குணங்கள் ராஜரிஷிதர்மத்தைச் சாதிக்கத்தக்கவைகள். இவைகளில் அரசர்களுக்கு முயற்சியே ராஜதர்மத்துக்கு மூலமென்று பிருஹஸ்பதி சொன்னர். இதைப்பற்றிய சுலோகங்களையும் என்னிடமிருந்து தெரிந்துகொள். இந்திரன் முயற்சியால் அசுரர்களையடைந்து அஸுரர்களையும் கொன்று இவ்வுலகிலும் தேவலோகத்திலும் மிக்க பெருமையை அடைந்தான். முயற்சியில் சூரனை மனிதன் பண்டிதர்களுக்கு மேலாயிருக்கிறன். முயற்சியுள்ள

வீரர்களைப் பண்டிதர்கள் ஸந்தோஷப்படுத்தி உபாஸிக்கிறார்கள். முயற்சியற்ற அரசன் மிக்க புத்திசாலியாயிருந்தும் விஷமில்லாப் பாம்புபோல எப்பொழுதும் பகைவர்களால் வெல்லத்தக்கவனாவான். மிக்க பலசாலியான அரசனும் பலஹீனனான சத்துருவையும் உபேக்ஷிக்கக்கூடாது. அக்கினி சிறிதாளாலும் சுடுகிறது. விஷம் கொஞ்சமாயிருந்தாலும் கொல்லுகிறது. அரசன் அங்கங்கள் யாவும் நிறைந்து விளங்கினும் சத்துரு ஓரங்கத்துடன் கோட்டையில் புகுந்துவிட்டால் ராஜ்யத்தையே தபிக்கச்செய்வான். அரசன், ரஹஸ்யமான தன் வசனத்தையும் சத்துருஜயத்திற்குவேண்டி ஜனங்களைச்சேர்ப்பதையும் சத்துரு ஜயத்துக்காக மனத்தில் கருதிய கபட வழியையும் மற்றுமுள்ள சிறிது பாபகாரியத்தையும் ரஹஸ்யமாக வைத்துக்கொள்ள வேண்டும்; உலகம் ஸந்தோஷப்படத்தக்க விசேஷ தர்மகாரியங்களைச் செய்யவேண்டும். ராஜ்யமென்பது மிகப் பெரிதாகையால் அதைக் குரூரபுத்தியுள்ள மனிதர்களால் வஹிக்கமுடியாது. சாந்தனான மனிதனாலும் வஹிக்கமுடியாது. ராஜ்யமானது, பிராணிகள் யாவரும் ஆசைப்படக்கூடிய போக்கியவஸ்துவும் பல ஸங்கடங்களுக்கிருப்பிடமும் பெரிதுமானது; எப்பொழுதும் ஒழுங்காய் இருந்து வஹிக்கக்கூடியது. ஆகையால், ஓ! யுதிஷ்டிர! அரசன் எப்பொழுதும் குரூரமும் சாந்தமுமான ஸ்வபாவங்களின் சேர்க்கையுள்ளவனாயிருக்கவேண்டும். இவ்விதமிருந்து பிரஜைகளை ரக்ஷித்து வரும் அரசனுக்கு மரணம்நேருமானால் அதுவும் அவனுக்குப் பெரிய தர்மமாகும். இவ்வித நடக்கையுள்ளவர்களே அரசர்கள். ஓ! குருஸ்ரேஷ்டனே! இப்பொழுது ராஜதர்மங்களில் சிறிது அம்சம் உனக்குச் சொல்லப்பட்டது. உனக்கு ஐயமுள்ள விஷயத்தை மறுபடியும் கேள்" என்றுசொன்னார்.

இவ்விதஞ் சொன்னவுடன், வியாஸபகவான், தேவஸ்தானர், அஸ்மர், ஸ்ரீகிருஷ்ணன், கிருபர், ஸாத்யகி, ஸஞ்சயன் முதலிய யாவரும் மிக்க ஆனந்தமடைந்து, கொண்டாடுவதுபோன்ற முகங்களுடன், தர்மிஷ்டர்களிற் சிறந்தவரும் புருஷப்புலியுமான பீஷ்மரை, 'நல்லது, நல்லது' எனத் துதித்தார்கள். பிறகு, யுதிஷ்டிரர், சற்று மனவருத்தமுற்று நீர்ததும்பும் கண்களுடன் அவர்கால்களை மெல்லப் பிடித்து வந்தனஞ்செய்து அவரைநோக்கி, "ஓ! பிதாமஹரே! ஸூர்யன் பூமியிலுள்ள ரஸத்தைஇழுத்து அஸ்தமயத்தைஅடைகிறான். இப்பொழுது எனகுள்ள ஸந்தேகத்தை நாளைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்றுசொன்னார். உடனே, கிருஷ்ணன் கிருபர் யுதிஷ்டிரர் முதலிய யாவரும் அங்குள்ள பிராம்மணர்களை

நமஸ்கரித்துவிட்டுப் பீஷ்மரை வலமாகவந்து ஸந்தோஷத்துடன ரதங்களில் ஏறினர்கள். நல்ல நியமமுள்ளவர்களும் சத்ருக்களைத் தபிக்கச்செய்கிறவர்களுமான அவர்கள் திருஷத்வதியென்னும் நதியி லிறங்கி ஸ்நானஞ்செய்து மங்களமான மந்திரங்களை ஜபித்து விதிப் படி ஸந்தியாதேவதையை உபாஸித்துப் பின் யானையின்பெயர் வாய்ந்தபுரம் வந்து சேர்ந்தார்கள்.

ஐம்பத்தேட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் யுதிஷ்டிரருக்த அரசனது உற்பத்தியும் பிரம்மாமுதலியோராற் செய்யப்பட்ட தண்டநீதி சாஸ்திரத்தின் வரலாறும் பிருதுராஜன் சரித்திர முதலியவையும் கூறியது.)

மறுநாட்காலையிலெழுந்து அக்காலத்திற்குரிய விதிகளை அனுஷ்டித்தபின், பாண்டவர்களும் யாதவர்களும், பட்டணத்திற்கொப்பான ரதங்களிலேறிக் குருசேஷத்திரஞ்சென்று, கங்காபுத்திரரும் ரதிகர்களில் ச்ரேஷ்டரும் தோஷமற்றவருமான பீஷ்மரை அடைந்து, 'ராத்ரி ஸுகமா?' என்று ப்ரச்னஞ்செய்து, வியாஸர் முதலிய ரிஷிகளையும் வணங்கினர்கள். பிறகு, அவர்கள் யாவராலும் ஸந்தோஷிப்பிக்கப்பட்டுப் பீஷ்மரைச்சுற்றி நாற்புறமும் உட்கார்ந்தார்கள். உட்கார்ந்தபின், பெரிய தேஜஸுள்ளவரும் தருமதேவதையின் புத்ரருமான யுதிஷ்டிரராஜர், விதிப்படி பீஷ்மரைப் பூஜித்துக் கைகூப்பிக்கொண்டு கேட்கத்தொடங்கினர்.

"பரதகுலத்தில் உதித்த அரசரான பிதாமஹரே! அரசனென்னும் இந்தப்பதம் எங்ஙனமுண்டாகி உலகில் நடைபெற்றுவருகிறது? அதனை எனக்குச் சொல்லும். உதிரம், மாம்ஸம், எலும்பு, மஜ்ஜை, சுக்லம், கை, தோள், கழுத்து, இந்திரியம், சித்தம், சரீரம், வயிறு, முகம், முதுகு, நிஸ்வாஸம், உஸ்வாஸம், ப்ராணன், புத்தி, ஸுகம், துக்கம், ஆத்மா, பிறப்பு, இறப்பு, ஸகல குணங்கள் ஆகிய யாவும் மனிதர்கள் யாவருக்கும் ஸமமாயிருந்தும், பெரிய புத்தியுள்ளவர்களும் சூரர்களுமான மனிதர்களுக்கு எங்ஙனம் ஒருவன் யஜமானனாயிருக்கக்கூடும்? சூரர்களும் வீரர்களும் பெரியோர்களும் நிறைந்த பூமி முழுமையையும் எப்படி ஒருவன் ஆளத்தக்கவனாவான்? ஒரு மனிதன் உலகத்தாருடைய ஸந்தோஷத்தை எவ்விதம் அடையத்தக்கவனாவான்? ஒரு மனிதனுடைய தயையையும் கோபத்தையும் காரணமாகக்கொண்டு முறையே உலகம் யாவும் ஸந்தோஷத்தை

யும் துன்பத்தையும் எங்ஙனம் அடைவது கூடும்? உலகம் முழுமை யும் ஈசுவரனிடத்திலிருப்பதுபோல ஒரு மனிதனிடம் வணங்கியிருப் பதைப் பார்த்தால் இதன்காரணம் மிகச் சிறிதாயிருக்க முடியாது. ஆகையால், வாக்குள்ளவர்களிற் சிறந்த அரசரான பரதஸ்ரேஷ் டரே! நான் இதனை உம்மிடமிருந்து கேட்க விரும்புகிறேன். இவ் விஷயத்தின் உண்மையையெல்லாம் எனக்குச் சொல்லவேண்டும்" எனக் கேட்டனர்.

பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "புருஷப்புலியே! ராஜ்யம் உண்டானவிதமனைத்தையும் மிச்சமின்றிக் கவனத்துடன் நீ கேளு. ஆதியில் கிருதயுகத்தில் அரசனும் ராஜ்யமும் தண்டமும் தண்டிப்ப வனுமில்லாமல் பிரஜைகளனைவரும் தர்மத்தாலேயே ஒருவரையொரு வர் ரக்ஷித்துவந்தார்கள். ஏ! பாரத! அவ்விதம் தர்மத்தால் ஒரு வருக்கொருவர் ரக்ஷிக்கப்பட்டுவரும் மனிதர்கள் மிக்க தைன்யத்தை அடைந்தார்கள். சிரமமடைந்த அந்த மனிதர்களை அவிவேகம் பிடித்துக்கொண்டது. அந்த மனிதர்கள் மோகத்துக்கு வசப்பட் டார்கள். மனிதஸ்ரேஷ்டனே! அவிவேகத்தால் அறிவு குறைந்த வுடன் அவர்களுடைய தர்மம் நாசமடைந்தது. பரதஸ்ரேஷ்டனே! தர்மக்குறைவாலும் அறிவின் குறைவாலும் மோகத்திற்கு வசப் பட்ட மனிதர்கள் யாவரும் அப்பொழுது தம்மிடமில்லாத பொருளை அடையவேண்டுமென்னும் லோபமுள்ளவர்களானார்கள். பிரபுவே! விருப்பமுள்ள வஸ்துக்களை அடைய முயற்சி செய்யவேண்டுமென் னுங்காமம் லோபத்திற்குள்ளான மனிதர்களைத் தன்வசமாக்கிக் கொண்டது. காமத்திற்குள்ளான அந்த ஜனங்களை ராகமென்னும் போகவிடாயும் கைப்பற்றிக்கொண்டது. இவ்விதம், மேன்மேலும் ஆசைபிடித்து மனிதர்கள் யாவரும் இன்னது செய்யத்தக்கது இன் னது செய்யத்தகாததென்னும் பகுத்தறிவற்றவரானார்கள். ஓ! யுதிஷ்டிர! அங்ஙனமே சேரத்தகாத மடந்தையர்களைச் சேர்ந்தார் கள்; பேசத்தக்கது பேசத்தகாதது புஜிக்கத்தக்கது புஜிக்கத்தகாதது குற்றமுள்ளது குற்றமில்லாதது ஆகிய இவையனைத்தையும் கைப் பற்றினர்கள். இம்மானிடவுலகம் இப்படித் தர்மவரம்பு அற்றுத் தடு மாறுதலும், வேதம் அக்காலத்தில் ஒழிவடைந்தது. ராஜனே! வேதம் நசித்தலும், அதுகொண்டு வெளியான தர்மமெல்லாம் நாசம் அடைந்தன. புருஷப்புலியே! வேதம் தர்மம் இரண்டும் நாசமடை யவே, தேவர்கள் மிகவும்பயமடைந்து உலகங்களுக்குப் பிதாமஹரும் பகவானுமான பிரம்மதேவரைச் சரணமடைந்து மிக்கதுயரத்துடன் யாவரும் அஞ்சலிசெய்து அறிவிக்கத் தொடங்கினர்கள். 'ஓ! ப

வானே! லோபம் மோஹம் முதலிய தோஷங்களால் மானிடவுலக முழுதும் ஆக்ரமிக்கப்பட்டு ஸநாதனமானவேதமும் விழுங்கப்பட்டது. அக்காரணத்தால் நாங்கள் பயமடைந்தோம். வேதமும் வைதிக தர்மமும் நாசமடைந்த காரணத்தால் மூவுலகிற்கும் அதிபதியான பதவியடைந்த தேவர்கள் யாவரும் மனிதர்களுக்குச் சமமானகதியை அடைந்தார்கள். நாங்கள் கீழுலகத்திற்கு வருஷிப்பவர்களென்றும் பூமியிலுள்ளவர்கள் மேலுலகிற்குத் தக்கயாகங்களை வருஷிப்பவர்களென்றும் விதியிருந்தும் பூமியிலுள்ளவர்களிடம் கர்மங்கள் குறைந்த காரணத்தால் நாங்கள் ஸந்தேகமடைந்தோம். ஓ! பிதாமஹரே! நீங்கள் அருள்கூர்ந்து அனுக்ரஹித்த எங்கள் பெருமைக்குக் குறைவின்றி இந்த நாங்கள் ஸுகித்திருக்கத்தக்க காரியத்தை நீங்கள் இந்த வேளையில் சிந்திக்கவேண்டும்' எனத்தெரிவித்தார்கள்.

பின்பு, பகவானை பிரம்மதேவர், 'தேவஸ்ரேஷ்டர்களே! உங்களுக்குப் பயம்வேண்டாம். இது விஷயத்தில் நான் உங்களுக்குத் தக்கதேக்ஷமத்தைச் சிந்திக்கிறேன்,' என்று தேவர்களனைவருக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு, லக்ஷம் அத்தியாயமுள்ள சாஸ்திரத்தைத் தமதுபுத்தியால் இயற்றினார். அதில் த்ரிவர்க்கமென்று பிரஸித்தி பெற்ற அறம்பொருளின்பங்கள் அவரால் விரிவாகவுரைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்றைத்தவிர நான்காவதான மோக்ஷமென்பது வேறென்றும் அதன் காரணமும் பயனும் வேறென்றும் ஸத்வம், ரஜஸ், தமஸென்னும் அதைச் சேர்ந்த த்ரிவர்க்கம் வேறென்றும் அதில் சொல்லப்படும். [1] ஸமநிலை, வளர்ச்சி, குறையென்னும் த்ரிவர்க்கம், தண்டநீதிக்குரியதாகும். மனம், தேசம், காலம், ஸாதனங்கள், முயற்சியின்பயன், ஸஹாயமனிதர்கள் இவ்வாறும் குறையின்றி நன்முகவிளங்கத் தண்டநீதி காரணமாகும். ஏ! பரதஸ்ரேஷ்ட! கர்மகாண்டம், ஞானகாண்டம் என்கிற இருவகைவேதங்களும், வ்யவஸாயம் வர்த்தக முதலிய தொழில்சாஸ்திரமும், பரிபாலனமுறையும், மற்றுமுள்ள கல்விகள்யாவும் விரிவாக அந்நூலில் எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. ராஜனே! ராஜபுத்திரர்களின் லக்ஷணம், மந்திரிகளின் ஆசையைச் சோதிக்கத்தக்க பல வேஷம்பூண்ட ரஹஸ்யமான தூதர்களின் முறை, பல உபாயங்களுள்ள வெவ்வேறான சாரர்களின் முறை, தேசம் கொடுப்பது பேதித்தல் தண்டம் உபேக்ஷையென்னும் ஐந்துவித உபாயங்கள், மந்த்ராலோசனை, ஆலோசனையை வேறுபடுத்தல், ப்ரமிக்கச் செய்வது, ஆலோசனை ஸித்திப்பது ஸித்தியாததன்பயன் ஆகிய யாவும் அதில் நன்கு விளக்கிக் கூறப்படுகின்

1 'வர்த்தகத் தொழிலுக்கு ஸமநிலையும்; முனிகளுக்கு வளர்ச்சியும்; திருடர்களுக்குக் குறையும்' என்றறிக.

றன. பயத்தாலும் மரியாதையாலும் பொருளாலும் ஏற்படுவதும் மூறையே அதமம் மத்தியமம் உத்தமமென்னும் மூன்றுவிதமான ஸந்தியும் தன் ராஜ்யத்திற்குள்ள பொக்கசப்பெருமையும் மித்திரர்களின் வளர்ச்சியும் பராராஜ்யத்திலுள்ள இவ்விரண்டின் குறைவுமாகிய நான்கு யாத்திரா காலங்களும் த்ரிவர்க்கத்தின் பெருமையும் தர்மமுறைப்படியுள்ள ஜயமும் பொருளுக்காகச் செய்யும் ஜயமும் ஆஸுரஜயமும் அதில் பூர்த்தியாக உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. மந்திரி, ராஜ்யம், கோட்டை, சேனை, கோசம், இவ்வைந்தையும்பற்றிய உத்தமம் மத்தியமம் அதமமென்கிற மூன்று பிரிவுகளுள்ள லக்ஷணமும் வெளிப்படையும் ரஹஸ்யமுமான இருவித தண்டனையும் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளில் வெளிப்படையான தண்டனை தேர், யானை, குதிரை, காலாள், சுமை தூக்குபவன், தூதர்கள், உபாயஞ் சொல்லும் குருக்கள், கப்பல்கள் என்னும் இவ்வெட்டுவகையையும் பற்றியதென்றும், ரஹஸ்யமான தண்டனை ஸர்ப்பமுதலிய ஜங்கமவிஷம், வத்சநாப முதலிய ஸ்தாவரவிஷம், மற்றும்பல விஷப்பொடிகள், ஆடையாபரண முதலிய வஸ்துக்களிலும் அன்ன முதலிய புஜிக்கத்தக்கவைகளிலும் பிரயோகிக்கத்தக்க முறைகள், ஆபிசாரங்கள் எனப் பலவிதமென்றும் விரிவாகக் கூறப்படுகின்றன. வீள்யாட்டுச் சண்டையிலும் சூதாட்டத்திலும் நம்பிக்கையுடன் கூடியதும் ஒன்பதாவது உபாயமென்று வித்வான்களால் சொல்லப்பட்டதுமான கள்ளத்தனமும், அறம்பொருளின்பங்களைக் கெடுப்பதும் இஷ்டம் அனிஷ்டமென்னும் இவ்விரு விஷயங்களிலுமுள்ளதுமான உபேக்ஷையும், இந்திரஜாலமுதலியமாயையும், [1]சுபாசுபங்களைக் குறிப்பிக்கும் பல சகுனங்களும், ரவஷத்தை அடைந்து பகையாளிகளிடம் உபயோகிக்கத்தக்க டம்பமும் வஞ்சகமும், ஸித்தரோஷத்தால்கெடுப்பதும், ரோஷமடையில்லாமல் செய்வதும் அதில் சொல்லப்படுகின்றன. சத்துரு மித்ரன் உதாஸீனனென்னும் மனிதர்களின் மூன்று பிரிவும், நவக்ரஹ நக்ஷத்திரங்களின் வழியைப்பற்றிய குணங்களும், பூமியின் குணங்களும், மந்திரம் யந்திரம் முதலியவைகளால் தன்னை ரக்ஷிப்பதும், ஸமாதானஞ் செய்வதும், புதிதாகச் செய்யும் பல காரியங்களைக் கவனிப்பதும், பலத்தையும் புஷ்டியையும் கொடுக்கத்தக்க பல கல்பஸித்திகளும், பலவிதப்பெயர்களுள்ள யானை குதிரை தேர் காலாட்களின் வியூகங்களும், ஆச்சர்யமாக யுத்தஞ் செய்யு முறையும் கொள்ளிவிழுதல் முதலிய [2] நிபாதங்களும், தூம கேது பூகம்ப முதலிய [3] உத்பாதங்களும், எதிர்க்கும் வழியும்,

---

1 இங்கு ஒரு சொல்விடப்பட்டது. 2 ஆகாயத்தில் தோன்றிக் கீழே விழுவன. 3 ஆகாயத்தில் தோன்றிக் கீழே விழாதன.

ஓடும்வழியும், ஆயுதங்களை அறிவதும், அவைகளைக்கூர்மையாக்குவதும், சேனைகளின் வ்யஸனங்களை அறிவதும், அவைகளைச்சந்தோஷப்படுத்துவதும், பயம் துன்பம் கஷ்டம் இவைகளின் காலமும் அதில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. பரதஸ்ரேஷ்டனே! இன்னும் துந்துபி முதலிய வாத்தியமுழக்கங்களையும் கொடிமரங்களிலுள்ள விசேஷங்களையும் அடையாளமாகக்கொண்டு தன் சேனைகளுக்கு அறிவிக்கவேண்டியவைகளை அறிவிக்கும் வழியும், அதுகொண்டு சத்துருக்களை மதிமயங்கச்செய்வதும், குரூரர்களான திருடர்களும் காட்டாள்களும் தீயையும் விஷத்தையும் இடுகிறவர்களும் சூதானபாவைகளைச் செய்கிறவர்களுமாகிய இவர்களைக்கொண்டு சத்துருராஜ்யத்தைப் பீடிக்கத் தக்கவழியும் கூறப்பட்டிருக்கின்றன. சேனைத்தலைவனைப் பேதித்தல், தான்ய முதலியவற்றை அறுத்தல், யானைகளுக்கு மந்திர முதலியவற்றால் கெடுதிபுண்டுபண்ணல், மற்றுமுள்ள தீங்குகளைச்செய்தல், அன்புள்ளவனை ஆதரித்தல், எஜமானனைக் கைப்பற்றுதல், ஏழு அங்கங்களுள்ள ராஜ்யத்தின் வளர்ச்சி குறை ஸமநிலைகளைக் கவனித்தல், தூதர்களுக்குள்ள ஸாமர்த்தியம், ராஜ்யத்தைப் பெருக்குதல், சத்துரு மித்திர உதாஸீனர்களைப்பற்றிய விரிவு, மேலான பலவான்களை எதிர்ப்பது, அவர்களைத் தடுப்பது, நட்பமான வியவகாரம், துஷ்டர்களை விலக்குதல், மல்லயுத்தம், ஆயுதப்ரயோகப்பயிற்சி, 1 தானம், பொருளீட்டுதல், கூலிக்காரர்களைக் கவனிப்பது, ஜீவனமற்றவர்களைப் போஷிப்பது, கஷ்டஸமயம்பார்த்துக் கொடுப்பது, வ்யஸனங்களில் பற்றில்லாமலிருப்பது, அரசரின் குணங்கள், ஸைன்யபதியின் குணங்கள், பரிவாரங்களுடையனவும் மற்ற ஸாதனங்களினுடையனவுமான குணதோஷங்கள், குற்றமுள்ள பலவித இங்கிதம், அடுத்தவர்களின் ஜீவனம், எங்கும் சங்கையுடனிருத்தல், அஜாக்ரதையில்லாமை, அடையாதபொருளை அடைவது, அடைந்ததை விருத்திசெய்வது, பெருகினதிரவியத்தைப் பாத்திரமறிந்து சாஸ்திரப்படிக் கொடுப்பது, முக்கியமாய்த் தர்மார்த்தகாமங்களுக்கும் துன்பங்களின் நிவிருத்திகளுக்கும் உபயோகப்படுத்துவது ஆகிய இவை அந்நூலில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. பரதஸ்ரேஷ்டனே! வேட்டை சொக்கட்டான் குடி பெண்டிர்கள் என்னும் நான்குவித காமவ்யஸனங்கள், கடுஞ்சொல் குரூரத்தன்மை கடுந்தண்டம் அநீதியான சரீரதண்டனை பொருளை அபகரித்தல் தேசம்விட்டு விலக்குவது என்னும் ஆறுவிதமான கோபவ்யஸனங்கள், பலவித யந்திரங்களைச் செய்தல், அவைகளை உபயோகித்தல், பகைவர்களாலுண்டாகும்

1 வேறுபாடம் கொள்ளப்பட்டது.

துன்பம், அதன் மறுப்பு, கொடிமரங்களை முறித்தல், தேவதைகளுக்கிருப்பிடமான கோயில்மரங்களை ஒடித்தல், தகைதல், கிருஷி முதலியவற்றின் பயனை அழித்தல், ஆயுதங்கள், கவசம், [1] உபாயங்கள், பணவம் ஆனகம் சங்கம் பேரி ஆகியவாத்தியங்கள், இரத்தினம் பொன் பசுக்கள் பூமி ஆடை வேலைக்காரிகள் என்னும் ஆறுவிதத் திரவியங்களையும் தேடுதல், சத்துருக்களின் மர்மம், தேடின திரவியத்தின் தானம், ஸாதுக்களைப்பூஜித்தல், கற்றோர்களுடன்சேர்க்கை, ஜபஹோமங்களின் விதியைஅறியும்வழி, ஸுவர்ணமுதலிய மங்கள வஸ்துக்களை ஸ்பரிசித்தல், சரீரத்தைஅலங்கரித்தல், போஜனவிதி, எப்பொழுதும் ஆஸ்திக்கியம், ஒருவனுகச்செய்யும் முயற்சி, ஸத்யம், இனிமையான வாக்கு, சிறந்த ஸபையைக்கூட்டுதல், நேரிலும் பிறராலும் செய்யத்தக்க வீடுகளுக்குரிய வேலைகள், ஜனங்கள்கூடும் எல்லா இடங்களிலுமுள்ளவைகளும் எதிரிலும் மறைவிலும் உள்ளவைகளுமான வேலைகள், ஜனங்களின் விருத்தியை எப்போதும் கவனித்தல், பிராம்மணர்களைத் தண்டியாமலிருத்தல், தண்டம்செலுத்தும் உபாயம், அடுத்துப்பிழைப்பவன் ஜாதிகுணங்களின் பெருமை, நகரத்தார்களைக்காத்தல், ராஜ்யத்தைப்பெருக்குதல், ஒவ்வொரு திக்கிலும் சத்துரு மித்திரன் உதாஸீனன் என்னும் மூன்றுவிதமாக நான்குதிக்கிலுமுள்ள பன்னிரண்டுவித அரசர்களைப்பற்றிய ஆலோசனை, ஆயுள்வேதத்திற்சொல்லிய சரீரத்தைப்பற்றிய [2] எழுபத்திரண்டுவிதமான ஸம்ஸ்காரங்கள், தேசம் ஜாதி குலங்களின் தர்மங்கள், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்கள், பொருள்விருப்பம், அதனைஅடையத்தக்க பலவித உபாயங்கள், தனசாலையை வளரச்செய்யும் வேலை, மாயாஸித்தி, ஆறு குளங்களைக் கெடுப்பது இவையனைத்தும் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிக தக்ஷிணைகொடுக்கும் ஓ! அரசஸ்ரேஷ்டனே! உலகம் நல்வழியைவிட்டு விலகாதிருக்கத்தக்க உபாயங்களையெல்லாம் பிரம்மதேவர் அந்த நீதிசாஸ்திரத்தில் உபதேசித்தார். இவ்விதம், சுபமான நீதிசாஸ்திரத்தை இயற்றின அந்தப் பிரபுவும் பகவானுமான பிரம்மதேவரால் ஸந்தோஷத்துடன் இந்திரன்முதலான எல்லாத் தேவர்களையும் நோக்கி, 'உலகத்தினுபகாரத்திற்கும் தர்மார்த்தகாமம் என்னும் த்ரிவர்க்கம் நிலைபெறுவதற்கும் வெண்ணெய்போல் வாக்கின் ஸாரமான இந்தவித்தை சொல்லப்பட்டது. சிக்ஷாரக்ஷா இவ்விரண்டுடன்சேர்ந்து உலகங்களைப் பாதுகாக்க ஆதாரமான தண்டத்

---

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

2 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

துடன்கூடிய இந்த நீதிசாஸ்திரம் உலகங்களில்தொடர்ந்து ஸஞ்சரிக்கும். தண்டத்தால் உலகத்தைப் பயன்படச்செய்வதாலும் தண்டஞ் செலுத்தும்வழியைக்கூறுவதாலும் இந்நூல் தண்டநீதியென்று பிரஸித்தமாய் மூவுலகங்களிலும் வழங்கும். தர்மார்த்தகாமமோக்ஷங்களனைத்தையும் உபதேசிப்பதும் ஸந்திவிக்ரஹ முதலிய ராஜ்யத்தின் ஆறுகுணங்களின் ஸாரத்தை முக்கியமாகக்கூறுவதுமான இந்த நீதிசாஸ்திரம் வருங்காலத்திலுள்ள மஹாத்மாக்களிடம் நிலைபெற்றிருக்கும்' என்றுசொன்னர்.

பிறகு, ஆதியும் அந்தமும் அற்றவரும் பலரூபங்களுள்ளவரும் ஞானசக்தி முதலிய சக்திகளுடன்கூடினவரும் தாரகவித்தைமுதலிய எல்லாவித்தைகளுக்கும் பதியும் நித்தியமான அணிமா முதலிய அஷ்டைச்வரியம் பொருந்தினவரும் நித்தியரும் உமாபதியும் விசாலாக்ஷரும் ஸுகத்தைச்செய்கிறவரும் தேவருமான சிவபெருமான் அந்த நீதிநூலை முதலில் கிரகித்தார். உலகங்களுக்குப் பதியும் அழிவற்றவருமான சங்கரர் உலகத்தைப்படைக்கும் வித்தையைப் பிரம்மதேவருக்கு அளித்துப் பிரம்மாண்டத்தை உண்டுபண்ணின பிரபுவாயிருந்தும் பிரம்மதேவரின் ஸந்தோஷநிமித்தமாகத் தம்புத்திரரான அவரை, பிதாவாகவைத்துப் பிதாவான தாம் அவருக்குப் புத்திரராக அவர்நெற்றியிலிருந்து வெளிவந்து குழந்தைவடிவமாய்க் கொடுமையாகக் கூச்சலிட்டார். அவருக்கு வேண்டி எல்லா உலகங்களையும் படைத்தவரும் உலகங்களுக்குப் பிதாமஹருமான பிரம்மதேவர் பொன்மயமான அன்னபக்ஷியாய்த் தோன்றினர். எண்ணற்ற ஆயிரக்கணக்கான ருத்திரர்களுக்கு அழிவற்ற இடமானவரும் எல்லாப்பிராணிகளுக்கும் தேவரும் நித்தியரும் மஹாதேவருமான அந்தச்சிவபிரான் ஒவ்வொரு யுகங்களிலும் பிராணிகளின் ஆயுளின் குறைவைஅறிந்து பிரம்மதேவரியற்றியதும் பெரிய அஸ்த்ரவித்தைகளுள்ளதுமான அந்நீதிசாஸ்திரத்தைப் பதினாயிரம் அத்தியாயமுள்ளதாகச் சுருக்கினர். வைசாலாக்ஷமென்று பிரஸித்தமான அந்தச் சுருக்கத்தை மிக்க தவம்பொருந்தியவனும் பிராம்மணர்களுக்கு மிக்கநன்மையைக் கருதுபவனுமான தேவேந்திரன் தேவரான மஹேச்வரரிடமிருந்து கற்றான். அப்படிக் கற்ற அந்தச்சாஸ்திரத்தைச் சத்துருபட்டணங்களைப் பிளக்கிறவனான இந்திரனும் பிராணிகளின் ஹிதத்தை விரும்பிப் பாஹுதந்தகமென்னும் பெயருள்ளதாக ஐயாயிரம் அத்தியாயங்களாகச் சுருக்கிச்செய்தான். ஐய! அந்தச் சுருக்கத்தை அறிவில் ஈசனென்றுசொல்லத்தக்க பிருஹஸ்பதி மூவாயிரம் அத்தியாயங்களாகப் பார்ஹஸ்பத்தியமெனப் பெயருள்ள

தாகச் சுருக்கிச்செய்தார். அளவில்லாத அறிவுள்ளவரும் பெரிய கீர்த்திபெற்றவரும் யோகத்திற்குக் குருவுமான சுக்ராசாரியர் அந்த சாஸ்திரத்தை ஆயிரம் அத்தியாயங்களாகச் சுருக்கிச்செய்தார். ஏ! பாண்டவ! இவ்விதம் உலகங்களை அனுஸரித்து ஜனங்களுடைய ஆயுளின் குறைவையும்அறிந்து மஹரிஷிகளால் இந்த நீதிசாஸ்திரம் சுருக்கிக்கூறப்பட்டது.

பிறகு, தேவர்கள் உலகங்களைப் பரிபாலிப்பவரான விஷ்ணுவிடம்சென்று மனிதர்கள் யாவரையும் ஒருவழுக அடக்கியாளத்தக்க பெருமைபொருந்திய ஒருவனை அளிக்கும்படிவேண்டினர்கள். பிறகு, தேவரும் பிரபுவுமான பகவான் நாராயணரும் ஆலோசித்துத் தம்மனத்திலிருந்து மிக்கதேஜஸுள்ள விராஜ ஸென்னும் புத்திரரை உண்டுபண்ணினர். மஹாபாக்கியமுள்ள விராஜ ஸானவர் பூமியில் அரசாள விரும்பவில்லை. சாஸ்திரப்பயிற்சியுள்ள அவர்புத்தியானது ஸந்யாஸத்திலேயே சென்றது. ஓ! பாண்டவ! அவருக்குப் புத்திரராக உதித்தவரும் மனிதர்களில் மேலான சக்தியுள்ளவருமான கீர்த்திமானென்பவரும் மோக்ஷத்தில் புத்திசென்றவரானர். கீர்த்திமானுடைய புத்திரரான கர்த்தமரும் பெருந்தவஞ் செய்யச்சென்றார். ஸ்ருஷ்டிகர்த்தரான கர்த்தமரின் புத்திரனும் மிக்க பராக்ரமமுள்ளவனும் யோக்யனுமான அனங்கனென்பவன் தண்ட நீதியில் மிகச்சமர்த்தனாக ப்ரஜைகளைப் பாதுகாத்துவந்தான். அனங்கனுக்குப் புத்திரனை அதிபலனென்பவன் பெரிய ராஜ்யத்தை அடைந்து நீதியுடன் சிறிதுகாலம் செங்கோல் செலுத்திவந்தான். பின்னொருகாலத்தில் நல்ல உருவமுள்ளவரும் ஒப்பில்லாத நற்குணமுள்ளவரும் பதிவ்ரதையும் நல்லபாக்யத்தால் நிறைந்தவரும் தர்ம ராஜரின் [1] மானஸபுத்திரியுமான ஸுநீதையென்னும் பெண்மணியை அடைந்து காமத்தால் அறிவுமயங்கி ஐம்பொறிகளுக்கு வசப்பட்டவனனன். மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற ஸுநீதையும் (அவனிடமிருந்து) வேனனைப் பெற்றனள். ராகத்வேஷங்களுக்கு வசப்பட்டுப் பிராணிகளிடம் தர்மமின்றி நடக்கும் அவ்வேனனை வேதம் அறிந்தரிஷிகள் மந்திரத்தால் பரிசுத்திபெற்றகுசங்களால் கொன்றார்கள். ஓ! பாரதனே! முனிவர்கள் அந்த வேனனுடைய வலத்தொடையைக்கடைய அதிலிருந்து குரூபியும் அசுத்தனும் குள்ளனும் சிவந்த கண்ணும் கறுத்தகேசமுமுள்ளவனும் தீயால்கருகின கம்பம்போன்றவனுமான ஒருபுருஷன் உண்டானன். அப்புருஷனை வேதமறிந்த முனிவர்கள், 'நிஷீத' என்னும்பதத்தால் உட்காரென்று சொன்னர்கள்.

---

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

அந்தக்காரணத்தால் அவனிடமிருந்து மலைகளிலும் காடுகளிலுமுள்ள குரூரர்களான நிஷாதர்களும் விந்தியமலையை வாஸஸ்தானமாகக் கொண்ட மிலேச்சர்களும் பலவாயிரமாக உண்டானார்கள். அம்முனிவர்கள் திரும்பவும் அவ்வேனனின் வலக்கையைக் கடைந்தார்கள். அதிலிருந்து உருவத்தால் வேறு இந்திரன் போன்றவனும் கவசம் பூண்டவனும் கத்திகட்டினவனும் கையில் அம்பும் வில்லும் எடுத்தவனும் வேதவேதாங்கங்களறிந்தவனும் தனுர்வேதத்தில் கரைகண்டவனுமான ஒரு புருஷன் உண்டானான். ராஜனே! மனிதர்களில் உத்தமனான அவனிடம் தண்டநீதி முழுமையும் அடைந்தது. பிறகு, வேனனின் புத்திரனான அப்புருஷன், கைகட்டிக்கொண்டு அந்த மஹரிஷிகளை நோக்கி, 'ஓ! முனிவர்களே! மிகஸூக்ஷ்மமும் தர்மார்த்தங்களைச் காணத்தக்கதுமான புத்தி எனக்குண்டாயிருக்கிறது. இந்தப் புத்தியுடன் நான் செய்யவேண்டிய காரியத்தை உள்ளபடி எனக்குச் சொல்லவேண்டும். நீங்கள் எனக்குக் கட்டளையிடும் பயனுள்ள காரியத்தை நான் தங்களுக்குச் செய்ய ஸித்தனாக இருக்கிறேன். இதில் சங்கைவேண்டாம்' என்று சொன்னான். அங்ஙனஞ் சொன்ன அப்புருஷனை நோக்கி அந்தப் பெரிய ரிஷிகளும் தேவர்களும், 'ஆசை, கோபம், லோபம், அகங்காரம் இவைகளைத் தூரத்தில் விலக்கிவிட்டுப் பிரியத்தையும் அப்பிரியத்தையும்விட்டு எல்லாப் பிராணிகளிடத்திலும் ஸமபுத்தியுள்ளவனாக விதிப்படி தர்மகாரியத்தைச் சங்கையின்றி நீ செய்துவரவேண்டும். அடிக்கடி தர்மத்தைக் கவனித்துவரும் நீ உலகத்தில் தர்மத்தைவிட்ட எவ்வித மனிதனையும் உன்கைகளால் சிக்ஷிக்கவேண்டும். மனத்தாலும் வாக்காலுங் கர்மத்தாலும் பூமியிலுள்ள (வேதமும் பிராம்மணர்களும் தர்மமுமாகிய) பிரம்மத்தை எப்பொழுதும் ரக்ஷிக்கிறேனென்னும் பிரதிஜ்ஞையிலிருக்கவேண்டும். சத்ருக்களைத் தபிக்கச் செய்கிறவனே! தண்டநீதியை மூலமாகக்கொண்ட தர்மத்தைச் சங்கையின்றிச் செய்வதுடன் ஒரு காலத்திலும் இந்திரியங்களுக்கு வசப்பட்டவனாயிருப்பதில்லையென்றும் பிராம்மணர்களைத் தண்டிப்பதில்லையென்றும் உலகம் யாவும் ஒன்றோடொன்று கலவாவண்ணம் ரக்ஷிப்பேனென்றும் எங்களுக்கு உறுதிமொழி சொல்லவேண்டும்' என்று சொன்னார்கள். இங்ஙனம் சொன்ன ரிஷிகளுடன் கூடின தேவர்களை நோக்கி வேனனின் புத்திரன், 'ஓ! தேவஸ்ரேஷ்டர்களே! பிராம்மணர்களின் ஸஹாயம் எனக்கு இருக்குமானால் இங்ஙனமே ஆகட்டும்' என்று சொல்ல, பிரம்மவாதிகளான அவர்கள் யாவரும், 'அப்படியே ஆகட்டும்' என்று அவனை அனுக்ரஹித்தார்கள். வேதங்களின் நிதிபோல

விளங்கும் சுக்ராசாரியர் அவனுக்குப் புரோஹிதரும், வாலகில்ய முனிவர்களும் ஸாரஸ்வத்யகணமும் மந்திரிகளும், பெருமை பொருந்திய கர்க்கமஹரிஷி ஜ்யோதிஷம் சொல்லுகிறவருமானர்கள். ஸ்ரீ விஷ்ணுபகவான், விரஜஸ், கீர்த்திமான், கர்த்தமன், அனங்கன், அதிபலன், வேனன், அவன் குமாரனை பிருது என்னும் முறைப்படி விஷ்ணுமுதல் இவன் எட்டாமவனென்பது உலகில் மிக்க பிரஸித்தமானது. அதுமுதல் ஸூதரும் மாகதரும் இவனுக்கு வந்திகளாயிருந்தார்கள். பிரதாபமுள்ள வேனபுத்திரனைபிருதுராஜன் ஸந்தோஷத்துடன் அவர்களில் ஸூதருக்கு அநூபமென்னும் தேசத்தையும் மாகதருக்கு மகததேசத்தையும் அளித்தனன். அந்தப் பிருதுவானவன், மிகவும் மேடுபள்ளமாயிருந்ததாக நாம் கேள்விப்படும் பூமியை எங்கும் ஸமமாகச் செய்தான். எல்லா மன்வந்தரங்களிலும் பூமி மேடுபள்ளமுள்ளதாகிறது. ஓ! மஹாராஜனே! பிருதுவானவன் தன் வில்லின் முனையால் மலைகளைஉடைத்து நாலு பக்கங்களிலுமுள்ள கற்குவியல்களை எடுத்து இப்பூமியைஸமமாக்கினன். தேவேந்திரனும் பிரம்மாவும் மஹாவிஷ்ணுவும் மற்றத்தேவர்களும் ரிஷிகளும் பிரஜைகளைப்பாதுகாக்கும் அதிகாரத்தில் அவனுக்கு அபிஷேகஞ் செய்தார்கள். ஏ! பாண்டவ! பூமிதேவியானவள் ரத்தினங்களை எடுத்துக்கொண்டு பிருதுமஹாராஜனை நேரில்வந்து கண்டனள். நதிகளுக்குப்பதியான ஸமுத்திரராஜனும் மலைகளிற் சிறந்த ஹிமவானும் ரத்தினங்களுடன் அவனை வந்து கண்டார்கள். ஓ! யுதிஷ்டிர! இந்திரனும் குறைவற்ற திரவியத்தை அவனுக்கு அளித்தான். பொன்மலையாண மஹாமேருவும் ஸுவர்ணத்தைக் கொடுத்தது. யக்ஷராக்ஷஸர்களுக்குத்தலைவனும் ஐஸ்வர்யமுள்ளவனுமான குபேரனும் அறம்பொருள் இன்பங்களை அனுபவிக்கத்தக்க தனத்தை அளித்தான். ஓ! பாண்டவ! பிருதுமஹாராஜாவின் ஸங்கல்பத்திற்குத்தக்கபடி கோடிக்கணக்கான குதிரைகளும் ரதங்களும் யானைகளும் மனிதர்களும் உண்டானர்கள். அவன் காலத்தில் தூப்பிக்ஷமும் மனக்கவலைகளும் வியாதிகளும் கிழத்தனமும் திருடர்பயமும் பாம்பு முதலியவைகளின் பயமும் ஜனங்களுக்கு ஒருபொழுதுமில்லை. பூமி, பயிர்கள் ஓங்கி வளர்ந்து விளங்கிற்று. அவன் ஸமுத்திரத்தை எதிர்த்துச் சென்றபோது ஸமுத்திரஜலம் கல்லுக்கொப்பான திடமுள்ளதாயிருந்தது. மலைகளும் விலகி அவனுக்கு வழிவிட்டன. அவன்கொடி எங்கும் பங்கம் அடைந்ததில்லை. அந்த அரசனால் இப்பூமியிலிருந்து பதினேழுவிதமான பயிர்கள் கறக்கப்பட்டன. யக்ஷராக்ஷஸாகர்களுள் எவன் எவனுக்கு எது எது இஷ்டமோ அவன் அவனால் அது அதுவும்கறக்கப்

பட்டன. மஹாத்மாவான அவன், இம்மானிடலோகத்தில் தர்மத்தை மேலாக விளங்கச் செய்து, பிரஜைகளையெல்லாம் ரஞ்சனஞ் செய்த காரணத்தால் 'ராஜா' என்றும் பிராம்மணர்களுக்குள்ள [1] க்ஷத்தத்தை நீக்கி ரக்ஷித்தகாரணத்தால் க்ஷத்திரியனென்றும் சொல்லப்பட்டான். அவனுல் பூமி தர்மம்ஒங்கிச் செழித்துப் பிரஸித்திபெற்ற காரணத்தால் ஸாதுக்கள் இப்பூமிக்குப் பிருதிவியென்று பெயர் வழங்கினர்கள். ஸநாதனரான ஸ்ரீ விஷ்ணுபகவான் ராஜாவான இவனை ஒருவரும் மீறி நடவாமலிருக்கும்படி அனுக்ரஹஞ் செய்து உலகமரியாதை நிலைபெறும்படி செய்து, பிறகு, தம் அம்சத்தால் அவனிடம் பிரவேசஞ் செய்தார். அந்தக் காரணத்தால் இவ்வுலகம் அரசர்களைத் தேவர்களுக்கொப்பாக வணங்கிவருகிறது.

சாரர்களின் ஸஞ்சாரத்தால் உலகவிருத்தாந்தத்தை எப்பொழுதும் பார்த்துச் செங்கோல் செலுத்தி ரக்ஷித்துவரும் அரசனை எவனும் மீறி நடக்கத்தக்கவனல்லன். ராஜஸ்ரேஷ்டனே! தன் சரீரத்தாலும் இந்திரியங்களாலும் ஸமமாயிருந்தாலும் மற்றவர்களுக்கு அரசனுடைய செய்கை மிகச்சுபமானதால் அவ்வரசனுக்குப் பெருமையைக்கொடுக்கும் தெய்வகுணமின்றி உலகம் எந்தக் காரணத்தால் அடங்கி நிற்கக்கூடும்? அப்பொழுது, ஸ்ரீ விஷ்ணுபகவானுடைய நெற்றியிலிருந்து பொற்கமலம் ஒன்று உண்டாயிற்று. ஏ! பாண்டவ! பிறகு, அந்தக் கமலத்தினின்றும் தர்மதேவதையான லக்ஷ்மிதேவி தோன்றினுள். லக்ஷ்மிதேவியிடமிருந்து தர்மத்திற்குரியபொருள் உண்டாயிற்று. பிறகு, அப்பொருளும் தர்மமும் லக்ஷ்மியும் ராஜ்யத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்வர்க்கலோகம் சென்ற உத்தமபுருஷர்கள் அவ்வுலகத்திற்குரிய புண்ணியத்தை அனுபவித்தபின் தண்டநீதியில் ஸமர்த்தரும் ஸ்ரீ விஷ்ணுபகவானுடைய மஹிமையுடன் கூடினவரும் அறிவுள்ளவருமான பூவுலகின் அரசராகப் பிறந்து மஹிமைபெற்றிருக்கிறார்கள். ஆகையால், தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வரசனை மீறி நடப்பவன் எவனுமில்லை. ஏ! ராஜஸ்ரேஷ்ட! நற்கருமத்தின் பயன் மிகச் சுபமாகையால் உலகம் சரீர முதலியவற்றில் ஸமமாயிருந்தும் அரசனென்ற ஒருவன் கட்டளையில் அடங்கி அவனுக்கு வசப்பட்டு அனுஸரித்துச் செல்லத்தக்கதாயிற்று. அழகான உருவமுள்ளவனும் நல்லபாக்கியமுள்ளவனும் பிரபுவுமான அரசனைக்கண்டு அவன் முகத்தைப்பார்த்த மனிதர்யாவரும் அவனுக்கு வசப்படுவார்கள். அவனுடைய தண்டத்தின் பெருமையைக்கொண்டு தெளிவான நீதியாலும் நல்ல நடையாலும்

---

[1] துன்பம்.

சாரர்களாலும் இவ்வுலகம் எங்கும் வியாபிக்கப்பட்டது. ஓ! யுதிஷ்டிர! பிரம்மதேவரியற்றிய அப்பெரிய சாஸ்திரத்தில் ஆகமமும், ஸநாதனர்களான மஹரிஷிகளின் உத்பத்தியும், தீர்த்தங்களின் உத்பத்தி முறையும், க்ஷத்திரியர்களின் பரம்பரையும், நான்கு ஜாதியும், நான்கு ஆஸ்ரமங்களும், நான்குவேதங்களும், வைதிகதர்மமும், உபவேதங்களும், இதிஹாஸங்களும், நியாயமும், தவமும், ஞானமும், அஹிம்ஸையும், ஸத்தியமும், தானமும், மாத்ஸரியமில்லாமையும், 1 பெரியோர்களின் ஸேவையும், சுத்தியும், முயற்சியும், எல்லாப் பிராணிகளிடமும் தயையும், பூமியில் வழங்கிவரும் மற்றுமுள்ளயாவும் சந்தேகமற உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், பாண்டுபுத்ரனை அரசஸ்ரேஷ்டனே! உலகத்தில் அரசர்கள் தேவர்களுக்கொப்பானவர்களென்று எப்பொழுதும் அறிஞர்கள் அறிவிக்கிறார்கள். அரசர்களின் பெருமைக்குக்காரணமான இவையாவும் உனக்கு உபதேசிக்கப்பட்டன. பரதஸ்ரேஷ்டனே! இதில் வேறு என்ன சொல்லவேண்டியிருக்கிறது?" என்று சொன்னார்.

ஐம்பத்தோன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் ராஜதர்மத்தில் சில ஸந்தேகங்களைக்கேட்டதும், பீஷ்மர் நான்கு ஜாதி தர்மங்களையும் கூறியதும்.)

பிறகு, யுதிஷ்டிரமஹாராஜர், பிதாமஹரான பீஷ்மரைத் திரும்பவும் நமஸ்கரித்துக் கைகூப்பிவணங்கி நின்று கேட்கத்தொடங்கினர். "ஓ! பரதஸ்ரேஷ்டரான பிதாமஹரே! (அநுலோமம் பிரதிலோம முதலிய) எல்லாச்சாதிகளுக்கும் (பொதுவான) தர்மங்கள் எவை? (பிராம்மணர் முதலிய) நான்குஜாதிகளுக்கும் அவைகளுக்குரிய ஆஸ்ரமங்களுக்குமுள்ள விசேஷதர்மங்கள் எவை? க்ஷத்திரியர்களின் தர்மங்கள் எவை? ராஜ்யமும் ராஜாவும் விருத்தியடையக்காரணம்எது? ஏ! பரதஸ்ரேஷ்டரே! பிரஜைகளும் வேலைக்காரர்களும்எந்தக்காரணத்தால் விருத்தியடைகிறார்கள்? கோசம், கோட்டை, தண்டம், துணைவர்கள், மந்திரிகள், ரித்விக்குக்கள், புரோஹிதர்கள், ஆசாரியர்கள் ஆகியவர்களை எவ்விதமிருந்தால் அரசன் விலக்கவேண்டும்? ஆபத்துள்ளகாலத்தில் அரசன் எவர்களை நம்பவேண்டும்? அரசன் எதிலிருந்து தன்னை உறுதியாகக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்? த்வைதீ

---

1 இங்கு ஒரு சொல் விடப்பட்டது.

பாவத்தில் ஊழியக்காரர்களுக்கு எவ்விதம் சபதமிருக்கவேண்டும்? அச்சபதம் மீறிய அதர்மத்தின் பயன் யாது? இவையனைத்தையும் இவற்றின் வியவகாரத்தையும் எனக்குச் சுருக்கியும் விரித்தும் உள்ள படி உபதேசித்தருள்க" என்று வினவினர்.

பீஷ்மர், "பெருமையுள்ள தர்மத்தையும் கர்த்தரான ஸ்ரீகிருஷ்ணனையும் அந்தணர்களையும் பணிந்து சாஸ்வதமான தர்மங்களைச் சொல்லத் தொடங்குகிறேன். கோபமில்லாமையும் ஸத்யவசனமும் எல்லாவித தானமும், தன் தாரத்தினிடத்தில் பிரஜையை உண்டுபண்ணுவதும், சுத்தியும், துரோகமில்லாமையும், நேர்மையும், போஷிக்கத்தக்கவர்களைப் போஷித்தலுமாகிய இவையெல்லாம் எல்லாச் சாதிக்குமுள்ள தருமங்களாகும். ஏ! மஹாராஜ! பிராம்மணஜாதியின் தருமத்தை உனக்குச் சொல்லுகிறேன். அதில் முதல் ஆஸ்ரமியான [1]வடுவின் ஸ்நாதனமான தர்மம், அடக்கம் வேதமோதல் ஓதுவித்தல் இம்மூன்றிலும் முடிவுபெறும். அத்தகைய தன்தர்மமின்றி வேறெதிலும் அணுகாமல் கல்வியில் திருப்தி கொண்டு சாந்தனுயிருக்கும் அந்த வடுவுக்குத் தன் முயற்சியின்றித் தனம் கிடைக்குமாகில், விதிப்படி தாரத்தை அடைந்து ஸந்ததி அடையவேண்டும். அன்றியும், தானத்தையும் யாகத்தையும் செய்வதுடன் அதிதிமுதலியவர்களுக்குப் பங்கிட்டு மிச்சமான பொருளைப் புசிக்கவேண்டுமென்று ஸாதுக்கள் அறிவிக்கிறார்கள். பிராம்மணன், மற்றதைச்செய்தாலும் செய்யாவிட்டாலும், வேதமோதல் ஒன்றால் தர்மம் நிறைந்தவனாகிறான். அவன் [2]மைத்ரன் என்று சொல்லப்படுகிறான். வாங்கிக்கொள்ளுதலும் யாகம் செய்வித்தலும் ஓதுவித்தலுமின்றித் தானம், யாகம், வேதம் இவைகளை முறையே கொடுப்பது செய்வது ஓதுவது இம்மூன்று மட்டும் அரசர்களின் தருமமாகும். (க்ஷத்திரியன்) பிரஜைகளைக் காப்பதுடன் திருடர்களை அடக்குவதில் விடாமுயற்சியுள்ளவனும் யுத்தத்தில் பராக்ரமமுள்ளவனுமாயிருக்க வேண்டும். கல்விகளைக் கற்று யாகங்களையும் செய்து யுத்தத்திலும் ஜயம்பெற்று விளங்கும் அரசர்கள் உலகத்தை ஜயிக்கும் க்ஷத்திரியர்களில் உத்தமர்களாவார்கள். போரிற்சென்று சரீரத்தில் காயமின்றித் திரும்பிவரும் க்ஷத்திரியனுடைய அக்காரியத்தை மூத்தோர்கள் புகழ்கிறதில்லை. இவை க்ஷத்திரியர்களைக்

---

1 பிரம்மசாரி.

2 'உலகநண்பன்' என்பது பழையஉரை. க்ஷத்திரியனை ஐந்திரனென்று பின்கூறுதலால் மைத்ரனென்னும் பதத்திற்கு மித்ரனைத் தேவதையாகக் கொண்டவன் என்பது பொருத்தமானது.

குரிய முக்கியமான தருமங்கள். இவைகளிலும், தானமும் யாகமும் வேதமும் சௌமத்திற்காகவும் திருட்டை அடக்குவது அவசியமான கடமையாகவும் விதிக்கப்படுகின்றன. ஆகையால், தருமத்தை விரும்பும் அரசன் விசேஷமாகப் போர் செய்யவேண்டும். அரசன் பிரஜைகளையெல்லாம் தம்தம் தருமத்தில் நிலைக்கச்செய்து எந்தக் காரியத்தையும் கடுமையின்றித் தருமப்படி நடத்திவரவேண்டும். [1]ஐந்திரனென்று சொல்லப்படும் அரசன் மற்றதைச் செய்தாலும் செய்யாவிடினும் பாலனம்ஒன்றில் அவன் தர்மம் யாவும் முடிவு பெறும். சாஸ்வதமான வைஸ்யரின் தர்மத்தையும் உனக்குச் சொல்லுகிறேன். தானமும், அத்தியயனமும், யாகமும், அசுத்தமின்றிப் பொருள்சேர்ப்பதும், தந்தையானவன் மகனைப் பார்ப்பது போலப் பசுக்களைக் கவனித்துப் பாதுகாப்பதும் வைசியரின் தருமமாகும். இவையன்றி வேறு எவ்விதகர்மமும் வைஸ்யனுக்குத் தருமமாகாது. பிரம்மதேவர் பிராணிகளையெல்லாம் படைத்துப் பாதுகாக்கும்படி பிராம்மணர்களிடத்திலும் அரசர்களிடத்திலும் அளித்ததுபோலப் பசுக்களையெல்லாம் படைத்துப் பாதுகாக்கும்படி வைஸ்யனிடம் ஒப்பித்தார். அவ்விதம் பசுக்களைக்காத்துவரும்வைஸ்யன் மிகுந்தலாகத்தைப் பெறுவான். அவன் தொழிலையும் ஜீவனத்தையும் சொல்லுகிறேன். தான் மேய்த்துவரும் பசுக்களில் ஆறில் ஒன்றின் பாலையும் நூறுபசுக்களில் வருஷம் ஒருமுறை ஒருபசு காளை இரண்டையும் கூலியாக அடைவது நியாயமாகும். [2]வர்த்தகத்தில் கொள்முதல் தொகையில் ஏழிலொன்று லாபம் பெறுதல் நியாயமாகும். வருஷம் ஒருமுறை முடிவுபெறும் பயிர்களுக்கும் மற்றுமுள்ள விதைகளுக்கும் கவயசிருங்கமுதலிய வர்த்தகத்திற்கும் இவ்வேழில் ஒருபாகமே லாபமாகும். விலையுயர்ந்த ஒருவகை மிருகத்தின் குளம்பு முதலிய வஸ்துக்களின் வர்த்தகத்தில் பதிணேழில்ஒன்று தான் லாபம்கூடும். வைஸ்யன் பசுக்களைக் காக்கமாட்டேனென்று நினைப்பது கூடாது. விருப்பமுள்ள வைஸ்யனிருக்கையில் மற்றெவனும் எவ்வகையிலும் பசுக்களைக் காப்பது நீதியன்று. பாரதனே! சூத்ரனுடைய தர்மத்தையும் உனக்குச் சொல்லுகிறேன். பிரம்மதேவர் மேற்சாதிகளுக்குப் பணிவிடை செய்யக்கருதிச் சூத்திரனைப் படைத்தபடியால் மேற்குலத்தோரின் பணிவிடை அவனுக்குத் தர்மமென விதிக்கப்படுகிறது. சூத்ரன் அஸூயையின்றி மூன்றுவருணத்தாருக்கும் பணிவிடைசெய்தால் பெரிய ஸுகம் பெறுவான். சூத்

---

1 இந்திரனைத் தேவதையாகக் கொண்டவன்.

2 'லப்தாத்' என்கிற பாடம் கொள்ளப்பட்டது.

திரன் எந்தக் காலத்திலும் எவ்விதத்திலும் பொருளைச் சேர்க்கக் கூடாது. தாழ்ந்த பிறவியான அவன் தனமடைந்தால் மேன்மக்களைத் தன்னுள்ளடக்க முயல்வான்; ஒரு ஸமயம் அரசனுமதி பெற்றுத் தர்மம் ஒன்றைக்கருதிப் பொருளைச் சேர்ப்பது அநீதியாகாது. அவன்தொழிலையும் அவன் பிழைக்கும் வழியையும் சொல்லுகிறேன். மூன்று வருணத்தாரும் சூத்திரனை அவசியம் போஷிக்கவேண்டும். ஊழியஞ் செய்யும் சூத்திரனுக்குப் பழையகுடை, விசிறி, பாதுகை, விலாமிச்சந்தட்டி, தமக்கு உடுக்கத்தகாத கிழிந்த ஆடைகள் ஆகிய இவைகளை த்விஜாதிகள் அளிக்கவேண்டும். இந்த வஸ்துக்கள் தர்மப்படி அவனுடைய தனமாகும். பணிவிடை செய்யக்கருதித் தன்னைவந்தடுத்த சூத்திரனுக்கு த்விஜாதிகளில் எவனும் ஜீவனம் கொடுக்கவேண்டுமெனத் தர்மமறிந்தோர்கள் சொல்லுகிறார்கள். [1] புத்திரனற்ற சூத்திரனுக்குப் பிண்டங்கொடுக்கவேண்டும். கிழவன் பலமற்றவன் ஆகிய சூத்தார்களைப் போஷிக்கவேண்டும். சூத்திரன் எவ்வித ஆபத்திலும் எஜமானனை விட்டுவிலகாமல் அவன் பொருளிழந்த காலத்தில் தன்குடும்பத்தில் அதிகமான பொருளால் அவனைப் போஷிக்கவேண்டும். சூத்திரர்களுடையதனம் அவர்களுக்குச் சொந்தமின்றி அவர் எஜமானனைச் சேர்ந்ததாகும். வேதத்திற்கூறிய யாகமானது வேதத்தில் அதிகாரம்பெற்ற பிராம்மணர் முதலிய மூன்று ஜாதிகளின் தர்மமே தவிர, சூத்திரனிடம் வேதமும் அது மூலமான ஸ்வாஹாகாரவஷட்காரங்களும் இல்லை. ஆகையால், வேதத்திற் சொல்லிய விரதங்களின்றிச் சூத்திரன், [2] பூர்ணபாத்திரமென்னும் தக்ஷிணையுள்ள கிரஹசாந்தி முதலிய சிறிய யாகங்களைச் செய்யவேண்டும். பைஜவனனென்னும் சூத்திரன், ஐந்திராக்னம் என்னும் யாகத்திலுள்ள விதிபோல லக்ஷக்கணக்கான பூர்ணபாத்திரங்களைத் தக்ஷிணையாகக் கொடுத்தானென்று கேள்வியுண்டு. ஓ! பாரத! பிராம்மணர் முதலிய எந்த வர்ணத்தாரின் யாகமும் அவருக்குப் பணிவிடை செய்யும் சூத்திரனையும் சேர்ந்ததாகும். ப்ரத்தையென்னும்யாகமானது எவ்விதயாகங்களிலும் முந்தினதாகக் கூறப்படுகிறது. ப்ரத்தையென்பது யாகம் செய்பவர்களுக்கும் பரிசுத்தமான ஒரு பெரிய தெய்வமாகும். பெரிய தெய்வமான பிராம்மணர்கள் அந்த அந்த விருப்பங்களுடன் கூடினவர்களாய் ஒருவருக்கொரு

---

1 சில ப்ராத்தங்களில் இறந்த வேலைக்காரனையும் உத்தேசித்துப் பிண்டம் கொடுப்பதுண்டு.

2 இருநூற்றைம்பத்தாறுபிடி தான்யம் அடங்கியது ஒரு பூர்ணபாத்திரமெனப் பழையஉரை கூறுகிறது.

വർ തമ്തമ്ക്കുരിയ പലയാകങ്കളൈച് ചെയ്തതുമൻറി അവർകളീ കീഴാന മൂൻറു ജാതികളിലും സന്തതികളൈപ്പെറ്റുർകൾ. തേവർകളിലും ചിറന്ത തേവർകളാന അന്ത അന്തണർകൾ ചൊൽലുമ് വചനമ് പെരിയ നൻമൈയാകുമ്. ജാതികൾയാവുമ് പിരാമ്മണരിടമ് ഉൺടാന കാരണമ്പറ്റി എല്ലാജാതികളുക്കുമ് എവ്വിത യാകത്തിൻ സമ്പന്തമുമ് ഉൺമൈയിലുൺടു. രിക് യജൂസ് സാമങ്കളൈ അറിന്ത ത്വിജൻ തെയ്വമ് പോല എൻറുമ് പൂജിക്കപ്പടത്തക്കവൻ. ഐയ! പാരത! പിരജാപതിയൈത് തെയ്വമാകക്കൊൺട പണിവിടൈത് തൊഴിലുള്ള ചൂത്തിരൻ മൂൻറു വേതങ്കളിലുമ് അതികാരമറ്റവനുവാൻ. മാനസമാനയാകമ് ഒൻറു താൻ എന്തവർണത്താരുമ് ചെയ്യത്തക്കതാകക് കൂറപ്പടുമ്. ഇന്ത മാന സ്യാകത്തൈച് ചെയ്യുമ് മനിതനിടമ് തേവർകളുമ് മറ്റവർകളുമ് അൻപുപാരാട്ടാമലിരുപ്പതില്ലൈ. ആതലിൻ, പ്രത്തയെൻലുമ്യാകമ് എല്ലാ ജാതികളുമ് ചെയ്യത്തക്കതാകക് കൂറപ്പടുകിറതു. രാജനേ! തങ്കളുടൈയ തെയ്വമ്പോൻറ പിരാമ്മണർകൾ കീഴാന മൂൻറുജാതികളുക്കുമ് ചൊന്തക്കാരർകളാതലാൽ അവർകൾ മറ്റ മൂൻറുജാതിയാർകളുമ് പയൻപടുമ്പടി അവർകളൈക്കുറിത്തു മുൻകാലത്തിൽ യാകമ് ചെയ്യാമലിരുന്താർകളെൻപതില്ലൈ. ആയിലുമ്, അവ്വിതയാകത്തിൽ വൈതികമാന അക്കിനികളുക്കുക്കീഴാന ലൌകികാക്നിയൈ ആതാരമാകച് ചെയ്താർകൾ. അന്തക് കാരണത്താൽ പിരാമ്മണൻ മൂൻറു ജാതികളുക്കുമ് യാകത്തൈച് ചെയ്വിത്തവനുകിറുൻ. ഇന്തക് കാരണത്തൈക് കവനിക്കൈയിൽ നാൻകു ജാതികളുമ് തർമത്തിൽ ഒറ്റുമൈപുള്ളനവുമ് പിരാമ്മണർകളാലുൺടുപണ്ണപ്പട്ട പരമ്പരൈയിലുതിത്തനവുമാകിൻറന. അകാരമെൻറ ഓരെഴുത്തു, രിക്കു സാമമ് യജൂസ് എൻറ മൂൻറു വേതങ്കളാകത്തോൻറിയതുപോല ഉൺമൈയൈ വിചാരിത്താൽ പിരമ്മമ് ഒൻറേ പിരാമ്മണർ മുതലിയ നാൻകു ജാതികളായ്ത് തോൻറിറ്റു. രാജശ്രേഷ്ടനേ! ഇവ്വിഷയത്തിൽ പഴമൈയറിന്തപെരിയോർകൾ, യാകത്തിൽ വിരുപ്പമുള്ള വൈകാനസ മുനിവർകൾ ചൊൽലുമ് ശ്രീവിഷ്ണുപകവാൻ പാടിയകാതൈകളൈ ഉതാകരിക്കിറുർകൾ. അവറ്റിൻ പൊരുളാവതു: 'തർമത്തിറ്കു പ്രത്തയെൻപതു പെരിയകാരണമാകൈയാൽ, ഇന്തിരിയങ്കളൈവെൻറ പ്രത്തയുള്ളപുരുഷൻ, (സൂരിയൻ)ഉതിത്തപിൻനുമ്മുൻനുമ് തർമപ്പടി അക്നിയിൽ ഹോമഞ് ചെയ്കിറുൻ. ചിതറിന ഹവിസ്മുതൽ വിതിപ്പടിയുള്ള ഹവിസ്വരൈയിൽ പതിനാറുദ്രവ്യങ്കളുള്ളതുമ് പല പയൻകളുള്ളതുമാകക്കൂറപ്പടുമ്അക്നിഹോത്രവിതികളൈച് ചങ്കൈയിൻറിക് കറ്റുണർന്ത മൂൻറുവർണത്തൈച് ചാർന്തപുരുഷൻ പ്രത്തയുടൻ യാകഞ് ചെയ്പത്തക്കവൻ. തിരുടനുയിനുമ്പാപി

யாயினும் கொடியபாவியாயினும் யாகத்தால் ஸ்ரீவிஷ்ணுபகவானை ஆராதிக்க விரும்பும் மனிதன் ஸந்தேதகமின்றி ஸாதுவென முனிகள் புகழ்கிறார்கள். மூவுலகங்களிலும் யாகம்போன்ற வேறுஎந்தக்காரியமு மில்லாததுபற்றி எப்பொழுதும் எவ்விதமும் எச்சாதியானும் யாகஞ்செய்ய வேண்டுமென்பது திண்ணம். ஆதலால், இஷ்டம்போ லச் சக்திக்குத்தக்க விதிப்படி புருஷன் அஸூயையின்றிச் சிரத்தை யுடன் சுத்தமாக யாகஞ்செய்ய வேண்டும் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்' என்பது.

அறுபதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு நான்குஆஸ்ரமங்களையும்பற்றிக் கூறியது.)

ஸத்யமான பராக்ரமமும் சிறந்த கைகளுமுள்ள ஓ! யுதிஷ்டிரனே! நான்கு ஆஸ்ரமங்களின் பெயர்களையும் தொழில்களையும் கேள். (பிராம்மணர்களுக்கு) வானப்ரஸ்தம், ஸந்யாஸம், கார்ஹஸ்த்யம், பிரம்மசரியம் என்று பிரம்மதேவரால் சொல்லப்பட்ட சிறந்த நான்கு ஆஸ்ரமங்களுண்டு. (இவைகளில்) சௌளமென்னும் ஸம்ஸ்காரம் பெற்று (உபநயனவிதியினால்) த்விஜத்வத்தை அடைந்து வேதங்களைக் கற்று ஆதானமுதலிய கர்மங்களைச்செய்து கிருஹஸ்தாஸ்ரமத்தின் கடமையை முடிவுபெறச் செய்து கருவிகளடங்கி வணக்கமுள்ளவனுகி மனைவியுடனே மனைவியில்லாமலோ வானப்ரஸ்தாஸ்ரமத்தை அடையவேண்டும். தர்மந்தெரிந்த அவன் அவ்வாஸ்ரயத்தில் வானப்ரஸ்தர்களுக்குள்ள சாஸ்திரங்களை உணர்ந்து (அவைகளை அனுஷ்டித்தபின்) மக்கள் முதலிய இல்லறவாழ்க்கையை விட்டு ஸந்யாஸமடைந்து பிரம்மஸாரூப்யத்தைப் பெறுவான். ஓ! அரசனே! அறிவுள்ள அந்தணன் ஆதிமுதல் ஊர்த்வரேதஸ் என்ற ஸந்யாஸத்திற்குக் காரணமாகச் செய்யத்தக்கவைகள் இவைகளே. அரசனே! (உத்தமாதிகாரியான) பிராம்மணன், முதல் ஆஸ்ரமம் முடிந்தவுடன், மோக்ஷத்துக்குரிய ஸந்யாஸம் பெறுவது உயர்ந்ததாகும். நான்காவது ஆஸ்ரமம்பெற்ற பிராம்மணன், வீட்டையும் அக்நியையும் விட்டுக் கிடைத்ததுகொண்டு ஜீவிப்பவனும் இரவுகண்டஇடம் படுப்பவனும் மௌனியும் அடக்கமுள்ளவனும் இந்திரியங்களை ஜயித்துப் போகமும் பெருமையும் ஆசையும் விகாரமும் அற்றவனுமாயிருந்தால் மோக்ஷமடைகிறான். முனிகளால் தருமப்படி ஸேவிக்கப்பட்ட மிகவும் அருமையான கார்ஹஸ்தியதர்மத்திலிருக்கும் மனிதனும் வேதங்

களைக்கற்று வைதிககர்மங்களைச்செய்து ஸந்ததியடைந்து அவ்வாஶ்ரம ஸுகங்களை அனுபவித்தபின் ஸமாதிநிலைபுள்ளவனுக இருந்தால் முக்திபெறுவான். ஸமாதிபெறுத கிருஹஸ்தனுனவன் கள்ளமும் கபடமுமின்றி விதிப்படி ருதுகாலத்தில் தன்தாரத்தினிடம் ஸந்தா ஷிப்பவனும் மிதபோஜனம், தெய்வபக்தி, மிருதுத்தன்மை, நன்றி யறிவு, ஸத்பம், கொடுமையில்லாமை, பொறுமை, இந்திரிய நிக்ர ஹம், குருவின் ஆணையையும் சாஸ்திரத்தின் கட்டளையையும் காப் பது ஆகிய இவையுள்ளவனும் தேவபிதிருகார்யங்களில் கருத்துள்ள வனும் மாத்ஸரியமின்றி எப்போதும் எவ்வாஶ்ரமிகளுக்கும் விசேஷ மாகப் பிராம்மணர்களுக்கும் அன்னமளிப்பவனும் அக்நிகார்யங்களில் விடாமுயற்சியுள்ளவனுமாக இருக்கவேண்டும். இவ்விஷயத்தில் பெருந்தவத்தால் வெளிவந்ததும் மஹானுபாவர்களான முனிவர்கள் சொல்லுவதும் பெரும்பொருள் அடங்கியதும் பகவான் நாராயணன் கூறியதுமான இவ்வசனத்தைச் சொல்லுகிறேன்; தெரிந்துகொள். உலகத்தில் ஸத்யமும் ஆர்ஜவமும் அதிதிபூஜையும் தர்மமும் தனமும் தன் தாரத்துடன் கூடி இன்புறுதலுமாகிய இந்த ஸுகங்கள் யாவும் உயர்ந்த கிருஹஸ்தாஶ்ரமத்தில் அடையத்தக்கவையாகையால் இஃது உத்தமமென்பது என்கருத்து. மஹரிஷிகள் இவ்வாஶ்ரமத்திலிருப் பவர்களுக்குப் புத்திரதாரங்களைப் போஷிப்பதும் வேதங்களை ரக்ஷிப் பதும் சிறந்தவையெனச் சொல்லுகிறார்கள். இவ்விதிப்படி யாகங் களைச் செய்துகொண்டு கிருஹஸ்தாஶ்ரமத்திலிருக்கும் பிராம்மணன், அவ்வாஶ்ரமத்திற்குரிய சுத்தமான ஜீவனத்துடனிருந்து ஸுவர்க்கத் தில் நற்பயனடைகிறான். அந்தக் கிருஹஸ்தன் சரீரம் விட்டபின் அவன் விரும்பிய போகம் யாவும் எவ்விடத்திலும் எக்காலத்திலும் அழிவின்றி ஊழியக்காரன்போல அவனைக் காத்திருக்கும். ஓ! யுதிஷ் டிர! பிரம்மசாரியானவன் தனியாயிருந்து எல்லாவேதங்களையும் ஜபித்துக்கொண்டு ஒரே ஆசாரியரிடம் பணிவிடை செய்பவனும் சரீ ரத்திலும் வஸ்திரத்திலும் அழுக்குள்ளவனும் நித்யவிரதமும் நித்ய தீக்ஷையுமுள்ளவனும் இந்திரிய ஜயமுள்ளவனும் நிழலைப்போல ஆசிரியர்பின் செல்லுகிறவனும் அவருக்குள்ளடங்கி அத்தியயனம் பண்ணுகிறவனும் மாறுதவ்ரதத்துடன் தியானம் செய்கிறவனுமாகி எப்பொழுதும் இருக்கவேண்டும். ஐய! அன்றியும், குருவை வணங் கிப் பணிவிடை செய்பவனும் (பிராணயாமம், பிரத்யாஹாரம், த்யா நம், தாரணை, தர்க்கம், ஸமாதி ஆகிய) ஆறுகர்மங்களிலும் ஓயா முயற்சியும் ஓயா நிவிருத்தியும் இல்லாதவனும் விரோதிகளிடம்

சோதவனும் நிக்ரஹானுக்ரஹங்கள் செய்யாதவனுமாயிருக்கவேண்டும். இவையாவும் பிரம்மசர்யமென்னும் முதலாஸ்ரமத்திலிருப்பவனுடைய தர்மமாகும்" என்று சொன்னர்.

அறுபத்தோராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்ரர் வர்ணஸ்ரமதர்மங்களில் சிலஸந்தேஹம் கேட்டதும், பீஷ்மர் மறுமொழி சொன்னதும்.)

யுதிஷ்டிரர், "என்னைப்போன்றவர்களுக்கு ஸுகத்தைத்தரத்தக்க எளிய உபாயங்களும் உலகங்கள் ஒப்பத்தக்கவைகளும்ஹிம்ஸையற்றவைகளும் பெரும்பயனுள்ளவைகளுமான மங்களதர்மங்களைத் திரும்பவும் சொல்லவேண்டுகிறேன்" என்று சொல்ல, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"பாரதர்களிற்சிறந்த பிரபுவே! நான்கு ஆஸ்ரமங்களும் பிராம்மணனுக்கு விதிக்கப்பட்டன. அவைகளை மற்றமூன்றுவர்ணத்தார்களும், அடையத்தக்கவர்களல்லர். அரசனே! அரசர்களை முக்கியமாகக் கொண்டவைகளும் பரலோகத்தை அடைவிக்கத்தக்கவைகளுமான பலகர்மங்கள் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. பிரவிருத்தி சாஸ்திரமென்பது பெரும்பாலும் க்ஷத்திரியர்களைச் சேர்ந்ததாகும். அவ்விதகர்மங்களையும் வைசியசூத்திரர்களுக்குள்ள கர்மங்களையும் புத்திக்குறைவால் செய்யும்பிராம்மணன் இவ்வுலகத்தில் இகழ்ச்சியடைந்து பரலோகத்திலும் நரகத்தை அடைவான். பாண்டவனே! உலகத்தில் பசு, ஊழியஞ்செய்பவன், நாய், ஓநாய் இவைகளுக்குள்ள பெயரைத் தகாதகர்மத்தைச் செய்யும் பிராம்மணனிடம் வைக்கவேண்டும். நான்குஆஸ்ரமங்களிலும் பிராணயாமமுதலிய ஆறுகர்மங்களைச்செய்கிறவனும், எல்லாத்தர்மங்களையும் அனுஷ்டித்துச் சித்தசுத்திபெற்றவனும், பிரதிப்ரயோஜனத்தைவிரும்பாமல் தானம் செய்பவனும், தவத்தில்விசேஷமுயற்சியுள்ளவனும், சுத்தனும் [1]அடக்கமுள்ளவனுமான பிராம்மணன் அழிவற்ற உலகங்களைப்பெறுவான். எந்தமனிதன் எந்தப்பருவத்தில் எந்தச்சமயத்தில் எவ்விடத்தில் எந்தக்காரணம்பற்றி எவ்விதகர்மத்தைச் செய்கிறானோ, அந்த மனிதன் அந்தக் காரணங்கொண்டு அவ்விதக்கர்மத்தைச் சிறந்ததென நினைக்கி

---

1 இவ்விடத்தில் வேறுபாடம் கொள்ளப்பட்டது.

ரூன். ஓ! ராஜேந்திரனே! வட்டிவாங்குவதும் வர்த்தகமும் கிருஷி யும் வேட்டையும் 1 வேதமோதுவதற்கு ஒப்பாகுமெனத் தெரிந்து கொள். முன்பிறப்பிலுள்ள வாஸனையால் உறுதிபெற்றுக் காலத்தால் ஏவப்படும் மனிதன் தன்வசமின்றி ஸமயம்போல உத்தமம் மத்திய மம் அதமமென்ற காரியங்களைச்செய்கிறான். முன்பிறப்பில் செய்த கர்மங்களும் இச்சரீரத்துக்குக்காரணமான பஞ்சபூதங்களும் அநித் தியமாகும். உலகமானது தான் விரும்பிய கர்மத்திற் செல்லுவது இயற்கையாகும். ஜீவன் எந்தக் காரியத்திலும் பிரவிருத்திக்கும் தன்மையுள்ளவனுவான்.

அறுபத்திரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் பிராம்மணருக்குத்தகாத தர்மத்தையும் க்ஷத்திரியர்முதலியோ நுடையதர்மத்தையும்சொல்லி ராஜதர்மத்தைப் புகழ்ந்தது.)

வில்லின் நாணை இழுப்பதும் சத்ருக்களை அடிப்பதும் கிருஷி யும் வர்த்தகமும் பசுக்களைக்காப்பதும் பணத்துக்குப் பணிவிடைசெய் வதுமாகிய இவைபாவும் பிராம்மணனுக்கு மிகவும் அகார்யமாகும். அறிவுள்ள கிருஹஸ்தனான பிராம்மணன் வேதத்தைக்கற்று யாகமுத லிய ஆறுகர்மங்களையும்செய்து அவ்வாஸ்ரமங்களை முடித்தபின் அரண்யவாஸஞ்செய்வது புகழத்தக்கதாகும். அரசனிடம் ஊழியமும் வர்த்தகத்தால் ஜீவிப்பதும் வியவஸாயஞ்செய்து பொருளீட்டுதலும் வஞ்சகமும் வியபிசாரஞ்செய்வதும் பிராம்மணனுக்கு மிகவும் நிந்திக் கப்பட்டன. ஓ! அரசனே! தன் தர்மத்தினின்றும்விலகிச் சூத்திர மடந்தையின்சேர்க்கையும் நட்புவமும் கிராமஊழியமும் கோள் சொல்லுவதும் கெட்டநடையும் தகாதகாரியத்தைச் செய்வதுமுள்ள பிராம்மணன் பிராம்மணர்களுக்குச் சொந்தமான சூத்திரனாகிறான். ஓ! கௌரவேந்திரனை அரசனே! புத்திக்குறைவால் நன்னடைவிட்டு விலகிக் கீழ்ச்சொல்லியவிதமிருக்கும் பிராம்மணன் வேதம்கற்றவனு யினும் கல்லாதவனுயினும் சூத்திரனுக்குகொப்பாகவும் அடிமைக்கு ஒப்பாகவும் விலகியிருந்து உண்ணத்தக்கவன். அரசனே! சூத் திரனுக்கு ஒப்பான இவ்விதப்பிராம்மணர்கள் யாவரையும் (வைதிக மான) தேவகார்யத்தில் ஸம்பந்தமின்றி விலக்கவேண்டும். அரசனே!

---

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

மரியாதையற்றவனும் வஞ்சகமாகப்பேசுகிறவனும் தீயநடையுள்ளவனும் துன்புறுத்தும் விருப்பமுள்ளவனும் தன்ஜாதிதர்மத்தையும் நல்லநடையையும் விட்டவனுமான அந்தப்பிராம்மணனிடம் 1 ஹவ்யமும் 2 கவ்யமும் மற்ற எல்லாத்தானங்களும் கொடுக்கத்தக்கவை அல்ல. அரசனே! ஆனதுபற்றியே, பிராம்மணர்களுக்கு அடக்கம், சுத்தி, கபடமில்லாமையென்னும் தர்மங்களையும் நான்கு ஆஸ்ரமங்களையும் முன்னம் வேதம் விதித்திருக்கிறது. அடக்கமுள்ளவனும் நல்ல நடையுள்ளவனும் ஸோமபானஞ் செய்தவனும் ஆசையற்றவனும் யாவற்றையும் ஸஹிப்பவனும் பொறுமையும்தயையுமுள்ளவனும் பிறருக்குக் கேடுநினையாதவனும் குரூரமற்றவனும் கபடமற்றவனுமாயிருப்பவன் பிராம்மணனேயன்றிக் கெட்டசெய்கையுள்ளவன் பிராம்மணனாகமாட்டான். அரசனே! தர்மத்தைவிரும்பும் உலகங்கள்யாவும் பிராம்மணனையும் க்ஷத்திரியனையும் வைசியனையும் அடுத்திருக்கின்றன. பாண்டுபுத்ரனே! ஆகையால், தன் ஜாதிக்குரிய தர்மங்களில் நிலைத்திருக்கும் ஜனங்களை ஸ்ரீவிஷ்ணுபகவான் கைவிட விரும்பார். உலகமெல்லாம் விரும்பத்தக்க ஸுவர்க்கலோகமும் நான்கு வர்ணங்களும் ஆஸ்ரமங்கள்யாவும் வேதபாடங்களும் எல்லா வைதிகலௌகிக கர்மங்களும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அருளின்றி உலகில் ஒரு க்ஷணமும் நிலைபெறமாட்டா. பாண்டவனே! தனது ராஜ்யத்திலுள்ள மூன்றுவர்ணத்தார்களும் தம்தம் ஆஸ்ரமதர்மங்களைச் சரிவர நடத்தவேண்டுமென விரும்புமரசன் அறியவேண்டிய தர்மங்களைக் கேள். ஓ! பாண்டவராஜனே! 3 மேற்குலத்தோர்களுக்குப் பணிவிடைசெய்து தன்கடமையை நிறைவேற்றினவனும் மக்களைப் பெற்றவனும் வைதிகர்களிற்சிறிது குறைந்த ஆசாரமுள்ளவனும் தேசாசாரத்தை அடைந்தவனுமான சூத்திரன், அரசனிடம் அனுமதிபெற்று ஆசைகளற்ற ஸந்யாஸமென்னும் ஓர் ஆஸ்ரமத்தை விலக்கி மற்ற ஆஸ்ரமங்களை அடையத்தக்கவனாவான். ஓ! ராஜேந்திரனே! அவர்களுடையதர்மத்தைச் சொல்லுகிறவர்கள், 4 அந்தச் சூத்திரனுக்கும் அப்படியே வைஸ்யனுக்கும் க்ஷத்திரியனுக்கும் ஸந்யாஸம் இல்லையென்று சொல்லுகிறார்

1 தேவர்களை உத்தேசித்துக்கொடுப்பது.

2 பிதிர்க்களை உத்தேசித்துக் கொடுப்பது.

3 இங்கு, 'வேதாந்தங்களில் அதிகாரமில்லாமையால் புராணங்களின் மூலமாக ஆத்மாவை விசாரிக்கவிரும்பியவன்' என்பது பழையவுரை. 4 இங்கு வேறுபாடங்கொண்டு, 'இம்மூன்றுவர்ணத்தாருக்கும் நித்யகர்மங்களைத்தவிர மற்றக்கர்மங்களைவிடுவதான ஸந்யாஸம் உண்டு' என்பது பழையவுரை.

கள். தன்கடமையைச் செய்தவனும் அரசனுக்குப் பணிவிடைசெய்து ஸ்ரமமடைந்தவனும் முதுமையடைந்தவனுமான வைச்யனும் அரசன்கட்டளையின்படி, விரும்பிய ஆச்ரமம் செல்லவேண்டும். குற்றமற்றவனும் பேசுகிறவர்களிற் சிறந்தவனும் க்ஷத்ரியச்ரேஷ்டனுமான பாண்டவராஜனே! தர்மப்படி வேதங்களையும் தண்டநீதிகளையும் கற்று ஸந்தானமுதலிய நற்கர்மங்களையும் ஸோமயாகத்தையும் செய்து பிரஜைகளையெல்லாம் தர்மப்படிபரிபாலித்து ராஜஸூயம் அச்வமேதமுதலியயாகங்களை நியாயப்படிசெய்து அந்தணர்களுக்குத் தக்ஷிணையளித்துச் சிறியதானலும் பெரியதானலும் யுத்தத்தில்ஜயம் பெற்று அரசாளத்தக்க புத்திரனையாவது அல்லது வேறுகுலத்தில் உதித்த உத்தமக்ஷத்திரியனையாவது ராஜ்யத்தில் மகுடம்சூட்டிப் பிதிர்க்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் முறையே பிதிர்யஜ்ஞங்களான ச்ராத்தங்களாலும் யாகங்களாலும் விதிப்படி முயற்சியுடன் ஆராதித்து முதியபருவம்வந்தபின் வேறுஆச்ரமம் விரும்பும் க்ஷத்திரியன் கிரமமாய் ஆச்ரமங்களையடைந்து ஸித்திபெறத் தக்கவனாவான். ஓ! ராஜேந்திரனே! கிருஹஸ்தாச்ரமம் விட்டு விலகின க்ஷத்திரியன் வயிறுவளர்ப்பதற்கல்லாமல் முனிதர்மத்திலிருந்து பிக்ஷாடனம் செய்வதுகூடாது. அதிகதக்ஷிணைகொடுப்பவனே! இந்தக்கர்மாவானது பிராம்மணனல்லாத மூன்றுவர்ணத்தார்களுக்கும் நித்யகர்மமன்று. ராஜச்ரேஷ்டனே! நான்குவித ஆச்ரமங்களிலுமிருக்கும் மனிதர்களின் தர்மமெல்லாம் உலகத்தில் மிகச்சிறந்த தர்மத்தை அனுஷ்டிப்பவர்களான க்ஷத்திரியர்களின் கையிலிருப்பதாகும். மூன்றுஜாதிகளின் தர்மங்களும் உபதர்மங்களுமாகிய யாவும் அரசனைச்சார்ந்தனவென்று நீதிசாஸ்திரத்தில் கேள்விப்படுகிறேன். அரசனே! யானையின் அடியில் மற்றெல்லாப் பிராணிகளின் அடிகளும் அடங்குவதுபோல ராஜதர்மங்களில் மற்றத்தர்மங்கள் யாவும் எப்பொழுதும் அடங்கினவெனத் தெரிந்துகொள். தர்மமறிந்த பூஜ்யர்களான மனிதர்கள் க்ஷத்திரிய தர்மத்தைப் பலவிடங்களிலிருப்பதாகவும் பலஸ்தானங்களைக் கொடுப்பதாகவும் இதரதர்மங்களைச் சிலவிடங்களிலிருப்பனவைகளாகவும் ஸ்வல்பபலனைக் கொடுக்கக்கூடியவைகளாகவும் 1 சொல்லுகிறார்கள். எல்லாத் தர்மங்களுக்கும் ராஜதர்மம் முக்கியஆதாரமாகும். ஜாதிகள்யாவும் அரசனல்பரிபாலிக்கப்பட்டு நிலைபெறுகின்றன. ராஜதர்மங்களில் எவ்விதத்யாகமும் நிலைபெற்றிருக்கிறது. அரசனே! ஆகையால், ஸநாதனமான ராஜதர்மத்தை த்யாகமென்றும் சிறந்ததென்றும் சொல்லு.

1 ஒருசொல் விடப்பட்டது.

கிறார்கள். உலகில் தண்டநீதி குறைவடைந்தால் வேதம் ஒளித்துப்போம்; தர்மங்கள் யாவும் விரோதமுள்ளவைகளாய் நாசமடையும். க்ஷத்திரியர்களுக்குரிய ஸநாதனமான ராஜதர்மம் நஷ்டமடைந்தால் ஆச்ரமங்களின் எல்லாத் தர்மங்களும் நாசமடைந்துவிடும். எல்லாப் போகங்களும் ராஜதர்மத்தில் காணப்படுகின்றன. எல்லா நியமங்களும் ராஜதர்மத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாக் கல்விகளும் ராஜதர்மத்திலேயே இருக்கின்றன. எல்லா உலகங்களும் ராஜதர்மத்தில் அடங்கியிருக்கின்றன. தர்மங்களும் போகங்களும் யோகங்களும் ராஜதர்மத்தில் நிலைபெற்றிருக்கின்றன. ஓ! அஜாத சத்ருவே! ஆகையால், உலகத்தில் ராஜதர்மத்தைவிடச் சிறந்த தர்மம் வேறு எதுவுமில்லை. ஓ! பரதஸ்ரேஷ்டனே! எல்லாக் கர்மங்களும் எல்லாப் பிராணிகளும் ராஜதர்மத்திலிருந்து ஜீவிக்க வேண்டும். அவிவேகிகளால் கொல்லப்படும் பிராணிகள் அவர்களுடைய வைதிகதர்மங்களை நசிக்கச்செய்வதுபோல ராஜதர்மத்தை விட்ட மற்றத் தர்மங்கள் நாசமடைவதுடன் அவைகளைச் செய்யும் மனிதர்களும் பல இடையூறுகளால் தம் தர்மத்தில் ஆதரவின்றி நாசமடைவார்கள்.

அறுபத்துமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் ராஜதர்மத்தைப்புகழ்ந்து மாந்தாதாவுக்கும் இந்திர நுபியான விஷ்ணுவுக்கும் நடந்த சம்பாஷணத்தை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது.)

பாண்டவனே! நான்கு ஆச்ரம தர்மங்களும், (விசேஷமான) யதிதர்மங்களும், வேதத்திலும் உலகத்திலும் உத்தமமெனப் புகழப்படும் தர்மங்களும், ராஜதர்மத்திலிருக்கின்றன. பரதஸ்ரேஷ்டனே! ராஜதர்மம் நிலைபெற்றிருந்தால் இந்தக் கர்மங்கள் யாவும் பயன்படுவதுடன் பிராணி ஸமூகங்களும் கவலையின்றிச் சுகித்திருக்கும். ஆச்ரமவாஸிகளின் சாச்வதமான தர்மம் அப்ரத்யக்ஷமாயும் பலவித பிரயோஜனமுள்ளதாயுமிருந்தும் அதனுண்மையை ஆகமங்களாலேயே அறிவிக்கிறார்கள்; மற்ற வாதிகள் புண்ணியமான வசனங்களால் உலகத்தில் உறுதிப்படச் சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் தர்மங்களின் உண்மையை அறியாவிடினும் அழிவற்ற பெரிய தர்மத்தில் விருப்பமுற்றிருக்கிறார்கள். எல்லா உலகங்களுக்கும் ஹிதமாயும் பிரத்யக்ஷமாயும் பிரயோஜனம் நிறைந்ததாயும் கபடமில்லாததா

யும் தனக்குத் தெரிந்ததாயுமுள்ள (உத்தம) தர்மம் க்ஷத்திரியர்களிடம் நிலைபெற்றிருக்கிறது. ஓ! யுதிஷ்டிர! கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கும் பிராம்மணர்களின் தர்மத்தில் மற்ற மூன்று ஆச்ரமங்களும் அவைகளின் தர்மங்களும் அடங்கியிருப்பதுபோல ராஜதர்மங்களில் உலகங்களனைத்தும்அவைகளின் புண்ணிய கர்மங்களும் அடங்கியிருக்கின்றனவென்று முன்னமே எடுத்துக்கூறியிருக்கிறேன். ராஜச்ரேஷ்டனே! சூரர்களான பலஅரசர்கள் தண்டநீதி விருத்தியடைவதற்காக ஒவ்வோர் ஆச்ரம தர்மத்தையும் ராஜதர்மத்தையும் நிறுத்துப்பார்க்கக் கருதி முன்னொருகாலத்தில் எல்லாப்பிராணிகளுக்கும் ஈசரும் வ்யாபகரும் பிரபுவும் தேவரும் எங்கும் நிறைந்தவரும் மிக்க தேஜஸுள்ளவருமாயிருக்கும் ஸ்ரீநாராயணரிடம் சென்று உண்மையையறிய விருப்பத்துடன் வணங்கி உபாஸித்தார்கள். ஆதிதேவரான அந்தப்பகவான் முன்காலத்திற் படைத்த ஸாத்யர்கள், வஸுக்கள், அச்வினிதேவர்கள், ருத்ரர்கள், விச்வேதேவர்கள், ஸித்தர்கள், மருத்கணங்கள் யாவரும் க்ஷத்திரிய தர்மத்திலிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் உனக்கு உண்மை தெரியவேண்டி ஒரு தர்மத்தைத் தெரிவிக்கிறேன். அரசர்க்கரசனே! முன் காலத்தில் இவ்வுலகம் ஓரே அஸுரக்கடலாய் மரியாதையின்றி இருக்கும்பொழுது, மாந்தாதாவென்னும் மஹாவீர்யசாலியான ஓர் அரசனிருந்தான். புலிபோன்ற அரசனே! அக்காலத்தில் இப்பூமியை ஆண்டுவரும் அவ்வரசன் ஆதியும் நடுவும் முடிவுமற்றவரும் தேவரும் பிரபுவும் ஸர்வேச்வரருமான நாராயணரை நேரில் காணக்கருதி அந்த மஹாத்மாவின் பாதங்களைத் தலையால் வணங்கி ஓர் யாகஞ்செய்யத் தொடங்கினன். விஷ்ணுபகவானும் அப்பொழுது இந்திரரூபத்துடன் அவனுக்குத் தரிசனமளித்தனர். உத்தமர்களான அரசர்களால் சூழப்பட்டமாந்தாதாவும் பிரபுவான அந்தக் கபட இந்திரனைப் பூஜித்தான். அரசச்ரேஷ்டனை அந்தமாந்தாதாவுக்கும் மஹாத்மாவான அந்தக் கபடஇந்திரனுக்கும் பெரியகாந்தியுள்ள ஸ்ரீவிஷ்ணுவைப்பற்றி இந்தப் பெரிய ஸம்பாஷணை உண்டாயிற்று. இந்திரரூபியான பகவான், 'தர்மம்நிறைந்த அரசர்களில் மிகஉத்தமரே! உமது விருப்பமென்ன? அளவில்லாத மாயையும் ஒப்பற்ற மந்திரசக்தியுமுள்ளவரும் புராணரும் ஆதிதேவரும் அறிவிற்கெட்டாதவருமான எந்தப் பகவான்நாராயணரைத் தரிசிக்கவிரும்புகிறீரோ விச்வரூபியான அந்தப்பகவானைப் பார்க்கும் சக்தி எனக்குமில்லை; ஸாக்ஷாத் பிரம்மதேவருக்குமில்லை. ஓ! ராஜரே! உமது உள்ளத்திலிருக்கும் மற்ற எவ்விதக்காமங்களையும் உமக்குஅளிக்கிறேன். மானிடர்களுக்கு அரசரான நீர் ஸத்தியத்தில்

உறுதிபெற்றவரும் தர்மத்திற் சிறந்தவரும் சூரரும் இந்திரியங்களை ஜயித்தவருமாயிருப்பதுபற்றி உம்மீது தேவர்களும் திடமான நட்புடனிருக்கிறார்கள். அன்றியும், பக்தியிலும் புத்தியிலும் ஸ்ரத்தையிலும் நீர் உத்தமராயிருப்பதைக்கண்டு நீர் வேண்டும்வரங்களை நான் அளிக்கிறேன்' என்றுசொன்னார். மாந்தாதா, 'ஓ! பகவானே! ஆதிதேவரானஉம்மை நான் தலையால் வணங்கிச் சந்தேகமின்றித்தெரிவிக்கிறேன். நான் போகங்களைத்தள்ளித் தர்மவிருப்பமுள்ளவனாகி ஸாதுக்கள் சென்ற நல்லவழியிற் செல்லக்கருதிக் கானகம் போக விரும்புகிறேன். விஸ்தாரமானதும் அளவிடக்கூடாததுமான க்ஷத்திரியதர்மத்திலிருந்து உலகங்களை அடைந்து என்கீர்த்தியும் உலகில் நாட்டப்பட்டது. ஆதிதேவரான நாராயணரிடமிருந்து வெளியானதும் உலகங்களில் மிகச் சிறந்ததுமான தர்மத்தைச் செய்ய நான் அறிகிலேன்' என்று சொன்னான். இந்திரன், 'அரசனில்லாத ஜனங்கள் தர்மபுத்தியுள்ளவர்களாயினும் ஆதரவுடன் தர்மத்தாலுண்டாகும் நற்கதியை அடையவும் அடையச் செய்யவுமாட்டார்கள். ஆதிதேவரிடமிருந்து முதன்மையாக வெளியானது ராஜதர்மம் ஒன்றே. மற்றத்தர்மங்கள் யாவும் அதன் அங்கங்களாகப் பின் வெளியாயின. ஸந்யாஸத்துடன் கூடின மற்றத்தர்மங்கள் அநித்யமான பலனுள்ளனவாகவும் எண்ணிறந்தனவாகவும் ராஜதர்மமே உத்தமமாகவும் படைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ராஜதர்மத்தில் மற்றைத்தர்மம் யாவும் அடங்கியதுபற்றிப் பெரியோர்கள் இந்தத் தர்மத்தை மிகச்சிறந்ததெனப் புகழ்கிறார்கள். முன்காலத்தில் மஹாவிஷ்ணுவானவர் ராஜதர்மத்தால் சத்துருக்களைவென்று ஒப்பற்ற பராக்ரமமுள்ள முனிவர்கள் தேவர்கள் யாவரையும் காத்தருளினர். உலகத்திற்கு விரோதிகளான அஸுரர்கள்யாவரையும் அறிவிற்கெட்டாத இந்தப்பகவான் (இங்ஙனம்) அடிக்காவிடின் [1] பிராம்மணர்களும் உலகங்களைப்படைக்கும் பிரம்மதேவரும் இந்தத் தர்மமும் ஸநாதனதர்மமும் உலகில்இருக்கமுடியா. தேவ ஸ்ரேஷ்டரும் ஆதிதேவருமான நாராயணர் அஸுரர்கள் சூழ்ந்த இப்பூமியைப் பராக்ரமத்தால்வெல்லாவிடின் வேதியர்களின் நாசத்தால் நான்கு ஜாதிகளும் நான்குஆஸ்ரமங்களும் அவைகளின் தர்மங்களும் எல்லாம் உலகில் ஒழிந்துபோம். ஒவ்வொரு யுகத்திலும் பலவிதமாய் நாசமடைந்தபழமையான சாஸ்வததர்மங்கள் ராஜதர்மத்தால் திரும்பவும் நிலைபெறச் செய்யப்படுகின்றன. ஆகையால், ராஜதர்மம் உலகங்

1 இங்கு வேறு பாடங்கொள்ளப்பட்டது.

களில் மிகச்சிறந்ததெனச் சொல்லுகிறார்கள். ராஜதர்மத்திலிருக்கும் க்ஷத்திரியர்களுக்கு யுத்தத்தில் சரீரத்தைவிடுவதும் எல்லாப் பிராணிகளிடமும் தயைசெய்வதும் உலகங்களைப் பரிபாலித்தறிவதும் ரக்ஷிப்பதும் பீடிக்கப்பட்டுத் துக்கப்படும் ஜனங்களைக் கஷ்டத்தினின்று விடுவிப்பதும் தர்மமாகும். காமக்குரோதங்களால் இழுக்கப்பட்டு வரம்பின்றிச் செல்லும் தன்மையுள்ள மனிதர்கள் அரசனிடம் பயந்து பாவத்தில் செல்லாமலிருக்கிறார்கள். இயற்கையில் நற்குணமுள்ள மற்றப்பெரியோர்களும் விசேஷமான நல்லநடையுடன் தர்மங்கள் யாவற்றையுஞ் செய்துகொண்டு அந்தத் தர்மத்தைப் பிறருக்கும் உபதேசிப்பார்கள். உலகத்திலுள்ள பிராணிகள் யாவும் புத்திரனைப்போல அரசனால் பாதுகாக்கப்பட்டுத் தம்தம் தர்மங்களுடன் சஞ்சரிக்கின்றனவென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகையால், எல்லாத்தர்மங்களிலும் மேலானதும் உலகத்தில் கொண்டாடப்படுவதும் எவ்விடத்திலும் செல்லத்தக்கதும் பழமையானதும் அழிவற்றதும் முடிவில் முக்தியளிப்பதுமான ராஜதர்மம் மிகச்சிறந்ததாகும்.

அறுபத்துநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், இந்த்ராநுபியான விஷ்ணுவினல் மாந்தாதாவுக்குச் சொல்லப்பட்ட ராஜதர்மங்களை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது.)

இவ்விதமான வீர்யமுள்ளதும் எல்லாத்தர்மங்களும் அடங்கினதும் எல்லாத்தர்மங்களிலும் உத்தமதர்மமுமான ராஜதர்மத்தை உம்மைப்போன்ற உதாரர்களான அரசர்கள் பரிபாலித்துவரவேண்டும். இம்முறை தவறினல் பிரஜைகளுக்கு நாசமுண்டாகும். அரசன், பூமியைச்செழிக்கச்செய்வதும் ராஜஸூயமுதலிய யாகங்களைச்செய்வதும் தீக்ஷைபெறுவதும் பிரஜைகளைப் பரிபாலிப்பதும் எல்லாப்பிராணிகளிடத்திலும் தயைசெய்வதும் யுத்தத்தில் சரீரத்தைவிடுவதும் தன் கடமையான சிறந்த தர்மமெனத் தெரிந்துகொள்ளவேண்டும். இவைகளிலும் யுத்தத்தில் சரீரத்தைவிடுவது மிகஉத்தமதர்மமென்று முனிவர்கள் கூறுகிறார்கள். அந்தக்காரணம்பற்றியே ராஜதர்மங்களிலுள்ள அரசர்கள்யாவரும் பெரும்பாலும் போரில் ஸ்ரேஷ்டமான சரீரத்தை விடுகிறார்களென்பது உமக்குப் பிரத்தியக்ஷம். பிரம்மசர்யம்பெற்ற க்ஷத்திரியன் தர்மத்தை விரும்பியவனுகிப் பலகல்விகளைக்கற்பதும்

---

1 'ஸந்யாஸாஸ்ரமம் பெறுமலிருப்பது' என்பது வேறுபாடம்.

ஆசிரியருக்குப் பணிவிடைசெய்வதுமுள்ளவனுைப்[1] தனக்குரிய நித்தியதர்மத்தையும் ஆஸ்ரமத்தையும் தணிமையில் செய்துகொண்டிருக்கவேண்டும். இவ்விதமிருந்து (கிருகஸ்தாஸ்ரமம்பெற்ற க்ஷத்திரியன்) பொதுவான வியவஹாரம் வரும்போது விருப்பு வெறுப்புக்களைக் கவனத்துடன் விலக்கிக்கொண்டு நான்கு ஜாதிகளையும் அந்த அந்த உபாயங்கள் நியமங்கள் ஔஷதங்கள் முதலிய பலவழிகளாலும் பாதுகாத்துத் தம்தம் தர்மத்தில் நிலைபெறச் செய்யவேண்டும். க்ஷத்திரியர்களின் தர்மம் எல்லாத்தர்மங்களிலும் மிகச்சிறந்ததென்றும் அதில் எந்தத் தர்மங்களும் அடங்கியிருக்கின்றனவென்றும் பெரியோர்கள் அறிவிக்கிறார்கள். தம்தம் ஜாதிதர்மப்படி நடவாதவர்களும் அந்த அந்தத் தர்மவிதிகளை மாறுபடச்சொல்லுகிறவர்களும் மரியாதையற்று எப்பொழுதும் பொருளில் பேராசைபிடித்தவர்களுமான மனிதர்களைப் பசுக்களென்று சொல்லுவார்கள். பொருளின்பெருமையால் நீதியை நிலைநிறுத்தி உலகத்தின் க்ஷேமத்தை வளர்க்கும்காரணத்தால் க்ஷத்திரியதர்மம் மற்றஆஸ்ரமதர்மத்தைக் காட்டிலும் உத்தமமாகும். மூன்றுவேதங்களையுங்கற்ற அந்தணர்களுக்குத்தக்க ஆஸ்ரமங்களும் அவர்களுக்குரிய நற்கதியும் ஸித்திபெறத்தக்கதர்மம் க்ஷத்திரியனுக்குஉரியதாகையால் அது யாவற்றிற்கும் முந்தியதாகும். ஐய! அந்தத் தர்மமின்றி வேறுவிதஞ்செய்யும் அரசன் சூத்திரன்போல ஆயுதத்தால் கொல்லப்படத்தக்கவன். அரசரே! நான்கு ஆஸ்ரமங்களின் தர்மங்களும் வேதமுபதேசிப்பதும் வேதியர்களின் தர்மமேதவிர மற்றவன் இதனை எந்தச்சமயத்திலும் அடையத்தக்கவனல்லன். கர்மத்தால் தர்மமும் தர்மத்தால் மனிதனும் பெருமையடைவதுபற்றித் தர்மத்திற்கு விரோதமாயிருக்கும் பிராம்மணன் நல்ல ஜீவனமடைய முடியாது. தன் தர்மத்தைச்செய்யாத பிராம்மணன் நம்பத்தகாதவனுகையால் விபரீத கர்மமுள்ள அவன் பூஜிக்கப்படத்தக்கவனல்லன். தம் தர்மம்விட்டிழந்த எச்சாதிகளையும் மேலானபதவியை அடையச்செய்யும் பெருந்தர்மம் அரசனைச்சார்ந்தகையால் மற்றவையன்றி ராஜதர்மம் ஒன்றே உலகில் மிகப்புகழ்பெற்றதும் சிறந்த வீர்யமுள்ளதுமென்பது என்கருத்து' என்று சொன்னன். மாந்தாதா, 'ராஜ்யத்தில் வஸிக்கும் யாவரும் தர்மத்தைச்செய்வது எங்ஙனம் பொருந்தும்? பிராம்மண க்ஷத்திரியஜாதிகளில் பிறந்தும் வைச்யர்களாயும் சூத்திரர்களாயும்போன மனிதர்களும் மற்றுமுள்ள யவனர், கிராதர், காந்தாரர், சீனர், சபரர், பர்ப்பரர், சகர், துஷாரர், கங்கர், பல்லவர், ஆந்திரர், மத்ரகர், உஷ்ட்ரர்,

1 இங்கு இரண்டுசொற்கள் விடப்பட்டன.

புனிதர், ஆசட்டர், காசர், மிலேச்சர் ஆகிய யாவரும் எங்ஙனம் தர்மம்செய்யத் தகுதியுள்ளவர்கள்? திருட்டுப்பிழைப்புள்ள இவர்கள் போன்ற யாவரும் என்போன்ற அரசர்களால் எங்ஙனம் ஆளத்தக்கவர்கள்? தேவர்களுக்கு ஈசரான ஓ! பகவானே! க்ஷத்ரியர்களான எங்களுக்குப் பந்துவானநீர் இதைக்கேட்க விருப்பமுள்ள என் பொருட்டு உள்ளபடி உரைக்கவேண்டுகிறேன்' என்றுசொன்னன்.

இந்திரன் சொல்லத்தொடங்கினன்: 'தாய்தந்தைகள், ஆசிரியர், குரு, ஆஸ்ரமவாஸிகள், அரசர்கள் இவர்களின் சுச்ரூஷை, திருட்டுப் பிழைப்புள்ளவர்களாயினும் மனிதர்கள் அனைவருக்கும் பொதுவான தர்மமாகும். தேசத்திற்குப் பொதுவான தர்மமும், பிதிர்க்கர்மமும், கிணறும், தண்ணீர்ச்சாலையும், காலத்திற்குத் தக்கபடி பிராம்மணர்களின்பொருட்டுப் படுக்கைமுதலிய தானங்களும் யாவரும் செய்யத்தக்க தர்மமாகும். அஹிம்ஸையும், ஸத்தியமும், கோபமில்லாமையும், ஜீவனமும், தனமும், மக்கள்மனைவி முதலியவர்களைப் பரிபாலிப்பதும், பரிசுத்தியும், துரோஹமின்மையும் பொதுவிதியாகும். எந்தத் தொழிலிலிருந்தாலும் தர்மத்தை விரும்பியவன் எல்லா யாகங்களுக்கும்வேண்டிய தக்ஷிணைகளையும் பாகயஜ்ஞங்களுக்குவேண்டிய அதிகப்பொருள்களையும் கொடுக்கலாம். மாசற்றவேந்தரே! இத்தகைய காரியங்கள்யாவும் உலகம்யாவும் செய்யத்தக்கவையென முன்காலத்தில் கூறப்பட்டன' என்றுசொன்னன்.

மாந்தாதா, 'மானிடலோகத்தில் எச்சாதியிலும் எவ்விதஆஸ்ரமங்களிலும் வேறுதர்மத்திலிருக்கும் திருடர்கள் காணப்படுகிறார்கள்' என்றுசொல்ல, இந்திரன் சொல்லத்தொடங்கினன்: 'குற்றமற்றவரே! ராஜதர்மத்தைவிட்ட அரசர்களின் துர்ப்புத்தியால் தண்டநீதி நாசமடையும்பொழுது ஜனங்கள் மிக்க அவிவேகமடைவார்கள். இந்தக் கிருதயுகம் முடிந்தபின் எண்ணிறந்த ஸந்யாஸிகளும் பிரம்மசாரிகளும் ஆஸ்ரமங்களின்வேற்றுமைகளும் உத்பத்தியாவார்கள்; ஸநாதனதர்மங்களைச் செவியில் வாங்காமல் பல நூற்றுக்கணக்கான மனிதர்கள் காமக்குரோதங்களால் ஏவப்பட்டுக் கெட்டவழியிற் செல்லுவார்கள். மஹாத்மாக்களான அரசர்கள் தண்டநீதி கொண்டு பாவத்தை விலக்க முயன்றால் சாச்வதமான பழையதர்மம் வளர்ந்து நிலைபெற்றிருக்கும். உலகமனைத்திற்கும் குருவாய் விளங்கும் அரசனை அவமதிக்கும் மனிதனுடைய கல்வியும் கர்மமும் தானமும் எங்கும் சிறிதும் பயன்படாதொழியும். மனிதர்களுக்கு அதிபதியாய்ப் பேரொளியுடன் தேவன்போல் விளங்கும் தர்மவிருப்ப

முள்ள அரசனைத் தேவர்களும் வெகுமானிக்கிறார்கள். உலகமனைத்தையும்படைத்த பகவானை பிரம்மதேவரும் பிரவிருத்தி நிவிருத்தி என இருவகைத்தர்மங்களையும் ரக்ஷிக்கக்கருதி க்ஷத்திரியனை வேண்டுகிறார். உலகத்தில் நடைபெற்றுவரும் தர்மத்தின்பயனைத் தன் புத்தியால் கவனித்துவரும் அரசன் க்ஷத்திரியர்களில் உறுதிபெற்றவனும் என்னால்பூஜிக்கத்தக்கவனும் மரியாதைசெய்யத்தக்கவனும் ஆகிறான்' என்று சொன்னார்.

உலகபதியான அந்த விஷ்ணுபகவான் இங்ஙனம் உபதேசித்தபின், தேவகணங்களால்சூழப்பெற்று, அழிவற்றதும்சாஸ்வதமும்சிறந்ததுமான தமது இருப்பிடஞ்சென்றார். குற்றமற்றஅரசனே ! முன்காலத்தில், இவ்விதம் நன்னடக்கையுடன்கூடினதர்மம் ஏற்படுத்தப்பட்டிருக்கும்பொழுது, அறிவுள்ளவனும் பலகல்விகள்கற்றவனுமான எவன் க்ஷத்திரியதர்மத்தை அதிக்ரமிப்பான்? வழியிற்செல்லும் குருடர்கள்போல நீதியற்றபிரவிருத்தியும் நிவிருத்தியும் இடையில் நாசமடைவனவாகும். ஆதிகாலத்தில், பிரம்மதேவரிடமிருந்து வெளிவந்ததும் முன்னோர்களுக்கு மிகமுக்கியமுமான தர்மசக்கரத்தில் நீ இருக்கவேண்டும். பாபமற்றபுருஷஶ்ரேஷ்டனே ! நான் உன்னை அதற்குத்தகுதியுள்ளவனாக அறிகிறேன்" என்றுசொன்னர்.

அறுபத்தைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் எல்லா ஆஶ்ரமதர்மங்களையும் விரிவாகச்சொல்லும்படி கேட்டதும், பீஷ்மர் ராஜதர்மத்தில் மற்றத்தர்மங்களும் அடங்கியிருக்கின்றன என்றதும்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே ! மனிதர்கள்யாருக்கும் நான்கு ஆஶ்ரமங்களுண்டென முன்கூறியதைக் கேட்டேன். அவைகளைத் தெளிவாக அறியவிருப்பமுள்ள எனக்கு அவைகளின் வியாக்யானத்தைச் சொல்லவேண்டுகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"மஹாபாஹுவானயுதிஷ்டிர ! ஸாதுக்கள் புகழத்தக்க கர்மங்களையெல்லாம் நான் அறிவதுபோல நீயும்அறிவாய். தர்மத்தைப்பரிபாலிப்பவர்களிற்சிறந்த யுதிஷ்டிரராஜனே ! நீ அறியக்கருதிய மிக்க ஸூக்ஷ்மமானதர்மத்தைத்தெரிந்துகொள். பரதர்களிற்சிறந்த கௌந்

தேய! உத்தமஆசாரம்பெற்ற நான்குஆஸ்ரமங்களின் இந்தக் கர்மங் கள்யாவும் ராஜதர்மத்திலிருக்கின்றன. யுதிஷ்டிர! நட்பும் பகையும் அற்றவனாகி எல்லாப்பிராணிகளிடத்தும் ஸமபுத்தியுடன் தண்டஞ் செலுத்திவரும்அரசன் துறவிகளுக்குரிய பதவிபெறுவான். கொடுப் பதும் விடுப்பதும் சிக்ஷிப்பதும் ரக்ஷிப்பதுமாகிய இவைகளை அறிந்து அவற்றுக்குத்தக்கண்டையுள்ள தீரனை அரசன் கிருஹஸ்தாஸ்ரமத் தின் பதவியடைவான். குந்திபுத்திரனை பாண்டவ! யோக்கியர் களைப்பகுத்தறிந்து எப்பொழுதும்பூஜிப்பவன் எங்கும் பிரம்மசர் யாஸ்ரமத்தின் பயனைஅடைவான். யுதிஷ்டிர! ஞாதிகளும் ஸம்பந்தி களும் ஸ்நேஹிதர்களும் துன்பப்படும்போது அத்துன்பத்தினின் றும் அவர்களைக் காப்பாற்றும் அரசன் வானப்ரஸ்தாஸ்ரமத்தின் பதவியடைவான். குந்திபுத்ரனே! முக்கியமான ஜனங்களிடத் திலும் முக்கியமான ஆஸ்ரமிகளிடத்திலும் அடிக்கடி மரியாதையைச் செய்யும் அரசன் வானப்ரஸ்தாஸ்ரமத்தின் பதவியை அடைவான். குந்திபுத்திரனை ராஜஸ்ரேஷ்ட! பிதிருயஜ்ஞமும் பூதயஜ்ஞமும் மனுஷ்யயஜ்ஞமும் தேவயஜ்ஞமுமாகிய் இவைகளை விரிவாகச்செய்வ துடன் மற்ற [1] ஆஹ்நிகத்தையும் செய்துகொண்டு அதிதிகளையும் மற்றப்பிராணிகளையும் யோக்கியதைக்குத்தக்கபடி ஆராதிக்கும் அர சன் வானப்ரஸ்தாஸ்ரமபதம் பெறுவான். ஸத்யமானபராக்ரமமுள்ள புருஷப்புலியே! சிஷ்டர்களைப் பாதுகாக்கவேண்டிப் பரராஜ்யங் களைப்பீடிக்கும் அரசனும் வானப்ரஸ்தாஸ்ரமத்திலிருப்பவனுவான். ராஜனே! பிராணிகளனைத்தையும் தன் ராஜ்யத்தையும் பரிபாலிப்ப தில் பலவகைத்தீக்ஷைபெற்ற அரசன் பிரம்மலோகத்தை அடையத் தக்க ஆஸ்ரமத்திலிருப்பவனுவான். வேதாத்யயனத்தில் விடா முயற்சியும் பொறுமையும் பெரியோர்களைப் பூஜிப்பதும் உபாத்தி யாயரின் பணிவிடையும் பிரம்மசரியாஸ்ரமத்திற்குரிய தர்மமாகும். புருஷஸ்ரேஷ்டனே! பகலில் ஜபிக்கத்தக்க புண்ணிய மந்திரங்களை ஜபிப்பதும் எப்பொழுதும் தேவர்களைப்பூஜிப்பதுமுள்ள மனிதன் ஸந்யாஸிகளுக்குரிய தர்மமுள்ளவனுவான். உயிரைப்பந்தயமாகக் கொண்ட யுத்தமென்னும்சொக்கட்டானில் மரணமோ அல்லது ரக்ஷணமோவென்ற உறுதியுள்ளஅரசன் ஸந்யாஸிக்குநிகராவான். ஏ! பாரத! எப்பொழுதும் எவ்விதப்பிராணிகளிடமும் கள்ளம்கபடம் அற்றவழியில் செல்லும் அரசனும் ஸந்யாஸிக்குச் சமமாவான். ஏ! பாரத! மூன்றுவேதங்களையும்கற்ற வானப்ரஸ்தாஸ்ரமிகளான பிராம் மணர்களிடம் அதிகப்பொருள்களை அர்ப்பணஞ்செய்பவனும் அவ்

---

1 தினந்தோறும் செய்யத்தக்கவை.

வான்ப்ரஸ்தாஶ்ரம முள்ளவனுவான். பார்த! எந்தப் பிராணிகளிட மும் தயைபாராட்டுவதுடன் குரூரமற்ற ஸ்வபாவத்திலிருக்கும் உனக் குப் புண்ணியம் ஓங்கிவளர்வது நிச்சயம். குந்திபுத்ரனை யுதிஷ்டிர! இளையனுனலும் முதியனுனலும் எந்தப் பருவத்திலிருக்கினும் அவர் கள்விஷயத்தில் தயையென்பது பழமையான தர்மம். குருஶ்ரேஷ்ட! துன்பமுற்றுச் சரணமென்றடுத்த பிராணிகளைப் பாதுகாப்பது தயைகளிற் சிறந்த தயையாகும். கௌரவ்ய! ஸ்தாவரஜங்கமமான பிராணிகளை எவ்விதத்திலும் ரக்ஷிப்பதும் யோக்யதைக்குத் தக்கபடி பூஜிப்பதும் கிருகஸ்தாஶ்ரமத்திற்குரிய தர்மமாகும். ஏ! பார்த்த! [1] இளையவளும் மூத்தவளுமான பத்னிகளையும் உடன்பிறந்தார்யும் பிள்ளைகளையும் பேரர்களையும் ரக்ஷிப்பதும் ரக்ஷிப்பதும் கிருகஸ்ததர் மங்களில் உத்தம்தர்மமாகும். புருஷஶ்ரேஷ்டனே! ஆத்மஜ்ஞான முள்ள பூஜிக்கத்தக்க ஸாதுக்களைப் பூஜித்துப் பரிபாலிப்பது கிரு ஹஸ்ததர்மமாகும். ஓ! பாரத! யுதிஷ்டிர! ஒவ்வோர் ஆஶ்ரமத்திலு முள்ள மனிதர்களுக்கும், தன்வீட்டில் மிகுதியாகப் போஜனம் செய் விப்பதும் உத்தமமான கிருஹஸ்ததர்மமாகும். கடவுளால் ஏற்படுத் தப்பட்ட ஸ்வதர்மத்தில் விதிப்படி உண்மையாக நிலைபெற்ற மனிதன் இடையூறின்றி எல்லா ஆஶ்ரமங்களின் பயனையும் அடைகிறான். குந்தியின் புத்ரனை யுதிஷ்டிர! நற்குணங்கள் எப்பொழுதும் எந் தப்புருஷனிடம் அழியாமலிருக்கின்றனவோ அந்த உத்தமபுருஷனும் எல்லா ஆஶ்ரமமுமுள்ளவனுவான். குந்தியின் புத்ரனும் புருஷஶ்ரேஷ் டனுமான யுதிஷ்டிர! குலம், பிராயம், ஸ்தானம் இவைகளின் மர் யாதையைச் செய்கிறவனும் தேசதர்மத்தையும் குலதர்மத்தையும் பாதுகாக்கிறவனுமான அரசன் எல்லா ஆஶ்ரமங்களின் பயனையும் அடைவான். புருஷஶ்ரேஷ்டனே! பிராணிகளின் ஸம்பத்தையும் லாபங்களையும் ஸமயத்தில் பெருமைப்படுத்திவரும் அரசன் ஸாதுக் களின் ஆஶ்ரமத்திலிருப்பவனுவான். ஏ! கௌரவ்ய! தேச தர் மத்திலிருப்பதுடன் எல்லா ஜனங்களின் தர்மத்தையும் கவனித்து வரும் அரசன் எல்லா ஆஶ்ரமங்களிலும் இருப்பவனுவான். ஏ! பாரத! உலகத்தில் எந்த அரசனுடைய ஆளுகையிலுள்ள மனிதர் கள் தர்மத்தில் ஸமர்த்தர்களாகித் தர்மத்தைச்செய்கிறார்களோ அந்த மனிதர்களின் தர்மத்தில் நாலிலொருபாகம் அந்த அரசனைச் சேரும். ஓ! புருஷஶ்ரேஷ்டனே! விசேஷ ஆதரவுடன் தர்மத்தை நாடிச் செல்லும் மனிதர்களை ரக்ஷியாத அரசன் அவர்களின் பாவத்தை அடைவான். குற்றமற்ற யுதிஷ்டிர! உலகத்தைப் பரிபாலிப்பதில்

---

1 இங்கு, 'ஸஹோதரரின் பத்னிகளையும்' என்றும்கொள்ளலாம்.

அரசனுக்குச் சகாயமாயிருப்பவர்கள் யாவரும் உலகத்தார் செய்யும் தர்மத்தில் ஓர் அம்சத்தை அடைவார்கள். ஓ! புருஷஸ்ரேஷ்டனே! நாம் உபாஸித்துவரும் கிருஹஸ்தாஸ்ரமத்தை ஆஸ்ரமங்களுள் மிகச் சிறந்ததென்று தீர்மானிக்கப்பட்டதும் பரிசுத்தமானதுமெனச் சொல்லுகிறார்கள். கோபத்தை வென்று பிராணிகளிடம் தன்னை உபமானமாகக்கொண்டு தண்டஞ் செலுத்திவரும் அரசன் இங்கும்இறந்த பின்னும் ஸுகம்பெறுவான். ஸத்யமென்னும் ஜலமும் சீலமென்னும் தடுப்பும் தர்மமென்னும் கொடியுமுள்ளதும் தியாகமென்னும் வாயுவால் மார்க்கத்தில் செல்லுகிறதும் வேகமுள்ளதுமான தர்மமென்னும் கப்பலேறி யாவற்றையும் கடந்துபோக முடியும். எந்தவிஷயத்திலும் பற்றற்றவனும் காமம் மனத்திலிருந்து விலகினவனும் நன்னடைகளுடன் ஸத்யமுள்ளவனுமான மனிதன் பிரம்மத்தை அடைவான். ஓ! புருஷஸ்ரேஷ்டனை அரசனே! மனத்தை அடக்கிக் கசடற்ற நல்லெண்ணத்துடன் (உலகத்தைப்) பரிபாலனஞ்செய்யும் நீ உத்தமதர்மம் அடைவாய். குற்றமற்றவனே! எல்லா உலகங்களையும் விசேஷமாக வேதாத்தியயனஞ் செய்பவர்களும் நற்கருமமுள்ளவர்களுமான பிராம்மணர்களையும் ரக்ஷிப்பதில் விசேஷ முயற்சியுடனிரு. பாரத! அரண்யத்திலிருந்து ஆஸ்ரமதர்மங்களைச் செய்யும் ஸாதுக்களை ரக்ஷிக்கும் அரசன் அவர்களின் தர்மத்தைவிட நூறு மடங்கு தர்மத்தை அடைவான். பாண்டவர்களிற் சிறந்த யுதிஷ்டிர! பலவித்தமான இந்தத் தர்மம் உனக்கு உரைக்கப்பட்டது. புருஷஸ்ரேஷ்டனை பாண்டவ! முன்காலத்தில் அறியப்பட்ட ஸநாதனமான இந்த நான்கு ஜாதி ஆஸ்ரமங்களின் தர்மங்கள் யாவற்றையும் பரிபாலன தர்மத்தை நடத்திவரும் நீ அடைவாய்" என்று சொன்னார்.

அறுபத்தாறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் ராஜ்யத்துக்கு அரசனிருத்தலாலுண்டாதும் நன்மையையும் இல்லாமையாலுண்டாதும் தீமையையும் மனுசரித்திரச் சுருக்கத்தையும் யுதிஷ்டிரருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! நான்கு ஜாதிகளும் அவ்விதமே நான்கு ஆஸ்ரமங்களும் சொல்லப்பட்டன. ராஜ்யத்திலுள்ள ஜனங்களுக்கு முக்கியமான காரியத்தை எனக்குச் சொல்ல வேண்டுகிறேன்" என்றுசொல்ல, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"அரசனை அபிஷேகஞ்செய்வது ஒன்றே ராஜ்யத்திற்கு மிகமுக்கியமானது. அரசனும் பலமும் இல்லாத ராஜ்யத்தைத் திருடர்கள் பீடிப்பார்கள். அராஜகமானராஜ்யத்தில் தர்மம்நிலைபெறாது. மேலும், ஜனங்களனைவரும் ஒருவரையொருவர் பக்ஷிப்பார்கள். அராஜகமானராஜ்யம் எவ்விதத்திலும் நிந்திக்கத்தக்கது. அரசனை வணங்கும் ஜனங்கள் இந்திரனைவணங்குகிறார்களென்று வேதம் உபதேசிக்கிறது. ஸம்பத்தைவிரும்பியமனிதன் அரசனை இந்திரனைப்போல ஆராதிக்கவேண்டும். அராஜகமான ராஜ்யங்களில் வஸிக்கக்கூடாதென வேதம் விதிக்கிறது. அராஜகமான ராஜ்யத்தில் அக்கினியும் ஹவிஸை வஹிக்கிறதில்லை. அரசனும் வீரர்களுமில்லாத ஒருராஜ்யத்தை ஆளும் எண்ணத்துடன் மிகப்பலசாலியான ஒருவன் ஒருகால் வரத்தொடங்கினால் ராஜ்யத்திலிருப்பவர்கள் அவனை எதிர்கொண்டு ஆராதிப்பது மிகநன்று. அரசனில்லாதராஜ்யத்தைவிடப் பெரும்பாவம் வேறு இல்லாமையால் அந்தச்சூரன் இதை நன்கு கவனித்தால் நிறைந்த க்ஷேமமுண்டாகும். இங்ஙனமன்றிப் பலசாலியான அந்தச்சூரனுக்குச் சினமுண்டாகச்செய்தால் ராஜ்யத்தை மிச்சமின்றி அவன் நசிக்கச்செய்வான். கறக்கக் கஷ்டமான பசு மிக்க துன்பத்தை அடைகிறது. அரசனே! லகுவாகக்கறக்கும்பசுவை ஜனங்கள் ஹிம்ஸிக்கிறதில்லை. சூடுகாட்டாமல் வணக்கத்தக்க வஸ்துவை மனிதர்கள் சுடுகிறதில்லை; தானே வணங்கும் மரத்தை வளைக்கக் கஷ்டப்படுத்தமாட்டார்கள். இவ்வுபமானமறிந்த புத்திசாலி பலவானிடத்தில் தானே வணங்கியிருக்கவேண்டும். பலவானுக்குச்செய்யும் வணக்கம் இந்திரனுக்குச் செய்ததாகும். ஆகையால், க்ஷேமத்தைவிரும்பும் மனிதர்கள் எப்பொழுதும் அரசனை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அரசனில்லாத ஜனங்கள் பொருளாட்சியையும் பெண்டிர்களின் போகத்தையும் அடையமுடியாது. அராஜகமான ராஜ்யத்தில் பாபியானவன் பிறர் பொருளை அபகரித்து ஸந்தோஷிப்பான். இவன்பொருளையும் மற்றப் பாவிகள் கவர்ந்துகொள்வார்கள். இவ்விதமிருக்குங்கால் ராஜ்யத்திற்கு அரசனைவிரும்பாமல் பாபிகளானமனிதர்களும் க்ஷேமத்தை அடைவதென்பது எந்தச்சமயமும் முடியாது. ஒருவனுடைய பொருளை இரண்டுபேர்களும் இருவர்களுடையதை வேறுபலரும் அபகரிப்பார்கள். அடிமைக்குத் தகாதவர்களை அடிமையாக்கவும் பலாத்காரமாகஸ்திரீகளை அபகரிக்கவும் செய்வார்கள். இந்தக்காரணம்பற்றியே தேவர்கள் அரசர்களை ஏற்படுத்தினர்கள். தண்டஞ்செலுத்தும் அரசன் இவ்வுலகிலில்லாவிடில் ஜலத்தில் மீன்களைப்போலப் பலசாலிகள் பலஹீனர்களை விழுங்கிவிடுவார்கள். முன்காலத்தில் பிரஜைகள் அரச

னில்லாதகாரணத்தால் ஜலத்திலுள்ள மீன்கள் இளைத்த மீன்களைப் போல ஒருவரையொருவர் பக்ஷித்துக்கொண்டு நாசமடைந்தார்களெனக் கேள்விப்பட்டிருக்கிறோம். பிறகு, அந்த ஜனங்கள் ஒன்று சேர்ந்து, 'கடுமையாகப் பேசுகிறவனையும் கடுமையாகத் தண்டிப்பவனையும் பாதாரத்தை அபகரிப்பவனையும் விலக்குவதுடன் நம்முடைய இந்த நிபந்தனையை மீறிநடப்பவனையும் விலக்கவேண்டும்' என உறுதியான தீர்மானஞ் செய்துகொண்டார்கள். இங்ஙனம், வேற்றுமையின்றி எல்லாச்சாதிகளுக்கும் நம்பிக்கையுண்டாகக் கருதித் தாங்கள் செய்துகொண்ட சபதத்திற்குத் தக்கபடி அந்த மனிதர்கள் நடந்துவந்தார்கள். இவ்விதமிருந்தும் துன்பமடைந்த பிரஜைகள்யாவரும் ஒன்றுகூடிப் பிரம்மதேவரிடஞ்சென்று, 'பகவானே! அரசனில்லாத காரணத்தால் நாசமடைகிறோம். எங்களைப் பரிபாலிக்கத்தக்க அரசனை அளிப்பீராகில் நாங்கள் யாவரும் அவனைப் பூஜித்துவருகிறோம்' என்று வேண்டிக்கொள்ள, பிரம்மதேவர் மனுவை அவர்களுக்கு அரசராயிருக்கும்படி கட்டளையிட்டார். மனு, சந்தோஷமில்லாமல், 'ராஜ்யத்தை ஆண்டுவருவது மிக்கக்கடினம். அதிலும் எப்பொழுதும் பொய்நடக்கையுள்ள மனிதர்களிடம். இது பெருங்கஷ்டம். ஆகையால், இப்பாவகாரியத்தில் எனக்குப் பயமுண்டாகிறது' என்று அந்த ப்ரஜைகளைப்பார்த்துக் கூறினர். இவ்விதஞ் சொன்ன மனுவைநோக்கிப் பிரஜைகள் சொல்லத்தொடங்கினர்கள்.

'ஓ! மனுவே! நீர் பயப்படவேண்டாம். நாங்கள் உமக்குவேண்டியதனத்தை விருத்திசெய்கிறோம்; பசுக்களிலும் பொன்னிலும் ஐம்பதிலொன்றையும் தான்யத்தில் பத்தில் ஒன்றையும் கோசத்தைப் பெருகச்செய்வதற்காகக் கொடுக்கிறோம்; விவாகங்களில்விலைப்பேச்சுவந்தால் அழகான கன்னிகையையுமக்கு அளிக்கிறோம். இந்திரனுடன் தேவர்கள் தொடர்வதுபோல எங்களில் பிரதானமனிதர்கள் ஆயுதத்தையும் வாஹனத்தையுங்கொண்டு உம்முடன் தொடர்ந்து வருவார்கள். ராஜரே! இவ்விதம், பிறர் எதிர்க்கத்தகாத பலம்பெற்று ப்ரதாபத்துடன் விளங்கும் நீர் குபேரன் ராக்ஷஸர்களைவாழ்விப்பதுபோல எங்கள்யாவரையும் ஸுகமாக வாழச்செய்யும். உம்மால் நன்கு பாதுகாக்கப்பட்ட நாங்கள்செய்யும் எவ்விதத்தர்மத்திலும் நாலிலொருபாகம் உம்மைச் சேரட்டும். அரசரே! ஸ்ரமமின்றிச்சேரும் இவ்விதமான பெரியதர்மத்தால் பெருமையுடன் அரசராகவிளங்கும் நீர் இந்திரன் தேவர்களைப் பரிபாலிப்பதுபோல எங்களை எந்தக்காரியத்திலும் பரிபாலனஞ்செய்யும்; தபிக்கச்செய்யும் ஸூர்யன்போலச் சத்துருக்களை வெல்லப் புறப்பட்டு அவர்களின் கொழுப்பை அடக்கி எப்பொழு

தும் எங்களுக்குத் தர்மத்தை உண்டுபண்ணும்' என்று சொல்லினர். இவ்விதஞ் சொல்லப்பட்டவரும் பெரிய தேஜஸுள்ளவரும் சிறந்த குலத்தில் ஜனித்தவரும் பெரிய பராக்ரமத்தால் ஜ்வலிப்பவர்போல விளங்குகிறவருமான அந்தமனு ஜனங்களின் அப்பெருஞ் சங்கத்தால் சூழப்பட்டவராய்ப் பிரயாணப்பட்டார். இந்திரனுடைய பெருமையைக்கண்ட தேவர்களைப்போல அம்மனுவின் பெருமையைக்கண்ட நான்கு ஜாதியார்களும் ஆஸ்ரமிகளும் மிலேச்சர்களும் திருடர்களுமாகியயாவரும் நடுக்கமுற்று மனத்தை ஸ்வதர்மத்தில் அர்ப்பணஞ் செய்தார்கள். பிறகு, பாவங்களை விலக்கிப் பிராணிகளை ஸ்வதர்மத்தில் முயற்சியுள்ளவைகளாகச் செய்து, வருஷிக்கும்மேகம்போல மனு பூமியைச்சுற்றி ஸஞ்சரித்தார்.

க்ஷேமத்தை விரும்பும் பூமியிலுள்ள மனிதர்கள் ஜனங்களின் நன்மையைவேண்டி இவ்விதம் முதலில் அரசனையே ஏற்படுத்தவேண்டும். தேவர்கள் இந்திரனைப்போலவும் சிஷ்யர்கள் ஆசிரியனைப் போலவும் அருகிலுள்ள ஜனங்கள் அரசனை எப்பொழுதும் பக்தியுடன் வணங்கவேண்டும். இவ்வுலகில், தன்னினத்தாரால் பூஜிக்கப்படும் மனிதனைப் பிறரும் வெகுமானிப்பார்கள். தன்ஜனத்தால் அவமதிக்கப்படும் மனிதனைப் பிறரும் அவமதிப்பார்கள். அரசனுக்குப் பகைவர்களால் நேரும் அவமதிப்பு மனிதர்யாவருக்கும் துன்பத்தை விளைவிக்கும். ஆகையால், குடை, வாகனம், ஆடைகள், ஆபரணங்கள், போஜனம், பானம், வீடு, ஆஸனங்கள், படுக்கைகள், மற்றுமுள்ள உபகரணங்களெல்லாவற்றையும் அரசனுக்கு அளிக்கவேண்டும். அரசனும் பகைவர்களால் எதிர்க்கத்தகாதவனாக உலகத்தைக் காப்பவனும் புன்சிரிப்புடன் முந்திப் பேசுகிறவனும் பேசுகிற மனிதர்களுக்கு இனிமையாக மறுமொழி சொல்லுகிறவனுமாயிருக்கவேண்டும். அன்றியும், இந்திரிய ஜயமுள்ளவனும் நன்றியறிவும் உறுதியான பக்தியுமுள்ளவனும் அதிதி முதலியவர்களுக்குப் பகுத்தளிப்பவனுமாயிருப்பதுடன் தன்னைப்பார்க்கும் ஜனங்களை நேராகவும் அழகாகவும் தானும் மெல்லப்பார்க்கவும்வேண்டும்" என்று சொன்னார்.

அறுபத்தேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(அரசன் ராஜ்யத்துக்கு அவசியமென்பதை ப்ருஹஸ்பதி வஸுமனஸுக்கு உபதேசித்ததைப் பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரானபிதாமஹரே! மனிதர்களுக்கு அதிபதியான அரசனை அந்தணர்கள் தெய்வமெனக்கூறும் வழியை

ನನಕ್ಕು ಅರಿವಿಕ್ಕವೇಂಡುಗಿರೇನ್" ಎನ್ರು ಕೇಟ್ಕ, ಪೀಷ್ಮರ್ ಸೊಲ್ಲತ್ತೊಡಂಗಿನರ್.

"ಓ! ಭಾರತ! ಇವ್ವಿಷಯತ್ತಿಲುಂ, ವಸೂಮನಸ್ ಪಿರುಹಸ್ಪತಿ ಮುನಿ ಇವರ್ಕಳಿನ್ ವಿನವಿಡೆಯಾನ ಇಪ್ಪೞೈಯ ಇತಿಹಾಸತ್ತೈ ಉದಾಹರಿಕ್ಕಿನ್ರರ್ಕಳ್. ಪುತ್ತಿಮಾನ್ಕಳಿಟ್ ಸಿಱಂದ ವಸೂಮನವಿಸನ್ನುಂ ಕೋಸಲದೇಸತ್ತರಸನ್ ಅಱಿವುಳ್ಳವರಾನ ಪಿರುಹಸ್ಪತಿ ಮಹರಿಷಿಯಿಡಂ ಪ್ರಶ್ನೈಂಜೆಯ್ದಾನ್. ವಿನಯಂತಿರಂದ ಅವ್ವರಸನ್ ಪಿರುಹಸ್ಪತಿಯಿಡಂಜೆನ್ರು ಪಿರದಕ್ಷಿಣಂಜೆಯ್ದಪಿನ್ ವಿದಿಪ್ಪಡಿ ನಮಸ್ಕರಿತ್ತು ಅಪಿವಾದನ ಮುದಲಿಯ ಎಲ್ಲಾಮರಿಯಾದೈಯೈಯುಂ ಸೆಯ್ದು ಎಲ್ಲಾ ಉಲಗತ್ತಿರ್ಕುಂ ಹಿತತ್ತೈ ವಿರುಂಬಿಯವನುಯ್ ರಾಜ್ಯತ್ತಿನ್ ವಿದಿಯೈಕ್ ಕೇಟ್ಕತ್ತೊಡಂಗಿನನ್. ಪಿರಜೈಕಳಿನ್ ಸೌಕತ್ತೈತ್ತೇಡುಂ ವಸೂಮನಸಾನವನ್, ತರ್ಮಸ್ವಭಾವಮುಳ್ಳ ಪಿರುಹಸ್ಪತಿ ಮುನಿಯೈ ನೋಕ್ಕಿ, 'ಅಱಿಞರ್ಕಳಿಟ್ಪೆರಿಯವರೇ! ಪಿರಾಣಿಕಳ್ವಳರವುಂ ನಸಿಕ್ಕವುಂ ಕಾರಣಮಾಯಿರುಪ್ಪವರ್ಯಾರ್? ಎವರೈಪ್ಪೂಜಿಪ್ಪವರ್ಕಳ್ ಅೞಿವಱ್ಱ ಸೌಕಮಡೈವಾರ್ಕಳ್? ತೇವರಿಷಿಯೇ! ಇವ್ವಿಷಯತ್ತೈ ಅರಂ ಪೊರುಳ್ ಇನ್ಬಂಕಳೈಪ್ಪಱ್ಱಿಯ ಸಂದೇಕಂ ವಿಲಗುಂಬಡಿ ಎನಕ್ಕು ಉಪದೇಸಿಕ್ಕವೇಂಡುಂ' ಎನ್ರು ಸೊನ್ನನ್. ಅಳವಱ್ಱಪರಾಕ್ರಮಮುಳ್ಳ ಕೋಸಲದೇವನ್ತನುಲ್ ಇಂಗ್ಙನಂವಿನವಪ್ಪಟ್ಟವರುಂ ತೇರಱಿವುಳ್ಳವರುಮಾನ ಪಿರುಹಸ್ಪತಿಮುನಿವರ್, ಅರಸರ್ಕಳಿನ್ ಪೆರುಮೈಯೈಯುಂ ರಾಜ್ಯತ್ತೈ ವಿರುತ್ತಿಪಣ್ಣುಮ್ಮುಱೈಯೈಯುಂ ತಣ್ಡನೀತಿಪ್ಪಡಿ ಪರಪರಪ್ಪಿನ್ಱಿ ಅವನ್ಬೊರುಟ್ಟುಚ್ ಸೊಲ್ಲತ್ತೊಡಂಗಿನರ್.

'ಅಱಿವಿಱ್ಸಿಱಂದ ಅರಸನೇ! ಉಲಗತ್ತಿನ್ ತರ್ಮತ್ತಿರ್ಕುಕ್ಕಾರಣಂ ಅರಸನೆನತ್ತೇನ್ರುಗಿಱತು. ಅರಸನಿಡಮುಳ್ಳಬಯಂಒನ್ಱಿನಾಲೇಯೇ ಪಿರಜೈಕಳ್ ಒರುವರೈಯೊರುವರ್ ಪಕ್ಷಿಯಾಮಲಿರುಕ್ಕಿನ್ರರ್ಕಳ್. ಅರಸನ್ತಾನ್ ಮರಿಯಾದೈಯಱ್ಱತುಂ ಪಿಱರ್ಪೊರುಳಿಲ್ ಆಸೈಯುಳ್ಳತುಮಾನ ಉಲಗಮನತ್ತೈಯುಂ ತರ್ಮತ್ತಾಲ್ ಸುತ್ತಿಪೆಱಚ್ ಸೆಯ್ದು ತಾನುಂ ಪರಿಸುತ್ತನಾಗವಿಳಂಗುಗಿನ್ರನ್. ರಾಜನೇ! ಸಂದಿರನುಂ ಸೂರ್ಯನುಂ ಉದಿಯಾವಿಡಿಲ್ ಪಿರಾಣಿಕಳ್ ಒರುವರೈಯೊರುವರ್ ಕಾಣುಮಲ್ ಪೋರಿರುಳಿಲ್ ಮೂೞ್ಗುವದುಪೋಲವುಂ ತಣ್ಣೀರ್ಕುಱುಗಿನ ಇಡತ್ತಿಲುಳ್ಳ ಮೀನ್ಕಳುಂ ಅಚ್ಚಮಿಲ್ಲಾ ಇಡತ್ತಿಲುಳ್ಳ ಪಱವೈಕಳುಂ ಇಷ್ಟಂಪೋಲ ವಿಳೈಯಾಡುವತುಡನ್ ಒನ್ಱೈಯೊನ್ರು ಎದಿರ್ತ್ತು ಅಡಿತ್ತುಪ್ ಪಲವಿದಮಾಗ ಹಿಂಸೈಸೆಯ್ತುಕೊಂಡು ಸಂತೋಕಮಿನ್ಱಿ ನಾಸಮಡೈವತುಪೋಲವುಂ ಮೇಯ್ಕ್ಕುಂಇಡೈಯನಱ್ಱ ಪಸುಕ್ಕಳ್ಪೋಲವುಂ.ಇಪ್ ಪಿರಜೈಕಳ್ ಅರಸನಿಲ್ಲಾವಿಡಿಲ್ಇರುಳಿಲ್ ಮೂೞ್ಗಿ ನಾಸಮಡೈಯುಂ. ಅರಸನ್ ಕಾಪ್ಪಾಱ್ಱುವಿಡಿಲ್ಪಲವೀನರ್ಕಳಿನ್ ತಿರವಿಯಂಗಳೈಪ್ ಪಲಸಾಲಿಕಳ್ ಅಪಕರಿಪ್ಪತುಮನ್ಱಿ ಎದಿರ್ತ್ತುವರುಮವರ್ಕಳೈಯುಂ ಕೊನ್ರುವಿಡುವರ್ಕಳ್. ಅರಸನ್ ಪರಿಪಾಲಿಯಾವಿಡಿಲ್ ಪಿಳ್ಳೈ, ಪೆಣ್ಡಿರ್,

பொருள், மற்றுமுள்ள திரவியங்களும் நசிப்பதுடன் இந்த உலகில், 'இஃது எனது' என்னும் எண்ணமும் நிலைபெறமாட்டாது. எங்கும் களவு நடக்கும். அரசன் பரிபாலியாவிடில் வாகனம், ஆடை, ஆபரணங்கள், பலவித ரத்தினங்கள் இவைகளையும் பாவிகள் பலாத்காரமாக அபகரிப்பார்கள்; அரசன் பரிபாலியாவிடில் தர்மத்தைச் செய்கிறவர்களைப் பலவித ஆயுதங்களாலடிப்பதுடன் அதர்மத்தையும் செய்வார்கள்; அரசன் பரிபாலியாவிடில் தாய், தந்தை, பெரியோர், ஆசிரியர், அதிதி, குரு இவர்களைக் கஷ்டப்படுத்துவார்கள்; கொலையுஞ் செய்வார்கள்; கூச்சலிடும் மற்ற ஜனங்களையும் அடிப்பார்கள். இந்த உலகம் திருடனுக்குச் சமமாகும். அரசன் பரிபாலியாவிடில் பொருளுள்ள ஜனங்களுக்குத் துன்பமும் பந்தமும் கொலையும் எச்சமயமும் உண்டாகும். எவரும் எனதென்னும் ஸ்வதந்திரத்தை வகிக்கமுடியாது. அரசன் பரிபாலியாவிடில் ராஜ்யம் பலவிதமாக அழியும்; இந்த உலகம் திருடர்களுக்கு ஈடுபட்டதாகும்; ஜனங்கள் அகாலத்தில் நாசமடைவார்கள். அரசன் பரிபாலியாவிடில் வர்த்தகமும் கிருஷியும் நடைபெறா; ஸ்திரீகளின் வ்யபிசாரமும் தோஷமாகாது; மூன்று வேதமும் தர்மமும் முழுகிப்போம். அரசன் பரிபாலியாவிடில் நிறைந்த தக்ஷிணையுள்ள யாகங்கள் விதிப்படி நடைபெறா; விவாஹங்களும் ஸபையும் நடைபெறா. அரசன் பரிபாலியாவிடில் காளைகளும் தாம் செல்லும் வழிச்செல்லா; (அறிவற்ற) தயிர்ச்சட்டிகளும் கடைய இடங்கொடா; இடைச்சேரிகளும் நாசமடையும். அரசன் பரிபாலியாவிடில் க்ஷணத்தில் உலகம் யாவும் பயந்து நடுக்கமுற்ற மனமுள்ளதாகிப் பிரஜ்ஞையின்றி, 'ஆ! ஆ!' என்று அழிந்துபோம். அரசன் காவாவிடில் வருஷக்கணக்குள்ள யாகங்கள் எவ்விதப் பயமுமின்றி விதிப்படி தக்ஷிணையுள்ளனவாய் நடைபெறா. அரசன் காவாவிடில் தவஞ்செய்யத்தக்க பிராம்மணர்கள் கல்விகளிலும் விரதங்களிலும் தீக்ஷைபெற்று நான்கு வேதங்களையும் விதிப்படி கற்கமாட்டார்கள். அரசன் ரக்ஷியாவிடில் ஜனங்கள் மோகம் பிடித்துத் தருமத்தைத் தள்ளிவிடுவார்கள். சங்கையின்றிப் பிறர் பொருளை அபகரிக்கப் புறப்படுவார்கள்; அரசன் ரக்ஷியாவிடில் மனிதர்களின் கையிலுள்ள திரவியத்தையும் அவர்கள் கையிலிருந்து திருடர்கள் களவுசெய்வார்கள். எவ்வித வரம்புகளும் மாறிவிடும்; யாவரும் பயத்திலுல் பீடிக்கப்பட்டு ஓடுவார்கள். அரசன் பரிபாலியாவிடில் நீதியின்றித் தோன்றியபடி ஜனங்கள் நடப்பார்கள்; [1]வர்ண

1 எல்லா ஜாதிகளும் ஒன்றாய்க் கலப்பது.

ஸங்காரம் ஏற்படும்; ராஜ்யத்தைத் தர்ப்பிகூடும் பிடிக்கும். அரசனுல் நன்கு ரகூஷிக்கப்படும் மனிதர்கள் எங்கும் எவ்விதப் பயமுமின்றி வீட்டின் வாயிற்கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு இஷ்டப்படி படுத்துறங்குவார்கள். தர்மந்தவறுத அரசன் பூமியை நன்கு பரிபாலியாவிடில் எவனும் வைதலையும் பொறுக்கமாட்டான்; கையோங்குதலை எவ்விதம் ஸஹிப்பான்? அரசன் ரகூஷித்தால் அபலைகளான பெண்களும் பயமின்றி எவ்வித ஆபரணங்களையும் பூண்டு புருஷ ஸஹாயமின்றித் தனியே வழியிற்செல்லுவார்கள். அரசன் ரகூஷிக்குங்காலத்தில் ஜனங்கள் ஒருவரையொருவர் துன்பப்படுத்தாமல் ஆதரிப்பதுடன் தருமவழியே செல்லுவார்கள். அரசன் ரகூஷிக்குங் காலத்தில் பிராம்மணர் முதலிய மூவருணத்தார்களும் நியமமுள்ளவர்களாய் வித்தையைக் கற்பதுடன் வெவ்வேறான பெரிய யாகங்களையும் செய்வார்கள். வேதத்தையும் ஜீவனத்தையும் மூலமாகக்கொண்டு ஜீவிக்கும் இவ்வுலகம் யாவும் அரசனின் ரகூஷையில் நிலைபெற வேண்டும். அரசன் தன்னுடைய பெரிய பலத்தால் சிறந்ததான பூபாரத்தைத்தாங்கிப் பிரஜைகளை ரகூஷிப்பானுகில் உலகம் குற்றமின்றித் தெளிந்து நிற்கும். பிராணிகளினிருப்பிற்கும் இல்லாமைக்கும் உறுதியான காரணமான தன்னிருப்பையுமில்லாமையையுமுடைய அரசனைப் பூஜியாதவன் யார்? உலகமனைத்துக்கும் ஸுகம் தரத்தக்க அரசனின் பாரத்தை வஹிப்பதுடன் அவனது இதத்திலும் பிரியத்திலும் நிலைபெற்றிருப்பவன் இவ்விரண்டு உலகங்களையும் ஜயிப்பான். மனத்திலுலாவது அரசனுக்குக் கேடுநினைக்கும் மனிதன் ஸந்தேகமின்றி இங்கே துன்பப்படுவதுடன் இறந்தும் நரகமடைவான். இவனும் ஒரு மனிதனென்றெண்ணி அரசன் எந்தச்சமயமும் அவமதிக்கத்தக்கவனல்லன். அரசனென்னும் மனித உருவத்துடன் ஒரு பெருந் தெய்வமிருப்பதாக அறியவேண்டும். காலத்துக்குத் தக்கபடி ஐந்து ரூபங்களைச் செய்யுமரசன் முறையே அக்கினி, ஆதித்தன், மிருத்யு, குபேரன், யமன் என்ற ஐந்து தேவரூபியாவான்; அருகிலிருக்கும் பொய்ந்நடக்கையுள்ள பாபிகளைக் கடோரமான தேஜஸால் கொளுத்துங்கால் அக்கினியாகிறன்; சாரன்மூலமாகப் பிராணிகள் யாவரையும்பார்த்து அவர்களின்க்ஷேமத்தைச் செய்துகொண்டு செல்லுங்கால் ஆதித்யனுகிறன். அரசன் மிக்க கோபத்துடன் கெட்டநடையுள்ள மனிதர்களைப் பிள்ளை பேரன் மந்திரிகளுடன் பலவிதமாக நசிக்கச் செய்யும்போது மிருத்யுவாகிறன். அதர்மத்தில்சென்ற எல்லா மனிதர்களையும் கடுந்தண்டங்களால் சிக்ஷித்துத் தார்மிகர்களை ரகூஷித்து

வரும்போது அரசன் யமனுகிறான். எப்பொழுது, அரசன் உபகாரம் செய்யும் ஜனங்களுக்குத் தனங்களைவருஷித்துத் திருப்திசெய்தும் விரோதிகளுடைய பலவித ரத்தினங்களையும் அபகரித்தும் ஒருவனுக்கு ஸம்பத்தைக்கொடுத்தும் ஒருவனிடமிருந்து தனத்தைஅபகரித்தும்வருகிறானே அப்பொழுது, அந்தஅரசன் உலகில் குபேரனுகிறான். கபடாரமற்ற நடக்கையுள்ளவனும் தருமத்தைவிரும்பியவனும் ஸமர்த்தனுமான மனிதன் உலகத்தில் அரசனிடம் அஸூயையில்லாமலும் அரசனுக்கு விரோதமில்லாமலுமிருக்கவேண்டும். பிள்ளையாயிருந்தாலும் கண்பஞையிருந்தாலும் உடன்பிறந்தவனுயிருந்தாலும் உயிர்த்தோழனுயிருந்தாலும் அரசனுக்கு விரோதங்களைச் செய்யும் மனிதன் ஸுகத்தை அடையமாட்டான். காற்றுடன் சேர்ந்து ஜ்வலிக்கும் அக்நியில் அகப்பட்டதில் மிச்சமுண்டாகலாம்; அரசன் கோபத்திற்காளானவன் சிறிதும் மிஞ்சமாட்டான். மனிதன், அரசனுடைய கையிலுள்ள எவ்விதவஸ்துக்களையும் [1] வெகுதூரத்தில் விலக்கவேண்டும். மிருத்யுவிடம் பயப்படுவதுபோல அரசன் பொருளைக்கவர்வதிலிருந்து பயப்படவேண்டும். வஞ்சகமாகக்கொல்லும் யந்திரத்தில் சென்றமிருகம்போல ராஜத்ரவ்யத்தை எடுக்கத்தொடரும் மனிதன் உடனே கொல்லப்படுவான். இந்தஉலகத்தில் புத்தியுள்ளவன் தன் திரவியத்தைப்போல ராஜத்ரவ்யத்தைக் கவனத்துடன் காக்கவேண்டும். புத்தியின்றி அரசன்பொருளை அபகரிக்கும் மனிதர்கள் பலவிதமும் கோரமுமான பெருநரகத்தில் நெடுங்காலம் விழுகிறார்கள். ராஜா, போஜன், விராட், ஸம்ராட், க்ஷத்ரியன், பூபதி, நரபதியென்னும் இப்பதங்களால் புகழப்படும்அரசனைப் பூஜிக்கத்தகாதவன் யார்? ஆகையால், க்ஷேமத்தை விரும்பும்மனிதன் மனத்தையும் இந்திரியங்களையும் அடக்கிக்கொண்டு நல்லபுத்தியும் தைர்யமும் ஸமர்த்தியமுமுள்ளவனுய் அவசியம் அரசனை ஆச்ரயிக்கவேண்டும். நல்லபுத்தியுடன் நன்றியறிவுள்ளவனும் பெருந்தன்மையும் இந்திரியஜயமும் உறுதியான பக்தியுமுள்ளவனும் தருமத்தில்நிலைபெற்றவனும் தன் நிலையிலிருப்பவனுமான மந்திரியை அரசன் பூஜிக்கவேண்டும். உறுதியான பக்தியுள்ளவனும் கல்விப்பயிற்சியுடன் தர்மந்தரித்தவனும் இந்திரியங்களை ஜயித்தவனும் பெருந்தன்மையுள்ளவனும் சூரனும் பிரஸித்தனுமானமனிதனை அரசன் அடையவேண்டும். அரசன், மனிதனை வல்லமையுள்ளவனும் மிக்க பெருமையுள்ளவனுமாகச் செய்யத்தக்கவன். அரசன் அடுத்தவனை ஸுகித்திருக்கச்செய்வான். அரசனை

---

1 அஞ்சி அணுகாதிருக்கவேண்டும் என்பது கருத்து.

எதிர்ப்பவனுக்கு எங்கும்ஸுகமில்லை. பிரஜைகள் அரசனைத் தம் முதல்சரீரமாகவும் அரசன் பிரஜைகளைத் தன்னுயிர்ப்பற்ற சரீரமாகவும் பாவிக்கவேண்டும். அரசனில்லாததேசமும் தேசமில்லாத அரசனும் நிலைபெறுதலில்லை. அரசன், பிரஜைகளுக்கு மனமும் நற்கதியும் பிரதிஷ்டையும் உயர்ந்தஸுகமுமாகிறான். ராஜனே! அரசனை நன்றாக அடைந்த மனிதர்கள் இவ்வுலகையும் மேலுலகையும் ஜயிப்பார்கள். தவம், ஸத்தியம், நட்பு இவைகளுடன் பூமியைப்பரிபாலித்துவரும் அரசனும் பெரியயாகங்களைச்செய்து பெரும்புகழ்பெற்று ஸ்வர்க்கத்தில் சாஸ்வதமானபதம் பெறுவான்' என்றுசொன்னர். அங்கிரஸ் என்னுமுனிவரால் இங்ஙனம் உபதேசிக்கப்பட்டவனும் அரசர்களிற் சிறந்தவனுமான அக் கோஸலவீரன் பிரஜைகளின் பரிபாலனமென்னும் உத்தமதர்மத்தை மிக்கமுயற்சியுடன் செய்துவந்தான்" என்றுசொன்னர்.

அறுபத்தெட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அரசாட்சியின்முறையை யுதிஷ்டிரருக்குக்கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! விசேஷமாக அரசன்செய்யவேண்டிய காரியம்எது? கிராமத்தை ரக்ஷிப்பதும் பகைவர்களைக்கொல்லுவதும் சாரர்களைஏவுவதும் பிள்ளை, பெண்டிர், வேலைக்காரர்கள், மற்றுமுள்ளஜாதியாரனைவரையும் விஸ்வாஸமுள்ளவர்களாகச் செய்வதும் எங்ஙனம்?" என்று கேட்டனர்.

பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "ஓ! மஹாராஜனே! முதலில் அரசனும் அரசாட்சியைவஹிப்பவனும் செய்யத்தக்க ராஜகாரியம்யாவற்றையும் கவனத்துடன்கேள். அரசன், எப்பொழுதும் முதலில் தன்னையும் பின்பு சத்துருக்களையும் ஜயிக்கவேண்டும். தன்னை ஜயிக்காதஅரசன் சத்துருக்களைஜயிப்பது எங்ஙனம்? ஐவகைப்புலன்களையுமடக்குவது தன்னை ஜயிப்பதாகும். இந்திரியங்களைஜயித்த அரசனே பகைவர்களைக் கொல்லவல்லவனுவான். ஓ! குருஸ்ரேஷ்டனே! கோட்டைகள், எல்லை, பட்டணத்தின்உபவனம், உத்யானவனம், ஜனங்கள்கூடுமிடங்கள், ரஹஸ்யமானபலஇடங்கள், நகரின் நடு, அரண்மனை இந்தவிடங்களில் காக்கத்தகுதியுள்ள ஆள்களைவைக்கவேண்டும். புருஷஸ்ரேஷ்டனே! நன்றுகப்பரீக்ஷிக்கப்பட்டவர்களும், புத்திமான்களும், பதிதாகஸ்ரமங்களைப்பொறுப்பவர்களும், அசடனும்

குருடனும் செவிடனும்போன்ற உருவமுள்ளவர்களுமான புருஷர் களை ரஹஸ்யதூதர்களாக நியமிக்கவேண்டும். மஹாராஜனே! கவன முள்ள அரசன் எல்லாமந்திரிகளிடத்திலும் மூவகைநண்பர்களிடத்தி லும் புத்திரர்களிடத்திலும் பட்டணத்திலும் கிராமத்திலும் ஸாமந்த ராஜர்களிடத்திலும் ஒருவரையொருவர் அறியாத வண்ணம் சாரர் களை இருக்கச் செய்யவேண்டும். ஏ! பரதஸ்ரேஷ்ட! ஸமர்த்த னை அரசன் கடைகள், விளையாடுமிடங்கள், ஜனங்கள் கூடுமிடங் கள், வீதிகள், தோட்டங்கள், சிறுதோட்டம், கல்விச்சங்கம், தாஸி களிருக்குமிடங்கள், நியாயஸபை, வேலைக்காரர்களிருக்கும் இடங்கள், தனவான்களின் வீடுகள் ஆகிய இவ்விடங்களில் பிறரால னுப்பப்படும் சாரர்களைத் தன்சாரனைக் கொண்டு தேடியறிந்து அடிக்கவேண்டும். ஓ! பாரத! தூதனைத்தடுப்பதால் யாவும் தடுக்கப்படும். அரசன், தான் குறைவுள்ளவனைத் தனக்குத் தோன்றும்போது மந்திரி களுடன் ஆலோசித்துக்கொண்டு தனக்கு மேலான பலமுள்ள அர சனுடன் ஸந்தி செய்துகொள்ள வேண்டும். ராஜனே! பலசாஸ்திரங் களைக் கற்றவர்களும் வித்வான்களும் தண்டநீதியை நன்றாகக் கற்ற வர்களுமான பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைச்யர்களும் (அரசனுக்கு) மந்திரிகளாயிருக்கவேண்டும். (நீதியிற் சந்தேகமுள்ள) அரசன் (இவர்களில்) முதலில் நீதிசாஸ்திரத்தின் உண்மையையறிந்த பிராம்மணனையும், பிறகு நீதிநிபுணனை க்ஷத்திரியனையும், பிறகு சாஸ்திரஅறிவுடன் தன்ஹிதத்தைச் செய்யும் வைச்யசூத்திரர்களை யும் கேட்கவேண்டும். தனக்கு யாதொரு குறைவும் அறியப்படா விடினும் ஒருவிதம் பெரும் பயனைக்கருதி ஸமர்த்தனை அரசன் பிறருடன் வேகமாக ஸந்தியைச் செய்யவேண்டும். தர்மமாக ராஜ் யத்தைக்காக்கும் அரசன் நற்குணமுள்ளவர்களும் மிக்க உற்சாக முள்ளவர்களும் தர்மம் தெரிந்தவர்களும் ஸாதுக்களுமான அரசர்க ளுடனும் ஸந்தி செய்துகொள்ள வேண்டும். பெரியபுத்தியுள்ள அர சன் உலகத்திற்கு விரோதிகளும் முன்பு தனக்கு அபகாரம் செய்த வர்களுமான அரசர்களை அவர்கள் நசிக்கத்தக்க ஸமயம்பார்த்து எவ் விதமும் கொல்ல வேண்டும். உபகாரத்தையாவது அபகாரத்தை யாவது செய்யச் சக்தியற்றவனும் விலக்கத்தகாதவனுமான அரச னிடம் உதாஸீனனை யிருக்கவேண்டும். ஸமர்த்தனும் வீரனும் வித்வானும் சேனைவளப்பத்துடன் ஸுகித்திருப்பவனுமான அர சன் யாத்திரையில் விருப்பமுண்டானால் முதலில் தன்பட்டணத்தை ரக்ஷிக்கத்தக்க உபாயங்களைச் செய்துவிட்டுப் பந்துக்களும் நண்பர்

களும்அற்றவனும் பிறரால் எதிர்க்கப்பட்டவனும் முயற்சியற்றவனும் பலவீனனுமாக [1] அறியப்பட்ட அரசனை நோக்கி யாத்திரையைச் செய்யக் கட்டளையிட வேண்டும். பலமும் வீரியமும் குறைந்த அரசன் அதிகவீரியமுள்ள அரசனுக்கு உடன்படாமல் எப்பொழுதும் அவனை இழுக்க வழிபார்க்க வேண்டும். அவனுடைய ராஜ்யத்தை ஆயுதங்கள், தீ, விஷம், மயக்கம்கொடுப்பது இவைகளால் பீடிக்கவேண்டும். அந்த அரசர்களுக்கும் சிறந்தஅமைச்சர்களுக்கும் விவாதங்களையும் உண்டுபண்ணவேண்டும். ராஜனே! ராஜ்யத்தில் விருப்பமுள்ள புத்திமானான அரசன் பலவானுடன் எந்த ஸமயமும் யுத்தத்தை விலக்கவேண்டும். எப்பொழுதும், ஸாமம், தானம், பேதம் என்ற மூன்று உபாயங்களால் அடையக்கூடிய பொருளை அடையவேண்டுமென்றும், பண்டிதன் இவ்விதம் அடைந்தபொருளைக்கொண்டு ஸந்தோஷிக்க வேண்டுமென்றும் பிருஹஸ்பதி கூறினர். ஓ! குருநந்தன! அளவற்ற அறிவுள்ள அரசன் பிரஜைகளைக்காக்க வேண்டி அந்தப் பிரஜைகளிடமிருந்து ஆறில் ஒருபாகம் கப்பத்தையும் வாங்கவேண்டும். தண்டிக்கத்தக்க மத்தன் உன்மத்தன் முதலியவர்களிடமிருந்து சிறிதோ பெரிதோ அபராதப் பணத்தைப் பிரஜைகளை ரக்ஷிக்கவேண்டியே விரைந்து [2] வாங்கவேண்டும். பிரஜைகளை ஸந்தோஷமின்றித் தன்மக்களைப்போலப் பார்க்க வேண்டும். வியவகாரத்தைப் பார்க்கும்போது எந்த மனிதனிடமும் ஸ்நேக புத்தி பாராட்டக் கூடாது. அரசன், எல்லா அர்த்தங்களையும் அறிந்த அறிஞர்களை வியவகாரங்களை விசாரிப்பதற்கு ஏற்படுத்தவேண்டும். ராஜ்யம் அந்த வியவகாரங்களில் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கிறது. தங்கமும் ரத்னமும் எடுக்குமிடத்திலும் உப்பளத்திலும் சுங்கச்சாவடியிலும் அல்லது தான்யங்கள் முதலியவைகள் விற்குமிடத்திலும் ஏற்றுமதிசெய்யுமிடத்திலும் யானைக்கூட்டமுள்ள இடத்திலும் அமைச்சர்களையாவது அல்லது நம்பிக்கையுள்ளவர்களும் ஹிதர்களுமான மனிதர்களையாவது அரசன் நியமிக்கவேண்டும். எப்பொழுதும் நன்றாகத் தண்டஞ்செலுத்திவரும் அரசன் தர்மத்தை அடைவான். தண்டமானது அரசனுக்கு எப்பொழுதும் உத்தமதர்மமெனப் புகழப்படுகிறது. அரசன், வேதவேதாங்கங்களைக் கற்றவனும் அறிவில் சிறந்தவனும்நல்லதவமுள்ளவனும்எப்பொழுதும் தானத்தையும்யாகத்தையும் செய்யும் தன்மையுள்ளவனுமா யிருக்கவேண்டும். ஓ! பாரத! இந்தக் குணங்கள்யாவும் அரசனிடம் எப்பொழுதும் நிலைபெற்றிருக்க வேண்

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

2 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

டும். வியவகாரத்திற்குக் கேடுவருமாகில் அரசனுக்குக் கீர்த்தியும் ஸ்வர்க்கமும் எங்கிருந்து கிடைக்கும்? புத்திமானை அரசன் தன்னிலும் மேலான பலமுள்ள அரசனல் பீடிக்கப்படும்போது துர்க்கத்தை அடையவேண்டும். விதிப்படி ஸ்நேஹநிதர்களை அடைந்து பகையாளியை வெல்லவேண்டி ஸாமமும் பேதமுமாகிய உபாயங்களையும் மற்றுமுள்ளவழிகளையும் வருமாறு செய்யவேண்டும். 1 ராஜமார்க்கங்களில் காட்டாள்களை நியமிக்கவேண்டும். கிராமத்திலுள்ள ஜனங்களை வெளிப்படுத்தி ஸமீபத்திலுள்ள கிளைப்பட்டணங்களில் வஸிக்கச் செய்யவேண்டும். தனமுள்ளவர்களையும் சேனத்தலைவர்களையும் பல முறை நல்ல வசனங்களைச்சொல்லி ரக்ஷிக்கப்பட்ட கோட்டைப்ரதேசங்களில் இருக்கச்செய்யவேண்டும். பலதான்யங்களுள்ள பயிர்களை அரசன் தன்சமீபம் வரச் செய்துகொள்ளவேண்டும். கொண்டுவரக் கூடாத பூமியிலுள்ள பயிர்களைத் தீயால் மிக எரித்துவிடச் செய்யவேண்டும். சத்துருவைச்சார்ந்த ஜனங்களைப் (பல உபாயங்களால்) பேதிக்கவேண்டும். அவ்விதம்பேதித்தஜனங்களாலோ அல்லது தன் சேனையாலோ அவையெல்லாவற்றையும் அழியச்செய்யவேண்டும். நதிமார்க்கங்களிலுள்ள (சத்துருவரத்தக்க) பாலங்களை இடித்துவிடவேண்டும். குளங்களிலுள்ள ஜலங்களையெல்லாம் வெளியே ஓடச் செய்யவேண்டும். அவ்விதம் செய்யமுடியாத கிணறுமுதலியவைகளை விஷம்முதலியவைகளால் கெடுக்கவேண்டும். அந்தச்சமயத்திலும் வருங்காலத்திலும் 2 நேரிட்டவேறுமித்ராகாரியத்தையும் கவனியாமல் தன் சத்துருவிடம் பகையுள்ளவனும் அவனைவெல்லத்தக்கவனுமான அரசனை நேசித்துக்கொண்டு வஸிக்கவேண்டும். கோட்டைகளுக்குச்சுற்றிலுமுள்ள சைத்யவிருக்ஷமல்லாத சிறியமரங்களையெல்லாம் வேருடன்வெட்டவேண்டும். முதிர்ந்தமரங்களின்கிளைகளை அறுக்கச்செய்யவேண்டும். சைத்யவிருக்ஷங்களின் இலையும் எவ்விதமும் கீழ்விழாமல் விலக்கவேண்டும். சைத்யவிருக்ஷங்கள் தேவர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், 3 போகிகள், பிசாசங்கள், பன்னகர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸுகள், ருத்ரபரிவாரங்களான பூதங்கள் ஆகியஇவர்களுக்கு இருப்பிடமாகையால் அம்மரங்களைவெட்டாமல் விலக்கவேண்டும். அரசனே! வாராணஸியென்னும் தேசத்தில் ப்ரமதகணங்களின் தலைவனான நிகும்பனல் ஸௌதாஸனென்னும் அரசனுடையசேனை கொல்லப்பட்டதாகக் கேள்விப்படுகிறோம். 4 பிரகண்டிகளென்

---

1 இங்கு அதிகபாடம் விடப்பட்டது.

2 இங்கு வேறுபாடங்கொள்ளப்பட்டது. 3 ஒருவகைஸர்ப்பங்கள்.

4 வெகுதூரத்தில்வரும் ஜனங்களைக் காணத்தக்கதும் வெளிப்பிராகாரச் சுவரில் அமைக்கப்பட்டதுமான குர்கனிருக்குமிடம்.

னும் இடங்களையும் [1] ஆகாசஜநநினென்னும் இடங்களையும் நன்முகச் செய்துவைக்கவேண்டும். சூலங்களுள்ள முளைகளாலும் முதலைகளாலும் திமிங்கிலங்களாலும் அகழியை நிரம்பச்செய்யவேண்டும். பட்டணத்திலுள்ளவர்களின் ஆஸ்வாஸத்திற்குவேண்டிச் சிறியதுவாரங்களைச் செய்துகொள்ளவேண்டும். அவ்விதத் துவாரங்களையும் வாயில்களைப்போல மிக்ககவனத்துடன் எல்லாவிதத்திலும் ரக்ஷித்துவரவேண்டும். ஒவ்வொரு துவாரங்களிலும் பெரிய யந்திரங்களையும் சதக்நியென்னும் ஆயுதங்களையும் ஏற்றிவைப்பதுடன் அவைகளைஸ்வாதீனமாக இருக்கச்செய்யவும்வேண்டும். கட்டைகளைச் சேர்த்துவைக்கவேண்டும். அப்படியே, கிணறுகளைவெட்டும்படி செய்யவேண்டும். தண்ணீர்விருப்பமுள்ள முன்னோர்களால் வெட்டப்பட்ட கிணறுகளை அப்படியே சுத்தஞ்செய்யவேண்டும். புற்கூரையுள்ள வீடுகளைச் சேற்றிஞல் பூசவேண்டும். சித்திரைமாதத்தில் அக்நி பயமில்லாதிருக்கவேண்டி அப்புற்களை முன்னதாக எடுத்துவிடவேண்டும். அரசன் அக்நிஹோத்ரம் ஒன்றைத்தவிரப் பகலில் வேறுதீயை வளர்க்கச்செய்யாமல் அன்னமுதலியவைகளையும் இரவிலேயே பாகம்பண்ணச்செய்யவேண்டும். தேசத்தையும் பலாபலத்தையுமறிந்து முடிந்தவரையில் கற்களாலும் செங்கற்களாலும் மண்களாலும் வீடுகளைக் கட்டிக்கொள்ளச் செய்யவேண்டும். கருமான்உலைகளிலும் பிரஸவஅறைகளிலும் வீடுகளின் மற்ற அறைகளிலும் அக்நியை நன்முகப்பரிபாலித்து மறைவாயிருக்கச்செய்யவேண்டும். பகலில் அக்நியை வெளியிட்ட மனிதனுக்குக் கொலைத்தண்டம் விதிப்பதுடன் நகரைப் பாதுகாக்கவேண்டி அத்தண்டவிதியை யாவரும் அறியும்படிவெளியிடவும்வேண்டும். அரசனே! பிச்சைக்காரர்களையும் வண்டிக்காரர்களையும் நபும்ஸகர்களையும் பைத்தியக்காரர்களையும் [2] பயிர்த்தொழிலுள்ளவர்களையும் வெளியிலிருக்கச்செய்யவேண்டும். இவர்கள் இயற்கையில் கெட்ட எண்ணமுள்ளவர்களாகையால் ஏதாவது குற்றமுண்டாகச்செய்வார்கள். அரசன் ஸபைகளிலும் வீடுகளிலும் முன்கூறப்பட்ட [3] மந்திரிமுதலிய பதினெட்டுத்தீர்த்தங்களிலும் [4] நாற்சந்திகளிலும் மற்றுமுள்ள எல்லா இடங்களிலும் உண்மைசொல்லும் சாரனை நியமிக்கவேண்டும். அரசன் ராஜமார்க்கங்களை விசாலமாகச் செய்விக்கவேண்டும். இடத்திற்குத்

---

1 சூரர்கள் தம்மை ரக்ஷித்துக்கொள்ளத்தக்கதும் வெளியிலுள்ள சத்துருக்களைநோக்கி வெடிகளைப்பிரயோகிக்கத்தக்க துவாரங்களுள்ளதுமாக வெளிப்பிராகாரத்திலுள்ள இடம்.

2 பாடகர்களென்றும் பொருளுண்டு.

3 ஆதிபர்வம் 578-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

4 வழிப்போக்கர்கள் தங்குதற்குரிய இடங்களென்றும்கொள்ளலாம்.

தக்கபடி தண்ணீர்ச்சாலைகளையும் கடைகளையும் ஏற்படுத்தும்படி கட்டளையிடவேண்டும். ஓ! கௌரவ! ஆயுதங்களும் தான்யங்களும் பாண்டங்களும் யானைகளும் குதிரைகளும் சேனைகளுமிருக்குமிடங்களையும் அகழிகளையும் வீதிகளையும் ரஹஸ்யவழிகளையும் யாரும் ஒருபோதும் அறியாமல் ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளவேண்டும். யுதிஷ்டிர! பரசேனையால் பீடிக்கப்படும் அரசன் திரவியங்களைத் திரட்டிச்சேர்ப்பதுடன் எண்ணெய், நெய், தேன், தான்யம், மருந்துகள், அக்நி, குசம், முஞ்சம், இலைகள், நாணல், [1] ஓலைகள், புல், விறகு, விஷந்தோய்ந்தபாணங்கள், வேல், பிராஸம், ரிஷ்டி, கேடக முதலிய பலஆயுதங்கள்ஆகிய இவைகளையும் இவைபோன்ற பலவஸ்துக்களையும் திரட்டிச்சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். எல்லா ஔஷதங்களையும், கிழங்குகளையும், கனிகளையும், (விஷம், சல்யம், வியாதிகள், மந்திரப்ரயோகங்கள் இவைகளைவிலக்கும்) நான்குவித வைத்தியர்களையும் விசேஷமாகத்தேடிவைக்கவேண்டும். நட்டுவர்களையும் நர்த்தகர்களையும் மல்லர்களையும் மாயாவிகளையும் சேர்க்கவேண்டும். இவர்கள் பட்டணத்தை அலங்கரிப்பார்கள்; எல்லாஜனங்களையும் சந்தோஷப்படுத்துவார்கள். எந்த மந்திரிகளிடமிருந்தும் சேவகர்களிடமிருந்தும் பட்டணத்துஜனங்களிடமிருந்தும் அரசனிடமிருந்தும் சங்கைஉண்டாகிறதோ அவர்களை அரசன் தனக்குவசப்பட்டவர்களாகச் செய்யவேண்டும். அவர்கள் தம்வேலையைநிறைவேற்றினவுடன், அரசன் அவர்களை மிகுதியானபொருள்களால் ஸந்தோஷிக்கச்செய்யவேண்டும். ஏ! குருநந்தன! ஒருமனிதனைத் தக்ககாரணமின்றி சினங்கொண்டாவது சிக்ஷைவிதித்தாவதுவெறுப்புள்ளவனைச் செய்திருந்தால் அவனுக்குத் தகுதியானபொருளாலும் பலவித நல்மொழிகளாலும் அவனை ஸந்தோஷமுள்ளவனைச்செய்து சாஸ்திரத்திற்சொல்லியபடி அரசன் தன்கடமையைநடத்திக்கொள்ளவேண்டும். அரசன் ரக்ஷிக்கவேண்டிய ஏழுஅங்கங்களையும் நீதெரிந்துகொள். ஏ! குருநந்தன! அவை:—தான், அமைச்சர்கள், கோசம், தண்டம், நண்பர்கள், நகரம், கிராமம்என்பவைகளை. இந்த ஏழையும் தன்னுருவமாகக்கொண்ட ராஜ்யத்தை அரசன் விசேஷமுயற்சியுடன் காத்துவரவேண்டும். ஓ! புருஷப்புலியே! ஷாட்குண்யத்தையும், த்ரிவர்க்கத்தையும், த்ரிவர்க்கத்திலும் உயர்ந்ததையும் அறிந்தஅரசன் இந்தப்பூமியை அனுபவிப்பான். ஓ! யுதிஷ்டிர! பிறனுடன் ஸந்திசெய்துகொள்வது பிறனைஎதிர்த்துச்செல்வது பிற

[1] எழுதுகிறவன் என்றும் பொருள்உண்டு.

னுடன் போர்புரிவது பிறனுக்குப் பயமுண்டாகத்தக்கயாத்திரையை வெளியிடுவது பிறனிடத்திலும் தன்னைச்சேர்ந்தஇடத்திலும் ஸந்தி செய்துகொள்வது கோட்டை அல்லது சத்ரு இவற்றிலொன்றை அடுப்பது என இவ்வாறும் ஷாட்குண்யமென்று கூறப்பட்டனவாகத் தெரிந்துகொள்; த்ரிவர்க்கமென்று சொல்லப்பட்டதையும் ஸாவதானமாகக் கேள். ராஜ்யத்தின்குறை, ஸமநிலை, வளர்ச்சி இம்மூன்றும் த்ரிவர்க்கமெனக் கூறப்படும். அறம், பொருள், இன்பம்இம்மூன்றும் ஸநாதனமான த்ரிவர்க்கமெனச் சொல்லப்படும். சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட மந்த்ரசக்தி, ப்ரபுசக்தி, உத்ஸாகசக்தி இம்மூன்று சக்திகளும் த்ரிவர்க்கத்திற்கு மிகச்சிறந்த ஸாதனமாகச்சொல்லப்பட்டன. ஏ! பாரத! காரியம், காரணம், கர்த்தாவென்னும் மூன்றும் த்ரிவர்க்கத்திலும் மிக்கமேலானவைகள் என்று சொல்லப்பட்டனவாக அறியவேண்டும். ஓ! அரசனே! இவைகள்யாவும் குறைந்திடினும், ஸத்வம் ரஜஸ் தமஸ்என்னும் மூக்குணங்களும் சாஸ்வதமும் மோக்ஷத்திற்குக் காரணமுமான த்ரிவர்க்கமெனக் கூறப்படும். இந்த த்ரிவர்க்கத்திலிருந்து மிகவும் விடுபட்டமனிதன் முக்தனென்று சொல்லப்படுகிறான். எல்லாவிதக்காரியங்களின் நாசமும் மோக்ஷமென்றுசொல்லப்படுகிறது. ஆனதுபற்றியே, மோக்ஷத்தைத் தருகிய தேவர்களின் தேவரான பிதாமஹர், எப்பொழுதும் உலக நடை நிலைபெற்றிருப்பதும் ஸந்தோஷத்திற்கு ஸாதனமுமான த்ரிவர்க்கத்தின் ரக்ஷாவிதியை உலகத்திற்கு உபதேசித்தார். அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் காலத்திற்குத்தக்கபடி அனுஷ்டிக்கவேண்டும். ஓ! நரஸ்ரேஷ்டனே! வயதுசென்ற மனிதர்கள் எப்பொழுதும் தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும். காரியங்கள்யாவும் தர்மத்தை மூலமாகஉடையன. அரசன் தர்மத்தினல்தான் பூமியை நெடுநாள் ரக்ஷிக்கிறான். அர்த்தகாமங்களை இழந்தவனையினும் துன்பமுள்ளவனையினும் தர்மநடக்கையுள்ளஅரசன் இப்பூமியை நெடுங்காலம் பரிபாலித்துவருவான். இவ்விஷயத்தில் அங்கிரஸால் இரண்டுசுலோகங்கள் கானம்பண்ணப்பட்டன. ஏ! யுதவிபுத்ர! அவைகளையும் நீ கேட்கவேண்டும். உனக்கு க்ஷேமமுண்டாகட்டும்.(அவற்றின்பொருள்)'அரசன் தர்மப்படி காரியங்களைச்செய்து பூமியையும் நகரிலுள்ள ஜனங்களையும்நன்குபரிபாலித்துப்பரலோகத்தில் ஸுகமாக விளங்குவான். ப்ரஜைகளை நன்குபரிபாலித்துவரும் அரசன் தர்மங்களையெல்லாம் செய்தவனுவான். தவத்தாலும் யாகங்களாலும் அவனுக்கு யாது பயன்?' என்பது. ஓ! யுதிஷ்டிர! சுக்ராசாரியர் கூறின இக்கவிகளைக் கேள். ராஜனே! இவைகள்

தண்ட நீதிக்கும் த்ரிவர்க்கத்திற்கும் மூலமானவைகள். அரசன் தன் ஸித்திக்குக் காரணமான பதினறு அங்கங்களுள்ள சேனை, விஷம், மாயை, தெய்வம், பௌருஷம், வட கிழக்குப்பாகத்தில் தாழ்ந்ததும் மூன்றுவித த்ரிவர்க்கத்தால் நிறைந்ததுமான கோட்டை இவைகளை அடைந்து வஹிக்கவேண்டும். [1]ஆறு, [2]ஐந்து, [3]பத்து, [4]எட்டு இவைகளை ஜயித்துப் பத்துவிதமான த்ரிவர்க்கங்களுடன் கூடின அரசன் தேவர்களாலும் வெல்லத்தக்கவன் அல்லன். அரசன், ஸ்திரீகளும் விவேகமற்றவர்களும் தெய்வக்குற்றமுள்ள புத்தியுள்ளவர்களும் வேதமோதாதவர்களுமாகிய இவர்களின் புத்தியைக் கேட்பது கூடாது. இவர்களின்புத்தி நேராகச் செல்லும் தகுதியுள்ளதன்று. கற்றவர்களில்லாதனவும் ஸ்திரீகளை ப்ரதானமாகக் கொண்டனவும் மூர்க்கமந்திரி உள்ளனவும் அக்னிகளால் கொளுத்தப்பட்டனவுமான ராஜ்யங்கள் (கோடைக் காலத்திலுள்ள) ஜலபிந்துக்கள்போல சூன்யமாகப் போய்விடும். ப்ரஸித்திபெற்ற அறிஞர்களும் நம்பிக்கையுள்ள நண்பர்களும் சொல்லுகிற காரியமுள்ளனவாகக் காணப்படும் வசனங்களைத் தெரிந்த எவ்விதமான காரியங்களிலும் அரசன் கேட்கவேண்டும். தெய்வத்தையும் பௌருஷத்தையும் த்ரிவர்க்கத்தையும் ஆஸ்ரயித்த அரசன் தேவர்களையும் பிராம்மணர்களையும் வணங்கி ஜயமுள்ளவனுவான்" என்று சொன்னர்.

அறுபத்தோன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் தண்டநீதியின் பெருமையால் கிருதயுகமுதலிய யுகங்களின் வேற்றுமையை உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! தண்டநீதி, அரசன், இவ்விரண்டின் சேர்க்கை யென்னும் இம்மூன்றில் எதைக் காரணமாகக் கொண்டு யாருக்கு எவ்வித ஸித்தி உண்டாவதென்பதை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! பரதகுலத்தில்உதித்தஅரசரே! தண்டநீதியிலிருந்து அரசனுக்கும் பிரஜைகளுக்கும் உண்டாகும் பெருமையைக்காரணத்தோடு

---

1 ஸந்தி முதலியன; ஸபாபர்வம் 14-வது பக்கம் பார்க்க.

2 சத்ரு, பதார்த்தம், ஸ்திரீ, வாக்கு, அபராதம், இவைகளால் உண்டான வைரங்கள். 3 லோபம், கோபம், ஆலஸ்யம், அஸத்யம், அஜாக்ரதை, பயம், சாஞ்சல்யம், மூடத்தனம், அந்யாயம், அவமதிப்பு என்பன.

4 க்ருஷி, வ்யாபாரம், கோட்டை, அணை, யானை பிடிக்குமிடம், ரத்னமிருக்குமிடம், வரிவாங்குமிடம், நாதனற்றவிடம்.

கூடிய வசனங்களால் உள்ளபடி நான் உபதேசிப்பதைக்கேள். அரசனால் நன்குசெலுத்தப்படும் தண்டநீதியானது நான்கு ஜாதிகளையும் தம்தர்மங்களில் அடக்கி வைப்பதுடன் அதர்மங்களில் செல்லாமலிருக்கவுஞ் செய்யும். பிராணிகளுக்கு எவ்விதப் பயமுமின்றித் தண்டநீதியால் செய்யப்படும் க்ஷேமத்துடன், நான்கு ஜாதிகளும் தம்தம் தர்மத்திலிருக்குமாயின், மரியாதைகளுக்கு மாறுபாடின்றி முதல் மூன்று ஜாதிகளும், விதிப்படி, ஸோமமுதலிய யாகங்களில் முயற்சி அடையும். அக்காரணம்பற்றியே, மனிதர்களுக்கு ஸுகம் நிலை பெற்றிருக்குமென்று தெரிந்துகொள். 'காலம் அரசனுக்குக் காரணமா? அரசன் காலத்திற்குக் காரணமா?' என்ற ஸம்சயம் உனக்கு உண்டாகவேண்டாம். அரசன் காலத்திற்குக் காரணமாவான். அரசன் தண்டநீதியை முழுதும் நன்றுகச் செலுத்திவருவானுகில், அந்த ஸமயத்தில் மிகச்சிறந்த க்ருதயுகமென்னுங் காலம் உலகத்தில் நடைபெறும். க்ருதயுகத்தில் எல்லா ஜாதிகளின் மனமும் அதர்மத்தில் செல்லாதாகையால் எவ்விடத்திலும் அதர்மமின்றித் தர்மமே விளங்கும்; ப்ரஜைகளின் யோக க்ஷேமங்கள் ஸந்தேகமின்றி நடைபெறும்; வைதிகமான கர்மங்கள் யாவும் சிறிதும் குறையின்றி விளங்கும்; எல்லாருதுக்களும் யாதொரு ரோகமுமின்றி ஸுகமாக இருக்கும்; மனிதர்களுக்கு குரலும் நிறமும் மனமும் தெளிந்து விளங்கும்; மனிதர்கள் யாதொரு நோயுமின்றி நிறைந்த ஆயுளுள்ளவர்களாயிருப்பார்கள். அக்காலத்தில், பெண்கள் விதவைகளாவதில்லை: கொடிய மனிதர் உண்டாகிறதில்லை; பூமியும் உழவின்றிப் பலன்களைக் கொடுக்கும்; ஓஷதிகளும் உழவின்றிச் செழித்து விளங்கும்; பட்டையும் இலையும் கனிகளும் வேரும் நல்ல வீரியமுள்ளவைகளாயிருக்கும். அக்காலத்தில், அதர்மமின்றித் தர்மமொன்றேளங்கும் இருக்கும். ஓ! யுதிஷ்டிர! இவைகள் க்ருதயுகத்தைச் சார்ந்தகுணங்களென்றறி. அரசன் தண்டநீதியின் ஒரு பாகத்தைத்தள்ளிவிட்டு மற்ற மூன்று பாகங்களைத்தொடர்ந்துநிற்கும்போது திரேதையென்னும்யுகம் நடைபெறும். அக்காலத்தில், தர்மத்தின் மூன்றுபாகங்களுடன் அதர்மத்தின் ஒரு பாகம் கலந்து நிற்கும்; பூமியும்ஓஷதிகளும் உழுதுதான் பலன்கொடுக்கும். அரசன் தண்டநீதியின் பாதிபாகத்தை விலக்கிவிட்டுப் பாதிபாகத்தைத் தொடர்ந்து நின்றால் அப்போது த்வாபரமென்னுங் காலம் உலகில் நடைபெறும். அக்காலம் பாபம் இரண்டு பாகமும் புண்ணியம் இரண்டுபாகமும் கலந்து நிற்கும்; பூமி உழவு முதலிய முயற்சியாலும் அரைப்பாகந்தான் பயனுள்ள

காகும். அரசன் தண்டநீதியை முழுதும் விலக்கிவிட்டுக் கெட்ட வழியுடன் ப்ரஜைகளைத் துன்பப்படுத்தும்போது கலியுகம் நடை பெறும். கலியுகத்தில் எங்கும் அதர்மம் ஓங்கிநிறைவதன்றித்தர்மம் எவ்விடத்திலுமிராது; எல்லாச்சாதிகளின் மனமும் தங்களுடையதர் மத்திலிருந்து நழுவிநிற்கும்; சூத்திரர்கள் பிக்ஷாவிருத்தியாலும் பிராம்மணர்கள் ஸேவாவிருத்தியாலும் ஜீவிப்பார்கள்; யோகக்ஷேமங் களின் நாசமும் ஜாதிகளின் கலப்பும் உண்டாகும்; வைதிகமானகர்மங் கள் மிகக்குறைந்துவிடும்; ருதுக்கள்யாவும் (பிராணிகளுக்குச்) சுக மின்றி வியாதிகளைக் கொடுப்பவைகளாயிருக்கும்; மனிதர்களின் குர லும் நிறமும் மனமும் மிகக்குறைந்தனவாயிருக்கும். இக் கலியில் பலவியாதிகளுண்டாவதால் மனிதர்கள் நூறுபிராயம் நிரம்பாமலே மரிப்பார்கள்; மடந்தைகள் விதவைகளாவார்கள்; கொடியபிரஜைகள் ஜனிக்கும்; மேகம் மாரிபெய்வதும் பயிர் உண்டாவதும் சிலவிடத் தில் மட்டுமிருக்கும். அரசன் நன்குதண்டநீதியைச் செலுத்தி ப்ர ஜைகளைக்காக்க விரும்பாதிருக்கும்போது ரஸங்கள் யாவும் நாசமடை யும். ஆனதுபற்றி, அரசன்தான் கிருதம், திரேதை, த்வாபரம், கலி என்னும் நான்குயுகங்களுக்கும் காரணமாவான். க்ருதயுகத்தைச் செய்துவருமரசன் அழிவற்றஸுவர்க்கலோகம் பெறுவான். த்ரேதா யுகத்தைச் செய்துவருமரசன் சற்றுக்குறைவான ஸுவர்க்கமடை வான். த்வாபரத்தைநடைபெறச்செய்விக்கும் அரசன் தனக்குத்தக்க தாக ஸுவர்க்கத்தின்ஒருபாகத்தை அடைவான். கலியை நடைபெறச் செய்விக்கும் பாபகர்மமுள்ள அரசன் மிகவும்பாபமுள்ளவனாகி அப் பாவத்திற்குரிய நரகத்தில் நிலைபெற்றுப் பலவருஷங்கள் வஸித்திருப் பான்; ப்ரஜைகளின் பாபத்தில் முழுகினவனாகி அபகீர்த்தியையும் பாபத்தையும அடைவான. ஏ! பாரத! ஆகையால், அறிவுள்ள அரசன் தண்டநீதியைமுன்னிட்டு அடையப்படாததை அடையவும் அடைந்ததை ரக்ஷிக்கவும்வேண்டும். ப்ரஜைகளின் யோகக்ஷேமங் களும் ஐயமின்றி நன்கு நடைபெறும். ஓ! பரதஸ்ரேஷ்டனே! அரசனால் நன்கு செலுத்தப்படும் தண்டநீதி தாய்தந்தைபோல உல கின் மரியாதையின் எல்லையை ரக்ஷிப்பதுடன் உலகங்களையும் பரிசுத் தப்படுத்தும். ப்ராணிகள் யாவும் தண்டநீதியினாலிருப்பதாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்தத் தண்டநீதி ஒன்றே அரச னுக்கு மிகச்சிறந்ததர்மமாகும். ஓ! கௌரவ! ஆகையால், நீதிப்படி தர்மமாகப் ப்ரஜைகளைப் பாலனஞ் செய். இவ்விதஒழுக்கத்துடன் ப்ரஜைகளை ரக்ஷித்துவரும் நீ ஜயிக்கஅரிதான ஸுவர்க்கத்தை ஜயிப் பாய்" என்று சொன்னர்.

ஸ்ரீ மஹாபாரதம்.

எழுபதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் அரசர்களுக்குரிய முப்பத்தாறு குணங்களைத் தர்மபுத்ரருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "நல்லநடையையறிந்தவரே! அரசன் இங்குப் மேலுலகிலும் நன்மையைத்தரத்தக்க பயன்களை எளிதில் அடையத் தக்ககுணங்கள் எவை?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங் கினர்.

"அது முப்பத்தாறு குணங்களுடன் கூடினது. அந்த முப்பத் தாறு குணங்களையும் அனுஷ்டிக்கும் நற்குணமுள்ள அரசன் சுபத்தை அடைவான். (அக்குணங்களாவன:) ராகத்வேஷமில்லாமல் தர்மங்க ளைச்செய்தல், பரலோகத்தில்விருப்பத்துடன் ஸ்நேகஞ்செய்தல், தீய வழியின்றிப் பொருளடைதல், அறம்பொருள்களுக்கு அழிவின் றிக் [1] காமத்தை அடைதல், தீனத்தனமின்றிப் பிரியமாகப் பேசுதல், தற்புகழ்ச்சியல்லாத சூரனையிருத்தல், அபாத்திரங்களில் கொடாத தாதாவாயிருத்தல், தயையுடன்கூடிய ஸமர்த்தனையிருத்தல், கெட் டவனல்லாதவனெனத் தெரிந்து சேர்க்கையடைதல், சத்துருவெனத் தீர்மானித்துப் போர்புரிதல், [2] ஹிதமில்லாதவர்களுடன் தூதர்களைச் சோமலிருக்கச் செய்தல், [3] பிறருக்குத்துன்பமின்றி வேலை செய்தல், அஸத்தல்லாதவர்களிடம் பயனை அறிவித்தல், தன்னுடையவல்லாத பிறருடைய குணங்களைச் சொல்லுதல், ஸாதுக்களல்லாதவர்களிடம் கப்பம்வாங்குதல், அஸத்தல்லாத மனிதனை அடுத்தல், நன்கு பரீக்ஷை செய்யாமல் தண்டம்விதியாமை, மந்திரத்தைவெளியிடாமை, லோபி களல்லாதவர்களுக்குக் கொடுத்தல், அபகாரஞ் செய்தவர்களை நம் பாமை, அஸூயையின்றி மனவியைக்காத்தல், அருவருப்பில்லாமல் சுத்தனையிருத்தல், அதிகமாக ஸ்திரீகளைச் சேராமை, அஹிதமல்லாத ருசியுள்ளதைப் புஜித்தல், பூஜிக்கத்தக்கவர்களைக் கர்வமின்றிப்பூஜித் தல், கபடமில்லாமல் பெரியோர்களுக்குப் பணிவிடைசெய்தல், டம்ப மின்றித் தேவதைகளைப்பூஜித்தல், இகழ்ச்சிக்கிடமில்லாதஸம்பத்தை விரும்புதல், வணக்கத்துடன் சேவை செய்தல், காலமறிந்து ஸமர்த் தனையிருத்தல், பயனற்றதல்லாத நன்மொழியைப்பேசுதல், ஆசை

---

1 'இந்திரியப்பிரீதி' என்பது பழையஉரை.

2 'பந்துவெனத்தெரிந்து யுத்தஞ் செய்யாமலிருத்தல்' என்பது வேறு பாடம். [பாடம்.

3 'தூதர்களுக்குச் சிறந்த உணவை அளித்தல்' என்பது வேறு

பம் சொல்லாமல் உபகரித்தல், குற்றத்தைஅறியாமல் தண்டியாமை, பகைவர்களைக்கொன்றபின் துக்கியாமை, காரணமின்றிக்கோபியாமை, அபகாரஞ்செய்தவர்களிடம் மெதுவாயிராமை என்பன. நீ ராஜ்யத்திலிருந்துகொண்டு இந்த உலகத்தில் சுகமத்தைவிரும்புவாயாகில் இவ்விதமிருக்கவேண்டும். இவ்விதக்குணங்களுக்கு மாறுபாடாயிருக்கும் நரபதி அளவில்லாத பயமடைவான். இவ்விதங்கூறப்பட்ட இக்குணங்கள் யாவற்றையும் கூறியபடி அனுஷ்டிக்கும் அரசன் இங்கு சுகமங்களை அனுபவிப்பதுடன் இறந்தபின் ஸுவர்க்கலோகத்திலும் பெருமைபெறுவான்" என்று சொன்னர். பீஷ்மருடைய இவ்வுபதேசவசனத்தைக்கேட்ட யுதிஷ்டிரர், 1 பீமன்முதலிய பாண்டவர்களால் சூழப்பெற்றுப் பிதாமஹரான பீஷ்மரை அப்பொழுது வந்தனஞ்செய்தார். அறிவுள்ள யுதிஷ்டிரர் அவருபதேசித்த இவ்விதிகளையும் அங்ஙனமே செய்தார்.

எழுபத்தோராவது அத்யாயம்.

ராஜதர்மம் (தொடர்ச்சி.)

(பீஷ்மர், சிந்தையில்லாமலிருக்கவும் தர்மத்தவறுதலில்லாமலிருக்கவும் உபாயத்தை உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! பிரஜைகளைப் பாதுகாத்துவரும் அரசன் மனத்தில் சிந்தையென்னும் பந்தமில்லாமலிருப்பது எங்ஙனம்? தர்மத்தில் தவறுமலிருப்பது எங்ஙனம்? இவ்விரண்டையும் எனக்கு உபதேசிக்கவேண்டும்" எனக் கேட்டனர்.

பீஷ்மர், "ஓ! அரசனே! சுருக்கமாகவே சாஸ்வதமான தர்மங்களை உனக்கு உபதேசிக்கிறேன். தர்மங்களை விரிவாகக்கூறுவது எப்பொழுதும் முடிவுபெறுது. தர்மத்தில் நிலைபெற்றவர்களும் சாஸ்திரங்களைக்கற்றவர்களும் நியமத்துடன்தேவதைகளை உபாஸிப்பவர்களும் நற்குணமுள்ளவர்களும் பூஜ்யர்களுமானபிராம்மணர்களை நீ உன்வீட்டில் வஸிக்கும்படி செய்துகொள்ளவேண்டும். முதலில் எதிர்கொண்டுசென்று கால்களைப்பிடித்து வணங்கினபின்பு, புரோஹிதரைமுன்னிட்டுக் காரியங்களையெல்லாம் செய்யவேண்டும். தர்மகாரியங்களைச்செய்து சுபகர்மங்களையும் நடத்திப் பிராம்மணர்களைக்கொண்டு

---

1 இங்கு வேறுபாடம்கொள்ளப்பட்டது.

காரியஸித்தியையும் ஜயத்தையும் ஆசீர்வாதத்தையும் அனுக்கிரகிக்கச் செய்யவேண்டும். ஓ! பாரத! கபடமில்லாமையும் தைரியமும் அறிவும்பொருந்திக் காமக்குரோதங்களைவிலக்கி அறம்பொருள் இரண்டையும் அடையவேண்டும். காமக்குரோதங்களைமுன்னிட்டுப் பொருளைத்தேடவிரும்பும் அவிவேகியான்அரசன் தர்மத்தைஇழப்பதுடன் பொருளையும்அடையமாட்டான். இது தர்மந்தவறுமலிருக்க உபாயமாகும். லோபிகளையும் மூர்க்கர்களையும் அர்த்தகாமங்களில் ஏவாமல் ஆசையற்றவர்களும் நல்ல அறிவுள்ளவர்களுமான யோக்யர்களை எல்லாக்கார்யங்களிலும் நியமிக்கவேண்டும். காரியங்களில் ஸாமர்த்தியமில்லாத அவிவேகிக்குக் காரியங்களில் அதிகாரங்கொடுத்தால் அவன் காமக்குரோதங்களை அடைந்து தனதுஇஷ்டத்திற்காகத் தப்புவழியிற்சென்று பிரஜைகளைத் துன்பப்படுத்துவான். சுத்தமான ஆறிலொருபாகம்வரியும் குற்றவாளிகளுக்குவிதிக்கும் தண்டமும்சாஸ்திரத்திற்கு ஒத்தனவான மற்றுமுள்ள வரியுமாகிய இவைகளால் பொருள்வரவை விரும்பவேண்டும். (கப்பம்கொடுத்த மிச்சம் பிரஜைகளுக்குப்போதாதகாலத்தில்) நியாயமாக விதிப்படி வாங்கியதும் தர்மத்தைவிட்டு விலகாததுமான கப்பத்தை அவர்களுக்குத் திரும்பக்கொடுக்கச்செய்துஅரசன் சோம்பலின்றி யோகக்ஷேமத்தை நடத்துவிக்க வேண்டும். ரக்ஷிப்பவனும் கொடுப்பவனும் தர்மத்தில் நிலைபெற்றவனும் ஆலஸ்யமும் காமமும் துவேஷமுமில்லாதவனுமான அரசனிடம் மனிதர்கள் பிரீதியுடனிருப்பார்கள். [1] ஆகையால், தர்மமான லாபப்படிபொருள்வரவை நீ விரும்பவேண்டும். விசேஷமாகச் சாஸ்திரப்பயிற்சியில்லாத அரசனுக்கு அறம்பொருளிரண்டும் நிலைப்பதரிது. [2] பொருளைப் பெரிதாகநினைக்கும் அரசன் தர்மங்களைஅடையாததுடன் பொருளையும் அடையமாட்டான். அவன் தேடிய திரவியம்பாவும் வேண்டாவிடத்தில்அழிவடையும். அவிவேகத்தால் பிரஜைகளைச் சாஸ்திரங்களில்கூறப்படாத வரிகளால் துன்பப்படுத்தும் அரசன் அப்பொருள்மூலமாகவே தானே தனக்கும் துன்பத்தைச் செய்துகொள்வான். பாலைவிரும்பியமனிதன் பசுவின்மடியைஅறுத்தால் பாலைஅடையமுடியாததுபோல நீதிக்கு விரோதமாகப் பீடிக்கப்படும் ராஜ்யம் வளர்ச்சிஅடையாது. புல்லும் தண்ணீரும் ஆதரவும் இனியசொல்லும் கொண்டு கறக்கும்பசுவைக் காத்துவரும் மனிதன் எப்பொழுதும் பாலை

---

1 'ஆகையால், நீ அதர்மத்தாலும் லோபத்தாலும் பொருள் வரவை விரும்பவேண்டாம்' என்பது வேறுபாடம்.

2 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

அடைவதுபோல விதிப்படி ராஜ்யத்தைப் பரிபாலித்துவரும் அரசன் பயன்பெறுவான். நியாயப்படி ரக்ஷிக்கப்பட்டு அனுபவிக்கப்படும் ராஜ்யம் எப்பொழுதும் ஒப்பற்ற கோசங்களின் விருத்தியை உண்டுபண்ணும். ஓ! யுதிஷ்டிர! அரசனல் நன்கு பரிபாலிக்கப்படும் பூமியானது திருப்தியுள்ள தாயார் பாலைப்பெருகச்செய்வதுபோலத் தான்யத்தையும் ஸ்வர்ணத்தையும் சேர்ந்தவர்களிடமிருந்தும் பிறரிடமிருந்தும் எப்பொழுதும் பெருகச்செய்யும். ஓ! அரசனே! [1] மாலைகட்டுபவனுக்கு ஒப்பாக இரு; கரிகளைச்சேர்ப்பவனுக்கு ஒப்பாக இராதே. அவ்விதமிருந்து பரிபாலித்துவந்தால் நெடுங்காலம் ராஜ்யத்தை அனுபவிக்கச் சக்தியுள்ளவனுவாய். பகையாளியின் சேனையை எதிர்த்துச் செல்லுவதால் உனக்குப் பொருளழிவுநேரிடுமானல் அப்பொழுது பிராம்மணரல்லாதவர்களிடம் நன்மொழிகூறிப் பொருளைத்தேடவிரும்பவேண்டும். ஓ! பாரத! முடிவான கஷ்டதசையில்கூடப் பொருளுள்ள பிராம்மணனைக்கண்டு உன்மனம் ஆசையால் சலிக்கவேண்டாம். நீ விருத்தியடைந்திருக்கும் காலத்தில் இவ்விஷயத்தில் சொல்லவேண்டுமோ? உன் சக்திக்கும் அவர்களது தகுதிக்கும் தக்கபடி நீ அந்தணர்களுக்குப் பொருளை அளிக்கவேண்டும். இவ்விதம் நன்மொழிகூறிப் பரிபாலித்துவரும் நீ ஜயிக்க அரிதான ஸ்வர்க்கத்தையும் அடைவாய். ஓ! குருநந்தன! இவ்விதம் தர்மவழிவழுவாத ஒழுக்கத்துடன் நீ பிரஜைகளைப் பரிபாலனஞ்செய். பாண்டுவின் குமாரனை யுதிஷ்டிர! இவ்விதம், ஜாக்ரதையுள்ளவனுகத் தர்மமான வியவஹாரத்துடன் பிரஜைகளைப் பரிபாலித்துவந்தால் மனக்கவலையென்னும் பந்தத்திற்கு வசப்படாமலிருப்பதுமன்றி ஸ்வர்க்கத்தைத் தரத்தக்க புண்யத்தையும் நிலையான கீர்த்தியையும் பெறுவாய். பிரஜைகளைக் காப்பதும் பிராணிகளிடம் பெருங்கருணைபுரிவதும் அரசர்களுக்கு மிக்க உத்தம தர்மமாகும். அக்காரணம்பற்றியே, தர்மமறிந்த பெரியோர்கள் பாலனத்தில் முயற்சியுள்ள அரசனுக்குப் பிராணிகளிடம் கருணைபுரிவதே பெரிய தர்மமென்று கருதுகிறார்கள். அரசன், ஒருநாள் பயத்தினின்றும் பிரஜைகளைப் பாதுகாவாத பாபத்தைச்செய்வானுகில் ஆயிரம்வருஷங்கள் நரகத்தை அனுபவித்து அப்பாவத்தின் முடிவை அடையவேண்டும். ஒருநாள் தர்மப்படி பிரஜாபாலனமென்னும் புண்யத்தைச் செய்த அரசன் தேவலோகஞ்சென்று பதிணுயிரம் ஆண்டுகள் அந்தப் புண்யத்தின் பயனைப் புஜிப்பான். சிறந்தவைகளான யாகத்

---

1 மாலைகட்டுகிறவன் புஷ்பத்திற்காக மரத்தை வளர்ப்பான். கரியைச் சேர்ப்பவன் கரிக்காக மரத்தைவெட்டிச் சுடுவான்.

தையும் அத்யயனத்தையும் தவத்தையும்செய்தவன் எத்தனை உலகங்களை ஜயிப்பானேனு அவைகளைத் தர்மப்படி பிரஜைகளை ஒருக்ஷணம் பரிபாலித்த அரசன் அடைவான். ஓ! கௌரவ்ய! இவ்விதமான தர்மத்தை நல்ல முயற்சியுடன் பரிபாலனஞ்செய். பாண்டவ! இவ்விதஞ் செய்வதால் புண்ணியத்தின்பயனை அடைந்து 1 சிந்தையென்னும் பந்தத்திற் சேராமல் ஸ்வர்க்கலோகத்தில் மிக்க பெரிதான ஸம்பத்தையும்அடைவாய். இப்படிப்பட்ட உத்தமதர்மங்கள் அரசனல்லாதவர்களுக்குச் சம்பவியாவாகையால் அரசனேருவனன்றி மற்றவன் இத்தகைய புண்ணியத்தின் பயனை அடையமுடியாது. ஆகையால், அவ்வித அரசனை நீ தைரியத்துடன் ராஜ்யத்தை அடைந்து தர்மப்படி பரிபாலனஞ்செய். ஸோமயாகத்தால் இந்திரனையும் அவர்களின் இஷ்டத்தைச் செய்வதால் ஸ்நேஹித ஜனங்களையும் திருப்தி அடைவி" என்று சொன்னர்.

எழுபத்திரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(புரோஹிதராயிருக்கத்தக்க பிராம்மணருடைய குணங்களும் நான்குஜாதிகளின் தாரதம்யமும் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! அரசனுடைய காரியாகாரியங்களை விசாரிக்கவும் செய்யவும் ஸாமர்த்தியமுள்ள பிராம்மணன் எவ்விதக் குணமுள்ளவனென்பதை எனக்குச் சொல்லவேண்டுகிறேன்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! அரசனே! ஸாதுக்களை ரக்ஷிக்கவும் அஸாதுக்களைத் தூரவிலக்கவும் செய்யத் திறமையுள்ள பிராம்மணனை அரசன் தனக்குப் புரோஹிதனாகச் செய்துகொள்ளவேண்டும். இவ்விஷயத்திலும் இளையின் புத்திரனை புரூரவஸுக்கும் வாயுவுக்கும் நடந்த ஸம்பாஷணையான இப்பழைய இதிஹாஸத்தை எடுத்துச் சொல்லுகிறார்கள். புரூரவன், 'ஓ! வாயுபகவானே! பிராம்மணன் எங்கிருந்துண்டானான்? மற்ற மூன்றுஜாதிகளும் எங்கிருந்து ஜனித்தன? எந்தக்காரணத்தால் அந்தணன் சிறந்தவனாகிறான்? அதனை எனக்கு விரித்துக்கூறவேண்டும்' எனக்கேட்டனன். வாயு, 'ஓ! அரசர்களிற் சிறந்தவனே! பிரம்மதேவரின் முகத்திலிருந்து பிராம்மணன் சிருஷ்டிக்கப்பட்டான். அவர் கைகளிலிருந்து க்ஷத்திரியனும் தொடைகளிலிருந்து வைச்யனும் சிருஷ்டிக்கப்பட்டார்கள். ஓ! பரதஸ்ரேஷ்டனே! பிறகு, மூன்று

---

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

வர்ணத்தார்களுக்கும் பணிவிடை செய்ய வேண்டி தான்காவது ஜாதியான சூத்திரனைத் தம்கால்களிலிருந்து பிறப்பித்தார். பிராம்மணன் பூமியில் பிறக்கும்போதே எல்லாப்பிராணிகளுக்கும் ஈசனும் தர்மமென்னுங் கோசத்தை ரக்ஷிக்கச் சக்திபெற்றவனும் பிறக்கிறன். ஓ! அரசகுமாரனே! இவ்வுலகிற் காணப்படும் பொருளனைத்தும் தர்மத்துடன் சேர்ந்த நற்காரியமும் பிராம்மணனுக்குச் சொந்தமாகும். பிறகு, பிரம்மதேவர் தண்டஞ்செலுத்திப் பூமியை ஆளவும் ப்ரஜைகளைப் பாதுகாக்கவும் சக்திபெற்றவனாக இரண்டாவது ஜாதியான க்ஷத்திரியனைப் படைத்தார். வைச்யன் திரவியத்தாலும் தான்யத்தாலும் மூன்று வர்ணத்தார்களையும் போஷிக்க வேண்டுமென்பதும் சூத்ரன் இவர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்பதும் பிரம்மதேவரின் கட்டளை' என்றுசொன்னர்.

புரூரவன், 'ஓ! வாயுபகவானே! இந்தப் பூமியானது தனங்களுடன் தர்மப்படி பிராம்மணனுடையதா? அல்லது, க்ஷத்திரியனுடையதா? இது யாருடையதென்பதை எனக்குத் தெளிவாக உரைக்க வேண்டுகிறேன்' என்று சொல்ல, வாயுபகவான் சொல்லத் தொடங்கினர். 'இப்பூமியிலுள்ளபொருள், தான்யம், ஸ்வர்ணம், ஸ்திரீகள், ரத்தினங்கள், வாகனம், மற்றுமுள்ள சிறந்த மங்கள த்ரவ்யங்களாகிய பொருள்கள் யாவும், முதலில் பிறந்த காரணத்தாலும் உத்தமப் பிறவியாகையாலும் பிராம்மணனைச் சேர்ந்தனவென்று தர்மமறிந்தோர்கள் அறிவிக்கிறார்கள். பிராம்மணன் புஜிப்பதும் உடுப்பதும் கொடுப்பதும் யாவும் அவனுக்குச் சொந்தமாகும். பிராம்மணன் எல்லா ஜாதிகளுக்கும் குருவாகவும் முதலில் பிறந்தவனாகவும் உத்தமனாகவும் ஆகிறன். [1] ஸ்திரீயானவள் பதியில்லாவிட்டால் பதியின் உடன்பிறந்தவனைப் பதியாகச் செய்துகொள்வது போலப் பூமியானது பிராம்மணனுக்குஅடுத்த பிறப்பாகையால் க்ஷத்திரியனைப் பதியாகச் செய்துகொள்ளுகிறது. இது முதன்மையான வித்யாகையால் ஸங்கடகாலத்தில் இதற்கு வேறான வித்யுண்டு. தர்மத்தால் ஸ்வர்க்கலோகத்தில் உத்தமபதத்தைத் தேடுவாயாகில், உன்னால் ஜயிக்கப்படும் பூமியாவையும் சாஸ்திரமறிந்தவனும் நல்லநடை பொருந்தியவனும் தர்மமறிந்தவனும் தவமுள்ளவனும் தானதர்மத்தில் த்ருப்தியுள்ளவனும் பொருளில் பேராசையில்லாதவனுமாயிருப்பதுடன், அரசனை எல்லாவிஷயத்திலும் நிறைந்த புத்தியுள்ளவனாகச் செய்யும் பிராம்மணனிடம் அறிவிக்க வேண்டும். நற்குலத்திற் பிறந்தவனும் நல்ல அறிவுள்ளவனும் அடக்கமுள்ளவனுமான அந்தணன் ஆச்சரிய

---

1 இது கலியில் விலக்கப்படும்.

மான மொழியைக்கூறி அரசனை க்ஷேமமடையும்படி செய்வான். மிக்க அறிவுள்ள அரசன், க்ஷத்திரியர்களுக்குரிய தர்மவிரதத்தில் உறுதியுள்ளவனும் அகங்காரம் பேசாமல் பெரியோர்கள்வசனத்தைக் கேட்க விருப்பமுள்ளவனுமாக இருந்துகொண்டு பிராம்மணன் உபதேசிக்குந் தர்மத்தை நடத்தி வருவானானால் அதனால் உலகில் புகழ் பெற்று நெடுங்காலம் நிலைத்த கீர்த்தியும் பெறுவான். அவ்விதமுள்ள அரசனின் தர்மம் அனைத்துக்கும் அவனுடைய புரோஹிதன் பாகமுள்ளவனுவான். இப்படியே, அரசனையும் ராஜநீதியில் பண்டிதரும் வித்வான்களோடு கூடினவருமான அவன்புரோஹிதரையும் ஆச்ரயித்தவர்களும் எவ்விதப்பயமுமின்றி நல்ல நடையுடன் தம்தர்மத்தில் நிலைபெற்றவர்களுமான ராஜ்யத்திலுள்ள எல்லாப்ரஜைகளும் அரசனால் நன்கு பரிபாலிக்கப்பட்டு எவ்வித தர்மத்தைச் செய்கிறார்களோ அந்தத் தர்மத்தின் நாலிலொரு பாகத்தை அரசனடைவான். தேவர்களும் ரிஷிகளும் பிதிருக்களும் கந்தர்வர்களும் உரகர்களும் ராக்ஷஸர்களுமாகிய இவர்களின் ஜீவனத்திற்குக் காரணமான யாகமென்பது அரசனில்லாத தேசத்தில் நடைபெறாது. தேவர்களும் அங்ஙனமே பிதிருக்களும் இவ்வுலகில் கொடுக்கப்படும். ஹவிஸினால் ஜீவிக்கிறார்கள். அவர்கள் ஜீவிக்கும் தர்மத்தின் யோகக்ஷேமங்கள் அரசனிடம் நிலைபெற்றிருக்கின்றன. வெயிலில் துன்பப்பட்டவன் நிழலிலும் ஜலத்திலும் காற்றிலும் ஸுகத்தை அடைகிறான். குளிரில் கஷ்டப்பட்டவன் அக்நியிலும் வஸ்திரத்திலும் வெயிலிலும் ஸுகமடைகிறான். மனமானது சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களிற் சந்தோஷிக்கிறது. இவ்வாறான எல்லாப்போகங்களிலும் பயமண்டாத மனிதன் ஸுகமடைகிறதில்லை. ஆகையால், அபயமளிப்பவனுக்கே மிகவும் பெரிய பயனுண்டாகும். உயிரைக் கொடுப்பதற்கு ஒப்பான தானம் மூவுலகங்களிலும் கிடையாது. ஆகையால், அரசன் இந்திரனும் யமனும் தர்மதேவதையுமாக ப்ராணிகளைப் பரிபாலிக்கிறான். இந்த உலகம் யாவும் அரசனால் வஹிக்கப்படுகின்றது' என்று சொன்னார்" என்றார்.

எழுபத்துமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், புரோஹிதருடைய லக்ஷண முதலியவற்றையும் புராவஸுக்ரீதம் கப்யபருக்ரீதம் நடந்த ஸம்பாஷணையையும் யுதிஷ்டிரருக்குக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! அரசன் எவ்விதவர்ணமுள்ளவரும் குணமுள்ளவருமான பிராம்மணரைப் புரோஹிதராகச்செய்து

கொள்ளவேண்டும் என்பதை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அரசன் அறம்பொருள்களைச்சேர்ப்பது மிக்ககடினமென்றறிந்து பொன்னிறமாவது செந்நிறமாவது கருநிறமாவது உடையவரும் நோயற்றவரும் ஸுகமுள்ளவரும் கோபமில்லாதவரும் ஆசையில்லாதவரும் எல்லாவிஷயங்களினின்றும் இந்திரியங்களைவென்றவரும் பலசாஸ்திரங்களைக் கற்றவரும் அறிவுள்ளவருமான பிராம்மணரைச் சீக்கிரம் புரோஹிதராகச் செய்துகொள்ளவேண்டும். ஓ! அரசனே! தர்மபுத்தியுள்ளவரும் மந்த்ரசக்தியுள்ளவருமான புரோஹிதர் எந்த அரசர்களிடமிருக்கிறாரோ அவர்கட்கு அறம்பொருளின்பங்கள் பயன்படுவது திண்ணம். ஓ! யுதிஷ்டிர! இவ் விஷயத்தில், சுக்ராசாரியர் கூறினசுலோகங்களைத்தெரிந்துகொள். (அவற்றின்பொருள்:) 'புரோஹிதனில்லாத அரசன் எச்சிலுக்கு ஒப்பாவான். ராக்ஷஸர்களும் அஸுரர்களும் பிசாசர்களும் ஸர்ப்பங்களும் பறவைகளும் பகையாளிகளும் புரோஹிதனில்லாத அரசனைக் கொல்லுவார்கள்' என்பது. அதர்வவேதமறிந்த பிராம்மணன் எவ்விதயாகங்களிலும் அரசனுக்குப் பிரம்மத்வமென்னும் வேலையைச் செய்யவேண்டும். அதர்வவேதத்திற் சொல்லியபடி எல்லாக் கர்மங்களையும் செய்விக்கவேண்டும். இகழ்ச்சியான கர்மங்களையும் பெரிய உத்பாதங்களையும் தோஷங்களையும் இஷ்டமானசுபகர்மங்களையும் அந்தப்புரத்திற்குரிய வேலைகளையும் எப்பொழுதும் அரசனுக்கு அறிவிக்கவேண்டும். புரோஹிதன் அரசனுக்கு விருப்பமுள்ள ஸங்கீதம் நாட்டியமுதலியகாரியங்களில் செய்யத்தக்கதை அறிவிப்பதுடன் வைஶ்வதேவபலியையும் பர்வகாலங்களில் செய்யத்தக்க பெரியசாந்தியையும் தனக்கும் அரசனுக்கும் ஹிதமும் ப்ரியமுமான ருத்ரதேவனைக்குறித்த ஸஹஸ்ரஹோமத்தையும் செய்யவேண்டும். அரசனுக்குள்ள ஏழுவிதபாபங்களென்னும் மலங்களைப் புரோஹிதன் அடைவான். (அவைகளாவன:) [1] அமைச்சர்கள் கெட்டகாரியம்செய்வதும், [2] மந்த்ரிகள்உதாஸீனமாயிருப்பதும், வியவஹார அதிகாரிகள் தம்நீதியைவிட்டுப் பரிதானம்வாங்குவதும், குற்றமில்லாதவனைத் தண்டிப்பதும், குற்றமுள்ளவனைவிடுவதும், யுத்தமில்லாதஇடத்தில் ஹிம்ஸிப்பதும், கெட்டஸேவகர்களால் ப்ராணிகளுக்கு நேரிடும்துன்பமுமாம். அதர்வவேதத்தின் விதிகளை அறிந்த புரோஹிதன் ருத்ரஹோமங்களாலும் மஹாசாந்தியாலும் க்ருதகம்

1 ஸமீபத்திலிருக்கும் அதிகாரிகள்.

2 மந்த்ராலோசனை செய்கிறவர்கள்.

பலமென்னும் கர்மத்திலுமிருந்து அரசனை இவ்வேழுமலங்களிலுமிருந்து விடுவிக்கவேண்டும். இவ்விதமான ஏழுமலங்களினின்றும் விடுதலை அடைந்தவனும் பிரஜைகளைப்பரிபாலிப்பதில்விருப்பமுள்ளவனுமான அரசன் அமைச்சர்களுடனும் புரோஹிதர்களுடனும் தேவலோகம் அடைவான். ஓ! பெரியபுத்தியும் பெரியபாக்கியமுமுள்ள கௌரவ ராஜனே! இந்தப் புரோஹிதத்தன்மையைப்பற்றியே தேவரும் குருவுமான பிருஹஸ்பதியால் இந்திரனுக்கு உபதேசிக்கப்பட்டனவும் ஹிதமும் சுபமுமான கவிகளைத்தெரிந்துகொள். (அவற்றின்பொருளாவது:) 'அரசர்களுக்குவேண்டிய [1] சாந்திகம் [2] பௌஷ்டிகம் [3] ஆபிசாரம் என்றமூன்று இடங்களுக்குந் தக்கவிதிகள் ரிக்வேதத்திலும் ஸாமவேதத்திலும் சுக்லயஜுர்வேதத்திலும் கூறப்படவில்லை. யாகங்களுக்கு நன்மையை விரும்பியவரும் பிரம்மஜ்ஞானம் பெற்றவர்களுள் மிகச்சிறந்தவருமான யாஜ்ஞவல்கியர் பிரபுவானபிரம்மதேவரின் அபிப்பிராயப்படி அம்மூன்றுவேதங்களையும் சபித்திருக்கிறார். ஆகையால், ரிக்வேதம் ஸாமவேதம் சுக்லயஜுர்வேதம் இவைகளை (தனித்தனி) கற்ற மூன்றுபேர்களையும் அரசன் புரோஹிதராக வரிக்கக்கூடாது. ரிக்வேதி புரோஹிதராயிருந்தால் ராஜ்யத்திற்குநாசமும், ஸாமவேதி புரோஹிதராயிருந்தால் அரசனுக்குநாசமும், சுக்லயஜுர்வேதிபுரோஹிதராயிருந்தால் சேனைகளுக்குநாசமும் ஸம்பவிக்குமெனக் கூறப்பட்டிருக்கிறது. பிராம்மணனல்லாத ஜாதிகளிடமிருக்கும் சுக்லயஜுர்வேதத்திலுள்ள மந்திரங்களையும் எப்பொழுதும் அரசன் சாந்திகம் பௌஷ்டிகமென்னுங்கர்மங்களில் உபயோகப்படுத்தக்கூடாது. பிராம்மணனுக்கும் க்ஷத்ரியனுக்கும் நான்குவேதங்களையும் கற்பதில் விரோதமில்லையென்று பிராம்மணர்கள் அறிவிக்கிறார்கள். ஆகிலும், இவ்வேதங்களைக்கற்ற பிராம்மணனொருவனே அரசனுடைய புரோஹித பதத்திலிருக்கத்தக்கவனுவான். [4] க்ஷத்தத்திலிருந்து ரக்ஷணத்தைச்செய்கிறவன் எவனோ அவன் நான்குஜாதியைவிட்டு விலகினவனுயிருந்தாலும் அவனை க்ஷத்ரியனெனச்சொல்லப்படுவான். ஜாதியால் க்ஷத்ரியன் க்ஷத்ரியனல்லன். அதர்வவேதத்திற்கூறிய மந்திரங்களாற்செய்யத்தக்க கர்மங்கள் புரோஹிதரைச் சேர்ந்தனவென விதிக்கப்படுகின்றன. த்ரேதாக்நிகளிலும் க்ருஹ்யாக்நியிலும் செய்யத்தக்க கர்மங்கள்யாவும் பிராம்மணர் முதலிய மூன்று ஜாதிகளுக்கும்

---

1 தனக்குள்ள துன்பங்களை விலக்கத்தக்ககர்மம்.

2 தன் ராஜ்யத்திற்கும் தனக்கும் வளர்ச்சியைக் கொடுக்கத் தக்க

3 பகையாளிகளைக் கொல்லத்தக்க கர்மம். 4 துன்பம். [கர்மம்.

பொதுவாக விதிக்கப்படுகின்றன. ராஜதர்மங்களில் பிரவிருத்தித்த வர்களுக்கு அவர்களின் ஹிதத்திற்கு வேண்டிச் சாந்திகம் பௌஷ்டிகம் ஆபிசாரம் என்ற மூன்றுகர்மங்களையும் செய்விக்கவேண்டும். அக்நிஷ்டோம முதலிய அரசர்கள் செய்யத்தக்க யாகங்கள் குற்றமுள்ளனவாகுமாஞல், யாகங்களைச் செய்விக்கும் பிராம்மணர்கள் நற்பயனைப் பெறமாட்டார்கள். அரசர்களுக்குப் புரோஹிதத் தன்மையை வஹிப்பவர்கள் இக்குற்றத்திற்கு மூலமாகையால், அவர்களும் அவர்களுடன் அரசர்களின் யாகங்களைச் செய்விக்கிற குற்றமுள்ளரித்விக்குக்களும் நாசமடைவார்கள். அரசர்களுக்குரிய கர்மங்களைச் செய்யத்தக்க புரோஹிதபதவியை வஹிக்கப் பின் கூறப்படும் லக்ஷணமில்லாத பிராம்மணர்களும் க்ஷத்ரியர்கள் வைசியர்கள் யாவரும் யாஜ்ஞவல்க்ய மஹரிஷியால் விலக்கப்பட்டவர்களென்பது மாறுது. 'அதர்வவேதத்தில் நல்லஞானமுள்ளவனும் ஆறுவேதாங்கங்களையுங் கற்றவனும் யாக கர்மங்களின் விதியையும் பௌஷ்டிகமென்னும் கர்மங்களின் விதியையும் நன்றுயறிந்தவனும் பதினெட்டுவிதப் பிரிவுகளுள்ள சாந்திககர்மங்களின்விதியை அறிந்தவனும் எவ்விதநோயுமில்லாதவனும் இந்திரியங்களை அடக்கினவனும் அடங்கிய மனமுள்ளவனுமான பிராம்மணன் புரோஹிதனாயிருக்கவேண்டும். வெண்குஷ்டம், குஷ்டம், க்ஷயம், அபஸ்மாரம், வாதம் இந்தவியாதியுள்ளவர்களையும் பேய்பிடித்தவர்களையும். நிந்திக்கப்பட்டவர்களையும் தூரத்திலிருக்கச்செய்து, அரசன் அவர்களுடன் பேசவேண்டும். நோயுள்ளவரை ரித்விக்காகவும் புரோஹிதராகவும் அரசன் வரிக்கக்கூடாது; இதரர்களுக்குப் புரோஹிதம் செய்யாதவரையும் எவர் புரோஹிதராயிருப்பதில் மரணமும் பிரஷ்டத்வமும் ஸந்யாஸமும் யுத்தத்தில் அபஜயமும் நேரிட்டிருக்கின்றனவோ அவரையும் ஒருபோதும் புரோஹிதராகச் செய்துகொள்ளக்கூடாது. அனுகூலமான நக்ஷத்திரத்தில் பிறந்தவனும் அரசாளத்தக்க அதிருஷ்டம் பொருந்தியவனும் ராஜநீதி சாஸ்திரத்தில் நல்லபயிற்சியுள்ளவனுமான புரோஹிதன் அரசனுக்குச் சிறந்தவன். அசுபங்களான சகுனங்கள் உத்பாதங்கள் இவைகளின் பயனை அறிந்தவனும் பகைபாளியின் பக்ஷத்தின்குறையைத் தெரிந்தவனுமான புரோஹிதன் அரசனுக்குச் சிறந்தவனவான். இத்தகைய குணம்பொருந்தியவன் இல்லாவிட்டால், சுக்லயஜுர்வேதி கிருஷ்ணயஜுர்வேதி ரிக்வேதி ஸாமவேதி இவர்களும் நீதிசாஸ்திரத்தில் நல்ல பயிற்சியும் அதர்வவேதத்தில் பாண்டித்யமும் பெற்றவர்களாஞல் புரோஹிதர்களாயிருக்கலாம். க்ஷத்ரியதர்

மத்திற்கு விரோதமும் ஹிம்ஸையைக் கூறுவனவும் யாகத்தைச்செய்யும் பிராம்மணர்களால் சொல்லப்படுவனவுமான மந்திரங்களைப் புத்திமானை அரசன் உச்சாரணஞ்செய்யக்கூடாது' என்பது. பிரஜைகளின் குணங்களும் புரோஹிதரின் குணங்களும் ஒன்றையொன்று அனுஸரித்து விளங்கும். நற்குணம்பொருந்திய அரசனை அடைந்தயாவரும் மிகவும் சுகித்திருப்பார்கள். அரசனும் புரோஹிதனும் ஸமபுத்தியுள்ளவர்களும் ஒருவருக்கொருவர் நல்ல நேசமுள்ளவர்களும் நம்பிக்கையுள்ளவர்களும் நல்ல தவமுள்ளவர்களும் தர்மத்தில் உறுதிபெற்றவர்களுமாயிருப்பார்களானால் பிரஜைகளையும் தேவர்களையும் பித்ருக்களையும் ஸந்தானங்களையும் வளரச்செய்வார்கள். பிராம்மணரான புரோஹிதரும் அரசனும் ஒருவருக்கொருவர் மரியாதையுடன் இருப்பார்களானால் பிரஜைகள் சுகித்திருப்பார்கள். அவர்கள் ஒருவரையொருவர் அவமதிப்பார்களானால் பிரஜைகள் நிச்சயம் நாசமடைவார்கள். எல்லாப்பிரஜைகளுக்கும் பிராம்மணனும்க்ஷத்திரியனுமே மூலமென்று சொல்லப்படுகிறார்கள். ஓ! யுதிஷ்டிர! இவ்விஷயத்திலும் [1] ஐலனுக்கும் கர்யபருக்கும்நடந்த ஸம்பாஷணையென்று எடுத்துச்சொல்லப்படும்இப்பழைய இதிஹாஸத்தைத்தெரிந்துகொள்.

ஐலன், 'க்ஷத்ரியஜாதியானது பிராம்மணனை மரியாதையின்றி விலக்குங்காலத்திலும் பிராம்மணஜாதியானது க்ஷத்ரியனைவிலக்குங்காலத்திலும் [2] (இவ்விதவிரோதத்தால் எவர்கள் பலமுள்ளவர்களாவார்கள்?) இவ்விரண்டில் எந்தஒன்று மற்றொன்றின் பலத்தைத் தொடர்ந்துநிற்கும்? அவ்விதபலத்தைஅடைந்து எவர்கள் நிலைபெற்றிருப்பார்கள்?' என்றுகேட்டான். கர்யபர், 'க்ஷத்ரியன் பிராம்மணனை விரோதிப்பானுகில்அந்தக்ஷத்ரியனின் ராஜ்யம் நாசமடையும். அவ்வித விரோதத்தால் திருடர்கள் பலமடைவார்கள். ஸாதுக்கள் பிராம்மணர்கள் விரோதிக்கும் க்ஷத்ரியனைக்கெட்டஜாதியிலுண்டானவனென்று அறிகிறார்கள். பிராம்மணனைவிலக்கின இவ்விதக்ஷத்ரியர்களுக்கு வேதமும் ஸந்ததிகளும் வளராமாட்டா. இவர்களுடைய பசுக்களும் நாசமடையும். இவர்கள் யுத்தத்தில் ஜயம்பெறமாட்டார்கள். இவர்களுடைய புத்ரர்கள் வேதத்தை அத்யயனஞ்செய்யமாட்டார்கள். பிராம்மணர்களை விரோதிக்கும் க்ஷத்ரியர்களுடையவீட்டில் ஒருபோதும் பொருள் விருத்தியடையாது. அவர்களின் ராஜ்யத்திலுள்ளவர்கள் அத்யயனம் யாகமுதலிய நற்கர்மங்களைச் செய்யமாட்டார்கள்;

---

1 புரூரவஸ்.

2 மறுமொழியைக் கவனித்தால் இவ்விதப்பொருள் கொள்வதுதான் பொருந்துகின்றது.

திருடர்களாகவும் ஸங்கரஜாதிகளாகவும் ஆவார்கள். க்ஷத்ரியஜாதி பிராம்மணஜாதிக்குக் காரணமாயும் பிராம்மணஜாதி க்ஷத்ரியஜாதிக்குக்காரணமாயுமிருப்பதால் இந்த ஜாதிகளிரண்டும் ஒன்றையொன்று பரிபாலிப்பதில் எப்பொழுதும் சேர்க்கையுள்ளனவாகும். இந்த ஜாதிகள் இரண்டும் எப்பொழுதும் சேர்க்கையுள்ளனவாயிருந்து பெரிய நிலைமையை அடைந்திருக்கின்றன. புராதனமாக ஏற்பட்ட இந்த ஜாதிகளின் சேர்க்கை வேறுபடுமானால் உலகமெல்லாம் மிக அவிவேகமுள்ளதாகும். இவ்விதவேறுபாடுள்ள ஸமயத்தில் பெரியகடலில் உடைந்த கப்பல்போலக் கரையை அடையவிருப்பமுள்ளவன் கரையேற முடியாது. நான்கு ஜாதிகளும் மிக்க அவிவேகத்தை அடைவதுடன் பிரஜைகள்யாவும் நாசமடையும். பிராம்மண ஜாதியென்னும் விருக்ஷம் நன்குரக்ஷிக்கப்பட்டால் அது லோகத்தையும் ஸுவர்ணத்தையும் பொழியும். அது காக்கப்படாமற்போனால் எப்பொழுதும் துக்கத்தையும் நாகத்தையும் பொழியும். எப்போது வேதமோதும்பிராம்மணன் இடையூறுகளால் அவ்வேதத்திலிருந்து விலக்கப்பட்டுத் தன்னைக்காக்கத்தக்க க்ஷத்திரியனில்லாத காரணத்தால் தன்னைக்காக்கக்கருதி அவ்வேதத்தையே வேண்டுகிறானோ அக்காலத்தில் தெய்வம் மழைபெய்விப்பது ஆச்சர்யம். [1] பொறுக்க முடியாததுர்ப்பிக்ஷம் மஹாமாரிமுதலிய துன்பங்கள் அப்பொழுது பிரஜைகளைப் பிடிக்கும். பாபியானவன் ஸ்திரீயையும் பிராம்மணனையும் கொன்றுவிட்டு அதை ஸபையிலும் பெருமையாகப் பேசிக்கொள்வான்; அரசன் அருகிலும் பயப்படமாட்டான். அந்தக்காரணத்தால் அரசனுக்குப் பயம் நேரும். பாபிகள் வரம்பின்றிப் பாபத்தைச் செய்யும்போது இந்த அரசனும் மிகக்கொடியவனாவான். பாபிகள் தமது கெட்டகாரியங்களால் அரசனைக் கொடுஞ்செய்கையுள்ளவனாகச் செய்துவிடுவார்கள். பிறகு, ஸாதுக்கள் அஸாதுக்கள்யாவரையும் அரசன் அடிக்கத்தொடங்குவான்' என்று சொன்னார்.

ஜனன், 'ஓ! கச்யபரே! (உலகில்) பிராணிகளால் பிராணிகள் அடிக்கப்படுவதாகக் காணப்படுகின்றன. அங்ஙனமிருக்க, இந்த அரசன் குரூரச்செய்கையுள்ளவனாகக் காரணம் யாது? எவ்விதமிருப்பவன் கொடியசெய்கையுள்ளவன்? இவற்றையெல்லாம் எனக்கு உரைக்கவேண்டும்' என்று கேட்டான். கச்யபர், '(பேய்பிடித்தவன் செய்கை யாவும் அப்பேயின்செய்கையாவதுபோல அரசன் அடக்காத காரணத்தால்) மனிதர்களின் இருதயத்தில் விளங்கும் ஆத்மாவானது, காமம் கோபம் என்னும் மனத்தின் குணங்களால் எவப்

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

பட்டு, ருத்திரரூபியாய், ஆகாயத்தில் வாயுவால் சூழப்பட்ட மேகம் மழைபெய்வதுபோல, தன்சரீரத்தையும் பிறர்சரீரத்தையும் ஹிம்ஸிக்கிறது. (அதுமுழுதும் அரசனையே சேர்ந்ததாகும்.) கேடு செய்யும்ஆத்மா வாயுவிற்கொப்பானதாகவும் அரசன் மேகத்திற்கு ஒப்பான உருவமுள்ளவனாகவும் அறிந்துகொள்ள வேண்டும்' என்று சொன்னார்.

ஜலன், 'ஆகாயத்தில் வாயு சுற்றிக்கொண்டிருப்பதுபோல ஜீவாத்மா சுற்றிக்கொண்டிருப்பதாயும் அதனுடன் சேர்ந்த மேகம் வர்ஷிப்பதுபோல அரசன் கேடுசெய்வதாயும் மனிதர்களிடம் காணப்படுவதில்லையே. அவரவர்களின் அவிவேகத்தாலுண்டான விருப்புவெறுப்புக்களாலன்றே கொலை செய்யப்படுகிறது? ஆகையால், இஃது எங்ஙனம்?' என்றுகேட்க, கச்யபர், 'ஒருவீட்டைப் பிடித்து எரியும் அக்நியானது வேகமாய் அந்த க்ராம முழுமையும் எரிப்பதுபோல அரசனானவன் பிராணிகளுக்கு அவிவேகத்தாலுண்டாகும் காமக்குரோதங்களைச் செய்வித்து அவைகளின் புண்யபாபங்களுடன் சேர்ந்தவனாகிறான்' என்று சொன்னார்.

ஜலன், '[1]விசேஷமாகப் பாபஞ் செய்யப்படும்பொழுது பாபமென்னும் குற்றமானது புண்ணியபாபங்களின் ஸம்பந்தமில்லாத மனிதனையும் தொடருமானால் யாதுகாரணம்பற்றி மனிதன் புண்ணியத்தைச் செய்யவேண்டுமென்றும் பாபத்தைச் செய்யக்கூடாதென்றும் சாஸ்திரம் கூறுகிறது?' என்று கேட்டான். கச்யபர், 'காய்ந்த கட்டையுடன் சேர்ந்த காரணத்தால் ஈரமான கட்டையும் எரிக்கப்படுவதுபோல, பாபஞ்செய்த மனிதர்களை விலக்காமல் அவர்களுடன் சேரும் காரணத்தால் நேரில் பாபத்தைச் செய்யாத மனிதர்களையும் அவர்களுக்குச் சரியான பாவம் தொடர்ந்து நிற்கும். ஆகையால், எவ்விதத் துன்பமிருந்தாலும் பாபஞ் செய்பவர்களுடன் சேர்வது கூடாது' என்று சொன்னார்.

ஜலன், 'இவ்வுலகில் பூமியானது நல்லவர்கள் கெட்டவர்கள் என்ற இரண்டுவித மனிதர்களையும் தரிக்கிறது; ஸூர்யனும் இரண்டுவித மனிதர்களையும் தபிக்கச் செய்கிறான்; காற்றும்ஸாதுக்களுக்கும் அஸாதுக்களுக்கும் வீசுகிறது. அங்ஙனமே, ஜலமும் இரண்டுவித மனிதர்களையும் பொறுக்கின்றது. இப்புண்யபாபங்களின் பயன் என்ன?' என்று கேட்டான். கச்யபர், 'ஓ! ராஜகுமாரனே! இவ்வுலகில் ஸாதுக்களுக்கும் அஸாதுக்களுக்கும் இவ்விதம் வேற்றுமையின்றியிருந்தா

1 இங்கு, 'ஆத்மாவானது புண்யம் பாபம் இரண்டுமற்றது' என்பதும், 'அவ்விதக்கர்மங்களுக்குமூலமான மனத்தின்சேர்க்கையால் ஆத்மாவும் கர்மமுள்ளதுபோலத் தோற்றப்படுகிறது' என்பதும் பழையஉரை.

லும் இறந்தபின் புண்யஞ்செய்தவனுக்கும் பாவஞ்செய்தவனுக்கும் மேலுலகில் மிகவிசேஷமான வேற்றுமைஉண்டு. ஜராயும் மரணமும் மற்றுமுள்ள துன்பமுமில்லாததும் நெய்தேன் முதலிய போக்யவஸ்துக்கள் நிரம்பியதும் அமிருதத்திற்கிருப்பிடமும் பொன்மெளியுள்ளதுமான உலகம் புண்ணியத்திற்குரியதாகும். புண்யஞ்செய்த மனிதன் இறந்தபின் அவ்வுலகஞ்சென்று ஸந்தோஷிப்பான். எப்பொழுதும் துன்பமுள்ளதும் பலசோகங்கள் நிறைந்ததும் இருளுள்ளதுமான நரகம் பாபத்திற்குரிய லோகமாகும். பாபஞ்செய்த மனிதன் அவ்வுலகஞ்சென்று பலவருஷங்கள் அங்கு துன்பமுள்ளவனும் நிலையற்றவனுமாகத் தன்னைப்பற்றித் துக்கமடைவான். ஆகையால், பிராம்மணனுக்கும் க்ஷத்திரியனுக்கும் ஒருவருக்கொருவர் நேரும் விரோதத்தால் பிரஜைகள் பொறுக்கமுடியாத துன்பம் நேரும். இங்ஙனம் தெரிந்துகொண்டு, அரசன் பலகல்விகளைக் கற்றவரும் அறிவிற் சிறந்தவருமான பிராம்மணரைப் புரோஹிதராகச் செய்துகொள்ளவேண்டும். அவ்விதப் புரோஹிதரை அடைந்தபிறகுதான், அரசனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வது தர்மமென்று விதிக்கப்படுகிறது. பிராம்மணன் தர்மப்படி மற்ற யாவருக்கும் மூத்தனவனென்று சொல்லப்படுகிறான். வேதமறிந்த பெரியோர்கள், முதலில் பிராம்மணஜாதி ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்று அறிவிக்கிறார்கள். ஸ்ருஷ்டியில் முதலில் பிறந்த காரணத்தால் உத்தமமான முதன்மையானது பிராம்மணஜாதியால் அடையப்பட்டது. ஆகையால், அறிவிற்சிறந்த பிராம்மணனுக்கு உத்தமமான விசேஷவஸ்துக்கள் யாவையும் அளிப்பதுடன் அவனை மூத்தின மரியாதை செய்து எல்லாவிஷயத்திலும் பூஜிக்கவும் வேண்டும். விசேஷமாகப் பராக்ரமம் பெற்ற அரசனுக்கும் தவறுமல் இவ்விதம் செய்ய வேண்டியது கடமையாகும். பிராம்மணரில் க்ஷத்ரியனும் க்ஷத்ரியரில் பிராம்மணனும் பெருமை அடையவேண்டும். அரசனுடைய புரோஹிதர் அரசனுக்கும் மற்றுமுள்ள எல்லாவற்றிற்கும் யஜமானராவார்' என்று சொன்னர்" என்றார்.

எழுபத்துநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் முசுகுந்த சரித்திரத்தை எடுத்துக் காட்டிப் புரோஹிதரால் அரசருக்கு நேரும் நன்மைகளை யுதிஷ்டிரருக்குக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! பிராம்மணன் க்ஷத்ரியன் இவர்களுடைய ஸாமர்த்தியமும் புரோஹிதரின் லக்ஷணமும் அவர்

பெருமையும் உம்மால் உபதேசிக்கப்பட்டன. இப்பொழுது பிராம்மணன் க்ஷத்ரியன் இவர்களின் நிர்ணயத்தைக் கேட்க விரும்புகிறேன். பிராம்மணனும் க்ஷத்ரியனுமே எல்லா உலகங்களுக்கும் முக்கிய காரணமாகிறார்கள். ராஜ்யத்தின் யோகக்ஷேமமும் அவ்விரு வரைக்கொண்டு நிலைபெறவேண்டுமே?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"ராஜ்யத்தின் யோகக்ஷேமம் அரசனையும் அரசனுடைய யோகக்ஷேமம் புரோஹிதனையும் சார்ந்து நிற்கும். பிரஜைகளுக்கு நேரிடும் துர்ப்பிக்ஷ முதலிய தெய்வக் குற்றத்தை விலக்கத்தக்க புரோஹிதப் பிராம்மணனும் மனிதர்களால் நேரிடும் துன்பத்தை விலக்கத்தக்க புஜபலமுள்ள க்ஷத்ரியனும் எந்தத்தேசத்திலிருக்கிறார்களோ அந்தத் தேசம் ஸுகித்து வாழும். இது விஷயத்திலும் முசுகுந்த ராஜனுக்கும் குபேரனுக்கும் நடந்த ஸம்பாஷணையான இப்பழைய இதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். முசுகுந்தனென்னுமரசன் இப்பூமியை ஜயித்து விட்டுத் தன்பலத்தை அறியவிரும்பி அளகாபுரிக்கு அதிபதியான குபேரனை எதிர்த்துச்சென்றான். பிறகு, விஸ்ரவஸின் குமாரனை குபேரன் அவனை அடிக்கும்படி சிலராக்ஷஸர்களுக்குக் கட்டளையிட்டான். அந்த ராக்ஷஸர்களும் அப்பொழுது முசுகுந்தராஜனுடைய சேனைகளை எதிர்த்துப்பீடித்தார்கள். பகைவர்களை அடக்க வல்லமையுள்ள அந்த முசுகுந்தராஜன், தன்சேனை அடிக்கப்படலும், அறிவுள்ளவரான தன் புரோஹிதரை வெறுத்து நிந்தித்துப் பேசினான். பிறகு, தர்மம்தெரிந்தவர்களிற்சிறந்த வஸிஷ்டரென்னும் அவனுடைய புரோஹிதர் கொடுமையான தவஞ்செய்து அவ்வரக்கர்களைக் கொன்றதுடன் குபேரனிடம் செல்லத்தக்க வழியையும் கண்டுபிடித்தார். பிறகு, முசுகுந்தராஜன் குபேரனைஎதிர்த்து அவன் சேனையை அடிக்கும்போது, குபேரன், அவ்வரசனை நிந்தித்ததுடன், 'ஓ! அரசனே! பலசாலிகளும் புரோஹிதருள்ளவர்களுமாக உனக்குமுன்னிருந்த அரசர்கள் உன்னைப்போல இருந்தவர்களில்லை. மிக்கபலசாலிகளும் மிகுதியாகச் சாஸ்திரங்களைக் கற்றவர்களுமான அவ்வரசர்களும் என்னிடம்வந்து ஸுகதுக்கங்களுக்கு ஈசனை என்னைப் பலவிதமாக உபாஸித்தார்கள். பிராம்மணருடைய பலத்தைக் காரணமாகக் கொண்டு மிகவும் மேலானவனாக நீ ஏன்உலாவுகிறாய்? உன்னுடைய கையில் பராக்ரமமுண்டானால் அதை நீ வெளியிடலாம்' என்ற இவ்வசனத்தையும் சொன்னான்.

பிறகு, முசுகுந்தராஜன் கோபங்கொண்டு குபேரனை நோக்கி நீதியுள்ளதும் கோபத்தை வெளியிடாததும் பரபரப்பில்லாததுமான

இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்குனன். 'அளகாபுரியின் அதி பதியே! பிராம்மணன் க்ஷத்ரியன்என்ற இவ்விரண்டுஜாதியையும் பிரம்மதேவர் ஒரேகாரணமுள்ளனவாக உண்டுபண்ணியிருக்கிறார். வெவ்வேறுன பலத்தின் அமைப்புள்ள அவ்விரண்டுஜாதியும் உலகத்தைப் பரிபாலனஞ் செய்யவேண்டும். தவம் மந்திரம் இவைகளின் பலம் எப்பொழுதும் பிராம்மணர்களிடம் நிலைபெற்றிருக்கும். அஸ்திர பலம் புஜபலம்இவ்விரண்டும் எப்பொழுதும் க்ஷத்ரியர்களிடம் நிலை பெற்றிருக்கும். இவ்விதமுள்ள பிராம்மணனும் க்ஷத்ரியனும் ஒன்று சேர்ந்து பிரஜைகளின் பரிபாலனத்தைச் செய்துவரவேண்டும். ஆகையால், அதேவிதிப்படி நடந்துவரும்என்னை என்னகாரணத்தினல் இகழ்ந்து பேசுகிறீர்?' என்று வினவினன். பிறகு, குபேரன், புரோஹிதருடன் கூடின முசுகுந்தராஜனைநோக்கி, 'ஓ! அரசனே! ஈசனல் உத்தரவுகொடுக்கப்படாத ராஜ்யத்தை ஒருமனிதன்பொருட்டு நான் கொடுக்கவும் மாட்டேன்; அவ்விதராஜ்யத்தை அபகரிக்கவும் மாட்டேன் என்று தெரிந்துகொள். என்னல்கொடுக்கப்பட்ட இப்பூமி முழுமையும் மிச்சமின்றி நீ ஆண்டுவா' என்றுசொன்னன். இவ்விதஞ்சொல்லப்பட்ட முசுகுந்தராஜன், 'ஓ! யக்ஷராஜரே! உம்மால் அளிக்கப்பட்ட ராஜ்யத்தை அனுபவிக்க எனக்கு விருப்பமில்லை. என் கைவன்மையால் ஸம்பாதிக்கப்பட்டராஜ்யத்தை நான் அனுபவிக்க விரும்புகிறேன்' என்றுசொன்னன். பிறகு, குபேரராஜன் பகைவர்களைஅடக்கும் வல்லமையுள்ளவனும் க்ஷத்திரியதர்மத்தில் நிலை பெற்றவனுமான முசுகுந்தராஜனைக்கண்டு மிகவும் ஆச்சர்யமடைந் தான். அந்த முசுகுந்தராஜனும் க்ஷத்திரியதர்மம்விட்டு விலகாதவ னுய்த் தன்கைவன்மையினல் ஸம்பாதிக்கப்பட்டபூமியை ஆண்டுவந் தான். எந்தஅரசன் இவ்விதமுள்ள பிராம்மணருடையபெருமையை அறிந்து அவரை முன்னிட்டுச்செல்லுகிறானே அவ்வரசன் ஜயம் பெற்று இப்பூமியை அனுபவிப்பதுடன் பெரியகீர்த்தியையும் பெறு வான். பிராம்மணன் எப்பொழுதும் தீர்த்தமுள்ளவனையும்க்ஷத்திரியன் எப்பொழுதும் ஆயுதமுள்ளவனையுமிருக்கவேண்டும். உலகிலுள்ளவஸ் துக்கள்யாவும் அவ்விருவர்களையும் அடுத்து நிலைபெறவேண்டும். ஓ! ராஜனே! முக்கியமான இந்தத்தர்மத்தையும் உலகிலுள்ள தர்மத்தின் நாலிலொருபாகத்தையும் கைவிடாமலிரு. ராஜனே! அவ்விதமிருப்ப வன் பெரியகீர்த்தியையும் தேஜஸையும் பூமி அனைத்தையும் மேலுல கில் புகழ்ச்சியையும் அடைவான்" என்றுசொன்னர்.

ஸ்ரீ மஹாபாரதம்.

எழுபத்தைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அரசர்களின் ஒழுக்கத்தை யுதிஷ்டிரருக்குக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! அரசன் எவ்விதஒழுக்கத்தால் மனிதர்களை மேன்மைஅடையச்செய்து புண்ணியமானஉலகங்களை ஜயிப்பானென்பதை எனக்கு உபதேசிக்கவேண்டும்" எனக் கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! பாரத! அரசன் ப்ரஜைகளைப் பரிபாலிப்பதில் உத்ஸாஹமுள்ளவனும் தானம், யாகம், உபவாஸம், தவம் இவைகளைச்செய்யும் ஸ்வபாவமுள்ளவனுமாயிருக்கவேண்டும். ஜனங்கள்யாவரையும் எப்பொழுதும் அரசன் தர்மப்படியும் விடாமுயற்சியுடனும் பரிபாலிப்பதுடன் தானத்தால் தர்மமுள்ள ஜனங்களைப் பூஜிக்கவும்வேண்டும். அரசனால் செய்யப்படும் காரியங்களில் ப்ரஜைகளுக்கு ஆதரவுண்டாவது ஸ்வபாவமாகையால், தர்மமும் அரசனால் பூஜிக்கப்படும்காரணத்தால் உலகெங்கும் பூஜிக்கப்படும். அரசன் சத்துருக்களிடம் எப்பொழுதும் யமன்போலக் கையில்தண்டமெடுத்தவனாயிருக்கவேண்டும்; திருட்டுத்தொழிலுள்ளவர்களை எல்லாவிடத்திலும் அடிக்கவேண்டும். அரசனுக்குத் திருடர்களிடம் பொறுமை ஆகாது. அரசனால் நன்கு ரக்ஷிக்கப்படும் ப்ரஜைகள் எந்தத்தர்மத்தைச்செய்கின்றனரோ அந்தத்தர்மத்தின் நாலிலொருபாகத்தை அரசன் அடைவான். ப்ரஜைகளைத் தர்மப்படி ரக்ஷித்துவரும் அரசன் அத்தியயனம், தானம், ஹோமம், பூஜைமுதலிய அவர்களின் அந்தக்கர்மங்களின் நாலிலொருபாகத்தை அடைவான். ஓ! பாரத! ப்ரஜைகளைரக்ஷித்துவரும் அரசன் தன்ராஜ்யத்தில் சிறிதுபாபம் ஸம்பவிக்குமாலுலும் அப்பாவத்திலும் நாலிலொருபாகத்தை அடைவான். ஓ! அரசனே! செய்கையில் கொடுமையுள்ளவனும் பொய்வசனம் பேசுகிறவனுமான மனிதன் எவ்விதத்திருட்டைச் செய்கிறானே அப்பாவம்முழுவதும் அரசனைச்சேர்ந்ததென்று சிலர் சொல்லுகிறார்கள். அப்பாவத்தில்பாதி அரசனைச்சேர்ந்ததென்பது பெரும்பாலும் (பெரியோர்களுடைய) நிச்சயம். அரசன், திருடர்களால்அபகரிக்கப்பட்ட பொருளை மீட்டுக்கொண்டுவரச் சக்தியற்றவனாயிருந்தால்அப்பொருளைத் தன்கோசத்திலிருந்து அப்பொருளையிழந்தவனுக்குக் கொடுக்கவேண்டும். இவ்விதம் கொடுப்பதால் அரசன் அப்பாவத்திலிருந்து விடுபடுகிறான். பிராம்

மணர்களைப்போல அவர்களின்பொருளையும் எப்பொழுதும் எந்த வர்ணத்தாரும் காத்துவரவேண்டும். பிராம்மணர்களுக்கு அபகாரஞ் செய்யும்மனிதன் தேசத்தில் வஸிக்கக்கூடாது. பிராம்மணர்களின் திரவியம் ரக்ஷிக்கப்பட்டால் எல்லாம் ரக்ஷிக்கப்பட்டதாகும். அவர் களுடைய அனுக்ரஹமடைவதால் அரசன் செய்யவேண்டியதைச் செய்தவனாகிறான். பிராணிகள் மேகத்தையும் பறவைகள் பெரிய மரத்தையும் அடுப்பதுபோல மனிதர்கள் எல்லாப்பொருள்களையும் ஸாதிக்கத்தக்கஅரசனை அடுத்துப் பிழைக்கிறார்கள். எப்பொழுதும் அதிகலோபமும் கொடுமையும் கெட்டபுத்தியும் காமமுமுள்ள அரச னல் ப்ரஜைகளைப் பரிபாலிக்கமுடியாது" என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், "ராஜ்யஸுகத்தில் விருப்பமில்லாத நான் தர்மத்தை வேண்டி ராஜ்யத்தில் விருப்பமுள்ளவனானேன். இதில் தர்மமில் லாததையும் அதர்மம் அதிகமாயிருப்பதையும் கவனிக்கையில் ஒரு க்ஷணமும் இதிலிருக்க எனக்கு விருப்பமில்லை. ஆகையால், தர்மமில் லாத இந்தராஜ்யம் எனக்கு வேண்டாம். தர்மத்தைச்செய்யும் விருப் பத்துடன் நான் அரண்யமே செல்லுகிறேன். பரிசுத்தமான அரண் யங்களில் தண்டத்தைவிலக்கிவிட்டு இந்திரியங்களைஜயித்தவனும் கிழங்குகனிகளைப் புஜிப்பவனுமான முனியாயிருந்துகொண்டு தர் மத்தை ஆராதிக்கப்போகிறேன்" என்றுசொல்ல, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"பிறர்துக்கத்தை ஸஹியாத உனதுபுத்தியை நான் அறிவேன். அவ்விதப்புத்தி குணமுள்ளதன்று. எப்பொழுதும் பிறர்துக்கம் பொறுதஅரசனல் ராஜ்யம் பரிபாலிக்கமுடியாது. ஏ! தர்மபுத்ர! எப்பொழுதும் மிருதுவான புத்தியுள்ளவனும் அதிகநன்மையுள்ள வனும் மிக்க தர்மபுத்தியுள்ளவனும் பயந்தவனும் தயையுள்ளவனு மான உன்னை உலகம் நன்குமதிக்கிறதில்லை. தகப்பனலும் பாட்ட னலும் அனுஷ்டிக்கப்பட்டதும் உனக்கு யோக்யமுமான ராஜதர்மத் தைக் கவனித்துப்பார். நீ அனுஷ்டிக்கவிரும்பிய ஒழுக்கம் அரசர் களுக்கு உரியதன்று. அதைரியத்துடன்கலந்த இவ்விதமான சாந்த புத்தியை அடைந்த நீ ப்ரஜைகளைரக்ஷிப்பதாலுண்டான புண்யத்தின் பயனை அடையத்தக்கவனல்லன். ஐய! உன்புத்தியால் நடக்க நிச்ச யித்த இந்நடையைப் பாண்டுவும், குந்தியும், க்ஷத்திரியர்கள்யாவராலும் பூஜிக்கப்பட்ட சந்தனுராஜனும், தர்மபுத்தியுள்ள விசித்ரவீரியனும், சித்ராங்கதராஜனும் உனக்கு அனுக்ரஹிக்கவில்லையே. உனது தந்தை யான பாண்டு சூரத்தனம், பலம், ஸத்தியம் இவைகளையன்றோ உனக்கு எப்பொழுதும் வேண்டிவந்தான். குந்தியும் உனக்குப்பெரு

மையையும் உதாரத்தன்மையையும் பலத்தையும் வேண்டினுள். பிதி
ருக்களும் தேவதைகளும் எப்பொழுதும் ஸ்வாஹாகாரத்தையும்
ஸ்வதாகாரத்தையும் மானுஷம் தெய்வமென்ற இரண்டுவிதகர்மங்
களையும் புத்ரர்களிடம் விரும்புகிறார்கள். தர்மமானுஷ்யரி, அதர்ம
மானுஷ்யரி; தானமும் அத்தியயனமும் யாகமும் ப்ரஜைகளைப்
பாலித்தலுமாகிய இவைகளைச்செய்யும் கடமையுள்ளவனுகப் பிறந்
திருக்கிறாய். குந்தியின்புத்ரனே! நற்குலத்திற்பிறந்து தலைவரா
யிருந்து இவ்விதப்பாரத்தை வஹிப்பவர்களும் அக்காரணத்தால்
துன்பப்படுகிறவர்களுமான மனிதர்களின்கீர்த்தியும் குறைவுள்ள
தாகாது. நன்கு சிக்ஷைசெய்யப்பட்ட குதிரையும் எப்பொழுதும்
தவறுசலின்றித் தேரிழுக்கிறது. அறிவுள்ளமனிதன் எங்ஙனம்
இருக்கவேண்டாம்? தர்மங்கள் குற்றமில்லையெனக்கூறும் வசனத்
தால் உலகிலுள்ள ஸித்தியும் கர்மத்தாலுண்டாகிறது. க்ஷத்திரியனு
னலும் பிராம்மணனுனலும் கிருஹஸ்தனுனலும் பிரம்மசாரியானு
லும் ஒரேமுயற்சியுடன் கஷ்டகாலத்திலும் தர்மமொன்றையே செய்
தவனுக இவ்வுலகில் ஒருவனும் இருந்ததில்லை. சிறிதுகுற்றமுள்ள
தானுலும் பெரும்பாலும் குணமுள்ளகர்மம் உதாரமென்றே சொல்
லத்தக்கதாகும். கர்மம்செய்யாததைவிடக் கர்மம்செய்வதே மிகச்
சிறந்ததாகும். கர்மம்செய்யாத மனிதனைக்காட்டிலும் பெரியபாவி
ஒருவனுமில்லை. நற்குலத்திற் பிறந்தவனும் தர்மந்தரிந்தவனுமான
ஒருவன் உத்தமமான மந்திரிமுதலிய அதிகாரத்தை அடைவா
னுகில் அப்பொழுது அரசனின் யோகக்ஷேமம் மிகச்செவ்வையாக
நடைபெறும். தர்மபுத்தியுள்ள அரசன் ராஜ்யத்தைப்பெற்றுத்
தானத்தால் சிலரையும் பலத்தால்சிலரையும் இன்சொல்லால் சில
ரையும் எங்கும் தன்வசமாக்கிக்கொள்ளவேண்டும். நற்குலத்திற்
பிறந்தவர்களும் ஜீவனமில்லாதபயத்தால் துன்பப்பட்டவர்களுமான
வித்வான்கள் எந்தஅரசனைஅடைந்து திருப்தியுடன்இருக்கிறார்களோ
அந்தஅரசனுக்கு அக்காரியத்தைக்காட்டிலும் மேலானதர்மம் ஒன்று
மில்லை" என்றுசொன்னர்.

யுதிஷ்டிரர், "இவ்விதப் புண்ணியத்தைக் காட்டிலும் சிறந்த
தும் ஸ்வர்க்கத்திற்குக் காரணமுமான புண்ணியமும் உத்தம
மானப்ரீதியும் உத்தமமான ஐஸ்வரியமுமுள்ளனவாக அறிவீரா
னுல் எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர்,
"பயத்தால் துன்பப்படும் ஸாதுஜனங்கள் எந்த அரசனி
டம் ஒருக்ஷணமாவது க்ஷேமத்தை அடைகிறார்களோ அவன்
ஸ்வர்க்கத்தை ஜயிப்பவர்களில் மிகவுத்தமனென்பது எனது

உண்மையானகருத்தென்று உனக்கு அறிவிக்கிறன். ஆகையால், கௌரவர்களில் மிகச்சிறந்தவனே! கௌரவர்களுள் நீயே ஸந்தோஷத்துடன் அரசனுயிருக்க வேண்டும்; நல்லோரைக் காக்கவும் தீயோரை நீக்கவும் ஸ்வர்க்கத்தை ஜயிக்கவும் வேண்டும். அப்பா! பிராணிகள் மேகத்தையும் பறவைகள் நல்லமரத்தையும் அடுப்பது போல உனதுநண்பர்களும் ஸாதுஜனங்களும் உன்னைஅடுத்து இனிமையாக வாழட்டும். தைர்யமுள்ளவனும் சௌர்யமுள்ளவனும் பகைவர்களை அடிப்பவனும் குரூரமற்றவனும் இந்திரியங்களை ஜயித்தவனும் பிரீதியுள்ளவனும் வேண்டியவற்றைக் கொடுப்பவனுமான உன்னைஅடுத்துச் சுற்றத்தார்கள் இனிது வாழட்டும்" என்று சொன்னர்.

எழுபத்தாறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பிராம்மணர்களுக்குரிய சிலலக்ஷணங்களைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! பிராம்மணர்களுள், சிலர் தங்களுக்குரிய கர்மங்களிலும் சிலர் அச்சாதிக்குத் தகாத கர்மங்களிலும் ப்ரவிருத்திக்கிறார்கள். இவ்விதமிருப்பவர்களின்லக்ஷணத்தை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர், "ஓ! அரசனே! வேதங்களனைத்தையும் நன்றுகஅறிந்தவர்களும் மற்றக்கல்விகளும் நற்குணங்களும் பொருந்தியவர்களுமான பிராம்மணர்கள் பிரம்மத்துக்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறார்கள். ராஜனே! 1 நிக்யஜ்ஞஸ்வாமங்களை அறிந்தவர்களும் தம்கர்மங்களிலுறுதியுள்ளவர்களுமான பிராம்மணர்கள் தேவர்களுக்கொப்பானவர்கள். ஜீவனத்திற்குவேண்டிப் பசு, ஆடு, செம்மறியாடு, எருமை, குதிரை இவைகளைப் போஷிப்பவர்களான பிராம்மணர்கள் வைசியர்களுக்கொப்பாகச் சொல்லப்படுகிறார்கள். ஏ! பாரத! தனத்திலும் போகத்திலும் விருப்பமுள்ளவர்களும் சிலக்ஷரலக்ஷகளைச் செய்கிறவர்களுமான பிராம்மணர்களை க்ஷத்ரியர்களாக அறிய வேண்டும். ராஜனே! குதிரை யானை தேர்களிலேறுகிறவர்களும் காலாட்களுமான பிராம்மணர்கள் வைசியனுக்குச் சமமாவார்கள். ராஜனே! தம்ஜாதிக்குரியகர்மங்களை விட்டவர்களும்லோபிகளும் த்விஜபந்து அல்லது பிரம்மபந்துவெனச் சொல்லத்தக்கவர்களுமான பிராம்மணர்கள் சூத்திரனுக்கு ஒப்பானவர்களாகிறார்கள். வேதமோதாதவர்களும் அக்நியாதானமென்னுங் கர்மத்தைச்செய்யா

---

1 வேறுபாடம். 2 ஒழுக்கந்தவறிய ப்ராம்மணன்.

தவர்களுமான இந்தப் பிராம்மணர்கள்யாவர்களையும் தர்மபுத்தியுள்ள அரசன் வரிகொடுக்கும்படியும் கூலியின்றிவேலைசெய்யும்படியும் நியமிக்கலாம். தர்மாதிகாரம்செய்பவர்களும் கூலிவாங்கிக்கொண்டு தேவர்களைப் பூஜிப்பவர்களும் சோதிடம்சொல்லிப் பிழைப்பவர்களும் கிராம ஸமூதாயத்திற்கு யாகம்செய்பவர்களும் [1] கப்பலேறிக் கடலில் செல்லுகிறவர்களுமான இவ்வைந்துபேர்களும் பிராம்மணர்களுள் சண்டாளரென்று சொல்லப்படுவார்கள். அரசனே! ரித்விக்காயிருப்பவர்களும் புரோஹிதர்களும் மந்திரிகளும் தூதுபோகிறவர்களும் தண்டநீதியிற் செல்லுகிறவர்களும் பிராம்மணர்களுள் க்ஷத்திரியர்களுக்குச் சமமாகிறார்கள். மிலேச்சர்களிருக்கும் தேசங்களுக்கும் பாபிகளுக்கிருப்பிடமான தேசங்களுக்கும் பிராம்மணர்கள் செல்லுவார்களானால் அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் சண்டாளர்களாகிறார்கள். பிராம்மணர்களுக்குரிய ஸம்ஸ்காரம்பெறுத விராத்தியர்களுக்கும் மிலேச்சர்களுக்கும் சூத்திரர்களுக்கும் யாகஞ்செய்விக்கும் பிராம்மணதமன் இங்கு அபகீர்த்தியடைந்து இறந்தபின் மகாபிருந்தம் ஸமுத்திரம் என்னும் இரண்டுவிதநரகங்களை முறையே இருபத்தொருமுறை அடைகிறான். ரிக்யஜுஸ்ஸாமமென்னும் வேதங்களுக்கு விப்லவமென்னும் கெடுதிசெய்த மூடனானபிராம்மணன் ஒரு பிரம்மகல்பம் நரகத்திலிருந்து, பின்பு பலமலங்களிலிருக்கும் புழுவாகப்பிறக்கிறான். விராத்தியன், மிலேச்சன், சூத்திரன், திருடன், பதிதன், அசுத்தன், கெட்டதேசத்திலிருப்பவன், ஸுராபானஞ்செய்தவன், பிரமஹத்திசெய்தவன், சூத்திரஸ்திரீயின் பதியாயிருப்பவன், வேதமோதாதவன், கண்டவிடங்களில் புஜிப்பவன், பாலகனையும் ஸ்திரீயையும் கிழவனையும் தாயாரையும் தந்தையையும் குருவையும் கொன்றவன், மித்திரனுக்குத்துரோகம்செய்தவன், நன்றிகெட்டவன், பசுவைக்கொன்றவன், புத்ரனைக்கொன்றவன், சத்குரு இவர்களிடம் எவ்விதமந்திரங்களையும் பிராம்மணன் உபயோகப்படுத்தக்கூடாது. அவ்விதம் வேதங்களை உபயோகிப்பதுதான் வேதவிப்லவமென்னும் தோஷமாகுமென்று மந்திரமறிந்தமுன்னோர்கள்கூறுகிறார்கள். தேசாந்திரம்சென்றவனும் தீர்த்தயாத்திரைசெய்யச் சென்றவனும் பயத்தால் நல்லொழுக்கமில்லாத கெட்டதேசம்சென்றவனுமான பிராம்மணன் மிகவும் அடக்கமுள்ளவனும் பரிசுத்தனுமாயிருந்து மந்திரங்களை உச்சாரணஞ் செய்யவேண்டும். ஆபத்துள்ளவனும் துன்பமுள்ள

---

1 'மஹாபதிக:' என்பதுமூலம்; பெரிய மார்க்கத்திலிருந்து சுங்கம் வாங்குபவர்களென்றும் கொள்ளலாம்.

வனரக்ஷிக்கவேண்டியவனுமானபிராம்மணன் கெட்டமனிதர்களிடத்தில் மந்திரத்தைப்ரயோகிப்பதும் விப்லவமென்னும் கீழ்ச்சொல்லிய குற்றத்திற்குக் காரணமாகாது. நற்கர்மங்களால் வஞ்சிக்கப்பட்டவனும் குரூரச்செய்கையும் தீயவொழுக்கமுமுடையவனுமான பிராம்மணன் உண்மையையறிந்து இந்திரியங்களை நன்றாக அடக்கி நல்ல நடையுள்ளவனையிருப்பானானால் அப்பாவத்தைவிட்டு விலகுவான். பொக்கசம்குறைந்த அரசன் பிராம்மணர்களுக்கும் தேவர்களுக்கும் ஒப்பான பிராம்மணர்களைத்தவிர மற்றவர்களிடமிருந்து வரிவாங்கவேண்டும். பிராம்மணர்களுள் தமக்குத்தகாத கர்மங்களைச்செய்கிறவர்களுக்கும் மற்றஜாதிக்காரர்களுக்குமுள்ள பொருளுக்கு அரசனே யஜமானனென்று நமக்குரியவேதம் கூறுகிறது.[1] கெட்டகர்மங்களில் சென்ற பிராம்மணர்களையும் எவ்விதத்திலும் உதாஸீனம்பண்ணுமல் தர்மத்தைப் பாதுகாக்கவேண்டி அரசன் அவர்களை விலக்கிவைத்து அடக்கி ஆண்டுவரவேண்டும். எந்த அரசனுடைய ராஜ்யத்தில் பிராம்மணன் திருட்டுத்தொழிலுள்ளவனையிருக்கிறானே அந்தக்குற்றம் அவ்வரசனைச்சேர்ந்ததென்றே தர்மமறிந்தவர்கள் அறிவிக்கிறார்கள். ராஜனே! ஜீவனமில்லாமையால் ஒருஸமயம் திருட்டுச்செய்த வேதாத்தியயனம் முடித்த பிராம்மணனை அரசன் ரக்ஷிக்கவேண்டுமென்று வேதமறிந்தவர்கள் அறிவிக்கிறார்கள். சத்துருக்களைத் தபிக்கச்செய்கிறவனே! தனக்கு ஜீவனமிருந்தும் அவ்வந்தணன் அத்திருட்டிலிருந்து விலகாவிட்டால் அவனை அவன்பந்துக்களுடன் அரசன் தன்தேசத்திலிருந்து வெளியில்தூரத்தவேண்டும். யாகம், வேதம், பிறர்குற்றங்கூறுமை, ஹிம்ஸையில்லாமை, அதிதிபூஜை, அடக்கம், ஸத்தியவசனம், தவம், தானம் இவை பிராம்மணர்களுக்குரிய லக்ஷணமாகும்" என்று சொன்னார்.

எழுபத்தேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அரசர் யார்யாருடைய பொருளுக்கீதரியவனென்பதையும், கேகயராஜனுக்கும் ராக்ஷஸனுக்கும் நடந்தஸம்வாதத்தையும் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பரதஸ்ரேஷ்டரான பிதாமஹரே! அரசன் எவர்களின் பொருள்களுக்கு அதிபதியாயிருக்கிறானென்பதையும்

---

1 இங்கு அதிகபாடமான அரைசுலோகம் விடப்பட்டது.

எவ்வித ஒழுக்கமுள்ளவனுயிருக்கவேண்டுமென்பதையும் எனக்குஉப தேசிக்கவேண்டும்" எனக்கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"பிராம்மணர்களல்லாத மற்றவர்களின்பொருளுக்கு அரசன் தலைவனுகிறுனென்று வேதம் விதிக்கிறது. தமக்குத்தகாத கர்மங் களைச்செய்கிற பிராம்மணர்களின்பொருளுக்கும் அரசன் பதியா கிறுன். அவ்விதமிருக்கும் பிராம்மணர்களையும் அரசன் எவ்விதத் திலும் உபேக்ஷிக்கக்கூடாதென்பது முன்னேர்களான அரசர்களின் வழக்கமென்று ஸாதுக்கள் அறிவிக்கிறுர்கள். ராஜனே! எந்த அர சனுடைய ராஜ்யத்திலுள்ள பிராம்மணன் திருட்டுக்குற்றமுள்ளவனு யிருக்கிறுனே அக்குற்றம் அவ்வரசனைச்சேர்ந்ததாகுமென்று பெரி யோர்கள் கருதுகிறுர்கள். அரசர்களும் அந்தக்கர்மத்தால் தம்மை அவதூறுள்ளவர்களாக எண்ணுகிறுர்கள். ஆனதுபற்றியே, அறி வுள்ள அரசர்கள் யாவரும் பிராம்மணர்களை நன்குபரிபாலித்துவந் தார்கள். இதுவிஷயத்திலும், ரக்ஷஸால்பிடிக்கப்பட்ட கேகயராஜன் கூறிய இப்பழையஇதிஹாஸத்தை உதாஹரிக்கிறுர்கள். அரசனே! முன்னெருகாலத்தில் வேதாத்தியயனமுள்ளவனும் மிக்ககடுமையான நியமமுள்ளவனுமான கேகயராஜனைக் குரூரமான ஒருரக்ஷஸ் அரண் யத்தில் பிடித்துக்கொண்டது.

கேகயராஜன், 'ஓ! ரக்ஷஸே! என்தேசத்தில் திருடனும் லோபி யும் கட்குடிப்பவனும் அக்நியாதானம்செய்யாதவனும் யாகஞ்செய் யாதவனுமில்லை; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. என் தேசத்தில் கல்வியில்லாதவனும் விரதமில்லாதவனும் ஸோமபானஞ் செய்யாதவனுமான பிராம்மணன் இல்லை; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. குறைந்ததக்ஷிணையுடன் யாகஞ்செய்கிறவனும் நியம மின்றி வேதாத்தியயனஞ்செய்கிறவனும் என்தேசத்தில் ஒருவனு மில்லை; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. என்தேசத்தி லுள்ள பிராம்மணர்கள் அத்தியயனஞ்செய்தல், அத்தியயனஞ்செய் வித்தல், யாகஞ்செய்தல், யாகஞ்செய்வித்தல், தானம், ப்ரதிக்ரஹம் என்ற ஆறுகர்மங்களான ஸ்வதர்மத்தில் நிலைபெற்றவர்களும் பூஜிக் கப்பட்டவர்களும் சேரத்தகாதவர்களுடன் சேராதவர்களும் கொடுஞ் செய்கையற்றவர்களும் ஸத்தியவசனமுள்ளவர்களுமாயிருக்கிறுர்கள்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. என்தேசத்திலுள்ள ரக்ஷத் திரியர்கள் உண்மையானதர்மத்தில் மிக்க ஸமர்த்தர்களும் யாசியாத வர்களும் கொடுப்பவர்களும் அத்தியயனஞ்செய்கிறவர்களும் செய்வி யாதவர்களும் யாகம்செய்கிறவர்களும் செய்வியாதவர்களும் பிராம்

மணர்களைரக்ஷிப்பவர்களும் யுத்தங்களிற்புறங்கொடாதவர்களுமாய்த் தமக்குரிய கர்மங்களிலேயே இருக்கிறார்கள்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. என்தேசத்திலுள்ள வைசியர்கள் கபடமின்றிப் பயிர்செய்தல், பசுக்களைப் பாதுகாத்தல், வர்த்தகம் இவைகளை அடுத்துப் பிழைக்கிறவர்களும் தவறுதலில்லாதவர்களும் குற்றமற்ற காரியமுள்ளவர்களும் நல்லநடையுள்ளவர்களும் உண்மை பேசுகிறவர்களும் தானமும், அடக்கமும், சுத்தியும், ஸ்நேகமுமுள்ளவர்களுமாகத் தமக்குரிய கர்மத்திலேயே இருக்கிறார்கள்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. என் தேசத்திலுள்ள சூத்திரர்கள் அஸூயையின்றி விதிப்படி மூன்று வர்ணத்தார்களையும் அடுத்துச் சேவிக்கிறவர்களாகத் தம்கர்மத்திலிருக்கிறார்கள்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. ஏழைகள், கதியற்றவர்கள், வயது சென்றவர்கள், பலஹீனர்கள், நோயாளிகள், ஸ்திரீகள் இவர்கள் எல்லோருக்கும் வேண்டியவற்றைக் கொடுத்துவருகிறேன்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. வெகுகாலமாக விதிப்படி நடைபெற்றுவரும் அந்த அந்தக் குலங்களுக்குத்தக்க தர்மங்களுக்குச் சிறிதும் பழுதின்றி யாவற்றையும் பரிபாலித்துவருகிறேன்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. என்தேசத்திற்குவரும் தவமுள்ள பெரியோர்களை நன்கு பூஜித்து ஆதரவுடன் அவர்களிஷ்டத்தைக் கொடுத்துப் பரிபாலித்துவருகிறேன்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. நான் பிறருக்கு அன்னமளியாமல் புஜிக்கிறதில்லை; பரதாரத்தைப் பின்செல்லுகிறதில்லை; என்னிஷ்டப்படி ஸ்வதந்திரனாக எக்சமயத்திலும் விளையாடுகிறதில்லை; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. என்தேசத்தில் ப்ரம்மசாரியல்லாதவன் பிக்ஷையெடுப்பதில்லை; பிக்ஷையெடுப்பவன் ப்ரம்மசரியமில்லாமலிருப்பதில்லை; ரித்துவிக்கல்லாதவன் ஓமம் செய்வதில்லை; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. ராஜ்யத்திலிருக்கும் நான் விதிப்படி ராஜ்யமனைத்தையும் பரிபாலிப்பதுடன் ஸத்தியத்தை விட்டுச் சிறிதும் விலகாமலிருக்கிறேன்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. வித்தையுள்ளவர்களையும் முதியோர்களையும் தவமுள்ளவர்களையும் நான் அவமதிக்கிறதில்லை; ராஜ்யம் ஸுகமாக உறங்கும்படி நான் விழித்துக்கொண்டிருக்கிறேன்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. எவ்விஷயத்திலும் சுத்தமான கர்மமுள்ளவனாக நான் இருக்கிறேன்; கெட்டகதி என்னும் பயம் எனக்கில்லை; கிருஹஸ்தனும் அதற்குள்ள தர்மத்தைச் செய்கிறவனுமாயிருக்கிறேன்; ஆகையால், நீ என்னிடம்

ப்ரவேசியாதே. எனது புரோஹிதர் வேதாத்தியயனம் நிரம்பியவரும் தவழுள்ளவரும் உண்மையான தர்மங்களை அறிந்தவரும் அறிவுள்ளவரும் ராஜ்யமனைத்திற்கும் அதிபதியுமாயிருக்கிறார். தான்தாலும் ஸத்தியத்தாலும் பிராம்மணர்களைப் பரிபாலிப்பதாலும் நல்ல உலகங்களை அடைய விரும்புகிறேன்; பணிவிடை செய்யக்கருதிப் பெரியோர்களிடம் செல்லுகிறேன். அவ்விதமுள்ள எனக்கு ராக்ஷஸர்களிடமிருந்து பயம் கிடையாது. என்ராஜ்யத்தில் பதியிழந்தவள் இல்லை; பதிதனும் கபடமுள்ளவனும் திருடனும் யாகம் செய்யத் தகாதவர்களுக்கு யாகம் செய்விப்பவனும் பாபஞ்செய்கிறவனுமான பிராம்மணனுமில்லை; ஆகையால், ராக்ஷஸர்களிடமிருந்து எனக்குப் பயமில்லை. தர்மத்தைக்கருதி யுத்தஞ் செய்யும் எனது சரீரத்தில் இரண்டுவிரல் அளவு ஆயுதங்களால் அடிபடாத இடமும் இல்லை; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே. என் ராஜ்யத்திலுள்ள ஜனங்கள் பசுக்களுக்கும் யாகங்களுக்கும் பிராம்மணர்களுக்கும் எப்பொழுதும் க்ஷேமத்தைவேண்டிக்கொண்டிருக்கிறார்கள்; ஆகையால், நீ என்னிடம் ப்ரவேசியாதே' என்றுசொல்ல, ராக்ஷஸன் சொல்லத்தொடங்கினன்.

'ஸ்திரீகளின் வ்யபிசாரத்தாலும் அரசர்களின் அநீதியாலும் பிராம்மணர்களின் கெட்ட செய்கையாலும் பிரஜைகளுக்குப் பயமுண்டாகிறது. அப்படிப்பட்ட தேசத்தில் மழையில்லாமையும் கொல்லத்தக்க கொடியநோயும் எப்பொழுதும் பசியால் பயங்களும் குரூரமான சண்டையும் எப்பொழுதும் இருக்கும். எந்தத்தேசத்தில் பிராம்மணர்கள் மிக்க அடக்கமுள்ளவர்களாயிருக்கிறார்களோ அந்தத் தேசத்தில் யக்ஷர், ராக்ஷஸர், பிசாசர், அஸுரர் ஆகிய இவர்களிடமிருந்து பிரஜைகளுக்குச் சிறிதும் பயமுண்டாகிறதில்லை. ஸ்திரீகள் பதிவ்ரதைகளாகவும் பிராம்மணர்முதலிய நான்குவர்ணத்தினரும் தம்தம் தர்மத்திலிருப்பவர்களாகவுமிருக்கும் தேசத்தில் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் ஸித்தர்களும் பன்னகர்களும் ஸர்ப்பங்களும் மனிதரைக்கொல்ல விரும்பமாட்டார்கள். மழையில்லாத பயமும் துர்ப்பிக்ஷமும் ஜனங்களுக்கு மதிமயக்கமும் அந்தத்தேசத்தில் வாரா. தர்மத்தில் சிறந்தவனை அரசனுள்ளதேசத்தில் அவமதிப்பும் தெய்வம் மானுஷம் என்ற இரண்டுவித உத்பாதங்களும் காணப்படா. ஓ! கேகயதேசத்திற்கரசனே! எந்தச் சமயத்திலும் நீ தர்மம்ஒன்றையே கவனித்துவரும் காரணத்தால் க்ஷேமமமாக உன்வீடுபோய்ச்சேர்; நானும் போகிறேன். ஓ! கேகய! பிரஜைகளையும் விசேஷமாகப் பசுக்களையும் பிராம்மணர்களையும் பாதுகாத்து வரும் அரசருக்கு ராக்ஷஸர்களிடமிருந்து பயமில்லை. அவர்களுக்குப் பாதகமேது? எவர்களுக்குப்

பிராம்மணர்கள் முன்செல்லுகிறவர்களும் பெரியபலமுமாயிருக்கிறார்களோ, எவர்களால் பிராம்மணர்கள் நன்கு ரக்ஷிக்கப்படுகிறார்களோ அவ்வித அரசர்கள் தேவலோகத்தை ஜயிக்கிறார்கள்' என்றான். ஆகையால், ஓ! அரசனே! பிராம்மணர்களை ரக்ஷித்துவரவேண்டும்; ரக்ஷிக்கப்படும் அந்தப்பிராம்மணர்கள் அரசனை ரக்ஷிப்பார்கள். அரசர்களுக்கு இந்தப் பிராம்மணர்களின் அனுக்ரஹமுண்டாகும். ஆகையால், ப்ரஜைகளை அனுக்ரஹிக்கவேண்டி மிக்கமுயற்சியுடன் கெட்ட கர்மத்திலிருக்கும் பிராம்மணர்களையும் அரசன் அடக்கி அவர்களிஷ்டத்தைக்கொடுத்து ரக்ஷிக்கவேண்டும். இந்தவிதிப்படி பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள ஜனங்களிடம் இருந்துவரும் அரசன் இவ்வுலகங்களில் க்ஷேமங்களை அனுபவித்தபின் இந்திரனுக்குரிய லோகத்தைப்பெறுவான்" என்றுசொன்னார்.

எழுபத்தெட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பிராம்மணர்கள் ஆபத்துக்காலத்தில் அனுஷ்டிக்கத்தக்க தர்மங்களைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! ஆபத்துள்ளஸமயங்களில் அந்தணன் ராஜதர்மத்தைமேற்கொண்டு ஜீவக்கலாமென்று உபதேசிக்கப்பட்டது. மிகவும் கஷ்டமானஸமயத்தில் அந்தணன் வைஶ்யர்களின் தர்மப்படி ஜீவிப்பது நீதியா, அன்றுவென்பதை உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்டார். பீஷ்மர், "க்ஷத்திரியர்களின் தர்மப்படி ஜீவிக்கமுடியாமல் மிக்க துன்பத்தால் பிழைப்பில்லாத ஸமயத்தில் பயிர்செய்தல் பசுக்காத்தல் என்னும் வைஶ்யதர்மத்தாலும் பிராம்மணன் ஜீவனஞ்செய்யலாம்" என்று சொன்னார்.

யுதிஷ்டிரர், "ஓ! பரதஶ்ரேஷ்டரே! வைஶ்யதர்மப்படி ஜீவனஞ்செய்யும் பிராம்மணன் விற்கத்தக்க வஸ்துக்களில் எவைகளைவிற்பதால் ஸ்வர்க்கத்தை அடையத்தகாதவனுகிறதில்லை?" என்று கேட்டார். பீஷ்மர், "ஓ! யுதிஷ்டிர! எப்படிப்பட்ட அவஸ்தைகளிலும் கள், உப்பு, எள், குதிரை, பசு, காளை, தேன், மாம்ஸம், பக்குவமான அன்னம் இவைகளைப் பிராம்மணன் விற்காமல் விலக்கவேண்டும். அப்பா! பிராம்மணன் இவைகளைவிற்பதால் நரகமடைவான். அக்னி, வருணன், ஸூர்யன், பூமி இவர்களை முறையே தேவதைகளாகக்கொண்ட ஆடு, செம்மறியாடு, குதிரை, பக்குவமான அன்னம் இவைகளையும் பசுவையும் யாகத்தையும் ஸோமமென்னுங்கொடியையும் எவ்

விதக்கஷ்டத்திலும் விற்றல் கூடாது. பக்குவமான அன்னத்தைக் கொடுத்து அதற்கு ஈடாக அரிசியைமாற்றிக்கொள்வது நீதியன்றென்று ஸாதுக்கள் சொல்லுகிறார்கள். ஓ! பாரத! 'போஜனத்திற்கு வேண்டிப் பக்குவமான அன்னத்தை நாங்கள் புஜிக்கிறோம். இந்த அரிசியை நீங்கள் பாகஞ் செய்துகொள்ளுங்கள்' என்று ஒருவருக்கொருவர் ஸம்மதஞ்செய்துகொண்டு அரிசிக்கு ஈடாகப் பக்குவான்னத்தை மாற்றிக்கொள்வதில் சற்றும் அதர்மமில்லை. ஓ! யுதிஷ்டிர! இவ்விஷயத்தில் உலகநடையில் பிரவிருத்தித்த பெரியோர்களின் ஸநாதனமான தர்மத்தை உபதேசிக்கிறேன். அதனை நீ தெரிந்துகொள். 'நான் இதை உனக்குக்கொடுக்கிறேன்; நீ இதை எனக்குக்கொடு' என்று பலாத்காரமின்றிப் பிரீதியுடன் மாற்றிக்கொள்வது யுக்தமான தர்மந்தான். இப்படியே ரிஷிகளுக்கும் மற்றவர்களுக்கும் புராதன வ்யவகாரங்கள் நடந்துவருகின்றன. இது நல்லது; ஸம்சயமில்லை" என்று சொன்னார்.

யுதிஷ்டிரர், "ஓ! தந்தையே! தம்தர்மம்விட்டு அகன்ற பிரஜைகள்யாவரும் எந்தக்காலத்தில் ஆயுதமெடுக்கவும் அரசன் பலம் குறையவும் நேருகிறதோ அந்தக்காலத்தில் அரசன் எங்ஙனம் உலகத்தைக்காக்க வல்லவனுவான்? அந்தஸமயத்தில் எதுதர்மம்? எது முக்கியமானபலம்? பிதாமஹரே! இவ்விஷயத்தில் எனக்குள்ளஸந்தேஹத்தை விலக்கி விரிவாக உபதேசிக்கவேண்டும்" என்று கேட்டார். பீஷ்மர், "பிராம்மணர்முதலிய ஜாதிகள் தானம், தவம், யாகம், கொல்லாமை, அடக்கம் இவைகளால் தங்களுக்கு க்ஷேமத்தை விரும்பவேண்டும். அவர்களுள் வேதபலம்பெற்ற பிராம்மணர்கள் பலவிதமான முயற்சிகளால் தேவர்கள் இந்திரனுக்குச்செய்வதுபோல அரசனுக்குப் பலத்தை விருத்திசெய்யவேண்டும். குறைவடையும் அரசனுக்குப் பிராம்மணனே பலத்தைக்கொடுக்க முக்கியமானகாரணமென்று சொல்லுகிறார்கள். ஆகையால், அறிவுள்ள அரசன் பிராம்மணர்களின் பலமொன்றிலேயே முயற்சிசெய்யவேண்டும். ஜயம்பெறத்தக்க அரசன் ராஜ்யத்தில் க்ஷேமத்தைச் செய்ய முயலுவானுகில் மற்ற ஜாதியார்களும் தர்மப்படி தமக்குரியகர்மங்களில் பிரவேசிப்பார்கள். ஓ! யுதிஷ்டிர! திருடர்களால் மரியாதையின்றி எல்லாஜாதிகளும் வரம்புகடந்து ஒன்றுசேரும்படி ஸாங்கர்யம் செய்யப்படும்போது எல்லாஜாதிகளும் ஆயுதமெடுப்பது குற்றமாகாது" என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், "ஒருஸமயம், க்ஷத்திரியன் பிராம்மணர்களிடம் எல்லாவிதத்திலும் மிகவும் துஷ்டனுயிருப்பானுயின் அப்பொழுது பிராம்

மணர்களை ரக்ஷிப்பவன் யார்? எது தர்மம்? எது முக்கியமான காரணம்?" என்றுகேட்டார். பீஷ்மர், "அந்தக்காலத்தில் பிராம்மணர்கள் தம்மைப் பகைக்கும் அரசர்களைத் தவத்தாலும் பிரம்மசர்யத்தாலும் ஆயுதத்தாலும் பலத்தாலும் கபடமாயும் கபடமில்லாமலும் அடக்கவேண்டும். நல்வழியில்லாதவனும் விசேஷமாகப் பிராம்மணர்களைப் பகைப்பவனுமான அரசனைப் பிராம்மணர்களை நன்றாக அடக்கவேண்டும். க்ஷத்திரிய ஜாதியானது பிராம்மண ஜாதியிடமிருந்து பிறப்படைந்தது. ஜலத்திலிருந்து அக்னியும் பிராம்மணனிடமிருந்து க்ஷத்திரியனும் கல்லிலிருந்து இரும்பும் உண்டாயின. அக்னி முதலிய இம்மூன்றுகளின் சக்தி எங்கும் செல்லத்தக்கதாயினும் தம்தம் காரணமான ஜலமுதலியவற்றில்சென்றால் நசித்துவிடும். கல்லைப்பிளக்கச்சென்ற இரும்பும் ஜலத்தைத்தஹிக்கச்சென்ற அக்னியும் பிராம்மண ஜாதியைப்பகைத்த க்ஷத்திரியஜாதியும் அப்பொழுதே நசித்துவிடும். ஓ! யுதிஷ்டிர! ஆகையால், பிறரால் ஜயிக்கத்தகாததும் மிக்க கொடுமையுள்ளதுமான க்ஷத்திரியர்களுடைய தேஜஸும் பலமும் பிராம்மணர்களிடம் நாசமடையும்" என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! பிராம்மணர்களின் வீர்யம் குறைவடைந்தும் க்ஷத்திரியர்களின் வீர்யம் பலமற்றும் மற்ற ஜாதிக்காரர்கள் யாவரும் பிராம்மணர்கள்விஷயத்தில் துஷ்டர்களாயுமிருக்கும்போது தம்முயிரைவிடத் துணிந்து யுத்தஞ்செய்து பிராம்மணர்களை ரக்ஷித்தவர்களுக்கு எந்த உலகங்கள் உண்டாகின்றன?" என்று கேட்டார். பீஷ்மர், "அக்காலத்தில் பெரிய மனமுள்ளவர்களும் துஷ்டர்களிடத்தில் கோபமுள்ளவர்களும் பிராம்மணர்களையும் தர்மத்தையும் தம்மையும் ரக்ஷித்தவர்களுமான ஜனங்கள் புண்ணிய லோகங்களை அடைகிறார்கள். பிராம்மணர்கள்நிமித்தமாக யாவரும் ஆயுதமெடுக்கலாமென்று கூறப்படுகிறது. பிராம்மணர்கள் நிமித்தம் யுத்தஞ்செய்யும் சூரர்களான மனிதர்கள் அத்தியயனம், யாகம், மிக உத்தமமான தவம், உபவாஸம், அக்னியாதான முதலிய புண்ணிய கர்மங்களைச்செய்யும் பெரியோர்களின் கதியைக்காட்டிலும் மிகச் சிறந்தகதியை அடைவார்கள். பிராம்மணன் கீழான மூன்றுஜாதிகளையும்பற்றி ஆயுதமெடுப்பதில் தோஷமில்லை. பிராம்மணர்களை ரக்ஷிக்கவேண்டிச் சரீரத்தைவிடுவதைக்காட்டிலும் மேலான தர்மம் ஒன்றுமில்லையென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். பிராம்மணத்வேஷிகளைக் கொல்லமுயன்று யுத்தத்தீயில் சரீரத்தை ஹோமம்செய்த பெரியோர்களுக்கு நமஸ்காரம். அவர்களுக்கு க்ஷேமமுண்டாகவேண்டும். அவர்களின் உலகம் நமக்கு ஸித்திக்கவேண்டும். அந்த

வீரர்களைப் பிரம்மலோகத்தை ஜயித்தவர்களென்றும் ஸ்வர்க்கத்தை அடையத்தக்கவர்களென்றும் மனு சொல்லியிருக்கிறார். பிராம்மணத்வேஷிகளைக் கொல்லச்சென்று யுத்தத்தில் ஆயுதத்தாலடிக்கப்பட்டவர்கள் பாபிகளாணலும் புண்யசாலிகளாணலும் அச்வமேத யாகஞ் செய்து அவபிருதஸ்நானஞ்செய்தவர்கள்போலப் பரிசுத்தராகிறார்கள். காலதேசங்களின்காரணத்தால் அதர்மம் தர்மமாகவும் தர்மம் அதர்மமாகவும் நேரும். காலமும் தேசமும் அவ்விதக் குணமுள்ளவைகள். உதங்கர் முதலிய ரிஷிகள் குரூரமான ஸர்ப்பயாக முதலிய கர்மங்களைச்செய்தும் உத்தமமான ஸ்வர்க்கலோகமடைந்தார்கள். க்ஷத்திரிய தர்மம்விட்டு விலகாத அரசர்களும், பாராஜ்யத்தின் ஹிம்ஸையென்னும் பாவத்தைச்செய்தும் உத்தமகதிஅடைகிறார்கள். பிராம்மணன் தன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டிய காலம், [1] திருடர்களால் பயமுள்ள காலம், [2] தன்பொருளனைத்துக்கும் அபாயம் நேரிடுங்காலம் இம்மூன்று காலங்களிலும் ஆயுதமெடுப்பது குற்றமாகாது" என்று சொன்னார்.

யுதிஷ்டிரர், "ராஜஸ்ரேஷ்டரே! பலமான திருட்டுப் பயமும் ஜாதிகளுக்குக்கலப்பும் உண்டாகும்பொழுதும் பிரஜைகளை ரக்ஷிக்கும்விஷயத்தில் எல்லா ஜாதிகளும் மிகவும் மூடமாயிருக்கும் பொழுதும் க்ஷத்திரியனல்லாத பலசாலியான பிராம்மணனுவது, வைசியனுவது, சூத்திரனுவது திருடர்களைஅடக்கித் தர்மப்படி தண்டஞ்செலுத்தி ப்ரஜைகளை ரக்ஷிப்பாணுகில் அவன் ராஜகாரியத்தைச் செய்யத்தக்கவனுவானு? ஆகானு? அவன் உலகங்களுக்கு ஸஜமானனுயிருக்கத்தக்கவனு? அல்லனு? க்ஷத்திரியனல்லாதவன் ஆயுதமெடுப்பது கூடாதா?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "கரைகடந்த ஆபத்தில் கரைபோலவும் ஸஹாயமில்லாத ஸமயத்தில் ஸஹாயமாகவும் உதவிபுரிந்த மனிதன் சூத்திரனுனலும் மற்ற எந்தச்சாதியானுனலும் அவன் எவ்விதத்திலும் பூஜிக்கத்தக்கவன். ராஜனே! திருடர்களால் பீடிக்கப்பட்டு நாதனின்றித் துன்பப்படும் ஜனங்கள் எவனை அடைந்து ஸுகமாக ஜீவிப்பார்களோ அந்த மனிதனையே அந்தஜனங்கள் முக்கியனென தம்பந்துவாகப்பாவித்துப் பிரியமாகப் பூஜிப்பார்கள். ஓ! கௌரவ! பரிதான இஷ்டத்தைச்செய்தவனன்றோ பூஜிக்கத்தக்கவனுகிறான். சுமைதூக்கத்தகாத காளையாலும் கறவாதபசுவாலும் மலடியான மனைவியாலும் ரக்ஷிக்கத்தகாத அரசனாலும் யாதுபயன்? மரத்தால்செய்த யானை, தோலால்செய்த மிருகம்,

---

1 ஜாதிக்குக் குறைநேருங்காலம் என்பது வேறுபாடம்.

2 'அடக்கக்கடினமானவனை அடக்குங்காலம்' என்பதுவேறுபாடம்

ஸாமர்த்தியமில்லாத மனிதன், வழியிலுள்ள களர்நிலம், வேதமோதாத பிராம்மணன், ரக்ஷியாத அரசன், மழைபெய்யாத மேகம் இவையெல்லாம் பிரயோஜனமற்றவைகளாகும். எப்பொழுதும் ஸாதுக்களை ரக்ஷிக்கவும் அஸாதுக்களை விலக்கவும் சக்திபெற்றவன் எவனே அவனே அரசனையிருக்கத் தக்கவன். அவனால் இவ்வுலகெல்லாம் ரக்ஷிக்கப்படும்" என்று சொன்னார்.

எழுபத்தோன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ரித்விக்குகளின் இலக்ஷணத்தை உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "பேசுகிறவர்களில் சிறந்த ராஜஶ்ரேஷ்டரான பிதாமஹரே! ரித்விக்குக்கள் எதற்காக [1] ஏற்பட்டார்கள்? அவர்கள் எவ்விதச்சீலமும் குணமுமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று கேட்டனர்.

பீஷ்மர், "ராஜனே! ரிக்ஸாமமுதலிய வேதங்களையும் அவற்றின் கருத்தை விளக்கும் மீமாம்ஸாசாஸ்திரத்தையும் நன்றாக அறிந்த பிராம்மணர்களான ரித்விக்குக்களுக்கு, அரசனுக்குரிய சாந்திக முதலிய கர்மங்களைப் பரிசுத்தமாக நிறைவேற்றுவது, மிக்க முயற்சியுடன் செய்யத்தக்க விருத்தியென்று விதிக்கப்படுகிறது. அவர்கள் எப்பொழுதும் ஒரேஎண்ணமும், தைரியமும், இனிமையாகப்பேசுதலும், ஒருவருக்கொருவர் நேசமும், சுற்றிலுமுள்ள கர்மங்களை ஸமமாகப் பார்க்கும் திறமையும், நல்லசீலமுமுள்ளவர்களாக இருக்கவேண்டும். குரூரமில்லாமை, ஸத்தியவசனம், அஹிம்ஸை, [2] அடக்கம், நேர்மை, அபிமானமும் துரோஹமுமில்லாமை, லஜ்ஜை, பொறுமை, இரண்டுவித இந்திரியங்களின் அடக்கம் [3] ஆகிய இந்தக் குணங்களும் பொருந்தியவனும் அறிவுள்ளவனும் உண்மையான தைர்யமுள்ளவனும் நல்லபழக்கமுள்ளவனும் பிராணிகளை ஹிம்ஸியாதவனும் விருப்பு வெறுப்பில்லாதவனும் கல்வி, ஒழுக்கம், குலம் இம்மூன்றிலும் பரிசுத்தியுள்ளவனும் ஞானத்தில் திருப்தியுள்ளவனுமான பிராம்மணன் பிரம்மாவென்னும் பெரிய ரித்விக்காயிருக்கத் தகுதியுள்ளவன். அப்பா! இவ்விதக்குணமுள்ள பெரியரித்விக்குக்கள் யாவரும் யோக்யதைக்குத் தக்கபடி பூஜிக்கப்படத்தக்கவர்கள்" என்று சொன்னர்.

---

1 வேறுபாடம். 2 இரட்டித்து வந்திருக்கிறது.

3 இங்கு அதிகபாடமாயுள்ள அரைஸ்லோகம் விடப்பட்டது.

யுதிஷ்டிரர், "தக்ஷிணைகளைக்கூறும் வேதவசனம், 'இதைக் கொடுக்கவேண்டும், இதைக் கொடுக்கவேண்டும்' என (சிறிய காரணத்திலும் பொருளனைத்தையும் கொடுக்க வேண்டுமென) விதிக்கிறது. இவ்வசனம் ஒருவிஷயத்திலும் உறுதிப்படவில்லை. மனிதர்களின் சக்தியைச் சிறிதும் கவனியாமல் வெளிவந்த இவ்வேதவசனத்தின் கட்டளையானது மிக்க கடுமையாக இருக்கிறது. ஆகையால், இவ்வசனம் முக்கியமான கருத்துள்ளதன்று. விதிக்கப்பட்ட தக்ஷிணையைக் கொடுக்கச் சக்தியற்றவன் தனக்குள்ள பொருளைக் கொடுக்கவேண்டுமென்று கருத்துள்ளது ஆபத்காலத்துக்குரிய விதியாகவேண்டும். இங்ஙனம் இல்லாவிட்டால், ஸ்ரத்தை ஒன்றையே முக்கிய காரணமாகக் கொண்டு செய்யப்படும் யாகமும் சாஸ்திரீயமென்றுகூறும் வேதவசனப்படி, பொருளற்றவன் செய்த யாகம், தக்ஷிணைக்குறைவால்விதிக்குவிரோதமாய்ப் பயன்படாததாகும். அவ்வித யாகத்திற்குக் காரணமான ஸ்ரத்தையும் பயனற்றதாகுமே?" என்று கேட்டார். பீஷ்மர், "வேதத்தை அவமதிப்பதாலும் கபடத்தாலும் மாயையாலும் ஒருவன் பெருமையை அடையமுடியாது. உனக்கு இவ்விதப்புத்தி வேண்டாம். அப்பா! யாகத்திற்கு அங்கமான தக்ஷிணையென்பது மந்திரங்களை நல்லபயனுள்ளனவாகச் செய்யும். தக்ஷிணையில்லாத மந்திரங்கள் எவ்விதத்திலும் சற்றும் தாரகமாகமாட்டா. பொருளில்லாத மனிதனுக்குப் பூர்ணபாத்திரமே குறைவின்றிப் போதுமான (ஆயிரத்திருநூறு பசுக்களுக்கு ஸமமான) தக்ஷிணையாகும். அப்பா! சக்திக்குத் தக்கபடி பிராம்மணர் முதலிய மூன்று ஜாதிகளும் அவப்யம் யாகஞ்செய்யக் கடமைப்பட்டவர்கள். அந்த ஸோமவிக்கிரயமென்னும் இகழ்ச்சியான காரியத்தைச் செய்தாவது யாகம் செய்யவேண்டும். ஸோமம் பிராம்மணர்களுக்கு அரசென்று வேதம் சொல்லுகிறது. அதை ஜீவனத்திற்காகவன்றி விலைசெய்து தர்மப்படிகிடைத்தபொருளால் செய்யப்படும் யாகமும் தர்மமேயாகுமென்று தர்மமறிந்த பெரியோர்கள் உபதேசிக்கிறார்கள். புருஷனும், யாகமும், ஸோமலதையும் நீதிதவறாமல் உபயோகப்பட்டால் பயன்படும். அவ்விதமின்றிக் கபடமுதலிய குற்றமுள்ள புருஷன் தன்சரீரத்தின் ஜீவனத்தைக்கருதி அக்னியிற் செய்தயாகங்கள், அந்தப்பிராம்மணன் மஹாத்மாவாயிருந்தாலும் அவனுக்கும் பிறருக்கும் நற்பயனைக் கொடுக்கத்தக்கவையல்லவென்பது வேதத்திலுல்கூறப்படுகிறது. ஓ! அறிவுள்ளவனே! யாகத்தைக்காட்டிலும் தவம்மிகச் சிறந்ததென்று வேதம் முக்கியமாகக் கூறுகிறது. அவ்விதமான தவத்தை உனக்கு உபதேசிக்கிறேன்; கேள். சரீரத்தைவற்றச்செய்வது தவமன்று;

அஹிம்ஸை, ஸத்யவசனம், கொடுமையில்லாமை, அடக்கம், தயை, இவைகளே தவமென்று அறிஞர்கள் அறிவிக்கிறார்கள். வேதங்கள் பிரமாணமில்லையென்று பேசுவதும் சாஸ்திரவிதிகளை மீறுவதும் எவ்விஷயத்திலும் வ்யவஸ்தையின்றியிருப்பதும் ஆத்மநாசத்திற்குக் காரணமாகும். ஓ! பார்த்த! தசஹோத்ரு என்னும் மந்திரங்களின் விதி எங்ஙனமென்பதைக் கவனித்துப்பார். 'ஞானம் ஸ்ருக்கு, புத்தி நெய்' எனக்கூறும் இம்மந்திரங்கள் மிகவுத்தமமான ஆத்ம ஞானத்தைப் பரிசுத்தமென்று கூறுகின்றன. [1] ஞானத்தைப்பற்றிய விஷயம் இவ்வளவே. கபடம்யாவும் மிருத்யுவுக்கு இடமாகும். உண்மையென்பது ப்ரம்மத்தின்பதமாகும். அதிகச்சொல்லால் என்ன பயன்?" என்றுசொன்னர்.

எண்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், மித்திரன் சத்ரு ஜாதிமுதலியோரின் லக்ஷணத்தையும் அவர்களிடம் அரசன் நடந்துகொள்ளவேண்டியதையும் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! மனிதன் ஸஹாயமின்றி ஒருவனுக மிகச்சிறிதான காரியத்தையும்செய்வது அரிதாயிருக்கிறது. ராஜ்யத்தை ஸஹாயமின்றி எவ்விதம் நடத்தமுடியும்? ஆகையால், அரசனுக்குவேண்டிய ஸஹாயமானமனிதன் எவ்விதச்சீலமும் ஆசாரமுமுள்ளவனுக இருக்கவேண்டும்? அரசன் எப்படிப்பட்ட மனிதனிடம் நம்பிக்கைவைக்கலாம்? எவன் நம்பத்தகாதவன்?" என்றுகேட்டார்.

பீஷ்மர், "அரசனே! அரசர்களுக்கு [2] ஸஹார்த்தன், [3] பஜமானன், [4] ஸஹஜன், [5] கிருத்திரிமன்என்று நாலுவிதமித்திரர்களுண்டு. ஒருவரிடமும் பக்ஷபாதமில்லாத தர்மபுத்தியுள்ள புருஷன் ஐந்தாவது மித்திரனுவான்; அவன் யாரிடமும் கபடமில்லாமல் தர்மமுள்ள பக்ஷத்தை நாடிநிற்பான்; அல்லது, ஒருவிதப்பற்றுமின்றி உதாஸீனனுயிருப்பான். (தருமப்படி நடந்துவரும் அரசன் அவனை அடுக்கலாம்.) ஆனால், அவனுக்குச் சம்மதமில்லாத பொருள்விஷயத்தை அவனிடம் வெளியிடாமலிருக்கவேண்டும். தர்மாதர்மம் இரண்டை

---

1 இங்கு அதிகபாடமான அரை சுலோகம் விடப்பட்டது.

2 'இந்தக்காரியத்தைச்செய்து இதன்பயனை இருவரும் அடைவோம்' என்று பேசிக்கொண்டு சேர்க்கப்பட்டவன்.

3 தகப்பன்பாட்டன் பரம்பரையாய் உபகாரம்செய்பவன்.

4 பந்துவாயிருப்பவன். 5 உபகாரம்செய்து ஏற்படுத்தப்பட்டவன்.

யும் கைக்கொண்டு ஜயம்பெறவிரும்புவது அரசர்களின் வழக்கம். ஓ! பாரத! மித்திரனென்றும் சத்ருவென்றும் ஒரு ஸ்வபாவமில்லை. மனிதன் உபகாரத்தால் மித்திரனாகவும் அபகாரத்தால் சத்துருவாகவுமிருப்பது வழக்கம். ஒரு மனிதனின் மரணத்தை வேண்டுகின்ற மற்றொரு மனிதனே சிறிதுகாலஞ்சென்றபின் திரும்பவும் அவன் பிழைத்திருப்பதை வேண்டுகிறான். கீழ்க்கூறிய நாலுவித மித்திரர்களுள் இடையிற்கூறிய பஜமானன் ஸஹஜன் என்கிற இரண்டு பேர்கள் உத்தமர்கள். மற்ற ஸஹார்த்தன் கிருத்திரிமன் என்கிற இரண்டுபேர்களும் எப்போதும் சங்கிக்கத்தக்கவர்கள். தான் நேரில் நடத்தவேண்டிய காரியத்தைப்பற்றிக் கீழ்க்கூறிய ஐந்துபேர்களும் எப்பொழுதும் சங்கிக்கத்தக்கவர்களே. மித்திரர்களை ரக்ஷிக்கும் விஷயத்தில் அரசன் எப்பொழுதும் அஜாக்ரதையாக இருக்கக் கூடாது. இதில் அஜாக்ரதையாகவிருக்கும் அரசனை ஜனங்கள் அவமதிப்பார்கள். அஸாதுவானவன் ஸாதுவாகவும் ஸாது அஸாதுவாகவும் ஆகலாம். சத்துருவும் மித்திரனுவான். மித்திரனும் மிக்க குற்றமுள்ளவனுவான். மனிதனின் புத்தி நிலையற்றதாகையால் எந்தச் சமயத்திலும் அவனை நம்புவது கூடாது. ஆகையால், முக்கியமான காரியத்தை அரசனே நேரிலேயே செய்யவேண்டும். ஒரே உறுதியான நம்பிக்கை முழுமையும் அறம்பொருள்களை நாசமாக்கக் காரணமாகும். எல்லாவிடத்திலும் நம்பிக்கையில்லாமையும் மிருத்யுவைவிட மேலானதாகும். நம்பிக்கையென்பது அகால மிருத்யுவாகவும் அவநம்பிக்கையென்பது ஆபத்தாகவும் முடியும். அரசன் எந்த மனிதனிடம் நம்பிக்கைபாராட்டுகிறானே அந்த மனிதனின் ஸ்நேகமுள்ளவரையில் ஜீவிப்பான். ஆகையால், அப்பா! சில மனிதர்களிடம் நம்பிக்கை சங்கை இரண்டும் இருக்கவேண்டும். இது ராஜநீதிக்குத்தக்க வழியும் ஸநாதனமான ஸம்பத்துமாகும். அரசனுக்கு அபாயம்நேர்ந்தால் தனக்கு த்ரவிய லாபம் உண்டென்று எண்ணும் மனிதனிடம் எப்பொழுதும் சங்கை இருக்கவேண்டும். அறிந்தவர்கள் அவனைச் சத்துருவென்று அறிவிக்கிறார்கள். எந்த மனிதனுடைய கழனியின்வழியாய் மற்றொருவன் கழனிக்குத் தண்ணீர்செல்லுகிறதோ அந்த மனிதனுடைய விருப்பமின்றி அங்குள்ள கரைகள் உடைந்துபோகமாட்டா. அவ்விதமே, அதிக ஜலத்தில் பயந்த அம்மனிதன் அந்தக்கரையை உடைக்கவிரும்புவான். இவ்வுலகநடைபோன்ற லக்ஷணமுள்ளவனும் சத்துருக்களின் ப்ரவேசத்திற்குவழியான ராஜ்யத்தின்எல்லையைக் காப்பவனுமானமனிதனிடம்

எப்பொழுதும் சங்கை இருக்கவேண்டும். அறிஞர்கள் அவனைச் சத்துருவென்று அறிவிக்கிறார்கள். அரசனதுபெருமையில் அஸூயையில்லாமலும் அவனதுகுறைவில் மிக்கதுயரத்துடனும் இருப்பது உத்தமனை மித்திரனுடையலக்ஷணமென்று சொல்லப்படுகிறது. அரசனுக்குக் குறைவுவந்தால் தனக்கு மிகவும்குறைவுநேருமென்று எண்ணமுள்ள மித்திரனிடம் தந்தையிடம்போல அரசன் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். சக்தியுள்ள அந்தமனிதனை அரசன்பலவிதத்தாலும் பெருமையுள்ளவனாகச் செய்யவேண்டும். தர்மகாரியங்களில் எப்பொழுதும் குற்றம்வாராவண்ணம் பாதுகாப்பவனும் அரசனுக்கு நேரும்துன்பத்திலிருந்து பயந்தவனுமானமனிதனையும் உத்தமமான மித்திரலக்ஷணமுள்ளவனென்று அறியவேண்டும். எவர்கள் எவனுடையநாசத்தைவிரும்புகிறார்களோ அவர்கள் அவனுக்குச்சத்துருக்களென்று சொல்லப்படுகிறார்கள். அரசனுக்குக் குற்றம்நேரும் விஷயத்தில் எப்பொழுதும் பயமுள்ளவனும் அவனுக்குண்டாகும் லாபத்தில் அஸூயையில்லாதவனுமான மித்திரன் தனக்குச்சமமென்று சொல்லப்படுகிறான். நல்லஆகிருதியும் அழகும் குலமுமுள்ளவனும் பொறுமையுள்ளவனும் அஸூயையில்லாதவனும் நற்குலத்தில்பிறந்தவனும் நல்லஸ்வபாவம்நிரம்பினவனுமான புருஷன் அரசனுக்குப்ரதானமந்திரியாயிருக்கத்தக்கவன். ரித்விக்காலும் குருவாலும் மித்திரனாலும் நல்லபுத்தியுள்ளவனும் ஞாபகசக்தியுள்ளவனும் ஸமர்த்தனும் ஸ்வபாவத்தில் கடுமையில்லாதவனும்தனக்குமரியாதை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சிறிதும் மனத்தில்வேற்றுமையில்லாதவனும் மிக்கமர்யாதையுள்ளவனுமானமனிதன் உன்வீட்டில் மிகவும் பூஜிக்கப்பட்ட அமாத்யனாயிருக்கவேண்டும். அறம்பொருளிரண்டிற்கும் 1 ப்ரகிருதியாயிருக்கும் மித்திரனை மிகஉத்தமனாக அறியவேண்டும். பிதாவினிடத்தில்போல அவனிடத்தில் விசுவாஸமிருக்கவேண்டும். ஒருகாரியத்தில் இரண்டுஅல்லது மூன்று மனிதர்களை நியமிக்கக்கூடாது. அவ்விதம்நியமிக்கப்பட்ட மனிதர்கள்

1 பிரகிருதி முக்யமானகாரணம். இது பொருளுக்கும் தர்மத்திற்கும் இவ்விரண்டிற்குமென மூவகைப்படும்; இவைகளில் கிருஷி, வர்த்தகம், கோட்டை, கரை, யானைபிடிக்குமிடம், தங்கம் ரத்னமுதலியவை எடுக்கும் இடம், கப்பம்வாங்குதல், நாதனற்றவிடம் எனஎட்டும் பொருள்ஸம்பந்தமான ப்ரகிருதியாகும்; தர்மாதிகாரியென்னுமொருவர் தர்மப்ரகிருதியைச் சேர்ந்தவராவர்; கோட்டைத்தலைவன், சேனைத்தலைவன், அரசன், புரோஹிதன், வைத்தியன், சோதிடன் இவ்வாறுபேரும் அறம்பொருள்இரண்டிற்கும் பிரகிருதியாவர்.

ஒருவருக்கொருவரிடமுள்ளபொறுமையால் அக்காரியத்தில் எப்பொழுதும் நல்லசேர்க்கையுடன் இருக்கமாட்டார்கள். கீர்த்தியைப் பிரதானமாகக்கொண்டவனும் நீதியில்நிலைபெற்றவனும் ஸமர்த்தர்களானமனிதர்களைப் பகையாதவனும் கெட்டகாரியங்களைச்செய்யாதவனும் காமம், பயம், லோபம், கோபம்இக்காரணங்களால் தர்மத்தை விடாதவனும் ஸமர்த்தனும் வேண்டியஅளவுபேசுகிறவனும் நற்குலத்தில்பிறந்தவனும் நல்லசீலமுள்ளவனும் பொறுமையுள்ளவனும் தன்னைப்புகழாதவனும் சூரனும் யோக்கியனும் அறிவுள்ளவனும் கார்யகாரியங்களைப்பகுத்தறிவதில் ஸமர்த்தனுமாயிருப்பவன் உனக்குமுக்கியமந்திரியாயிருக்கவேண்டும். இத்தகைய குணம் பொருந்தியவர்களும் பூஜிக்கப்பட்டவர்களும் தனித்தனிவேலைகளில் நியமிக்கப்பட்டவர்களும் நல்லஸகாயமுள்ளவர்களும் வேலைகளை நடத்தத்திறமையுள்ளவர்களுமான அமாத்தியர்களை எல்லாக்காரியங்களிலும் அதிகாரிகளாயிருக்கச்செய்யவேண்டும். அர்த்தங்களுக்குத்தக்கவைகளான வரவுசெலவுமுதலியகாரியங்களில் தடையின்றி முழுமையும் அதிகாரம்கொடுக்கப்பட்ட இவ்வமாத்தியர்கள் பெரியகாரியங்களில் தக்கமுயற்சிசெய்து மிக்கபெருமைகளை உண்டுபண்ணுவார்கள். இவர்கள், எப்பொழுதும் ஒருவருக்கொருவர் மேலாவதிற் கருத்துள்ளவர்களும் ஒருவர் ஒருவரிடம் தம்தம் வேலைத்திறமையைச் சொல்லிக்கொள்ளுகிறவர்களுமாக வேலைகளைச் செய்துவருவார்கள். எப்பொழுதும் ஞாதியைக்கண்டால் மிருத்யுவைப்போல நினைத்துப் பயப்படவேண்டும். ஞாதியானவன் ஸாமந்தன்போல அரசனது பெருமையை எப்பொழுதும் பொறுக்கமாட்டான். ஓ! மஹாபாஹுவே! கபடமில்லாதவனும் கொடுமையில்லாதவனும் மிக்கதானம்செய்பவனும் அகாரியத்தில்லஜ்ஜையுள்ளவனும் உண்மைபேசுகிறவனுமான அரசனுடைய நாசத்தைப்பற்றி ஞாதியல்லாதமற்றவனும் ஸந்தோஷிக்கமாட்டான். ஒருஸமயம் ஞாதியல்லாதவர்களும் துன்பத்தைக்கொடுப்பார்கள், ஞாதிகளும் ஸுகத்தைக்கொடுப்பார்கள். ஞாதிஜனங்களற்றமனிதனை மற்றஜனங்களும் அவமதிப்பார்கள். பிறர்களால் அவமதிக்கப்பட்டமனிதனுக்குத் தன்ஞாதிதான் முக்யனை ஆஸ்ரயனுவான். தன்ஞாதிக்குநேர்ந்த அவமதிப்பை ஞாதியொருவன்தான் பொறுதவன். மற்றவன் அவ்விதம் இருக்கமாட்டான். பந்துக்களால் தன்ஞாதிக்குச்செய்யப்பட்டஅவமதிப்பையும் ஞாதி தனக்கென்றே நினைப்பான். ஆகையால், ஞாதிகளிடம் குணம்குற்றம்இரண்டும் காணப்படுகின்றன. ஞாதியில்லாதமனிதன் ஸந்தோஷத்தையும் பெருமையையும் அடையமாட்டான்.

ஞாதிவகுப்பில் நன்மைதீமையிரண்டும் காணப்படுகின்றன. ஞாதிகளை வாக்கிலும் செய்கையாலும் எப்பொழுதும் கௌரவமாகப் பூஜிக்கவேண்டும். இவர்களுக்குப் பிரியத்தைச்செய்வதன்றி அப்பிரியத்தைச் சிறிதும் செய்யக்கூடாது. அவர்களிடம் உள்ளத்தில் நம்பிக்கையில்லாதிருந்தாலும் எப்பொழுதும் நம்பிக்கையுள்ளவன் போல இருக்கவேண்டும். குணமோ தோஷமோ உறுதியாக ஒன்றை அவர்களிடம் தீர்மானிக்கமுடியாது. இவ்விதம் அஜாக்ரதையின்றி நடந்துவரும் மனிதனிடம் பகைவர்களும் நேசமுள்ள மித்திரராவார்கள். இவ்விதம் சத்துரு, மித்திரன், உதாஸீனன், ஞாதி, பந்துக்கள் இவர்களிடம் எப்பொழுதும் நடந்துவரும்மனிதன் நெடுங்காலம் கல்லகீர்த்திபெற்றிருப்பான்" என்று சொன்னர்.

எண்பத்தோராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் ஞாதிவிஷயமாகக் கிருஷ்ணனுக்கும் நாரதருக்கும் நடந்தஸம்பாஷணத்தைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஒருவருக்கொருவர் பொறுமையுள்ள ஞாதிகள், பந்துக்கள், மித்திரர்கள், சத்துருக்கள் இவர்களைத் தன்வசமாக்கிக் கொள்வது இங்ஙனம் கடினமாயிருப்பதால் அவர்கள்மனம் வசப்பட்டிருக்கத் தக்கவழி என்ன?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் தேவரிஷியான நாரதருக்கும் வாஸுதேவருக்கும் நடந்தஸம்பாஷணையான இப்பழைய இதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள். வாஸுதேவர், 'ஓ! நாரதரே! பண்டிதனல்லாதமித்திரனும் பண்டிதனுயிருந்தும் நல்லறிவில்லாத அமித்திரனும் மிக்க ரஹஸ்யமான விஷயத்தைத்தெரிந்துக்கொள்ளத் தக்கவரல்லர். ஆகையால், தேவலோகவாஸியான நாரதரே! உமதுபூர்ணமான அறிவையும் நேசத்தையும் உறுதியாகத் தெரிந்துகொண்டு சிலவிஷயத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் அரசனென்னும்பெயருள்ளவனுகி ஞாதிகளுக்கு அடிமைத்தொழிலைச் செய்துவருகிறேன்; புஜிக்கத்தக்கவைகளில் பாதியைமட்டும் புஜிக்கிறேன்; மற்றொருபாதியை ஞாதிகளுக்கு அளிக்கிறேன்; அவர்கள் வாக்கிலிருந்து வெளியாகும் கடுஞ்சொற்களையும் பொறுக்கிறேன். அக்நியைவிரும்பியவன் அரணி என்னும் கட்டையைக் கடைவதுபோல அக்கடுஞ்சொல் என்மனத்

தைக் கடைகிறது. ஓ! தேவரிஷியே! அவர்கள் வாக்கிறமசொல்லப் பட்ட கடுஞ்சொல் எப்பொழுதும் என்னை எரிக்கிறது. நாரதரே! ஸங் கர்ஷணன் பலத்தாலும், கதன் அழகாலும், ப்ரத்யும்னன் ரூபத்தா லும் எப்பொழுதும் மதமடைந்திருக்கிறார்கள். எனக்கு ஸஹாயம் உள்ளவன் ஒருவனுமில்லை. நாரதரே! மற்றவர்களான அந்தகர்களும் வ்ருஷ்ணிகளும், மிகப்பெருமையுள்ளவர்களும் பலசாலிகளும் அருகிற் செல்ல முடியாதவர்களும் விடாமுயற்சியுள்ளவர்களுமாக இருக்கிறார் கள். அவர்களின் சேர்க்கையுள்ள பக்ஷம்முழுமையும் பயன்படுவ தல்லாமல் அவர்கள் சேர்க்கையில்லாதவகுப்பு நசிக்கவேவேண்டும். 1 ஆஹுகன் அக்ரூரர் இவ்விருவர்களாலும் (தம்மிடம் அதிகநேச மில்லையென்று பொறுமையால்) விலக்கப்பட்டநான் இவ்விருவர்களில் ஒருவரையும் எப்பொழுதும் அடுக்க முடியாதவனையிருக்கிறேன். இவ்விருவர்களுடன் சேருவதும் மிக்கதுன்பமாகவிருக்கிறது. அவர் களை விலக்குவதும் அதைக்காட்டிலும் துன்பமாகவிருக்கிறது. ஓ! மஹரிஷியே! ஒருவரோடொருவர் சூதாடுகிற இரண்டுபுத்திரர்களின் தாய்போல நான் அவர்களில் ஒருவருக்கு வெற்றியையும் மற்றொரு வருக்குத் தோல்வியையும் விரும்பாதவனையிருக்கிறேன். ஓ! நாரத ரே! இவ்விருவர்களையும் கவனித்து இவ்விதம் துன்பப்படும் என் பொருட்டு எனக்கும் ஞாதிகளுக்கும் க்ஷேமமாயிருக்கத்தக்க வழியை நீர் கூறவேண்டும்' என்று கேட்டனர்.

நாரதர், 'ஓ! விருஷ்ணிகுலத்திலுதித்த கிருஷ்ணபகவானே! மனிதனுக்கு வெளியிலுண்டானதென்றும் உள்ளிலுண்டானதென் றும் இரண்டுவிதமான துன்பங்கள்உண்டு. இவைகளுள், ஞாதிகளால் செய்யப்படும் துன்பம் உள்ளிலுண்டானதென்றும் பிறராற்செய்யப் படும்துன்பம் வெளியிலுண்டானதென்றும் சொல்லப்படும். இவைக ளில் அக்ரூரர் போஜன் இவர்களிடமிருந்துண்டானதும் ஞாதிகளின் காரியத்தாலுண்டானதும் மிகக்கொடியதுமான உள்ளிலுள்ள துன்பம் உமக்கு உண்டாயிருக்கிறது. ஸங்கர்ஷணர்முதலியவர்கள்யாவரும் அக் ரூரரின் குலத்திலுதித்தவர்கள். இவர்கள் பொருளின்காரணத்தா லும் காமத்தாலும் குற்றமுள்ள [2] வசனத்தாலும் இத்துன்பத்தை உண்டுபண்ணுகிறார்கள். நீர் ஸம்பாதித்தராஜ்யத்தை ஆஹுகனிடம் கொடுத்துவிட்டீர். ஓ! [3] ஸஹாயமுள்ளவரே! இப்பொழுது, ஞாதி யென்னுங்காரணத்தால் வேரூன்றியதும் உம்மால் கொடுக்கப்பட்டது மான இந்தராஜ்யமானது கக்கப்பட்ட அன்னத்தைப்போலத் திரும்ப

1, 2, 3. வேறுபாடம்.

வும் உம்மால் எடுக்கத்தக்கதன்று. ஓ! கிருஷ்ணபகவானே! ஞாதிகளுக்கு வேற்றுமையுண்டாகுமென்ற விசேஷமான பயமிருந்தால், எவ்விதத்திலும் பப்ரு உக்ரஸேனன் இவர்களிடமிருந்தும் நீர் ராஜ்யத்தை அடையமுடியாது. மிக்ககடினமான காரியத்தைச்செய்து மிக்கமுயற்சியால் அதனைஅடைய முடலவேண்டும். அவ்விதம்செய்தாலும் திரும்பவும் பெருங்குறைவும் பொருளழிவும் விநாசமும் ஸம்பவிக்கும். ஆகையால், அவர்களனைவர்களின் கெட்டஎண்ணங்களையும் விலக்கி ஸ்நேஹகுணத்தை உண்டுபண்ணி இரும்பினால் செய்யப்படாததும் மிருதுவும் உள்ளத்தைஅறுப்பதுமான ஆயுதத்தால் அவர்களின்நாவை அறுத்துவிடும்' என்று சொன்னார். ஸ்ரீகிருஷ்ணபகவான், 'முனிவரே! இவர்களின்குற்றத்தைவிலக்கிக் குணமுள்ளவர்களாகச்செய்து இவர்களின் நாவை அறுக்கத்தக்கதென்றுஉபதேசிக்கப்பட்டதும் இரும்பால்செய்யப்படாததும் மிருதுவுமானஆயுதத்தை நான் எப்படி அறிவேன்?' என்று கேட்டார். நாரதர், 'தமது சக்திக்குத்தக்கபடி அன்னமளிப்பதும், எப்போதும்பொறுமையும் நேர்மையும் மெதுவுமாயிருப்பதும், அவரவர்கள் யோக்கியதைக்குத் தக்கபடி மரியாதைசெய்வதும் இரும்பினால்செய்யப்படாத ஆயுதமாகும். கொடுமையாயும் இகழ்ச்சியாயுமுள்ள வசனங்களைப்பேசவிரும்பும் ஞாதிகளின்மனங்களையும் வாக்கையும் எண்ணத்தையும் நீர் நன்மொழியால் அடக்கவேண்டும். மஹாபுருஷனல்லாதவனும் நல்லபுத்தியில்லாதவனும் ஸஹாயமற்றவனுமான ஒருமனிதன் தக்க பெரியபாரத்தைஅடைந்து முயன்றும் தன்மார்பில் சுமக்கமுடியாது. மேடுபள்ளமில்லாதவழியில் எல்லாக்காளையும் பெருஞ்சுமையைச் சுமக்கும். செல்லக்கடினமான வழியில் பெருஞ்சுமையைப் பேர்பெற்ற நல்லகாளைஒன்றே வகிக்கும். ஓ! கேசவரே! நீர் கூட்டத்தில் பிரதானராயிருக்கிறீர். இக்கூட்டங் கலைந்துபோனால் பெருநாசமுண்டாகும். ஆகையால், இக்கூட்டம் உம்மைஅடைந்து துன்பமில்லாமலிருக்கும்படி நீர் செய்யவேண்டும். அறிவிற்சிறந்தவனிடம் ஞானமும் பொறுமையும் இந்திரியங்களின் அடக்கமும் பொருளைக் கொடுப்பதுமின்றி [1] வேறுவிதக்குணங்கள் நிலைபெறமாட்டா. ஓ! கிருஷ்ண! எப்போதும் தன்இனத்தார்களைக் காப்பது பொருளையும் கீர்த்தியையும் ஆயுளையும் பெருகச்செய்யும். ஆகையால், ஞாதிகளுக்கு யாதொருகுறைவுமில்லாமலிருக்கும்படி நீர் செய்யவேண்டும். ஓ! பிரபுவே! சந்தி விக்கிரகமுதலிய ஆறு குணங்களை ப்ரயோகிப்

---

1 'பலமனிதர்கள் அடங்கியிருக்கமாட்டார்கள்' என்பதுவேறுபாடம்.

பதும் யாத்திரைசெய்வதும் வருங்கால நிகழ்காலங்களிலுள்ளதும் உம்மால் அறியப்படாதது ஒன்றுமில்லை. ஓ! மஹாபாஹுவே! யாதவர்கள், குகுரர்கள், போஜர்கள், அந்தகர்கள், வ்ருஷ்ணிகள், உலகங்கள், உலகப்பதிகள் இவர்கள்யாவரும் உம்மைஅடுத்தவர்களாயிருக்கிறார்கள். ஓ! மாதவரே! ரிஷிகளும் உமது புத்தியை உபாஸிக்கிறார்கள். நீர் பிராணிகள்எல்லாவற்றிற்கும் குருவாயிருக்கிறீர். உத்தமமானகதியை நீர் அறிவீர். யதுக்களில்மிகச்சிறந்த உம்மை அடுத்து யாதவர்கள் ஸுகித்துவாழ்கிறார்கள்' என்றார்.

எண்பத்திரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அமாத்யபரீக்ஷையைப்பற்றிக் காலகவிருக்ஷீயோபாக்யானத்தைச் சொல்லியது.)

ஓ! பாரத! அமாத்தியர்களைப்பற்றிய முதன்மையான இவ்விதி உனக்கு உபதேசிக்கப்பட்டது. இதிலும் மேலான கோசத்தைப்பற்றிய இரண்டாவதுவிதியைக் கேள். கோசத்தைப்பெருக்கச்செய்யும் மனிதர்கள்யாவரையும் அரசன் பரிபாலிக்கவேண்டும். ஓ! யுதிஷ்டிர! அமாத்தியனால் அபஹரிக்கப்பட்டு நாசமடையும் கோசத்தைப்பற்றி அறிவிப்பவன் வேலைக்காரனை அல்லது வேறு மனிதனை அவன்வசனத்தை ரஹஸ்யத்தில் கேட்கவேண்டும். அவனை அமாத்யனிடமிருந்து பயமின்றி ரக்ஷிக்கவும்வேண்டும். ஓ! பாரத! அபஹரிக்கத்தொடங்கின அமாத்யர்கள் அவனுக்கு மிகப்பெருங்கேட்டைச் செய்வார்கள். அரசனின் கோசத்தை அழிக்கத்தொடங்கின மனிதர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து அக்கோசத்தை ரக்ஷிக்கமுயலும் மனிதனைப் பீடிப்பார்கள். அம்மனிதன் ரக்ஷிக்கப்படாவிடில் நாசமடைவான். இவ்விஷயத்திலும் காலகவிருக்ஷீயர் என்னும்முனிவர் கோஸலதேசத்தரசனுக்குக் கூறிய இப்பழைய இதிஹாஸத்தை எடுத்துச்சொல்லுகிறார்கள்.

காலகவ்ருக்ஷீயரென்னும் முனிவர் கோஸலதேசத்தரசத்தன்மையையடைந்த சோமதர்சியிடம் சென்றாரென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் ஒருகூட்டில்ஒருகாகத்தைஅடைத்துக்கொண்டு அதிகாரிகளின்குற்றங்களை அரசனுக்குஅறிவிக்கவேண்டி சோமதர்சியென்னும் அரசனுடையாஜ்யமெங்கும் அடிக்கடி ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார். 'காகத்தைச்சேர்ந்தகல்வியை நான் கற்றிருக்கிறேன்; நடந்தது

நடக்கின்றது நடப்பது யாவற்றையும் எனக்குக் காகங்கள் அறிவிக்கின்றன' என்று பல மனிதர்களுடன் சொல்லிக்கொண்டு அவ்விராஜ்யத்தில் சுற்றிலும் சென்ற அம்முனிவர் அவ்வரசனின் அதிகாரிகள் எல்லாருடைய [1] குற்றத்தையும் தெரிந்துகொண்டார். அந்த ராஜ்யத்தின் காரியமனைத்தையும் ஆங்காங்குள்ள அதிகாரிகளின் குற்றங்களையும்மிச்சமின்றி அறிந்தவரும் மிக்ககடுமையான நியமமுள்ளவருமான அம்முனிவர், 'நான் யாவற்றையும் அறிந்தவன்' என்று சொல்லிக்கொண்டு அரசனைக்காணவேண்டிக் காகத்துடன் சென்றார். அவர், கோஸல ராஜனிடஞ்சென்று, அங்கு ஆபரணங்களாலலங்கரிக்கப்பெற்று விளங்கும் அமாத்யனை நோக்கி, '(ஓ! அமாத்யனே!) காகத்தின் வசனப்படி, இன்னவிடத்தில் இன்னகாரியம் உன்னால் செய்யப்பட்டிருக்கிறது. இவனும் இவனும் அதனை அறிவார். அரசனுடைய பொக்கசம் உன்னால் அபகரிக்கப்பட்டது. இவ்விஷயத்தை இக்காகம் எனக்குச் சொல்லுகிறது. இதைச் சீக்கிரம் ஆலோசிக்கவேண்டும்' என்று சொன்னர். அப்போது அவ்விதமே கோசத்தை அபஹரித்த அங்குள்ள மற்றவர்களையும் பார்த்துச் சொன்னர். அம்முனிவரின் வசனம் சிறிதும் பொய்யாவதில்லை என்பது எவ்விடத்திலும் பிரஸித்தமாயிற்று. ஓ! குருஶ்ரேஷ்டனே! இப்படி அந்தரிஷியால் குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் யாவரும் ஒன்றுசேர்ந்து இரவில் நித்திரைசெய்த அவரைமீறி அக்காகத்தைக் கொன்றுவிட்டார்கள். பொழுதுவிடிந்த ஸமயத்தில் கூட்டில் அம்பிலைடிபட்டுக்கிடக்கும் காகத்தைக்கண்ட அந்த பிராம்மணர் க்ஷமதர்சியென்னும் அரசனிடம்சென்று, 'ஓ! ராஜனே! உயிருக்கும் பொருளுக்கும் பிரபுவும் ஈசுவரனுமான உன்னிடம் அபயத்தை வேண்டுகிறேன்; உன்னால் கட்டளையிடப்பெற்று உனக்கு ஹிதமான வசனத்தைச் சொல்லவிரும்புகிறேன். சூரனை உன்னிடத்திலும் மிகுந்த திரவியங்கள் அபஹரிக்கப்படுகின்றன. இவ்விஷயத்தில் மிகத்துயரமுற்றவனும் நண்பர்களின் காரியத்தில் பெருங்கவலையுள்ளவனுமான நான் உனக்கு ஹிதத்தைவேண்டி ஸாரதி நல்ல குதிரையை (மீறுவது) போல என்னை மீறியாவது உனக்குத் தெரிவிக்கவேண்டிய விருப்பத்தோடு நிறைந்த அன்புடன் இங்கு வந்தேன். அவ்விதம் வந்த மனிதனைப்பற்றி,எப்பொழுதும் தன்மேன்மையைவேண்டி ஐசுவரியத்தை விரும்பும் அறிவுள்ளவனும் மித்ரனுமான புருஷன் பொறுமையுடன் இருக்கவேண்டும்' என்ற வசனத்தைச்சொன்னர். அரசன், 'ஓ! பிராம்மணரே! நீங்கள் எதுவேண்டுமோ அதை என்னிடம் சொல்

---

1 ஸ்வாமித்ரோஹம்.

லலாம். எனக்கு ஹிதத்தை விரும்பிய நான் உங்கள் வசனத்தில் பொறுமையில்லாதிருக்கக் காரணமென்ன? இவ்விஷயத்தில் உங்களிஷ்டத்தைச் சொல்லலாமென்று நான் உங்களுக்கு உறுதிமொழி சொல்லுகிறேன். ஓ! பிராம்மணரே! நீங்கள் சொல்லும் சொற்படி நான் செய்கிறேன்' என்றுசொன்னேன். ரிஷி, '1 குணங்களையும் குற்றங்களையும் பயங்களையும் பயத்தைச்சொல்லுகிறவர்களையும் அறிந்த நான் உன்னுடைய ஒழுக்கத்தை உனக்கு அறிவிக்கவேண்டுமென்று அன்புடன் உன் அருகில் வந்தேன். அரசனை அடுப்பது கெட்டதென்று ஆசார்யர்களால் முன்னமே கூறப்பட்டிருக்கிறது. அரசனை அடுத்துப்பிழைப்பது வேறு கதியற்ற மனிதனுக்கும் மிகவும் இகழ்ச்சியான ஜீவனமாகும். அரசர்களுடன் சேர்ந்த மனிதனைக் கொடிய ஸர்ப்பங்களுடன் சேர்ந்தவனைவே பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அரசர்களுக்குப் பகைவர்களும் நண்பர்களும் பலராகையால் அவர்களனைவரிடமிருந்தும் அரசனை அடுத்தவர்களுக்குப் பயம் உண்டென்று சொல்லுகிறார்கள். அரசனை! அவ்விதமே ஒரு முகூர்த்த காலத்தில் அரசனிடமிருந்து இவனுக்குப் பயம் நேரும். அரசனிடம் அஜாக்ரதையின்றி ஒரே உறுதியாக இருக்க முடியாது. ஸம்பத்தை விரும்பிய மனிதன் அரசனிடம் எவ்விதத்திலும் அஜாக்ரதை செய்யக்கூடாது. அஜாக்ரதையால் மனிதனுடைய புத்தி கெடும். புத்திகெட்டுப்போனவனுக்கு உயிரும் இராது. நல்ல படிப்புள்ள மனிதன், உயிருக்கும் பொருளுக்கும் ஈசனும் பிரபுவுமான அரசனிடம், ஜ்வலிக்கும் அக்நியிடத்தும் கோபம் கொண்ட ஸர்ப்பத்தினிடத்தும் நெருங்குவதுபோல, நெருங்கவேண்டும். மனிதன் சொல், இருப்பு, செய்கை, அருகிற்செல்லுவது, சேஷ்டை, நினைப்பு, 2 போதல் இவைகளிலுள்ள குற்றங்களில் சங்கையுள்ளவனும் காமில்லையென்ற எண்ணத்துடனும் எப்போதும் முயற்சியுடனும் அரசனை உபசரித்துவரவேண்டும். ஓ! அரசனே! 'அரசன் அன்புள்ளவனுயிருந்தால் தெய்வம்போல எல்லா இஷ்டங்களையும் பூர்த்திசெய்வான். அவன் கோபம் கொண்டால் அக்நிபோல வேருடன் கொளுத்திவிடுவான்' என்று யமன் கூறினன். அவன் கூறியது உண்மையாகவே இருக்கிறது. அடிக்கடி உனக்குப் பெரும்பொருளை நான் உண்டாக்குவேன். என்னைப்போன்ற மந்திரி ஆபத்து ஸமயத்தில் அறிவைக்கொடுத்து உதவிபுரிவான். அரசனே!

---

1 வேறுபாடத்துக்கு, 'உன்னுடைய புண்யங்கள் பாபங்கள் வேலைக்காரரிடமிருந்து உனக்கு நேர்ந்தபயங்கள்' என்பது பொருள்.

2 இங்கு வேறுபாடங்கொள்ளப்பட்டது.

ஆனல்,என்னுடைய இக்காகமானது அந்தகனிடம் அனுப்பப்பட்டது. இவ்விஷயத்தில் நான் உன்னிடம் குற்றம்பாராட்டவில்லை; உனக்குப் பிரியராயிருக்கிறவர்களிடமும் குற்றம் பாராட்டவில்லை. உன் ஹிதர்களையும் அஹிதர்களையும் நீ அறிந்துகொள். பரோக்ஷமான புத்தியுள்ளவனுக நீ இருக்கவேண்டாம். திரவியங்களைக் கவர்வதில் மிகமுயற்சியுள்ளவர்களாகவே உன்வீட்டில் வஸிப்பவர்களும் பிராணிகளுக்குத் துன்பத்தை விரும்புகிறவர்களுமான சிலமனிதர்கள் என்னிடம் பகை பாராட்டிக் காகத்தைக் கொன்றார்கள். உனக்குப்பிறகு ராஜ்யத்தை அடையலாமென்னும் ஆசையால் உள்ளிலுள்ள சமையற்காரர் முதலிய மனிதருடன் ஒத்துப்பேசிக்கொண்டு உனக்குவிநாசத்தைத் தேடுகிறவர்களின் விருப்பம் முடிவுபெறுமோ? அன்றே? அரசனே! நான் அவர்களிடமுள்ள பயத்தால் வேறு ஆச்ரமம் செல்லப்போகிறேன். பிரபுவே! கபடத்தால் அவர்கள் எய்த அம்பு என்காகத்தின்மீது பாய்ந்ததால் அக்காகம் யமலோகம் போய்ச்சேர்ந்தது. அரசனே! இவ்விஷயம் தவவலிமையினுலுண்டான ஞானக்கண்ணுல் என்னுல் காணப்பட்டது. கட்டையும் கல்லும் முள்ளும் உள்ளதும் சிங்கம் புலிகளால் மிகப்பயங்கரமானதும் செல்லமுடியாததும் பொறுக்க முடியாததுமான இமயமலையின் குகையைக் கடப்பது போலப் பலமுதலைகளும் மீன்களும் நீர்யானைகளுமுள்ளதும் திமிங்கிலக்கூட்டங்களால் நிரம்பியதுமான (ராஜ நீதியென்னும்) இந்நதியைச் சிறிய இக்காகத்தை உபாயமாகக்கொண்டு கடந்தேன். செல்லத்தகாத இருளுள்ள இடத்திற்குச்செல்ல விளக்கும், ஜலமுள்ள இடத்திற்குக் கப்பலும் உபாயமாக இருக்கின்றன. அரசர்களின் கோட்டையில் பிரவேசிப்பதில் உபாயத்தைப் பண்டிதர்களும் அறியவில்லை. உன்கபடமுள்ள ராஜ்யம் இருளைப்போல அவிவேகமுள்ளதாயிருக்கிறது. இங்கு உன்னுலும் நம்பிக்கையுடன் இருக்க முடியாது. நான் எவ்விதமிருக்கக்கூடும்? ஆகையால், இவ்விடத்தில் வஸிப்பது நன்மை அன்று. இங்கு நன்மையும் தீமையும் ஸமமாயிருக்கின்றன. நன்மை செய்தவனுக்கே இங்கு கொலைடக்கிறது; தீமை செய்தவனைப்பற்றி ஸந்தேஹிப்பதில்லை. பாபத்துக்குக் கொலையும் புண்ணியத்திற்கு ஒருதுன்பமுமில்லாமலிருப்பதும் நீதிபாகும். இவ்விடத்தில் தாமஸித்திருப்பது யுக்தமன்று. அறிவுள்ளவன் இவ்விடத்திலிருந்து வேகமாக வெளியிற் போகவேண்டும். அரசனே! உன்னுடைய இந்த ராஜநீதியைப் பலசூழல்களுள்ளதும் தெப்பத்தை முழுகச்செய்வதுமான ஸீதையென்னும் நதியைப் போலவும் பாவனையும் கொல்லத்தக்க வலையைப்போலவும் நினைக்கிறேன். தேன் விழுவது

போன்ற நீ விஷம்கலந்த போஜனம் போலிருக்கிறாய். உனதுஎண்ணம் அஸத்துக்களுடையது போலிருக்கிறதே தவிர ஸத்துக்களுடையதுபோலில்லை. ஓ! அரசனே! நீ பாம்புகளால் சூழப்பட்ட கிணறு போலிருக்கிறாய். அரசனே! நீ, செல்லமுடியாத வழியுள்ளதும் பெரியகரையுள்ளதும், [1]மூங்கிற்காடு பிரம்புக்காடுகளால் சூழப்பட்டதும், மதுரமான ஜலமுள்ளதுமான நதிபோலிருக்கிறாய்; நாய்களாலும் கழுகுகளாலும் நரிகளாலும் சூழப்பட்ட ராஜஹம்ஸம்போலிருக்கிறாய். ஒருபெரிய மரத்தை அடுத்து வளர்ந்த பெரிய கொடிகளின்திரள் அம்மரத்தை மூடிக்கொண்டு அதற்குமேல் வியாபித்து வளர்ந்தபின் தன்னைப்பிடித்த கொடிய காட்டுத்தீயிலால் அம்மரத்தையும் எரிப்பதுபோல உன்னை அடுத்த அமாத்தியர்கள் இருக்கிறார்கள். அரசனே! அவர்களைச் சோதித்துப் பார். அரசனே! உன்னால் அதிகாரம் கொடுக்கப்பட்டவர்களும் உன்னால் பரிபாலிக்கப்பட்டவர்களுமான மனிதர்களே உன்னை அவமதித்து உனது நண்பனைக்கொல்ல விரும்புகிறார்கள். அரசனை உன்னுடைய சீலத்தையும் உன்னை [2]அடுத்துப் பிழைப்பவர்களுடைய ஸ்வபாவத்தையும் அறியவிருப்பங்கொண்ட நான் வீரனுடைய மனைவியின் வீட்டில் ஜாரபுருஷன்போலவும் உள்ளே ஸர்ப்பமிருக்கிறவீட்டில் வஸிப்பதுபோலவும் மிகுந்த சங்கையுடன் அஜாக்ரதையின்றி என்னைரக்ஷித்துக்கொண்டு இங்கு வஸித்துவந்தேன். அரசர்களுள் மிகச்சிறந்தவனே! 'அரசன் இந்திரிய ஜயமுள்ளவனா? இவனுள்ளத்திலுள்ள காமமுதலிய உட்பகைகள் ஜயிக்கப்பட்டனவா? அரசன் பிரஜைகளிடத்தும் பிரஜைகள் அவனிடத்தும் ப்ரீதியுடனிருக்கிறார்களா?' என்று அறிய விருப்பமுள்ளவனாகி நான் உன்னுடைய இத்தேசத்திற்கு வந்தேன். ராஜனே! அவ்விதம்வந்த எனக்குப் பசியுள்ளவனுக்குப் போஜனம்போல நீ ப்ரியமாயிருக்கிறாய். தாகமில்லாதவனுக்குத் தண்ணீர்போல உன் அமாத்தியர்கள் எனக்குப் பிரியமாயிருக்கவில்லை. அவர்கள் நான் உனதிஷ்டத்தைச் செய்கிறவனென்ற காரணத்தால் என்காகத்தைக் கொன்று எனக்குக் குற்றத்தைச் செய்தார்களே அன்றி இதில் வேறுகாரணமில்லை என்பதில் எனக்குச்சந்தேகமில்லை. அவர்களுக்கு நான் ஒரு துன்பத்தையும் செய்யவில்லை. அவர்களின் குற்றத்தைத் தெரிவித்தது அவர்களுக்குத் துன்பஞ் செய்ததுபோலாயிற்று. வாலில் அடிக்கப்பட்ட அரவினிடம்போலக் கெட்ட எண்ணமுள்ள பகைவனிடம் பயமிருக்கவேண்டும்' என்று சொன்னார்.

---

1 'திருடர்களுக்கிடமுமான காவேரி யென்னும் நதி' என்பது மூலபாடம். 2 வேறு பாடம் கொள்ளப்பட்டது.

அரசன், 'ஓ! பிராம்மணர்களிற் சிறந்தவரே! இத்துண்பத் திற்கு விசேஷமான பரிஹாரத்தாலும் அதிக ஆதரவாலும் பூஜிக்கப் பெற்று என் வீட்டில் நீர் திரும்பவும் வஸிக்கவேண்டும். பிராம்மணரே! உம்மிடம் அப்ரியத்தைப் பாராட்டும் மனிதர்கள் என் வீட்டில் வஸிக்க வேண்டாம். அவர்களுக்கு நடக்கும் விதியைப் பிறகு நீரே நேரில் தெரிந்துகொள்ளலாம். பகவானே! தண்டநீதி நன்கு செலுத்தப்படவும் நல்ல கர்மங்கள் செய்யப்படவும் நன்முக ஆலோசித்து க்ஷேமத்திற்குரிய வழியில் நீர் என்னை ஏவுதல் செய்யவேண்டும்' என்று சொன்னான். முனிவர் சொல்லத் தொடங்கினர், 'நீ இந்தக் குற்றத்தை வெளியிடாமல் அமாத்யர்களில் ஒவ்வொருவனையும் அதிகார பலமில்லாதவனுகச் செய். பிறகு, கொலைக்குத்தக்க காரணத்தை அறிவித்து முறையே ஒவ்வொரு மனிதனுகக் கொல்லவேண்டும். ஒரே குற்றமுள்ள பல மனிதர்கள் ஒன்று சேர்ந்தால் மூட்கள்போலக் கொடியராயிருப்பவர்களையும் கொல்லுவார்கள். பொருளில் கட்டுள்ள உலகம்யாவும் பொருளாலேயே கட்டுப்படவேண்டும். மனிதர்களின் அகங்காரம் பொருளை அடுத்திருக்கிறது. ஆகையால், அவர்களிடமிருந்து பொருளை விலக்கவேண்டும். ஒரு மனிதனின் ஒரு குற்றத்திற்காக அவனுக்கு விரோதியான மனிதனை அவனிடம் அனுப்பவேண்டும். அம்மனிதன் அவனிடம் பல குறைகளை வெளியிட்டு அவனுடைய பொருளைப் பிடுங்கிவிடுவான். சிலரிடம் நன்மொழி கூறியும் சிலருக்கு ஒருவருக்கொருவர் ஸ்நேஹத்தைக் கெடுத்தும் விரோதத்தை உண்டுபண்ணவேண்டும். அரசனே! பிறகு, தண்டிக்கவேண்டும். அரசனே! அறிவுள்ள அரசன் தன் உள்ளெண்ணத்தை வெளியாகாமல் மறைத்துக்கொண்டு பில்வக்காயைக் கொண்டே பில்வக்காயை அடிப்பதுபோல அசுத்தனை மந்திரியை அசுத்தனை மனிதனைக்கொண்டே நாசஞ்செய்யவேண்டும். ஆகையால், ராஜனே! நமது ரஹஸ்யம் மாறுமோவென்ற பயத்தால் உனக்கு இப்படி உபதேசிக்கிறேன். நாங்களோ தபஸ்வள்ளவர்களும் மௌனவ்ரதத்தண்டிப்பவர்களுமான பிராம்மணர்களென்பது பிரஸித்தம். நாங்கள் எங்களுக்குப்போல உனக்கும் மற்றவர்களுக்கும் க்ஷேமத்தை விரும்புவோம். அரசனே! என்னை உனக்கு அறிவிக்கிறேன். காலகவ்ருக்ஷீயனென்று பெயருள்ள ரிஷியான நான் உனக்குச் சொந்தமுள்ளவன். உண்மையான சொல்லுள்ளவனும் இஷ்டனுமான நான் உனது தந்தையின் ஸ்நேஹிதனுயிருந்தேன். ராஜனே! உன் தகப்பன் காலஞ்சென்றதும், ராஜ்யம் கஷ்டப்படும்போது, நான் எல்லா ஆசைகளையும் விலக்கிவிட்டுத் தவஞ்செய்யச்சென்றேன்.

திரும்பவும் உனக்குப் பகைவர்களிடம் மித்திரர்களென்ற பிரமம் வேண்டாமென்று இவ்விஷயத்தை நேயத்தால் உனக்குத் தெரிவிக்கிறேன். ராஜனே! ஸுகதுக்கங்களையும் பார்த்துத் தன் முயற்சியின்றி ராஜ்யத்தை அடைந்து மந்திரிகளிடம் ராஜ்யத்தை இருக்கச் செய்து என் குற்றமுள்ளவனுகிறாய்?' என்றுசொன்னர். பிறகு, பிராம்மணர்களிற் சிறந்த அம்முனிவர் புரோஹித வகுப்பில் சேர்ந்தும், ராஜகுலத்தில் மிக விசேஷமான துதிமொழிகள் உண்டாயின. கீர்த்தியுள்ள கோஸலதேசத்தரசனுக்குப் பூமியை ஒரே குடையுள்ளதாகச் செய்தபின் காலகவ்ருக்ஷீயரென்னும் முனிவர் உத்தமமான யாகங்களைச் செய்தார். கோஸலதேசத்தரசனும் அவருடைய ஹிதமான வசனத்தைக் கேட்டுப் பூமியை ஜயித்தான். ஓ! பாரத! அம்முனிவர் சொல்லியபடியே அரசன் செய்துவந்தான்" என்றுசொன்னர்.

எண்பத்துமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஸபையோர் மித்ரர் சேனைத்தலைவர் மந்திரிகள் முதலியோரின் லக்ஷணமுரைத்தது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிரஜைகளின் பதியான பிதாமஹரே! வியவகார ஸபையின் அதிகாரிகளும், யுத்தத்தில் உதவிசெய்பவர்களும், ஸ்நேஹிதர்களும், சேனைத்தலைவன் முதலியவர்களும், மந்திரிகளும் எவ்விதக் குணமுள்ளவர்களாயிருக்கவேண்டும்?" என்று கேட்டனர். பீஷ்மர், "உன்னுடைய வ்யவஹாரஸபையின் அதிகாரிகள் அகாரியத்தில் லஜ்ஜையுள்ளவர்களும், அடக்கமும் ஸத்தியமும் நேர்மையுமுள்ளவர்களும், நீதி அநீதிகளைப் பகுத்துக்கூற நல்ல சக்தியுள்ளவர்களுமாயிருக்க வேண்டும். ஓ! குந்தியின் குமாரனே பாரதனே! உடனிருப்பவர்களும் மிக்க சூரர்களும் பிராம்மணர்களுக்கு ஹிதர்களும் பல கல்விகளுள்ளவர்களும் மிக்க ஸந்தோஷமுள்ளவர்களும் வேலைகளில் பெரிய உத்ஸாகமுள்ளவர்களுமான மனிதர்களை நீ எல்லா ஆபத்துக்களிலும் உதவிசெய்பவர்களாக அடைய விரும்பவேண்டும். நற்குலத்திற் பிறந்து பூஜிக்கப்பெற்ற மனிதன் எப்பொழுதும் தன் சக்தியை மறைக்கமாட்டான். அவன் சுத்தமோ அசுத்தமோ துன்பமுள்ளதோ கோலையுள்ளதோ மிக விசேஷமாக நன்மையையே தொடர்ந்து பரிபாலித்து வருவான். (ஸ்நேகிதன் இக்குணமுள்ளவனுயிருக்கவேண்டும்.) உன்னுடைய சேனைத்தலைவன்முதலியவர்கள் நல்ல தேசத்தி

லும் நல்லகுலத்திலுமுண்டானவர்களும் நல்ல அறிவும் ரூபமுமுள்ள வர்களும் பலகல்விகளுள்ளவர்களும் ஸமர்த்தர்களும் நல்லபக்தியுள்ள வர்களுமாயிருக்கவேண்டும். அப்பா! கெட்டகுலத்தில் பிறந்தவர் களும் ஆசையுள்ளவர்களும் கொடுமையுள்ளவர்களும் லஜ்ஜையில்லாத வர்களுமான மனிதர்கள் (உண்ட) கையில் 1 ஈரமுள்ளவரையில் உன்னை அனுஸரிப்பார்கள். அரசனைவன் நல்லகுலத்தில் பிறந்தவர்க ளும் நல்லஸ்வபாவம் பொருந்தியவர்களும் இங்கிதந்தெரிந்தவர்களும் கொடுமையற்றவர்களும் தேசகாலங்களையும் அவைகளுக்குத்தக்க விதிகளையும் அறிந்தவர்களுடம் எஜமானனுடையகாரியத்தில் நன்மை யையே விரும்புகிறவர்களுமான மனிதர்களை எப்பொழுதும் எல்லா விஷயங்களிலும் மந்திரிகளாக நியமிக்கவேண்டும். பொருளாலும் மேலானபதவியை அடைவித்தலாலும் ஆடைஆபரணமுதலியவை கொடுப்பதாலும் பிரீதியாலும் இன்பமான பலபோகங்களாலும்எவர் களைப் பயனுள்ளவர்களாயிருக்கவிரும்புகிறீயோ உன்னுடைய அந்த மனிதர்கள் ஸுகமடைவார்கள். மாறுதலடையுள்ளவர்களும் நல்ல ஒழுக்கமுள்ளவர்களும் விரதங்களைச் செய்தவர்களும் பெரியபுத்தியுள் ளவர்களும் உண்மைபேசுகிறவர்களும் எப்பொழுதும் ஆசையுள்ளவர் களுமான வித்வான்கள் உன்னை விடமாட்டார்கள். மந்தபுத்தியுள்ள வர்களான எந்தக்கெட்டமனிதர்கள் தர்மாதர்மத்தின்வியவஸ்தையை அறியவில்லையோ அவர்களிடத்திலும் தம்ஆசாரம்விட்டு நழுவினமனி தர்களிடத்திலும் சேர்க்கையில்லாமலிருக்கவேண்டும். பலஜனங்க ளின்கூட்டத்தை விலக்கி ஒருமனிதனைவிரும்புவது கூடாது. இரண் டில் ஒன்றை அடையவேண்டிவந்தால், பலமனிதர்களைவிட ஒருமனி தன் மிகச்சிறந்தவனையிருப்பானுகில் அம்மனிதனுக்காகக் கூட்டத் தை விலக்கலாம். உத்தமமனிதனின் லக்ஷணம் இவ்விதமாகும். பரா க்கிரமமுள்ளவனும் கீர்த்தியைப் பெரிதாகக்கொண்டவனும் ஆசாரத் தில் நிலைபெற்றவனும் ஸமர்த்தர்களைப்பூஜிப்பவனும் பகைக்கத்தகா தவர்களைப் பகையாதவனும் காமம், பயம், கோபம், லோபம் இவை களால் தர்மத்தைவிடாதவனும் அகங்காரமற்றவனும் ஸத்தியவசன முள்ளவனும் சக்தியுள்ளவனும் மனத்தைஜயித்தவனும் மானமுள்ள வனுமானமனிதனை எல்லாஸமயங்களிலும் பரீக்ஷைசெய்து ஆலோ சனைசெய்யும்மந்திரியாகச் செய்துகொள்ளவேண்டும். ஓ! பரத்த! நற்குலத்தில்பிறந்தவனும் குலத்திற்குரிய பெருமையுள்ளவனும் பொறுமையுள்ளவனும் ஸமர்த்தனும் நல்லபுத்தியுள்ளவனும்சூரனும் நன்றியறிந்தவனும் ஸத்தியமுள்ளவனுமாயிருப்பது உத்தமபுருஷ

---

1 பிரயோஜனத்தை அடைகிறவரையில் என்பது கருத்து.

ணுடைய லக்ஷணமாகும். இவ்விதமிருப்பவனும் அறிவுள்ளவனுமான அவ்வுத்தமபுருஷனுக்குப் பகைவர்களும் மிகப்ரீதியுள்ள மித்திரர்களாவார்கள். அடங்கியமனமுள்ளவனும் சிக்ஷிக்கப்பட்டபுத்தியுள்ளவனும் ஐசுவரியத்தைவிரும்புகிறவனுமான அரசன் இதற்குமேல் தன் தேசத்தில் நல்லகுலத்திலுதித்தவர்களும் நம்புதலுள்ளவர்களும்பிறர் வசமாகாதவர்களும் மாறுதலில்லாதவர்களும் எல்லாவித்திலும் பரீக்ஷிக்கப்பட்டவர்களுமான தன்னைச்சேர்ந்த மனிதர்களைக்கொண்டு மந்திரிகளின் குணதோஷங்களைப் பரீக்ஷிக்கவேண்டும். ஐசுவரியத்தைவிரும்புகிறவனும் மேன்மையை விரும்புகிறவருமானபுருஷன், நல்லஜாதியில் ஜனித்தவர்களும் வேதமார்க்கத்தில் செல்லுகிறவர்களும் பரம்பரையாகவந்தவர்களும். அகங்காரமில்லாதவர்களுமான மனிதர்களை மந்திரிகளாக வைக்கவேண்டும். இவர்களுக்கு வணக்கத்துடன் கூடினபுத்தியும் அழகானஸ்வபாவமும் பராக்கிரமமும் தைரியமும் பொறுமையும் சுத்தியும் ஸ்வாமிபக்தியும் நிலைமையும் காய்யங்களை வகிக்குந்திறமையும் இருக்கவேண்டும். ராஜனே ! அரசன், எப்பொழுதும் காய்யங்களைவகிக்கத்தக்க பெருமையுள்ளநற்குணங்களைப் பரீக்ஷைசெய்து, கபடமற்றவர்களும் தனத்தைப் பெருகச்செய்கிறவர்களும் அளவுக்குமிஞ்சாமல் பேசுகிறவர்களும் வீரர்களும் பகுத்தறியஸமர்த்தர்களும் நற்குலத்திலுதித்தவர்களும் தைரியம்பொருந்தியவர்களும் இங்கிதந்தெரிந்தவர்களும் குரூரமில்லாதவர்களும் தேசகாலங்களுக்குத்தக்க விதிகளைஅறிந்தவர்களும் எஜமானனின் காரியத்தில் நன்மையை விரும்புகிறவர்களுமான ஐந்துமந்திரிகளை எப்பொழுதும் எல்லாக் காரியங்களிலும் இருக்கச்செய்யவேண்டும். அல்பசக்தியுள்ளவர்களுடன் சேர்ந்த மனிதன் ஒரு ஸமயத்திலும் உறுதிபெறமாட்டான். அவன் நிச்சயமாக எல்லாக்காரியங்களிலும் ஸந்தேகத்தையே உண்டுபண்ணுவான். இவ்விதம் சுபமான நல்லவம்சத்தில்பிறந்தவனுயினும் அறம்பொருள்இன்பங்களுடன்கூடின மந்திரியானவன் கல்விக்குறைவுள்ளவனுனல் மந்திராலோசனையைச்சாதிக்க ஸமர்த்தனல்லன். அவ்விதமே, பலகல்விகளுள்ளவனுயிருந்தாலும் கெட்டகுலத்தில் பிறந்தவன், அழைத்துப்போகும்மனிதனற்ற குருடன்போல, ஸூக்ஷ்மமானகாரியங்களில் வழிதெரியாமலிருப்பான். நல்லபுத்தியுள்ளவனும் சாஸ்திரங்கள்தெரிந்தவனும் உபாயங்களைஅறிந்தவனுமாயிருந்தாலும் நிலைமையற்ற எண்ணமுள்ளமனிதன் நீண்டகாரியத்தைநிறைவேற்ற வல்லவனுகான். கல்வியில்லாததுர்ப்புத்தியுள்ளவனுக்குவேலையைச்செய்ய ஆரம்பித்ததனல்மாத்திரம் அக்காரியத்தின்விசேஷங்கள் புலப்பட நியாயமில்லை. யஜமானபக்தியில்லாத மந்திரியிடம்

நம்பிக்கைவைப்பது கூடாது. ஆகையால், பக்தியில்லாதமனிதனிடம் ஆலோசனையை வெளிப்படுத்தக்கூடாது. கபடமுள்ள அவன், அக்நியானது வாயுவினால் உண்டுபண்ணப்பட்ட வழிகளால் சென்று மரத்தைக்கொளுத்துவதுபோல, மந்திரிகளுடன்சேர்ந்து அரசனைத் துன்பப்படுத்துவான். ஒருஸமயம், அரசன், கோபங்கொண்டு அதிகாரத்திலிருந்தே விலக்கிவிடுவான்; கோபங்கொண்டு வாக்கால் நிந்திப்பான்; திரும்பவும் அன்புள்ளவனுயிருப்பான். அவைகள்யாவும் பக்தியுள்ளவனல் பொறுக்கத்தக்கனவாகும். மந்திரிகளுக்கும் இடியின்தொனி போன்றகோபம் உண்டாகும். எஜமானனுக்கு ஹிதத்தைச்செய்யும் விருப்பத்தால் அவைகளை எவன் அடக்கிக்கொண்டிருக்கிறானே ஸமமான ஸுகதுக்கமுள்ள அம்மனிதனிடம் காரியங்களைக் கேட்கவேண்டும். கபடமுள்ளமனிதன் எஜமானபக்தியுள்ளவனும் மற்றஎல்லாக்குணங்களும் பொருந்தியவனும் ராஜநீதியில் நல்லஅறிவுள்ளவனுமாயிருந்தாலும் அரசனின் ஆலோசனையைக் கேட்கத்தக்கவனல்லன். சத்துருக்களுடன் சேர்ந்து [1] பிறர்களை வெகுமதியாதமனிதன் சத்துருவென்று அறியத்தக்கவன். அவனும் ஆலோசனையைக் கேட்கத்தக்கவனல்லன். அறிவில்லாதவனும் அசுத்தனும் கர்வமுள்ளவனும் சத்துருக்களை அடுப்பவனும் தன்னைப்புகழுகிறவனும் கோபமும் லோபமுமுள்ளவனுமான அமித்ரன் ஆலோசனை கேட்கத்தக்கவனல்லன். ஸ்வாமிபக்தியுள்ளவனும் பலகல்வியுள்ளவனும் பூஜிக்கப்பட்டவனும் பொருள்உதவி பெற்றவனுமாயிருந்தாலும் புதியமனிதன் ஆலோசனையைக் கேட்கத்தக்கவனல்லன். எந்த மனிதனின்தந்தை முன்னொரு சமயத்தில் அநீதியாகத் துன்பப் படுத்தப்பட்டானோ அவன் மர்யாதையால் அதிகாரத்தில் வைக்கப்பட்டாலும் ஆலோசனையைக் கேட்கத்தக்கவனல்லன். மித்திரனை எந்தமனிதன் சிறியகாரணத்தாலும் பொருள்தண்டம் விதிக்கப்பட்டவனோ அவன் மற்றக்குணங்களுள்ளவனாலும் திரும்ப ஆலோசனையைக் கேட்கத்தக்கவனல்லன். [2] சிக்ஷிக்கப்பட்டபுத்தியுள்ளவனும் மேதாவியானபண்டிதனும் தன்தேசத்திலுண்டானவனும் சுத்தனும் எல்லாக்காரியங்களிலும் பரிசுத்தனுமானமனிதன் ஆலோசனைகேட்கத்தக்கவன். அறிவும் பேரறிவும் பொருந்தியவனும் தன்னுடையவும் சத்துருவினுடையவும் எஜமானன் மந்திரிமுதலிய பிரகிருதிகளை அறிந்தவனும் அரசனுடைய ஆத்மாவுக்குச்சமமான ஸ்நேஹிதனுமானமனிதன் ஆலோசனைகேட்கத்தக்கவன். ஸத்தியவசனமுள்ளவனும் நல்லசீலம்பொருந்தியவனும்

---

1 'பட்டணத்திலுள்ள ஜனங்களை' என்பது வேறுபாடம்.

2 படிப்புள்ள.

ரகஸ்யமான ஆலோசனையை ரக்ஷிக்கத்தக்க ஆழ்ந்த புத்தியுள்ளவனும் லஜ்ஜையுள்ளவனும் கொடுமையில்லாதவனும் தகப்பன்பாட்டன் பரம் பரையாக வந்தவனுமான மனிதன் ஆலோசனை கேட்கத்தக்கவன். ஸந் தோஷமுள்ளவனும் ஸாதுக்களால் அங்கீகரிக்கப்பட்டவனும் ஸமர்த்த னும் பாபங்களில்வெறுப்புள்ளவனும் ஆலோசனைதெரிந்தவனும் ஸமய மறிந்தவனும் சூரனுமானமனிதன் ஆலோசனை கேட்கத்தக்கவன். ஓ! அரசனே! தண்டஞ்செலுத்தவிருப்பமுள்ளவன் இவ்வுலகம் யாவற்றையும் நன்மொழியால் தன்வசமாக்கச் சக்தியுள்ளமனிதனி—ம் ஆலோசனை செய்யவேண்டும். பட்டணத்திலுள்ளவர்களும் கிராமத்தி லுள்ளவர்களும் தர்மப்படி எந்த மனிதனிடம் நம்பிக்கையடைந் திருக்கிறார்களோ அவ்விதமிருப்பவனும் யுத்தத்தில் சக்தியுள்ளவ னும் நீதியில் விசேஷமான அறிவுள்ளவனுமான மனிதன் ஆலோசனை களுக்குத் தக்கவன். ஆகையால், இவ்விதக்குணங்கள்யாவும் பொருந் தியவர்களும் நன்குபூஜிக்கப்பட்டவர்களும் அரசன்அமாத்தியன்முத லிய பிரகிருதியை அறிந்தவர்களும் பெருமையை விரும்புகிறவர்களு மான மந்திரிகள் மூன்றுபேர்களுக்குக் குறையாமலிருக்கவேண்டும். அவர்கள் தம் பிரகிருதிகளிலும் சத்துருவின்பிரகிருதிகளிலுமுள்ள ரந்திரங்களைக் கவனிக்கவேண்டும். மந்திரிகளுடைய ஆலோசனையை மூலமாகக்கொண்டுதான் அரசனுடையராஜ்யம்பெருகவேண்டும். தன் னுடைய இடைவெளியைப் பிறன்பாராதபடி பிறனுடையஇடை வெளிகளில் தான் தொடர்ந்துசெல்ல வேண்டும். ஆமைபோலத் தன்அங்கங்களை மறைத்துக்கொண்டு தன்னுடைய இடைவெளியைப் பிறன் பாராவண்ணம் காக்கவேண்டும். அறிஞர்களானமந்திரிகள் ராஜ் யத்திற்குரிய ஆலோசனையை வெளியாகாமல் ரக்ஷிக்கிறவர்களும் அர சன் அவ்வாலோசனையைக் கவசமாகக்கொண்டவனும் மற்றஜனங்கள் அவ்வாலோசனைக்கு அங்கங்களும் ஆகிறார்கள். ரஹஸ்யமான தூதர் களை மூலமாகக்கொண்ட ராஜ்யத்திற்கு ஆலோசனையொன்றே ஸாத னமென்று (அறிஞர்கள்) கூறுகிறார்கள். கோபத்தையும் கர்வத்தையும் அகங்காரத்தையும் அஸூயையையும் முற்றும்விலக்கிவிட்டுத் தம் ஜீவனநிமித்தம் மந்திரிகள் அரசனை அனுஸரித்திருப்பார்களானால் ஸுகித்திருப்பார்கள். எப்பொழுதும் [1]ஐவகைக் கபடங்களில்லாத மந்

[1] மனத்தாலும் வாக்காலும் சரீரத்தாலும் இவைகளில் இரண்டா லும் மூன்றாலும் செய்யப்படுவன. உதாரணம்:—துரியோதனன் மனோ வாக்குக் காயங்களால் அரக்குமாளிகையை கொளுத்தச்செய்தது. திருத ராஷ்டிரன் மனத்தினால் பாண்டவர்களைத் துரோஹம் செய்தது. யுதிஷ் டிரர் துரோணவதத்தில் வாக்கினல்சொன்னது. அஸ்வத்தாமா ஸௌப் திகவதத்திற் காயிகபடம் செய்தது. பீமன் காயிகவாசிகத்தினல் துரோண வதத்தில் செய்தது.

திரிகளுடன் அரசன் ஆலோசிக்கவேண்டும். அந்த மூன்று மந்திரிகளின்மூன்றுவிதமான அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு அதில் தன்மனத்தைச்செலுத்தி அவர்களுடைய அந்த அபிப்பிராயத்தையும் தன் அபிப்பிராயத்தையும் மேலான ஆலோசனைக்காலத்தில் அறம் பொருளின்பங்களை அறிந்த குருவான பிராம்மணரிடஞ்சென்று தெரிவித்துக் கவனத்துடன் மேலான அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டும். அவரால் செய்யப்படும் தீர்மானம் மற்றவர்களுக்கும் ஸம்மதமாக இருந்தால் அவ்வாலோசனைவழியை அகங்காரமின்றிச்செலுத்தவேண்டும். இவ்விதம் ஆலோசனையின் உண்மையான பொருளில் நிச்சயத்தை அறிந்தவர்களான ஜனங்களுடன் எப்பொழுதும் ஆலோசிக்க வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால், எப்பொழுதும் இவ்விதம் பிரஜைகளைச் சேர்ப்பதில் திறமையுள்ள அவ்வாலோசனையை நடத்தவேண்டும். அவ்வாலோசனை நடக்கும் இடத்தில் குள்ளரும் கூனரும் மெலிந்தவரும் முடவரும் குருடரும் அசடரும் நபும்ஸகரும் ஸ்திரீயும் இருத்தல்கூடாது; குறுக்காகவும் முன்னும் பின்னும் மேலுங்கீழும் எவ்விதத்திலும் ஸஞ்சரிக்கக் கூடாது. ஒருவருமில்லாத வீட்டிலிருந்தோ குசம்நாணலில்லாததும் பிரகாசமுமான இடத்திலிருந்தோ வாக்கிலும் அங்கங்களிலும் எல்லாவிதமான தோஷங்களையும் விலக்கிவிட்டு ஸமயக்குறைவு நேராவண்ணம் காரியத்தை நன்முக ஆலோசிக்கவேண்டும்.

எண்பத்துநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ப்ரியவசனம் பேசுவதைப்பற்றி இந்திரனுக்கும் பிருஹஸ்பதிக்கும் நடந்த ஸம்பாஷணத்தைச் சொல்லியது.)

ஓ! யுதிஷ்டிர! இவ்விஷயத்திலும் பிருகஸ்பதிக்கும் இந்திரனுக்கும் நடந்த ஸம்பாஷணையான இப்பழைய இதிஹாஸத்தை எடுத்துச் சொல்லுகிறார்கள். இந்திரன், 'ஓ! பிராம்மணரே! எந்த ஒரு விஷயத்தை நன்முக நடத்திவரும் புருஷன் எல்லாப்பிராணிகளுடைய ஸம்மதத்தையும் பெரிய கீர்த்தியையும் பெறுவான்?' என்று கேட்க, பிருஹஸ்பதி சொல்லத்தொடங்கினர்.

'ஓ! இந்திர! உண்மையான பிரியவசனமென்ற ஒரு விஷயத்தை நன்முக நடத்திவரும் புருஷன் ஸர்வப்ராணிகளுடைய ஸம்மதத்தையும் பெறுவான். ஓ! இந்திரனே! எல்லா உலகங்களுக்கும் ஸுகத்தைக் கொடுக்கும் இவ்வொரு விஷயத்தை நடத்திவரும் மனி

தன் எல்லாப்பிராணிகளிடத்திலும் எப்பொழுதும் பிரியமாக இருப்பான். இவ்வுலகில் பிரியவசனம் பேசாத எந்த மனிதன் எப்பொழுதும் புருவக்கோணலுள்ள முகத்துடன் ஒன்றையும் பேசாமலிருக்கிறானே அவன் உலகங்களுக்கு வெறுக்கத்தக்கவனாகிறான். எந்த மனிதன் எவரையுங் கண்டவுடன் புன்சிரிப்புடன் முந்தியே பேசுகிறானே அவனிடம் உலகம் அன்புள்ளதாயிருக்கும். பிரியவசனம் சொல்லாமல் கொடுக்கப்படும் தானங்கூட வியஞ்சனமில்லாத போஜனம்போல எவ்விடத்திலும் பிராணிகளுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. ஓ! இந்திரனே! இனியவசனத்தைப் பேசும் மனிதன் பிராணிகளுடைய திரவியத்தை எடுப்பவனுடனும் பிரிய வசனத்தால் இவ்வுலகமனைத்தையும் தன்வசம் ஆக்கிக்கொள்ளுவான். ஆகையால், தண்டம்விதிக்க விரும்பிய மனிதனும் பிரியவசனம் பேசவேண்டும். இவ்விதமிருப்பவன் பிரியஞ் செய்தவனாவான். உலகமும் இவனிடம் பயமடையாது. நன்கு உபயோகிக்கப்பட்டதும் மென்மையும் இனிமையுமான பிரியவசனம் நன்முகச் செலுத்தப்படுவதற்குச் சமமானது எப்பொழுதுமில்லை' என்று சொன்னார். இவ்விதஞ் சொல்லப்பட்ட இந்திரன், புரோஹிதர் சொல்லியபடி, முழுமையுஞ்செய்துவந்தான். ஓ! கௌந்தேய! அப்படியே நீயும் இப் பிரியவசனத்தை நன்முக நடத்திவா" என்று சொன்னார்.

எண்பத்தைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் எந்த எந்த வர்ணத்தாரில் எத்தனை எத்தனைபேரை மந்திரியாகிக வேண்டுமென்பதையும் வ்யவஹார விசாரணை முறை முதலியவற்றையுங் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! ராஜஸ்ரேஷ்டரே! பிரஜைகளை எவ்விதம் பரிபாலித்துவரும்அரசன் [1]விசேஷமான தர்மத்தால்நிலைத்ததான கீர்த்தியையும் ஸ்வர்க்கத்தையும் அடைவான்?" என்றுகேட்டனர். பீஷ்மர், "பக்ஷபாதமில்லாத [2]வ்யவகாரத்துடன் பிரஜைகளைக்காப்பதில்முயற்சியுள்ள அரசன் பரிசுத்தமுகத் தர்மத்தை அடைந்து கீர்த்தியையும் ஸ்வர்க்கலோகங்களையும் அடைவான்" என்று சொன்னர். யுதிஷ்டிரர், "அறிவிற் சிறந்தவரே! உம்மால் முன் சொல்லப்பட்ட புருஷ

---

1 வேறுபாடம் கொள்ளப்பட்டது.

2 ஒரு விஷயத்திலுள்ள இரண்டுசாக்ஷிகளின் பொய்மெய்யைப் பகுத்தறிந்து தீர்மானிப்பது.

னுக்குரிய இக்குணங்கள்யாவும் ஒரு புருஷனிடமிராவென்று எனக்குத் தோற்றுகிறது ; ஆகையால், அரசன் எவ்விதவ்யவகாரத்தை எந்த அதிகாரிகளுடனிருந்து நிர்ணயஞ்செய்யவேண்டும் ? இந்த ப்ரச்னத்திற்குத் தகுந்த உத்தரஞ்சொல்லப் பிரார்த்திக்கிறேன் " என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

" அறிவுள்ளவர்களிற் சிறந்த புத்திமானே ! நீ சொல்லியபடி ஒரு புருஷன் இந்த நல்ல குணங்களுடன் கூடியிருத்தல் அரிதென்பது உண்மையே. ஆனாலும், நீ எவ்விதக் குணமுள்ள மந்திரிகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமோ அதற்குத்தக்கதும் மனிதனுடைய முயற்சியால் அடைய அரிதுமான ஸ்வபாவத்தைச் சுருக்கமாகக் கூறுகிறேன். வித்தைகளைக் கற்றவர்களும் ஸமர்த்தர்களும் பிரம்மசர்யத்தை முடித்தவர்களும் பரிசுத்தர்களுமான நான்கு பிராம்மணர்களையும் பலசாலிகளும் ஆயுதபாணிகளுமான பதினெட்டு க்ஷத்திரியர்களையும் நிறைந்த பொருளுள்ள இருபத்தொரு வைஸ்யர்களையும் வணக்கமுள்ளவர்களும் முந்திய காரியங்களில் பரிசுத்தர்களாயிருந்தவர்களுமான மூன்று சூத்திரர்களையும் (கேட்கவிருப்பம், கேட்பது அறிவது, தரிப்பது, ஊகிப்பது, புத்தியால் விலக்குவது, விஜ்ஞானம், தத்வஜ்ஞானம் என்னும்)எட்டுக்குணங்களுடன் கூடினவரும் புராணங்களைக் கற்றவரும் ஐம்பது பிராயமுள்ளவரும் ஸமர்த்தரும் அஸூயையில்லாதவரும் வேதங்களையும் தர்மசாஸ்திரங்களையும் அறிந்தவரும் வணக்கமுள்ளவரும் ஸமமாகப் பார்க்கிறவரும் விவாதமுள்ளவர்களுக்குச் செய்யவேண்டிய காரியத்தில் சக்தியுள்ளவரும் பொருள்களில் ஆசையில்லாதவரும் மிக்க கொடுமையுள்ள [1] எழுவித விசனங்களில்லாதவருமான ஸூதரையும் அமாத்யர்களாகச்செய்யவேண்டும். [2] எட்டு மந்திரிகளின் நடுவில் அரசன் ஆலோசனையைத் தீர்மானிக்கவேண்டும். பிறகு, ராஜ்யத்திலுள்ள பிரதான அதிகாரியிடம் அனுப்பித்தெரிவிக்கவேண்டும். இவ்வித வ்யவகாரத்துடன் எப்பொழுதும் நீ பிரஜைகளைப் பார்த்துவரவேண்டும். ரகஸ்யமான த்ரவ்யத்தை நீ எடுக்கக்கூடாது. விவாதமுள்ள காரியத்தில் அக்காரியத்திற்கு விரோதமாகப் பொருளை நீ எடுக்கக்கூடாது. (எடுத்தால்) [3] அந்தப்பாவம் உன்னையும் அவர்களையும் துன்பப்படுத்தும். பருந்தினிடமிருந்து பறவைக்

---

1 வேட்டை, சொக்கட்டான், பெண்டிர், குடியெனக் காமத்தாலுண்டாவன நான்கும் ; சரீரதண்டம், கடுஞ்சொல், பொருளை அபகரித்தல் எனக் கோபத்தாலுண்டாவன மூன்றுமாம்.

2 ' நான்கு பிராம்மணர்கள், மூன்றுசூத்ரர்கள், ஒரு ஸூதர் ஆக எட்டு மந்திரிகள் ' என்பது பழையவுரை.

3 இங்குவேறு பாடங்கொள்ளப்பட்டது.

கூட்டங்கள் விலகுவதுபோல ராஜ்யமும் உன்னிடமிருந்து விலகி ஓடும். பிரஜைகளை அதர்மமாக முறைதவறிப் பரிபாலிக்கும் அரசனுடைய ராஜ்யம் கடலில் சிதறின கப்பல்போல எப்பொழுதும் வேறிடம் செல்லத்தொடங்கும். ஓ! புருஷஶ்ரேஷ்ட! தர்மத்தை மூலமாகக்கொண்ட ராஜ்யத்தில் தர்மாஸனத்தில் அதிகாரம்பெற்ற அரசன், அமாத்தியன், அல்லது ராஜகுமாரன் (ஆகியவர்களில்) எவன் தர்மமின்றிப் பரிபாலிக்கிறானே அவனுள்ளத்தில் பாபமுண்டாகும்; ஸ்வர்க்கலோகமுங்கெடும். [1] காரியங்களில் அதிகாரம் பெற்றவர்களும் (அக்காரியங்களை) நன்றாக நடத்தாதவர்களுமான அரசனுக்குப் பின் செல்லும் மனிதர்கள் தம்மை முன்னிட்டு அரசனுடன்கூடக் கீழே செல்லுகிறார்கள். பலமுள்ளவர்களால் பீடிக்கப்பட்டவர்களும் துயரமுள்ள பலவசனங்களைப் பேசுகிறவர்களும் நாதனில்லாதவர்களுமான மனிதர்களுக்கு எப்பொழுதும் அரசன் நாதனாயிருக்கவேண்டும். இரண்டுவிதமான வாதங்களில் உண்மையை அறியவேண்டிச் செய்யப்படும் ஸாக்ஷிகளின் பலமானது தீர்மானிக்கத்தக்க காரணமாகும். ஸாக்ஷியில்லாததும் நாதனில்லாததுமான வ்யவகாரத்தை விசேஷமாகப் பரீக்ஷிக்கவேண்டும். (பரீக்ஷித்துக்) குற்றமுள்ள மனிதர்களுக்குக் குற்றத்திற்குத் தக்க தண்டத்தைச் செலுத்தவேண்டும். அதிகப் பொருளுள்ளவர்களைப் பொருளிலிருந்து விலக்கவேண்டும். பொருளற்றவர்களைச் சிறையில் அடைக்கவேண்டும். அரசன் கெட்ட நடையுள்ளவர்களை அடிகளால் அடக்கவேண்டும். நன்மொழியாலும் தானத்தாலும் சிஷ்டர்களைப் பரிபாலிக்கவேண்டும். அரசனைக் கொலைசெய்ய நினைத்த மனிதனுக்கும் வீடுகளில் தீயிட்டவனுக்கும் திருடனுக்கும் ஜாதிகளின் வரம்பை விலக்கினவனுக்கும் சித்ரவதை விதிக்கவேண்டும். ஓ! அரசனே! நன்றாகத் தண்டம் செலுத்துகிறவனும் (நல்வழியில்) முயற்சியுள்ளவனுமான அரசனுக்குச் சாஶ்வதமான தர்மமே உண்டாகும். அதர்மமென்பதே இல்லை. அறிவில்லாத எந்த அரசன் தன்னிஷ்டப்படி தண்டம் செலுத்துகிறானே அவன் இவ்வுலகில் அபகீர்த்திபெற்று இறந்தபின் நரகத்தையடைகிறான். ஒருவன் குற்றத்திற்காக மற்றவர்களுக்குத் தண்டம் விதிக்கக்கூடாது. குற்றவாளியை அழைத்துவரவேண்டி (அவனைச் சேர்ந்தவனை) [2] பிடிக்கவேண்டும்; விடவும்வேண்டும். அரசன் எவ்விதஆபத்திலும் எந்தச் சமயத்திலும் தூதனைக்

---

1 அதிகபாடமான அரைசுலோகம் விட்டப்பட்டது.

2 'குற்றவாளியை வெளியிடாமலிருந்தால் அவன் சொந்தக்காரனைப் பிடிக்கவேண்டும். வெளியிட்டானானாலும் மறைத்துவைக்காதவனானாலும் அவனை விடவேண்டுமென்பது' கருத்து.

கொல்லக்கூடாது. தூதனைக்கொன்றவன் மந்திரிகளுடன்கூட நரகத்தைஅடைவான். க்ஷத்திரிய தர்மத்தில் ப்ரீதியுள்ள எந்த அரசன் (எஜமானன்) சொல்லியபடி சொல்லுந்தூதனைக்கொல்லுகிறானோ அவனுடைய பிதிருக்கள் ப்ரூணஹத்தியென்னுந் தோஷத்தைஅடைவார்கள். தூதனானவன், நற்குலத்தில் பிறந்தவனும் நல்லஸ்வபாவமுள்ளவனும் நன்றுகவும் பிரியமாகவும்பேசுகிறவனும் ஸமர்த்தனும் (அரசன் சொல்லியவற்றைத் தன்னை அனுப்பிய இடங்களில்) சொன்னபடி சொல்லுகிறவனும் ஞாபகசக்தியுள்ளவனுமாக ஏழுகுணங்களுடனிருக்கவேண்டும். வாயில்காப்பவனும் அரசனை ரக்ஷிக்கிறவனும் கோட்டை முதலிய முக்கியஸ்தானங்களை ரக்ஷிக்கிறவனும் மேலே சொன்ன குணங்களுள்ளவர்களாயிருக்கவேண்டும். அமாத்தியன் இந்தக் குணங்களுடன்கூடினவனும் தர்மசாஸ்திரங்களின் பொருளின் உண்மையை அறிந்தவனும் ஸந்திவிக்ரஹங்களை அறிந்தவனுமாயிருக்கவேண்டும். புத்தியுள்ளவனும் தைர்யமுள்ளவனும் லஜ்ஜையுள்ளவனும் ரஹஸ்யங்களைவெளியிடாதவனும் நற்குலத்தில்பிறந்தவனும் ஸத்வகுணமுள்ளவனும்பரிசுத்தனுமான அமாத்தியன் சிறந்தவனாகிறான். அப்படியே, சேனாதிபதியும் (அமாத்யனுக்குரிய) இக்குணங்களுடன் கூடினவனாயிருக்கவேண்டும். அன்றியும், சேனைகளின்வியூகங்கள், யந்திரங்கள், ஆயுதங்கள் இவைகளின் உண்மையை அறிந்தவனும் பராக்ரமமுள்ளவனும் குளிர் வெப்பம் மழை காற்றுக்களைப் பொறுப்பவனும் பிறருடைய [1] ரந்த்ரத்தைஅறிந்தவனுமாயிருக்கவேண்டும்; பிறரைத் தன்னிடம் நம்பிக்கையுள்ளவர்களாகச் செய்யவேண்டும்; தான் ஒருமனிதனையும் நம்பக்கூடாது. ராஜேந்திரனே! புத்திரர்களிடத்திலும் நம்பிக்கை சிறந்ததன்று. தோஷமற்றவனே! நீதிசாஸ்திரங்களின் இவ்வுண்மைப்பொருளை நான் உனக்கு உபதேசித்தேன். அரசர்களுக்கு நம்பிக்கையில்லாமை மிக ரஹஸ்யமென்று சொல்லப்படுகிறது" என்று சொன்னர்.

என்பத்தாறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் அரசன்வஸிக்கவேண்டிய நகரலக்ஷணமுதலியவற்றைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! அரசன் எவ்விதம் பட்டணத்தைச்செய்து அல்லது செய்வித்து அதில் தான்வஸிக்கவேண்டும்

---

1 ஆபத்துக்காலம்.

என்பதை எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"பரதகுலத்திலுதித்த களங்தேய! புத்திரர்கள், ஞாதிகள், பந்துக்கள் இவர்களுடன் அரசன் எவ்விடத்தில்வஸிக்கவேண்டுமோ அவ்விடத்திலுள்ள இருப்பையும் அரண்களையும் கேட்பது நியாயமாகும். ஆகையால், விசேஷமாகக் கோட்டைகளைப்பற்றியவிஷயை உனக்குச் சொல்லுகிறேன். அதைக்கேட்டு அப்படிச்செய்வதோடு முயற்சியுடன் நடத்திவரவும்வேண்டும். ஆறுவிதமான துர்க்கத்தை ஏற்படுத்தினபிறகு பட்டணங்களை ஏற்படுத்தவேண்டும். எல்லாவித ஸம்பத்துக்களையும் முக்யமாகக்கொண்ட பெருமையுமிருக்கவேண்டும். [1] மருதுர்க்கம், பூமிதுர்க்கம், கிரிதுர்க்கம், மனுஷ்யதுர்க்கம், [2] ஜல துர்க்கம், வனதுர்க்கம் என்று துர்க்கம் ஆறுவிதம். துர்க்கங்கள் நிரம்பியதும் தான்யங்களுடனும்ஆயுதங்களுடனும் கூடியதும் உறுதியான மதிலும் அகழுமுள்ளதும் யானைகுதிரை தேர்களால் நிறைந்ததும் வித்வான்களும் சிற்பிகளும் விசேஷமாகச் சேரப்பெற்றதும் த்ரவ்யக் கூட்டங்களும் உத்தமமானஸாமர்த்யம்பெற்றதர்மமுள்ள மனிதர்களுமுள்ளதும் பலசாலிகளான மனிதர்களும் யானைகளும் குதிரைகளும் உள்ளதும் (வழிப்போக்கர்கள் தங்குவதற்காகக்கட்டப்பட்ட) வீடுகளாலும் கடைகளாலும் விளங்குவதும் ப்ரஸித்தமான வ்யவகாரமுள்ளதும் கடோரமற்றதும் எவ்விதமான பயமுமில்லாததும் நல்ல காந்தியுள்ளதும் வாத்தியங்களின் முழக்கங்களுடன்கூடியதும் மிகச்சிறந்த வீடுகளுள்ளதும் சூரர்களாலும்அறிஞர்களாலும் நிறைந்ததும் வேதகோஷத்தால் எதிரொலியுள்ளதாகச் செய்யப்பட்டதும் ஸபைகளாலும் உத்ஸவங்களாலும் நிறைந்ததும் எப்பொழுதும் தேவபூஜையுள்ளதுமான பட்டணத்தை அமாத்யர்களையும் சேனைகளையும் தன் வசமாக்கிக்கொண்ட அரசன் தாஙுகப்பிரவேசிக்கவேண்டும். அதில், கோசத்தையும் சேனையையும் மித்ரனையும் விபவகாரத்தையும் விருத்திசெய்யவேண்டும். பட்டணத்திலும் கிராமத்திலுமுள்ள எல்லாத் தோஷங்களையும் விலக்கவேண்டும். பாண்டங்களிருக்குமிடத்தையும் ஆயுதசாலையையும் முயற்சியுடன் பெருகச்செய்யவேண்டும். எல்லாவிதமான (தான்யங்களின்) சுமைகளையும் யந்த்ரசாலைகளையும் கட்டைகள், உலோகங்கள், உமிகள், கரிகள், மரங்கள், கொம்புகள், எலும்புகள், மூங்கில்கள், மஜ்ஜை, எண்ணெய், கொழுப்பு, தேன், மருந்துவகைகள், சணல், ஸர்ஜரஸமென்னும் வாஸனைத்ரவியம், தான்யம், ஆயுதங்கள், அம்புகள், தோல், நரம்பு, பிரம்பு, [3] முஞ்சம், விழல்,

1 பாலைவனம். 2 வேறுபாடம். 3 ஒருவகைத்தர்ப்பம்.

வாத்தியங்கள் இவைகளையும் சேர்க்கவேண்டும். அதிகமான ஜலங்களுக்கிருப்பிடமான கிணறுகளையும் அவற்றினருகிலுள்ளதொட்டிகளையும் பாலுள்ளமரங்களையும் அரசன் எப்பொழுதும் ரக்ஷிக்கவேண்டும். ஆசாரியர்களையும் ரித்விக்குக்களையும் புரோஹிதர்களையும் பெரிய வில்லுள்ளவர்களையும் சிற்பிகளையும் சோதிடங்கற்றவர்களையும் வைத்தியர்களையும் [1] பிராஜ்ஞர்களையும் [2] மேதாவிகளையும் அடக்கமுள்ளவர்களையும் ஸமர்த்தர்களையும் சூரர்களையும் பலசாஸ்திரங்களைக் கற்றவர்களையும் நற்குலத்திற் பிறந்தவர்களையும் ஸத்வகுணம் பொருந்தியவர்களையும் எல்லாவேலைகளிலும் முயற்சியுள்ளவர்களையும் முயற்சியுடன் மரியாதைசெய்யவேண்டும். அரசன் தர்மமுள்ளவர்களைப் பூஜிக்கவேண்டும்; அதர்மமுள்ளவர்களை அடக்கவேண்டும்; முயற்சியுடன்எல்லாஜாதிகளையும் தம்கர்மங்களில்ஏவவேண்டும்; பட்டணங்களிலும் கிராமங்களிலும் உள்ளிலும் வெளியிலுமுள்ள விஷயத்தைச் சாரர்களால் நன்றுகத் தெரிந்துகொண்டபின் காரியத்தை நடத்தவேண்டும்; சாரர்களையும் மந்திராலோசனையையும் கோசத்தையும் தண்டத்தையும் விசேஷமாக அரசன் தானே ஆலோசிக்கவேண்டும். உலகமுழுதும் இவைகளில் நிலைபெற்றிருக்கிறது. பட்டணத்திலும் கிராமத்திலுமுள்ள உதாஸீனர்களும் சத்துருக்களும் மித்திரர்களும் செய்யவிரும்பிய யாவற்றையும் சாரனென்னுங்கண்ணால் அறிந்துகொள்ளவேண்டும். பிறகு, தவறுதலின்றி அவர்களுக்குச் செய்யவேண்டிய காரியம்யாவற்றையும் செய்யவேண்டும். எப்பொழுதும் பக்தியுள்ளவர்களைப் பூஜிக்கவேண்டும்; பகைவர்களை அடக்கவேண்டும். எப்பொழுதும் யாகங்களைச் செய்யவேண்டும்; பீடையின்றித் தானஞ்செய்யவேண்டும்; பிரஜைகளைப்பரிபாலனம் செய்யவேண்டும்; தர்மத்திற்கு விரோதமான காரியத்தைச் செய்யக்கூடாது. ஏழைகளுக்கும் கதியற்றவர்களுக்கும் கிழவர்களுக்கும் பதியிழந்தஸ்திரீகளுக்கும் யோகக்ஷேமத்தையும் ஜீவனத்தையும் எப்பொழுதும் செய்விக்கவேண்டும். காலத்திற்குத்தக்கபடி, அரசன் எப்பொழுதும் ஆதரித்தும் பூஜித்தும் அபிமானித்தும் ஆடைகளையும் பாத்திரங்களையும் போஜனங்களையும் ஆஸ்ரமங்களுக்குஅனுப்பவேண்டும்; தன்னையும் எல்லாக்காரியங்களையும் ராஜ்யத்தையும் முயற்சியுடன் ரிஷிகளிடம் அறிவிக்கவேண்டும்; எப்பொழுதும் அவர்களிடம் வணக்கமுள்ளவனாயிருக்கவேண்டும். பிரஸித்தமான வ்ரதமுள்ள அந்தத் தவத்தினர்கள், ஒருஸமயத்தில் ரக்ஷையைவிரும்பும் அரசனுக்கு இஷ்டப்

1 கிரந்தங்களை க்ரஹிக்கத் திறமையுள்ளவர்கள்.

2 ஊஹிக்குந் திறமையுள்ளவர்கள்.

படி ரக்ஷணையைக்கொடுப்பார்கள். அரசன் நற்குலத்திற்பிறந்தவரும் பல சாஸ்திரங்களைக்கற்றவரும் பொருள்களையெல்லாம்விட்டவருமான அவ்விதத்தவத்தினரைக்கண்டு அவர்களுக்குச் சயனம் ஆஸனம் போஜனம் இவைகளைக்கொடுத்துப் பூஜிக்கவேண்டும். அரசன் ஏதாவது ஓர் ஆபத்துவந்தால் அவரிடம் நம்பிக்கையுடனிருக்கவேண்டும். திருடர்களும் தவமுள்ளவர்களிடம் நம்பிக்கை பாராட்டுகிறார்கள். அவரிடம் நிதிகளைவைக்கலாம்; திரும்பவும் பெற்றுக்கொள்ளலாம். அடிக்கடி அவர்களிடம்செல்வதும் அதிகமாகப் பூஜிப்பதும் கூடா. தன் ராஜ்யங்களில் வேறுன ஒருதாபஸரையும் பரராஜ்யங்களில் வேறுன ஒரு தாபஸரையும் அரண்யங்களில் வேறுன ஒரு தாபஸரையும் ஸாமாந்தர்களின் ராஜ்யங்களில் வேறுன ஒரு தாபஸரையும் இருக்கச் செய்யவேண்டும். தன்ராஜ்யத்திலிருப்பவரிடம்போலப் பரராஜ்யத்திலும் அரண்யத்திலும் இருக்கிற அவர்களிடத்திலும் ஆதரவுடனும் அபிமானத்துடனும் விரும்பியவற்றைக் கொடுக்கச்செய்யவேண்டும். கடுமையான நியமமுள்ள அந்தத்தாபஸர்கள் ஒருஸமயத்தில் ரக்ஷணையிருப்பும் அரசன்பொருட்டு இஷ்டப்படி ரக்ஷணையைக் கொடுப்பார்கள். அரசன் எவ்விதமானதகரில் தான் வஸிக்கத்தக்கவனே அதற்குரிய லக்ஷணத்தைச் சுருக்கமாக உனக்கு உபதேசித்தேன்" என்றுசொன்னர்.

எண்பத்தேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ராஜ்யத்தை ரக்ஷிக்கும் முறையையும் ராஜ்யத்திலிருந்து பொருளைச்சேர்க்கும் முறைமுதலியவற்றையுங் கூறியது.)

யுதிஷ்டிரர், "பாரதர்களிற்சிறந்த ராஜரே! நன்முகஅறியவிருப்பமுள்ள என்பொருட்டு ராஜ்யத்தின் ரக்ஷணையையும் ராஜ்யத்திலிருந்து பொருளைச் சேர்க்கும் விதியையும் உபதேசிக்கவேண்டும்" என்று கேட்டார்.

பீஷ்மர், "ராஜ்யத்தின்ரக்ஷணையையும் ராஜ்யத்தினின்று கிரஹிக்கும் விதியனைத்தையும் இப்பொழுது நன்முக உனக்கு உபதேசிக்கிறேன்; அவற்றை நீ ஏகமனமாகக் கேள். கிராமத்திற்கு ஒரு தலைவனை நியமிக்கவேண்டும். அப்படியே, பத்துக்கிராமங்களுக்கு ஓர் அதிபதியையும் இருபதுக்கொருவரையும் முப்பதுக்கொருவரையும் நூறுகிராமங்களுக்கொருவரையும் ஆயிரம்கிராமங்களுக்கு ஓர் அதி

1 இங்கு வேறுபாடம்கொள்ளப்பட்டது.

பதியையும் நியமிக்கவேண்டும். கிராமத் தலைவன் கிராமத்திலுள்ள விஷயங்களையும் அதிலுள்ள தோஷங்களையும் கவனிக்கவேண்டும். கவனித்தவிஷயங்களைப் பத்துக்கிராமங்களுக்கு அதிபதியாயிருப்பவனிடம் அறிவிக்கவேண்டும்.பத்துக் கிராமங்களுக்குப் பதியாயிருப்பவன் இருபது கிராமங்களுக்குப் பதியாயிருப்பவனிடமும், இருபது கிராமங்களுக்குப் பதியாயிருப்பவன் அவ்விஷயங்கள்யாவற்றையும் மூப்பது கிராமங்களுக்குப் பதியாயிருப்பவனிடமும்,அவன் யாவற்றையும் நூறு கிராமங்களுக்குப் பதியாயிருப்பவனிடமும் அறிவிக்க வேண்டும். கிராமாதிகாரியானவன் கிராமத்திலுள்ள புஜிக்கத்தக்கவைகளைப் புஜிக்கவேண்டும். பத்துக்கிராமங்களுக்குத் தலைவனுயிருப்பவன் அந்தக் கிராமங்களிலுண்டாகும் பொருள்களால் போஷிக்கப்படத்தக்கவன். இருபது கிராமங்களுக்குப் பதியாயிருப்பவனும் அப்பொருளால் போஷிக்கப்படத்தக்கவன். பரதர்களில் மிகச் சிறந்தவனே! நூறுகிராமங்களுக்குப் பதியாயிருப்பவன் ஆதரிக்கப்பட்டுப் பெரிதும் மிகவளர்ந்ததும் ஜனக்கூட்டமுள்ளதுமான ஒரு கிராமத்தை அனுபவிக்கத்தக்கவன். ஓ! பாரத! ராஜ்யத்திலுள்ள கிராமமானது, அரசனுடைய அப்பெரிய அதிகாரியின் [1]அதீனமாயிருக்கும். உத்தமனை ஆயிரங்கிராமங்களுக்குப் பதியாயிருப்பவன் ராஜ்யாதிகாரியுடன் சேர்ந்து தான்யம் ஸ்வர்ணம் இவைகளின் போகங்களுடன் சிறியபட்டணத்தை அனுபவிக்கத் தக்கவனுவான். அவ்வதிகாரிகளுடைய யுத்தவேலையையும் கிராமவேலையையும் தர்மமறிந்த ஒரு மந்திரி சோம்பலின்றிக் கவனித்து வரவேண்டும். ஒவ்வொரு நகரிலும் எல்லா விஷயங்களையும் சிந்திக்கத் தக்கவனுக ஒருவனுவது இருக்கவேண்டும். அவன் நகஷத்திரங்களுள் க்ரஹம்போலக் சுடோரூபமுள்ளவனுக உயர்ந்த ஸ்தானத்தில்இருக்கவேண்டும். அவன் ஸபையினதிகாரிகளான அவர்கள் யாவர்களையும் சுற்றிப்பார்க்க வேண்டும்.அவனுடைய தூதனுன் ஒருவன் ராஜ்யங்களில் அவ்வதிகாரிகளின் நடையைக் கவனிக்கச் சுற்றவேண்டும். ரக்ஷிக்கும் அதிகாரம் பெற்றவர்கள் வஞ்சகர்களும் பிறர்பொருளைக் கவர்கின்றவர்களும் பாபத்திலாசையுள்ளவர்களும் கொல்லவிருப்பமுள்ளவர்களுமாயிருப்பார்கள். அவர்களிடமிருந்து இந்தப்பிரஜைகளை ரக்ஷிக்கவேண்டும். கொள்ளுதலையும் விற்பனைதயும் [2]வழியையும் [3]உணவையும் செலவையும் யோகக்ஷேமங்

---

1 அவ்வதிகாரியை நன்றுகச் சந்தோஷப் படுத்தாவிட்டால் அவன் அதீனமான கிராமங்களை அனுபவிக்க முடியாதென்பது கருத்து.

2 கொள்ளுமிடம் விற்குமிடங்களின் தூரம்.

3 உணவிற்காகும் செலவு என்பதுபொருள்.

களையுங் கவனித்து வர்த்தகர்களுக்கு வரிகளை ஏற்படுத்த வேண்டும். உண்டாவதையும் கொடுப்பதையும் தொழிலையும் பலமுறைகவனித்துத் தொழிலாளிகளைக் குறித்துத் தொழிலுக்குத் தக்கபடி வரிகளை ஏற்படுத்தவேண்டும். ஓ! யுதிஷ்டிர! அரசன் முன்னோர்களான அரசர்களுடைய பலவிதமான சுப்பங்களுக்குரிய நீதிகள் மாறுதிருக்கும்படி செய்யவேண்டும். பயனையும் தொழிலையும் நன்கு கவனித்து யாவற்றையுஞ் செய்யவேண்டும். தொழிலும் அதன்பயனும் காரணமின்றிச் சிறிதும் நடைபெறா. அரசனும் தொழிலாளியும் தொழிலின் பயனுள்ளவர்களாக எவ்விதமாவார்களோ அவ்விதம் அரசன் ஆலோசித்து எப்பொழுதும் வரிகளை ஏற்படுத்தவேண்டும். அரசன், ஆசையால், தனக்கு மூலமான ராஜ்யத்தையும் பிறர்களுக்கு மூலமான காரியத்தையும் நசிக்கச்செய்யாமலிருக்கவேண்டும். லோபத்தின் வழிகளை மறைத்துக்கொண்டு மறைவான திருஷ்டியுள்ளவனாயிருக்கவேண்டும். அதிகமாக வரிவாங்குந் தன்மையுள்ளவனென்று ப்ரஸித்தி பெற்ற அரசனை ஜனங்கள் பகைப்பார்கள். (ஜனங்களால்) பகைக்கப்பட்டவனுக்கு சுகமேது? மறைவாயிருப்பவன் ஸம்பத்தை அடைவான். அரசன் சோர்வில்லாத புத்தியுள்ளவனாய்க் கன்றுக்கொப்பாக ராஜ்யத்தைக் கறக்கவேண்டும். ஓ! பாரத! போஷிக்கப்பட்ட கன்றானது பலமுள்ளதாகத் துன்பங்களைப்பொறுக்கும். ஓ! யுதிஷ்டிர! மிகவும் கறக்கப்பட்ட பசுவின்கன்றானது வேலையைச்செய்யாது. ராஜ்யமும் அதிகமாகக் கறக்கப்பட்டால் பெரியகாரியத்தை உண்டுபண்ணாது. எந்த அரசன் தானே பரிபாலித்துக்கொண்டு ராஜ்யத்தை அனுக்ரஹிக்கிறானோ அவன் அதில் உண்டானதைப் புஜித்துக்கொண்டு மிகப்பெரிதான பயனை அடைகிறான். அரசர்கள் ஆபத்து நிமித்தம் திரவியக் குவியல்களைத் தேடுகிறார்கள். வீட்டிலிருக்கும் கோசம்போல ராஜ்யமும் கோசமாயிருக்கும். பட்டணத்திலுள்ளவர்களும் கிராமத்திலுள்ளவர்களும் அருகிலிருப்பவர்களும் விலகியிருப்பவர்களுமான யாவர்களிடமும் அப்படியே மிக அல்பமான பொருளுள்ள யாவர்களிடமும் சக்திக்குத்தக்கபடி தயைசெய்யவேண்டும். [1] வெளியிலுள்ள ஜனத்தைப் [2] பேதப்படுத்தி நடுவிலுள்ளகிராமத்தை ஸுகமாக அனுபவிக்கவேண்டும். இவ்விதமுள்ள அரசனிடம் ஸுகமுள்ளவர்களும் துக்கமுள்ளவர்களுமான ஜனங்கள் கோபம் அடையமாட்டார்கள். முந்தியே பொருள் வேண்டுமென்பதைத்

---

1 காட்டிலுள்ள திருட்டு ஜனங்கள்.

2 கிராமத்தினருகில் வஸிக்கச் செய்வது.

தெரிவித்துவிட்டு அதன்பிறகு தனக்குரியதான ராஜ்யத்திற் சென்று, 'இதோ துன்பமுண்டாயிருக்கிறது; பிறர்படையின் பயம் பெரிதாயிருக்கிறது; அன்றியும், மூங்கில அதன்விதையின் வரவானது நாசமாக்குவதுபோலப் பலதிருடர்களுடன் கிளம்பி எனது பகைவர்கள் நாசஞ்செய்ய முயலுகிறார்கள். தம்வதத்திற் காகவே இந்தராஜ்யத்தைப் பீடிக்கவிரும்புகிறார்கள். கொடுமை யான இந்த ஆபத்தும் பெரியபயமும்வந்தபடியால் உங்களைரக்ஷிக்க வேண்டி உங்களுடையபொருள்களை வேண்டுகிறேன். பயம்விலகின உடன், உங்கள்பொருளையெல்லாம் நான் திரும்பவும் கொடுத்து விடுகிறேன். பகைவர்கள் பலாத்காரமாக இங்கிருந்து எடுத்துப் போவார்களானல் திரும்பவும் கொடுக்கமாட்டார்கள். பெண்டி ரும் மற்றயாவும் உங்களுக்கு நாசமடைந்துபோம்' என்று பயத் தைக் காண்பிக்கவேண்டும். ஸமயமறிந்த அரசன் உபாயத்தைச் செய்தபின், 'பொருளின்சேர்க்கையானது சரீரம் புத்திரர்கள் பெண்டிர் இவர்களுக்காக விரும்பப்படுகின்றது. புத்ரர்களுடைய பெருமையைப்போல உங்களுடைய பெருமையைக்கண்டு சந்தோ ஷிக்கிறேன். ராஜ்யத்திற்கும் உங்களுக்கும் கஷ்டமின்றிச் சக்திக் குத்தக்கபடி பெற்றுக்கொள்ளுகிறேன். ஆபத்காலங்களில்தான் நீங்கள் ஒன்றுசேர்ந்து பொறுக்கவேண்டும். ஒருவித ஆபத்துள்ள ஸமயத்தில் நீங்கள் பொருளில் அதிகஆசை பாராட்டக்கூடாது' என்று இனியதும் எளியதும் மரியாதையுள்ளதுமான சொல்லு டன் தன் கையிலுள்ள கயிறுபோன்றமனிதர்களை அனுப்பவேண் டும். 1 யாத்திரையையும் வேலைக்காரர்களின் சம்பளத்தையும் செலவையும் யுத்தத்திலிருந்து பயத்தையும் யோகக்ஷேமத்தையும் தெரிவித்து வைஶ்யர்களுக்கு வரியை ஏற்படுத்தவேண்டும். அரண்யத்தில் வஸிக்கும் வைஶ்யர்களைக் கவனியாமலிருந் தால் அவர்கள் நாசமடைவார்கள். ஆகையால், அவர்களிடம் விசேஷமாகக் கொடுமையில்லாமையை முன்னிட்டு நடந்துவர வேண்டும். ஓ! பார்த்த! வைஶ்யர்களுக்கு நன்மொழிபுரைத்தலு டன் ரக்ஷணையும் தானத்தையும் அடிக்கடி அவர்களின் இருப்பி டத்தையும் நிலம்முதலியவற்றின் பிரிவையும் விரும்பியவற்றையும் செய்துகொடுக்கவேண்டும். பாரத! வைஶ்யர்களிடம் எப்பொழு தும் பயனைக் கொடுத்துவரவேண்டும். அவர்கள் ராஜ்யத்தையும் தொழிலையும் அப்படியே கிருஷியையும் விருத்திசெய்வார்கள். ஆகையால், அறிவுள்ளவன் முயற்சியுடன் தையுள்ளவனும் அஜாக்ரதையின்றி எளியவரிகளை விதிப்பவனுமாகி வைஶ்யர்க

1 'பிராகாரத்தை' என்பது வேறுபாடம்.

னிடம் பிரீதிசெய்யவேண்டும். ஓ! யுதிஷ்டிர! வைப்யர்கள் விஷயத்தில் சூக்ஷமத்தைச்செய்வது எவ்விடத்திலும் எளிது. அதற்கு ஒப்பான தனம் ஒன்றுமில்லை" என்று சொன்னர்.

எண்பத்தெட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் குடிகளிடம் வரிவாங்குதம் முறைமுதலியவற்றைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "பெரிய புத்தியுள்ள பிதாமஹரே! அரசன் ஸாமர்த்தியம் உள்ளவனுயிருந்தும் எப்பொழுது கோசத்தில் விருப்பமுள்ளவனுகிறானே அப்பொழுது [1] எவ்விதம் நடக்கக் கடவனென்பதை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்டனர்.

பீஷ்மர், "தர்மத்தைவிரும்பிய அரசன் பிராணிகளின் ஹிதத்தில் ஆசையுள்ளவனுகித் தேசம், காலம், பலம், புத்தி இவைகளுக்குத்தக்கபடி பிரஜைகளைக் கட்டளையிடவேண்டும். அரசன் பிரஜைகளுக்கும் தனக்கும் எவ்விதம் சூக்ஷமத்தை நினைக்கிறானே அவ்விதம் ராஜ்யங்களில் எல்லாத்தர்மங்களையும் நடத்திவரவேண்டும்; தேனைக் கறப்பதுபோல ராஜ்யத்தைக் [2] கறக்கவேண்டும்; வண்டுகளை விழும்படிசெய்யக்கூடாது; கன்றின் கவனமுள்ளவனுகவே கறக்கவேண்டும்; முலைகளைக் குத்தக்கூடாது. அரசன் அட்டைபோல எளிய உபாயத்தாலேயே ராஜ்யத்தைப் பானஞ்செய்யவேண்டும். பெண்புலியானது தன்குட்டிகளை எடுப்பதுபோலப் பீடியாமல் பிடிக்கவேண்டும். சல்யகமென்ற கூர்மையான முகமுள்ள எலியானது தூங்குகிறவன்காலைக் கவ்விஎடுப்பதுபோல எப்பொழுதும்கொடுமையில்லாத உபாயத்தால் ராஜ்யத்தை அனுபவிக்கவேண்டும். கொஞ்சங்கொஞ்சமாக வரியை விருத்தியாகும்படி கொடுக்கச்செய்யவேண்டும். அதன்பிறகு அதிகமும் அதன் பிறகு அதிகமுமாக முறையே வரியைப்பெருகச் செய்யவேண்டும். அடக்கவேண்டியகாளைகளை அடக்குகிறவன்போலக் கிரமமாகச் சுமையை விருத்திசெய்யவேண்டும். எளிதாகத்தொடங்கி முயற்சியுடன் பூட்டும்கயிறுகளைப் பெருக்கச்செய்யவேண்டும். அடக்கக் கடினமானவைகள் ஒரேமுறையில் கயிறுகளாலிழுக்கப்பட்டால் அவைகள் நாசமடையும். யுக்தமான உபாயத்தாலேயே முயற்சி

---

1 'எவ்விதம் வரிவிதிக்கவேண்டும்?' என்பது வேறுபாடம்.

2 வரி வாங்கவேண்டுமென்ப.

யின்றி அவைகள் அனுபவிக்கத்தக்கவைகளாகும். எல்லா உபாயமும் ஒவ்வொருமனிதனிடமும் செய்வது அரிது. ஆகையால், தலைமையாயிருப்பவர்களை இணங்கச்செய்தால் மற்ற ஜனங்கள் ஆளத்தக்கவர்களாவார்கள். ஒருவரோடொருவர்சேர்ந்து வஸிக்கவிரும்பிய அந்தமனிதர்களை வேறுபடுத்தி இணங்கச்செய்துகொண்டு முயற்சியின்றி ஸுகமாக ஆளவேண்டும். [1] அஸ்தானத்திலும் அஸமயத்திலும் அவர்களிடம் வரிகளை வாங்கக்கூடாது. கிரமமாகவும்நல்வார்த்தையாலும் காலத்திற்குத் தக்கபடியும் விதிப்படியும் வரிகளை வாங்கவேண்டும். இவ்வுபாயங்களை உபதேசிக்கிறேன். கபடமாகச் சொல்லவேண்டுமென்றவிருப்பம் எனக்கில்லை. உபாயத்தை மீறி அடக்கும் மனிதன் குதிரைகளை மிகக்கோபமுள்ளவைகளாகச் செய்வான். கள்ளுக்கடையிலிருக்கிறவர்களும் வேசைகளும் அவர்களைச் சேர்த்துவைக்குந் தொழிலுள்ளவர்களும் [2] நட்டுவர்களும் சூதாடுகிறவர்களும் இவர்கள்போன்ற மற்றுமுள்ள சிலர்களும் ராஜ்யத்திற்கு இடையூறுசெய்கிறவர்கள். இவர்கள் யாவரும் அடக்கப்படத்தக்கவர்கள். இவர்கள் ராஜ்யத்திலிருந்தால் க்ஷேமமுள்ள பிரஜைகளைப் பீடிப்பார்கள். 'ஆபத்தில்லாதஸமயத்தில் எவனும் எந்த மனிதனையும் [3] எதையும் யாசிப்பதுகூடாது' என்னும் வியவஸ்தையான து முன்காலத்தில் மனுவினல் பிராணிகளுக்குச் செய்யப்பட்டது. யாவரும் அப்படியே ஒத்துப்பிழைக்கவேண்டும். அவ்விதம் இவ்வுலகில் செய்கையை நடத்தாவிட்டால் இவ்வுலகங்கள் யாவுமே ஸந்தேகமில்லாமல் நாசமடையும். அடக்கும் அதிகாரம்பெற்ற எந்த அரசன் இவர்களை அடக்கவில்லையோ அவன் அப்பாவத்தின் நாலிலொரு பாகத்தை அனுபவிப்பானென்று வேதம் விதிக்கிறது. புண்ணியத்தைப் புஜிக்கிறதுபோலப் பாவத்தையும் புஜிப்பவனவான். ஓ! ராஜனே! அரசன் எப்பொழுதும் பாவிகளை அடக்கவேண்டும். அவர்களை எந்த அரசன் அடக்கவில்லையோ அவன் பாவஞ் செய்தவனவான். அவ்விதம் அடக்குகிறவன் அவர்கள் செய்த தர்மத்தின் நாலிலொரு பாகத்தை அடைகிறான். கள்ளுக்கடைமுதலிய இந்த இடங்களை அடுத்துச்செல்வது செல்வத்தை அழியச்செய்யும். காமத்தில் அதிகப் பற்றுள்ள மனிதன் எந்த அகாரியத்தை விலக்குவான்? காமத்திற்கிடுபட்டவன் கள்ளையும் மாம்ஸத்தையும் பிறர்பொருளையும் அப்படியே தாரங்களையும் தனங்களையும் அபகரிப்பான்; அப்

---

1 கெட்டகார்யத்தில்.

2 'குசீலவா:' என்பது மூலம்; அதற்கு, 'விடர்கள்' என்பது பழைய

3 'கொடுத்தபொருளையும் வரியையும்' என்பது பழையஉரை. [உரை.

படியே ஆஜ்ஞையை வெளியிடுவான். எவர்களுக்கு எவ்விதப் பொருளுமில்லையோ அவர்கள் ஆபத்துள்ள ஸமயத்தில் மாத்திரம் யாசிப்பார்கள். தயையாலும் தர்மத்தாலும் அவர்கள்பொருட்டுத் தானஞ்செய்வதன்றிப் பயத்தால் செய்வதுகூடாது. உன் ராஜ்யத்தில் யாசிக்கிறவர்களும் திருடர்களும் இருக்கவேண்டாம். அவர்கள் பிராணிகளைத் துன்பப்படுத்துகிறவர்களேயல்லாமல் அணுகூலராயிருப்பவர்களல்லர். பிராணிகளிடம் அன்புபாராட்டுகிறவர்களும் பிரஜைகளைப் பெருகச்செய்கிறவர்களும் உன் ராஜ்யத்தில் இருக்கட்டும். பிராணிகளைத் துன்பப்படுத்துகிறவர்கள் இருக்கவேண்டாம். ஓ! மஹாராஜனே! அதிகமான கப்பத்தை வாங்கச்செய்யும் அதிகாரிகளைத் தண்டிக்கவேண்டும். 1 அவர்கள் எவ்விதம் வரிகொடுப்பார்களோ அவ்விதம் நீ செய்விக்கவேண்டும். கிருஷியையும் பசுக்காத்தலையும் வர்த்தகத்தையும் மற்றுமுள்ள இவைபோன்ற வேலைகளையும் பலமனிதர்களைக்கொண்டு நடத்தச்செய்யவேண்டும். இல்லாவிட்டால் காரியத்திற்குக் கேடுவரும். கிருஷியையும் பசுக்காத்தலையும் வர்த்தகத்தையும் செய்யும் மனிதன் (திருட்டுப்பயத்தாலும் அதிகாரிகளின்பயத்தாலும்) சிறிதும் ஸந்தேகத்தை அடைவானாகில் அதனால் அரசன் இகழ்ச்சியுள்ளவனுவான். தனமுள்ள மனிதர்களைப் பானமும் ஆடைகளும்போஜனமுமாகிய இவைகளால் எப்பொழுதும் பூஜிப்பதுடன், 'என்னுடன் கூடி ப்ரஜைகளிடம் அன்புள்ளவர்களாயிருங்கள்' என்று சொல்லவும் வேண்டும். ஓ! பாரத! தனமுள்ளவர்கள் ராஜ்யத்திற்குப் பெரிய அங்கமென்பது பிரஸித்தம். தனமுள்ளவன் எல்லாப் பிராணிகளுக்கும் தலைமையாயிருப்பவனென்பதிற் சந்தேகமில்லை. ஞானமுள்ளவனும் சூரனும் தனமுள்ளவனும் தர்மமுள்ளவனும் தவமுள்ளவனும் உண்மைபேசுகிறவனும் புத்தியுள்ளவனுமான எஜமானன் ப்ரஜைகளை ரக்ஷிக்கத்தக்கவன். ஆகையால், ஓ! அரசனே! எல்லாப் பிராணிகளிடத்திலும் பிரீதியுள்ளவனாகி இருந்து. ஸத்யத்தையும் நேர்மையையும் கோபமில்லாமையையும் கொடுமையில்லாமையையும் கைப்பற்று. ஓ! ராஜனே! இவ்விதம் உண்மையையும் நேர்மையையும் பரிதாகக்கொண்டவனும் நண்பர்களையும் பொக்கசத்தையும் சேனையையுமுடையவனுமான நீ தண்டத்தையும் அதிகமான கோசத்தையும் மித்திரனையும் பூமியையும் பின்னும் அடைவாய்.

---

1 'அவ்விதமில்லாத அதிகாரிகளை வரிகளை வாங்கும் அதிகாரத்தில் ஏவவேண்டும்' என்பது வேறுபாடம்.

எண்பத்தோன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் ராஜ்யத்தின் இயல்பையும் ரக்ஷணமுறையையுங் கூறியது.)

ஓ! ராஜனே! உன்ராஜ்யத்தில் புஜிக்கத்தக்க கனியுள்ள மரங்களை வெட்டக்கூடாது. கிழங்கும் கனியும் பிராம்மணர்களின் பொருளென்று அறிஞர்கள் தர்மத்தைஉபதேசிக்கிறார்கள். பிராம்மணர்களுக்குக்கண்டு அதிகமாயிருப்பதை மற்ற ஜனங்கள் புஜிக்க வேண்டும். பிராம்மணனுக்கு விரோதமாக மற்றவன் எவ்விதத்திலும் அபகரிக்கக்கூடாது. ஜீவனமில்லாததால் குறைவடைந்த பிராம்மணன் தெரிவித்துவிட்டு ராஜ்யத்தைவிட முயல்வானுகில் தாரத்துடன் சேர்ந்த அவனுக்கு ஜீவனத்தைஉண்டுபண்ணவேண்டும். அந்தப் பிராம்மணன் திரும்பாமற்போனால் பிராம்மணர்களின் கூட்டத்தில், 'இப்பொழுது இவ்வுலகம் எந்த விஷயத்தில் மரியாதையைச்செய்யும்?' என்று சொல்லவேண்டும். (அப்பொழுது) ஸந்தேகமின்றித் திரும்புவான். அவ்விதமில்லாமல் ஜீவனத்திற்கும் மேலான போகம்வேண்டுமென்று நகரைவிடுவானுகில், 'ஓ! பிராம்மண! முதன்மையான இப்போகவிருப்பத்தை மறக்கவேண்டும்' என்று தெரிவிக்கவேண்டும். ஓ! கௌந்தேய! இது சாஸ்வதமான தர்மமென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். நான் இதை நம்பவில்லை. (பிராம்மணன்) போகங்களை வேண்டினால் அவைகளாலும் உபசரிக்கத்தக்கவன். ஜீவனமில்லாமற் போனால் அதையும் அவனுக்குச் செய்துகொடுக்கவேண்டும். பிராணிகளுக்குக் கிருஷியும் பசுக்களைக்காத்தலும் வர்த்தகமும் இவ்வுலகில் ஜீவனமாகும். வேதவித்தையானது மேலுலகத்திற்கும் ஸாதனமாகும்; அது பிராணிகளைப் பரிசுத்தமாகவுஞ்செய்யும். அவ்வித்தையானது கீழேவிழுங்காலத்தில் எவர்கள் அதற்கு விரோதியான திருடர்களாயிருக்கிறார்களோ அவர்களைக் கொல்லவேண்டிப் பிரம்மதேவர் இவ்வுலகில் க்ஷத்திரியனைப் படைத்தார். ஆகையால், ஓ! அரசனே! பகைவர்களை வெல்லு; பிரஜைகளைப்பாதுகா; யாகங்களைச் செய். கௌரவ குமாரனே! சூரனையிருந்து யுத்தத்தில் போர்புரி. ரக்ஷிக்கத்தக்கவர்களை ரக்ஷிக்கும் அரசன் அரசர்களில் மிகச்சிறந்த அரசனுவான். அவர்களை ரக்ஷியாத சில அரசர்களால் யாதொரு பயனுமில்லை. ஓ! யுதிஷ்டிர! எல்லா உலகங்களின் க்ஷேமத்திற்காகவும் அரசன் எப்பொழுதும் யுத்தஞ்செய்யவேண்டும். அந்தக்காரணம்பற்றியே மனிதன் மனிதர்களையே ஆளத்தக்கவன். அகத்திலுள்ளவர்களிடமிருந்து வெளியி

ஓள்ளவர்களையும் வெளியிலுள்ளவர்களிடமிருந்து அகத்திலுள்ளவர்களையும் ரக்ஷித்துக்கொண்டு பிறர்களிடமிருந்து பிறர்களையும் இனத்தார்களிடமிருந்து எல்லாஇனத்தார்களையும் எப்பொழுதும் பாலனஞ்செய். ஓ! அரசனே! எல்லாவிடத்திலிருந்தும் உன்னை ரக்ஷித்துக்கொண்டு பூமியை ரக்ஷித்துக்கொள். அறிவுள்ள ஜனங்கள் இவையாவும் அரசனையே மூலமாக உடையனவென்று சொல்லுகிறார்கள். (அரசன்,) 'என்ன இடைவெளியிருக்கிறது? எனக்கு எவ்விதவ்யஸனப்பற்றுதலிருக்கிறது? எது விழ்த்தப்படாதது? எவ்விடமிருந்து என்னைக் குற்றந்தொடருமென்? ' என்று எப்பொழுதும் சிந்திக்கவேண்டும். சென்றநாளில் நடத்தியதைப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்களா, இல்லையாவென்றும் ஆராயவேண்டும். நம்பிக்கையுள்ள ரஹஸ்யமான சாரர்களை அனுப்பி, 'எனது நடக்கையைக் கொண்டாடுகிறார்களா இல்லையா? கிராமத்தில் என்னிடம் அன்பிருக்கிறதா; ராஜ்யத்திலும் என்னுடைய கீர்த்தி இருக்கிறதா என்பதை அறியுங்கள்' என்று பூமியைச்சுற்றிச்செல்லச் செய்யவேண்டும். ஓ! யுதிஷ்டிர! தர்மமறிந்தவர்களும் தைரியமுள்ளவர்களும் யுத்தங்களில் ஓடாதவர்களுமான ஜனங்களுள் ராஜ்யத்தில் எவர்கள் அடித்துப்பிழைப்பவர்களோ எவர்கள் அரசனை அடித்துப் பிழைப்பவர்களோ அமாத்யர்களுள்ளும்தடஸ்தர்களான எல்லாஜனங்களுள்ளும் எல்லாவிதத்திலும் எவர்கள் உன்னைக் கொண்டாடுகிறார்களோ அல்லது நிந்திக்கிறார்களோ அவர்கள் யாவர்களையும் மரியாதையுள்ளவர்களாக நீ செய்யவேண்டும். அப்பா! ஒரேஉறுதியாக அனைவர்களுக்கும் அன்புள்ளவனாயிருப்பது முடியாது. ஓ! பாரத! எல்லாப் பிராணிகளிடமும் நட்பும் பகையும் 1 நொதுமலும் உண்டு" என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், "ஸமமான புஜபலமும் குணங்களுமுடையவர்களான ஜனங்களுள் ஒருவன் எப்படிச் சிறந்தவனாயிருக்கக்கூடும்? அவன் எப்படி மனிதர்களை ஆளக்கூடும்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "ஜங்கமங்கள் ஸ்தாவரங்களை ஆளத்தக்கவைகள். அப்படியே பல்லுள்ளவைகள் ஸர்ப்பங்கள்போலக் கோபமுற்றுப் பல்லில்லாதவைகளைப் (பெரிய) பாம்புகள் (சிறிய) பாம்புகளைப் புஜிப்பதுபோலப் புஜிக்கின்றன. ஓ! யுதிஷ்டிர! இவைகளிடமிருந்தும் சத்ருவிடமிருந்தும் எப்பொழுதும் அஜாக்ரதையில்லாமல் இருக்கவேண்டும். அஜாக்ரதையாயிருந்தால் இவர்கள் கழுகுகள்போல விழுவார்கள். மிகுதியாகவும் குறைவாகவும் பண்டங்களைவாங்குகிறவர்களும்

1 நட்பும் பகையுமில்லாமை.

அரண்யங்களில் ஸ்ரமபரிகாரம் செய்துகொள்ளுகிறவர்களுமான வர்த்தகர்கள் உன்ராஜ்யத்தில் வரிகளால் பீடிக்கப்பட்டுப் பயமடையாமலிருக்கிறார்களா? கிருஷிசெய்கிறவர்கள் மிகவும் தண்டிக்கப்பட்டு ராஜ்யத்தை விடாமலிருக்கிறார்களா? அரசர்களின் பாரத்தை வஹிக்கும் அவர்கள் மற்றவர்களையும் போஷிக்கிறார்கள். சோம்பலால் (தர்மத்தின்) ஒருபாகம் அபகரிக்கப்படும். ஒருபாகம் பாஷண்டனை அடைந்திருக்கிறது. ஒரு பாகம் அரசனை அடுத்திருக்கிறது. ஒருபாகம் கிருஷியை அடுத்திருக்கிறது. (அரசனை அடுத்த) ஒருபாகத்தை மூன்று பாகங்கள் ஒவ்வொருநாளும் விழுங்குகின்றன. ஆகையால், ஓ! யுதிஷ்டிர! எல்லா முயற்சியாலும் அரசன்பாகத்தை [1] ரக்ஷித்துக்கொள். தேவர்களும் அப்படியே பிதிருக்களின் கூட்டங்களும் மானிடர்களும் உரகர்களும் ராக்ஷஸர்களும் பறவைகளும் பசுக்களும் இங்கிருந்து கொடுக்கப்படுவதால் ஜீவிக்கிறார்கள். பரதகுலத்தில்உதித்த பாண்டவ! அரசர்களுக்குரிய இந்த ராஜ்யத்தின் நிலைமையும் ரக்ஷிக்கும் முறையும் உனக்கு உபதேசிக்கப்பட்டன. இவ்விஷயத்தைப்பற்றியே திரும்பவும் சொல்லுகிறேன்.

தொண்ணூற்றுரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(உசத்தியர் மாந்தாதாவுக்கு ராஜதர்மோபதேசஞ் செய்தது.)

ஓ! யுதிஷ்டிர! அங்கிரஸின் புத்திரரும் பிரம்மஜ்ஞானிகளிற் சிறந்தவருமான உசத்தியரானவர் பிரீதியுடன் யுவனஸ்வனின் புத்திரனை மாந்தாதாவுக்கு க்ஷத்திரியர்களுக்குரிய எந்தத் தர்மங்களை உபதேசித்தாரோ, சிறந்த பிரம்மஜ்ஞானியான அந்த உசத்தியர் அந்த மாந்தாதாவைக் குறித்து எவ்விதமுபதேசித்தாரோ அவைமுழுமையும் அவ்விதமே நான் உனக்கு நன்றாகச் சொல்லுகிறேன்.

உசத்தியர், 'ஓ! மாந்தாதாவே! அரசன் தர்மத்திற்காக இருக்கிறானேயல்லாமல் தன்இஷ்டங்களைச் செய்கிறதற்காக இருக்கவில்லை. உலகத்தை ரக்ஷிப்பவன் அரசனென்று தெரிந்துகொள். அரசன் தர்மத்தைச்செய்வானாகில் தெய்வத்தன்மைக்குத் தக்கவனாவான். அவன் அதர்மத்தைச் செய்வானாகில் நரகத்தின்பொருட்டே செல்வான். பிராணிகள் தர்மத்திலிருக்கின்றன. தர்மம் அரச

---

1 அரசனையடுத்தபாகம் நன்குரக்ஷிக்கப்படின் மற்ற மூன்றும் நன்கு ரக்ஷிக்கப்படும் என்பது கருத்து.

னிடத்திலிருக்கிறது. அந்தத்தர்மத்தை எந்த அரசன் நன்றாக நடத்துகிறானோ அந்த அரசன் ஸம்பத்தையடைகிறான். ஓ! மாந்தாதாவே! அரசனுடைய குற்றத்தால் செல்வமுள்ளவன் பாபியென்றுசொல்லபடுவான். தேவர்களும் இகழ்ச்சியை அடைகிறார்கள். தர்மம் இல்லையென்று சொல்லவும்படும். அதர்மிஷ்டர்களுக்கும் பொருளின்வ்ருத்தியானது காணப்படும். உலகம்முழுதும் அதனையே மங்களமென்று தொடர்ந்துநிற்கிறது. எப்பொழுது பாபம் தடுக்கப்படவில்லையோ அப்பொழுது தர்மஒழுக்கம் நாசமடைகிறது. அதர்மம் பெரிதாய் வளருகிறது. இரவும்பகலும் பயத்தைச் சொல்லுகிறார்கள். அப்பா! பாபத்தைத் தடாவிட்டால் தர்மப்படி, 'இஃது என்னுடையது; இஃது இல்லை' என்ற ஸாதுக்களின் வ்யவஸ்தையானது இராது. பாவம் பலமாக இருக்கும் பொழுது மனிதர்களுக்குப் பெண்டிரும் பசுக்களும் நிலமும் வீடும் காணப்படா. பாவத்தைத்தடாமற்போனால் தேவர்கள் பூஜையை அறியமாட்டார்கள்; பிதிருக்கள் ச்ராத்தத்தை அறியமாட்டார்கள்; அதிதிகள் பூஜிக்கப்படமாட்டார்கள். எப்பொழுது பாவம் தடுக்கப்படவில்லையோ அப்பொழுது பிராம்மணர்கள் விரதமுள்ளவர்களாய் வேதங்களைக் கற்கமாட்டார்கள்; யாகங்களைச் செய்யமாட்டார்கள். ஓ! மஹாராஜ! பாவம் தடுக்கப்படாதபோது மனிதர்களின்மனம் கொலைசெய்யப்படும் பிராணிகளின் மனம்போலத் துயரமுற்றதாயிருக்கும். ஆகையால், முனிவர்கள் இரண்டுஉலகங்களையும் உத்தேசித்து, 'இவன் தர்மத்தைக்-காப்பவனாயிருப்பான்; இவன் பரியநிலைமையடைந்தவஸ்து' என்று அரசனை உண்டுபண்ணினார்கள். எவனிடம் தர்மம் விளங்குகிறதோ அவனை அரசனாகச் சொல்லுகிறார்கள். எவனிடம் தர்மம் நாசமடைகிறதோ அவனைத் தேவர்கள் சூத்திரனென்று அறிகிறார்கள். சிறந்ததான வ்ருஷமென்னும் தர்மத்திற்கு லயத்தைச் செய்பவனைத் தேவர்கள் [1]வ்ருஷலனென்று அறிவிக்கிறார்கள். ஆகையால், தர்மத்திற்கு நாசத்தைச் செய்யக்கூடாது. எல்லாப் பிராணிகளும் எப்பொழுதும் தர்மத்தின் வளர்ச்சியால் வளர்ச்சியையும் அதன் குறைவால் குறைவையும் அடைகின்றன. ஆகையால், தர்மத்தை விருத்திசெய்யவேண்டும். தனங்களைப் பெருகச்செய்வதாலோ (உலகங்களைத்) தரிப்பதாலோ தர்மமென்று சொல்லப்படுகிறது நிச்சயம். ஓ! ராஜனே! அந்தத் தர்மமானது மனிதர்களுக்கு (நரகத்தின்) [2]எல்லையின்

---

1 விருஷ = தர்மம்; லயம் = நாசம்; வ்ருஷ + லய = வ்ருஷல.

2 'தர்மமுள்ளவரையில் ஸ்வர்க்கம்; இல்லாவிடில் நரகம்' என்பது.

முடிவைச்செய்வதாய்ச் சொல்லப்படுகிறது. பிரம்மதேவர் பிராணிகளின் பெருமைக்காகத் தர்மத்தைப் படைத்தார். ஆகையால், பிரஜைகளின் க்ஷேமத்திற்காகவேண்டித் தர்மத்தைவிருத்திசெய்யவேண்டும். ஓ! அரசப்புலியே! ஆகையால்தான், தர்மம் மிகச் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. புருஷர்களிற் சிறந்தவனே! நற்காரியங்களைச் செய்துகொண்டு எவன் பிரஜைகளை ஆளுகிறானே அவன் அரசனாகிறான். காமத்தையும் கோபத்தையும் விலக்கிவிட்டுத் தர்மத்தையே பற்றிநின்று பரிபாலிக்கவேண்டும். பரதர்களிற் சிறந்தவனே! அரசர்களுக்குத் தர்மமானது க்ஷேமத்தைச் செய்கிறவைகளில் உத்தமமாகும். தர்மத்திற்குப் பிராம்மணர் காரணமாகிறார். ஆகையால், அவர்களை எப்பொழுதும் பூஜிக்கவேண்டும். ஓ! மாந்தாதாவே! பொறுமையின்றிப் பிராம்மணர்களின் இஷ்டங்களைச் செய்துகொடுக்கவேண்டும். அவர்களிஷ்டத்தைச்செய்யாததால் அரசர்களுக்குப் பயம் உண்டாகும். மித்திரர்கள் விருத்தியடையாமல் விரோதிகளுமாவார்கள். விரோசனனுடைய புத்திரனை பலியானவன் இளமைப்பருவமுதல் எப்பொழுதும் பிராம்மணர்களிடம் அஸூயையுள்ளவனாயிருந்தான். பிறகு, அவனிடமிருந்த ப்ரதாபத்துடன்கூடின் லக்ஷ்மியானது விலகத்தொடங்கிற்று. பிறகு, அவனிடமிருந்துவிலகி அந்த லக்ஷ்மியானது இந்திரனிடஞ்சென்றது உடனே, இந்திரனிடமிருக்கும் லக்ஷ்மியைக்கண்டு அந்தப்பலியானவன் மனவருத்தமடைந்தான். ஓ! பிரபுவான மாந்தாதாவே! அஸூயைக்கும் அபிமானத்திற்கும் பயன் இதுவே. ஆகையால், ப்ரதாபமுள்ளலக்ஷ்மியானது உன்னை விடாமலிருக்கும்படி தெரிந்துகொள். அகங்காரமென்பது லக்ஷ்மிக்கு அதர்மத்தினிடமுண்டான புத்திரனென்று ஸ்ருதி கூறுகிறது. ஓ! அரசனே! அந்த அகங்காரத்தால் பல தேவர்களும் அஸுரர்களும் நாசத்தை அடைவிக்கப்பட்டார்கள். ராஜனே! அவ்விதமே பல ராஜரிஷிகளும் நாசமடைந்தார்களென்று தெரிந்துகொள். அந்த அகங்காரத்தைவென்றவன் அரசனாகிறான். அதனால் ஜயிக்கப்பட்டவன் தாஸனாகிறான். ஓ! மாந்தாதாவே! நெடுங்காலம் இருக்க விரும்புவாயாகில் அகங்காரத்துடன்கூடிய அதர்மத்தை அனுஸரித்துச் செல்லாதிருக்கும்படி நடந்துகொள். மதமுள்ளவன், அஜாக்கிரதையுள்ளவன், அறிவில்லாதசிறுவன், பித்தன், விசேஷமாக நிந்திக்கப்பட்டவன், கெட்ட நடையுள்ளவன், சத்துருக்களையடுத்தவன், குற்றமுள்ள அமாத்தியன், பெண்கள், மலை, கடினமானகோட்டை, யானை, குதிரை, ஸர்ப்பம இவைகளிடம் எப்பொழுதும் [1] சேர்க்கையில்

---

1 'இவர்களின் சேர்க்கையிலிருந்தும் இவர்களுடன் சேர்ந்தவர்களின் சேர்க்கையிலிருந்தும் விலகவேண்டும்' என்பது வேறுபாடம்.

லாமலிருக்கவேண்டும். இரவில் ஸஞ்சாரத்தை விலக்கவேண்டும். அதிகமான ஆசையையும் அபிமானத்தையும் டம்பத்தையும் கோபத்தையும் விலக்கவேண்டும். ஓ! அரசனே! அறியாத ஸ்திரீகள், பேடிகள், வ்யபிசாரிகள், பிறன்மனைவிகள், கன்னிகைகள் இவர்களிடம் புணர்ச்சிசெய்யக்கூடாது. எப்பொழுது அரசன் அஜாக்கிரதையாக இருக்கிறானே அப்பொழுது ஜாதிஸங்கரத்தால் குலங்களில் பாவிகளான ராக்ஷஸர்கள் ஜனிக்கிறார்கள்; அலிகளும் அங்கங்குறைந்தவர்களும் ஊமைகளும் புத்தியில்லாதவர்களும் மற்றவர்களும் ஜனிக்கிறார்கள். ஆகையால், அரசன் விசேஷமாக ப்ரஜைகளின் ஹிதத்திலிருக்கவேண்டும். அஜாக்கிரதையாக இருக்கும் அரசனுக்குப் பெரியதோஷமுண்டாகிறது. ப்ரஜைகளுக்கு ஜாதிஸங்கரத்தைச் செய்விக்கிற அதர்மங்கள் மிக விருத்தியாகும். குளிரில்லாத காலத்தில் குளிரிருக்கும்; குளிருள்ளஸமயத்தில் குளிராது. மழையில்லாமையும் அதிக மழையும் நோயும் பிரஜைகளைப் பீடிக்கும். இப்படியுள்ளஸமயத்தில் (தூமகேதுமுதலிய) நக்ஷத்திரங்களும் கொடியகிரஹங்களும் தோன்றும். அரசனின் நாசத்திற்குக் காரணமான பல உத்பாதங்களும் இங்குக் காணப்படும். எந்த அரசன் தன்னையும் ரக்ஷித்துக்கொள்ளாமல் பிரஜைகளையும் ரக்ஷிக்கவில்லையோ அந்த அரசனுடைய பிரஜைகள் நாசமடைவார்கள். பிறகு, அவனும் நாசமடைவான். ஒருவனுடைய பொருளை இரண்டுபேர்களும், இரண்டுபேர்களுடையபொருளை மற்றப் பலபேர்களும் அடித்துப்பிடுங்குவார்கள். ஸ்திரீகள் அபகரிக்கப்படுவார்கள். அதனை அரசர்களின் குற்றமாகச் சொல்லுவார்கள். அரசன் தர்மத்தைவிட்டு அஜாக்ரதையாக நடக்கும்பொழுது மனிதர்களிடம், 'இஃது என்னுடையது' என்கிற எண்ணம் நிலைபெறுது.

தொண்ணூற்றேராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(உசத்யர் உபதேசத்தின் தொடர்ச்சி.)

காலத்தில் வருஷிக்கும் மேகமும் தர்மத்தைச்செய்யும் அரசும் என்னும் ஸம்பத்து ப்ரஜைகளை ஸுகமாகப்போஷிக்கும். எந்த வண்ணான் வெள்ளை ஆடைகளின் அழுக்கை விலக்கவும் சாயமுள்ளவஸ்திரங்களைத் தெளிக்கவும் அறியவில்லையோ அவன் இல்லாதவனுக்கு ஒப்பாவான். பிராம்மணக்ஷத்ரியர்கள் வைச்யர்கள் ஜாதிகளில் நான்காவதான சூத்திரர்கள் இவர்களி

லொருவன் [1]பலதொழில்களிலிருப்பவனுலல் அப்படியே ஆவான். சூத்திரனுக்கு வேலையும் வைசியனுக்குக் கிருஷியும் க்ஷத்திரியனுக்குத் தண்டநீதியும் பிராம்மணர்களுக்குப் பிரம்மசரியமும் தவமும் மந்திரங்களும் ஸத்தியமும் தர்மமாகும். எந்தக்ஷத்திரியன் [2] பாத்திரங்களைச் சுத்திசெய்வதுபோல அவர்களின் ஸ்வபாவத்திலுள்ள குற்றங்களை விலக்க அறிகிறானே அந்த அரசன் ஜனங்களுக்குப் பதியும் தந்தையுமாகிறான். பரதஸ்ரேஷ்டனே! கிருதம், திரேதை, த்வாபரம், கலி இவைகள் யாவும் அரசனுடைய நடக்கைகளே. அரசனை யுகமென்று சொல்லப்படுகிறான். அரசன் அஜாக்கிரதையாக இருக்கும்பொழுது நான்கு ஜாதிகளும் அப்படியே வேதங்களும் நான்கு ஆஸ்ரமங்களுமாகிய யாவும் விசேஷமாக [3] மோகமடையும். அரசன் அஜாக்கிரதையாக இருந்தால் மூன்று அக்நிகளும், மூன்றுவேதங்களும், தக்ஷிணையுடன்கூடிய யாகங்களும் எல்லாம் அறியப்படாமற்போம். அரசனே பிராணிகளுக்குக் கர்த்தன்; அரசனே நாசத்தைச்செய்பவன். தர்மபுத்தியுள்ளவன் கர்த்தனும் அதர்மபுத்தியுள்ளவன் நாசஞ்செய்கிறவனுமாகிறார். அரசன் அஜாக்கிரதையுள்ளவனுலல் அரசனுடைய மனைவிகள், புத்திரர்கள், பந்துக்கள், நண்பர்கள் யாவர்களும்சேர்ந்து சோகம் அடைவார்கள். அரசன் அதர்மநடையுள்ளவனுயிருந்தால் யானைகளும் குதிரைகளும் பசுக்களும் ஒட்டகங்களும் கோவேறுகழுதைகளும் கழுதைகளும் மற்ற எல்லா ஜந்துக்களும் துன்பப்படும். ஓ! மாந்தாதாவே! பலமானது துர்ப்பலர்களை ரக்ஷிக்கவேண்டிப் பிரம்மதேவரால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பலமில்லாத பிராணியானது பெரியது. அதனிமித்தம் யாவும் நிலை பெற்றிருக்கின்றன. ஓ! அரசனே! அரசன் அதர்மத்திலிருந்தால் அந்தப் பிராணியைப் போஷிப்பவனும் அப்போஷகன் குலத்திலுதித்தவர்களும் அனைவரும் சோகமடைவார்கள். பலமில்லாதவன், முனி, ஸர்ப்பம் இவைகளின் பார்வையைப் பொறுப்பது மிகக் கடினம். பலமில்லாதவனருகிற் செல்லாதே. அப்பா! பலமில்லாதவர்கள் எப்பொழுதும் அவமதிக்கத் தகாதவர்களென்று நினைத்துக்கொள். துர்ப்பலர்களின் கண்கள் பந்துக்களுடன்கூடினை உன்னைத் தஹிக்கவேண்டாம். துர்ப்பலர்களால் எரிக்கப்பட்டவனுடைய குலத்தில் ஒன்றும் முளையாது. அவர்கள் வேருடன்

---

1 'அவிவேகத்தால் தமக்குரிய கர்மங்களைச் செய்யாமலிருந்தால்' என்பது பழையவுரை.

2 'வஸ்திரங்களைச் சுத்திசெய்வதுபோல்' என்பது வேறுபாடம்.

3 அறியப்படாமற்போகும்.

கொளுத்திவிடுவர்கள். துர்ப்பலர்களின் அருகிற் செல்லாதே. பலத்தைவிடப் பலமில்லாமை மிகப்பெரிது. அஃது அதிக பலமுள்ள பலம். துர்ப்பலர்களால் எரிக்கப்பட்டபலத்தில் சிறிதும் மிஞ்சாது. அவமதிக்கப்பட்டவனும் அடிக்கப்பட்டவனும் தன்பமுள்ளவனும் ரக்ஷகனையடையாமற்போனால் அத்தேசத்தில் தெய்வத்தால்செய்யப்படுந் தண்டம் அரசனைக் கொல்லும். அப்பா! பலத்திலிருக்கும் நீ பலமில்லாத ஜனங்களிடம் வரிவாங்க விரும்பாதே. அக்னியானது அடித்ததை எரிப்பதுபோலத் துர்ப்பலர்களின் கண்கள் உன்னைக் கொளுத்தவேண்டாம். பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அழுகிறவர்களுடைய கீழேவிழும் கண்ஜலங்கள் பொய்யான அக்குற்றத்தைச் சொன்னவர்களுடைய புத்திரர்களையும் பசுக்களையுங்கொல்லும். தன்னிடத்தில் பயன்படாவிட்டால் புத்திரர்களிடத்திலும் இல்லாவிட்டால் பௌத்திரர்களிடத்திலும் அவர்கள் புத்திரர்களிடத்திலும் பயன்படும். செய்யப்பட்ட பாபகர்மமானது பசுவைப்போல உடனே பயன்படுவதில்லை. எந்தத் தேசத்தில் அடிக்கப்படும் பலமில்லாத மனிதன் ரக்ஷகனையடையவில்லையோ அந்தத் தேசத்தில் தெய்வத்தால் செய்யப்பட்டதும் கொடியதுமான பெரிய தண்டம் விழும். தேசத்திலுள்ளவர்கள் யுக்தியுள்ளவர்களாய்ப் பிராம்மணர்களைப்போல ஸந்யாஸி உருவத்துடன் அடிக்கடி பிச்சை எடுக்கும்பொழுது அவர்கள் அரசனைக் கொல்லுகிறவர்களாகிறார்கள். ஓர் அரசனுடைய தேசத்தில் அரசனைச்சேர்ந்த பல புருஷர்கள் எப்பொழுது நீதியின்றி நடக்கிறார்களோ அப்பொழுது அஃது அவனுக்குப் பெரும்பாவமாகும். காமத்தாலாவது பொருளின்வசமாயிருந்தாவது எப்பொழுது யுக்தியாகப் 1 பொருள்களை (அரசன்) அபகரிக்கிறானோ அப்பொழுது (பொருளிழந்தவர்கள்) யாசிக்கிற அந்தச் சோகமானது அரசன் செய்த பெரிய தீங்காகும். பெரிய மரமானது பயிராகி வளரும் அதைப் பிராணிகளும் ஆஸ்ரயிக்கும். எபபொழுது அந்த மரம் வெட்டப்படுகிறதும் கொளுத்தப்படுகிறதுமாகிறதோ அப்பொழுது அதை அடுத்தவைகள் இடமற்றவைகளாகின்றன. (அதுபோல) எப்பொழுது ராஜ்யத்தில் தேசநன்மையையோ அரசனது குணங்களையோ சொல்லிக்கொண்டு முக்கியமான தர்மத்தைச் செய்கிறார்களோ அப்பொழுது அரசன் விருத்தியடைவான். பாவமும் விலகும். அவர்கள் தர்மத்திலுள்ள அவிவேகத்தால் அதர்மத்தைச் செய்வார்களானால் புண்யம் விரைவில் விலகிப்போம். பாப

1 'துன்பத்துடன் பிச்சையெடுக்கும் யாசகர்களுடைய பொருளை' என்றும் கொள்ளலாம்.

மும் வரும். எந்தத்தேசத்தில் பாவிகள் வெளிப்படையாக ஸஞ்சரிக்கிறார்களோ அந்தத்தேசத்தில் அரசனுடைய ஸைபையைக் கலி அடைகிறது. எந்தஅரசனுடைய தேசத்தில் அவன் சக்தியினால் மனிதர்களை அடக்கவில்லையோ அவனுடைய அந்தத் தேசம் விருத்தியடைகிறதில்லை. எந்தஅரசன் உள்ளபடி அமாத்தியர்களை மரியாதைசெய்து ஆலோசனையிலும் யுத்தத்திலும் ஏவுகிறானோ அந்தஅரசனுடையராஜ்யம் விருத்தியடையும். அவன் பூமிமுழுமையையும் நெடுங்காலம் அனுபவிப்பான். இந்தவிஷயத்திலும் நல்ல நடையையும் நன்குகூறப்படும்வசனத்தையும் நன்றுகப்பார்த்துக் கொண்டு பூஜிக்கும் அரசன் ஒப்பற்ற தர்மத்தை அடைகிறான். பங்கிட்டுக்கொடுத்துப் புஜிப்பதும் பிறர்களை அவமதியாமலிருப்பதும் அகங்காரமுள்ளபலவானை அடிப்பதும் அரசனுடையதர்மமென்று சொல்லப்படும். வாக்காலும் சரீரத்தாலும் செய்கையாலும் யாவற்றையும் ரக்ஷிப்பதும் (இதற்கு விரோதியாயிருந்தால்) புத்திரனையும் பொறுமலிருப்பதும் அரசனுடைய தர்மமென்று சொல்லப்படும். அரசன் எப்பொழுது பலமில்லாதமனிதர்களுக்குத் தானங்கொடுத்துப் பூஜிக்கிறானோ அப்பொழுது அவர்கள் பலமுள்ளவர்களாகிறார்கள். அஃது அரசனுடையதர்மமென்று சொல்லப்படுகிறது. ராஜ்யங்களை ரக்ஷிப்பதும் திருடர்களைத்துரத்துவதும் யுத்தத்தில்ஜயிப்பதும் அரசனுடையதர்மமென்று சொல்லப்படும். நண்பனுயிருந்தாலும் செய்கையாலும் சொல்லாலும் பாவத்தைச்செய்பவனைப் பொறுமலிருப்பது அரசனுடைய தர்மமென்று சொல்லப்படுகிறது. அரசன் புத்திரர்களைப்போல வர்த்தகர்களை ரக்ஷிப்பதும் மரியாதையை வேறுபடுத்தாமலிருப்பதும் அரசனுடையதர்மமென்று சொல்லப்படும். விருப்புவெறுப்புக்களை விலக்கிவிட்டு ப்ரத்தையுடன்கூடிப் போதுமான தக்ஷிணையுள்ள யாகங்களைச் செய்வது அரசனுடைய தர்மமென்று சொல்லப்படுகிறது. ஏழைகளும் அநாதர்களும் பிராயமுதிர்ந்தவர்களுமாகிய இவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதும் மனிதர்களுக்குஸந்தோஷத்தையுண்டுபண்ணுவதும் அரசனுடையதர்மமென்று சொல்லப்படும். மித்திரர்களை விருத்திசெய்வதும் அவ்விதம் சத்துருக்களை இழுப்பதும் ஸாதுக்களை நன்கு பூஜிப்பதும் அரசனுடையதர்மமென்று சொல்லப்படும். ஸத்தியத்தைரக்ஷிப்பதும் அன்புடன் எப்பொழுதும் பூமியைக்கொடுப்பதும் அதிதிகளையும் வேலைக்காரர்களையும்பூஜிப்பதும் அரசனுடையதர்மமென்றுசொல்லப்படும். சிக்ஷாரக்ஷாஇரண்டும். எவனிடம்நிலைபெற்றிருக்கின்றனவோ அந்த அரசன் இந்த உலகத்திலும் பரலோகத்திலும்

பயனடைகிறான். ஓ! மாந்தாதாவே! அரசனனவன் தர்மமுள்ளவர்களைப் பாதுகாக்கும் ஈசனை யமனையிருக்கிறான். 1 பிராணிகளை அடக்குகிறவன் யமன்போலாவான்; அடக்காதவன் அக்கினியாவன். 2 ரித்விக்கையும் புரோகிதரையும் ஆசாரியரையும் அவமதியாமல் பூஜைசெய்து நன்கு அங்கீகரிப்பது அரசனுடையதர்மமாகச் சொல்லப்படுகிறது. யமனனவன்எல்லாப்பிராணிகளையும் வேற்றுமையில்லாமலே அடக்குகிறான். அதுபோல அரசனும் நடக்கவேண்டும். விதிப்படி பிரஜைகளை அடக்கவேண்டும். அரசன் எல்லாவிதத்தாலும் இந்திரனேடு ஒப்பிடப்படுகிறான். ஓ! புருஷஸ்ரேஷ்டனே! அவன் எதைத் தர்மமாகப் பார்க்கிறானே அது தர்மம். அஜாக்கிரதையில்லாமல் பொறுமையையும் புத்தியையும் தைரியத்தையும் அறிவையும் கற்றுக்கொள். பிராணிகளின்உண்மையையறிய விருப்பம், நன்மை, தீமை, எல்லாப் பிராணிகளையும் சேர்த்துக்கொள்வது, தானம், இன்சொல்ஆகிய இவைகளையும் எப்பொழுதும் தெரிந்துகொள்ளவேண்டும். பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ளஜனங்களைப் பந்துஜனங்களைப்போலப் பரிபாலிக்கவேண்டும். ஸாமர்த்தியமில்லாத அரசன் ஒருபொழுதும் பிரஜைகளை ரக்ஷிக்கச் சக்தியுள்ளவனல்லன். அப்பா! வஹ்னிக்கமிகக்கடினமான ராஜ்யமென்பது மிகப்பெரிதான சுமையன்றோ? அதைத் தண்டநீதி தெரிந்தவனும் விசேஷஅறிவுள்ளவனும் சூரனுமான அரசன் பரிபாலிக்க வல்லவனுவான். தண்டமில்லாதவனும் தைரியமில்லாதவனும் புத்தியில்லாதவனுமாயிருப்பவன் பரிபாலிக்க வல்லவனல்லன். நற்குலத்திற்பிறந்தவர்களும் ஸமர்த்தர்களும் பக்தியுள்ளவர்களும் பலகல்விகளுள்ளவர்களும் யோக்யர்களுமான மந்திரிகளுடன்கூடத் 3தாபஸர்கள், 4ஆஸ்ரமிகள் இவர்களுடைய 5யாவற்றையும் புத்தியால் பரீக்ஷிக்கவேண்டும். இதனல் நீ எல்லாப்பிராணிகளின் முக்கியமான தர்மத்தையும் அறிவாய். உன்தேசத்திலும் பிறன்தேசத்திலும் உன்னுடைய தாமம நாசமடையாது. அறம்பொருளின்பங்களில் அறம் ஒன்றே மேலானதாகும். தர்மபுத்தியுள்ளவன் இவ்வுலகிலும் மேலுலகிலும் ஸுகித்துச்செழிப்பான். விசேஷமாகப் பூஜிக்கப்பட்டமனிதர்கள்

---

1 இந்திரியங்களை என்பது பழையவுரை.

2 'ஓ! மாந்தாதாவே! தர்மமுள்ளவர்களுக்கு ஈசனை யமனிருக்கிறான். இந்திரியங்களை அடக்கினவன் ஐஸ்வர்யமடைவான்; அடக்காதவன் கீழேவிழுவான்' என்பது வேறுபாடம்.

3 அரண்யத்திலுள்ளவர்கள். 4 கிராமத்திலுள்ளவர்கள்.

5 'எல்லாஅபிப்பிராயங்களையும்' என்பது வேறுபாடம்.

தர்மத்திற்குக் கேடுநேர்ந்தால் பிள்ளைகளையும் பெண்டிர்களையும் விட்டுவிடுவார்கள். பிராணிகளைச் சேர்த்துக்கொள்ளலும் தானமும் இன்சொல்லும் அஜாக்கிரதையில்லாமையும் சுத்தியும் அரசனுக்கு ஸம்பத்தைச்செய்யும் ஸாதனங்களில் பெரியவை. மாந்தாதாவே! இந்தக் குணங்களிலிருந்து எப்பொழுதும் தவறுதலடையாதே. அரசன் அஜாக்கிரதையின்றித் தன்னுடைய இடைவெளியையும் பிறனுடைய இடைவெளியையும் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். இவனுடைய இடைவெளியைப் பிறன் காணக்கூடாது. இடைவெளிகளில் பிறனைத் தொடர்ந்துசெல்லவேண்டும். இஃது இந்திரன், யமன், வருணன் இவர்களின் நடக்கையாகும். எல்லா ராஜரிஷிகளின் உண்மையையும் தொடர்ந்து ரக்ஷித்துக்கொள். ஓ! மஹாராஜனே! ஆகையால், ராஜரிஷிகளால் அனுஷ்டிக்கப்பட்ட நடையைச்செய். புருஷச்ரேஷ்டனே! சிறந்ததான வழியைச் சீக்கிரமாக ஒத்துக்கொள். ஓ! பாரத! தர்மநடையுள்ள அரசனை இங்கும் இறந்தபின்னும் பெரிய பராக்ரமமுள்ள தேவர்களும் ரிஷிகளும் பித்ருக்களும் கந்தர்வர்களும் புகழுகிறார்கள்' என்று சொன்னர்.

ஓ! பாரத! அந்த உசத்தியரால் இவ்விதம் சொல்லப்பட்ட அந்த மாந்தாதாவானவன் சங்கையின்றி அவ்விதமே செய்துவந்தான். ஒருவளுகப் பூமியையும் அடைந்தான். ஓ! அரசனே! மாந்தாதாவைப் போல நீயும் அப்படியே நன்முகத் தர்மத்தைச் செய்து பூமியைப் பரிபாலனஞ்செய்; ஸ்வர்க்கத்தில் ஸ்தானத்தை அடைவாய்" என்று சொன்னர்.

தொண்ணூற்றிரண்டாவது அத்யாயம்

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வாமதேவர் சொன்னகோலின் சிறப்பையும் கொடுங்கோலின் இழிவையும் வஸுமனஸுக்குக் கூறியது.)

யுதிஷ்டிரர், "குருக்களிற் சிறந்தவரும் பரதகுலத்திலுதித்தவருமான பிதாமஹரே! தர்மத்திலிருக்க விருப்பமுள்ள அரசன் எவ்விதமிருக்கவேண்டுமென்பதை உம்மிடம் வினவுகிறேன். அதனை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் விஷயங்களின்உண்மையறிந்தவரும் அறிவுள்ளவருமான வாமதேவரால் கூறப்பட்ட இப்பழைய இதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். பலமுள்ளவனும் பரிசுத்தனுமான

ஸுமனஸென்னும் கோசல தேசத்தரசன் தவமுள்ளவரான வாமதேவரென்னும் மஹரிஷியை நோக்கி, 'ஓ! பகவானே! எந்த நடையுடனிருந்தால் நான் ஸ்வதர்மத்திலிருந்து நழுவாமலிருப்பேனோ அந்த நடையைத் தர்மார்த்தங்களையுடைய வாக்கியங்களால் எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்றுகேட்டான். தவமுள்ளவர்களிற் சிறந்தவரும் தேஜஸ்ஸுள்ளவருமான வாமதேவர் நகுஷனின் புத்திரனை யயாதியைப்போலப் பொன்மேனியுள்ளவனும் ஸுகமாக வீற்றிருப்பவனுமான அந்த அரசனைநோக்கிச் சொல்லத்தொடங்கினர்

'தர்மத்தையே செய்துகொண்டிரு. தர்மத்தைவிடப் பெரியதில்லை. அரசர்கள் தர்மத்திலிருந்துகொண்டே இப்பூமியை ஜயிக்கிறார்கள். எந்த அரசன் பொருள் விரும்பிப்பதைவிடத் தர்மத்தைப் பெரிதாக நினைத்து அதை விருத்திசெய்வதில் புத்தியைச் செலுத்துகிறானோ அவன் தர்மத்தால் விளங்குகிறான். தர்மந்தெரியாதஎந்த அரசன் பலத்தால்மாத்திரம் ப்ரவர்த்திக்கிறானோ அவனிடமிருந்து முந்தியதும் இடையிலுள்ளதுமான (அறம் பொருள்) இரண்டும் விரைந்து விலகி ஓடும். துஷ்டர்களும் மிக்க பாபிகளுமான மந்திரிகளுள்ளவனும் தர்மத்தைக் கெடுப்பவனுமான அரசன் உலகத்திற்குக் கொல்லத்தக்கவனுவான். அவன் சீக்கிரமாகவே பரிவாரத்துடன் நாசமடைவான். நல்லவிஷயங்களச்செய்யாதவனும் இஷ்டம்போல ஸஞ்சரிப்பவனும் தற்புகழ்ச்சியுள்ளவனுமான அரசன் பூமிமுழுமையும்மடைந்தும் சீக்கிரமாகவே நாசமடைவான். அவ்விதமின்றிச் சுபத்தை அங்கீகரிக்கிறவனும் அஸூயையில்லாதவனும் இந்திரியங்களை ஜயித்தவனும் புத்தியுள்ளவனுமான அரசன் பிரவாகங்களால் ஸமுத்திரமானது விருத்தியடைவதுபோல விருத்தியடைவான். பூபதியே! எப்பொழுதும் 'தர்மத்தாலும் காமத்தாலும் பொருளாலும் புத்தியாலும் ஆலோசனையாலும் பூர்ணமாயிருக்கிறேன்' என்றெண்ணக்கூடாது. உலகநடையானது இவைகளெல்லாவற்றிலுந்தான் நிலைபெற்றிருக்கிறது. இவைகளைக் கேட்பவன் யசஸையும் கீர்த்தியையும் ஸம்பத்தையும் பிரஜைகளையும் அடைகிறான். இவ்விதம் தர்மங்களில் முயற்சியுள்ளவனும் அறம் பொருள்களை ஆலோசிப்பவனுமான எவன் காரியங்களைப் பரீக்ஷைசெய்து தொடங்குகிறானோ அவன் உறுதியானபெருமையை நிச்சயமாக அடைகிறான். கொடாதவனும் நட்பில்லாதவனும் பிரஜைகளைத் தண்டநீதிப்படி நடத்திவராதவனும் ஸாஹஸமான ஸ்வபாவமுள்ளவனுமாயிருக்கும் அரசன் சீக்கிரமாகவே நாசமடைவான். புத்தி

யில்லாதவன், தான் செய்த பாவத்தைப் புத்தியால் பார்க்கமாட்டான். அவன் அபகீர்த்தியையடைந்து திரும்பவும் நரகமடைவான். [1] அவ்விதமின்றிப் பூஜிப்பவனும் தானஞ்செய்பவனும் பரிசுத்தனும் ஸாரத்தை அறிந்தவனுமாயிருப்பவனுடைய வ்யஸனத்தை ஜனங்கள் தமக்குண்டானதைப்போல விலக்க விரும்புவார்கள். எவனுக்குத் தர்மத்தை அறிவிக்குங் குருவில்லையோ எவன் மற்றவர்களையும் கேட்கிறதில்லையோ அவன் பொருளை அடையும்போது ஸுகத்திற்கு ஈடுபட்டவனாகி நெடுங்காலம் ஸுகத்தை அடையமாட்டான். தர்மங்களில் குருவை முக்கியமாகக்கொண்டவனும் நேரில் காரியங்களைப் பார்ப்பவனும் லாபஸமயங்களில் தர்மத்தை முக்கியமாகக் கொண்டவனுமாயிருப்பவன் நெடுங்காலம் ஸுகமடைவான்.

தொண்ணூற்று மூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வாமதேவர் வாக்கியத் தொடர்ச்சி.)

எந்தத்தேசத்தில் அதிகபலசாலியான அரசன் பலமில்லாதவனிடம் அதர்மத்தைச் சுமத்துகிறானே, அவன் குலத்திலுதித்தவர்களும் அந்த ஒழுக்கத்தையடித்துப் பிழைக்கிறார்களோ, பாவத்தில் பிரவிர்த்தியுள்ள அந்த அரசனை மற்றவர்களும் அனுசரித்திருக்கிறார்களோ, கெட்டநடையுள்ள மனிதர்களிருக்கும் அந்தத்தேசமானது சீக்கிரம் நாசமடையும். ஸ்வதர்மத்திலிருக்கும் அரசனுடைய எந்த நடக்கையை மனிதர்கள் அடுத்துப் பிழைக்கிறார்களோ கெட்டவழியிலிருப்பவனுடைய அதே நடக்கையை உறவினனும் பொறுக்கமாட்டான். சாஸ்திரவிதியை அறியாத அரசன் ஸாஹஸமான ஸ்வபாவமுள்ளவனாய்ச் சிறிது கொடுமையைச் செய்யினும் சீக்கிரமே நாசமடைகிறான். துன்பமுள்ளவர்கள் விஷயத்திலும் துன்பமில்லாதவர்கள் விஷயத்திலும் நன்னடக்கையுடன்கூடிய ஸ்திதியை அனுஸரியாத க்ஷத்திரியன் க்ஷத்திரியதர்மத்திலிருந்து விலகினவனாகிறான். முன்பு உபகாரஞ்செய்தவனும் பின்பு பகைக்கிறவனுமான அரசனை யுத்தத்தில் பிடித்தபின் எவன் பகைமையால் மரியாதைசெய்யாமலிருக்கிறானே அவன் க்ஷத்திரியதர்மத்திலிருந்து விலகினவனாகிறான். சக்தியுள்ள அரசன் மிக்க ஸுகமாயிருக்கவேண்டும். ஆபத்துள்ள ஸமயத்தில் அதை விலக்கத்தக்க கர்மத்தைச் செய்யவேண்டும்.

---

1 இங்கு வேறுபாடங் கொள்ளப்பட்டது.

அவன் பிராணிகளுக்குப் பிரியமாக இருப்பான்; ஸம்பத்திலிருந்தும் நழுவுதலையடையமாட்டான். எவன் அப்பிரியத்தைச் செய்தாலே அவனுக்குத் திரும்பவும் பிரியத்தைச்செய்யவேண்டும். எவன் பிரீதியில்லாதவனிடம் பிரீதியைச்செய்கிறானே அவன் தாமதமின்றிப் பிரியனுவான். பொய் பேசுவதை விலக்கவேண்டும். வேண்டப்படாமலே பிரியத்தைச்செய்யவேண்டும். காமத்தாலும் குரோதத்தாலும் த்வேஷத்தாலும் தர்மத்தைவிடக்கூடாது. அறிவுள்ளவன் கபடமில்லாமலிருக்கவேண்டும். ஸத்தியம், அடக்கம், தர்மம், நல்லஸ்வபாவம், பிரஜைகளுக்கு ஹிதமான க்ஷத்திரியதர்மம் இவைகளை விடக்கூடாது. விரைக்களில் விடையளிக்க லஜ்ஜைப்படக்கூடாது. அவமதிப்புள்ளமொழியைப் பேசக்கூடாது. பரபரப்பில்லாமலும் அஸூயையில்லாமலும் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் பிறன் தன்வசமாவான். பிரியனிடத்தில் மிகவும் அதிகமாக ஸந்தோஷிக்கக்கூடாது. அப்பிரியனிடத்தில் அதிகவருத்தமுங்கூடாது. பிரஜைகளின் ஹிதத்தைநினைத்துப் பொருட்செலவான கஷ்டங்களில் துன்பப்படக்கூடாது. எந்த அரசன் நற்குணங்களால் எப்பொழுதும் பிரியத்தைச்செய்கிறானே அவனுடைய கர்மங்கள் பயன்படும். அவனிடமிருந்து செல்வமும் விலகாது. அப்பிரியங்களிலிருந்து விலகினவனும் பிரியத்திலிருப்பவனும் பக்தியுள்ளவனுமான மனிதனிடம் அரசன் அன்புள்ளவனாயிருக்கவேண்டும். இவ்வுலகில் அதுதான் ஸாதுக்களுடைய நடக்கையாகும். பலவாறு செல்லாத இந்திரியக் கூட்டங்களுள்ளவனும் மிகவும் அனுஸரித்துச் செல்லுகிறவனும் பரிசுத்தனும் சக்தியுள்ளவனும் பக்தியுள்ளவனுமாயிருப்பவனைப் பெரியகாரியத்தில் ஏவவேண்டும். ச்ரேயஸுக்கு அடையாளமான பராக்ரமமுள்ளவனும் கீர்த்தியை முக்கியமாகக் கொண்டவனும் நன்னெறியில் நிலைபெற்றவனும் ஸமர்த்தர்களைப் பூஜிப்பவனும் அவர்களிடம் பொறுமையில்லாதவனும் அரசனிடம் அன்புள்ளவனும் யஜமானனுடைய காரியங்களில் அஜாக்ரதையில்லாதவனுமாயிருப்பவனைப் பொருளைப்பற்றிய வேலையில் ஏவவேண்டும். அறிவில்லாதவனும், இந்திரியங்களை அனுஸரிப்பவனும், லோபமுள்ளவனும், கெட்ட நடையுள்ளவனும், மறைந்து விரோதஞ்செய்பவனும், கபடத்தைவிடாதவனும், கோடியவனும், கெட்டபுத்தியுள்ளவனும், பலகல்விகளில்லாதவனும், [1]பெருந்தன்மையில்லாதவனும், கள்விருப்பமுள்ளவனும், சூது காமம் வேட்டைகளில் கருத்துள்ளவனுமான மனிதனைப் பெருங்காரியத்தில் ஏவும் அரசன் லக்ஷ்மியைவிட்டுவிலகுவான். தன்னைரக்ஷித்துக்

1 இங்கு வேறுபாடங் கொள்ளப்பட்டது.

கொண்டவனும் ரக்ஷிக்கத்தக்கவர்களை ரக்ஷிக்கிறவனுமான அரசனுடைய பிரஜைகள் விருத்தியடைவார்கள். அவனும் பெரியஸுகம் பெறுவான். எவர்கள் பூமிக்குப் பதிகளோ அவர்கள் யாவர்களையும் அறியப்படாத நல்ல எண்ணமுள்ள தூதர்களால் கவனித்து வரவேண்டும். அதனல், அரசனுக்குக் கேடில்லாமலிருக்கும். பலமுள்ளவனுக்கு விரோதஞ்செய்துவிட்டுத் தூரத்திலிருக்கிறேனென்று சிந்தையில்லாமலிருக்கக்கூடாது. இவர்கள் அஜாக்ரதையாக இருப்பவனிடம் பருந்துகள் விழுவதுபோல விழுவார்கள். உறுதியானசேனையுள்ளவனும் குற்றமில்லாத புத்தியுள்ளவனுமாயிருப்பவன் தன்னுடைய பலத்தைத்தெரிந்துகொண்டு பலமில்லாதவர்களை எதிர்க்கவேண்டும். அதிகபலசாலிகளை எதிர்க்கக்கூடாது. தர்மத்தைப்பெரிதாகக்கொண்ட அரசன் பராக்ரமத்தால் பூமியை அடைந்து தர்மப்படி ப்ரஜைகளைப் பரிபாலிக்கவேண்டும். யுத்தத்தில் மரணத்தைச் செய்துகொள்ளவேண்டும். இவையாவும் முடிவில் 1மரணமடையும். இவ்வுலகில் துன்பமில்லாதது ஒன்றுமில்லை. ஆகையால், தர்மத்திலிருக்கும் அரசன் தர்மப்படி ப்ரஜைகளைக் காக்கவேண்டும். காத்தற்குரிய (கோட்டைமுதலிய) இடமும்யுத்தமும் தர்மத்தைக்கட்டளையிடுவதும் மந்த்ராலோசனையும் சமயத்தில் ஸுகங்கொடுப்பதுமாகிய இவ்வைந்தாலும் பூமியானது விருத்தியடைகிறது. அரசர்களில் மிக உத்தமனே! எவனல் இவ்வைந்தும் காக்கப்படுகின்றனவோ அவனே அரசன். எப்பொழுதும் இவைகளிலிருக்கும் அரசன் இப்பூமியை அனுபவிப்பான். இவைகளை எப்பொழுதும் ஒருவனே கவனித்துவரமுடியாது. நம்பிக்கையுள்ளவர்களை இவைகளில் இருக்கச்செய்துவிட்டு அரசன் பூமியை வெகுகாலம் அனுபவிக்கவேண்டும். தானஞ்செய்கிறவனும் பங்கிட்டுக்கொடுப்பவனும் கொடுமையில்லாதவனும் பரிசுத்தனும் மனுஷ்யர்களை விடாதவனுமாயிருக்கிறவனை ஜனங்கள் அரசனாகச் செய்கிறார்கள். எவன் தன்னிஷ்டத்தை விலக்கிவிட்டு மேலுமத்திற்குரிய அறிவைக்கேட்டு அதை அடைகிறானோ அவனை உலகமானது அனுசரித்துச்செல்லும். எவன் ஹிதத்தைச் செய்வதில் விருப்பமுள்ளவனை ஸ்நேஹிதனுடைய வசனத்தை த்வேஷத்தால் பொறுக்கவில்லையோ, ப்ரதிகூலமானவசனங்களை எப்பொழுதும் மனமில்லாதவன்போல (வெளிக்காட்டி மனத்தில் பிரியத்துடன்) கேட்கிறானோ, புத்திமான்களால் செல்லப்பட்டதும் துன்பமுள்ளவர்களுக்கும் துன்பமில்லாதவர்களுக்கும் ஸமமுமான லாபவழியிலும் எப்பொழுதுஞ் செல்லவில்லையோ அவன்

---

1 ஆயினும் அரசருக்கு யுத்தமரணம் ஸ்வர்க்கத்தைத் தருமென்பது கருத்து.

கூத்திரிய தர்மத்திலிருந்து விலகினவனுகிறான். சிகூஷிக்கப்பட்ட அமாத்தியன், விசேஷமாக மடந்தைகள், மலை, கடினமான கோட்டை, யானை, குதிரை, ஸர்ப்பம் இவைகளிடமிருந்து எப்பொழுதும் முயற்சியுடன் தன்னை ரகூஷித்துக்கொள்ளவேண்டும். எவன் முக்கியர்களான மந்திரிகளைவிட்டுக் கீழ்ப்பட்டவர்களை கண்பர்களாகச்செய்துகொள்ளுகிறானே அவன் குடிமுதலிய வ்யஸனத்தையடைந்து நல்லவழியை அடையமாட்டான். எவன் உறுதியற்ற மனமுள்ளவனும் நிலைத்த கோபமுள்ளவனுமாய்ச் சுபகுணமுள்ள ஞாதிகளிடம் மிக்க த்வேஷத்தினல் பொறுமையுள்ளவனுயிருக்கிறானே அவனருகில் பொருள் [1] நிலைத்திராது. எவன் மனத்திற்குப் பிரியர்களாயும் நற்குணம் பொருந்தியவர்களாயும் இருக்கும் ஞாதிகளை இஷ்டத்தினல் தனக்கு ஈடுபட்டவர்களாகச் செய்துகொள்ளுகிறானே அவன் வெகுகாலம் கீர்த்தியில் நிலைபெற்றிருப்பான். அஸமயத்தில் பொருளைச் செலவிடக்கூடாது. தண்பம் நேர்ந்தால் எப்பொழுதும் வருத்தப்படக்கூடாது. இன்பத்திலும் மிகவும் அதிகமாக ஸந்தோஷிக்கக்கூடாது. நோயின்மையைத் தரத்தக்க தொழிலில் முயற்சிசெய்யவேண்டும். 'எந்த அரசர்கள் அன்புள்ளவர்கள்? எவர்கள் பயத்தினலடித்தவர்கள்? இவர்களுள் எவர்கள் மந்த்ரியஸ்தர்களுக்குள்ள தோஷமுள்ளவர்கள்?' என்று எப்பொழுதும் விசேஷமாக ஆலோசிக்கவேண்டும். பலமுள்ளவனுயிருப்பதுபற்றிப் பலமில்லாதவனிடத்தில் எவ்விடத்திலும் எச்சமயத்திலும் நம்பிக்கையுடனிருக்கக்கூடாது. இந்தப் பலமில்லாதவர்கள் அஜாக்ரதையாக இருப்பவனிடம் பருந்துக்கு ஒப்பாக வந்துவிழுவார்கள். எல்லாக்குணங்களுடனுங் கூடியவனும் இன்பமாகப் பேசுகிறவனுமான யஜமானனைப்பற்றியும் பாவபுத்தியுள்ளவன் கேடுநினைப்பான். ஆகையால், ஜனங்களை நம்பக்கூடாது. இவ்விதமான அரசர்களுக்குரிய ரஹஸ்யவித்தையை ந்ருகூஷடுத்திரனை யயாதி சொன்னன். மனிதர்கள் விஷயத்தில் முயற்சியுள்ளவன் இந்திரனுடன்கூடின சத்துருக்களையும் கொல்லுவான்.

தொண்ணூற்றுநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வாமதேவர் வாக்கியத் தொடர்ச்சி.)

ஓ! அரசனே! பூமியின் பதியாயிருப்பவன் யுத்தமின்றியே ஜயத்தை விருத்திசெய்யவேண்டும். யுத்தத்தால் ஜயம்பெறுவது

---

1 'அவன் ம்ருத்யுவின் அருகில் வஸிக்கிறன்' என்பது வேறுபாடம்.

சிறந்ததன்றென்று கூறுகிறார்கள். மூலமானது மிக்க உறுதிப்படாமலிருக்கும்பொழுது அடையப்படாதபொருளை அடையவிரும்புவது கூடாது. மூலத்தில் பலமில்லாத அரசனுக்கு லாபம் விருத்தியடையாது. எந்த அரசனுடையதேசம் செழிப்புள்ளதும், நிறைந்த ஸம்பத்துள்ளவர்களும் பிரீதியுள்ளவர்களுமான அரசர்களுள்ளதும், ஸந்தோஷமுள்ளதும், சிறப்புற்ற மந்திரிகளுள்ளதுமாயிருக்கிறதோ அந்த அரசன் உறுதியானமூலமுள்ளவன். எந்த அரசனுடைய யுத்தவீரர்கள் நல்லஸந்தோஷமுள்ளவர்களும் அதிகபக்தியுள்ளவர்களும்[1] நன்கு பூஜிக்கப்பட்டவர்களுமாயிருக்கிறார்களோ அவ்வரசன் சிறிய சேனையாலும் பூமியை ஜயிப்பான். எவ்விடத்தில் தண்டமானது பலமுள்ளதாயிருக்கிறதோ அங்குப் பிரியவசனம் பேசவேண்டும். பிரியவசனத்தை முன்னிட்டதும்[2] பேதத்தைமூலமாகக்கொண்டதுமான தானம் சிறந்ததாகும். அரசன் எப்பொழுது[3] மூன்றின்செய்கையைப் பயனற்றதாக அறிகிறானோ அப்பொழுது, இடைவெளியறிந்து, விசாரியாமல் தண்டத்தைப் பிரயோகிக்கவேண்டும். எப்பொழுது சத்துருவானவன் அதிகபலமுள்ளசத்துருக்களால் அவமதிக்கப்பட்டானோ அப்பொழுது அவனிடம் உபேக்ஷைசெய்யவேண்டும். பலமுள்ளவர்களுக்குஅடிக்கத்தக்க நிலைமையானது பலமாகும். ஓ! பாரத! எப்பொழுது அரசன் பலமில்லாதவனாயிருக்கிறானோ அப்பொழுது (ஸாமதானபேததண்டங்களாகிய) நான்கினுக்கும் விரோதமில்லாத உபேக்ஷையைச் செய்யவேண்டும். ஐந்தாவது உபாயமான அவ்வுபேக்ஷையும் யாவற்றிலும் மிக்கபலமுள்ளதாகும். உண்மையையறிந்த கோஸலதேசத்தரசனே! பார்க்கவரால் பாடப்பட்ட சுலோகங்களின் உண்மையையறிந்துகொண்டு உள்ளபடி அதைச் செய்யவேண்டும். அதாவது:—'எதாவதோரிடத்தில் ராக்ஷஸன் பிசாசத்தால் அடிக்கப்படுவானகில் அவ்விடத்தில் உபேக்ஷைசெய்யவேண்டும். பலமுள்ளவர்களின்பலத்தைக் கொல்லவேண்டும்' என்பது. ஓ! அரசனே! பலமில்லாதவனும் விரோதியை விரோதியாலேயே எடுக்கவேண்டும். காலில்புகுந்தமுள்ளைக் கையிலுள்ளமுள்ளாலேயே எடுக்கவேண்டும். பலமுள்ளவர்களிற்சிறந்த அரசனே! மறைந்துதண்பத்தைச் செய்யவிரும்பும் மந்திரிகளிடமும் மிலேச்சர்களிடமும் உபாயங்களுள் இந்த உபேக்ஷைஎன்பது கூறப்படுகிறது. கல்லால் இரும்பையும் இரும்பால் கல்லையும்

---

1 'பிறரைவஞ்சிக்கும் நிலைமையிலிருக்கிறார்களோ' என்பது வேறு பாடம்.

2 ஒருவருக்கொருவர் பகையை உண்டுபண்ணுவது.

3 ஸாம தான பேதங்கள்.

நசிக்கச்செய்யவேண்டும். வில்வக்காய்களை வேறு வில்வக்காய்களாலும் மிலேச்சர்களை வேறுமிலேச்சர்களாலும் அழியச்செய்யவேண்டும். மிக்க அகங்காரங்கொண்ட தாஸர்களுக்கும் இதையே செய்யவேண்டும். சண்டாளஜாதியிலும் மிலேச்சஜாதியிலுமுள்ளவர்களைத் தண்டத்தாலேயே விலக்கவேண்டும். மறைவாகக் கெடுதி செய்பவர்களுக்குக் கெட்டமனிதர்களைக்கொண்டு முன்கூறியதைச் செய்யவேண்டும். அறம்பொருள்இன்பம் வீடுஎன்னும் நால்வகைப் பயனுக்கும் விரோதிகளான கடைசிஜாதிக்காரர்களையும், மறைவாகக் கேடுசெய்யும் மந்திரிகளையும், அவ்விதமே கெட்டபிராம்மணர்முதலியவர்களையும் [1]ஐந்து உபாயங்களாலும் ஸாதிக்கவேண்டும். துன்பமில்லாதவர்களும் நல்லபக்தியுள்ளவர்களும் ராஜ்யத்திற்குரிய வேலைசெய்பவர்களும் பட்டணத்திலும் கிராமத்திலும் உள்ளவர்களுமான மனிதர்களையும் அடக்கமில்லாதவர்களும் ராஜ்யத்திற்கு விரோதிகளுமான மனிதர்களையும் சண்டாளமிலேச்சஜாதியிலுள்ளவர்களையும் பாஷண்டர்களையும் விபரீதகர்மத்திலிருப்பவர்களையும் பலமுள்ளவர்களையும் ஆப்ரமிகளையும் பாடகர்களையும் நட்டுவர்களையும் வணக்கமுள்ளவர்களான யாவரையும் அவ்விதம் முயற்சியால் ஸாதிக்கவேண்டும். எந்த அரசனுடைய பட்டணத்திலும் கிராமத்திலுமுள்ளவர்கள் பிராணிகளிடம் தயையுள்ளவர்களும் தனதான்யங்களுள்ளவர்களுமாயிருக்கிறார்களோ அவன் உறுதியானமூலமுள்ளவன். புத்திமானவன் தன்னுடைய பராக்ரமத்திற்குச் சிறந்த ஸமயத்தை அறிந்து அப்பொழுது பிறனுடைய பூமியையும் பொருள்களையும் அடையவிரும்பவேண்டும். போகங்களில் முயலுகிறவனும் பிராணிகளிடம் தயையுள்ளவனும் தன்னை ரகூஷிப்பவனும் வேகமுள்ளவனுமாயிருப்பவனுடைய தேசம் விருத்தியடையும். எவன் இனத்தார்கள் நன்முக இருக்கும்பொழுது வஞ்சகமாகப்பிரவிருத்திக்கிறானோ அவன் கோடாலியால் காட்டை வெட்டுவதுபோலத் தன்னை வெட்டிக்கொள்ளுவான். அடிக்கத்துணியாத அரசனுக்குப் பகைவர்கள் எப்பொழுதும் குறையமாட்டார்கள். எவன் கோபத்தைவிலக்கத்தெரிந்தவனோ அவனுக்குப் பகைவனிருக்கமாட்டான். பெரியோர்களால் எந்தக் கருமம் வெறுக்கப்பட்டதோ அதை அறிவுள்ளவன் செய்யக்கூடாது. எதை நன்றென்று அறிகிறானோ அதில் தன்னை ஏவவேண்டும். எந்த அரசன் [2]காரியங்களின் மிச்சத்துடன் ஸுகங்களை அனு

---

1 இந்தப் பர்வத்தின் 315-ம் பக்கத்தில் காண்க.

2 பிறர்காரியங்களை முழுதும் முடியாமல்.

பவிக்க விரும்புகிறானே அவ்விதமிருப்பவனைப் பிறர் அவமதிக்க மாட்டார்கள். தானும் தாபமடையமாட்டான். எந்த அரசன் இந்தநடக்கையுடன் மனிதர்களிடமிருக்கிறானே அவன் இரண்டு உலகங்களையும்ஜயித்து அந்த ஜயத்தில் நிலைபெறுகிறான்' என்று சொன்னர். வாமதேவரிஷியால் இவ்விதம் சொல்லப்பட்ட வஸுமனனென்னும் அரசன் அவற்றையெல்லாம் செய்து வந்தான். அவ்விதம் செய்யும் நீயும் ஜயமின்றி இவ்விரண்டு உலகங்களையும் ஜயிப்பாய்" என்று சொன்னர்.

தொண்ணூற்றைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு யுத்ததர்ம முதலியவற்றைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஒருகூத்திரியன் மற்றொரு கூத்திரியனை யுத்தத்தில் ஜயிக்க விரும்புவானகில் அவனுக்கு ஜயத்திற்குரிய தர்மம் யாது? இதனைக் கேட்கும் எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அரசன் ஸஹாயமுள்ளவனாலும் ஸஹாயமில்லாதவனாலும் ராஜ்யத்திற்குவந்து, 'நான் உங்களுக்கு அரசன்; எப்பொழுதும் உங்களைப் பாதுகாத்துவருகிறேன்; தர்மப்படி எனக்கு வரியைக் கொடுங்கள்; என்னைப்பற்றி என்னகருதுகிறீர்கள்?' என்று சொல்லவேண்டும். அவர்களும் அங்குவந்து அவ்விதஞ் சொன்னவனை அரசனகவரிப்பார்களானால் கேஷமமுண்டாகும். ஓ! அரசனே! கூத்திரியர்களல்லாதவர்களான அவர்கள் விரோதஞ்செய்வார்களானால் தமக்குத்தகாதகர்மத்திலிருக்கும் அவர்களை எவ்விதத்திலும் எல்லா உபாயங்களாலும் அடக்கவேண்டும். ஆயுதமில்லாதகூத்திரியனைக் காக்குந்திறமை இல்லாதவனென்றும் அதிகமான எண்ணமுள்ளவனென்றும் அறிந்தால் தாழ்ந்தமனிதனும் ஆயுதமெடுப்பான்" என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! கூத்திரியனை ஓர் அரசன் மற்றொரு கூத்திரியனை எதிர்த்துவருவானகில் எவ்விதம் எதிர்த்துப் போர்புரியவேண்டும்? அதனை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "ஸன்னகமில்லாமலும் கவசமில்லாமலுமிருக்கும் ஒரு கூத்திரியன் யுத்தத்தில் எதிர்க்கத்தக்கவனல்லன். ஒருவலையிருந்து ஒருவலையிருப்பவனை நோக்கி, 'நீ அம்பை விடு' என்றும், 'நானும் விடுகிறேன்' என்றும் அறிவிக்கவேண்டும். அவன் ஸன்னகத்துடன்வருவானகில்

பிறகு தானும் ஸன்னகத்துடனிருக்கவேண்டும். அவன் சேனை யுடன் வருவானகில் பிறகு தானும் சேனையுடன் அவனை அழைக்க வேண்டும். அவன் கபடமாகப் போர்புரிவானகில் தானும் கபட மாக எதிர்த்து யுத்தஞ்செய்யவேண்டும். அவ்விதமின்றித் தர்மப் படி யுத்தஞ்செய்வானனல் தர்மப்படியே தடுக்கவேண்டும். ரத முள்ளவனைக் குதிரையால் எதிர்த்துச் செல்லக்கூடாது. ரதமுள் ளவனிடம் ரதமுள்ளவனகவே செல்லவேண்டும். ஆபத்துஸமயத் தில் அடிக்கக்கூடாது. பயந்தவனையும் ஜயிக்கப்பட்டவனையும் அடிக் கக்கூடாது. விஷப்பூச்சுள்ள அம்பும் [1] கரணியும் போடத்தக்கன வல்ல. இவை அஸத்துக்களுக்குரிய ஆயுதங்களாகும். உண்மை யாகவே யுத்தஞ்செய்யவேண்டும். அடிக்கவிரும்பியவனைக் கோபிக் கக்கூடாது. யுத்தத்தில் ஒருவனுக்கு யானையிருக்கையில் மற்றொரு வனுக்கு யானையில்லாமலிருந்தால் காலாள் யானையுள்ளவனோடு யுத்தஞ்செய்வது கூடாது; யானையுள்ளவன் காலாளோடு யுத்தஞ் செய்வதும் கூடாது. யானையால் யானையைப் போர்புரியவேண்டும்; ஒருஸமயம், பழக்கப்பட்டகுதிரையும் யுத்தஞ்செய்யலாம்; திவ் வியமான அஸ்த்ரபலம்பொருந்தியவன் இஷ்டப்படி யானையிலும் பூமியிலும் ஸமமானவிடத்திலும் தேராலும் குதிரையாலும் எப் பொழுதும் யுத்தஞ்செய்யலாம். ராஜனே! ராமருக்கும் ராவண னுக்கும் நடந்தயுத்தத்தில் குரங்குகளும் பெரும்பாக்கியசாலியான லக்ஷ்மணனும் அவ்விதமே விபீஷணரும் காலாட்களாயிருந்தார் கள். ராவணனுடைய முடிவுக்காலத்தில் கெட்ட நடக்கையுள்ளவ னும் பாவத்தைச்செய்தவனுமான அவனை ராகவர் இந்திரனுடைய தேரிலேறக் [2] கொன்றார். திவ்வியமான அஸ்திரங்களின் பலம் பொருந்தியவரிடம் இவையாவும் விதிக்கப்படுகின்றன. இது தேவ ஸுரர்கள் யாவரிடத்திலும் முன்னோர்களால் காணப்பட்டது. பலமில்லாதவனையும் புத்திரனில்லாதவனையும் ஆயுதம் ஒடிந்தவனை யும் ஆபத்துள்ளவனையும் நாணறுந்தவனையும் வாகனமிழந்தவனை யும் எவ்விதத்திலும் கொல்லக்கூடாது. அரசன் ஆபத்துள்ளவ னைத் தன் தேசத்திற்கனுப்பிச் சிகித்ஸைசெய்யவேண்டும். அல் லது, தன் வீட்டிற் சேரும்படி செய்யவேண்டும். புண்கள் ஆறின பிறகு அவனை விடுவிக்கவேண்டும். இது ஸனாதனமான தர்மம்; ஆகையால், தர்மப்படி யுத்தஞ்செய்யவேண்டுமென்று ஸ்வாயம் புவமனு கூறினர். ஸாதுக்களின் தர்மமானது ஸாதுக்களி டம் நிலைபெற்றிருக்கும். அதையடைந்து நசியாமலிருக்கச்செய்ய

---

1 நேரான ஒருகூரும் திரும்பிய மறுகூருமுள்ள ஓர் ஆயுதம்.

2 இங்கு அதிக பாடமான அரைசுலோகம் விடப்பட்டது.

வேண்டும். தர்மத்தில் நியமமுள்ள எந்த க்ஷத்திரியன் அதர்மத்தால் ஜயம்பெறுகிறானே பாபியும் அவமதிக்கப்பட்ட ஜீவனமுள்ளவனுமான அவன் தன்னைத் தன்னால் கொல்லுகிறான். நல்லவர்களைத் தீயவழியால் வெல்லுதலென்பது தீயோருடைய தொழில். தர்மத்தால் நேரும் மரணமும் மிகச்சிறந்தது. பாபகர்மத்தால் உண்டாகும் ஜயமும் சிறந்ததன்று. ஓ! அரசனே! செய்யப்பட்ட அதர்மமானது பசுவைப்போல உடனே பயன்தருவதில்லை. வேர்களையும் கிளைகளையும் எரித்துக்கொண்டு செல்லும் பாபியானவன் பாபகர்மத்தால் பொருளையடைந்து ஸந்தோஷிப்பான். அந்தப் பாபியானவன் அப்பொருளாலேயேவளர்ந்துகொண்டு பாபத்தில் விசேஷமாகச் செல்லுவான். அவன் தர்மமிருக்கிறதென்ற எண்ணமில்லாதவனுய்ப் பரிசுத்தர்களைப் பரிஹஸிப்பவன்போலிருந்து சிரத்தையில்லாதவனுகி நாசமடைவான். அவன் வருணனுடைய பாசங்களால் கட்டப்பட்டுத் தேவர்களால் அவமதிக்கப்படுகிறான். காற்றுநிறைந்த பெரிய துருத்திபோலத் தான்செய்த கர்மத்தாலேயே வளர்ச்சியடைகிறான். பிறகு, ஆற்றங்கரையிலுள்ள மரம்போல வேருடன் பறிக்கப்படுகிறான். கல்லில் உடைந்த குடத்தைப்போல அவனை ஜனங்கள் நிந்திக்கிறார்கள். ஆகையால், அரசன் தர்மத்தினுல் ஜயத்தையும் கோசத்தையும் அடைய விரும்பவேண்டும்.

தொண்ணூற்றுரூவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் ஜயலக்ஷணங்களையும் மற்றும் சில ராஜதர்மங்களையும் கூறியது.)

அரசன் அதர்மத்தால் பூமியை ஜயிக்க விரும்பக்கூடாது. எந்த அரசன் அதர்மத்தால் ஜயத்தையடைந்து புகழப்படுவான்? அதர்மத்துடன்கூடிய ஜயமானது லோகத்திற்குக் காரணமன்று; நிலைபெற்றதுமன்று. பரதஸ்ரேஷ்டனே! அந்த அரசனையும் பூமியையும் கீழேதள்ளும். சிதறின கவசமுள்ளவனையும் உன்னுடையவனுயிருக்கிறேனென்று சொல்லுகிறவனையும் அஞ்சலி செய்தவனையும் ஆயுதம்விட்டவனையும் பிடித்து வருத்தக்கூடாது. எவன் பலத்தால் ஜயிக்கப்பட்டவனே அவனிடமும் அரசன் யுத்தஞ்செய்யக்கூடாது. அவனை ஓராண்டு [1] அடக்கிவைக்கவேண்

1 உனக்குத் தாஸனென்று சொல்லும்படி செய்யவேண்டும்.

டும். அதன்பிறகு, அவன் [1] மறுபிறப்புள்ளவனுகிறான். பராக்ரமத்தால் அபகரிக்கப்பட்ட கன்னியை ஒரு வருஷத்திற்குமுன் [2] வினவக்கூடாது. பலாத்காரமாக அபகரிக்கப்பட்டபொருளும் [3] மற்றுமுள்ளயாவும் இவ்விதமேயாகும். கொலைசெய்யத்தக்கவனுடைய பொருளை வைத்துக்கொள்ளக்கூடாது; செலவுசெய்துவிடவேண்டும். (அவனுடைய) பசுக்களின்பாலை பிராமணர்களே குடிக்கலாம்; காளைகளையும் உபயோகித்துக்கொள்ளலாம். அவன் குற்றவாளியாக இல்லாவிட்டால் அவனை கூடமிக்கவேண்டும். கூத்திரியனுடன்கூத்திரியனே யுத்தம்பண்ணத்தக்கவன் என்று தர்மம்விதிக்கப்படுகிறது. கூத்திரியனல்லாத மற்றவன் கூத்திரியனைக் குறித்து எவ்விதத்திலும் ஆயுதத்தைப்போடக்கூடாது. இரண்டுசேனைகள் யுத்தஞ்செய்யச் சேர்ந்துநிற்கும்பொழுது இரண்டுபக்கத்திற்கும் கூடமத்தைவிரும்பிப் பிராமணன்இடையில்செல்லுவானுகில் அப்பொழுது யுத்தஞ்செய்யக்கூடாது. எவன் பிராம்மணனை மீறிச்செல்லுகிறானே அவன் நிலைபெற்றதான மரியாதையைப் பேதித்தவனுவான். அதமனான கூத்திரியன் மரியாதையை மீறி நடப்பானுனல் அதன்பின் அவன் கூத்திரியஜாதியில் கணக்கிடத்தக்கவனல்லன்; ஸமாஜத்தில் எடுத்துக்கொள்ளத் தக்கவனுமல்லன். ஜயம்பெற விரும்புமரசன் தர்மக்குறைவாலும் மரியாதையைமீறிச்செல்வதனுலும் அந்தநடக்கையை அனுஸரிக்கக்கூடாது. தர்மத்தால் அடையப்பட்ட ஜயத்தைக்காட்டிலும் வேறு பெரியலாபம் என்ன இருக்கிறது? பலாத்காரமாகக் கெட்டவழியுள்ள காரியங்களைச் செய்தவுடன் நன்மொழியாலும் போகங்களைக்கொடுத்தும் விரைவில் ஸந்தோஷப்படுத்தவேண்டும். அஃது அரசர்களுக்கு உயர்ந்த நீதியாகும். [4] உபாயமின்றி ஜயிக்கப்பட்டவர்களும் துன்பப்படுத்தப்பட்டவர்களுமான ஜனங்கள் அரசனுக்குப் பலதுன்பங்களை எதிர்பார்த்துக்கொண்டு பகைவர்களை அடுப்பார்கள். ஓ! அரசனே! எல்லாவிதத்திலும் அரசனுக்கு ஆபத்தைவிரும்புகிற

---

1 'அவன் அவ்விதஞ்சொல்லாவிடினும் தாஸத்தன்மையடைந்தவனுகவே ஆகிறான். ஆகையால், ஒருவருஷத்திற்குப்பின் அவனை விடுவிக்கவேண்டும்' என்பது கருத்து.

2 ஒருவருஷத்திற்குப்பின், 'நீ மணம்புரிய விரும்புவது என்னையா அல்லது மற்றவனையா?' என்றுகேட்டு அவளிஷ்டம்போலச் செய்யவேண்டும்.

3 'சத்துருவினிடமிருந்து அபகரிக்கப்பட்ட வேலைக்காரன்முதலானவர்களையும் ஒருவருஷம் சென்றவுடன் சத்துருவுக்கே கொடுத்துவிடவேண்டும். அப்படிச்செய்வது இரும்கொடுத்ததுபோலாகும்' என்பது பொருள். 4 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

வாகளான அந்த மனிதர்கள் அவனுக்கு ஆபத்துள்ளஸமயத்தில் ஸந்தோஷமடைந்து அவன் விரோதிகளுக்கு அனுகூலஞ்செய்வார்கள். விரோதியை அவமதித்து வஞ்சிக்கக்கூடாது. எவ்விதத்திலும் அதிகமாக அடிக்கவுங்கூடாது. அதிகமாக அடிக்கப்பட்ட மனிதன் ஒருஸமயம் உயிரையும்விட்டுவிடுவான். துன்பப்படுத்தப்பட்டவன் சிறிதுதிரவியத்தைப் பெற்றிருந்தும் ஸந்தோஷப்படமாட்டான். அவ்விதமுள்ளவன் உயிர் ஒன்றைமாத்திரமே பெரிதாக நினைப்பான். எந்த அரசனுடையதேசமானதுநிறைந்ததும்பெருமையுள்ளதும் அரசனிடம் பிரீதியுள்ளதும் ஸந்தோஷமுள்ள வேலைக்காரர்களும் மந்திரிகளுமுள்ளதுமாயிருக்கிறதோ அந்த அரசன் உறுதியான மூலமுள்ளவன். பூஜிக்கத்தக்க ரித்விக்கையும் புரோஹிதரையும் ஆசாரியரையும் மற்றுமுள்ள மிகச்சிறந்த கல்விமான்களையும் எவன் பூஜிக்கிறானோ அவனே உலகந்தரிந்தவனென்று சொல்லப்படுகிறான். இந்த நடக்கைகொண்டே இந்திரன் பூமியை அடைந்தான்; [1] மற்றுமுள்ள அரசர்களும் ஜயமடைய விரும்புகிறார்கள். ஓ! ராஜனே! பிரதர்த்தனனென்னும் அரசன் பெரியயுத்தத்தில் ஜயமடைந்து பூமி ஒன்றைத்தவிரப் பொருளையும் ஆகாரத்தையும் தான்யங்களையும் பலமுறை அபகரித்துக்கொண்டான். திவோதாஸனென்பவன் அக்நிஹோத்ரஹோமத்திற்கு அங்கமானஹவிஸ்ஸையும் பூஜிக்கத்தக்க அன்னத்தையும் அபஹரித்தான்; அந்தக்காரணத்தால் வஞ்சிக்கப்பட்டவனானன். ஓ! பாரத! நாபாகன் வேதமறிந்தவர்களின் திரவியங்களையும் ரிஷிகளின் திரவியங்களையுந் தவிர அரசர்களுடன் கூடின மற்ற ராஜ்யங்களைத் தக்ஷிணையாக அளித்தான். ஓ! யுதிஷ்டிர! தர்மமறிந்தவர்களும் முன்னோர்களுமான அரசர்களுக்குப் பலவிதமான தனங்களும் இருந்தன. அவையாவும் எனக்குஇஷ்டமானவை. எந்த அரசன் தனக்கு ஸம்பத்தை விரும்புகிறானோ அவன் எல்லாவித்தைகளின் விசேஷத்தாலும் ஜயம்பெற விரும்பவேண்டும்; மாயையாலும் டம்பத்தாலும் விரும்பக்கூடாது" என்றுசொன்னர்.

தொண்ணூற்றேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், க்ஷத்திரியர்கள் யுத்தஞ்செய்வது தர்மமென்பதைப் பலகாரணங்களால் நிரூபித்தது.)

யுதிஷ்டிரர், "பரதர்களிற் சிறந்த அறிவுள்ள அரசரே! க்ஷத்திரியர்களின் தர்மத்தைவிட மிகக்கெட்டதான தர்மம் வேறில்லை;

---

1 'இந்த நடக்கையைக் கொண்டே பூமியிலுள்ளவர்கள் இந்திரனுடைய ராஜ்யத்தை அனுபவிக்கவிரும்புகிறார்கள்' என்பதுவேறுபாடம்.

அரசன் விரோதமாக நடத்தும்பொழுதும் யுத்தத்திலும் பலஜனங்களைக் கொல்லுகிறான். அரசன் எந்தக்கர்மத்தால் அந்தக்குற்றம் விலகி உலகங்களை ஜயிக்கிறான்? அறியவிருப்பமுள்ள எனக்கு அதனை உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"பாபிகளை அடக்குவதாலும் ஸாதுக்களை ரக்ஷிப்பதாலும் யாகங்களாலும் தானங்களாலும் அரசர்கள் குற்றமற்றவர்களாகிப் பரிசுத்தர்களாகிறார்கள். ஜயத்தை விரும்புகிற அரசர்கள் பிராணிகளைப் பீடிக்கிறார்கள். அவர்களை ஜயமடைந்தபின் திரும்பவும் பிரஜைகளை விருத்திசெய்கிறார்கள். தானம், யாகம், தவம் இவைகளின் பலன்களால் பாபங்களைத் தூரவிலக்குகிறார்கள். பிராணிகளைக் காப்பதால் இவர்களுக்குப் புண்ணியம் விருத்தி அடைகிறது. நிலங்களைச் சுத்தப்படுத்துகிறவன் பயிருடன சேர்ந்த புல்லுகளை நசிக்கச்செய்தாலும் பயிர் நசியாமல் நிலத்தை எவ்விதம் சுத்தப்படுத்துகிறானே அவ்விதம் ஆயுதங்களை விடுகிறவர்கள் கொல்லத்தக்கவர்களைப் பலவிதமாகக் கொல்லுகிறார்கள். திரும்பவும் பிராணிகளை விருத்திசெய்வது அந்தப் பாபத்திற்குப் பிராயச்சித்தமாகக் காணப்படுகிறது. எவன் பிராணிகளைத் துன்பத்திலிருந்தும் கொலையிலிருந்தும் கஷ்டத்திலிருந்தும் திருடர்களிடமிருந்தும் உயிரைக்கொடுத்து எப்பொழுதும் ரக்ஷிக்கிறானே அவன் பொருளையும் ஸுகத்தையும் கொடுக்கும் பிரம்மதேவனாகிறான். அந்த அரசன் அபயமளிப்பதைத் தக்ஷிணையாகக்கொண்ட பல யாகங்களைச்செய்து இவ்வுலகில் க்ஷேமங்களை அனுபவித்தபின் இந்திரனுடைய லோகத்திற்குஒப்பான லோகத்தையும் அடைகிறான். பிராம்மணர்களுக்கு வேண்டிய காரியம் வரும்பொழுது எவன் வெளிவந்து தன் சரீரத்தை யூபமாகநாட்டிப் பயமில்லாமல் சத்துருக்களை எதிர்த்துச் சரங்களை இறைத்துக்கொண்டு யுத்தஞ்செய்கிறானே அவனுடைய அந்தயாகமானது அளவில்லாத தக்ஷிணையுள்ளது. பூமியில் அதிலும் சிறந்ததொன்றுமில்லையென்று தேவர்கள் பார்க்கிறார்கள். யுத்தத்தில் அவனுடையதேஹ எவ்வளவு ஆயுதங்கள் பிளக்குமோ எல்லா இஷ்டங்களையும் கொடுக்கும் அழிவில்லாதவையான அவ்வளவு உலகங்களை அவன் அடைகிறான் யுத்தத்தில் அவன் சரீரத்திலிருந்து பெருகுகிற உதிரப்பெருக்குடன் கூடவே பாபங்கள் யாவும் விலகுகின்றன. உயிரைவிடுங் காலத்தில் துக்கங்களைப் பொறுக்கிறதைவிடப் பெரிய தவமில்லையென்று தர்மமறிந்தோர் அறிவிக்கிறார்கள். யுத்தத்தில் பயந்தவர்கள் தர்மபுத்தியுள்ளவர்களாய் மேகத்தினிடமிருந்து ஜலத்தை விரும்பி

வதுபோல, சூரனிடமிருந்து ரக்ஷணையைவிரும்பிப் பின்னேயிருப்பார்கள். 1 சூரனாக இருப்பவன் அப்படியே பயமில்லாமலிருக்கும்படி சக்ஷமமாக ரக்ஷித்து அந்தமனிதர்களை யுத்தத்தில் முன்னிற்கும்படி செய்யாமலிருப்பானனால் அது புண்ணியமாகும். அவர்கள் ரக்ஷணையைஒப்புக்கொண்டு அவனை எப்பொழுதும் நமஸ்கரித்து நியாயப்படி யுத்தஞ்செய்வார்களானாலும் அஃது (அவனுக்கு) அவ்விதப் புண்ணியமாகாது. யுத்தத்திற்குக்கூப்பிட்டால் சேனைகள் எதிர்க்குங்காலத்தில் ஸமானமான மனிதர்களிடமும் பெரியவேற்றுமை காணப்படுகிறது. 2 சிலர் எதிர்த்துச்செல்லுகிறார்கள். சிலர் எதிர்த்துச் செல்லுகிறதில்லை. சூரனையிருப்பவன் பிறர்களை எதிர்த்துச்செல்லுகிறான். பயமுள்ளவன் கஷ்டமான ஸமயத்தில் ஸ்வர்க்கத்திற்குரிய வழியைத்தெரிந்துகொண்டு நிற்கும் ஸஹாயமனிதர்களைத் தள்ளிவிட்டு ஓடுகிறான். அப்பா! ஸஹாயமனிதர்களைத் தள்ளிவிட்டு சக்ஷமமுள்ளவர்களாய் வீடு செல்லுகிற அதர்மமானமனிதர்களை யுத்தத்தில் ஏற்படுத்தாதே. இந்திரன்முதலியதேவர்கள் அவர்களுக்குத் துன்பத்தைச் செய்கிறார்கள். எவன் ஸஹாயமான மனிதர்களைத்தள்ளிவிட்டுத் தன் உயிரை ரக்ஷிக்கவிரும்புகிறானே அவனைக் கட்டைகளாலும் இருப்புத்தடிகளாலும் கொல்லவேண்டும்; 3 கடாக்ஷியால் எரிக்கவாவது வேண்டும். எந்தக்ஷத்திரியர்கள் இவ்விதமிருக்கிறார்களோ அவர்களைப் பசுக்களைப்போலக் கொல்லவாவதுவேண்டும். படுக்கையிலிருந்துமரிப்பதென்பது க்ஷத்திரியனுக்கு அதர்மமாகும். எந்தக்ஷத்திரியன் கபபித்தங்களை விட்டுக்கொண்டும் தீனமாக அழுதுகொண்டும் காயப்படாததேகத்துடன் மரணமடைகிறானே அவனுடைய அந்தவினையைப் பழமையையறிந்தவர்கள் கொண்டாடுவதில்லை. அப்பா! க்ஷத்திரியர்களுக்கு வீட்டிலிருந்துமரிப்பது கொண்டாடப்படுகிறதில்லை. சூரரென்னும் அபிமானமுள்ளவர்களுக்கு அது சௌரியமில்லாததும் தாழ்ந்ததும் அதர்மமுமாகும். இது கஷ்டம். அந்தோ! மிகப்பாவமான துன்பம் என்று கூச்சலிடுகிறவனும் மரணக்குறியுள்ள முகமுள்ளவனும் நாற்றமுள்ளவனும் புத்திரர்களைப்பற்றிச் சோகப்படுகிறவனுமாய் அடிக்கடி நோயில்லாதிருப்பதையும் மரணத்தையும் விரும்புகிறான். வீரனும் அஹங்காரமுள்ளவனும் பெரிய மனமுள்ளவனுமாயிருப்பவன் இவ்விதமரணத்திற்குத் தக்கவனல்லன். க்ஷத்திரியனாயிருப்பவன் நண்பர்களால் பூஜிக்கப்பெற்று யுத்தங்களில் ஹிம்

---

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

2 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

3 புல்லுகளால் செய்யப்பட்ட படுக்கையிற்கட்டித் தீயிடுவது.

ஸையைச் செய்து கூர்மையான ஆயுதங்களால் அடிக்கப்பட்டவனுகி மரணமடையத்தக்கவன். சூரனுயிருப்பவன் பலத்துக்கும் கோபத்துக்கும் வசப்பட்டவனுய் மிகவும் யுத்தஞ்செய்வான்; பிறரால் அறுக்கப்படும் அங்கங்களைக் கவனிக்கவேமாட்டான். அவன் யுத்தத்தில் உலகங்களால் பூஜிக்கப்பட்டதும் சிறந்ததுமான மரணத்தையடைந்து பெரிதான தன்தர்மத்தைப் பெற்று இந்திரன்உலகத்திற்குஒப்பான உலகத்தை அடைகிறான். புறங்காட்டாதசூரன் எல்லா உபாயங்களாலும் யுத்தமுகத்தில் நின்று உயிரைவிட்டு இந்திரன்உலகத்திற்குச்சரியான உலகத்தை அடைகிறான். சூரனைனவன் எங்கெங்குப் பகைவர்களால்சூழப்பட்டு அடிக்கப்படுகிறுனே அங்கங்கு அவன் துயரத்தை அடையாமலிருப்பானுகில் அழிவில்லாத உலகங்களை அடைகிறான்" என்று சொன்னர்.

தொண்ணூற்றெட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(இந்திரன், ஸுதேவன்சரித்திராத்தையும் யுத்தமென்னும்யாகத்தின் ரித்விக்குமுதலிய அங்கங்களையும் யுத்தத்தில் இறந்தவர்களுக்கு வரும்உலகங்களையும் அம்பரீஷனுக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! திரும்பாமல் யுத்தஞ்செய்யுஞ் சூரர்கள் மரணமடைந்தபின் எந்தஉலகங்களை அடைகிறார்கள்? அதனை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"ஓ! யுதிஷ்டிர! இவ்விஷயத்திலும் அம்பரீஷனுக்கும் இந்திரனுக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். நாபாகனின்புத்ரனை அம்பரீஷன், மிகஅரிதான ஸ்வர்க்கலோகஞ்சென்று, தேவலோகத்திலிருப்பவனும், இந்திரனுடனும் மந்திரிகளுடனுங்கூட முழுமையும் தேஜோரூபமாயும் திவ்யமாயுமுள்ள உத்தம விமானத்தில் இருப்பவனும், மிகவும் மேலானபதம் பெற்றவனும், மங்களரூபியுமான தன் ஸைனபதியைக் கண்டான். உதாரபுத்தியுள்ள அந்த அம்பரீஷன், சூரர்களுக்குரிய பதம் பெற்றவனும் பெயரால் ஸுதேவனென்று பிரசித்தனும் தனக்கு மேற்சென்றவனுமான தன்ஸைனபதியைக்கண்டு அவனுடையபெருமையைப்பார்த்து வியப்புற்று இந்திரனைநோக்கிச் சொல்லத் தொடங்கினன். 'ஏ! இந்திர! கடல்வரையிலுள்ள பூமிமுழுமையும் விதிப்படி ஆண்டு தர்மவிருப்பத்

துடன் நான்குஜாதிகளிலும் சாஸ்திரப்படி பிரவிருத்தித்தவனும், கடுமையான பிரம்மசரியத்துடனும் பெரிய ஆசாரத்துடனும் குரு சுஸ்ரூஷையுடனும் வேதங்களையும் அரசர்க்குரிய சாஸ்திரமுழுதையும் தர்மப்படி கற்று அன்னபானங்களால் அதிதிகளையும் அப்படியே சிராத்தத்தால் பிதிருக்களையும் அத்யயனநியமங்களால் ரிஷிகளையும் மிக்க உத்தமமானயாகங்களால் தேவர்களையும் ஸந்தோஷப்படுத்திச் சாஸ்திரத்துக்கு ஒத்தவிதிப்படி க்ஷத்திரியர்களுக்குரிய தர்மத்தில் நிலைபெற்றுக் கவனித்துவந்தவனுமான நான் யுத்தத்தில் சேனையை ஜயித்தவனையிருக்கிறேன். தேவர்களுக்கரசனே! அடக்கமான மனமுள்ள இந்த ஸுதேவன் முன்பு எனது சேனைத்தலைவனை யுத்தவீரனாயிருந்தான். இவன் என்னகாரணத்தால் எனக்கு மேலானவனையிருக்கிறான்? ஸூர்யனுக்கு ஒப்பான விமானத்திலிருந்துகொண்டு ஸ்வர்க்கலோகத்தில் களிக்கிறான். இவன் முக்கியமானயாகங்களைச் செய்தவனல்லன்; விதிப்படி பிராம்மணர்களுக்குத் திருப்திசெய்வித்தவனுமல்லன். ஓ! இந்திரனே! அப்படிப்பட்ட இவன் எந்தக்காரணத்தால் எனக்கு மேலானதும் தேவர்களனைவர்களுக்கும் அடைய மிக அரிதுமான இவ்விதஐஸ்வரியத்தைப் பெற்றான்?' என்று கேட்க, இந்திரன் சொல்லத்தொடங்கினன்.

'அரசனே! இவனால் செய்யப்பட்டகாரியம் உனக்கு ப்ரத்யக்ஷம். ராஜனே! முந்தித் தர்மப்படி நன்றாகப் பூமியைப்பரிபாலனம் செய்த உனக்கு விரோதத்தைச் செய்த சத்துருக்கள் யாவரும் ஜயிக்கப்பட்டார்கள். சதஸ்ருங்கனென்னும் ராக்ஷஸராஜனின் புத்திரர்களும் யுத்தத்தில் அதிகக் கொழுப்புள்ளவர்களும் உலகத்தில் ஜயிக்கமுடியாதவர்களும் அதிகபலமுள்ளவர்களுமான ஸம்யமன் வியமன் ஸுயமன் என்ற மூன்றுராக்ஷஸர்களும் நீயாகஞ்செய்த சுபமான அக்காலத்தில் ஜயிக்கப்பட்டார்கள். தேவர்களின் ஹிதத்தைவிரும்பி அச்வமேதமென்னும் பெரியயாகத்தைச்செய்யும் உனக்கு இடையூறு செய்யவேண்டி நூறுகோடி பரிவாரமுள்ளதான பெரிய ராக்ஷஸசேனையை அழைத்துக்கொண்டு மூன்று ராக்ஷஸர்களும் வந்தார்கள். பிறகு, உன்னுடைய பிரஜைகள் யாவும் சிறையிலடைக்கப்பட்டன. பிரஜைகள் யாவும் உன் சேனைகள் யாவும் துன்பமடைந்தன. அரசனே! அக்காலத்தில் சேனைத்தலைவனையிருந்தவனும் அமாத்தியர்களின் வசனத்தைக்கேட்டு எல்லா வேலைகளிலிருந்தும் விலக்கப்பட்டிருந்தவனுமான அந்தஸுதேவனை அவர்களுடைய கபடமுள்ள சொற்படி, ஜயிக்கமுடியாத ராக்ஷஸர்களைக் கொல்லவேண்டியதற்காக, 'ராக்ஷஸர்களின் சேனையை ஜயிக்காமல் நீ திரும்பி

வரக்கூடாது; சிறையிலுள்ளவர்களை விடுவியாமலும் திரும்பிவரக் கூடாது' என்று சொல்லி, எல்லாச் சேனைகளுடனும் அனுப்பினாய். அரசனே! ஸ்ரீதேவன் அவ்வசனத்தைக்கேட்டு யாத்திரையைச் செய்து பிரஜைகள் சிறையில் அடைபட்டிருக்கும் அவ்விடஞ்சென்றான். சேனைத்தலைவனான ஸ்ரீதேவன் மிக்ககோரமான ராக்ஷஸர்களின் பெரிய சேனையைக்கண்டு, இந்தச்சேனையானது இந்திரனுடன்கூடிய தேவாஸுரர்களாலும் ஜயிக்கமுடியாதது. திவ்யமான அஸ்த்ரங்களின் பலத்தை மிக அதிகமாகப்பெற்ற அம்பரீஷன் இவர்களின் ஒருகூற்றையும் நசிக்கச்செய்ய வல்லவனல்லன். இவ்விதமான நான் எவ்விதம் வல்லவனாவேன்?' என்று மிகவுஞ் சிந்தையடைந்தான். அரசனே! பிறகு, கபடமுள்ள எல்லா மந்திரிகளுடனும் அமாத்தியர்களுடனுங்கூட நீ இருக்குமிடத்திற்கு சேனையனைத்தையும் திருப்பியனுப்பிவிட்டான். பிறகு, உலகத்திற்குப் பதியும் மயானத்திலிருப்பவரும் விருஷபக்கொடியுள்ளவரும் மஹாதேவருமான ருத்ரதேவரைச் சரணமடைந்து போற்றினான். போற்றியபின், ஆயுதத்தையெடுத்துத் தன்தலைவ அறுக்க முயன்றான். தேவர்களுக்கும் தேவரான அவரும் கருணைபுரிந்து ஆயுதத்துடன்கூடிய அவனது வலக்கரத்தைப் பிடித்துக்கொண்டு அவனைப்பார்த்து, 'மகனே! என் இந்த ஸாஹஸத்தைச்செய்ய விரும்புகிறாய்? எனக்குச்சொல்' என்ற இவ்வசனத்தைச் சொன்னார். அந்த ஸ்ரீதேவன் தலையால் பூமியில் படிந்து மஹாதேவரை நோக்கி, 'ஓ! தேவேசரான பகவானே! ராக்ஷஸர்களின் இச்சேனையை யுத்தத்தில் ஜயிக்க நான் சக்தியற்றவனாயிருக்கிறேன். ஆகையால், உயிரைவிடப்போகிறேன். உலகத்திற்குப் பதியான மஹாதேவரே! துன்பமுற்ற எனக்கு நீர் ரக்ஷகராயிருக்கவேண்டும். மஹாதேவரே! மந்திரிகளுடன்கூட அம்பரீஷராஜர் ஆக்ரோசத்துடன் ஜயிக்காமல் வரக்கூடாதென்று என்னை(ப் பார்த்து)ச் சொன்னார்' என்று சொன்னான். முகங்கவிழ்ந்து பூதலத்தில் விழுந்தவனும் மஹாத்மாவுமான அந்தஸ்ரீதேவனை நோக்கி மஹாதேவர் பிராணிகளின் ஹிதத்தைவிரும்பிக் கூட்டத்துடன்கூடியதும் யுத்தத்துடன்கூடியதும் தேர் யானை குதிரைகளால் சூழப்பட்டதும் திவ்யமான அஸ்த்ரங்களால் நன்றாக அலங்கரிக்கப்பட்டதுமான தனுர்வேதத்தை அழைத்துச் சொல்லத் தொடங்கினர். முக்கண்ணரானசங்கரர் திரிபுரர்களைக் கொல்லச் சாதனமானதும் பெரிய பாக்கியம் பெற்றதுமான ரதத்தையும் பிநாகமென்னும் வில்லையும் கத்தியையும் எல்லா அஸுரர்களையும் கொன்ற அந்தப் பயங்கரமான அஸ்த்ரத்தையும் அளித்து, சேனைத் தலைவனை ஸ்ரீதேவனை நோக்கி, 'ஸ்ரீதேவ! இந்த ரதத்திலிருக்கும்

நீ தேவர்களாலும் அஸுரர்களாலும் ஜயிக்கப்படமாட்டாய். நீ மாயையால் மோஹமுள்ளவனுப்பூமியில் அடிவைப்பது தகுதியன்று. நீ தேரிலிருந்துகொண்டு தேவாஸுரர்களனைவரையும் ஜயிக்கப்போகிறாய். ஆயிரம் சூரியருக்கொப்பானகாந்தியுள்ள இத்தகைய ரதத்தை ராக்ஷஸர்களும் பிசாசர்களும் பார்ப்பதற்கே சக்தியுள்ளவர்களல்லர். உன்னுடன் யுத்தஞ்செய்ய எவ்விதம் சக்தியுள்ளவராவர்?' என்று சொன்னர். அந்த ஸுதேவன் ராக்ஷஸர்கள் யாவரையும் ஜயித்துச் சிறையிலுள்ள மடந்தையரை விடுவித்து அந்த ராக்ஷஸர்கள் யாவரையுங்கொன்றபின் வியமனை எதிர்த்துக் கைச்சண்டையில் கொல்லப்பட்டான். வியமனும்வீழ்த்தப்பட்டான். அப்பா! அரசனே! பராக்ரமத்தை வெளியிடும் அந்த ஸுதேவனுக்கு யுத்தமென்னும் மிகப்பெரிய யாகமுண்டாயிற்று. ஸைனிமுகத்தை அடைந்து ஸன்னஹமுள்ளவரும் தீக்ஷை பெற்றவருமாக யுத்தஞ்செய்யும் மற்றுமுள்ள யுத்தவீரரானமனிதரனைவரும் யுத்தமென்னுமியாகத்தில் அதிகாரம் பெற்றிருக்கிறார்களென்பது நிச்சயம்' என்றுசொன்னன். அம்பரீஷன், 'ஓ! இந்திர! இந்தயாகத்தில் எவை ஹவிஸுகள்? எது நெய்? எது தக்ஷிணை? இதில் எவர்கள் ரித்விக்குக்களென்று சொல்லப்படுகிறார்கள்? அவற்றை எனக்குச்சொல்லவேண்டும்' என்றுகேட்க, இந்திரன் சொல்லத்தொடங்கினன்.

'அந்த யாகத்தில் யானைகள் ரித்விக்குக்களாகவும் குதிரைகள் [1] அத்வர்யுக்களாகவும் அவ்விதம் பிறர்களின் மாம்ஸங்கள் ஹவிஸுகளாகவும் உதிரம் நெய்யாகவும் சொல்லப்படுகின்றன. நரிகளும், கழுகு காகம் என்னும் பறவைகளும் அந்த யாகத்தில் ஸதஸ்யர்கள். இவர்கள் மிச்சமான நெய்யைக் குடிக்கிறார்கள்; யாகத்திலுள்ள ஹவிஸையும் புஜிக்கிறார்கள். அந்த யாகஞ் செய்கிறவனுக்கு ஜ்வலிக்கின்றவைகளும் கூர்மையுள்ளவைகளும் தூவைக்கப்பட்டவைகளுமான கத்தி வேல் கோடாலிகளும் பிராஸம் தோமரமென்னும் இவைகளின் கூட்டங்களும் ஸ்ருக்குக்களாகும். வில்லிலிருந்து வேகத்தால் நீண்டதும் கூர்மையுள்ளதும் பிறன் சரீரத்தைப் பிளப்பதும் நேரானதும் நன்றுகத்தீட்டப்பட்டதும் தூவைக்கப்பட்டதுமான அம்பானது பெரிய ஸ்ருவமாகும். புலித்தோலால் கட்டப்பட்டதும் யானைத்தந்தத்தால்செய்த பிடியுள்ளதும் யானையின் கையை அறுப்பதுமான கத்தியானது அந்த யுத்தத்தில் [2] ஸ்ப்யமாகும். முழுமையும் எஃகினால் செய்யப்பட்டவைகளும் கூர்மையுள்ளவைகளும் ஜ்வலிக்கின்ற

1 ரித்விக்குக்களில் ஒருவகையார். 2 யாகத்தைச்சேர்ந்த ஒருபொருள்.

வைகளும் தீட்டப்பட்டவைகளுமான பிராஸம் வேல் ரிஷ்டி கோடாலி ஆகிய இவைகளால் செய்யப்படும் அடியானது (கொடுக்கப்படும்) தனமாகும். 1 யுத்தத்தில் அடிப்பதால் பூமியில் பெருகும் உதிரமானது ஹோதாக்களால் செய்யப்பட்டதும் நிறைந்ததும் எல்லாஇஷ்டங்களையும் கொடுக்கத்தக்கதுமான பூர்ணஹுதியாகும். படைமுகத்தில், 'வெட்டு; பிள' என்றுகேட்கப்படும் சப்தமானது யமன்வரவுக்குக்காரணமான ஸாமகர்கள்செய்யும் ஸாமகானமாகும். பிறர்களுடைய படைமுகமானது அந்தயாகத்துக்கு 2 ஹவிர்த்தானமாகும். யானைக்கூட்டமும் குதிரைக் கூட்டமும் கவசமுள்ளவர்களின் கூட்டமும் அந்த யாகத்தில் 3 ச்யேனசித மென்ற அக்னியாகக் கூறப்படும். இதில் ஆயிரம்பேர்கள் விழுந்தவுடன் கிளம்புகிற 4 கபந்தமானது கருங்காலிமரத்தால் செய்யப்பட்டதும் எட்டுப் பக்கமுள்ளதுமான அந்தச்சூரனுடைய யூபமென்று சொல்லப்படுகிறது. அங்குசத்தால் ஏவப்பட்ட யானைகளின் சப்தங்கள் 5 இடாஹவானங்களாயிருக்கின்றன. ஓ! அரசனே! நாண்சப்தத்துடன்கூடிய கைத்தாளம் வஷட்காரமாகும். அந்த யுத்தத்திலுள்ள துந்துபிவாத்யமானது மூன்றுஸாமங்களையுடைய உத்காதாவாகும். பிராம்மணர்களின் பொருள் பகைவர்களால் அபஹரிக்கப்படுங்காலத்தில் யுத்தத்தில் பிரியமான சரீரத்தைவிட்டு அதனை யூபமாக நாட்டிச் செய்யப்படும் அந்த யாகமானது அழிவில்லாத தக்ஷிணையுள்ளதாகும். எந்தச்சூரன் பயத்துடன் திரும்பாமல் யஜமானனிமித்தம் ஸைனமுகத்தினின்று வெளிப்படுகிறானே அவனுக்கு என்னுடைய உலகங்கள்போன்ற உலகங்கள் ஸித்திக்கின்றன. எவனுடைய யுத்தவேதியானது புலித்தோல் உறைகளுள்ள கத்திகளாலும் பரிகாயுதத்திற்கொப்பானகைகளாலும் பரப்பப்பட்டிருக்கிறதோ அவனுக்கு என்னுடைய உலகம்போன்ற உலகம் ஸித்திக்கும். படையின்நடுவில் புகுந்து ஸங்கடத்திலிருக்கும் எவன் ஒருஸஹாயத்தையும் அபேக்ஷிக்கவில்லையோ அவனுக்கு என்னுடைய உலகம்போன்ற உலகங்கள் ஸித்திக்கும். ராஜனே! எந்த யுத்தவீரனுடைய யுத்தத்தில், உதிரவெள்ளமுள்ளதும் பேரியாகிறதவளைகளும் ஆனைகளுமுள்ளதும் வீரர்களின் எலும்பாகிற பரற்கற்களால் செல்லமுடியாததும்

---

1 இங்கு அரை ச்லோகம் விடப்பட்டது. 2 ஹவிஸ்வைக்குமிடம்.

3 யாகத்தில் அக்னியைவைப்பதற்காகப் பருந்துவடிவமாகக் கட்டப்படும் மேடை. 4 தலைபோன உடல்.

5 ஒருவிதமான ஹவிஸை ஹோமம்பண்ணுங்காலத்தில் தேவதைகளை அழைப்பது.

மாம்ஸமும் ரக்தமுமாகிற சேறுள்ளதும் கத்திக்கூடுகளாகிறதெப் பமுள்ளதும் கடோரமானதும் மயிர்களாகிற பாசிகளால் பசுமை யுள்ளதும் அறுபட்ட குதிரையாலும் யானையாலும் தேராலும் செய்யப்பட்ட பாலமுள்ளதும் [1] பதாகைகளும் த்வஜங்களுமாகிற நீர்நொச்சிகளுள்ளதும் அடிபட்ட வாகனங்களாகிற யானைகளுள் ளதும் ரக்தமென்னும்ஜலத்தால் நிறைந்ததும் கரைகடந்த மனி தர்களாலும் தாண்டமுடியாததும் அடிக்கப்பட்ட யானைகளாகிற பெரியமுதலைகளுள்ளதும் பரலோகத்திற்குச் செல்வதும் சுபமான தும்ரிஷ்டி கத்திமுதலிய ஆயுதங்களாகிற பெரிய மீன்களுள்ளதும் கழுகும் பருந்துமாகிற மிதப்புக்கட்டைகளுள்ளதும் ராக்ஷஸர்க ளால் அனுஸரிக்கப்பட்டதும் பயமுள்ளவர்களுக்குச் சங்கையைக் கொடுப்பதுமான நதி உண்டாகிறதோ அஃது அவனுக்கு அவபி ருதமாகும். எவனுடைய [2] வேதியானது பகைவர்களின் தலைகளா லும் யானை குதிரைகளின் கழுத்துக்களாலும் பரப்பப்படுகிறதோ அவனுக்கு என்னுடைய உலகங்கள்போன்ற உலகங்கள் லபித்திக் கும். எவனுக்குப் பிறர்களின் படைமுகமானது [3]பத்னிசாலையாக வும், தன்படையானது ஹவிர்த்தானமாகவும், ஸமர்த்தர்களான யுத்தவீரர்கள் ஸதஸ்யர்களாகவும், வடக்குத்திக்கு [4] ஆக்நீத்ரமாக வும் செய்யப்படுகின்றனவோ அவனுக்கு அறிஞர்கள் உத்தமஉல கங்களைக் கூறுகிறார்கள். சத்துருக்களின்சேனையைப் பத்நிசாலை யாகக்கொண்ட எந்தச்சூரனுடைய இரண்டுபக்கங்களிலுமிருக்கும் வ்யூகங்களில் முன்னிருக்கும் வ்யூகமானது ஆகாசமாகிறதோ அப் பொழுது அவனுடைய யுத்தபூமியானது யாகங்களால் நிரம்பிய தாகும். வ்யூகங்கள் எப்பொழுதும் மூன்று அக்னிகளாகும். எல் லா உலகங்களும் அவனுக்கு அருகிலிருக்கும். எந்த யுத்தவீரன் பயந்து திரும்பிப் பிறர்களால் அடிக்கப்படுகிறானோ அவன் நிலை யற்றவனுய்நரகமடைகிறானென்பதில் ஸந்தேகமில்லை. எவனுடைய யுத்தபூமியானது உதிரவேகத்தால் நன்றாக நனைக்கப்பட்டதும் மயிர்களாலும் மாம்ஸத்தாலும் எலும்புகளாலும் நிறைந்ததுமா கிறதோ அவன் உத்தமகதியடைவான். எவன் சேனத்தலைவனைக் கொன்று அவன் வாஹனத்தின்மீது ஏறுகிறானோ அவன் விஷ்ணு வின் பராக்ரமத்திற்கு ஒப்பான பராக்கிரமமுள்ளவனும் பிருஹஸ் பதிபோன்றவனும் ப்ரபுவுமாகிறான். எவன் அரசனையோ அவன் குமாரனையோ அவனால் பூஜிக்கப்படும் மனிதனையோ உயிருடன்

---

1 கொடி விசேஷங்கள். 2 யுத்தபூமி.

3 யாகஞ்செய்பவனுடைய பத்நிஇருக்குமிடம்.

4 ஒரு ரித்விக்கு இருக்குமிடம்.

பிடிக்கிறுதே அவனுக்கு என்னுடைய உலகங்கள் போன்ற உலகங்கள் லபித்திக்கும். யுத்தத்தில் அடிக்கப்பட்ட சூரனைப்பற்றி எவ்விதமும் சோகப்படக்கூடாது. அடிக்கப்பட்ட சூரன் சோகப்படத்தகாதவனுகி ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறுன். யுத்தத்தில் அடிக்கப்பட்டவனுக்கு அன்னதானத்தையும் உதகதானத்தையும் ஸ்நானத்தையும் தீட்டுக்காத்தலையும் (பெரியோர்கள்) செய்ய விரும்புகிறுர்களில்லை. அவனுக்குரிய உலகங்களை என்னிடமிருந்துகேள். யுத்தத்தில்அடிக்கப்பட்ட சூரனைக்குறித்து, 'எனக்குப் பர்த்தாவாயிருக்கவேண்டும்' என்று சிறந்தபலவாயிரம் அப்ஸரஸ்திரீகள் வேகத்துடன் ஓடுகிறுர்கள். யுத்தத்தில் ஓடாதவனுக்குத் தவமும் புண்ணியமும் ஸநாதனமான தர்மமும் நான்கு ஆச்ரமங்களும் லபித்திக்கும். கிழவனும் சிறுவனும் ஸ்திரீயும் பலஹீனைந்தவாயுள்ளவனும், 'உன்னுடையவனுயிருக்கிறேன்' என்று சொல்லுகிறவனும் அடிக்கத்தக்கவர்களல்லர். புறத்திலிருந்து அடிப்பது கூடாது. நான் விருத்ரனையும், பலனையும். பாகனையும், மஹாகாயனையும், விரோசனனையும், தடுக்கமுடியாத நமுசியையும், பலமாயைகளுள்ள சம்பரனையும், விப்ரசித்தியென்னும் அஸுரனையும், பிரஹ்லாதனையும், தனுவின் புத்திரர்கள் யாவர்களையும் யுத்தத்தில் கொன்று பிறகு தேவர்களுக்கு அரசனுனேன்' என்று சொன்னன். இவ்விதஞ்சொல்லப்பட்ட இந்திரனுடைய வசனத்தைக் கேட்டுப் பூஜித்து அம்பரீஷராஜன் தன்போர்வீரர்களின் லபித்தியைத் தெரிந்துகொண்டான்.

தொண்ணூற்றுரூன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஜனகர் தம்சேனைகளை உற்சாகப்படுத்தி யுத்தத்துக்கனுப்பியதையும், அணிவகுத்தல் முதலிய யுத்தமுறைகளையும் சொல்லியது.)

இவ்விஷயத்தில் ப்ரதர்த்தனனும் ஜனகரும் செய்த யுத்தத்தைப்பற்றிய இப்பழைய இதிஹாஸத்தையும் உதாஹரிக்கிறுர்கள். யுதிஷ்டிர! மிதிலையின் பதியான ஜனகர் யுத்தத்தில் 1 யஜ்ஞோபவீதமுள்ளவராகிப் போர்வீரர்களை மிக ஸந்தோஷிப்பித்தார்; அதனை அறிந்துகொள். மிதிலையின் பதியும் எல்லா உண்மையையும் அறிந்தவரும் மஹாத்மாவுமான ஜனகராஜர் தம் யுத்தவீரர்களுக்கு யோகபலத்தால் ஸ்வர்க்கத்தையும் நரகத்தையும் காண்

1 யுத்தமானது யாகமென்று கூறப்படுவதால் யஜ்ஞோபவீதமுள்ளவரென்று சொல்லப்படுகிறது.

பித்து, 'பயமில்லாதவர்களுக்கு எல்லா இன்பங்களையும் கொடுக்கின்றவைகளும் கந்தர்வப்பெண்களால் நிறைந்தவைகளும் அழிவில்லாதவைகளும் விளங்குகின்றவைகளுமான இவ்வுலகங்கள் உண்டாகும்; ஆச்சரியம்! பயந்தோடுகிறவர்களுக்கு இதோ நரகங்கள் தோன்றுகின்றன; நிலைத்ததான அபகீர்த்தியுமுண்டு. பாருங்கள். அவைகளைப் பார்த்துப் பிறகு முயற்சிசெய்யவேண்டும். சரீரத்தை விடுவதில் கருத்துடன் சத்துருக்களை வெல்லுங்கள். நிலையற்றதான நரகத்திற்கு ஈடுபட்டவர்களாகவேண்டாம். சூரர்களுக்கு மிக்க உத்தமமான ஸ்வர்க்கலோகத்தின் வழியானது [1] தியாகத்தை மூலமாகக்கொண்டது' என்று சொன்னர். சத்துருக்களின் பட்டணத்தை ஜயிப்பவனே! அரசனுல் இவ்விதம் சொல்லப்பட்ட அந்தப்படர்கள் அரசனை ஸந்தோஷப்படுத்தியுத்தத்தில் பகைவர்களை ஜயித்தார்கள். ஆகையால், யுத்தத்தின் முன்னிலையில் எப்பொழுதும் தன்சரீரத்தைத் தியாகம்செய்பவனுக இருக்கவேண்டும். யானைகளின் நடுவில் ரதமுள்ளவர்களையும் ரதமுள்ளவர்களின் நடுவில் குதிரைக்காரர்களையும் குதிரைக்காரர்களின் நடுவில் கவசம்பூண்ட காலாட்களின் கூட்டத்தையும் நிறுத்திவைக்கவேண்டும். எந்த அரசன் இவ்விதம் பகுத்து நிற்கச் செய்கிறுனே அவன் எப்பொழுதும் சத்துருக்களை ஜயிப்பான். யுதிஷ்டிர! ஆகையால், எப்பொழுதும் இந்த விதிப்படியே செய்யவேண்டும். ஸ்வர்க்கலோகத்திற்குரிய புண்ணியத்தை விரும்புகிறவர்கள் மிக்ககோபத்துடன் நல்லயுத்தத்தால் மகரங்கள் கடலைக் கலக்குவதுபோலச் சேனைகளைக் கலக்கவேண்டும். ஒருவருக்கொருவர் உறுதியாயிருந்துகொண்டு கஷ்டமுள்ளவர்களை ஸந்தோஷப்படுத்தவேண்டும்; அவர்களின் பூமியை ரக்ஷிக்கவும் வேண்டும். பங்கமடைந்து செல்லுகிறவர்களை அதிகமாகத் தொடர்ந்து துரத்தக்கூடாது. உயிரில் ஆசையற்று மறுபடி திரும்பி வருவார்களாகில் அவர்களின் வேகம் மிகவும் பொறுக்க முடியாததாயிருக்கும். ஓ! அரசனே! ஆகையால், அதிகமாகத் துரத்தக்கூடாது. சூரர்கள் பயந்து ஓடுகிறவர்களை அடிக்க விரும்புவதில்லை. ஆகையால், ஓடுகிறவர்களை அதிகமாகத் துரத்தச்செய்வது கூடாது. ஸஞ்சரிப்பவைகளுக்கு ஸஞ்சரியாமலிருப்பவைகளும் கோரப்பல்லுள்ளவைகளுக்குக் கோரப்பல்லில்லாதவைகளும் கையுள்ளவைகளுக்குக் கையில்லாதவைகளும் சூரனுக்குப் பயந்தவர்களும் ஆகாரம். புறமும் வயிறும் கையும் காலும் ஸமானமாயிருந்தும் பயமுள்ளவர்கள் அம்பைப் [2] புறத்தில் வைத்துச் செல்லுகிறார்கள். ஆகை

---

1 யுத்தத்தில் சரீரத்தை விடுவது.

2 'அபஜயத்தை அடைகிறார்கள்' என்பது வேறுபாடம்.

யால், பயத்தால் துன்பமுள்ளவர்கள் திரும்பவும் தண்டனிட்டு அஞ்சலிசெய்து சூரர்களைத் துதிக்கிறார்கள். சூரர்களின் கைகளில் புத்திரனைப்போல இவ்வுலகம் எப்பொழுதும் தொங்குகிறது. ஆகையால், சூரனையிருப்பவன் எல்லாஉலகங்களிலும் ஸன்மானம் பெறத்தக்கவன். மூன்று உலகங்களிலும் சூரத்தன்மையிலும் பெரியதொன்றுமில்லை. சூரன் எல்லாவற்றையும் பரிபாலிக்கிறான். எல்லாம் சூரனிடம் நிலைபெற்றிருக்கிறது" என்று சொன்னர்.

நூறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், யுத்தத்திற்குத் தக்ககாலம், இடம், படை, யுத்தமுறை முதலியவற்றைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "பரதர்களிற் சிறந்த பிதாமஹரே! ஜயத்தை விரும்புகிறவர்கள் தர்மத்தைச் சிறிது துன்பப்படுத்தியும் சேனையை எவ்விதம் அரசனின் பயத்தைக் காண்பித்து முன்செல்லச் செய்கிறார்களென்பதை எனக்கு உபதேசிக்கவேண்டும்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"1 உண்மையான க்ஷத்திரியதர்மப்படி சிலர் தர்மத்திலிருக்கிறார்கள். மற்றுஞ்சிலர் மரணமுண்டென்ற உறுதியுடன் தர்மத்திலிருக்கிறார்கள். மற்றுஞ்சிலர் பெரியோர்களின் ஆசாரமென்ற எண்ணத்தாலும் சிலர் அரசனிடம் பயத்தாலுண்டான முயற்சியென்னும் உபாயத்தாலும் தர்மத்திலிருக்கிறார்கள். உடனே பயன்படத்தக்கவைகளான உபாயதர்மங்களைப் பொருள் விளக்கவேண்டி உபதேசிக்கிறேன். மரியாதையற்ற திருடர்கள் இவைகளுக்கு விரோதிகளாயிருப்பார்கள். அவர்களைத் தடுத்தற்பொருட்டும் காரியங்கள் நிறைவேறுதற் பொருட்டும் வேதத்திற் கூறிய உபாயங்களை உபதேசிக்கிறேன். அவ்வுபாயங்களை என்னிடமிருந்து தெரிந்துகொள். பாரத! நேரானதும் கோணலானதுமான இரண்டு புத்திகளையும் தெரிந்துகொள்ளவேண்டும். அவைகளில் கோணலாயிருப்பதை அறிந்துகொண்டு உபயோகியாமலிருக்கவேண்டும். (பிறனிடமிருந்து) வந்த கோணலான புத்தியை (அதுகொண்டு) விலக்கிக்கொள்ளவேண்டும். பகைவர்கள் தாம் அரசனைக்கபடமாக உபசரிப்பார்கள். அறிவுள்ள அரசன் விரோதிகளைப்போல அந்தக் கபடத்தையும் விலக்கிக்கொள்ள

---

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

வேண்டும். ஓ! பார்த்த! யானைகளுக்குள்ளகவசங்களும், பசுகாலை மஹிஷப்பாம்பு இவைகளின் தோல்களும், பாணங்களும், முட்களுள்ள இரும்புகளும், சிறந்த கவசங்களும், அராவித்துவைந்த ஆயுதங்களும், துவைந்தவைகளும் லோகங்களால் செய்யப்பட்டவைகளுமான ஸன்னைகங்களும் இருக்கவேண்டும். கொடிகளும் கொடிமரங்களும் பலவர்ணங்கொடுக்கப்பட்டவைகளாயிருக்கவேண்டும். ரிஷ்டிகளும் தோமரங்களும் கத்திகளும் கோடாலிகளும் கூர்மையாக இருக்கவேண்டும். பலகைகளாலும் தோல்களாலும் செய்யப்பட்ட கேடகங்களையும் மிருதியாக ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஆயுதங்கள் நன்றுக ஆயத்தஞ்செய்யப்பட்டவைகளும் போர்வீரர்கள் உறுதி செய்துகொண்டவர்களுமாக இருக்கவேண்டும். சித்திரை மாஸத்திலாவது மார்கழிமாஸத்திலாவது படையைக் கிளப்புவது சிறந்ததாகும். அப்பொழுது பூமியானது பலன்களுடன் கூடின பயிர்களுள்ளதும் ஜலமுள்ளதுமாயிருக்கும். ஓ! பாரத! காலமும், மிக்கசுளிரும் அதிக வெயிலுமில்லாமலிருக்கும். ஆகையால், அக்காலத்தில் அல்லது பிறர்களுக்கு ஸங்கடமுள்ள காலத்தில் முயற்சிசெய்யவேண்டும். பிறர்களைப் பீடிப்பதில் சேனைகளுக்கு இந்த உபாயங்கள் சிறந்தவைகளாகும். ஜலமுள்ளதும் புல்லுள்ளதும் ஸமமானதும் காட்டிலுள்ள ஸமர்த்தர்களான சாரர்களால் நன்றுகப்பழகி அறியப்பட்டதுமான வழியானது செல்லத்தக்கதாகப் புகழப்படுகிறது. மிருகக்கூட்டங்கள்போலக் காடுகளில் செல்லுவது முடியாது. ஆகையால், ஜயத்தைவிரும்புகிறவர்கள் சேனைகளிடம் அந்தக்காட்டாள்களையே சேர்த்துவைக்கிறார்கள். சக்தியுள்ளதும் நற்குலத்திற் பிறந்ததுமான ஆள்கூட்டமானது முந்திச் செல்லவேண்டும். ஜலமுள்ளதும் அருகில் வெறுவெளியுள்ளதுமான வழியானது இருப்பிடமாகச் சிறந்ததாகும். அவ்விதமிருந்தால் பிறர்களின் தூதர்களைத் தடுக்கமுடியும். யுத்தத்தில் ஸமர்த்தர்களான ஜனங்கள் பலவிதக்குணங்களின் மிருதியால் அரண்யத்தினருகிலுள்ள வெளியைச் சிறந்ததென நினைக்கிறார்கள். சேனைகளுக்கு அதிகதூரமில்லாதவிடத்தில் பொக்கசமிருக்கவேண்டும். பொக்கசத்தினருகில் காலாட்களை [1] இறங்கவும் மறைந்திருக்கவும் செய்யவேண்டும். இஃது ஆபத்காலத்தில் பகைவர்களைக் கொல்வதற்கு முக்கியகாரணமாகும். ஸப்தரிஷிநக்ஷத்திரங்களைப் புறத்தில் வைத்துக்கொண்டு மஹிஷம்போன்றவர்களாயிருந்து யுத்தஞ்செய்யவேண்டும். இந்த விதிப்படி ஜயிக்கக்கடினமான பகைவர்களையும் ஜயிக்கவிரும்பலாம். வாயுவும் ஸூர்யனும் சந்திரனு

1 இங்கு வேறு பாடம் கொள்ளப்பட்டது.

முள்ளபக்ஷத்தில் ஜயமுண்டாகும். ஓ! யுதிஷ்டிர! இரண்டுபக்ஷத்திலும் சேர்க்கையிருந்தால் இவர்களுள் முன்முன்னுள்ளவர் மிகச்சிறந்தவராவர். யுத்தத்தில் ஸமர்த்தர்களான ஜனங்கள் சேறில்லாததும் ஜலமில்லாததும் (பிராகாரமுதலிய) வரம்பில்லாததும் மண்கட்டிகளில்லாததுமான பூமியைக் குதிரைகளுக்கு உரியதென்றுகொண்டாடுகிறார்கள். மேடுபள்ளமில்லாததும் சேறில்லாததும் வளைகளில்லாததுமான பூமியானது தேர்களுக்குச் சிறந்ததாகும். சிறிய மரங்களுள்ளதும் அதிகப்புல்லுகளுள்ளதும் ஜலமுள்ளதுமான பூமியானது யானைச்சண்டை செய்பவர்களுக்குச் சிறந்ததாகும். பலஅரண்களுள்ளதும் பெரியபுற்களுள்ளதும் மூங்கிலாலும் பிரம்பாலும் 1 மறைக்கப்பட்டதுமான பூமியும் மலைகளும் உபவனங்களும் காலாட்களுக்குத் தக்கனவாகும். ஓ! பாரத! காலாட்களை அதிகமாகக்கொண்ட சேனையானது உறுதியாயிருக்கும். மழையில்லாதனவான நல்ல தினங்களில் ரதமும் குதிரையும் நிறைந்த சேனையானது சிறந்ததாகும். மழைக்காலத்தில் காலாட்களும் யானைகளும் நிறைந்த சேனையானது சிறந்ததாகும். இக்குணங்களையும் தேசகாலங்களையும் நன்றாகத் தெரிந்துகொண்டு சேனையை யுத்தத்திற்கனுப்பவேண்டும். இங்ஙனம் நன்குதெரிந்துகொண்டு நல்லதிதிநக்ஷத்திரங்களில், ஆசீர்வாதம் பெற்றவனுய்ச் சேனையை நன்றாகச் செலுத்திக்கொண்டு எவன்செல்லுகிறானோ அவன் எப்பொழுதும் ஜயம்பெறுவான். தூங்குகிறவர்களையும் தாகமுள்ளவர்களையும் ஸ்ரமப்பட்டவர்களையும் பொதுவாயிருப்பவர்களையும் அடிக்கக்கூடாது. யுத்தம்நிறுத்தியஸமயத்திலும் யாத்திரைக்காலத்திலும் போகும்பொழுதும் குடிக்குங்காலத்திலும் புஜிக்குங்காலத்திலும் அடிக்கக்கூடாது. நிந்திக்கப்பட்டவர்களையும் வேறு காரியத்தில் ஏவப்பட்டவர்களையும் அடிபட்டவர்களையும் மெலிந்தவர்களையும் நம்பிக்கையில்லாதவர்களையும் வேறு முயற்சிசெய்கிறவர்களையும் சுரங்க முதலிய ரஹஸ்யஸ்தானத்திலிருந்து ஏவப்பட்டு வெளியிற் செல்லுகிறவர்களையும் வெளியிலிருந்து பண்டங்களுடன் ரஹஸ்யஸ்தானத்திற்குச் செல்லுகிறவர்களையும் பரம்பரையாய் வந்து அரசன்வாயிலை அடுத்திருப்பவர்களையும் மந்திரியின் வாயிலில் தலைவராயிருப்பவர்களையும் அடிக்கக்கூடாது. (பிறன்) சேனையைப்பேதப்படுத்துகிறவர்களும் பேதப்பட்ட தன்சேனையை நிலைநிறுத்துகிறவர்களுமாயிருப்பவர்களைத் தனக்குச் சரியான அன்னபான

1 'சூழப்பட்டதுமான' என்பது வேறு பாடம்.

முள்ளவர்களும் இரண்டுபங்கு சம்பளமுள்ளவர்களுமாகச் செய்ய வேண்டும். ஜாதியையும் கோத்திரத்தையும் மிக்க உத்தமமும் சுபமுமான வேலையையும் தெரிந்துகொண்டு தனக்குச் சமமாகச் சரீரத்தை ரக்ஷிக்கவேண்டி அவர்களுக்கு இரண்டுபங்கு மூன்று பங்கு நான்குபங்கு சம்பளத்தைச் செய்துகொடுக்கவேண்டும். பத்துப்பேர்களுக்குத் தலைவர்களையும் நூறுபேர்களுக்குத் தலைவர்களையும் ஏற்படுத்தவேண்டும். பிறகு, சோம்பலில்லாதவனும் சூரனுமானவனை ஆயிரம்பேர்களுக்கு அதிபதியாயிருக்கச் செய்ய வேண்டும். அப்பா! அரசனே! தலைமையாயிருப்பவர்களை ஒன்று சேர்த்து, 'நாம் ஸங்கேதகமுள்ளவர்களாயிருக்கிறோம். யுத்தத்தில் ஜயம்பெறவேண்டி ஒருவரையொருவர் விடாமலிருக்கவேண்டும். பயந்தவர்கள் இவ்விடத்திலேயே திரும்பவேண்டும். பயங்கரமாக யுத்தம் நடக்கும்பொழுது [1]எவர்கள் அடிக்கமுயலுகிறார்களோ அவர்கள் கூட்டத்தில் சொந்தக்காரனை அடிக்கவாவது கொலை செய்யவாவது கூடாது. தன்னையும் தன் வகுப்பையும் ரக்ஷித்துக் கொண்டு யுத்தத்தில் அடிக்கவேண்டும். ஓடுவதில் பொருள்நாசமும் கொலையும் கெட்டசொல்லும் அபகீர்த்தியும் உண்டாகும். ஓடுகிற மனிதனுக்கு இன்பமில்லாததும் ஸுகமில்லாததுமான சொற்களுண்டாகும். சத்துருக்களால் ஆக்ரமிக்கப்பட்டு உயிருக்குச் சங்கேதகமுண்டாகுங்காலத்தில் அடிபட்டு உதடும் பல்லும் கீழேவிழுந்தவனும், எல்லா ஆயுதங்களையும் விட்டவனும், ஸஹாயமான மனிதர்களைத் தள்ளிவிட்டு ஓடுகிறவனுமான மனிதனுக்கு உண்டாகும் இவைகள், எப்பொழுதும் நமது பகையாளியைச் சேர்ந்த மனிதனுக்கு உண்டாகட்டும். எவர்கள் [2]திரும்பியமுகமுள்ளவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் மனிதர்களுள் அபசதர்களாவார்கள். கூட்டத்தைத்பெருகச்செய்வதான்றல்லாமல் அவர்கள் இவ்வுலகிலும் இறந்தபின்னும் பயனுள்ளவர்களல்லர். ஓடுகிற மனிதனை ஜயம்பெற்றவர்களும் ஸங்கேதாஷமுள்ள மனமுள்ளவர்களுமான விரோதியின் மனிதர்கள் மங்களவாத்தியங்களுடனும் [3]சந்தனமுதலிய அலங்காரங்களுடனும் எதிர்த்துச் செல்வார்களென்பது பொறுக்க மிகக்கடினமான துன்பமாகும். [4]சத்

---

1 இங்கு வேறு பாடம் கொள்ளப்பட்டது.

2 யுத்தத்தில் எதிர்த்து நில்லாமல் ஓடுகிறவர்கள்.

3 இங்கு வேறுபாடங் கொள்ளப்பட்டது.

4 'யுத்தத்திலிருக்கும் சத்துருக்களானவர்கள் எவனுடைய கீர்த்தியைக் கெடுக்கிறார்களோ அவனுக்கு அது கொலையைவிடப் பொறுக்க மிகக் கடினமான துக்கமென்று நான் நினைக்கிறேன்' என்பது வேறு பாடம்.

துருக்கள் எவனுடைய கஷ்டத்தில் ஸந்தோஷப்படுகிறார்களோ அஃது அவனுக்கு மரணத்தைவிட மிகவும் பொறுக்கமுடியாத துக்கமென்று நினைக்கிறார்கள். தர்மத்திற்கும் எல்லாஸுகத்திற்கும் 1 லக்ஷ்மியை மூலமாக அறியுங்கள். பயந்தவர்களுடையதான பெரியகீர்த்தியைச் சூரனையிருப்பவன் அடைவான். ஸ்வர்க்கத்தை விரும்பிய நாம் யுத்தத்தில் உயிரைவிடத் துணிந்தவர்களாய் ஜயிக்கிறவர்களாகவோ கொல்லப்படுகிறவர்களாகவோ நற்கதியைப் பெறவேண்டும்' என்று சொல்லவேண்டும். இவ்விதம் சபதஞ்செய்துகொண்டவர்களும் உயிரைவிடத்துணிந்தவர்களுமான வீரர்கள் பயமில்லாதவர்களாகப் பகைவர்களின் படையை எதிர்த்துப் பிரவேசிப்பார்கள். கத்தியும் கேடகமுமுள்ளவர்களான புருஷர்களின் சேனையானது முந்தி இருக்கவேண்டும். தேர்க்கூட்டமானது பிந்தி இருக்கவேண்டும். [2] பாரியைபோன்ற கூட்டமானது நடுவிலிருக்கவேண்டும். பிறர்களைத் தடுக்கவேண்டிக் காலாட்களை மறைத்துவைக்கவேண்டும். அந்தப் பட்டணத்தில் முந்திச்செல்லத்தக்க பெரியோர்களும் தைரியமுள்ளவர்களும் நல்லமனமுள்ளவர்களும் முந்திச்செல்ல ஸம்மதிப்பவர்களும் முந்தியிருக்கவேண்டும். மற்ற ஜனங்கள் அவர்களையே அனுஸரித்திருக்கவேண்டும். பயமுள்ளவர்களுக்கும் முயற்சியுடன் உத்ஸாஹமுண்டாகும்படி செய்யவேண்டும். (அவர்கள்) கூட்டத்தைத் காண்பிக்கவேண்டியதற்காகமாத்திரம் ஸமீபத்திலாவது இருக்கவேண்டும். தொடர்ந்து நிற்கும் சிலர்களை யுத்தஞ்செய்யும்படி செய்யவேண்டும். இஷ்டப்படி பலபேர்களை விரிவாயிருக்கச்செய்யவேண்டும். படையானது ஊசிபோன்ற முகமுள்ளதாயிருக்கவேண்டும். சில ஜனங்களுக்குப் பலஜனங்களுடன் தாழ்மையான சண்டை நேர்ந்தால் உண்மையாயிருந்தாலும் பொய்யாயிருந்தாலும் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'சத்துருக்கள் பங்கமடைந்தார்கள்; ஆச்சரியம்' என்று கூவவேண்டும். 'நமது நண்பரின்படை வந்துவிட்டது; பயமின்றி அடியுங்கள்' என்று பயங்கரமான சப்தங்களைச் செய்துகொண்டு தைரியத்துடன் எதிர்த்துச் செல்லவேண்டும். விம்மநாதங்களையும் கிலகிலா சப்தங்களையும் செய்யவேண்டும். கிரகசங்களையும் கொம்புகளையும் பேரிகளையும் மிருதங்கங்களையும் பணவங்களையும் முன்னால் முழங்கச்செய்யவேண்டும்" என்று சொன்னார்.

---

1 'ஜயத்தை' என்பது வேறுபாடம். 2 பிக்கபராக்கிரமமில்லாதவர்கள்.

நூற்றோராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(எந்தஎந்தத்தேசத்திலுள்ளவர்கள் எந்தஎந்தயுத்தத்தில் வல்லவர்கள் என்பதையும் யுத்தவீரர்களின் லக்ஷணங்களையும் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! யுத்தத்தில், 1 சக்திபெற்ற ஜனங்கள் எவ்விதஸ்வபாவமும் முயற்சியும் ரூபமும் ஸன்னகமும் ஆயுதங்களும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"தேசாசார குலாசாரத்திற்குத் தக்கபடி இவ்விஷயத்தில் ஆயுதமும் வாஹனமும் விதிக்கப்படுகின்றன. தேசாசாரகுலாசாரத்தாலன்றே இவ்வுலகில் மனிதன் அவ்வவ்விதமான தொழில்களில் இருக்கிறான். காந்தாரதேசத்திலுள்ளவர்களும் ஸிந்துதேசத்திலும் ஸௌவீரதேசத்திலுமுள்ளவர்களும் பயமில்லாதவர்களாயும் மிக்கபலமுள்ளவர்களாயும் நகங்களாலும் ப்ராஸமென்னும் ஆயுதங்களாலும் யுத்தஞ்செய்வார்கள். அவர்களின்பலம், யாவற்றையும் கைகடந்துநிற்கும். உசீனரதேசத்திலுள்ளவர்கள் பலமுள்ளவர்களும் எல்லா ஆயுதங்களிலும் ஸமர்த்தர்களுமாயிருப்பார்கள். கிழக்குத்தேசத்திலுள்ளவர்கள் யானைச்சண்டைகளில் ஸமர்த்தர்களும் கபடயுத்தம்செய்கிறவர்களுமாயிருப்பார்கள். அவ்விதமே யவனர்களும் காம்போஜதேசத்திலுள்ளவர்களும் மதுரையைச்சுற்றியிருப்பவர்களும் குதிரைச்சண்டையில் ஸமர்த்தர்களாயிருப்பார்கள். தென்தேசத்திலுள்ளவர்கள் கத்தியும் கேடகமுமுள்ளவர்களும் மிக்கதைரியமுள்ளவர்களும் மிக்கபலமுள்ளவர்களும் எல்லாவிடத்திலும் சூரர்களுமாயிருப்பார்கள். அவந்தியிலுள்ளவர்கள் பெரியசூரர்களாயிருப்பார்கள். மாளவதேசத்திலுள்ளவர்கள் தேர் யானை குதிரை காலாளென்னும் நான்கு அங்கமுள்ளபடையிலும் மிக்கசூரர்களாயிருப்பார்கள். (இவர்களில்) ஒருவன் தனியாயிருந்தாலும் யுத்தத்தில் ஆயிரம்பெயரை எதிர்த்து நிற்பான். தேசங்கள் பெரும்பாலும் குறிப்பிடப்பட்டன. சூரர்களின் லக்ஷணங்களை என்னிடமிருந்து கேள். சிங்கம்புலிகளின் குரலும் கண்களும் போன்ற குரலும் கண்களுமுள்ளவர்களும் சிங்கம்புலிகள்போல நடக்கிறவர்களும் மாடப்புறு ஸர்ப்பம் இவைகளின் கண்போன்ற கண்ணுள்ளவர்களுமாகிய இவர்கள்யாவரும், சூரர்களும் சத்துருக்களை வெல்லத்

1 இங்கு வேறுபாடங் கொள்ளப்பட்டது.

தக்கவர்களுமாயிருப்பார்கள். மான்களின் குரல்போன்ற குரலுள்ளவர்களும் புலி காளைகளின்கண்போன்ற கண்ணுள்ளவர்களும், சத்துருக்களை அடிக்கத்தக்கவர்களாயும் கம்பீரர்களாயும் கோபமுள்ளவர்களாயுமிருப்பார்கள். சலங்கையின் ஒலிபோன்ற த்வனியுள்ளவர்களும் மேகத்தின்த்வனிபோன்ற த்வனியுள்ளவர்களும் கடோரமான முகமுள்ளவர்களும் இனிமையானத்வனியுள்ளசிலர்களும் கோணலான நுனிமூக்கும் நாவுமுள்ளவர்களும், தூரத்தில் போகத்தக்கவர்களாகவும் தூரத்தில்வந்து விழத்தக்கவர்களாகவுமிருப்பார்கள். பூனைபோலக் கூனர்களும் அசைவற்ற கண்ணுள்ளவர்களும் சிறியமயிருள்ளவர்களும் மெல்லியதோலுள்ளவர்களும், வேகமுள்ளவர்களாயும் சஞ்சலமான சித்தமுள்ளவர்களாயும் அருகிற்செல்லக் கூடாதவர்களாயுமிருப்பார்கள். பொன்வர்ணமுள்ளவர்களும் மூடியகண்ணுள்ளவர்களுமான சிலர்கள் மெல்லியதன்மையுள்ளவர்களாயிருப்பார்கள். குதிரையின்கதி போன்ற கதியும் அதன் த்வனிபோன்ற த்வனியுமுள்ளமனிதர்கள், யுத்தத்தின் கரைகடக்கத்தக்கவர்களாயிருப்பார்கள். மிக்ககடினமும் சிறியதுமான சரீரமும் அகன்றமார்பும் உடையவர்களாயிருப்பவர்கள், வாத்தியங்களில் கோபமுள்ளவர்களாயும் கலகங்களில் ஸந்தோஷமுள்ளவர்களாயுமிருப்பார்கள். கம்பீரமான கண்ணுள்ளவர்களும் வெளியில் பிதுங்கிய கண்ணுள்ளவர்களும் மஞ்சள்நிறமானகண்ணுள்ளவர்களும் கீரியின்கண்போன்ற கண்ணுள்ளவர்களும் நெரிந்தபுருவமுள்ள முகமுள்ளவர்களும் ஆகியயாவரும், சூரர்களாகவும் சரீரத்தைவிடத் துணிந்தவர்களாகவும் இருப்பார்கள். கோணலான கண்ணுள்ளவர்களும் உயர்ந்தநெற்றியுள்ளவர்களும் மாம்ஸமில்லாத மோவாய்க்கட்டையையுடையவர்களும் கோணலான கையும் விரலும் தொடையுமுள்ளவர்களும், இறுகின உடம்புள்ளவர்களும் நரம்புகளால் வ்யாபிக்கப்பட்டவர்களும், யுத்தம்வரும்பொழுது பயமில்லாமல் வேகமாய்ப் பிரவேசிப்பார்கள். அவர்கள் யானைகள் போலக் கொழுத்தவர்களாயும் அருகில்செல்லத் தகாதவர்களாயும் இருப்பார்கள். சிவந்ததும் பிளந்ததுமான மயிர்நுனியுள்ளவர்களும் பருத்தபக்கமும் மோவாயும் முகமுமுள்ளவர்களும் உயர்ந்ததோளுள்ளவர்களும் பருத்தகழுத்துள்ளவர்களும் பயங்கரர்களும் பருத்த முழங்காலுக்குக்கீழான பின்பக்கமுள்ளவர்களும் ஸுக்ரீவமென்னும் வாஸுதேவரின் குதிரைபோலவும் கருடபக்ஷிகள்போலவும் 1 உயரக்கிளம்புகிறவர்களும் உருண்டையான தலையுள்ளவர்களும்

1. இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

அகன்ற முகமுள்ளவர்களும் பூனையின்முகம்போன்ற முகமுள்ளவர்களும், கடோரமானத்வனியுள்ளவர்களாயும் கோபமுள்ளவர்களாயும் யுத்தங்களில் [1] சத்துருக்கூட்டத்தை வெருட்டுகிறவர்களாயும் தர்மமறியாதவர்களாயும் அஹங்காரமுள்ளவர்களாயும் கடோரர்களாயும் பயங்கரமான தோற்றமுடையவர்களாயுமிருப்பார்கள். சரீரத்தை விடத் துணிந்தவர்களும் யுத்தத்தில் திரும்பாதவர்களும் முந்திச் செல்லுகிறவர்களுமான இவர்கள் யாவர்களையும் சேனையில் எப்பொழுதும் மரியாதை செய்யவேண்டும். தர்மமறியாதவர்களும் வேறுனடையுள்ளவர்களுமான அவர்கள் அடிபடுகிறவர்களும் அடிக்கிறவர்களுமாக இருப்பார்கள். நன்மொழியால் இவர்களுக்கு அவமானமுண்டாகும். இவ்விதமே இவர்கள் அரசனிடத்திலும் அடிக்கடி குற்றமுள்ளவர்களாயிருப்பார்கள்" என்றுசொன்னர்.

நூற்றாண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(ஜயம்பெறத்தக்க அடையாளங்களையும் யுத்தத்தில் அரசன் நடத்தவேண்டிய சில நீதிகளையும் கூறியது.)

யுதிஷ்டிரர், "பரதர்களிற் சிறந்தவரே! ஜயமடையத்தக்க சேனையின் சிறந்தலக்ஷணங்கள் யாவை? அவைகளையும் அறியவிரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"பரதர்களிற் சிறந்தவனே! ஜயமடையத்தக்க சேனைக்குள்ள சிறந்த லக்ஷணங்கள் முழுமையையும் சொல்லுகிறேன். முதலில் தெய்வம் கோபமுள்ளதாகவும் மனிதன் காலத்தால் ஏவப்பட்டவனாகவுமிருக்கும்பொழுது அதனை அறிவுள்ளவர்கள் நீண்ட ஞானக்கண்ணால் அறிகிறார்கள். அதனை அறிந்தவர்கள் இவ்விஷயத்தில் பிராயச்சித்த விதியையும் ஜபங்களையும் ஹோமங்களையும் சுபகர்மங்களையுஞ்செய்து அவரிதங்களுக்குச் சாந்தியைச் செய்கிறார்கள். ஓ! பாரத! எந்தச்சேனையில் யுத்தவீரர்கள் வேகமுள்ளமனமுள்ளவர்களாயிருக்கிறார்களோ, வாகனங்களுமிருக்கின்றனவோ அந்தச்சேனைக்கு நிச்சயமாக ஜயமுண்டாகும். எப்பொழுது காற்றுக்களும் இந்திரதனுஸுகளும் மேகங்களும் ஸௌம்யதனுடையகிரணங்களும் சேனைக்கு அனுகூலமாயிருக்கின்றனவோ, நரிகளும் கழுகு

---

1 'சப்தத்தைக்கேட்டு ஓடிவருகிறவர்களாயும்' என்ற பொருளுமுண்டு.

களும் எல்லாவிதத்தாலும் அனுகூலமான பலமுள்ளவைகளாகச் சேனையைப் பெருமைப்படுத்துகின்றனவோ அப்பொழுது மிக உத்தமமான ஸித்தியுண்டாகும். அக்கினியானது தெளிந்தகாந்தியும் உயர்ந்தகிரணமும் வலமாய்ச்சுற்றும் ஜ்வாலையுமுள்ளதும் புகையில்லாததுமாயிருக்கும். ஆகுதிகளின் மணம் சுத்தமாயிருக்கும். இது ஜயம்வருவதற்கு அடையாளமென்று சொல்லுகிறார்கள். எந்தவிடத்தில் சங்கங்களும் பேரிகைகளும் கம்பீரமும் மிருதியுமான ஒலியுள்ளவைகளாகச் சப்திக்கின்றனவோ, யுத்தஞ் செய்ய விருப்பமுள்ளவர்களும் அனுகூலமாயிருக்கிறார்களோ அவ்விடத்தில் அங்ஙனமிருப்பது ஜயம் வருவதற்கு அடையாளமென்று சொல்லுகிறார்கள். புறப்படுகிறவர்களுக்கும் போகிறவர்களுக்கும் பின்புறத்திலும் இடப்பக்கத்திலும் அடிக்கவிருப்பமுள்ளவர்களுக்கு வலப்பக்கத்திலுமுள்ள அனுகூலமான மிருகங்கள் காரியத்தின்ஸித்தியை அறிவிக்கின்றன. அந்த மிருகங்கள் எதிரில் வந்தால் தடைசெய்கின்றனவாகும். அன்னபக்ஷிகளும் கிரௌஞ்சங்களும் மரங்குத்திக்குருவிகளும் காடைகளும் மங்களமானசப்தங்களைச் சொல்லுவதும் யுத்தவீரர்கள் ஸந்தோஷமுள்ளவர்களும் தைரியமுள்ளவர்களுமாயிருப்பதும் ஜயமுண்டாவதற்கு அடையாளமென்று சொல்லுகிறார்கள். நல்லகாந்தியுள்ள ஆயுதங்களாலும் யந்திரங்களாலும் கவசங்களாலும் கொடிகளாலும் பௌவணமுள்ளபடர்களின் முககாந்திகளாலும் பிரகாசமுள்ளதாயும் எதிர்த்துப் பார்க்கமுடியாததாயுமிருக்கிற சேனையையுடையவர்கள் சத்துருக்களை ஜயிப்பார்கள். எவர்களின் யுத்தவீரர்கள் அபிமானமற்றவர்களும் கேட்கவிருப்பமுள்ளவர்களும் ஒருவருக்கொருவர் ஸ்நேஹத்தில் உறுதிபெற்றவர்களும் சூரத்தன்மையை அடைந்தவர்களுமாயிருக்கிறார்களோ அவர்களுக்கு ஜயமுண்டாவதற்கு இஃது அடையாளமென்று சொல்லுகிறார்கள். சப்தங்களும் ஸ்பர்சங்களும் மணங்களும் மனத்துக்கு இனியவைகளாயிருப்பதும் தைரியமானது யுத்தவீரர்களை அடுத்துநிற்பதும் ஜயத்திற்கு வழியாகும். யுத்தத்திற்குப் புறப்பட்டவனுக்கு இடப்பக்கத்திலுள்ள காகத்தின் சப்தமும் ப்ரவேசிக்க விருப்பமுள்ளவனுக்கு வலப்பக்கத்திலுள்ள காகத்தின் சப்தமும் பின்புறத்திலுள்ள காகத்தின் சப்தமும் காரியஸித்தியை அறிவிக்கும். எதிரிலுள்ள சப்தமானது தடைசெய்கிறதாகும். யுதிஷ்டிர! நான்கு அங்கங்களையுமுடைய பெரிய சேனையைச் சேர்த்தபின், முதலில் ஸாமோபாயத்துடனே இருக்கவேண்டும். பிறகு, யுத்தத்தில்

முயற்சிசெய்யவேண்டும்.[1] ஓ! பாரத! யுத்தமென்பது கடைசியான ஜயோபாயமாகும். யுத்தத்தில் ஜயமென்பது எதிர்ச்சையாய்த் தெய்வத்தாலேற்படத்தக்கதென்று விசாரிக்கவேண்டும். அதிக வேகமுள்ளநதிபோலவும் பயமுள்ள பெரியமிருகங்கள்போலவும் அடக்க மிகக்கடினமானபெரியசேனையும் பங்கமடைகிறது. அதிக மான பலமுள்ளதும் பெரியதும் மான்கூட்டத்திற்கு ஒப்பானது மான சேனை காரணமன்று. அறிவுள்ளவர்களாயிருந்தாலும் சேனைகள் பங்கமடைவதாலேயே பங்கப்படுகிறார்கள். ஒருவரை யொருவர் அறிந்தவர்களும் ஸ்நேகமுள்ளவர்களும் உயிரை விடத்துணிந்தவர்களும் நல்ல உறுதியுள்ளவர்களுமான சூரர்கள் ஐம்பதுபேர்களிருந்தாலும் பிறர்படையைக் கொல்லுவார்கள். நற்குலத்திற்பிறந்தவர்களும் பூஜிக்கப்பட்டவர்களுமான ஐந்து அல்லது ஆறு அல்லது ஏழுபேர்கள் உறுதிசெய்துகொண்டு சேர்ந்து பகைவர்களை நன்றாக ஜயிப்பார்கள். எவ்விதத்திலாவது முடியுமானால் யுத்தத்தை நிணைக்கவேண்டாம். யுத்தமானது ஸாமதானபேதங்களுக்குப்பிறகு செய்யத்தக்கதாகச் சொல்லப் படுகிறது. மிகவும்ஜ்வலிக்கும் இடியினால் பயமுண்டாவதுபோலச் சேனையின்வரவால், 'இதுநாசஞ்செய்துவிடுமோ' என்ற பய மானது பயந்த ஸ்வபாவமுள்ளவர்களை மிகவும் துன்பப்படுத்தும். எதிர்த்துவரக்கூடிய யுத்தத்தைக்கண்டு பிறகு எவர்கள் எதிர்த் துச்செல்லுகிறார்களோ அந்தப் படர்களின்சரீரங்களும் தேசத்தி லுள்ளவர்களின் அங்கங்களும் வேர்வையைப் பெருகவிடும். அர சனே! ஸ்தாவரஜங்கமங்களுடன் கூடின தேசம்யாவும் நடுங்கும். அஸ்த்ரங்களின் பிரதாபத்தால் தபிக்கப்படும் பிராணிகளுடைய[2] மஜ்ஜைகள் வெளியில் பொசியும். அவர்களுக்கு அடிக்கடி கடுமையுடன்கலந்த பிரியவசனம் பேசவேண்டும். பீடிக்கப்படு கிறவர்கள் எல்லாவிதத்தாலும் பிறர்களிடம் ஸந்தியை அடை வார்கள். சத்ருவின் ஸ்நேஹிதர்களைப் பேதிக்கவேண்டிச் சார் களை அனுப்பவேண்டும். அவனிலும் மேலான அரசனுடன் ஸந்தி செய்வது சிறந்ததாகும். சத்துருவுடன்சேர்ந்து எல்லாவிதத்தா லும் துன்பப்படுத்துவதுபோல அவனுக்கு வேறுவிதமாக அவ்வி தத்துன்பத்தைச் செய்யமுடியாதன்றே? பொறுமையென்பது ஸாதுவாயிருப்பவனிடமிருக்கும்; அஸாதுவினிடம் எப்பொழுது மிராது. பார்த்த! பொறுமை பொறுமையில்லாமைகளின்பய னைத் தெரிந்துகொள். ஜயம்பெற்றபின் பொறுமையுடனிருக்கும் அரசனுக்குக் கீர்த்தி மிகவிருத்தியடையும். இவன் பேரபராதியா

---

1 இங்கு வேறுபாடங் கொள்ளப்பட்டது. 2 எலும்பின்சாரம்.

யிருந்தாலும் விரோதிகளும் நம்பிக்கையுடனிருப்பார்கள். சூடு காட்டப்படாமல் நிமிர்த்த கோணலான மூங்கில்முதலியமரங்கள் திரும்பவும் ஸ்வபாவத்தையடையுமாகையால் (சத்துருக்களைத்) தண்பப்படுத்தியபின் பொறுமை சிறந்ததென மாயாவிகளான அஸுரர்கள் கருதுகிறார்கள். இது நல்ல அறிவன்று ; பெரியோர்கள் இதைப் புகழ்கிறதில்லை. கோபமில்லாமலும் நாசமில்லாமலும் (பிராணிகளைத்) தண்மக்களைப்போல அடக்கவேண்டும். யுதிஷ்டிர ! கொடுமையான அரசன் உலகினர்க்குப் பகைக்கத்தக்கவனாவான். மெதுவாயிருப்பவனையும் அவமதிப்பார்கள். ஆகையால், இரண்டையும் அடைந்தவனாயிருக்கவேண்டும். பாரத ! அடிக்கப்போகும்பொழுதும் அடிக்கிறபொழுதும் பிரியமாகப் பேசவேண்டும். அடித்தபின்னும் சோகப்படுகிறவன்போலவும் அழுகிறவன்போலவும் பிரியமாகப் பேசவேண்டும். '1 அடிபட்டவர்களும் மிக்கசந்தோஷமுள்ளமற்றவர்களும் எனக்குப் பிரியர்களல்லர். மிகச்சிறப்பாக அடிக்கடி சொல்லப்படும் புகழ்ச்சியும் எனக்குப் பிரியமன்று. அந்தோ ! இத்தகையமனிதன் கொலைக்குத் தக்கவனல்லன். (அவன்) உயிரோடிருப்பதை விரும்பவேண்டும். யுத்தங்களில் ஓடாதவர்களான சிறந்தமனிதர் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால், யுத்தத்தில் இவனை அடித்தவன் எனக்கு அப்பிரியத்தைதச் செய்தவனாகிறான்' என்னும் வசனத்தைச் சொல்லிக்கொண்டு ரஹஸ்யத்திலிருக்குங்காலத்தில் அடித்தவர்களைப் பூஜிக்கவேண்டும். உண்மையாக அடித்தவர்களுக்கும் அடிபட்டவர்களுக்கும் பூஜையைச் செய்யவேண்டும். ஜனங்களின் சேர்க்கையைச் செய்துகொள்ளவிரும்பியவன் கையைப்பிடித்துக்கொண்டு இவ்விதம் கதறவேண்டும். இவ்விதம் எல்லாஸமயங்களிலும் பிரியவசனத்தை முன்னிட்டு நடத்தவேண்டும். ஓ ! பாரத ! இவ்விதத் தர்மம்தெரிந்த அரசன் பிராணிகளுக்குப் பிரியனையும் பயமற்றவனையுமிருப்பான். எல்லாப்பிராணிகளும் இவனிடத்தில் விஸ்வாஸத்தையடையும். நம்பிக்கையுள்ள உலகமானது காலத்துக்குத் தக்கபடி முயற்சியுடன் அனுபவிக்கத் தகுந்ததாகும். ஆகையால், பூமியை அனுபவிக்கவிருப்பமுள்ள அரசன் கபடமின்றி எல்லாப்பிராணிகளையும் விஸ்வாஸமுள்ளனவாயிருக்கச் செய்யவேண்டும். எல்லாவிடத்திலும் ரக்ஷிக்கவும் வேண்டும்" என்று சொன்னார்.

---

1 'யுத்தத்தில் என்னுடையவீரர்கள் சத்துருக்களைக்கொன்றது எனக்குப் பிரியமில்லாதகாரியம். அடிக்கடிசொல்லியும் என்னுடையவீரர்கள் என்வார்த்தையைக் கேட்கிறதில்லை' என்பது வேறுபாடம்.

நூற்றுமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் சத்ருஜயத்தைப்பற்றி இந்திரனுக்கும் பிருஹஸ்பதிக்கும் நடந்த ஸம்வாதத்தை யுதிஷ்டிரருக்குக் கூறியது.)

யுதிஷ்டிரர், "பரதகுலத்திலுதித்த பிதாமஹரே! அரசன் மெல்லியபகைவனிடமும் பெரியஸஹாயமுள்ள கொடியபகைவனிடமும் எவ்விதம் இருக்கவேண்டும்? அதனை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! யுதிஷ்டிர! இவ்விஷயத்திலும் பிருஹஸ்பதிக்கும் இந்திரனுக்கும் நடந்த சம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். தேவர்களுக்கு அரசனும் சத்துருவீரர்களைக் கொல்லுகிறவனுமான இந்திரன் பிருஹஸ்பதியினருகிற் சென்று நமஸ்கரித்து அஞ்சலிசெய்துகொண்டு கேட்கத் தொடங்கினன். 'ஓ! பிராம்மணரே! சோம்பலில்லாத நான் விரோதிகளிடம் எவ்விதம் இருக்கவேண்டும்? அவர்களை நாசஞ்செய்யாமலே உபாயத்தால் எவ்விதம் அடக்கமுடியும்? இரண்டுபடைகளுக்கும் யுத்தமுண்டானால் ஜயமானது பொதுவாயிருக்குமே. பிரகாசிப்பதும் பராக்ரமமுள்ளதுமான லக்ஷ்மியானது எதைச்செய்தால் என்னை விடாமலிருக்கும்?' என்று கேட்டான். பிறகு, அறம்பொருளின் பங்களில் ஸமர்த்தரும் ஸமயத்தில் தோன்றும் அறிவுள்ளவரும் ராஜதர்மங்களின் முறைகளை அறிந்தவருமான பிருஹஸ்பதியானவர் இந்திரனை நோக்கிச் சொல்லத் தொடங்கினர்.

'எந்தச்சமயத்திலும் விரோதிகளைக் கலகத்தால் அடக்கவிரும்புவது கூடாது. பொறுமையென்பதும் கோபமென்பதும் அவிவேகிகளால் அனுஸரிக்கப்பட்டனவாகும். சத்துருவின் வதத்தை விரும்புகிறவன் சத்துருவை ஜாக்ரதையுள்ளவனாயிருக்கும்படி செய்யாமலிருக்கவேண்டும். கோபத்தையும் பயத்தையும் ஸந்தோஷத்தையும் தான் தன்னுள்ளே அடக்கிக்கொண்டு விசுவாஸமுள்ளவன்போல விசுவாசமில்லாதவனைச் சத்துருவை அனுசரித்துக்கொண்டிருக்கவேண்டும். எப்பொழுதும் பிரியத்தையே பேசவேண்டும். அப்பிரியத்தைச் சிறிதும் செய்யக்கூடாது. பயனற்றதான வைரங்களிலிருந்து விலகவேண்டும். கோட்சொல்லுதலை விலக்கவேண்டும். இந்திர! பக்ஷிபிடிக்கும் [1]விதம்ஸம் என்னும் யந்திரங்கொண்டு பிழைப்பவன் முயற்சியுடன் பக்ஷிகளின் த்வனிபோன்ற த்வனியுள்ளவனாகி அப்பக்ஷிகளைத் தன்வச

[1] கண்ணி.

மாக்கிக்கொள்வதுபோல அரசன் முயற்சியுடன் சத்துருக்களைத் தன்வசம் வரும்படி செய்துகொள்ள வேண்டும்; கொல்லவும் வேண்டும். இந்திரனே! பகைவர்களை அவமதித்த அரசன் எப்பொழுதும் ஸுகமாக உறங்கமாட்டான். கெட்ட புத்தியுள்ள அவன் குப்பையில்பற்றிய அக்கினி அவியாமலிருப்பதுபோல விழித்துக்கொண்டேயிருப்பான். ஜயமானது நிச்சயிக்கப்படாமலிருக்கும்பொழுது யுத்தஞ்செய்வது கூடாது. ஓ! பிரபுவே! பெரிய புத்தியுள்ளவர்களும் ஆலோசனையை அறிந்தவர்களுமான மந்திரிகளுடன்கூடி நன்றாக ஆலோசித்துக்கொண்டு சத்துருவை நம்பிக்கையுள்ளவனாகச்செய்து தன்வசமாக்கிக்கொண்டபின் நன்றாக அடக்கவேண்டும். [1] பிறகு, எந்த ஸமயத்தில் இவன் விதியிலிருந்து விலகினவனாவனோ அந்த ஸமயத்தில் இவனை அடிக்கவேண்டும். ஹிதத்தைச்செய்யும் மனிதர்களால் இவன் சேனையைத் தூஷிக்கச்செய்யவேண்டும். முதல்இடைகடைகளை அறிந்தவர்களை மறைவாக விசாரிக்கவேண்டும். உண்மையாகத் தெரிந்துகொண்டு இவனுடைய சேனைகளைப் பேதத்தாலும் சிறிது தானத்தாலும் கெடுக்கவேண்டும். அதுபோல (விஷம் முதலிய) ஔஷதங்களைச் சேர்ப்பிக்கச் செய்யவேண்டும். பகைவர்களுடன் சேர்க்கையை விரும்புவது கூடாது. பகைவர்களை அடக்கவேண்டுவதுதான். ஆகிலும், நெடுங்காலமும் எதிர்பார்த்திருக்கவேண்டும். ஓ! இந்திரனே! காலத்தைவிரும்பிக்கொண்டு முயற்சியுடன் ஆராதித்துவரவேண்டும். எவ்விதம் நம்பிக்கையை அடைவானோ அவ்விதம் பிரியமாகப் பேசவேண்டும். உடனே பகைவர்களைக்கொல்லுவது கூடாது. உறுதியான ஜயத்தைப் பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் திரும்பவும் சல்யத்தை உண்டாக்கும்; புதிதான காயத்தையும் உண்டுபண்ணும். ஸமயம் வந்தவுடன் அடிக்கவும் வேண்டும். தேவர்களுக்கரசனே! சத்துருக்களைக்குறித்து அடிக்கவிருப்பமுள்ள மனிதனுக்கு அந்தக்காலம் திரும்பவும் வராது. காலத்தை விரும்பிய எந்தமனிதனை அந்தக்காலம் தாண்டிச் செல்லுகிறதோ காரியத்தைச்செய்ய விருப்பமுள்ள அந்த மனிதன் அக்காலத்தைத் திரும்பவும் அடையமுடியாது. ஸாதுக்களுக்கு இஷ்டமான முறையைஅடைந்து பலத்தை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும். காலத்தால் காரியத்தைப் பயன்படச் செய்துகொள்ளவேண்டும். காலத்தையடையாமல் சத்துருவைப் பீடிக்கக்கூடாது. காமத்தையும் கோபத்தையும் அஹங்காரத்தையும் விட்டு அரசன் முயற்சியுடன் எப்பொழுதும் பகைவர்களின் ஆபத்தைத் தேடவேண்டும்.

---

1 இங்கு அரைஸ்லோகம் விடப்பட்டது.

தேவர்களில் உத்தமனை இந்திரனே! மிருதுவாயிருத்தலும் தண்டித்தலும் சோம்பலும் அஜாக்ரதையும் மிகுதியானவஞ்சகமும் ஸாமர்த்தியமில்லாதவனை நாசஞ்செய்யும். (மிருதுவாயிருத்தல் முதலிய) இந்த நான்கையுந்தள்ளிவிட்டு மாயையையும் தடுத்தபின், ஆலோசனையின்றிப் பகைவர்களைக்கொல்லவல்லவனுவான். எஃது ஒருவனுலேயே ரஹஸ்யமாகச் செய்யத்தக்கதோ அதனை அவ்விதமே செய்யவேண்டும். மந்திரிகள் ரஹஸ்யத்தை வெளியிடாமலிருப்பார்கள்; ஒருவருக்கொருவர் அறிவிக்கவுஞ்செய்வார்கள். முடியாததென்றறிந்தபின் மற்றவர்களுடன்சேர்ந்து ஆலோசனையைச் செய்யவேண்டும். (தூரத்திலிருப்பவர்களான) காணுத சத்ருக்களிடம் ஆபிசாரத்தையும் நேரிலுள்ளசத்ருக்களிடம் சதுரங்கத்துடன்கூடிய படையையும் பிரயோகஞ் செய்யவேண்டும். அவ்விதமே முதலில் பேதோபாயத்தையும் ரஹஸ்யமாகப் பிரயோகிக்கவேண்டும். அரசன் ஸமயத்தில் அந்த அந்தச் சத்ருவிடம் அந்த அந்தக்காலத்துக்குத் தக்கபடி தண்டோபாயத்தைப் பிரயோகஞ்செய்யவேண்டும். மிக்கபலவானை சத்ருவுக்கு ஸமயத்தில் நமஸ்காரத்தையுஞ்செய்யவேண்டும். அஜாக்ரதையாயிருக்கும் இவனுடைய வதத்தை அஜாக்ரதையின்றி முயற்சியுடன் தேடவேண்டும். வணக்கத்துடனும் தானத்துடனும் இனிமையான வசனத்துடனும் பேசிக்கொண்டு சத்ருவை அனுஸரித்திருக்கவேண்டும். ஒருஸமயத்திலும் ஸந்தேஹமுண்டாகும்படி செய்யக்கூடாது. சங்கைப்பட்டவர்களின் ஸ்தானங்களை எப்பொழுதுமே விலக்கவேண்டும். அரசன் அவர்களிடம் நம்பிக்கையுள்ளவனுயிருக்கக்கூடாது. (அரசனல்) விலக்கப்பட்டமனிதர்கள் ஜாக்ரதையாக இருப்பார்கள். தேவர்களிலுத்தமனே! (சத்ருக்களுக்குத் தன்னிடம் ஸந்தேகம்வராமல் அவர்களை அடுப்பதான) இதைவிடச் செய்யக் கடினமானகாரியம் ஒன்றுமில்லை. அமர்க்களுக்கதிபனே! நிலையற்ற நடையுள்ளவர்களின் ஜலஸ்வரியம்போல நிலையற்ற ஸ்வபாவமுள்ளவர்களின் நடையும் நிலையற்றதென்று சொல்லப்படுகிறது. மித்ரனையும் அமித்ரனையும் கவனியாமல் உபாயத்தைஅடைந்து முயற்சிசெய்யவேண்டும். சாந்தனயிருப்பவனை அவமதிப்பார்கள். கடுமையாயிருப்பவனிடம் உலகம்நடுக்கமடையும். நீ கொடியனுகவு மிராதே; மிருதுவாகவுமிராதே. கொடியனுகவுமிரு; மிருதுவாகவுமிரு. எல்லாவிடத்திலும் நிறைந்த ஜலமுள்ளதும் வேகமுள்ளதுமான பிரவாகத்தில் கரை உடைந்துபோமென்ற பயம் எப்பொழுதும் உண்டாவதுபோல அஜாக்ரதையாக இருப்பவனுக்கு ராஜ்யமும் அவ்விதமே இருக்கும். ஒரே

ஸமயத்தில் பலபகைவர்களைப் பீடிப்பது கூடாது. ஓ! புரந்தர! இவர்களில் ஒவ்வொருவனையும் ஸாமத்தாலும் தானத்தாலும் பேதத்தாலும் தண்டத்தாலும் நன்றுகக் கசக்கியபின் மிச்சமுள்ளவர்களிடம் ஸாமர்த்தியம்போலச் செய்யவேண்டும். புத்தியுள்ளவனும்பண்டிதனுமாயிருப்பவன் சக்தியுள்ளவனுயிருந்தாலும் யாவர்களையும் எதிர்த்துச்செல்வது கூடாது. எந்தக்காலத்தில்குதிரையும் யானையும் தேர்களும் சூழ்ந்ததும், காலாட்களும் யந்திரங்களும் நிறைந்ததும், பக்தியுள்ளதும், ஆறு அங்கங்களுள்ளதுமான பெரிய சேனை இருக்கிறதோ, எப்பொழுது எதிர்ப்பதால் பலவித மேன்மையுண்டாகுமென்று நினைக்கிறுனே அப்பொழுது விசாரியாமல் மறைவின்றி வெளிவந்து திருடர்களான சத்துருக்களை அடிக்கலாம். சத்ருக்களிடத்தில் ஸாமோபாயம் சிறந்ததன்று; ரஹஸ்யமான தண்டோபாயம் சிறந்ததாகும். மிருதுவாயிருப்பது சிறந்ததன்று. எப்பொழுதும் (யுத்தத்திற்கு) யாத்திரை செய்வதும் சிறந்ததன்று. (அதில்நேரும்) தான்யங்களின் நாசமும் விஷமுதலியவற்றைச் சேர்த்துவைப்பதும் அடிக்கடி அமாத்யன் முதலிய பிரகிருதியைப்பற்றிய விசாரமும் இல்லாமலிருக்கும். (ஆகையால்) பலவிதமான மாயைகளையும் ஒருவரையொருவர் எதிர்க்கும்படி செய்வதையும் [1] கபடமானகொலையையும் செய்விக்கவேண்டும். தன்செய்கையால் கீர்த்திக்குக் குறைவில்லாமலிருக்கச்செய்யவேண்டும். ஆப்தர்களான மனிதர்களைக்கொண்டு பட்டணங்களிலும் ராஜ்யங்களிலுமுள்ள (சத்துருக்களின்) அதிகாரிகளை உபசரிக்கும்படி செய்யவேண்டும். பலாஸ்ரனையும் விருத்திராஸ்ரனையும் கொன்றவனே! முன்காலத்திலும் விதிக்கப்பட்ட இந்த நீதியைப் பட்டணங்களில் விதிப்படி செலுத்தினவர்களான அரசர்கள், இவர்களை அனுசரித்துப் பட்டணங்களிலுள்ள எல்லாப்போகங்களையும் ஜயித்திருக்கிறார்கள். (ஆப்தர்களை) அவர்களுடையனவான பொருள்களையும் போகங்களையும் விலக்கிவிட்டு ரகஸ்யமாகப் பொருள்களைக்கொடுத்து, 'தம் தோஷங்களால் துஷ்டர்கள் விலகினர்கள்' என்று சொல்லும்படி செய்துவிட்டுச் சத்துருக்களின் பட்டணங்களிலும் ராஜ்யங்களிலும் சேர்த்துவைக்கவேண்டும். அவ்விதமே, சாஸ்திரங்களை அறிந்தவர்களும் நல்ல அலங்காரமுள்ளவர்களும் சாஸ்திரவிதிக்குத்தக்க அடையாளமுள்ளவர்களும் நல்லசிகைகூடியுள்ளவர்களும் பாஷ்யத்தைச்சொல்வதில் ஸமர்த்தர்களுமான மற்றவர்களைக்கொண்டு சத்ருக்களைக் கொல்லத்தக்க தேவதையை ஆராதிக்கச் செய்யவேண்டும்' என்று சொன்னர்.

---

1 இங்கு வேறுபாடங் கொள்ளப்பட்டது.

இந்திரன், 'பிராம்மணர்களில் மிக்கஉத்தமரே! துஷ்டனுக்குஎன்ன அடையாளங்களிருக்கின்றன? அவனை எவ்விதம் அறியக்கூடும்? இதனைக் கேட்கும் எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்றுகேட்க, பிருஹஸ்பதி சொல்லுகிறார். 'பக்கத்தில் குற்றங்களைச் சொல்லுவான்; நற்குணங்களில் அஸூயைப்படுவான்; பிறர்களால் புகழப்படும்பொழுது முகத்தைத்திருப்பிக்கொண்டு பேசாமலிருப்பான்; காரணமில்லாமல் பேசாமலிருப்பதிலும் தெரிந்துகொள்ளவேண்டும்; பெருமூச்சையும் உதட்டைக்கடிப்பதையும் தலையை அசைப்பதையும் அடிக்கடி நெருங்கியிருத்தலையும் செய்வான்; ஸம்பந்தமில்லாதவனைப் போலப் பேசுவான்; காணுதவனைப்போல வேறுபாட்டை அடைவான்; கண்டாலும் பேசமாட்டான்; வேறுகவந்துபுசிப்பான். இப்பொழுதுஇஃதுதான்விதிப்படியுள்ள அடையாளம் என்பதன்று. இருப்பதிலும் படுப்பதிலும் போவதிலும் விசேஷமான எண்ணங்களை அறியவேண்டும். துன்பமுள்ள ஸமயத்தில் துன்பமும் பிரியமுள்ள ஸமயத்தில் பிரியமுமாகிய இவை மித்திரர்களின் லக்ஷணமாகும். இதற்கு வேறானது எதுவோ அதைச் சத்துருக்களின் லக்ஷணமென்றே அறியவேண்டும். தேவர்களுக்கு அதிபனே! இவைகளைக் கூறியபடி அறிந்துகொள். மிக்க துஷ்டர்களான மனிதர்களின் ஸ்வபாவமானது மிக்க பலமுள்ளது. தேவர்களில் மிகச்சிறந்தவனே! துஷ்டர்களை அறிவிக்கும் லக்ஷணம் இவ்விதம் உனக்கு உபதேசிக்கப்பட்டது. விண்ணவர் வேந்தனே! சாஸ்திரத்தின் உண்மைப்பொருளை உள்ளபடி அறிந்துகொள்' என்று சொன்னர். பகைவர்களைக் கொல்லுவதில் முயற்சியுள்ள அந்த இந்திரன் பிருஹஸ்பதியின் அவ்வசனத்தைக் கேட்டு உண்மையாக அவ்விதமே செய்தான். பகைவர்களைக் கொல்லும் புரந்தரன் ஜயத்திற்காகக் காலத்தில் ஸஞ்சாரஞ்செய்தான். பகைவர்களைத் தன்வசமாக்கியுங் கொண்டான்" என்று சொன்னர்.

நூற்றுநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(ராஜ்யமுதலியவற்றை இழந்தவனும் தர்மபுத்தியுள்ளவனுமான அரசனுடைய ஒழுக்கமுதலியவற்றைப்பற்றி க்ஷேமதர்சிக்தும் காலகவ்ருக்ஷீயருக்தும் நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "அமாத்தியர்களால் துன்பப்படுத்தப்பட்டவனும் பொக்கசத்திலிருந்தும் தண்டநீதியிலிருந்தும் நழுவினவனும்

தர்ம புத்தியுள்ளவனுமான அரசன் பொருள் கிடையாதிருக்கையில் ஸுக விருப்பமுள்ளவனுல் எவ்விதமிருக்கக்கடவன் ?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"யுதிஷ்டிர ! இவ்விஷயத்தில் கேஷமதர்சியைப்பற்றிய இந்த இதிஹாஸம் கூறப்படுகிறது. அதனை நான் உனக்குச் சொல்லுகிறேன். அதனைத்தெரிந்துகொள். முன்னொரு காலத்தில் பலம் குறைந்தவனை கேஷமதர்சியென்னும் ராஜகுமாரன் காலகவ்ருக்ஷீயரென்னும் முனிவரிடம் வந்தானென்று நமக்குக் கேள்வியுண்டு. அவன், அவரை நமஸ்கரித்து, 'மிகவும் பூஜ்யரான பிராம்மணரே! கொடுமையான ஆபத்தையடைந்தவனும் பொருளில்விருப்பமுள்ளவனும் அடிக்கடி முயற்சிசெய்பவனுமான என்போன்ற புருஷன், ராஜ்யத்தை அடையாமலிருக்கும்போது, மரணத்தையும் தீனத்தனத்தையும் பிறரையடுப்பதையும் இகழ்ச்சியான நடையையுமல்லாமல் வேறு என்னசெய்யவேண்டும் ? அதனை எனக்குச் சொல்லவேண்டும். மனத்திலுள்ளதும் மற்றச் சரீரத்திலுள்ளதுமான வியாதியால் துன்பப்படும் மனிதனுக்குப் பலகல்விகளுள்ளவரும் நல்லபுத்தியுள்ளவருமான உம்மைப் போன்றவர் ரக்ஷிகராயிருக்கவேண்டும். மனிதன் விஷயபோகங்களையடக்கி வைராக்கியமடைந்து பிரீதியையும் சோகத்தையும்விட்டு ஞானமென்னும் பொருளையடைந்து ஸுகமாகச்செழிப்பான். எவர்களுக்கு ஸுகமானது பொருளை ஆஸ்ரயித்திருக்கிறதோ அவர்களைப்பற்றி நான் தூக்கிக்கிறேன். எனக்கோ பலபொருள்கள் கனவில் அடையப்பட்டவைகள்போல நாசமடைந்தன. எவர்கள் பெருத்தத்திரவியங்களை விலக்குகிறார்களோ அவர்கள் செய்ய அரிதானகாரியத்தைச் செய்தவர்களாகிறார்கள். ஆச்சரியம் ! நாங்களோ இல்லாத இப்பொருள்களையும் விடச்சக்தியற்றவர்களாயிருக்கிறோம். ஓ! பிராம்மணரே! இவ்வித அவஸ்தையை அடைந்தவனும் தீனனும் ஸம்பத்தை இழந்தவனும் துன்பமுள்ளவனுமான எனக்கு இங்கு வேறு எந்தஸுகமுள்ளது? அதனை உபதேசிக்கவேண்டும்' என்று கேட்டான்.

அறிவுள்ளவனும் கோஸலதேசத்தரசனுமான ராஜகுமாரனுல் இவ்விதம் வினவப்பட்டவரும் பெரியதேஜஸ்ஸுள்ளவருமான காலகவ்ருக்ஷீயரென்னும்முனிவர், 'முந்தியே அறிவுள்ள உனக்கு, 'நான்' 'என்னுடையது' என்னும் இவையாவுமே நிலைத்தனவல்லவென்கிற இந்த அறிவு இருக்கவேண்டும். எந்த வஸ்துவை இருக்கிறதென்று நினைக்கிறாயோ அதெல்லாம் இல்லையென்று தெரிந்துகொள். இங்ஙனம் அறிந்தவன் கஷ்டமான ஆபத்தை அடைந்தாலும் துக்கப்படமாட்டான். சென்றதும் வருவ

தும் நிலையற்றவையென்பது நிச்சயம். நீ இவ்விதம் அறிய வேண்டியதை அறிவாயானால் துன்பங்களிலிருந்து விடப்படுவாய். முந்தியவைகளும் அதற்கு முன்னுள்ளவைகளும் வருபவைகளுமான முயற்சிகளும் மற்ற உன்னுடைய யாவும் இல்லையென்றே தெரிந்துகொள்ளவேண்டும். அதை அறிந்தபின் எவன் துன்பப்படுவான்? இவ்வுலகம் இருந்தும் இல்லாததாகும். இல்லாமலிருந்தும் இருப்பதாகும். சோகப்படுவதில் பயனில்லை. [1]அவ்வித மனிதன் எப்படித் துன்பப்படக்கூடும்? அரசனே! இப்பொழுது உன்னுடைய தந்தை எங்கே? உன்னுடைய பாட்டன் எங்கே? நீ அவர்களை இப்பொழுது பார்க்கவில்லை. அவர்களும் உன்னைப் பார்க்கவில்லை. சரீரம் நிலையற்றிருப்பதைப்பார்க்கும் நீ அவர்களைப்பற்றி ஏன் துக்கப்படுகிறாய்? புத்தியாலேயே ஆலோசித்துப்பார். நிலையாயிருப்பது ஒன்றுமில்லை. அரசனே! நானும் நீயும் உன்னுடைய நண்பர்களும் பகைவர்களும் அவசியம் இல்லாமல் போவோம். யாவும் இல்லாதனவாகும். எல்லாமனிதர்களும் நூறுவயதிற்குமுந்தியே இருபது பிராயத்திலும் முப்பது பிராயத்திலும் மரிப்பார்கள். மனிதன் பெருஞ்செல்வத்திலிருந்து விடுபடாதவனாயிருந்தாலும், அதனை, 'இஃதுஎன்னுடையதன்று' என்று நினைத்துத் தனக்குப் பிரியத்தைச் செய்துகொள்ளவேண்டும். வருவதை, 'என்னுடையதன்று' என்று அறியவேண்டும். சென்றதை, 'என்னுடையதன்று' என்று அறியவேண்டும். தெய்வம் மிகவும் பலமுள்ளதென்று எண்ணுபவர்கள் பண்டிதர்கள். அதனை ஸாதுக்கள் இயல்பென்று சொல்லுகிறார்கள். பொருளில்லாதவர்களும் பிழைக்கிறார்கள். அறிவும் பராக்ரமமும் பொருந்தியவர்களும் உனக்குச் சரியானவர்களும் மேலானவர்களுமான ஜனங்கள் ராஜ்யத்தை ஆளுகிறார்கள். அவர்கள் உன்னைப்போலச் சோகப்படுகிறார்களில்லை. நீ புத்தியிலும் பௌருஷத்திலும் அந்த மனிதர்களுக்கு மேலானவனாகவாவது ஒப்பானவனாகவாவது இருக்கவில்லையா? ஆகையால், நீயும் சோகப்படாதே' என்று மறுமொழி கூறினர்.

அரசன், 'ஓ! பிராம்மணரே! அந்த ராஜ்யமுழுமையும் முயற்சியின்றியே கிடைத்திருந்ததாக நினைக்கிறேன். அந்தராஜ்யம் யாவுமே பெரிதானகாலத்தால் அபகரிக்கப்பட்டது. தபோதனரே! கிடைத்ததுகொண்டு பிழைப்பவனாயிருந்தாலும் பிரவாகத்தால் அபகரிக்கப்பட்டவன்போல் அந்தராஜ்யம் அபகரிக்கப்பட்டதன்பயன் இச்சோகமென்று அறிகிறேன்' என்றுசொன்னன்.

---

1 ஆகையால், 'எவ்விதத்திலும் துக்கப்படக்கூடாது' என்பது வேறு பாடம்.

முனிவர், 'கோஸலதேசத்தரசனே! உண்மையை நிச்சயஞ் செய்துகொண்டு வருவதையும் சென்றதையும்பற்றிச் சோகப் படாமலிருக்கவேண்டும். எல்லா விஷயங்களிலும் அப்படியேயிரு. அடையத்தக்கவைகளும் அடையத்தகாதவைகளுமான பொருள் களை எப்பொழுதும் விரும்பாமல் எதிரிலுள்ளவைகளை அனுபவித் துக்கொண்டு வருபவைகளைப்பற்றி நீ சோகப்படவேண்டாம். கௌஸல்ய! கிடைத்தபடியுள்ள யுக்தமான பொருள்களைக் கொண்டு சந்தோஷமுள்ளவனாயிரு. சுத்தமான ஸ்வபாவமுள்ளவ னாயிருந்தால் செல்வத்தைஇழந்ததற்காக நீ சோகப்படமாட்டாய். கெட்டபுத்தியுள்ள மனிதன், முதலில் அடைந்த போகங்கள் சென்றதும், போகங்களை இழந்ததற்காகப் பிரம்மாவை எப்பொழு தும் நிந்திக்கிறான்; பொருளை அடைந்தவனாயிருந்தாலும் ஸந்தோ ஷப்படுகிறதில்லை. ஸம்பத்துள்ள மிலேச்சர் முதலிய நீசஜனங்களை யும் சிறந்தவர்களாக நினைக்கிறான். இந்தக்காரணத்தால் இந்தத் துக்கம் திரும்பவும் தொடர்ந்து நிற்கிறது. அரசனே! ஈர்ஷையும் அபிமானமும் நிரம்பியவர்களும் தாமேபுருஷரென்று நினைக்கிற வர்களும் அவ்விதமிருப்பார்கள். அறிவுள்ள கோஸலதேசத்தரச னே! நீ அவ்விதம் மாத்ஸர்யமில்லாதவனாயிருக்கிறாயா? உன்னி டத்தில் ஸம்பத்தில்லாமலிருந்தாலும் மற்றவர்களின் ஸம்பத்தைக் குறித்துப் பொறுமையுடனிரு. பொறுமையில்லாத மனிதர்கள் சத்துருவினிடத்திலிருக்கும் ஸம்பத்தையும் அனுபவிப்பார்கள். உலகத்தைப் பகைப்பவனிடம் ஸம்பத்திருந்தாலும் விலகிவிடும். தர்மத்தைச் செய்கிறவர்களும் தியாகதர்மத்தை அறிந்தவர்களும் தீரர்களுமான மனிதர்கள் ஸம்பத்தையும் பிள்ளை பேரன் முதலிய வர்களையும் தாமே விடுகிறார்கள். ஸ்வாயம்புவ மனுவின் குலத்தி லுதித்தவனும் பாக்கியமுள்ளவனுமான பரதனால் பல ரத்னங்கள் நிறைந்தபெருத்தராஜ்யம் விடப்பட்டதென்றுகேள்வி. அப்படியே மற்ற அரசர்களாலும் பெரிய பாக்யமுள்ள ராஜ்யமானது விடப் பட்டிருக்கிறது. அவ்வரசர்களனைவர்களும் ராஜ்யங்களைவிட்டு அர ண்யம்சென்று அங்குள்ள கனிகளைப் புஜித்துக்கொண்டு தவத்தின் கரையையும் துக்கத்தின்முடிவையும் அடைந்தார்கள். அவ் விதம் மற்றுஞ் சிலர் பலவற்றை நிலையற்றனவாகக்கண்டு விடா முயற்சியென்னும் ஸாதனத்தாலும் (அவை) கிடைப்பது மிக அரிதென்று நினைத்து விலக்கிவிடுகிறார்கள். நீயோ சிறந்த அறி வுள்ளவனாயிருந்தும் விரும்பத்தகாதனவும் பிறனை அடுத்திருப் பனவும் நிலையற்றனவுமான பொருள்களை விரும்பிக்கொண்டு தீன மாகப் பரிதபிக்கிறாய். என்னால் சொல்லப்பட்ட புத்தியை நன்றாக அறிந்து நீயே இவைகளை விலக்கிவிடு. அனர்த்தங்கள்

அர்த்தரூபமாயும் அர்த்தங்கள் அனர்த்தரூபமாயும் தோன்றுகின்றன. சிலருக்குப் பொருளின்பொருட்டே பொருளின் நாசங்கள் உண்டாகின்றன. [1] மற்றச்சிலர் அந்தச்சுகத்தைநிலையற்றதாக நினைத்து ஸம்பத்தை விரும்புகிறார்களில்லை. ஸம்பத்தால் ஸந்தோஷமடைகிற ஒருவன் வேறு ஸ்ரேயஸ் உண்டென்று நினைக்கிறானில்லை. அப்படி முயற்சிசெய்துவரும் அவனுடையமுயற்சியும் நாசமடைகிறது. ஓ! கௌஸல்ய! கஷ்டத்தால் அடையப்பட்ட அவனிஷ்டம் எப்பொழுது நசிக்கிறதோ அப்பொழுது முயற்சியில் யங்கமடைந்த அம்மனிதன் பொருளிலிருந்து வெறுப்படைகிறான். அந்த ஸம்பத்தை நிலையற்றதென்றறிந்தபின் எவன் ஸம்பத்தை அடைய விரும்புவான்? நற்குலத்திற் பிறந்த சில மனிதர்கள் மேலுலகில் ஸுகத்தை விரும்பித் தர்மத்தைஅடைகிறார்கள்; இவ்வுலகவாழ்க்கையினின்றும் வெறுப்பையுமடைகிறார்கள். பொருளில் பேராசைபற்றிய சில மனிதர்கள் உயிரையும் விடுகிறார்கள். அந்த மனிதர்கள் ஜீவித்திருப்பதின்பயன் தனத்தைத் தவிர வேறில்லையென்று நினைக்கிறார்கள். இவர்களுடைய தீனத்தன்மையைப் பார். இவர்களுடைய புத்தியில்லாத்தன்மையையும் பார். ஜீவித்திருப்பது நிலையற்றதாயிருக்க, அவிவேகத்தால் பொருளில் பேராசையடைந்திருக்கிறார்கள். கூட்டத்தின் முடிவு நசிப்பதாயிருத்தலாலும் ஜீவிப்பதின் முடிவு மரிப்பதாயிருத்தலாலும் சேர்க்கையின் முடிவு விலகுவதாயிருத்தலாலும் எவன் திரவியத்தில் மனத்தைச்செலுத்துவான்? அரசனே! புருஷனைனவன் பொருளையோ பொருளானது புருஷனையோ அவச்யம் விடுகிறது நிச்சயம். அதனை அறிந்த எவன் தாபமடைவான்? [2] மற்றவர்களுக்கும் மித்திரர்களும் பொருள்களும் நாசமடைகின்றன. மனிதர்களுக்குத் தம்முடைய புத்தியால் உண்டாகும் ஸமானமான ஆபத்தைப் பார். ஆகையால், இந்திரியங்களையும் மனத்தையும் வாக்கையும் அடக்கிக்கொள். பலங்குறைந்தவர்களும் விரோதிகளும்கூட நிகழும் இப்பொருள்களைக் காணுவதைத் தடுப்பவரில்லை. விலகியிருக்கும்பொருள்களைக்காணுவது ஒருவருக்கும் முடியாதென்று தெரிந்திருக்க, அறிவில் திருப்தியுள்ளவனும் சூரனுமான உன்போன்றவன் சோகப்படத்தக்கவனல்லன். சிறியதை விரும்புகிறவனும் சாபல்யமற்றவனும் சாந்தமாக இருப்பவனும் அடக்கமுள்ளவ

---

1 'ஒருவன் ஸம்பத்தாலுண்டாகும் ஸுகத்தை அழிவற்றதாக நினைத்து ஸம்பத்தை அடையவிரும்புகிறான்' என்பது வேறுபாடம்.

2 இங்கு அதிகபாடமான ஒருஸ்லோகம் விடப்பட்டது.

னும் நல்லநிலைமையிலிருப்பவனும் பிரம்மசரியம் பொருந்தியவனுமான உன்போன்றவன் அவிவேகத்தை அடையத்தக்கவனல்லன். கெட்டமனிதர்களுக்கு யோக்யமானதும் துன்பமுள்ளதும் மிக்கபாவமுள்ளதும் கொடுமையான விருத்தியுள்ளதும் கெட்ட மனிதர்களைச் சேர்ந்ததுமான ஒடுக்கும் ஜீவனத்தை நீ விரும்பத்தக்கவனேயல்லன். வாக்கையும் மனத்தையும் அடக்கிக்கொண்டு எல்லாப்பிராணிகளிடத்திலும் தயையுடன் பெரியகாட்டில தனியே கிழங்குகனிகளை ஆகாரஞ்செய்துகொண்டாவது ஸுகமாயிரு. நகத்தடிபோன்ற தந்தமுள்ள யானையுடன்கூட அரண்யத்தில் தனியே ஸுகித்திருப்பதும் சிறிதாலும் சந்தோஷப்படுவதும் பண்டிதனுக்கு யோக்யமாகும். நன்றுகக்கலங்கின பெரியமடுவானது தானேதெளிவடைவதுபோல நல்ல புத்தியுள்ள மனிதன் தன்னுலேயே தெளிவடைவான். ஓ! அரசனே! மந்திரி முதலியவர்களையிழந்து இவ்விதம் துன்பத்தையடைந்த மனிதனுக்கு ஸம்பத்துக்கிடைக்காமல் தெய்வமும் விபரீதமாக இருக்கும்பொழுது, இவ்விதமிருப்பதை நான் ஸுகமென்று அறிகிறேன். நீ எதை ஸ்ரேயஸென்று நினைக்கிறாய்?

நூற்றைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(க்ஷேமதர்சிக்தும் காலகவ்ருக்ஷீயருக்தும் நடந்த ஸம்பாஷணைத் தொடர்ச்சியில் சத்துருக்களை ஜயிக்தும் கபடோபாயங்கள்.)

க்ஷேத்திரியனே! அல்லது, உன்னிடத்தில் சிறிது பராக்ரமமிருப்பதாகக் காண்பாயாகில் ராஜ்யத்தை அடையத்தக்க நீதியை நான் உனக்குச் சொல்லுகிறேன். அந்த நீதியை அனுஷ்டானஞ் செய்யவல்லவனுயிருப்பாயாகில் காரியத்தையுஞ்செய்வாய்; உண்மையாக உனக்குச்சொல்லும் யாவற்றையும் மிச்சமின்றிக் கேள். காரியத்தைச் செய்வாயாகில் ராஜ்யத்தையோ ராஜ்யத்திற்குரிய ஆலோசனையையோ அல்லது திரும்பவும் பெரிய சிறப்புக்களையோ பெரியபொருள்களையோ (எவற்றையும்) அடைவாய். அரசனே! இதில் விருப்பமுண்டானால் திரும்பவும் சொல்லு. உனக்கு உபதேசிக்கிறேன்' என்று சொன்னர். அரசன், 'பூஜ்யரான நீர் நீதியைச்சொல்லும்; பராக்ரமமுள்ளவனுயிருக்கிறேன். பூஜ்யராயிருப்பவரே! உபதேசம் செய்யும். இப்பொழுது உம்முடன்சேர்க்கை

யானது எனக்குப் பிரயோஜனமுள்ளதாகவே இருக்கவேண்டும்' என்று கூறினன்.

முனிவர், 'நீ மானத்தையும் டம்பத்தையும் கோபத்தையும் ஸந்தோஷத்தையும் அப்படியே பயத்தையும் நீக்கிவிட்டு நமஸ்கரித்து அஞ்சலிசெய்துகொண்டு சத்துருவுக்குப் பணிவிடைசெய். உத்தமமான பரிசுத்தியாலும் கர்மத்தாலும் அவனை நம்பிக்கை உள்ளவனாகச்செய். உண்மையான பராக்ரமமுள்ள வைதேகன் உனக்குப் பொருளைக் கொடுக்கத்தக்கவன். எல்லாப்பிராணிகளிடத்திலும் நம்பிக்கையையும் [1] ஆதரவையும் அடைவாய். பிறகு, உத்ஸாஹமுள்ளவர்களும் வ்யஸனமில்லாதவர்களும் பரிசுத்தர்களுமான ஸஹாய மனிதர்களை அடைவாய். இந்திரியங்களை வென்று மனத்தை அடக்கி நீதிசாஸ்திரத்திலிருப்பவன் தன்னையும் மேலாக்கிக்கொள்வான். பிரஜைகளையும் பிரீதியுள்ளவர்களாகச்செய்வான். தைரியமுள்ளவனும் ஸம்பத்துள்ளவனுமான அந்தவிதேகபதியாலேயே நீ பூஜிக்கப்பெற்று எல்லாப் பிராணிகளிடத்திலும் நம்பிக்கையையும் பெரியஆதரவையும் பெறுவாய். பிறகு, ஸ்நேஹிதர்களின் பலத்தையடைந்து நன்றாக மந்திராலோசனைசெய்து பிரியவசனத்தால் வேற்றுமைப்படுத்தி வில்வக்காயினால் வில்வக்காயை அடிப்பதுபோலச் சத்துருக்களை நாசஞ்செய்; பிறருடன் ஸங்கேதஞ்செய்துகொண்டு இவனுடைய படையையாவது கொல்லும்படிசெய். சத்துரு தானே நசிக்கும்படி, அடையமுடியாத நல்லவஸ்துக்கள், ஸ்திரீகள், போர்வைகள், படுக்கைகள், ஆஸனங்கள், வாஹனங்கள், பெரிய விலைபெற்றவீடுகள், பக்ஷிகள், மிருகக்கூட்டங்கள், ரஸங்கள், கந்தங்கள், கனிகள் இவைகளில் பற்றுள்ளவனாக அவனைச்செய். இவ்விதம் பற்றுள்ளவனாயிருந்தால் அவனைத் தடுக்கவேண்டியவிஷயத்தில் தடுக்கவும் வேண்டும். உபேக்ஷையாக இருந்தால் தான் சத்துருவென்பது வெளியாகும். ராஜஶ்ரேஷ்டனே! எப்பொழுதும் ஹிதத்தையும் நல்லநீதியையும்விரும்பும் அறிவுள்ளமனிதன் எந்தச்சமயத்திலும் சத்துருவென்பதை வெளியிடக்கூடாது. சத்துருவின்தேசத்தில் சத்துருவின் பட்டணத்தில் மித்திரனென்று நம்பத்தக்கவனுய்வவஹித்துக்கொண்டிரு. பயனில்லாத [2] நாய்களுக்கும் மான்களுக்

---

1 'விதேகராஜனுக்குக் கைபோன்றஸ்திதியை' என்பது பழைய உரை. 2 எப்பொழுதும் ஜாக்ரதையாயிருப்பது நாயின்தன்மை. பயந்து நடுங்குவது மானின் தன்மை. பிறரின் இங்கிதங்களை அறிவது காகத்தின் தன்மை.

கும் காகங்களுக்குமுள்ள உபாயங்களுடன் மித்திரர்களுக்குரிய தர்மத்தைச் செய்துகொண்டிரு. செய்யக் கடினமான பெரிய முயற்சிகளையும் [1] நதிபோலத் தாண்டத்தகாத விரோதங்களையும் இவனுக்கு உண்டாகும்படி செய். பலசாலிகளுடன் விரோதமுண்டாகும்படிசெய். மிகச் சிறந்த தோட்டங்களும் படுக்கைகளும் ஆஸனங்களும்போன்ற பிரியமாக அனுபவிக்கத்தக்க பொருள்களின் வழியாய் இவனுடையகோசத்தை அழியும்படிசெய். இவன் பொருட்டு யாகத்தையும் தானத்தையும் புகழ்ந்துபேசு. பிராம்மணர்களை அனுஸரிக்கும்படிசெய். அவர்கள் உனக்குப் பிரியத்தைச் செய்வார்கள்; செந்நாய்கள்போல அவன் [2] கோசத்தை அறுத்துவிடுவார்கள். புண்யசீலனை மனிதன் ஸந்தேகமின்றி உத்தமகதியையடைவான்; ஸ்வர்க்கலோகத்தில் மிக்கபுண்யமானதும் நிலைத்ததுமானபதம் பெறுவான். ஓ! கௌஸல்ய! தர்மம் அதர்மம் இரண்டிலும் ஏவப்பட்டவனுக்குக் கோசத்திற்கு அழிவுண்டானதும் அவன்சத்துருக்களின்வசத்தை அடைவான். ஸ்வர்க்கத்திற்கும் ஜயமுதலியவற்றிற்கும் மூலமானகோசத்தை அழிக்கவேண்டும். அதுகொண்டு சத்துருக்கள் ஸந்தோஷிப்பார்கள். இவன்பொருட்டுப் பராக்ரமமாகிய மானுஷகர்மத்தைக் கொண்டாடாதே. ஜயமுதலிய அதிர்ஷ்டமாகிய தெய்வத்தை இவனிடம் விவரித்துக்கொண்டாடு. தெய்வத்தைப்பரிதாகக்கொண்டவன் ஸந்தேகமின்றிச் சீக்கிரமே நாசமடைவான். இவனிடமிருந்து பொருள்யாவும் விலகும்படி இவனை விசுவஜித்தென்னும் யாகத்தைச் செய்யும்படி செய். பிறகு, மஹாஜனத்தைத் துன்பப்படுத்திப் பொருள்சித்தியாமல் செல்வான். தியாகதர்மந் தெரிந்த புண்யசாலியான ஒருவனை இவனிடம் ஸ்தோத்திரம்செய். ஒரு ஸமயம் தியாகத்தைச் செய்யவும் விரும்புவான்; அதனல் அவன் மோக்ஷமாகிய ஸூக்ஷமத்தையும் அடைவான் எல்லாச்சத்துருக்களையும் நசிக்கச்செய்வதும் பழுதில்லாததுமான ஔஷதங்களின்சேர்க்கையாலும் கபடவழிகளாலும் சத்துருவின் யானைகளையும் குதிரைகளையும் மனிதர்களையும் கொல்லும்படிசெய். ராஜகுமாரனே! தைரியமுள்ளவன் நன்முக ஆலோசிக்கப்பட்ட இவைகளும் மற்றும் பலவுமான கபடவழிகளைச் செய்யக்கூடியவன்; தைரியமில்லாதவனல் செய்யமுடியாது' என்று சொன்னர்.

---

1 இங்கு வேறுபாடங் கொள்ளப்பட்டது.
அவனைத் தின்றுவிடுவார்களென்பது வேறுபாடம்.

நூற்றுருபது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(க்ஷேமதர்சிக்தும் காலகவ்ருக்ஷியருக்தும் நடந்த ஸம்பாஷணைத் தொடர்ச்சியும், காலகவ்ருக்ஷியால் க்ஷேமதர்சி விதேஹ ராஜனிடம் நன்பு பூண்டு மேன்மைபெற்றதும்.)

அரசன், 'ஓ! பிராம்மணரே! கபடத்தாலும் டம்பத்தாலும் நான் ஜீவித்திருக்க விரும்பவில்லை. மிக்க அதிகமாயிருந்தாலும் அதர்மத்துடன்கூடிய பொருள்களை நான் விரும்பமாட்டேன். பகவானே! முன்னமேயே என்னல் இது விடப்பட்டது. எதில் பாபமென்ற சங்கையில்லையோ எது முழுமையும் ஹிதமாயிருக்குமோ அப்படிப்பட்டதும் தீங்கற்றதுமான தர்மத்தால் இவ்வுலகில் நான் ஜீவிக்க விரும்புகிறேன். நான் உங்களால் சொல்லப்பட்டதைச் செய்யவல்லவனல்லன். இஃது எனக்கு யுக்தமன்று' என்றுசொன்னான்.

முனிவர், 'ஓ! க்ஷத்திரியனே! இவ்விதம் பேசுவதால் நீ நீதியுள்ளவனாயிருக்கிறாய். ஸ்வபாவத்தாலும் புத்தியாலும் நீதியுள்ள உன்தரிசனம் ஆச்சரியம். நீயும் அந்த விதேகராஜனுமாகிய உங்களிரண்டு பேர்களுக்குமே ஸஹாயமாயிருக்கும்விஷயத்தில் முயற்சி செய்கிறேன். நிலைத்ததும் தன்பமற்றதுமான ஸ்நேஹத்தையாவது உங்களுக்குச் செய்விக்கிறேன். நற்குலத்திற் பிறந்தவனும் கொடுமையில்லாதவனும் பலகல்விகளுள்ளவனும் ராஜ்யத்தை நடத்துவதில் ஸமர்த்தனுமான உன்னைப்போன்றவனை எவன் அமாத்தியனாகச் செய்துகொள்ளமாட்டான்? ஓ! க்ஷத்திரியனே! ராஜ்யத்தைவிட்டுவிலகிச்சென்றவனும் அதிகமான துயரத்தை அடைந்தவனுமான நீ தீங்கில்லாதநடையுடன் ஜீவிக்க விரும்புகிறாய். அப்பா! உண்மையான சொல்லுள்ள வைதேஹன் எனது வீட்டுக்கு வருவான். பிறகு, நான் அவனை ஆஜ்ஞாபிப்பேன். அதை அவன் ஸந்தேஹமின்றிச் செய்வான்' என்று சொன்னார். பிறகு, முனிவர், வைதேஹனை அழைத்து, 'ராஜனே! இவன் ராஜகுலத்தில் பிறந்தவன். இவனுடைய அந்தரங்கம் எனக்குத் தெரியும். கண்ணுடிபோலவும் சரத்காலத்திலுள்ள சந்திரன்போலவும் சுத்தமான ஸ்வரூபமுள்ளவன். இவனிடத்தில் தோஷத்தைக் காணேன். எல்லாவிதத்தாலும் என்னல் இவன் பரீக்ஷிக்கப்பட்டவன். இவனுடன் உனக்கு ஸ்நேஹமேயிருக்கட்டும். என்னிடத்திலிருப்பதுபோல இவனிடத்திலும் நம்பிக்கையுடனிரு. பகைவரைக் கொல்லுகிறவனே! அமாத்தியனில்லா

மல் ராஜ்யம் ஆளமுடியாது. அமாத்தியன் சுத்தனாகவும் புத்தி நிறைந்தவனாகவும் இருக்கவேண்டும். [1] அவ்விரண்டு குணங்களாலுமே இரண்டு உலகமும் வசித்திக்கும். அரசனே! ராஜ்யத்தின் பயனைப் பார். தர்மபுத்தியுள்ளவர்களுக்கு உலகில் எவ்விடத்திலும் இதுபோன்ற வழி வேறில்லை. இந்த ராஜகுமாரன் மஹாத்மாவும் ஸாதுக்களின் வழியை அடைந்தவனுமாயிருக்கிறான். [2] தர்மத்தில் முந்திச்செல்லுகிறவனை இவன், உன்னால் நன்றாக அங்கீகரிக்கப்பட்டு [3] நன்றாக ஆதரிக்கப்படுவானானால் பெரிய கூட்டங்களான உன்சத்துருக்களைப் பிடிப்பான். இவன் உன்னை ஜயிக்கவிரும்பித் தகப்பன் பாட்டன் வழியாக வந்த பதத்திலிருந்துகொண்டு யுத்தத்தில் எதிர்த்துப் போர்செய்வானால் க்ஷத்திரியனாயிருப்பவனுக்கு அது ஸ்வதர்மம். நீயும் ஜயிக்கவிருப்பத்துடன் நியமமுள்ளவனாயிருந்தால் எதிர்த்து யுத்தஞ் செய்யக்கூடும். ஆகிலும், யுத்தஞ்செய்யாமலே என்னுடைய உத்தரவால் ஹிதத்திலிருந்துகொண்டு இவனை வசப்படுத்திக்கொள். நீ நியாயமில்லாத லோபத்தைத் தள்ளிவிட்டுத் தர்மத்தைக் கவனித்துப் பார். காமத்தாலும் த்ரோஹத்தாலும் நீ ஸ்வதர்மத்தை விடத் தக்கவனல்லன். அப்பா! ஜயம் எப்பொழுதுமே உண்டாகிறதில்லை. அபஜயமும் எப்பொழுதுமே உண்டாகிறதில்லை. ஆகையால், ஜயத்தையும் அனுபவிக்கவேண்டும்; அபஜயத்தையும் அனுபவிக்கவேண்டும். ஜயம் அபஜயம் இவ்விரண்டையும் தன்னிடத்திலும் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்பா! சத்துருக்களை மிச்சமில்லாமல் செய்பவர்களுக்கு மிச்சமில்லாமல் செய்வதினிருந்தே பயமுண்டு' என்று இந்த வார்த்தையைச் சொன்னர்.

இவ்விதம் சொல்லப்பட்ட வைதேகன், பூஜிக்கத்தக்க பிராம்மண ஸ்ரேஷ்டரைப் பூஜித்து மரியாதைசெய்து ஸம்மதித்து, 'பிராஜ்ஞர்களில் சிறந்த நீங்கள் எவ்விதம் சொல்லுகிறீர்களோ, பெரிய கல்வியைக்கற்ற நீங்கள் எவ்விதம் சொல்லுகிறீர்களோ, க்ஷேமத்தை விரும்பிய நீங்கள் எவ்விதம் சொல்லுகிறீர்களோ, அஃது எங்கள் இரண்டு பேர்களுக்குமே யோக்கியமானது. எந்த எந்த வசனத்தைச் சொல்லப்பட்டவனாகிறேனோ அதை அதை அப்படி அப்படியே செய்கிறேன். இதுவே பெரியக்ஷேமம். இவ்விஷயத்தில் எனக்கு விசாரிக்க வேண்டியதில்லை' என்று இந்த

---

1 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

2 'தர்மத்தில் முந்திச்செல்லுகிற இவனை நீ அங்கீகரியாவிட்டால் இவன் உன் சத்துருக்கூட்டங்களை அடைவான்' என்பது வேறுபாடம்.

3 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

வார்த்தையைச் சொன்னன். பிறகு, விதேஹராஜன் கோஸல ராஜனை அழைத்து, 'அரசர்களில் மிகச்சிறந்தவனே! தர்மத்தாலும் புத்தியாலும் பலத்தாலும் நான் ஜயித்தவனயிருக்கிறேன். ஆத்மகுணங்களால் நான் உன்னால் ஜயிக்கப்பட்டவனயிருக்கிறேன். நீ உன்னை அவமதித்துக்கொள்ளாமல் ஜயமுள்ளவன் போலிரு. உன்புத்தியையும் உன்பௌருஷத்தையும் நான் அவமதிக்கவில்லை. நான் ஜயம்பெற்றேனென்று அவமதிக்கவில்லை. நீ ஜயமுள்ளவன்போலிரு. அரசனே! உள்ளபடி பூஜிக்கப்பெற்று என்வீட்டிலிருந்து உன்வீடுசெல்லலாம்' என்றுசொன்னன். பிறகு, அவ்விருவர்களும் காலகவ்ருக்ஷீயரென்னும் பிராமணரைப் பூஜித்து நம்பிக்கையுள்ளவர்களாகவீடுசென்றார்கள். பிறகு, விதேஹராஜன் கோஸலராஜனைவேகமாகத் தன்வீட்டுக்கழைத்துக்கொண்டுபோய், பாத்தியத்திலும் அர்க்கியத்திலும் மதுபர்க்கத்திலும் பூஜிக்கயோக்கியனை அவனைப் பூஜித்தான். தன்குமாரியையும் பலவித ரத்தினங்களையும் அவனுக்குக் கொடுத்தான். இஃது அரசர்களுக்குப் பெரியதர்மம். ஜயம் அபஜயம் இவ்விரண்டும் ஸமமானவைகள்" என்றுசொன்னர்.

நூற்றேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், கூட்டங்கள் வளருவதுமுதலியவற்றைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "சத்துருக்களைத் தபிக்கச்செய்கிறவரே! பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் இவர்களின் தர்மநடையும் பொருளும் ஜீவநோபாயங்களும் அவற்றின்பிரயோஜனங்களும் அரசர்களின்நடையும் கோசமும் கோசத்தைப்பெருகச்செய்வதும் ஜயமும் அமாத்தியர்களின் குணங்களும் ஒழுக்கமும் பிரகிருதிகளைப் பெருகச்செய்வதும் ஸந்திவிக்ரகமுதலிய ஆறினுடைய குணங்களின்விதியும் சேனைகளின்நீதியும் துஷ்டர்களின்லக்ஷணமும் ஸாதுவின்லக்ஷணமும் ஸமமாயிருப்பவர்கள், கீழானவர்கள், மேலானவர்கள் இவர்களுக்குரியலக்ஷணமும் நடுத்தரத்திலுள்ளவரின் ஸந்தோஷத்திற்காக விருத்தியடைகிறவன் இருக்கவேண்டியமுறையும் குறைவடைந்தவனுக்குரிய மரியாதையும் ஜீவனமும் உம்மால் தர்மப்படி எளியதும் உபதேசரூபமுமானகிரந்தத்தால் உபதேசிக்கப்பட்டன. ஓ! பாரதரே! அவ்விதமே ஜயிக்கவிருப்பமுள்ளவனுக்குரிய ஒழுக்கமும் உம்மால்

கூறப்பட்டது. புத்தியுள்ளவர்களிற் சிறந்தவரே! அவ்விதமே கூட்டங்களின் நடையையும் உம்மிடமிருந்து கேட்க விரும்புகிறேன். ஓ! பாரதரே! கூட்டங்கள் எவ்விதம் வளருகின்றன? எவ்விதம் பேதப்படாமலிருக்கின்றன? சத்துருக்களை எவ்விதம் ஜயிக்கவிரும்புகின்றன? ஸ்நேஹிதர்களை எவ்விதம் அடைகின்றன? பேதத்தைக்காரணமாகக்கொண்டு கூட்டங்களுக்கு நாசமுண்டாவதாகக் காணப்படுகிறது. பலபேர்களுடைய மந்திராலோசனை மறைவாயிருப்பது கஷ்டமென்பது என்னெண்ணம். சத்துருக்களைத்தபிக்கச்செய்யும் பாரதரே! இதை நான் முழுமையும் கேட்கவிரும்புகிறேன். அந்தக்கூட்டங்கள் எவ்விதம் வேற்றுமைப்படாமலிருக்குமோ அதையும் எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"பரதர்களில் மிகச்சிறந்த அரசனே! கூட்டங்களுக்கும் குலங்களுக்கும் அரசர்களுக்கும் அதிக ஆசையும் பொறுமையும் விரோதத்தைப் பெருகச் செய்பவைகளாகும். இவைகளில் ஓர் அரசன் லோபத்தை அடைகிறான். பிறகு, கூட்டமானது உடனே பொறுமையை அடைகிறது. பிறகு, பொறுமையுடன்கூடியவைகளும் ஒன்றுக்கொன்றனிடம் உண்டான ஒருவித எண்ணமுள்ளவைகளுமான அரசும் கூட்டமும், சாரர்கள் மந்திராலோசனை சேனை கொடாமலிருப்பது இவைகளாலும் ஸாமதானபேதங்களாலும் அழிவு செலவு பயமாகிய உபாயங்களாலும் ஒன்றை ஒன்று மேலாடிநிற்கும். அவைகளில் கூட்டங்கள் ஒரே அபிப்பிராயத்தில் நிலையுள்ளவைகளாகிக் கொடாமையால் பேதப்படும். பேதப்பட்டவைகளும் வேறுமனமுள்ளவைகளுமான கூட்டங்கள் யாவும் பயத்தால் சத்துருக்களின் வசத்தையடையும். பேதமுண்டாலல் கூட்டங்கள் நாசமடையும். பேதமடைந்தவைகள் பிறருக்கு எளிதில் ஜயிக்கத்தக்கனவாகும். ஆகையால், கூட்டங்கள் எப்பொழுதும் ஒரே அபிப்பிராயத்தைத் தொடர்ந்தனவாக முயற்சிசெய்யவேண்டும். ஒற்றுமையாலும் பலத்தாலும் பராக்ரமத்தாலும் பொருள்களும் அடையப்படும். ஒற்றுமையான நடையுள்ள அவைகளிடம் வெளியிலுள்ளவர்களும் ஸ்நேஹத்தைச் செய்வார்கள். அறிவில் முதிர்ந்தவர்கள் ஒருவரையொருவர் கேட்கவிருப்பமுள்ளவர்களாயும் வேறான எண்ணம் விலகினவர்களாயும் எல்லாவிதத்திலும் ஸுகமாய் வளருகிறார்களென்று கூட்டங்களைக் கொண்டாடுகிறார்கள். உத்தமமான கூட்டங்கள் மிகச்சிறந்ததர்மமுள்ள வ்யவகாரங்களைச் சாஸ்திரத்தால் உள்ளபடி கண்டுகொண்டு நிலைக்கச்செய்பவைகளாய் வளர்ச்சி

அடையும். மக்களையும் உடன்பிறந்தார்களையும் சிக்ஷிப்பவைகளும் அவர்களை எப்பொழுதும் அடக்குகிறவைகளும் அடக்கமுள்ளவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறவைகளும் உத்தமமுமான கூட்டங்கள் வளர்ச்சியடையும். ஓ! புஜபலமுள்ளவனே! சாரர்களையும் மந்திராலோசனைகளையும் நடத்துவதிலும் கோசங்களைப் பெருகச் செய்வதிலும் விடாமுயற்சியுள்ளவைகளான கூட்டங்கள் எல்லா விதத்திலும் வளர்ச்சியடையும். அரசனே! அறிவுள்ளவர்களும் பெரியஉத்ஸாஹமுள்ளவர்களும் வேலைகளில் உறுதியானபராக்ரமமுள்ளவர்களுமான சாரர்களைப் பூஜிப்பவைகளும் எப்பொழுதும் முயற்சியுள்ளவைகளுமான கூட்டங்கள் வளர்ச்சியடையும். திரவியமுள்ளவைகளும் சௌர்யமுள்ளவைகளும் ஆயுதமறிந்தவைகளும் சாஸ்திரங்களின் கரைகண்டவைகளுமான அந்தக் கூட்டங்கள் மிக்க மூடர்களை க்ரூரமான துன்பங்களிலிருந்து மீட்டுவைக்கும். பரதஸ்ரேஷ்டனே! கோபமும் வேற்றுமையும் பயமும் தண்டித்தலும் [1] இழுப்பதும் அடக்குதலும் கொலையும் உடனே கூட்டங்களைச் சத்துருவசப்படுத்தும். ஆகையால், அந்தக் கூட்டத்தலைவர்களை முக்கியமாகப் பூஜிக்கவேண்டும். ஓ! அரசனே! உலகடை பெரும்பாலும் அவர்களதீனமாயிருக்கிறது. சத்துருக்களை இழுப்பவனே! மந்திராலோசனையைக் காப்பாற்றுவதும் சாரரும் தலைமையாயிருக்கிறவர்களிடம் இருக்கவேண்டும். ஓ! பாரத! கூட்டங்கள் யாவும் மந்திராலோசனையைக் கேட்கத்தக்கவைகளல்ல. கூட்டத்தலைவர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டத்தின்ஹிதத்தை ரஹஸ்யமாகச் செய்யவேண்டும். அவ்விதமின்றி வேறுவிதமாயிருந்தால் கூட்டம் தனியாய்ப் பிரிந்து கலைவதுடன் அதன் பொருள்களும் நாசமடையும். அப்படியே துன்பங்களும் உண்டாகும். அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டுத் தம் சக்தியைச் செலுத்துவார்களானால் பண்டிதர்கள் சீக்கிரமாகவே அவர்களுக்கு முக்கியமாகச் சிக்ஷையைச் செய்யவேண்டும். குலங்களிலுண்டான கலகங்களை அக்குலத்தைச் சேர்ந்த பெரியோர்கள் உபேக்ஷை செய்தால் அவை அக்குலத்திற்கு நாசத்தைச்செய்யும்; அக்குலத்தை வேறுபடவும் செய்யும். உள்ளிலுள்ளபயத்தை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். வெளியிலுள்ளபயம் பலமானதன்று. ஓ! அரசனே! உள்ளிலுள்ளபயம் உடனே வேர்களை அறுக்கும். காரணமின்றி உண்டான கோபத்தாலோ அவிவேகத்தாலோ ஸ்வபாவத்திலுண்டான லோபத்தாலோ ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளமாட்டார்கள். அஃது அவமானத்தின் லக்ஷணமாகும். ஜாதியாலும்

1 'துன்பம்' என்றும் பொருளுண்டு.

குலத்தாலும் யாவரும் ஸமமாயிருப்பார்கள்; உத்யோகத்தாலும் புத்தியாலும் ரூபத்தாலும் திரவியத்தாலும் ஸமமாயிருக்கமாட்டார்கள். பேதப்படுத்துவதாலும் கொடுப்பதாலும் கூட்டங்களைச் சத்துருக்கள் தம் வசமாக்கிக்கொள்ளுவார்கள். ஆகையால், ஒற்றுமை ஒன்றையே கூட்டங்களுக்குப் பெரிய ரக்ஷணமாகச் சொல்லுகிறார்கள்" என்று சொன்னர்.

நூற்றெட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், மாதா பிதா குரு முதலியோரின் சிறப்பைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! இந்தத் தர்மவழியானது பெரிதும் பலகிளைகளுள்ளதுமாயிருக்கிறது. இதிலுள்ள தர்மங்களுள் எது அவஸ்யம் அனுஷ்டிக்கத்தக்கதென்பது உங்களுடைய அபிப்பிராயம்? எந்தக்காரியம் எல்லாப் பிராணிகளுக்கும் மிகச்சிறந்ததென்பது உங்களுடைய அபிப்பிராயம்? நான் இங்கும் இறந்தபின்னும் எப்படி உத்தமமானதர்மத்தை அடைவேன்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"தாய்தந்தையர்களையும் ஆசார்யர்களையும் பூஜிப்பது மிகமுக்கியமென்பது என்கருத்து. இதைச்செய்யும் மனிதன் உலகங்களையும் பெரிய கீர்த்தியையும்அடைகிறான். அப்பா! யுதிஷ்டிர! நன்றாகப் பூஜிக்கப்படும் இவர்கள் எந்த வேலையைக் கட்டளையிடுகிறார்களோ அது தர்மமாயிருந்தாலும் தர்மத்திற்கு விரோதமாயிருந்தாலும் அதைச் செய்யவேண்டும். அவர்களுடைய ஸம்மதி பெறுமல் வேறுதர்மத்தைச் செய்யக்கூடாது. அவர்கள் எதை ஸம்மதிக்கிறார்களோ அது தர்மமென்பது திண்ணம். அவர்களே மூன்று உலகங்கள்; அவர்களே மூன்று ஆச்ரமங்கள்; அவர்களே மூன்றுவேதங்கள்; அவர்களே மூன்று அக்நிகள். தந்தை கார்ஹபத்யாக்நியாகவும், தாய் தக்ஷிணாக்நியாகவும், குரு ஆஹவநீயாக்நியாகவும் கூறப்படுகிறார்கள். அந்த மூன்று அக்நியும் மிகப்பெரியவை. அம்மூன்றில் அஜாக்ரதையில்லாமலிருந்தால் மூன்று உலகங்களையும் ஜயிப்பாய். தந்தையின் பூஜையால் இவ்வுலகத்தையும் தாயின் பூஜையால் மேலுலகத்தையும் குருவின் பூஜையால் ப்ரம்மலோகத்தையும் உறுதியாக ஜயிப்பாய். ஓ! பாரத! அவர்களிடம் நன்றாகஇரு. மூன்று உலகங்களிலும் கீர்த்தி பெறுவாய். உனக்கு க்ஷேமமும் மிகப்பெரிய பயனுள்ளதர்மமும் உண்டு. நீ அவர்களுக்கு மேலாயிராதே; அவர்களைவிட்டுப் புறி

யாதே; அவர்களைத் தூஷியாதே; எப்பொழுதும் பணிவிடையையே செய்; அதுதான் உத்தமமானபுண்ணியம். ஓ! ஜனதிபனே! நீ கீர்த்தியையும் புண்ணியத்தையும் யசஸையும் நல்ல உலகங்களையும் அடைவாய். எவன் அந்த மூன்று பேர்களையும் ஆதரிக்கிறானே அவனல் எல்லா உலகங்களும் ஆதரிக்கப்பட்டனவாகும். அவர்களை ஆதரியாதமனிதனுடைய செய்கைகள் யாவும் பயனற்றனவாகும். ஓ! பாரத! அந்த மூன்றுகுருக்களையும் எவன் எப்பொழுதுமே பூஜியாமலிருக்கிறானே அவனுக்கு இவ்வுலகமும் மேலுலகமும் கீர்த்தியுமில்லை. அவனுடையகீர்த்தியானது இவ்வுலகிலும் மேலுலகிலும் விளங்காது. பரலோகத்திலுள்ளதாகக் கூறப்படும் மற்றுமுள்ள க்ஷேமமும் கிடையாது. யுதிஷ்டிர! என்னல்விடப்பட்டதும் நான்செய்ததுமான எல்லாக்காரியமும் அவர்களுக்காகவே ஆகையால், அஃது எனக்கு நூறுமடங்கும் ஆயிரமடங்குமாகவே ஆயிற்று. எனக்கு மூன்று உலகங்களும் நன்றாக ப்ரகாசிக்கின்றன. நல்ல [1] ஆசாரியர் வேதமோதிய பத்துப்பிராம்மணர்களுக்கு மேலானவர். [2] உபாத்தியாயர் பத்து ஆசாரியருக்கு மேலானவர். தகப்பன் பத்து உபாத்தியாயர்களுக்கு மேலானவன். தாய் ஒருத்தியோ தகப்பனிலும் பதின்மடங்கு மேலானவளும் கௌரவத்தால் பூமிமுழுமையும் கீழாகச் செய்கிறவளுமாவாள். அன்னைக்குச்சரியான குருவில்லை. பாரத! குருவானவர் தந்தைதாய்களைவிட மிகமேலானவரென்பது என் எண்ணம் ஏனெனில், தாய்தந்தை இருவரும் பிறப்பில்மட்டும் உபயோகப்படுகிறார்கள். இந்தத் தந்தையும் தாயும் சரீரத்தை உண்டுபண்ணுகிறார்கள் ஆசாரியரின் உபதேசத்தாலுண்டாகும் பிறவியானது கிழத்தனமும் மரணமுமற்றதும் சிறந்ததுமாகும். தாயும் தந்தையும் ஆசாரியரும் [3] அபகாரஞ்செய்தவர்களாலும் அடிக்கத்தக்கவர்களல்லர். அவர்களை அடியாமலிருப்பதால் அவன் குற்றமுள்ளவனுகமாட்டான். அவர்களும் அவனைக் குற்றமுள்ளவனுகச் செய்யமாட்டார்கள். அந்தத் தர்மத்தில் முயற்சியுள்ளவர்களை அனுக்ரஹிக்கத்தக்கவர்களாக ரிஷிகளும் தேவர்களும் அறிகிறார்கள். எவர் ஓதுவித்தலென்னும் உண்மையான கர்மத்தால் வேதத்தை உபதேசஞ்செய்து அழிவற்ற பதத்தை அளித்து அனுக்ரஹஞ்செய்கிறாரோ அவரைத் தகப்பனென்றும் தாயென்றும் அறிந்துகொள். அவருடைய நன்றியையறிந்துகொண்டு அவருக்கு த்ரோஹஞ்செய்யாமலிருக்கவேண்டும். எவர்

---

1 வேதத்தின்பொருளை உபதேசிப்பவர். 2 வேதத்தை ஓதுவிப்பவர்.
3 இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

கள் வித்தையைக்கற்றபின் ஆசாரியரிடம் ஆதரவில்லாமலிருக்கி றார்களோ அவர்கள் மனத்தாலும் கர்மத்தாலும் [1] நாசமடை வார்கள். அவர்களின் பாபம் [2] ப்ரூணஹத்தியைவிட மேலானது. உலகில் அவர்களைவிட வேறுபாபியில்லை. அவர்கள் எவ்விதம் குருக்களால் அனுக்ரஹிக்கத்தக்கவர்களோ அவ்விதம் அவர்க ளால் குருக்கள் ஆராதிக்கத்தக்கவர்கள். ஆகையால், புராதன மான தர்மத்தைவிரும்பியவன் முயற்சியுடன் குருக்களைப் பூஜிக்க வும் அவர்களுக்குக்கொடுக்கவும் அவர்களை ஆராதிக்கவும் வேண் டும். எந்தக்கர்மத்தால் பிதிருக்கள் பிரீதியடைகிறார்களோ அந் தக்கர்மத்தால் ப்ரம்மதேவர் பிரீதியடைகிறார். மாதாவின் பிரீ திக்காகச்செய்யும் கர்மத்தால் பூமிதேவி பூஜிக்கப்படுகிறாள். உபாத்தியாயரின் பிரீதியைச்செய்யும்கர்மத்தால் பரமாத்மா பூஜிக்கப்படுகிறார். ஆகையால், குருவானவர் தாய்தந்தைகளைவிட மேலாகப் பூஜிக்கதக்கவர். குருக்கள் பூஜிக்கப்பட்டால் பிதிருக்க ளுடன் ரிஷிகளும் தேவர்களும் பிரீதியடைகிறார்கள். ஆகையால், குருவானவர் மிகவும் பூஜிக்கத்தக்கவர். எவ்விததடையாலும் குருவை அவமதிக்கக்கூடாது. குரு எவ்விதமோ தாயுந்தகப்ப னும் அவ்விதமில்லையென்பதில்லை. அம்மூவர்களையும் அவமதிக் கக்கூடாது. அவர்கள்செய்ததைத் தூஷிக்கக்கூடாது. ரிஷிக ளும் தேவர்களும் குருக்களின் பூஜையையே அறிவிக்கிறார்கள். உபாத்தியாயரையும் தகப்பனையும் தாயையும் மனத்தாலாவது செய்கையாலாவது எவர்கள் விரோதிக்கிறார்களோ அவர்களின் பாபம் ப்ரூணஹத்தியைவிட மேலானது. அவர்களைக்காட்டிலும் உலகில் வேறுபாபியில்லை. தம்மிடம்பிறந்தவனும் ரக்ஷிக்கப்பட்ட வனுமான எந்தப்புத்திரன் தன்னை ரக்ஷித்த தாயையும் தந்தை யையும் ரக்ஷியாமலிருக்கிறானோ அவனுடையபாபம் ப்ரூண ஹத்தியைவிட மேலானது. உலகில் அவனைவிட வேறுபாபியில்லை. நண்பருக்கு த்ரோஹஞ்செய்தவன், நன்றிகொன்றவன், ஸ்திரீ யைக்கொன்றவன், கோட்சொல்லுகிறவன் இந்நான்குபேர்களு டைய பாபத்திற்கும் பிராயச்சித்தத்தை நாம் கேட்டதில்லை. இவ் வுலகில் மனிதன் செய்யவேண்டியவெல்லாம் மனுவினுபதேசத் தில் காணப்படுகின்றது. இது சிறந்தது. இதைவிட மேலானது வேறில்லை. எல்லாத்தர்மங்களின் ஸாரங்களையும் ஒன்றுசேர்த்து இது கூறப்பட்டது" என்றுசொன்னார்.

---

1 வேறுபாடம்.

2 இதன் 43-வது, 180-வது பக்கங்களின் குறிப்புக்களில் காண்க

நூற்றொன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு மெய்பொய்களைப்பற்றிக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! தர்மத்திலிருக்க விருப்பமுள்ள மனிதன் எவ்விதமிருக்கவேண்டும்? பரதர்களிற் சிறந்தவரே! உண்மையை அறியவிருப்பமுள்ள என்பொருட்டு உபதேசிக்க வேண்டும். மெய்பொய் இரண்டும் உலகங்களைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. அரசரே! தர்மத்திலுறுதியுள்ள மனிதன் அவைகளில் எதைச் செய்யவேண்டும்? ஸத்யமென்பது எது? அஸத்யமென்பது எது? ஸநாதனமும் தர்மம்விட்டு விலகாததுமாயிருப்பது எது? எந்த ஸமயத்தில் ஸத்யத்தைச் சொல்லவேண்டும்? எந்த ஸமயத்தில் பொய்யைச் சொல்லவேண்டும்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஸத்யத்தைச் சொல்லுவது நன்று. ஸத்யத்தைவிட மேலானது இல்லை. ஓ! பாரத! உலகத்தில் எது அறிய மிகஅரியதோ அதனை உனக்கு உபதேசிக்கிறேன். எந்த விஷயத்தில் உண்மை பொய் போலாகுமோ அந்த விஷயத்தில் உண்மை சொல்லத்தகாததாகும். எந்த விஷயத்தில் பொய்யும் உண்மைபோலாகுமோ அந்த விஷயத்தில் பொய் சொல்லத்தக்கதாகும். எவன் எந்த விஷயத்தில் உண்மையை நிச்சயிக்கவில்லையோ அப்படிப்பட்ட [1] மூடன் அந்த விஷயத்தில் கொல்லப்படுவன். மெய்பொய்களை நிச்சயஞ்செய்துகொண்டபின் தர்மமறிந்தவனாகிறான். கெட்டவனும் புத்தியில்லாதவனும் மிகக் குரூரனுமான புருஷனும் [2] குருட்டு மிருகத்தைக் கொலைசெய்ததால் பலாகனென்ற வேடன் போல மிகப்பெரிய புண்ணியத்தையடைவான். தருமத்தில் விருப்பமுள்ளவனுயினும் (ஸத்யவாதியன்னும்) மூடன் தர்மந்தெரிந்தவனல்லன். என்ன ஆச்சர்யம்! [3] கங்கைக்கரையிலுள்ள கோட்டானைப் போல (க்கொலைசெய்கிறவனும்) மிகப்பெரிய புண்ணியத்தை அடைவான். நீ கேட்ட விஷயத்தில் தர்மத்தைத் தெரிந்துகொள்வது மிகக் கடினம். இந்தக்கேள்வி அத்தகையதாக இருக்கிறது. இவ்விஷயத்தில் ஊகத்தால் நிர்ணயஞ்செய்வதும் கடினம். இதில் எவ்விதம் நிச்சயம் அடைவான்? பிராணிகளின் க்ஷேமமென்னும் பயனுக்காகத் தருமத்தின் உபதேசம் செய்யப்பட்டது. எது க்ஷேமத்துடன் கூடியதாயிருக்கிறதோ அது தர்மமென்பது நிச்சயம். குருக்களிற் சிறந்தவனே!

---

1 வேறுபாடம். 2 - 3 கர்ணபர்வம், அத். 72 - பார்க்க.

ஸ்ரீ மஹாபாரதம்.

கொல்லாமை, ஸத்யம், கோபமில்லாமை, தவம், தானம், அடக்கம், அறிவு, அஸூயையில்லாமை, பிறரைப்பழிப்பதில் ஸாமர்த்தியமில்லாமை, ஈர்ஷ்யையில்லாமை, சீலம் இவைகள் தர்மமென்று தேவர்களுக்குத் தேவரும் சிறந்த பதத்திலிருப்பவருமான பிரம்ம தேவரால்சொல்லப்பட்டன. இதுவும் ஸநாதனமான தருமந்தான். அரசனே ! இந்தத் தருமத்திலிருக்கும் மனிதன் சுகமங்களைப் பார்க்கிறான். வேதத்தில் கூறப்படும் கொலையும் உண்மையில் ஹிம்ஸையில்லாததான தர்மமாகும். உலகத்தைத் [1] தரிப்பதால் தர்மமென்று சொல்லுகிறார்கள். ப்ரஜைகள் தர்மத்தால் தரிக்கப்படுகின்றன. எது தரிக்கும் திறமையுடன் கூடியதோ அது தர்மமென்பது நிச்சயம். பிராணிகளுக்குத் துன்பமில்லாமை என்னும் பயனுக்காகத் தர்மோபதேசம் செய்யப்பட்டது. எது துன்பமில்லாமையுடன் கூடியதாயிருக்கிறதோ அது தர்மமென்பது நிச்சயம். வேதத்தில் கூறியதே தர்மமென்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். மற்றஜனங்கள் வேறு ப்ரமாணங்களையும் சொல்லுகிறார்கள். அதையும் நாங்கள் குற்றமாகச்கொள்ளவில்லை. முழுமையும் விதிக்கப்படுவது இல்லை. எவர்கள் அந்யாயமாக அபகரிக்க விருப்பமுள்ளவர்களாய் ஓரிடத்திலுள்ள பொருளை விரும்புகிறார்களோ அவர்களுக்கு அந்த இடத்தைச் சொல்லக் கூடாது. அது தருமமென்பது நிச்சயம். சொல்லாமலிருந்து விட நேருமானால் எவ்விதத்திலும் சொல்லக்கூடாது. அவஸ்யம் சொல்லவேண்டுமானாலும் சொல்லாமலிருப்பதில் அவர்கள் ஸந்தேகப்படுவார்களானாலும் [2] அப்பொழுது ஸத்யம் சொல்வதை விடச் சபதஞ்செய்தாவது பொய்யைச் சொல்லிப் பாபிகளின் சேர்க்கையிலிருந்து விடுதலைஅடைவது மிகச்சிறந்ததென்று கூறப்படுகிறது. சக்தியிருக்குமானால் எவ்விதத்திலும் பாபிகளின் பொருட்டுப் பொருளைக் கொடுக்கக்கூடாது. ஏனெனில், பாபிகளுக்கு அளித்தபொருள் கொடுப்பவனுக்கும் துன்பத்தை உண்டுபண்ணும். [3] தனம் பெற்றவனுடைய சரீரத்தைத் துன்பப்படுத்திப் பொருளை வாங்க விருப்பமுள்ளவ

---

1 போஷிப்பதால்.

2 இங்கு அதிக பாடமான இரண்டரைச்லோகம் விடப்பட்டன.

3 லாபத்தை இருவரும் அடையவேண்டுமென்ற ஏற்பாட்டுடன் ஒருவனிடமிருந்து பொருளை வாங்கி மற்றொருவன் வேலைசெய்யும் விஷயத்தில் அப்பொருளைத் திருடர்கள் அபகரித்தால் பொருள்கொடுத்தவன் பெற்றுக்கொண்டவனைத் துன்பப்படுத்தியாவது அப்பொருளை வாங்க விரும்புவானுகில் ஸாக்ஷிகள் கடன்வாங்கினவனிடம் பொருளிருப்பதாகச்சொல்லுவது பொய்யாகவே முடியும்.

னுக்கு உண்மையை அறிவிக்க வேண்டி வந்த ஸாக்ஷிகள் சொல்லத்தக்க வசனத்தைச் சொல்லாமல் அவ்விஷயத்தில் 'இவன் பொருளை வைத்திருக்கிறான்' என்று சொன்னார்களாகில் அவர்கள் யாவரும் பொய்சொன்னவர்களாகிறார்கள். உயிருக்கு அபாயம் நேருங்காலத்திலும் விவாகத்திலும் தர்மப்படிப் பிறர் பொருளை ரக்ஷிக்கவேண்டியும் பொய் சொல்லத்தக்கதாகும். தருமத்தைவிரும்பும் மனிதன் பிறர்பொருள் ஹித்திக்கவேண்டிக் [1] கீழானவேஷத்தையும் வஹிக்கலாம். பொருளைச் [2] சம்பாதிப்பவன் (திருடர்களால்) பலாத்காரமாக அபகரிக்கப்பட்டவனுக இருந்தால் (பொருளுடையவனுக்குப்) பிரதிஜ்ஞை செய்யப்பட்ட பொருளைக் கொடுக்கவேண்டியதில்லை. (அவ்விதமின்றித்) தருமப்படி ஜீவிக்கும் எவன் தர்மமான உடன்பாட்டிலிருந்து விலகுகிறானே அவ்வழியை அடைந்த அவனைத் தண்டத்தாலேயே அடிக்கவேண்டும். எப்போதும் தர்மங்களிலிருந்து விலகினவனும் அஸுரர்களுக்குரிய கபடத்தை அடைந்தவனுமான துஷ்டன் ஸ்வதர்மத்தைவிட்டு அக்கபடவழியை அடுத்துப் பிழைக்க விரும்புவானுகில் கபடமாய்ப்பிழைக்கும் (அந்தப்) பாபியை எல்லா உபாயங்களாலும் அடக்கவேண்டும். இவ்வுலகில் பாபிகளனைவர்களுக்கும் பொருள்ஒன்றுதான் சிறந்ததென்பது நிச்சயம். கபடவழியால் நரகத்தையடையும் அந்த மனிதர்களுடன் விவாஹமும் போஜனமும் செய்யக்கூடாது. அவர்கள் தேவர்களையும் மனுஷ்யர்களையும் விட்டுவிலகினவர்களும் யாகமில்லாதவர்களும் தவமில்லாதவர்களும் பிரேதங்கள் போன்றவர்களுமாகிறார்கள். அவர்களுடன் சேரவேண்டாம். [3] பொருளுக்குநாசம்வந்தால் அவர்கள் உயிரைவிடுவதென்ற மிகப்பெரியதுக்கத்தையும் செய்துகொள்ளுவார்கள். 'இந்தத்தர்மத்தை நீ பிரியமாகச்செய்' என்று முயற்சியுடன் உபதேசிக்கத்தகுதியுள்ளவன் பாபிகளுள் ஒருவனுமில்லை. எல்லாம் தர்மமென்றே அவர்களின் நிச்சயம். அவ்விதமான மனிதனை எவன் அடிக்கிறானே அவன் பாபத்தை அடையமாட்டான். தன் கர்மத்தால் அடிக்கப்பட்டபாவியை அவன் அடிக்கிறான். (கர்மத்தால்) அடிக்கப்பட்டுத்தான் அந்தப் பாபி அழபடுகிறான். கெட்டபுத்தியுள்ள அந்தப் பாபிகளை அடிக்கவேண்டுமென்று

---

1 வேறுபாடம்.

2 வேறுபாடம். 'லாபஸந்தர்ப்பங்களில் ஸமமென்று உடன்பாடிருந்தால், வாங்கிக்கொண்டவன் கொடுத்தவனுக்குப் பாதியைக் கொடுக்கவேண்டும்; கொடுக்கச் சக்தியில்லாவிட்டால் வாங்கினவன் கொடுத்தவனுக்கு அடிமையாக இருக்கவேண்டும்' என்பது பழைய உரை.

3 வேறுபாடம்.

ஸங்கல்பஞ்செய்கிறவன் புண்யமடைகிறான். கபடமாகப் பிழைப்பவர்கள் காகத்தையும் நாயையும் போன்றவர்கள்தாம். அவர்கள் சரீரத்தைவிட்டபின் இந்தப்பிறவிகளில் பிறக்கிறார்கள். எவனிடத்தில் எந்தமனிதன் எப்படியிருக்கிறானே அவனும் அந்த மனிதனிடத்தில் அப்படி இருக்கவேண்டும். அதுதான் தர்மம். கபடநடையுள்ளவனுக்குக் கபடமாகத் தீங்குசெய்யவேண்டும். நன்னடையுள்ளவனை நல்வழிகொண்டே அடையவேண்டும்" என்று சொன்னர்.

நூற்றுப்பத்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், துன்பங்களைத்தாண்டத்ததந்த உபாயங்களைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! பிராணிகள் வெவ்வேறான அந்த அந்த விஷயங்களால் துன்பப்படும்போது எந்த உபாயத்தால் கடினமான துன்பங்களையும் தாண்டக்கூடுமோ அந்த உபாயத்தை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

'எந்த த்விஜாதிகள் மிகவும் அடங்கிய மனமுள்ளவர்களாய் விதிப்படியுள்ள ஆஸ்ரமங்களில் சாஸ்திரத்தில்சொல்லியபடி இருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் தர்மத்தை டம்பமாகச் செய்யவில்லையோ எவர்களின் ஜீவனம் மிக அடங்கியதோ எவர்கள் இந்திரியங்களையும் அடக்குகிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் நிந்திக்கப்பட்டாலும் மறுமொழி சொல்லாதவர்களும் துன்பஞ் செய்யப்பட்டாலும் துன்பஞ்செய்யாதவர்களும் கொடுப்பவர்களும் யாசியாதவர்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் எப்பொழுதும் அதிதிகளை வஸிக்கச் செய்கிறவர்களும் எப்பொழுதும் அஸூயையற்றவர்களும் எப்போதும் வேதமோதும் ஸ்வபாவமுள்ளவர்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் தர்மத்தை அறிந்து தாய்தந்தையரின் நடையை அனுஸரித்திருக்கிறவர்களும் பகலில் தூக்கத்தை விட்டவர்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் மனத்தாலும் வாக்காலும் செய்கையாலும் பாபத்தைச் செய்யாதவர்களும் பிராணி

களைத் தண்டியாதவர்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எந்த அரசர்கள் ரஜோகுணத்துடன்கூடியவர்களாய் லோபத்தால் பிறர்பொருள்களை அபகரியாமல் தேசங்களை ரக்ஷிக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள், நியாயமாக அடைந்த தம்தாரங்களிடம் ருதுகாலந்தோறும் சேருகிறவர்களும் அக்னிஹோத்திரத்தைப் பரிதாகக்கொண்டவர்களும் ஸாதுக்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எந்தச்சூரர்கள் ப்ராணத்தாலுண்டாகும் பயத்தைத்தள்ளிவிட்டு யுத்தங்களில் தருமப்படி ஜயத்தை விரும்புகிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். இவ்வுலகில் எவர்கள் உயிரைவிடும்படி நேர்ந்தாலும் ஸத்தியங்களைச்சொல்லுகிறவர்களாயும் ப்ராணிகளுக்கு நம்பத்தக்கவர்களாயுமிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்களின்செய்கைகள் நிந்திக்கத்தகாதவைகளும் சொற்கள் உண்மையும் ப்ரியமும் பொருள்கள் ஸாதுக்களுக்கு உபயோகப்படுகின்றவைகளுமாயிருக்கின்றனவோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எந்தப் ப்ராம்மணர்கள் அத்தியயனஞ்செய்யத்தகாதநாட்களில் அத்தியயனஞ் செய்கிறதேயில்லையோ தவத்தில்நிலைபெற்றவர்களும் நல்ல தவமுள்ளவர்களுமான அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் இளமைப்பருவத்தில் ப்ரம்மசாரிகளாயிருந்துகொண்டு தவத்தைச்செய்கிறவர்களும் ஸ்த்ரீகளிலும் வேதங்களிலும் வ்ரதங்களைச்செய்து நிறைவேற்றினவர்களுமாக இருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் ரஜோகுணமும் தமோகுணமும் பிக அடங்கியவர்களும் ஸத்வகுணத்தில் நிலைபெற்றவர்களுமாயிருக்கிறார்களோ பரிசுத்தசாலிகளான அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்களிடம் ஒருவரும் பயமடைகிறதில்லையோ எவர்களுக்கு ஒருவரிடத்திலும் பயமில்லையோ எவர்களுக்கு உலகம் தம்மைப்போலிக்கிறதோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். புருஷர்களிற்சிறந்த எந்த ஸாதுக்கள் பிறர் ஸம்பத்தைக்கண்டு தாபப்படாதவர்களும் 1 இகழ்ச்சியான ஆகாரத்திலிருந்து விலகினவர்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் எல்லாத்தேவர்களையும் நமஸ்கரிப்பவர்களும் எல்லாத்

1 'போகத்திலிருந்து' என்பது வேறுபாடம்.

தர்மங்களையும் கேட்பவர்களும் ஸ்ரத்தையுள்ளவர்களும் அடக்க முள்ளவர்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங் களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் பெருமையைவிரும்பாதவர் களும் பிறரைப்பெருமைப்படுத்துகிறவர்களும் பெருமையுள்ளவர் களைப் பூஜிக்கிறவர்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் பிரஜைகளைவிரும் பிக்கொண்டு மிகவுஞ்சுத்தமான மனத்துடன் ஒவ்வொருதிதியிலும் ஸ்ராத்தங்களைச்செய்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங் களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் கோபத்தை மிகவும் அடக்கு கிறவர்களும் கோபமுள்ளவர்களை மிக்கசாந்தர்களாகச்செய்கிற வர்களும் 1 வேலைக்காரர்களிடத்திலும் கோபமில்லாதவர்களுமா யிருக்கிறார்களோ அவர்கள் கடினமானே துன்பங்களையும் தாண்டு கிறார்கள். எந்தமனிதர்கள் பிறந்ததுமுதல் மதுவையும் மாம் ஸத்தையும் பெண்டிர்களையும் கள்ளையும் எப்பொழுதும் விலக்து கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார் கள். எவர்கள் ஜீவிப்பதற்காகப் போஜனமும் ஸந்ததியுண்டாவ தற்காக ஸ்திரீகளுடன்சேர்க்கையும் உண்மையைச் சொல்லவேண் டியதற்காக வாக்குமுள்ளவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் எல்லாப் பிராணிகளுக்கும் ஈச்வரரும் உலகத்தின் உற்பத்திலயங்களுக் குக் காரணரும் தேவருமான ஸ்ரீ நாராயணரின் பக்தர்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். அர சனே! தாமரைமலர்போலச் சிவந்தகண்ணுள்ளவரும் பீதாம்பர தரரும் நீண்டகையுள்ளவரும் உனக்குஸஹோதரத்தும் உடன் பிறந்தவரும் மித்திரரும் ஸம்பந்தியும் அச்சுதரும் விரும்பிஞல் இவ்வுலகங்கள் யாவற்றையும் ஒருதோலைப்போலச் சுருட்டச்சக்தி யுள்ளவரும் பிரபுவும் சிந்திக்கமுடியாத ஸ்வரூபமுள்ளவரும் புரு ஷோத்தமருமான எந்தக்கோவிந்தர் எப்பொழுதும் உனக்குப் பிரியத்தையும் நன்மையையும் செய்துகொண்டிருக்கிறாரோ அந் தப் புருஷோத்தமர் யதுக்களில் மிகச்சிறந்தவரும் வைகுண்ட வாஸியுமான புருஷஸ்ரேஷ்டராகிறார். பக்தர்களின் துக்கத்தை அபஹரிக்கும் இந்த ஸ்ரீநாராயணரை இவ்வுலகில் எவர்கள் பக்தி யுடன் ஆஸ்ரயிக்கிறார்களோ அவர்கள் கடினமான துன்பங்களையும் தாண்டுகிறார்கள். இவ்விஷயத்தில் விசாரிக்கவேண்டியதில்லை. பா ரத! எவர்கள் தாமரையிதழ்போன்றகண்ணுள்ள இந்த ஸ்ரீ கிரு ஷ்ணனிடம் எல்லா அபிப்பிராயத்துடனும் தம்கர்மங்களை அர்ப்ப

1 'பிராணிகளிடம்' என்பது வேறுபாடம்.

ணஞ்செய்கிறார்களோ அவர்கள் கடினமான தண்பங்களையும்தாண்டுகிறார்கள். எவர்கள் உலகங்களை ரக்ஷிக்கவேண்டி அதிதியிடம் கச்யபரின் புத்திரனுதித்த தேவனை இந்திரனை நமஸ்கரிக்கிறார்களோ அவர்கள் கடினமான தண்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் உலகங்களைப் படைத்தவரும் ஸாதுக்களுக்குப் பதியும் யாகங்களால் பூஜிக்கத்தக்கவருமான பிரம்மதேவரைப் பூஜிக்கிறார்களோ அவர்கள் கடினமான தண்பங்களையும் தாண்டுகிறார்கள். இந்திரனும் விஷ்ணுவும் ருத்திரரும் உலகங்களுக்குப் பிதாமஹரான பிரம்மதேவரும் தேவர்களின் தேவரான எந்தமஹேச்வரரைப் பலவித ஸ்தோத்திரங்களால் துதிக்கிறார்களோ, அவரை எவர்கள் எப்பொழுதும் பூஜிக்கிறார்களோ அவர்கள் கடினமான தண்பங்களையும் தாண்டுகிறார்கள். எவர்கள் கடினமான தண்பத்தைத்தாண்டத்தக்க இவ்வுபாய உபதேசத்தைப் படிக்கிறார்களோ, எவர்கள் கேட்கிறார்களோ, பிராம்மணர்களின் பொருட்டு எவர்கள் சொல்லுகிறார்களோ அவர்கள் கடினமான தண்பங்களையும் தாண்டுகிறார்கள். தோஷமில்லாதவனே! மனிதன் இவ்வுலகிலும் மேலுலகிலும் பெரிய தண்பங்களைத் தாண்டுவதற்காகச் செய்யத்தக்க காரியங்களில் சிறிது என்னால் உனக்கு இவ்விதம் உபதேசிக்கப்பட்டது" என்று சொன்னர்.

நூற்றுப்பதினேராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், மனிதர்களைத் துஷ்டர்களென்றும் ஸாதுக்களென்றும் அறிவதற்குப் பரீக்ஷை ஸாதனமென்பதை விளக்கப் புலிநரிகளைப் பற்றிய கதையைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "தந்தையே! அஸாதுக்கள் ஸாதுக்களின் உருவமுள்ளவர்களாகவும் ஸாதுக்கள் அஸாதுக்களின் உருவமுள்ளவர்களாகவும் காணப்படுகிறார்கள். அவ்விதப் புருஷர்களை நாங்கள் எவ்விதம் அறிவோம்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"ஓ! யுதிஷ்டிர! இவ்விஷயத்தில் புலிக்கும் நரிக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். அதைத் தெரிந்துகொள். முன்காலத்தில் செல்வம் நிறைந்த புரிகையென்னும் பட்டணத்தில் பிறர்களுக்குத் தண்பஞ்செய்தலே பெரிதாகக்கொண்டவனும் சூரனானும் புருஷர்களில் இழிவான வனுமான பௌரிகனென்னும் அரசனிருந்தான். அவன் ஆயுள்

முடிந்ததும் விரும்பத்தகாத கதியை அடைந்தான். முன்கர்மத்தால் தூஷிக்கப்பட்ட அவ்வரசன் நரியின் பிறப்பையடைந்தான். அந்த நரி தன் முன்பிறப்பை நினைத்து மிக்க வெறுப்பை அடைந்தது அது பிறரால்கொடுக்கப்பட்ட மாம்ஸங்களையும் உண்ணுகிறதில்லை. எல்லாப் பிராணிகளிடத்திலும் ஹிம்ஸை செய்யாததும் ஸத்தியமான வாக்குள்ளதும் மிக்க உறுதியான விரதமுள்ளது மாய்ச் சரியானகாலத்தில் உதிர்ந்த கனிகளால் ஆகாரஞ் செய்துகொண்டுவந்தது. அஃது ஒருஸமயத்தில் இலைகளை உணவாகக் கொண்டதும் ஒருஸமயத்தில் உறுதியான விரதமுள்ளதும் ஒருஸமயத்தில் தண்ணீரால்ஜீவிப்பதுமாய் ஒருவரிடமும் வசப்படாமலிருந்தது. அந்த நரிக்கு, பிறந்தபூமியிலுள்ள ஸ்நேஹத்தால் மயானத்தில் வஸிப்பது ஸம்மதமாக இருந்தது. அது வேறிடத்தைப் பிரியமாகக்கொள்ளவில்லை. அந்தஜாதியிலுள்ள மற்றவையாவும் அதனுடைய சுத்தியைப் பொறுதவைகளாய் மிக வணக்கமான வசனங்களால் அந்தப்புத்தியை வேறுபடுத்தத் தொடங்கின. 'பயங்கரமான மயானத்தில் வஸித்துக்கொண்டு பரிசுத்தியை அடைய விரும்புகிறாய். இஃது உனக்குவிபரீதமான புத்தி. நீ மாம்ஸத்தை ஆகாரமாகக் கொண்டவனன்றோ? ஆகையால், எங்களுடன் ஸரியாகஇரு. புஜிக்கவேண்டியதை நாங்கள் கொடுக்கிறோம். சுத்தியென்பதைத் தள்ளிவிட்டுச் சாப்பிடு. எது புஜிக்கப்பட்டதோ அதுதான் உனக்குள்ளது' என்றுசொல்லின. இவ்விதம் சொல்லிய அவைகளின் வசனத்தைக்கேட்டு, அது மனத்தில் அடக்கத்துடன் கடுமையில்லாதவைகளும் இனியவைகளும் வணக்கமுள்ளவைகளும் யுக்தியுள்ளவைகளுமான வசனங்களால் மறுமொழி சொல்லத் தொடங்கிற்று. 'பிறப்பானது எனக்குப்ரமாணமன்று. குலமானது சீலத்தால் ஆக்கப்படுகிறது. எந்தக்கர்மத்தால் புகழானது பெருகுமோ அதையே நான் விரும்புகிறேன். மயானத்தில் எனக்கு வாஸமிருந்தாலும் என்னுடைய [1]ஸமாதியைப்பார்க்கவேண்டும். வஸிக்குமிடமானது தர்மத்திற்குக் காரணமன்று. ஆத்மாவானது கர்மங்களைப் பயன்படச்செய்யும். ஆஸ்ரமத்தில் ஒருவன் அந்தணனைக் கொல்லுகிறான். ஆஸ்ரமமில்லாவிடத்தில் ஒருவன் தானஞ்செய்கிறான். அக்கொலை பாதகமாகாதோ? அந்தத் தானம் பயனற்றதாய் விடுமோ? நீங்கள் உங்களுக்கு வேண்டிய விஷயத்தில் லோபத்தால் ஆகாரம் ஒன்றில் மாத்திரம் ஆசையுள்ளவர்களாயிருக்கிறீர்கள். விவேகமில்லாதவர்கள் முடிவிலுண்டாகும் தோஷங்களைப் பார்க்கிறதில்லை ஆகையால், ஸந்தோஷமில்லாமல் செய்யப்படுவதும் நிந்திக்கத்

1 புத்தியின் நிலை.

தக்கதும் தர்மக்குறைவால் தூஷிக்கப்பட்டதும் இவ்வுலகிலும் மேலுலகிலும்துன்பமுள்ளதுமானஜீவனத்தில்நான் பிரியமுள்ளவனல்லன்' என்று சொல்லிற்று. ப்ரஹ்மித்தமான பராக்ரமமுள்ள ஒரு புலியானது அந்தநரியைப் பரிசுத்தனை பண்டிதனை எண்ணித் தனக்குச் சமமான மரியாதையைச் செய்து தாஜை மந்திரி பதத்தில் வரித்துக்கொண்டது. புலியானது, 'அழகுள்ள நண்பனே! உன்ஸ்வரூபம் தெரிந்தது. என்னுடன்கூட ராஜகாரியத்தைப் பெற்றுக்கொள். உனக்கிஷ்டமான போகங்களைப் பூர்ணமாய் வரித்துக்கொள். வேண்டாதவைகளை விலக்கிவிடு. எங்கள் ஜாதிகுரூரமானதென்று பிரசித்தமாயிருப்பதை உனக்கு அறிவிக்கிறேன். எளியவசனத்தை முன்னிட்டு நீ ஆளவேண்டும். நீயும் க்ஷேமத்தை அடைவாய்' என்று சொல்லிற்று. பிறகு, நரியானது மிக்க தைர்யமுள்ளதும் மிருகங்களுக்குப்பதியுமான புலியின் அவ்வசனத்தை மிகவும் ஆதரித்துக் கொஞ்சம்வணங்கி வணக்கமுள்ள வசனத்தைச் சொல்லத் தொடங்கிற்று. 'மிருகராஜனே! எனக்காக நீ சொன்ன இந்தவசனம் ஸரியானது. அறம்பொருள்களில் ஸமர்த்தர்களும் பரிசுத்தர்களுமான ஸஹாயமனிதர்களை நீ தேடுவது நியாயமே. ஓ! வீரனே! அமாத்தியனில்லாத அரசனும் சரீரத்துக்குவிரோதியும் துஷ்டனுமான அமாத்யனுடன் கூடின அரசனும் (ராஜ்யத்தின்) பெருமையை ஆளமுடியாது. பெரிய பாக்யம்பெற்றவனே! அன்புள்ளவர்களும் நீதியறிந்தவர்களும் ஆலோசனையுள்ளவர்களும் ஒருவருக்கொருவர் [1]சேர்க்கையில்லாதவர்களும் ஜயத்தை விரும்புகிறவர்களும் ஆசையற்றவர்களும் மரியாதையைவிட்டு விலகாதவர்களும் சிறந்த அறிவுள்ளவர்களும் ஹிதத்தில் முயற்சியுள்ளவர்களும் பெரியமனமுள்ளவர்களுமான ஸஹாயமனிதர்களை ஸஹோதரர்களைப்போலவும் தந்தைகளைப்போலவும் மரியாதைசெய். மிருகாதிபனே! ஸங்கேதாஷமாயிருப்பதைவிட வேறொன்றும் எனக்குப் பிரியமேயில்லை. ஸுகங்களிலும் போகங்களிலும் உன்னிடத்திலுள்ள ஐச்வரியத்திலும் எனக்கு விருப்பமில்லை. எனது ஸ்வபாவமானது உன்னுடைய பழைய வேலைக்காரர்களுடன் சேர்க்கை அடையாது. என்னிமித்தமாகத் துன்பமடையுமவர்கள் உன்னைப்பீடிதப்படுத்துவார்கள். நீ சிறந்தவர்களான மற்றவர்களுக்கும் கொண்டாடத்தக்கவனும் அடுக்கத்தக்கவனும் நல்லமனமுள்ளவனும் மிகப்பெரிய பாக்யம்பெற்றவனும் பாபிகளிடத்திலும் கடோரமற்றவனும் நீண்ட ஆலோசனையுள்ளவனும் பெரியஉத்ஸாஹமுள்ளவனும் பெருங்கொடையுள்ளவனும் பெரியபலமுள்ளவனும் உபகாரத்திற்குப் பழுதில்லாத

---

1 வேறுபாடும்.

பிரதி உபகாரம்செய்கிறவனும் பாக்யங்களால் நன்றாக அலங்கரிக்கப்பட்டவனுமாயிருக்கிறாய். ஆனால், நான் என்னிலைமையிலேமிக்க சந்தோஷமுள்ளவனாயிருக்கிறேன். என்னிஷ்டம்போலவனத்தில் ஸஞ்சரிக்கும் நான் (பிறரிடம்) ஸேவை செய்தலே அறிந்தவனல்லன். கஷ்டமான ஸேவகவிருத்தியானது செய்யப்படவுமில்லை. ஸேவையிலிருப்பவர்களுக்கு [1] அரசனருகிலுள்ள நிந்தைகளால்வரும் எல்லாத் தோஷங்களும் உண்டாகும். வனத்திலிருப்பதோ அபிமானமும் பயமும் இடையூறு மில்லாததாயிருக்கிறது. அரசனால் [2] இழுக்கப்படும் மனிதனுக்கு உள்ளத்திலுண்டாகும் பயமானது கானகத்திலிருந்து கிழங்குகனிகளைப் புஜித்துக்கொண்டு ஸந்தோஷமாயிருப்பவர்களுக்கு இராது. ஆயாஸமின்றித் தண்ணீரோ சிறந்த குணமுள்ள இனிய அன்னமோ, ஆலோசித்துப்பார்த்தால், எவ்விடத்தில் ஸுகமாக இருக்கிறதோ அது ஸ்வர்க்கம். ஸேவையிலுள்ள துன்பங்களால் தூஷிக்கப்பட்டு எவ்வளவு வேலைக்காரர்கள் நாசமடைகிறார்களோ குற்றங்களுக்காக அரசர்களால் தண்டிக்கப்படும் வேலைக்காரர்கள் அவ்வளவில்லை. ஓ! மிருகேந்திரனே! அந்த மந்திரிகாரியத்தை நான் செய்யவேண்டுமென்று நீ விரும்பினால் இருக்கவேண்டியவிதிக்குத்தக்க ஓர் உடன்பாட்டைச் செய்துகொள்ள விரும்புகிறேன். என்னைச் சேர்ந்தவர்களை நீ மரியாதைசெய்யவேண்டும். ஹிதமான வசனத்தைக் கேட்கவேண்டும். எனக்குக்கொடுக்கப்பட்ட வ்ருத்தியானது உன்னிடம் நல்ல உறுதியுள்ளதாக இருக்கவேண்டும். ஒருகாலத்திலும் உனது மற்ற மந்திரிகளுடன் ஆலோசிக்கக்கூடாது. நீதியுள்ளவர்களும் பெருமையுற்றிருக்க விருப்பமுள்ளவர்களுமான வேறு மந்திரிகள் என்விஷயத்தில் வீணாகப் பேசுவார்கள். ரஹஸ்யத்தில் தனிமையாக உன்னுடன் சேர்ந்து ஒருவனுக ஹிதவசனத்தைச் சொல்லுவேன். உனது இனத்தார்களைப்பற்றிய காரியங்களில் நன்மை தீமைகளை நான் கேட்கத்தக்கவனல்லன். நீ என்னுடன் ஆலோசனைசெய்தபின்மந்திரிகளைத் துன்புறுத்தாதே. நீ கோபமுள்ளவனாகி என்னைச் சேர்ந்தவர்களுக்கும் தண்டனையை விதிக்கக்கூடாது' என்று சொல்லிற்று. பிறகு, அந்தமிருகேந்திரனை புலியால் 'இவ்விதமாகட்டும்' என்றுசொல்லிப் பூஜிக்கப்பட்ட நரியானது, அந்தப்புலியால் ஏவப்பட்டுப் புத்திசொல்லத்தக்கமந்திரிபதத்தையடைந்தது. அவ்விதம் பூஜிக்கப்பட்டதும்வேலைகளில்முயற்சியுள்ளதுமான அந்தநரியைக்கண்டு முன்பரிவாரங்கள் ஒன்றுசேர்ந்துகொண்டு அடிக்கடி

1 வேறுபாடம். 2 'அழைக்கப்பட்டவனுக்கு' என்பது வேறுபாடம்.

பகைத்துவந்தன. கெட்டபுத்தியுள்ள அவைகள் வெளிக்கு மித்திர னென்கிறபுத்தியுடன் நன்மொழி உரைத்து நரியைத் தோஷங்க ளில் பிரவேசிக்கச்செய்து ஸமயங்களைப் போக்கவிரும்பின. பிறர் பொருளை அபகரிப்பவைகளும் முன் வேறுவிதமாயிருந்தவைகளு மான அவைகள் நரியாலடக்கப்பட்டு ஒருபொருளையும் அபகரிக் கச் சக்தியற்றவைகளாயினவன்றே? (அதிகாரத்திலிருந்து) விலக்க விருப்பமுள்ள அவைகள் கதைகளாலும் பெருந்தனத்தா லும் இந்தநரியின் புத்திக்குப் பெரிய ஆசையை உண்டுபண்ணத் தொடங்கின. ஆகிலும், சிறந்த அறிவுள்ள அந்த நரியானது அந் தத் தீரத்தன்மையிலிருந்து சலிக்கவில்லை. பிறகு, மற்றப் பரி வாரங்கள் இதற்கு நாசத்தைச் செய்யவேண்டுமென்று ஸங்கே தஞ் செய்துகொண்டிருந்தன. அவைகள் மிருகராஜனை புலிக்கு விருப்பமுள்ளதும் அதன் வீட்டில் பாகஞ் செய்யப்பட்டது மான மாம்ஸத்தைத் தாங்களே எடுத்து அந்த நரியின்வீட்டில் கொண்டுவந்து வைத்தன. அந்த மாம்ஸமானது எதனால் ஆலோ சிக்கப்பட்டு எதற்காக அபகரித்துவைக்கப்பட்டதோ அதெல்லாம் அந்த நரிக்குத் தெரிந்திருந்தும், ('இதன்மூலமாய் இந்தப்பந்தம் நமக்கு விலகட்டும்' என்னும்) ஒருகாரணத்துக்காகப் பொறுத் துக்கொண்டிருந்தது. மந்திரிபதத்தை அடைந்தபோது, அந்தநரி யானது, 'ஓ! அரசனே! என்னிடத்தில் ஸ்நேகத்தை விரும்பும் நீ துன்பத்தைச் செய்யக்கூடாது' என்ற இந்தப்ரதிஜ்ஞையைச் செய்துகொண்டது. அந்த ஆலோசனையின் நிலைமையை அறிய வேண்டியும் அவ்விஷயத்தில் உபேக்ஷையாயிருந்தது (பிறகு) பசி யுடன் புஜிக்கக் கிளம்பிவந்த மிருகேந்திரனுக்குப் போஜனம் கொண்டுவரவேண்டிய ஸமயத்தில் அந்த மாம்ஸம் காணப்பட வில்லை. மிருகராஜனும் திருடனைத்தேடவேண்டும் என்று கட்டளை யிட்டது. கபடமுள்ள அந்நரிகளும், 'அந்தமாம்ஸமானது யித் வானும் தன்னைப் பெரிய அறிவுள்ளவனென்று எண்ணுகிறவனு மான உமது மந்திரியால் அபகரிக்கப்பட்டது' என்று மிருகேந் திரனிடம் அறிவித்தன. உடனே நரியின் [1] சாபல்யத்தைக்கேட் டுக் கோபங்கொண்ட புலியானது பொறுமையுள்ளதாயிற்று. அரசனை புலியானது இந்தநரியைக் கொலைசெய்யவேண்டுமென் னும் கருத்துக்கொண்டது. அப்புலியின் அந்த இடைவெளியைக் கண்டு அந்தமுன்மந்திரிகள் சொல்லத்தொடங்கின. 'அந்த நரியா னது எங்களனைவர்களின் ஜீவனத்தையும்கெடுக்க யத்தனப்படு கிறது' என்று இவ்விதம் சொல்லி நிச்சயஞ்செய்தபின் அவை

[1] தனக்குத் தகாதவிஷயத்தில் ஆசை.

திரும்பவும் அந்தஈரியின் செய்கைகளை விரிவாகச்சொல்ல ஆரம்பித்தன. 'அந்தஈரியினுடைய இந்தக்காரியம் இப்படியிருக்கிறது. எதுதான் அதனல் செய்யப்படாததாகும்? அந்தஈரியை எவ்விதக் குணமுள்ளதாக முந்தித் தேவரீர் கேள்விப்பட்டிருக்கிறீரோ அது அவ்விதக்குணமுள்ளதன்று; வார்த்தையினல்மட்டும் தர்மமுள்ளதும் ஸ்வபாவத்தில் குரூரமுள்ளதுமாயிருக்கிறது. கபட தர்மமுள்ள இந்தப்பாபி பொய்யான ஆசாரமுள்ளதாயிருக்கிறது. காரியத்துக்குவேண்டிப் போஜனமுதலிய விரதங்களில் ஸ்ரமப்படுகிறது. இதில் உமக்கு நம்பிக்கையில்லாதிருந்தால் அந்தமாம்ஸத்தை இதோ உங்களுக்குக் காண்பிக்கிறேரும்' என்று சொல்லி, அதேகூஷணத்தில் வேகமாக அவைகள் அந்தஈரியின்வீட்டிலிருந்து அந்தமாம்ஸத்தைக் கொண்டுவந்தன. மாம்ஸம் கொண்டுபோனதையும் அவைகளின் அந்தவசனத்தையும் கேட்டபொழுது, புலியானது நரியைக்கொல்லவேண்டுமென்று கட்டளையிட்டது. பிறகு, நரிக்கு நேர்ந்த துன்பத்தைக்கேட்டுப் புலியின் தாயானது ஹிதமான வசனங்களால் நல்லஅறிவை உண்டுபண்ணவேண்டி மிருகராஜனிடம் வந்தது. 'மகனே! கபடமான முயற்சியுடன்கூடின இந்தவார்த்தையை நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது. அசுத்தர்களால் வேலையிலுள்ள பொறுமையினலுண்டான குற்றங்களால் பரிசுத்தனும் குற்றமுள்ளவனாகச் செய்யப்படுவான். உயர்ந்தவனை ஒருவனும் ஸஹிக்கமாட்டான். உயர்ந்தவேலையானது விரோதத்தை உண்டுபண்ணும். பரிசுத்தனாக வேலைசெய்யும் மனிதனிடமும் குற்றமே சாட்டப்படும். வனத்திலிருந்துகொண்டு தம் கர்மங்களைச் செய்யும் முனிவர்களுக்கும் நட்பு பகை நொதுமல் என மூன்று பக்ஷங்களுமுண்டாகும். லோபிகளுக்குப் பரிசுத்தர்களிடமும் பயமுள்ளவர்களுக்குப் பலசாலிகளிடமும் மூர்க்கர்களுக்குப் பண்டிதர்களிடமும் தரித்திரர்களுக்குப் பெருந்தனமுள்ளவர்களிடமும் அதர்மமுள்ளவர்களுக்குத் தர்மமுள்ளவர்களிடமும் குரூபிக்கு அழகுள்ளவனிடமும் பகையுண்டாவது வழக்கம். மூர்க்கர்களும் லோபிகளும் கபடமாக ஜீவிப்பவர்களும்அறிவில்லாதவர்களுமான பலர் பிருஹஸ்பதியின் புத்திபோன்ற புத்தியுள்ளவனும் குற்றமில்லாதவனுமாயிருப்பவனுக்கும் குற்றத்தைச் சொல்லுவார்கள். 1 ஒருவருமில்லாத உன்வீட்டிலிருந்து அந்தமாம்ஸமானது இப்பொழுது அபகரிக்கப்பட்டதாயிருக்கட்டும். அந்தஈரி கொடுக்கப்படுவதையும் விரும்புகிறதில்லை. முதலில் இதை நன்றாகஆலோசிக்கவேண்டும். பொய்யாயிருந்தும் உண்மைபோலவிளங்குகின்றனவும்

1 வேறு பாடம்.

உண்மையாயிருந்தும் பொய்போல விளங்குகின்றனவுமாகப் பல வஸ்துக்கள் காணப்படுகின்றன. அவைகளைப்பரீக்ஷைசெய்யவேண்டியது யுக்தமாகும். ஆகாயமானது கவிழ்ந்த கறுத்த மிடாவைப் போலவும் மின்மினிப்பூச்சியானது அக்கினியைப்போலவும்காணப்படுகின்றன.. ஆகாயத்தில் அவ்வித மிடாவினுருவமும் மின்மினிப் பூச்சியில் அக்கினியும் உண்மையில் இல்லை. ஆகையால், பிரத்யக்ஷமாகக் காணப்படும் பொருளையும் பரீக்ஷிக்கவேண்டுவது நியாயம். பொருள்களைப் பரீக்ஷைசெய்து தெரிந்துகொண்டவன் பின்பு பரிதாபமடையமாட்டான். மகனே! பிரபுவாயிருப்பவன் பிறனைக் கொல்லுவதென்பது செய்ய அரிதன்று. பிரபுக்களுக்குப் பொறுமையானது கொண்டாடத்தக்கதும் உலகில் புகழைக்கொடுப்பதுமாகும். மகனே! இந்த நரியானது உன்னால் ஸ்தாபிக்கப்பட்டதென்பது [1] ஸாமந்தர்களிடத்திலும் பிரஸித்தமாக இருக்கிறது. நல்லபாத்திரம் கிடைப்பது கஷ்டம். ஆகையால், இந்த உன் ஸ்நேஹிதனை வைத்துக்கொள். பிறரின் குற்றங்களால் குற்றமுள்ளவனைச்செய்யப்பட்டவனும் உண்மையில் பரிசுத்தனுமாயிருப்பவனை எவன் வேறுகக்கருதுகிறானோ அவன் குற்றமுள்ளவனைச் செய்யப்பட்ட மந்திரியையுடையவனைப் போலவே தான் நாசம் அடைவான். நரியின் இந்தச் சத்துருக்கூட்டத்திலிருந்து தர்மபுத்தியுள்ள ஒன்று வந்தது. அதுவும், 'இது கபடமாகச் செய்யப்பட்டது' என்று சொல்லிற்று' என்றது. பிறகு, மிருகேந்திரனால் நல்ல நடையுள்ளதாக அறியப்பட்ட அந்தநரியானது மரியாதைசெய்து விடுவிக்கப்பட்டது; ஸ்நேஹத்துடன் பலமுறை கட்டியணைக்கவும் பெற்றது. நீதிசாஸ்திரமறிந்த நரியானது மிருகேந்திரனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அந்த அவமானத்தால் மிகவும் தாபமடைந்து [2] ப்ராயோபவேசஞ்செய்ய விரும்பிற்று. அந்தப்புலியானது ஸ்நேஹத்தால் ஜலம்பெருகிய கண்களுடன் தர்மமுள்ள அந்த நரியை மரியாதைசெய்து (ப்ராயோபவேசத்திலிருந்து) தடுத்தது. அந்த நரியானது ஸ்நேஹத்தால் பரபரப்பையடைந்து அந்தப்புலியைப்பார்த்து வணங்கிக் கண்ணீரால் தழுதழுத்த வார்த்தையுடன் சொல்லத்தொடங்கிற்று. 'முதலில் உன்னால் நான் பூஜிக்கப்பட்டேன்; பிறகு, அவமதிக்கப்பட்டேன். சத்துருக்களின் நிலைமையை அடையும்படி செய்யப்பட்ட நான் உன்னிடத்தில் வஸிப்பதற்குத்தகுதியுள்ளவனல்லன். ஸந்தோஷமில்லாதவர்களும் அதிகாரத்திலிருந்துதழுவினவர்களும் மானக்குறைவையடைவிக்கப்பட்டவர்களும் தாமேதுன்பஞ்செய்துகொண்டவர்களும் பிறரால்வஞ்சிக்கப்பட்டவர்களும் மிகக்குறைவடைந்தவர்களும் லோபிகளும் கோப

1 சிற்றரசர்கள். 2 மரணத்துக்காகப் படுப்பது.

முள்ளவர்களும் பயமுள்ளவர்களும் இகழ்ச்சியாகப் பேசப்பட்ட
வர்களும் பொருளை அபகரிக்கப்பட்டவர்களும் கர்விகளும் விலை
கினபின் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களும் பராசையுள்ளவர்க
ளும் மிக்க லாலனை செய்யப்பட்டவர்களும் யஜமானனுக்குப் பக
துன்பங்களை எதிர்பார்ப்பவர்களும் கபடமுள்ளவர்களும் பரித
ணம் வாங்குகிறவர்களுமான வேலைக்காரர்கள் யாவரும், யஜமான
னிடம் பிரீதியற்றவர்களும் பொருளற்றவர்களுமா யிருப்பார்கள்
அவமானத்துடன்கூடிய என்னைத்திரும்பவும் அதிகாரத்தில்வைத்
தால் நீ எவ்விதம் என்னிடத்தில் நம்பிக்கையடைவாய்? நான்
தான் எப்படி உன்னிடம் நம்பிக்கையடைய முடியும்? பரீக்ஷை
செய்துஸாமர்த்தியமுள்ளவனென்று அங்கீகரித்து அதிகாரத்தில்
வைத்தபின் செய்த பிரதிஜ்ஞையையும் மாற்றிவிட்டு உன்னால்நான்
அவமதிக்கப்பட்டேன். தன்சொல்லைக் காப்பாற்றுகிறவன் மூ
லில் ஒருவனைச் சீலமுள்ளவனென்று ஸபையில் சொல்லிவிட்டுப்
பிறகு அவனைக் குணமில்லாதவனென்று சொல்லக்கூடாது. இப்
பொழுது இவ்விதம் அவமதிக்கப்பட்டஎன்னிடத்தில் நீயும் நம்பிக்
கையடையமாட்டாய். நம்பிக்கையில்லாத உன்னிடத்தில் எனக்
கும் பயமுண்டாகும். நீ சங்கையுள்ளவன்; நான் பயமுள்ளவன்
பகைவர்கள் இடைவெளியைத்தேடுகிறவர்களும் ஸ்நேஹமில்லாத
வர்களும் ஸந்தோஷப்படுத்த முடியாதவர்களுமாயிருக்கிறார்கள்
இந்தக்காரியமும் மிக்க கபடமுள்ளதாயிருக்கிறது. வேற்றுமைப்
பட்டது சேருவது கஷ்டம். சேர்ந்தது வேறுவது கஷ்டம். வேற்று
மைப்பட்டுச்சேர்ந்த இடத்திலுள்ள பிரீதியானது ஸ்நேஹத்தால்
வளர்ச்சியடைகிறதில்லை. ஒருவனும் எஜமானனை உன்னுடைய
ஹிதத்தில் இருப்பவனைக்காணப்படவில்லை. (எவர்களும்) [1]தான்
பரன் இருவர்களின் காரியத்தை அபேக்ஷிக்கிறவர்களாகவே இருக்
கிறார்கள். உள்எண்ணத்தில் ஸ்நேஹமுள்ளவர்கள் கிடைப்பது
மிக அரியது. அரசர்கள் மனிதர்களின் (ஸ்வபாவத்தைத்)
தெரிந்துகொள்வது மிக்க கஷ்டம். ஏனெனில், இவர்களின்
மனம் நிலையற்றது. ஸாமர்த்தியமுள்ளவனும் ஸந்தேகப்படத்
தகாதவனுமாயிருப்பவன் பலநூற்றிலொருவன் காணப்படுகிறான்
மனிதர்களுக்குத் திடீரென்று பெருமையும் திடீரென்று குறைவும்
நேரும். சுபத்தையும் அசுபத்தையும் பெருமையையும் [2]கெடுத்

---

1 வேறுபாடம்.

2 'ப்ரகர்த்தும்' என்று பாடங்கொண்டு, 'மனிதர்களுக்குத் திடீ
ரென்று அதிகாரத்தைக் கொடுப்பதும், குறைப்பதும், சுபாசுபங்களையும்
பெருமையையும் செய்வதும் புத்திக்குறைவிலேயே' என்பது பழைய
உரை.

கப் புத்தியின்சிறுமை காரணமாகும்' என்றுசொல்லிற்று. அறமும் பொருளும் இன்பமும் யுக்தியுமுள்ள இவ்விதநன்மொழியைச்சொல்லி அரசாகிய புலியைத் தெளிவுள்ளதாகச்செய்துவிட்டு நரி வனம்சென்றது. புத்தியுள்ள நரியானது மிருகேந்திரனை அந்தப்புலியின் உபசாரவார்த்தையைக் கேளாமல் பிராயோபவேசஞ்செய்து சரீரத்தைவிட்டு ஸ்வர்க்கத்தை அடைந்தது" என்றுசொன்னர்.

நூற்றுப்பன்னிரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், சோம்பல் அனர்த்தத்திற்குக்காரணமாதுமென்பதை விளங்கச்செய்யும் ஓட்டகத்தின் கதையைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஸகலதர்மங்களையும் ரக்ஷிப்பவர்களுள் சிறந்தவரே! அரசன் எதைச் செய்யவேண்டும்? எதைச்செய்தால் லோகமுள்ளவனுயிருப்பன்? அதனை உள்ளபடி எனக்குச்சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"இவ்வுலகில் அரசன் எதைச்செய்யவேண்டுமோ எதைச் செய்தால் லோகமுள்ளவனுயிருப்பனோ அந்தக்காரியத்தைப் பற்றிய முக்கியமான நிர்ணயத்தை இப்பொழுது நான் உனக்கு உபதேசிக்கின்றேன்; கேள். யுதிஷ்டிர! ஓட்டகத்தைப்பற்றிய பெரிய இந்தக்கதையை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்விதம் இருப்பது கூடாது; அதை அறிந்துகொள். பிரஜாபதியின் குலத்திலுதித்ததும் முற்பிறப்பின் அறிவுள்ளதுமான ஒரு பெரிய ஓட்டகம் மிகக்கடுமையான நியமமுள்ளதாக அரண்யத்தில் மிகப்பெருந்தவம்செய்துகொண்டிருந்தது. பிறகு, அந்தத் தவத்தின்முடிவில் பிரபுவான பிரம்மதேவர் பிரீதியுள்ளவரானர். பிறகு, பிரம்மதேவர் அந்த ஓட்டகம் விரும்பிய வரத்தை வினவினர். ஓட்டகம், 'ஓ! பகவானே! உம்முடைய அனுக்ரஹத்தால் என்னுடைய இக்கழுத்தானது நூறு யோஜனைக்குமேல் நீண்டதாயிருக்கவேண்டும். பிரபுவே! அப்படி ஸஞ்சரிக்க விரும்புகிறேன்' என்றுகூறிற்று. வரத்தை அளிக்கும் மஹாத்மாவான பிரம்மதேவரால், 'அப்படியே ஆகுக' என்றுசொல்லப்பட்ட அந்த ஓட்டகமானது மிகச்சிறந்த வரத்தைப்பெற்றுக்கொண்டு தன் காடுபோய்ச்சேர்ந்தது. அப்பொழுது, மிகக்கெட்டபுத்தியுள்ள அவ்வொட்டகமானது பிரம்மதேவர் வரமளித்த

காரணத்தால் சோம்பலுள்ளதாயிருந்தது. கெட்ட புத்தியுள்ள தும் காலத்தால் அவிவேகம் அடைந்ததுமான அவ்வொட்டகம் ஓரிடத்திற் செல்லவும் இரைதின்னவும் விரும்பவில்லை. ஒரு ஸமயத்தில் அவ்வொட்டகம் மனவருத்தமுற்று நாறுயோசனை நீளமுள்ள அத்தத் தன்கழுத்தை நீட்டிக்கொண்டே சஞ்சரிக்கத் தொடங்கிற்று. அப்பொழுது பெருங்காற்றுண்டாயிற்று. அவிவேகியான அந்த ஒட்டகமானது தன்தலையையும் கழுத்தையும் குகையில் வைத்துக்கொண்டிருந்தது. உடனே, உலகத்தை முழுகச்செய்யும் மிகப்பெரியமழை வந்தது. அப்பொழுது குளிர் சூழ்ந்த அங்கமுள்ளதும் பசியும் களைப்புமுள்ளதுமான ஒருநரியானது ஜலத்தால் துன்பப்பட்டுத் தன்மனைவியுடன் வேகமாக அக்குகையில் ப்ரவேசித்தது. பரதர்களில் சிறந்தவனே! மாம்ஸத்தால் ஜீவிப்பதும் மிகவும் அதிகமானபசியும் களைப்புமுள்ளதுமான அந்த நரியானது ஒட்டகத்தின் கழுத்தைக் கண்டவுடன் பக்ஷிக்கத் தொடங்கிற்று. அவிவேகியான அந்த ஒட்டகமானது தான் பக்ஷிக்கப்படுவதாக அறிந்தவுடன் மிகவும் துக்கமுற்றுக் கழுத்தைச் சுருக்க முயற்சிசெய்தது. ஒட்டகமானது கீழும் மேலும் தன் கழுத்தைச் சுருக்குவதற்குள் மனைவியுடன்கூடிய அந்த நரியானது அதைத் தின்றுவிட்டது. அந்த நரியானது அப்பொழுது அந்த ஒட்டகத்தைக் கொன்றுதின்றுவிட்டுக் காற்றும் மழையும் நின்றபின் குகையின் உள்ளிலிருந்து வெளியிற் சென்றது. அப்பொழுது, கெட்ட புத்தியுள்ள ஒட்டகமானது இவ்விதம் நாசமடைந்தது. சோம்பலால் முறையே வந்த பெருங்குற்றத்தைப் பார். நீயும் இவ்விதமான தன்மையைத் தள்ளிவிட்டு உபாயத்துடன் இந்திரியங்களை அடக்கிக்கொள். ஜயமானது புத்தியைக் காரணமாகக் கொண்டதென்று மனு சொன்னர். ஓ! பாரத! வேலைகளில் புத்தியால்செய்யப்படுவன உத்தமமும் சௌரியத்தால் செய்யப்படுவன மத்தியமமும் ஸஞ்சாரத்தால் செய்யப்படுவன அதமமும் சுமைதூக்கும் வேலைகள் அதமாதமமுமாகும். குற்றமற்றவனே! சுறுசுறுப்புள்ளவனும் இந்திரியங்களை மிக அடக்கினவனும் [1] ரஹஸ்யமாக மந்த்ராலோசனையைக் கேட்பவனும் நல்லஸஹாயமுள்ளவனுமாயிருக்கிறவனுக்கு ராஜ்யம் நிலைபெற்றிருக்கும். ஸஹாயமில்லாதவனுக்கு ஒருஸமயத்திலும் பொருள்கள் நிலைபெற்றிரா. இவ்வுலகில் பரீக்ஷைசெய்யப்பட்ட ஸஹாயமுள்ளவனுக்குப் பொருள்கள் நிலைபெற்றிருக்கும். ஓ! யுதிஷ்டிர! ஸஹாயத்துடன்கூடிய அரசனுக்கு இப்பூமிமுழுமையும் ஆள

[1] இங்கு அதிகபாடமான அரைஸ்லோகம் விடப்பட்டது.

முடியும். மஹேந்த்ரனுக்கொப்பான பராக்ரமமுள்ளவனே! முன்காலத்தில் சாஸ்திரவிதிகளை அறிந்த ஸத்புருஷர்களால் இது சொல்லப்பட்டது. சாஸ்திரஅறிவுடன் என்னாலும் உனக்கு உபதேசிக்கப்பட்டது. அரசனே! நீ அஜாக்ரதையில்லாதவனாக நடந்துகொள்" என்று சொன்னர்.

நூற்றுப்பதின்மூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பலிஷ்டனான சத்துருவை வசப்படுத்த விநயம் காமா மாதுமென்னும்விஷயத்தில் நதிகளுக்கும் ஸமுத்திரத் திற்கும் நடந்த ஸம்வாதத்தைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "பரதர்களிற்சிறந்தவரே! அரசன் ராஜ்யத்தை அடைந்தும் பலமும் ஸஹாயமுமில்லாதவனாக இருந்தால், மிகவும் விருத்தியடைந்த விரோதியினிடம் எவ்விதமிருக்கவேண்டும்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"பாரத! இவ்விஷயத்திலும் நதிகளுக்கும் ஸமுத்ரத்திற்கும் நடந்தஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். அஸுரர்களுக்கிருப்பிடமும் நதிகளுக்குப் பதியுமான ஸமுத்ரமானது எல்லாநதிகளையும்நோக்கித் தனக்குண்டான ஸந்தோஷத்தைக் கேட்கத் தொடங்கிற்று. 'நதிகளே! வெள்ளம் நிறைந்த உங்களால் வேருடனும் கிளைகளுடனும் பிடுங்கப்பட்ட [1]பெரிய மற்ற மரங்களை இங்குக் காண்கிறேன். நீர்நொச்சி மரமானது பிடுங்கப்பட்டதாகக் காணவில்லை. நீர்நொச்சியானது கரையிலுண்டானதும் சிறியசரீரமுள்ளதும் அற்பபலமுள்ளதுமாயிருக்கிறது. அஃது அலக்ஷ்யத்தால் பிடுங்கப்படவில்லையா? அல்லது, அஃது உங்களுக்கு ஏதாவது உபகாரம் செய்திருக்கிறதா? அதில் உங்கள் அனைவர்களின் அபிப்பிராயத்தையும் கேட்க விரும்புகிறேன். நீர்நொச்சியானது அந்தக்கரைகளைவிட்டு எவ்விதம் வராமலிருக்கிறது?' என்று கேட்டது. அவ்விஷயத்தில் கங்காநதியானது நதிகளுக்குப்பதியான ஸமுத்ரத்தை நோக்கியுக்தியுள்ளதும் அறிவைக் கொடுப்பதும் நல்லபொருளுள்ளதுமான மறுமொழியைச் சொல்லத் தொடங்கிற்று. 'இந்தமரங்கள் இருப்பிடத்தில் ஒரேவிதமான (விறைப்புள்ள) சரீரமுள்ளவைகளாகநிற்கின்றன. அவ்விதம் விபரீதமாயிருப்பதால் அந்தஇடத்தை விட்டு விலகுகின்றன. நீர்நொச்சியானது இருப்பிடத்தைவிட்டு

---

1 வேறு பாடங் கொள்ளப்பட்டது.

விலகுகிறதில்லை. அது வேகம்வருவதைக்கண்டு வணங்குகிறது. மற்றமரங்கள் வணங்குகிறதில்லை. வேகமானது சென்றவுடன், அந்த நீர்நொச்சியானது திரும்பவும் தன்னிடத்தை அடைகிறது. அது காலத்தையும் ஸமயத்தையும் அறிந்ததும் எப்பொழுதும் எங்களுக்கு அடங்கினதும் அனுகூலமான நடக்கையுள்ளதும் விறைப்பில்லாததுமாயிருக்கிறது. ஆகையால், அஃது உன்னை அடைகிறதில்லை. எந்தஓஷதிகளும் மரங்களும் செடிகளும் காற்று ஜலம் இவைகளின் வேகத்தால் வணங்குகின்றவைகளும் கிளம்பு கின்றவைகளுமா யிருக்கின்றனவோ அவைகள் அவமானத்தை அடைகிறதில்லை' என்று சொல்லிற்று. ஏ! யுதிஷ்டிர! ஆகையால், எவன் மிகவளர்ச்சியுள்ள பகையரசனுடைய பந்தத்தை நாசஞ் செய்யும் விஷயத்தில் முதலிலுள்ள வேகத்தை ஸஹிக்கவில்லையோ அவன் சீக்கிரமாகவே நாசமடைவான். நல்லறிவுள்ள எந்த அரசன் தனக்கும் பகைவனுக்குமுள்ள பலாபலத்தையும் சேஷனையும் பராக்ரமத்தையும் அறிந்து நடக்கிறானே அவன் அவமானத்தை அடையமாட்டான். இவ்விதமே அறிவுள்ளவன் எப்பொழுது சத்ருவுக்கு அதிகமானபலமிருக்கிறதென்று அறிகிறானே அப்பொழுது நீர்நொச்சியின்நடையை ஆஸ்ரயிக்கவேண்டும். இஃது அறிவின்லக்ஷணமாகும்'' என்று சொன்னார்.

நூற்றுப்பதினான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஸபையில் துஷ்டன் கேட்டவார்த்தையைச்சொன்னாலும் அதைப் பொறுப்பது தனமென்று கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பகைவர்களை அடக்கும் பாரதரே! சாந்தனும் அறிவுள்ளவனுமாயிருப்பவன், மூடனும்தைரியமுள்ளவனும் குரூரனுமான மனிதனால் ஸதஸ்ஸில் நிந்திக்கப்பட்டால் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

"அரசனே! இப்பொருள் தெரியத்தக்கபடி கேட்டுக் கொள். எப்பொழுதும் அறிவுள்ளவன் அல்பபுத்தியுள்ள மனிதனுடைய சொல்லைப் பொறுக்கவேண்டும். ஆக்ரோசத்துடன் தூஷிக்கப்படும் பொறுமையுள்ள மனிதன் தூஷிக்கும் மனிதனுடைய புண்ணியத்தைத் தான் அடைந்து தன்னுடைய பாபத்தை அவனிடத்திலேயே கொடுத்துத் தன்னைச் சுத்தஞ்செய்துகொள்ளுகிறான். கத்தும் நாயாளியிடம்

போல இகழ்ச்சியுள்ள அந்த மனிதனிடம் உதாஸீனனாயிருக்க வேண்டும். அவன் உலகத்தில் பகையையடைந்து பயனற்றகதியை அடைவான். அவன் எல்லாஜனங்களுமுள்ள கூட்டத்திலெல்லாம், 'ஒருவன் என்னால் இவ்விதம்சொல்லப்பட்டான். அவன் அவ்விடத்தில் வெட்கமடைந்து காய்ந்து செத்தவனைப்போலிருக்கிறான்' என்று அந்தப்பாபகர்மத்தால் எப்பொழுதும் தன்னைக் கொண்டாடிக்கொள்வான். வெட்கமில்லாமல் கொண்டாடத்தகாத செய்கையால் தன்னைக்கொண்டாடிக்கொள்ளும் அவ்விதப் புருஷாதமனை அடக்கமுள்ளமனிதன் உபேக்ஷைசெய்யவேண்டும். அல்பபுத்தியுள்ளவன் எந்தஎந்த வார்த்தையைச் சொல்லுகிறானோ அவனுடைய அந்த அந்தச்சொல்லை அவ்வப்பொழுது ஸஹிக்கவேண்டும். அவன் அரண்யத்தில் பயனில்லாமல் கத்துகிற புத்தியற்ற காகம்போல ஸ்வபாவத்தால்கொண்டாடியும் நிந்தித்தும் என்ன செய்யக்கூடும்? கெட்டவார்த்தைகளைச் சொல்வதனாலேயே அந்தக் கெட்டகர்மத்துடன் ஸம்பந்தம்வருமாகில், வாக்கினால் சொன்னதே பொருளாகமுடியும். அடிக்கவிருப்பமுள்ளவனுக்கு (அவ்விதச்சொல்லவிட) வேறுமுயற்சி வேண்டாததாகுமன்றோ? நிந்தைசெய்யும்மனிதன் தன்செய்கையாலும் சொல்லாலும் தன் தாயிடம் பிறன் புணர்ச்சிசெய்ததைச் சொல்லிக்கொள்ளுகிறவனாகிறான். ரஹஸ்யாங்கத்தை வெளியிட்டுக்கொண்டு கூத்தாடும் [1] மயில்போல அவன் ஸந்தோஷப்படுகிறான். இவ்வுலகில் எந்த மனிதனுக்குச் சொல்லத்தகாததும் செய்யத்தகாததும் ஒன்றுமில்லையோ எல்லாம் கலந்தசெய்கையுள்ள அந்த மனிதனிடம் பரிசுத்தனாயிருப்பவன் வார்த்தையைக் கொடுக்கக்கூடாது. எவன் நேரில் குணத்தைப்பேசுகிறவனும் மறைவில் நிந்திக்கிறவனுமாயிருக்கிறானோ அந்தமனிதன் உலகில் நாய்போன்றவனும், நல்ல உலகமும் தர்மமும் ஞானமும் நசித்தவனுமாகிறான். அவ்விதமனிதன் பலநாட்களில் தான்செய்த தானத்தையும் ஹோமத்தையும் மறைவில்செய்யும் நிந்தாவசனத்தால் அந்தக்ஷணமே நாசமடையச்செய்கிறான். ஆகையால், நல்லறிவுள்ள புத்திசாலியான மனிதன் பாபபுத்தியுள்ளவனும் விலக்கத்தக்கவனுமான அவ்விதமனிதனை நாயின்மாம்ஸத்தைப்போல உடனே விலக்கவேண்டும்.

---

1 'வெளியிடத்தகாத தன் அங்கம் வெளியாகிறதென்கிற லஜ்ஜையைவிட்டுக் கூத்தாடுவதில் மயில் ஸந்தோஷப்படுவதுபோலப் பிறரைநிந்திப்பதில் தன்தாயின்தோஷம் வெளியாகிறதென்கிற லஜ்ஜையின்றி நிந்தாவசனத்தால் மூர்க்கன் ஸந்தோஷப்படுகிறான்' என்பது பொருள்.

பலஜனங்களுள்ளகூட்டத்தில் பிறர்குற்றத்தைச்சொல்லும் துராத்மாவானவன் ஸர்ப்பமானது உயர்ந்தபடத்தை வெளியிடுவது போலத் தன்குற்றங்களை வெளியிடுகிறான். தனக்குரியசெய்கைகளைச்செய்யும் அந்தத்துஷ்டனுக்கு எவன் ப்ரதிசெய்யவிரும்புகிறானே புத்தியில்லாத அவன் சாம்பல்முட்டில் கழுதையிருப்பதுபோலத் துக்கத்தில் முழுகுகிறான். அடக்கமில்லாதவனும் எப்பொழுதும் ஜனங்களைத் துஷ்பிப்பதில் ஊக்கமுள்ளவனுமான மனிதனென்னும் சென்நாயை மதங்கொண்டு ஓங்கிக்கத்தும் யானையைப்போலவும் மிகப்பயங்கரமானநாயைப்போலவும் விலக்கவேண்டும். கெட்டமனிதர்கள்செல்லும்வழியிலிருப்பவனும் அடக்கத்திலிருந்தும் வணக்கத்திலிருந்தும் விலகினவனும் பாபியும் சத்துருவின்செய்கைபோன்ற செய்கையுள்ளவனும் எப்பொழுதும் துன்பத்தைவிரும்புகிறவனும் பாபபுத்தியுள்ளவனுமான அந்த மனிதனை வெறுக்கவேண்டும். மேலும், அவர்களால் மிகவும் நிந்திக்கப்படுகிறவனைநீ (அவர்களைக்) கண்டு வருத்தமுள்ளவனாகாதே. உறுதியானபுத்தியுள்ளவர்கள் உயர்ந்தவனுக்குத் தாழ்ந்தவனோடு சேர்க்கையை நிந்திக்கிறார்கள். அவன் கோபங்கொண்டால் கடிக்கவும் அடிக்கவுஞ்செய்வான்; புழுதிகளையும் உமிகளையும் இறைப்பான்; பற்களைக்காட்டிப் பயத்தை உண்டுபண்ணுவான். இவையெல்லாம் கோபமுள்ளவனும் க்ரூரனுமான மூடனிடம் ப்ரஸித்தம். கெட்டபுத்தியுள்ளமனிதனால் ஸதஸில் செய்யப்படும் நிந்தையையும் கெட்டமனிதர்களையும் எவன் பொறுக்கிறானோ, எப்பொழுதும் இந்த உதாரணத்தையும் படிக்கிறானோ அவன் வாக்காலுண்டாகும் ஒருவித அப்ரியத்தையும் அடையமாட்டான்" என்று சொன்னார்.

நூற்றுப்பதினைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அரசர்கள் துணைவர்களைச்சேர்த்துக்கொள்வது அவஸ்யமென்பதைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர்,"அறிவுள்ளவர்களில் சிறந்தவரானபிதாமஹரே! எனக்கு ஒருபெரியஸந்தேஹமிருக்கிறது. இஃது உம்மால்தாம் நிவிருத்தியாகக்கூடியது. அரசரே! நீர் நம்குலத்தை வ்ருத்திசெய்தவரன்றோ? தந்தையே! கெட்டநடையுள்ளவர்களும்கெட்டமனமுள்ளவர்களுமான மனிதர்கள் நிந்தித்துப்பேசுவதைப்பற்றிய இம்முறை

யானது உம்மால் சொல்லப்பட்டது. அதன்பிறகு, உமக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன். ராஜ்யதந்திரத்திற்கு நன்மையையும் குலத்திற்கு ஸுகத்தையும்செய்வதும் வருங்காலத்திலும் நிகழ்காலத்திலும் க்ஷேமத்தைப் பெருகச்செய்வதும் புத்திரர்களுக்கும் பேரர்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதும் ராஜ்யத்தைப் பெருகச்செய்வதும் அன்னத்துக்கும் பானத்துக்கும் சரீரத்துக்கும் ஹிதமுமாயிருப்பதை எனக்குச் சொல்லவேண்டும். மூடிசூட்டப்பட்டு ராஜ்யத்திலிருப்பவனும் [1] மித்திரர்களுடனும் [2] ஸுஹ்ருத்துக்களுடனும் பராக்ரமத்துடனும் கூடினவனுமான அரசன் எப்படியிருந்தால் ப்ரஜைகளை ஸந்தோஷப்படுத்துவான்? எந்த அரசன் இந்திரியங்களுக்கு ஈசனுயில்லாமையால் அவைகளை அடக்குந்தன்மை இல்லாதவனும் (தீய) நட்பிற்கும் ஆசைக்கும் ஈடுபட்டவனும் அஸத்துக்களான ஜனங்களைப் பரிபாலிக்க விருப்பமுள்ளவனுமாயிருக்கிறானே அவனுடைய வேலைக்காரர்களும் அவன்குலத்திலுதித்த யாவர்களும் வெறுப்படைவார்கள். அந்த அரசன் வேலைக்காரர்களின் பலத்தால் அடையத்தக்கபொருள்களை அடையமாட்டான். இரவும்பகலும் ராஜதர்மங்களைச் சிந்திக்கும் எனக்கு இவ்விஷயத்தைப் பிரஹஸ்பதிக்குஒப்பான புத்தியுள்ள நீர் சொல்லவேண்டும். ஆண்மையில் சிறந்தவரே! நமது குலத்திற்கு நன்மையைச் செய்யவிருப்பமுள்ள நீர் எங்களுக்கு உபதேசஞ் செய்யத்தக்கவர். அறிஞர்களில் பெரியவரான விதுரர் ஒருவரும் எப்பொழுதும் எங்களுக்கு உபதேசஞ் செய்கிறவர். நான் உம்மிடமிருந்து ராஜ்யத்திற்கு நன்மையை உண்டுபண்ணுவதும் குலத்திற்கு ஹிதமுமான வாக்கியத்தைக் கேட்டு அழிவற்ற அமிர்தத்தை அடைந்ததுபோலத் திருப்தியுள்ளவனாகி ஸுகமாகத் தூங்குவேன். எல்லாக்குணங்களும் நிரம்பினவர்களும் அருகிலிருப்பவர்களுமான வேலைக்காரர்கள் எவ்விதமிருக்கவேண்டும்? எவ்விதக்குணமுள்ளவர்களும் எந்தக் குலத்திலுதித்தவர்களுமான மனிதர்களுடன் யாத்திரைசெய்யவேண்டும்? அரசன் வேலைக்காரர்களில்லாமல் ஒருவனும்பரிபாலிக்க முடியாதவனன்றே? ராஜவம்சத்திலுதித்த மனிதர் அனைவரும் இந்த ராஜ்யத்தை ஆளுகிறார்களா?" என்று கேட்டனர்.

பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "பாரத! ராஜ்யமானது ஸஹாயமில்லாதவனால் ஆளமுடியாதது. அப்பா! பரதர்களில் சிறந்தவனே! ஸஹாயமில்லாதவனால் எவ்விதப்பொருள்களும் அடையமுடியா; எப்பொழுதும் அடைந்தபொருள்களை ரக்ஷிக்

---

1 உபகாரத்தை எதிர்பார்த்து வேலைசெய்கிறவர்.

2 உபகாரத்தை எதிர்பாராமல் வேலை செய்கிறவர்.

கவுமுடியாது. எந்த அரசனுடைய வேலைக்காரர்கள்யாவரும் [1] ஞானமும் விஞ்ஞானமுமுள்ளவர்களும் நன்மையை விரும்புகிறவர்களும் நற்குலத்தில் பிறந்தவர்களும் ஸ்நேஹமுள்ளவர்களுமாயிருக்கிறார்களோ அந்த அரசன் ராஜ்யத்தின் பயனை அடைவான். எந்த அரசனுடைய மந்திரிகள் நற்குலத்திற் பிறந்தவர்களும் (பிறரால்) பேதிக்கமுடியாதவர்களும் இணங்கி வவிப்பவர்களும் நல்வழியை அறிவதில் ஸமர்த்தர்களும் வருங்காரியத்தைச் செய்கிறவர்களும் காலத்தை அறிவதில் ஸமர்த்தர்களும் சென்றதைப் பற்றித் துக்கியாதவர்களுமாக இருந்துகொண்டு அரசனுடைய இஷ்டத்தை அனுஸரிக்கிறார்களோ அந்த அரசன் ராஜ்யத்தின் பயனை அடைவான். எந்த அரசனுடைய துணைவர்கள் ஸமமான ஸுகதுக்கமுள்ளவர்களும் பிரியத்தைச்செய்கிறவர்களும் பொருளைச் சிந்திப்பதில் முயற்சியுள்ளவர்களும் ஸைபக்குத்தக்கவர்களுமாயிருக்கிறார்களோ அந்தஅரசன் ராஜ்யத்தின்பயனையடைவான். எந்த அரசனுடைய அருகிலுள்ள தேசமானது எப்பொழுதும் துன்பமில்லாததும் பெருமையுள்ளதும் நல்வழியில் பிடிப்புள்ளதுமாயிருக்கிறதோ அந்த அரசன் ராஜ்யத்தின் பயனையடைவான். எந்த அரசனுடைய [2] பொக்கசமானது பொக்கசத்தைப் பெருகச்செய்கிறவர்களும் நம்பிக்கையுள்ளவர்களும் ஸந்தோஷமுள்ளவர்களும் புஷ்டியுள்ளவர்களுமான மனிதர்களால் பாதுகாக்கப்படுகிறதோ அவன் அரசர்களில் உத்தமனுவான். தான்யமுதலிய பொருள்களுள்ள கிருஹமானது பேதிக்கத்தகாதவர்களும் நம்பிக்கையுள்ளவர்களும் (பண்டங்களைச்) சேர்ப்பதில் கருத்துள்ளவர்களும் நல்ல பாத்திரர்களும் ஆசையில்லாதவர்களுமான மனிதர்களால் பாதுகாக்கப்பட்டால் மிகப்பெருகுவதாம். எந்த அரசனுடைய நகரிலுள்ள வ்யவகாரமானது [3] சங்க லிகிதர்களுடையதுபோலத் தர்மப்படி பயனை உண்டுபண்ணுவதாகக் காணப்படுகிறதோ அந்த அரசன் தர்மங்களின் பயனை அடைகிறான். எந்த அரசன் அரசர்களுக்குரிய தர்மங்களைத்தெரிந்து வேண்டியமனிதர்களையும் சேர்த்து ஆறிலொருபாகம் வரிபெற்றுக்கொள்ளுகிறானே அவன் தர்மத்தின் பயனை அடைவான்" என்றுசொன்னர்.

---

1 ஞானம் = மோக்ஷத்துக்குரிய அறிவு. விஞ்ஞானம் = சாஸ்த்ரங்களிலும் சில்பங்களிலுமுள்ள அறிவு. முறையே அறிவும் அனுபவஞானமும் என்றும் கொள்ளலாம். 2 ஒருசொல் விடப்பட்டது.

3 சாந்திபர்வம் 68-வது 69-வது பக்கங்களிற் காண்க.

நூற்றுப்பதினொருவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஒருமுனிவர் சிறுத்தைப்புலிமுதலியவற்றினிடமிருந்து பயந்த நாயை அந்த அந்த மிருகமாகச் செய்ததைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பரதர்களில் மிக்க பூஜ்யரே! எந்தச்சமயத்தில் அரசனுக்கு நற்குலத்திற்பிறந்த துணைவர்களில்லாமோ அப்பொழுது கீழானகுலத்தில்பிறந்தவர்களை ஸஹாயர்களாக ஏற்படுத்திக் கொள்ளலாமா? கூடாதா?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் எப்பொழுதும் ஸாதுக்களால் அனுஷ்டிக்கப்பட்டதும் உலகத்தில் பெரிய திருஷ்டாந்தமுமான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். இவ்விஷயத்திற்கேற்றதான அவ்விதிஹாஸமானது ஜமதக்நியின் குமாரரான பரசுராமருக்குத் தபோவனத்தில் ரிஷிகளில் மிகச்சிறந்தவர்களால் சொல்லப்பட்டு என்னால் கேட்கப்பட்டது. மனிதர்களில்லாத ஒருபெரிய அரண்யத்தில் கிழங்குகனிகளை ஆகாரமாகக்கொண்டவரும் அடங்கியவரும் இந்திரியங்களை அடக்கினவரும் வ்ரதங்களிலடங்கி ப்ரமப்பட்டவரும் வேதமோதலில் பெரிதாகக்கொண்டவரும் பரிசுத்தரும் உபவாஸங்களால் பரிசுத்தமான ஆத்மாவுள்ளவரும் எப்பொழுதும் நல்ல வழியிலிருப்பவருமான ஒருரிஷி இருந்தார். நல்ல அறிவுள்ள அந்தரிஷி உட்கார்ந்திருப்பதைக்கண்டு அவ்வனத்தில் ஸஞ்சரிக்கும் ஸிம்மங்களும் பெரும்புலிகளும் [1] சரபங்களும் கொழுத்த பெரிய யானைகளும் சிறுத்தைப்புலிகளும் காண்டாமிருகங்களும் கரடிகளும் பயங்கரமாகக்காணப்படும்மற்றுமுள்ள ப்ராணிகளும் யாவும் அவரருகிலிருந்துகொண்டிருக்கும். உத்ரத்தை ஆகாரமாகக்கொண்ட அந்த மிருகங்கள்யாவும் சிஷ்யர்கள்போல அந்த ரிஷியினுடையமனத்தையறிந்து ப்ரியத்தைச்செய்கின்றவைகளும் 'ஸுகமா' என்கிற ப்ரச்னத்துக்கு மறுமொழி கூறுபவைகளுமாயிருக்கும். ஸுகமாவென்கிற கேள்விக்கு விடையளித்தபின், அவைகள்யாவும் ஸுகமாகச்செல்லும். க்ராமத்திலுள்ள மிருகமான ஒருநாய் மாத்ரம் அவ்விடத்தில் அப்பெரிய முனிவரைவிட்டு விலகாமலிருந்தது. அது எப்பொழுதும் பக்தியுள்ளதும் ஆசையுள்ளதும் உபவாஸங்களால் மெலிந்ததும் பலமில்லாததும் கனிகிழங்குகளைச் சிறந்த ஆகாரமாகக் கொண்டதும் ஸாது

---

1 எண்காலுள்ளதும் ஸிம்மத்தைக் கொல்லவல்லதுமான ஒரு ம்ருகம்; இதனைப் பக்ஷியென்று சொல்வதும் உண்டு.

வானமணிதனைப்போலப் பொறுமையுள்ளதுமாகி, ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கும் பெரியபுத்தியுள்ள அந்தரிஷியினுடைய காலடியில் மனிதன்போல மனத்தைவைத்து ஸ்நேஹத்தில் மிகவும் கட்டுப்பட்டதாயிருந்தது. பிறகு,உதிரத்தைஆகாரமாகக்கொண்டதும் குரூரமும் மிகப்பயங்கரமும் பசியினால் துன்பப்படுத்தப்பட்டதும் தாகமுள்ளதுமான ஒரு சிறுத்தைப்புலியானது அந்த நாயின் நிமித்தம் மிகக்கூச்சலிட்டுக்கொண்டும் அடிக்கடி நாவால் நக்கிக் கொண்டும் அந்தநாயின் மாம்ஸத்தைவிரும்பி வாலைச்சுழற்றியடிப் பதுடன் வாயைத்திறந்துகொண்டும் காலாந்தகன்போல அந்த நாயை எதிர்த்துவந்தது. மனிதர்களுக்குப் பதியான அரசனே! அங்ஙனம் வரும் குரூரமான அந்தப்புலியைக்கண்டு நாயானது அந்தச்சமயத்தில் உயிரைவிரும்பிக்கொண்டு முனிவரிடம் சொன்னதைக்கேள். 'பகவானே! நாய்களுக்குச்சத்துருவான இச்சிறுத்தைப்புலியானது என்னைக்கொல்ல விரும்புகிறது. பெரிய முனிவரே! உமதனுக்ரஹத்தால் இப்புலியிடமிருந்து எனக்குப் பயமில்லாமலிருக்கவேண்டும். ஓ! மஹாபாஹுவே! அவ்விதம் செய்யவேண்டும். நீர் யாவற்றையும் அறிந்தவரென்பதில் ஸந்தேகமில்லை' என்றுசொல்லிற்று. எல்லாப்பிராணிகளின் சப்தங்களையும் அறிந்தவரும் அணிமாமுதலிய லித்தியுடன் கூடினவருமான அம்முனிவர் அந்தநாயின் பயத்துக்குக் காரணத்தையறிந்து அதன் அபிப்பிராயத்தையுமறிந்து அந்தநாயை நோக்கி, 'புத்திரன் போன்றவனே! அந்தகன்போன்ற சிறுத்தைப்புலியிடமிருந்து எவ்விதத்திலும் உனக்குப் பயமுண்டாகவேண்டாம்; இதோ நாயின் உருவத்தை விட்டுவிலகி நீ சிறுத்தைப் புலியாயிருப்பாய்' என்றுசொன்னர். உடனே, நாயானது புலியுருவத்தையடைந்து பொன்போன்ற உருவமுள்ளதும் ஆச்சரியமான அங்கங்களுள்ளதும் மிகப்ரகாசிக்கும் கோரப்பல்லுள்ளதும் பயமற்றதுமாகி வனத்தில் வஸித்தது. தனக்குச்சரியான மிருகமாக எதிரிலிருக்கும் அந்த நாயைக் கண்டவுடன், சிறுத்தைப்புலியானது அந்தக்ஷணத்தில் அதற்கு விரோதியல்லாததாயிற்று. பிறகு, மிக்கபயங்கரமானதும் திறந்த வாயுள்ளதும் பசியுடன் கூடியதும் அடிக்கடி வாயை நக்குகிறதும் உதிரத்தில் ஆசையுள்ளதுமான பெரிய புலியானது இச் சிறுத்தைப் புலியை எதிர்த்து வந்தது. பசியால் துன்பப்பட்டதும் கோரப் பல்லுள்ளதும் வனத்தில் ஸஞ்சரிப்பதுமான பெரிய புலியைக்கண்டு சிறுத்தைப் புலியானது உயிரைக் காப்பாற்றவேண்டி முனிவரைச் சரணமடைந்தது. பிறகு, சேர்ந்திருந்ததனாலுண்டான ஸ்நேஹத்தைப் பாராட்டும் முனிவ

ரால் அப்பொழுது அந்தச்சிறுத்தைப்புலியானது பெரியபுலியாகச் செய்யப்பட்டுச் சத்துருக்களைவிட அதிகபலமுள்ளதாயிற்று. அரசனே! பிறகு, அப்பெரும்புலியானது அதைக்கண்டு அடிக்கவில்லை. அப்பொழுது, அந்தநாயோ என்றால், பெரும்புலியின் தன்மையை அடைந்து பலமுள்ளதும் மாம்ஸத்தை ஆகாரமாகக்கொண்டதுமாகிக் கிழங்குகனிகளைப்புஜிக்க விரும்பவேயில்லை. ஓ! மஹாராஜனே! மிருகங்களுக்குப் பதியான ஸிம்மமானது வனத்திலிருக்கும்பிராணிகளை எப்பொழுதும் (புஜிக்க) விரும்புவதுபோலவே அந்தப்புலியும் அப்பொழுது அவ்விதமே இருந்தது.

நூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், முனிஸ்ரேஷ்டர் நாயைப் பற்பலமிருகமாகச் செய்ததையும் பிறகு தம்மைக் கொல்லவிரும்பிய அதை மறுபடியும் முன்போல நாயாகச்செய்ததையும் சொல்லியது.)

பர்ணசாலையின் அடியிலிருக்கும்புலியும் மிருகங்களைக் கொன்று திருப்தியடைந்து உறங்கிக்கொண்டிருந்தது. மேகம்போல் கிளம்பியதும் மதஜலம்பெருகிய கன்னப்ரதேசமுள்ளதும் உயர்ந்ததும் பத்மமென்றசுழியுள்ளதும் அகன்ற மஸ்தகமுள்ளதும் நல்லதந்தங்களுள்ளதும் பெரியசரீரமுள்ளதும் மேகத்தின்முழக்கம்போலக் கம்பீரமான முழக்கமுள்ளதுமான கொழுத்தயானையானது அவ்விடத்திற்குவந்தது. அவ்விதம்வருவதும் கொழுத்ததும் பலத்தால்கர்வங்கொண்டதுமான அந்தயானையைக்கண்டு புலியானது யானையிடமிருந்து பயந்துநடுங்கி அந்தரிஷியைச் சரணமடைந்தது. உடனே, ரிஷிஸ்ரேஷ்டரானவர் அந்தப்புலியை யானையாகச்செய்தார். பெரியமேகம்போன்ற அதைக்கண்டு அந்தயானையானது பயமுள்ளதாயிற்று. பிறகு, யானையாயிருக்கும் அந்தநாயானது ஸந்தோஷமடைந்து தாமரைக்கூட்டங்களிலும் ஸல்லகீமரக்காடுகளிலும் தாமரைப்பூவிலுள்ள தூளிகளால் அலங்கரிக்கப்பட்டதாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது, ஒரு ஸமயம் வெளியிற்சுற்றுவதும் ஒரு சமயம் நேரில்வருவதுமான அந்தயானைக்கு இரவும்பகலும் அந்தரிஷியின் பர்ணசாலையிலிருந்துகொண்டே காலங்கழிந்தது. பிறகு, மலையின்குகையிலுண்டானதும் பயங்கரமும் யானைக்கூட்டங்களுக்கு யமன்போன்றதும் சிவந்தசடைகளுள்ளதுமான ஸிம்மமானது அவ்விடத்திற்குவந்

தது. வந்த அந்தச்சிங்கத்தைக்கண்டு, சிங்கத்தினிடமுள்ளபயத்தினல் துன்புற்றதும் நடுக்கமுள்ளதுமான அந்தயானையானது பயந்து முனிவரைச் சரணமடைந்தது. பிறகு, முனிவரால் அப்பொழுது அந்தச் சிறந்த யானையானது சிங்கமாகச் செய்யப்பட்டதும். அஃது ஒரேஜாதியாயிருக்கும்காரணத்தால் வந்தஅந்தச்சிங்கத்தை லக்ஷ்யமாக நினைக்கவில்லை. வனத்திலுண்டான அந்தச் சிங்கமும் இதைக்கண்டு துன்பஞ்செய்யாமல் குறைந்தபலமுள்ளதாயிற்று. அந்தப்புதியவஸிம்மமானது அந்தஅரண்யத்தில் அந்த ஆஸ்ரமத்திலேயே ஸுகமாக வஸித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது பயமுள்ளவைகளும் உயிரில்விருப்பமுள்ளவைகளுமான மற்றச்சிறியமிருகங்கள் தபோவனத்தினருகில் காணப்படவில்லை. அவ்விதமிருக்குங்காலத்தில் ஒரு ஸமயத்தில் எல்லாப்பிராணிகளையும் கொல்லத்தக்கதும் பலமுள்ளதும் உதிரத்தை ஆகாரமாகக்கொண்டதும் பலபிராணிகளுக்கும் பயத்தை உண்டுபண்ணுவதும் எட்டுக்கால்களுள்ளதும் உயர்ந்தகண்ணுள்ளதுமான வனத்திலுள்ள ஒரு சரபமிருகமானது அந்தமுனிவரிருப்பிடத்தில் அந்தச் சிங்கத்தைக் கொல்லுவதற்குவந்தது. அவ்விதஞ்சென்ற அந்தச் சரபத்தைக்கண்டு சத்துருவென்றபயத்துடன்கூடிய சிங்கமானது நடுக்கமுற்று அஞ்சலிசெய்துகொண்டு முனிவரைச் சரணமடைந்தது. பகைவர்களை அடக்குகிறவனே! முனிவர் அதை அதிக பலமுள்ளசரபமாகச்செய்தார். உடனே, வனத்திலிருக்கும் அந்தச் சரபமானது எதிரிலுள்ளதும் பலமுள்ளதும் மிகக்கொடிதுமான முனிவருடையசரபத்தைதக்கண்டு வேகமாக வனத்திற்கு ஓடிற்று. அப்பொழுது இவ்விதம் முனிவரால் சரபமிருகத்தின் நிலைமையில் வைக்கப்பட்ட அந்தச்சரபமானது எப்பொழுதும் முனிவரின் பக்கத்திலிருந்துகொண்டு ஸுகத்தையடைந்தது. அரசனே! பிறகு, சரபத்தினிடமிருந்துபயந்த மிருகக்கூட்டங்கள் யாவும் பயத்தால் உயிரைவிரும்பிக்கொண்டு வனத்திலிருந்து திக்குக்கள்தோறும் ஓடின. மாம்ஸத்தை ஆகாரமாகக்கொண்ட அந்தச்சரபமிருகமும் மிக்கஸந்தோஷமடைந்து எப்பொழுதும் பிராணிகளைக் கொல்லுவதில் ஆசையுள்ளதாகிக் கனிகிழங்குகளை ஆகாரஞ்செய்ய விரும்பாததாயிற்று. பிறகு, அல்பமானநடக்கையுள்ளதும் பலத்துடன்கூடியதும் உயர்ந்த குலத்தில்சேர்க்கப்பட்டதுமான அந்தச்சரபமானது நன்றியறிவில்லாததாய் அம்முனிவரைக் கொல்லவிரும்பிற்று. அப்பொழுது மூந்தி நாயாக இருந்த அந்தச்சரபமானது, 'நான் இம்முனிவரின் மஹிமையால் வாக்கு ஒன்றுல்மட்டில் எல்லாப்பிராணிகளுக்கும் பயத்தை

உண்டுபண்ணுவதும் அடைய மிக்கஅரிதுமான சரபப்பிறவியை அடைந்தேன். இம்முனிவரை அடித்துப்பிழைக்கும் மிருகங்களும் அப்படியே பறவைக்கூட்டங்களும் இங்குள்ள மற்றப்பிராணிகளும் பயத்தால் நடுக்கமும் துன்பமுமுள்ளவைகளாயிருக்கின்றன. உலகில் எல்லாப்பிராணிகளையும்விட உத்தமமானபலம் நிலைபெற்றிருப்பதான அத்தகையசரபத்தன்மையை ஒருஸமயம் அவைகளுக்கும் இவர் கொடுப்பார். இவர் ஒருஸமயம் பக்ஷிகளுக்கும் கருடனுடையபலத்தை அளிப்பார். கருணையை அடைந்து மிக்கப்ரீதியுடன் ஸந்தோஷமுள்ளவராய் வேறு ஒருபிராணிக்குப் பலத்தைக் கொடாமலிருக்குங்காலத்திலேயே சீக்கிரம் நான் இந்தப்பிராம்மணரைக் கொல்லவேண்டும். முனிவரைக்கொன்றபின் ஸந்தோஷமின்றி நான் இங்கிருக்கமுடியும்' என்று ஆலோசித்தது. உடனே, அம்முனிவரால் தவவலிமையால் ஞானக்கண்ணால் (அஃது) அறியப்பட்டது. அறிந்தவுடன், அறிவுள்ளமுனிவர் சாபமளிக்கத்தொடங்கினர். 'பிருகுவின்குலத்தில் உதித்தவனும் அக்நிப்ரபனென்னும் பெயர்வாய்ந்தவனும் முனியுமானநான் மனத்தால் உலகத்தை எரிக்கவும் தரிக்கவும் சக்திபெற்றவன். தேவர்களும் சராசரமான எல்லா உலகமும் எனக்கு வசப்பட்டிருக்கின்றன. தேவர்களும் என்னிடம் பயந்துகொண்டு தம்தர்மத்தைவிடாதவர்களாயிருக்கிறார்கள். தம்தர்மத்தைவிட்டகன்ற எவர்களையும் வாக்கு ஒன்றால்மட்டில் எரித்துவிடுவேன். அடா! துன்பமில்லாத சரபத்தன்மையை என்னால் அடைவிக்கப்பட்ட நீ எவ்வளவு? எல்லாப்பிராணிகளுள்ளும் கொடியதும் தாழ்ந்ததும் அசுத்தியுள்ளதும் நாயுமான நீ சிறுபுலியாயிருப்பதை அடைந்தாய். சிறுபுலியாயிருந்து வேங்கைத்தன்மையை அடைந்தாய். அதிலிருந்துகொழுத்தயானையாயும் யானையாயிருந்து ஸிம்மமாயும்வந்தாய். சிங்கமாயிருந்து பலமடைந்த நீ அதற்கு மேலும் சரபத்தன்மையை அடைந்தாய். இவ்விதம் நீ ஸ்நேஹத்தால் சூழப்பட்ட என்னால் பலவிதமாயுண்டுபண்ணப்பட்டவனேயல்லாமல் அந்த அந்தக்குலத்தில் சேர்ந்தவனல்ல. ஏ! பாபி! இவ்விதம் பாபமில்லாத என்னை நீ கொல்லவிரும்பிய காரணத்தால் திரும்பவும் உன் பிறப்பையடைந்து நாயாயிருக்கக்கடவாய்' என்று சபித்தார். பிறகு, முனிவரைப்பகைத்ததும் துஷ்டஸ்வபாவமுள்ளதும் அவிவேகமுள்ளதும் அறிவற்றதுமான சரபமானது ரிஷியால்சபிக்கப்பட்டுத் திரும்பவும் அந்தநாயுருவத்தை அடைந்தது.

நூற்றுப்பதினேட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் மந்திரிமுதலானவர்களின் குணங்களைச் சொல்லியது.)

ரிஷியால் ஹுங்காரஞ்செய்யப்பட்டுத் தபோவனத்திலிருந்து வெளியில்விலக்கப்பட்டதும் பாபமுள்ளதும் தன்னிலைமையை அடைந்ததுமான அந்தநாயானது பெருந்துன்பத்தை அடைந்தது. இவ்விதமிருப்பதால், புத்தியுள்ள அரசன் சீலம், சுத்தி, நேர்மை, ஸ்வபாவம், புத்தி, கல்வி, நடை, குலம், அடக்கம், கருணை, பலம், வீரியம், பெருமை, மனவடக்கம், க்ஷமை இவைகளை அறிந்துகொண்டு யோக்யர்களாயிருப்பவர்களை மந்திரிகளாகவும் வேலைக்காரர்களாகவும் அந்த அந்த அதிகாரங்களில் நிலைக்கச்செய்து நன்றுகரக்ஷிக்கவேண்டும். அரசன் பரீக்ஷை செய்யாமல் வேலைக்காரனை நியமிக்கக்கூடாது. கெட்டகுலத்திலுதித்தமனிதர்களால் சூழப்பட்ட அரசன் ஸுகமாக வளரமாட்டான். அரசனே! நற்குலத்திற்பிறந்தவன் அவிவேகியாயிருந்தாலும் குற்றமில்லாமல்நிந்திக்கப்பட்டாலும் அக்குலத்திற்பிறந்தகாரணத்தால் எப்பொழுதும் பாபத்தில் புத்தியைச்செலுத்தமாட்டான். கெட்டகுலத்திலுதித்த அவிவேகியானமனிதனை ஸாதுக்களை அடுத்து அடையமுடியாத ஐச்வர்யத்தை அடைந்தாலும் நிந்திக்கப்பட்டால் பகைத்தன்மையை அடைவான். காக்கையும் நாயும் பூனையும் பாம்பும் கெட்டகுலத்திலுதித்தமனிதனும் அவ்விதமானஸ்திரீயும் ஸமமாகச்சொல்லப்படுகிறார்கள். ஸ்திரீயானாலும் அல்லது புருஷனானாலும் கெட்டகுலத்திற்பிறந்தவர்களை லோகபாலர்களும் எப்பொழுதும் பயத்துடன் பார்க்கிறார்கள். அவர்களிடத்திலும் சீலமானது பெருமைக்குக்காரணமாகும். மனிதனும் ஸ்திரீயும் கெட்டகுலத்திற்பிறந்தவர்களாயினும் கொல்லாமையும் சீலமுமுடையவர்களாயிருந்தால் தர்மம் [1]வ்ருத்தியடையும். மஹாராஜனே! ப்ருஹஸ்பதி, தர்மத்தைத்தப்பற்றிய ச்லோகங்களைச் சொல்லுகிறார். ராஜனே! அவைகள்யாவற்றையுங்கேட்டு மனத்தில் வைத்துக்கொள். அவைகளின் பொருளாவது, 'அடக்கமுள்ளரிஷிபோலச் சுத்தமானசெய்கையுள்ளவனும் நன்னடையிலிருப்பவனுமானவன் கறுத்தசண்டாளனாயினும் அவனைத் தேவர்கள் பிராம்மணனுக்கொப்பாக அறிகிறார்கள்.

---

1 முன்பின் பொருத்தத்திற்குவேண்டி இவ்விதம் எழுதப்பட்டது. மூலத்தில் 'கலக்கமடையும்' என்றிருக்கிறது.

பிரஜைகளுக்கு ஹிதனை ஒருவன் எல்லாப்பிராணிகளின்நன்மை யையும் வேண்டிப் பாபியான ஒருபிராணியைக் கொல்லுவானுகில் அந்தக்காரியபத்தால் அவன் தீங்கு செய்தவனுகமாட்டான். பசுக் களுக்கும் பிராம்மணர்களுக்கும் ஹிதத்திற்காகவும் குழந்தைகளை யும் ஸ்திரீகளையும் கிழவர்களையும் நோயாளிகளையும் ரக்ஷிக்கவேண் டியதற்காகவும் எவன் சிறுத்தைப்புலியையும் சரபத்தையும் சிங் கத்தையும் வெங்கைப்புலியையும் யானையையும் எருமைக்கடாவை யும் காட்டுப்பன்றியையும் பன்றியையும் நாயையும் பாம்பையும் கொல்லுகிறுனே அவன் தர்மம்தெரிந்தவன். பிராம்மணனுயிருந் தும் பாபத்தைச்செய்கிறவனும் மிலேச்சனுயிருந்தும் பரிசுத்த னும் தர்மத்தைச் செய்கிறவனுமாயிருந்தால், அவர்களுள் மிலேச் சன் சிறந்தவனும் பிராம்மணன் மிக்க பாபியுமாவார். கெட்ட குலத்தில் பிறந்தவனுனலும் நற்குலத்தில் பிறந்தவனுனலும் ஒருமனிதன் நல்ல சீலமுள்ளவனுயிருந்தால் அவனுடைய ஸ்வ பாவத்தையும் நிலைத்ததென்றே நிலையற்றதென்றே தெரிந்து கொண்டு அரசன் திருப்தியுள்ளவனுகி உயர்ந்ததான வேலை யைக் கொடுக்கவேண்டும். அரசன் கெட்ட நடையுள்ள மனி தனைக் கெட்ட காரியங்களில் ஏவவேண்டும்' என்பது. நற் குலத்தில் பிறந்தவனும் கல்வியில் சிக்ஷிக்கப்பட்டவனும் பண்டி தனும் ஞானவிஜ்ஞானங்களில் தேர்ந்தவனும் எல்லாச் சாஸ் திரங்களுடைய பொருளின் உண்மையையும் அறிந்தவனும் பொறுக்குந் திறமையுள்ளவனும் நல்ல தேசத்திலுண்டானவனும் நன்றியறிவுள்ளவனும் பலமுள்ளவனும் பொறுமையுள்ளவனும் மனத்தையடக்கினவனும் இந்திரியங்களை ஜயித்தவனும் பேராசை அற்றவனும் கிடைத்ததைக்கொண்டுஸந்தோஷிப்பவனும்எஜமான னுக்கும் மித்திரனுக்கும் க்ஷேமத்தை விரும்புகிறவனும் சேர்ந்தி ருப்பவனும் தேசகாலங்களை அறிந்தவனும் யாவற்றையும் சேர்ப் பதில் விருப்பமுள்ளவனும் பரிசுத்தியுள்ளவனும் நியாயமாகப் பேசுகிறவனும் நன்மையை விரும்புகிறவனும் சோம்பலில்லாதவ னும் நியாயமான ஆசாரமுள்ளவனும் தன்தேசத்திற்குவேண்டிய ஸந்திவிக்ரஹங்களில் பண்டிதனும் பிரவீத்தியுள்ளவனும் (அறம், பொருள், இன்பமாகிய) மூவகைப்பயனையும் அறிந்தவனும் நகரி லுள்ளவர்களுக்கும் தேசத்திலுள்ளவர்களுக்கும் பிரியனும் படை களைப் பகுத்துவைப்பதென்னும் வ்யூகத்தின் உண்மையையறிந்த வனும் சேனைகளை உத்ஸாகப்படுத்துவதில் ஸமர்த்தனும் 1 இங்கி தத்தையும் எண்ணத்தைவெளியிடும் முகக்குறிகளின் உண்மையை

1 அபிப்பிராயத்தை விளங்கச்செய்யும் சேஷ்டை.

யும் அறிந்தவனும் சேனைகளின்பிரயாணத்தில் ஸமர்த்தனும் யானை குதிரைகளைப் பழக்குவதின் உண்மையில் அறிவுள்ளவனும் அகங் காரமற்றவனும் சுறுசுறுப்புள்ளவனும் தைரியமுள்ளவனும் அடக்கமுள்ளவனும் பலமுள்ளவனும் நியாயமாக ஆலோசிக்குந் திறமையுள்ளவனும் பரிசுத்தனும் பரிசுத்தமான ஜனங்களால் சூழப்பட்டவனும் நல்லவேஷமுள்ளவனும் ஸுகமாகப்பார்க்கத் தக்கவனும் காரியங்களை நிர்வஹிப்பவனும் நீதியில் ஸமர்த்தனும் ஆறு குணங்களுடையவனும் புத்தியில் தடையற்றவனும் வணக்க முள்ளவனும் குரூரமற்றவனும் மிருதுவாகப் பேசுகிறவனும் தீர னும் சூரனும் பெரிய ஸம்பத்துள்ளவனும் தேசகாலங்களுக்குத் தக்கபடிசெய்கிறவனுமாயிருப்பவனை மந்திரி அதிகாரத்தில்வைத்து அவனை எந்த அரசன் அவமதியாமலுமிருக்கிறானே அந்த அரசனு டைய ராஜ்யமானது சந்திரனுடைய சந்திரிகைபோலப் பெருகும். இப்படிப்பட்ட குணங்களுடன் கூடியவனும் [1] சாஸ்திரங்களில் ஸமர்த்தனும் தர்மத்தை முக்கியமாகக்கொண்டவனும் பிரஜை களைப் பாதுகாப்பதில் மிகப்பிரீதியுள்ளவனும் தீரனும் பொறுமை உள்ளவனும் பரிசுத்தனும் வேகமுள்ளவனும் ஸமயத்திற்குத்தக்க முயற்சியையறிந்தவனும் கேட்கவிருப்பமுள்ளவனும்கேட்டவனும் கேட்கிறவனும் [2] ஊஹத்திலும் [3] அபோஹத்திலும் ஸமர்த்தனும் சிறந்த புத்தியுள்ளவனும் ஞாபகசக்தியுள்ளவனும் நியாயமாகக் காரியங்களைச் செய்கிறவனும் அடக்கமுள்ளவனும் எப்பொழுதும் பிரியமாகப் பேசுகிறவனும் விரோதியிடத்திலும்பொறுமையுள்ள வனும் [4]கொடுப்பது நல்லாமலிருக்கும்படி தானேசெய்கிறவனும் ஸ்ரத்தையுள்ளவனும் காட்சிக்கு இனியவனும் எப்பொழுதும் துன்பமுள்ளவர்களுக்குக் கைகொடுப்பவனும் ஹிதத்தைச்செய் யும் மந்திரிகளுள்ளவனும் நீதியில் விருப்பமுள்ளவனும் தானென் னும் அஹங்காரம்பேசாதவனும் ஸுகதுக்க முதலிய த்வந்த்வங் களை விலக்காதவனும் (தனக்குத்தோற்றியபடி) ஏதாவதொன் றைச் செய்யாதவனும் வேலைசெய்தால் [5] அமாத்தியர்களுக்கு உப காரஞ்செய்கிறவனும் வேலைக்காரர்களிடம்பிரீதியுள்ளவனும் ஜனங் களைச்சேர்க்கிறவனும் புத்தியில் தடைப்படாதவனும் எப்பொழு தும் தெளிந்தமுகமுள்ளவனும் ரக்ஷிக்கிறவனும் வேலைக்காரர்களை

---

1 இரண்டு சொற்கள் விடப்பட்டன.

2 3, ஸபாபர்வம் 14 - ம் பக்கம் 3. 4. குறிப்புக்களிற் காண்க.

4 வேறுபாடங் கொள்ளப்பட்டது. 'அதிகமாகக் கொடுக்காதவனும் கார்யங்களைத் தானே நேரில் செய்கிறவனும்' என்பது மூலத்துக்குப் பொருள். 5 வேறுபாடங் கொள்ளப்பட்டது.

அபேக்ஷிக்கிறவனும் கோபமில்லாதவனும் மிகப்பெரிய மனமுள்ளவனும் நியாயமாகத்தண்டிப்பவனும் தண்டமில்லாமலிராதவனும் தர்மகார்யங்களைக் கட்டளையிடுகிறவனும் சாரர்களைக் கண்ணுக்கொண்டவனும் பிரஜைகளைக்கவனிக்கிறவனும் எப்பொழுதும் அறம்பொருள்களில் ஸமர்த்தனுமாக நூறுகுணங்கள் நிறைந்த அத்தகைய அரசன் விரும்பத்தக்கவனாவான். அரசனே! ராஜ்யத்தைத் தரிக்கும்விஷயத்தில், துணைவர்களும் நல்லமனிதர்களும் எல்லாக்குணங்களின் கூட்டங்களுடனுங் கூடியவர்களுமான யுத்தவீரர்களையும் தேடவேண்டும். ராஜ்யத்தின் வளர்ச்சியை விரும்பும் அரசன் அவர்களை அவமானஞ்செய்யக்கூடாது. யுத்தத்தில் ஸாமர்த்தியமுள்ளவர்களும் நன்றியறிவுள்ளவர்களும் சாஸ்திரங்களில் ஸமர்த்தர்களும் தர்மசாஸ்திரங்களை நன்குகற்றவர்களும் காலாட்களால் சூழப்பட்டவர்களும் பொருளிலும் மானத்திலும் பெருமையுள்ளவர்களும் ரதத்தைநடத்துவதில் ஸமர்த்தர்களும் அம்புகளிலும் அஸ்த்ரங்களிலும் ஸமர்த்தர்களுமான யுத்தவீரர்கள் எந்த அரசனுக்கு இருக்கிறார்களோ அவனுக்கு இந்தப் பூமியானது உடைமையாகும். ஜாதிகளை அவமதியாமையும் வேலைக்காரர்களிடம் வஞ்சனையில்லாமையும் பொருள் ஸம்பாதிப்பதில் ஸாமர்த்தியமுமுள்ள அரசனிடம் இப்பூமி நிலைபெற்றிருக்கும். எந்த அரசனிடம் சோம்பலும் தூக்கமும் குடிமுதலிய வ்யஸனங்களும் விசேஷமாகப் பரிஹஸிக்கக்கூடியதன்மையும் இல்லையோ அவனிடந்தான் இப்பூமி நெடுங்காலமிருக்கும். பெரியோர்களை ஸேவிப்பவனும் பெரிய உத்ஸாஹமுள்ளவனும் எல்லாஜாதிகளையும் ரக்ஷிப்பவனும் எப்பொழுதும் தர்மத்தைச்செய்கிறவனுமான அரசனிடம் இப்பூமி நெடுங்காலமிருக்கும். நியாயவழியை அனுஸரித்தலும் விடாமுயற்சியும் சத்துருக்களை அலக்ஷியஞ்செய்யாமையுமுள்ள அரசனிடம் இப்பூமி நெடுங்காலமிருக்கும். பௌருஷமும் தெய்வமும் அவைகளின் வேற்றுமையும் முன்னிருந்த மனுவால் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. அவைகளையே சொல்லுகிறேன்; கேள். அரசர்களுக்குப் பௌருஷத்தையே பிருஹஸ்பதி கூறுகிறார். குருக்களிற் சிறந்தவனே! நீ எப்பொழுதும் நீதி அநீதிகளின்விதியைத்தெரிந்தவனாகஇரு. விரோதிகளின் இடைவெளியைக் கண்டுகொள்ளுகிறவனும் மித்திரர்களுக்கு உபகாரஞ்செய்கிறவனும் வேலைக்காரர்களின் விசேஷங்களை அறிகிறவனுமான அரசன் ராஜ்யத்தின் பயனை அடைகிறான். எந்த அரசன் எப்பொழுதும் முயற்சிசெய்யும் தன்மையுள்ளவனும் நிறைந்த ஆலோசனையுள்ளவனும் யாவற்

றையும்சேர்ப்பதில் முயற்சியுள்ளவனுமாயிருக்கிறானே அந்த அரசன் அரசர்களில் மிகச்சிறந்தவனுவான். ஓ! பாரத! வீரர்கள் ஏறிய ஆயிரம்குதிரைகளுள்ளவனும் பலமனிதர்களைச்சேர்த்தவனுமான அரசனல் பூமிமுழுமையையும் ஜயிக்கக்கூடும்.

நூற்றுப்பத்தொன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், வேலைக்காரர்களை நியமிக்கவேண்டியதையும் அவர்களின் லக்ஷணங்களையும் சொல்லியது.)

இவ்விதமான குணங்களுடன்கூடிய வேலைக்காரர்களைத் தம் தம் ஸ்தானத்திலும் வேலைகளிலும் எந்த அரசன் ஏவுகிறானே அந்த அரசன் ராஜ்யத்தின்பயனை அடைகிறான். [1]நாயானது தனக்குரியநிலைமையையும் அளவையும் மீறிப் பூஜித்து மேலாகவைக்கத் தக்கதன்று. தன்னிலைமையிலிருந்துதூக்கி வேறு ஸ்தானத்தில் வைக்கப்படும் நாயானது தவறுதலை அடையும். தம்ஜாதிக்குரிய குணங்கள் நிரம்பியவர்களும் தமக்குள்ளதர்மங்களில் நிலைபெற்றவர்களுமானவர்களை அமாத்யாதிகாரத்தில் வைக்கவேண்டும். தகாதவிடத்தில் அதிகாரம்கொடுப்பது யுக்தமன்று. எந்த அரசன் வேலைக்காரர்களுக்குத் தக்கவேலைகளைக் கொடுக்கிறானே அவன் வேலைக்காரர்களின் குணங்களாலுண்டாகும் பயனை அடைகிறான். சரபம் சரபஸ்தானத்திலும் சிங்கம் சிங்கஸ்தானத்திலும் வேங்கை வேங்கைஸ்தானத்திலும் சிறுத்தை சிறுத்தை ஸ்தானத்திலும் எவ்விதமிருக்கத்தக்கவையோ அவ்விதமே வேலைக்காரர்களையும் விதிப்படி அவரவர்களுக்குத்தக்க வேலைகளில் வைக்கவேண்டும். வேலைகளின்பயனை அடையவிரும்பும் அரசன் அந்த வேலைக்காரர்களை விபரீதமாயிருக்கும்படி செய்யக்கூடாது. அளவைமீறி விபரீதமாக வேலைக்காரர்களைஸ்தாபிக்கிற புத்தியில்லாத அரசன் பிரஜைகளுக்கு ஸந்தாஷத்தை உண்டுபண்ணமாட்டான். குணத்தைதவிரும்பும் அரசன், சிறுவர்களையும் நீசர்களையும் அறிவற்றவர்களையும் இந்திரியங்களை அடக்காதவர்களையும் கெட்டகுலத்தில் பிறந்தஜனங்களையும் தன் அருகில் வைத்துக்கொள்ளக்கூடாது. ஸாதுக்களும் நல்லகுலத்திற் பிறந்தவர்களும் சூரர்களும் அறிவுள்ளவர்களும் அஸூயையற்றவர்களும் பெருந்தன்மையுள்ளவர்களும் பரிசுத்தர்களும் ஸமர்த்தர்களுமானமனிதர்கள் அரசனுக்கு அருகிலிருக்கத்தக்கவர்களாவார்கள். [2]கீழ்ப்படிந்தவர்களும்அரசனேமென்மையாகக்கொண்

---

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

ஊடுகிறவர்களும் அடக்கமுள்ளவர்களும் பரிசுத்தர்களும் இயற்கையிலமைந்த சுபகுணமுள்ளவர்களும் தம்தம் நிலைமையிலிருந்து தவறுதவர்களுமாயிருப்பவர்கள் அரசனுக்கு வெளியில்ஸஞ்சரிக்கும் பிராணனுவார்கள்.

சிங்கத்தின்பக்கத்தில் எப்பொழுதும் சிங்கமே பரிவாரமாயிருக்கவேண்டும். சிங்கமல்லாதது சிங்கத்துடன்கூடினால் அது சிங்கம்போலப் பயனை அடையும். சிங்கத்தின் செய்கைகளின் பயனில் விருப்பமுள்ளசிங்கமானது நாய்களால் சூழப்பட்டதாயிருந்தால், அது நாய்களால் சூழப்பட்ட காரணத்தால், சிங்கத்தின் பயனை அனுபவிக்கத் திறமையுள்ளதாகாது. அரசனே! இவ்விதம் சூரர்களும் அறிவுள்ளவர்களும் பலகல்விகளுள்ளவர்களும் நற்குலத்தில் பிறந்தவர்களுமான மனிதர்களுடன் கூடியிருந்தால் பூமிமுழுமையையும் ஜயிக்கக்கூடும். ஸைவகர்களுள்ளவர்களிற் சிறந்தவனே! கல்விபில்லாதவனும் நேராக இல்லாதவனும் அறிவில்லாதவனும் பெரியகீர்த்தியில்லாதவனுமான வேலைக்காரனை அரசர்கள் பக்கத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. அரசனுக்குஹிதர்களான எந்தவேலைக்காரமனிதர்கள் எஜமானன் காரியத்தைப் பெரிதாகக்கொண்டு அம்புபோலத் திரும்பாமற் செல்லுகிறார்களோ அவர்களிடத்தில் எப்பொழுதும் நன்மொழியைப் பேசவேண்டும். அரசர்கள் முயற்சியெடுத்துக்கொண்டு எப்பொழுதும் பொக்கசத்தை ரக்ஷிக்கவேண்டும். அரசர்கள் பொக்கசத்தையே மூலமாகக்கொண்டவர்களாகையால் (அரசன்) பொக்கசத்தைப் பெருகச்செய்கிறவனாக இருக்கவேண்டும். எப்பொழுதும் உன்னுடைய தான்யமிருக்கும் வீடானது நன்றாகச் சேர்க்கப்பட்ட தான்யங்களால் நிரம்பியிருக்கவேண்டும். நீ ஸாதுக்கள் விஷயத்தில் எப்பொழுதும் பொருள்களையும் தான்யங்களையும் கொடுப்பதைப் பெரிதாகக்கொண்டிரு. உன்னுடைய வேலைக்காரர்கள் விடாமுயற்சியுள்ளவர்களும் யுத்தத்தில் ஸமர்த்தர்களுமாயிருக்கவேண்டும். குதிரைகளைப்பற்றிய பிரயோகங்களிலும் ஸாமர்த்யமிருக்கவேண்டும். பாண்டுவின் குமாரனே! ஞாதிகளையும் பந்துக்களையும் கவனிக்கிறவனும் மித்திரர்களாலும் ஸம்பந்திகளாலும் பூஜிக்கப்படுகிறவனும் பட்டணத்திற்கு வேண்டிய காரியத்தின் ஹிதத்தைக் கவனிக்கிறவனுமாயிரு. அப்பா! உறுதியைக் கொடுக்கத்தக்க இந்தப்புத்தியும் விசேஷ அறிவும் என்னால் உனக்கு உபதேசிக்கப்பட்டன. இது விஷயத்தில் நாயின் கதையை உதாரணம் கூறினேன். திரும்ப எதைக்கேட்க விரும்புகிறாய்?" என்றுகேட்டனர்.

நூற்றிருபதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பிரஜைகளைப் பாலனஞ்செய்யுமுறை முதலியவற்றைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! ராஜதர்மத்தின்பயனை அறிந்த முன்னோர்களால் முன்காலத்தில் உபதேசிக்கப்பட்ட பல ராஜதர்மங்கள் உம்மால் கூறப்பட்டன. பரதர்களிற்சிறந்தவரே! ராஜதர்மங்களை அறிந்த ஸாதுக்களுக்கு ஸம்மதமும் முன்னடந்தவைகளும் விரிவாகச் சொல்லப்பட்டனவுமான அவற்றையே சுருக்கமாக உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"எல்லாப்பிராணிகளையும் ரக்ஷிப்பது க்ஷத்திரியர்களுக்குரிய உத்தமதர்மமென்று சொல்லப்படுகிறது. அரசனே! அந்த ரக்ஷணத்தைச்செய்யும் முறையைக் கேள். மயிலானது பலவர்ணங்களுள்ள தோகைகளை எவ்விதம் தரிக்கிறதோ அவ்விதம் தர்மம் அறிந்த அரசன் பலவிதமான ரூபத்தைக்கொள்ளவேண்டும். கடுமையையும் கபடத்தையும் (வரி) வாங்குகின்றதையும் ஸத்தியத்தையும் நேர்மையையும் தைரியத்தையும் அடைந்து நடுநிலைமையாயிருக்கும் அரசன் ஸுகமடைவான்; [1] எந்தவிஷயத்தில் எவ்விதஉருவம் இருக்கவேண்டுமோ அந்தவிஷயத்தில் அந்த உருவத்தைக் காட்டவேண்டும். பல உருவமுடைய அரசனுக்கு ஸூக்ஷ்மமானவிஷயமும் நாசமடையாது. மயிலானது சரத்காலத்தில் சப்தியாமலிருப்பதுபோல அரசன் எப்பொழுதும் மந்த்ராலோசனையை (வெளிவிடாமல்) காக்கவேண்டும். (மயில் இனிமையான குரலும் உடம்பின் அழகும் தன்செய்கையில் ஸாமர்த்தியமும் பொருந்தியிருப்பதுபோல) அரசன் அழகான சொற்களுள்ளவனும் ஸம்பத்துள்ளவனும் சாஸ்திரங்களில் ஸமர்த்தனுமாயிருக்கவேண்டும். நீருருவிகளில் (மயிலானது நாட்டமுள்ளதாயிருப்பதுபோல அரசன்) வரவுசெலவுகளில் ஜாக்ரதையுள்ளவனாயிருக்கவேண்டும். மயிலானது மலையிலுள்ள மழைஜலங்களை அடுப்பதுபோல (அரசன்) வித்திபெற்ற பிராம்மணர்களை அடுக்கவேண்டும். [2] பொருளில் விருப்பமுள்ள அரசன் (மயில் தன் தலையிலுள்ள சிகையை எப்போதும் தூக்கிவைத்துக்கொண்டிருப்பதுபோல இயற்கையில் தர்மிஷ்டனென்று பிறர்நினைக்கும்படி) தர்மத்துக்குக்கொடிகட்டுவதுபோல அடை

---

1 'சிகையில்குரூரனகவும் ரகையில் சாந்தனகவும் இருக்கவேண்டும்' என்பது பழையவுரை. 2 வேறு பாடம்.

யாளங்களைக் காண்பிக்கவேண்டும். (மயிலானது தன்னைப் பாது காத்துக்கொண்டு பாம்புமுதலியவற்றை அடிக்க எப்போதும் ஜாக்ரதையாயிருப்பதுபோல) அரசன் எப்பொழுதும் தண்டத்தை மேற்கொண்டவனும் ஆசாரத்தில் அஜாக்ரதையில்லாதவனுமாயிருக்கவேண்டும். மயிலானது இருக்கிற 1 மரத்திலிருந்து அதிகச் செழுமையுள்ள மரத்துக்குச் செல்வதுபோல (அரசன்) உலகிலுள்ள வரவுசெலவைக்கண்டு வரவு அதிகமும் செலவு குறைவுமாகவுள்ள கார்யங்களில் செல்லவேண்டும். 2 தன் கூட்டத்தார்களில் தானே உத்தரவு செய்கிறவனும், சத்துருவினுடைய பூமியிலுள்ள தான்யங்களைக் குதிரைமுதலியவற்றின் நடைகளால் அழிக்கிறவனுமாக இருக்கவேண்டும். தன் பக்ஷம் விருத்தியடைந்தபிறகு ஸஞ்சரிக்கவேண்டும். தன்குறையைக் கவனிக்கவேண்டும். மயில் தன் தோற்றத்திலேயே காக்கை முதலியவற்றின் குறைதோன்றும்படி இருத்தல்போலத் தன்நேர்மையிலேயே சத்துருவின் குற்றங்கள் வெளியாகும்படி இருத்தல்வேண்டும். 3 வேட்டை முதலிய வ்யாஜத்தால் வெளியில் ஸஞ்சரித்துக்கொண்டு எதிரிகளின் பக்ஷங்களை அழிக்கவேண்டும். காட்டிலுள்ள மலர்களைப்போலச் சப்தாதி விஷயங்களை நேருங்காலத்து விருப்புவெறுப்பின்றி அனுபவிக்கவேண்டும். (மயில் உயர்ந்த செழிப்புள்ள மலைகளை அடுப்பதுபோல அரசன்) உயர்ந்தவர்களும் வ்ருத்தியடைந்தவர்களும் மலைபோன்றவர்களுமான அரசர்களை அடுக்கவேண்டும் மயில் களைத்தகாலத்து நிழலை அடுப்பதுபோல (அரசன்) இளைத்தகாலத்தில் ஞாதியை அடுக்கவேண்டும். மயில் வேனிற்காலத்தில் மரத்தில் மறைந்து ஒன்றுவதுபோல ரஹஸ்யமாக ரக்ஷகனை அடையவேண்டும். 4 மயில் வருஷாகாலத்தில் களிப்பதுபோல இரவில் ஜனமில்லாத இடத்தில் களிக்கவேண்டும். மயிலினுடைய குணம்போலவே ஸ்திரீகளால் ரக்ஷிக்கப்பட்டவனுக ஸஞ்சரிக்கவேண்டும். கவசத்தை விடக்கூடாது. தானே தன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். (மயில் தான்ஸஞ்சரிக்கும் இடங்களில் போடப்பட்ட வலைகளை

---

1 'மதுரஸத்தைப் பெருகவிடும் பனைமரத்தில் ஒருபக்கத்தில் மதுவை எடுப்பதுபோல ஜனங்களுக்கு ஹிம்ஸையில்லாமல் உலகத்திலுள்ள வரவு செலவுகளுக்குத் தக்கபடி வரியை வாங்கவேண்டும்' என்பது வேறு பாடத்தின் கருத்து.

2 'தன் கூட்டத்தார்கள் விஷயத்தில் சுத்தனும்' என்பது வேறு பாடம். 3 'ஸஞ்சரந்' என்ற பாடம் கொள்ளப்பட்டது.

4 'மஜ்ஜத' என்று பாடங்கொண்டு, 'மயில் ராத்ரியில் வெளிப்படாததுபோல அரசன் மழைக்காலத்தில் வெளிப்படாமல் அந்தப்புரத்தில் ஸஞ்சரிக்கவேண்டும்' என்பது பழைய உரை.

விலக்கிக் கொள்வதுபோல அரசன்) சாரர்களால் காண்பிக்கப் பட்டவிடங்களில் கபடமாக வைக்கப்பட்ட [1] பாசங்களை விலக்க வேண்டும்; தெரிந்திருந்தும் அவ்விடத்திற் செல்லுவானுகில் நாச மடைவான். இவ்விதம் மயிலின் தர்மப்படி எப்பொழுதும் நடந்து வரும் மனிதன் (மயிலானது விஷமும் கோபமும் கோணலான நடையுமுள்ள பாம்புகளைக் கொல்லுவதுபோல) அதிக விஷமுள்ள வர்களும் கோபமுள்ளவர்களும் கோணலான நடையுள்ளவர்களு மான சத்துருக்களைக் கொல்லுவான். (மயில் புழுமுதலியவற்றை வெறுக்காததுபோல) இகழ்ச்சியாயிருப்பவைகளிடத்தில் அலட்சி யைப்படக்கூடாது. (மயில் உறுதியான பக்ஷங்களை அடைந்திருப் பதுபோல) உறுதியான மூலமுள்ள மந்திரிமுதலிய தன் பக்ஷங் களை நிலைக்கவைத்துக் கொள்ளவேண்டும். எப்பொழுதும் மயி லானது தன் இஷ்டப்படி தன்பக்ஷங்களை விரிவாகச்செய்வது போலத் தன் பக்ஷத்தார்களைப் பரவச்செய்கிறதென்கிற சிறந்த காரியத்தைச் செய்யவேண்டும். எல்லா இடங்களிலிருந்தும் நல் லறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டும். விட்டிற் பூச்சியின் கூட்ட மானது காடுகளில் விழுந்து இலையில்லாமற்செய்வதுபோல ஒன்று சேர்ந்து சத்துரு ராஜ்யங்களில் செல்லவேண்டும். அரசன் இப் படி மயில்போலத் தன் ராஜ்யத்தைப் பரிபாலிக்கவேண்டும். ஸமர்த்தனை அரசன் தனக்கு அறிவை உண்டுபண்ணும் நீதி யைச் செலுத்தவேண்டும். தன்புத்தியால் தன்னை அடக்கிக் கொண்டு பிறர்புத்தியாலும் விசாரித்து உறுதிசெய்துகொள்ள வேண்டும். இவ்விதமான ஆத்மகுணமானது சாஸ்திரத்தாலுண் டாகும் அறிவால் அடையப்படும். இது சாஸ்திரப் பயிற்சியின் பயனுகும். ஸாமோபாயத்தால் சத்துருவுக்குத் தன்னிடம் விஸ் வாஸம் உண்டாகும்படி செய்யவேண்டும். தன் சக்தியையும் அறிந்து கொள்ளவேண்டும். தன்னுடைய ஆலோசனையால் கார் யத்தின் நிச்சயத்தையும் தன்புத்தியால் அதற்குத்தக்க ஆலோ சனையையும் செய்யவேண்டும். ஸாமோபாயத்தில் புத்தியுள்ள சிறந்த அறிவுள்ளவன் காரியாகாரியங்களைப் பகுத்து நடக்கத் தக்கவன். ஆழ்ந்த புத்தியுள்ள தீரனுக்கு [2] உபதேசிக்கவேண்டிய தில்லை. சிறந்த அறிவுள்ள அந்த மனிதன் புத்தியில் பிருஹஸ் பதி போன்றவனுயினும், இழிந்ததகதையாகிற புத்தியில்லாதவாதத் தைப் பேசுவானுகில், பிறனுடைய யுக்திவாதத்தால், காய்ச்சப் பட்ட இரும்பு ஜலத்தையடைந்து சீதலமாவதுபோலத் தன்ஸ்வ பாவத்தை அடைவான். அரசன் சாஸ்திரங்களால் கூறப்பட்

1 தன்னைக் கொல்வதற்காக வைக்கப்பட்ட விஷமுதலியவைகள்.

2 வேறு பாடம்.

டனவும் தனக்கும் பிறருக்கும் உள்ளனவுமான [1] காரியங்களனைத்தையுமே கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டும். காரியங்களின் விதியையறிந்த அரசன் சாந்தனும் குரூரனும் அறிவுள்ளவனும் சூரனுமாயிருப்பவனையும் [2] நன்றுகப்பேசும் மற்றவர்களையும் தன் காரியத்தில் ஏவவேண்டும். நேரில்பார்க்கப்படாவிட்டாலும் தமக்குத்தக்கவேலைகளில் நியாயமாக இருப்பவர்களையும் நீண்ட (வீணையின்) தந்தியானது ஸ்வரங்களை அனுஸரிப்பதுபோல அனுஸரிக்கவேண்டும். தர்மங்களுக்கு விரோதமில்லாமல் அனைவர்களுக்கும் பிரியத்தைச்செய்யவேண்டும். 'இவ்வுலகம் என்னுடையது' என்று எண்ணும் அரசன் வ்யவஹாரத்தை உண்மையாக அறிந்துகொண்டு ஸூர்யன் கிரணங்களைப்பரப்புவதுபோல விருப்பு வெறுப்புக்களை ஸமமாகச்செய்து மலைபோல உறுதியாய்நின்று தர்மத்தையே ரக்ஷிக்கவேண்டும். தேசம், ப்ரகிருதி, குலம் இவைகளின் தர்மங்களை அறிந்தவர்களும் மிருதுவாகப்பேசுகிறவர்களும் நடுவயதில் இருப்பவர்களும் தோஷமற்றவர்களும் நன்மையில் முயற்சியுள்ளவர்களும் ஸ்ரமத்தையறியாதவர்களும் பேராசையில்லாதவர்களும் படிப்புள்ளவர்களும் அடக்கமுள்ளவர்களும் தர்மங்களில்நிலையுள்ளவர்களும் [3] எல்லாவிஷயங்களையும் ரக்ஷிக்கிறவர்களுமாயிருக்கிறவர்களை அரசன் எல்லாக்காரியங்களிலும் நியமிக்கவேண்டும். சாரர்களால்பூஜிக்கப்பட்டு ஸந்தோஷமுள்ளவனுகி இந்தப்ரகாரம் வருவதும் போவதுமாகிய காரியங்களை யுக்தியாக நன்கு நடத்தவேண்டும். பழுதில்லாதகோபமும் ஸந்தோஷமுமுள்ளவனும் நேரில் காரியங்களைக் கவனிக்கிறவனும் தானே பொக்கசத்தைப்பார்க்கிறவனுமான அரசனுக்குப் பூமியானது பொருளைக் கொடுப்பதாகவேயிருக்கும். எந்த அரசனுடைய ரக்ஷையும் சிக்ஷையும் சாஸ்திரத்தில் சொல்லியபடி வெளியாகுமோ தன்னையும் ராஜ்யத்தையும் ரக்ஷித்துவரும் அந்த அரசன் ராஜதர்மங்களை அறிந்தவனுகிறான். கிரணங்களால் ப்ரகாசிக்கும் ஸூர்யன்போல அரசன் எப்பொழுதும் ராஜ்யத்தைப் பார்க்கவேண்டும்; சாரர்கள் நன்றுகச்செல்லுகிறார்களாவென்று அறியவேண்டும்; அவ்விதமே தானும் தன் புத்தியால் காரியங்களை நடத்தவேண்டும். அரசன் ஸமயத்தில் கிடைத்ததை எடுத்துக்கொள்ளவேண்டும். பொருளை வெளியிடக்கூடாது. புத்தியுள்ளவன், பசுவைக்கறப்பதுபோல, ஒவ்வொருநாளும் பூமியைக் கறக்கவேண்டும். வண்டானது கிரமமாகப் பூக்களிலிருந்து தேனைச்சேர்ப்பதுபோல அரசன் பொரு

---

1 வேறுபாடம். 2 'அதிகபலமுள்ளவர்களையும்' என்பது வேறுபாடம்.
3 'அறம்பொருள்களைரக்ஷிக்கிறவர்களும்' என்பது வேறுபாடம்.

லையெடுத்துக் குலியலாகச்செய்யவேண்டும். ஜனங்களை ரக்ஷித்து மிச்சமாயிருக்கும்பொருளைத் தர்மவிஷயத்திலும் காமவிஷயத்திலும் உபயோகிக்கவேண்டும். சாஸ்திரமறிந்தவனும் அறிவுள்ளவனுமான அரசன் பொக்கசத்திலிருந்து செலவுசெய்யக்கூடாது. சிறியபொருளையும் அவமதிக்கக்கூடாது. பகைவர்களை அலக்ஷியஞ் செய்யக்கூடாது. தன்னறிவால் தன்னைத் [1] தெரிந்துகொள்ளவேண்டும். அறியாதவர்களிடம் நம்பிக்கை கூடாது. சிறிதோ பெரிதோ பொருளைப்பெருகச்செய்வதில் உத்ஸாஹம், ஸாமர்த்தியம், அடக்கம், அறிவு, தைகம், தைரியம், சௌரியம், தேசகாலங்களில் ஜாக்ரதையாயிருப்பது இவை எட்டும் ஸாதனங்களாகும். நெருப்புச் சிறியதாயிருந்தாலும் நெய்யில் நனைக்கப்பட்டு வளர்ச்சி அடைகிறது. ஒருவிதையும் பலவாயிரமாகிறது. ஆகையால், விஸ்தாரமான வரவுசெலவுகளை நன்றாகக் கவனித்துச் சிறியபொருளையும் அவமதிக்கக்கூடாது. பகைவன் தான் இளைஞனையினும் யௌவனமுள்ளவனையினும் கிழவனையினும் எப்பொழுதும் அஜாக்ரதையாயிருக்கும் மனிதனைக் கொல்லுவான். காலத்தால் மற்றொருவன் அவனுடைய மூலத்தை அழிப்பான். காலத்தைத் தெரிந்துகொள்வது அரசர்களுக்கு மிக உத்தமமாகும். பலமில்லாதவனையும் பலமுள்ளவனையும் பகையாளியான சத்துருவானவன் கீர்த்தியை அபகரிப்பான்; இவனுடைய தர்மத்தைக் கெடுப்பான்; பொருளுக்கு இடையூறு செய்வான்; இவன் பராக்ரமத்தைத் தடுப்பான்; ஆகையால், முயற்சியுள்ள மனமுடையவனையிருந்து சத்ருவினிடம் [2] அஜாக்ரதையில்லாதவனையிருக்கவேண்டும். புத்தியுள்ளவன் சத்துருவின் குறையையும் பொக்கசத்தையும் ரக்ஷணையையும் சேர்ந்திருக்கும் அறம் பொருள் என்னும் இரண்டுபயன்களையும் (புத்தியால்) தெரிந்துகொண்டு பிறகு ஸந்தியைச்செய்துகொள்ளவேண்டும்; அல்லது, யுத்த முதலியவைகளைச் செய்யவேண்டும். ஆகையால், அரசன் புத்தியுள்ளவனை அடுக்கவேண்டும். நன்றாகப்பிரகாசிக்கும் புத்தியானது பலமுள்ள சத்ருவையும் கொல்லும். குறைவடையும் பலமானது புத்தியால் ரக்ஷிக்கப்படுகிறது. சத்துருவானவன் புத்தியால் பீடிக்கப்பட்டு நாசமடைகிறான். புத்தியைமுன்னிட்டுச்செய்யும் காரியமானது மிகச்சிறந்ததாகும். ஆசையுள்ள மனிதன் குற்றமில்லாதவனும் புத்தியுள்ளவனுமாயிருந்தால் அல்பபலத்தாலும் எல்லாப் போகங்களையும் அடைவான். பிறரால் விரும்பப்படும் பொருள்களையெல்லாம் தானே அடையவிரும்பு

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

கிறவன் சிறியதானசூக்ஷமத்தையும் பூர்த்திசெய்துகொள்ளமாட்டான். ஆகையால், அரசன் ப்ராணிகளிடம் ஸ்நேஹமுள்ளவனாக இருந்துகொண்டு எல்லாப்ரஜைகளிடமிருந்தும் ஸம்பத்துக்கு மூலமானபொருளை வாங்கவேண்டும். நீண்டகாலம் [1] துன்பமுள்ளவனுயினும் சக்திக்குத்தக்கபடி பொருளைத்தேடும் முயற்சியுடன் இருக்கவேண்டும். கல்வியும் தவமும் பெருத்தபொருளுமாகியவாவும் முயற்சியால் அடையத்தக்கனவாகும். அதுதேகமுள்ளவர்களிடம் [2] புத்தியைப் பொறுத்ததாயிருக்கிறது. ஆகையால், முயற்சியைப் பெரிதென்று தெரிந்துகொள்ளவேண்டும். இந்தத் தேகத்தில் புத்தியுள்ளவர்களும் பெரியமனமுள்ளவர்களுமான இந்திரனும் விஷ்ணுவும் ஸரஸ்வதியும் பூதங்களும் எப்பொழுதும் வஸிக்கிறார்கள். ஆகையால், அறிவுள்ளவன் (முயற்சிசெய்யாமல்) சரீரத்தை அவமதிக்கக்கூடாது. பேராசையுள்ளவனை எப்பொழுதும் [3] தானம் பெறுமல் செய்யவேண்டும். பேராசையுள்ளவன் பிறர்பொருளை அடைவதில் போதுமென்று திருப்தியடையமாட்டான். [4] புண்யத்தின்பயனை போகத்தில் யாவரும் ஆசையுள்ளவர்கள். எவன் பொருளில்லாதவனை அவன் தர்மகாமங்களை அடையமாட்டான். பேராசையுள்ளவன் ஐச்வர்யத்தைப்பெற்றிருந்தாலும் பிறர்களுடைய பொருள் போகம் பிள்ளை பெண்டிரையெல்லாம் விரும்புவான். ஆசையுள்ளவனிடம் எல்லாத் தோஷங்களும் இருக்கும். ஆகையால், அரசன் ஆசையுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. தாழ்ந்தமனிதனையும் நேரில் கண்டு வேலையில் ஏவவேண்டும். அறிவுள்ளவன் சத்துருக்களுடைய முயற்சிகளையும் எல்லா விஷயங்களையும் நாசஞ்செய்யவேண்டும். பாண்டுகுமாரனே அரசனே! தர்மத்துடன் கூடிய பிராம்மணர்களிடம் தத்வத்தை அறிந்தவனும் மந்த்ராலோசனையைக் காப்பாற்றுகிறவனும் உண்மையுள்ளவனும் நற்குலத்திற் பிறந்தவனுமாயிருப்பவன் ராஜ்யத்தைச் சேர்ப்பதில் ஸமர்த்தனுவான். சாஸ்த்ரவிதிகளால் சொல்லப்பட்டனவைகளும் சுருக்கமாகச் சொல்லப்பட்டனவைகளுமான ராஜதர்மங்களைப் புத்தியால் அறிந்துகொள். எந்த அரசன் இந்தத்தர்மங்களை அனுஸரித்துக் காரியங்களைச் செய்கிறானே அவன் பூமியைப்பரிபாலிக்கச் சக்தியுள்ளவன். எவனுக்கு நல்லநீதியால் உண்டானதும் விதிப்படி உண்டானதும் தர்மத்தால் உண்டுபண்ணப்பட்டதுமானலாப

---

1 'நீண்டகாலம் துன்பப்படுத்தியாவது' என்பது பழையஉரை.

2 வேறுபாடம். 3 'தானம் கொடுத்தலால் வெல்லவேண்டும்' என்றும் பொருளுண்டு. 4 வேறுபாடம்.

மானது வஸித்திக்கிறதோ அவனுடைய நடையானது நிந்திக்கப் படுகிறதில்லை. அரசனே! அவன் மிக உத்தமமான ராஜ்ய ஸுகத்தை அடைவான். பொருள்களையுடையவர்களும் புத்தி யிலும் சீலத்திலும் பூஜிக்கப்பட்டவர்களும் சௌர்யமுதலிய குணங்களுள்ளவர்களும் யுத்தத்தில் காணப்படும் பராக்ரமமுள்ள வர்களும் ஸந்திவிக்ரஹ முதலிய ஆறுகுணங்களில் ஜாக்கிரதை யுள்ளவர்களும் முயற்சியுள்ளவர்களுமான சத்ருக்களை அஜாக்ரதை இல்லாதிருப்பவன் லக்ஷ்யம்வைத்துக்கொண்டு சீக்கிரத்தில் கொல் லுவான். பலவிதமான காரியங்களிலும் உபாயங்களைப் பார்க்க வேண்டும். உபாயமின்றிப் புத்தியைச் செலுத்தக்கூடாது. தோஷமில்லாதவர்களிடத்திலும் தோஷத்தைப்பார்க்கும் மனி தன் உத்தமமான ஸம்பத்தையும் பெரியகீர்த்தியையும் பொருளை யும் அடையமாட்டான். ஸ்நேஹமுள்ளவர்களுள் இரண்டுபேர்களுக் குள்ள பிரியத்தையும் ஒருவேலையில் அவர்கள் செய்ததையும் தெரிந்து விசாரித்து அவர்களில் எந்தமித்திரன் பெரிய பாரத்தை வஹிக்கத்தக்கவனோ அவனையே உத்தமஸ்நேஹமுள்ளவன் என்றல் சொல்லவேண்டும். என்னால் சொல்லப்பட்ட இந்த ராஜதர் மங்களைச் செய். மனிதர்களை ரக்ஷிப்பதில் புத்தியைச்செலுத்து. ஸுகமாகப் புண்ணியகர்மங்களின்பயனை அடைவாய் அரசனே! உலகம்யாவுமே தர்மத்தை மூலமாகக்கொண்டவை" என்று சொன்னார்.

நூற்றிருபத்தோராவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் தண்டத்தின் ஸ்வரூபமுதலியவற்றைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஸநாதனமான இந்த ராஜதர்மமானது பிதா மஹரான உம்மால் சொல்லப்பட்டது சிறந்த தண்டமானது எவ் விதமாக இருக்கிறது? தண்டத்தில் யாவும் நிலைபெற்றிருக்கின் றன. பிரபுவே! தேவர்கள் ரிஷிகள் மஹாத்மாக்களான பித் ருக்கள் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் பிசாசர்கள் விசேஷமாக மனி தர்கள் உலகில் பசுபக்ஷி முதலிய தாழ்ந்த பிறப்பில் வஸிக்கும் எல்லாப் பிராணிகளுமாகிய இவைகளுக்கும் மற்ற எல்லாவற்றிற் கும் பெரியதேஜஸ்ஸுள்ள தண்டமானது மிகச் சிறந்ததென்னும விஷயம் உம்மால்சொல்லப்பட்டது. பார்ப்பவர்களுக்கு ஸ்தாவர ஜங்கமங்களுடன் கூடியவைகளும் தேவர்களுடனும் அஸுரர்களு டனும் மனிதர்களுடனும் கூடியவைகளுமான உலகிலுள்ளயாவும் தண்டத்தின் அதீனமாயிருக்கின்றன. பரதர்களிற் சிறந்தவரே!

ஆகையால், நான் இதனை உண்மையாகக் கேட்கவிரும்புகின்றேன். தண்டமென்பது எது? தண்டம் எவ்விதமாயிருக்கிறது? எந்த உருவமுள்ளது? எதை முக்யமாகக்கொண்டது? எதை ஆத்மாவாகக்கொண்டது? எவ்விதச்செய்கையுள்ளது? எவ்வளவு மூர்த்திகளுள்ளது? எப்படி ப்ரபுவாகிறது? விசேஷமான ஹிதத்தைச் செய்யும் ஸ்வரூபமுள்ள தண்டமானது பிரஜைகளிடத்தில் எப்படி ஜாக்கிரதையாயிருக்கிறது? எது இந்த உலகத்தை முன்னும்பின்னும் ஜாக்கிரதையுடன் பரிபாலிக்கிறது? எது மூந்தினதாக அறியப்படுகிறது? தண்டமென்று பெயருள்ளதும் சிறந்ததுமாயிருப்பது எது? தண்டம் எதிலிருக்கிறது? இந்தத்தண்டத்திற்கு எது கதியாக இருக்கிறது?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"கௌரவ்ய! தண்டமென்னும் வ்யவகாரம் எது என்பதையும் அது எவ்விதமானதென்பதையும் கேள். இவ்வுலகில் எல்லாம் எதில் அடங்கியிருக்கிறதோ அதுதான் [1] தண்டமென்பது. மஹாராஜனே! தர்மத்தை நன்முகவெளியிடுவது தண்டமென்றும் வ்யவகாரமென்றும் சொல்லப்படுகின்றது. உலகங்களில் அஜாக்ரதை இல்லாத புத்தியுள்ளவர் தர்மத்திற்கு லோபம்வராதிருக்கும்படி செய்யும் முறைஎதுவோ அதுதான் [2] வ்யவஹாரமென்னும்சொல்லுக்குரிய முக்கியப்பொருளாகக் கொள்ளப்படுகிறது. அரசனே! இது முன் ஆதிகாலத்தில் மனுவாலும் நன்முகச் சொல்லப்பட்டிருக்கிறது. [3] பிரியனிடத்திலும் அப்ரியனிடத்திலும் ஸமமான உருவமுள்ளதும் நன்கு செலுத்தப்பட்டதுமான தண்டத்தால் எவன் பிரஜைகளை நன்கு பாதுகாக்கிறானே அவன் கேவலம் தர்ம உருவமுள்ளவன்தான், முன்காலத்திலேயே மனுவால் இது கூறப்பட்டதென்று நான் முன்னமே சொல்லிய வசனமானது வஸிஷ்டரால் சொல்லப்பட்ட பிரம்மதேவருடைய பெரிய வசனமாகும். முந்தியே இவ்வித வசனம் சொல்லப்பட்டிருப்பதால், தண்டமானது முன் சொல்லப்பட்ட தர்மமென்றும் வ்யவகாரமென்றும் இவ்வுலகில் சொல்லப்படுகிறது. நன்கு செலுத்தப்படும் தண்டத்திலிருந்து எப்பொழுதும் மூவகைப்பயனுமுண்டாகும். உருவத்தால் ஜ்வலிக்கும்அக்நிபோலுள்ள தண்டமானது பெரிய தெய்வமாகும். எப்பொழுதும் அருகில் செல்லத்தகாததண்டமானது

---

1 வேறுபாடம்.

2 வ்யவஹார = திருட்டு முதலியவற்றை விலக்கும் தண்டம்: வி = இல்லை, அவஹார = கெட்ட மார்க்கமாகப் பிறர்பொருளைத் திருடுவது.

3 'ப்ரஜைகளை ரக்ஷிப்பதால் வ்யவஹாரத்திற்கே தர்மமென்று பெயர்' என்பது பழையவுரை.

நீலோத்பலத்தின்இதழ்போலக் கறுத்ததும் 1 நான்கு கோரப்பற்க ளும் 2 நான்கு கைகளுமுள்ளதும் 3 எட்டுக்கால்களும் 4 அனேகங் கண்களும் முளைபோன்ற காதும் உயர்ந்தமயிரும் 5 ஜடையும் 6 இரண்டுநாவும் சிவந்த வாயுமுள்ளதும் மிருகத்தின் தோலை ஆடையாகக்கொண்டதும் கடோரமுமான உருவத்தைத் தரிக் கிறது. கத்தி, வில், கதை, வேல், த்ரிசூலம், இருப்புத்தடி, அம்பு, உலக்கை, கோடாலி, சக்கரம், ப்ராஸம், தடி; ரிஷ்டி, தோமரம், மற்றுமுள்ள அடிக்கஸாதனமான ஆயுதங்களையும் ஆத்மாவாகக் கொண்டு அந்தத்தண்டந்தான் வடிவமுள்ளதாய் உலகில் ஸஞ் சரிக்கிறது.

உடைப்பதும் துளைப்பதும் துன்பப்படுத்துவதும் அறுப்ப

---

1 பிராணிகளைத் துன்பப்படுத்துவதற்கு ஸாதனமாயிருப்பவை. அவை மானபங்கம், பொருளை அபகரித்தல், சரீரதண்டம், கொலை என நான்குமாம். இந்தநான்கும் தண்டத்திற்குக்கோரப்பல்லப்போன்றவை.

2 பொருளை எடுக்க ஸாதனமானவை. அவை, பிரஜைகளிடமும் ஸாமந்தராஜர்களிடமும் வரிவாங்குதலும், பொய்சொல்லும் வாதிக்கு அவன் சொல்லும் பொருளுக்கு இரண்டுமடங்கு அபராதம் விதிப்பதும், பொய் சொல்லும் பிரதிவாதிக்கு ஸமமான பொருளை அபராதம் விதிப் பதும், பொருளுள்ளவனும் லோபியுமான பிராம்மணனிடமிருந்து பொருளையெல்லாம் கவர்வதும் என நான்குமாம். இவை தண்டத்திற் குக் கை போன்றவை.

3 ஸஞ்சரிப்பதற்கு ஸாதனமாயிருப்பவை; அவை 1 ஆவேதனம் =கையொப்பமிட்டு வழக்கிடுவது, 2 பாஷா = ப்ரதிவாதியை அழை த்து அவன் முன்னிலையில் அவ்விதமே எழுதிவைப்பது, 3 சம்ப்ரதிபத்தி =வாதியின் வழக்கை ப்ரதிவாதி ஒத்துக்கொண்டால் ஒருவனுக்கும் அபராதமின்றி ஸமாதானஞ்செய்வது, 4 மித்யோத்தரம் = வாதியின் வழக்குப் பொய்யென்று சொல்வது, 5 காரணோத்தரம் = வாதி சொல்லு கிறபடி நடந்ததுண்டு; ஆனால் அது திரும்பவும் கொடுத்தாய்விட்டது என்று ப்ரதிவாதி சொல்வது, 6 ப்ராங்நியாயம் = இதேவிஷயத்தை முன்னொரு ஸமயம் இவன் என்னைக்கேட்டு அபஜயமடைந்தவனென்று ப்ரதிவாதி சொல்வது, 7 ப்ரதிபூ = இம்மூன்று உத்தரங்களுக்கும் வாதிப் பிரதிவாதிகள் செய்துகொடுக்கவேண்டிய பிணைச்சீட்டு, 8 க்ரியா = அவ ரவர்கள் பக்ஷத்துக்குவேண்டிய ஸாக்ஷி, பத்ரம், அனுபோகம், ப்ரமா ணம் முதலியவற்றைக் காண்பிப்பது, 9 பலஸித்தி = அதிலிருந்து தவறு மலிருப்பவனுக்குஜயம். இவைகளில் ஸம்ப்ரதிபத்தி என்னும் மூன்றுவ தில் தண்டம் விதிக்கக்காரணமில்லாமையால் மற்ற எட்டும் தண்டத்திற் குக் கால்களென்று சொல்லப்படுகின்றன.

4 அரசன், அமாத்தியன், புரோஹிதன், பரிஷத் என்ற நான்கும் தண்டத்திற்குக் கண்களாகும்.

5 பல ஸந்தேகமுண்டாவதால் ஜடையுள்ளதுபோலிருக்கிறது.

6 ஒன்றோடொன்று சேராத வாதிப்ரதிவாதிகளின் இரண்டுவித வசனங்களால் இரண்டுவித நாக்குள்ளதுபோலிருக்கிறது.

தும் பிளப்பதும் கிழிப்பதும் கொல்லுவதும் ஒடுவதுமாகத் தண்டந்தான் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறது.

ஓ! யுதிஷ்டிர! அவி, விசஸனம், தர்மம், தீக்ஷணவர்மா, துராஸதம், ஸ்ரீகர்ப்பம், விஜயம், [1] சாஸ்தா, வ்யவகாரம், ப்ரஜாகரம், சாஸ்திரம், பிராம்மணமந்த்ரம், ப்ரவசனம், பரம், தர்மபாலம், அக்ஷரம், கோபம், ஸத்யகம், நித்யகம், கிருஹம், அஸங்கம், ருத்ரதனயம், மனு, ஜ்யேஷ்டம், சிவங்கரம் என்ற இந்தப் பெயர்கள் தண்டத்திற்குச் சொல்லப்படுகின்றன. தண்டமென்பது வ்யாபகரும் யஜ்ஞரூபியும் அடிக்கடி பெரிய உருவத்தைத்தரிப்பவரும் மஹாபுருஷருமான பகவான் நாராயணரென்னும் ப்ரபுவாகச் சொல்லப்படுகிறது. அவ்விதமே உலகத்தைப் பரிபாலிக்கும் தண்டநீதியானது பிரம்மதேவரின் புத்ரியென்றும் லக்ஷ்மியென்றும் நீதியென்றும் ஸரஸ்வதியென்றும் சொல்லப்படுகிறது. தண்டமானது பல சரீரங்களுள்ளது. குருவம்சத்தில் பிறந்தவனே! பயன், பயனற்றது, ஸுகம், துக்கம், [2] தர்மம், [3] அதர்மம், [4] பலம், [5] அபலம், பாக்கியம், பாக்கியமில்லாமை, புண்யம், பாவம், குணம், தோஷம், காமம், காமமில்லாமை, க்ஷணம், பகல், இரவு, மாஸம், ருது, ஜாக்ரதை, அஜாக்ரதை, ஸந்தோஷம், சோகம், அடக்கம், அடக்கமில்லாமை, தெய்வம், பௌருஷம், மோக்ஷம், பந்தம், பயம், பயமில்லாமை, ஹிம்ஸை, அஹிம்ஸை, தவம், யஜ்ஞம், ஸமாதி, விஷம், அமிருதம், ஆதி, நடு, முடிவு, செய்த காரியங்களின் விஸ்தாரம், கொழுப்பு, ஸந்தோஷம், கர்வம், டம்பம், தைரியம், அதைரியம், நீதி, அநீதி, சக்தி, அசக்தி, மானம், தடை, செலவு, செலவின்மை, வணக்கம், கொடுப்பது, காலம், அகாலம், பொய், அறியாமை, உண்மை, ப்ரத்தை, அப்ரத்தை, முயற்சி, லாபம், நஷ்டம், ஜயம், அபஜயம், குரூரத்தனம், மிருதுத்தனம், அதிகக்கொடுமை, வரவு, வராமை, விரோதம், விரோதமில்லாமை, காரியம், அகாரியம், பலம், அபலம், அஸூயை, அஸூயையில்லாமை, தர்மம், அதர்மம், லஜ்ஜை, லஜ்ஜையில்லாமை, ஸம்பத்து, ஆபத்து, தேஜஸ், வேலைகள், பாண்டித்யம், பேசுந்திறமை, இவைகளை உண்மையாக அறிந்துகொள்வது என இவ்விதம் தண்டத்திற்குப் பல உருவங்கள் இவ்வுலகில் விளங்குகின்றன. இவ்வுலகில் தண்டம் இல்லாவிட்டால் ஒருவரோடொருவர் அடித்துக்கொள்வார்கள். யுதிஷ்டிர! தண்டத்தின்பயத்தாலேயே ஒருவரையொருவர் அடியாமலிருக்கிறார்கள். அரசனே! இவ்வுலகில் பிரஜைகள் ஒவ்வொருநாளும் தண்டத்தால் ரக்ஷிக்கப்பட்டன்றே அரச

---

1 இரட்டித்துவருதலால் இங்கு ஒருசொல்விடப்பட்டது.

2 - 3 - 4 - 5 இவை இரட்டித்துவருகின்றன.

னைப் பெருகச்செய்கின்றன. ஆகையால், தண்டமென்பது முக்கியஸ்தானமாகும். அரசனே! தண்டமானது இவ்வுலகத்தை எப்பொழுதும் அடங்கியிருக்கச்செய்கிறது. ஸத்யத்தில் நிலை பெற்ற தர்மமென்னும் தண்டமானது பிராம்மணர்களிடமிருக்கிறது. தர்மத்துடன்கூடிய பிராம்மணஸ்ரேஷ்டர்கள் தேவஸ்தானத்துடன் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். தேவர்களிடமிருந்து யாகமுண்டாயிற்று. யாகமானது தேவர்களை ஸந்தோஷப்படுத்துகிறது. ஸந்தோஷமுள்ள தேவர்களும் உலகத்தை இந்திரனிடம் ஒப்பிக்கிறார்கள். இந்திரனும் இந்தப்ரஜைகளுக்கு அருள்கூர்ந்து அன்னமளிக்கிறான். எல்லாப்பிராணிகளின் பிராணன்களும் எப்பொழுதும் அன்னத்தில் நிலைபெற்றிருக்கின்றன. அதனால் ப்ரஜைகள் நிலைபெறுகின்றன. அந்த ப்ரஜைகளிடம் தண்டம் விழித்துக்கொண்டிருக்கிறது. இவ்விதப்ரயோஜனமுள்ள தண்டமானது க்ஷத்திரியஉருவமடைந்து ப்ரஜைகளைரக்ஷித்துக்கொண்டு எப்பொழுதும் மிக்கஜாக்ரதையுள்ளதாயும் அழிவற்றதாயும் விழித்துக்கொண்டிருக்கிறது. அஃது ஈஸ்வரன், புருஷன், பிராணன், ஸத்வம், வ்ருத்தம், ப்ரஜாபதி, பூதாத்மா, ஜீவன் என்ற இந்த எட்டுப்பெயர்களால் கூறப்படுகிறது. ஈஸ்வரர் அரசனுக்கு வ்யவஸ்தையுள்ள தண்டநீதியையும் ஐஸ்வரியத்தையும் அளித்தார். அந்த அரசன் எப்பொழுதும் பலத்துடன்கூடியவனும், தர்மம், வ்யவகாரம், தண்டநீதி, ஈஸ்வரன், ஜீவன் என்று ஐந்துவிதஉருவமுள்ளவனுமாயிருக்கிறான். யுதிஷ்டிர! அவனுக்குக் குலமும் பலபொருள்களுடன்கூடிய அமாத்தியர்களும் நல்ல அறிவும் சரீரம் இந்திரியம் புத்தி இவைகளுடைய ஸாமர்த்தியங்களும் எட்டுவஸ்துக்களால் உண்டுபண்ணக்கூடிய வேறுனபலமும் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தப் பலமானது யானைகள், குதிரைகள், தேர்கள், காலாட்கள், கப்பல்கள், சுமைதூக்குகிறவர்கள், நாட்டிலுள்ளவர்கள், (அரண்யத்திலுள்ள) இடையர்களென்னும் எட்டு அங்கங்களுமுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், ஸந்நாகத்துடன்கூடிய சேனைக்குத் தேருள்ளவர்களும் யானையேறிச் செல்லுகிறவர்களும் குதிரைஏறுகிறவர்களும் காலாட்களும் மந்திரிகளும் வைத்தியர்களும் பிரூஷகர்களும் நியாயாதிபதிகளும் சோதிடங்கற்றவர்களும் தெய்வங்களை உபாஸிக்கிறவர்களும் பொக்கசமும் மித்திரர்களும் தான்யமுமாகிய எல்லா உபகரணங்களும் இருக்கின்றன. அமாத்தியன்முதலிய ஏழுப்ரகிருதிகளும் முன்கூறிய எட்டு அங்கங்களும் சரீரமென்று அறிவிக்கிறார்கள். ராஜ்யத்திற்குச்சேனையே அங்கமாகவும் தண்டநீதியே காரணமாகவும் இருக்கின்றன. அக்காரணத்தால் ஈஸ்வரர் அனுக்ரஹஞ்செய்து எப்

பொழுதும் உலகத்தை ரக்ஷிக்கும் தண்டத்தை அரசனுக்குக் கொடுத்தார். ஸநாதனமான இந்தத் தர்மமானது தண்டத்தை அடுத்திருக்கிறது. உலகத்தைரக்ஷிக்கவேண்டியும் தம் தர்மத்தை நிலைக்கச்செய்யவேண்டியும் பிரம்மதேவரால் காண்பிக்கப்பட்ட தர்மமென்னும் தண்டம்போல மிகவும் பூஜிக்கத்தக்கது [1] அரசர்களுக்கு வேறில்லை. வாதி ப்ரதிவாதிகளிருவரையும் காரணமாகக்கொண்டு உண்டாகும் வ்யவஹாரம் [2] வேறுன்றிருக்கிறது; அதில் ஒருவன் மற்றொருவன் சொல்லுவதை ஒத்துக்கொள்ளும் காரணத்தாலுண்டாகும் ஜயமானது ஹிதமுள்ளதாகக் காணப்படுகிறது. வ்யவஹாரமானது வேதத்தைக் காரணமாகவுடையதும் வேதரூபமுடையதுமாகக் கூறப்படுகிறது. புருஷப்புலியே! குலபரம்பரையில்வருவதென்றும் அப்படியே சாஸ்திரத்தில் கூறப்படுவதென்றும் வேறு இரண்டுதண்டமிருக்கின்றன. இவைகளில் வாதிப்ரதிவாதிகளைக் காரணமாகக்கொண்டதாக எந்தத் தண்டம் சொல்லப்பட்டதோ அந்தத் தண்டமானது அரசர்களிடமிருப்பதாக நாம் அறிந்துகொள்ளவேண்டும்; அதன்காரணத்தையும் அறிந்துகொள்ளவேண்டும். காரணமுள்ளதாகக் காணப்படும் வ்யவஹாரமென்னுந்தண்டமும் ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கிறது. ஸ்மிருதிகளிற் சொல்லிய அந்த வ்யவஹாரமும் வேதத்தில் சொல்லப்படும் விஷயந்தான். வேதத்திலிருந்து வெளியான விஷயம் எதுவோ அது நல்லகுணமுள்ளதாகக் காணப்படும் தர்மந்தான். யுதிஷ்டிர! பரிசுத்தமானபுத்தியுள்ளவர்களால் விதிக்கப்படுகிறதும் தர்மத்தைக்காரணமாகக்கொண்டதுமான பிராயச்சித்ததர்மமானது பிரஜைகளை ரக்ஷிப்பதும் வேதத்தில்காணப்பட்டதுமான வ்யவஹாரமாகும். ஸம்பத்தை வ்ருத்திசெய்வதும் ஸத்யரூபியுமாயிருந்து மூன்று உலகங்களையும் ரக்ஷிக்கிற தண்டமானது ஸநாதனமான வ்யவஹாரமாக நமக்குக் காணப்படுகிறது. வ்யவஹாரம் என்றுகாணப்படுவது எதுவோ அது வேதமென்று எங்களுக்குக் கேள்வியுண்டு. வேதமானது தர்மமென்றும் தர்மமானது ஸன்மார்க்கமென்றும் ஸன்மார்க்கமானது முதலில் பிரஜைகளுக்குப்பதியும் பிதாமஹருமான பகவான் பிரம்மதேவரென்றும் அறியவேண்டும். அந்தப் பிரம்மதேவர்தாம் தேவர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள், மனுஷ்யர்கள், உரகர்கள் இவர்களுடன்கூடிய எல்லா உலகங்களுக்கும் கர்த்தரும் ப்ராணிகளைப்படைத்தவருமாகிறார். வாதிப்ரதிவாதிகளைக் காரணமாகக்கொண்டதாகக் காணப்படும் நம்முடைய இந்த வ்யவஹாரமானது அவரிடமிருந்து

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

வெளியானது. ஆகையால், இந்த வ்யவஹாரத்தைப்பற்றிய உதாரணத்தை உபதேசித்தேதாம். ஸ்வதர்மத்திலிருக்கும் அரசனுக்குத் தாயானலும் தந்தையானலும் உடன்பிறந்தவனலும் பாரியையானலும் புரோஹிதரானலும் தண்டிக்கத்தகாதவர் ஒருவருமில்லை.

நூற்றிருபத்திரண்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், வஸுஹோமனுக்கும் மாந்தாதாவுக்கும் நடந்த ஸம்வாதத்தைச் சொல்லித் தண்டத்தின் உத்பத்தி முதலியவற்றைச் சொல்லியது.)

இந்தத் தண்டநீதியின் உத்பத்திவிஷயத்திலும் பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். அங்கதேசத்தில் வஸுஹோமனென்று ப்ரஸித்திபெற்றவனும் தேஜஸ்ஸுள்ளவனுமான ஓர் அரசனிருந்தான். தர்மமறிந்தவனும் எப்பொழுதும் பெரியதவஞ்செய்கிறவனுமான அந்த அரசன் பத்நியுடன் தேவக்கூட்டங்களாலும் ரிஷிக்கூட்டங்களாலும் அடையப்பட்ட முஞ்சபிருஷ்டஞ்சென்றான்; அவ்விடத்தில் இமயமலையின் சிகரத்தில் வாஸஞ்செய்துவந்தான். அங்குள்ள முஞ்சமென்னும் ஆலமரத்தினடியில் ஜடையைத்தரிக்கும்படி ஸ்ரீராமர் ஆஜ்ஞாபித்தார். அறிவுள்ளவர்களில் சிறந்தவனே! அதுமுதல் ருத்ரரால் ஸேவிக்கப்படும் அந்தத்தேசமானது கடுமையான வ்ரதமுள்ளரிஷிகளால் முஞ்சபிருஷ்டமென்று சொல்லப்பட்டது. வேதங்களிற் சொல்லிய பலகுணங்களுடன்கூடிய அந்த அரசன் அந்த முஞ்சபிருஷ்டத்தில் பிராம்மணர்களுக்கு இஷ்டனும் தேவரிஷிக்கொப்பானவனுமாயிருந்தான். ஒருஸமயத்தில் கம்பீரஸ்வபாவமுள்ளவனும் இந்திரனுக்கு நண்பனும் பூஜிக்கப்பட்டவனும் பகைவர்களைத் துன்புறுத்துகிறவனுமான மாந்தாதாவென்னும் அரசன் அவனிடம்சென்றான். அந்த மாந்தாதாவானவன் வஸுஹோமனென்னும் அரசனருகிற் சென்று சிறந்த தவமுள்ள அவனைக் கண்டு வணக்கத்துடன் நின்றான். வஸுஹோமனும் மாந்தாதாவுக்கு அர்க்கியத்தையும் [1] பசுவையும் அளித்து ஏழு அங்கங்களுடன் கூடிய ராஜ்யத்தின் மேன்மையையும் க்ஷேமத்தையும் ப்ரஸ்னஞ்செய்தான். மேலும், வஸுஹோமராஜன் ஸாதுக்களால் முந்தி ஆசரிக்கப்பட்டதை விதிப்படி அனுஸரிக்கும் அந்த

---

[1] மதுபர்க்கமென்னும் உபசாரம்.

மாந்தாதாவை நோக்கி, 'அரசரே! உமக்கு என்னசெய்ய வேண்டும்?' என்றும் கேட்டான். ஏ! குருநந்தன! அரசர்களில் மிகச்சிறந்த அந்தமாந்தாதாவும், அதிக ஸந்தோஷமுள்ளவனாகி, உட்கார்ந்திருக்கும் பேரறிஞனான வஸுஹோமராஜனை நோக்கி, 'வேந்தரே! உம்மால் பிருஹஸ்பதியின்மதம் முழுமையும் கற்கப் பட்டிருக்கிறது. மனிதர்களில் உத்தமரே! அப்படியே சுக்ராசாரி யர் இயற்றிய சாஸ்திரமும் உமக்குத் தெரிந்திருக்கிறது. ஆகை யால், அதை நான் கேட்க விரும்புகிறேன். தண்டமானது எவ்வி தம் உண்டாகிறது? இதற்குமுன் எது விழித்துக்கொண்டிருக் கிறது? எது முக்கியமென்று சொல்லப்படுகிறது? க்ஷத்திரியர்க ளிடம் நிலைபெற்றிருக்கும் தண்டமானது இப்பொழுது எவ்வித மிருக்கிறது? நீர் அதனை எனக்கு உள்ளபடி உபதேசிக்கவேண் டும். நான் குருதக்ஷிணை கொடுக்கிறேன்' என்றுசொன்னன்.

வஸுஹோமன் சொல்லத்தொடங்கினன். 'அரசரே! ஸநா தனமும் தர்மஸ்வரூபமுள்ளதும் உலகங்களைச்சேர்க்க ஸாதனமு மான தண்டமானது ப்ரஜைகளை அடக்கிக் காக்கவேண்டியதற்காக எவ்விதமுண்டாயிற்றென்பதைக்கேளும். எல்லா உலகங்களுக்கும் பிதாமஹரும் பகவானுமான பிரம்மதேவர் யாகஞ்செய்ய விருப் பங்கொண்டு தமக்குச்சமமான ரித்விக்கைக் காணவில்லையென்று நாம் கேள்விப்பட்டதுண்டு. பகவானான அந்தப்பிரம்மதேவர் பல வருஷங்கள் கர்ப்பத்தைத் தரித்துக்கொண்டிருந்தார். பிறகு, ஆயிரம்வருஷம் நிறைந்தவுடன் அந்தக்கர்ப்பமானது அவர் தும் மூங்காலத்தில் கீழேவிழுந்தது. அது பகைவர்களை அடக்குந்திற மையுள்ளவரும் க்ரூரரென்னும் பெயருள்ளவருமான ஸ்ருஷ்டி கர்த்தாவாக உண்டாயிற்று. மஹாராஜரே! அந்தப்ரஜாபதியான வர் மஹாத்மாவானஅந்தப்பிரம்மதேவரின் யாகத்தில் ரித்விக்காக இருந்தார். ராஜஶ்ரேஷ்டரே! பிரம்மதேவரின் அந்த ஸத்ரயாக மானது நடக்கும்பொழுது ப்ரஜைகளை அடக்கும் பிரம்மதேவர் தீக்ஷை பெற்றிருக்கிறரென்று இஷ்டமானரூபத்துடன் செல்லத் தக்கதாயிருந்தபடியால் அந்தத்தண்டமானது மறைந்துவிட்டது. அந்தத்தண்டமானது மறைந்ததும், பிராணிகளுக்கு [1] ஸாங்கர்ய முண்டாயிற்று. அப்பொழுது செய்யத்தக்கது செய்யத்தகாதது புஜிக்கத்தக்கது புஜிக்கத்தகாதது குடிக்கத்தக்கது குடிக்கத்தகா தது என்னும் வேற்றுமையே இல்லை. ஸித்தியென்பது ஏது? ஜனங்கள் ஒருவரையொருவர் ஹிம்ஸித்தார்கள். செல்லத்தக்கது செல்லத்தகாதது என்பதில்லை. தன்திரவியமும் பிறன்திரவியமும்

---

1 ஜாதிவேற்றுமையில்லாமை.

ஸம்மாயிருந்தன. நாய்கள் மாம்ஸத்தைக் கவர்வதுபோல ஜனங்கள் ஒருவருக்கொருவர் பொருளை அபஹரித்தார்கள். பலமுள்ளவர்கள் பலமற்றவர்களைக் கொன்றுர்ச்சள். (உலகம்) மரியாதையில்லாததாயிற்று. பிறகு, பிதாமஹர் ஸநாதனரான விஷ்ணுபகவானைப்பூஜித்து (அவருடன்) வரமளிப்பவரும் தேவருமான மஹாதேவரைநோக்கி, 'ஓ! [1] சங்கரரே! இவ்விஷயத்தில் நீர் தயை செய்யத்தக்கவராகிறீர். தர்மத்தை ரக்ஷிக்கும்விஷயத்தில் இந்த விஷ்ணுவானவர் உமக்கு ஸகாவாயிருக்கிறார். எல்லா விதிகளையும் நீர் அறிந்தவர். நீர் பிராணிகளுக்கு உயர்ந்த கதியாயிருக்கிறீர். இந்தஸமயத்தில் ஸாங்கர்யமில்லாமலிருக்கும்படி செய்யவேண்டும்' என்று சொன்னர். பிறகு, உத்தமமானசூலத்தை ஆயுதமாகக்கொண்டவரும் தேவர்களுக்குந்தேவரும் உலகத்திற்குப்பெரியகாரணரும் பிரம்மா விஷ்ணு இந்திரன் இவர்களுடன் கூடியவரும் எல்லாத் தேவாஸுரர்களுடனும் கூடியவரும் தேவர்களுள் மிக உத்தமரும் பகவானுமான அந்தமஹாதேவர் அப்பொழுது தியானஞ்செய்து உலகத்தை நன்றுக ரக்ஷிக்கவேண்டியதற்காக உலகத்தின் ஸங்கரத்தை நாசஞ்செய்வதும் தம் உருவமுள்ளதுமான தண்டத்தை ஸ்ருஷ்டித்தார். [2] அந்தத்தண்டமென்னும் தர்மத்திலிருந்து நீதியென்னும் ஸரஸ்வதிதேவியையும் மூன்று உலகங்களிலும் ப்ரஸித்தமான தண்டநீதியையும் உண்டாக்கினர். பாபத்தைச் செய்கிறவர்களிடம் இந்தத்தண்டமானது எப்பொழுதும் நீதியால் செலுத்தப்படுகிறது. தண்டத்தைச் செலுத்துங்காரணத்தால் அது தண்டநீதியென்று இவ்வுலகில் சொல்லப்படுகிறது. சூலத்தைத்தரிக்கும் ப்ரபுவும் மஹேச்வரரும் மஹாதேவருமான அந்தப்பகவான் மறுபடியும் வெகுகாலம் தியானஞ்செய்து தண்டநீதியை ப்ரயோகஞ் செய்யவேண்டியதற்காக எல்லாவிதத்திலும் பிரமாணமும் சாச்வதமுமான நான்குவித்யைகளையும் அவைகளின்பலவிதமானபிரிவுகளையும் எல்லாச்சாஸ்திரங்களையும் உண்டுபண்ணினர். நான்குவேதங்களும் ஆறு அங்கங்களும் மீமாம்ஸையும் விரிவான நியாயசாஸ்திரமும் புராணமும் தர்மசாஸ்திரமுமாகிய இந்தப்பதிணன்கு வித்தைகளும்ஆயுர்வேதம் தனுர்வேதம் காந்தர்

---

1 நீலகண்ட வ்யாக்யானத்தோடுகூடின பதிப்புப்படி 'கேசவ' என்பது பாடம்.

2 'அந்தத் தண்டமென்னும் தர்மத்தை அனுஷ்டிப்பதற்காக; நீதிஸ்வரூபமுள்ளவளும் மூன்று உலகங்களிலும் பிரஸித்திபெற்றவளுமான அந்தஸரஸ்வதி தேவியானவள் தண்டநீதியை ஸ்ருஷ்டித்தாள்' என்பது வேறுபாடத்தின் பொருள்.

வம் என்னும் மூன்றும், நான்காவதான அர்த்தசாஸ்திரமும் ஆக
வித்தைகள் பதினெட்டுக்களேயாம். ப்ரஸித்தமான இப்பதினெட்
டுவித்தைகளும் தர்மத்தைச்சேர்ந்த ஸம்ஹிதைகளாகும். மஹே
ஸ்வரர் அந்தப்பதினெட்டுவித்தைகளின் பிரிவையும்கூறினர். மூந்
நூறுசாஸ்திரங்களும்எழுபதுமஹாதந்திரங்களும் மஹாதேவரால்
கூறப்பட்ட இந்தவித்தைகளின் பிரிவுகள்தாம். ப்ரஸித்தமான
பாசுபததந்த்ரமும்ப்ரஸித்தமானபாஞ்சராத்ரமும் யோகசாஸ்திர
மும்ஸாங்க்யமும் லோகாயததந்த்ரமும் பிரம்மதுஷியென்னும்ப்ர
ஸித்தமானதந்த்ரமும் தேவர்களுக்குரிய தர்க்கவித்தையும் ஸுக
துக்கங்களைத் தெரிந்துகொள்ளக்காரணமென்று ப்ரஸித்திபெற்ற
சாஸ்திரமும் எட்டுவிதத் தர்க்கவித்தைகளும் விரிவான நியாய
சாஸ்திரமும் அவரால் சொல்லப்பட்டன. புராணத்திலுள்ளவை
களும் யாகத்தைப்பற்றியவைகளுமான ஸம்ஹிதைகள் பதினெட்
டுக்களென்றறியவேண்டும். இவ்வுலகிலுள்ள அவ்வளவு புராணங்
களும் ஸம்ஹிதைகளும் அவரால் இயற்றப்பட்டன. தர்மசாஸ்
திரங்களும் அவ்விதமே புராணங்களும் வேதங்களும் ஒரே கருத்
துள்ளவைகளேயல்லாமல் வேறுவிதமில்லை. ஆகையால், தேவ
ரானசங்கரபகவான் பலபொருள்களுள்ள எல்லாச்சாஸ்திரங்களை
யும் காலத்தை அறிவிக்கும் சாஸ்திரங்களையும் அறுபத்துநான்கு
கலைகளையும் உத்தரபாகத்துடன் கூடிய ஆயுர்வேதத்தையும் பதி
னெட்டுப் பிரிவுகளுள்ளதும் நிலைபெற்றதுமான தண்டநீதியையும்
காந்தர்வசாஸ்திரத்தையும் பலவிதவிஸ்தாரமுள்ள இதிஹாஸத்
தையும் கூறினர். இவ்விதம் சப்தார்த்தங்களடங்கிய இந்தவித்
தைகளும் திரும்பவும் அவைகளின் விஸ்தாரமான ஆயிரம் பிரிவுக
ளும் சங்கரரால்சொல்லப்பட்டன. ரிஷிகளாலும் தேவர்களாலும்
கந்தர்வர்களாலும் உட்பிரிவுகளுடையதும் விஸ்தாரமுள்ளது
மான வேதம் ஒன்றே முழுமையும் உலகில் அடிக்கடி கற்கப்படு
கின்றது. சுருக்கமான நான்குவேதங்களும் பெரியோர்களால்
இயற்றப்பட்ட ப்ரஸித்திபெற்ற வேதவாதங்களுமான இவைக
ளின் கரையையடைந்தவன்தான் வேதபாரகனென்று சொல்லப்
படுகிறான். ருத்திரரும் விஷ்ணுவும் இந்திரனும் ப்ரஹஸ்பதியும் சுக்
கிரரும் உத்தமமான தர்மங்களையறிந்த ஸ்வாயம்புவமனுவும்எப்
பொழுதும் எல்லாத் தேவாஸுரர்களுடனும் கூடினவரும் உத்த
மருமான பிரம்மதேவரும் வேதபாரகர்களாகிறார்கள். (இவர்கள்)
எல்லாருடையஅனுக்ரஹத்தாலும்வ்யாஸரும் வேதபாரகராகிறார்.
குருஸ்ரேஷ்டனே! சந்தனுவின்குமாரனும் பீஷ்மனுமானநான்,
விஷ்ணு சங்கரர் பிரம்மா இவர்களுடைய அனுக்ரஹத்தால் வேத

பாரகனென்று சொல்லப்படுகிறேன். யாஜ்ஞவல்க்யரும் எல்லா விதத்திலும் வேதபாரகராகிறார். [1]ஆதிகல்பத்தில்பிரம்மாவிஷ்ணுவும் விஷ்ணுவிஷ்ணுவும் சிவனுவும் ஸ்ருஷ்டிக்கப்பட்ட வித்தைகளும் ஒவ்வொருகல்பத்திலும் பெரிய பாக்யம் பெற்றவர்களும் உண்மையைக் கண்டவர்களுமான ரிஷிகளாலும் ரிஷிகுமாரர்களாலும் பலபேர்கள்கூடிய ரிஷிக்கூட்டங்களாலும் திரும்பவும் பிரிக்கப்படுகின்றன. மறுபடி ஸாதுக்களாலும் பிரிக்கப்படுகின்றன. இப்பொழுதும் பிரிக்கும் திறமையுள்ளவித்வான்களால் பிரிக்கப்படுகின்றன. இந்தஸரஸ்வதியானது [2]முன்ஜன்மத்தை அனுஸரித்துப் பலவிதமாயிருக்கிறது. உத்தமமான சூலத்தை ஆயுதமாகக்கொண்ட அந்தப்பகவான் மறுபடியும் வெகுகாலம் தியானம்செய்து அந்த அந்த வகுப்பிற்கு ஒவ்வொருவரைத் தலைவராகச் செய்தார். ஆயிரங்கண்ணுள்ள தேவனை இந்திரனைத் தேவர்களுக்கு ஈசனைச் செய்தார். ஸூர்யனின் புத்திரனை யமனைப் பிதிருக்களுக்குப் பதியாகச்செய்தார். தேவர்களின் ராஜ்யத்தில் வருணனை ஜலங்களுக்கு ப்ரபுவாகச்செய்தார். குபேரனைத் தனங்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும்பதியாகவும் மேருவை மலைகளுக்குப் பதியாகவும் ஸமுத்திரத்தை நதிகளுக்குப்பதியாகவும் மிருத்யுவை உயிர்களுக்குப்பதியாகவும் அக்நியைத் தேஜஸ்ஸுகளுக்குப் பதியாகவும்செய்தார். மஹாத்மாவும் ஸநாதனரும் விசாலாக்ஷருமான மஹாதேவரை ப்ரபுவானவர் ருத்திரர்களுக்குத் தலைவரும் ரக்ஷகருமாகச் செய்தார். பதினொரு ருத்திரர்களும் இவர் சரீரத்திலிருந்து உண்டானவர்கள். பல ரூபங்களைத் தரிப்பவரும் தேவரும் அந்தப்பகவானுமான சிவனே வஸிஷ்டரைப் பிராம்மணர்களுக்கு ஈசராகவும், அக்னியை வஸுக்களுக்குப் பதியாகவும், ஸூர்யனைத் தேஜஸ்ஸுகளுக்குப் பதியாகவும், சந்திரனை நக்ஷத்திரங்களுக்குப் பதியாகவும் செய்தார். [3]ஸூர்யனைக் கொடிகளுக்கு அரசனாகவும், சிறந்தபிரபுவும் பன்னிரண்டு கைகளுள்ளவருமான குமாரரென்னும் ஸ்கந்தரைப் பிராணிகளுக்கு அரசராகவும் ஆஞ்ஞாபித்தார். நாசத்திற்கும் வ்ருத்திக்கும் காரணமும் எல்லாவற்றிற்கும் ப்ரபுவுமானகாலத்தை ஆயுதம், சத்துரு, யமன், கர்மம் என்றுவது, ரோகம், துன்பத்தைதவிளைவிக்கும் உணவைப் புஜிக்கச்செய்யும்ஆசை, யமன், கர்மம் என்றுவது, நாலு பிரிவுகளுள்ள மிருத்யுவுக்கும் துக்கத்திற்கும் ஸுகத்திற்கும் ப்ரபுவாகச்செய்தார். தேவர்களுக்குத்தேவரும் அரசர்களுக்கு அரச

1 பிரம்மாவினுடைய முதல்நாள். 2 'முன்கல்பத்தை' என்றும்பொருளுண்டு. 3 அம்சுமான் என்னும் பாடம் கொள்ளப்பட்டது.

ரும் புருஷஶ்ரேஷ்டருமான சூலபாணியானவர் எல்லாருத்ரர் களுக்கும் ஈஶ்வரரென்று வேதம் கூறுகிறது. 1 பிறகு, மஹாதேவ ரானவர் பிரம்மதேவரின் புத்திரராய் ஜனித்தவரும் எல்லாத் தர்மங்களையும் பரிபாலிப்பவர்களுள் மிகச்சிறந்தவருமான அந்த கூஷ்பரென்பவரை ப்ரஜைகளுக்குப் பதியாகக்கொடுத்தார். பிறகு, அந்தயாகம் முடிவு பெற்றவுடன், மஹாதேவர் ஸமாதான முள்ளவராய்த் தர்மத்தை ரக்ஷிக்கும் தண்டத்தை மரியாதை செய்து விஷ்ணுவினிடம் கொடுத்தனர். விஷ்ணுவானவர் அதை அங்கிரஸினிடம் கொடுத்தனர். ரிஷிகளில் சிறந்த அங்கிரஸான வர் இந்திரன் மரீசி இவ்விருவர்களிடமும் கொடுத்தார். மரீசி யானவர் ப்ருகுவினிடம் கொடுத்தார். ப்ருகுவானவர் தர்மத் துடன்கூடிய தண்டத்தை ரிஷிகளிடம் கொடுத்தார். ரிஷிகள் லோகபாலர்களிடமும், லோகபாலர்கள் கூஷ்பர்பொருட்டும், கூஷ்பர் ஸூர்யபுத்திரனான மனுவின் பொருட்டும் கொடுத்தார் கள். ப்ராத்ததேவர் ஸூக்ஷ்மமான அறம்பொருள்களை அடைய வேண்டிய காரணத்திற்காகத் தம்புத்திரர்களிடம் கொடுத்தார். தண்டத்தில் நீதியை விரும்புகிறவன் நீதி அநீதிகளைப் பகுத்தறி ந்து தண்டஞ்செலுத்த வேண்டும். துஷ்டர்களைச் சிக்ஷிப்பதுதான் தண்டமாகும். பொருளபராத மென்பது (ஜனங்களின்) பயத் திற்குவேண்டிய வெளிப்படையான செய்கையாகும். சரீரத்தை அங்கஹீனமாகச் செய்வதையும் கொலையையும் சரீரத்துன்பத் தையும் ஸ்வதேசத்தைவிட்டு விலக்கலையும் பெரிய காரணங் கொண்டு விதிக்கவேண்டும். உலகத்தை ரக்ஷிக்கும் உருவமுள்ள அந்தத்தண்டத்தை ஸூர்ய குமாரனான மனுவின் பொருட்டு அளித்தார். இந்தத்தண்டமானது தொடர்ந்து பிரஜைகளை ரக்ஷித் துக்கொண்டு விளங்குகிறது. இந்தத்தண்டத்தால் பகவானை இந்திரனும் இந்திரனிடமிருந்து காந்தியைப் பொருளாகக்கொண்ட அக்னியும் அக்கினியிடமிருந்து வருணனும் வருணனிடமிருந்து ப்ரஜாபதியும் அந்தப்ரஜாபதியிடமிருந்து உலகத்தை அடங்கி யிருக்கச் செய்யும் தர்மமும் விளங்குகின்றனர். தர்மத்தினிட மிருந்து பிரம்மதேவரின் பிள்ளையும் ஸநாதனமுமான முயற்சியும் விளங்குகிறது. அந்த முயற்சியினிடமிருந்து உலகத்தை ரக்ஷிக் கும் தேஜஸ்ஸும் விளங்குகிறது. அந்தத் தேஜஸினிடமிருந்து ஓஷதிகளும், ஓஷதிகளிடமிருந்து மலைகளும், மலைகளிடமிருந்து ரஸ மும் விளங்குகின்றன. ரஸத்தின் குணத்திலிருந்து நிருருதிதேவி யும் நிருருதிதேவியினிடமிருந்து ஜ்யோதிஸ்ஸுகளும் விளங்குகின்

1 அதிகபாடமான இரண்டு ஶ்லோகங்கள் விடப்பட்டன.

றன. ஜ்யோதிஸ்ஸுகளிலிருந்து நிலைமையான வேதங்களும் அந்த வேதங்களிலிருந்து ப்ரபுவானஹயக்ரீவரும் அந்த ஹயக்ரீவரிடமிருந்து பிதாமஹரும் ப்ரபுவும் அழிவற்றவருமான பிரம்மதேவரும் விளங்குகிறார்கள். பிரம்மதேவரிடமிருந்து பெரியதேவரும் பகவானுமான சிவன் விளங்குகிறார். சிவனிடமிருந்து விஸ்வேதேவர்களும், விஸ்வேதேவர்களிடமிருந்து ரிஷிகளும், ரிஷிகளிடமிருந்து பகவானை ஸோமனும் ஸோமனிடமிருந்து ஸநாதனர்களான தேவர்களும் தேவர்களிடமிருந்து பிராம்மணர்களும் உலகில் விளங்குகிறார்களென்று அறிந்துகொள். பிராம்மணர்களிடமிருந்து க்ஷத்திரியர்கள் தர்மப்படி உலகங்களை ரக்ஷிக்கிறார்கள். க்ஷத்திரியர்களிடமிருந்து ஸநாதனமான ஸ்தாவரமும் ஜங்கமமும் பிரஜைகளும் இவ்வுலகில் விளங்குகின்றன. அந்தப்ரஜைகளிடம் தண்டமானது விளங்குகிறது. [1] யாவற்றையும் அடக்கிவைக்கும் தண்டமானது பிதாமஹரின் பிள்ளையான ப்ரபுவாகும். ஓ! பாரத! முதலிலும் நடுவிலும் முடிவிலும் காலமானது விளங்குகிறது. யாவருக்கும் ஈசனைகாலமானது ப்ரஜைகளின் பதியான சிவன்தான். தேவர்களின் தேவரும் கபர்த்தமென்னும் ஜடையுள்ளவரும் சங்கரர், ருத்ரர், பவர், ஸ்தாணு, உமாபதி என்று சொல்லப்பட்டவருமான சிவபெருமான் எல்லா உருவமாகவும் எப்பொழுதும் ப்ரபுவாகவும் விளங்குகிறார். இவ்விதம் இந்தத்தண்டமும் ஓஷதிகளும் அவ்விதமே மற்றவைகளும் உபதேசிக்கப்பட்டன. தர்மம் அறிந்த அரசன் இந்தத் தண்டத்துடன் நியாயமாயிருக்கவேண்டும்' என்றுசொன்னன். இவ்விதம் வஸுஹோமராஜன் கூறிய இந்த மதத்தை எந்த அரசன் மனத்துடன் கேட்கிறானே, கேட்டுநன்றுகநடக்கிறானே, அவன் [2] நல்ல உலகங்களை அடைவான். மனிதர்களிற் சிறந்த பாரதனே! தர்மத்தால் ஆக்ரமிக்கப்பட்ட எல்லா உலகங்களையும் அடக்கியாளும் தண்டமென்பது எதுவோ அதுமுழுதும் உனக்கு இவ்விதம் உபதேசிக்கப்பட்டது. அரசனே! பூமியை ஆளும் மாந்தாதாவென்னும் அரசனல் முன்காலத்தில் வஸுஹோமராஜனிடமிருந்து கேட்கப்பட்டதும் உலகில் ப்ரஸித்திபெற்றதுமான [3] கதையானது என்னலும் சொல்லப்பட்டது" என்றுசொன்னர்.

---

1 'பிரம்மதேவருக்கு ஸமமானதேஜஸ்ஸுள்ள தண்டமானது எல்லாவற்றையும் அடக்குகிறது' என்பது வேறு பாடம்.

2 'எல்லா இஷ்டங்களையும் பெறுவான்' என்பது வேறு பாடம்.

3 ஒரு சொல்விடப்பட்டது.

நூற்றிருபத்துமூன்றுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், தர்மார்த்தகர்ம்ங்களின் பிரயோஜன முதலியவற்றைச் சொல்லி, தர்மத்தைவிட்டவன் செய்யத்தகுந்த பிராயச்சித்தத்தின் முறையையும், ஆங்கரிஷ்டனென்னும் அரசனுக்குக் காமந்தகனென்னும் ரிஷி உபதேசித்ததையும் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "தந்தையே! அறம் பொருள் இன்பங்களைப்பற்றிய நிச்சயத்தைக் கேட்கவிரும்புகிறேன். உலகநடையானது முழுமையும் இம்மூன்றிலும் நிலைபெற்றதன்றே? அறம் பொருள் இன்பங்கள் எதற்காகச் செய்யப்படுகின்றன? 1 இம்மூன்றும் உண்டாவதற்குக் காரணம் என்ன? இவைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பது எவ்விதம்? வெவ்வேறாகப் பிரிந்திருப்பதும் எவ்விதம்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"2உலகத்தில் மனிதர்கள் பரிசுத்தமான மனமுள்ளவர்களாயிருக்கும்பொழுது, தர்மத்தைமுன்னிட்டுப் புத்திரனென்னும் பொருளை அடையவேண்டுமென்ற நிச்சயமுண்டாகி அதற்குரிய காலமும் அதற்கிடமான பத்நியும் நியாயமானகாரியமும் சேர்ந்தால் (அறம்பொருளின்பங்களாகிற) மூன்றும் சேர்க்கையடைகின்றன. விண்ணுலகில் 3 தெய்வத்தன்மைபெறுவதும் பொருள்களை அடைவதும் தர்மத்தைக் காரணமாகக்கொண்டன. (பொருளானது போகத்திற்கென்பது வெளிப்படை). காமமென்பது விஷயங்களாலுண்டாகும் இந்திரியங்களின் திருப்தியைப் பயனைக்கொண்டதென்று சொல்லப்படுகிறது. அவைகள் யாவும் ஸங்கல்பத்தாலுண்டாகின்றன. ஸங்கல்பமென்பது விஷயத்தை நாடிநிற்கிறது. விஷயங்கள் யாவும் மிச்சமின்றிப் போகத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகும். இந்த ஸங்கல்பந்தான் மூவகைப்பயனுக்குங் காரணமாகிறது. இவைகளிலிருந்து விலகுவது மோக்ஷமென்று சொல்லப்படுகிறது. சரீரரக்ஷைக்காகச்செய்யப்படும் காம்யதர்மமும் அந்தத் தர்மத்திற்காக விரும்பப்படும் பொருளும் இந்திரியங்களின் திருப்தியைப் பயனைக்கொண்ட காமமுமாகிய யாவும் 4 ராஜஸங்களென்று கூறப்படுகின்றன. ஆகையால், இவைகளை விடவேண்டும். தர்மம்முதல் காமம்வரையிலுள்ள யாவும் அவைகளின் பயனைப்பற்றிய ஆலோசனையால்விடப்

1, 2, 3, 4 வேறுபாடம்.

பட்டு ஆத்மஞானத்திற்கு உபயோகப்படுவனவாகச் செய்யப்பட வேண்டும். இவைகளை மனத்தாலும் விடக்கூடாது. மிகச்சிறந்த புத்தியுள்ளவன் அறம்பொருள்இன்பங்களின் பயனை க்ஷணத்தில் அடைவான். பயனைவிரும்பிச் செய்யும் கர்மத்தால் பயன் ஒருஸமயம் உண்டாகிறது; ஒருஸமயம் உண்டாகிறதில்லை. பொருளை அடையவேண்டியதற்குத் தர்மத்தைவிட வேறுஸைவ கிருஷி முதலிய உபாயமுமுண்டு. இதில் விபரீதமான வேறு [1] அபிப்பிராயமுமுண்டு. முதன்மையான தர்மத்திற்கும் பொருளைவிட உபவாஸமுதலிய வேறு காரணமும் உண்டு. [2] பொருளை அடைந்தும் உலகம் துன்பத்தைச் செய்கிறது. இந்தவிஷயத்தில் அறிவற்றவன் (பொருளாலேயே தர்மம்; தர்மத்தாலேயேபொருள்) என்ற தாழ்ந்தபுத்தியுள்ளவனுய்ப் அவைகளின் [3] பயனை அடையமாட்டான். தர்மத்திற்கு அதன்பயனில் ஆசைவைப்பது தோஷமாகும். பொருளுக்குத் தானத்தையும் போகத்தையும் செய்யாமல் மறைத்துவைப்பது தோஷமாகும். காமத்திற்கு இந்திரியங்களின் ஸந்தோஷமென்பது தோஷமாகும். இவ்விதத்தோஷமின்றி நற்குணங்கள் நிறைந்த இம்மூன்றும் சித்தசுத்தியை உண்டுபண்ணி மோக்ஷமென்னும் பெரியபயனைக் கொடுக்கும். ஓ! பாரத! இவ்விஷயத்திலும் ஆங்கரிஷ்டனென்னும் அரசனுக்கும் காமந்தகர் என்ற முனிவருக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். ஆஸனத்திலுட்கார்ந்திருக்கும் காமந்தகரிஷியை ஆங்கரிஷ்டனென்னும் அரசன் நமஸ்கரித்து, 'ரிஷியே! எந்த அரசன், [4] மர்யாதையைவிட்டுக் காமத்தாலுண்டான அவிவேகத்திற்கு ஈடுபட்டவனுகிப் பாபத்தைச்செய்கிறானே அவன் பின்பு அதில் பச்சாத்தாபமுள்ளவனுயிருந்தால் அவனுடைய பாபத்தை விலக்கத்தக்கது எது? எந்தமனிதன் அவிவேகத்தால் அதர்மத்தைத் தர்மமென்றெண்ணிச் செய்கிறானே உலகில் ப்ரஸித்திபெற்ற அந்தமனிதனை அரசன் எவ்விதம் விலக்கவேண்டும்?' என்று விஞவினன். காமந்தகர் சொல்லத் தொடங்கினர்.

---

1 பொருளென்பது ஸ்வபாவத்தாலும் அதிர்ஷ்டத்தாலும் பலமான முயற்சியாலும் அடையப்படுமென்பதும் அதற்குத் தர்மம்வேண்டாமென்பதும் பலர்களின் அபிப்பிராயம்.

2 'தனமுள்ளவன் மதங்கொண்டு எல்லாப்பாபத்தையும் செய்வதால் தர்மத்திற்குத் தனம் காரணமன்று' என்பது பழையவுரை.

3 ஒருசொல் விடப்பட்டது. 4 வேறுபாடம்.

'இவ்வுலகில் எவன் அறம்பொருள்களைத் தள்ளிவிட்டுக் காமத்தையேதொடர்ந்துகொண்டிருக்கிறானோ அவன் அறம்பொருள்களை விட்டகாரணத்தால் அறிவின்நாசத்தை அடைவான். அறிவின்நாசமென்னும் மோகமானது அறம்பொருள்களை நசிக்கச்செய்யும். அதிலிருந்து நாஸ்திகத்தனமும் கெட்டநடையுமுண்டாகும். மிகவும் தோஷமுள்ள கெட்டநடைகளை எப்பொழுது அரசன் அடக்கவில்லையோ அப்பொழுது உலகமானது வீட்டிலுள்ள பாம்பினிடம் நடுங்குவதுபோல அந்த அரசனிடம் நடுக்கமடையும். பிரஜைகளும் பிராம்மணர்களும் ஸாதுக்களும் அவனிடம் பிரீதியுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். அதனல் அவன் மிக்க குறைவையும் கொல்லத்தக்க நிலைமையையும் அடைவான். துன்பப்பட்டவனும் அவமதிக்கப்பட்டவனுமாகி அவன் துக்கத்துடன் ஜீவிப்பான். அவ்விதம் துன்பமுள்ளவனுய் ஜீவிப்பதென்பது முற்றும் மரணந்தான். அவன்விஷயத்தில் ஆசாரியர்கள் பாபத்தை விலக்கத்தக்க இவ்வுபாயத்தை உபதேசிக்கிறார்கள். அவ்விதமனிதன் வேதவித்தைகளைக் கற்கவேண்டும்; பிராம்மணர்களைப் பூஜிக்கவேண்டும்; தர்மத்தில் பெரியமனமுள்ளவனுயிருக்கவேண்டும்; உயர்ந்தகுலத்தில் விவாஹஞ்செய்யவேண்டும்; பொறுமையுள்ளவர்களும் பெரியமனமுள்ளவர்களுமான பிராம்மணர்களுக்குப்பணிவிடைசெய்யவேண்டும்; [1] தீர்த்தத்துடன் கூடின ஸ்வபாவமுள்ளவனுய் ஜபம்செய்யவேண்டும்; சந்தோஷமடைந்தமுகமுள்ளவனும் நாஸ்திகனல்லாதவனுமாயிருக்கவேண்டும்; கெட்டசெய்கையுள்ளவனை வெளியில் விலக்கிவிட்டுத் தர்மமுள்ளவர்களிடம் அடுக்கவேண்டும்; இனிமையானசொல்லாலும் செய்கையாலும் அவர்களை அருளுள்ளவர்களாகச் செய்துகொள்ளவேண்டும்; எப்பொழுதும் பிறர்களின் குணங்களைச் சொல்லிக்கொண்டு [2] நான் உன்னுடையவனுயிருக்கிறேனென்று சொல்லவேண்டும். இவ்விதநடையுள்ளவன் பாபமில்லாதவனும் சீக்கிரத்தில் வெகுமானமுள்ளவனுமாயிருப்பான்; கடுமையான பாவங்களையும் விலக்கிக்கொள்வான் என்பதில் ஸந்தேஹமில்லை. சிறந்ததான எந்தத்தர்மத்தைக் குருக்கள் உபதேசிக்கிறார்களோ அதை அவ்விதஞ்செய். குருக்களின் அனுக்ரஹத்தாலேயே பெரியபுகழை அடைவாய்' என்று சொன்னர்" என்று கூறினர்.

---

1 'உதகசீல:' என்பதுமூலம்; 'ஸ்நானம்செய்து' என்று சிலர் பொருள் கொள்வர். 2 வேறுபாடம்.

நூற்றிருபத்துநான்காவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், தர்மத்திற்குழுதற்காணமானசீலத்தையும்துர்யோதனனைப் பார்த்துத் திருதராஷ்டிரன் சொன்ன இந்திரனுக்கும் ப்ரஹ்லாதனுக்கும் நடந்ததையும் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ராஜரே! பூமியிலுள்ள இந்த ஜனங்கள் தர்மத்திற்குச் சீலத்தையே முதற்காரணமாகக் கொண்டாடுகிறார்கள். அதனல் எனக்குப் பெரியஸம்சயம் உண்டாகிறது. தர்மத்தை மேற்கொண்டவர்களிற் சிறந்தவரே! அஃது என்னல் தெரிந்து கொள்ளக்கூடுமாயின் அஃதனைத்தையும் அஃது எவ்விதமிருக்கிறதோ அவ்விதம் கேட்க விரும்புகிறேன். பேசுகிறவர்களிற் சிறந்தபாரதரே! அந்தச் சீலமானது எவ்விதம் அடையப்படுகிறதென்பதைக் கேட்க விரும்புகிறேன். அஃது என்ன லக்ஷணமுள்ளதாகக் கூறப்படுகிறது? எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"வெகுமானங்கொடுக்கிற மஹாராஜனே! முந்தி உனக்கு வந்த ஸம்பத்தைக்கண்டு தாபப்பட்ட துரியோதனன் த்ருதராஷ்டிரனுக்குச் சொல்லியதையும் இந்திரப்ரஸ்தத்தில் தம்பிகளுடன் கூடின உன்னை ஸபையில் பரிஹஸித்ததையும்பற்றிய அனைவையாவற்றையுங்கேள். ஓ! பாரத! உன்னுடைய அந்த ஸபையையும் மிக உத்தமமான சம்பத்தையுங்கண்டு அப்பொழுது துரியோதனன் சோகமுற்றவனகி யாவற்றையும் தந்தையிடம்அறிவித்தான். அப்பொழுது த்ருதராஷ்டிரனும் துர்யோதனன் சொல்லைக்கேட்டுக் கர்ணனுடன்கூடிய துரியோதனனைநோக்கி இந்தவசனத்தைச் சொல்லத்தொடங்கினன். 'மகனே! எதற்காகச் சோகப்படுகிறயென்பதை உண்மையாகக் கேட்க விரும்புகிறேன். கேட்டபின் நன்முக இருந்தால் உன்னை ஸமாதானஞ்செய்கிறேன். பிறருடையபட்டணத்தை ஜயிப்பவனே! பெருத்தஐஸ்வரியம் உன்னை அடைந்திருக்கிறது. வேலைக்காரர்களும் ஸஹோதரர்களும் மித்திரர்களும் ஸம்பந்திகளும் பந்துக்களும் யாவரும் உன்னை அடுத்திருக்கிறார்கள். நல்ல ஆடைகளை உடுக்கிறாய்; மாம்ஸத்துடன் கூடின அன்னத்தைப்புஜிக்கிறாய். உயர்ந்தகுதிரைகள் உன்னை வஹிக்கின்றன. மகனே! ஏன் சோகப்படுகிறாய்?' என்று கேட்டான்.

துரியோதனன், 'தந்தையே! யுதிஷ்டிரன்வீட்டில் மஹாத்மாக்களும் வித்தையில்தேர்ச்சிபெற்றவர்களுமான பதிணாயிரம்பேர்கள் ஸ்வர்ணபாத்திரங்களில் புஜிக்கிறார்கள். வெகுமானத்தைக் கொடுக்

கிறவரே! சத்துருக்களான பாண்டுகுமாரர்களுடைய சிறந்ததும் தேவலோகத்திலுள்ள பூக்களுடனும் கனிகளுடனும்கூடியதுமான அந்த ஸபையைக்கண்டும் தித்திரிப்பக்ஷிபோலப் பலவர்ணங்களுள்ள குதிரைகளையும் பலவித ரத்தினங்களையும் மிகப்பெரிதும் அழகுள்ளதும் இந்திரனுடைய ஸம்பத்திற்கு ஒத்ததுமான அந்த ஸம்பத்தையுங்கண்டும் சோகப்படுகிறேன்' என்று சொன்னன். திருதராஷ்டிரன், 'அப்பா! மனிதர்களில் மிகச்சிறந்த மகனே! யுதிஷ்டிரனிடத்தில் எவ்வித ஸம்பத்துள்ளதோ அவ்வித ஸம்பத்தையோ அதற்கு மேலானதையோ விரும்புவாயாகில் சிலமுள்ளவனுயிரு. சீலத்தால் மூன்று உலகங்களும் ஜயிக்கக்கூடியவையாகுமென்பதில் ஸந்தேஹமில்லை. சீலமுள்ள ஸாதுக்களுக்கு உலகத்தில் ஸாதிக்கக்கூடாதது ஒன்றுமில்லை. மாந்தாதா ஒரே இரவிலும் [1] ஜனமேஜயர் மூன்று நாளிலும் நாபாகர் ஏழுநாளிலும் பூமியை அடைந்தார்கள். இந்த அரசர்கள் யாவரும் சீலமுள்ளவர்களும் புகழுள்ளவர்களுமாயிருந்தார்கள். ஆகையால், அவர்களுக்குக் குணத்தால் விலைக்குவாங்கப்பட்டதுபோலப் பூமி தானே வந்தது' என்றுசொன்னன். துரியோதனன், 'ஓ! பாரதரே! எந்தச்சீலத்தால் (அந்த அரசர்கள்) சீக்கிரமாகப் பூமியை அடைந்தார்களோ அந்தச்சீலமானது எவ்விதம் அடையப்படுமென்பதைக் கேட்க விரும்புகிறேன்' என்றுசொன்னன். திருதராஷ்டிரன், 'பாரதனே! இந்தவிஷயத்திலும் பழைய இவ்விதிஹாஸத்தையுதாஹரிக்கிறார்கள். பாரத! முன்காலத்தில் [2] நாரதரால் சொல்லப்பட்ட சீலத்தை அடைந்து பிரஹ்லாதனுல் மஹாத்மாவான இந்திரனுடைய ராஜ்யமானது அபஹரிக்கப்பட்டது. சீலத்தை அடைந்து அஸுரனான ப்ரஹ்லாதனுல் மூன்று உலகமும் தன்வசமாக்கிக்கொள்ளப்பட்டது. பிறகு, அறிவில்சிறந்த இந்திரன் பிருஹஸ்பதியை அடைந்து கைகூப்பிக்கொண்டு பிருஹஸ்பதியை நோக்கி, 'ப்ரேயஸைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்று கேட்க, பிறகு, பிருஹஸ்பதிபகவான் மோக்ஷத்திற்குக்காரணமும் சிறந்ததுமான ஞானத்தை அந்தத் தேவேந்திரனுக்கு உபதேசித்தார். குருக்களிற் சிறந்தவனே! பிருஹஸ்பதியானவர் ப்ரேயஸென்பது இவ்வளவுதானென்று சொன்னர். இந்திரனே (இதைவிட) விசேஷமாக எது இருக்கிறதென்று திரும்பவும் கேட்க, பிருஹஸ்பதியானவர், 'அப்பா! தேவர்களில் உத்தமனே! மஹாத்மாவானசுக்ராசாரியரிடம் இதைவிடவிசேஷமிருக்கிறது; அவரிடம்போய்த்தெரிந்துகொள்; உனக்குத் திரும்பவும் க்ஷேமமுண்டாகும்' என்று

---

1 இவர் வேறு. 2 வேறுபாடம்.

சொன்னர். பிறகு, மிகப்பெரிய கீர்த்தியுள்ள சுக்ராசாரியர் மோக்ஷத்திற்கு ஸாதனமான ஆத்மஞானத்தை ப்ரியமாக உபதேசித்தார். பிறகு, மஹாத்மாவான அந்தச் சுக்ராசாரியராலும் அனுமதி கொடுக்கப்பட்டவனும் உத்தமமான காந்தியுள்ளவனுமான அந்த இந்திரன், சுக்ராசாரியரை, 'இதற்குமேலான ஸ்ரேயஸுண்டா?' என்று திரும்பவுங்கேட்டான். எல்லாமறிந்தவரான சுக்ராசாரியரோ, 'மஹாத்மாவான ப்ரஹ்லாதனுக்கு இதைவிடவிசேஷமான அறிவுண்டு' என்று சொன்னர். இவ்விதஞ் சொல்லப்பட்ட அந்த இந்திரன் சந்தோஷமுள்ளவனனான். மேதாவியான அந்த இந்திரன், ப்ராம்மணரூபத்துடன் ப்ரஹ்லாதனைத் துதிசெய்து, 'ஸ்ரேயஸை அறியவிரும்புகிறேன்' என்று சொன்னன். ப்ரஹ்லாதனோ, ப்ராம்மணனைநோக்கி, 'ப்ராம்மணரே! மூவுலகென்னும் ராஜ்யத்தில் ப்ரவிருத்தியுள்ள எனக்கு ஒழிவுள்ளமையமில்லை. ஆகையால், நான் உமக்கு உபதேசஞ்செய்ய முடியாது' என்றுசொன்னன். ப்ராம்மணனோ, 'ராஜனே! எந்தஸமயத்தில் ஒழிவிருக்குமோ அப்பொழுது [1] மிக உத்தமமாகச் செய்யத்தக்கதை உபதேசிக்கவேண்டுகிறேன்' என்றுசொன்னன். பிறகு, ராஜாவான ப்ரஹ்லாதன் ப்ரியமுள்ளவனாகி வேதமோதும் அந்தப் ப்ராம்மணனுக்கு, 'அப்படியேஆகட்டும்' என்று சொல்லி அப்பொழுது நல்லகாலத்தில் ப்ராம்மணனுக்கு உண்மையான அறிவை அளித்தனன். ப்ராம்மணனும் அவன் எதை எதை மனத்தால் விரும்புகிறானோ அதைஅதை முழுஅபிப்பிராயத்துடனுஞ்செய்துகொண்டு நியாயப்படி குருவினிடத்திலிருக்கத்தக்க மிக உத்தமமான ஒழுக்கத்துடனிருந்துவந்தான். அந்த ப்ராம்மணன், 'சத்துருக்களை அடக்கத்தக்கவரே! மூன்றுலகங்களென்னும் ராஜ்யமானது எவ்விதம் அடையப்பட்டது? தர்மமறிந்தவரே! அந்தக் காரணத்தை எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்று ப்ரஶ்னஞ் செய்தான். பெரியஅரசனே! ப்ரஹ்லாதனும் ப்ராம்மணனைநோக்கி இந்த வசனத்தைச் சொல்லத்தொடங்கினன்.

'ப்ராம்மணரே! ராஜாவாயிருக்கிறேனென்றெண்ணி எவ்விதத்திலும், ப்ராம்மணர்களிடம் நான் அஸூயைப்படுகிறதில்லை. 'உண்மை நாங்கள் அடக்குகிறோம்' என்றும், 'தாங்குகிறோம்' என்றும் சொல்லும் அந்த ப்ராம்மணர்களுடைய [2] நீதி வசனங்களிலும் நான் அஸூயைப்படுகிறதில்லை. அவர்கள் நம்பிக்கை உள்ளவர்களாய் என்னிடம் பேசுவார்கள். எப்பொழுதும் என்னை அடக்குவார்கள். சாஸ்திரம் அறிந்த

1, 2 வேறுபாடம்.

அந்த பிராம்மணர்கள் அவர்களுக்குச் செய்யவேண்டிய வழியில் முயற்சியுள்ளவனும் கேட்கவிருப்பமுள்ளவனும் அகங்காரமற்றவனும் தர்மபுத்தியுள்ளவனும் கோபத்தைதஜயித்தவனும் அடக்கமுள்ளவனும் இந்திரியங்களை அடக்கினவனுமான என்னைத் தேனீக்கள் தேன்கூட்டைத் தேனிலில்நிரப்புவதுபோலச் சாஸ்திரத்தால் நன்றுகநிரம்பச்செய்கிறார்கள். வாக்கின்நுனியில் கல்விகளைக்கொண்ட அவர்களுடையரஸங்களை அனுபவிக்கும் நான் நக்ஷத்திரங்களுக்குச் சந்திரன்போல என்ஜாதியிலுள்ளவர்களுக்குப் பதியாயிருக்கிறேன். பிராம்மணர்களின் வாக்கிலுள்ள [1] நீதிவசனத்தைக்கேட்டு அவ்விதம்நடப்பதென்பது பூமியிலுள்ள அமிருதமும் மிக உத்தமமானகண்ணுமாகும். ஸ்ரேயஸென்பது இவ்வளவுதான்' என்று பிராம்மணனைநோக்கிப் பிரஹ்லாதன் சொன்னன். அந்தப்பிராம்மணரில் பணிவிடைசெய்யப்பட்டவனும் அஸுரர்களுக்கு அரசனுமான பிரஹ்லாதன், அப்பொழுது, 'பிராம்மணர்களில் மிகச்சிறந்தவரே! விதிப்படியுள்ளதும் குருவினிடம் செய்யத்தக்கதுமான உம்முடைய ஒழுக்கத்தால் ஸந்தோஷமுள்ளவனாகிறேன். உமக்கு க்ஷேமம்உண்டாகட்டும். உமக்குவேண்டியவரத்தைக் கேளும். ஸந்தேகமின்றிக் கொடுக்கிறேன்' என்றவசனத்தைச்சொன்னன். அந்தப்ராம்மணஸ்ரேஷ்டனும் செய்ததேதபோதுமென்று பிரஹ்லாதனிடம் சொன்னன். ப்ரஹ்லாதனே, ஸந்தோஷமுள்ளவனாகி, 'வரத்தைப்பெற்றுக்கொள்ளும்' என்று திரும்பவும்சொன்னன். பிராம்மணன், 'ராஜரே! நீர் அனுக்கிரகமுள்ளவராய் எனக்குப்பிரியத்தைச் செய்யவிரும்புவீராகில் உமதுசீலத்தை நானடையவிரும்புகிறேன். இதுதான் எனக்கு வேண்டியவரம்' என்றுசொன்னன். பிறகு, பிரஹ்லாதன் பிரியமுள்ளவனனன். பிராம்மணரில் வரம்கேட்கப்பட்டவுடன், 'இந்தப்பிராம்மணன் சிறிய மனமுள்ளவனல்லன்' என்று அவனுக்குப் பெரியபயமுண்டாயிற்று. அப்பொழுது அந்தப்பிரஹ்லாதன் ஆச்சரியமடைந்து 'இவ்விதமாகட்டும்' என்றுசொன்னன். பிராம்மணனுக்கு வரத்தைக்கொடுத்தபின் துக்கத்தை அடைந்தான். வரம்கொடுத்தபின் பிராம்மணன்சென்றதும் பிரஹ்லாதனுக்கு அப்பொழுது பெரியசிந்தையுண்டாயிற்று. மஹாராஜனே! அவன் நிச்சயத்தைஅடையவில்லை. அப்பா! அப்பொழுது பெரியதேஜஸ்ஸுள்ளவனும் சிந்தையுள்ளவனுமான அந்தப் பிரஹ்லாதனுடைய சாயைபோன்றதும் தேஜோமயமான சரீரமுள்ளதுமான ஒன்று அவன்சரீரத்தைவிட்டு வெளிவந்தது.

---

1 வேறுபாடம்.

மஹாராஜனைப்ரஹ்லாதன் அதை 'நீயார்?' என்று கேட்டனன். அது 'நான் சீலமாகிறேன்; உன்னல்விடப்பட்டுச் செல்லுகிறேன். பகைவர்களை அடக்கும் அரசனே! எவன் உன்னிடத்தில் சிஷ்யத்தன்மையையடைந்து எப்பொழுதும் ஜாக்ரதையுள்ளவனாயிருந்தானோ அந்தப்பிராம்மணனிடத்தில் வஸிக்கப் போகிறேன்' என்று விடைசொல்லிற்று. அந்தத்தேஜஸானது இவ்விதஞ்சொல்லிவிட்டு மறைந்து இந்திரனையடைந்தது. பிரபுவே! அந்தத்தேஜஸானது சென்றதும், பிறகு அவ்வித உருவமுள்ளமற்றொருவன் அந்தப்ரஹ்லாதனுடைய சரீரத்திலிருந்து வெளிவந்தான். அந்தப்ரஹ்லாதன், 'நீயார்?' என்றுகேட்டான். 'அஸுரர்களுக்கு இந்திரனைபிரஹ்லாத! என்னைத் தர்மமென்றறி. அந்தப்பிராம்மணஸ்ரேஷ்டன் எவ்விடத்திலிருக்கிறானோ அவ்விடத்திற்குச் செல்லுகிறேன். எவ்விடத்தில் சீலமிருக்கிறதோ அவ்விடத்திலன்றோ நானிருப்பவன்' என்று அவன் சொன்னான். மஹாராஜனே! பிறகு, மஹாத்மாவான அந்தப்பிரஹ்லாதனுடைய சரீரத்திலிருந்து ஒளியால் மிகஜ்வலிப்பவன்போல வேறு ஒருவன் வெளிவந்தான். பிரஹ்லாதன், 'நீயார்?' என்றுகேட்டவுடன், பெரிய காந்தியுள்ள அந்தப்புருஷன், 'அஸுரேந்திர! என்னை ஸத்தியமென்றறி. இப்பொழுது வெளியில்போகிறேன். நான் தர்மத்தைத்தொடர்ந்து இருப்பவன்' என்று அந்தப்பிரஹ்லாதனைக்குறித்துச் சொன்னன். அந்தப்புருஷன் தர்மத்தைத் தொடர்ந்து சென்றவுடன், அந்தப்பிரஹ்லாதனிடமிருந்து வேறு ஒருபுருஷன் வெளிவந்தான். பெரியதவமுள்ள அந்தப்புருஷன், (நீயாரென்று பிரஹ்லாதனால்) கேட்கப்பட்டவுடன், 'பிரஹ்லாத! என்னை ஒழுக்கமென்றறிந்துகொள். ஸத்தியமிருக்குமிடத்திலன்றோ நானிருப்பவன்?' என்றுசொன்னன். அந்தப்புருஷன்சென்றவுடன், அந்தப்பிரஹ்லாதனுடைய சரீரத்திலிருந்து பெரிய 1 சப்தம் வெளிவந்தது. (பிரஹ்லாதன்) 'நீயார்?' என்றுகேட்டவுடன், (அது,) 'என்னைப் பலம் என்றறி. ஒழுக்கமுள்ளவிடத்தில்நானிருப்பவன்' என்றுசொல்லிற்று. அரசனே! இவ்விதஞ்சொல்லிவிட்டு ஒழுக்கம் எவ்விடத்திலிருக்கிறதோ அவ்விடத்திற்குச் சென்றது. பிறகு, அந்தப்ரஹ்லாதனுடையசரீரத்திலிருந்து தேஜோமயமான ஒருதேவஸ்திரீ வெளிவந்தாள். அஸுரராஜனை அந்தப்பிரஹ்லாதன், அந்தத்தேவியை 'நீயார்?' என்றுகேட்டான். அந்தத்தேவி, 'நான் லக்ஷ்மி. உண்மையானபராக்கிரமமுள்ளவனே! நான் உன்னிடத்தில் எப்போதும்ஸுகமாகவஸித்துக்கொண்டிருந்தேன். உன்

1 வேறுபாடம்.

ஞல்விடப்பட்டுச் செல்லுகிறேன். நான் பலத்தை அனுஸரித் திருப்பவளன்றே!' என்று அந்தப்பிரஹ்லாதனுக்கு மறுமொழி சொன்னுள். உடனே, மஹாத்மாவான பிரஹ்லாதனுக்குப் பயம் உண்டாயிற்று. அவன், 'தாமரைப் புஷ்பத்தை வீடாகக் கொண்டவளே! நீ உலகத்திற்கு உத்தமமான ஈஸ்வரியும் ஸத்ய மான விரதமுள்ளவளுமான தேவியன்றே? எவ்விடத்திற்குச் செல்லுகிறாய்? இந்தப் பிராம்மணஸ்ரேஷ்டர் யார்? உண்மையை அறிய விரும்புகிறேன்' என்று திரும்பவும் அந்தத் தேவியைக் கேட்க, லக்ஷ்மிதேவியானவள், 'பிரபுவே! எவன் பிரம்மசாரி யாக உன்னிடமிருந்து கல்வியைக்கற்றுனே அவன் இந்திரன். மூன்று உலகங்களிலும் உனக்குள்ள ஐஸ்வரியம் எதுவோ அஃது அவனுல் அபகரிக்கப்பட்டது. தர்மமறிந்தவனே! சீலத்தாலன்றே மூன்று உலகங்களும் உன்னுல் ஜயிக்கப்பட்டன. பிரபுவே! அதனை அறிந்து தேவேந்திரனுல் உன்னுடைய சீலம் அபகரிக்கப் பட்டது. பிராஜ்ஞர்களிற் பெரியவனே! தர்மமும் ஸத்தியமும் அவ்விதமே ஒழுக்கமும் பலமும் அவ்விதமே நானும் எப்பொழு தும் சீலத்தைக் காரணமாகக்கொண்டவர்கள். இதிற் சந்தேக மில்லை' என்று சொன்னுள். லக்ஷ்மியானவள் இவ்விதஞ்சொல்லி விட்டுச் சென்றுள். அவர்கள் யாவர்களுஞ் சென்றார்கள்' என் றுன். யுதிஷ்டிர! தர்யோதனனே அப்பொழுது திரும்ப வும் தந்தையைநோக்கி, 'கௌரவர்களின் குமாரரே! சீலத்தின் உண்மையை அறியவிரும்புகிறேன். சீலமானது எவ்விதமடை யப்படுமோ அந்த உபாயத்தையும் எனக்கு உபதேசிக்கவேண் டும்' என்றுகேட்டான். திருதராஷ்டிரன் சொல்லத்தொடங்கி ணன். 'அரசனே! மஹாத்மாவான பிரஹ்லாதனுல் முந்தி உபா யத்துடன் சீலம் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. சுருக்கமாகச் சீலத்தையடையும் வழியைக்கேள். செய்கையாலும் மனத்தாலும் வாக்காலும் எல்லாப்பிராணிகளிடத்திலும் துரோகமில்லாமல் இருப்பதும் அனுக்கிரகமும் தானமுமாகிய மூன்றும் சீலமென்று கொண்டாடப்படுகின்றன. எது மற்றவர்களுக்கு ஹிதமாக இராதோ, எது வெட்கப்படக்காரணமோ, அவ்விதமானசெய்கை யையும் பராக்கிரமத்தையும் எவ்விதத்திலும் செய்யக்கூடாது. எதைச்செய்தால் ஸதஸில் கொண்டாடப்படுமோ அந்தக்காரி யத்தைச் செய்யவேண்டும். குருக்களில் மிகச்சிறந்தவனே! சுருக்கமாக இந்தச்சீலம் உனக்கு உபதேசிக்கப்பட்டது. அர சனே! சீலமில்லாதவர்களும் சிலவிடத்தில் ஸம்பத்தையடை

கிறார்கள்; ஆகிலும், அப்பா! நெடுங்காலம் அனுபவிக்கமாட்டார்கள். அவர்கள் வேருடன்கூட விழுவார்கள். அருமைமகனே! இதை உண்மையாகத் தெரிந்துகொண்டு சீலமுள்ளவனாயிரு. அப்பா! அரசர்களிற் சிறந்தவனே! நீ யுதிஷ்டிரனிடமிக மேலான ஸம்பத்தையோ அதிலும் அதிகத்தையோ விரும்புவாயாகில் சீலமுள்ளவனாயிரு' என்று, இவ்விதம் திருராஷ்டிரமகாராஜன் புத்திரனிடம் சொன்னன். குந்தியின் குமாரனே! இதைச் செய். இதன்பயனை அடைவாய்" என்று சொன்னர்.

நூற்றிருபத்தைந்தாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஆசையைவிளக்கி ஸுமித்திரனென்னும் ராஜனுக்கும் ரிஷபரென்னும் முனிவருக்கும்நடந்த சரித்திரத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! மனிதனுக்கு முக்கியமான சீலம் உம்மால் உபதேசிக்கப்பட்டது. ஆசை எவ்விதமுண்டாயிற்று? அஃது எது? அதனை எனக்குச்சொல்லவேண்டும். பிதாமஹரே! எனக்கு இந்தப் பெரிய ஸந்தேஹம் உண்டாயிருக்கிறது. பகைவர்களின் பட்டணங்களை ஜயிப்பவரே! அந்தச்சந்தேகத்தை அறுப்பவர் உம்மைவிட வேறொருவருமில்லை. பிரபுவான பிதாமஹரே! யுத்தம் நேருங்காலத்தில் யுத்தமின்றியே பாதிராஜ்யம் கொடுப்பது யுக்தம். அதனைத் துர்யோதனன் செய்வானென்று அவனிடத்தில் எனக்குப் பெரிய ஆசை இருந்தது. எல்லா மனிதனுக்கும் மிகப்பெரிய ஆசை உண்டாகிறது. அவ்வாசை பயனற்றதாகச் செய்யப்பட்டால் துக்கம் என்னும் மிருத்தியு உண்டாவதிற் சந்தேகமில்லை. ராஜஶ்ரேஷ்டரே! கெட்டபுத்தியுள்ள நான் துராத்மாவான அந்தத் திருதராஷ்டிர குமாரனால் பயனற்ற ஆசையுள்ளவனாகச் செய்யப்பட்டேன். என்னுடைய அல்ப புத்தியைப்பாரும். மரங்களையுடைய மலையைக்காட்டிலும் ஆசைமிகப்பெரிதென்று நினைக்கிறேன். அரசரே! மேலும், ஆகாயத்தைக் காட்டிலும் ஆசையென்பது அளவிடக்கூடாதது. குருக்களில் மிகச்சிறந்தவரே! அந்த ஆசையென்பதுதான் ஆலோசிக்கமுடியாததும் ஜயிக்க மிகஅரிதுமாயிருக்கிறது. ஜயிக்க மிகக்கடினமாயிருப்பதால் அதைவிட வேறு எது ஜயிக்கமுடியாததென்று பார்க்கிறேன்" என்று சொன்னர்.

பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "யுதிஷ்டிர! இந்தவிஷயத்தில் ஸுமித்திரனென்னும் அரசனுக்கும் ரிஷபரென்னும் முனிவருக்கும் நடந்தகதையை உனக்கு உதாகரிக்கிறேன். என்னிடமிருந்து தெரிந்துகொள். ஹேஹய தேசத்திற்கு அரசனை ஸுமித்திரனென்னும் ராஜரிஷியானவன் வேட்டைக்குச்சென்று வணங்கிய கணுவுள்ள அம்பால் ஒரு மிருகத்தை அடித்துத் துரத்தினன். அதிகபராக்கிரமமுள்ள அந்த மிருகமானது அம்பைத் தூக்கிக் கொண்டு ஓடிற்று. பலமுள்ள அந்தஅரசனும் அருகில் ஓடும் மிருகத்தைத்தொடர்ந்து வேகமாகச்சென்றான். பிறகு, வேகமாகச் செல்லும் அந்தமிருகமானது பள்ளத்திலும் மேட்டிலும் ஓடிற்று. ராஜேந்திரனே! ஒரு முகூர்த்த நேரம்போல அந்த மிருகமானது ஸரியானவழியிற்சென்றது. பிறகு, அந்த அரசன் யௌவனத்தாலும் சரீரத்திலுள்ளவலிமையாலும் வில்லைப்பிடித்தவனும் வாளேந்தியவனுமாய் அப்போது [1] அன்னபக்ஷிபோல ஸஞ்சரிக்கத் தொடங்கினன். பிறகு, நதங்களையும் நதிகளையும் குளங்களையும் காடுகளையும் தாண்டித்தாண்டி ஒருவனய் வனத்தில் ஸஞ்சரித்துக் கொண்டு ஓடினன். அரசனே! அந்தமிருகமோ, அப்பொழுது, அரசனருகில் வந்துவந்து வேகத்துடனேறுவதும் திரும்பவும் நெருங்குவதும் பிறகு மிகுந்த வேகத்துடன் செல்வதுமாயிருந்தது. ராஜஸ்ரேஷ்டனே! அந்த அரசனுடைய பல அம்புகளால் அடிக்கப்பட்டுக் கானகத்தில் ஓடும் அந்த மிருகமானது விளையாடுவதுபோலத் திரும்பவும் அவனருகில் வரும். வேகமுள்ள சிறந்த மிருகமானது திரும்பவும் வேகத்தையடைந்து தாண்டித் தாண்டிச்சென்று திரும்பவும் சமீபத்தில்செல்லும். சத்துருக்களைத் துன்பப்படுத்தும் ஸுமித்திரனனவன் அந்த மிருகத்தின் உயிர் நிலையை அறுப்பதும் குரூரமானதும் மிகச்சிறந்ததுமான ஓர் அம்பை எடுத்து வில்லிலிருந்து எய்தான். பிறகு, [2] யூதபதிகளுட் சிறந்த அந்தமிருகமானது அந்த அரசனுடைய அம்பின்வழியை விட்டு இரண்டுகுரோசதூரத்தில் பரிஹவஸிப்பதுபோல நின்றது. விளங்கும் காந்தியுள்ள அந்த அம்பானது பூமியில் விழுந்ததும், மிருகமானது அரண்யத்தில் பிரவேசித்தது. அரசனும் மிருகத்தை அடித்துச்சென்றான்.

---

1 'கவசமுள்ளவனய்' என்பது வேறுபாடம்.

2 யூதபதி = மிருகக்கூட்டங்களில் தலைமையானது.

நூற்றிருபத்தாறுவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஸுமித்திராராஜன் ரிஷிகளின் ஆச்ரமம் சென்றதையும் அவர்களைப்பார்த்து ஆசைபேரிதா ஆகாசம் பேரிதா என்று கேட்டதையும் சொல்லியது.)

பிறகு, ஸுமித்திரராஜன் பெரிய அரண்யத்தில் பிரவேசித்து ரிஷிகளின் ஆச்ரமத்தை அடைந்து அப்பொழுது களைத்து அங்கு உட்கார்ந்தான். அப்பொழுது வில்லை ஏந்தியவனும் சிரமத்தால் துன்பமடைந்தவனும் பசியுள்ளவனுமான அவனைக்கண்டு ரிஷிகள் வந்து அவனுக்கு விதிப்படி உபசாரத்தைச் செய்தார்கள். அந்த அரசனும் ரிஷிகளால் கொடுக்கப்பட்ட பூஜையைப் பெற்றுக் கொண்டு ரிஷிகள் யாவர்களையும் மிகஉத்தமமான தவத்தின்விருத்தியைப்பற்றிப் பிரச்னஞ்செய்தான். தவத்தையே பொருளாகக் கொண்ட அந்த ரிஷிகள் அந்த அரசனுடைய வசனத்தை அங்கீகரித்துக்கொண்டு அரசப்புலியான அவனை அங்கு வந்ததின் பயனைக் கேட்கத்தொடங்கினர்கள்: 'அழகியமுகமுள்ள அரசனே! என்னபயனைக்கருதிப் பாதசாரியாகக் கட்டிய கத்தியும் வில்லும் அம்புமுள்ளவனாகித் தபோவனத்திற்கு வந்தாயென்பதைக் கேட்கவிரும்புகிறோம். வெகுமதியளிப்பவனே! எங்கிருந்துவருகிறாய்? நீ எந்தக்குலத்தில் பிறந்தவன்? என்னபெயருள்ளவன்? எங்களுக்குச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்கள். புருஷர்களிற் சிறந்த பாரதனே! பிறகு, அந்த அரசன் எல்லாப்ராம்மணர்களுக்கும் நடந்தபடி தன் விருத்தாந்தத்தையும் தன்வரலையும் சொல்லத்தொடங்கினன். 'பிராம்மணர்களே! நான் ஹைஹயதேசத்தின் அரசர்களின் குலத்தில் பிறந்தவனும் பகைவர்களைக் குறைக்கிறவனுமான ஸுமித்திரன்; பெரியசேனையுடனும் அமாத்யர்களுடனும் அந்தப்புரஸ்திரீகளுடனும் அம்புகளால் மிருகக் கூட்டங்களை ஆயிரக்கணக்காக அடித்துக்கொண்டு ஸஞ்சரித்தேன். ஒரு மிருகமானது என்னால் அம்பாலடிக்கப்பட்டுத்தைத்த அம்புடன் ஓடிற்று. ஓடும் அம்மிருகத்தைத்தொடர்ந்து எதிர்ச்சையாக இவ்வனம் வந்துசேர்ந்தேன்; லக்ஷ்மியை இழந்தவனும் ஆசை அழிந்தவனும் ச்ரமத்தால் இளைப்புற்றவனுமாகி உங்களருகில் வந்தேன். ச்ரமத்தால் இளைப்புற்றவனும் பயனற்ற ஆசையுள்ளவனும் ராஜலக்ஷணம் விலகியவனுமாக நான் உங்களுடைய ஆச்ரமத்தை அடைந்தேனே; இதைவிட வேறு துக்கம்

என்ன இருக்கிறது? தபோதனர்களே! பயனற்ற என் ஆசை எனக்குக் கடுமையான துக்கத்தை உண்டுபண்ணுவதுபோல ராஜலக்ஷ்மணங்களை விட்டது எனக்குத் துக்கத்தை உண்டுபண்ணவில்லை. தவத்தில் மிகச் சிறந்தவர்களே! ஹிமவானென்னும் பெரியமலை உயரத்தாலும் மஹாததியென்னுங்கடல் விஸ்தாரத்தாலும் ஆகாயத்தின் முடிவை எவ்விதம் அடையவில்லையோ அவ்விதம் நான் ஆசையின் முடிவை அடையவில்லை. யாவும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். தவத்தைப் பொருளாகக்கொண்ட ரிஷிகள் யாவற்றையும் அறிந்தவர்களன்றோ? நீங்கள் மிகப்பெரியபாக்கியம்பெற்றவர்கள். ஆகையால், ஒரு ஸந்தேகம் கேட்கிறேன். ஒரு மனிதனுக்கு ஆசையிருக்கிறது; ஆகாயமுமிருக்கிறது. இவைகளில் உலகத்தில் எது மிகப் பெரிதென்று உங்களுக்குத் தோற்றுகிறது? இதை உண்மையாகக் கேட்கவிரும்புகிறேன். இவ்வுலகில் எது கிடைப்பதரிது? இஃது உங்களுக்கு எப்போதும் ரஹஸ்யமல்லாமலிருக்குமாதலால் தாமதமின்றிச் சொல்லுங்கள். பிராம்மணஸ்ரேஷ்டர்களே! மிக்க ரஹஸ்யமானவிஷயத்தை நான் கேட்கவிரும்பவில்லை. உங்கள் தவத்திற்கு இடையூறானகாரியம் எதுவோ அதிலிருந்து நான் விலகுகிறேன். கதை பேச இடமிருக்குமாதலால் என்னால் சொல்லப்பட்டகேள்வி எதுவோ அதைப்பற்றியகாரணத்தையும் ஸாமர்த்தியத்தையும் உண்மையாகக் கேட்கவிரும்புகிறேன். எப்பொழுதும் தவமுள்ளவர்களும் ஸமாதியுள்ளவர்களுமான நீங்களும் இதைச் சொல்லத்தக்கவர்கள்' என்று சொன்னன்.

நூற்றிருபத்தேழாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(ரிஷபனென்னும் ரிஷி ஸுமித்ராராஜனுக்குத் தாம் தீர்த்தயாத்திரை செய்தது முதலியவற்றைச் சொல்லியது.)

பிறகு, அங்குக்கூடிய அந்த ரிஷிகளுள் மிகச் சிறந்தவரான ரிஷபரென்னும் பிரம்மரிஷியானவர் சிரித்துக்கொண்டு இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கினர்.

'அரசப்புலியான பிரபுவே! முன்னொருகாலத்தில் தீர்த்தயாத்திரைக்குச்சென்ற நான் திவ்யமான நரநாராயணர்களின் ஆச்ரமத்தை அடைந்தேன். அவ்விடத்தில் அழகான அந்தப் [1] பதரீவிருக்ஷமும் அவ்விதமே கங்காநதியைச் சேர்ந்த தடாக

---

1 இலந்தைமரம்.

மும் இருக்கின்றன. அரசனே! அவ்விடத்தில் ஹயக்ரீவர் சாஸ்வதமான வேதங்களைப்படிக்கிறார். நான் முந்தி அந்தத் தடாகத்தில் தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் விதிப்படி தர்ப்பணத்தைச் செய்து, பிறகு, நரநாராயணர்களென்ற அந்தரிஷிகள் எப்பொழுதும் எந்த ஆஸ்ரமத்தில்வினையாடினார்களோ அந்த ஆஸ்ரமத்திற்குச் சென்றேன்; அப்பொழுது, ஆஸ்ரமத்திற்குச் சிறிதுஸமீபத்தில் வஸிக்கவேண்டிச் சென்றேன். சிறந்தகைகளுள்ளவனே! அப்பொழுது அவ்விடத்தில் மரவுரியையும் மான்தோலையுமுடுத்தவரும் இளைத்தவரும் மிக உயர்ந்தவரும் தவத்துக்கு நிதியும் சரீரத்தில் மற்றமனிதர்களுடன் ஒப்பிடத்தகாதவருமான தனுவென்னும் ரிஷி வருகிறதைக் கண்டேன். ராஜரிஷியே! அவ்விதமான சரீரமெலிவை நான் கண்டதில்லை. ராஜேந்திரனே! மெலிந்த அவர்சரீரமும் சிறுவிரலுக்கொப்பானது. கழுத்தும் கைகளும் கால்களும் மயிர்களும் ஆச்சரியமாகக்காணப்பட்டன. தலையும் காதுகளும் கண்களும் அவர்சரீரத்திற்கு ஒத்தனவாக இருந்தன. அரசர்களில் மிகச்சிறந்தவனே! அவருடையவாக்கும் செய்கையும் ஒத்திருந்தன. நரஸ்ரேஷ்டனே! நான் இளைத்தவரான அந்தப்ராம்மணரைக்கண்டு பயந்து மிகவும் துன்பமுற்றமனமுள்ளவனாகி அவர்கால்களில் நமஸ்கரித்துப் பிறகு என்பெயரையும் கோத்திரத்தையும் அவ்விதமே காரியத்தையும் அறிவித்துவிட்டுக் கைகூப்பிக்கொண்டு எதிரில் நின்றேன். நான் அவரால் அளிக்கப்பட்ட ஆசனத்தில் மெள்ள உட்கார்ந்தேன். மஹாராஜனே! பிறகு, தர்மத்தைச் செய்கிறவர்களிற்சிறந்த அந்தரிஷியானவர் அவ்விடத்தில் ரிஷிகளின்மத்தியில் அறம் பொருள்களுடன்கூடிய கதைகளைச் சொன்னார். * * * அவர் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, தாமரைமலர்போன்ற கண்களுள்ளவனும் சேனையுடனும் அந்தப்புரஸ்திரீகளுடனும் கூடியவனும் பெரிய கீர்த்தியுள்ளவனும் ஸம்பத்துள்ளவனும் பூரித்யும்னனுடைய தகப்பனுமான வீரத்யும்னராஜன் அரண்யத்தில் காணாமற்போன புத்ரனை நினைத்து மிகவும்சோகமுள்ளவனாகி அந்தப்புத்ரனை, 'இவ்விடத்தில் பார்ப்பேன்; இவ்விடத்தில்பார்ப்பேன்' என்று வேகமான குதிரைகளுடன்வந்தான். தர்மஞ்செய்பவனே! இவ்விதம் ஆசையால் இளைத்த அந்த அரசன் இந்தவனத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு, 'அந்தப் புத்ரன் திரும்பவும் என்னால் காணக்கிடைக்கமாட்டான்; ஒரேபுத்ரன்; பெரிய அரண்யத்தில் மூந்திக் காணாமற்போய்விட்டான். அவனை நான் காணமுடியவில்லையே. எனக்கு ஆசைபெரிதாயிருக்கிறது. அந்த ஆசையால் சூழப்பட்ட

சரீரமுள்ளநான் மரணத்தையடையத்தக்கவனென்பதிற் சந்தேகமில்லை' என்று அப்பொழுது அடிக்கடி சொன்னான். சிறந்தரிஷிகளுள் உத்தமரும் பூஜ்யருமான தனுவானவர் இதைக்கேட்டவுடன் தலைகுனிந்து ஒருமுகூர்த்தநேரம்போலத் தியானத்தில் பற்றுதலுள்ளவராயிருந்தார். மிகவுஞ்சோகமுள்ள அரசன் அந்தமுனிவர் தியானஞ்செய்தலைக் கண்டு தீனபுத்தியுள்ளவனுய், 'தேவரிஷியே! எது கிடைப்பது அரிது? ஆசையைவிட எது பெரிது? இது ரஹஸ்யமாயில்லாமலிருக்குமானால் அப்பொழுது பூஜ்யரானநீர் இதை உபதேசிக்கவேண்டும்' என்னும்வாக்கியத்தைப் பலமுறை மிகவும் மெதுவாகச் சொன்னான். தனுவானவர், 'ஓ! அரசனே! தான் அல்பபாக்யனுயிருப்பதால் அவிவேகமுள்ள புத்தியையடைந்து, [1] க்ஷேமத்தையும் பொன்னையும் மரவுரிகளையும் யாசிப்பவரும் பூஜ்யருமான மஹரிஷியானவர் (உன்புத்ரனை) அவனல் முந்தி அவமதிக்கப்பட்டவராஞர். அவமதிப்பை முன்னிட்டுக் கூட அவைகளைக்கொடுக்கவில்லை. அக்காரணத்தால் வெறுப்புற்ற அந்தப்பிரம்மரிஷியானவர் ஆசையற்றவராஞர்' என்றுசொன்னர். மனிதர்களில் மிகச்சிறந்தவனே! இவ்விதம் சொல்லியதைக் கேட்டவனும் தர்மபுத்தியுள்ளவனுமான அரசன், உலகங்களால் பூஜிக்கப்படும்அந்தரிஷியை நமஸ்கரித்து, ப்ரமமுள்ளவனுகி, உன்னைப்போல மிகத்துன்பமடைந்தான். பிறகு, பெரியகீர்த்தியுள்ளரிஷியானவர் அர்க்கியத்தையும் பாத்தியத்தையும்வருவித்து அரசன் பொருட்டு யாவற்றையும் வனவாஸிகளுக்குள்ளவிதிப்படி அளிக்கச்செய்தார். பிறகு, எல்லாரிஷிகளும் ஸப்தரிஷிகள் துருவனைச் சூழ்வதுபோல அந்த அரசனைமுன்னிட்டுச் சுற்றி உட்கார்ந்தார்கள்; அப்பொழுது தோல்வியடையாத அந்த அரசனைநோக்கி ஆஸ்ரமத்துக்குவந்ததின் பயன் யாவற்றையும் கேட்டார்கள்.

நூற்றிருபத்தெட்டாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(வீரத்யும்னன் புத்திரனைத்தேடிவந்ததாகச் சொல்லி, மறுபடியும் 'கிடைத்தற்கரிய பொருள் எது, மிக அற்பமானது எது' என்றுவினவ, தனுரிஷி உத்தரம் சொல்லியது.)

அரசன், 'நான் வீரத்யும்னனென்று சொல்லப்பட்டவனும் திக்குக்களில் பிரஸித்திபெற்றவனுமான ராஜன்; காணுமற்போன பூரித்யும்னனென்னும் புத்திரனைத் தேடவேண்டி வனத்துக்குவந்

1 'பொற்கலசத்தை' என்பது வேறுபாடத்தின்பொருள்.

தேன். பிராம்மணஸ்ரேஷ்டரே! அவன் ஒரே புத்ரன். அவன் பாலகன்; குற்றமில்லாதவன்; இந்தவனத்தில் காணப்படவில்லை. அவனைத்தேடவேண்டி நான் ஸஞ்சரிக்கிறேன்' என்றுசொன்னான். அந்த அரசன் இவ்விதவசனத்தைச் சொன்னவுடன், முனியானவர் முகம்குனிந்தவராய்ப் பேசாமலே இருந்தார். அந்தஸமயத்தில் அரசனைநோக்கி மறுமொழிசொல்லவில்லை. அரசஸ்ரேஷ்டனே! எனெனில், அந்தப்ராம்மணர் அந்த அரசனால் முந்தி மிகவும் பூஜிக்கப்படாதவராய் அவராசை அடிக்கப்பட்டு நீண்டதவத்தை அடைந்தார். அவர் அப்பொழுது, 'நான் எவ்விதத்திலும் அரசர்களிடமிருந்தும் மற்றஜாதிகளிடமிருந்தும் பிரதிக்ரஹத்தைச் செய்கிறதில்லை' என்று புத்தியைவைத்துக் கொண்டும், 'ஆசையன்றே நிலைபெற்றதாகி அவிவேகமுள்ளபுருஷனைப் பேசச்செய்கிறது? அதை நான் விலக்குகிறேன்' என்று எண்ணிக்கொண்டும் உறுதியாக இருந்தார். வீரத்யும்னனே அந்த முனிஸ்ரேஷ்டனைநோக்கி, 'ஆசையின் நிலைமை எது? இப்பூமியில் எது ஜயிக்கக்கடினமானது? பூஜ்யரானநீர் இதைச் சொல்லவேண்டும். நீர் அறம்பொருள்களை அறிந்தவரன்றே?' என்று திரும்பவும் கேட்டான். பிறகு, பூஜ்யரும் மெலிந்தசரீரமுள்ளவருமான அந்தப்ராம்மணர், அப்பொழுது அது முழுமையும் நினைத்துக்கொண்டு, அரசனை நினைக்கும்படிசெய்கிறவர்போல, 'அரசனே! மெலிந்ததில் ஆசைக்குச்சரியானது ஒன்றுமில்லை. ராஜனே! அந்த ஆசையைஜயிப்பது கடினமாகையால் தான் என்னால் அரசன் பிரார்த்திக்கப்பட்டான்' என்றுசொன்னர்.

அரசன், 'பிராம்மணரே! உமதுவசனத்தால் 1 கிருசத்தன்மையும் கிருசமில்லாமையும் என்னால் அறியப்பட்டன. த்விஜனல்லாதவனிடத்தில் வேதவாக்கியம்போல அந்த ஆசையில்தான் றும்வஸ்துவே கிடைப்பதரிதென்றும் அறியப்பட்டது. ப்ராஜ்ஞர்களிற்பெரியவரே! ஆனால், என்மனத்தில் ஒரு ஸந்தேஹறம் உண்டாயிருக்கிறது. முனிவரே! கேட்கும் எனக்கு அதை உண்மையாக நீர் சொல்லவேண்டும். உம்மைவிட மிகவும் கிருசமாயிருப்பது எது? இவ்வுலகில் எது கிடைப்பதரிது? பிராம்மணரே! பூஜ்யரான நீர் உமக்கு ரஹஸ்யமாக இல்லாவிட்டால் இதைச் சொல்லவேண்டும்' என்றுகேட்டான். தனுரிஷி சொல்லத்தொடங்கினர். 'யாசிக்கும் எந்தமனிதன் தைரியத்தை அடைகிறானே அவன் தர்லபன்; அல்லது இல்லையென்றேசொல்ல

1 'ஆசையுள்ளவன் கிருசன், ஆசையில்லாதவன் புஷ்டன்' என்பது பழையஉரை.

லாம். அப்பா! யாசிப்பவனை எவன் அவமதியாமலிருக்கிறானே அவன் மிகவும்துர்லபன். யாசகனுக்கு மரியாதையுடன் ஆசை காட்டி எவன் உண்மையாகச் சக்திக்குத்தக்கபடி உபகாரஞ்செய்யாமலிருக்கிறானே அவனிடத்தில் வைக்கப்பட்ட எல்லாப்ராணிகளுடையஆசையும் என்னைவிட மிகவும் கிருசமானது. நன்றிகெட்டவர்களிடத்திலும் குரூரர்களிடத்திலும் சோம்பர்களிடத்திலும் அபகாரிகளிடத்திலும் வைக்கப்பட்ட ஆசையானது என்னைவிட மிகவும் கிருசமானது. என்றுசொன்னர். அரசனே! பிறகு, அதைக்கேட்டு அந்தப்புரத்துடன்கூடிய அந்த அரசன் தலையால் அவர்கால்களைத்தொட்டு ப்ராம்மண ஸ்ரேஷ்டரான அவரை விழுந்துவணங்கினன். தாமரைமலர் போன்ற கண்ணுள்ள அரசன், 'பூஜ்யரான பிராம்மணோத்தமரே! உமது அனுக்ரஹத்தை வேண்டுகின்றேன். புத்ரனுடன்சேர்க்கையை விரும்புகிறேன். இப்பொழுது உம்மால் சொல்லப்பட்டது எதுவோ அந்தவிஷயத்தில் நீர் விரும்புகிற வரங்களை விதிப்படி பெற்றுக்கொள்ளும். ஓ! பிராம்மணரே! உம்மால் சொல்லப்பட்டஇஃது உண்மையே; வேறுவிதமான பொய்யன்று' என்றவசனத்தைச் சொன்னன். பிறகு, தர்மத்தை ரக்ஷிப்பவர்களுள் சிறந்தவரும் பூஜ்யருமான தனுவானவர் நகைத்துத் தவத்தாலும் கல்வியாலும் இந்த அரசனுடையபுத்ரனை வேகமாக வருவித்தார். தர்மத்தை ரக்ஷிப்பவர்களுள் சிறந்த அந்தமுனிவர் அவன் புத்ரனை வருவித்து அந்த அரசனைக் குற்றமுள்ளவனென்று தெரிவித்தபின், தர்மரூபியான தம்மைக் காண்பித்தார். அவர் ஆச்சரியமாகக்காணப்படும் திவ்வியமான தம் உருவத்தைக் காண்பித்தபின், பாபமில்லாதவரும் கோபமில்லாதவருமாய் அரண்யத்தினருகிற் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். அரசனே! இஃது என்னால் காணப்பட்டது. அவ்விதமே, இந்தவசனமும் கேட்கப்பட்டது. ஆகையால், மிகவும் கிருசமான இந்த

ஆசையை விரைவாக விலக்கிக்கொள்' என்றுசொன்னர். அரசனே! அப்பொழுது மஹாத்மாவான ரிஷபரால் அவ்விதஞ்சொல்லப்பட்ட அந்தஸுமித்ரன் உடனே மிகவும்கிருசமான ஆசையை விலக்கிக்கொண்டான். மஹாராஜனெளந்தேய! நீயும் இவ்விதம் என்னுடைய இந்தவசனத்தைக்கேட்டு இமயமலைபோல அசைவற்றவனாகவும் உறுதியாகவுமிரு. மஹாராஜனே! இவ்வுலகில் நீதான் கஷ்டமான அவ்வித [1] விஷயங்களைப்பற்றி ப்ரச்னஞ் செய்கிறவனும் கேட்கிறவனுமாயிருக்கிறாய். என்னிடமிருந்து கேட்டபின் இந்தவிஷயங்களில் நீ துன்பப்படத் தக்கவனல்லன்" என்றுசொன்னர்.

நூற்றிருபத்தொன்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(யமன், பெற்றோர்க்குப்பணிவிடைசெய்வது அவர்களின்கடனை நிவர்த்திசெய்வதற்குரிய உபாயமென்று கௌதமருக்குச்சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! அமிருதத்தில் திருப்தியுண்டாகாமைபோல நீர்பேசுவதில் எனக்குப்போதுமென்ற எண்ணமுண்டாகவில்லை. ஆத்மஞானஸமாதியிலிருப்பவன் எவ்விதம் திருப்தியுள்ளவனாயிருப்பனோ அவ்விதம் திருப்தியுள்ளவனாயிருக்கிறேன். பிதாமஹரே! ஆகையால், திரும்பவும் நீர் இந்தத்தர்மவிஷயத்தில் எனக்கு உபதேசிக்கவேண்டும். நான் உம்முடைய தர்மோபதேசமென்னும் அமிருதத்தைப்பானஞ்செய்து திருப்தியடையவில்லை" என்று சொன்னர்.

பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "இந்தவிஷயத்திலும் கௌதமருக்கும் மஹாத்மாவான யமனுக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். பாரியாத்ரமென்னும் மலையில் கௌதமருக்குப் பெரியதோர் ஆஸ்ரமமிருந்தது. தவத்தால் பாவங்களை எரித்த கௌதமர் அதில் வஸித்துவந்தார். அந்தக்கௌதமர் அறுபதினாயிரம் வருஷம் தவஞ்செய்தார். புருஷப்புலியே! அப்பொழுது கடுமையான தவத்தையுடையவரும் தியானஞ்செய்கிறவரும் மிகப்பெரியரிஷியுமான அந்தக்கௌதமரிடம் லோகபாலனான யமன் வந்தான். வந்தபொழுது, நல்லதவமுள்ள அந்தக்கௌதமரிஷியைக் கண்டான். தவத்தைப் பொருளாகக்கொண்ட அந்தப்பிரம்மரிஷியும் வந்த அவனைத் தேஜஸால் யமனென்றறிந்துகொண்டு கைகட்டிவணக்க

---

1 வேறுபாடம்.

மூள்ளவராய் அருகிற்சென்றார் தர்மராஜனனவன், பிராம்மணர் களில் உத்தமரான அந்தக்கௌதமரைக் கண்டதும் நமஸ்கரித்து, "தர்மனனே நான் உமக்கு என்ன செய்யவேண்டும்?' என்று சொல்லிக்கொண்டு எதிரிலமைத்தான். கௌதமர், 'புருஷன் எதைச்செய்து தாய் தந்தைகளிடம் கடனில்லாதிருக்கும் தன் மைமைய அடைவான்? அடையமுடியாத புண்யலோகங்களையும் எவ்விதம் அடைவான்?' என்றுகேட்டார். யமன், 'எப்பொழு தும் தவமும் பரிசுத்தியுமுள்ளவனும் ஸத்யத்திலும் தர்மத்தி லும் விருப்பமுள்ளவனுமாயிருந்துகொண்டு ஒவ்வொரு நாளும் தாய்தந்தைகளின் பூஜையை நேராகச்செய்யவேண்டும். நிறைந்த தக்ஷிணையுள்ள பல அசுவமேத யாகங்களைச் செய்யவேண்டும். அதனல், புருஷன் ஆச்சரியமாகக் காணப்படும் உலக்ங்களை அடைவான்' என்றுசொன்னன்" என்றார்.

நூற்றுமுப்பதாவது அத்யாயம்.

ராஜதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அரசன் ஆபத்காலத்தில் பிரஜைகளைத் துன்புறுத்தி யாவது பொருளாதாரத்தை விருத்தி செய்யவேண்டும் என்று சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! மித்ரர்களால் விடப்பட்டவனும் பலசத்துருக்களுள்ளவனும் பொக்கசமழிந்தவனும் சேனையிழந்த வனும் துஷ்டர்களான மந்திரிகளைத் துணையாகக் கொண்டவ னும் யாவர்களாலும் கேட்கப்பட்ட மந்த்ராலோசனையுள்ளவனும் ராஜ்யத்திலிருந்து நழுவுகிறவனும் வேறுகதியைக் காணுதவனும் சத்துருவின் ராஜ்யத்தை எதிர்த்துச் சென்றவனும் சத்துருவின் ராஜ்யங்களை அடிக்கமுயன்றவனும் மிக்க பலசாலியான சத்துரு வுடன் போர்செய்ய ப்ரவிருத்தித்தவனும் பலமில்லாதவனும் ராஜ் யத்தை நன்கு ரக்ஷியாதவனும் தேச காலங்களை அறியாதவனு மான அரசனுக்கு என்ன கதி? அவனுக்கு ஸாமோபாயம் செல் லத்தக்கதாயிராது. மிகவும் துன்பமிருப்பதால் சத்துருவின் ஜனங்களிடம் பேதோபாயமுஞ் செல்லாது. அப்பொழுது அவன் எவ்விதத்திலாவது பொருளை ஸம்பாதித்து அதைக் கொண்டு பிழைப்பது நலமா? அல்லது மரிப்பது நலமா? அவைகளில் எது நல்லதாகும்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"பரதர்களிற் சிறந்தவனே! மிக்கரஹஸ்யமான தர்மத்தைப் பற்றி என்னைக் கேட்கிறாய். யுதிஷ்டிர! இந்தத்தர்மத்தைக்

கேளாமல் சொல்ல எனக்கு விருப்பமில்லை. பரதர்களிற் சிறந்தவனே! தர்மமென்பது மிக்கஸூக்ஷுமமன்றோ? அதைச் சாஸ்திரத்திலிருந்து அறிவுடன் கேட்டுத்தெரிந்துகொண்டு 1 அனுஷ்டித்து யாராவதொருவன் ஓரிடத்தில் நல்ல ஆசாரங்களுடன் ஸாதுவாயிருப்பான். அறிந்து செய்யப்படும் (பிரஜைகளைத் துன்பப்படுத்தும்) செய்கையால் ஒருவன் பொருளுள்ளவனவதும் ஆகாமலிருப்பதுமுண்டு. அதைச் சொந்தப் புத்தியால் ஆலோசித்துப்பார். இந்தக்கேள்வி அவ்விதம் நிச்சயிக்கத் தக்கதாயிருக்கிறது. பாரத! அரசர்களின் வ்யவஹாரம் நடைபெறக் காரணமான ஆபத்காலத்திற்குரிய தர்மங்களைப்பற்றிய பல உபாயங்களைக் கேள். தர்மத்தின் காரணத்தால் பிரஜைகளைத் துன்பப்படுத்திப் பொருளடைவதென்னும் இவ்விதத்தர்மத்தை நான் அடைய விரும்பவில்லை. இந்த உபாயமானது இவ்வுலகிலுள்ள பிராணிகளால் துக்கத்துடன் அங்கீகரிக்கத் தக்கதாகும்; முடிவில் 2 மரணத்திற்கு ஒத்ததாகும். இதுவே நல்லறிவுள்ளவரனைவரின் நிச்சயமும். மனிதன் எப்பொழுதும் சாஸ்திரத்தை எப்படி எப்படிப் பார்க்கிறானே அப்படி அப்படி அறிவுள்ளவனாவான். அறிவில் இவனுக்கு விருப்பமுமுண்டாகும். மனிதனுக்கு அறிவில்லாமையால் உபாயக்கேடும் அறிவால் உபாயமுமுண்டாகும். உபாயமானது ஸம்பத்தைச்செய்யும் உயர்ந்த ஸாதனமாகும். ஸந்தேகமில்லாதவனும் அஸூயையில்லாதவனுமாய் இந்த வசனத்தைக் கேள். பொக்கசமழிவதாலேயே அரசனுக்கு மிக்க பலக்குறைவுண்டாகும். அரசன் எப்பொழுதும் இந்தப் பிராணிகளிடமிருந்து சத்திக்குத்தக்கபடி பொக்கசத்தையுண்டு பண்ணிக்கொள்ளவேண்டும். முன்னோர்களான மனிதர்களால் ஆசரிக்கப்பட்ட இந்த 3 உபதர்மத்தை அடைந்த பின் நல்ல காலத்தை அடைந்து (முன் துன்பப்படுத்தப்பட்ட பிராணிகளை) ஸந்தோஷப்படுத்தவேண்டும். இந்தத்தர்மம் ஆபத்காலத்தில் நியாயமாகும். ஓ! பாரத! சக்தியுள்ளவர்களுக்குத் தர்மம் வேறு. ஆபத்காலங்களில் தர்மம் 4 வேறு. 5 பொக்கசமில்லாமலும் தர்மம் அடையப்படும். தர்மத்தைவிட ஜீவனம் மிகப்பெரியதாகும். நியாயப்படியுள்ள தர்மத்தை அடைவதால் பலசாலியாயிருக்க முடியாது. யாதொரு காரணத்தால் ஒரே உறுதியாகத் தர்மத்திற்கு வ்ருத்தியுண்டாவதில்லையோ அக்காரணத்தால் ஆபத்காலத்தில் அதர்மமும் தர்ம லக்ஷணமுள்ளதாகக் கேட்கப்படுகிறது. அந்தச் சமயத்தில் அதர்மமும் தர்மமாகுமென்று அறி

1, 2 வேறுபாடம். 3 ஆபத்காலத்திற்குரிய தர்மம். 4, 5, வேறுபாடம்.

ஞர்கள் அறிவிக்கிறார்கள். அவ்விஷயத்தில் ஆபத்து விலகிய பின் க்ஷத்திரியனுக்குத் தோஷத்தை விலக்கத்தக்க பிராயச்சித்தம் விதிக்கப்படுகிறது. இந்த அரசனுக்கு எவ்விதம் தர்மம் குறையாமலிருக்குமோ, இவன் எவ்விதம் சத்துருவின்வசம் அடையாதிருப்பனோ அதைச் செய்யவேண்டும். தன்னைக் குறையில்லாதவனாகச் செய்துகொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார்கள். எல்லாவிதத்தாலும் எல்லாஉபாயங்களாலும் தன்னைத் துன்பத்திலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும். தன்னுடைய தர்மத்தையும் பிறனுடைய தர்மத்தையும் (ஆபத்காலத்தில்) கவனிக்கவேண்டியதில்லையென்பது நிச்சயம். அப்பா! தர்மமறிந்தவனுக்கு ஆபத்காலத்திலுள்ள தர்மத்தைப் பற்றிய நிச்சயம் தர்மத்தில் [1] ஸாமர்த்தியமாகும். க்ஷத்திரியனுக்குக் கைவன்மையால் முயற்சிசெய்வது [2] ஜீவனமென்று வேதங்கூறுகிறது. பாரத! க்ஷத்திரியன் ஜீவனத்திற்குத் தடையுள்ளஸமயத்தில் ரிஷிகளின் பொருளையும் வேதமோதுபவர்களின் பொருளையும் தவிர வேறு எவனுடையபொருளை எடுக்கத் தகுதியுள்ளவனல்லன்? இது, துன்பமுள்ளபிராமணன் யாகஞ்செய்யத் தகாதவனுக்கும் எப்படி யாகஞ்செய்விப்பானோ, புஜிக்கத்தகாததையும் எப்படிப் புஜிப்பானோ அப்படியே; இதில் சந்தேஹமில்லை. துன்பமுள்ளவனுக்கு எந்தவழி செல்லத்தகாதது? [3] தடுக்கப்பட்டவனுக்குக் கெட்டவழியென்பதில்லை. துன்பப்படுத்தப்படுகிறவன் எவ்விதம் வழியைவிட்டுஓடுவனோ இதுவும் அவ்விதமாகும். எவனுடைய பொக்கசமும் சேனையும் குறைவடைவதால் எல்லாப் பிராணிகளுக்கும் துன்பம்நேருமோ எவனுக்குப் பிழைக்கையெடுப்பதும் வைஸ்யசூத்ரர்களின்ஜீவனமும் விதிக்கப்படவில்லையோ அந்த க்ஷத்திரியன் முக்கியமான தர்மத்தைவிடத்தக்க ஆபத்துள்ளபொழுது [4] தன்ஜாதியாரை அடுத்துப் பிழையாமல் தன்தர்மத்திற்கடுத்தபடியான (பிரஜைகளைத் துன்பப்படுத்தியாவது பொருளை அடைவதென்னும்) இரண்டாவது விதிப்படி ஜீவிப்பது நியாயமாகும். ஆபத்தை அடைந்தவன் தர்மத்திற்குரிய நியாயத்தைவிட்டுப் பிழைக்கலாம். இது ஜீவனத்துக்குக் குறைநேரும் பொழுது பிராம்மணர்களிடத்திலும் காணப்பட்டது. க்ஷத்திரியனிடத்தில் ஸந்தேஹமில்லாமல் எப்பொழுதும் இது நிச்சயிக்கப்பட்டது. க்ஷத்ரியன் பொருளுள்ளவர்களிடமிருந்து பொருளை எடுத்துக்கொள்ளலாம். எவ்விதத்திலும் (தான்) துன்பமில்லாதிருக்கவேண்டும். க்ஷத்ரியன் துன்பமுள்ள பிரஜைகளை ரக்ஷிப்

1 வேறுபாடம். 2 'ஸாமர்த்தியம்'என்பது வேறுபாடம். 3. 4 வேறுபாடம்.

பவனென்று அறிவிக்கிறார்கள். ஆகையால், ரக்ஷணையைச்செய்கிறவனென அரசன் பொருளை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வுலகில் க்ஷத்திரியனல்லாதவர்களிலும் எவ்விதமனிதனுக்கும் ஹிம்ஸையில்லாததான ஜீவனமில்லை. ஒருவராய் அரண்யத்திலிருந்து ஸஞ்சரிக்கும் முனிவருக்கும் லலாடத்தில் எழுதியபடி நடக்குமென்று நம்பிக்கொண்டிருந்து ஜீவிக்கமுடியாது. குருக்களிற்சிறந்தவனே! பிரஜைகளின் ரக்ஷணையைச் செய்யவிரும்பும் க்ஷத்திரியனுக்கு அது மிகவும்முடியாதது. ஆபத்காலத்தில் எப்பொழுதுமே அரசும் ராஜ்யமும் ஒன்றையொன்று அடுத்திருக்கும்படி செய்யவேண்டும். இது ஸநாதனமானதர்மம். அரசன் ஆபத்காலங்களில் திரவியக்குவியல் களைக்கொண்டு ராஜ்யத்தை எவ்விதம் ரக்ஷிக்கிறானே அவ்விதம் ராஜ்யமும் அரசனை ஆபத்காலத்தில் ரக்ஷிக்கத்தக்கதாயிருக்கவேண்டும். பகியால்பீடிக்கப்பட்ட அரசன், ராஜ்யத்தில் சேர்த்துவைக்கப்பட்ட கோசம் தண்டம் சேனை மித்திரன் இவைகளையும் மற்றவற்றையும் விலகியிருக்கச்செய்யக்கூடாது. தர்மமறிந்தவர்கள் [1] அன்னத்தால் விதையை ஸம்பாதிக்கவேண்டுமென்றறிவிக்கிறார்கள். இந்த ஆபத்கால தர்மத்தைப்பற்றிய விஷயம் பெரியமாயையுள்ள சம்பரனுடைய மதமென்று சொல்லுகிறார்கள். எந்தஅரசனுடைய ராஜ்யமானது ஜீவனமின்றிக் கஷ்டப்படுகிறதோ, எவன் வேறுமனிதனையிருக்கிறானே, எவன் விதேசத்திற்குச் செல்லுகிறானே அந்தஅரசனுடைய ஜீவனம் நிந்திக்கப்பட்டதாகும். அரசனுக்குக் கோசமும் சேனையும் மூலமாகும். சேனையோ கோசத்தை மூலமாகக்கொண்டது. அந்தச்சேனை எல்லாத் தர்மங்களுக்கும் மூலம். ப்ரஜைகள் அந்தத் தர்மத்தை மூலமாகக் கொண்டவைகள். இவ்வுலகில் கோசமானது பிறரைத்துன்பப்படுத்தாமல் சேர்க்கப்படமுடியாதது. (கோசமில்லாவிட்டால்) சேனை ஏது? அவ்விதக்கோசத்திற்காகத் துன்பப்படுத்துவதால் தோஷத்தை அடையமாட்டான். செய்யத்தகாததும் கார்யத்திற்குவேண்டியாகங்களில் செய்யப்படுகிறது. ஆபத்காலத்தில் பொக்கசத்தைச் சேர்க்கத் துன்பப்படுத்துகிறதென்னும் இந்தக் காரணத்திற்காக அரசன் தோஷத்தை அடையமாட்டான். ஆபத்காலத்தில் பிரஜைகளைக் கஷ்டப்படுத்துவது அவைக

---

1 'விதைக்குமிச்சமின்றிப் புஜித்துவிட்டால் பிறகு போஜனம் அரிதாய்விடும். புஜிப்பதைக்குறைத்தாவது விதையைச் சம்பாதித்தால் பிறகு நன்றாகப்புஜிக்கலாம். அதுபோலத் தனம்குறைந்த அரசனை பிரஜைகள் பெருகச்செய்தால் பிறகு அவனால் அவை ரக்ஷிக்கப்படும். அவ்விதமின்றி அரசனுக்கு மோசம் வந்தால் ப்ரஜைகளும் அழிந்துபோம்' என்பது பழையஉரை.

ளின் க்ஷேமத்திற்குக் காரணமாகும். அப்போது வேறுவிதமா யிருப்பது துன்பத்திற்குக் காரணமாகும். யானை குதிரை முதலிய வைகளைரக்ஷிப்பது பயனற்றதாலும் அதுமுழுவதும் பொரு ளைச் சேர்க்கக் காரணமாகும். புத்தியுள்ளவன் கார்யங்களின் நிச்சயத்தை இவ்விதம் புத்தியால் நன்றுகப் பார்த்துக்கொள்ள வேண்டும். 1 யாகத்திற்கு வேறொன்று ஸாதனமாகிறது. யாகம் வேறொன்றிற்கு ஸாதனமாகிறது. மற்றொன்று யாகத்தின் ஸாத னத்திற்கு ஸாதனமாகிறது. அவை முழுதும் யாகத்திற்குஸாத னந்தான். இதுவிஷயத்தில் தர்மத்தின் உண்மையைவெளியிடத் தக்க உபமானத்தைச்சொல்லுகிறேன். யாகத்திற்காக யூபத்திற் குரியமரத்தை வெட்டுகிறார்கள். அவ்விடத்தில் அருகிலுள்ள எந்தச்சிலமரங்கள் (அதற்கு) விரோதமாயிருக்கின்றனவோ அந்தமரங்களையும் நிச்சயமாக வெட்டுகிறார்கள். அந்தமரங்கள் விழும்பொழுது மற்றமரங்களையும் முறிக்கின்றன. சத்துருக்களைத் தபிக்கச்செய்கிறவனே! இவ்விதம் எந்த மனிதர்கள் பெரிய பொக்கசத்திற்கு விரோதிகளாயிருக்கிறார்களோ அவர்களைக் கொல்லாமல் இந்தப்பொக்கசம் லபித்திப்பதைக்காணேன். பாரத! தனத்தால் இவ்வுலகையும் மேலுலகையும் ஸித்தியத்தையும் தர் மத்தையும் ஜயிக்கலாம். பொருளில்லாதவன் பிணமே ஆவான். எல்லா உபாயங்களாலும் யாகத்தில்பயன்படத்தக்கபொருளை ஸம்பாதிக்கவேண்டும். ஓ! பாரத! இவ்விதம் ஆபத்துக்காலத் தில் செய்யத்தக்கதும் மற்றஸமயத்தில் செய்யத்தகாததுமான இந்தவிஷயங்களில் ஸமமானதோஷமுள்ளவுகைக்கூடாது. பரத குலத்திலுதித்த அரசனே! பொருளை அடைவது விடுவது இவ் விரண்டும் ஒருவனிடத்தில் எவ்விதமும் இருக்கமுடியா. காடு களில் செல்வமிக்கவர்களை ஓரிடத்திலும் நான் காணேன். இந்தப் பூமியில் பொருளென்று யாதொருவஸ்து காணப்படுகிறதோ அதை, 'இது, எனக்கு வேண்டும், எனக்கு வேண்டும்' என்று உலகம்நினைக்கிறது. எவ்விதத்திலும் அரசனுடையதர்மத்துக்குச் சரியானதொன்றுமில்லை. அரசர்களுக்கு ஆபத்காலத்திற்காக வேறுவிதமானதர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. அது மற்றஸம யத்தில் தர்ம்மாகாது. சிலர் ஞானத்தாலும் கர்மத்தாலும், தவ

1 'பசுமுதலியவை யாகத்திற்கு ஸாதனம். யாகம்சித்தசுத்திக்கு ஸாதனம். பசு, யாகம், சித்தசுத்தி மூன்றும் மோக்ஷத்திற்குஸாதனம். இப்படியே தண்டம் பொக்கசத்திற்குஸாதனம். பொக்கசம் சேனைக்கு ஸாதனம். சேனை சத்துருவை ஜயிப்பதற்கு ஸாதனம். பொக்கசம், சேனை, ஜயம் மூன்றும் ராஜ்யத்தின் வ்ருத்திக்கு ஸாதனம்' என்பது பழைய உரை.

முள்ளசிலர் [1] தவத்தாலும், மற்றுஞ்சிலர் புத்தியாலும் ஸாமர்த்தியத்தாலும் பொருளைச்சேர்க்கிறார்கள். பொருளில்லாதவனைப் பலமில்லாதவனென்று சொல்லுகிறார்கள். மனிதன் பொருளால் பலமுள்ளவனுவான். [2] பலமுள்ளவனுக்கு யாவும் அடையத்தக்கனவாகும். பொக்கசமுள்ளவன் யாவற்றையும் ஜயிப்பான். [3] கோசமும் தர்மமும் காமமும் பரலோகமும் இவ்வுலகமும்மாகிய அனைத்தையும் தர்மப்படி அடையவிரும்பவேண்டும். ஒருஸமயத்திலும் அதர்மத்தால் அடையவிரும்பக்கூடாது" என்றுசொன்னர்.

ராஜதர்மம் முற்றிற்று.

நூற்றுமுப்பத்தோராவது அத்யாயம்.

ஆபத்தர்மம்.

(பீஷ்மர், அரசன் ஆபத்காலத்தில் எல்லாப்பொருளையும் கொடுத்தாவது தன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டுமென்று கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! குறைவடைந்தவனும் சோம்பலுள்ளவனும் பந்துக்களின் நாசத்தில் பயத்தால் வெளியில்வந்து யுத்தஞ்செய்ய முடியாதவனும் முக்கியமானஜனங்களிடம் ஸந்தேகமுள்ளவனும் கெட்ட ஆலோசனையுள்ளவனும் ராஜ்யத்திலுள்ளவர்களாலும் பட்டணத்திலுள்ளவர்களாலும் வெறுக்கப்பட்டவனும் செல்வப்பெருக்கமில்லாதவனும் மித்திரர்களை மரியாதைசெய்ய முடியாதவனும் எல்லாவிதத்தாலும் வேறுபட்ட மந்திரிகளுள்ளவனும் சத்துருசேனையால் எதிர்க்கப்பட்டவனும் பலமில்லாதவனும் அதிகபலமுள்ளவிரோதியால் துன்பப்படுத்தப்பட்ட மனமுள்ளவனுமாயிருப்பவனுக்கு எதுசெய்யத்தக்கதென்று கூறப்படுகிறது? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "ஜயிக்கவிருப்பமுள்ள சத்துருவானவன் தர்மப்படி பொருளை ஸம்பாதிப்பதில் ஸமர்த்தனும் பரிசுத்தனுமாயிருப்பானுகில் விரைவில் அவனுடன் ஸந்திசெய்துகொள்ளவேண்டும். [4] முன்னோர்களால் அனு

---

1 வேறுபாடம். 2 'தனமுள்ளவன்' என்பது வேறுபாடம்.

3 'தர்மமும் காமமும் பரலோகமும் இவ்வுலகமும் கோசத்தால்விளைக்கும். அந்தக்கோசத்தைத் தர்மத்தால் அடையவிரும்பவேண்டும்' என்பது வேறுபாடம்.

4 'தன்முன்னோர்களால் அனுபவிக்கப்பட்டவைகளும் அந்தச்சத்துருவினால் ஆக்ரமிக்கப்பட்டவைகளுமான கிராமம் நகரமுதலியவைகளை அவனிடமிருந்து ஸாமோபாயத்திலேயே விடுவித்துக்கொள்ளவேண்டும்' என்பது பழைய உரை.

பவிக்கப்பட்டவைகளை விடுவித்துக்கொள்ளவேண்டும். எவன் அதர்மமாக ஜயிக்கவிருப்பமுள்ளவனும் பலமுள்ளவனும் பாபத்தில் உறுதியுள்ளவனுமாயிருக்கிறானே அவனுடனும் தன்னுடைய சில கிராமங்களைக் கொடுத்தாவது ஸந்திசெய்துகொள்ள விரும்பவேண்டும். ராஜதானியையவிட்டாவது [1] வேறு உபாயத்தாலாவது ஆபத்தை விலக்கிக்கொள்ளவேண்டும். அரசத்தன்மைக்குத்தகுதியுள்ளவன் உயிரோடிருந்தால் திரும்பவும் திரவியங்களைத் தேடிக்கொள்ளலாம். எந்த ஆபத்துக்கள் பொக்கசத்தையும் சேனையையும் இழந்து விலக்கிக்கொள்ளத்தக்கவைகளோ அவைகளின்விஷயத்தில் அறம்பொருள்களை அறிந்த எவன் மேலானதன்னை இழப்பான்? [2] விரோதி செய்யுங்குற்றங்களை வெறுக்கவேண்டும். சத்துருவுக்குவசப்பட்ட பொருளில் ஸ்நேஹம் வைப்பது கூடாது. எவ்விதமாவது கூடுமானால் (சத்துருவிடம்) தன்னைக் கொடுக்கக்கூடாது'' என்றுசொன்னார்.

யுதிஷ்டிரர், ''உள்ளிலுள்ள மந்திரி முதலியவர் கோபங்கொண்டும் வெளியிலுள்ள ராஜ்யமுதலியவை சத்துருவால் பீடிக்கப்பட்டும் பொக்கசம் குறைவடைந்தும் மந்திராலோசனை (யாவராலும்) கேட்கப்பட்டுமிருக்கும்பொழுது எதுசெய்யத்தக்கதென்றுகூறப்படுகிறது?'' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

''(சத்துரு தர்மபுத்தியுள்ளவனானால்) விரைந்து ஸந்திசெய்துகொள்ள விரும்பவேண்டும். (அதர்மபுத்தியுள்ளவனானால்) வேகமாகக் கடுமையான பராக்ரமத்தைச் செலுத்தவேண்டும். பராக்ரமத்தைச் செலுத்தினால் வேகமாகச் சத்துரு ஓடுவான். அல்லது (யுத்தத்தில் நேரும்) மரணத்தால் பரலோகமுண்டு. பூமிக்குப்பதியான அரசன் அல்பமாயிருந்தாலும் பக்தியுள்ளதும் ஸந்தோஷமுள்ளதும் புஷ்டியுள்ளதுமானதன்சேனையால் பூமியை ஜயிப்பான்; கொல்லப்பட்டாவது ஸ்வர்க்கத்தை அடைவான்; சத்துருக்களைக்கொன்றுவது [3] ஸுகத்தை அடைவான். யுத்தத்தில் உயிரை விடுகிறவன் இந்திரனுடைய உலகத்தை அடைகிறானல்லனே? யுத்தமின்றிச் சாந்தனையிருப்பதை அடைவதற்காக எல்லாஜனங்களும் [4] அறியும்படியான வழியைச்செய்து நம்பிக்கையை உண்டுபண்ணி அடக்கமாயிருக்கவேண்டும். (அடக்கத்தைத் தெரிவிக்கும்படி) [5] பாத

---

1 'பொருளைக்கொடுத்தாவது' என்பது வேறுபாடம்.

2 '(ஆபத்காலத்தில்) அந்தப்புரஸ்திரீகளையும் வெறுக்கவேண்டும்' என்பது வேறுபாடம். 3 'பூமியை' என்பது வேறுபாடம். 4 வேறுபாடம். 5 'உபாயத்தினால் (சத்துருக்களிடத்தில்) நம்பிக்கையுள்ளவனாகவும் இருக்கவேண்டும்' என்பது வேறுபாடம்.

ரகைகூடிகளையுமாவது விலக்கிக்கொள்ளவேண்டும். வேகமாக வெளியிற்போக விருப்பமுள்ளவன் தன் சேனையை இன்சொல்லால் ஸமாதானஞ்செய்துகொண்டு தேசாந்தரம் சென்றபின் [1] "ஆலோசனைசெய்து பிறகு தான் முயற்சிசெய்யவேண்டும்" என்றுசொன்னர்.

நூற்றுமுப்பத்திரண்டாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அரசன் துஷ்டஜனங்களிடமிருந்து பொருளைக் கவர்ந்தாவது, ஆபத்தையடைந்த பிராம்மணர்களை ரக்ஷிக்கவேண்டுமென்பதைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! எல்லாஜனங்களாலும் விரும்பப்படும் அரசர்களுக்குரிய முக்யமானதர்மம் குறைவடைந்தும் பூமியிலுள்ள ஜீவனமெல்லாம் திருடர்களால் ஆக்ரமிக்கப்பட்டும் மிக்க ஆபத்தானகாலம் வந்திருக்கையில் பிராம்மணன் ஸ்நேஹத்தால் புத்ரபௌத்ரர்களை விடாமல் எதைக்கொண்டு ஜீவிப்பான்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "அவ்விதமான ஸமயம்வரும்பொழுது அறிவின் வலிமையை அடைந்து ஜீவிக்கவேண்டும். உலகில் காணப்படும் பொருள்கள்யாவும் ஸஜ்ஜனங்களுக்காகவே. அஸாதுக்களுக்கு ஒன்றுமில்லை. எவன் அஸாதுக்களிடமுள்ள பொருளையெடுத்து ஸாதுக்களுக்குக் கொடுக்கிறானே அவன்தான் தன்னைப் பாலமாகச் செய்துகொண்டு ஆபத்காலத்திற்குரிய தர்மத்தைச்செய்தவனாகிறான். அரசனே! தன்னுடைய ராஜ்யத்தில் கோபமில்லாமலும் ரக்ஷிக்கும் தர்மத்தை விரோதப்படுத்தாமலும் கொடாத பொருளையும் ஸஹோதரனுடையபொருளென்றுவது தன்னுடையதென்றுவது சொல்லி எடுத்துக்கொள்ளவேண்டும். அறிவின் பலத்தால் பரிசுத்தியுள்ளவனும் ஜீவனத்திற்குத்தக்க அறிவுள்ளவனும் தைரியமுள்ளவனுமான எவன் நிந்திக்கப்படுங்கார்யங்களிலும் ப்ரவிருத்திக்கிறானே அவனைப்பற்றி இவ்வுலகில் எவன் நிந்திக்கத்தக்கவனுவான்? யுதிஷ்டிர! எவர்களின் [2] ஜீவனமானது பலத்தால் செய்யப்பட்டதாயிருக்கிறதோ அவர்களுக்கு வேறுஜீவனம் ருசியாது. பலமுள்ள அவர்கள் பராக்ரமத்தால் ப்ரவிருத்திப்பார்கள். ஆபத்காலத்திற்குரிய சாஸ்திரமானது இவ்விதம் [3] பொதுவாயிருப்பதால் புத்தியுள்ளவன் ஆபத்துள்ள

1, 2, 3 வேறுபாடம்.

ஸமயத்தில் இவ்விதமும் இதற்குமேலும் நடத்திக்கொள்ளலாம். மரியாதை செய்யப்பட்டவர்களும் பூஜிக்கப்பட்டவர்களுமான ரித்விக்கும் புரோஹிதரும் ஆசாரியருமாகிய ப்ராம்மணர்கள் (மிகுதியான பொருளுள்ளவர்களாயிருந்தாலும் பொருளுக்காக) அவர்களைப்பீடிக்கக்கூடாது; பீடிப்பவன் தோஷங்களை அடைவான். இந்தச்சாஸ்திரம் உலகத்திற்குப்பிரமாணம். இது ஸநாதனமான கண். இதைப் பிரமாணமாகக்கொண்டு நல்லதோ கெட்டதோ இதின்படி நடக்கவேண்டும். கிராமத்திலிருக்கும் பலமனிதர்கள் ஒருவரையொருவர் குற்றங்களைச் சொல்லுவார்கள். அரசன் அவர்களின் வசனத்தைக் கேட்டு மரியாதை செய்வதும் அல்லது தண்பப்படுத்துவதும்கூடாது. எவ்விதத்திலும் அபவாதவசனம் பேசத்தக்கதன்று; கேட்கத்தக்கதுமன்று. அபவாதம் பேசுகிறவிடத்தில் காதுகளை மூடிக்கொள்ளவேண்டும். அவ்விடம்விட்டு வேறிடத்திற்காவது செல்லவேண்டும். அபவாதம் பேசுவதும் கோட்சொல்லுவதும் ஸாதுக்களின்ஸ்வபாவமன்று. யுதிஷ்டிர! ஸாதுக்கள் எப்பொழுதும் குணங்களையே கூறுவார்கள். அடக்கத்தக்கவைகளும் நன்கு சிக்ஷிக்கப்பட்டவைகளும் நன்முக இழுக்கத்தக்கவைகளுமான காளைகள் எவ்விதம் ஸமமானபாரமுள்ளவைகளாகிச் சுமையைத் தூக்கிக்கொண்டு செல்லுகின்றனவோ அவ்விதம் அரசனிருக்கவேண்டும். இந்த அரசனுக்கு எப்படியிருந்தால் பலபேர்கள் துணைவர்களாவார்களோ அவ்வித ஆசாரமுள்ளவனுக இவன் இருக்கவேண்டும். ஆசாரத்தையே தர்மத்திற்குரிய மிகப்பெரிய லக்ஷணமென்றறிகிறார்கள். சங்கலிதர்களின் தர்மத்தில் ப்ரீதியுள்ள மற்றச்சிலர்கள் (ரித்விக்முதலியவர்கள் குற்றஞ்செய்தாலும் பொருளை எடுத்தலாகிய தண்டனை கூடாதென்ற) இந்தத்தர்மத்தை விரும்புகிறார்களில்லை. அவர்கள் [1]மத்ஸரத்தாலும் பேராசையாலும் எடுப்பதுமட்டில் கூடாதென்று சொல்லுகிறார்கள். இந்தவிஷயத்தில் குருவாயிருந்தாலும் தர்மவிரோதமாகச்சென்றவனைச் சிக்ஷிக்கவேண்டுமென்று கூறும் ரிஷிகளின்வசனத்தையும் அறிவிக்கிறார்கள். ரிஷிகளின் வசனத்திற்கு ஒத்ததானப்ரமாணம் ஒன்றும் ஓரிடத்திலும் காணப்படவில்லை. விபரீததர்மத்திலிருக்கும் அதமனைமனிதனைத் தேவர்களும் சிக்ஷிக்கிறார்கள். கபடமாகப் பொருளை ஸம்பாதிப்பவன் தர்மத்தை இழக்கிறவனுகிறான். [2]எல்லாவிதத்தாலும் ஆதரிக்கப்படுவதும் [3]மனுமுதலிய ஸத்புருஷர்களால் ஆதரிக்கப்படுவதும் [4]மஹிமையிற்சிறந்த பெரியோர்களைக் காரணமாகக்கொண்டு

---

1 வேறுபாடம். 2 வேதத்தில் கூறியதர்மம்.
3 ஸ்மிருதியில் கூறியதர்மம். 4 ஆசாரத்தால்வரும் தேசதர்மம்.

ஆதரிக்கப்படுவதும் 1 தன்மனத்திற்குத் திருப்தியுள்ளதுமாயிருப்பது எதுவோ அதைத் தர்மமென்று நிச்சயிக்கவேண்டும். எவன் 2 நான்குகுணங்களுக்கும் ஒத்ததான தர்மத்தை அறிகிறானே அவன் தர்மத்தை அறிந்தவன். ஸர்ப்பத்தினுடைய அடியைப்போலவே தர்மத்தின் அடியைத் தேடிக்காணுவது கஷ்டம். மிருகங்களை அடிக்கும்வேடன் அடிபட்ட மிருகத்தின் 3 காலடியை உதிரம்விழுந்திருப்பதால் கண்டுபிடித்துப் பிறனுக்கு எவ்விதம் அறிவிப்பனோ அவ்விதம் தர்மத்தின் அடியை அறிவிக்கவேண்டும். யுதிஷ்டிர! எவ்விதம் நன்றாகச்செய்யப்பட்ட வழியால் செல்லவேண்டுமோ இந்த ராஜரிஷிகளின் நடையும் அவ்விதமே. நீ இவ்விதம் நட.

நூற்றமுப்பத்துமூன்றுவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அரசன் எவ்விதத்திலும் பொக்கசத்தை வ்ருத்திசெய்யவேண்டுமென்பதையும் திருடர்களும் மிச்சமின்றித்திருடாமல் மரியாதையுடன் இருக்கவேண்டுமென்பதையும் சொல்லியது.)

அரசனானவன் தன் ராஜ்யத்திலிருந்தும் பிறர்ராஜ்யத்திலிருந்தும் பொக்கசத்தை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும். கௌந்தேய! ராஜ்யத்திற்கு மூலமான தர்மமானது பொக்கசத்திலிருந்தன்றோ பெருகுகிறது? ஆகையால், பொக்கசத்தை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும். அதனை ஆதரித்து ரக்ஷிக்கவேண்டும். ரக்ஷித்துக்கொண்டு உலகத்திற்கு உபகாரஞ் செய்யவேண்டும். இது ஸநாதனமான தர்மம். அவ்விதப் பொருளாதாரமானது சுத்தமான ஒரே எண்ணமுள்ளவனாலும் க்ரூரனாலும் உண்டுபண்ணமுடியாது. இவைகளின் நடுநிலைமையை அடைந்து கோசத்தைச் சேர்க்கவேண்டும். பலமில்லாதவனுக்குப் பொருள் ஏது? பொருளில்லாதவனுக்குப் பலம்ஏது? பலமில்லாதவனுக்கு ராஜ்யம் ஏது? ராஜ்யமில்லாதவனுக்கு ஸம்பத்து எப்படி உண்டாகும்? பெருமையை அடைந்தவனுக்குச் செல்வத்தை

---

1 இவைகள் வேறுபடுமிடத்தில் தன்மனத்திற்குத் திருப்தியான தர்மம்.

2 முன்கூறிய ஸ்ருதி, ஸ்மிருதி, ஆசாரம், தன் மனம்என்னும்நான்கு; அல்லது வேதம், தர்க்கசாஸ்திரம், த்ருஷிசாஸ்திரம், தண்டநீதி இந்நான்குமாம்.

3 'இடத்தை' என்பது பழைய உரை.

இழப்பது மரணம்போன்றதாகும். ஆகையால், அரசன் பொக்க சத்தையும் பலத்தையும் மித்திரனையும் பெருகச்செய்யவேண்டும். கோசம்இல்லாத அரசனைச் [1] சத்துருக்கள் அவமதிப்பார்கள்; அவன் செய்யும்வேலையால் சிறிதும் சந்தோஷப்படமாட்டார்கள்: உத்ஸாஹத்தையும் அடையமாட்டார்கள். ஸம்பத்தென்னும் காரணத்தால்தான் அரசன் பெரிய மரியாதையைப் பெறுகிறான். ஸ்த்ரீயின் ரஹஸ்யாங்கத்தை வஸ்திரமானது மறைப்பதுபோல அந்த ஸம்பத்தானது அந்த அரசனுடைய பாபங்களை மறைக்கிறது. முன் துன்பப்படுத்தப்பட்ட மனிதர்கள் அவனுடைய ஸம்பத்தைக்கண்டு தாபத்தை அடைவார்கள். அவர்கள் செந்நாய்களுக்கு ஒப்பாக எப்பொழுதும் அடிக்க விருப்பமுள்ளவர்களையே அடைவார்கள். பரதர்களில் மிகச்சிறந்தவனே! இவ்விதமான அரசனுக்கு ஸுகமேது? அரசன் முயற்சியுள்ளவனாகவே இருக்கவேண்டும்; சோர்வை அடையக்கூடாது. முயற்சியென்பதுதான் ஆண்மை. கணுவல்லாதவிடத்தில் பங்கத்தையும் அடையலாம். இவ்வுலகில் ஒருவனுக்கும் வணங்கக்கூடாது. அரண்யஞ்சென்று மிருகக்கூட்டங்களுடன் சேர்ந்து ஸஞ்சரித்துக்கொண்டும் இருக்கலாம். மர்யாதையை விட்டவர்களும் திருடர்கள்போன்றவர்களுமான மந்திரிகளுடன் சேர்ந்து ஸஞ்சரிக்கவேகூடாது. ஓ! பாரத! திருடர்களுக்குக் கொடுமையான கார்யங்களைச் செய்யச் சேனைகிடைப்பது எளிது. மர்யாதையற்ற மனிதனிடமிருந்து எல்லா ஜனங்களும் நிச்சயமாக நடுக்கமடைவார்கள். தையின்றிச்செய்யும் திருடர்களும் மர்யாதையற்றவனிடம் ஸந்தேகப்படுவார்கள். ஆகையால், ஜனங்களின் மனத்தைத் தெளியச்செய்யும் மர்யாதையை உறுதியாகச் செய்யவேண்டும். சிறிதாயிருப்பினும் கார்யங்களிலுள்ள மரியாதை உலகத்தில் பூஜிக்கப்படுவதாகும். 'இவ்வுலகமுமில்லை; மேலுலகமுமில்லை' என்ற எண்ணமுள்ள விவேகமில்லாத உலகமானது நாஸ்திகத் தன்மையாலும் பயத்தாலும் ஸந்தேகத்தாலும் நம்பிக்கையடையத் தக்கதாயிராது. ஸாதுக்களான திருடர்கள் பிறர்பொருளை எடுப்பதும் ஹிம்ஸை ஆகாது. மரியாதையுள்ள திருடர்களிடம் ப்ராணிகள் ஸ்நேஹமுள்ளவைகளாயிருக்கும். யுத்தத்திற்கு வராதவனைக் கொல்லுவதும் பரதாரங்களைத் தொடுவதும் நன்றிகொன்றவனையிருப்பதும் பிராம்மணன்பொருளை எடுப்பதும் மித்ரமின்றி எடுப்பதும் ஸ்திரீகளை அபஹரிப்பதும் கிராமத்திற்சென்று அதன் தலைமையாயிருப்பதும் [2] திருடர்களுக்கு நிந்திக்கப்பட்டனவாகும். இவற்றைச் செய்பவன் தோஷமுள்ளவனாகவே ஆவான். ஆகை

---

1 'மனிதர்கள்' என்பது வேறுபாடம். 2 வேறுபாடம்.

யால், திருடன் இவைகளை விலக்கவேண்டும். ஓ! பாரத! மிச்ச மின்றித்திருடினால், இந்தத் திருடனை அடித்துக்கொல்லவேண்டி (இவனுக்கு ஸ்மஹாமுண்டாகும்படி செய்துகொள்ள)க் 'கருது கிறார்கள். பிறகு, இவனுடைய இடமுதலியவற்றைத் தெரிந்து கொண்டு இவனுடைய பொருளையும் 1 மிச்சமில்லாமல் செய்து விடுவார்களென்பது நிச்சயம். ஆகையால், திருடர்கள் தம்மிஷ்டப்படி செய்யத்தக்க பொருளையும் மிச்சமுள்ளதாகச் செய்ய வேண்டும். 'நான் பலமுள்ளவனாயிருக்கிறேன்' என்று தீங்கு கனைச்செய்யக்கூடாது. மிச்சமுள்ளதாகச்செய்யுந்திருடர்கள் எல்லாவிதத்தாலும் (தமக்கும்) மிச்சமிருப்பதைக்காண்பார்கள். மிச்சமின்றிச் செய்பவனுக்கு எப்பொழுதும் மிச்சமின்றிச் செய்வதால் பயமுண்டு.

நூற்றமுப்பத்துநான்காவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பலத்தைப்புகழ்ந்து பாபத்தைச்செய்தவர்களுக்குப் பாபத்தைப்போக்கத்தக்க உபாயத்தைச் சொல்லியது.)

இவ்விஷயத்திலும் பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். இவ்விஷயத்தில் முன்னுள்ளதை அறிந்தவர்கள் காமந்தக ரிஷியின் வசனத்தைச் சொல்லுகிறார்கள். அறிவுள்ளகூத்திரியனுக்கு அறம்பொருள் இவ்விரண்டும் ப்ரத்யக்ஷமே. ஆகையால், (தர்மாதர்மத்தைப்பற்றிய ஆலோசனையைச் செய்துகொண்டு) அவைகளைத் தடைப்படச் செய்யாமலிருக்கவேண்டும். தர்மத்தைப்பற்றிய உபதேசம் 2 பரோக்ஷமாகும். இது தர்மம் இது அதர்மமென்று, மரத்திலுள்ளகனியைப்போலத் தர்மாதர்மங்களின் பயன்களை எவனும் எக்காலத்திலும் இவ்வுலகில் கண்டதில்லை. ஆகையால், (கல்வி, குலம், மித்திரன், புத்தி, தைரியம், பொருள், தவம், தூணைவர், வீர்யம், தெய்வம் என்னும்) பத்துவிதமான பலத்தையே அடையவிரும்பவேண்டும். உலகிலுள்ளயாவும் பலமுள்ளவனுக்கு அதீனமாகும். ஸம்பத்தையும் பலத்தையும் அமாத்தியர்களையும் இவ்வுலகில் பலமுள்ளவன் அடைவான். எவன் பொருளில்லாதவனை அவன் பதிதன். அவன் எச்சிலுக்கொப்பானவன். அவன் அல்பன். பலமுள்ளவன் பல அகார்யமுள்ளவனையும் அவனிடம் பயத்தால் ஒன்றுஞ்செய்யமுடியாது. உண்மையாகநடத்தப்படும் தர்மம், வலிமை இவ்விரண்

---

1 வேறுபாடம். 2 நேரிற்காணக்கூடாதது.

டும் பெரிய பயத்திலிருந்து ரக்ஷிக்கும். இவைகளில் தர்மத்தை விடப் பலம்மேலானதென்று நினைக்கிறேன். தர்மம் பலத்தாலுண்டாகிறது. ஸஞ்சரிக்கும் பிராணியானது பூமியில்போல் தர்மம் பலத்தில்நிலைபெற்றிருக்கிறது. புகையானது காற்றின் அதீனத்திலிருப்பதுபோலத் தர்மமானது பலத்தை அடுத்திருக்கிறது. கொடியானது மரத்தை அடுத்திருப்பதுபோல நாயகனற்றதர்மமானது பலத்தை அடுத்துநிற்கிறது. ஸுகமானது போகமுள்ளவர்கள்வசத்தில் இருப்பதுபோலத் தர்மமானது பலமுள்ளவர்களின் வசத்திலிருக்கிறது. பலமுள்ளவர்களுக்கு ஸாதிக்கத் தகாதது ஒன்றுமில்லை. பலமுள்ளவனால் யாவும் ஜயிக்கப்பட்டனவாகும். கெட்ட ஒழுக்கமுள்ளவனும் பலம்குறைந்தவனுமாயிருப்பவன் [1] ரக்ஷணையை அடையமாட்டான். செந்நாயினிடம் நடுங்குவதுபோல அவனிடமிருந்து எல்லா உலகமும் நடுக்கமடையும். பொருளிழந்தவன் அவமதிப்படைந்து கஷ்டப்பட்டுஜீவிப்பான். அவமதிக்கப்பட்ட ஜீவனமானது மரணம்போன்றதே. கெட்டநடையுடன் கூடினவன் பந்துக்களால் [2] விலக்கப்பட்டும் அம்புபோன்றசொல்லால் மிகவும் தபிக்கச்செய்யப்பட்டும் துன்பமுள்ளவனாகச் செய்யப்படுகிறானென்று இவ்விதம் சொல்லுகிறார்கள். அதர்மத்தால் பொருளைலம்பாதிக்கும்விஷயத்தில்பாபத்தை விலக்கிக்கொள்ளவேண்டி ஆசார்யர்கள் இவ்விதம் உபதேசிக்கிறார்கள். வேதவித்தையை ஆதரவுடன் கற்கவேண்டும்; அவ்விதமே ப்ராம்மணர்களை உபாஸிக்கவேண்டும்; அவர்களை இனிமையான சொல்லாலும் செய்கையாலும் அனுக்ரஹிக்கச்செய்யவேண்டும்; பெரியமனமுள்ளவனாயிருக்கவேண்டும்; பெரியகுலத்தில் மணம்புரியவேண்டும்; 'இவ்விதம் [3] இருக்கிறேன்' என்றுசொல்லவேண்டும்; பிறர்களின் குணங்களைச் சொல்லவேண்டும்; ஜபம் செய்யவேண்டும்; [4] தீர்த்தமுள்ளவனாக இருக்கவேண்டும்; அதிகமாகப் பேசாமல் மிருதுவாயிருக்கவேண்டும்; ப்ராம்மணனும் க்ஷத்திரியனும் செய்ய மிகக்கடினமான பலகார்யத்தைச்செய்துமேன்மையடையவேண்டும். உலகத்தால் பலவிதமாகச் சொல்லப்பட்டவனாலும் அதை எல்லாம் கவனியாமல் இவ்வித ஆசாரத்தை அடைந்தால் வேகமாக வெகுமானம்பெற்றவனாவான். ஸுகமாகப்பொருளை அனுபவிக்கலாம். நல்லநடக்கையொன்றால் ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். [5] இவ்வுலகத்தில்பூஜையையும் மேலுலகத்தில் பெரியபயனையும் அடைவான்.

1, 2, 3 வேறுபாடம். 4 'உதகசீல:' என்பதுமூலம் 'ஸ்நானம்செய்து' என்றுமாம். (இதன் 419-ம் பக்கம் பார்க்க.)

5 இங்கு அதிகபாடமான ஒருஸ்லோகம் விடப்பட்டது.

நூற்றமுப்பத்தைந்தாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், திருடனாயிருந்தாலும் சாஸ்திரமரியாதையை அனுஸரித்திருப்பவன் பரலோகத்தை அடைவானென்னும் விஷயத்தில் காபசீயனென்பவனுடைய சரித்திரத்தைக் கூறியது.)

திருடனானவன் மர்யாதையுள்ளவனாயிருந்துகொண்டு திருட்டுத்தனத்தாலும் வித்தியை அடைவானென்ற இவ்விஷயத்திலும் பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். அடிக்கவல்லவனும் புத்தியுள்ளவனும் சூரனும் கல்வியுள்ளவனும் மிகக்கொடியவனும் ஆச்ரமத்திலுள்ளவர்களின் தர்மத்தைக்காப்பவனும் ப்ராம்மணர்களுக்குஹிதனும் பெரியோர்களைப் பூஜிப்பவனும் வேடஸ்திரீயினிடம் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவனும் க்ஷத்ரியர்களின் தர்மத்தைக்காப்பவனும் [1] காபச்யனென்றுபெயருள்ளவனுமான ஒரு வேடன் திருட்டுத்தனத்தாலும் வித்தியைப்பெற்றான். காலையிலும் மாலையிலும் அரண்யத்திலுள்ள மிருகக்கூட்டங்களை அடிக்கிறவனும், மிருகஜாதிகளுக்குரிய விதிகளை அறிந்தவனும், நிஷாதஜாதியில் பிறந்தவர்களுள் ஸமர்த்தனும், [2] வனத்திலுள்ள எல்லாத்தேசங்களையும் அறிந்தவனும், எப்பொழுதும் பாரியாத்ரமென்னும் மலையில் ஸஞ்சரிப்பவனும், எல்லா ஜாதிகளின் தர்மத்தையும் அறிந்தவனும், பழுதற்றபாணமுள்ளவனும், உறுதியான ஆயுதங்களுள்ளவனுமான அந்தக்காபச்யன் ஒருவனுகவே பலநூறுசேனைகளையும் ஜயித்தான். அவன் பெரியகாட்டில் கிழவர்களான தன்தாய்தந்தையர்களைப் பூஜித்தும் மதுமாம்ஸங்களாலும் கிழங்குகனிகளாலும் பலவித அன்னங்களாலும் மர்யாதையுடன் போஜனம்செய்வித்தும் நன்முகப்பணிவிடைசெய்தும் வந்தான். அரண்யத்திலுள்ள ஸந்யாஸம்பெற்ற ப்ராம்மணர்களை ரக்ஷித்துக்கொண்டு எப்பொழுதும் வனத்திலுள்ள மிருகங்களை அடித்து அவர்களின்பொருட்டு அனுப்பிவந்தான். திருடனுடைய போஜனமென்ற சங்கையால் அவனிடமிருந்து எவர்கள் பெற்றுக்கொள்ளவில்லையோ அவர்களுடைய வீடுகளில் அவன் காலையிலேயே (மாம்ஸங்களை) வைத்துவிட்டுச் செல்லுவான். தயையில்லாமல்நடக்கும் திருடர்களில் மர்யாதையில்லாத பல்லாயிரம்பேர்கள் அவனைக் ராமத்தலைவனாக

---

1 'காயவ்யன்' என்பது வேறுபாடம்.

2 'எல்லாக் காலதேசங்களையும் அறிந்தவன்' என்பது வேறுபாடம்.

வரித்துக்கொண்டார்கள். திருடர்கள், 'தேசகாலங்களையும் முகூர்த்தத்தையும் அறிந்தவனும் நல்லறிவுள்ளவனும் சூரனும் உறுதியான வ்ரதமுள்ளவனுமான நீ எங்களனைவர்க்கும் ஸம்மத னாக முக்யமான க்ராமத்தலைவனாயிரு. நீ எப்படியெப்படி எங்களைச் சொல்லுகிறாயோ அப்படி அப்படி நாங்கள் செய்கிறோம். தாயும் தந்தையும் எவ்விதம் ரக்ஷிப்பார்களோ அவ்விதம் நியாயப்படி நீ எங்களை ரக்ஷி' என்று சொன்னார்கள்.

காபச்யன் சொல்லத்தொடங்கினன்: 'நீங்கள் ஸ்திரீகளையும் பயந்தவனையும் குழந்தையையும் தவஞ்செய்கிறவரையும் கொல்லக் கூடாது. யுத்தத்திற்கு வராதவனைக் கொல்லக்கூடாது. ஸ்திரீக ளைப் பலாத்காரமாக அபஹரிக்கக்கூடாது. எல்லாப்ராணிகளிலும் ஸ்திரீயை எவ்விதத்திலும் கொல்லக்கூடாதென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பசுக்களுக்கும் ப்ராம்மணர்களுக்கும் எப்பொழு தும் க்ஷேமத்தைச் சிந்திக்கவேண்டும். அவர்களுக்காக யுத்த தைச்செய்யவும்வேண்டும். பயிரை அழிக்கக்கூடாது. தேவர்களும் பிதிருக்களும் அதிதிகளும் பூஜிக்கப்படுகிற விவாஹமுதலிய நல்ல கார்யங்களுக்கு இடையூறு செய்யக்கூடாது. எல்லாப்ராணிகளி லும்சிறந்த ப்ராம்மணன் விடபடத்தக்கவன். அந்தப்ராம்மணர்க ளுக்குப் பூஜைசெய்யவேண்டும். அவர்களை எல்லாப்பொருள்களா லும் மரியாதைசெய்யவேண்டும். அந்தப்ராம்மணர்கள் எவனிடம் மிக்க கோபமுள்ளவர்களோ அவனுக்கு அவமானம் வருமென்று அறியவேண்டும். மூன்று உலகங்களிலும் அவனைரக்ஷிப்பவன் ஒரு வனுமில்லை. எவன், பிராம்மணர்களை [1] அவமதிக்கிறானோ அவர்க ளுக்கு நாசத்தையும் விரும்புகிறானோ அவனுக்கு ஸூர்யன் உதய மாகும் காலத்திலுள்ள இருளுக்குப்போல அவமானம் நிச்சயம். இவ்விடத்திலேயே இருந்துகொண்டு எல்லாவிதத்தாலும் பயனை எதிர்பார்க்கவேண்டும். எந்தெந்தவர்த்தகர்கள் நமக்குக்கொடுக்க வில்லையோ அவரவர்களை அந்தக் காரணத்திற்காக எதிர்க்கவேண் டும். தண்டமென்பது துஷ்டர்களை அடக்குவதற்காக விதிக்கப்படு கிறது. கொலைசெய்யவேண்டி விதிக்கப்படுகிறதில்லை. எவர்கள் ஸாதுக்களைத் துன்பப்படுத்துகிறார்களோ அவர்களைக் கொலைசெய் வது தர்மமென்று கூறப்படுகிறது. எந்தச்சிலர்கள் ராஜ்யத்தைத் துன்புஞ்செய்து தமக்குப் பெருமையைச் செய்துகொள்ளுகிறார்க ளோ அவர்கள் பிணத்தையடைந்தபுழுக்கள்போல அந்தராஜ்யத்தி லுள்ளவர்களுடன் கூடவே மரிப்பார்கள். எந்தத் திருடர்கள் இவ்வுலகில் தர்மசாஸ்திரப்படி இருப்பார்களோ அவர்கள் திருடர்

1 'நிந்திக்கிறானே' என்பது வேறுபாடம்.

களாயிருந்தாலும் சீக்கிரம் ஸித்தியடைவார்கள்' என்று சொன்னன். அந்தத் திருடர்கள் காபச்யனுடைய கட்டளைகள் யாவற்றையும் செய்துவந்தார்கள். யாவர்களும் பெருமையையும் அடைந்தார்கள்; பாவங்களிலிருந்து ஒழிவையும் அடைந்தார்கள். திருடர்களைப் பாவத்திலிருந்து விலக்கியவனும் ஸாதுக்களுக்கு க்ஷேமத்தைச்செய்தவனுமான காபச்யன் அந்தக்கர்மத்தால் பெரிய ஸித்தியைப்பெற்றான். எவன் காபச்யனுடைய இந்தக்கதையை எப்பொழுதும் சிந்திக்கிறானே அவன் அரண்யத்திலுள்ள பிராணிகளிடமிருந்தும் எவ்விதத்திலும் பயமடையமாட்டான். அவனுக்கு மனுஷ்யர்களிடமிருந்தும் பயமில்லை; எவ்விதத்திலும் தேவர்களிடமிருந்துமில்லை; ஸாதுக்களிடமிருந்துமில்லை; அஸாதுக்களிடமிருந்துமில்லை. அரசனே! அவன் காடுகளில் பசுக்களுக்குப் பதியாயிருப்பான்.

நூற்றமுப்பத்தாறுவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், போக்கசத்தைப்பெருகச்செய்வதற்காகஅபஹரிக்கத்தகுந்த பொருளையும் அபஹரிக்கத்தகாத பொருளையும் பதத்துக் கூறியது.)

முன்னுள்ளதை அறிந்தவர்கள், அரசர்கள் எந்தவழியாகப் பொக்கசத்தை உண்டுபண்ணிக் கொள்ளவேண்டுமோ அந்த விஷயத்தில் பிரம்மதேவர்பாடிய காதைகளைச் சொல்லுகிறார்கள்.

யாகஞ்செய்யும் ஸ்வபாவமுள்ளவர்களின் பொருளையும் தேவாலயத்தைச்சேர்ந்த பொருளையும் அபஹரிக்கக்கூடாது. க்ஷத்திரியனானவன் திருடர்களின் பொருளையும் நல்லகார்யங்களில்லாதவர்களின் பொருளையும் அபஹரித்துக்கொள்ளத்தக்கவன். ஓ! பாரத! க்ஷத்திரியர்களுக்கு இவ்வுலகிலுள்ள ப்ரஜைகள ரக்ஷிக்கத் தக்கவைகளும் கொல்லத்தக்கவைகளுமாகும். இவ்வுலகிலுள்ள பொருளானது க்ஷத்திரியனுடையதுதான்; மற்றவனுடையதன்று. அந்தப்பொருளானது இந்த க்ஷத்திரியனுக்குப் பலத்திற்காவது யாகத்திற்காவது ஆகும். புஜிக்கத்தகாத செடிகளையறுத்து (அவைகளை விறகாகக்கொண்டு) புஜிக்கத் தக்கவைகளையே பாகம் செய்கிறார்கள். எவன் தேவர்களையும் பிதிர்க்களையும் மனிதர்களையும் ஹவிஸால் ஆராதிக்கவில்லையோ அவனிடத்திலுள்ள பொருளானது பயனற்றதென்று தர்மமறிந்த ஜனங்

கள் சொல்லுகிறார்கள். அரசனே! தர்மமுள்ள அரசனைவன் அவன் பொருளை அபஹரித்துக்கொள்ளலாம். அதனல், அரசன் ஜனங்களை ஸந்தோஷப்படுத்தமாட்டானென்பதில்லை. ஜனங்களும் அரசனை நிந்திக்கமாட்டார்கள். எந்த அரசன் அஸாதுக்களிடமிருந்துபொருளையெடுத்து ஸாதுக்களிடம் அளிக்கிறானே அவன் தன்னைப் பாலமாகச்செய்து தர்மத்தை அடைந்தவனென்றே நினைக்கிறேன். பூமியைப் பிளந்துகொண்டு உண்டாகும் பிராணிகளும் [1] வஜ்ரியென்னும் புழுக்களும் எப்படி (மெள்ள வெகுதூரம் போகின்றனவோ) அவ்விதம் அரசன் இயன்றவரையில் பரலோகங்களை ஜயிக்கவேண்டும். அவைகள் எவ்விதம் காரணமின்றிஉண்டாகுமோ அவ்விதம் யாகமில்லாதவன் உண்டாவான். சக்களையும் கொசுக்களையும் எறும்புகளையும் புழுக்களையும் எவ்விதம் பசுக்களிடமிருந்து வெருட்டுவார்களோ அவ்விதமான செய்கையே [2] யாகமில்லாதவர்களிடம் [3] இருக்கவேண்டும். தர்மம் அவ்விதம் விதிக்கப்படுகிறது. பூமியில் புழுதியும் புல்லும் பூண்டும் காரணமின்றி (ஸூக்ஷ்மமாயும் அதிலும்ஸூக்ஷ்மமாயும்) இருப்பதுபோல இவ்வுலகில் தர்மமும் ஸூக்ஷ்மமாயும் அதிஸூக்ஷ்மமாயுமிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

நூற்றுமுப்பத்தேழாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி)

(பீஷ்மர், வரப்போகிற ஆபத்தைப்போக்கத்தக்க உபாயத்தை முந்தியே செய்துகொள்ள வேண்டுமென்கிறவிஷயத்தில் மீனைப்பற்றிய கதையைச்சொல்லியது.)

வரப்போகிறதை அறிந்துசெய்பவன், ஸமயத்தில்தோற்றும் திறமைவாய்ந்த புத்தியுள்ளவன், இவ்விரண்டுபேர்களும் ஸுகமாகச் செழிப்பார்கள். தாமஸஸ்வபாவமுள்ளவன் நாசமடைவான் இந்த விஷயத்திலேயே செய்யத்தக்கது செய்யத்தகாதது இவைகளின் நிர்ணயத்திற்காகத் தாமஸஸ்வபாவமுள்ளவனைப்பற்றிய மிக உத்தமமான இக்கதையைப் பரபரப்பின்றிக் கேள். ஓ! கௌந்தேய! அதிக மேடில்லாததும் அதிகமீன்களுள்ளதுமான ஒருகுட்டையில் ஸ்நேஹமுள்ளவையும் ஸாமர்த்தியமுள்ளவையுமான மூன்று மீன்களும் அவைகளுடன்சேர்ந்து ஸஞ்சரிப்பவை

---

1 2 வேறுபாடும்.

3 'அவர்களைத் தேசத்தை விட்டுத் துரத்தவேண்டும்' என்பது பொருள்.

களும் இருந்தன. அந்த மூன்றுமீன்களுள் ஒன்று காலத்திற் குத்தக்க அறிவுள்ளது. மற்றொன்று நீண்ட ஆலோசனையுள் ளது. மற்றது தாமஸஸ்வபாவமுள்ளது பிறகு, ஒருகால் மீன் பிடிப்பவர்கள் நான்குபுறத்திலும் பலவழிகளாலும் குட்டையைப் பள்ளங்களில் வடியவைத்தார்கள். அப்பொழுது அக்குட்டை குறைவடைவதைக்கண்டு பயம் அடைந்தபொழுது, நீண்ட ஆலோ சனையுள்ளமீனது நண்பர்களான அந்த இரண்டுமீன்களையும் நோக்கி, 'நீரில் வஸிப்பவைகளுக்கெல்லாம் இந்தத்துன்பம் உண்டாயிருக்கிறது. வழி காய்வதற்குமுன்னமே விரைந்து வேறி டத்துக்குச் செல்லுவோம். எவன் வரப்போகிற துன்பத்தை நல்ல நீதிகளால் நன்கு தடுக்கிறானே அவன் ஸந்தேஹமடையமாட் டான். ஆகையால், அவ்விதம் வேறிடத்திற்குச்செல்லுவோம்' என்று சொல்லிற்று. அவ்விரண்டுகளில் தாமஸஸ்வபாவமுள்ள அந்த மீனது 'இங்கு நன்கு வஸிக்கலாம். அதற்குள் அவ ஸரப்பட வேண்டாமென்று எனக்கு நிச்சயமாகத் தோற்றமிருக் கிறது' என்றுசொல்லிற்று. பிறகு, ஸமயத்திற்குத்தக்க அறி வுள்ள மீனது, நீண்ட ஆலோசனையுள்ள மீனைநோக்கி, 'ஸம யம்வரும்பொழுது எனக்கு ஒன்றும் நீதியைவிட்டுத்தவறாது' என்றுசொல்லிற்று. இவ்விதம்சொல்லப்பட்டதும் பெரிய புத்தி யுள்ளதுமான தீர்க்கதர்சியென்னும் மீனது வெளியிற்சென்று ஒருவாய்க்கால் வழியாக ஆழமான மற்றொருகுளத்தை அடைந் தது. பிறகு, மீனைக்கொண்டு பிழைப்பவர்கள் அக்குட்டைத் தண்ணீர் வடிந்திருப்பதை நன்றாகக்கண்டு பல உபாயங்களால் மீன்களைப் பிடிக்கத் தொடங்கினர்கள். ஜலம்வடிந்த அந்தக் குட்டையானது கலக்கப்பட்டபொழுதே அதிலிருந்த தாமஸஸ்வ பாவமுள்ள மீனது மற்றவைகளுடன்கூட அவர்களால்பிடிக் கப்பட்டது. கயிறுகளால் மீன்களைக்கட்டி உயரத்தூக்குவதைக் கண்டு, ஸமயத்தில் தோன்றும் திறமையுள்ள மீனது மற்ற மீன் களின் இடையிற்புகுந்து மீன்கள் கோக்கப்பட்டு உயரத்தூக்கும் அந்தக்கயிற்றை அப்படியே பிடித்துக்கொண்டு அதுவும் கோக் கப்பட்டதுபோலவே இருந்தது. அந்தமீன்பிடிப்பவர்கள் அந்த மீன்கள்யாவையுமே அந்தக்கயிற்றில் கட்டுப்பட்டனவென்று நினைத்தார்கள். பிறகு, விஸ்தாரமான ஜலத்தில் மீன்கள் அலம்பப் படும்பொழுது, ஸமயத்தில்தோற்றமுள்ள அந்தமீனது கயிற்றை விட்டு விடுபட்டுச் சீக்கிரம்சென்றது. மந்தஸ்வபாவமுள்ளதும் தாழ்ந்தபுத்தியுள்ளதும் அறிவில்லாததும் தெளிவில்லாததுமான தாமஸஸ்வபாவமுள்ள மீனது ஐம்பொறிகளும்அற்றவன்போல

கள் சொல்லுகிறார்கள். அரசனே! தர்மமுள்ள அரசனைவன் அவன் பொருளை அபஹரித்துக்கொள்ளலாம். அதனல், அரசன் ஜனங்களை ஸந்தோஷப்படுத்தமாட்டானென்பதில்லை. ஜனங்களும் அரசனை நிந்திக்கமாட்டார்கள். எந்த அரசன் அஸாதுக்களிடமிருந்துபொருளையெடுத்து ஸாதுக்களிடம் அளிக்கிறானே அவன் தன்னைப் பாலமாகச்செய்து தர்மத்தை அடைந்தவனென்றே நினைக்கிறேன். பூமியைப் பிளந்துகொண்டு உண்டாகும் பிராணிகளும் [1] வஜ்ரியென்னும் புழுக்களும் எப்படி (மெள்ள வெகுதூரம் போகின்றனவோ) அவ்விதம் அரசன் இயன்றவரையில் பரலோகங்களை ஜயிக்கவேண்டும். அவைகள் எவ்விதம் காரணமின்றிஉண்டாகுமோ அவ்விதம் யாகமில்லாதவன் உண்டாவான். சக்களையும் கொசுக்களையும் எறும்புகளையும் புழுக்களையும் எவ்விதம் பசுக்களிடமிருந்து வெருட்டுவார்களோ அவ்விதமான செய்கையே [2] யாகமில்லாதவர்களிடம் [3] இருக்கவேண்டும். தர்மம் அவ்விதம் விதிக்கப்படுகிறது. பூமியில் புழுதியும் புல்லும் பூண்டும் காரணமின்றி (ஸூக்ஷ்மமாயும் அதிலும்ஸூக்ஷ்மமாயும்) இருப்பதுபோல இவ்வுலகில் தர்மமும் ஸூக்ஷ்மமாயும் அதிஸூக்ஷ்மமாயுமிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

நூற்றுமுப்பத்தேழாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி)

(பீஷ்மர், வரப்போகிற ஆபத்தைப்போக்கத்தக்க உபாயத்தை முந்தியே செய்துகொள்ள வேண்டுமென்கிறவிஷயத்தில் மீனைப்பற்றிய கதையைச்சொல்லியது.)

வரப்போகிறதை அறிந்துசெய்பவன், ஸமயத்தில்தோற்றும் திறமைவாய்ந்த புத்தியுள்ளவன், இவ்விரண்டுபேர்களும் ஸுகமாகச் செழிப்பார்கள். தாமஸஸ்வபாவமுள்ளவன் நாசமடைவான் இந்த விஷயத்திலேயே செய்யத்தக்கது செய்யத்தகாதது இவைகளின் நிர்ணயத்திற்காகத் தாமஸஸ்வபாவமுள்ளவனைப்பற்றிய மிக உத்தமமான இக்கதையைப் பரபரப்பின்றிக் கேள். ஓ! கௌந்தேய! அதிக மேடில்லாததும் அதிகமீன்களுள்ளதுமான ஒருகுட்டையில் ஸ்நேஹமுள்ளவையும் ஸாமர்த்தியமுள்ளவையுமான மூன்று மீன்களும் அவைகளுடன்சேர்ந்து ஸஞ்சரிப்பவை

---

1 2 வேறுபாடும்.

3 'அவர்களைத் தேசத்தை விட்டுத் துரத்தவேண்டும்' என்பது பொருள்.

களும் இருந்தன. அந்த மூன்றுமீன்களுள் ஒன்று காலத்திற் குத்தக்க அறிவுள்ளது. மற்றொன்று நீண்ட ஆலோசனையுள் ளது. மற்றது தாமஸஸ்வபாவமுள்ளது பிறகு, ஒருகால் மீன் பிடிப்பவர்கள் நான்குபுறத்திலும் பலவழிகளாலும் குட்டையைப் பள்ளங்களில் வடியவைத்தார்கள். அப்பொழுது அக்குட்டை குறைவடைவதைக்கண்டு பயம் அடைந்தபொழுது, நீண்ட ஆலோ சனையுள்ளமீனது நண்பர்களான அந்த இரண்டுமீன்களையும் நோக்கி, 'நீரில் வஸிப்பவைகளுக்கெல்லாம் இந்தத்துன்பம் உண்டாயிருக்கிறது. வழி காய்வதற்குமுன்னமே விரைந்து வேறி டத்துக்குச் செல்லுவோம். எவன் வரப்போகிற துன்பத்தை நல்ல நீதிகளால் நன்கு தடுக்கிறானே அவன் ஸந்தேஹமடையமாட் டான். ஆகையால், அவ்விதம் வேறிடத்திற்குச்செல்லுவோம்' என்று சொல்லிற்று. அவ்விரண்டுகளில் தாமஸஸ்வபாவமுள்ள அந்த மீனது 'இங்கு நன்கு வஸிக்கலாம். அதற்குள் அவ ஸரப்பட வேண்டாமென்று எனக்கு நிச்சயமாகத் தோற்றமிருக் கிறது' என்றுசொல்லிற்று. பிறகு, ஸமயத்திற்குத்தக்க அறி வுள்ள மீனது, நீண்ட ஆலோசனையுள்ள மீனைநோக்கி, 'ஸம யம்வரும்பொழுது எனக்கு ஒன்றும் நீதியைவிட்டுத்தவறாது' என்றுசொல்லிற்று. இவ்விதம்சொல்லப்பட்டதும் பெரிய புத்தி யுள்ளதுமான தீர்க்கதர்சியென்னும் மீனது வெளியிற்சென்று ஒருவாய்க்கால் வழியாக ஆழமான மற்றொருகுளத்தை அடைந் தது. பிறகு, மீனைக்கொண்டு பிழைப்பவர்கள் அக்குட்டைத் தண்ணீர் வடிந்திருப்பதை நன்றாகக்கண்டு பல உபாயங்களால் மீன்களைப் பிடிக்கத் தொடங்கினர்கள். ஜலம்வடிந்த அந்தக் குட்டையானது கலக்கப்பட்டபொழுதே அதிலிருந்த தாமஸஸ்வ பாவமுள்ள மீனது மற்றவைகளுடன்கூட அவர்களால்பிடிக் கப்பட்டது. கயிறுகளால் மீன்களைக்கட்டி உயரத்தூக்குவதைக் கண்டு, ஸமயத்தில் தோன்றும் திறமையுள்ள மீனது மற்ற மீன் களின் இடையிற்புகுந்து மீன்கள் கோக்கப்பட்டு உயரத்தூக்கும் அந்தக்கயிற்றை அப்படியே பிடித்துக்கொண்டு அதுவும் கோக் கப்பட்டதுபோலவே இருந்தது. அந்தமீன்பிடிப்பவர்கள் அந்த மீன்கள்யாவையுமே அந்தக்கயிற்றில் கட்டுப்பட்டனவென்று நினைத்தார்கள். பிறகு, விஸ்தாரமான ஜலத்தில் மீன்கள் அலம்பப் படும்பொழுது, ஸமயத்தில்தோற்றமுள்ள அந்தமீனது கயிற்றை விட்டு விடுபட்டுச் சீக்கிரம்சென்றது. மந்தஸ்வபாவமுள்ளதும் தாழ்ந்தபுத்தியுள்ளதும் அறிவில்லாததும் தெளிவில்லாததுமான தாமஸஸ்வபாவமுள்ள மீனது ஐம்பொறிகளும்அற்றவன்போல

பும் அறிவுள்ள மனிதர்களுடன் எப்பொழுதும் ஸந்திசெய்து கொள்ளவேண்டும். ஓ! பாரத! உயிரைக் காக்கவேண்டியதற் காகப் பகைவர்களுடனும் ஸந்தி செய்துகொள்ளவேண்டும். பாரத! அறிவில்லாதவனவன் பகைவர்களான மனிதர்களுடன்கூட எப்பொழுதும் ஸந்தியைச்செய்யாதவனாயிருக்கிறானே அவன் ஒரு கார்யத்தையும் பயன்களையும் அடையமாட்டான். எவன் கார்யத் தின் உபாயத்தைத் தெரிந்துகொண்டு அமித்ரனுடன் ஸந்தியை யும் மித்திரனுடன் விரோதத்தையும் செய்கிறானே அவன் மிகப் பெரியபயனை அடைகிறான். இவ்விஷயத்திலும் ஓர் ஆலமரத்தி லுள்ள பூனைக்கும் எலிக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள்

ஒருபெரிய காட்டில் மிகப்பெரிய ஓர் ஆலமரமிருந்தது. அந்த மரமானது கொடிக்கூட்டங்களால் படர்ந்து சுற்றப்பட்டதும் பல விதப் பறவைக் கூட்டங்களுடன் கூடியதும் கவைகளுள்ளதும் மேகம்போன்றதும் குளிர்ந்தநிழலுள்ளதும் அழகானதும் துஷ்ட மிருகங்களுடன் கூடியதும் அரண்யத்திற்கு நான்குபுறத்திலும் வளர்ந்ததுமாயிருந்தது. பெரிய அறிவுள்ள பலிதமென்னும் ஓர் எலியானது அந்த ஆலமரத்தின் அடியை அடைந்து நூறுதுவார முள்ளவளையைச் செய்துகொண்டு வஸித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது எல்லாப் பிராணிகளையும் கொல்லத்தக்க லோமச மென்னும் பூனையானது அந்தமரத்தின் கிளையையடைந்து ஸுக மாக வஸித்துவந்தது. அரண்யத்தில் குடிகொண்ட ஒருசண்டா ளன் ஒவ்வொரு நாளும் ஸூர்யன் அஸ்தமித்தபின் அவ்விடத் திற்கு வந்து மிருக முதலியவற்றைப் பிடித்தற்குரிய பொறியை வைத்துவந்தான். அவன் நரம்புகளால் செய்யப்பட்ட சுருக்குக் கயிறுகளை அவ்விடத்தில் வைக்குமுறைப்படி வைத்துவிட்டு வீடு சென்று ஸுகமாக உறங்குவான்; இரவு விடிந்ததும் வருவான். அதில்ஒவ்வொருநாளும்இரவில் பலவிதமிருகங்கள்கட்டுப்பட்டிருக் கும். ஒருஸமயம் அப்பூனையானது அந்தயந்திரத்திற்சென்று உறு தியாகக்கட்டப்பட்டது. அதிகபலமுள்ளதும் சத்துருவும்எப்பொ ழுதும் தன்னைக் கொல்லவருவதுமான அந்தப்பூனை கட்டப்பட்ட வுடன், அந்தஸமயத்தை அறிந்துகொண்டு, பலிதமென்னும் எலி யானது சிறிதும் பயமின்றி ஸஞ்சரிக்கத் தொடங்கிற்று. அந்த வனத்திற்சென்று பயமின்றி ஸஞ்சரிப்பதும் ஆகாரத்தைத் தேடு வதுமான அந்தப்பலிதமென்னும் எலியானது சடிதியில் (யந்திரத் திற்குள்ளிருக்கும்) மாம்ஸத்தைக்கண்டது. அஃது அந்தயந்திரத் திலேறி அதனுள் கட்டப்பட்ட தன்விரோதியான அந்தப்பூனைக்கு

மேலே உயரத்திலிருந்து மனத்தில் களிப்புடன் எந்திரத்தினுள்ளிருக்கும் மாம்ஸத்தைத் தின்னத் தொடங்கிற்று. மாம்ஸத்திற் சென்ற அந்த எலியானது, ஒருஸமயத்தில் பார்க்கையில், ந்ாணற் பூப்போன்றதும் பூமியிலுள்ள வளையில் படுத்திருப்பதும் சிவந்த கண்ணுள்ளதும் சாபல்யமுள்ளதும் [1] ஹரிகமென்று பெயருள்ளதும் பயங்கரமானதும் சத்துருவுமான ஒருகீரிப்பிள்ளை வருவதைக் கண்டது. அந்தக் கீரிப்பிள்ளையானது அந்த எலியின்வாடையைக் கண்டு வேகத்துடன்வந்தது. அந்தக்கீரிப்பிள்ளையானது ஆகாரத்திற்காக வாயைநக்கிக்கொண்டும் முகத்தை உயரத்தூக்கிக்கொண்டும் பூமியில்நின்றது. கிளையிலிருப்பதும் பொந்தில் குடிகொண்டதும் வளைந்தமூக்குள்ளதும் அருகில் செல்லமுடியாததும் சந்திரகனென்றுபெயருள்ளதுமான கோட்டானுகியவேறொருசத்துருவையும் (எலி) கண்டது. அவ்விதம் கீரிப்பிள்ளையும் கோட்டானுமாகிய இவைகளின் பார்வையை அடைந்ததும் பெரிய பயங்கொண்டதுமான அந்த எலிக்கு,மிக்க கஷ்டமான இவ்வாபத்தில் மரணங்கிட்டி நான்குபுறத்திலும் பயமுண்டாயிருக்கும்பொழுது, 'புத்தியுள்ளவன் எவ்விதம் செய்யவேண்டும்?' என்ற இவ்வித ஆலோசனை உண்டாயிற்று. அப்படி நாற்புறத்திலும் தகையப்பட்டதும் எல்லாவிடத்திலும் பயத்தால் ஒடுங்கினதுமான அந்த எலி பயத்தால் நடுக்கமுற்றுப் பெரிய ஆலோசனையைச் செய்யத் தொடங்கிற்று.

'உயிரானது துன்பங்களால் அனேகமாக நாசமடையத்தக்கதும் ஸந்தேஹரிக்கக் கூடியதுமானது. இதோ நான்குபுறத்திலும் அவ்வித ஸந்தேஹமிருக்கிறது. ஆகையால், ஆபத்துண்டாயிற்று. வேகமாகப் பூமியிற்சென்றால் கீரிப்பிள்ளை என்னைப் பிடிக்கும்; இங்கிருந்தால் கோட்டானும், கயிறுகள் அறுபட்டால் பூனையும் என்னைப்பிடிக்கும். அறிவிற்சிறந்த நம்மைப்போன்றவன் அவிவேகத்தையடைவது நியாயமேஅன்று. மூச்சு அடங்குகிறவரையில் ஜீவிக்கும்விஷயத்தில் முயற்சியைச்செய்வேன். புத்தியுள்ளவனும் நீதிசாஸ்திரங்களில் ஸமர்த்தனுமான அறிவுள்ளவன் [2] குரூரமும் பெரிதுமான ஆபத்தையடைந்தும் முழுகமாட்டானன்றே? இப்பொழுது இந்த ஆபத்தில் பூனையைவிட வேறுகதியைக் காணேன். சத்துருவான இந்தப்பூனையானது ஸங்கடத்திலிருக்கிறது. இதற்கும் என்னால் செய்யவேண்டியது பெரிதாயிருக்கிறது. மூன்று பகைவர்களால் கொல்ல விரும்பப்படும் நான் இப்பொழுது எவ்விதம் உயிரை ரக்ஷிக்க விரும்புவேன்? உயிருக்கு வேண்டி இந்தப் பூனையையே மித்திரனாக அடுக்கிறேன். இந்தச் சத்

---

1 'ஹரிணம்' என்பது வேறுபாடம். 2 வேறுபாடம்.

துருக்கூட்டத்தை அறிவைமுன்னிட்டு எவ்விதம் வஞ்சிக்கத் தகுமோ அவ்விதம் நீதிசாஸ்திரத்தை ஆதாரமாகக்கொண்டு இந்தப்பூனைக்கு ஹிதத்தைச்சொல்லுவேன். எனக்கு அதிகவிரோதியான இந்தப் பூனையானது மிகவும் துன்பத்தை அடைந்திருக்கிறது. அறிவில்லாதவனுடன் சேர்ந்து அவனுக்கு வேண்டிய பொருளை அறிவிக்கமுடியுமானல் ஒருஸமயம் துன்பத்தைஅடைந்திருப்பதால் (அவன்) நம்முடன் ஸந்தியைச் செய்துகொள்ளுவான். ஸங்கடகாலத்தில் உயிரை விரும்பும் பலசாலியானவன் மிகத்தாழ்ந்தசத்துருவையும் ஆஸ்ரயிக்கலாமென்று ஆசார்யர்கள் கூறுகிறார்கள். சத்துருவாயிருந்தாலும் அறிவுள்ளவன் மிகச் சிறந்தவனுவான். மித்திரனுயினும் பண்டிதனல்லாதவன் சிறந்தவனல்லன். அமித்ரனை பூனையிடமன்றே உயிர் நிலைபெற்றிருக்கின்றது. ஆகையால், தன்னைக் காப்பதற்குரிய காரணத்தை இதற்கு உபதேசிப்பேன். சத்துருவாயிருந்தாலும் இந்தப்பூனை இப்பொழுது (நம்முடைய) சேர்க்கையால் அறிவுள்ளதாகும்' என்று இவ்விதம் எலியானது சத்துருவின் நடையைப்பற்றி ஆலோசித்தது. பிறகு, கார்யங்களின் வழியின் உண்மையை அறிந்ததும் ஸந்தியையும் விக்ரஹத்தையும் ஸமயத்தையும் அறிந்ததுமான எலியானது பூனையை நோக்கி இனிமையாக இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

'பூனையே! ஸ்நேகத்தால் உன்னைநோக்கிச் சொல்லுகிறேன். நீ உயிரோடிருக்கிறயா? நீ ஜீவித்திருப்பதைத்தான் நான் விரும்புகிறேன். க்ஷேமமென்பது நம்மிருவர்களுக்கும் பொதுவன்றே? அழகுள்ளவனே! உனக்குப் பயம்வேண்டாம்; முன்போல் ஜீவித்திருப்பாய்; நான் உன்னை ஆபத்திலிருந்து விடுவிக்கிறேன்; [1] உன்னிமித்தம் உயிரையும் இழப்பேன். இவ்விஷயத்தில் ஓர் உபாயமிருக்கிறது. அஃது எனக்கு நல்லதென்று தோன்றுகிறது. எந்த உபாயத்தால் நீ விடுதலை அடைய முடியுமோ, எப்படி நானும் க்ஷேமத்தை அடையக்கூடுமோ அந்த உபாயமானது எனக்காகவும் உனக்காகவும் என்புத்தியில் விசாரித்து என்னல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. க்ஷேமமானது நம்மிருவர்களுக்கும் பொதுவன்றே? இதோ கெட்டஎண்ணத்துடனிருக்கும் கிரிப்பிள்ளையும் கோட்டானும் பயப்படுத்தத் தொடங்கவில்லை. பூனையே! ஆகையால், இப்பொழுது [2] உனக்கு க்ஷேமம். இதோ மரத்தின்கிளையின் நுனியிலிருப்பதும் பாபியுமான கோட்டான் சஞ்சலமான

---

1 'நீ என்னைக் கொல்லவிரும்பாமலிருந்தால் நான் உன்னை ஆபத்திலிருந்து விடுவிக்கிறேன்' என்பது வேறுபாடம்.

2 'எனக்கு' என்பது வேறுபாடம்.

நாசமடைந்தது. இவ்விதம் எவன் அவிவேகத்தால் முக்கியமாக நேர்ந்த ஸமயத்தை அறியவில்லையோ அவன் தாமஸஸ்வபாவமுள்ள மீனைப்போலச் சீக்கிரம் நாசமடைவான். எந்த மனிதன் ஸமர்த்தனாயிருக்கிறேனென்ற எண்ணத்தால் முதலில் சேஷமத்தைச் செய்துகொள்ளவில்லையோ அவன் ஸமயத்திற்குத்தக்க அறிவுள்ள மீனைப்போல ஸந்தேஹத்தை அடைவான். ஆகையால், வரப்போகிறதைத் தெரிந்து செய்கிறவன் ஸமயத்தில் தோன்றும் புத்தியுள்ளவன் இவ்விரண்டுபேர்களும் ஸுகமாகச் செழிப்பார்கள். தாமஸஸ்பாவமுள்ளவன் நாசமடைவான். காலமென்பது லவம், க்ஷணம், காஷ்டை, கலை, முகூர்த்தம், பகல், இரவு, பக்ஷம், மாஸம், ஆறுருதுக்கள், வருஷங்களென்றும் தேசமென்பது பூமியென்றும் சொல்லப்படுகின்றன. அந்தக்காலமோ காணப்படுகிறதில்லை. இஷ்டமான கார்யங்கள் ஸித்திக்கவேண்டி 1 எதை எவ்விதம் த்யானஞ்செய்கிறாரோ அஃது அவ்விதமே ஆகும். தர்ம சாஸ்திரங்களிலும் அர்த்த சாஸ்திரங்களிலும் மோக்ஷசாஸ்திரங்களிலும் தேசம் காலம் இவ்விரண்டும் முக்கியமானவையென்று ரிஷிகளால் கூறப்பட்டிருக்கின்றன. இவைகள் காமசாஸ்திரத்திலும் மனிதர்களால் அங்கீகரிக்கப்பட்டன. பரீக்ஷித்துச் செய்கிறவனும் யுக்தியுள்ளவனுமான மனிதன் வேண்டிய தேசகாலங்களை நன்றாகத் தெரிந்துகொள்ளுவான்; அவைகளால் பயனை அடைவான்" என்றுசொன்னார்.

நூற்றமுப்பத்தெட்டாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஆபத்காலத்தில் சத்துருவுடனும் ஸந்தி செய்துகொள்ள வேண்டுமென்கிற விஷயத்தில் பூனையையும் எலியையும் பற்றிய கதையைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "பரதர்களிற் சிறந்தவரே! வரப்போவதை அறிவதும் அப்படியே ஸமயத்திற்குத்தக்கபடி உண்டாவதுமான புத்தியானது எல்லாவிஷயத்திலும் மிகச்சிறந்ததென்றும் தாமஸஸ்வபாவத்தைத் தரும் புத்தியானது நாசத்தைச்செய்யுமென்றும் உம்மால் சொல்லப்பட்டன. ஆகையால், பரதஶ்ரேஷ்டரே! பகைவர்களால் துன்பமடையும் வேந்தன் எவ்விதம் அவிவேகத்தை

---

1 வேறு பாடம்.

துச் சொல்லத்தொடங்கிற்று. 'அழகுள்ளவனே! ஸந்தோஷப் படுகிறேன். என்னை ஜீவிக்கச்செய்ய விரும்பும் உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும். அறிவாயாகில் க்ஷேமத்தைச் செய்யவேண்டும். சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டாம். நானே மிகவும் துன்பமுள்ளவன். நீ என்னிடத் துன்பமுள்ளவன். துன்பமுள்ள இருவர்களும் ' ஸந்திசெய்துகொள்ளவேண்டும்; தாமதிக்கவேண்டாம். ஸமயத்திற்குத்தக்கது எதுவோ அதைச்செய். நம்மிருவர்களின் கார்யமும் ஸித்திக்கட்டும். நான் கஷ்டத்திலிருந்து விடுபட்டேனாகில் உன்னுடைய உபகாரம் பயனற்றதாகாது. உன்னிடத்தில் கௌரவத்தை வைத்தவனாகிறேன்; பக்தனாகிறேன்; சிஷ்யனாகிறேன்; உனக்கு ஹிதத்தைச் செய்கிறவனாகிறேன்; அப்படியே உன் கட்டளையிலிருக்கிறவனுமாகிறேன்; உன்னைச் சரணமடைந்தேன்' என்று சொல்லிற்று. இவ்விதஞ் சொல்லியதைக் கேட்டு, காரியங்களை அறிந்ததான பலிதமானது தன்வசமாகவந்த பூனையை நோக்கி நல்லபொருளுள்ளதும் ஹிதமுள்ளதுமான இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

'நீ சொல்லுகிறது உத்தமமானது. இஃது உன்போன்றவனிடம் ஆச்சரியமன்று. எனது நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட வழியை என்னிடமிருந்து கேள். நான் உன்னிடம் வந்து சேருகிறேன். கீரிப்பிள்ளையிடமிருந்து எனக்குப் பெரியபயமிருக்கிறது. என்னை நீ ரக்ஷிக்கவேண்டும்; கொல்லக்கூடாது. உன்னை ரக்ஷிப்பதில் நான் சக்தியுள்ளவனையிருக்கிறேன். கோட்டானிடமிருந்தும் நீ என்னை ரக்ஷிக்கவேண்டும். அல்பமான அது என்னைத் தின்ன விரும்புகிறது. நண்பனே! உன்னுடைய கயிறுகளை நான் அறுத்துவிடுகிறேன். உண்மையாக உனக்கு உறுதிமொழி சொல்லுகிறேன்' என்று சொல்லிற்று. யுக்தியுள்ளதும் பொருத்தமுள்ளதும் நல்ல பொருளுள்ளதுமான அந்த எலியின் வசனத்தைக் கேட்டு லோமசமானது ஸந்தோஷத்துடன் நிமிர்ந்து பார்த்துப் பலிதத்தை நல்வரவுவினவிப் பூஜித்தது. தைரியமுள்ள அந்தப் பூனையானது மித்திரத்தன்மையிலிருக்கும் பலிதமென்னும் அந்த எலியை நன்குபூஜித்தபின் ஆலோசித்துக்கொண்டு ப்ரீதியுடன் வேகமாகவே சொல்லத்தொடங்கிற்று. 'நண்பனே! வேகமாகவா. உனக்கு க்ஷேமம். நீ என்னுடைய உயிருக்குச் சமமான நண்பன். அறிவிற் சிறந்தவனே! உன்னுடைய அனுக்ரஹத்தாலன்றோ பிரியமான உயிரை அடையப்போகிறேன். இப்பொழுது இவ்விதம் அடைந்த என்னால் உனக்கு என்னென்ன செய்யக்கூடுமோ அதை நீ கட்டளையிடு; நான்செய்கிறேன். நம்மிருவர்களுக்கும் ஸித்தி உண்டாகட்டும். இந்த ஸந்தேகத்திலிருந்து விடுபட்ட

ற்று. இவ்விதம் பரபரப்புள்ள இந்தப்பூனையால் சொல்லப்பட்ட புத்தியுள்ள பலிதமானது நற்பயிற்சியில்லாத புத்தியையுடைய பூனையை நோக்கி உண்மையும் தனக்கு ஹிதமுமானவசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

'அழகுள்ளவனே! நீ பேசாமலிரு; நீ அவசரப்படவேண்டாம்; உனக்குப் பரபரப்புவேண்டாம்; இந்தவிஷயத்தில் ஸமயத்தையறிந்தவர்கள் நாங்களே; ஸமயம் தவறுது. அகாலத்தில் செய்யப்படும் காரியமானது செய்கிறவனுக்குப் பயனைக் கொடுக்கத்தக்கதாகாது. அதுவே ஸமயத்தில்செய்யப்பட்டால் பெரிய பயனைக் கொடுக்கத்தக்கதாகும். அகாலத்தில் விடுவிக்கப்பட்ட உன்னிடமிருந்தே எனக்குப் பயமுண்டாகும்; ஆகையால், ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிரு. நண்பனே! எதற்காக அவஸரப்படுகிறாய்? எப்பொழுது ஆயுதபாணியாகச் சண்டாளன் வருவதைக் காண்கிறேனே அப்பொழுது பொதுவான பயமுண்டானதும் உன்னுடையகயிறுகளை அறுத்துவிடுகிறேன். நீ அந்த ஸமயத்தில் விடுவிக்கப்பட்டு மரத்திலேயே ஏறிக்கொள்ளுவாய். உனக்கு உயிரைக்காத்தல்தவிர வேறு ஒன்றுஞ்செய்யத்தக்கதுஇராது. [1] அப்பொழுது, வேடனிடம்பயந்து நடுங்கி நீ சென்றவுடன், நான் வளையில் ப்ரவேசிப்பேன்; நீ கிளையை அடைவாய்' என்று சொல்லிற்று. இவ்விதம் எலியால் தனக்கு ஹிதமானவசனத்தைச்சொல்லக்கேட்டதும் வசனத்தின் உண்மையையறிந்ததும் உயிரைவிரும்புவதும் பெரியபுத்தியுள்ளதுமான லோமசமென்னும் பூனையானது, பிறகு, தன்காரியத்தில் வேகமுள்ளதாகி மிகவும்பிரார்த்தனைசெய்து தாமதஞ்செய்யும் எலியைநோக்கிச் சொல்லத்தொடங்கிற்று. 'ஸாதுக்கள் மித்திரர்களின் காரியங்களை இவ்விதஞ்செய்யமாட்டார்கள்; அன்புடன் செய்வார்கள். நான் எவ்விதம் வேகமுள்ளவனுய் உன்னைத்துன்பத்திலிருந்துவிடுவித்தேனோ அவ்விதமன்றோ நீ வேகமுள்ளவனுய் எனக்கு இதைச்செய்யவேண்டும்? அறிவுள்ளவர்களிற் பெரியவனே! நம்மிருவர்களுக்கும் எவ்விதம் க்ஷேமமுண்டாகுமோ அவ்விதம் முயற்சிசெய். அப்படியில்லாமல் நீ முன்னுள்ள வைரத்தை நினைத்துக்கொண்டு நேரம்போக்கவிரும்புவாயாகில் நிச்சயமாக என் உயிர் அழிந்துபோம். கெட்ட செய்கையுள்ளவனே! நீ பார்த்துக்கொள். அறியாமையால் என்னல் முந்திச் சிறிதுதீங்கு செய்யப்பட்டிருந்தாலும் அதை நீ மனத்தில்வைத்துக்கொள்ளக்கூடாது. க்ஷமிக்கும்படி உன்னைக்கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு

1 இங்கு, அதிகபாடமான ஒருஸ்லோகம் பின்வருதலால் விடப்பட்டது.

அனுக்ரஹஞ்செய்' என்றுசொல்லிற்று. இவ்விதம் சொல்லுவதும் அதிக அறிவுள்ளதுமான அந்தப்பூனையைநோக்கிச் சாஸ்திரங்களை அறிந்ததும் புத்தியில்மிகச்சிறந்ததுமான எலியானது அப்பொழுது மிகச்சிறந்த இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

'பூனையே! ஸ்வகாரியத்தைப்பரிதாகக்கொண்ட உன்வசனம் என்னால்கேட்கப்பட்டது. என்காரியத்தைப் பரிதாகக்கொண்ட என்னையும் நீ அறிகிறாய். எந்தஸ்நேஹிதனைப் பயத்துடன் ஸாதிக்கவேண்டுமோ எந்தஸ்நேஹிதனிடத்தில் பயமிருக்கிறதோ அவனிடமிருந்து பாம்பின்வாயிலிருந்து கையைரக்ஷித்துக்கொள்வதுபோலத் தன்னுடைய ரக்ஷணையைச் செய்துகொள்ளவேண்டும். பலமுள்ளவனிடம் ஸந்தியைச் செய்துகொண்டு எவன் தன்னைரக்ஷித்துக்கொள்ளவில்லையோ அவனுக்கு அந்தஸந்தியானது, புஜிக்கப்பட்ட அபத்யம்போலத் துன்பத்திற்குக்காரணமாகும். ஒருவன் ஒருவனுக்கு மித்திரனேயல்லன். ஒருவன் ஒருவனுக்குச் சத்துருவேயல்லன். காரியத்திற்கு வேண்டியன்றோ மித்திரர்களாகவும். அப்படியே சத்துருக்களாகவும் ஆக்கப்படுகிறார்கள்? யானைகளால் பெரியயானைகள்கட்டுப்படுதல்போலக் காரியங்களால் காரியங்கள் கட்டுப்படுகின்றன காரியம் செய்தபின் செய்தவனைப்பார்க்கிறவன் ஒருவனுமில்லை. ஆகையால், எல்லாக்காரியங்களிலும் மிச்சமுள்ளனவாகவே செய்துவைக்கவேண்டும். அந்தச்சமயத்திலும் அந்தச்சண்டாளனிடமிருந்து பயந்து கஷ்டப்பட்டு ஓடுவதைப்பரிதாகக்கொண்ட நீ என்னைப்பிடிக்கச் சக்தியுள்ளவனாயிருக்கமாட்டாய். பல கயிறுகள் அறுத்தாகிவிட்டன. ஒருகயிறு மிச்சமிருக்கிறது. அதையும் வேகமாக நான் அறுத்துவிடுகிறேன். லோமச! ஸுகமாக இரு'என்று சொல்லிற்று.

கஷ்டமுள்ள அந்தப்பூனை எலி அவ்விரண்டும் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அந்த இரவு முடிவடைந்தது. லோமசமென்னும் பூனைக்கும் பயம் உண்டாயிற்று. பிறகு, விடியற்காலையில் பயங்கரனும் கருஞ்சிவப்பான நிறமுள்ளவனும் பெரிதான இடையின் பின்புறமுள்ளவனும் விகாரமானவனும் குரூரனும் நாய்க்கூட்டங்களால் சூழப்பட்டவனும் முளைபோன்றகாதுள்ளவனும் பெரியமுகமுள்ளவனும் மண்வெட்டியுள்ளவனும் பயங்கரமாகக் காணப்படுகிறவனும் ஆயுதபாணியுமான பரிகனென்னும் சண்டாளன் காணப்பட்டான். யமதூதனைப்போன்ற அந்தச்சண்டாளனைக்கண்டு பயந்ததும் நடுங்கின புத்தியுள்ளதுமான பூனையானது, பலிதத்தைநோக்கி, 'இப்

பொழுது என்னசெய்வாய்?' என்றுகேட்டது. அவ்விதமே, க்ரூர னும் பயங்கரனுமான அந்தச்சண்டாளனைக்கண்டு மிகவும் நடுக்க மடைந்தஎன கீரிப்பிள்ளையும் கோட்டானும் கூஷணத்தில் ஆசை யற்றதன்மையை அடைந்தன. பலமுள்ளவைகளும் புத்தியுள்ள வைகளும் சேர்க்கையை அடைந்தவைகளுமான கோட்டானும் கீரிப்பிள்ளையும், காரியத்திற்குவேண்டி ஸந்திசெய்துகொண்ட அந்தப்பூனையையும் எலியையுங் கண்டு அவைகளின் அந்தநல்ல நீதியால், வலிமைசெய்து பயத்தையுண்டுபண்ணச் சக்தியற்றவை களாய் வேகமாகத் தம்தம் இருப்பிடஞ்சென்றன. பிறகு, அந்த எலியானது பூனையினுடைய அந்தக்கயிற்றைப்பும் அறுத்தது. பிறகு, விடுபட்ட பூனையானது அந்தமரத்தையே போய் அடைந் தது. அந்தப்பரபரப்பிலிருந்தும் கோரனென சத்துருவினிடமிருந் தும் விடுபட்டதான அந்தப்பலிதமானது வளையை அடைந்தது. அந்தலோமசம் கிளையை அடைந்தது. சண்டாளனவன் எல்லா விதத்தாலும் பார்த்து ஆசையற்றவனகவே யந்திரத்தையும் எடுத்துக்கொண்டு கூஷணப்பொழுதில் அவ்விடத்திலிருந்து விலகி னன். பரதர்களில் சிறந்தவனே! அந்தச்சண்டாளன் தன்வீடு சென்றான். பிறகு, அந்தப் பயத்திலிருந்து விடுபட்ட லோமச மானது அடைய அரிதான உயிரையடைந்து மரத்தின்நுனியி லிருந்துகொண்டு வளையிலிருக்கும் பலிதத்தை நோக்கிச்சொல்லத் தொடங்கிற்று. 'ஒருவித ஸங்கேதத்தையும் செய்துகொள்ளாமல் வேகமாக நீ ஓடிவிட்டாய். நன்றியறிந்தவனும் 'கூஷமத்தைச் செய்தவனுமான நீ என்னைப்பற்றிச் சங்கைப்படாமலிருக்கிறாயா? என்னுடைய நம்பிக்கையையும் அடைந்து என்உயிரையும் கொடுத்து ஸ்நேஹிதனுக்குரிய போகத்தையடையுங்காலத்தில் ஏன் என்னிடம் வராமலிருக்கிறாய்? எவன் முதலில் ஸ்நேஹிதர் களை உண்டுபண்ணிக்கொண்டு பிறகு (ஸ்நேஹத்தைக்) கொண்டா டாமலிருக்கிறானே கெட்டபுத்தியுள்ள அவன் கடுமையான துன்பங்களில் மித்திரர்களை அடையமாட்டான். ஸ்நேஹமுள்ள தோழனே! உன்னுடைய ஸாமர்த்தியத்தால் உன்னால் நான் பூஜிக் கப்பட்டேன். அவ்விதமான நீ மித்திரத்தன்மையை அடைந்த என்னை அனுபவிக்கத்தக்கவன். எவர்கள் எனக்கு மித்திரர்களா யிருக்கிறார்களோஎவர்கள் எனக்குப்பந்துக்களாயிருக்கிறார்களோ அவர்களனைவர்களும் ப்ரியரான ஆசாரியரைச் சிஷ்யர்கள்போல உன்னைப்பூஜிப்பார்கள். நானும் உன்னை உன் மித்திரக்கூட்டங்க ளுடனும் பந்துக்களுடனும்கூடப் பூஜிக்கிறேன். உயிரைக்கொடுத் தவனை நன்றியறிந்த எவன் பூஜியாமலிருப்பான்? நீ, என்னுடைய சரீரம் வீடு பொருள்கள் யாவற்றிற்கும் எஜமானனையிருக்கவேண்

டும். நீ எனக்குக் கட்டளையிடுகிறவனையிரு. அறிவிற்சிறந்தவனே! நீ எனக்கு அமாத்தியனையிரு. (மகனைத்) தகப்பன்போல நீ என்னைக்கட்டளையிடு. உனக்கு என்னிடமிருந்துபயம்வேண்டாம். என் உயிரின்மேல் சபதஞ்செய்கிறேன். நீ புத்தியால் சுக்ராசாரியரே; நாங்கள் பலத்தால் அதிகாரமுள்ளவர்கள். மந்த்ரபலத்துடன்கூடிய நீ எனக்கு ஜயத்தையே கொடுப்பாய்' என்றுசொல்லிற்று.

இவ்விதம் பூஷையால் மிகவும் நன்மொழிகூறப்பட்ட அந்தஎலியானது, உண்மையை அறிந்துகொண்டு, அழகுள்ளதும்தனக்கு நன்மையுமான வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று. 'லோமச! நீ சொல்லியது அனைத்தையும் நான்கேட்டேன். எனக்குஎதுதேன்றுகிறதோ அதைச்சொல்லும் என்னுடையவசனத்தையும் கேள். மித்திரர்களையும் அறிந்துகொள்ளவேண்டும்; சத்துருக்களையும் அறிந்துகொள்ளவேண்டும். இது மிக ஸூக்ஷ்மம் என்று இவ்வுலகில் அறிஞர்கள் [1] அங்கீகரித்ததாகக் காணப்படுகிறது. ஸ்நேஹிதர்கள் சத்துருக்களைப்போலவும் சத்துருக்கள் ஸ்நேஹிதர்களைப்போலவும் இருப்பார்கள். அவர்கள் ஆசைக்கும் லோபத்துக்கும் வசப்பட்டு [2] நன்மொழி கூறப்பட்டாலும் உண்மையை அறிகிறார்களில்லை. எவர்களுக்கு நற்குணமுள்ளவர்களே மித்திரர்களாயும் கோபமுள்ளவர்களே சத்துருக்களாயும் இருக்கிறார்களோ அவர்களும் ஆசைலோபங்களுக்கு வசப்பட்டால் நன்மொழி கூறப்பட்டாலும் (உண்மையை) அறிகிறார்களில்லை. பிறப்பில் சத்துருவென்பவனில்லை, மித்திரனென்பவனுமில்லை; காரியத்திற்கு வேண்டி மித்திரர்களாயும் சத்துருக்களாயும் ஆகிறார்கள். ஒரு மனிதனுடைய உயிர்வாழ்க்கையில் காரியஸித்தியையும் மரணத்தில் துன்பத்தையும் எவன் காண்கிறானே அவன் அது மாறுதிருக்கும்வரையில் அம்மனிதனுக்கு மித்ரனாவான். ஸ்நேஹமென்பது நிலைத்ததாயிருப்பதில்லை. த்வேஷமென்பதும் நிலைத்ததன்று. கார்யத்தின் சேர்க்கையால் நண்பர்களாகவும் அவ்விதமே பகைவர்களாகவும் ஆகிறார்கள். வேறொரு ஸமயத்தில் மித்திரனும் சத்துருத்தன்மையை அடைவான்; சத்துருவும் மித்திரத்தன்மையைஅடைவான். தன்னுடைய காரியமன்றோ மிகவும்பலமுள்ளது. எவன் காரியத்திற்குரியயுக்தியை அறியாமல் மித்திரர்களிடமே நம்பிக்கையுள்ளவனும் சத்துருக்களிடம் நம்பிக்கையே இல்லாதவனுமாயிருக்கிறானே அவனுடைய

---

1 வேறுபாடம்.

2 'ஸ்நேஹத்தை அடைந்தாலும்' என்பது வேறுபாடம்.

உயிர் நிலையுள்ளதன்று.[1] எவன் காரியத்தை அறிந்துகொள்ளாமல் மித்திரனிடத்திலேயோ சத்துருவினிடத்திலேயோ பிரியத்தில் மனத்தைச் செலுத்துகிறானே அவனுடைய புத்தியும் நிலையுள்ளதன்று. நம்பிக்கையில்லாதவனிடம் நம்பிக்கைகூடாது. நம்பிக்கையுள்ளவனிடத்திலும் அதிக நம்பிக்கை கூடாது. நம்பிக்கையினாலுண்டாகும் பயமானது வேர்களையும் அறுக்கும். தந்தையும் தாயும் மகனும் மாமனும் மருமகனும் ஸம்பந்திகளும் பந்துக்களும் காரியத்தின் சேர்க்கையால் உண்டாகிறார்கள். தாயும்தந்தையும், பிரியனான புத்திரனையும் பதிதனாயிருந்தால் தள்ளிவிடுகிறார்கள். உலகம் தன்னை ரக்ஷித்துக்கொள்ளுகிறது. தன் காரியத்திற்குள்ள ஸாரத்தைப்பார். அறிவுள்ளவனே! விடுதல்பெற்றபின் ஸுகத்திற்குக்காரணமான காரியத்தைச்செய்ய ஒருவன் தேடுவதென்பது பொதுவான கடமையாகும். ஸந்தேஹமில்லை. ஆனால், இதேஇடத்தில், ஆலமரத்திலிருந்து இறங்கிய நீ சபலத்தனத்தால் கொல்லத்தக்க யந்திரத்தில் புகுந்த உன்னை முதலில் அறிந்துகொள்ளவில்லை. சபலனாயிருப்பவன் தனக்கே உபயோகப்படமாட்டான்; பிறர்களுக்கு எங்குஉபயோகப்படுவான்? ஆகையால், சபலன் எல்லாக் காரியங்களையுங்கெடுப்பான்; ஸந்தேஹமில்லை. இப்பொழுது 'எனக்கு உன்னிடத்தில் பிரியம்' என்று இனிமையாக நீ என்ன பேசுகிறாயோ அது பொய். காரணமனத்தையும் விரிவாக என்னிடமிருந்து கேள். (மனிதன்) ஒரு காரணத்தால் பிரியமாயிருக்கும் தன்மையை அடைகிறான்; ஒரு காரணத்தால் பகையுள்ளவனாகிறான். இவ்வுலகத்திலுள்ள பிராணியானது தன் காரியத்தையே விரும்பும். ஒருவனும் ஒருவனுக்கும்பிரியனல்லன். ஒருவயிற்றிற்பிறந்த பிராதாக்களானாலும் தம்பதிகளானாலும் எவருக்கும் ஒருவருக்கொருவர் ஸ்நேஹத்தையும் காரணமில்லாத ப்ரீதியையும் இவ்வுலகில் நான் அறிகிலேன். ஆனால், உடன்பிறந்தார்களும் மனைவியும் ஒரு காரணத்தில் கோபமுள்ளவர்களானாலும் (பிறகு) அவர்கள் ஸ்வபாவத்தில் ப்ரீதியுள்ளவர்களாயிருப்பார்கள். அவிவேகியான மற்ற மனிதன் அவ்விதமிருக்கமாட்டான். கொடுப்பதால் ஒருவன் பிரியனுவான். பிரியமான வசனத்தால் ஒருவன் பிரியனுவான். மந்திரத்தாலும் ஹோமத்தாலும் ஜபத்தாலும் மற்றொருவன் பிரியனுவான். உலகமானது காரியத்திற்கு வேண்டி ப்ரீதியுள்ளதாகிறது. நம்மிருவர்களுக்கும் ஒருகாரணநிமித்தம் பிரீதியுண்டாகி அக்காரணத்திற்காக அஃதிருந்தது. அந்தக்காரணமானது முடிவடைந்ததும், அந்தப்ரீதியும்

1 வேறுபாடம்.

இல்லாமற்போயிற்று. எந்தக்காரணத்தால் உனக்கு என்னிடத்தில் அன்பிருக்கிறதோ அந்தக்காரணமானது புஜிக்கவேண்டுமென்ற காரியத்தைத்தவிர வேறு எதுவென்று நினைக்கிறேன். அந்தவிஷயத்திலும் நாங்கள் அறிவுள்ளவர்கள்தாம். காலமானது காரணத்தை வேறுபடச்செய்யும். தனக்குரிய பயனை அந்தக்காரணத்தைத் தொடர்ந்துநிற்கும். அறிவிற்சிறந்தவன் தன் காரியத்தை அறிவான். உலகம் அறிவிற் சிறந்தவனை அனுஸரித்திருக்கும். ஆனால், நீ இவ்விதம் பேசவேண்டாம். எவனும் தன்காரியத்தில் ஸமர்த்தனுயிருப்பன். ஸாமர்த்தியமுள்ளவனுக்கு இந்தஸமயமானது உன்னிடத்தில் ஸ்நேஹஞ்செய்யத்தக்கதன்று. ஆகையால், நட்பிலும் பகையிலும் நல்ல தேர்ச்சியுள்ள நான் என்காரியத்திலிருந்து அசையமாட்டேன். மேகங்களின் உருவங்கள்போல் (காரியங்கள்) ஒவ்வொரு ஸமயத்திலும் வேறுபடுகின்றன. இப்பொழுதுதான் சத்துருவாயிருந்த நீயன்றோ திரும்பவும் இப்பொழுதேதனக்கு ஸ்நேஹமித்தனுகித் திரும்பவும் இப்பொழுதே சத்துருவாகிறாய்? காரியங்களின் மாறுபாட்டைப்பார். முந்தி எவ்வளவு வரையில் காரணமிருந்ததோ அவ்வளவுவரையில் நம்மிருவர்களுக்கும் ஸ்நேஹமுண்டாயிருந்தது. காலத்துடன் கூடின அந்தக் காரணத்துடன்கூடவே அந்தஸ்நேஹமும் போய்விட்டது. நீனைக்கு இயற்கையில் சத்துருவன்றோ? காரியத்திற்கு வேண்டி மித்திரத்தன்மையை அடைந்தாய். அந்தக்காரியம் முடிந்தபின் சத்துருத்தன்மையைஅடைந்த ஸ்வபாவம் வந்துவிட்டது. இவ்விதம் இயற்றப்பட்ட சாஸ்திரங்களை உண்மையாக அறிந்த நான் எப்படி உனக்குவேண்டிக் கயிற்றில் ப்ரவேசிப்பேன்? அதை எனக்குச் சொல்லு. உன்னுடையபராக்ரமத்தால் நான்விடுவிக்கப்பட்டேன். அப்படியே, என்னுடைய பராக்ரமத்தால் நீ விடுவிக்கப்பட்டாய். ஒருவருக்கொருவர் உபகாரம் முடிவுபெற்றதும் திரும்பவும் சேர்க்கையில்லை. அழகுள்ளவனே! நீ இப்பொழுது காரியத்தைச் செய்துகொண்டவனுகிறாய். அப்படியே எங்கள் காரியமும் நிறைவேறிற்று. இப்பொழுது உனக்கு உணவாதலைவிட என்னல் செய்யத்தக்கது வேறொன்றுமில்லை. நான் அன்னம்; நீ புஜிப்பவன். நான் பலஹீனன்; நீ பலமுள்ளவன். பிரிந்தபின் பலமானது ஸமமாக இல்லாமலிருக்கும்பொழுது, நம்மிருவர்களுக்கும் ஸந்தியென்பது கிடையாது. நான் உன்னுடைய புத்தியை அறிகிறேன். விடுதல் பெற்றபிறகு எளிய உபாயத்துடன் நிச்சயமாகப் போஜனத்தைத் தேடுகிறாய். ஸந்தேஹமில்லை. விடுதல் பெற்றவுடன் பசியால் தொடரப்பட்ட நீ ஆகாரத்தில் விருப்ப

முள்ளவனென்றே நன்முகவெளியாகிறது. நீதிசாஸ்திரத்தாலுண்டான புத்தியைவைத்துக்கொண்டு என்னிடத்தில் காலே ஆகாரத்தை விரும்புகிறாய். உன்னைப் பசியுள்ளவனென்றும் அறிகிறேன். உனக்குப் போஜன ஸமயமாகவுமிருக்கிறது. அவ்விதமான நீ என்னைப் பிரியப்படுத்தித் திரும்பவும் போஜனமாகச் செய்யவிரும்புகிறாய். அன்றியும், நண்பனே! பிள்ளைபெண்டிர்களுக்குவேண்டி நீ என்னிடத்தில் வார்த்தையைச்சொல்வதும் எனக்குப் பணிவிடைசெய்ய முயற்சிசெய்வதும் எனக்குத்தகுதியல்ல. உன்னுடன்கூட இருக்கும் என்னைக்கண்டு உன்னுடையமித்திரர்களும் மனைவியும் பிள்ளைகளும், நீ அன்புள்ளவனாயிருக்கும்பொழுதே, என்னைப்பிடித்து ஏன்தின்னமாட்டார்கள்? காரணத்தாலுண்டான சேர்க்கையானது முடிவுபெற்றபடியால் நான் உன்னுடன்சேரமாட்டேன். நான்செய்த உபகாரத்தை நினைப்பாயாகில் அங்கிருந்துகொண்டே எனக்கு க்ஷேமத்தைச்சிந்தித்துக்கொண்டிரு. புஜிக்கத்தக்கவஸ்துவாயிருக்கும் எந்த அறிவுள்ளவன் துன்பப்பட்டவனும் பசியுள்ளவனும் ஆகாரத்தைத்தேடுகிறவனுமான சத்துருவினிடத்திற் செல்லுவான்? உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். நான் போகிறேன்; தூரத்திலிருந்தாலும்கூட உன்னிடத்திலிருந்து பயமடைகிறேன். 1 நான் உன்னுடன் சேரமாட்டேன். லோமச! நீ நிவ்ருத்தியடை. பலமுள்ளவர்களினருகிலிருப்பது ஒருஸமயத்திலும் கொண்டாடப்படுகிறதில்லை. செய்த உபகாரத்தை நீ அறிவாயாகில் ஸ்நேஹத்தை அனுஸரித்துக்கொண்டிரு. மிக்க அடக்கமுள்ளவனும் நல்லறிவுள்ளவனுமான பலசாலியிடமிருந்தே எப்பொழுதும் பயப்படவேண்டும். ஏதாவதொருபொருளால் உனக்குக் காரியமிருக்குமானால் சொல்லு. உனக்கு நான் என்னசெய்யவேண்டும்? எல்லா இஷ்டத்தையுங் கொடுக்கிறேன். எவ்விதத்திலும் ஆத்மாவைக்கொடுக்கமாட்டேன். ஆத்மாவுக்குவேண்டி ஸந்ததியும் ராஜ்யமும் ரத்தினமும் பொருள்களும் இழக்கத்தக்கவைகளாகும். புத்தியுள்ளவன் எல்லாப்பொருளையும் விட்டாவது ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும்; ஐஸ்வர்யத்துக்கும் தனத்துக்கும் ரத்தினங்களுக்கும் விரோதமானநிலையிலும் இருக்கலாம். உயிரோடிருப்பவர்களுக்குத் திரும்பவும் அவைகள் வருவது காணப்படுகிறதென்று எங்களுக்குக்கேள்வி. பொருள்களையும் ரத்தினங்களையும்போல ஆத்மாவைக்கொடுப்பது விரும்பத்தக்கதன்று. தாரங்களாலும் தனங்களாலும் எப்பொழுதும் ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ள

1 அரைஸ்லோகம்விடப்பட்டது.

வேண்டும். ஆத்மரக்ஷணையை முக்கியமாகக்கொண்டவர்களும் காரியங்களை நன்றுகப்பரீக்ஷித்துச்செய்கிறவர்களுமான மனிதர்களுக்குத் தம்குற்றத்தாலுண்டாகுந்துன்பங்கள் உண்டாகமாட்டா. நன்றுக அறியப்படாதவனும் பிரீதியில்லாதவனுமான [1] சத்துருவானவன் எப்பொழுதும் பிரியத்தைச்செய்கிறவனாயிருந்தாலும் பலமில்லாதமனிதன் அவனைப்பற்றி எல்லாவிடத்திலும் ஸந்தேஹப்படவேண்டும். நற்குலத்திற்பிறந்தவர்களும் நல்லமித்திரர்களும் தர்மமுள்ளவர்களும் மஹாத்மாக்களுமாயிருப்பவர்களின் புத்தியானது சாஸ்திரத்தின்பொருளில் நிச்சயமுண்டானதாகி வேற்றுமை அடையாமலிருக்கும்' என்றுசொல்லிற்று. இவ்விதம் இந்தப் பூனையானது பலிதத்தால் வெளிப்படையாகவே பரிஹஸிக்கப்பட்டு லஜ்ஜையுள்ளதாகி அதனைநோக்கி ஒருவசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

'ஸத்யமாக நான் சபதஞ்செய்கிறேன். என்னை மித்திரத்ரோஹியென்று நீ நிந்திக்கிறாய். நீ என்னுடையஹிதத்திற்காக முயற்சிசெய்தவன். உன்னுடையபுத்தியை நான் சிறந்ததென்று அறிகிறேன். என்னுடைய இயற்கையிலுள்ள காரியத்தைக்கொண்டு நீ வேறுஎண்ணத்துடன் பேசுகிறாய். ஸாதுவே! இந்தவிஷயத்தில் நீ என்னை வேறுவிதமாகக்கருதுவது நியாயமன்று. உயிரைக்கொடுத்ததனாலுண்டான ஸ்நேஹமானது உன்னிடமிருந்து என்னிடம்வந்திருக்கிறது. தர்மமறிந்தவனும் நற்குணங்களையறிந்தவனும் மிக்க நன்றியறிவுள்ளவனுமாயிருக்கிறேன்; மித்திரர்களிடம் அன்புள்ளவனுமாயிருக்கிறேன்; விசேஷமாக உன்னிடத்தில் பக்தியுள்ளவனுமாயிருக்கிறேன். ஸாதுவே! இவ்விதமிருக்கும்பொழுது, என்னை நீ நிந்தித்துப்பேசுவது நியாயமன்று. நான் உன்னால் இவ்விதம் பேசப்படுவேனுகில் பந்துக்களுடன்கூட உயிரையும்விட்டுவிடுவேன். நல்லமனமுள்ள என்போன்றவர்களிடம் அறிஞர்கள் [2] ஸ்நேகத்தையே பார்க்கிறார்கள். தர்மத்தின் உண்மையை அறிந்தவனே! என்னிடத்தில் தர்மம் தவறுதலை ஸந்தேஹிப்பது நியாயமன்று' என்றுசொல்லிற்று. பூனையால் இவ்விதம் ஸ்தோத்திரம் செய்யப்பட்டதாயிருந்தாலும், அந்த எலியானது, பூனையைநோக்கி மனத்திலுள்ள ஆழ்ந்தகருத்தமைந்த இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

'நீ ஸாது. நான் காரியத்தைச்செய்துகொண்டவனாயிருக்கிறேன். நண்பனாயிருப்பவனையும் நான் நம்பவில்லை. ஸ்தோத்திரங்களாலோ பொருள்களாலோ திரும்பவும் நீ என்னை அடையமுடி-

---

1 இங்கு ஒருபதம் மாற்றப்பட்டது. 2 வேறுபாடம்.

யாது. நண்பனே! அறிவிற்சிறந்தவர்கள் காரணமின்றிச் சத்துருவின்வசத்தை அடையமாட்டார்கள். இந்தவிஷயத்திலும் சுக்ராசாரியராலியற்றப்பட்ட இரண்டு காதைகளைக்கேள். அவற்றின்பொருளாவது:—'சத்துருவும் சேர்ந்துசெய்யத்தக்க காரியத்தில் அதிகபலமுள்ளவனுடன் ஸந்தியைச்செய்துகொண்டு தன்புத்தியால் மிக்கஜாக்கிரதையுடன் ஸஞ்சரிக்கவேண்டும்; காரியத்தைச் செய்துகொண்டபின் நம்பக்கூடாது; நம்பிக்கையில்லாதவனையும் நம்பக்கூடாது; நம்பிக்கையுள்ளவனிடத்திலும் அதிக நம்பிக்கைகூடாது; எப்பொழுதும் பிறர்களுக்கு நம்பிக்கையுண்டாகும்படி செய்யவேண்டும்; பிறர்களைத் தான் நம்பக்கூடாது—என்பது. ஆகையால், எல்லாஸமயங்களிலும் தன்னுடைய உயிரை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். உயிரோடிருப்பவர்களுக்குத் திரவியங்கள் ஸந்ததிமுதலியபாவும் உண்டாகும். நீதிசாஸ்திரங்களின் சுருக்கமானஸாரம் நம்பிக்கையில்லாமையென்று சொல்லப்படுகிறது. ஆகையால், மனிதர்களிடம் நம்பிக்கையில்லாமலிருப்பது தனக்குப் பூர்ணமான ஹிதமாகும். பலங்குறைந்தவர்களாயிருந்தாலும் நம்பிக்கையில்லாமலிருப்பவர்கள் சத்துருக்களால் கட்டப்படமாட்டார்கள். பலசாலிகளாயிருந்தாலும் பகைவர்களிடம் நம்பிக்கையுடனிருப்பவர்கள் பகைவர்களால் கட்டப்படுகிறார்கள். பூனையே! உன்போன்றவர்களிடமிருந்து எப்பொழுதும் நான் ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். நீயும் பிறப்பில்பாபியான சண்டாளனிடமிருந்து உன்னை ரக்ஷித்துக்கொள்' என்று சொல்லிற்று. அந்த எலி இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே, அந்தப்பூனையானது பயத்தால் நடுக்கமுற்றுக் [1] கதையைவிட்டுவிட்டு உடனே மிகவேகமாகச்சென்றது. பிறகு, சாஸ்திரங்களின் உண்மைப்பொருளை அறிந்ததும் அறிவிற்சிறந்ததுமான எலியானது தன்புத்திக்குள்ள ஸாமர்த்தியத்தைக் கேட்பித்துவிட்டு வேறுவளையை அடைந்தது. இவ்விதம் நல்ல அறிவுள்ளதும் பலமில்லாததுமான பலிதமென்னும் ஓர் எலி தன்புத்தியால் அதிகபலமுள்ள பலசத்துருக்களை வஞ்சித்தது. ஆகையால், பண்டிதனுயிருப்பவன், சத்துருவாயிருந்தாலும் ஸாமர்த்தியமுள்ளவனேடு ஸந்தியைச்செய்துகொள்ளவேண்டும். எலியும் பூனையும் ஒன்றோடொன்று சேர்ந்து விடுபட்டன. மஹாராஜனே! இவ்விதம் கூர்த்தரியதர்மத்தின் வழியானது விரிவாக என்னால் எடுத்துச்சொல்லப்பட்டது. சுருக்கத்தையும் என்னிடமிருந்துகேள்.

---

1 'கிளையை' என்பது வேறுபாடம்.

ஒன்றுக்கொன்று வைரமுள்ளவைகளாயிருப்பவைகள், உத்தமமான பிரியத்தைச் செய்துகொண்டன. அவைகளுக்கு ஒன்றையொன்று வஞ்சிக்க வேண்டுமென்றபுத்தி நன்றாக இருந்தது. அவைகளில் அறிவிற்சிறந்தது, நல்ல புத்திபலத்தை அடைந்து, மற்றதை வஞ்சிக்கும். அறிவிற்சிறந்தவனும் அஜாக்கிரதையாக இருந்தால் புத்திபுள்ளவர்களால் வஞ்சிக்கப்படுவான். ஆகையால், பயமில்லாதவன்போலப் பயமுள்ளவனும் நம்பிக்கையுள்ளவன்போல நம்பிக்கையில்லாதவனுமாக இருக்கவேண்டும். அஜாக்ரதையில்லாதவன் (வழியைவிட்டுச்) சலிக்கமாட்டான்; சலித்தாலும் நாசமடையமாட்டான். அரசனே! சத்துருவுடனும் ஸமயத்தில் ஸந்தியையும் மித்திரனுடனும் ஸமயத்தில் யுத்தத்தையும் செய்யவேண்டுமென்றே எப்பொழுதும் உண்மையை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். மஹாராஜனே! இதை அறிந்து சாஸ்திரத்தின்பொருளையும் தெரிந்துகொண்டு முயற்சியுள்ளவனும் அஜாக்ரதையில்லாதவனுமாய்ப் பயம்வருவதற்கு முந்தியே பயமுள்ளவன்போல நடக்கவேண்டும். ஸந்தியையும் அவ்விதமே சண்டையையும் பயத்துடனே செய்யவேண்டும். பயத்தால் அஜாக்ரதையில்லாததும் முயற்சியுள்ளதுமான புத்தியுண்டாகும். அரசனே! பயம்வருவதற்கு முந்தியே பயத்துடனிருப்பவனுக்கு அந்தப்பயமுண்டாகாது. நம்பிக்கையால் பயமில்லாமலிருப்பவனுக்கு மிகப்பெரிய பயமுண்டாகும். மிகவும் பயமுள்ளவனென்றெண்ணி (ஒருவனிடத்தில்) எவ்விதத்திலும் ஆலோசனையைச் செய்யக்கூடாது. அறியாமையை முன்னிட்டு அறிந்துகொண்டவன் மூலத்தின் அறிவையும் அடைவான். ஆகையால், பயமில்லாதவன்போலப் பயமுள்ளவனும் நம்பிக்கையுள்ளவன்போல நம்பிக்கையில்லாதவனுமாய்க் காரியங்களின் பெருமையைத்தெரிந்துகொண்டு ஒன்றையும் பற்றுதலுடன் செய்யாமலிருக்கவேண்டும். யுதிஷ்டிர! இவ்விதம் என்னால் சொல்லப்பட்ட இந்த இதிஹாஸத்தைக் கேட்டு நீ மித்திரர்களின் நடுவில் விதிப்படி நடந்துகொள். சிறந்த புத்தியையும் சத்துருமித்திரர்களுக்குரிய வேற்றுமையையும் ஸந்திக்கும் யுத்தத்துக்கும் தக்க காலங்களையும் ஆபத்துஸமயத்தில் விடுபடத்தக்க உபாயத்தையும் தெரிந்துகொண்டு சத்துருவுடன் சேர்ந்து செய்யத்தக்க காரியத்தில் அதிகபலமுள்ள அவனுடன் ஸந்தியைச் செய்துகொண்டுபுத்தியுடன் நடக்கவேண்டும். காரியத்தைச்செய்துகொண்டபின் நம்பாமலுமிருக்கவேண்டும். அரசனே! அறம் பொருள் இன்பமென்ற மூவகைப்பயனுக்கும் விரோதமில்லாத இந்த நீதியைக்கேட்டு

இதனுடன் விசேஷமாகப்ரஜைகளைரக்ஷித்துக்கொண்டு நீ உயர்ந்திருக்கவேண்டும். பாண்டவ! ப்ராம்மணர்களுடன் கூடவே உனக்குக் கூட்டுறவு[1] இருக்கவேண்டும். பாரத! ப்ராம்மணர்களிடமிருந்தே இவ்வுலகிலும் ஸ்வர்க்கத்திலுமுள்ள பெரிய ப்ரேயஸ் உண்டாகிறது. ப்ரபுவே! தர்மத்தை அறிந்தவர்களும் எப்பொழுதும் நன்றியறிவுள்ளவர்களுமான இந்தப்ராம்மணர்கள் பூஜிக்கப்பட்டால் க்ஷேமத்தைச் செய்வார்கள். அரசனே! இவர்களைப் பூஜைசெய். அரசனே! ராஜ்யத்தையும் பெரியக்ஷேமத்தையும் பெரியகீர்த்தியையும் குலத்திற்குவேண்டியஸந்ததியையும் நியாயமாகவும் க்ரமமாகவும் அடைவாய். ஓ! பாரத! விசேஷமான அறிவைக் கொடுப்பதும் [2]சத்துருமித்திரர்கள் இவ்விருவர்களுக்குமுள்ளஸந்திவிக்ரஹங்களைப்பற்றியதுமான நீதியானது நன்றாகச் சொல்லப்பட்டது. அரசனே! அரசனுயிருப்பவன் எப்பொழுதும் இவ்விதம் பார்த்துக்கொண்டு சத்துருக்கூட்டத்தில் நடந்துகொள்ளவேண்டும்" என்று சொன்னர்.

நூற்றமுப்பத்தோன்பதாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஒரு தருவிக்தும் ப்ரம்மதத்தனென்னும் அரசனுக்தும் நடந்த ஸம்வாதத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "மஹாபாஹுவே! உம்மால் மந்த்ராலோசனை சொல்லப்பட்டது, சத்துருக்களிடம் நம்பிக்கையில்லை. எல்லாவிடத்திலும் நம்பிக்கையில்லாதிருப்பானுகில் அரசன் எவ்விதம் இருக்கமுடியும்? அரசரே! அரசர்களுக்கு நம்பிக்கையாலன்றோ மிகவும் பயமுண்டாகிறது? பூமிக்குப்பதியான அரசன் நம்பிக்கையில்லாதவனையிருந்துகொண்டு எவ்விதம் பகைவர்களைவெல்வான்? பிதாமஹரே! இந்தக் கதையைக் [3]கேட்டு நம்பிக்கையில்லாமலிருப்பதில் என்மனம் மிகவும் மயங்குகிறது. என்னுடைய இந்தஸந்தேஹத்தை அறச்செய்யவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அரசனே! ப்ரம்மதத்தனென்னும் அரசனுக்கும் அவன் வீட்டிலிருந்த [4]பூஜனியென்னும் ஒருபக்ஷிக்கும் நடந்த ஸம்பாஷணையைக் கேள். காம்பில்யதேசத்தில் ப்ரம்மதத்தனென்னும் அரசனுடைய அந்தப்புரத்தில்வஸிக்கும் பூஜனியென்னும் பக்ஷியானது நெடுங்காலம்அவனுடன்கூடவஸித்துக்கொண்டிருந்தது.

---

1 'யாத்ரா' என்பது மூலம். 2, 3 வேறு பாடம். 4 சிட்டுக்குருவி.

அதுபறவைப்பிறப்பைஅடைந்திருந்தாலும்பிராணிகளைக்கொண்டு பிழைக்கும் 1 வேடன்போல எல்லாப்பிராணிகளின் சப்தங்களையும் அறிந்ததும் எல்லாவற்றையும் அறிந்ததும் எல்லாஉண்மையையும் அறிந்ததுமாயிருந்தது. அந்தப்பக்ஷி அவ்விடத்தில் நல்லகாந்தியுள்ள ஒருகுஞ்சை ஈன்றது. அதேகாலத்தில் அரசனுக்கும் தன் தேவியிடம் ஒருபுத்திரனுண்டானான். நன்றியறிவுள்ளதும் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பதுமான அந்தப் பூஜனியானது அந்தப் புத்திரர்களிருவர்களின் பொருட்டும் எப்பொழுதும் கடற்கரை சென்று இரண்டுகனிகளைக் கொண்டுவந்து, தன் புத்திரனுக்கும் ராஜகுமாரனுக்கும் புஷ்டியுண்டாவதற்காக, ஒருகனியைத் தன் புத்திரன்பொருட்டும் மற்றொன்றை ராஜகுமாரன்பொருட்டும் கொடுத்தது. பலத்தையும்காந்தியையும்வ்ருத்திசெய்வதும் அமிருதத்தின்ருசிக்கு ஒப்பானதுமான அக்கனியைஅந்தப்பக்ஷியே சீக்கிரமாகக் கொண்டுவந்து கொண்டுவந்து திரும்பவும் திரும்பவும் அச்சிறுவர்களுக்குக் கொடுத்தது. பிறகு, கனியைத்தின்றதால் ராஜகுமாரன் மிக்க வளர்ச்சியை அடைந்தான். பிறகு, அந்தப் பாலகனை ராஜகுமாரன் இளைஞையிருப்பதால் தாதியால் கக்ஷத்தில் வஹிக்கப்பெற்றுவந்து அந்தப்பக்ஷியின் குஞ்சைப் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு, இளம்பருவத்திலிருந்ததால் ஊக்கத்தோடு அந்தப்பக்ஷியுடன் விளையாடிக்கொண்டிருந்தான். அரசச்ரேஷ்டனே! ஒருவருமில்லாதஸமயத்தில் தனக்குஒத்தபிராயமுள்ள அந்தப்பக்ஷியை எடுத்துக் கொன்றுவிட்டுப் பிறகு அந்த அரசகுமாரன் தாதியின்கையை அடைந்தான். அரசனே! பிறகு, அந்தப்பூஜனியானது பழங்களை எடுத்துக்கொண்டுவந்தது; சிறுவனை ராஜகுமாரனுல் கொல்லப்பட்டுப் பூதலத்தில்கிடக்கும் புத்திரனைக் கண்டது. விழுந்துகிடக்கும் அந்தப்புத்திரனைக் கண்டவுடன், சோகமுற்றதும் கண்ணீரால் நிறைந்த முகமுள்ளதுமான பூஜனியானது துக்கத்தால் மிகப்பரிதபித்து அழுதுகொண்டு சிலவசனத்தைச் சொல்லத் தொடங்கிற்று.

'க்ஷத்திரியனிடத்தில் ஸ்நேஹமுங்கிடையாது; ப்ரீதி கிடையாது; நல்ல எண்ணங் கிடையாது. இவர்கள் ஒரு காரணத்திற்காக நன்மொழி உரைப்பார்கள்; காரியத்தைச் செய்துகொண்டபின் தள்ளியும் விடுவார்கள். அனைவர்களுக்கும் அபகாரத்தைச் செய்யும் க்ஷத்திரியர்களிடம் நம்பிக்கைவைக்கக்கூடாது. எப்பொழுதும் அபகாரத்தைச் செய்துவிட்டும் (இவர்கள்) பயனின்றி நன்மொழி கூறுவார்கள். நன்றிகொன்றவனும் மிக்க க்ரூரனும் விஸ்வாஸகாதகனுமான இந்த அரசகுமா

1 'ஜீவ ஜீவக:' என்பது மூலம்; ஒருவகைப் பக்ஷியுமாம்.

ரன் செய்த விரோதத்திற்குச் சரியான தண்டத்தை இப்பொழுது நான் செய்கிறேன். கூடப்பிறந்துவளர்ந்தவனும் அவ்விதமே கூடப்போஜனஞ்செய்கிறவனும் சரணமடைந்தவனுமான (என் புத்ரனைக்) கொன்றதால் அவனுக்கு மூன்றுவிதமான பாபமாகும்' என்று சொல்லிற்று. பூஜனியானது இவ்விதம் சொல்லிக் கால்களால் அந்த ராஜகுமாரன் கண்களைப்பெயர்த்துவிட்டு ஆகாயத்திலிருந்து, பிறகு, 'புத்தியுடன் வேண்டுமென்று இவ்வுலகில் செய்த பாபமானது உடனேயே செய்தவனிடம் வரும். செய்ததற்குப் பிரதிசெய்தபோதிலும் (முன்செய்த) சுபாசுபகாரியம் நாசமடைகிறதில்லை. செய்யப்பட்ட பாபகர்மத்தின் பயனானது செய்தவனிடத்தில் சிறிதும் காணப்படாமல்போனால் அவன் புத்திரர்களிடத்திலும் பௌத்திரர்களிடத்திலும் அவர்கள் புத்திரர்களிடத்திலுமாவது வந்துவிழும்' என்ற வார்த்தையைச் சொல்லிற்று. ப்ரம்மதத்தன், பூஜனியால் பெயர்க்கப்பட்ட கண்ணுள்ள புத்திரனைக் கண்டு, செய்ததற்கு ப்ரதிசெய்யப்பட்டதாக நினைத்துக்கொண்டு, பூஜனியை நோக்கி, 'பூஜனி! எங்களால் செய்யப்பட்டதுமிருக்கிறது; உன்னால் அதற்கு ப்ரதிசெய்யப்பட்டதுமிருக்கிறது; அந்த இரண்டும் ஸமமாகிவிட்டன. (ஆகையால்) இரு; போகவேண்டாம்' என்று இவ்விதஞ்சொன்னான். பூஜனி சொல்லத் தொடங்கிற்று.

'ஒருமுறை குற்றஞ்செய்தவனும் அவ்விடத்திலேயே நம்பிக்கையுள்ளவனுமாயிருப்பவனுக்கு நீ சொல்லுகின்றதை அறிவுள்ளவர்கள் கொண்டாடுகிறார்களில்லை; அவ்விடத்தில் விலகிச்செல்லுவது க்ஷேமமாகும். வெளிப்படையாக விரோதமிருக்குமிடத்தில் நன்மொழி கூறப்பட்டாலும் நம்பிக்கை அடையக்கூடாது. அவ்விதம் நம்பிக்கையுள்ள மூடன் விரைவில் கொல்லப்படுவான். வைரமென்பது சமனத்தையடையாதன்றே? ஒருவருக்கொருவர் வைரத்தை உண்டுபண்ணிக் கொண்டவர்களுக்குப் புத்திரர்களும் பௌத்திரர்களும் நாசமடைவார்கள். புத்திரபௌத்திரர்களுக்கு நாசமுண்டானால் பரலோகம் நாசமடையும். வைரத்தைச்செய்துகொண்ட யாவர்களுக்கும் நம்பிக்கையில்லாமலிருப்பது ஸுகத்தைத் தரும். விஸ்வாஸத்தைக்கெடுப்பவனிடம் உறுதியாக நம்பிக்கையை வைக்காமலிருக்கவேண்டும். நம்பிக்கையில்லாதவனிடம் நம்பிக்கை கூடாது. நம்பிக்கையுள்ளவனிடத்திலும் அதிக நம்பிக்கை கூடாது. நம்பிக்கையாலுண்டாகும் பயமானது வேரையும் அறுக்கும். இஷ்டப்படி பிறர்களுக்கு நம்பிக்கையை உண்டுபண்ணலாம். பிறர்களை நம்பக்கூடாது. பந்துக்களுள் தாயுந்தந்தையும் சிறந்தவர்கள். பாரிணையானவள் [1] வயல்போன்றவள்.

---

1 'கிழத்தனம்போன்றவள்' என்பதுவேறுபாடம்.

புத்திரனென்பவன் விதைமாத்திரம். உடன்பிறந்தவன் (பொருளைப்பங்கிட்டுக் கொண்டுபோவதால்) சத்துருவாவான். மனிதன் கையில் [1] சரமுள்ளவரையில் ஸ்நேஹமிருப்பான். ஆத்மாவென்றே ஸுகதுக்கங்களை அனுபவிக்கவேண்டியதாகும். ஒருவருக்கொருவர் வைரத்தைச் செய்துகொண்டவர்களுக்கு ஸந்தியென்பது கூடாது. எதற்காக நான் வஸித்துக்கொண்டிருந்தேனோ அந்தக்காரணமானது போய்விட்டது. பொருளாலும் அபிமானத்தாலும் நன்மொழிகூறிப் பூஜிக்கப்பட்டவனும் முதலில் அபகாரத்தைச் செய்தவனுமாயிருப்பவனுடைய மனமானது நம்பிக்கையில்லாததாயிருக்கும். தன்செய்கையே வலிந்து பயப்படச் செய்யும். எவ்விடத்தில் முதலில் மர்யாதையும் பிறகு அவமர்யாதையுமிருக்குமோ அவ்விடத்தில் மர்யாதையையும் அவமர்யாதையையும்பெற்ற புத்தியுள்ள அந்தப்பிராணி வாஸத்தைவிடவேண்டும். நான் உன்னுடையவீட்டில் தண்பப்படுத்தப்படாமல்நெடுங்காலம் வஸித்துக்கொண்டிருந்தேன். அதில் இந்தவைரம் உண்டாகிவிட்டது. ஸுகமாயிரு; நான் போகிறேன்' என்று சொல்லிற்று. ப்ரம்மதத்தன், 'பூஜனியே! எவன் செய்ததற்கு ப்ரதிசெய்கிறானோ அவன் அவ்விஷயத்தில் குற்றமுள்ளவனுகமாட்டான். அதனால் [2] கடனில்லாதவனுகிறான். இங்கே வஸித்துக்கொண்டிரு; போகவேண்டாம்' என்று சொன்னன். பூஜனி, 'முதலிற் செய்தவனுக்கும் ப்ரதி செய்தவனுக்கும் ஸ்நேஹமானது திரும்பவும் சேராது. அந்த விஷயத்தைச் செய்தவனுடைய மனமும் ப்ரதி செய்தவனுடைய மனமும் அறியும்' என்றுசொல்லிற்று. ப்ரம்மதத்தன், 'செய்தவனுக்கும் ப்ரதிசெய்தவனுக்கும் திரும்பவும் ஸ்நேஹமும்சேரும். வைரம் நிவிருத்தியாவதாகக் காணப்படுகிறது. திரும்பவும் பாபம் வராது' என்று சொன்னன்.

பூஜனி, 'வைரமில்லை; போய்விட்டது. நான் நன்மொழி கூறப்பட்டவனுகிறேனென்று எண்ணி நம்பிக்கை அடையக்கூடாது. உலகம் நம்பிக்கையால் கட்டப்படுகிறது. அதைவிடக் காணமல் போவதுகூட க்ஷேமமாகும். பலத்தாலும் மிக்க கூர்மையான ஆயுதங்களாலுங்கூட எவர்களை ஜயிக்கமுடியாதோ அவர்களும் நன்மொழியால் யானைகளால் யானைகள் அடக்கப்படுவதுபோல அடக்கப்படுவார்கள்' என்று சொல்லிற்று. ப்ரம்மதத்தன், 'நாயைக் கொன்று தின்னும் சண்டாளனுக்கும் நாய்க்கும் ஒன்றுக்கொன்று ஸ்நேஹமுண்டாவதுபோல உயிருக்கு அபாயத்தைச் செய்யும் மனிதர்களுடனும் சேர்ந்து வஸிப்பதால்

---

1 சாந்திபர்வம் 283 - ம் பக்கம் குறிப்பிற் காண்க.

2 தன்கடனை முடித்துக்கொண்டவன்.

ஸ்நேஹமுண்டாகும். ஒருவருக்கொருவர் வைரத்தைச்செய்து கொண்டவர்களுக்கு, சேர்ந்து வஸிப்பதால் அந்த வைரமானது குறைவடைந்து தாமரைஇலையிலுள்ள தண்ணீர்போல நிலை பெற்றிராது' என்று சொன்னன். பூஜனி, 'வைரமென்பது 1 ஸ்திரீயால் செய்யப்பட்டதும் வீடுமுதலிய பொருளால் செய்யப்பட்டதும் வாக்கால் செய்யப்பட்டதும் பிறஜியால் ஏற்பட்டதும் குற்றத்தால் ஏற்பட்டதுமென்று ஐந்து காரணங்களால் ஏற்படுகிறதாகும். அதைப் பண்டிதர்கள் அறிகிறார்கள். அவ்விதவைரியாளும் உபகாரஞ்செய்கிறவனை விசேஷமாக க்ஷத்திரியன் கொல்லக்கூடாது. வெளியாயிருப்பதோ மறைவாயிருப்பதோ குற்றத்தின் பலாபலத்தைத் தெரிந்துகொண்டு ஸ்நேஹிதனாயிருந்தாலும் வைரத்தைச்செய்தவனிடம் நம்பிக்கை வைக்கக்கூடாது. தீயானது கட்டைகளில் மறைந்திருப்பதுபோல வைரமானது மறைந்துகொண்டிருக்கும். அரசனே! கடலில் முழுகியிருக்கும் தீயைப்போல வைரமென்னுந்தியானது பொருளாலும் கடுஞ்சொற்களாலும் நன்மொழியாலும் சாஸ்திரங்களாலும் அவிக்கப்படாது. அரசனே! வைரத்தீ உண்டானால் ஒன்றைக் கொளுத்தாமல் அவியாது. குற்றத்தாலுண்டாகுஞ் செய்கையும் இரண்டிலொன்றுக்கு நாசமின்றி அடங்காது. அதிலும் முதலில் விரோதத்தைச் செய்தவனுக்குப் பொருளாலும் கௌரவத்தாலும் பூஜித்தாலும் பொறுமையுண்டாகாது. நம்பிக்கையானது செய்கையாலும் பலாத்காரமாகவும் உண்டாகிறதில்லை. நான் உன்னிடத்திலும் நீ என்னிடத்திலும் ஒருவிதமான குற்றத்திலும் பயந்துகொண்டிருந்ததில்லை. இப்பொழுது நான் நம்பவில்லை' என்று சொல்லிற்று.

ப்ரம்மதத்தன், 'காரியம் காலத்தால் செய்யப்படுகிறது. அவ்விதமே எல்லாச்செய்கைகளும் காலத்தாலேயே நடக்கின்றன. ஆகையால், யார் எவனுக்குக் குற்றஞ்செய்தவனுவான்? இறப்பு பிறப்பு இவ்விரண்டும் ஸரியாகவே நடக்கின்றன. மனிதன் காலத்தாலேயே உண்டுபண்ணப்படுகிறான்; காலத்தையே காரணமாகக்கொண்டு மரிக்கிறான். சிலர் ஒரேஸமயத்தில் கட்டப்படுகிறார்கள். அவ்விதமே மற்றவர்களும் தனித்தனியே கட்டப்படுகிறார்கள். நன்றாக உண்டானதியானது விறகை எரிப்பதுபோலக்

---

1 கிருஷ்ணனுக்கும் சிசுபாலனுக்கும் ஸ்திரீயினால் உண்டானது. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பொருள்களால் உண்டானது. த்ரோணருக்கும் த்ருபதனுக்கும் வாக்கால் உண்டானது. எலி பூனை முதலியவைகளுக்குப் பிறப்பினாலுண்டானது. பூஜனிக்கும் ப்ரம்மதத்தனுக்கும் குற்றத்தாலுண்டானது.

காலமானது ப்ராணிகளை எரிக்கிறது. நம்மில் ஒவ்வொருவருக்குமுள்ள சுபத்தில் நானும் உண்மையான காரணமல்லன்; நீயும் உண்மையான காரணமே அல்லை. எப்பொழுதும் ப்ராணிகளுக்கு ஸுகத்தையும் துக்கத்தையும் காலம் உண்டுபண்ணுகிறது. இவ்விதம் தெரிந்துகொண்டு தான்பப்படுத்தப்படாமல் ஸ்நேஹத்துடன் இஷ்டம்போல இவ்விடத்திலிரு. உன்னால் செய்யப்பட்டது எதுவோ அதை நான் பொறுத்துக்கொண்டேன். பூஜனி! நீயும் பொறுத்துக்கொள்' என்றுசொன்னன்.

பூஜனி சொல்லத்தொடங்கிற்று. 'காலமானது (யாவற்றிற்கும்) காரணமென்று உன் வசனப்படி இருந்தால் அப்பொழுது ஒருவனுக்கும் வைரம் உண்டாகாது. பந்துக்களாயிருப்பவர்கள் தம்பந்துவானவன் கொல்லப்பட்டால் என் துன்பத்தை அடைகிறார்கள்? தேவர்களும் அஸுரர்களுமாகிய அனைவர்களும் ஒருவரையொருவர் எதற்காக அடித்தார்கள்? (விலகிப்) போவதும் ஸுகமும்துக்கமும் பிறப்பும்இறப்பும் காலத்தாலுண்டாகுமானால் எதற்காக வைத்தியர்கள் நோயாளிக்கு மருந்தைச் செய்யவிரும்புகிறார்கள்? (மனிதர்கள்) காலத்தால் கொல்லப்படுவார்களானால் மருந்துகளால் ப்ரயோஜனமென்ன? சோகத்தால் மூர்ச்சையடைந்த ஜனங்கள் மிகப்பெரிய பயனற்ற வசனங்களை எதற்காகச் சொல்லுகிறார்கள்? காலம் உனக்குக் காரணமானால் தர்மமானது செய்தவர்களிடம் எவ்விதமிருக்கும்? என்னுடைய குழந்தையைக் கொன்ற உன்னுடைய புத்திரன் என்னால் துன்பப்படுத்தப்பட்டான். அரசனே! பிறகு, நீ என்னைத் துன்பப்படுத்தவேண்டும். நான் புத்திர சோகத்தால் உன்பிள்ளையிடம் பாபத்தைச் செய்திருக்கிறேன். அப்படியே நீ என்னைக்கொல்லவேண்டும். உண்மையை என்னிடமிருந்துகேள். மனிதர்கள் புஜிக்கவேண்டியும் விளையாடவேண்டியும் பக்ஷிகளை விரும்புகிறார்கள். கொல்லுவதையும் கட்டுவதையும்விட வேறு மூன்றுவகான ஸம்பந்தம் தக்கதில்லை. சிலபக்ஷிகள் கொல்லுவதும் கட்டுவதுமாகிய பயத்தால் விடுதலை பெறவேண்டிய உபாயத்தை (மோக்ஷமார்க்கத்தை) அடைந்திருக்கின்றன. வேதத்தை அறிந்த ஜனங்கள் துக்கமானது பிறப்பு இறப்புக்களால்உண்டாகிறதென்று சொல்லுகிறார்கள். எல்லாருக்கும் உயிரில் ஆசையுண்டு. எல்லாருக்கும் புத்திரர்களிடம் ஆசையுண்டு. எல்லாருக்கும் ஸுகத்தை அடைய விருப்பமுண்டு. எல்லாரும் துக்கத்திலிருந்து பயப்படுகிறார்கள். ப்ரம்மதத்த! கிழத்தனமானது துக்கம். பொருளின் நாசம் துக்கம். வேண்டாத இடத்தில் வஸிப்பது துக்கம். இஷ்டவஸ்துக்களை இழப்பது துக்கம். அரசனே! வைரத்தாலுண்டுபண்

ணப்பட்டதும் ஸ்திரீகளாலுண்டுபண்ணப்பட்டதும் கூடப்பிறந்ததுமான துக்கமும்உண்டு. இறந்த [1] புத்திரனுலுண்டாகும் துக்கமானது எப்பொழுதும் ஜனங்களிடம் சுற்றிக்கொண்டிருக்கும். பிறர்களுக்குண்டான துக்கத்தில் (தமக்குத்) துக்கமில்லையென்று புத்தியில்லாத சிலர் சொல்லுகிறார்கள். எவன் துக்கத்தை அறியவில்லையோ அவன் கூட்டத்தில் இவ்விதஞ்சொல்வான். எவன் துக்கத்தால் துன்பப்பட்டுச்சோகமடைகிறானே அவன் (இதைச்) சொல்ல எவ்விதம் உத்ஸாஹமுள்ளவனுவான்? எல்லாத் துக்கரஸத்தையும் அறிந்தவன் தன் துக்கத்தில் எவ்விதமோ அவ்விதமே பிறர் துக்கத்திலும் இருப்பான். [2] பகைவர்களை அடக்கும் அரசனே! என்னுல் உனக்குச் செய்யப்பட்டதையும் உன்னுலும் எனக்குச் செய்யப்பட்டதையும் பலநூறு வருஷங்களாலும் போக்கமுடியாது. நாமிருவரும் ஒருவருக்கொருவர் செய்துகொண்டது எதுவோ அதற்கு ஸந்திகிடையாது. புத்திரனினைத்து நினைத்து உனக்கு வைரம் புதிதுபுதிதாக உண்டாகும். நெருங்கிய வைரத்தை அடைந்தபின் எவன் பிரியத்தைச்செய்ய விரும்புகிறானே அவனுக்கு உடைந்த மண்பாத்திரத்தைப்போலச் சேர்க்கையுண்டாகாது. நம்பிக்கையானது ஸுகத்திற்குக் காரணமன்றென்பது தனக்குள்ள பயனைச்சொல்லும் சாஸ்திரங்களின் நிச்சயம். முன்காலத்தில் சுக்ராசாரியரும் ப்ரஹ்லாதரின் பொருட்டு இரண்டுகாதைகளைக் கூறினர்; அவற்றின்பொருளாவது:—'உண்மையோ பொய்யோ சத்துருவின்வசனத்தில் எவர்கள் நம்பிக்கை அடைகிறார்களோ அவர்கள் காய்ந்தபுல்லுகளால் மறைந்து தெரியாமலிருக்கிற பள்ளத்திலுள்ள தேனைநம்பி இறங்கியவர்கள்போலத் துன்பத்தை அடைகிறார்கள். வைரங்கள் குலங்களில் பத்துயுகமானுலும் போகா. அந்தக்குலத்தில் ஒரு புருஷன் பிறந்தால் அவனுக்குச்சொல்லுகிறவர்களும் இருப்பார்கள்' என்பது. அரசர்கள் வைரங்களை அடக்கிக்கொண்டு முதலில் நன்மொழிகூறுவார்கள்; பிறகு, நிறைந்தகுடத்தைக் கல்லில் உடைப்பதுபோல இவனைக் கொல்லுவார்கள். அரசனே! இவ்வுலகில் ஒருவனுக்குக் கெடுதியைச் செய்தபின் (அவனிடம்) எப்பொழுதும் நம்பிக்கை கூடாது. பிறர்களுக்கு அபகாரத்தைச் செய்தபின் நம்பினுல் துக்கமடைவான்' என்று சொல்லிற்று. பிரம்மதத்தன், 'நம்பிக்கையில்லாமல் பொருளைச் சேர்க்கமுடியாது; ஒன்றையும் செய்யவும் முடியாது. [3] எப்பொழுதும் ஒரேவிதமான பயமிருந்தால் செத்தவனுக்கொப்பாயிருக்கவேண்டும்' என்று சொல்ல, பூஜனி சொல்லத்தொடங்கிற்று.

---

1 வேறுபாடம். 2 அதிகபாடமான ஒருஸ்லோகம்விடப்பட்டது.
3 வேறுபாடம்.

'இவ்வுலகில் எவனுடையகால்கள் புண்ணுள்ளவைகளாயிருக்கின்றனவோ அவன் கால்களால் ஓடுவானுகில் மிக்கரகையுடன் ஓடுகிறவனுனாலும் அந்தக்கால்கள் துன்பமடைகின்றனவாகும். எவன் துன்பமுள்ள கண்களால் காற்றை எதிர்த்துப் பார்க்கிறுனோ அவனுடைய கண்களுக்குக் காற்றினுலுண்டாகுந் துன்பம் மிகுதியாகுமென்பது நிச்சயம். எவன் கெட்டவழியை அடைந்து தன்னுடைய பலத்தைத் தெரிந்துகொள்ளாமல் அஜ்ஞானத்தால் செல்லுகிறுனோ அவனுடையஉயிர் அதில் முடிவடையும். கிருஷிசெய்யும் எந்தமனிதன் மழையை அறிந்துகொள்ளாமல் வயலை உழுகிறுனோ அவன் பௌருஷத்தை இழந்தவனுகி அதன்பயனையும் அடையமாட்டான். எந்த மனிதன் கசப்போ துவர்ப்போ மதுரமோ ருசியுள்ளதோ தனக்குஹிதமான ஆஹாரத்தை எப்பொழுதும் செய்கிறுனோ அவன் மரணமின்றி ஜீவிக்கத்தக்கவனுவான். எந்தமனிதன் அஜ்ஞானத்தால் பத்தியமான ஆகாரத்தைத் தள்ளிவிட்டு முடிவைத் தெரிந்துகொள்ளாமல் கெட்ட போஜனத்தைப் புஜிக்கிறுனோ அவனது உயிர் அதில் முடிவடையும். பௌருஷமும் தெய்வமும் ஒன்றையொன்று அடுத்திருப்பவைகளாகும். அவைகளில் பௌருஷந்தான் பெரிதாகும். தைரியமில்லாதவர்கள் தெய்வத்தைக்கொண்டாடுகிறுர்கள். கடுமையானதானுலும் மிருதுவானதானுலும் தனக்குஹிதமான முயற்சியைச் செய்யவேண்டும். இயற்கையில் முயற்சியில்லாதவன் ஒன்றுமில்லாதவனுய் எப்பொழுதும் துன்பங்களால் விழுங்கப்படுவான். ஆகையால், ஸந்தேஹப்படத்தக்க விஷயத்திலும் பௌருஷத்தையே செய்யவேண்டும். எல்லாப்பொருளையும் இழந்தாவது மனிதர்கள் தமக்கு நன்மையைச் செய்துகொள்ளவேண்டும். கல்வி, பரிசுத்தி, ஸாமர்த்தியம், [1] பலம், சூரத்தன்மை இவ்வைந்ததையும் உடன்பிறந்த மித்திரர்களென்று சொல்லுகிறுர்கள். இவ்வுலகில் அவைகளால் வித்வான்கள் ஜீவிக்கிறுர்கள். வீடும் தாம்ரமுதலிய உலோகமும் வயலும் மனைவியும் ஸ்நேஹிதர்களும் மனிதனுல் ஸம்பாதிக்கப்படுகின்றனவென்று சொல்லுகிறுர்கள். மனிதன் இவைகளை எல்லா இடத்திலும் அடைவான். அறிவுள்ளவன் எல்லாவிடத்திலும் ஸந்தோஷமடைவான்; எல்லாவிடத்திலும் [2] ப்ரீதியுடன் இருப்பான்; [3] சிறிதும் பயத்தை உண்டுபண்ணமாட்டான்;

---

1 'வைராக்யம்' என்பதுபழையவுரை.

2 'விளங்குவான்' என்பது வேறுபாடம்.

3 'ஒருவனும் அவனைப்பயப்படுத்தமாட்டான்' என்பது வேறுபாடம்.

(அவனுக்குப்) பயத்தை உண்டுபண்ணினாலும் பயத்தை அடையவும்மாட்டான். புத்தியுள்ளமனிதனுக்குச் சிறியதான பொருளும் எப்பொழுதும் வ்ருத்தியடையும். ஸாமர்த்தியத்தால் வேலைசெய்யாதவர்களின் செய்கையானது ஸாமர்த்தியமில்லாத காரணத்தால் நின்றுவிடும். வீட்டிலுள்ள ஸ்நேஹத்தால்கட்டுப்பட்டவர்களும் அல்பபுத்தியுள்ளவர்களுமான மனிதர்களின்மாம்ஸங்களைக் கெட்டஸ்திரீயானவள், பெண்நண்டை அதன்குஞ்சுகள் மாய்ப்பதுபோல நாசமடையச்செய்வாள். சிலமனிதர்கள் புத்தியின் வித்தியாசத்தால் வீடென்றும் வயல்களென்றும் மித்திரர்களென்றும் தம்தேசமென்றும் இவ்விதம் கஷ்டப்படுகிறார்கள். கெட்டவழியிலிருந்தும் அவமானமுள்ள இடத்திலிருந்தும் துர்ப்பிக்ஷத்தால்பீடிக்கப்பட்ட தன்தேசத்திலிருந்தும் வேறு இடத்தில் வஸிக்கச்செல்லவேண்டும்; அல்லது, எப்பொழுதும் மரியாதைபெற்றுவஸிக்கவேண்டும். ஆகையால், நான் வேறிடத்திற்குப்போகிறேன். இவ்விடத்தில்வஸிக்க எனக்கு ஊக்கமில்லை. அரசனே! உன்புத்திரனிடத்திலும் பரிஹரிக்கமுடியாத இக்காரியத்தைச் செய்துவிட்டேன். கெட்டமனைவியையும் கெட்ட மகனையும் கெட்டஅரசனையும் கெட்டஸ்நேகிதனையும் கெட்டஸம்பந்தத்தையும் கெட்டதேசத்தையும் தூரத்தில்விலக்கவேண்டும். கெட்டஸ்நேஹிதனிடத்தில் நம்பிக்கையிராது. கெட்டமனைவியிடம் ஸந்தோஷப்படக்காரணமேது? கெட்டராஜ்யத்தில் ஸுகமிராது. கெட்ட தேசத்தில் ஜீவனமிராது. கெட்டமகனிடம் ப்ரியமிராது. கெட்ட ஸ்நேஹமானது நிலைபெற்றிராது. கெட்ட ஸம்பந்தத்தில் பொருளுக்கு நாசமுண்டாவதால் அவமானமுண்டாகும். எவள் ப்ரியமாகப்பேசுகிறாளோ அவள் மனைவி ஆவாள். எவனிடத்தில் ஸுகமுண்டாகுமோ அவன் புத்திரனாவான். எவனிடத்தில் நம்பிக்கையிருக்குமோ அவன் மித்திரனாவான். எவ்விடத்தில் ஜீவனமிருக்கிறதோ அது தேசமாகும். எவன் குடிகளை வருத்தவில்லையோ அவன் கடுமையான ஆஜ்ஞையுள்ள அரசனாவான். [1] தரித்திரர்களையும் எது மேன்மையாயிருக்கச் செய்யவிரும்புகிறதோ அது விவாஹத்திலுண்டான ஸம்பந்தமாகும். அரசன் குணமுள்ளவனும் தர்மத்தைச் செலுத்துகிறவனுமாயிருப்பானாகில் மனைவி, தேசம், மித்திரர்கள், புத்திரர்கள், ஸம்பந்திகள், பந்துக்கள் இவர்களியாவரும் ஸுகமாக இருப்பார்கள். தர்மமறியாத அரசனுடையதேசத்திலுள்ள ப்ரஜைகள் [2] நிக்ரஹத்தையடைந்து நாசமடையும். அஜாக்ரதையின்றிரகஷி

---

1 வேறுபாடம். 2 'சிறைச்சாலையில் அடைப்பது' என்பதுபழையவுரை.

த்துவரும் அரசன் அறம்பொருள் இன்பங்களுக்கு மூலமாவான். ஆறிலொருபாகம் வரியென்றபயனை எடுத்துக்கொண்டு உபயோகஞ்செய்துகொள்ளவேண்டும். எவன் நன்முக ப்ரஜைகளை ரக்ஷிக்கவில்லையோ அவன் அரசனென்று பெயருள்ள திருடனுவான். எந்த அரசன் தானே அபயத்தையளித்தபின் பொருளிலுள்ள லோபத்தால் அதை உண்மையாகச் செய்யவில்லையோ அதர்மபுத்தியுள்ள அவன் எல்லா உலகத்தினிடமிருந்தும் பாபத்தை அடைந்து நரகமடைகிறான். அரசன் தான் அபயமளித்து அதை உண்மையாகச்செய்வானுகில் தர்மப்படி ப்ரஜைகளைப் பரிபாலிப்பவனுகி எல்லாஸுகத்தையும் அடைவான். 'அரசன் தகப்பனும் [1] தாயும் குருவும் [2] ரக்ஷகனும் அக்னியும் குபேரனும் யமனுமாகிறான்' என்று அவனுக்கு இவ்வேழுகுணங்களையும் மனு கூறினர். எந்த அரசன் ப்ரஜைகளிடம் அன்புபாராட்டுகிறனே அவன் உலகத்திற்குப் பிதாவாகிறான். அந்த அரசனைப் பொய்யாக உபசரித்துவரும்மனிதன் கீழ்ப்பிறப்புள்ளவனுகிறான். அரசன் தாய்போல நன்மையைச் சிந்தித்துத் துன்பப்படுகிறவனை ரக்ஷிக்கிறான்; விரோதிகளை அக்நிபோலக் கொளுத்துகிறான்; நன்மைசெய்யாதவர்களை (யமன்போல) அடக்குகிறான்; வேண்டியவர்களிடம் பொருள்களை அளித்துக் குபேரன்போல இஷ்டத்தைக்கொடுக்கிறவனுகிறான்; தர்மத்தை உபதேசிப்பதால் குருவும், ரக்ஷிப்பதால் ரக்ஷகனுமாகிறான். எந்த அரசன் தன்குணங்களால் பட்டணத்திலுள்ளவர்களையும் தேசத்திலுள்ளவர்களையும் ஸந்தோஷப்படுத்துகிறனே அவனுடைய ராஜ்யமானது, குணங்களையும் தர்மங்களையும் பரிபாலிப்பதால் குறைவடையாது. எந்த அரசன் பட்டணத்திலுள்ளவர்களும் தேசத்திலுள்ளவர்களும் செய்யும் பூஜையை நன்முகப்பெற்றுக்கொள்ளுகிறனே அந்த அரசன் இவ்வுலகிலும் மேலுலகிலும் ஸுகத்தைக்காண்கிறான். எந்த அரசனுடைய பிரஜைகள் வரியைச்சுமத்தித் துன்பப்படுத்தப்பட்டவர்களும் எப்பொழுதும் பயமுள்ளவர்களுமாய்த் துன்பங்களால் நாசமடைகிறார்களோ அந்த அரசன் அவமானத்தை அடைகிறான். எந்த அரசனுடைய ஜனங்கள் குளத்தில்தாமரைபோல வளர்ச்சியடைகிறார்களோ அவர்களுக்கும்ஸுகத்தை அளிக்கும் அந்த அரசன் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். அரசனே! பலசாலியுடன் சண்டைசெய்வது ஒருபொழுதும் கொண்டாடப்படுகிறதில்லை. பலசாலியுடன் யுத்தஞ்செய்பவனுக்கு ராஜ்யமேது? ஸுகமேது?' என்று சொல்லிற்று. ப்ரம்மதத்தனென்னும் அரசனுக்கு இவ்விதஞ்சொல்லிவிட்டு, அந்தப்

1, 2 வேறுபாடம்.

பக்ஷியானது அவனிடம் அனுமதிபெற்றுக்கொண்டுதனக்குஇஷ்டமான திக்கைநோக்கிச் சென்றது. பரதர்களில் மிகச்சிறந்தவனே! ப்ரம்மதத்தனுக்கும் பூஜனியென்னும் பக்ஷிக்கும் நடந்த இந்தச் சம்பாஷணையானது உனக்கு என்னால் சொல்லப்பட்டது. வேறு எதைக் கேட்க விரும்புகிறாய்?" என்று சொன்னார்.

நூற்றுநாற்பதாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பாரத்வாஜர் சத்ருந்தபனென்னும் அரசனுக்குச் சொன்ன ஆபத்தர்மத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பரதகுலத்திலுதித்த பிதாமஹரே! யுகத்தின் குறைவால் தர்மம் குறைவடைந்து உலகமும் திருடர்களால் பீடிக்கப்படுகிறபொழுது எவ்விதமிருக்கவேண்டும்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"பாரத! ஸமயத்தில் தயையைவிட்டுக்கூட அரசன் எவ்விதம் இருக்கவேண்டுமோ அவ்விதமான ஆபத்காலங்களுக்குரியநீதியை இப்பொழுது உனக்குச் சொல்லுகிறேன். இவ்விஷயத்திலும் சத்ருந்தபனென்னும் அரசனுக்கும் பாரத்வாஜருக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். ஸௌவீர தேசத்தில் மஹாரதனான சத்ருந்தபனென்னும் ஓர் அரசன் பாரத்வாஜரிடம் சென்று பொருள்களைப்பற்றிய நிர்ணயத்தைக் குறித்துக்கேட்கத் தொடங்கினன்: 'அடையப்படாத பொருளை அடைய விரும்புவது எவ்விதம்? அடையப்பட்டது எதனால் வ்ருத்தியடையும்? வ்ருத்தியானது எதனால் ரக்ஷிக்கப்படும்? ரக்ஷிக்கப்பட்டதை எவ்விதம் உபயோகப்படுத்தவேண்டும்?' என்றுகேட்டான். பொருளைப்பற்றிய நிர்ணயத்தைக் கேட்கப்பட்டவரும் புத்தியுள்ளவருமான பாரத்வாஜர் பொருளைநிர்ணயஞ்செய்துகொண்ட அவ்வரசன்பொருட்டு யுக்தியுள்ளதும் உத்தமமுமான இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கினர்.

'(அரசன்) எப்பொழுதும் தண்டமெடுத்தவனும் எப்பொழுதும் பராக்ரமத்தை வெளியிடுகிறவனும் பிறருக்கு இடைவெளி கொடாதவனும் பிறர்களின் இடைவெளியைக்கண்டு அதைத் தொடர்ந்து செல்லுகிறவனுமாயிருக்கவேண்டும். எப்பொழுதும் தண்டத்தையெடுத்த அரசனிடம் மனிதன் மிகவும் பயமடைவான். ஆகையால், எல்லாப்ராணிகளையும் தண்டத்தாலேயே அடக்கவேண்டும். உண்மையைக்கண்ட பண்டிதர்கள் இவ்விதமே

கூறுகிறார்கள். ஆகையால், அந்தநான்குகளில் தண்டம் முக்கிய மென்று சொல்லப்படுகிறது. ராஜ்யத்தில் மூலம் அறுபட்டால் அதை அடுத்துப்பிழைக்கும் யாவரும் அடிக்கப்பட்டவர்களாவார் கள். பெரியமரத்தின் வேர் அறுபட்டால் கிளைகள் எவ்விதம் இருக்கக்கூடும்? பண்டிதனுயிருப்பவன் சத்துருபக்ஷத்தின்வேரை யே முதலில் அறுக்கவேண்டும்; பிறகு, ஸஹாயமாயிருப்பவர்களை யும் அந்தப் பக்ஷமனைத்தையுமே அடித்துத் தள்ளவேண்டும்; ஆபத்துவருங்காலத்தில் நல்ல ஆலோசனையையும் நல்லபராக்ரமத் தையும் நல்லயுத்தத்தையும் நல்லஓட்டத்தையுஞ் செய்யவேண்டும்; ஆலோசிக்கக்கூடாது; வாக்கில்மட்டில்வணக்கமுள்ளவனும்மனத் தில் கத்திபோன்றவனுமாயிருக்கவேண்டும்; மெதுவான வசனத் தை முன்னிட்டுப் பேசுகிறவனுகிக் காமக்ரோதங்களை விலக்க வேண்டும்; [1] சத்துருவுடன்கூடி ராஜ்யத்தில் ஸந்தியைச் செய்து கொண்டபின் நம்பிக்கை அடையாமலிருக்கவேண்டும். ஸாமர்த் தியமுள்ளவன் காரியத்தைச் செய்துகொண்டு சீக்கிரம் அதிலி ருந்து விலகவேண்டும்; சத்துருவையும் [2] மித்திரன்போலவே இருந்துகொண்டு நன்மொழியைக் கூறியே சமாதானஞ்செய்து கொள்ளவேண்டும். வீட்டிலிருக்கும் பாம்பினிடம்போல அவனி டம் எப்பொழுதும் பயப்படவேண்டும்; எவனுடைய புத்தியை அவமதிப்பானே அவனைச் சென்றகார்யத்தாலும் அறிவில்லாத வனை வருங்காரியத்தாலும் பண்டிதனை நிகழுங்காரியத்தாலும் ஸமாதானஞ்செய்யவேண்டும். ஸம்பத்தைவிரும்பும் மனிதன் அஞ் சலியும் சபதமும்நன்மொழிகூறுதலும் தலையால் காலில் வணங்கு தலும் கண்ணீர்விடுத்தலும்செய்யவேண்டும்; காரியத்தை அடை யும்வரையில் சத்துருவைத் தோளால் தூக்கவேண்டும்; பிறகு, மண்குடத்தைக் கல்லில் உடைப்பதுபோல அவனை ஸமயம்வந் ததும் உடைக்கவேண்டும்; அரசஸ்ரேஷ்டனே! ஒரு முகூர்த்த மாளவும் திந்துகமரத்திலெடுத்த கொள்ளிபோல ஜ்வலிக்கவேண் டும். மனிதன் உமியிலுள்ள தீயைப்போல ஜ்வாலையின்றி நெடுங் காலம் புகைந்துகொண்டிருக்கக்கூடாது. பல ப்ரயோஜனங்க ளுள்ள மனிதன் நன்றிகெட்டவனிடம் பொருள் ஸம்பந்தத்தைச் செய்யக்கூடாது. அவன் காரிய விருப்பமுள்ளவனுயிருந்தால் அவனை அனுபவிக்கக் கூடும். காரியத்தைச் செய்துகொண்டவ னுல் அவமதிப்பான். ஆகையால், கார்யங்கள் யாவற்றையும்

---

1 'சத்துருவுடன் சேர்ந்து செய்யத்தகுந்த காரியத்தில் அவனுடன் ஸந்தியைச்செய்து அவனிடம் நம்பிக்கையில்லாதவனுயிருக்க வேண்டும்' என்பது வேறுபாடம். 2 வேறுபாடம் கொள்ளப்பட்டது.

மிச்சமுள்ளனவாகவே செய்துவைக்கவேண்டும். [1] குயில், பன்றி, மேருமலை, ஒன்றுமில்லாதவீடு, [2] அரவம், அன்புள்ளநண்பன் இவர்களுக்குள்ள சூக்ஷமவழி எதுவோ அதைச்செய்துகொள்ள வேண்டும். விடாமுயற்சியுடன் எழுந்திருந்து சத்துருவின்வீட்டுக்குச் செல்லவேண்டும். அவனுக்கு சூக்ஷமமில்லாமலிருந்தாலும் அவனுடையசூக்ஷமத்தைக்கேட்கவேண்டும். சோம்பர்களும் தைரியமில்லாதவர்களும் அதி கௌரவங்கொண்டாடுகிறவர்களும் உலகத்தின்சொல்லிலிருந்து பயந்தவர்களும் விட்டுவிட்டுமுயற்சிசெய்பவர்களும் பொருள்களை அடையமாட்டார்கள். இவனுடைய இடைவெளியைப் பிறன் அறியாமலிருக்கவேண்டும். பிறனுடைய இடைவெளியையோவென்றால் இவன் அறியவேண்டும். ஆமை போலத் தன் அங்கங்களைமறைத்துக்கொள்ளவேண்டும். தன்னுடைய இடைவெளியை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். கொக்கைப் போல (ஒரேநினைப்பாய்க்) காரியங்களைச் சிந்திக்கவேண்டும். ஸிம்மத்தைப்போலப் (பயமின்றிப்) பராக்ரமத்தைவெளியிடவேண்டும். செந்நாயைப்போல (வேகமாக) நாசஞ்செய்யவேண்டும். அம்பைப்போல (திரும்பாமல்போய்) விழவேண்டும். குடி, சூது, பெண்டிர், வேட்டை, பாட்டு, வாத்யம் இவைகளை யுக்தியாக அனுபவிக்கவேண்டும். இவைகளில் ஆசையானது தோஷமுள்ளதாகும். வில்லைப் புல்லைப்போல்செய்யவேண்டும். மிருகம்படித்திருப்பதுபோலப் படித்திருக்கவேண்டும். குருடனையிருக்கவேண்டிய ஸமயத்தில் குருடனையிருக்கவேண்டும். செவிட்டுத்தனத்தையும் அடையவேண்டும். ஸாமர்த்தியமுள்ளவன் தேசகாலங்களை அடைந்து பராக்ரமத்தைச்செலுத்தவேண்டும். தேசகாலங்களை மீறிச் செலுத்தியபராக்ரமமானது பயனற்றதாகுமன்றோ? காலா

---

[1] குயிலானது தான்போஷிக்க வேண்டியவைகளை வேறொன்றைக் கொண்டு போஷிக்கச்செய்யும்; அதுபோலக் கிருஷி, வர்த்தகம், வழி, காடுகள் முதலிய இடங்களில் அரசன் தன்பொருள்களைப் பிறரைக் கொண்டு ரக்ஷிக்கச் செய்யவேண்டும். பன்றி புஜிக்கத்தக்கவைகளை வேருடன்புஜிக்கும்; அதுபோல அரசன் சத்துருக்களை வேருடன் அழிக்கவேண்டும். மேரு அசைவற்றதும் தாண்டத்தகாததுமாயிருக்கும்; அதுபோல அரசனிருக்கவேண்டும். ஒன்றுமில்லாத வீட்டிற்குப் பொருள்விரும்பவேண்டியதாயிருக்கும்; அதுபோல அரசன் பொருளை விரும்புகிறவனையிருக்கவேண்டும். அரவம் பழுதற்ற கோபமுள்ளதாயிருக்கும்; அதுபோல அரசனிருக்கவேண்டும். அன்புள்ள நண்பன் தன்னைச்சேர்ந்தவர்களின் சூக்ஷமத்தைவிரும்புவான்; அதுபோல அரசன் விரும்பவேண்டும்.

[2] இங்கு 'நடன்' என்கிற வேறுபாடத்தில் நடனைப்போல அரசன் பல வேஷமுள்ளவனையிருக்கவேண்டுமென்பது கருத்து.

காலத்தையும் பிறகு தன்னுடைய பலாபலத்தையும் நன்குநிச்சயஞ்செய்துகொண்டும் பிறனுடைய பலத்தையும் அறிந்துகொண்டும் அதற்குத்தக்கபடி தன்னை உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். எந்த அரசன் எதிர்க்கும் சத்ருவைத் தண்டத்தால் அடக்கவில்லையோ அவன் [1] அஸ்வதரியென்னும் மிருகமானது கர்ப்பத்தைப்போல மிருத்யுவை மறைத்துவைத்துக்கொள்ளுகிறான். நன்றுகப்பூவுள்ளதாயிருந்து கனியில்லாததாயிருக்கவேண்டும். கனியுள்ளதாயிருந்து ஏறத்தகாததாயிருக்கவேண்டும். பழுக்காமல் பழுத்ததுபோலிருக்கவேண்டும். [2] ஒருவனுக்கும் உதிராமலிருக்கவேண்டும். ஸமயத்திற்குத்தக்க ஆசையை உண்டுபண்ணவேண்டும். அவ்வாசையையும் இடையூறுள்ளதாகச் செய்யவேண்டும். காரணத்துடன் இடையூற்றைச்சொல்லவேண்டும். காரணமும் யுக்தியுள்ளதாயிருக்கவேண்டும். பயம்வரும்வரையில் பயந்தவன்போலக் காரியங்களைச்செய்யவேண்டும். பயம்வந்துவிட்டாலோ அதைக்கண்டு பயமில்லாதவன்போல யுத்தஞ்செய்யவேண்டும். மனிதன் ஸாஹஸத்தை அடையாமல் க்ஷேமங்களைப்பார்க்கமாட்டான். ஸம்சயத்தையடைந்து திரும்பவும் ஜீவித்திருப்பாரகில் க்ஷேமங்களைப்பார்ப்பான். இனிவரும் பயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். வந்தபயத்தை விலக்கவேண்டும். [3] திரும்பவும் புத்திக்குறைவால் சிறிதும் விலகாமலிருப்பதைப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஸமயத்திலுண்டாகிறஸுகத்தை விலக்குவதும் வரப்போகிற ஸுகத்தில் ஆசைப்படுவதும் புத்திமான்களின் நீதியே அன்று. எவன் சத்துருவுடன்கூட ஸந்தியைச்செய்துகொண்டு நம்பிக்கையுடன் ஸுகமாகத்தூங்குகிறானோ அவன் மரத்தின்நுனியில் உறங்கியவன்போல விழுந்தபின் விழித்துக்கொள்வான். மிருதுவானதோ குரூரமானதோ எவ்விதக்கர்மத்தாலாவது துன்பப்படும் தன்னை மீட்டுக்கொள்ளவேண்டும்; (மீண்டு) ஸமர்த்தனயிருந்து தர்மத்தைச்செய்யவேண்டும். எவர்கள் சத்துருக்களுக்குச் சத்துருக்களாயிருக்கிறார்களோ அவர்களனைவர்களையும் அனுஸரித்துக்கொள்ளவேண்டும். பிறர்களால் பூஜிக்கப்பட்ட தன்சாரர்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். தன்னுடையசாரனையும் பிறனுடையசாரனையும் நன்று

---

1 'அஸ்வதரி' என்னும் மிருகத்தின் கர்ப்பமானது தாயின்வயிற்றைப் பிளந்துகொண்டு வெளியில்வருமென்று சொல்லுகிறார்கள்.

2 'அரசன் இப்படிப்பட்ட மரம்போலிருக்கவேண்டும்' என்பது.

3 'மறுபடியும் வளர்ந்துவிடுமோவென்கிற பயத்தால் சிறிதுமிச்சமிருக்கிறதோவென்று பார்க்கவேண்டும்' என்பது வேறுபாடம். எப்பொழுதும் ஜாக்கிரதையுள்ளவனாக இருக்கவேண்டுமென்பது கருத்து.

கக் கவனித்துக்கொள்ளவேண்டும். பாஷண்டர்களும் தாபஸர் மூதலியவர்களுமான சாரர்களைப் பிறராஜ்யத்தில் ப்ரவேசிக்கச் செய்யவேண்டும். தோட்டங்களிலும் விளையாடுமிடங்களிலும் தண்ணீர்ச்சாலைகளிலும் சாவடிகளிலும் குடிக்குமிடங்களிலும் ஜனங்கள் கூடுமிடங்களிலும் தீர்த்தங்களிலும் ஸபைகளிலும் தர்மத்தைக்கெடுப்பவர்களும் பாபிகளும் உலகத்திற்கு விரோதிகளுமான திருடர்கள் வருவார்கள். அவர்களை அறிந்து அடக்கவேண்டும். திருட்டில்லாமலுஞ் செய்யவேண்டும். நம்பிக்கையில்லாதவனிடம் நம்பிக்கைகூடாது. நம்பிக்கையுள்ளவனிடத்திலும் அதிக நம்பிக்கைகூடாது. நம்பிக்கையால் பயமுண்டாகும். பரீக்ஷை செய்யாமல் நம்பக்கூடாது. உண்மையான காரணத்தால் பிறனுக்கு நம்பிக்கையுண்டாகும்படி செய்வித்துப் பிறகு அவன் தன்னிலையிலிருந்து சிறிதுசலிக்கும் ஸமயத்தில் அவனை அடிக்கவேண்டும். சங்கைப்படத்தகாதவனிடமும் சங்கையிருக்கவேண்டும். சங்கைப்பட்டமனிதர்களிடம் எப்பொழுதும் சங்கையிருக்கவேண்டும். சங்கைப்படாமலிருக்கும் மனிதனிடமிருந்து உண்டாகும் பயமானது வேருடன் அறுத்துவிடும். ஜாக்ரதையாலும் மௌனத்தாலும் காஷாயவஸ்திரத்தாலும் ஜடைகளாலும் தோல்களாலும் பகையாளியை நம்பிக்கையுள்ளவனைச் செய்தபின் சந்நாய்போல நாசஞ்செய்யவேண்டும். புத்திரனை உடன்பிறந்தவனை தகப்பனை ஸ்நேஹிதனை யாராயிருந்தாலும் பொருளுக்குக் கெடுதிசெய்யும்மனிதர்களை ஸம்பத்தைவிரும்பிய மனிதன் கொல்லவேண்டும். அஹங்காரமடைந்தவனும் செய்யத்தக்கதையும் செய்யத்தகாததையும் அறியாதவனும் கெட்டவழியில் சென்றவனுமாயிருக்குங்குருவுக்குக்கூடச் சிக்ஷைசெய்யத்தக்கதாகும். எதிர்சென்றழைப்பதாலும் நமஸ்கரிப்பதாலும் சிறிதுகொடுப்பதாலும் பூஜித்து, கூர்மையான முகமுள்ள பறவையானது (மலர்களையும் கனிகளையும் நாசமாக்குவது)போல் (சத்துருக்களைக்) கொல்லுகிறவனாயிருக்கவேண்டும். மீன்பிடிப்பவன்போலப் பிறர்களின் உயிர்நிலையான அங்கங்களை அறுக்காமலும் கடுமையான கர்மத்தைச் செய்யாமலும் அடியாமலும் உத்தமமான ஸம்பத்தை அடையமுடியாது. பிறவியால் சத்துருவென்பவனில்லை; மித்திரனென்பவனுமில்லை. கார்யங்களின்சேர்க்கையால் மித்திரர்களும் சத்துருக்களும் உண்டாகிறார்கள். சத்துருவாயிருப்பவன் தீனமாகப் பலபேசினாலும் அவனை விடக்கூடாது. அவன்விஷயத்தில் துக்கப்படக்கூடாது. முந்திவிரோதஞ் செய்தவனைக் கொல்லவேண்டும். எப்பொழுதும் அஸூயையில்லாமல்(ஜனங்களைச்)சேர்ப்பதிலும் அனுக்ரஹிப்பதிலும் முயற்சிசெய்யவேண்டும். நன்மையைவிரும்பும்

(மனிதன்)முயற்சியுடன் நிக்ரஹத்தையுஞ்செய்யவேண்டும். அடிக்கப்போகிறவன் பிரியத்தைப் பேசவேண்டும். அடித்தபின்னும் அதிகப்ரியத்தைப் பேசவேண்டும். வாளால் தலையை அறுத்துவிட்டும் சோகப்படவும் அழவும் வேண்டும். நன்மொழியாலும் ஸம்மானத்தாலும் பொறுமையாலும் (மனிதர்களை) அழைத்துக்கொள்ளவேண்டும். ஸம்பத்தை விரும்புகிறவன் இவ்விதம் 1 உலகத்தை ஆராதிக்கவேண்டும். ப்ரயோஜனமின்றி வைரத்தைச் செய்துகொள்ளக்கூடாது. கைகளால் நதியைத் தாண்டக்கூடாது. பசுவின்கொம்பைத்தின்பது ப்ரயோஜனமற்றதும் உயிருக்குக்கேடுமாகும்; பற்களும் உடைந்துபோம்; ரஸமும் அடையப்படாது. அறம்பொருள் இன்பங்களில் (ஒன்றுல்மற்றொன்றுக்கு ஏற்படத்தக்க) மூன்றுவிதமான பீடையும் அவ்விதமே மூன்றுவிதமான பயனுமுண்டு. அவ்விதப்பயனையும் பீடையையும் அறிந்துகொண்டு பீடையைவிலக்கிக்கொள்ளவேண்டும். கடனின் மிச்சமும் தீயின்மிச்சமும் சத்துருவின்மிச்சமும் திரும்பவும்திரும்பவும் வளர்ச்சியடையும். ஆகையால், (இவைகளில்)மிச்சமிருக்கும்படி செய்யக்கூடாது. கடனின்மிச்சங்களும் அலக்ஷியஞ் செய்யப்பட்டபகைகளும் மிகவளர்ச்சியடையும். உபேக்ஷிக்கப்படும் வ்யாதிகளும் கடுமையான கெடுதியை உண்டுபண்ணும். காரியத்தைத் திருத்தமாகச் செய்யவேண்டும். எப்பொழுதும் அஜாக்ரதையில்லாதவனுயிருக்கவேண்டும். நன்றுகளெடுக்கப்படாதமுள்ளும் வெகுகாலம் தீங்கைவிளைவிக்கும். மனிதர்களைக் கொல்லுவதாலும் மார்க்கங்களைக் கெடுப்பதாலும் 2 வீடுகளை நாசஞ் செய்வதாலும் சத்துருராஜ்யத்தை அழிக்கவேண்டும். கழுகின் பார்வைக்கொப்பான நீண்டபார்வையுள்ளவனும் கொக்கைப்போல அசைவற்ற இருப்புள்ளவனும் நாய்போல ஜாக்ரதையான செய்கையுள்ளவனும் ஸிம்மம்போலப் பராக்ரமமுள்ளவனும் பயமற்றவனும் காகம்போலப் பிறர் இங்கிதத்தை அறிகிறவனும் பாம்பு செல்லுவதுபோலச் சத்துருவினிடத்தில் செல்லுகிறவனுமாயிருக்கவேண்டும். சூரனை அஞ்சலிசெய்வதாலும், பயமுள்ளவனைப் பேதப்படுத்துவதாலும், லோபியைப் பொருளைக்கொடுப்பதாலும், ஸமமாயிருப்பவனை ஸரியானயுத்தத்தாலும் அடக்கவேண்டும். கூட்டத்தலைவர்கள் பேதப்படுத்துங் காலத்திலும் ஸ்நேஹமித்ரர்கள் ப்ரியவார்த்தை பேசுங்காலத்திலும் அமாத்தியர்களைப் பேதப்படாமலும் ஒன்றுசேராமலும் இருக்கும்படி காத்துக்கொள்ளவேண்டும். மிருதுவாகவே இருந்தால் அவமதிப்பார்கள். குரூரமாகவேயிருந்தால் பயமடைவார்கள். கடுமையாக

1, 2 வேறுபாடம்.

இருக்கவேண்டிய காலத்தில் கடுமையாக இருக்கவேண்டும். மிருதுவாக இருக்கவேண்டிய ஸமயத்தில் மிருதுவாகஇருக்க வேண்டும். மிருதுவாகஇருப்பவனே மிருதுவாகஇருந்தே வெல்ல வேண்டும். மிருதுவாக இருந்தே கடுமையாக இருப்பவனையும் வெல்லவேண்டும். மிருதுவாக இருப்பவனுக்குச் சாதிக்கத்தகா தது ஒன்றுமில்லை. ஆகையால், மிருதுவாகவிருப்பவன், கடுமை யாக இருப்பவனைவிடச் சிறந்தவனாகிறான். ஆகையால், எவன் சில ஸமயத்தில் மிருதுவாகவும் சிலஸமயத்தில் குரூரனாகவுமிருக் கிறானோ அவன் காரியங்களைச் சாதிப்பான்; சத்துருவையும் அடக்கி ஆளுவான். பண்டிதனேனு விரோதம்செய்துகொண்ட வன், 'தூரத்திலிருக்கிறேன்' என்று சிந்தையில்லாமலிருக்கக் கூடாது. புத்தியுள்ளவனுடையகைகள் நீண்டனவைகளாயிருக்கும். தூண்டப்படுத்தப்பட்ட பண்டிதன் அந்தக்கைகளால் தூண்டஞ்செய் வான். எதன்கரையைக் கடக்கமுடியாதோ அதைத்தாண்ட லாகாது. எதைப் பிறன் திரும்பக்கொண்டுபோவானோ அதை எடுக்கக்கூடாது. எதன்வரைப் பிடுங்கமுடியாதோ அதைக்கல் லக்கூடாது. எவன் தலையைக் கீழே தள்ளமுடியாதோ அவனை அடிக்கக்கூடாது. ஆபத்துக்காலத்தைத்தருதி இம்மது இவ்விதஞ் சொல்லப்பட்டது. மனிதன் இதை இவ்விதஞ் செய்யாமலிருக்க வேண்டும். சத்துருவால் எதிர்க்கப்பட்டவனோ இதை எவ்விதம் சிந்தியாமலிருப்பான்? ஆகையால், உன்னுடைய ஹிதத்தை விரும்புகிற என்னால் இதுசொல்லப்பட்டது' என்று சொன்னார். ஹிதத்தை விரும்பும் பிராம்மணரால் உள்ளபடி சொல்லப்பட்ட வசனத்தைக் கேட்டு ஸௌவீரதேசத்தரசன் கஷ்டமில்லாத மன முள்ளவனாகி அவர் வசனத்தை அவ்விதமே செய்தான்; பந்துக் களுடன்கூடி விளங்கும் ஸம்பத்தையும் அனுபவித்துக்கொண் டிருந்தான்" என்றுசொன்னர்.

நூற்றுநாற்பத்தோராவது அத்யாயம்.

ஆபத்தர்மம்.(தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஆபத்காலத்தில் பூஜிக்கத்தகாததைப் பூஜித்தாவது ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ளவேண்டுமென்பதையும் விப்ரனா மித்ரருக்கும் நாயின் மாம்ஸத்தைத் தின்னும் சண்டாள னுக்கும் நடந்த ஸம்வாதத்தையும் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பரதகுலத்திலுதித்த ராஜரே! முக்யமானதர்ம மானது எல்லா உலகங்களாலும் மீறப்பட்டுக் குறைவடைந்தும், அதர்மம் தர்மமாகச் செய்யப்பட்டும், தர்மமும்அதர்மமாகச்செய்

யப்பட்டும், மர்யாதைகள் மிகவேற்றுமைப்பட்டும், உலகங்களின் உறுதி கலக்கமடைந்தும், உலகம் அரசர்களாலும் திருடர்களாலும் பீடிக்கப்பட்டும், எல்லா ஆஸ்ரமங்களும் மயக்கமடைந்தும், கர்மங்கள் கெடுக்கப்பட்டும், காமத்தாலும் லோபத்தாலும் அவிவேகத்தாலும் பயமுண்டாவதைக் கண்டு நம்பிக்கை இல்லாமல். யாவர்களும் எப்பொழுதும் பயந்துகொண்டும், எப்பொழுதும் ஒருவரையொருவர் அடித்து வஞ்சித்துக் கொண்டும், தேசங்கள் எரிக்கப்பட்டும், பிராம்மண்யம் மிகப் பீடிக்கப்பட்டும், மேகம் வருஷியாமலும், ஒருவருக்கொருவர் பேதமுண்டாகியும், பூமியிலுள்ள ஜீவனம்யாவும் திருடர்களுக்கு அதீனமாகித் தாழ்ந்ததான காலம் வந்திருக்கும்பொழுது, தயையால் புத்திரர்களையும் பௌத்திரர்களையும்விட விருப்பமில்லாத பிராம்மணன் எதனால் ஜீவிக்கவேண்டும்? பாரதரே! ஆபத்துள்ளஸமயத்தில் எவ்விதமிருக்கவேண்டும்? பிதாமஹரே! அதனை எனக்கு உபதேசிக்க வேண்டும். சத்துருக்களைத் தபிக்கச்செய்பவரே! உலகம் கலக்கமுள்ள தன்மையை அடைந்திருக்கும் பொழுது அரசன் எவ்விதமிருக்கவேண்டும்? தர்மத்திலிருந்தும் தனத்திலிருந்தும் எவ்விதம் குறைவடையாமலிருப்பான்?'' என்று கேட்டனர்.

பீஷ்மர், ''மஹாபாஹுவே! 1 யோகமும் 2 க்ஷேமமும் நல்ல மழைகளும் ப்ரஜைகளிடமுள்ள வ்யாதிகளும் மரணமும் பயங்களும் அரசனைக்காரணமாகக் கொண்டவை. பரதர்களிற் சிறந்தவனே! கிருதமும் திரேதையும் த்வாபரமும் கலியும் அரசனை மூலமாகக் கொண்டவைகளென்பது என் அபிப்ராயம். இதிற் சந்தேகமில்லை. ப்ரஜைகளுக்குத் தீங்கை உண்டுபண்ணத்தக்க அவ்விதக் காலம் வருமாகில் அப்பொழுது ஞானத்தின் பலத்தைப் பிடித்துக்கொண்டு ஜீவிக்கவேண்டியதாகும். இவ்விஷயத்திலும் ஒருபறைச்சேரியில் சண்டாளனுக்கும் விஸ்வாமித்திரருக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். முன்காலத்தில் திரேதை த்வாபரம் இந்த யுகங்களின் ஸந்தியில் தெய்வக்குற்றத்தால் உலகத்தில் பன்னிரண்டு வருஷம் கோரமான 3 அனாவ்ருஷ்டி உண்டாயிற்று. திரேதாயுகம் முடிந்து த்வாபரயுகம் தொடங்கிய ஸமயத்தில் (த்ரேதாயுகத்தில்) மிகவளர்ச்சியடைந்தபிரஜைகளுக்கு இந்திரன் மழையைப்பெய்விக்கவில்லை. பிருஹஸ்பதியானவர் வக்ரமாகச்சென்றார். சந்திரன் வேறுவிதமாகத் திரும்பிய மண்டலத்துடன் தக்ஷிணமார்க்கத்தில் சென்றான். இரவின்முடிவில் (ஆகாயத்தில்) ஒரு 4 கறுப்புமில்லை.

---

1 அடையப்படாததை அடைவது. 2 அடையப்பட்டதை ரக்ஷிப்பது.
3 மழைபெய்யாமலிருப்பது. 4 பனியென்றும் பொருளுண்டு.

மேகக்கூட்டங்கள் எங்கிருக்கும்? ஆறுகளில் நீர்மிகக்குறைந்து அடியில் சிறிது ஓடிற்று. குளங்களும் ஆறுகளும் கிணறுகளும் மலை அருவிகளும் [1]தெய்வத்தால் செய்யப்பட்ட குற்றத்தால் சோபையழிந்து காணப்படவுமில்லை. பூமியானது காய்ந்தகுளங்களுள்ளதும் ஸபையும் தண்ணீர்ச்சாலையும் இல்லாததும் யாகமும் வேதாத்யயனமுமில்லாததும் வஷட்காரமென்னும் சுபமில்லாததும் கிருஷியும் பசுக்காத்தலும் அழிந்துபோனதும் கடைகளும் விற்றலுமில்லாமற்போனதும் முன்னுள்ள [2]ஆசாரங்கள் நீங்கியதும் பெரிய உத்ஸவங்கள் நாசமடைந்ததும் எலும்புகளும் சிறிய எலும்புகளும் இறைக்கப்பட்டதும் [3]ஆ! ஆ! என்று கதறும் மனிதர்களால் பயங்கரமானதும் விசேஷமாகப் பாழானபட்டணங்களும் எரிந்து போன க்ராமங்களும் வீடுகளுமுள்ளது மாயிற்று. அப்பொழுது பூமியானது திருடர்களால் சில இடத்திலும் சூரர்களால் சில இடத்திலும் துன்பமுள்ள அரசர்களால் சில இடத்திலும் ஒருவருக்கொருவர் பயத்தால் சில இடத்திலும் பெரும்பாலும் ஜனங்களின்றிச் சூன்யமாகவும் தேவாலயங்கள் போனதாகவும் கிழவர்களும் சிறுவர்களுமில்லாததாகவும் பசுக்களும் ஆடுகளும் செம்மறியாடுகளும் எருமைகளுமற்றதாகவும் ஒன்றுமலொன்று அடிக்கப்பெற்றதாகவும் கொல்லப்பட்ட ப்ராம்மணர்களுள்ளதாகவும் ரக்ஷிக்கும்ஜனங்கள் அடிபட்டுப்போனதாகவும் உத்ஸவமும் கூட்டமும் அழிந்துபோனதாகவும் பெரும்பாலும் பிணமான மனிதர்களுள்ளதாகவும் ஆயிற்று. யுதிஷ்டிர! தர்மமழிந்து போனதும் பயங்கரமுமான அக்காலத்தில் பசியடைந்த மனிதர்கள் ஒருவரையொருவர் தின்கிறவர்களாஞர்கள். ரிஷிகள் நியமங்களையும் அக்னிகளையும் தேவதைகளையும் ஆச்ரமங்களையும் தள்ளிவிட்டு இங்குமங்கும் பலவிதமாக ஓடினர்கள். பிறகு, பூஜ்யரும் புத்தியுள்ளவருமான விச்வாமித்ரரென்னும் மஹரிஷியானவர் பசியால்தொடரப்பட்டு இடமில்லாமல் நாலுபக்கத்திலும் ஓடத்தொடங்கினர். அக்நியை விட்டவரும் வீடு இல்லாதவருமான அந்த விச்வாமித்திரர், பிள்ளைகளையும் மனைவியையும் ஒரு ஜனக்கூட்டத்தில் விட்டுவிட்டுப் புஜிக்கத்தக்கதையும் புஜிக்கத்தகாததையும் ஸமமாகக்கொண்டு ஸஞ்சரித்து ஒரு ஸமயத்தில் ஓர் அரண்யத்தில் குரூரர்களும் பிராணிகளைக் கொல்லுகிறவர்களுமான சண்டாளர்களின் இடத்தை அடைந்தார். உடைந்த குடங்கள் சிதறியதும் [4]நாயின்மாம்ஸத்தால் அலங்கரிக்கப்பட்டதும்

---

1 வேறுபாடம். 2 'யூபக்கூட்டங்கள் குறைந்ததும்' என்பது வேறுபாடம். 3 'பெரியபிராணிகளின் சப்தங்களால் நிறைந்ததும்' என்பது வேறுபாடம். 4 'நாயின்தோல்களின் துண்டங்களுடன் கூடியதும்' என்பது வேறுபாடம்.

பன்றிகழுதைகளின் ஒடிந்த எலும்புகளுள்ள ஓடுகளாலும் குடங்களாலும் நிறைந்ததும் பிணத்தின் வஸ்திரங்கள் போடப்பட்டதும் அதிலிருந்து எடுத்தமாலைகளை ஆபரணமாகக்கொண்டதும் பாம்புச்சட்டையின் மாலைகளால் அடையாளஞ் செய்யப்பட்ட குடிசையின் முகமுள்ளதும் கோழிகளின் சப்தங்களால் நிறைந்ததும் கழுதைகளின் த்வனியால் சப்திக்கப்பட்டதும் ஒருவருக்கொருவர் கடுமையானவார்த்தைகளுடன் கலகஞ்செய்துசப்திக்கும் ஜனங்களுடன்கூடியதும் கோட்டானென்னும் பறவைகளின் த்வனிகளாலும் தேவதைகளுள்ள இடங்களாலும் சூழப்பட்டதும் இருப்புமணிகளை அலங்காரமாகக்கொண்டதும் நாய்க்கூட்டங்களால் சுற்றப்பட்டதுமான அந்தப்பறைச்சேரியில் ப்ரவேசித்துப் பசியின்வேகமுள்ள விஸ்வாமித்ரரென்னும் மஹரிஷியானவர் ஆகாரத்தைத்தேடுவதில் எண்ணங்கொண்டு பெரிய முயற்சியைச் செய்தார். அந்தச்சேரியில் பிச்சை எடுக்கப்போயும், அந்த விஸ்வாமித்ரர் மாம்ஸத்தையும் அன்னத்தையும் கனிகிழங்குகளையும் மற்றவற்றையும் சிறிதும் ஓரிடத்திலும் அடையவில்லை. விஸ்வாமித்ரரானவர், 'அந்தோ! நமக்குக் கஷ்டம் வந்துவிட்டது' என்று நிச்சயஞ்செய்துகொண்டு பலக்குறைவால் அந்தப்பறைச்சேரியில் பூமியில் விழுந்தார். அரசர்களில் சிறந்தவனே! அந்தமுனிவர், 'எது நமக்கு நல்லதாகும்? எவ்விதம் வீணைமரணமில்லாமலிருக்கும்?' என்று சிந்தித்தார். அரசனே! அந்தமுனிவர், உடனே சண்டாளன்வீட்டில் ஆயுதத்தால் கொல்லப்பட்ட நாயின்மாம்ஸத்தைச்சேர்ந்த ஒருதடி விழுந்திருப்பதைக் கண்டார். அவர், 'இப்பொழுது உயிரைக்காப்பாற்றுவதற்கு எனக்கு வேறு உபாயமில்லை. இப்பொழுது நான் களவுசெய்யவேண்டும். ஆபத்காலங்களில் உத்தமர்களிடத்திலும் ஸமமாயிருப்பவர்களிடத்திலும் தாழ்ந்தவர்களிடத்திலும் செய்யத்தக்கதாக விதிக்கப்படுந்திருட்டைப் [1] பிராம்மணன் உயிரைக் காப்பாற்றவேண்டிச் செய்யலாமென்பது நிச்சயம். முதலில் தாழ்ந்தவர்களிடமிருந்து திருடவேண்டும். பிறகு, ஸமமாயிருப்பவனிடமிருந்து கவரத்தக்கதாகும். இவ்விரண்டும் நேராமலிருந்தால் தர்மமுள்ளவனை சிறந்த மனிதனிடமிருந்தும் திருடிக்கொள்ளலாம். நான் பிராணிகளைக் கொல்லுந்தொழியும் சண்டாளர்களின் இந்தமாம்ஸத்தை அபகரிக்கிறேன். பிரதிக்ரஹதோஷத்தைவிடத் திருடுவதில் அதிக தோஷத்தை நான் பார்க்கவில்லை. (ஆகையால்) இந்த மாம்ஸத்தை அபகரிப்பேன்' என்று அப்பொழுது ஆலோசித்தார். பாரதனே! விஸ்வாமித்ரரென்னும் மஹாமுனிவர் இந்தப்

---

1 வேறுபாடம்.

புத்தியை அடைந்து எவ்விடத்தில் விழுந்தாரோ அவ்விடத்தில் நன்றாக உறங்கினர். பூஜ்யரான அந்தவிஶ்வாமித்ரர் நடுநிசி ஆனதைக்கண்டு, பறைச்சேரி தூக்கமடைந்ததும், மெள்ள எழுந்திருந்து குடிசையின்வாயிலில் புகுந்தார். அந்தச் சண்டாளன் தூங்கிக்கொண்டே பீலியால் மூடியகண்ணுள்ளவனும் வேறுனஸ்வரமுள்ளவனும் கொடியவனும் பார்க்கவிரும்பத்தகாதவனுமாக, 'பறைச்சேரி தூங்குங்காலத்தில், எவன் தடியை அசைக்கிறவன்? விழித்துக்கொண்டிருக்கிறேன்; நான் தூங்கவேயில்லை; குரூரனை நீ இதோ கொல்லப்படப்போகிறாய்' என்றுசொன்னன். அப்பொழுது, விஶ்வாமித்ரர் அந்தத்திருட்டுச் செய்கையால் [1] லஜ்ஜையால் நிறைந்தமுகமுள்ளவரும் சீக்கிரத்தில் பயந்துநடுங்கினவருமாகி அந்தச்சண்டாளனைநோக்கி, 'நீண்ட ஆயுளுள்ளவனே! நான் விஶ்வாமித்திரன். நான் பசியுடன் வந்தேன். நல்லபுத்தியுள்ளவனே! நீ நன்றாகத்தெரிந்துகொண்டவனுனல் என்னைக்கொல்லாதே' என்றுசொன்னர். ஆத்மஜ்ஞானமுள்ள மஹரிஷியினுடைய அந்தவசனத்தைக்கேட்டவுடன், சண்டாளனவன் படுக்கையிலிருந்து பரபரப்புடன் அவரைநோக்கிச் சென்றான். அவன், கண்களிலிருந்து கண்ணீரைவிட்டு வெகுமானத்தால் அஞ்சலிசெய்து கௌசிகரைநோக்கி, 'ஓ! பிராம்மணரே! இரவில் நீர் என்னசெய்யவிரும்புகிறீர்?' என்றுகேட்டான். விஶ்வாமித்திரர், நல்லவார்த்தைசொல்லிக்கொண்டு சண்டாளனைநோக்கிச் சொல்லத்தொடங்கினர். 'பசியுள்ளவனும் உள்ளடங்கிய உயிருள்ளவனுமான நான் நாயின் [2] தொடையை அபகரிக்கிறேன்; பசியுள்ளவன் கெட்டகார்யத்தில் ப்ரவேசிப்பான். ஆகாரத்தை விரும்பும் மனிதனுக்கு வெட்கமிராது. இவ்விஷயத்தில் பசியானது என்னைக்குற்றமுள்ளவனாகச்செய்கிறது; (ஆகையால்) நாயின்தொடையை அபகரிக்கிறேன்; என்னுடைய உயிர் நாசமடைகிறது; பசியால் என்னுடையபிரஜ்ஞை தவறுகிறது; பலங்குறைந்தவனும் பிரஜ்ஞை இழந்தவனும் புஜிக்கத்தக்கது புஜிக்கத்தகாததென்னும் வேறுபாடற்றவனுமான நான் அதர்மத்தை அறிந்தவனுனலும் நாயின் தொடையை அபகரிக்கிறேன். எப்பொழுது உங்கள் வீட்டில் நான் பிச்சையைப்பெறவில்லையோ அப்பொழுது பாபத்தில்புத்தியுண்டாயிற்று. (ஆகையால்) நாயின் தொடையை அபகரிக்கிறேன். தேவர்களின்முகமும் அவர்களுக்கு முந்திச்செல்லுகிறவரும் பரிசுத்தமாயிருப்பதை மட்டில்

---

1 வேறுபாடம்.

2 வால் என்றும் பொருளுண்டு. 'ஜங்கா' என்பது பழைய உரை; அதற்கு, கெண்டைக்காலென்பது பொருள்.

பொறுக்கிறவருமான அக்நிபகவான்போல் பிராம்மணனை நானும் எல்லாவற்றையும் புஜிக்கத்தக்கவனாகிறேன்; என்னைத் தர்மப்படியிருப்பவனென்று தெரிந்துகொள்' என்றுசொன்னார். அந்தச்சண்டாளன், அந்தவிஸ்வாமித்ரரைநோக்கிச் சொல்லத்தொடங்கினன். 'மஹரிஷியே! என்சொல்லைக்கேளும்; கேட்டபின் தர்மம் எப்படிக்குறையாமலிருக்குமோ அதை அப்படிச் செய்யும். பிரம்மரிஷியே! உமக்குள்ள தர்மத்தையுங்கேளும். நான் அதை உமக்குச் சொல்லுகிறேன். [1] மிருகங்களுள் நாய் அதமமென்று அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதிலும், அதன் சரீரத்தினுள் தொடையோ இழிவான இடமாயிருக்கிறது. மஹரிஷியே! இது நல்லமுயற்சியன்று; விசேஷமாகப் பக்ஷிக்கத்தகாததும் சண்டாளன் பொருளுமாயிருப்பதை அபகரிப்பது நிந்திக்கப்பட்ட செய்கையாகும். நீர் உயிரைக்காப்பாற்றுவதற்கு வேறு நல்ல உபாயத்தைப்பாரும். பெரியமுனிவரே! நாயின் மாம்ஸத்தைவிரும்புவதால் உமதுதவத்துக்கு நாசமுண்டாகும். [2] அறிவுள்ளவன் நல்லவழியிற்செல்லவேண்டும். தர்மத்திற்கு ஸங்கரத்தைச்செய்யக்கூடாது; தர்மத்தை நீர் விடக்கூட்டாது. ஏனெனில், நீர் தர்மமறிந்தவர்களுள் உத்தமராயிருக்கிறீர்' என்று சொன்னன். பரதர்களிற்சிறந்த அரசனே! பிறகு, இவ்விதம்சொல்லியதைக்கேட்டவரும் முனிவர்களில் பெரியவருமான விஸ்வாமித்ரர் பசியால் பீடிக்கப்பட்டுத் திரும்பவும் இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கினர். 'நான் நெடுங்காலமாக ஆகாரமில்லாமல் அலைகிறேன். உயிரைக்காப்பாற்றுவதற்கு எனக்கு ஓர் உபாயமுமில்லை; துன்பப்படுகிறவன் எந்தவிசேஷத்தாலாவது எந்தக்கர்மத்தாலாவது தன்னைத் துன்பத்திலிருந்து விடுவித்துக்கொள்ளவிரும்பவேண்டும்; (விடுபட்டு) ஸமர்த்தனாயிருப்பவன் தர்மத்தைச்செய்யவேண்டும்; இந்திரனுடைய தர்மம் க்ஷத்திரியர்களுக்குரியதாகும். அக்னியினுடையதர்மம் பிராம்மணர்களுக்குரியதாகும். வேதமென்னும் அக்னியானது எனக்குப்பலம். பசியை அடக்கிக்கொள்ளவேண்டிப் புஜிக்கப்போகிறேன்; எந்தவிதம் செய்தேஜீவிக்கவேண்டுமோ அதை அதை அலக்ஷியஞ்செய்யாமல் செய்யவேண்டும்; ஜீவித்திருப்பது மரணத்தைவிடமிகுந்தன்று. ஜீவித்திருப்பவன் தர்மத்தையடைவான்; அப்படிப்பட்டநான் உயிரைவிரும்பிப் பக்ஷிக்கத்தகாததையும் தெரிந்தே பக்ஷிக்கவிரும்புகிறேன்; அதை நீ ஸம்மதிக்கவேண்டும். உயி

---

1 'நரியைவிட' என்பது வேறுபாடம்.

2 'விதிக்கப்பட்ட தர்மத்தை அறிந்தவன் தர்மஸங்கரத்தைச் செய்யக்கூடாது' என்பது வேறுபாடம்.

ரோடிருந்து தர்மத்தைச் செய்வேன்; ஸூர்யன்முதலியசுடர்கள் பெரிய இருட்டை விலக்குவதுபோலத் தவத்தாலும் வித்தைகளாலும் அசுபங்களை விலக்கிக்கொள்வேன்' என்றுசொன்னர். சண்டாளன், 'இந்த மாம்ஸத்தைத்தின்று இப்பொழுது நீர் உயிரை அடையப்போகிறதில்லை; நீண்ட ஆயுளை அடையப்போகிறதில்லை; அமிர்தத்தைப் புஜித்ததுபோலத் திருப்தியையும் அடையப்போகிறதில்லை; வேறுபிச்சையை எடும்; நாயின் மாம்ஸத்தைத் தின்பதில் உமது மனம்செல்லவேண்டாம்; நாயானது ப்ராம்மணர்களுக்குத் தின்னத்தகாததன்றே?' என்று சொன்னன். விச்வாமித்ரர், 'சண்டாள! துர்ப்பிக்ஷகாலத்தில் வேறுமாம்ஸம் கிடைக்குமென்று எனக்குத் தோன்றவில்லை; எனக்குப் பொருளுமில்லை; பசியால் துன்பமுள்ளவனும் கதியற்றவனும் ஆசையற்றவனுமான நான் நாயின் தொடையை ஆறுராஸமும் சேர்ந்ததைவிடப் பெரிதாக நினைக்கிறேன்' என்றுசொன்னர். சண்டாளன், 'ப்ரம்மக்ஷத்ரிய வைசியர்களுக்கு ஐந்து ரசங்களுள்ளவைகளான [1] சல்யகம், முள்ளம்பன்றி, உடும்பு, முயல், ஆமை இவ்வைந்துமட்டில் புஜிக்கத்தக்கவைகளாகும்; சாஸ்திரம் உமக்குப் பிரமாணமாக இருந்தால் புஜிக்கத்தகாததில் மனத்தை வைக்காமலிரும்' என்றுசொன்னன். விச்வாமித்ரர், 'பசியை அடைந்த அகஸ்தியர் வாதாபியென்ற அஸுரனைப்புஜித்தார்; பசியுள்ளவனும் துன்பத்தையடைந்தவனுமான நான் நாயின் தொடையைப் புஜிக்கப்போகிறேன்' என்று சொன்னர். சண்டாளன், 'வேறு பிச்சையை எடும்; நீர் இங்கு இவ்விதம் செய்யத்தக்கவர்அல்லீர்; நிச்சயமாக இது செய்யத்தக்கதே அன்று; இஷ்டம்போல நாயின் தொடையை எடுத்துக்கொள்ளும்' என்றுசொன்னன். விச்வாமித்ரர், '(அகஸ்தியர்முதலிய) சிஷ்டர்களே தர்மத்திற்குக்காரணர். அவர்களின் நடையை அனுஸரித்துச் செல்லுகிறேன்; இந்த நாயின் தொடையைப் பரிசுத்தமான ஆகாரத்தைவிட மேலானதாகவும் புஜிக்கத்தக்கதாகவும் நினைக்கிறேன்' என்று சொன்னர். சண்டாளன், 'அஸத்துக்களால் செய்யப்பட்டது எதுவோ அது ஸனாதனமான தர்மமன்று; இங்கு அகார்யம் செய்யத்தக்கதே [2] அன்று; கபடமாகப் பாபத்தைச் செய்யவேண்டாம்' என்றுசொன்னன். விச்வாமித்ரர், 'ரிஷியாயிருப்பவர் பாதகத்தையும் அவமதிக்கப்படுவதையும் செய்யத்தக்கவர் அல்லர்; நாயும் மானும் ஒப்பானவையென்றே நினைக்கிறேன்; ஆகையால், நாயின் தொடையைப் புஜிக்கப்போகிறேன்' என்று சொன்னர். சண்டாளன், 'அந்த அகஸ்திய ரிஷியானவர் ப்ராம்மணர்களை ரக்ஷிக்க

---

1 ஒருவகைப்பன்றி. 2 வேறுபாடம்.

வேண்டிப் பிரார்த்திக்கப்பட்டவராய்ப் புஜிக்கத்தகாத அந்த அஸுரன் மாம்ஸத்தைப் புஜித்தார்; ஆசையால் புஜிக்கவில்லை; அது கர்மந்தான். அதில் பாபமில்லை. எல்லா உபாயங்களாலும் பெரியோர்கள் ரக்ஷிக்கத்தக்கவர்கள் அன்றோ?' என்று சொன்னன். விஸ்வாமித்ரர், 'ப்ராம்மணனை எனக்கு இந்தச் சரீரமானது மித்ரனைவிருக்கிறது. உலகத்தில் (இஃது) எனக்குப்ரியமும் மிகவும் பூஜிக்கத்தக்கதுமாயிருக்கிறது. ஆகையால், நான் புஜிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் இதை எடுக்க விரும்புகிறேன். இவ்விதக் கொடிய காரியங்களுக்கு நான் பயப்படுகிறவனல்லேன்' என்று சொன்னார். சண்டாளன், 'மனிதர்கள் ப்ரியமான உயிரையும் விடுவார்கள்; புஜிக்கத்தகாத ஒன்றிலும் புத்தியைச் செலுத்தமாட்டார்கள். அவர்கள் ஸ்வர்க்கத்தில் வஸிப்பதால் எல்லாக்காமங்களையும் அடைகிறார்களென்றுதெரிந்துகொள்ளும். (அதற்காகப்) பசியையும் பொறுக்கிறார்கள்' என்று சொன்னன். விஸ்வாமித்ரர், 'அந்த ஆசையானது மரித்தபின்னுள்ள ஜன்மத்தில் புகழை உண்டாக்கத் தக்கதென்பது யுக்தந்தான். (ஜீவித்திருப்பவனுக்கு ஆகாரமில்லாவிட்டால்) கர்மங்களுக்கு நாசம் உண்டாகுமென்பதில் ஸந்தேகமில்லை. நானே எப்பொழுதும் விரதமுள்ளவனும் புத்தியில் அடக்கமுள்ளவனுமாயிருக்கிறேன். (தர்மத்திற்கு) மூலமான சரீரத்தை ரக்ஷிக்கவேண்டும். (ஆகையால்) புஜிக்கத்தகாததைப் புஜிக்கப்போகிறேன். 1 ஞானஸ்வரூபமான ஜீவனை விசாரிப்பவனிடம் (இதிலும்) புண்ணியமிருக்கிறதென்பது வெளிப்படை. நான் ஆத்மரூபத்தில் ஸந்தோஷமுள்ளவனுயிருந்து இதைத் தின்றாலும், ஆத்மரூபத்தின் விவேகமில்லாதவனிடம் நாயின் மாம்ஸத்தைப் பக்ஷிப்பதால் எவ்விதப் பாபமுண்டோ அவ்விதப் பாவமுள்ள உன்போன்றவனுகமாட்டேன்' என்று சொன்னர். சண்டாளன், 'இந்தத் துக்கத்தை மறைத்து விலக்கவேண்டுமென்று எனக்கு நிச்சயமாகத்தோன்றுகிறது. ஆகையால், நான், ப்ராம்மணராயிருந்து கெட்டகார்யத்தைச்செய்யும் உம்மை வெறுத்துப்பேசுகிறேன்' என்று சொன்னன். விஸ்வாமித்ரர், 'தவளைகள் கத்திக்கொண்டிருந்தாலும் பசுக்கள் தண்ணீரைக் குடிக்கவே செய்யும். உனக்குத் தர்மத்தைச் சொல்வதற்கு அதிகாரமில்லை. தற்புகழ்ச்சி செய்துகொள்ளுகிறவனைக இருக்கவேண்டாம்' என்று சொன்னர். சண்டாளன், 'ப்ராம்மணரே! ஸ்நேஹத்தினால் இருந்து உம்மைப் பற்றித் துக்கிக்கிறேன். உம்மிடத்தில் எனக்குத் தயை உண்டாகி

1 வேறுபாடம்.

ற்து. ஆகையால், கூஷமமான இதைச்செய்யும். [1] லோபத்தில் மனத்தைச் செலுத்தவேண்டாம்' என்று சொன்னன். விஸ்வாமித்ரர், 'நீ ஸ்நேகிதனுயிருந்து எனக்கு நன்மையைவிரும்புவாயாகில் என்னை ஆபத்திலிருந்து மீளச்செய். நான் தர்மப்படி ஆத்மாவை அறிவேன். இந்த நாயின் தொடையைக்கொடு' என்று சொன்னர். சண்டாளன், 'உமக்கு இதைக்கொடுக்க எனக்கு உத்ஸாகமேயில்லை. என்னுடைய ஆகாரம் அபகரிக்கப்படுவதை உபேக்ஷைசெய்யவும் இஷ்டமில்லை. கொடுக்கும் நானும் பெற்றுக்கொள்ளும் ப்ராம்மணரான நீருமாகிய இரண்டுபேர்களும் நாயின் மலத்தால் பூசப்பட்டவர்களாவோம்' என்று சொன்னன். விஸ்வாமித்ரர், 'இப்பொழுது நான் பாபமான இக்கார்யத்தைச்செய்து ஜீவித்துக்கொண்டு மிகவும் பரிசுத்திசெய்யத்தக்க கார்யத்தைச் செய்வேன். பரிசுத்தமான சரீரமுள்ளவனுக இருந்துகொண்டு தர்மத்தையே அடைவேன். இவைகளில் எதுபெரிதோ அதைச்சொல்' என்று சொன்னர். சண்டாளன், 'தர்மகார்யத்திற்கு மனமே சாக்ஷியாகும். இவைகளில் எதுபாபமோ அதை நீரே அறிவீர். எவன் நாயின் மாம்ஸத்தைப் புஜிக்கத்தகுமென்று விரும்புகிறானே அவனுக்கு விலக்கத்தக்கதில்லையென்று நினைக்கிறேன்' என்றுசொன்னன். விஸ்வாமித்ரர், '(அபக்ஷியத்தை) [2] எடுப்பதிலும் புஜிப்பதிலும் தோஷமிருக்கிறது. (ஆகிலும்) உயிருக்கு அபாயம்நேரும்பொழுது எப்பொழுதும் இந்தவிதிக்கு விலக்கு இருக்கிறது. இந்தவிஷயத்தில் புஜிக்கத்தகாததென்று கூறும்சாஸ்திரம் பெரிதன்று. இந்தவிஷயத்தில் ஹிம்ஸையும் இல்லை; பொய்யும் இல்லை; ஆனல், கொஞ்சம் நிந்தையுண்டு' என்று சொன்னர். சண்டாளன், '(புஜிக்கத்தகாததைப்) புஜிக்கும்விஷயத்தில் உயிரை ரக்ஷிக்கவேண்டுமென்ற இந்த எண்ணம் உமக்குக் காரணமாகுமானல், உமக்கு வேதம் ப்ரமாணமாகாது. பெரியோர்களின் தர்மமும் பிரமாணமாகாது. ப்ராம்மண ச்ரேஷ்டரே! அப்பொழுது, இந்தஸமயத்தில் இதுகுற்றமாகாததுபோல் புஜிக்கத்தக்கதிலும் புஜிக்கத்தகாததிலும் நான் தோஷத்தைக் காணேன்' என்றுசொன்னன். விஸ்வாமித்ரர், '(புஜிக்கததகாததைப்)புஜிப்பவனுக்கு (க்ரௌஞ்சியில்போல்) பாதகம் காணப்படுகிறதில்லை. ஸ்ரைணையைக்குடித்தால் பதிதனுகிறனென்று விதியிருக்கிறது. ஆகிலும், ஒருவரோடொருவர்சேர்ந்து செய்யப்படும் கெட்டகார்யங்கள்போல (ப்புஜிக்கத்தகாததைப் புஜிப்பதும்) சிறிதுபச்சாத்தாபத்துடன் முன்செய்த புண்ணியத்தை நசிக்கச்செய்யும்' என்று

---

1 'ஆசையால் பாபத்தைச் செய்யவேண்டாம்' என்பதுவேறுபாடம்.

2 வேறுபாடம்.

சொன்னார். [1] சண்டாளன், 'எவன் சண்டாளன்வீடென்ற கெட்ட இடத்திலிருந்து திருட்டென்னும் இழிதொழிலால் கொடுக்க விருப்பமில்லாத தாழ்ந்தமனிதனிடமிருந்து பேராசையுடன் நாயைப் பெற்றுக்கொள்ளுகிறானே அவனே அதில் வருந்தண்டனையைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். அது, அறிவுள்ளவனும் நன்னடையுள்ளவனுமாயிருப்பவனைத் துன்பப்படுத்தும்' என்று சொன்னான். அப்பொழுது, சண்டாளன் இவ்விதம் விஸ்வாமித்ரரைப்பார்த்துச் சொல்லிவிட்டு ஓய்ந்தான். விஸ்வாமித்ரர், நிச்சயமான புத்தியுள்ளவராய் நாயின்தொடையை அபகரித்துக்கொண்டார். பிறகு, ஜீவனத்தை விரும்பும் மஹரிஷியான அந்த விஸ்வாமித்ரர் நாயின் அங்கத்தை எடுத்துக்கொண்டார். அந்த நாயின் அங்கத்தையெடுத்துக்கொண்டு, அந்த விஸ்வாமித்ரர் வனத்தில் மனைவியுடன்கூடப் புஜிக்கவிரும்பினர். பிறகு, 'நான் முதலில் தக்க காலத்தில் தேவர்களுக்குத் திருப்தியைச் செய்தபின் விதிப்படி நாயின் தொடையைப் புஜிப்பேன்' என்று அவருக்கு எண்ணமுண்டாயிற்று. உடனே, முனிவர் வேதத்திற்சொல்லிய விதிப்படி அக்னியைக்கொண்டுவந்து, இந்திரனுக்கும் அக்னிக்குமுள்ள விதிப்படி தாமே சருவைப் பாகஞ்செய்தார். பாரத! பிறகு, விதியின் முறைப்படி, வகைவகையாக இந்திரன்முதலிய தேவர்களை அழைத்துத் தேவர்களுக்கும் பித்ருக்களுக்குமுள்ள கர்மத்தைச் செய்யத் தொடங்கினர். அதேஸமயத்தில், அந்த இந்திரன் விசேஷமாக மழை பெய்வித்தான். எல்லாப்பிராணிகளையும் பிழைக்கும்படி செய்கிறவனுக (எல்லா) ஓஷதிகளையும் உண்டுபண்ணினான். பூஜ்யரான விஸ்வாமித்ரரும், தவத்தால் பாபங்களை எரித்து நீண்டகாலத்தில் மிக ஆச்சர்யமானஸித்தியை அடைந்தார். ப்ராம்மணர்களுள் மிகச்சிறந்த அந்த விஸ்வாமித்ரர், அந்தக் கர்மத்தை முடித்து அந்தச் சருவையும் புஜியாமல் தேவர்களையும் பித்ருக்களையும் ஸந்தோஷப்படும்படி செய்வித்தார். இவ்விதம் துன்பத்திலிருக்கும் அறிவுள்ளவன், ஜீவிக்கவிரும்புமுள்ளவனைல் சோகப்படாதபுத்தியுடன் உபாயங்களைத் தெரிந்துகொண்டு எல்லா உபாயங்களாலும் துன்பமுள்ளதன்னை விடுவித்துக்கொள்ளவேண்டும். இந்தப் புத்தியை அடைந்து எப்பொழுதும் ஜீவிக்கவேண்டும். உயிரோடிருக்கும் மனிதன், புண்ணியத்தையும் க்ஷேமத்தையும் அடைவான். ஓ! கௌந்தேய! ஆகையால், அறிவுள்ளவன் தர்மாதர்மங்களின் நிச்சயத்திற்குத்தக்க புத்தியை அடைந்து, இவ்வுலகில் உறுதியான புத்தியுள்ளவனாக இருக்கவேண்டும்" என்று சொன்னார்.

---

1 இங்கு அதிகபாடமான இரண்டு ச்லோகங்கள் விடப்பட்டன.

நூற்றுநாற்பத்திரண்டாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அரசன் பிராம்மணர்களைத்தவிர மற்றவர்களைத் தண்டத்தால் பரிபாலிக்கவேண்டுமென்னும் விஷயத்தில் சுக்ரா சாரியருடைய அபிப்பிராயத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "இந்தக் கோரமான காரியம் செய்யத்துணியப் பட்ட தென்பது நம்பத்தகாததும் பொய்போன்றதுமாயிருக்கிறது. எதை இந்தமனிதன் விலக்கவேண்டுமோ அவ்விதமான ஒருவிலக்குத் திருடர்களுக்கிருக்கிறதா? நான் மயக்கமடைகிறேன்; வருத்தப்படுகிறேன். எனக்குத் தர்மம் உறுதியற்றதாகச் செய்யப்பட்டது. நன்முகச்சிந்தித்தும் ஒருகாரணத்தாலும் நான் நிச்சயத்தை அடையவில்லை" என்றுசொன்னர். பீஷ்மர், "உனக்குச்செய்த இந்தத் தர்மோபதேசமானது ஆகமத்திலிருந்தே கேட்டுச் செய்யப்பட்டதன்று. இது தேன்போலக் கவிகளால் சேர்த்துவைக்கப்பட்ட ஞானத்திரட்டு. இந்தப் புத்தியானது பல கிளைகளுள்ள தர்மத்துடன் எந்த அறிவுகளில் ப்ரவர்த்தியடையுமோ அவ்விதமான வெளிபிலுள்ள அறிவுகளை அரசன் (குயில் பன்றி முதலிய) அந்த அந்தப் பிராணிகளிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். [1] ஓ! கௌரவ்ய! எப்பொழுதும் அறிவை உண்டுபண்ணத்தக்க தர்மமும் ஸாதுக்களின் ஆசாரமும் தெரிந்துகொள்ளத் தக்கனவாகும். ஆகையால், அந்த விஷயத்தில் என்வசனத்தைக் கேள். அறிவிற்சிறந்த அரசர்களன்றோ ஜயத்தை விரும்புகிறவர்களாய்ச் [2] சஞ்சரிக்கிறார்கள். அரசன் தன்புத்தியால் அங்கங்கிருந்து தர்மத்தைக் குற்றமில்லாமல் தெரிந்துகொள்ளவேண்டும். அரசனுக்குரிய தர்மம் ஒரே கிளையுள்ள தர்மத்துடன் விதிக்கப்படுகிறதன்று. முதலில் கற்குங் காலத்தில் சிக்ஷிக்கப்படாத அறிவானது அறிவில் பலமில்லாதவனுக்குப் பிறகு எங்கிருந்துவரும்? [3]இரண்டுவிதமான காரியத்தின் ஸ்வபாவத்தையும் அறிந்துகொள்ளாதவன் இரண்டுவிதமாக இருக்கும் வழியில் சந்தேகத்தை அடையத்தக்கவனாவான். பாரத! முதலிலேயே இரண்டுவிதமான அறிவையும் [4] அறிந்துகொள்ளவேண்டும். [5] அறிவிற்சிறந்தவன் வருங்காலத்தில் செய்யவேண்டியதை முந்தி நிலைப்படுத்திக்கொண்டு (ஸமயம்போல்)

1, 2, வேறுபாடம்.

3 ஒரேசெயலானது ஒருகாலத்தில் புண்யமாகவும் ஒருகாலத்தில் பாபமாகவும் ஆகுமென்பது. 4 5 வேறுபாடம்.

வரியை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும். உலகம் அவ்விதம் நடத்தப்படும் தர்மத்தை வெவ்வேறுவிதமாக அறியும். சிலர் உண்மையான ஞானமுள்ளவர்கள். மற்றவர்கள், பொய்யான ஞானமுள்ளவர்கள். அஃது எந்தஎந்தவிதம் இருக்கிறதோ அவ்வவ்விதம் தெரிந்துகொண்டு நல்ல அறிவை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது ஸாதுக்களின்கருத்து. தர்மத்திற்கு விரோதிகளாயிருப்பவர்கள் சாஸ்திரங்களைக் குறைத்துப்பேசுகிறார்கள். அவர்கள் ப்ரயோஜனமற்றவர்களாய் அந்தச் சாஸ்திரங்களின் [1] வேற்றுமையை வெளியிடுகிறார்கள். அரசனே! நான்கு புறத்திலிருந்தும் கல்வியையும் கீர்த்தியையும் காமத்தையும் அடுத்துப் பிழைக்க விருப்பமுள்ளவர்களும் மிக்க பாபிகளும் தர்மத்திற்கு விரோதிகளும் பக்வமில்லாத மனமுள்ளவர்களும் மூடர்களுமான அவர்கள்யாவர்களும் உண்மையை அறிகிறார்களில்லை. சாஸ்திரத்தில் தேர்ச்சியில்லாதவர்களும் எல்லா விஷயத்திலும் யுக்தியில் நிலைபெறுதவர்களும் சாஸ்திரத்தில் குற்றத்தைக் காண்கிறவர்களுமாக இருக்கிறவர்களும், அவ்விதம் [2] அர்த்தசாஸ்திரங்களால் உண்டாகும் அறிவானது நன்றுக [3] இருக்கவில்லையென்று சாஸ்திரங்களைக் குறைத்துப் பேசுகிறார்கள். வாக்கை அஸ்த்ரமாகவும் வாக்கை அம்பாகவுங்கொண்ட அவர்கள் கல்விகளின் பயனைக் கறந்துகொண்டவர்கள் போலப் பிறர்களின் வித்தைகளை நிந்தித்துத் தம்வித்தையைப் புகழ்ந்துகொள்ளுகிறார்கள். பாரத! ராக்ஷஸர்கள்போன்ற அவர்களை வித்யாவர்த்தகர்களென்று அறிந்துகொள். கபடமாகச்செய்யப்படும் உன்னுடைய விஹிததர்மமெல்லாம் பரிஹஸிக்கப்படும். சப்தம் ஒன்றுல்மட்டிலும் அதுபோல் யுக்தி ஒன்றுல்மட்டிலும் தர்மத்தை நிச்சயஞ்செய்யமுடியாதென்று எங்களுக்குக் கேள்வி. இது, ப்ருகஸ்பதியால் உபதேசிக்கப்பட்ட ஞானமென்று நேரில் இந்திரன்சொன்னன். காரணமின்றிச் சாஸ்திரத்தில் ஒருவசனமும் சொல்லப்படுகிறதேயில்லை (என்பர்சிலர்). [4] மற்றுஞ்சிலர் நல்லயுக்தியுடன்கூடிய சாஸ்திரத்தாலும் (சிலவற்றை) நிச்சயஞ்செய்கிறார்களில்லை. இவ்வுலகில் முக்கியமான சில ஆசாரியர்கள் உலகநடைக்குக் காரணமாயிருப்பதைத்தர்மமென்று கூறுகிறார்கள். பண்டிதனுயிருப்பவன்ஸாதுக்களால் உபதேசிக்கப்படும் தர்மத்தைத் தானும் ஊஹித்துக்கொள்ளவேண்டும். [5] ஓ! பாரத! பொறுமையாலும் சாஸ்திரத்தில் அவிவேகத்தாலும் அறியாமையாலும் சொல்லவரும் பண்டித

---

1 ப்ராமாண்யமில்லாமை; அல்லது அதர்மமாயிருக்குந்தன்மை.
2, 3, 4, 5 வேறுபாடம்.

னுடைய சாஸ்திரம் ஸதஸில்தான்றுததாகும். ஒருமனிதன் சாஸ்திரத்தை அனுஸரித்துவந்த யுக்தியுடன்கூடிய வசனத்தால்புகழப்படுவான். மற்றவன் அறியாமையால் அறியாத ஒன்றை அறிவிக்கக்காரணமாயிருப்பதுகொண்டு (எல்லா) வசனத்தையும் நல்லதென்று நினைப்பான். மற்றொருவன் இந்தச்சாஸ்திரம் 1 யுக்திக்கு விரோதமாயிருப்பதால் இது பயனற்றதென்று அவிவேகத்தால் எண்ணுவான். (ஆகையால், சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் ஒத்ததைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று) முன்காலத்தில் சுக்ராசாரியர் அஸுரர்களை நோக்கி ஸந்தேகத்தை அறுக்கத்தக்க விஷயத்தை உபதேசித்திருக்கிறார். இரண்டு விஷயங்களையும் பற்றி நிற்கும் ஸந்தேகஜ்ஞானமானது இல்லாததற்கு ஒத்ததாகும். 2 ஆகையால், அதற்குக் காரணத்தை அறுத்து அதைத் தூரவிலக்கிக்கொள்ளத்தக்கவனாகிறாய். என்னுடைய இந்த வசனத்தை நீ ஒத்துக்கொள்ளாமலிருப்பாயாகில் அது 3யுக்தமன்று. நீ உக்ரகர்மத்திற்காகவே படைக்கப்பட்டவனாகிறாய். அதை நீ பார்க்கவில்லை. 4 அப்பா! ஐஸ்வரியத்தைவிரும்பும் அரசக்கூட்டத்திற்காக அஃது எவ்விதம் விடுதலை பெறுமோ அவ்விதம் யுத்தஞ்செய்த என்னைக்கவனித்துப்பார். மற்றஉலகம் இந்தவிஷயத்தை ஸந்தோஷியாது. 5 ஆடு குதிரை க்ஷத்ரியன் என்ற இவர்கள் பிரம்மதேவரால் ஸமமாகப் படைக்கப்பட்டனர். அதனாலேதான், 6 எப்பொழுதும் பிராணிகளுக்குள்ள ஓர்உலகநடை ப்ரவிர்த்திபெறுகிறது. கொல்லத்தகாதவனைக் கொல்லுவதில் எந்தத்தோஷமோ அது கொல்லத்தக்கவனைக் கொல்லாதிருப்பதில் கூறப்படுகிறது. இதுதான் மரியாதையாகும். அதை இவன் விலக்கிக்கொள்ளவேண்டும். ஆகையால், அரசன் கடுமையாக இருந்து பிரஜைகளைத் தம்தர்மத்தில் நிலைக்கச்செய்யவேண்டும். அவ்விதமில்லாவிட்டால் செந்நாய்களைப்போல ஒருவரையொருவர் தின்றுகொண்டு ஸஞ்சரிப்பார்கள். எந்த அரசனுடைய ராஜ்யத்தில் காக்கைகள் ஜலத்திலிருந்து மீன்களை எடுப்பதுபோலத் திருடர்கூட்டங்கள் பிறர் பொருளைத் திருடுகின்றனவோ, அவனை க்ஷத்திரியர்களுள் கெட்டவனுவான். அரசனே! நற்குலத்தில் பிறந்தவர்களும் வேதவித்தையுடன் கூடியவர்களுமாயிருப்பவர்களை மந்திரிகளாகச்செய்து தர்மப்படி பிரஜைகளை ரக்ஷித்துக்கொண்டு பூமியையாளு. எந்த அரசன் தன்தர்மமான ரக்ஷணையைச்செய்யாமல் 7அந்யாயமாக வரியைப்பெற்றுக்

1, 2, 3, 4 வேறுபாடம்.

5 'யாகத்தில் ஆடு அதன் க்ஷேமத்தைக்கருதியே கொல்லப்படுகிறது. அதுபோல க்ஷத்ரியனும் குதிரையும் யுத்தத்தில்செல்லுதல் தம் க்ஷேமத்திற்காகவே' என்பது பழையஉரை. 6, 7 வேறுபாடம்.

கொள்ளுகிறுமே அந்தக்ஷத்ரியனே உபாயத்தின் விசேஷங்களை அறியாதவனும் நபும்ஸகனுமாகிறுன். இவ்வுலகில் குரூரமாகவேயிருப்பதும் அல்லது மிருதுவாகவேயிருப்பதும் தர்மப்படிகொண்டாடப்படுகிறதில்லை. இரண்டையும் மீறிச்செல்லாமலிருக்கவேண்டும். குரூரமாக இருந்து பின் மிருதுவாகஇரு. க்ஷத்ரியர்களுக்குரிய இந்தத்தர்மமானது கஷ்டம். உன்னிடத்தில் எனக்கு ஸ்நேஹமிருக்கிறது. குரூரமானதர்மத்தில் நீ ஸ்ருஷ்டிக்கப்பட்டவனுகிறுய். ஆகையால், ராஜ்யத்தை ஆண்டுகொண்டிரு. ராஜனே! நீ ஒருவனிடத்திலும் கோபமில்லாதவனுய் இவ்விதமே செய். பரதர்களிற் சிறந்தவனே! எப்பொழுதும் துஷ்டர்களை அடக்கவும் சிஷ்டர்களை ரக்ஷிக்கவும்வேண்டும். இவ்விதம் ஆபத்காலங்களுக்குரிய தர்மத்தைப் புத்திமானனை சுக்ராசாரியர் உபதேசித்தார்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "ஸாதுக்களில் மிகச்சிறந்த பிதாமஹரே! எந்த விலக்கை மற்றொருவன் தாண்டக்கூடாதோ அவ்விதமானவிலக்குவிதி இந்தத்தண்டனையில் இருக்குமாகில் அதை உம்மிடம் கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்னுர். பீஷ்மர், "கல்விகளில் பெரியோர்களும் தவமுள்ளவர்களும் சாஸ்திரமும் தர்மமும் நன்னடையும் பொருந்தியவர்களுமான பிராம்மணர்களையே ஸேவிக்கவேண்டும். இவர்களை ஸேவிப்பது மிக்க உத்தமமும் பரிசுத்தமுமாகும். [1]மஹாராஜனே! பிராம்மணர்களிடம் எப்பொழுதும் (உனக்குப்) பணிவிடையும் நன்மொழியும் இருக்கவேண்டும். அரசனே! ஏனெனில், கோபமுள்ள பிராம்மணர்களால் காரியங்கள் பலவிதமாகச் செய்யப்பட்டவைகளாகும். அவர்களின்பிரியத்தால் பெரியகீர்த்தியும் அப்பிரியத்தால் பெரிய பயமுமுண்டாகும். ப்ரீதியுள்ள பிராம்மணர்கள் அமிர்தம் போலவும், கோபங்கொண்ட அவர்களே ஸர்ப்பங்கள்போலவும் ஆவார்கள்" என்றுசொன்னர்.

நூற்றுநாற்பத்துமூன்றுவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், வேடனையும் புறவையும்பற்றிய கதையைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "எல்லாச் சாஸ்திரங்களிலும் ஸமர்த்தரும் பிராஜ்ஞர்களில் பெரியவருமான பிதாமஹரே! சரணமடைந்தவனை

---

1 'தேவர்களிடத்தில் நீ எவ்விதநடக்கையுள்ளவனுயிருக்கிறுயோ அவ்விதநடக்கையுள்ளவனுய்ப் பிராம்மணர்களிடத்திலும் எப்பொழுதும் இருக்கவேண்டும்' என்பது வேறுபாடம்.

ரகூஷிப்பவனுக்கு எதுதர்மமென்பதை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"மஹாராஜனே! சரணமடைந்தவனை ரகூஷிப்பதில் பெரியதர்மம் உண்டு. பரதர்களில் மிகச்சிறந்தவனே! இந்தக்கேள்வியை நீயும் கேட்கத்தக்கவன். அரசனே! மஹாத்மாக்களான சிபிமுதலிய அரசர்கள் சரணமடைந்தவனைரகூஷித்து உத்தமமான நல்லகதியை அடைந்தார்கள். சரணமடைந்த சத்துருவான வேடனைவன் புறுவினல் நியாயப்படி பூஜிக்கப்பட்டு அதன் மாம்ஸங்களால் 1 நிமந்திரணம் செய்விக்கப்பட்டானென்று கேள்வி" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "பாரதரே! முன்காலத்தில் சரணமடைந்தசத்துருவான வேடன் புறுவினல் எப்படி அதன் மாம்ஸத்தைப் புஜிக்கும்படி செய்யப்பட்டான்? அந்தப்புறுவானது என்னகதியை அடைந்தது?" என்றுகேட்டார். பீஷ்மர், "அரசனே! சுக்ராசாரியரால் முசுகுந்தராஜனுக்குச் சொல்லப்பட்டதும் எல்லாப் பாபங்களையும் நாசஞ்செய்வதுமான திவ்யகதையைக் கேள். புருஷர்களிற்சிறந்த பார்த்தனே! முன்காலத்தில் முசுகுந்தராஜன் வணக்கமுள்ளவனகி இவ்விஷயத்தைப்பற்றிச் சுக்ராசாரியரிடம் ப்ரஸ்னஞ்செய்தான். அரசனே! சுக்ராசார்யர், கேட்க விருப்பமுள்ள அவ்வரசன்பொருட்டுப் புறு வித்தி பெற்றதென்பதைக் கூறும் இக்கதையைச் சொல்லத்தொடங்கினர். 'புஜபலமுள்ள அரசனே! சொல்லுகிற என்னிடமிருந்து தர்மத்தின் நிச்சயத்தையுடையதும் அர்த்தகாமங்களையுடையதுமான கதையைக் கவனமாகக்கேள். அரசனே! கெட்ட நடக்கையுள்ளவனும் காலன்போன்றவனும் பயங்கரனும் அண்டங்காக்கைபோலக் கறுத்த அங்கமுள்ளவனும் தயையில்லாதவனும் பாவங்களில் கவனமுள்ளவனும் 2 நீண்ட முழங்காலுள்ளவனும் சிறிய பாதமுள்ளவனும் பெரிய முகமுள்ளவனும் பெரிய மோவாய்க்கட்டையுள்ளவனுமான ஒரு பறவைபிடிக்கும் வேடன் பூமியில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு ஸ்நேஹிதன் ஒருவனுமில்லை; ஸம்பந்தியுமில்லை; உறவினர்களுமில்லை. அந்தக் குரூரகர்மத்தால் அவன் பந்துக்களால் விலக்கப்பட்டனன். பாபமான நடையுள்ள மனிதனை அறிவுள்ளவர்கள் தூரத்தில் விலக்கவேண்டும். எவன் தன்னையே நம்புகிறதில்லையோ அவன் மற்றவனுக்கு எவ்விதம் ஹிதமாக இருப்பான்? குரூரர்களும் கெட்டபுத்தியுள்ளவர்களும் பிராணிகளின் உயிரைக்கவர்கிறவர்களுமாயிருக்கிற மனிதர்கள் பாம்புகள் போலப் பிராணிகளுக்குப் பயப்

1 போஜனத்திற்கு வரிப்பது. 2 வேறுபாடம்.

படத்தக்கவர்களாவார்கள். அந்தவேடன் வலையை எடுத்துக் கொண்டு அரண்யத்திலுள்ள பக்ஷிகளைக்கொன்று அவைகளைவிலை செய்துகொண்டிருந்தான். அரசனே! இவ்விதமான நடையையுடைய கெட்டபுத்தியுள்ள அவ்வேடனுக்கு நெடுங்காலஞ்சென்றது. அவன் அதர்மத்தை அறிந்துகொள்ளவுமில்லை. மனைவியுடன் கூடினவனும் எப்பொழுதும் க்ரீடிப்பவனும் தெய்வ்மென்னும்காரணத்தால் மூடனுமான அந்தவேடனுக்கு வேறுஜீவனம் விருப்பமாக இருக்கவில்லை. பிறகு, ஒருஸமயத்தில் அவன் காட்டிலிருக்கும் பொழுது அந்தமரங்களைக் கீழேதள்ளுவது போன்றதும் மிகப்பெரிதுமான சுழல்காற்று நாற்புறத்திலுமுண்டாயிற்று. ஆகாயமானது ஒரு மூகூர்த்தத்தில் கப்பல்கூட்டத்தால் நிறைந்த கடல்போல மேகங்களால் நிறைந்ததும் மின்னற்கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்டதுமாயிற்று. ஜலங்களின் தாரைக் கூட்டத்தால் 1 ப்ரவேசிக்கத் தொடங்கிய இந்திரன் ஜலத்தால் கூஷணத்தில் பூமியை நிரம்பச்செய்தான். பிறகு, உலகம் மழையால் கஷ்டப்படும்பொழுது குளிரால் துன்பப்பட்டவனும் ப்ரஜ்ஞைதவறினவனும் துன்பமுள்ள மனத்துடன் அவ்வரண்ய முழுமையும் சுற்றுகிறவனும் பக்ஷியைக் கொல்லுகிறவனுமாகிய அவன் பள்ளத்தையும் மேட்டையும் அறியவேயில்லை. அந்த அரண்யத்தின் வழியானது ஜலத்தின் ப்ரவாகத்தால் நிறைந்ததாயிற்று. பக்ஷிகள் மழையின் வேகத்தால் அடிக்கப்பட்டு மரத்தில் மறைந்துகொண்டிருந்தன. வனத்தில் வஸிக்கும் மான்களும் சிங்கங்களும் பன்றிகளும் அந்த அரண்யத்திலிருக்கும் மற்றப் பக்ஷிகளும் பெரியகாற்றினாலும் மழையினாலும் பயமடையச் செய்யப்பட்டுப் பயத்தால் துன்பப்பட்டவைகளும் பசியால் பீடிக்கப்பட்டவைகளுமாகிச் சோர்வடைந்து வனத்தில் சுற்றின. அந்தவேடனோ குளிரால் அலக்கப்பட்ட அங்கங்களுடன் நில்லாமல் சென்றுகொண்டே இருந்தான். குளிரால் துன்பம்அடைந்து பூமியில்விழுந்திருக்கும் ஒரு பெண்புறாவைக் கண்டான். துன்புள்ளவனுயிருந்தும் பாபபுத்தியுள்ள அவ்வேடன் கண்டதும் அந்தப் பெண்புறாவைத் தன் கூட்டில் எடுத்துப்போட்டுக் கொண்டான். தான் துக்கத்தால் பீடிக்கப்பட்டவனை இருந்தும் பிறனிடத்தில் துக்கத்தையே செய்தான். பாபபுத்தியுள்ள அவன் பாபத்தைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவனைகயால் பாபத்தையே செய்தான். அவன், மரக்கூட்டங்களுள் மேகம்போலக் கறுத்ததும் நிழலையும் இடத்தையும் கனிகளையும் விரும்பும் பறவைக் கூட்டங்களால் அடிக்கப்படுவதுமான ஒரு

1 வேறுபாடம்.

பெரியமரத்தைக் கண்டான். அம்மரமானது ஸத்புருஷனைப் போலப் பிறரின் உபகாரத்தின்பொருட்டு ப்ரம்மதேவரால் உண்டு பண்ணப்பட்டது. பிறகு, ஆகாயமானது மலர்ந்த ஆம்பல்புஷ்பங் களுடன்கூடிய ஜலமுள்ள பெரிய குளம்போல கூஷணத்திலேயே சுத்தமான நக்ஷத்திரங்களுள்ளதாயிற்று. புஷ்பங்கள்போன்ற உருவ்முள்ள நக்ஷத்திரங்களுடன்கூடிய ஆகாயமானது மிகவும் அழுக்கற்றதாயிற்று. மேகங்களால் விடப்பட்ட ஆகாயத்தைக் கண்டபின், குளிரால் துன்பப்படுகிறவனும் மிக்க கெட்டபுத்தி யுள்ளவனுமான வேடன் திக்குக்களையும் ஸமயத்தையும் கவனித் துப்பார்த்தான். பிரபுவே! [1] அவ்விடத்திலிருந்து கிராமமிருக்கு மிடம் தூரமுள்ளதென்று (எண்ணி) அவ்விரவுமுழுமையும் அந்த மரத்தில் வஸிக்கவேண்டுமென்று மனத்தில் நிச்சயித்தான். பாரத! பிறகு, அஞ்சலியுடன் நமஸ்காரம்செய்து அந்தப்பெரிய மரத்தைநோக்கி, 'இதிலுள்ள தெய்வங்களைச் சரணமடைகிறேன்' என்ற வசனத்தைச் சொன்னன். பிறகு, பக்ஷிகளைக்கொல்லும் அவ்வேடன் பெரிய துக்கத்துடன் பூமியில் இலைகளைப்பரப்பிக் கல்லில் தலையைவைத்துக்கொண்டு உறங்கத்தொடங்கினன்.

நூற்றுநாற்பத்துநான்காவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(வேடனையும் புறவையும்பற்றிய கதைத்தொடர்ச்சி.)

அரசனே! பிறகு, அந்தமரத்தின்கிளையில் விசித்ரமானமயி ருள்ள ஒருபுறுவானது இனத்துடன்கூட நெடுங்காலமாக வஸித் துக்கொண்டிருந்தது. இரைதேடவேண்டிக் காலையில் சென்ற அதன் பெட்டையானது வரவில்லை. இரவுவந்ததைக்கண்டு அந்தப் பக்ஷியானது வருத்தமடைந்தது. 'பெரியகாற்றும் மழையுமா யிருந்ததே; என்ப்ரியை வரவில்லையே; இன்னும் அவள் திரும் பாமலிருப்பதற்கு என்னகாரணமிருக்குமோ; கானகத்திற்சென்ற என் அன்புள்ள மனைவிக்கு க்ஷேமமிருக்குமோ; அவளில்லாத இந்த எனதுவீடு இப்பொழுது சூன்யமாயிருக்கிறதே. கிருஹஸ் தனயிருப்பவனுடைய வீடானது நான்குபுறத்திலும் புத்ரர்களா லும் பௌத்ரர்களாலும் மருமக்களாலும் வேலைக்காரர்களாலும் நிறைந்திருந்தாலும் பார்யையில்லாமலிருந்தால் சூன்யமாகவே இருக்கும். (அறிந்தவர்கள்) வீட்டை வீடு என்று சொல்லவில்லை.

---

1 'என்வீடு இவ்விடமிருந்து தூரத்திலிருக்கிறது' என்றெண்ணி என்பது வேறுபாடம்.

வீட்டிற்குடையவளான மனைவியே வீடென்று சொல்லப்படுகிறாள் மனையாளில்லாதவீடானது அரண்யத்திற்கொப்பானதாகச் சொல்லப்படுகிறது:- சிவந்த கடைக்கண்களுள்ளவளும் பலவர்ணமான அங்கங்களுள்ளவளும் இனிமையான குரலுள்ளவளுமான அந்த என்னுடையமனைவி இப்பொழுது வராவிட்டால் எனக்கு உயிராற் பயனில்லை. நல்லவ்ரதமுள்ள அவள், நான் உண்ணுவிட்டால் உண்பதில்லை; நான் ஸ்நானஞ்செய்யாவிட்டால் ஸ்நானஞ்செய்கிறதில்லை; நான் நில்லாவிட்டால் நிற்பதில்லை. நான் படுத்தபின் அவள் படுப்பாள். நான் ஸந்தோஷமுள்ளவனாயிருந்தால் அவள் ஸந்தோஷமுள்ளவளாயிருப்பாள். நான் துக்கமுள்ளவனால் அவள் துக்கமுள்ளவளாயிருப்பாள்; நான் வெளியிற் செல்லுப்பொழுது வாடியமுகமுள்ளவளாயிருப்பாள்; நான் கோபங்கொண்டால் ப்ரியமாகப்பேசுவாள். பதிவ்ரதைகளின் தர்மமுள்ளவளும் ஸாதுவுமான அவள் உயிரினும் மிக மேலானவள். எந்த மனிதனுக்கு அவ்விதமான பார்யையிருக்கிறாளோ அந்தமனிதன் உலகில் பாக்யம்பெற்றவன். ஸ்ரமமுள்ளவனும் பசியால் துன்பமுள்ளவனுமான என்னைத் தவமும் ஆசையும் உறுதியும் பக்தியும் ஸ்நேகமும் கீர்த்தியுமுள்ளவளான அவளன்றோ அறிவாள். மரத்தினடியிலும் எவனுக்குப் பார்யையிருக்கிறாளோ அவனுக்கு அதுவீடாகும். பார்யையில்லாதது மாடியாயிருந்தாலும் காடாகுமென்பது நிச்சயம். புருஷனுக்கு அறம் பொருள் இன்பங்களுக்குரிய காலங்களில் பார்யைஸஹாயமாகஇருப்பாள். இவன் வேறு தேசத்திற்குச் செல்லும்பொழுதும் அவள்தான் நம்பிக்கையை உண்டுபண்ணுகிறவள். இவ்வுலகில் புருஷனுக்குப் பார்யையென்பவள்தான் உத்தமமானபொருளென்று கூறப்படுகிறாள்; ஸஹாயமில்லாதமனிதனுக்கு இவ்வுலகில் உலகநடைக்கு ஸஹாயமாக இருப்பாள்; துன்பத்தைஅடைந்தவனுக்கும் பிணியால் பீடிக்கப்பட்டவனுக்கும் எப்பொழுதும் ஸஹாயமாக இருப்பாள். துன்பமுள்ளமனிதனுக்குப் பார்யைக்கொப்பான மித்திரனில்லை; பார்யைக்கொப்பான மருந்தில்லை; பார்யைக்கொப்பான பந்துவில்லை; பார்யைக்கொப்பான கதியில்லை. உலகத்தில் தர்மங்களைச் சேர்க்கும்விஷயத்தில் பார்யைக்கொப்பான ஸஹாயமில்லை. எவனுடையவீட்டில் ஸாத்வியும் பிரியத்தைப் பேசுகிறவளுமான பார்யையில்லையோ அவன் அரண்யஞ்செல்லவேண்டும். அரண்யம் எவ்விதமோ அவ்விதம் அவன்வீடு' என்று புலம்பிற்று.

இவ்விதம் புலம்புகிறதும் துன்பமுள்ளதுமான அந்தப் பக்ஷியின் வசனத்தை அப்பொழுது வேடனால் பிடிக்கப்பட்ட பெண்புறுவானது

கேட்டு, 'அந்தோ! என்னுடைய பிரியமுள்ள பதியானவர், இல்லாதவைகளோ இருப்பவைகளோ இவ்விதமான குணங்களைச் சொல்லுகிறார்; ஆதலால், நான் மிகவும் நல்ல பாக்கியம் பெற்றவள். [1] எந்த ஸ்திரீயின்பதி ஸந்தோஷமுள்ளவனாயிருக்கிறானோ அவளன்றோ ஸ்திரீயென்று அறியத்தக்கவள். பதி ஸந்தோஷமுள்ளவனால், ஸ்திரீகளுக்கு எல்லாத்தேவதைகளும் ஸந்தோஷமுள்ளவர்களாகிறார்கள். ஸ்திரீகளுக்குப் பதியன்றோ பெரிய சரணமாகிறான். இஃது அக்நியை ஸாக்ஷியாகக்கொண்டதுமாகும். எந்தஸ்திரீயின்பதி ஸந்தோஷமடையவில்லையோ அவள் கூட்டுத்தீயால் எரிக்கப் பட்டதும் பூங்கொத்துடன் கூடியதுமான கொடிபோலச் சாம்பலாகிறாள்' என்று சிந்தித்துக்கொண்டு துக்கத்தால் துன்பப்படும் பெண்புறுவானது, வேடனால் பிடிக்கப்பட்டிருந்தாலும், அப்பொழுது, தக்கப்படும் பதியைநோக்கி வார்த்தை சொல்லத்தொடங்கிற்று. 'காந்தனே! இப்பொழுது உனக்கு க்ஷேமத்தைச் சொல்லுகிறேன். அதைக்கேட்டு அவ்விதஞ்செய். விசேஷமாகச் சரணமென்றுவந்தவர்களை ரக்ஷி. இதோ பறவைபிடிக்கும்வேடன் உன்னிடத்திற்கு வந்து குளிராலும் பசியாலும் துன்பத்துடன் படுத்திருக்கிறான். இவன்பொருட்டுப் பூஜைசெய். பிராம்மணனைக் கொல்லுகிறவனுக்கும் உலகத்திற்கு மாதாவான பசுவைக்கொல்லுகிறவனுக்கும் சரணமென்று வந்தவனைக் கொல்லுகிறவனுக்கும் பாதகம் ஸமானமாகும். ஜாதிபின் தர்மப்படி புருக்களுக்குள்ள பிழைப்பு நமக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. உன்னைப்போன்றபுத்தியுள்ளவன் எப்பொழுதும் அதை அனுஸரிக்கவேண்டியது நியாயமாகும். கிருஹஸ்தனுயிருக்கும் எவன் சக்திக்குத்தக்கபடி தர்மத்தை அனுஸரித்திருக்கிறானோ அவன், இறந்தபின் அழிவில்லாத உலகங்களையடைகிறானென்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஓ! பக்ஷியே! அப்படிப்பட்ட நீ இப்பொழுது புத்ரனுள்ளவனும் பரம்பரையுள்ளவனுமாயிருக்கிறாய். நீ உன்சரீரத்தில் கருணையைத்தள்ளிவிட்டு அறம்பொருள்களைப்பற்றிக்கொண்டு, இந்த மனிதனுடைய மனம் எவ்விதம் ஸந்தோஷப்படுமோ அவ்விதம் இவன்பொருட்டுப் பூஜைசெய். ஓ! பக்ஷியே! நீ சரீரத்துக்குவேண்டி (என்விஷயமாக)த் தாபத்தையடையாதே. சரீரம் நடைபெறத்தக்க ஜீவனத்திற்குவேண்டி வேறு தாரங்களை அடைவாய்' என்று சொல்லிற்று. இவ்விதம் கூட்டிலிருப்பதும் தவழுள்ளதும் மிகவும் துக்கத்துடன்கூடியதுமான அந்தப் பெண்பக்ஷியானது வார்த்தையைச் சொல்லிவிட்டுத் தலையைத்தூக்கிப் பதியை நன்றாகப்பார்த்தது.

---

1 'எவளிடத்தில் பர்த்தா சந்தோஷமடையவில்லையோ அவள் ஸ்த்ரீயென்று அறியத்தக்கவளல்லள்' என்பது வேறுபாடம்.

நூற்றுநாற்பத்தைந்தாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(வேடனையும் புறவையும்பற்றிய கதைத்தொடர்ச்சி.)

தர்மத்துடனும்யுக்தியுடனும்கூடியதான மனுவியின்வசனத்தைக்கேட்டு, அந்தப்புறுவானது, பெரிய ஸந்தோஷத்துடன்கூடியதும் பரபரப்புள்ள கண்களுள்ளதுமாய் அந்தப் பறவைவேடனைக் கண்டு, பக்ஷிகளைக்கொண்டு பிழைக்கும் அவனை விதியில் காணப்படும் கர்மத்தால் முயற்சியுடன் பூஜித்தது. அந்தப்பக்ஷியானது ஒருவாக்கியத்தைச் சொல்லத் தொடங்கிற்று. 'இப்பொழுது உனக்கு நல்லவரவா? உனக்கு நான் என்ன செய்யவேண்டும்! சொல். நீ தாபத்தை அடையவேண்டாம். நீ உன் வீட்டிலிருக்கிறாய். ஆகையால், நீ சீக்கிரம் சொல்லு. நான் என்னசெய்யவேண்டும்? நீ எதை விரும்புகிறாய்? ஸ்நேஹத்துடன் உன்னைக் கேட்கிறேன். நீ எங்களிடம் சரணமென்று வந்தவனன்றோ? வீட்டிற்கு வந்தவன் சத்ருவானாலும் ஆதித்யஞ் செய்யவேண்டுவது நியாயம். மரமானது வெட்டுவதற்காகவந்த மனிதனிடத்திலும் நிழலைக் குறையச்செய்கிறதில்லை. [1] ஐந்துயஜ்ஞங்களையும் செய்யும் கிருஹஸ்தனுயிருப்பவன் சரணமென்று வந்தவனுக்கு விசேஷ முயற்சியுடன் ஆதித்யத்தைச் செய்யவேண்டுமன்றோ? கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கும் எவன் அவிவேகத்தால் ஐந்துயஜ்ஞங்களையும் செய்யாமலிருக்கிறானோ அவனுக்குத் தர்மப்படி இவ்வுலகமும் மேலுலகமுமில்லை. ஆகையால், நல்ல நம்பிக்கையுள்ளவனுகி என்னிடஞ் சொல். நீ வாயினால் எதைச்சொல்லுகிறாயோ அதையெல்லாம் நான் செய்கிறேன். நீ சோகத்தில் மனத்தைச் செலுத்தாதே' என்று சொல்லிற்று. அந்தப்பக்ஷியின் அவ்வசனத்தைக்கேட்டு, வேடன், 'என்னைக் குளிரானது வருத்துகிறது. ரக்ஷணையைச் செய்யவேண்டும்' என்று சொன்னான். பிறகு, இவ்விதஞ் சொல்லப்பட்ட பக்ஷியானது காய்ந்த இலைகளைப் பூதலத்தில் முயற்சியுடன் பரப்பித் தீயைவேண்டி வேகமாகச் சென்றது. அது கம்மாளன் வீட்டினருகிற் சென்று தீயை எடுத்துக்கொண்டு உடனே வந்தது. பிறகு, அந்தப் பக்ஷியானது காய்ந்தஇலைகளில் தீயை ப்ரகாசிக்கும்படி செய்தது. அந்தப்புறு அந்தத் தீயை நன்றுகஜ்வலிக்கும்படி மூட்டியபின் சரணுகதனை அந்த வேடனைநோக்கி, 'ஒருவிதப்பயமுமின்றி நல்லநம்பிக்கையுள்ளவனுக உன் அங்கங்களைக் காய்ச்சிக்கொள்' என்று சொல்லிற்று.

---

[1] ஆதிபர்வம் 559-வது பக்கம் குறிப்பிற் காண்க.

அவ்விதஞ்சொல்லப்பட்ட அந்தவேடன், 'அப்படியே செய்கிறேன்' என்றுசொல்லிவிட்டு அங்கங்களைக் காய்ச்சிக்கொண்டான். பிறகு, தீயினால் திருப்பிவந்த உயிருள்ளவனும் பெரிய ஸந்தோஷத்துடன் கூடியவனும் பரபரப்புள்ள கண்ணுள்ளவனுமான வேடன் பக்ஷியை நோக்கிச் சொல்லத்தொடங்கினன். அந்தப் பக்ஷியைப்பார்த்து, 'விதியில்காணப்படும் கர்மப்படி உன்னால் கொடுக்கப்படும் ஆகாரத்தையும் அப்படியே விரும்புகிறேன். பசியானது என்னைப்பீடிக்கிறது' என்றுசொன்னன். அந்தப்பக்ஷியானது அவன் வார்த்தையை அங்கீகரித்துக்கொண்டு, 'உன்னுடையபசியை விலக்கத்தக்கதானசெல்வம் எனக்கில்லை வனத்திலிருக்கும் நாங்கள் ஒவ்வொருநாளும் உண்டாகிறதைக்கொண்டு ஜீவிக்கிறோம். கானகத்திலுள்ள ரிஷிகளைப்போல எங்களுக்கும் சேர்த்துவைக்குந் திரவியமில்லை' என்ற சொல்லைச்சொல்லிற்று; இவ்விதம் அந்த வேடனைப்பார்த்துச் சொன்னபின், அப்பொழுது நிறம்மாறிய முகமுள்ளதாயிற்று. பரதர்களிற் சிறந்தவனே! அப்பொழுது, அந்தப்பக்ஷியானது தன்னுடைய ஜீவனத்தை நிந்தித்துக்கொண்டு, எவ்விதஞ் செய்யக்கூடுமென்ற பெரிய சிந்தையுள்ளதாயிற்று. அந்தப் பக்ஷியானது ஒருமுகூர்த்தத்தில் ஞாபகமடைந்து பக்ஷிகளைக்கொல்லும் வேடனைநோக்கி, 'ஒருமுகூர்த்தம் பொறுத்துக்கொள்; உனக்குத் திருப்தி அடைவிக்கிறேன்' என்றுசொல்லிற்று. இவ்விதஞ் சொல்லிவிட்டுக் காய்ந்த இலைகளைக்கொண்டு அக்னியை நன்றாக ஜ்வலிக்கும்படி செய்து மிக்க ஸந்தோஷத்துடன்கூடிய புறு திரும்பவுஞ்சொல்லத் தொடங்கிற்று. 'ரிஷிகள், தேவர்கள், மஹாத்மாக்களான பித்ருக்கள் இவர்களிடமிருந்து, அதிதியைப் பூஜிப்பதில் பெரிய தர்மமுண்டென்று முந்தி என்னால் கேட்கப்பட்டிருக்கிறது. அழகிய நண்பனே! அனுக்ரஹஞ்செய். நான் உனக்கு ஸத்யமாக இதைச் சொல்லுகிறேன். அதிதியைப் பூஜிக்கும் விஷயத்தில் என்புத்தி உறுதியுள்ளதாகவே இருக்கிறது' என்றுசொல்லிற்று. இவ்விதஞ் சொன்னபின், ப்ரதிஜ்ஞை செய்துகொண்டதும் பெரிய புத்தியுள்ளதுமான அந்தப்பக்ஷியானது சிரிப்பதுபோல மூன்றுதடவை வலம் வந்து அந்த அக்னியில் ப்ரவேசித்தது. அக்னியின் நடுவில் ப்ரவேசித்த பக்ஷியைக்கண்டவுடன், வேடன், 'இது என்ன என்னால் செய்யப்பட்டது?' என்று மனத்தில் சிந்தை அடைந்தான். (பிறகு,) 'கஷ்டம்! குரூரனும் தன்கர்மத்தால் நிந்திக்கப்பட்டவனுமான எனக்கு மிகப்பெரிதும் கோரமுமான அதர்மம் வரும் என்பதில் ஸந்தேஹமில்லை' என்று அந்தவேடன், அவ்விதம்

அக்னியிற்சென்ற பக்ஷியைக்கண்டு தன் கர்மங்களை நிந்தித்துக் கொண்டு இப்படிப் பலவிதமாக மிகவும் புலம்பினன்.

நூற்றுநாற்பத்தாறுவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(வேடனையும் புறவையும்பற்றிய கதைத்தொடர்ச்சி.)

பிறகு, அந்தவேடன், பசியால் துன்பப்பட்டிருந்தும், அக்னியில் விழுந்தபுறவைக்கண்டு திரும்பவும் சொல்லத்தொடங்கினன்.

'புத்தியில்லாதவனும் குரூரனுமான என்னால் இவ்விதம் என்ன காரியஞ்செய்யப்பட்டது? பூமியில் உயிரோடிருக்கும் எனக்கு எப்பொழுதும் பாதகமே உண்டாகும்' என்று அந்த வேடன் திரும்பவும் திரும்பவும் தன்னை நிந்தித்துக்கொண்டு சொன்னன். 'மிகவும் கெட்ட புத்தியுள்ளவனும் எப்பொழுதும் ஹிம்ஸிப்பதில் உறுதியுள்ளவனுமான என்னை நிந்திக்கவேண்டும். சுபமான கர்மத்தைத் தள்ளிவிட்டு நான் பறவைகளைப் பிடிக்கும் வேடனேன். மஹாத்மாவும் தன்னுடைய மாம்ஸத்தை எரிக்கிறதுமான புறவினால் குரூரனான எனக்கு இப்பொழுது நிந்தனையை முன்னிட்டு இந்த ஓர் உபதேசம் செய்யப்பட்டதென்பதில் ஸந்தேஹமில்லை. நான் புத்திரர்களையும் தாரங்களையும் தள்ளிவிட்டுப் பிரியமான உயிரையும்விடுவேன். இவ்விஷயத்தில் தர்மமுள்ள புறவினால் எனக்குத் தர்மம் உபதேசிக்கப் பட்டிருக்கிறதன்றோ? இதுமுதல் எல்லாப்போகங்களையும் விட்டுவிலக்கி என்சரீரத்தைக் கோடைக் காலத்திலுள்ள மிகச்சிறிய குளத்தைப்போல நான் சோஷிக்கச்செய்வேன். பசியையும் தாகத்தையும் வெயிலையும் பொறுப்பவனும் நரம்புகளால் சுற்றப்பட்டவனும் இளைத்தவனுமாகப் பலவித உபவாஸங்களுடன் பரலோகத்திற்குரிய தர்மத்தைச்செய்வேன். அந்தோ! அதிதிகளின் பூஜை சரீரத்தை அளித்துக் காண்பிக்கப்பட்டது. ஆகையால், தர்மத்தைச்செய்வேன். தர்மமுள்ள உத்தம பக்ஷியினிடம் எவ்விதத்தர்மம் காணப்பட்டதோ அவ்விதத்தர்மமன்றோ உத்தமமான கதியாகும்' என்று சொன்னன். இவ்விதஞ்சொன்ன பின், நிச்சயஞ்செய்துகொண்டு குரூரமான செய்கையுள்ள அந்தவேடன் 1 மஹாப்ரஸ்தானத்தை அடைந்து மிக்ககடுமையான வ்ரதத்துடன்

---

1 மரணத்தை அடையவேண்டி வடக்குநோக்கிச் செய்யப்படும் ஒருவிதப் பெரிய யாத்திரை.

செல்லத்தொடங்கினன். உடனே, அந்தவேடன் தடியையும் சலாகையையும் பறவைகளை எடுக்கும் பெட்டியையும் தள்ளினன். அதில் கட்டுப்பட்டிருக்கும் அந்தப்பெண்புறாவையும் அதிலிருந்து எடுத்துவிட்டுவிட்டான்.

நூற்றுநாற்பத்தேழாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(வேடனையும் புறாவையும்பற்றிய கதைத்தொடர்ச்சி.)

பிறகு, வேடன் சென்றதும், அந்தப்பெண்புறாவும் கணவனை நினைத்துத் துயரமுற்றுச் சோகத்தால்வாடி அழுதுகொண்டு சொல்லத் தொடங்கிற்று.

'நாதனே! ஒருபொழுதும் உனக்கு அப்ரியத்தை நான் நினைக்கவில்லையே. பலபுத்திரர்களுள்ளவர்களாலும் பதியை இழந்த ஸ்திரீகளெல்லாரும் சோகமடைவார்கள். பதியையிழந்து துக்கப்படும்ஸ்திரீ பந்துக்களுக்கும் வ்யஸனிக்கத்தக்கவளாகிறாள். நான் உன்னால் அன்புபாராட்டப்பட்டவளும் எப்பொழுதும் வெகுமானத்துடன் இனியவைகளும் ஸ்நேஹமுள்ளவைகளும் குரூரமின்றி அழகுள்ளவைகளுமான வசனங்களால் பூஜிக்கப்பட்டவளுமாகிறேன். மலைகளின் குகைகளிலும் ஆறுகளிலும் பிரவாஹங்களிலும் அழகானமரத்தின் நுனிகளிலும் நான் உன்னுடன் கூடி விளையாடிக்கொண்டிருந்தேன். ஆகாயத்தில்போகும்காலத்திலும் நான் உன்னுடன் ஸுகமாக விளையாடிக்கொண்டிருந்தேன். காந்தனே! முந்தி விளையாடிக்கொண்டிருந்தேன். என் பிரியமானவனே! அஃது இப்பொழுது எனக்கில்லை. தகப்பன் அளவுள்ளதை அளிப்பான். உடன்பிறந்தவனும் புத்திரனும் அளவுள்ளதை அளிப்பார்கள். அளவில்லாததை அளிக்கும் பதியை எவள் பூஜியாமலிருப்பாள்? பதிக்குச்சரியான நாதனில்லை. பதிக்குச்சரியான ஸுகமில்லை. ஸ்திரீக்குப் பொருள் எல்லாவற்றையுங்காட்டிலும் பதியே கதியாவான். என்நாதனே! நீ இல்லாமல் இவ்வுலகில் உயிரால் எனக்குப் பயனில்லை. பதிவ்ரதையான எந்தஸ்திரீ பதியையிழந்தபின் உயிரோடிருக்கஉத்ஸாஹப்படுவாள்?' என்று சொல்லிற்று. இவ்விதம் பலவாறுதீனமாகப்புலம்பி மிக்க துக்கமுள்ளதும் பதிவ்ரதையுமான அந்தப் பெண்புறுவானது நன்றாக ஜ்வலிக்கும் அக்னியில் ப்ரவேசித்தது. பிறகு, விசித்திரமான தேர்வந்து அணிந்ததும், விமானத்திலிருப்பதும், மஹாத்மாக்களான புண்ணியசாலிகளால் பூஜிக்கப்படுகிற

தும், ஆச்சரியமான மாலைகளையும் ஆடைகளையுந் தரித்ததும், எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும், நூறுகோடி விமானங்களுடன் புண்யமான கர்மங்களைச் செய்தவர்களால் சூழப்பட்டதுமான தன்பதியை அந்தப்பெண்புரு அடைந்தது. பிறகு, அந்தப்பக்ஷியானது சிறந்த விமானத்தை அடைந்து ஸ்வர்க்கஞ்சென்று அவ்விடத்தில் தன் கர்மத்தால் பூஜிக்கப்பட்டுப் பார்யையுடன்கூட ஸுகித்துக்கொண்டிருந்தது.

நூற்றுநாற்பத்தெட்டாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(வேடனையும் புறவையும்பற்றிய கதைத்தொடர்ச்சி.)

அரசனே! வேடன் விமானத்திலிருக்கும் அவ்விரண்டுபக்ஷிகளையும் ஆகாயத்திற்கண்டான். அரசனே! அந்தத்தம்பதிகளைக் கண்டு, 'எவ்விதத்தவத்தால் உத்தமமானகதியை அடைவேன்?' என்று அவைகளின் அந்தக்கதியைச் சிந்தித்தான். இவ்விதம் புத்தியில் நிச்சயித்துக்கொண்டு, பக்ஷிகளால் பிழைக்கும் வேடன், செய்கையற்றவனும் காற்றை உணவாகக் கொண்டவனும் அபிமானமில்லாதவனுமாக ஸ்வர்க்கத்தை விரும்பிக்கொண்டு மஹாப்ரஸ்தானத்தை அடைந்து செல்லத்தொடங்கினன்.

பிறகு, மிகப்பெரியதும் அழகுள்ளதும் தாமரைமலர்களால் அலங்கரிக்கப்பட்டதும் பலவிதப் பறவைக் கூட்டங்களால் சூழப்பட்டதும் குளிர்ந்த ஜலமுள்ளதும் மங்களகரமுமான குளத்தைக் கண்டான். நீரை உண்ணும் விருப்பமுள்ளவன் அந்தக் குளத்தைக் கண்டவுடன் திருப்தியுள்ளவனுவா னென்பதில் ஸந்தேஹமில்லை. அரசனே! உபவாஸங்களால் மிகவும் மெலிந்த அந்த வேடனை தைரியமுள்ளவனுக அதனருகிற்சென்று கொடிய மிருகங்கள் வாஸஞ்செய்யும் வனத்தில் பெரிய உறுதி செய்துகொண்டு பிரவேசித்தான். வனத்தில் பிரவேசிக்கும்பொழுதே அந்த வேடன் முட்களால் பீடிக்கப்பட்டான். முட்களால் பிளக்கப்பட்ட அங்கமுள்ளவனும் உதிரங்களால்நனைந்த வர்ணமுள்ளவனுமான அந்தவேடன் ஜனங்களில்லாததும் பலமிருகங்களால் நிறைந்ததுமான அந்த வனத்தில் சுற்றினன். பிறகு, அப்பொழுது காற்றினால் அரண்யத்திலுள்ள பெரியமரங்கள் ஒன்றோடொன்று உரைந்துகொண்டதனால் மிகப்பெரியதீயானது கிளம்பிற்று. ஜ்வலிப்பதும் பிரளயகாலத்தில் அக்கினிக்குச் சரியான காந்தியுள்ளதுமான அந்தத்தீயானது மரங்கள்நிறைந்ததும் கொடிகளா

லும் கிளைகளாலும் நெருங்கியதுமான அந்த வனத்தைஎரிக்கத் தொடங்கிற்று. அந்தத்தீயானது ஜ்வாலைகளாலும் நான்குபுறத் திலும் காற்றினால் ஓடிய நெருப்புப்பொறிகளாலும் மிருகங்களும் பக்ஷிகளும் நிறைந்த கோரமான அவ்வரண்யத்தை எரித்தது. பிறகு, அந்தவேடன் சரீரத்தைவிடவேண்டி மிக்க சந்தோஷ முள்ளமனத்துடன் அப்பொழுது வளர்ந்ததீயை எதிர்த்து ஓடி னான். பரதர்களில் மிகச்சிறந்தவனே! பிறகு, வேடன் அந்தத் தீயால் எரிக்கப்பட்டுப் பாபங்கள் நாசமடைந்தவனாகி உடனே பெரிய ஸித்தியைப் பெற்றான். பிறகு, தன்பத்தைவிட்டு ஸ்வர்க் கத்திலிருப்பவனும், யக்ஷர்கள் கந்தர்வர்கள் ஸித்தர்கள் இவர்க ளின்நடுவில் இந்திரனைப்போல விளங்குகிறவனுமாகத் தன்னைக் கண்டான். இவ்விதம், புண்யகர்மத்தால் ஆண்புருவும் பதிவ்ரதை யான பெண்புருவும் வேடனும் ஸ்வர்க்கமடைந்தார்கள். இவ் விதமே, வேறுஎந்தஸ்திரீ பதியை அனுசரித்திருக்கிறாளோ அவ ளும் சீக்கிரமாகப் பெண்புருவைப்போலத் தேவலோகத்திலிருந்து கொண்டு விளங்குவாள். மஹாத்மாவான வேடனுக்கும் புருவுக்கும் புண்யகர்மத்தால் தர்மத்திற்குரிய நற்கதியுண்டாயிற்றென்று இப் பழையகதை இவ்விதமாயிருக்கிறது. இக்கதையை எப்பொழுதும் கேட்கிறவனுக்கும் இக்கதையை எப்பொழுதும் சொல்லுகிறவ னுக்கும் அஜாக்ரதையாலும் மனத்தாலும் அசுபமுண்டாகிற தில்லை. தர்மத்தைப் பரிப்பவர்களுள் சிறந்த யுதிஷ்டிர! இது பெரியதர்மம். இவ்வுலகில் பசுவைக் கொன்றவர்களின் பாபகர் மத்திற்குப் பிராயச்சித்தமுண்டு. எவன் சரணமென்று வந்த வனைக் கொல்லுகிறானோ அவனுக்குப் பிராயச்சித்தமில்லை. பாபங் களை நசிக்கச்செய்வதும் புண்யமுமான இவ்விதிஹாஸத்தைக் கேட்பவன் கெட்டகதியை அடையமாட்டான்; ஸ்வர்க்கலோகத் தையும் அடைவான்" என்று சொன்னர்.

நூற்றுநாற்பத்தொன்பதாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அறியாமற்செய்யப்பட்ட பாபநிவிருத்திவிஷயமாக ஜனமேஜயனுடைய சரித்திரத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பரதர்களில் மிகச்சிறந்தவரே! மூந்தி அறியா மல் எவன் எந்தப்பாபத்தைச் செய்கிறானோ அவன் அந்தப் பா பத்திலிருந்து எவ்விதம்விடுபடுவான்? அதனை எனக்கு உபதே சிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"இந்த விஷயத்தில் சௌனககோத்திரத்திலுதித்த இந்த்ரோதரென்னும் பிராம்மணர் ஜனமேஜயராஜனைப்பற்றிச் சொல்லியதும் ரிஷிகளால் புகழப்பட்டதுமான பழையகதையை உனக்குச் சொல்லுகிறேன். மிக்கவீர்யம்பெற்றவனும் பரிக்ஷித்தின் குமாரனுமான [1] ஜனமேஜயனென்னும் ஓர் அரசனிருந்தான். அறியாமையாலுண்டான பிரம்மஹத்தியானது அந்த அரசனை அடைந்தது. புரோஹிதருடன் கூடின பிராம்மணர்களனைவர்களுமே அந்த அரசனைத் தள்ளிவிட்டார்கள். அந்த அரசன் இரவும்பகலும் தஹிக்கப்படுகிறவனாகி அரண்யஞ்சென்றான். பிரஜைகளால் விலக்கப்பட்ட அவ்வரசன் பெரிதான நல்லகாரியங்களைச் செய்யத் தொடங்கினான். அவன் சோகத்தால் தஹிக்கப்பட்டு மிகப்பெரியதவத்தைச்செய்தான். அந்த அரசன் பிரம்மஹத்தியை விலக்கிக்கொள்ளவேண்டிப் பூமிமுழுமையும் சுற்றிக்கொண்டு ஒவ்வொரு தேசத்திலுமுள்ள பலப்ராம்மணர்களை ப்ரஸன்னஞ்செய்தான். இந்தத்தர்மத்தை வெளியிடத்தக்க அந்தவிஷயத்திலுள்ள இதிஹாஸத்தைச் சொல்லுகிறேன். பாபகாரியத்தால் கொளுத்தப்படும் ஜனமேஜயன், (பிராயச்சித்தத்தைச்) செய்துகொள்ளவேண்டி, மிக்ககடுமையான வ்ரதமுள்ளவரும் சௌனககோத்திரத்தில் பிறந்தவருமான இந்த்ரோதரிடஞ்சென்றான். அருகிற்சென்று (அவரைத்) தண்டப்படுத்துகிறவனாகிக் கால்களில் தொட்டுப் பிடித்துக்கொண்டான். பிறகு, பயந்தவரும் அறிவுள்ளவர்களிற் பெரியவருமான இந்த்ரோதர் அப்பொழுது மிகவும் நிந்திக்கத்தொடங்கினர்.

'பெரிய பாபத்தைச்செய்தவனும் [2] ப்ரூணஹத்திசெய்தவனுமான நீ ஏன் இங்குவந்தாய்? உனக்கு எங்களிடத்தில் என்ன காரியமிருக்கிறது? எவ்விதத்திலும் என்னை நீ பார்க்கவேண்டாம்; போ; போ. உன்னுடையஒழுக்கம் எங்களுக்கு விருப்பமானதன்று. [3] உன்னுடைய மணம் உதிரத்தின் மணம்போலவும் உன்னைப் பார்ப்பது பிணத்தைப்பார்ப்பதுபோலவுமிருக்கின்றன. அசுபனை நீ சுபன்போலவும் செத்தவனை நீ ஜீவிக்கிறவன்போலவும் ஸஞ்சரிக்கிறாய். உள்ளே மிருத்யுஉள்ளவனும் அசுத்தமான புத்தியுள்ளவனும் பாபத்தையே சிந்திப்பவனுமான நீ விழித்துக்கொண்டிருக்கிறாய்; தூங்குகிறாய்; பெரிய ஸுகத்திலிருக்கிறாய். அரசனே! உன்னுடைய உயிர் பயனற்றதாயிருக்கிறது. துன்பத்துடன் ஜீவிக்கிறாய். (முன்னுள்ள) வினையால்

---

1 இவன் வேறு. 2 சாந்திபர்வம், 43, 180, 944-வது பக்கங்களின் குறிப்பிற்காண்க. 3 இரண்டு சொற்கள் விடப்பட்டன.

கீழான பாபத்தின்பொருட்டே இவ்வுலகில் ஸ்ருஷ்டிக்கப்பட்டவ ணுகிறாய். தந்தைகள் பலமேகூமத்தை விரும்புகிறவர்களாய்த் தவத்தாலும் தேவபூஜைகளாலும் நமஸ்காரத்தாலும் பொறுமை யாலும் புத்திரர்களை அடைய விரும்புகிறார்கள். உன்னிமித்தமாக நாசமடைந்த இந்தப் பித்ருவம்சத்தைப் பார். உன்னை ஆஸ்ர யித்தவைகளான இவர்களின் உறுதியான ஆசைகள்யாவுமே பய னற்றவைகளாகின்றன. எந்த ப்ராம்மணர்களைப் பூஜிப்பவர்கள் ஸ்வர்க்கத்தையும் ஆயுளையும் கீர்த்தியையும் ப்ரஜைகளையும் அடைகிறார்களோ அவ்விதமான ப்ராம்மணர்களிடம் எப்பொழு தும் உனக்கு வீணை பகையிருக்கிறது. நீ இவ்வுலகைவிட்டுத் தலைகீழாக விழப்போகிறாய். பாபகர்மத்தால் நிலையற்றவையான பல வருஷங்கள் கூர்மையான பற்களுள்ளவைகளும் இரும்பு போன்ற மூகமுள்ளவைகளுமான பல ஜந்துக்களால் கடிக்கப்படு வாய். பிறகும், மறுபிறப்பை அடையும் நீ பாபஜன்மத்தை அடையப் போகிறாய். அரசனே! 'இவ்வுலகமில்லை; மேலுலக மேது?' என்று நீ நினைக்கிற விஷயத்தில் யமன் வீட்டிலுள்ள யம தூதர்கள் உனக்கு உத்தரம் அளிக்கப்போகிறார்கள்' என்று சொன்னார்.

நூற்றைம்பதாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(ஜனமேஜயன் சரித்திரத் தொடர்ச்சி.)

இவ்விதஞ் சொல்லப்பட்ட ஜனமேஜயன் அந்த ரிஷியை நோக்கி மறுமொழி சொல்லத்தொடங்கினன். 'இகழ்ச்சியாகப் பேசத்தக்க என்னை நீர் இகழ்ந்துபேசுகிறீர். நிந்திக்கத்தக்க என்னை நீர் நிந்திக்கிறீர். வெறுக்கத்தக்க என்னை நீர் வெறுக் கிறீர். ஆகையால், நான் உம்முடைய அனுக்ரஹத்தை வேண்டு கிறேன். என்னுடைய இந்தனத்தும் என்னுடைய செய்கை யாகும். தீயில் வைக்கப்பட்டதுபோல நான் தபிக்கிறேன். என் னுடைய கர்மங்களை நினைத்து என்மனம் ஸந்தோஷமடைய வில்லை. மிருத்யுவிலும் கோரமானபயம் நிச்சயமாக என்னால் அடையப்பட்டிருக்கிறது. அந்தச் சல்யத்தை விலக்கிக் கொள் ளாமல் எவ்விதம் நான் ஜீவிக்கத்தக்கவனாவேன்? ஓ! சௌன கரே! எல்லாக்கோபத்தையுந் தள்ளிவிட்டு நீர் எனக்கு அனுக்ர ஹஞ் செய்யவேண்டும். பிராம்மணர்களுக்குப் பெரிய பக்தனா யிருந்தேன். திரும்பவும் இப்பொழுது சொல்லுகிறேன். பிராம்

மணர்களுக்குரிய கதியை அடைந்து நான் திரும்பவும் பிரயோ ஜனமுள்ளவனுயிருக்கவேண்டும். இந்தக்குலத்தில் மிச்சமிருக்க வேண்டுகிறேன். இந்தக்குலமானது துன்பத்தை அடையாம லிருக்கவேண்டும். பிராம்மணர்களால் சபிக்கப்பட்டவர்களும் (பந்துஜனங்களுடன்) சேர்க்கையையும் ஸ்துதிகளையும் அடை யாதவர்களுமுள்ள எங்களுடையகுலம் மிச்சமிருக்கத் தகாத தாகுமே. வேதத்தில் நிச்சயத்தையடைந்த 1 உங்களிடம் என் னுடைய ஆத்மாவைவெறுத்துக்கொள்ளும் நான் திரும்பவும் இப் பொழுது சொல்லுகிறேன். தர்மமில்லாதவர்கள் ஜலமில்லாத வர்கள்போல மிகவும் (துன்பத்தில்) முழுகுவார்கள். யஜ்ஞமில் லாதவர்கள் எவ்விதத்திலும் மேலுலகத்தை அடையமாட்டார் கள். புளிந்தர்களென்னும் ஒருவகை மிலேச்சர்கள்போல அவர் கள் தலைகீழாக விழுவார்கள். ஓ! பிராம்மணரான சௌனகரே! சிறுவன்போன்ற என்னுடைய புத்தியைக் குற்றமுள்ளதாக நினை யாமலே மிக்கபண்டிதரான நீர் தகப்பன் மகனிடமிருப்பது போலப் பிரீதியுள்ளவராயிருக்க வேண்டுகிறேன்' என்றுசொன் னன்.

சௌனகர் சொல்லத் தொடங்கினர். 'அறிவிற்சிறந்த 2 பிராம்மணனும் (கோபமடைந்தால்) அயுக்தமான காரியத்தை யும் செய்வான். இதில் என்ன ஆச்சர்யம்? ஆகையால், இவ்வித மான விவேகமுள்ளவனுயிருந்து எவன் பிராணிகள் விஷயத்தில் 3 கோபமடைவான்? பிரஜ்ஞையென்னும் மாடியிலேறிச் சோகப் படத்தகாத மனிதன் ஜனங்களைப்பற்றிச் சோகமடைவான்; மலையிலிருப்பவன் பூமியிலிருப்பவர்களைப்போலப் பிரஜ்ஞையால் அறிவான். எல்லாஸாதுக்களிடத்திலும் வெறுப்புற்ற மனமுள்ள வனும் அவர்களைவிட்டு விலகியிருப்பவனும் அவர்களால் நிந்திக் கப்பட்டவனுமாயிருக்கும் ஒருவனும் அறிவை அடையமாட் டான்; ஆச்சர்யங்களையும் காணமாட்டான். உன்னுடைய வீர் யத்தையும் வேதத்திற்குள்ள மஹிமையையும் அறிந்துகொண்டு நடந்துகொள். பிராம்மணன் உன்னுடைய பொறுமைக்குத் தக்கப்படி ரக்ஷகனுயிருக்கட்டும். அப்பா! கோபமில்லாத பிராம் மணர்களின் செய்கை எதுவோ அதுதான் 4 பரலோகத்திற்குரிய தாகும். அல்லது, தர்மத்தைக் கவனித்துப் பார்ப்பாயாகில், பாப விஷயத்தில் வருத்தமுள்ளவனுயிரு' என்றுசொன்னர். ஜனமேஜயன், 'பாபத்தைப்பற்றி மனவருத்தமுள்ளவனுயிருக் கிறேன். நான் அதர்மத்தையும் செய்யாமலிருக்கிறேன். அடித்

1, 2, 3, 4 ஸ்வறுபாடம்.

தவனை ரக்ஷிக்க விரும்பவேண்டும். ஓ! சௌனகரே! பிரிய முள்ளவராயிரும்' என்று சொன்னன்.

சௌனகர் சொல்லத்தொடங்கினர்: '(உன்னுடைய) டம்பத்தையும் அபிமானத்தையும் அறுத்துவிட்டு (அதனாலுண்டாகும்) உன்பிரியத்தை விரும்புகிறேன். அரசனே! தர்மத்தை நினைத்துக்கொண்டு எல்லாப் பிராணிகளுக்கும் ஹிதமான காரியத்திலிரு; பயத்தாலும் தீனத்தனத்தாலும் லோபத்தாலும் நான் உன்னைச் சிஷ்யனாக அழைக்கவில்லை. நீ பிராம்மணர்களுடன் தெய்வத்தினுடையதும் உண்மையுள்ளதுமான என்னுடையவசனத்தைக்கேள். அந்த நான் ஒன்றையும் விரும்புகிறவனல்லன். ஆ! ஆ! (பாபியைச் சேர்த்துக்கொண்ட சௌனகர்) நிந்திக்கத்தக்கவரென்று பேசிக் கூச்சலிடும் எல்லாப்பிராணிகளையும் அலக்ஷியம் செய்துவிட்டுத் தர்மத்திற்காக உன்னைச் சிஷ்யனாக்கிக்கொள்ளுகிறேன். என்னைத் தர்மமறியாதவனென்று சொல்லுவார்கள். ஸ்நேஹஹிதர்களான ஜனங்கள் என்னை விலக்குவார்கள். அவ்விதவார்த்தைகளைக்கேட்டு ஸ்நேஹஹிதர்கள் 1 என்னிடத்தில் மிகவும் தாபமடைவார்கள். அறிவுள்ளவர்களிற் சிறந்தவர்களான சிலர் மட்டில் 'செய்யத்தக்கது' என்று அங்கீகரிப்பார்கள். அப்பா! பாரத! என்னால் செய்யப்பட்டதை ப்ராம்மணர்களிடம்சென்று தெரிந்துகொள். அவர்கள் மரியாதைபெற்று எவ்விதம் க்ஷேமமடைவார்களோ அவ்விதம் நீசெய். அரசனே! பிராம்மணர்களுக்குத் துன்பம்செய்யாமலிருப்பதை ப்ரதிஜ்ஞைசெய்' என்று சொன்னர். ஜனமேஜயன், 'பிராம்மணரே! வாக்காலும் மனத்தாலும் செய்கையாலும் இனி ஒருஸமயமும் பிராம்மணர்களை நான் துன்பப்படுத்துகிறதில்லை. உமது கால்களையே தொட்டுச் சொல்லுகிறேன்' என்றுசொன்னன்.

நூற்றைம்பத்தோராவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(ஜனமேஜயன்சரித்திரத் தொடர்ச்சி.)

சௌனகர் சொல்லத்தொடங்கினர். 'ஸம்பத்துள்ளவனும் பெரிய பலமுள்ளவனும் ஸந்தோஷமுள்ளவனுமான நீ தானுகத் தர்மத்தைப்பார்க்கிறாய். ஆகையால், மறைக்கப்பட்ட புத்தியுள்ள உன்பொருட்டு நான் தர்மத்தைச்சொல்லுகிறேன். அரசன் முதலில் குரூரனையிருந்து பின் பிராணிகளைத் தன்னடக்கையால்

---

1 வேறுபாடம்

அனுக்ரஹஞ் செய்கிறனென்பது மிகப்பெரிய ஆச்சரியமே. எல்லாம் நல்லதும் கெட்டதுமாயிருப்பது நிச்சயமென்று உலகமானது தெரிந்துகொள்ளும். எந்த இடத்தில் நீ அவ்விதமாயிருந்துவிட்டுத் திரும்பவும் கர்வத்தையும் போகங்களையும் தள்ளிவிட்டுத் தவத்தையடைந்து தர்மத்தையே பார்க்கிறயோ அந்த இடத்தில். அதர்மத்தால் துன்பப்படுத்தப்பட்டவர்களுக்கு இஃது ஆச்சர்யமாகும். ஜனமேஜய! 1 ஸம்பத்துள்ளவன் தாதாவாயிருப்பதும் க்ருபணன் தவத்தைப் பொருளாகக் கொண்டமுனியாயிருப்பதும் ஆச்சர்யமல்லவென்று சொல்லுகிறார்கள். அது ஸமீபத்திலிருக்கிறது. கார்ப்பண்யமென்பது 2 இதுதான். நன்றுக ஆலோசிக்கப்படாதவையெல்லாம் கார்ப்பண்யமாகும். அது நன்றுக ஆலோசனையுடனிருக்குமாகில் அதில் 3 அதலல் குணமுண்டாகும். அரசனே! யாகமும் தானமும் தயையும் வேதங்களும் ஸத்யவசனமுமாகிய இவ்வைந்தும் பரிசுத்தங்களாகும். நன்றுகச் செய்யப்படுந் தவமானது ஆறுவதாகும். ஜனமேஜய! அதுதான் அரசர்களுக்கு உத்தமமானபரிசுத்தியாகும். நன்றுகஅடைந்த அந்தத் தவத்தால் மிகச்சிறந்த தர்மத்தை அடைவாய். புண்யதீர்த்தத்திற்குச் செல்வது மிகவும் பரிசுத்தமென்று சொல்லப்படுகிறது. இவ்விஷயத்திலும் யயாதியால் பாடப்பட்ட இந்தக்காதையை உதாஹரிக்கிறார்கள்: 'எந்த மனிதன் 4 தான் ஜீவித்திருக்கத்தக்க ஆயுளை அடையக் கருதுகிறானோ அவன் 5 உறுதியாக யாகத்தைச் செய்தபின் அதை விலக்கிவிட்டுத் தவத்தைச்செய்யவேண்டும்' என்பது. குருக்ஷேத்திரத்தைப் புண்யமென்று சொல்லுகிறார்கள். குருக்ஷேத்திரத்தை விட ஸரஸ்வதியையும், ஸரஸ்வதியைவிட மற்றத்தீர்த்தங்களையும், (மற்றத்) தீர்த்தங்களைவிட ப்ருதூதகத்தையும் புண்ணியமென்று சொல்லுகிறார்கள். அந்த ப்ருதூதகத்தில் ஸ்நானஞ்செய்து 6 பானமுஞ்செய்த மனிதனை நாளைக்கு வரும் மரணமும் தபிக்கச்செய்யாது, திரும்பவும் ஜீவித்து ஆயுளை அடைந்திருப்பாயாகில், மஹாஸரஸ், புஷ்கரம், ப்ரபாஸம், உத்தரமானஸம், காலோதகம் என்ற தீர்த்தங்களையும் அடைவாய். ஸரஸ்வதியிலும் த்ருஷத்வதியிலும் ஸ்நானஞ்செய்யும் மனிதன் தாபமடைவானேன? இந்தத் தீர்த்தங்கள் யாவற்றிலும் வேதத்தைஜபிக்கும் சிலமுள்ளவனையிருந்துகொண்டு இவ்விதம் ஸ்நானஞ்செய்யவேண்டும். பரிசுத்தங்களுள், தானமென்றதர்மத்தைச் சிறந்ததென்றும் அதைவிடஸன்யாஸஞ் சிறந்ததென்றும் மனு சொன்னர். இவ்விஷயத்திலும் ஸத்யவான்

1, 2, 3, 4, 5, 6, வேறுபாடம்

என்ற முனியாலியற்றப்பட்ட இந்தக்காதைகளை உதாஹரிக்கிறார்கள். 'குழந்தையாயிருப்பவன் எவ்விதம் உண்மையாகவும் புண்யமில்லாதவனாகவும் பாபமில்லாதவனாகவுமிருக்கிறானோ அவ்விதம் இருக்கவேண்டும். எல்லாப்பிராணிகளிடத்திலுமுள்ள துக்கமானது இவனிடத்திலில்லை. ஸுகம் இவனிடத்திலேது?' என்பது. இவ்விதம் காரணவஸ்துவான ப்ரம்மத்தை அடைந்தவர்களும். எல்லாவிஷயங்களுடனும் ஸம்பந்தத்தை அடைந்தவர்களுமான தியாகிகளுக்குப் பெரும்பாலும் ஜீவனமும் புண்யபாபங்களும் விலகினவைகளாயிருக்கும். அரசனுடையகார்யங்களுள் எது மிகச்சிறந்ததோ அதைத்தான் உனக்கு உபதேசிக்கிறேன். பலத்தாலும் தனங்களாலும் ஸ்வர்க்கத்தை ஜயி; பரிசுத்தியையும் அடை. எவனுக்குப்பலமும் கருவிகளுள்ள சக்திகளுமிருக்கின்றனவோ அந்த மனிதனே தர்மத்திற்கு ப்ரபுவாவான். ப்ராம்மணர்களின் ஸுகத்திற்குவேண்டி நீ பூமியைச் சுற்றிக்கொண்டிரு. இவர்களை முந்தி எவ்விதம் நிந்தித்தாயோ அவ்விதமே இவர்களை அநுக்ரஹஞ்செய்யும்படி செய். இவர்களால் நிந்திக்கப்படுகிறவனையும் பலவிதமாக அதட்டப்படுகிறவனையும் தன்னைத் திருஷ்டாந்தமாக அறிந்துகொண்டு துன்பப்படுத்தாமலிருக்கிறேனென்ற எண்ணத்துடன் கோபமில்லாதவனாயிரு. ஸ்வகார்யங்களில் முயற்சியுள்ளவனாயிருந்துகொண்டு பெரியகூஷமத்தைச் செய்துகொள். ஓர் அரசன் பனிபோலக் குளிர்ச்சியுள்ளவனும் அக்னிபோலச் சூடுள்ளவனும் எமன்போலக் குற்றங்களையும் குணங்களையும் பகுத்தறிகிறவனுமாயிருப்பான். சத்துருக்களைத் தபிக்கச்செய்கிறவனே! மற்றொருவன் கலப்பைபோலத் துஷ்டர்களின் வேரை அறுப்பவனும் இடிபோல அவர்களிடம் திடீரென்று விழுகிறவனுமாயிருப்பான். 1 விசேஷபுத்தியுடனே பொதுவானபுத்தியுடனே துஷ்டர்களிடம் செல்லக்கூடாது. 'நான் இல்லாமற்போய்விடுவேன்' என்றபயத்துடன் ஒருஸமயத்திலும் துஷ்டர்களிடம்சேரக்கூடாது. பாபியானவன் கெட்டகாரியத்தைச் செய்தேனென்று மனவருத்தமடைந்தால் ஒருதடவை செய்த பாபத்திலிருந்து விடுதல் அடைகிறான். 'இதைத் திரும்பவும் செய்கிறதில்லை' என்ற நியமத்தால் இரண்டாவது பாபத்திலிருந்து விடுபடுகிறான். 'தர்மத்தைச்செய்கிறேன்' என்ற நியமத்தால் மூன்றுவது பாபத்திலிருந்து விடுபடுகிறான். பரிசுத்தனாகத் தீர்த்தங்களுக்குச் செல்வதால் பலமுறை செய்த பாபத்திலிருந்து விடுபடுகிறான். மேன்மையை விரும்பும் மனிதன் சுபத்தையே செய்யவேண்டும். எவர்கள் நல்ல வாஸனையுள்ளவைகளை

1 வேறுபாடம்.

டன் பழகுகிறார்களோ அவர்கள் அவ்வித வாஸனையுள்ளவர்களாகிறார்கள். எவர்கள் கெட்டமணமுள்ளவைகளோடு பழகுகிறார்களோ அவர்கள் அவ்விதமணமுள்ளவர்களாகிறார்கள். தவஞ்செய்கிறதைப் பெரிதாகக்கொண்டவன் உண்மையில் பாபத்திலிருந்து விடுபடுகிறான். அபவாதமடைந்தவன் ஒருவருஷம் அக்னியை உபாஸித்து (பாபத்திலிருந்து) விடுபடுகிறான். ப்ரூணஹத்தி செய்தவன் மூன்றுவருஷங்கள் அக்னியை உபாஸித்தபின் விடுதல் அடைகிறான். ப்ரூணஹத்திசெய்தவன் மஹாஸரஸ், புஷ்கரம், ப்ரபாஸம், உத்தரமானஸம் இவைகளுக்காக நூறு யோஜனஞ் செல்வதால் விடுதல்பெறுவான். பிராணிகளைக்கொன்றவன் எவ்வளவு பிராணிகளைக் கொன்றிருக்கிறானோ அந்த ஜாதியிலுள்ள அவ்வளவு பிராணிகளையும் நாசமடையுங்காலத்தில் விடுவிப்பதால் அந்தப்பாபத்திலிருந்து விடுபடுகிறான். அன்றியும், அகமர்ஷணமென்னும் மந்திரத்தை மூன்று தடவை ஜபித்துக்கொண்டு ஜலத்தில் முழுகவேண்டும். அஃது அச்வமேதத்தின் அவபிருதத்திற்கு ஒப்பானதென்று மனு கூறினர். அவன் வேகமாகப் பாவத்தை விலக்கிக்கொள்வான்; அப்படியே பூஜையையும் பெறுவான். அன்றியும், ஜடர்கள்போலவும் ஊமைகள்போலவும் பிராணிகள் இவனிடம் நல்லெண்ணமுள்ளவர்களாகின்றன. அரசனே! தேவர்ஷிகளனைவர்களும் தேவகுருவான பிருஹஸ்பதியிடம் வந்து, 'ரிஷிகளிற் சிறந்தவரே! காரணத்துடன் செய்யப்பட்ட தர்மத்தின்பயனையும் அதுபோல வேறுனபாபத்தின் பயனை நரகத்தையும் அறிகிறீர். எந்த மனிதனுக்குப் புண்யம் பாபம் இரண்டும் நன்றுகச் செய்யப்பட்டவைகளாகின்றனவோ அவனிடத்தில் அவ்விரண்டினுள்ளும் எது மற்றொன்றை வெல்லுவதிற் சிறந்ததாகும்? ரிஷிகளில்பெரியவரே! அவ்விதமான கர்மத்தின்பயனை நீர்சொல்லவேண்டும். தர்மத்தைச்செய்கிறவன் எப்படி பாபத்தை விலக்கிக்கொள்ளுகிறான்?' என்று கேட்டார்கள்.

பிருஹஸ்பதி சொல்லத்தொடங்கினர்: 'முதலில் அறியாமையால் பாபத்தைச்செய்துவிட்டுப் பிறகு அறிவை முன்னிட்டுப்புண்ணியங்களைச் செய்வானுகில் அவ்விதம் புண்ணிய காரியத்தைச் செய்யும் அந்தமனிதன் காரங்களைப்போட்டு அழுக்கான வஸ்திரத்தைச் சுத்திசெய்வதுபோல அந்தப்பாபத்தை விலக்கிச் சுத்திசெய்துகொள்வான். மனிதன் பாபத்தைச் செய்தபின் நான் செய்யவில்லையென்றே நினைக்கவேண்டும்; ப்ரத்தையுள்ளவனும் அஸூயையில்லாதவனுமாய்ச் சுபத்தைச் செய்யவிரும்பவேண்டும். எந்தப் புருஷன் பாபத்தைச் செய்தபின் சுபத்தைச்

செய்கிறுனே அவன், வஸ்திரத்திலுள்ள இடைவெளிகளை மறைப் பதுபோல நல்ல கர்மத்தால் பாபங்களை மறைத்துக்கொள்ளுகி ருன். திரும்பவும், உதயமடைந்தஸூர்யன் இருளையெல்லாம்விலக் குவதுபோலச் சுபத்தைச்செய்யும்புருஷன் எல்லாப்பாபத்தையும் விலக்கிக்கொள்ளுகிறுன்' என்றுசொன்னர்' என்றூர். இந்த்ரோத ரென்னும் சௌனகர் ஜனமேஜயராஜனுக்கு இவ்விதஞ் சொல்லி விட்டு விதிப்படி அச்வமேதயாகத்தைச் செய்வித்தார். அதனல் பாபங்கள் விலகியவனும் அழகான சோபையுடன்கூடி விளங்கு கிறவனும் பகைவர்களைக் குறைக்கிறவனுமான அந்த ஜனமேஜய ராஜன் நிறைந்த உருவமுள்ள சந்திரன் ஆகாயத்தை அடைவது போலத் தன் ராஜ்யத்தை அடைந்தான்" என்றுசொன்னர்.

நூற்றைம்பத்திரண்டாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், வைதிசமென்னும் நகரத்தில் இறந்த குழந்தை பிழைத்த கதையைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "அரசரே! மரணமடைந்தமனிதன் திரும்பவும் உயிருள்ளவனனென்பது உண்டோ? இது பிதாமஹரால் காணப்பட்டதாவது கேட்கப்பட்டதாவது உண்டோ?" என்று கேட்க; பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஏ! பார்த்த! வைதிசமென்னும் நகரத்தில் நடந்ததும் கழுகு நரிகளைச்சேர்ந்த ஸம்பாஷணையுமான பழைய இதிஹா ஸத்தை நடந்தபடி கேள். ஒருபிராம்மணனுக்குக் கஷ்டப்பட்டுக் கிடைத்தவனும் நீண்டகண்ணுள்ளவனுமான ஒருபுத்திரன் பால கனயிருக்கும்பொழுதே பாலக்ரஹங்களால்பீடிக்கப்பட்டு மரண மடைந்தான். குலத்திற்குள்ள எல்லாப்பொருளும் போன்றவ னும் யௌவனத்தை அடையாதவனுமான அந்தப்பாலகனைஎடுத் துச் சிலர், துக்கத்துடன் சோகத்தால் பீடிக்கப்பட்டு அழுது, பிறகு, மரித்த அப்பாலகனைத் தூக்கிக்கொண்டு மயானத்திற்கு எதிராகவந்து நின்றூர்கள். அவர்கள், அப்பாலகன் முன்சொல் லியசொற்களைத் திரும்பவும் திரும்பவும் நினைத்துச் சோகப்படு கிறவர்களும் மிக்கதுக்கமுள்ளவர்களுமாய் ஒருவரை ஒருவர் கட் டிக்கொண்டு அழுதார்கள். அவர்கள் அப்பாலகனைப் பூதலத்தில் போட்டுவிட்டுத் திரும்பிச்செல்லத் திறமையுள்ளவர்களாகவில்லை. அவர்களின் அழுகைக்குரலால் ஒருகழுகு அவ்விடத்தில் வந்து ஒருவசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று. 'பிரேதவடிவமான இக்குழந்தையைக் காலனிடத்தில் விட்டுவிட்டுச் செல்லுங்கள்;

தாமஸிக்கவேண்டாம். இவ்விடத்தில் புருஷர்களில் பலவாயிரர்களும் ஸ்திரீகளில் பலவாயிரர்களுமான காலனால் கொண்டுவரப்பட்டவர்களைத் தள்ளிவிட்டுப் பந்துக்கள் போகிறார்கள். உலகம் யாவும் ஸுகதுக்கங்களால் தொடரப்பட்டிருப்பதை நன்றாகப் பாருங்கள். சேர்க்கையும் பிரிவும் முறையே காணப்படுகின்றன. அந்த மரித்தவர்களை எடுத்துக்கொண்டு எவர்கள் செல்லுகிறார்களோ, எவர்கள் அவர்களைத் தொடர்ந்து செல்லுகிறார்களோ, அந்தமனிதர்களும் தமக்குள்ள ஆயுள் அளவுப்படியே செல்லுகிறார்கள். கழுகுகளாலும் நரிகளாலும் நிறைந்ததும் அதிகமான எலும்புகளுள்ளதும் கோரமுள்ளதும் எல்லாப்பிராணிகளுக்கும் பயத்தையுண்டுபண்ணுவதுமான இந்த மயானத்தில் நிற்பதில் என்னபயன்? நண்பனாலும் பகைவனாலும் மரணத்தை அடைந்த ஒருவன் மறுபடி ஜீவிப்பதில்லை. பிராணிகளின் கதி இவ்விதமானது. மனுஷ்யலோகத்தில் பிறந்த யாவுமே மரிக்கவேண்டும். யமனால் செய்யப்பட்ட வழியிற்சென்று மரித்தவனை எவன் ஜீவிக்கச் செய்வான்? திக்குக்களின் கடைசியிற்சென்ற ஸைர்யன் அஸ்தமயத்தை அடைவதற்குள்ளாகவே புத்திரனிடமுள்ள ஸ்நேகத்தைத் தள்ளிவிட்டு உங்கள் இடம்போய்ச் சேரலாம்' என்று சொல்லிற்று. அரசனே! பிறகு, கழுகின் வசனத்தைக்கேட்டு அந்தப்பந்துக்கள் அப்பொழுது பூதலத்தில் புத்திரனைப் போட்டுவிட்டு மிகவும் அழுதுகொண்டு திரும்பிச் சென்றார்கள். பிறகு, மரித்தவனென்றே நிச்சயஞ்செய்துகொண்டு அந்தப் பாலகனைப் பார்ப்பதில் ஆசையற்றவர்களாய் அழுதுகொண்டு அப்பொழுது அங்குமிங்கும் செல்லத்தொடங்கினர்கள். அவர்கள் யாவரும், மரித்ததை நிச்சயஞ்செய்துகொண்டு தம் புத்திரனைத்தள்ளிவிட்டு அவன் ஜீவிப்பதில் ஆசையற்றவர்களாய் வழியை மறைத்துக்கொண்டு நின்றார்கள். (அப்பொழுது) காக்கையின் இறகுக்கொப்பான நிறமுள்ள ஒருநரியானது வளையிலிருந்து வெளியில்வந்து, போகும் அந்த மனிதர்களைநோக்கிச் சொல்லத் தொடங்கிற்று.

'மனிதர்கள் தயையில்லாதவர்களன்றோ? மூடர்களே! இதோ ஸைர்யனிருக்கிறான்; பயப்படவேண்டாம்; ஸ்நேகத்தைச் செய்யுங்கள். அதிக அழகுள்ள பாலகன் ஒரு முகூர்த்தத்தில் ஜீவிக்கலாம்; புத்திரனிடமுள்ள ஸ்நேஹமில்லாதவர்களாய்ப் பூமியில் தர்ப்பங்களைப் பரப்பிப் புத்திரனை மயானத்தில் போட்டுவிட்டு ஏன் தயையின்றிச் செல்லுகிறீர்கள்? எவனுடைய வார்த்தையினால்தானே ஸந்தோஷமடைவீர்களோ, இனிமையாகப் பேசும் இந்தப்பாலனை புத்திரனிடத்தில் உங்களுக்கு ஸ்நேஹமில்லையே! பசுக்களுக்கும் பறவைகளுக்கும்

புத்திரர்களிடம் ஸ்நேஹமும் எவ்விதமென்று நீங்கள் பார்க்கவில்லையே! பரலோகத்திற்குரிய வழியிலிருப்பவர்களுக்கு முனிகள் செய்யும்யாகங்களை ரக்ஷித்துக்கொள்வதால் பயனில்லாமைபோல ஸ்நேஹப்பற்றுதலுள்ளமிருகங்கள் பக்ஷிகள் புழுக்கள் என்னும் அந்தப்பிராணிகளுக்கு அவற்றின்புத்திரர்களை ரக்ஷித்துக்கொண்டிருப்பதில் யாதொரு பயனும் வருவதில்லை. புத்திரர்களிடம் ஸ்நேகமுள்ள அந்தப்பிராணிகளுக்கு இந்தஉலகத்திலும் மேலுலகத்திலும் யாதொருகுணமும் காணப்படவில்லை. அவைகள் தம் பிரஜைகளை நன்முகப்போஷிக்கவுஞ் செய்கின்றன. பிரியமானபுத்திரர்களைப் பாராமலிருக்கும்பொழுது எவர்களுக்குச் சோகமில்லையோ அவர்கள் புத்திரர்களைப்போஷிப்பதில் மிகவும் பிரீதியுள்ள தாய்தந்தைகளை அல்லர். எந்தமனிதர்களுக்கு (பாராமலிருக்கும்பொழுது) சோகமில்லையோ அவர்களுக்கு ஸ்நேஹம் ஏது? குலத்தைதவிருத்திசெய்யும் இந்தப்புத்திரனைத்தள்ளிவிட்டு எங்கேபோகப்போகிறீர்கள்? வெகுநேரம்கண்ணீரைவிடுங்கள். வெகு நேரம் ஸ்நேஹத்துடன்பாருங்கள். இப்படிப்பட்டபிரியவஸ்துக்களைவிடுவது பெரியகஷ்டம். குறைவடைந்தவனுக்கும் அபவாதமுள்ளவனுக்கும் ஸ்மசானத்தைக்குறித்துச் சென்றவனுக்கும் பந்துக்கள் இருப்பதுபோல மற்றவனிருக்கமாட்டான். யாவருக்கும் உயிர் இஷ்டமானது. யாவரும் ஸ்நேஹத்தையும் அடைவார்கள். கீழான பசு முதலிய பிறப்பிலிருப்பவைகளுக்கும் ஸ்நேஹம் எவ்விதமிருக்கிறதென்று பாருங்கள். புதிதாகக் கல்யாணஞ்செய்துகொண்டு ஸ்நானத்தாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பவன்போன்றவனும் தாமரைமலர்போலச் சலிக்கும் நீண்டகண்ணுள்ளவனுமான இவனை விட்டுவிட்டு எப்படிப்போகிறீர்கள்?' என்றுசொல்லிற்று. இவ்விதம் சோகத்துடன் அழுதுகொண்டுசொல்லும் நரியின்வசனத்தைக் கேட்டு அந்தமனிதர்கள்யாவரும் அப்பொழுது குழந்தைக்குவேண்டித் திரும்பினர்கள். கழுகு சொல்லத்தொடங்கிற்று.

'அந்தோ! கஷ்டம்! ஹீனபுத்தியுள்ள மானிடர்களே! குரூரமானதும் அல்பபுத்தியுள்ளதும் இழிந்ததுமான நரியின் சொல்லைக் கேட்டு ஏன் திரும்புகிறீர்கள்? ஐந்துபூதங்களாலும் விடப்பட்டதும் காய்ந்து கட்டைத்தன்மையை அடைந்ததும் சேஷ்டையற்றதுமான இந்தக் குழந்தையைப்பற்றி ஏன்சோகப்படுகிறீர்கள்? உங்களைப்பற்றி ஏன் சோகப்படவில்லை? எதைச்செய்து பாபத்திலிருந்துவிடுபடுவீர்களோ அவ்விதத் தீவ்ரமானதவத்தைச் செய்யுங்கள். தவத்தால் எல்லாம் அடையப்படும். அழுகை

எதைச்செய்யும்? அனிஷ்டங்களும் பாக்யங்களும் 1 சரீரத்துடன் கூட உண்டாகின்றன. அந்தக்காரணத்தால் இந்தக்குழந்தை முடிவில்லாத சோகத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லுகிறது. பொருளும் பசுக்களும் ஸுவர்ணமும் மணிகளும் ரத்தினங்களும் ஸந்தான்மும் தவத்தைமூலமாகக்கொண்டவை. தவமானது யோகத்தாலடையப்படும். தாம்செய்திருக்கிற (வினையின்)படி பிராணிகளிடம் ஸுகமும் துக்கமும் அடைகின்றன. பிராணியானது துக்கங்களையும் ஸுகங்களையும் பற்றிக்கொண்டே உண்டாகிறது. தந்தையின் கர்மத்தால் புத்திரனும் புத்திரனின் கர்மத்தால் தந்தையுமிருப்பதில்லை. (மனிதர்கள்) புண்ணியபாவங்களால் கட்டப்பட்டு வேறுவழியாகச் செல்லுகிறார்கள். முயற்சியுடன் தர்மத்தைச்செய்யுங்கள்; அவ்விதம் அதர்மத்திலிருந்து விலகுங்கள்; காலந்தவறுமல் தேவர்களிடத்திலும் பிராம்மணர்களிடத்திலுமிருங்கள்; சோகத்தையும் தீனத்தனத்தையும் விடுங்கள்; புத்திரனிடமுள்ள ஸ்நேஹத்திலிருந்து விலகுங்கள்; இந்த அழுகையை விடுங்கள்; வேகமாக அதிலிருந்து திரும்புங்கள். சுபமான எந்தக்கர்மத்தையும் அவ்விதமே மிக்ககுரூரமான கர்மத்தையும் எவன் செய்கிறானே அவனே அனுபவிக்கவேண்டும். பந்துக்களுக்கு இதில் என்ன? இவ்விடத்தில் பிரியமாயிருக்கும் பந்துவைத்தள்ளிவிட்டுப் பந்துக்களாயிருப்பவர்கள் நிற்பதில்லை. ஸ்நேஹத்தைத் தள்ளிவிட்டுக் கண்ணீர்நிரம்பிக் கலங்கிய கண்ணுள்ளவர்களாய்ச் செல்லுவார்கள். அறிவிற்சிறந்தவனே மூர்க்கனே பொருளுள்ளவனே பொருளற்றவனே சுபாசுபங்களுடன்கூடின யாவருமே காலத்தின் வசத்தை அடைகிறார்கள். சோகப்பட்டு என்ன செய்யப்போகிறீர்கள்? மரித்ததைப்பற்றி என் சோகப்படுகிறீர்கள்? தர்மப்படி ஸமமான பார்வையுள்ள காலம் யாவர்க்கும் பிரபுவன்றே? பிருத்யுவானது, யௌவனத்திலிருப்பவர்களையும் சிறுவர்களையும் வயதுசென்றவர்களையும் கர்ப்பத்திலிருப்பவர்களையும் யாவர்களையும் பிடிக்கிறது. இவ்வுலகம் இப்படியிருக்கிறது' என்றுசொல்லிற்று.

நரி சொல்லத்தொடங்கிற்று. 'அந்தோ! புத்திரனிடமுள்ள ஸ்நேஹத்தால் துன்பமடைந்து மிகவும் சோகப்படும் உங்களுடைய ஸ்நேஹமானது அல்பபுத்தியான இங்குள்ள கழுகினால் நன்றாகக் கூறப்பட்டவைகளும் காரணத்தை விளங்கச் செய்பவைகளும் (தன் கொள்கைக்கு) ஒத்தவைகளுமான வசனங்களால் அல்பமாகச் செய்யப்பட்டது. இது முழுமையும் தெரிந்துகொண்டு சீக்கிரம் ஆலோசனையையாவது செய்யுங்

1 வேறுபாடம்.

கள். விடத்தகாத ஸ்நேஹத்தை விட்டுவிட்டு ஜலமூள்ள இடத்திற்குப்போகிறீர்களே! கஷ்டம்! புத்திரனை விட்டுப்பிரிந்து இறந்தபுத்திரனில்லாத இடத்தையடைந்து அழும் உங்களுக்குக் கன்றில்லாத பசுக்களுக்குப்போல மிகவும் துக்கமுண்டாகும். பூதலத்தில் மனிதர்களுக்குள்ள சோகத்தை இப்பொழுது அறிகிறேன்; ஏனெனில், ஸ்நேகத்தைக் காரணமாகச்செய்துகொண்டு எனக்கும் கண்ணீர் விழுந்தது. எப்பொழுதும் முயற்சிசெய்யவேண்டும். பிறகு, தெய்வத்தால் ஹிதத்திக்கும். தெய்வமும் பௌருஷமும் ஒரே உறுதியாயிருப்பது யுக்தமாகும். எப்பொழுதும் வெறுப்பில்லாமலிருக்கவேண்டும். வெறுப்படைந்தால் எங்கிருந்து ஸுகமுண்டாகும்? முயற்சியாலன்றே பொருளடையப்படுகிறது? ஏன் தயையில்லாமற் செல்லுகிறீர்கள்? தன மாமஸத்திலிருந்து உண்டானதும் தன்பாதிச்சரீரம்போன்றதும் பித்ருக்களுக்குவேண்டி வம்சத்தை உண்டுபண்ணுவதுமான (புத்திரனுடைய) சரீரத்தை வனத்தில்தள்ளிவிட்டு எங்கேபோகிறீர்கள்? ஸூர்யன் அஸ்தமயத்தை அடைந்து ஸந்தியாகாலம் வந்துவிட்டால் புத்திரனை எடுத்துக்கொண்டாவது போங்கள்; அல்லது, இவ்விடத்திலேயே இருக்கவாவது செய்யுங்கள்' என்று சொல்லிற்று.

கழுகு சொல்லத்தொடங்கிற்று. 'மானிடர்களே! இப்பொழுது நான்பிறந்து ஆயிரம்வருஷத்துக்கு மேலாகிறது. ஸ்திரீயோ, புருஷனோ, நபும்ஸகனோ, மரித்தவர் பிழைப்பதைக் காணேன். சிலர் கர்ப்பங்களில் மரித்துப் பிறக்கிறார்கள்; பிறந்தவுடனும் மரிக்கிறார்கள். தவழ்ந்துகொண்டிருப்பவர்களும் மரிக்கிறார்கள். அவ்விதம் சிலர் யௌவனத்தில் மரிக்கிறார்கள். இவ்வுலகில் நாற்கால் பிராணிகளுக்கும் பறவைகளுக்குங்கூடப் பாக்கியங்கள் நிலைத்தவைகளல்ல. அசைவுள்ளவைகளுக்கும் அசையாமலிருப்பவைகளுக்கும் வாழ்நாள் எதிர்காலத்தில் முடிவுபெறுகிறது. இஷ்டமான தாரங்களைவிட்டுப் பிரிந்தவர்களும் புத்திரசோகத்துடன் கூடியவர்களுமாய்ச் சோகத்தால் கொளுத்தப்பட்டு ஒவ்வொரு நாளும் வீடுசெல்லுகிறார்கள். ஆயிரம் அனிஷ்டங்களையும் நூறு இஷ்டங்களையும் இவ்விடத்தில் தள்ளிவிட்டுப் பந்துக்களாயிருப்பவர்கள் மிகவுந் துக்கத்துடன் செல்லுகிறார்கள். தேஜஸின்றிச் சூன்யமாகக் கட்டைத்தன்மையை அடைந்த இந்தச் சுவையை விடுங்கள். வேறு தேகத்தில் ஸம்பந்தமடைந்து கட்டையாயிருக்கும் சுவை உபாஸிக்கிறீர்களே! உயிரைவிட்ட குழந்தைக்குக் கண்ணீரைவிட்டுவிட்டு ஏன் போகாமலிருக்கிறீர்கள்? இந்த ஸ்நேஹம் பயனற்றதாயிற்றே! ப்ரமமும் பயனற்றது. அந்தக்குழந்தை

கண்களால் பார்க்கிறதுமில்லை; செவிகளால் கேட்கிறதுமில்லை. ஏன் இதைத் தள்ளிவிட்டு வேகமாக வீடுசெல்லாமலிருக்கிறீர்கள்? மோகூதர்மமுள்ளவைகளும் யுக்தியுள்ளவைகளும் மிக்க குரூரமுள்ளவைகளுமான வசனங்களால் என்னால் உபதேசிக்கப்பட்ட நீங்கள் வேகமாகத் தம்தம் வீட்டையே போய் அடையுங்கள். அறிவும் பேரறிவுமுள்ளவனும் புத்தியையும் நல்லறிவையுங் கொடுப்பவனுமான என்னால் நல்லவசனத்தைக் கேட்கும்படி செய்யப்பட்டீர்கள். மானிடர்களே! திரும்புங்கள். நடந்ததை நினைத்தும் கண்டும்சோகமானது இரண்டுமடங்காகும்' என்று சொல்லிற்று. இவ்விதம் இக்கழுகின் வசனத்தைக் கேட்டபின் மனிதர்கள் திரும்பிவிட்டார்கள். அப்பொழுது நரியானது, வேகமாக வந்து, அக்கழுகு உறங்கி இருப்பதைக்கண்டது. நரிசொல்லத்தொடங்கிற்று.

'தங்கத்தின் வர்ணம்போன்ற மேனியுள்ளவனும் ஆபரணங்களால் நன்றாக அலங்கரிக்கப்பட்டவனும் பித்ருக்களுக்குப்பிண்டமளிப்பவனுமான இந்தப்புத்திரனைக் கழுகின் சொல்லால் எப்படிவிடுகிறீர்கள்? இறந்த இந்தப்புத்திரனை விடுவதால் ஸ்நேஹத்திற்கும் புலம்பலுக்கும் அழுகைக்கும் நிவிருத்தியில்லை; நிச்சயமாகத் தாபமுண்டாகும். சம்புகனென்னும் சூத்திரன் கொல்லப்பட்டதும், ஸத்யமான பராக்ரமமுள்ள ராமனிடமிருந்து தர்மத்தை அடைந்து பிராம்மணகுமாரன் பிழைத்தானென்று கேள்விப்படுகிறோம். அப்படியே ப்ருவபித்தியனென்னும் ராஜரிஷியின்பாலகன் காலத்தின்முடிவை அடைந்து மரித்தவன் [1]தர்ம நிஷ்டரான முனிவரால் திரும்பவும் ஜீவித்திருக்கும்படி செய்யப்பட்டான். அப்படிப்போல ஸித்தனோ, முனியோ, தேவதையோ ஒருவனிருக்கலாம். அவன் துன்பமுள்ளவர்களாக இங்கு அழுதுகொண்டிருக்கும் உங்களுக்குத் தயைபண்ணலாம்' என்றுசொல்லிற்று. இவ்விதஞ்சொல்லப்பட்ட அவர்கள் புத்திரனிடம் ஸ்நேஹமுள்ளவர்களும் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களுமாய்த் திரும்பினர்கள். அவர்கள் மடியில் (புத்திரனின்)தலையை வைத்துக்கொண்டு அதிகவிஸ்தாரமாக அழத்தொடங்கினர்கள். அவர்களின் அழுகைக்குரலைக்கேட்டுக் கழுகு வந்து சொல்லத்தொடங்கிற்று.

'தர்மராஜனின் செய்கையால் நீண்டதூக்கமென்னும் மரணத்தை அடைவிக்கப்பட்ட சிசுவானது கண்ணீர்விழுந்துநனைந்ததும்கைகள்பட்டுத் துன்பப்படுத்தப்பட்டதுமாயிருக்கிறது. [2]தவமுள்ளவர்களும் தனமுள்ளவர்களும் பெரிய புத்தியுள்ளவர்களுமாகிய எல்லோரும் மிருத்யுவின்வசத்தை அடைகிறார்கள். இது

---

1 துரோணபர்வம், 228-ம் பக்கம் பார்க்க. 2 வேறுபாடம்.

பிரேதங்களிருக்கும் நகரமாகும். பல்லாயிரம்பாலர்களையும் பல்லாயிரம் கிழவர்களையும் எப்பொழுதும் இங்கு தள்ளிவிட்டுப் பந்துக்கள் பூதலத்தில் பகலும் இரவும் துக்கத்துடனிருக்கிறார்கள். சோகத்தை விலக்கக்காரணமாகாத பிடிவாதத்தை அடைவதில் பயனில்லை. இந்தக்குழந்தைக்கு இப்பொழுது திரும்பவும் பிழைப்பு ஏது? நரியின் வசனத்தால் இந்தக் குழந்தை திரும்பவும் உயிரை அடையமாட்டாது. மரித்துச் சரீரத்தை விட்டதற்குத் திரும்பவும் அச்சரீரம் கிடைக்காது. பலநூறு நரிகளாலும் இந்தக் குழந்தையைப் பல நூறு வருஷங்களிலும் சரீரத்தைக் கொடுத்துப் பிழைக்கும்படி செய்யமுடியாது. ஒருஸமயம் ருத்ரராவது ஸுப்ரமண்யராவது ப்ரம்மாவாவது விஷ்ணுவாவது இக் குழந்தையின்பொருட்டு வரம் அளிப்பார்களாகில் அப்பொழுது இக்குழந்தை பிழைக்கக் கூடும். கண்ணீர்விடுவதாலும் பெருமூச்சு விடுவதாலும் நீண்ட அழுகையாலும் இது திரும்பவும் ஜீவனை அடையாது. நானும் நரியும் இக்குழந்தைக்குப் பந்துக்களான நீங்களும் யாவரும் தர்மாதர்மங்களை க்ரஹித்துக்கொண்டு இவ்வுலகில் வழியிலிருந்துகொண்டிருக்கிறோம். அறிவுள்ளவன், அப்ரியத்தையும் குரூரத்தையும் பிறர்களுக்கு த்ரோஹத்தையும் பிறன்மனைவியையும் அதர்மத்தையும் பொய்யையும் தூரத்தில் விலக்கவேண்டும். நீங்கள் தர்மத்தையும் ஸத்யத்தையும் சாஸ்திரத்தையும் நியாயம் தவறுமையையும் பிராணிகளிடம் பெரிய தயையையும் குடிலமில்லாமலிருப்பதையும் வஞ்சகமில்லாமலிருப்பதையும் முயற்சியுடன் தேடுங்கள். தாயையும் தந்தையையும் பந்துக்களையும் அப்படியே ஸ்நேஹரிதர்களையும் ஜீவிக்கும்படி எவர்கள் பார்க்கிறார்களில்லையோ அவர்களுக்குத் தர்மம் கெடும். எவன் கண்களால் பார்க்கவில்லையோ எவ்விதத்திலும் அசையவில்லையோ அவன் நிலை முடிவுபெற்றதென்று நிச்சயமிருக்கும்பொழுது அழுதுகொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்?' என்று கூறிற்று. இவ்விதஞ் சொல்லக்கேட்ட அந்தப் பந்துக்கள் புத்திரனைப் பூமியில் போட்டுவிட்டுச் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களும் புத்திரனிடமுள்ள ஸ்நேஹத்தால் கொளுத்தப்படுகிறவர்களுமாய் வீடுசெல்லப் புறப்பட்டார்கள்.

நரி சொல்லத்தொடங்கிற்று. 'எல்லாப்பிராணிகளையும் நசிக்கச்செய்யும் இம்மானிடலோகம் குரூரமானது. இவ்வுலகில் நண்பர்களையும் பந்துக்களையும்விட்டுப் பிரியவேண்டியதாயிருக்கிறது. உயிரோடிருக்குங்காலமும் கொஞ்சம். பல கபடங்களுள்ளதும் பொய்யுள்ளதும் அதிகமாகப்பேசுவதும் அப்ரியத்தைப்பேசுவது

மான இந்த உலகத்தையும் துக்கசோகங்களை வளர்ச்செய்யும் விஷயத்தையும் பார்க்கையில், ஒருமுகூர்த்தமும் இம்மானிட உலகம் எனக்குப் பிரியமாக இருக்கவில்லை. அந்தோ! சீ! கழுகின் வாக்யத்தால் புத்தியில்லாதவர்களைப்போலப் புத்திரனிடமுள்ள ஸ்நேஹத்தைத் தள்ளிவிட்டு ஸ்நேஹமற்றவர்களாய் எப்படிப் போகிறீர்கள்? புத்ரசோகத்தால் எரிக்கப்பட்ட மானிடர்களே! பாபியும் புத்தியில்லாததுமான கழுகின் வசனத்தைக்கேட்டுத் திரும்புகிறீர்களே. ஸுகத்திற்குப்பின் துக்கமும் துக்கத்திற்குப்பின் ஸுகமும் உண்டு. ஸுகதுக்கங்களால் சூழப்பட்ட உலகத்தில் முடிவடையாத ஸுகமென்பதில்லை. அழகுள்ளவனும் குலத்தை விளங்கச்செய்கிறவனும் பாலகனுமான இந்தப்புத்திரனைப் பூதலத்தில் தள்ளிவிட்டு எங்கே போகிறீர்கள்? மூடர்களே! அழகும் யௌவனமும் நிறைந்து லக்ஷ்மியுடன் விளங்குகிறவன் போன்ற பாலனை உயிரோடிருப்பவனாகவே நான் மனத்தால் பார்க்கிறேன். இதில் ஸந்தேஹமில்லை. மானிடர்களே! இந்தப் பாலனின் நாசத்தால் ஸுகத்தை அடையவேமாட்டீர்கள். புத்திரசோகத்தால் மிகவும் தபிக்கப்பட்ட உங்களுக்கு இப்பொழுது மரிப்பது உசிதம். [1] ஸுகம் வரலாமென்று நினைத்துத் தாமாகவே ஸுகத்தை உறுதியாகக் கருதிக்கொண்டு அல்பபுத்தியுள்ளவர்களைப்போல [2] இவனைத்தள்ளிவிட்டு இப்பொழுது எங்கே போகப்போகிறீர்கள்?' என்று சொல்லிற்று. அரசனே! அவ்விதம் தர்மத்திற்கு விரோதமாகப் பொய்யான பிரியத்தைச் [3] சொல்லுவதும் மயானத்தில் வஸிப்பதும் தன் காரியத்திற்குவேண்டி எப்பொழுதும் ராத்ரியைத்தேடுகிறதுமான நரியினால் அமிர்தத்திற்கு ஒப்பான வசனங்களால் அவ்விடத்தில் தடுக்கப்பட்ட பந்துஜனங்கள் உடனே நடுவிலிருக்கும் நிலைமையை அடையும்படி செய்யப்பட்டார்கள்.

கழுகு சொல்லத்தொடங்கிற்று. 'இந்த அரண்யப்ரதேசமானது பிரேதங்களால் சூழப்பட்டதும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் அடையப்பட்டதும் குரூரமும் கோட்டான்களால் சப்திக்கப்பட்டதும் பயங்கரமும் மிக்க கோரமும் கறுத்த மேகம்போன்ற நிறமுள்ளதுமாயிருக்கிறது. இதில் பிணத்தைப் போட்டுவிட்டுப் பிரேதத்திற்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யுங்கள். எவ்வளவு வரையில் ஸூர்யன் அஸ்தமயத்தை அடையவில்லையோ எவ்வளவு வரையில் திக்குக்கள் பிரகாசமாயிருக்கின்றனவோ அவ்வளவுக்குள் இதைத் தள்ளிவிட்டுப்

1 வேறுபாடம். 2 ஒருசொல் விடப்பட்டது. 3 வேறுபாடம்.

பிரேதத்திற்குள்ள காரியங்களைச் செய்யுங்கள். பருந்துகள் கொடுமையாகக் கத்துகின்றன. நரிகள் பயங்கரமாக ஊளையிடுகின்றன. விம்மங்கள் கர்ஜிக்கின்றன. ஸூர்யனும் அஸ்தமயத்தை அடைகிறான். கறுத்ததான சிதையின் புகையால் மரங்கள் நன்றாக இருட்டுகின்றன. மயானத்திலுள்ள தேவதைகளும் ஆகார்மில்லாதவைகளாய்க் கூச்சலிடுகின்றன. மிக்கக்ரூரமான இவ்விடத்திலுள்ளவர்களும் விகாரமான சரீரமுள்ளவர்களும் விகாரமுள்ளவர்களும் மாம்ஸத்தைப் புஜிப்பவர்களுமான அனேவர்களும் உங்களை மிகவும் பயப்படும்படி செய்வார்கள். இந்த அரண்ய ப்ரதேசமும் க்ரூரமானது. இப்பொழுது பயமுண்டாகும். கட்டைபோன்றதான இந்தப் பிணத்தைத்தீபோடுங்கள். நரியின் வார்த்தையை விடுங்கள். பயனற்றனவும் பொய்யுமான நரியின் வார்த்தைகளைப் புத்தியிழந்து கேட்பீர்களானால் அப்பொழுது யாவரும் நாசமடைவீர்கள்' என்றுசொல்லிற்று.

நரி சொல்லத்தொடங்கிற்று. 'நில்லுங்கள்; உங்களுக்குப் பயம் வேண்டாம். எவ்வளவுவரையில் ஸூர்யன் ப்ரகாசிக்கிறானே அவ்வளவு வரையில் இந்தப்புத்திரனிடம் ஸ்நேஹத்தால் வெறுப்பில்லாமலிருங்கள். இஷ்டம்போல அழுதுகொண்டு நம்பிக்கையுள்ளவர்களாக நெடுநேரம் ஸ்நேஹத்துடன் பாருங்கள். க்ரூரமான இந்த அரண்ய ப்ரதேசத்தில் உங்களுக்குப் பயமுண்டாகுமென்பதில்லை. இந்த அரண்ய ப்ரதேசமானது அழகுள்ளதும் பித்ருக்களுக்கு முடிவில் இடமுமாயிருக்கிறது. ஸூர்யனுள்ளவரையிலிருக்கலாம். மாம்ஸத்தைத் தின்னும் கழுகின் வார்த்தைகளால் உங்களுக்காவதென்ன? அவிவேகமுள்ள புத்தியுள்ளவர்களாய் க்ரூரமும் பரபரப்புள்ளவைகளுமான கழுகின் வசனங்களைக் கேட்பீர்களாகில் உங்களுக்குப் புத்திரன் இல்லாமற்போவான்' என்றுசொல்லிற்று. அரசனே! அஸ்தமயமாஞல் கழுகு வராது; இரவில் நரி இருக்கும். ஆகையால், பசியுடன்கூடிய அந்தக்கழுகும் நரியும் இறந்தவனைச்சேர்ந்த அந்த ஜனங்களை இவ்விதம்சொல்லின. தம் காரியத்தில் நல்ல உறுதியுள்ள அந்தக்கழுகும் நரியும் பசியாலும் தாகத்தாலும் மிக்க ச்ரமமுற்றவைகளாய்ச் சாஸ்திரத்தைத் தொடர்ந்து பேசின. அறிவில் ஸாமர்த்தியமுள்ள அந்த மிருக பக்ஷிகளின் அமிர்தம்போன்ற அந்த வசனங்களால் அவர்கள் சற்று இருக்கவும் சற்றுப்போகவுஞ்செய்தார்கள். அப்பொழுது சோகத்தாலும் தீனத்தனத்தாலும் பீடிக்கப்பட்டு அழுதுகொண்டு நின்றார்கள். ஸ்வகார்யத்தில் ஸாமர்த்தியமுள்ள அவ்விரண்டினாலும் அவர்கள் ஸாமர்த்திய

மாக ப்ரமிக்கும்படி செய்யப்பட்டார்கள். அவ்விதம் விவாதப்படு கின்றவைகளும் அறிவுள்ளவைகளுமான அந்தக் கழுகுரி இரண் டுக்கும் அங்குநிற்கும் அந்தப்பந்துக்களுக்கும் எதிரில் சங்கரர் வந்தார். பார்வதிதேவியால் தூண்டப்பட்டவரும் அருளால் நனைந்த கண்ணுள்ளவரும் தேவருமான சங்கரர் உடனே அந்த மனிதர்களை நோக்கி, 'நான் வரமளிக்கிறவனுயிருக்கிறேன்' என்று சொன்னர். துக்கமுள்ள அந்தஜனங்கள் வணங்கிநின்றுகொண்டு, 'ஒரே புத்திரனுயிருப்பவனை இழந்தவர்களும் அவன் ஜீவிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களுமான எங்கள் அனைவர்களுக் கும், புத்திரனுக்கு ஜீவனையளித்து, வாழ்வைக்கொடுக்கவேண்டும்' என்ற இந்த வசனத்தைச்சொன்னர்கள். இவ்விதஞ் சொல்லப் பட்ட அந்தப்பகவான் நீர் நிரம்பியகையினல் அந்தக்குமாரனுக்கு உயிரையும் நூறுவருஷம் ஆயுளையும் அளித்தார். அப்படியே எல்லாப் பிராணிகளுக்கும் ஹிதத்தைச்செய்வதில் பிரியமுள்ளவ ரான பகவான் பிழைத்தவர் நரிக்கும் கழுகுக்கும் பசியைப் போக்குவதான வரமளித்தார். பிரபுவே! பிறகு, அப்பொழுது அவர்கள் சேஷமத்துடனும் ஸந்தோஷத்துடனும் அந்தச் சங்க ரரை நமஸ்கரித்துவிட்டுச் செய்யவேண்டியதைச் செய்துகொண் டவர்களாய் மிக்கஸந்தோஷத்துடன் புறப்பட்டார்கள். நீண்ட தானவெறுப்பில்லாமையாலும் உறுதியான நிச்சயத்தாலும் தேவ தேவரின் அனுக்ரஹத்தாலும் சீக்கிரமாகப் பயன் அடையப் படும். தெய்வத்தின் சேர்க்கையையும் பந்துக்களின் நிச்சயத் தையும் பார். தீனர்களாய் அழுதுகொண்டிருப்பவர்களுக்குக் கண்ணீரானது துடைக்கப்பட்டது; பார். சிறியகாலத்தால் நிச் சயத்துடன் தேடியதால் சங்கரரிடமிருந்து அனுக்ரகம்பெற்றுத் தரப்பட்டவர்கள் ஸுகமடைந்தார்கள். பரதர்களில் மிகச்சிறந் தவனே! அவர்கள் சங்கரரின் அனுக்ரஹத்தால் திரும்பவும் புத் ரன் பிழைத்திருப்பதால் மிக்க ஸந்தோஷமுள்ளவர்களும் ஆச் சர்ய முள்ளவர்களுமானர்கள். அரசனே! பிறகு, அவர்கள் குழந்தையிடம் உண்டான சோகத்தைத் தள்ளிவிட்டு ஸந்தோஷ முள்ள மனமுள்ளவர்களாய்ப் புத்திரனை எடுத்துக்கொண்டு வேகமாக நகரத்திற்குச் சென்றார்கள். நான்கு ஜாதியாயிருக்கும் யாவர்களுக்கும் இந்தப்புத்தியானது காண்பிக்கப்பட்டது. அறம் பொருள் மோக்ஷங்களுடன்கூடிய பழைய இவ்விதிஹாஸத்தைக் கேட்டமனிதன் எப்பொழுதும் இங்கும் மேலும் மிக்க ஸந்தோஷம் அடைவான்" என்று சொன்னர்.

நூற்றைம்பத்து மூன்றுவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், மிக்கபலமுள்ள சத்துருவினிடத்தில் விரோதத்தைச்செய்து கொண்டவன்விஷயத்தில் உதாரணமாக ஓர் இலவ மாத்தின் சரித்திரத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பலமில்லாதவனும் அல்ப சேனையுள்ளவனும் எளியவனுமான மனிதன், அவிவேகத்தால் தற்புகழ்ச்சிகளோடு மட்டும் கூடியவனுகத் தகாத வார்த்தைகளால், பலமுள்ளவனும் எப்பொழுதும் அருகிலிருப்பவனும் உபகாரஞ்செய்வதிலும் அபகாரஞ்செய்வதிலும் ஸாமர்த்தியமுள்ளவனும் முயற்சியுள்ளவனுமான சத்துருவுக்கு விரோதத்தைச் செய்து, பின் அவன் (=சத்ரு) அதிககோபங்கொண்டு தன்னைக் கலையவேண்டுமென்ற விருப்பத்துடன் வரும்பொழுது தனக்கு உள்ள பலத்தைக்கொண்டு எவ்விதம் இருக்கவேண்டும்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"பரதஸ்ரேஷ்டனே! இவ்விஷயத்திலும் இலவமரத்திற்கும் காற்றிற்கும் நடந்தஸம்பாஷணையான பழையஇவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். இமயமலையை அடைந்து பல வருஷங்களாக வளர்ந்ததும் கிளைகளும் வேர்களும் இலைகளுமுள்ளதும் பெரிதுமான ஒருமரம் இருந்தது. ஓ! மஹாபாஹுவே! அந்த மரத்தினடியில், வெயிலால் துன்பப்பட்டவைகளும் ச்ரமத்தால் இளைப்புற்றவைகளுமான கொழுத்த யானைகளும் அவ்விதமே மற்ற மிருக ஜாதிகளும் இளைப்பாறிக் கொண்டிருந்தன. அந்த மரமானது நாலுபுழம் சுற்றளவுள்ளதும் நெருங்கிய நிழலுள்ளதும் கிளிகளாலும் நாகணவாய்ப்புட்களாலும் சப்திக்கப்பட்டதும் பூக்களுள்ளதும் கனிகளுள்ளதுமாயிருந்தது. மிக்க அழகான அந்தச் சிறந்த மரத்தினடியில் வழிப்போக்கர்களின் கூட்டங்களும் வர்த்தகர்களும் வனத்தில் தவஞ்செய்வோர்களும் வஸிப்பார்கள். பரதர்களிற் சிறந்தவனே! நாரதர், அந்த மரத்தின் பெரிய அந்தக் கிளைகளையும் எல்லாப் பக்கங்களிலுமுள்ள கப்புக்களையுங் கண்டு அருகிற்சென்று அதைநோக்கிச் சொல்லத்தொடங்கினர்.

'மரங்களிற்சிறந்த இலவமரமே! நீ ஆச்சரியமான அழகுள்ளவனுயிருக்கிறாய்; ஆச்சரியமாக மனத்தை இழுக்கிறாய். உன்னில் எப்பொழுதும் ஸந்தோஷமுள்ளவராயிருக்கிறோம். அப்பா! எப்பொழுதும் பக்ஷிகளும் மிருகங்களும் அப்படியே யானைகளும் மிக

அழகுள்ளவைகளாயும் ஸந்தோஷமுள்ளவைகளாயும் உன்னிடம் வஸிக்கின்றன. பெரிய கிளையுள்ளவனே! உன்னுடைய கிளைகளையும் அங்ஙனமே பெரியகவைகளையும் எவ்விதத்திலும் காற்றால் முறிக்கப் பட்டவைகளாகக் காணேன். அப்பா! உன்னிடம் வாயுவானவன் பிரியமுள்ளவனா? அல்லது ஸ்நேஹிதனா? எந்தக் காரணத்தால் இந்தவனத்தில் வாயுவானவன் எப்பொழுதும் உன்னை நிச்சயமாக ரக்ஷிக்கிறான்? பூஜ்யனானவாயுவானவன் வேகமுள்ளவனாய்ப் பலவிதமானமரங்களையும் மலைகளின்சிகரங்களையும் இருப்பிடத்திலிருந்து ஆட்டிவிடுகிறான். சுத்தமாகவீசும்வாயுவானவன் பாதாளத்தையும் குளங்களையும் ஆறுகளையும் அவ்விதமே கடல்களையும் காயமே செய்கிறான். ஸ்நேஹிதனையிருப்பதால் வாயுவானவன் உன்னை ரக்ஷிக்கிறான்; ஸந்தேகமில்லை. ஆகையால், நீ பலகிளைகளும் இலைகளும் மலர்களுமுள்ளவனையிருக்கிறாய். அப்பா! பெரியமரமே! இந்தப்பறவைகள் உன்னிடம் ஸந்தோஷத்துடன் விளையாடிக் கொண்டிருப்பது உனக்கு அழகாகத் தோன்றுகிறது. சேர்ந்திருக்கும் இப்பறவைகளின் இனிமையான குரல்கள் வெவ்வேறுகக் கேட்கப்படுகின்றன. பூக்களால் நல்ல மணமுள்ள காலத்தில் விம்மக்கூட்டங்களின் தலைமையானவைகள் கத்திக்கொண்டிருக்கின்றன. இலவமரமே! அவ்விதம் வெயிலால் துன்பப்படும் இந்த யானைகளும் தங்களைச்சேர்ந்த கூட்டங்களுடன் விளக்கமுற்று உன்னை அடைந்து கர்ஜித்துக்கொண்டு ஸுகமடைகின்றன. அவ்விதமே, மற்றுமுள்ள மிருகஜாதிகளாலும் மிகவும் விளங்குகிறாய். மரமே! அவ்விதம் பலகூட்டங்கள் வந்து வஸிப்பதாலும் மேருமலைபோல் விளங்குகிறாய். பிராம்மணர்களாலும் தவத்தில் ஸித்திபெற்ற முனிவர்களாலும் அவ்விதமே துறவிகளாலும் விளங்குகிறாய். உன்னுடைய இடத்தைத் தேவலோகத்திற்குச் சமமென்றே நினைக்கிறேன்.

நூற்றைம்பத்து நான்காவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(இலவமரத்தின் சரித்திரத்தொடர்ச்சி.)

இலவமரமே! பயங்கரனும் எல்லாவிடத்திலும்ஸஞ்சரிப்பவனுமான வாயுவானவன் என்ன காரணத்தால் உன்னை எப்பொழுதும் ரக்ஷிக்கிறான்? பந்துவாயிருப்பதாலோ; அல்லது ஸ்நேஹமாயிருப்பதாலோ; இதிற் சந்தேஹமில்லை. இலவமரமே! 'நான் உன்னுடைய வனுக இருக்கிறேன்' என்றுசொல்லி எப்பொழுதும் வாயுவுக்கு

மிகவும் [1] கீழ்ப்படிந்தநிலைமையை நீ அடைந்திருக்கிறாய். அக் காரணத்தால் வாயுவானவன் உன்னை ரக்ஷிக்கிறான். மரமாவது மலையாவது வீடாவது இவ்விதமாயிருப்பதை நான் காணேன். பூமியில் வாயுவின்பலத்தால் பங்கமடையாதிருப்பதைக் காணே னென்பது என் அபிப்பிராயம். இலவமரமே! நீயோ வாயுவால் பலகாரணங்களுக்காக ரக்ஷிக்கப்படுகிறாய்; நிச்சயம். ஆகையால், பரிவாரங்களுடன் கூடியவனுக ஸந்தேஹமில்லாமல் நிற்கிறாய்' என்று சொன்னார்.

இலவமரம், 'பிராமணரானநாரதரே! வாயுவானவன் என்னை எந்தக்காரணத்தால் ரக்ஷிக்கிறானே அஃது அவன் எனக்கு ஸகாவாயிருப்பதாலுமன்று; எனக்குப் பந்துவாயிருப்பதாலு மன்று; வெகுகாலமாக என்னிடம் பிரியமுள்ளவனுயிருப்பதாலு மன்று. நாரதரே! என்பராக்ரமத்தின் பலமானது வாயுவுக்கும் பயத்தைஉண்டுபண்ணுகிறது. வாயுவானவன் என்னுடையபலத் தில் பதினெட்டிலொருபாகத்தையும் அடைந்தவனல்லன். மரங் களையும் மலைகளையும் மற்றுமுள்ள அசையாப்பொருள்களும் ஸஞ் சரிக்கும்பிராணியையும் பங்கப்படுத்திக்கொண்டு குறுரனுகவரும் வாயுவை நான் பலத்தால் அடக்கியிருக்கிறேன். (மற்றவைக ளைப்) பங்கப்படுத்தும் அந்தவாயுவானவன் பலமுறை என்னல் பங்கமடைந்திருக்கிறான். தேவரிஷியே! ஆகையால், கோபங் கொண்ட வாயுவினிடமிருந்தும் நான் பயமடைய மாட்டேன்' என்றுசொல்லிற்று.

நாரதர் சொல்லத்தொடங்கினர். 'இலவமரமே! உன்னு டைய எண்ணம் விபரீதமானது. இதிற்சந்தேகமில்லை. வாயுவின் பலத்திற்குச் சரியான பலமுள்ளபிராணி ஒரிடத்திலுமில்லை. இந் திரனும் யமனும் குபேரனும் ஜலங்களுக்குப்பதியான வருணனும் வாயுவுக்குச் சரியானவர்களல்லர். மரமே! நீயா சரியாயிருப் பாய்? இலவமரமே! பிராணியென்று எதெல்லாம் பூமியில் சலிக் கிறதோ அந்த எல்லாப் பிராணியிடத்திலும் பூஜ்யனான வாயு வானவன் அசைவையும் உயிரையும் உண்டுபண்ணும் பிரபுவா யிருக்கிறான். இந்தவாயுவானவன் நன்றுகச்சலித்தால் பிராணி களை நன்றுகச்சலிக்கும்படி செய்வான். கெடுதலாகச்சலித்தால் மனிதர்களிடம் மிகவும் விகாரமான சேஷ்டையை உண்டுபண்ணு வான். இவ்விதமாயிருப்பவனும் எல்லாப் பிராணிகளுக்கும் மேலானவனும் பூஜிக்கத்தக்கவனுமான அந்தவாயுவை நீ பூஜி யாமலிருக்கிறாய். இது புத்திக்குறையைத்தவிர வேறென்ன?

---

1 வேறுபாடம்.

பலம் இல்லாதவனும் கெட்டபுத்தியுள்ளவனுமான நீ வீணுகப் பலபேசுகிறுய். இலவமரமே! கோபமுதலியவைகளால் மறைக்கப்பட்டு நீ பொய்பேசுகிறுய். நீ இவ்விதம் பேசுவதில் எனக்குக் கோபமுண்டாகிறது. உன்னுடைய பலதுர்ப்பாக்கியத்தை நான் இதோ வாயுவுக்கு நேரில்சொல்லுகிறேன். புத்திகெட்டவனே! புத்தியுள்ளவைகளான சந்தனம், ஸ்யந்தனம், சாலம், ஸர்ளம், தேவதாரு, நீர்நொச்சி, தன்வனம் என்னும் மரங்களாலும் மற்றும் மிக்கபலமுள்ள மரங்களாலுங்கூட இவ்விதம் வாயு நிந்திக்கப்பட்டதில்லை. அந்த மரங்களும் வாயுவுக்குள்ளபலத்தையும் தங்களுக்குள்ளபலத்தையும் அறிகின்றன. ஆகையால், மிக உத்தமமான அந்தமரங்கள் வாயுவை அவமதிக்கிறதில்லை. நீயோ அவிவேகத்தால் வாயுவின் அளவில்லாத பலத்தை அறியவில்லை. ஆகையால், இப்படி.யே வாயுவின் ஸமீபத்திற்குச் செல்லுகிறேன்' என்று சொன்னர்.

நூற்றைம்பத்தைந்தாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(இலவமரத்தின் சரித்திரத்தொடர்ச்சி.)

அரசஸ்ரேஷ்டனே! பிரம்மஜ்ஞானிகளிற் சிறந்த நாரதரானவர் இலவமரத்தினிடம் இவ்விதஞ்சொல்லிவிட்டு, அதனுடைய எல்லா வார்த்தையையும் வாயுவினிடம் சொல்லத்தொடங்கினர். 'வாயுவே! இமயமலையின்புறத்திலுண்டானதும் பரிவாரங்களுள்ளதும் பெரிய வேருள்ளதும் பெரியநிழலுள்ளதுமான ஓர் இலவமரம் இருக்கிறது. அம்மரம் உன்னை அவமதிக்கிறது. அம்மரம் உன்னைப்பற்றிப் பலநிந்தையுள்ள வசனங்களைப்பேசிற்று. வாயுவே! நான் அவைகளை உன்முன்னிலையில் சொல்வது யுக்தமாகாது. வாயுவே! நீ எல்லாப்பிராணிகளுக்கும் மேலானவனென்றும் மிகச் சிறந்தவனென்றும் மிக்க பூஜ்யனென்றும் எல்லா உலகங்களுக்கும் ஈசனைப்ரபுவென்றும் நானறிகிறேன்' என்றுசொன்னர். நாரதருடைய இந்த வசனத்தைக்கேட்டு வாயுவானவன் கோபங்கொண்டு அந்த இலவமரத்தினிடம் வந்து பின்வரும் வசனத்தைச் சொல்லத்தொடங்கினன்.

'இலவமரமே! நாரதர்போகும்போது உன்னுல் என்னைப்பற்றியநிந்தை சொல்லப்பட்டதாம். நான்வாயு; என்னுடைய ப்ரபாவத்தையும் பலத்தையும் உனக்குக்காண்பிக்கிறேன். நான் உன்னை அறியாதவனல்லன். மரமே! எனக்கு நீ தெரிந்தவனேயிருக்கிறுய்.

ப்ரபுவான பிதாமஹர் பிரஜைகளைப் படைக்குங்காலத்தில் உன்னிடத்தில் இளைப்பாறிக்கொண்டிருந்தார். அவர் இளைப்பாறின காரணத்தால் உனக்கு இந்த அனுக்ரஹம் என்னால் செய்யப்பட்டது. மரங்களில் அதமமே![1] அவரனுக்ரஹத்தால் உன்னை நான் முறிக்காமலிருக்கிறேன். அவிவேகியான மற்றவனைப்போல என்னை நீ அவமதிக்கிற காரணத்தால் நீ என்னை அவமதியாமலிருக்கும்படி இதோ என்னைக் காண்பிக்கிறேன்' என்று சொன்னன். பிறகு, இவ்விதஞ் சொல்லப்பட்ட இலவமரமானது பரிஹஸிப்பதுபோலச் சொல்லத் தொடங்கிற்று. 'வாயுவே! நீ கோபங்கொண்டு தாணுகளை உன்னை அரண்யத்தில் காண்பித்துக்கொள்; என்னிடத்தில் கோபத்தைவிட்டுவிடு; கோபங்கொண்டு எனக்கு என்ன செய்துவிடுவாய்? வாயுவே! நீ உனக்கு ப்ரபுவாயிரு; நான் உனக்குப் பயப்படுகிறவனல்லன். நான் உன்னைவிடப் பலத்தில் மேலானவன். நான் உன்னிடத்தில் பயத்தை அடையவேண்டியதில்லை. எவர்கள் புத்தியால் பலமுள்ளவர்களோ அவர்கள் மிகவும் பலசாலிகளாகிறார்கள். எவர்கள் பிராணனில்மட்டும் பலமுள்ளவர்களோ அவர்கள் பலமுள்ளவர்களே அல்லரென்று சொல்லப்படுகிறார்கள்' என்றுசொல்லிற்று. இவ்விதஞ் சொல்லியதைக்கேட்ட வாயுவானவன், 'உனக்குள்ளபலத்தை நாளைக்கே காண்பிக்கிறேன்' என்ற வசனத்தைச்சொன்னன். பிறகு, இரவு வந்தது. உடனே, இலவமரமானது, (வாயுவுக்கு) பகையிருப்பதை மனத்தில் நிச்சயஞ்செய்து தன்னை வாயுவுக்குச் சரியன்றென்றும் பார்த்துக்கொண்டு அப்பொழுது ஆலோசிக்கத் தொடங்கிற்று. 'நாரதரிடம் என்னால் எந்த வார்த்தை சொல்லப்பட்டதோ அது பொய். நான் வாயுவின் பலத்திற்கு நிகரான ஸாமர்த்தியமுள்ளவனல்லன். அவன் பலசாலியன்றே? நாரதர் எவ்விதஞ்சொன்னாரோ அவ்விதம் வாயுவானவன் எப்பொழுதும் பலமுள்ளவன்தான். நானோ மற்ற மரங்களைவிடப் பலங்குறைந்தவனென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால், புத்தியில் எனக்குச் சரியான மரம் ஒன்றுமில்லை. ஆகையால், நான் புத்தியைப் பிடித்துக்கொண்டு வாயுவினிடமிருந்துதோன்றும் பயத்தை விலக்கிக்கொள்வேன். அரண்யத்திலுள்ள மரங்கள் அந்தப் புத்தியையடைந்து நிற்குமாகில் கோபங்கொண்ட வாயுவினிடமிருந்து எப்பொழுதும் துன்பமில்லாதவைகளாயிருக்கலாமென்பதிற் சந்தேஹமில்லை. நான் எவ்விதம் அறிகிறேனோ அவ்விதம் மிகவுங் கோபங்கொண்ட வாயு

---

1 'கெட்டபுத்தியுள்ளதே! அதனால், நீ ரக்ஷிக்கப்படுகிறாய். உன்னீர்யத்தால் நீ ரக்ஷிக்கப்படவில்லை' என்பது வேறுபாடம்.

இந்த மரங்களை அசையாமலிருக்கும்படிசெய்ய அவிவேகிகளான இந்தமரங்கள் அறிகிறதில்லை' என்று ஆலோசித்தது. கலக்கம் அடைந்த இலவமரமானது அப்பொழுது மனத்தில் நிச்சயஞ் செய்துகொண்டு உடனே கிளைகளையும் கவைகளையும் சிறுகிளைகளையும் தாணுகவே கீழே தள்ளிக்கொண்டது. அந்தமரமானது கிளைகளையும் இலைகளையும் பூக்களையும் தள்ளிவிட்டுக் காலையில் வ்ருகிற வாயுவைப் பார்த்துக்கொண்டிருந்தது. பிறகு, கோபங்கொண்டு பெருமூச்சுசெறிந்த வாயுவானவன் பெரிய மரங்களைத் தள்ளிக் கொண்டு அந்த இலவமரம் இருக்கிற இடத்திற்குவந்தான். இலைகள் போனதும் நுனிக்கிளைகள் விழுந்ததும் பூக்களுதிர்ந்ததுமாயிருக்கும் அந்த மரத்தைக்கண்டு வாயுவானவன் சிரித்துக் கொண்டு ஸந்தோஷத்துடன்கூடியவனுகி, ஒடிந்த கிளைகளுள்ள இலவமரத்தைநோக்கி, இவ்விதம் வசனத்தைச்சொல்லத்தொடங் கினன். 'இலவமரமே! கிளைகளை முறிப்பதாகிய கஷ்டம் உன் னல் செய்துகொள்ளப்பட்டதுபோலவேதான் நானும் உன்னைக் கோபத்தால்செய்வேன். உன்னுடைய கெட்ட எண்ணத்தால் இப்பொழுது பூக்களும் நுனிக்கிளைகளும் போனவனும் தளிர்க ளும் இலைகளும் உதிர்ந்தவனுமான நீ என்பராக்ரமத்திற்கடங்கின வனைச் செய்யப்பட்டாய்' என்றுசொன்னன். அப்பொழுது, வாயுவின் இந்தவசனத்தைக்கேட்டு வெட்கமடைந்த இலவமர மானது முன் நாரதர்சொன்ன அந்தவசனத்தைநினைத்து வருத்த மடைந்தது.

அரசப்புலியே! இவ்விதமே இலவமரம்போல அவிவேகியான வன் பலஹீனனுயிருந்துகொண்டு அதிகபலசாலியுடன் விரோ தத்தை உண்டுபண்ணிக்கொண்டு வருத்தமடைவான். ஆகை யால், பலஹீனன் அதிக பலசாலிகளுடன் விரோதத்தை உண்டு பண்ணிக்கொள்ளக் கூடாது. விரோதத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறவன் இலவமரம் எப்படிச்சோகமடைந்தோ அப்ப டிச் சோகமடைவான். பெரியபுத்தியுள்ளவர்கள் அபகாரிகளிடத் திலும் விரோதத்தை வெளியிடமாட்டார்கள். மஹாராஜனே! அவர்கள் மெள்ளமெள்ளப் பலத்தைவெளியிடுவார்கள். புத்தியில் லாத மனிதன் புத்தியால் பிழைப்பவனேடு பகையைச் செய்து கொள்ளக்கூடாது. நல்லபுத்தியுள்ளவனுடைய புத்தியானது பஞ்சு களில் தீயானது செல்வதுபோல (விரோதிகளிடம்) செல்லும். அர சனே! மனிதனிடம் புத்திக்குச் சரியானதொன்றும் இல்லை. அரசஸ்ரேஷ்டனே! அவ்விதமே பலத்திற்குச் சரியானது இவ் வுலகில் ஒன்றுமில்லை. ஆகையால், சிறுவனும் ஜடனும் குருட

னும் செவ்விடனுமாளனும் அதிக பலமுள்ளவனிடத்தில் (எவனும்) பொறுமையுள்ளவனுயிருக்கவேண்டும். சத்துருக்களைக்கொல்லும் அரசஸ்ரேஷ்டனே! அஃது உன்னிடம் காணப்படுகிறது. பெரிய காந்தியுள்ள அரசனே! பதினெட்டு அக்ஷௌஹிணிகளும் மஹாத்மாவான அர்ஜுனனுடைய பலத்திற்குச் சரியாகவில்லை. அவைகள், பலத்தை அடைந்து ஸஞ்சரிக்கிறவனும் இந்திரகுமாரனும் கீர்த்திபெற்றவனுமான பாண்டவனல் யுத்தத்தில் அடிக்கப்பட்டுப் பங்கமடைந்தன. பாரத! ராஜதர்மங்களும் ஆபத்காலத்திற்குரிய தர்மங்களும் விரிவாக உனக்கு உபதேசிக்கப்பட்டன. மஹாராஜனே! திரும்பவும் எதை நான் உனக்கு உபதேசிக்கவேண்டும்?" என்று வினவினர்.

நூற்றைம்பத்தாறுவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பாபத்திற்குக் காரணத்தையும் அதனை விலக்கும் மார்க்கத்தையும் கூறியது.)

யுதிஷ்டிரர், "பரதர்களிற்சிறந்தவரே! எது பாபத்திற்கு இருப்பிடமென்பதையும் எந்தக்காரணத்தால் பாபமுண்டாகிறதென்பதையும் நான் உண்மையாகக் கேட்க விரும்புகிறேன்" என்றுசொல்ல, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"அரசனே! எது பாபத்திற்கிருப்பிடமோ அதைக்கேள். பெரிய முதலேபோன்ற லோபமொன்று (பாபத்திற்கிருப்பிடம்). லோபத்தால் பாபமுண்டாகிறது. லோபத்திலிருந்து பாபமும் அதர்மமும் அப்படியே மிகமேலான துக்கமும் உண்டாகின்றன. எந்தலோபத்தால் ஜனங்கள் பாபத்தைச் செய்கிறவர்களாகிறார்களோ அந்தலோபமானது ஹிம்ஸைக்குக்காரணமாகிறது. லோபத்திலிருந்து கோபமுண்டாகிறது. லோபத்திலிருந்து காமமுண்டாகிறது. லோபத்திலிருந்து அவிவேகமும் மாயையும் மானக்குறைவும் பராதீனமான பிழைப்பும் பொறுமையும் வெட்கத்தை விடுவதும் பொருள் நாசமும் தர்மநாசமும் சிந்தையும் அபகீர்த்தியுமாகிய யாவுமுண்டாகின்றன. ஈயாமையும் குதர்க்கமும் கெட்டகாரியங்களில் முயற்சியும் குலமதமும் கல்விமதமும் அழகின்மதமும் தனமதமும் எல்லாப்பிராணிகளிடத்திலும் த்ரோஹமும் எல்லாப்பிராணிகளிடத்திலும் அவமதிப்பும் எல்லாப்பிராணிகளிடத்திலும் நம்பிக்கையில்லாமையும் எல்லாப்பிராணிகளிடத்திலும் கபடமாயிருப்பதும் பிறர்பொருள்களை அபஹரிப்பதும் பிறர்

தாரங்களைத் தொடர்வதும் வாக்கின்வேகமும் மனத்தின்வேக மும் நிந்திப்பதில் வேகமும் ரஹஸ்யேந்திரியத்தின் வேகமும் வயிற்றின் வேகமும் பயங்கரமான மரணவேகமும் பலமான அஸூயையின்வேகமும் வெல்லத்தகாத பொய்யிலுள்ளவேகமும் தடுக்கமுடியாத நாவின்வேகமும் பொறுக்கமுடியாத செவியின் வேகமும் நிந்தையும் ஸ்துதியும் மத்ஸரமும் பாபமும் கெட்டசெய் கையைச்செய்வதும் எல்லாவிதமான ஸாஹஸங்களையுஞ் செய்வ தும் செய்யத்தகாதவைகளைச் செய்வதும் லோபத்தாலுண்டா கின்றன. மனிதர்கள், பிறந்தபொழுதும் குழந்தைப்பருவத்தி லும் கௌமாரப்பருவத்திலும் யௌவனப்பருவத்திலும் தமக் குரிய ஒரு காரியத்தை விடாமலிருக்கக் காரணமும், ஜரையை அடைந்தவனிடத்திலும் கிழத்தனத்தை அடையாததும், எப் பொழுதும், ஆழமான ஜலமுள்ள நதிகளால் கடலானது நிரப்ப முடியாமலிருப்பதுபோல எவ்விதமும் 1 பிரியத்தால் பூர்த்திசெய்ய முடியாததும், லோபங்களால் ஸந்தோஷமடையாததும், காமங் களாலும் திருப்தியடையாததும், தேவர்களாலும் கந்தர்வர்களா லும் அஸுரர்களாலும் பெரிய உரகர்களாலும் அப்படியே எல் லாப்பிராணிகளின் கூட்டங்களாலும் உண்மையாய் அறியப்படா ததுமான அந்தலோபத்தையும் (அதற்குக்காரணமான) அவிவே கத்தையும் மனத்தைவென்ற மனிதன் ஜயிக்கவேண்டும். கௌ ரவ்ய! மனத்தை அடக்காதவர்களும் லோபிகளுமாயிருப்பவர் களுக்கு டம்பமும் த்ரோஹமும் நிந்தையும் கோட்சொல்லுவதும் மத்ஸரமும் உண்டாகும். மிகப்பெரிய சாஸ்திரங்களைக்கற்றவர்க ளும் பலகல்விகளுள்ளவர்களும் ஸந்தேஹங்களை அறுக்கிறவர்க ளுமாயிருப்பவர்களும் அல்பமானபொருளில் புத்தியுள்ளவர்க ளாகி இவ்வுலகில் கஷ்டப்படுகிறார்கள். த்வேஷத்தையும் கோபத் தையும் அடைந்தவர்களும் பெரியோர்களின் ஆசாரத்திலிருந்து விலகியவர்களும் புற்களால் மறைக்கப்பட்ட கிணறுகள் போல வாக்கில் இனிமையுள்ளவர்களும் உள்ளத்தில் கத்தி போன்றவர்களும் தர்மவேஷம் பூண்டவர்களும் தர்மத்திற் கென்று பிறரைத் தூண்பப்படுத்துகிறவர்களுமான அல்பர்கள் ஜகத்தைத் திருடுகிறார்கள். ஒரு காரணத்தைப் பலமாகக் கொண்டு 2 பல கெட்ட வழிகளையும் உண்டுபண்ணுகிறார்கள். பேராசைக்குத்தக்க ஞானங்களிலிருந்துகொண்டு எல்லா நல்ல வழிகளையும் அழிக்கிறார்கள். பேராசைபிடித்த கெட்டபுத்தியுள்ள

---

1 'பொருளின் வரவால்' என்பது வேறுபாடம்.

2 இங்கு 'தாந்' என்கிற பதம் விடப்பட்டது.

வர்களால் அபஹரிக்கப்படும் தர்மத்தின்நிலை எது எது மாறுகிறதோ அது அது பிறகு அவ்வவ்விதமே ப்ரவர்த்திஅடையும். கௌரவ்ய! பேராசை கொண்ட புத்தியுள்ளவர்களிடம் கர்வமும் கோபமும் கொழுப்பும் தூக்கமும் ஸந்தோஷமும் சோகமும் அபிமானமுமே காணப்படுகின்றன. எப்பொழுதும் லோபத்துடன் கூடிய இவர்களை அயோக்கியர்களென்று தெரிந்துகொள். யோக்கியர்களைப்பற்றிக் கேள். எவர்களிடம், 'பரலோகம்சென்று திரும்பவும் இவ்வுலகத்திற்கு வந்து விடுவோமோ' என்கிற பயமும் பரலோகத்தைப் பற்றிய பயமும் இல்லையோ, பிரியங்களும் அப்பிரியங்களுமான போக்கிய வஸ்துக்களில் ஆசையில்லையோ, எவர்களுக்குப் பெரியோர்களின் ஆசாரம் பிரியமோ, எவர்களிடம் அடக்கம் நிலைபெற்றிருக்கிறதோ, எவர்களுக்கு ஸுகமும் துக்கமும் ஸமமோ, எவர்களுக்கு ஸத்தியம் மிகமுக்கியமோ, பரிசுத்தமான நியமமுள்ள அந்தப் பெரியோர்களைப்பற்றிச் சொல்லுகிறேன். ஓ! பாரத! அவர்கள் கொடுப்பவர்களும் பெற்றுக்கொள்ளாதவர்களும் அவ்விதமே தயையுள்ளவர்களும் பித்ருக்களிடமும் தேவர்களிடமும் அதிதிகளிடமும் பக்தியுள்ளவர்களும் எப்பொழுதும் முயற்சியுள்ளவர்களும் யாவருக்கும் உபகாரஞ் செய்கிறவர்களும் வீரர்களும் எல்லாத்தர்மங்களையும் ரக்ஷிக்கிறவர்களும் எல்லாப்பிராணிகளுக்கும் ஹிதர்களும் யாவற்றையும் வரையாமற் கொடுக்குந்தன்மையுடையவர்களுமாக இருப்பார்கள். தர்மத்திற்குரிய வ்யவகாரத்தைச்செய்யும் அவர்களை (அதிலிருந்து) அசைக்கமுடியாது. எந்த நடையானது ஸாதுக்களால் முன்காலத்தில் அனுஷ்டிக்கப்பட்டதோ அது வேற்றுமைப்படாது. நல்லவழியிலிருப்பவர்கள், பயமுள்ளவர்களும் சபலர்களும் பயங்கரர்களுமாக இருக்கமாட்டார்கள். ஸாதுவாயிருப்பவர்கள் எப்பொழுதும் அவர்களை வழிபடவேண்டும்; அஸாதுக்களை விலக்கவும் வேண்டும். ஆசையையும் கோபத்தையும் விலக்கியவர்களும் அபிமானமும் அஹங்காரமும் அற்றவர்களும் நல்ல நியமமுள்ளவர்களும் உறுதியான மரியாதையுள்ளவர்களுமாயிருப்பவர்கள் எவர்களோ அவர்களை உபாஸனை செய். அவர்களுடைய தர்மதையுங்கேள். யுதிஷ்டிர! அவர்கள்செய்யும் தர்மமானது (பலர்) 1 சொல்லவேண்டியதற்காகவும் கீர்த்திக்காகவும் செய்யப்படுகிறதன்று. செய்யவேண்டியது கடமை என்றெண்ணியே தர்மமும் அதுபோலச் சரீரத்திற்குரிய காரியங்களும் செய்யப்படுகின்றன. பயமும் கோபமும் ஆசையும் சோகமும் அவர்களிடம் இரா. அவர்கள் தர்மவேஷம் பூண்டவர்கள் அல்லர்; மறைவாகவொன்றைச் செய்கிறவர்களுமல்லர். கௌந்தேய! எவர்களிடம்

1 'பொருளுக்காகவும்' என்பது வேறுபாடம்.

பேராசையும் அவிவேகமும் இல்லையோ எவர்கள் ஸத்யத்திலும் ஒழுங்கான நடையிலும் நிலைபெற்றிருக்கிறார்களோ எவர்களுக்கு (அதிலிருந்து) திரும்பவும் நழுவுதல் இல்லாமலிருக்கிறதோ அவர்களிடம்பக்தியுடன் இரு. லாபங்களில் ஸந்தோஷமடையாமலும் லாபமில்லாதவைகளில் துக்கப்படாமலும் இருப்பவர்களும் உறுதியான பராக்கிரமமுள்ளவர்களும் உண்மையான வழியில் நிலைபெற்றவர்களும் அறிவில் விருப்பமுள்ளவர்களும் லாபாலாபமும் ஸுகதுக்கமும் பிரியாப்பிரியமும் மரிப்பதும் ஜீவிப்பதும் ஸமமாகக் கொண்டவர்களும் அபிமானமும் அஹங்காரமும் அற்றவர்களும் ஸத்வகுணத்திலிருப்பவர்களும் ஸமதிருஷ்டியுள்ளவர்களும் தர்மத்தில் பிரீதியுள்ளவர்களும் உத்தமர்களுமான அந்த மஹாத்மாக்களை நீ அடக்கத்துடனும் அஜாக்ரதை இல்லாமலும் நன்றுகப் பூஜித்துக்கொண்டிரு. அப்பா! க்ஷேமமுள்ளவனே! அவர்களின் சொற்கள்யாவும் தெய்வத்தின் அனுக்ரஹத்தால் குணமுள்ளவைகளாகவே இருக்கும். மற்ற மூடர்களுடைய பயனற்றசொற்கள் அமங்களத்தைக் கொடுக்கத் தக்கவைகளாகும்" என்று சொன்னர்.

நூற்றைம்பத்தேழாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் அஜ்ஞானத்தின் லக்ஷணமுதலியவற்றைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "குருகுலத்திலுதித்த பிதாமஹரே! தன்பங்களுக்கு இருப்பிடமான லோபம் சொல்லப்பட்டது. அஜ்ஞானத்தையும் உண்மையாகக் கேட்கவிரும்புகிறேன்" என்றுசொன்னர்.

பீஷ்மர், "எவன் அஜ்ஞானத்தால் பாபத்தைச்செய்து தனக்குத் தக்கதை அறிந்துகொள்ளாமல் ஸாதுக்களின் நடைகளையும் பகைக்கிறானே அவன் உலகம் நிந்திக்கத்தக்க நிலைமையை அடைவான்; அஜ்ஞானத்தால் நரகத்தை அடைவான்; அஜ்ஞானத்தால் கெட்டகதியை அடைவான்; அஜ்ஞானத்தால் துக்கத்தை அடைவான். அஜ்ஞானத்தால் ஆபத்துக்களில் முழுகுவான்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "அரசரே! அஜ்ஞானத்தையும் அஜ்ஞானத்தின் ப்ரவிருத்தியையும் இடத்தையும் வளர்ச்சியையும் குறைவையும் உற்பத்தியையும் மூலத்தையும் சேர்க்கையையும் கதியையும் காலத்தையும் காரணத்தையும் காரியத்தையும் உள்ளபடி உண்மையாகக் கேட்க விரும்புகிறேன். துக்கமாகக் காணப்படுவது எதுவோ அஃது அஜ்ஞானத்தாலுண்டாவதன்றோ?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ராகமும், த்வேஷமும், மோஹமும், ஸந்தோஷமும், சோகமும், அபிமானமும், காமமும், கோபமும், கர்வமும், துக்கமும், சோம்பலும், விருப்பமும், பகையும், தாபமும், பிறர்களின்பெருமையில்வருத்தமும், பாபச்செயல்களும் i அஜ்ஞானமென்று சொல்லப்படுகின்றன. மஹாராஜனே! எந்த அஜ்ஞானத்தில் ப்ரவிருத்தியைப்பற்றியும் வளர்ச்சி முதலியவைகளைப்பற்றியும் நீ கேட்கிறாயோ அவற்றை அதிகவிரிவாகக் கேள். பரதகுலத்தில் உதித்த அரசனே! அஜ்ஞானம் அதிலோபமென்னும் இவ்விரண்டும் ஸமமான பயனுள்ளவைகளென்றும் ஸமமான தோஷமுள்ளவைகளென்றும் தெரிந்துகொள். அஜ்ஞானமானது லோபத்திலிருந்து உண்டானது. பலவிதமான கஷ்டகதியைக் கொடுக்கவேண்டி லோபம் வளர்ச்சியடைந்தால் அஜ்ஞானம் மிகவளர்ச்சியடையும். லோபம் ஸமமாகவிருந்தால் அது ஸமமாயிருக்கும். லோபம் குறைந்தால் அது குறைவடையும். லோபமுண்டானால் அஜ்ஞானமுண்டாகும் (அஜ்ஞானஸ்வரூபமான) லோபத்திற்கு மூலம் 2 அவிவேகமாகும். காலத்தால் பலசரீரங்களில்பிறப்பது அஜ்ஞானத்தின்கதியாகும். 3 லோபம் அறுக்கப்படவும் வேற்றுமைப்படவும் காலந்தான் காரணமாகும். விவேகமில்லாதிருப்பவனுக்கு அஜ்ஞானத்தால் லோபமும் ஆசையை உருவமாகக்கொண்ட (கஷ்ட) கதியும் உண்டாகும். லோபத்திலிருந்தே எல்லாத்தோஷங்களுமுண்டாகின்றன. ஆகையால், லோபத்தைவிலக்கிக்கொள்ளவேண்டும். ஜனகரும் யுவனஸ்வனும் ப்ருஷதஸ்வனும் ப்ரஸேனஜித்தும் மற்றுமுள்ள அரசர்களும் லோபத்தைநாசஞ்செய்ததால் தேவலோகம் அடைந்தார்கள். லோபத்தை நன்றாக அறுத்துவிட்டபின் அரசர்கள் தேவலோகமடைந்திருக்கிறார்கள். குருக்களிற்சிறந்தவனே! ப்ரத்யக்ஷமாகவே லோபத்தைப் புத்தியால் விலக்கிக்கொள். மனிதன் லோபத்தைவிலக்கிவிட்டால் இவ்வுலகத்திலும் இறந்தபின்னும் ஸுகமடைந்து ஸந்தோஷிப்பான்" என்றுசொன்னர்.

---

1 'இங்கு காரியத்திற்கும் காரணத்திற்கும் வேற்றுமையில்லை என்னும் கொள்கையை அனுசரித்து அஜ்ஞானத்தின்காரியமான ராகமுதலியவற்றையே அஜ்ஞானமென்றுகூறினர்' என்பது பழையவுரை.

2 'காரியாகாரியங்களின் வேற்றுமையை அறியாமை அவிவேகம்; இஃது உள்ளவரைக்கும் அஜ்ஞானமும் இருக்கும். இதுதான் அஜ்ஞானத்தின் சேர்க்கையாகும்' என்பது பழையவுரை.

3 'லோபத்தின்நாசத்திற்கும் வேற்றுமைக்குங் காரணமானகாலந்தான் அஜ்ஞானத்தின் நாசத்திற்கும் வேற்றுமைக்கும் காரணமாகும்' என்பது பழையவுரை.

நூற்றைம்பத்தெட்டாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், தமமானது தர்மத்திற்கு முக்கியகாரணமென்று சொல்லி அதனைப் புகழ்ந்து கூறியது.)

யுதிஷ்டிரர், "தர்மபுத்தியுள்ளவரே! வேதமோதுவதில் முயற்சிசெய்கிறவனும் விசேஷமாகத் தர்மத்தைவிரும்புகிறவனுமான பிராம்மணனுக்கு இவ்வுலகத்தில் எது சிறந்ததென்று சொல்லப்படுகிறது? பிதாமஹரே! இவ்வுலகில் பலவிதமாகக் காணப்படுவதில் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் எதைச் சிறந்ததென்று நினைக்கிறீரோ அதை எனக்குச் சொல்லவேண்டும். பாரதரே! இந்தத் தர்மவழியானது பெரிதும் பலகிளைகள் உள்ளதுமாயிருக்கிறது. இதிலுள்ள தர்மங்களுள் எது முக்கியமாக அனுஷ்டிக்கத்தக்கதென்று கருதப்படுகிறது? தந்தையான அரசரே! பெரிதும் பலகிளைகளுள்ளதுமான தர்மத்திற்கு உண்மையாக எதுமுக்கியமானமூலமோ அதுமுழுமையும் சொம்பலின்றிச் சொல்லும்" என்றுசொல்ல, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அறிவிற்சிறந்த நீ எதனுல்கூடியதை யடைவாயோ, அமிருதத்தைப்பானம்பண்ணியதுபோல எதனுல் திருப்தியுள்ளவன் ஆவாயோ அதனை இப்பொழுது உனக்குச் சொல்லுகிறேன். மஹரிஷிகளால் தத்தமக்குள்ளஞானத்தை ஆஸ்ரயித்துப் பலவிதமான அந்த அந்தத் தர்மமுறைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளுள் [1] தமமானது மிகமுக்கியமானது. நிச்சயமான அறிவுள்ள பெரியோர்கள் தமத்தை மோக்ஷத்திற்குக்காரணமென்று கூறுகிறார்கள். பிராம்மணனுக்குத் தமமானது ஸநாதனமான சிறந்ததர்மமாகும். தமமில்லாதவனுக்குக் காரியங்களின்ஸித்தி உள்ளபடி காணப்படுகிறதில்லை. தமமானது தானத்திற்கும் யாகங்களுக்கும் அத்தியயனத்திற்கும் மேலானதாயிருக்கிறது. தமமானது தேஜஸைப் பெருகச்செய்யும். தமமானது பெரியபரிசுத்தமாகும். தேஜஸுடன்கூடியமனிதன் பாபங்களை விட்டுவிலகிப் பெரியபயனைப்பெறுவான். உலகங்களில் தமத்திற்குச்சரியான வேறுதர்மத்தை நாங்கள்கேட்டதில்லை. உலகத்தில் எல்லாவிததர்மங்களுமுள்ளவர்களுக்கும் தமமானது உத்தமதர்மமென்பது ப்ரஸித்தம். அரசனே! எப்பொழுதும் தமத்துடன்கூடியிருப்பவன் பெரிய தர்மத்தை அடைவான்; இங்கும் இறந்தபின்னும் பெரிய ஸுகத்தையும் பெறுவான். தமமுள்ளவன் ஸுகமாக உறங்கு

---

1 இந்திரியங்களின் அடக்கம்.

வான்; ஸுகமாகவே விழித்துக்கொள்வான்; உலகங்களிலும் ஸுகமாக ஸஞ்சரிப்பான்; இவனுடையமனமும் தெளிவாயிருக்கும்.. தமமில்லாதபுருஷன் அடிக்கடி துக்கத்தை அடைவான்; தன் குற்றத்தாலுண்டாகும் மற்றும் பல துன்பங்களையும் உண்டுபண்ணிக்கொள்ளுவான். நான்கு ஆஸ்ரமங்களிலும் தமமே உத்தமமான வ்ரதமென்று சொல்லுகிறார்கள். எவைகளின் கூட்டம் தமமோ அவ்விதத் தமத்திற்குரிய குறிகளைச் சொல்லுகிறேன். கௌரவ்ய! பொறுமை, தைரியம், கொல்லாமை, ஸமபுத்தி, ஸத்யம், ருஜுவாயிருப்பது, இந்திரியங்களைவெல்லல், ஸாமர்த்தியம், மிருதுவாயிருப்பது, வெட்கம், சபலமில்லாமை, தீனத்தனமில்லாமை, கோபமில்லாமை, ஸந்தோஷம், இன்சொல், துன்பஞ்செய்யாமை, அஸூயையின்மை, பெரியோர்களைப் பூஜிப்பது, பிராணிகளிடம் தயை, கோட்சொல்லாமை, ஜனவாதத்தையும் பொய்வாதத்தையும் ஸ்துதியையும் நிந்தையையும் விலக்குவது (இவைகள் தமத்தின் குறிகளாகும்). இவைகளின் சேர்க்கை தமமாகும். தமமுள்ளவன் காமத்தையும் கோபத்தையும் லோபத்தையும் கர்வத்தையும் அடங்காமையையும் தற்புகழ்ச்சியையும் ரோஷத்தையும் அஸூயையையும் அவமானத்தையும் செய்யவேமாட்டான். நிந்திக்கப்படாதவனும் ஆசையற்றபுத்தியுள்ளவனும் அல்ப ஸுகங்களை விரும்பாதவனும் அஸூயையில்லாதவனுமான இந்த மனிதன் ஸமுத்திரம்போல 1 எவ்விதத்தாலும் திருப்தியுள்ளவனாகமாட்டான். தமமுள்ளவன், 'நான் உன்னுடையவன்; நீ என்னுடையவன்; அவர்கள் என்னைச்சேர்ந்தவர்கள்; நான் அவர்களைச்சேர்ந்தவன்' என்ற இந்த மூன்றுள்ளசம்பந்திகளின் சம்பந்தத்தைப் பற்றுதலுடன் அடையமாட்டான். கிராமத்திற்குரியவைகளும் அப்படியே வனத்திற்குரியவைகளுமான உலகத்திலுள்ள ப்ரவிருத்திகளெல்லாவற்றையும் நிந்தையையும் ஸ்துதியையும் எவன் அடையவில்லையோ அவன் முக்தியடைவான். எவன் மித்ரஸ்வபாவமும் நல்லசீலமும் தெளிந்தமனமுமுள்ளவனும் ஆத்மாவை அறிந்தவனுமாயிருக்கிறானே பலவிதமான ஆசைகளிலிருந்து விடுபட்ட அவனுக்கு இறந்தபின் பெரியபயனுண்டாகும். நல்லநடக்கையும் நல்லசீலமும் பொருந்தியவனும் தெளிந்தமனமுள்ளவனும் ஆத்மாவை அறிந்தவனுமான அறிஞன் இவ்வுலகில் பூஜையைப்பெற்றுப் பிறகு நற்கதியை அடைவான். எந்தக்கர்மம் இவ்வுலகில் சுபமாகவே இருக்கிறதோ, எது ஸாதுக்களால் ஆஸ்ர

1 'பிரம்மலோகங்கிடைத்தாலும் அஃது அநித்யமானதால் அதனையும் விரும்பான்' என்பது பழையவுரை.

யிக்கப்பட்டதோ அதுதான் ஞானத்துடன்கூடிய முனிக்கு இயற்கையுள்ளவழியாயிருந்து குறையாமலிருக்கும். (வீட்டிலிருந்து) வெளிக்கிளம்பி அரண்யஞ்சென்று இந்திரியங்களை வென்றவனும் ஞானத்துடன்கூடியவனும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு இவ்விதம் ஸஞ்சரிப்பவனுமாயிருப்பவன் பிரம்மத்தின் தன்மையை அடையத்தக்கவனாவான். பிராணிகளிடமிருந்து எவனுக்குப் பயமில்லையோ, எவனிடமிருந்து பிராணிகளுக்குப் பயமில்லையோ அவனுக்குச் சரீரத்திலிருந்து விடுபட்டபின் ஓரிடத்திலிருந்தும் பயமிராது. அவன் கர்மங்களை அனுபவித்து அழிப்பான்; (புதிதாகக்) கர்மங்களைச் சேர்க்கமாட்டான்; எல்லாப் பிராணிகளிடமும் ஸமமாயிருந்துகொண்டு பயமில்லாமலிருக்கும் மித்திர நிலையை அடைவான். ஆகாயத்தில் பறவைகளின் வழிபோலவும் தண்ணீரில் மீன்களின் வழிபோலவும் அவனுடைய வழி காணப்படாது; ஸந்தேஹமில்லை. அரசனே! எவன் வீடுகளை விலக்கிவிட்டு மோக்ஷத்தையே அடைகிறானோ அவனுக்கு அழிவில்லாத வருஷங்கள் தேஜோமயமான உலகங்கள் ஸித்திக்கும். எல்லாக்கர்மங்களையுந் தள்ளிவிட்டுத் தவத்தையும் விதிப்படி தள்ளிவிட்டுப் பலவிதகல்விகளையும் தள்ளிவிட்டு மற்ற யாவற்றையுந் தள்ளிவிட்டுக் காமவிஷயத்தில் பரிசுத்தனும் திரும்பாமல் செல்லுகிறவனும் தெளிந்த மனமுள்ளவனும் பரிசுத்தனுமான ஆத்மஜ்ஞானியானவன் இந்த உலகத்தில் பூஜையைப்பெற்றுப் பிறகு ஸ்வர்க்கத்தை அடைவான். வேதராசிகளிலிருந்து வெளியானதும் (பிராணிகளின் ஹ்ருதயமென்னும்) குகையில் வைக்கப்பட்டதும் அழிவில்லாததுமான பிரம்மலோகமென்னும் ஸ்தானமானது தமத்தால் அடையப்படுகிறது. ஞானத்தில் ஸந்தோஷப்படுகிறவனும் எல்லாப்பிராணிகளிடமும் மித்திரையிருப்பவனுமான அறிவுள்ளவனுக்கு இவ்வுலகில் மறுபிறப்பென்னும் பயமில்லை. பரலோகத்தைப்பற்றிய பயம் ஏது? தமத்தில் ஒருதோஷந்தான் இருக்கிறது; இரண்டாவது தோஷமில்லை. அதாவது:—தமத்துடன்கூடிய இந்தமனிதனை உலகம் சக்தியற்றவனென்று நினைக்கும். அறிவுள்ளவர்களில் மிகப்பெரியவனே! தமமுள்ளவனுக்கு இந்தத் தோஷம் ஒன்றே; குணமோ மிகஅதிகம். பொறுமையால் மிகப்பெரியஉலகங்கள் ஸித்திக்கின்றன. பொறுக்குந்தன்மை மிகஅரிது. பார்த்த! தமமுள்ளவனுக்கு அரண்யத்தால் என்னபயன்? அதுபோலத் தமமில்லாதவனுக்கும் அரண்யத்தால் என்னபயன்? தமமுள்ளவன் எவ்விடத்தில் வஸிக்கிறானோ அதுதான் அரண்யம். ஆஸ்ரமமும் அதுதான்" என்றுசொன்னர். பீஷ்மருடைய

இந்தவசனத்தைக் கேட்டு யுதிஷ்டிரராஜர் அமிருதத்தால் திருப்தி அடைந்தவர்போல மிக்க ஸந்தோஷமுள்ளவரானர். அவர் தர்மத்தைத் தரிப்பவர்களுள் சிறந்த பீஷ்மரைத் திரும்பவும்கேட்க, பிறகு, கௌரவர்களிற் சிறந்த அந்தப்பீஷ்மரும் பிரீதியுடன் யாவற்றையும் அவருக்குச் சொல்லலானர்.

நூற்றைம்பத்தொன்பதாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் தவத்தின்பெருமையைச் சொல்லியது.)

"இந்தஜகத்தும் தவத்தை மூலமாகக் கொண்டதென்று கவிகள் சொல்லுகிறார்கள். தவத்தைச்செய்யாதமூடன் காரியங்களின் பயனை அடையமாட்டான். பிரபுவான பிரம்மதேவரானவர் தவத்தாலேயே இவ்வுலகத்தையெல்லாம் படைத்தார். அப்படியே ரிஷிகள் தவத்தால் வேதங்களை அடைந்தார்கள். அன்னத்தையும் கனிகளையும் கிழங்குகளையும் தவத்தாலேயே (பிரம்மதேவர்) உண்டுபண்ணினர். மனத்தை அடக்கின விரத்தர்களும் தவத்தினால் மூன்று உலகங்களையும் பார்க்கிறார்கள். அகதமுதலிய ஔஷதங்களும் பூஜ்யமான மூன்றுவேதவித்தைகளும் தவத்தாலேயே வித்திக்கின்றன. வித்தியானது தவத்தை மூலமாகக் கொண்டதன்றே? என்று அடையத்தகாததும் ஆராதிக்கத்தகாததும் அடக்கத்தகாததும் பொறுக்கத்தகாததுமா யிருக்கிறதோ அதுமுழுதும் தவத்தால் ஸாதிக்கப்படும். தவமென்பது தாண்டக்கூடியதன்று. ரிஷிகள் அணிமாமுதலிய ஐஸ்வர்யத்தைத் தவத்தாலேயே அடைந்திருக்கிறார்கள்; ஸந்தேகமில்லை. கள்ளைக் குடித்தவனும் உடையவன் விருப்பத்துக்கு மாறுகப் பொருளை எடுப்பவனும் ப்ரூணஹத்திசெய்தவனும் குருதாரத்தினிடம் சென்றவனுமான மனிதன் நன்றுகச்செய்யப்பட்ட தவத்தாலேயே பாபத்திலிருந்து விடுபடுகிறன். பலரூபமுள்ள தவத்தினுடைய அந்த அந்த வழிகளால் பிரவ்ருத்திக்கிறவனும் நிவ்ருத்திதர்மத்திலிருக்கிறவனுமான மனிதனுக்கு உபவாஸத்தைவிடப் பெரியதவமில்லை. மகாராஜனே! அஹிம்ஸை, ஸத்யவசனம், தானம், இந்திரியங்களின் அடக்கம் இவைகளைவிட மேலான தவமானது உபவாஸவிரதமே. தானத்தைக் காட்டிலும் மிகவும் செய்யக் கடினமானது வேறில்லை; தாயிலும் சிறந்ததான [1] ஆஸ்ரமமில்லை;

---

[1] 'யாவற்றையும் விட்டுவிலகின ஸந்யாஸியும் தாயைவிடக்கூடாது' என்பது பழைய உரை.

மூன்று வேதங்களையும் கற்றவர்களைக்காட்டிலும் மிகப்பெரியதில்லை; ஸந்யாஸத்திலும் மிகப்பெரிதான தவமில்லை. பிராம்மணர்களும் ரிஷிகளும் பித்ருக்களும் தேவர்களும் இந்திரியங்களை (வெளியிற் செல்லாமல்) ரக்ஷிக்கிறார்கள். ஆகையால், பொருளிலும் தர்மத்திலும் உபவாஸத்தைவிடப் பெரிதானதவமில்லை. ரிஷிகளும் பித்ருக்களும் தேவர்களும் மனிதர்களும் மிருகங்களும் பக்ஷிகளும் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமான மற்றுமுள்ள பிராணிகள் யாவும் தவத்தை மிகப்பெரிதாகக் கொண்டிருக்கின்றன. அவைகள் தவத்தால் ஸித்திபெறுகின்றன. இவ்விதமே தேவர்கள் தவத்தால் மஹிமையை அடைந்திருக்கிறார்கள். இந்த [1] வெவ்வேறான இன்பங்களும் எப்பொழுதும் தவத்தின்பயன்களாகும். தவத்தால் தேவத்தன்மையையும் அடையலாமென்பது நிச்சயம்" என்றுசொன்னார்.

நூற்றறுபதாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஸத்தியத்தின் லக்ஷணமுதலியவற்றைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பிராம்மணர்களும் ரிஷிகளும் பித்ருக்களும் தேவர்களும் ஸத்யத்தைத் தர்மமென்று கொண்டாடுகிறார்கள். நான் ஸத்யத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதனை எனக்குச் சொல்லவேண்டும். அரசரே! ஸத்யம் என்ன லக்ஷணமுள்ளது? அஃது எப்படி அடையப்படும்? ஸத்யத்தை அடைந்தால் என்னவரும்? அஃது எத்தன்மையது? சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"நான்கு ஜாதிகளுக்குமுள்ள தர்மங்களுடைய [2] ஸாங்கர்யமானது சிறந்ததன்று. பார்த்த! ஸத்தியமானது எல்லா ஜாதிகளுக்கும் பொதுவான தர்மமாகும்; ஸத்யமானது எப்பொழுதும் ஸாதுக்களிடமுள்ள தர்மமாகும். ஸத்யமானது ஸநாதனமான தர்மமாகும். ஸத்தியத்தையே பூஜிக்கவேண்டும். ஸத்யமானது உத்தமமான கதியாகும். ஸத்யமானது தர்மமும் தவமும் யோகமுமாகும். ஸத்யமானது

---

1 'காணப்படும் நக்ஷத்திர முதலிய ஜ்யோதிகள் தவத்தின்பயன்கள்' என்பது பழைய உரை.

2 ஒருஜாதிக்கு விதித்ததர்மத்தை மற்றொரு ஜாதியிலுள்ளவன் செய்வது.

ஸனாதனமான பிரம்மம். ஸத்தியமானது பெரிய யஜ்ஞமாகச் சொல்லப்படுகிறது. ஸத்யத்தில் யாவும் நிலைபெற்றிருக்கின்றன. ஸத்யத்தின் ஸ்வரூபம் எதுவோ அதையும் அதன் லக்ஷணத்தையும் அதன்பராக்ரமத்தையும் உள்ளபடி முறையே சொல்லுகிறேன். ஸத்யம் எவ்விதம் அடையப்படுமோ அதனையும் இதில் நீ தெரிந்துகொள்ளத்தக்கவன். பாரத! எல்லா உலகங்களிலும் ஸத்யம் பதின்மூன்று விதமாக அடையப்படுகிறது? அரசஸ்ரேஷ்டனே! உண்மை, ஸமதை, தமம், அமாத்ஸர்யம், க்ஷமை, லஜ்ஜை, திதிக்ஷை, அனஸூயை, த்யாகம், த்யானம், ஆர்யத்தன்மை, த்ருதி, எப்பொழுதும் தயை, அஹிம்ஸை என்று ஸத்யத்தின் உருவங்கள் 1பதின்மூன்றுகும்; ஸந்தேகமில்லை. உண்மையென்பது அழிவில்லாததும் நிலைபெற்றதும் விகாரமில்லாததும் எல்லாத் தர்மங்களுக்கும் விரோதமில்லாததுமாயிருக்கும். இது யோகத்தால் அடையப்படும். தன்னிடத்திலும் சத்ருவிடத்திலும் இஷ்டத்திலும் அனிஷ்டத்திலும் (ஒருவிதமாயிருப்பது) ஸமதை என்று சொல்லப்படுகிறது. இஃது விருப்பு வெறுப்புக்களையும் காமக்ரோதங்களையும் நசிக்கும்படி செய்தபின் அடையப்படும். எப்பொழுதும் வேறுவஸ்துவில் ஆசையில்லாமையும், காம்பீர்யமும், தைரியமும், பிறருக்குத் தீங்குசெய்யாமையும், கோபத்தை அடக்குவதும் தமமாகும். இது ஞானத்தால் அடையப்படும். தானத்திலும் தர்மத்திலுமுள்ள அடக்கமானது அமாத்ஸர்யமென்று அறிஞர்கள் கூறுகிறார்கள். எப்பொழுதும் நிலைபெற்ற ஸத்யத்தால் மனிதன் அமாத்ஸர்யமுள்ளவனாக இருக்கவேண்டும். ஸாதுவானவன் பொறுக்கக்கூடிய விஷயத்திற்போலவே பொறுக்கக்கூடாத விஷயத்திலும், எல்லாவிதமான ப்ரியங்களையும் அப்ரியங்களையும் க்ஷமிக்கவேண்டும். அதனால், ஸத்தியத்தை அடைவான். எப்பொழுதும் நல்ல அடக்கமுள்ள வாக்கும் மனமும் புத்தியுமுள்ளவனாகி மங்களகார்யத்தை நன்றாகச்செய்வதும் ஒருவிஷயத்திலும் வாட்டமில்லாமலிருப்பதும் லஜ்ஜையாகும். லஜ்ஜையானது தர்மத்தால் அடையப்படும். உலகத்தை அனுஸரித்து நடக்கவேண்டி அறம்பொருள்களின் நிமித்தம் பொறுத்துக்கொள்வது உத்தம தர்மமான திதிக்ஷையாகும். அது தைரியத்தால் அடையப்படும். கம்பீரமாக இருப்பது அனஸூயையாகும். இது தானத்தால் அடையப்படும். பற்றுக்களை முற்றும் துறந்தமனிதன் அவ்விதமே விஷயங்களையும் விடுவது ராகமும் த்வேஷமும் இல்லாதவனுக்

---

1 பதினென்கு கூறப்பட்டுள்ளன. த்யாகத்தையும் த்யானத்தையும் ஒன்றுக்கி த்யாகவிஷயமான த்யானமென்று பழையஉரை கூறுகின்றது.

குள்ள த்யாகமாகும். வேறுவிதமாயுள்ளது த்யாகமன்று. [1] ஆசை யற்றவனும் பயனைக் கருதாதவனுமாய் எவன் முயற்சியுடன் பிராணிகளுக்குச் சுபமான கர்மத்தைச்செய்கிறானே அவனுக்கு அஃது ஆர்யத்தன்மையாகும். ஸுகத்திலும் துக்கத்திலும் எதனல் விகாரத்தை அடையமாட்டானே அதுத்ருதியாகும். தனக்கு ஸம்பத்தை விரும்புகின்ற அறிவுள்ளவன் எப்பொழுதும் அதை அடையவேண்டும். (மனிதன்) எவ்விதத்திலும் பொறுமையுள்ளவனும் அவ்விதமே ஸத்யத்தைப் பரிதாகக்கொண்டவனுமாக இருக்கவேண்டும். ஸந்தோஷத்தையும் பயத்தையும் கோபத்தையும் விட்டவனனபண்டி-தன் [2] தயையை அடைவான். செய்கையாலும் மனத்தாலும் வாக்காலும் எல்லாப் பிராணிகளிடத்திலும் அனுக்ரஹமும் தானமும் அஹிம்ஸையாகும். இது ஸாதுக்களின் ஸநாதனமான தர்மம். பாரத! ஸத்யமென்னும் ஒரே லக்ஷணமுள்ள வெவ்வேறான இந்தப் பதின்மூன்று ஸ்வரூபங்களும் ஸத்யத்தையே அடுத்திருக்கின்றன; ஸத்யத்தையே பெருமைப்படுத்துகின்றன. அரசனே! ஸத்யத்தைச்சேர்ந்தகுணங்களின் முடிவைச் சொல்ல இயலாது. ஆகையால், பிராம்மணர்களும் தேவர்களும் பித்ருக்களும் ஸத்யத்தையே கொண்டாடுகிறார்கள். ஸத்யத்தைவிடப் பெரிய தர்மமில்லை. பொய்யைவிடப் பெரியபாதகமில்லை. ஸத்யமானது தர்மத்தின் நிலையாகும். ஆகையால், ஸத்யத்தைக் குறைவில்லாமலிருக்கச் செய்யவேண்டும். தானமும் தக்ஷிணையுடன்கூடிய யாகங்களும் மூன்று அக்கினிகளைச்சேர்ந்த அக்நிஹோத்ரமும் வேதங்களும் மற்றுமுள்ள தர்மநிச்சயங்களும் ஸத்தியத்திலிருந்து வருகின்றன. ஆயிரம் அச்வமேதயாகங்களும் ஒரு ஸத்யமும் தராசில் தூக்கப்பட்டன. ஆயிரம் அச்வமேதங்களைவிட ஒருஸத்யந்தான் சிறந்ததாயிருந்தது" என்று சொன்னர்.

நூற்றறுபத்தோராவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், கோபமுதலியவைகளின் உத்பத்தி முதலியவற்றைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "பரதர்களிற்சிறந்தவரே! எந்தஅஜ்ஞானத்திலிருந்து கோபமும், காமமும், சோகமும், அவிவேகமும், ப்ரவிருத்தி

[1] இதன்பிறகுள்ள அதிகபாடமான அரைச்லோகம் விடப்பட்டது.
[2] 'த்ருதிம்' என்பது மூலம்; அதற்கு, 'தயை' என்பது பழைய உரை.

யும், பரவசத்தன்மையும், மதமும், லோபமும், மாத்ஸர்யமும், ஈர்ஷையும், நிந்தையும், அஸூயையும், தயையும், பயமும் உண்டாகின்றனவோ, பிராஜ்ஞர்களிற் பெரியவரே! அதனையும் இவைகளையும் உள்ளபடி எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"மஹாராஜனே! பிராணிகளுக்கு அதிகபலமான சத்துருக்களென்றுசொல்லப்படும் இந்தப் [1] பதின்மூன்றும் நாலுபக்கத்திலும் இவ்வுலகிலுள்ளபுருஷர்களைப்பிடித்துக்கொண்டிருக்கின்றன. அஜாக்ரதையாயிருக்கும் புருஷனை இந்தப்பகைகள் ஜாக்ரதையுள்ளவைகளாகித் துன்பப்படுத்துகின்றன. இவைகள் செந்நாய்கள்போல மனிதனைக் கண்டமாத்திரத்தில் [2] பலாத்காரமாக நாசஞ்செய்கின்றன. புருஷஸ்ரேஷ்டனே! மனிதன், 'எப்பொழுதும் இவைகளிலிருந்து துக்கமுண்டாகிறது; இவைகளிலிருந்து பாபமுண்டாகிறது' என்று தெரிந்துகொள்ளவேண்டும். அரசனே! இவைகளுண்டாவதையும் இருப்பதையும் நசிப்பதையும் இப்பொழுது உனக்குச் சொல்லுகிறேன். முதலில், கோபமுண்டாவதை உள்ளபடி சொல்லுகிறேன். அரசனே! சொல்லுகிறதை என்னிடமிருந்து அதைக் கேள். லோபத்திலிருந்து கோபமுண்டாகிறது; பிறரிடம் (காணப்படும்) குற்றங்களால் வ்ருத்தியடைகிறது. அரசனே! அது பொறுமையால் தடுக்கப்படுகிறது; பொறுமையால் விலகுகிறது. சங்கல்பத்திலிருந்து காமமுண்டாகிறது. அஃது அனுபவிக்கப்பட்டு வளர்ச்சியடைகிறது. எப்பொழுது (மனிதன்) அறிவுள்ளவனுய் வெறுப்படைகிறானே அப்பொழுது உடனே காமம் நாசமடையும். [3] அவிவேகமானது அஜ்ஞானத்திலிருந்து உண்டாகிறது. அது பாபங்களை அடிக்கடி செய்வதால் வளர்ச்சியடைகிறது. (மனிதன்) எப்பொழுது அறிவிற் சிறந்தவர்களிடம் ஸங்கோசமாகச் சேருகிறானே அப்பொழுது அஃது உடனே நாசமடைகிறது. குருக்களிற் சிறந்தவனே! எவர்கள் இவ்வுலகிலுள்ள வேதத்திற்கு விரோதமான சாஸ்திரங்களைப் பார்க்கிறார்களோ அவர்களுக்குப் ப்ரவ்ருத்தியென்பது உண்டாகிறது. அது வேதத்தின் உண்மைப்பொருளை அறி

---

1 'லோபத்தைப்பற்றி முன்னம் கூறியிருத்தலால், இங்கு அதை விலக்கிப் பதின்மூன்றுகக் கொள்ளவேண்டும்' என்பது பழையவுரை. இவைகளுக்கு லக்ஷணம் சொல்லுமிடத்தில் இங்கேசொல்லிய முறைப்படி சொல்லப்படவில்லை. இதனைப் பழையவுரையும் கூறுகிறது.

2 வேறுபாடம். 3 பின்னர் உரிய இடத்தில் சொல்லப்படுவதால், அதிகபாடமான ஒன்றரை ச்லோகம் இங்கே விடப்பட்டன.

வதால் விலகுகிறது. மனிதனுக்குப் பிரியமான வஸ்து விலகு வதால் அதிலுள்ள பிரீதியிலிருந்து சோகம் உண்டாகிறது. எப் பொழுது சோகம் பயனற்றதென்றறிகிறானே அப்பொழுது அஃது உடனே நாசமடைகிறது. கோபத்தாலும் லோபத்தாலும் பரவசத் தன்மையுண்டாகிறது. அஃது அப்யாஸத்தால் வ்ருத்தி அடைகிறது. (அதில் கோபத்தாலுண்டானது) எல்லாப்ராணிக ளிடத்திலுமுள்ள தயையால் நிவ்ருத்தியாகிறது; (லோபத்தா லுண்டானது) வெறுப்பால் விலகுகிறது. ஸத்யத்தை விடுவதா லும் அஹிதர்களான மனிதர்களை அடைவதாலும் மாத்ஸர்யம் உண்டாகிறது. அப்பா! இது ஸாதுஜனங்களை அனுஸரிப்பதால் நாசமடைகிறது. குலத்தாலும் கல்வியாலும் தனத்தாலும் மனி தர்களுக்கு மதமுண்டாகிறது. அந்த மதமானது குலமுதலிய இவைகளை உண்மையாக அறிவதால் உடனே நாசமடைகிறது. காமத்தாலும் அதிக ஐச்வர்யத்தாலும் ஈர்ஷை உண்டாகிறது. அது மற்றப்பிராணிகளை நன்றாக அறிந்துகொள்வதால் நாசமடை கிறது. அரசனே! [1]விப்ரமத்தாலும் பகைக்கத்தக்கவைகளும் ஸம் மதிக்கத் தகாதவைகளுமான உலகவிரோதிகளின் வார்த்தைகளா லும் நிந்தை உண்டாகிறது. அஃது உலகங்களை நன்றாகப்பார்த்த பின் விலகுகிறது. எவர்கள் அபகாரம்செய்த பலிஷ்டனுக்கு ப்ரதிசெய்யச் சக்தியற்றவர்களோ அவர்களுக்குக் கடுமையான அஸூயை உண்டாகும். அது கருணையால் நிவிருத்தியடைகிறது. எப்பொழுதும் தீனர்களாயிருப்பவர்களைக் கண்டால் அதிலிருந்து தயை உண்டாகிறது. எப்பொழுது தர்மத்தின் நிலையைத்தெரிந்து கொள்ளுகிறானே அப்பொழுது அந்தத்தயையானது விலகுகிறது. பிராணிகளுக்கு எப்பொழுதும் அஜ்ஞானத்திலிருந்து [2]பயம் உண்டாகிறதாகக் காணப்படுகிறது. போகங்களுக்குள்ள நிலை யற்ற தன்மையை அறிந்து அனுபவித்தபின் அந்தப்பயம் விலகு கிறது. இந்தப் பதின்மூன்றும் மிக்க அடக்கமுள்ள மனிதனால் தான் ஜயிக்கப்பட்டவைகளென்று சொல்லுகிறார்கள். இந்தப் பதின்மூன்று தோஷங்களும் த்ருதராஷ்டிரன்குமாரர்களிடம் இருந்தன. எப்பொழுதும் ஸத்யத்தையே விரும்பு. [3]பெரியோர் களை ஸேவித்ததால் உன்னால் இவைகள் ஜயிக்கப்பட்டன" என்று சொன்னார்.

---

1 பரபரப்பினால் காரியங்களை மாறுபடச்செய்வது.

2 'லோபம்' என்பது மூலம்; அதற்கு 'பயம்' என்பது பழையஉரை.

3 வேறு பாடம்.

நூற்றைம்பத்திரண்டாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், கீநார்களின் லக்ஷணமுதலியவற்றைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! எப்பொழுதும் ஸாதுக்களுக்குள்ள க்ஷாந்தத்தனமில்லாமையை ஸாமான்ய ஜ்ஞானத்தால் அறிகிறேன். க்ஷாந்தர்களையும் அவர்களுக்குள்ள செய்கையையும் நானறியவில்லை. மனிதர்கள், மூட்களையும் கிணற்றையும் தீயையும் எவ்விதம் விலக்குகிறார்களோ அவ்விதம் க்ஷாந்தமானசெய்கையுள்ள மனிதனை விலக்குகிறார்கள். ஓ! பாரதரே! க்ஷாந்தனையிருப்பவன் இவ்வுலகிலும் இறந்தபின்னும் நிச்சயமாக எரிக்கப்படுகிறான். ஓ! கௌரவ்யரே! ஆகையால், அந்தக்ஷாந்தனுடைய நிச்சயமான தர்மத்தை நீர் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"1 நிந்திக்கத்தக்க ஆசையும் செய்கைகளுமுள்ளவனும், பிறரை நிந்திக்கிறவனும், நிந்திக்கப்படுகிறவனும், 'நான் (தெய்வத்தால்) வஞ்சிக்கப்பட்டவன்' என்றுசொல்லிக்கொண்டு கெட்டகாரியத்தைச்செய்கிறவனும், தான்கொடுத்ததைப் புகழ்ந்துபேசுகிறவனும், த்வேஷத்தைச் செய்கிறவனும், இகழ்ந்தகார்யங்களைச் செய்கிறவனும், ஸ்நேஹத்தைக்காண்பித்து வஞ்சிப்பவனும், (ஸாமர்த்தியமிருந்தும்) வெளிக்கு ஏழைத்தனத்தைக் கொண்டாடுகிறவனும், உள்ளதைப் புஜியாதவனும், அபிமானமுள்ளவனும், ஆசையுள்ளவனும், தன்னைப்புகழ்ந்துகொள்ளுகிறவனும், எல்லாரிடத்திலும் சங்கைப்படுகிறவனும், காகம்போல 2 வஞ்சகப்பார்வையுள்ளவனும், கிருபணனும், எப்பொழுதும் தன்வகுப்பைக்கொண்டாடுகிறவனும், ஆஸ்ரமங்களின்பகையும் ஸாங்கர்யமுமுள்ளவனும், எப்பொழுதும் ஹிம்ஸிப்பதைவிளையாட்டாகக் கொண்டவனும், குணதோஷங்களின்வேற்றுமையில்லாதவனும், பல பொய்யுள்ளவனும், அஹங்காரமுள்ளவனும், மிகவும்லோபியும் க்ஷாந்தமான செய்கையுள்ளவராவார்கள். இயற்கையில் தர்மமும் நற்குணங்களுமுள்ளவனைப் பாபி என்று அறிகிறவனையும், தன்சீலத்திற்கு ஒப்பாக ஒருவனையும் நம்பாதவனையும், பிறர்களுக்குத் தோஷமுள்ள ரஹஸ்யத்தை நன்றுகவெளியிடுகிறவனையும், தோஷங்கள்ஸமானமாயிருந்தும் தன்ஜீவனத்திற்காகப் பிறனைக்கெடுப்பவனையும், உபகாரஞ்செய்யும்பிறனை வஞ்சிக்கப்பட்டவ

1 வேறுபாடம். 2 பக்ஷபாதமுள்ளவன்.

ஞை நினைப்பவனையும், உபகாரஞ்செய்த மனிதனுக்கு ஸ்மயத்தில் பொருளைக்கொடுத்திருந்தாலும் பிறகு வருத்தமடைகிறவனையும், உண்ணத்தக்கதையும் குடிக்கத்தக்கதையும் நக்கியுண்ணத்தக்கதையும் மற்றுமுள்ள நல்லபோஜனத்தையும் பிறர்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது புஜிக்கிறவனையும் க்ரூரரென்றுசொல்லவேண்டும். எவன் பிராம்மணர்களின்பொருட்டு முதலில்(அன்னத்தைக்) கொடுத்துவிட்டு, பின்பு ஸ்நேஹமுள்ளவர்களுடன்கூடப் புஜிக்கிறானே அவன் இறந்தபின் ஸ்வர்க்கத்தை அடைவான்; இங்கும் அழிவில்லாத ஸுகமடைவான். பரதர்களில் மிகச்சிறந்தவனே! கேஷமத்தைவிரும்பும்மனிதனால் எப்பொழுதும்விலக்கத்தக்க இந்தக்குரூரனென்பவன் உனக்குச் சொல்லப்பட்டான்.

நூற்றறுபத்துமூன்றுவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், யாகமுதலியவைகளுக்காகப் பொருள்ஸம்பாதிக்கவேண்டிய விஷயத்தையும் பாபங்களையும் பாபங்களைப்போக்கத் தக்கப் பிராயச்சித்தங்களையும் சொல்லியது.)

பொருள் [1] அபஹரிக்கப்பட்டவனும் யாகஞ்செய்யப்போகிறவனும் எல்லாவேதாந்தங்களையும் அறிந்தவனும் குருவுக்காகவும் பித்ருகார்யத்திற்காகவும் அத்யயனத்திற்காகவும் தர்மப்படியாசிப்பவர்களுமான இந்தப்ராம்மணர்கள் ஸாதுக்களாகக் காணப்படுகிறார்கள். பாரத! பொருளில்லாத இந்தப்பிராம்மணர்களின்பொருட்டுத் தானத்தையும் வித்தையையும் அளிக்கவேண்டும். பரதர்களில்மிகச்சிறந்தவனே! வேறுபிராம்மணர்களின் பொருட்டு (யாகங்களில்) தக்ஷிணைதானஞ்செய்யவேண்டும். பிராம்மணர்களல்லாதவர்களுக்கும் யாகசாலையைவிட்டு வெளியில் பக்வமாகாத [2] அன்னம் கொடுக்கவேண்டுமென விதிக்கப்படுகிறது. அரசன் எல்லாரத்தினங்களையும் யோக்யதைக்குத்தக்கபடி கொடுக்கவேண்டும். [3] தக்ஷிணைகளுடன்கூடியவையும் அன்னத்துடன் கூடியவையுமான யாகங்கள் பிராம்மணர்பொருட்டே கொடுக்கத்தக்கவையாகும். பரிசுத்தமான ஆசாரமுள்ள அவர்கள் எப்பொழுதும் மற்றவர்களுக்குவேண்டி நற்குணத்துடன்

---

1 வேறுபாடம். 2 அரிசிமுதலியவை.

3 'பிராம்மணர்களே வேதங்களும் அதிகதக்ஷிணையுள்ளயாகங்களும் ஆகிறார்கள்' என்பது வேறுபாடம்.

யாகஞ்செய்கிறார்கள். வேலைக்காரர்களின் ஜீவனத்திற்குப்போது மானதும் மூன்றுவருஷங்களுக்கு வேண்டியதுமான தான்யமும் அதற்கதிகமானதும் எவனுக்கிருக்கிறதோ அவன் ஸோமரஸத்தைப் பானஞ்செய்யத்தக்கவனாகிறான். அரசன் விசேஷமாகத் தர்மிஷ்டனாயிருக்கும்பொழுது, யாகஞ்செய்யும் பிராம்மணனுக்கு யாகமானது ஓர் அம்சத்தால் தடைப்பட்டிருக்குமாகில் எந்த வைஶ்யன் பலபசுக்களுள்ளவனும் யாகங்களைவிட்டவனும் ஸோம பானஞ்செய்யாதவனுமாயிருக்கிறானே அவனுடைய குடும்பத்திலிருந்து அந்தப்பொருளை யாகத்திற்குவேண்டி அவ்வரசன் அபஹரிக்கலாம். சிறிதுகுற்றமுள்ள சூத்திரனுடைய வீட்டிலிருந்து பொருளை இஷ்டம்போல் அபஹரிக்கலாம். சூத்திரனுக்கு வீட்டில் சொந்தமானபொருளொன்றுமில்லை. நூறு பசுக்களுள்ள எவன் ஆதானஞ்செய்துகொள்ளாமலிருக்கிறானே ஆயிரம் பசுக்களுள்ள எவன் யாகஞ்செய்யாமலிருக்கிறானே அவர்களுடையகுடும்பங்களிலிருந்தும் ஆலோசியாமல் பொருளை அபஹரிக்கலாம். அரசன் தானஞ்செய்யாதவர்களிடமிருந்து எப்பொழுதும் தெரிவித்துவிட்டுப் பொருளை அபஹரிக்கலாம். அவ்விதமே நடத்திவரும் அரசனுக்குத் தர்மம் குறைவில்லாமலிருக்கும். அப்படியே ஆறுவேளை உண்ணுமலிருப்பவன் ஏழாவதுவேளை போஜனத்திற்காக [1] அஶ்வஸ்தனவிதிப்படி (ஒருநாளைக்குவேண்டிய தான்யத்தை) கர்மங்களை விட்டவனுடைய களத்திலிருந்தோ வயலிலிருந்தோ வீட்டிலிருந்தோ எங்கிருந்துகிடைக்குமோ அங்கிருந்து அபஹரித்துக்கொள்ளலாம். அரசன், கேட்பவனுக்கும் கேளாதவனுக்கும் அவனுக்கு இதை அறிவிக்கவேண்டும். தர்மமறிந்த அரசன் தர்மப்படி அவனுக்குத் தண்டனையை விதியாமலிருக்கவேண்டும். அரசனுடைய அவிவேகத்தால் பிராம்மணன் பசியால் துன்பப்படுவான். கல்வியையும் சீலத்தையும் அறிந்துகொண்டு இந்தப்பிராம்மணனுக்கு ஜீவனத்தைச் செய்துகொடுக்கவேண்டும். தகப்பனைவன் ஔரஸபுத்திரனைரக்ஷிப்பதுபோல இவனை ரக்ஷிக்கவேண்டும். ஒவ்வொரு வருஷத்திலும் செய்யத்தக்க தர்மங்களுக்குக் குறைவுவந்தால், எப்பொழுதும் வைஶ்வாநரி என்னும் இஷ்டியைச்செய்யவேண்டுமென்று முன்காலத்தில் தர்மத்தைக்கூறும் பெரியோர்களால் [2] அனுகல்பமானதர்மமொன்று சொல்லப்பட்டிருக்கிறது. விஶ்வேதேவர்களாலும் ஸாத்யர்களாலும் மஹரிஷிகளான பிராம்மணர்களாலும் ஆபத்காலங்களில் மரணத்திலிருந்துபயந்து இந்தத்

---

1. மறுநாளைக்கு வைத்துக்கொள்ளாமல் ஒவ்வொரு நாளைக்கு வைத்துக்கொள்ளும் வ்ருத்தி. 2 வேறுபாடம்.

தர்மம் ப்ரதிநிதியாகச் செய்யப்பட்டிருக்கிறது. மூக்கியமான தர்மத்தைச் செய்யச்சக்தியுள்ள எவன் அனுகல்பத்துடனிருக் கிறானே தர்ப்புத்தியுள்ள அவன் இவ்வுலகிலும் இறந்தபின்னும் அந்தத் தர்மத்தின்பயனை அடையமாட்டான். தர்மமறிந்த பிராம் மணன் அரசனிடத்தில் ஒன்றையும் தெரிவித்துக்கொள்ளாம லிருக்கவேண்டும்; அறிவிப்பதைவிட அறியாமலிருந்தால் தன் னுடைய வீர்யமானது அதிக பலமுள்ளதாயிருக்குமென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஆகையால், வேதமோதும் பிராம் மணர்களின் தேஜஸானது எப்பொழுதும் அரசனுக்குப் பொறுக் கக் கடினமாகும். அறிவுள்ளவனும் தர்மத்தை விதிப்பவனும் விதிப்படி நடப்பவனுமான பிராம்மணன் தேவனென்று சொல் லப்படுகிறான். அவனிடத்தில் கேஷமமல்லாததைச் சொல்லக் கூடாது; ஸாரமல்லாதவார்த்தையையுஞ் சொல்லக்கூடாது. க்ஷத் திரியன் தனக்குள்ள ஆபத்தைத் தன்கைவலிமையாலும் வைப்ய னும் சூத்திரனும் பொருள்களாலும் பிராம்மணன் மந்திரங்களா லும் ஹோமங்களாலும் விலக்கிக்கொள்ளவேண்டும். கன்னிகை யான ஸ்த்ரீயும் யௌவனமடைந்த ஸ்த்ரீயும் மந்திரமறியாதவ னும் விவேகமற்றவனும் உபநயனஞ் செய்யப்படாதவனும் அக்நி ஹோத்ரஹோமஞ் செய்கிறவர்களாயிருக்கக்கூடாது. இவர்கள் அக்னிஹோத்திரத்தின் அந்தஹோமத்தைச் செய்வார்களாகில் நரகத்தில் விழுவார்கள். ஆகையால், யாகத்தில் ஸமர்த்தனும் வேதங்களின் கரையைக் கண்டவனுமாயிருப்பவன் ஹோமஞ்செய் கிறவனாயிருக்கவேண்டும். ப்ரம்மாவைத் தேவதையாகக்கொண்ட [1]குதிரையை ஆதானத்திற்குத் தக்ஷிணையாக அளிக்காமற்போ னால் அவன் தர்மமறிந்தவர்களால் ஆதானஞ்செய்துகொள்ளாதவ னென்றே சொல்லப்படுகிறான். இந்திரியங்களை ஜயித்தவனும் ப்ரத்தையுள்ளவனுமாய் மற்றப் புண்யகர்மங்களைச் செய்துகொள் ளலாம். போதுமானதக்ஷிணையில்லாத யாகங்களை எவ்விதத்திலும் செய்யக்கூடாது. ஏனெனில், தக்ஷிணையில்லாதயாகமானது ப்ரஜை களையும் பசுக்களையும் ஸ்வர்க்கத்தையும் கொல்லும்; இந்திரியங்க ளையும் இங்குள்ளகீர்த்தியையும் மேலுலகத்திற்குத்தக்க கியாதியை யும் ஆயுளையும் அறுக்கும். எந்தச் சில பிராம்மணர்கள் ராஜஸ்வலையு டன் சேர்ந்தவர்களோ எவர்கள் அக்னியைவிட்டவர்களோ எவர்க ளின் குலம் வேதமோதுபவர்களில்லாததோ அவர்கள் யாவரும் சூத்திரனின் செய்கையுள்ளவர்களாகிறார்கள். கிணற்றையே ஜல மாகக்கொண்ட கிராமத்தில் பிராம்மணன் சூத்திரஸ்த்ரீயின்

1 வேறுபாடம்.

பதியாயிருந்துகொண்டு பன்னிரண்டு வருஷங்கள் வஸித்தபின் சூத்திரகர்மத்ததையே அடைந்தவனுகிறான். தன் பார்யையல்லாத ஸ்திரீயைச் சயனத்தில் ஏற்பவனும் சூத்திரனையும் க்ஷத்திரியனையும் வைச்யனையும் பெரியவர்களென்று நினைப்பவனுமான பிராம்மணன் பின்புறத்தால் புல்லின்மேல் உட்காரவேண்டும். அரசனே! இதுவிஷயத்திலும் அவன் எப்படி நன்றுகச் சுத்திபெறுவர்னை அப்படிக்குள்ள என்வசனத்தைக் கேள். நின்றும் உட்கார்ந்தும் விளையாடிக்கொண்டும் கீழானஜாதியை ஸேவிப்பவனுன பிராம்மணன் ஓர்இரவில் செய்கிற பாபத்தை மூன்றுவருஷங்கள் விரதமுள்ளவனுயிருந்து விலக்கிக்கொள்ளவேண்டும். அரசனே! விளையாட்டுடன்கூடிய பொய்யும் ஸ்திரீகளிடத்திலும் விவாஹ ஸமயத்திலும் உயிருக்கு அபாயமுள்ள ஸமயத்திலும் எல்லாப் பொருளும் அபஹரிக்கப்படும் ஸமயத்திலும் சொல்லப்படும் பொய்யும் துன்பத்தை உண்டுபண்ணுகிறதில்லை. இவ்வைந்து பொய்யும் பாதகங்கள் அல்லவென்று சொல்லுகிறார்கள். சுபமான கல்வியை ஹீனனிடமிருந்தும் ஸ்ரத்தையுடன் பெற்றுக் கொள்ளலாம். அசுத்தமானவிடத்திலிருந்தும் ஆலோசியாமல் ஸுவர்ணத்தை எடுத்துக்கொள்ளலாம். குற்றமுள்ள குலத்திலிருந்தும் ரத்நம்போன்ற ஸ்த்ரீயை எடுத்துக்கொள்ளலாம். விஷத்திலிருந்தும் அமிருதத்தைப் பானஞ்செய்யலாம். ஸ்திரீகளும் ரத்நமும் ஜலங்களும் தர்மப்படி தோஷமுள்ளவைகளல்ல. வைச்யனுயிருப்பவன், பசுக்கள் பிராம்மணர்கள் இவர்களின் ஹிதத்திற்குவேண்டியும் ஜாதிகளுக்கு ஸாங்கர்யமுண்டாகுங்காலத்திலும் தன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டியும் ஆயுதங்களை எடுக்கலாம். மஹாராஜனே! கட்குடித்தவனும் பிராம்மணனைக் கொன்றவனும் குருவின்தாரத்திற் சென்றவனும் தாமதமின்றி உடனே பதிதராகிறார். ஸுவர்ணத்தைத்திருடுவதும் பிராம்மணனுடைய பொருளைத்திருடுவதும் பாதகமாகும். சூதாடுவதும் கள்குடிப்பதும் செல்லத்தகாதஸ்திரீயிடஞ் செல்லுவதும் பதிதர்களுடன் சேருவதும் (பிராம்மணனல்லாதவன்) பிராம்மணஸ்திரீயினிடம் செல்லுவதுமாகிய இப்பாவங்கள் (அறிந்துசெய்யப்பட்டால்) பிராயச்சித்தஞ் சொல்லத்தக்கவைகளல்லவென்று நினைக்கிறார்கள். இவைகள் மரணத்ததையே முடிவாகக்கொண்டவைகளென்பது நிச்சயம். பதிதனுடன்கூடச் சேர்ந்துபோவதாலும் இருப்பதாலும் புஜிப்பதாலும் ஒருவருஷத்தில் பதிதனுவான். அவனுக்கு யாகஞ்செய்விப்பதாலும் அத்யயனஞ் செய்விப்பதாலும் 1 தானங்கொடுப்பதாலும் உடனே பதிதனுவான். இந்தப்

1 'விவாஹத்தால் சம்பந்தம்செய்வது' என்பது வேறுபாடம்.

பாவங்களைத்தவிர மற்றவைகள் பிராயச்சித்தமுள்ளவைகளென்பது நிச்சயம். பிராயச்சித்தத்திற்குத்தக்க விதியுடனிருந்து காலத்தால் திரும்பவும் அப்பாவத்தில் ருசியுள்ளவனுயிருக்கக்கூடாது. இவர்களில் முதல் 1 மூன்றுபேர்களைப்பற்றிய பிரேதகாரியம் வந்திருக்கும்பொழுது (அவர்களின் ஞாதியிடமிருந்து) 2 அன்னத்தையும் தனத்தையும் 3 பெற்றுக்கொள்ளலாம். ஆலோசனைசெய்யவேண்டாம். இப் பாவமுள்ளவர்கள் அமாத்தியர்களானாலும் குருக்களானாலும் அவர்களைத் தர்மமுள்ளவன் தர்மப்படி விலக்கவேண்டும். இவர்கள் பிராயச்சித்தங்களைச் செய்துகொள்ளாமல் ஸஹவாஸஞ்செய்யத் தக்கவர்களல்லர். அதர்மத்தைச்செய்தமனிதன் தர்மத்தாலும் தவத்தாலும் பாபத்தை விலக்கவேண்டும். 4 திருடனைத் திருடனென்று சொல்லுகிறவன் திருட்டுக்குள்ள பாபத்தை அடைவான். திருடனல்லாதவனைத் திருடனென்று சொன்னவன் இரண்டுமடங்கு பாபத்தை அடைவான். 5 கன்னிகை தோஷமுள்ளவளானால் பிரம்மஹத்தியின் மூன்றிலொரு பாகத்தை அடைகிறாள். எவன் அவளைத் தோஷமுள்ளவளாகச் செய்தவனே அவன் அந்த ப்ரம்மஹத்திபாபத்தின் மிச்சத்தை அடைகிறான். பிராம்மணர்களை நிந்திப்பதாலும் அவ்விதபாபமுண்டு. அவர்களைத்தொட்டுத் தள்ளுவதால் அதைவிட மிக அதிகமான பாபம் உண்டு. (அவர்களை நிந்தித்த) பாபியானவன் நூறு வருஷங்கள் நரகத்தில் ஒருநிலையடையாமலிருப்பான். தொட்டுத் தள்ளியவன் ஆயிரம் வருஷம் நரகத்தில் வஸிப்பான். ஆகையால், பிராம்மணர்களை நிந்திக்கவுங்கூடாது; ஒருஸமயத்திலும் தள்ளவுங்கூடாது. அரசனே! பிராம்மணர்களின் காயத்திலிருந்துவரும் உதிரமானது எவ்வளவு அணுக்களைச் சேரச் செய்யுமோ அவ்வளவு வருஷங்கள் அந்தக் காயத்தைச்செய்த மனிதன் நரகத்திலிருப்பான். ப்ரூணஹத்திசெய்தவன் யுத்தமத்தியில் ஆயுதங்கள் விழுந்துஅடிபடுவதால் சுத்திஅடைவான்; அல்லது, ஜ்வாலையுள்ள அக்னியில் தன் சரீரத்தை ஹோமஞ்செய்யவேண்டும்; அதனல் சுத்திஅடைவான். கள்குடித்தபிராம்மணன், உஷ்ணமான கள்ளைக் குடித்து, அக்கள்ளால் சரீரம் நன்றுக எரிக்கப்படுமானல் அந்தப் பாபத்திலிருந்து விடுபடுகிறான்; அல்லது, மரணத்தை அடைந்து

---

1 கள் குடித்தவன், பிராம்மணனைக் கொன்றவன், குருதாரத்திற் [சென்றவன்.

2 வேறுபாடம்.

3 இம்மூன்றுபேர்கள் இறப்பதில் அவர்களின் ஞாதிகளுக்குத் தீட்டு இல்லை; ஆகையால், அவர்களிடமிருந்து அன்னமுதலியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். 4, 5 வேறுபாடம்.

சுத்தியடைகிறான். அவ்விதம் சுத்தமானபிராம்மணன் நல்ல லோகங்களை அடைகிறான்; இல்லாவிட்டால் அடையமாட்டான். பாபபுத்தியுள்ளவனை துராத்மா குருதாரத்தைச்சேர்ந்தால் ஜ்வலிக்கும்சிலையைக் கட்டிக்கொண்டு மரணமடைவதால் சுத்தனவான்; அல்லது, ஆண்குறியையும் விருஷணத்தையும் தானே இருகையிலுமெடுத்துக்கொண்டு நிருதிதிக்கை அடைந்து குரூரமான பிராணிகளிடஞ்சென்று விழவேண்டும். அல்லது, பிராம்மணர்களுக்குவேண்டியாவது உயிரை விட்டால் அதனல் சுத்தி பெறுவான். அல்லது, அப்வமேதமென்னும் யாகத்தையாவது கோஸவமென்னும் யாகத்தையாவது [1]மருத்ஸோமமென்னும் யாகத்தையாவது செய்வதால் இவ்வுலகிலும் இறந்தபின்னும் நன்றுகப் பூஜிக்கப்படுவான். அவ்விதமே பன்னிரண்டுவருஷங்கள் [2]காபோதமென்னும் தர்மத்தைச் செய்யவேண்டும். தன்கர்மத்தை ஜனங்களிடம் தெரிவித்துக்கொண்டு ஒருவேளை பிச்சை யெடுக்கவேண்டும். பிரம்மஹத்திசெய்தவன் மூன்றுவேளையிலும் ஸ்நானஞ்செய்துகொண்டு இவ்விதத் தவத்துடனிருக்கவேண்டும். இவ்விதமே கர்ப்பத்தையறியாமல் கர்ப்பமுள்ளஸ்த்ரீயை எவன் கொன்றானோ அவனும் செய்யவேண்டும். கர்ப்பிணியான ஸ்திரீயைக்கொல்லுவதில் இரண்டுமடங்கு பிரம்மஹத்திபாபமுண்டு. கள்குடித்தவன், ஆகாரநியமமுள்ளவனும் [3]பிரம்மசாரியும் இரவில் ஸஞ்சரிப்பவனுமாயிருந்துகொண்டு மூன்றுவருஷங்களுக்குமேல் அக்னிஷ்டுத்தென்னும் யாகத்தை மட்டும் செய்யவேண்டும். அல்லது, ஆயிரங்காளைகளுடன்கூடிய பசுக்களைத் தானஞ்செய்து பரிசுத்தியை அடையவேண்டும். வைப்யனைக்கொன்றால் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு நூறுகாளைகளுடன்கூடிய பசுக்களைத் தானஞ்செய்து பரிசுத்தியை அடையவேண்டும். சூத்திரனைக் கொன்றால் ஒருவருஷத்திற்குப்பிறகு நூறுகாளைகளையும் பசுக்களையுங்கொடுத்துச் சுத்திபெறவேண்டும். நாய், பன்றி, கழுதை, பூனை, காடை, தவளை, காக்கை, பாம்பு, எலிஇவைகளைக்கொன்றால் சூத்திரனைக்கொன்றதற்குள்ள பிராயச்சித்தவ்ரதத்தைச் செய்யவேண்டும். ராஜனே! பசுவைக்கொன்றாலும் மற்றப்பிராணிகளைக்கொன்றாலும் தோஷம்சொல்லப்பட்டிருக்கிறது. (அவற்றுள்) எலும்பில்லாதபிராணிகளைக் கொன்றால் பசுவின்மூத்திரத்தை ஒருதரம்

---

1 அக்னிஷ்டோமமென்பது வேறுபாடம்.

2 தான்யத்தைச்சேர்த்துவைத்துக்கொள்ளாமல் உதிர்ந்த தான்யங்களைக் கொண்டு ஜீவிக்கும்ஒருவிரதம். காபோதம் — கபோதத்திற்குரியது. கபோதம்=புறு. 3 ஸ்திரீஸம்பந்தமில்லாதவன்.

சுத்தியடைகிறான். அவ்விதம் சுத்தமானபிராம்மணன் நல்ல லோகங்களை அடைகிறான்; இல்லாவிட்டால் அடையமாட்டான். பாபபுத்தியுள்ளவனை துராத்மா குருதாரத்தைச்சேர்ந்தால் ஜ்வலிக்கும்சிலையைக் கட்டிக்கொண்டு மரணமடைவதால் சுத்தனவான்; அல்லது, ஆண்குறியையும் விருஷணத்தையும் தானே இருகையிலுமெடுத்துக்கொண்டு நிருதிதிக்கை அடைந்து குரூரமான பிராணிகளிடஞ்சென்று விழவேண்டும். அல்லது, பிராம்மணர்களுக்குவேண்டியாவது உயிரை விட்டால் அதனல் சுத்தி பெறுவான். அல்லது, அப்வமேதமென்னும் யாகத்தையாவது கோஸவமென்னும் யாகத்தையாவது [1]மருத்ஸோமமென்னும் யாகத்தையாவது செய்வதால் இவ்வுலகிலும் இறந்தபின்னும் நன்றுகப் பூஜிக்கப்படுவான். அவ்விதமே பன்னிரண்டுவருஷங்கள் [2]காபோதமென்னும் தர்மத்தைச் செய்யவேண்டும். தன்கர்மத்தை ஜனங்களிடம் தெரிவித்துக்கொண்டு ஒருவேளை பிச்சை யெடுக்கவேண்டும். பிரம்மஹத்திசெய்தவன் மூன்றுவேளையிலும் ஸ்நானஞ்செய்துகொண்டு இவ்விதத் தவத்துடனிருக்கவேண்டும். இவ்விதமே கர்ப்பத்தையறியாமல் கர்ப்பமுள்ளஸ்த்ரீயை எவன் கொன்றானோ அவனும் செய்யவேண்டும். கர்ப்பிணியான ஸ்திரீயைக்கொல்லுவதில் இரண்டுமடங்கு பிரம்மஹத்திபாபமுண்டு. கள்குடித்தவன், ஆகாரநியமமுள்ளவனும் [3]பிரம்மசாரியும் இரவில் ஸஞ்சரிப்பவனுமாயிருந்துகொண்டு மூன்றுவருஷங்களுக்குமேல் அக்னிஷ்டுத்தென்னும் யாகத்தை மட்டும் செய்யவேண்டும். அல்லது, ஆயிரங்காளைகளுடன்கூடிய பசுக்களைத் தானஞ்செய்து பரிசுத்தியை அடையவேண்டும். வைப்யனைக்கொன்றால் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு நூறுகாளைகளுடன்கூடிய பசுக்களைத் தானஞ்செய்து பரிசுத்தியை அடையவேண்டும். சூத்திரனைக் கொன்றால் ஒருவருஷத்திற்குப்பிறகு நூறுகாளைகளையும் பசுக்களையுங்கொடுத்துச் சுத்திபெறவேண்டும். நாய், பன்றி, கழுதை, பூனை, காடை, தவளை, காக்கை, பாம்பு, எலிஇவைகளைக்கொன்றால் சூத்திரனைக்கொன்றதற்குள்ள பிராயச்சித்தவ்ரதத்தைச் செய்யவேண்டும். ராஜனே! பசுவைக்கொன்றாலும் மற்றப்பிராணிகளைக்கொன்றாலும் தோஷம்சொல்லப்பட்டிருக்கிறது. (அவற்றுள்) எலும்பில்லாதபிராணிகளைக் கொன்றால் பசுவின்மூத்திரத்தை ஒருதரம்

---

1 அக்னிஷ்டோமமென்பது வேறுபாடம்.

2 தான்யத்தைச்சேர்த்துவைத்துக்கொள்ளாமல் உதிர்ந்த தான்யங்களைக் கொண்டு ஜீவிக்கும்ஒருவிரதம். காபோதம் — கபோதத்திற்குரியது. கபோதம்=புறு. 3 ஸ்திரீஸம்பந்தமில்லாதவன்.

தமையனுன பரிவித்தியும் விவாஹஞ் செய்யப்பட்ட ஸ்திரீயுமாகிய அவர்கள் யாவரும் பதிதர்களென்று சொல்லப்படுகிறார்கள். அவர்கள் யாவருமே வீரஹத்திசெய்தவன் எந்தப்பிராயச்சித்தஞ் செய்துகொள்ளுவமோ அதைச் செய்துகொள்ளவேண்டும். அல்லது, பாபம் விலகவேண்டி ஒரு மாஸம் சாந்திராயணத்தை யாவீது கிருச்சிரத்தையாவது செய்துகொள்ளவேண்டும். பரிவேத்தாவென்னும் அந்தத்தம்பியானவன் பரிவித்தியான தமையன் பொருட்டு விவாஹஞ்செய்த அந்த ஸ்திரீயை மருமகளாகமரியாதையுடன் அளிக்கவேண்டும். தமையனால் அனுமதி கொடுக்கப்பட்டுத் தம்பியும் பிறகு அவளைப்பெற்றுக் கொள்ளலாம். (இவ்விதஞ் செய்தால்) அவ்விருவர்களும் அந்த ஸ்திரீயுமே தர்மப்படி பாபத்திலிருந்து விடுபடுகிறார்கள். கோவல்லாத பசுஜாதிகளின் ஹிம்சை குற்றமாகாது. மனிதனைப் பசுக்களுக்கு எஜமானனென்றும் அவைகளைப் புஜிக்கத்தக்கவனென்றும் (பெரியோர்கள்) அறிவிக்கிறார்கள். சமீமிருகத்தின்வாலைத் [1]தரித்துக்கொண்டு (நாடகத்திற்குச் செல்லும் பிராமணன்) மண்பாத்திரத்தை எடுத்துக்கொண்டும் தன் கர்மத்தை வெளியிற் சொல்லிக்கொண்டும் ஏழுவீடுகளில் பிச்சை எடுக்கவேண்டும். அவ்விதமே கிடைத்ததைப்புஜித்துக்கொண்டு இருப்பானுகில் பன்னிரண்டுநாளில் சுத்திபெறுவான். எவன் தரித்துக் கொள்வதற்காகச் சமரியின்வாலை அறுக்கிறானே அவன் அந்த வ்ரதத்தை ஒருவருஷம் செய்யவேண்டும். இவ்விதம் மிக உத்தமமான பிராயச்சித்தம் மனிதர்களுக்கு இருக்கவேண்டும். தானத்தில் சக்தி பெற்றவர்களுக்கு இஃது அனைத்தையும் தானமாகவும் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆஸ்திகர்களுக்கு ஒரு பசுவைமட்டும் தானஞ்செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நாய், பன்றி, மனிதர்கள், கோழி, கழுதை இவைகளின் மாம்ஸத்தையும் மூத்திரத்தையும் மலத்தையும் புஜித்தால் திரும்பவும் உபநயனஞ் செய்துகொள்ளவேண்டும். ஸோமபானஞ்செய்த பிராம்மணன் கள்குடித்தவனுடைய மனைத்தை ஏற்றுக்கொண்டால் இந்திரியங்களை ஜயித்தவனும் மனத்தை அடக்கினவனுமாகி மூன்று நாள் உஷ்ணமான ஜலத்தைக்குடிக்கவேண்டும். அவன் ஜலத்தைக் குடித்தபின் திரும்பவும் மூன்றுநாள் காற்றைப் புஜிப்பவனுயிருக்கவேண்டும். பிராம்மணனுக்கு விசேஷமாக அஜ்ஞானத்தாலுண்டாகும் பாபம் எதுவோ அதற்குள்ள இந்தப் பிராயச்சித்தம்செய்வது இவ்விதம் சொல்லப்பட்டது" என்று சொன்னர்.

---

1 'சமீமிருகத்தின் வால்மயிரைத் தலையில்தரித்துப் பெண்வேஷம் பூண்டு நடிக்கும் பிராம்மணன்' என்பது பொருள்.

நூற்றறுபத்துநான்காவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(நகுலனுல் வினவப்பட்ட பீஷ்மர், கத்தியின் உத்பத்தி முதலியவற்றைச் சொல்லியது.)

பிறகு, கத்திச்சண்டையில்ஸமர்த்தனை நகுலன், கதியின் முடிவு ஸமயத்தில், அம்புப்படுக்கையிலிருக்கும் பிதாமஹரை நோக்கி இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கினன். "தர்மங்களை அறிந்த பிதாமஹரே! வில்லானது மிகச்சிறந்த ஆயுதமென்று சொல்வதுண்டு. எனக்கோ மிக்க கூர்மையானகத்தியே சிறந்ததென்று தோற்றுகிறது. அரசரே! வில் அறுக்கப்பட்டாலும் அம்புகள் அழிந்துபோனலும் கத்தியால் யுத்தஞ்செய்யவும் தன்னை ரக்ஷித்துக்கொள்ளவுங் கூடும். அந்தச்சமயத்தில் வில்லை எடுத்தவர்களையும் கதாயுதத்தையும் வேலாயுதத்தையும் ஏந்தியவர்களையும் கத்தியெடுத்த ஒருவீரன் எதிர்த்துக்கொல்லச் சமர்த்தனுவான். அரசரே! எல்லா யுத்தங்களிலும் எந்த ஆயுதம் மிகச்சிறந்ததாகும்? இதில் எனக்குச் சந்தேகமும் (இதைக்கேட்பதில்) அதிக ஊக்கமுமிருக்கின்றன. கத்தியானது என்னபயனுக்காக யாரால் எவ்விதம் உண்டுபண்ணப்பட்டது? பிதாமஹரே! கத்திக்கு முதல் ஆசார்யரையும் சொல்லவேண்டும்" என்றுகேட்டனன். [1] ஸாமர்த்தியத்துடன் கூடியதும், ஸ்வரூபமும் ஆச்சர்யமுமான பொருளுள்ளதும், ஸுகமாயிருப்பதுமான மாத்ரியின் குமாரனை புத்தியுள்ள அந்த நகுலனுடைய அந்த வசனத்தைக்கேட்டு, அதன் பிறகு, எல்லாத்தர்மங்களையும் அறிந்தவரும் தனுர்வேதத்தில் கரைகண்டவரும் சரதல்பத்தை அடைந்தவருமான அந்தப்பீஷ்மர், த்ரோணரின் சிஷ்யனும் நல்ல சிநேஹத்துடன் கூடியவனும் ப்ரஸன்னஞ்செய்கிறவனும் மஹாத்மாவுமான நகுலன்பொருட்டு அந்த வசனத்திற்கு உத்தரமாக நல்ல ஸ்வரத்தாலும் அக்ஷரங்களாலும் பொருத்தமுள்ளதான வாக்கியத்தைச் சொல்லத்தொடங்கினர்.

"மாத்ரியின்குமாரனே! இதை எவ்விதம் அறியவிரும்புகிறையோ அவ்விதம் உண்மையைக்கேள். [2] தாதுக்களுள்ள மலைபோன்றநான் உன்னுல் ஞாபகப்படுத்தப்பட்டவனுகிறேன். அப்பா! முன் காலத்தில் இவ்வுலகமுழுவதும், அறியப்படாததும் ஆகாயமற்றதும்

---

1 வேறு பாடம்.

2 யுத்தத்திலடிபட்டு ரக்தத்தால் நனைந்திருத்தலால், தாதுமயமான மலை உவமையாயிற்று.

காட்டத்தகாத பூதலமுள்ளதும் இருளால்சூழப்பட்டதும் ஸ்பர்சமில்லாததும் பார்க்க மிக்ககஷ்டமானதும் சப்தமில்லாததும் நிச்சயிக்கத்தகாததுமான ஒரேஜலக்கடலாயிருந்தது. அப்பொழுது பிதாமஹர் உண்டானர். சக்தியுள்ள அப்பிதாமஹரானவர் வாயுவையும் அக்னியையும் ஸூர்யனையும் படைத்தார்; மேலே ஆகாசத்தையும் கீழே பூமியையும் ராக்ஷஸர்களுள்ள பாதாளத்தையும் படைத்தார். பிறகு, அவர் சந்திரனையும் (பிரஸித்தமான) நக்ஷத்திரங்களையும் மற்ற நக்ஷத்திரங்களையும் கிரஹங்களையும் லவங்களையும் கூஷணங்களையும் பகல்களையும் இரவுகளையும் ருதுக்களையும் வருஷங்களையும் உண்டுபண்ணினர். பிறகு, பூஜ்யரான பிதாமஹரானவர் உலகத்திலுள்ள ஒரு சரீரத்தை எடுத்துக்கொண்டு உத்தமமான தேஜஸ்ஸுள்ள புத்திரர்களான மரீசியையும் ப்ருகுவையும் அத்ரியையும் புலஸ்தியரையும் புலஹரையும் க்ரதுவையும் வஸிஷ்டர் அங்கிரஸ் இருவர்களையும் பரத்வாஜரையும் உண்டுபண்ணினர். அவ்விதமே தக்ஷப்ரஜாபதியானவர் அறுபது கன்னிகைகளை உண்டுபண்ணினர். அக்கன்னிகைகளும் பிரஜைகளை உண்டுபண்ணவேண்டி எல்லாப்ரம்மரிஷிகளையும் அடைந்தார்கள். அந்த ஸ்திரீகளிடமிருந்து தேவர்களும் பித்ருக்கூட்டங்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸுகளும் பலவிதராக்ஷஸர்களும் பக்ஷிகளும் மிருகங்களும் மீன்களும் பசுக்களும் பெரியஸர்ப்பங்களும் ஜலத்திலும் பூமியிலும் ஸஞ்சரிக்கும் பலவித ஆகிருதியும் பலமுமுள்ள மற்றப்பிராணிகளும் [1] உத்பிஜ்ஜம், ஸ்வேதஜம், அண்டஜம், ஜராயுஜம் என்ற எல்லாப்பிராணிகளும் உண்டாயின. அப்பா! அவ்விதம் அசைவற்றதும் அசைவதுமான உலகம் அனைத்தும் உண்டாயிற்று. இந்தஸ்ருஷ்டியைச் செய்தபின் எல்லாஉலகங்களுக்கும் பிதாமஹரான பிரம்மதேவர் திரும்பவும் சாஸ்வதமும் வேதத்தில் கூறியதுமான தர்மத்தை அடைந்தார். அந்த வைதிகதர்மத்தில் ஆசாரியர்களும் புரோஹிதர்களும் ஆதித்யர்கள் வஸுக்கள் ருத்திரர்கள் ஸாத்யர்கள் மருத்துக்கள் அஸ்வினிகள் ஆகிய தேவர்களும் ப்ருகு, அத்ரி, அங்கிரஸ், கஸ்யபர், வஸிஷ்டர், கௌதமர், அகஸ்தியர், நாரதர், பர்வதர் என்னும் ஸித்திபெற்றதபோதனர்களும் வாலகில்யமுனிவர்கள் பிரபாஸர்கள் ஸிகதர்கள் [2] க்ருதபர்கள் ஸோமவாயவ்யர்கள் ஸஹ்யானரர்கள் மரீசிபர்கள் கரூஷர்கள் ஹம்ஸர்கள் அக்னியோனிகள் மாஷப்ரஸ்தர்கள் ப்ரஸ்னிகள் என்னும் ரிஷிகளும் உறுதியுள்ளவர்களாயிருந்துகொண்டு பிரம்மதேவரின் கட்டளைப்படி இருந்தார்கள். கோபத்தையும்

---

1 ஆதிபர்வம் ருஎ - ம் பக்கம் குறிப்பிற்காண்க. 2 வேறுபாடம்.

லோபத்தையுமுடைய அஸுரேந்திரர்களோ பிரம்மதேவரின் அந்தக்கட்டளையைமீறித் தர்மத்திற்குக் கெடுதியைச் செய்தார்கள். ஹிரண்யகசிபு, ஹிரண்யாக்ஷன், விரோசனன், சம்பரன், விப்ரசித்தி, [1] ப்ரஹ்லாதன், நமுசி, பலி இந்த அஸுரர்களும் மற்றுமுள்ள பல அஸுரர்களும் கூட்டத்துடன் சேர்ந்து தர்மவரம்பைமீறி அதர்மத்தில் நிச்சயமுள்ளவர்களாய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாரத! 'எல்லோரும் ஸமமான ஜாதியில் பிறந்தவர்கள். தேவர்கள் எவ்விதமோ அவ்விதமே நாமும்' என்ற இந்தக்காரணத்தைக்கொண்டு தேவர்களுடனும் ரிஷிகளுடனும் பொறுமையுள்ளவர்களான அஸுரர்கள் பிராணிகளிடம் பிரியத்தையும் தயையையும் செய்யாமலிருந்தார்கள். அவர்கள் மூன்று உபாயங்களையும் விட்டுத் தண்டோபாயத்தால் பிரஜைகளைத் தடைசெய்தார்கள். அஸுரஸ்ரேஷ்டர்கள் கர்வத்தால் அந்தத் தேவர்களுடன் ஒற்றுமையை அடையாமலிருந்தார்கள். பிறகு, எல்லா உலகங்களாலும் நமஸ்கரிக்கப்படும் பூஜ்யரான பிரம்மதேவரானவர் அப்பொழுது மிக்க அழகுள்ளதும் தாமரைமலர்களைப்போல நக்ஷத்திரங்களைத் தாங்குவதும் நூறு யோஜனை விஸ்தாரமுள்ளதும் ரத்னக்கூட்டங்களாலும் முத்துக் கூட்டங்களாலும் நிறைந்ததுமான இமயமலையின் [2] புறத்தில் இருந்தார். மகனே! தேவர்களில் மிகச்சிறந்த அந்தப்பிரம்மதேவர் புஷ்பித்த மரங்களடர்ந்த காடுகளுள்ளதான அந்தச் சிறந்த இமயமலையில் உலகங்களுக்கு ப்ரயோஜனம் உண்டாகவேண்டியதற்காக இருந்தார். பிறகு, பிரபுவான பிரம்மதேவர் ஆயிரம் வருஷங்களின் முடிவில், சாஸ்திரத்தில் காணப்பட்ட விதிப்படி, செய்யப்படுவதான யாகத்தைச் செய்யத் தொடங்கினர். யாகத்தில் ஸாமர்த்தியமுள்ளவர்களும் விதிப்படி கர்மத்தைச் செய்கிறவர்களுமான ரிஷிகளாலும் தேவர்களாலும் ஜ்வலிப்பவைகளான அக்னிகளாலும் நான்குபுறத்திலும் சூழப்பட்டதும் தங்கத்தால் செய்யப்பட்டு விளங்கும் யாகபாத்திரங்களால் அலங்கரிக்கப்பட்டதும் தேவகணங்களால் சூழப்பட்டதும் அப்படியே ஸதஸ்யர்களான பிரம்மரிஷிகளால் சோபிப்பதுமான யாகசாலையானது மிகவும் விளங்கிற்று. அந்த யாகத்தில் மிக்க கோரமான ஒன்று உண்டாயிற்றென்று ரிஷிகளிடமிருந்து எனக்குக் கேள்வி. உதித்த நக்ஷத்திரங்களுள்ளதும் பிரகாசிப்பதுமான ஆகாசத்தைப் பிளந்துகொண்டு சந்திரன் உதிப்பதுபோல, அக்னியைப் பிளந்துகொண்டு நீலோத்பலத்தின் நிறம்போன்ற காந்தியுள்ளதும் கூர்மை

1 இவன் வேறு. 2 'சிகரத்தில்' என்பது வேறுபாடம்.

யான கோரப்பல்லுள்ளதும் சிறியவயிற்றுள்ளதும் உயர்ந்ததும் பயங்கரமும் அளவற்ற பராக்ரமமுள்ளதுமான ஒருபூதம் அப்பொழுது கிளம்பிற்றென்று கேள்வி. அந்தப்பூதம் உண்டான பொழுது பூமி மிகவும் நடுக்கமடைந்தது; அந்தப் பெரிய கடலும் பெரிய அலைகள் சூழ்ந்த சுழலுள்ள தாய்க் கலக்கமடைந்தது; பெரிய உத்பாதமான கொள்ளிகள் விழுந்தன; மரங்களும் கிளைகளைக் கீழேதள்ளின; திக்குக்கள்யாவும் கலக்கமுற்றன; அமங்களமான காற்றும்வீசிற்று; அடிக்கடி பிராணிகள் பயத்தால் மிக நடுக்கமடைந்தன; பிறகு, பயங்கரமாகக் கிளம்பிய அந்தப்பூதத்தைக்கண்டு அந்தப்பிதாமஹரானவர் மஹரிஷிகளையும் தேவர்களையும் கந்தர்வர்களையும் நோக்கி, 'உலகத்தை ரக்ஷிக்கவேண்டியும் தேவர்களைப் பகைக்கும் அஸுரர்களைக் கொல்லவேண்டியும் இவ்விதமான பூதம் என்னால் சிருஷ்டிக்கப்பட்டது. வீர்யமுள்ள இதுகத்தியென்றுபெயருள்ளது' என்று சொன்னர். உடனே, அந்தப் பூதமானது அந்தஉருவத்தை விட்டுவிட்டு அழுக்கில்லாததும் கூர்மையானமுனையுள்ளதுமான கத்தியாகிக் கிளம்பிய காலாந்தகன்போல விளங்கிற்று. பிறகு, பிரம்மதேவரானவர் கூர்மையானதும் அதர்மங்களை விலக்குவதுமான அந்தக்கத்தியை விரூபாக்ஷரும் நீலகண்டருமான ருத்ரரின்பொருட்டுக் கொடுத்தார். பிறகு, பிரம்மரிஷிக்கூட்டங்களால் பூஜிக்கப்பட்டவரும் அளவிடத்தகாதஸ்வரூபமுள்ளவருமான அந்த ருத்ரபகவான் கத்தியை வாங்கிக்கொண்டு வேறு உருவத்தை எடுத்துக்கொண்டார். அந்த உருவமானது, நான்குகைகளுள்ளதும் பூமியிலிருந்தாலும் தலையால் பத்துத்திக்குக்களையுந் தொடுவதும் உயர்ந்த பார்வையுள்ளதும் பெரிய கையுள்ளதும் வாயிலிருந்து ஜ்வாலைகளை மிகவும் விடுவதும் விகாரமுள்ளதும் கறுப்பும் வெளுப்பும் சிவப்புமான பலநிறங்களைக் கொண்டதும் உயர்ந்த பொன்னிறமான புள்ளிகளையுடைய மான்தோலை ஆடையாக உடுத்ததும் நெற்றியில் சூர்யனுக்கொப்பான பெரிய ஒருகண்ணுள்ளதும் கருநிறமும் பொன்னிறமுமாக விளங்கும் பரிசுத்தமான இரண்டுகண்களுள்ளதுமாய் விளங்கிற்று. பிறகு, சூலத்தைக்கையிற்கொண்டவரும் பகதேவரின்கண்ணைப் பெயர்த்தவரும் தேவர்களில் பெரியவருமான ருத்திரமூர்த்தி காலாக்கினிக்கு ஒத்ததான காந்தியுள்ளதும் [1] மூன்று பக்கங்களில் கூர்மையான முனையுள்ளதுமான கத்தியையும் கேடகத்தையும் மின்னலுடன்கூடிய மேகத்தைப்போல உயரத்தூக்கி எடுத்துக்கொண்டு அஸுரர்களை நாசஞ்செய்யவேண்டும் என்ற

1 இரண்டுபக்கமும் நுனியும் கூராகவிருக்குமென்பது கருத்து.

எண்ணத்துடன் யுத்தஞ்செய்யவிரும்பிக் கத்தியைச் சுழற்றிக் கொண்டு ஆகாயத்தில் பலவழிகளில் ஸஞ்சரித்தார். பாரத! அப் பொழுது, கூச்சலிச் செய்கிறவரும் அட்டஹாசத்தைவெளியிடு கிறவருமான அந்தருத்ரின் உருவமானது பயங்கரமாக விளங் கிற்று. பயங்கரமானயுத்தஞ்செய்யும் விருப்பத்துடன் ருத்ரதேவர் அந்த உருவத்தைத் தரித்தாரென்பதைக் கேட்டு, அஸுரர்கள் அனைவர்களும் ஸந்தோஷப்பட்டு நான்குபுறத்திலும் ஓடிவந்தார் கள். அவர்கள் கற்களையும் அதிகமாக ஜ்வலிக்கும் கொள்ளிகளை யும் கோரமானவைகளும் கூரானமுனையுள்ளவைகளும் இரும்பாற் செய்யப்பட்டவைகளுமான மற்ற ஆயுதங்களையும் வருஷித்தார் கள். பிறகு, நாயகர்களுடன் கூடியதாகவிருந்தும், அஸுரச் சேனையானது பலமாகச் சுழற்றப்படுங் கத்தியைக்கண்டு மிகவும் மயக்கமடைந்தது; ஓட்வுந் தொடங்கிற்று. வேகமான காலுள் ளவராகையால் ஆச்சர்யமாகச் சஞ்சரிப்பவரும் கத்தியைக்கையிற் கொண்டவருமான அந்த ருத்ரர் ஒருவரையும் ஆயிரவராக அஸு ரர்கள் அனைவரும் நினைத்தார்கள். அவர், வெட்டுகிறவரும் பிளக் கிறவரும் முறிக்கிறவரும் அறுக்கிறவரும் கிழிக்கிறவரும் ஊது கிறவருமாய்ப் புற்கூட்டத்திற்சென்ற காட்டுத்தீப்போலச் சத்ருக் கூட்டங்களில் ஸஞ்சரித்தார். அதிகபலமுள்ளவர்களான அந்த அஸுரர்கள், கத்தியின் வேகத்தால் மிகவும் பங்கமடைந்தவர்க ளும் கையும் தொடையும் மார்பும் பிளக்கப்பட்டவர்களும் தலை அறுபட்டவர்களுமாய்ப் பூமியில் விழுந்தார்கள். மற்ற அஸுரர் கள், கத்தியின்முனையால் துன்பப்படுத்தப்பட்டவர்களும் பங்க மடைந்தவர்களுமாய் ஒருவரோடொருவர் கூச்சலிட்டுக்கொண்டு திக்குக்களிற்சென்றார்கள். சிலர் பூமியை அடைந்தார்கள்; மற்றுஞ் சிலர் மலைகளை அடைந்தார்கள்; மற்றுஞ் சிலர் ஆகாயஞ் சென்றார் கள்; வேறு சிலர் ஜலத்தில்புகுந்தார்கள். மிகவும் பயங்கரமான அத் தப் பெரிய யுத்தமானது முடிவுபெற்றவுடன், உதிரத்துடன்கூடிய மாம்ஸமென்னும் சேறுள்ள பூமியானது பயங்கரமாயிருந்தது. மஹாபாஹுவே! கீழேவிழுந்தவைகளும் உதிரங்களால் நனைக் கப்பட்டவைகளும் பலாசமரத்துடன்கூடிய மலைகள்போன்றவை களுமான அஸுரர்களின் சரீரங்களால் நிறைந்ததும் உதிரத் தால் நனைந்ததுமான பூமியானது, அப்பொழுது சிவந்த ஈரமான வஸ்திரமுள்ளவளும் கறுத்தவளும் மதமயக்கமுள்ளவளுமான மடந்தைபோல விளங்கிற்று. மங்களரூபியான அந்த ருத்ரரானவர் அஸுரர்களைக் கொன்று உலகத்தைத் தர்மம் மேலிட்டதாகச் செய்தபின், பயங்கரமான அந்தஉருவத்தை நீக்கிவிட்டு, மங்கள

மான உருவத்தை எடுத்துக்கொண்டார். பிறகு, மஹரிஷிகள் அனைவர்களும் எல்லாத் தேவக்கூட்டங்களும் ஆச்சரியமான அஸுரஜயத்தால் தேவதேவரான ருத்ரரைத் துதித்தார்கள். பிறகு, அந்த ருத்ரபகவான் அஸுரர்களின் உதிரத்தால் நனைக்கப்பட்டதும் தர்மத்தைக் காப்பதுமான கத்தியை மர்யாதையுடனே விஷ்ணுவிடம்கொடுத்தார். விஷ்ணுவானவர் மரீசியினிடம் கொடுத்தார். மரீசியானவர் அதைச் சுக்ராசாரியரிடங் கொடுத்தார். சுக்ராசார்யர் மஹரிஷிகளிடம் கொடுத்தார். மஹரிஷிகள் அந்தக்கத்தியை இந்திரனிடம் கொடுத்தார்கள். மகனே! இந்திரன் லோகபாலர்களுக்குக் கொடுத்தான். லோகபாலர்கள் மிகப்பெரிதான கத்தியை ஸூர்யகுமாரனை மனுவுக்குக் கொடுத்து, அந்தமனுவைநோக்கி, 'நீ மானிடர்களுக்கு ஈசனாகியிருக்கிறாய். தர்மத்தை உள்ளிற்கொண்டகத்தியால் ப்ரஜைகளை ரக்ஷித்துக்கொள்' என்ற வசனத்தையுஞ் சொன்னார்கள். பெரிதும் சிறிதுமான பிரயோஜனத்தைக் காரணமாகக்கொண்டு தர்மவரம்பை மீறிச்சென்ற ப்ரஜைகள் தர்மப்படி தண்டத்தைக் [1]குற்றத்துக்கேற்ப விதித்து ரக்ஷிக்கத் தக்கவர்களாகிறார்கள். மனத்தில் தோன்றியபடி செய்யத்தக்கவர்கள் அல்லர். கடுஞ்சொல்லால் அடக்குவதான தண்டமும் அப்படியே பெரிய பொருள்தண்டமும் சரீரத்தைக் குறைப்பதும் கொலையும் சிறிய காரணத்திற்காகச் செய்யத்தக்கவையல்ல இந்தக் [2]கடுஞ்சொல் முதலிய தண்டங்கள் கத்தியின் உருவங்களென்றே சொல்லவேண்டும். மீறிச்செல்வதினின்றும் (தடுப்பதற்காகக்) கத்தியின் சிறந்தநியமங்கள் இவ்விதமிருக்கின்றன. அதன்பிறகு, மனுவானவர் தமது புத்திரனை க்ஷுபனை ப்ரஜைகளுக்குப் பதியாக அபிஷேகஞ் செய்துவைத்து ப்ரஜைகளை ரக்ஷிக்கவேண்டி க்ஷுபன் பொருட்டுக் கத்தியைக் கொடுத்தார். க்ஷுபனிடமிருந்து இக்ஷ்வாகுவும் இக்ஷ்வாகுவினிடமிருந்து புரூரவஸும், அவனிடமிருந்து ஆயுவும் அவனிடமிருந்து நஹுஷனும் பிறகு நஹுஷனிடமிருந்து யயாதியும் அவனிடமிருந்து பூருவும் பூருவினிடமிருந்து ஆதார்த்தனும் ஆதார்த்தனிடமிருந்து கயனும் அந்தக் கயனிடமிருந்து பூமிசயனென்ற அரசனும் பூமியில் அந்தக்கத்தியைப் பெற்றுக்கொண்டார்கள். பூமிசயனிடமிருந்து துஷ்யந்தன்குமாரனை பரதனும் அதனைப் பெற்றுக்கொண்டான். அரசனே! அப்படியே அந்தப்பரதனிடமிருந்து தர்மமறிந்த ஐலபிலனும் அந்த ஐலபிலனிடமிருந்து துந்துமாரனென்னும் அரசனும் அந்தத் துந்துமாரனிடமிருந்து காம்போஜதேசத்திற்கு அரசனை

1 'விபஜ்ய' என்பதுமூலம். 2 வேறுபாடம்.

மூசுகுந்தனும் மூசுகுந்தனிடமிருந்து மருத்தனும் மருத்தனிட மிருந்து ரைவதனும் ரைவதனிடமிருந்து யுவனஸ்வனும், அந்த யுவனஸ்வனிடமிருந்து இக்ஷ்வாகுவம்சத்திற்பிறந்த ரகுவும் அந்த ரகுவினிடமிருந்து பராக்ரமமுள்ள ஹரிணஸ்வனும் ஹரி ணஸ்வனிடமிருந்து சுனகனும் சுனகனிடமிருந்து தர்மபுத்தி யுள்ள உசீனரனும் அந்த உசீனரனிடமிருந்து போஜர்களும் யதுக்களும் கத்தியைப் பெற்றுக்கொண்டார்கள். யதுக்களிட மிருந்து சிபியும் சிபியினிடமிருந்து பிரதர்த்தனனும் பிரதர்த் தனனிடமிருந்து அஷ்டகனும் அஷ்டகனிடமிருந்து ருசதஸ்வ னும் ருசதஸ்வனிடமிருந்து பரத்வாஜரும் அந்தப் பரத்வாஜரிட மிருந்து துரோணரும் அந்தத் துரோணரிடமிருந்து கிருபரும் அந்தக்கத்தியைப் பெற்றுக்கொண்டார்கள். அந்தக் கிருபரிட மிருந்து ஸஹோதரர்களுடன் கூடிய நீயும் சிறந்த கத்தியைப் பெற்றுக்கொண்டிருக்கிறாய். அந்தக்கத்திக்கு க்ருத்திகை நக்ஷத் திரமும் அக்னி தேவதையும் ரோஹிணி கோத்திரமும் ருத்திரர் மிகச்சிறந்த குருவுமாகிறார். பாண்டுவின் குமாரனே! கத்திக் குள்ள ரஹஸ்யங்களான எட்டுப்பெயர்களையும் என்னிடமிருந்து தெரிந்துகொள். எப்பொழுதும் இப்பெயர்களைச்சொல்லுகிறவன் ஜயம்பெறுவான். அவையாவன:—அஸி, விசஸனம், கட்கம், தீக்ஷ்ணதர்மா, துராஸதம், ஸ்ரீ கர்ப்பம், விஜயம், தர்மபாலம் என்பன. கத்தியானது ஆயுதங்களுள் முதலிலுண்டானதென்று பூமியில் ப்ரஸித்திபெற்றிருக்கிறது. (இது) மஹேச்வரரால் உண்டுபண்ணப்பட்டதென்று புராணத்தில் நிச்சயமடைந்திருக் கிறது. இந்தப் பெயர்களும் புராணத்தில் நிச்சயிக்கப்பட்டிருக் கின்றன. சத்துருக்களை அடக்கும் பிருதுவானவன் முதலில் வில்லை உண்டுபண்ணினான். முன்காலத்திலுள்ளபடி தர்மமாக உலகத்தை ரக்ஷித்துவரும் வேனனின் குமாரனை அந்தப்பிருது வினால் இந்தப்பூமியானது பல நல்லபயிர்களைக் கறக்கப்பட்டது. மாத்ரியின் குமாரனே! ரிஷிகளாற் சொல்லப்பட்ட அந்த வர லாற்றை ப்ரமாணமாகச் செய்துகொள்ளவேண்டும். யுத்தத்தில் ஸமர்த்தர்களாயிருப்பவர்கள் எப்பொழுதும் கத்திக்குப் பூஜை செய்ய வேண்டுமென்ற இந்த முக்யதர்மத்தைத் திரும்பவும் நான் உனக்குச் சொன்னேன். பரதர்களிற் சிறந்தவனே! கத்தியின் இந்தஸ்ருஷ்டியானது உள்ளபடி இப்படித்தான். இவ்வுலகி லுள்ள புருஷன் கத்தியின் உத்தமமான இந்த வரலாற்றை முழு மையுங் கேட்டால் கீர்த்தியை அடைவான்; இறந்தபின்னும் அழிவற்றபதத்தையும் பெறுவான்" என்று சொன்னார்.

நூற்றறுபத்தைந்தாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி)

(யுதிஷ்டிரர், தர்மார்த்த காமங்களில் எதுமிகச் சிறந்ததென்று வினவியதும், விதுரரும் தம்பிகளும் தர்மார்த்த காமங் களைப் புகழ்ந்துகூறியதும், யுதிஷ்டிரர் மோக்ஷம் மிகச்சிறந்ததென்று கூறியதும்.)

1 பீஷ்மரானவர் இவ்விதம்சொல்லிவிட்டுப் பேசாமலிருக்கும் பொழுது, யுதிஷ்டிரர், வீடுசென்றபின் நான்கு தம்பிகளையும் ஐந் தாமவரான விதுரரையும்நோக்கி, "உலகத்தின்நிலை தர்மத்திலும் அர்த்தத்திலும் காமத்திலும் அடங்கியிருக்கிறது. அவைகளுள் எது மிகப்பெரிது? எது நடுத்தரமானது? எது எளிது? காமம் கோபம்லோபம் இம்மூன்றையும் ஜயிக்கவேண்டி எதில் மனத்தை அடக்கி வைக்கவேண்டும்? வினவப்பட்ட நீங்கள் நிச்சயமுள்ள வசனத்தை உள்ளபடி சொல்லத்தக்கவர்களாகிறீர்கள்" என்று வினவினர். பிறகு, கார்யங்களின் வழியின் உண்மை யைக் கண்டவரும் புத்தியில்தேர்ற்றும் திறமையுள்ளவருமான விதுரரானவர் தர்மசாஸ்திரத்தை நினைத்துக்கொண்டு முதலில் ஒருவசனத்தைச் சொல்லத்தொடங்கினர். "அதிகமான வேதாத் யயனம், தவம், த்யாகம், ஸ்ரத்தை, யாகஞ்செய்தல், பொறுமை, உள்ளத்தில் சுத்தி, தயை, ஸத்யம், அடக்கம் இவைகள் தர்மத் திற்குரிய ஸம்பத்துக்களாகும். இவற்றையே நீ அடை. உன் மனம் சஞ்சலமாக இருக்கவேண்டாம். அறம்பொருள் இவ்விரண் டும் இதை மூலமாகக்கொண்டவை. ஹிதமானது இஃது ஒன் றையே இருப்பிடமாகக் கொண்டது. ரிஷிகள் தர்மத்தாலேயே கரையேறியிருக்கிறார்கள். உலகங்கள் தர்மத்தில் நிலைபெற்றிருக் கின்றன. தேவர்கள் தர்மத்தால் ஸ்வர்க்கலோகத்திலிருக்கிறார் கள். பொருளும் தர்மத்தில் அடங்கியிருக்கின்றது. அரசனே! தர்மமானது மிகச்சிறந்த குணமாகும். பொருளானது மத்யம மென்று சொல்லப்படுகிறது. காமமானது மிகவும் அல்பமென்று அறிவுள்ளவர்கள் கூறுகிறார்கள். ஆகையால், (மனிதன்) அடங் கியமனமுள்ளவனும் தர்மத்தைப் பெரிதாகக் கொண்டவனுமா யிருக்கவேண்டும்; அவ்விதமே எல்லாப்ராணிகளிடத்திலும் 2தன் விஷயத்தில் போல் இருக்கவேண்டும்" என்றுசொன்னர். அந்த விதுரருடைய வசனம் முடிவுபெற்றவுடன், காரியங்களின் வழி

1 இந்த அத்யாயத்துக்கு, 'ஷட்ஜகீதை' என்று ஒருபெயர் வழங்கு கிறது. 2 வேறுபாடம்.

யின் உண்மையை அறிந்தவனும் பயங்கரமான செய்கையுள்ளவனும் ப்ரஸ்னஞ்செய்யப்பட்டவனுமான அர்ஜுனன் ஒருவசனத்தைச் சொல்லத்தொடங்கினன். "அரசரே! இது கர்மபூமியாகும். இந்தப்பூமியில் க்ருஷி, வர்த்தகம், பசுக்காத்தல், பலவிதமான கைத்தொழில்கள் என்னும் அர்த்தசாஸ்திரமானது மிகச்சிறந்ததாகும். பொருளிருக்கிறதென்ற காரணத்தாலேயே எல்லாக் கார்யங்களுக்கும் மர்யாதையிருக்கிறது. பொருளானது போய்விடுமானால் தர்மமும் காமமும் நில்லாவென்று சாஸ்திரமிருக்கிறது. பொருளுள்ளவன் உத்தமமான தர்மத்தை ஆராதிக்கச் சக்திபெற்றவனுவான்; நல்ல புத்தியில்லாதவர்களால் அடையக்கடினமான காமத்தையும் அனுபவிக்கத் திறமையுள்ளவனுவான். தர்மம்காமம் இவ்விரண்டும் பொருளைச்சேர்ந்த பாகங்களென்று சாஸ்திரம் கூறுகிறது. பொருள் ஸித்திபெற்றால் இவ்விரண்டும் ஸித்திபெற்றவைகளாகவே ஆகும். ஆகையால், பொருளை அடைந்த புருஷனை மிகச்சிறந்த பிறப்புள்ளவர்களும், ப்ரம்மதேவரைப் பிராணிகள் உபாஸிப்பதுபோல எப்பொழுதும் உபாஸிப்பார்கள். ஜடையும் தோலும் தரிப்பவர்களும் அடக்கமுள்ளவர்களும் அழுக்கால் பூசப்பட்டவர்களும் இந்திரியங்களை ஜயித்தவர்களுமான ஸந்யாஸிகளும் [1] நைஷ்டிக ப்ரம்மசாரிகளுங்கூட வெவ்வேறான பொருளைக் கருதியவர்களாயிருக்கிறார்கள். காஷாயம் உடுத்தவர்களும் தாடியுள்ளவர்களும் மிக்க அடக்கமுள்ளவர்களும் அறிவுள்ளவர்களும் பொறுமையுள்ளவர்களும் எல்லாப் பரிக்ரஹங்களையும் விட்டவர்களுமான மற்றவர்களும் பொருளை விரும்புகிறவர்களாயிருக்கிறார்கள். எப்பொழுதும் கர்மங்களால் தாபமடைகிறார்கள். சிலர் பொருளை விரும்புகிறவர்களாயிருக்கிறார்கள். மற்றுஞ் சிலர் ஸ்வர்க்கத்தை விரும்புகிறவர்களாயிருக்கிறார்கள். சிலர் குலாசாரத்தை அனுஸரித்துத் தம்தம் தர்மத்தை அனுஷ்டிக்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களுமான வேறு சிலர் [2] ஸம்யமத்தில் உறுதியுள்ளவர்களாயிருக்கிறார்கள். பொருள் பெரிதென்று தெரிந்துகொள்ளாமலிருப்பது இருளாகும்; தெரிந்துகொள்வது வெளிச்சமாகும். எவன் வேலைக்காரர்களைப் போகங்களுடனும் விரோதிகளைத் தண்டங்களுடனும் சேர்க்கிறானே அவன் பொருளுள்ளவனாகிறான். புத்தியுள்ளவர்களில் மிகச் சிறந்தவரே! இஃது

---

1 மரணமடையும் வரையில் ப்ரம்மசாரியாகவேயிருக்க ஸங்கல்பங்கொண்டவர்கள்.

2 அடக்கம், அதாவது இந்த்ரியஜயம்; அல்லது, த்யானம்.

உண்மையான என் அபிப்பிராயம். [1] நன்முகப் பேசத்தக்க கண்டமுள்ள இந்த நகுலஸஹதேவர்களின் வசனத்தையும் நீர் அறிந்துகொள்ளும்" என்று சொன்னன். அவ்விதம் சொன்னபிறகு, அறம்பொருள்களில் ஸமர்த்தர்களும் மாத்ரியின்புத்திரர்களுமான நகுலஸஹதேவர்கள் உத்தமமான வசனத்தைச் சொல்லத் தொடங்கினர்கள்.

"(மனிதன்) உட்காருகிறவனும் படுக்கிறவனும் போகிறவனும் இருக்கிறவனுமாய்ப் பலவிதமான உபாயங்களாலும் பொருளின் சேர்க்கையை உறுதியாகச் செய்துகொள்ளவேண்டும். அடையஅரிதும் மிகவும் பிரியமுமான இந்தப்பொருளானது நன்முக லித்திபெற்றதாகுமானால் (மனிதன்) இவ்வுலகில் காமங்களை அடைவானென்பது ப்ரத்யக்ஷம்; இதற்கு ஸந்தேகமில்லை. தர்மத்துடன்கூடியபொருளும், பொருளுடன்கூடிய தர்மமும் அம்ருதத்துடன்சேர்ந்த தேன்போலாகும். ஆகையால், இவ்வுலகில் இவ்விரண்டும் சிறந்தவைகளாகும். பொருளில்லாதவனுக்கு இன்பமில்லை; அதுபோலத் தர்மமில்லாதவனுக்குப் பொருள் எங்கிருந்துவரும்? அறம்பொருள்களிலிருந்தும் விலகியவனைவிட அவனிடமிருந்து உலகம் நடுக்கமடையும். ஆகையால், தர்மத்தைப் பெரிதாகக்கொண்டவனும் அடங்கிய புத்தியுள்ளவனுமாயிருந்துகொண்டு பொருளை ஸம்பாதிக்கவேண்டும். ப்ராணிகள் விஸ்வாஸத்துடன் இருக்குமானால் எல்லாம் லித்திக்கும் முதலில் தர்மத்தைச் செய்யவேண்டும். அதன்பிறகு, தர்மத்துடன்கூடிய பொருளை ஸாதிக்கவேண்டும். அதன்பிறகு, காமத்தை அனுபவிக்கவேண்டும். லித்தமான பொருளுள்ளவனுக்கன்றி அந்தக் காமம் பயன்படும்" என்று சொன்னர்கள். அஸ்வினிதேவர்களின் குமாரர்களான அந்த நகுலஸஹதேவர்கள் அந்த வசனத்தைச்சொல்லி நிறுத்தினர்கள்.

அதன்பிறகு, பீமஸேனனனவன் இந்தவசனத்தைச் சொல்லத்தொடங்கினன். "காமமில்லாதவன் பொருளை விரும்பமாட்டான். காமமில்லாதவன் தர்மத்தை விரும்பமாட்டான். காமமில்லாதவன் காமத்திற்செல்லுகிறவனையிருக்கமாட்டான். ஆகையால், காமம் உயர்ந்ததாகும். காமத்துடன்கூடியவர்களான ரிஷிகள், கனியையுண்ணுகிறவர்களும் காய்கிழங்குகளைப் புஜிக்கிறவர்களும் வாயுபக்ஷகர்களும் கல்ல அடக்கமுள்ளவர்களுமாய்த் தவத்திலேயே நிலைபெற்றிருக்கிறார்கள். வேதத்தின் கரைகண்டவர்களான மற்றுஞ்சிலர், காமத்தையுடையவர்களாய் வேதங்களிலும் உப

---

1 வேறுபாடம்.

வேதங்களிலும் ஸ்ராத்தத்திலும் யாகஞ்செய்வதிலும் அப்படியே கொடுப்பதிலும் பெற்றுக்கொள்வதிலும் ப்ரவ்ருத்திக்கிறார்கள். வர்த்தகர்களும் உழுகிறவர்களும் இடையர்களும் கைத்தொழிற் காரர்களும் அப்படியே சில்பிகளும் அப்படியே தேசத்திற்குரிய தர்மத்தைச் செய்கிறவர்களும் காமத்தையுடையவர்களாகியே கர்மங்களில் செல்லுகிறார்கள். வேறு சில மனிதர்கள் காமத்தை யுடையவர்களாய்க் கடலிலுஞ்செல்லுகிறார்கள். காமமானது பல வித உருவமுள்ளதன்றே? உலகம்யாவும் காமத்தால் வ்யாபிக் கப்பட்டிருக்கிறது. காமமில்லாத ஒருப்ராணியும் இருக்கவுமில்லை; இருந்ததுமில்லை; இனி இருப்பதுமில்லை. மஹாராஜனே! இந்தக் காமம் சிறந்ததாகும். அறம்பொருள்கள் இந்தக் காமத்தை அடுத் திருக்கின்றன. வெண்ணெயானது தயிரைவிடஸாரமானதுபோல, காமமானது அறம்பொருள்களைவிட ஸாரமானது. எண்ணெய் மிகச்சிறந்தது. பிண்ணாக்குச் சிறந்ததன்று. நீருள்ள மோரைவிட நெய் மிகச்சிறந்ததாகும். கட்டையைவிடப் பூவும் கனியும் மிகச் சிறந்தவை. காமமானது அறம்பொருள்களைவிடச் சிறந்ததாகும். பூவிலிருந்து சிறந்த தேனுண்டாவதுபோலக் காமத்திலிருந்து ஸுகமுண்டாகிறது. காமமானது அறம் பொருள்களுக்குக் காரணமாகும். (அன்றியும்) காமம் அக்காமரூபமுமாயிருக்கிறது. காமமில்லாமல் பொருளால்மட்டும் ப்ராம்மணர்கள் நல்ல அன் னத்தைப் புஜிக்கிறார்களில்லை. காமமில்லாமல் ப்ராம்மணர்களின் பொருட்டுத் தானஞ்செய்கிறதில்லை. காமமில்லாமல் உலகத்தி லுள்ள பலவிதச் சேஷ்டையுமில்லை. ஆகையால், அறம்பொருள் காமங்களுள், காமமானது முதலாவதாகக் காணப்படுகிறது. மிக அழகான வேஷமுள்ளவர்களும் அலங்கரிக்கப்பட்டவர்களும் அதிகமதமுள்ளவர்களும் அன்பாகப் பேசுகிறவர்களுமான ஸ்திரீ களுடன்சேர்ந்து இஷ்டம்போல ரமித்துக்கொண்டிருரும். அரசரே! காமமன்றே மிகவும் இனிமையானது. அகழ்போன்ற ஆழ்ந்த ஆலோசனையிலிருக்கும் என்னுடைய புத்தி இவ்விதமிருக் கிறது. தர்மபுத்திரரே! உமக்கு விசாரம் வேண்டாம். மிக மிருதுவான என்னுடைய வசனம் அனைத்தும் உயர்ந்த ஸார முள்ளதென்று ஸாதுக்களால் அங்கீகரிக்கப்பட்டதாகும். அற மும் பொருளும் காமமும் ஸமமாகவே அனுஷ்டிக்கத்தக்கவை கள். இவைகளுள் ஒன்றில் ஆசைபற்றி இருப்பவன் எந்த மனித னே அவன் அதமனுவான். இரண்டில் ஆசைபற்றி இருப்பவனை மத்தியமனென்று சொல்லுகிறார்கள். அறம்பொருள் காமம் மூன் றிலும் ஆசைபற்றியிருப்பவனெவனே அவன் உத்தமனுவான்" என்று சொன்னான். நல்ல அறிவுள்ளவனும் ஸ்நேஹமுள்ள

வனும் உயர்ந்தசந்தனத்தால் பூசப்பட்டவனும் விசித்திரமான மாலைகளையும் ஆபரணங்களையும் தரித்தவனுமான பீமனைவன் அந்தவீரர்களைநோக்கிச் சுருக்கமாகவும் விரிவாகவும் அந்தவசனத்தைச் சொல்லி நிறுத்தினன்.

அதன்பிறகு, அவர்களின் வசனங்களை நன்றாக ஒருமுகூர்த்தம் ஆலோசனைசெய்தபின், பலசாஸ்திரங்களைக் கற்றவரும் தர்மத்தை மேற்கொண்டவர்களுள் மிகச்சிறந்தவருமான தர்மராஜரானவர் சிரித்துக்கொண்டு தமதுவாக்கால் உண்மையைச் சொல்லத்தொடங்கினர். "நீங்களனைவரும் ஸந்தேஹமில்லாமல் எல்லாச்சாஸ்திரங்களையும் நிச்சயஞ்செய்தவர்களும் பிரமாணங்களை அறிந்தவர்களுமாயிருக்கிறீர்கள். அறிய விருப்பமுள்ள எனக்கு இவ்விஷயத்தில் ஸித்தாந்தமாக உங்களால் சொல்லப்பட்ட வசனம் எதுவோ அஃது என்னால் கேட்கப்பட்டது. ஆனால், சொல்லுகிற என்னுடைய [1] இந்தவசனத்தையும் நீங்கள் வேறு எண்ணமில்லாதவர்களாய் அவஸ்யம் தெரிந்துகொள்ளவேண்டும். எந்த மனிதன் பாபத்திலும் புண்ணியத்திலும் பொருளிலும் தர்மத்திலும் காமத்திலும் பற்றுதலில்லாதவனுயிருக்கிறானே தோஷங்களை விட்டவனும் ஸாராஸாரங்களை ஸமமாகக்கொண்டவனும் ஸித்தியுள்ளவனுமான அந்தமனிதன் ஸுகதுக்கங்களிலிருந்து விடுபடுகிறான். ப்ராணிகளானவை பிறப்புஇறப்புக்களுடன்கூடியவைகளும் கிழத்தனத்தின் விகாரங்களுடன் கூடியவைகளுமாயிருக்கின்றன. திரும்பவும் அந்தஅந்த விகாரங்களால் தொடரப்பட்டவைகளாகின்றன. (பெரியோர்கள்) மோக்ஷத்தைக் கொண்டாடுகிறார்கள். அதை நாம் அறியவில்லை. ஸ்நேஹபந்தத்தால் கட்டப்பட்டவனுக்கு [2] மோக்ஷமில்லையென்று பூஜ்யரான பிரம்மதேவர் கூறினர். [3] அறிஞர்கள் மோக்ஷத்தைப் பெரிதாகக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். ஆகையால், ப்ரியத்தையும் அப்ரியத்தையும் செய்துகொள்ளாமலிருக்கவேண்டும். ஆசைப்படுவது சிறந்ததன்று. இதுதான் சிறந்தது. (விதியால்) நான் எவ்விதம் ஏவப்பட்டவனுயிருக்கிறேனே அவ்விதம் செய்கிறேன். விதியானது எல்லாப்பிராணிகளையும் ஏவுதல்செய்கிறது. விதியானது மிகவும் பலமுள்ளதென்று யாவரும் அறியுங்கள். அடையத்தகாத மோக்ஷத்தைக் கர்மத்தால் அடையமாட்டான். எது வரக்கூடியதோ அது வந்தேதவிடுமென்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். அறம் பொருள் காமங்களை விட்டவனும் மோக்ஷமென்னும் பயனை அடைகிறான். ஆகையால், இந்தமோக்ஷமானது உலகங்களின் நன்மைக்குக் காரணமான ரஹஸ்யமாகும்" என்றுசொன்னர். சிறந்த

1, 2, 3 வேறு பாடம்.

புத்தியுள்ள தர்மபுத்திரர்சொல்லிய மனத்திற்கு இசைந்ததும் யுக்தியுள்ளதுமான அந்தவசனத்தையெல்லாம் கேட்டு அப்பொழுது அவர்கள் கொண்டாடினர்கள்; மிகவும் ஸந்தோஷத்தையும் அடைந்தார்கள். குருக்களிற்சிறந்த தர்மபுத்ரரின்பொருட்டு அஞ்சலியையுஞ்செய்தார்கள். மிக்கஅழகான எழுத்துக்களும் சொற்களுமுள்ள வாக்யங்களால் அலங்கரிக்கப்பட்டதும் மனத்திற்குப் பிரியமானதும் சொற்குற்றங்களில்லாததும் அரசரான தர்மபுத்திரரால் சொல்லப்பட்டதுமான அந்த வார்த்தையைக் கேட்டு அனைவரும் அவரிடம் வணக்கமுள்ளவர்களாயிருந்தார்கள். அப்படியே வீர்யசாலியான தர்மபுத்திரராஜரும், அறம் பொருள் காமங்களைப்பற்றிய நிச்சயத்தையறிந்தவரும் பெரிய மனமுள்ளவரும் கங்கையின் புத்திரருமான பீஷ்மரைப்பாராட்டி அதற்குமேலானதர்மத்தைத் திரும்பவும் கேட்கத்தொடங்கினர்.

நூற்றறுபத்தாறுவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஸ்நேகிக்கத் தகாதவர்களின் தகாதவர்களின் லக்ஷணத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிராஜ்ஞர்களில் பெரியவரும் குருக்களுக்குப் பிரியத்தைப் பெருகச்செய்கிறவருமான பிதாமஹரே! ஒரு கேள்வியைக் கேட்கப்போகிறேன்; அதனை எனக்கு நீர் விரித்து உரைக்க வேண்டும். எவ்விதமான மனிதர்களை அடுக்கவேண்டும்? எவர்களுடன் ப்ரியமாகஇருப்பது சிறந்ததாகும்? வருங்காலத்திலும் நிகழ்காலத்திலும் எவர்கள் (ஹிதத்தைச்) செய்யத்தக்கவர்கள்? அவர்களை எனக்குச் சொல்லவேண்டும். மித்திரர்கள் எந்தக் கார்யத்தில் உறுதியாகஇருப்பார்களோ அதில் பெருஞ்செல்வமும் ஸம்பந்திகளும் பந்துக்களும் இருக்கமாட்டார்களென்று எனக்குத் தோன்றுகிறது. (சொல்லுகிறதைக்) கேட்கிறமித்திரன் அரியனன்றே? ஹிதத்தைச்செய்யும் மித்திரன் கிடைப்பதும் அரிது. தர்மத்தை மேற்கொண்டவர்களிற் சிறந்தவரே! இஃதனைத்தையும் நீர் விரிவாகச் சொல்லத்தக்கவராகிறீர்" என்று சொல்ல, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அரசனே! யுதிஷ்டிர! ஸ்நேஹிக்கத்தக்க புருஷர்களையும் ஸ்நேஹிக்கத்தகாத புருஷர்களையும் பற்றிய அனைத்தையும் உண்மையாகச்சொல்லுமென்னிடமிருந்துநீதெரிந்துகொள். ராஜனே!

பேராசைகொண்டவன், க்ரூரனுயிருப்பவன், தர்மத்தைவிட்டவன், ஹிம்ஸைசெய்கிறவன், ரஹஸ்யமாக அப்ரியத்தைச்செய்கிறவன், நீசன், பாபநடையுள்ளவன், எல்லாரிடத்திலும் ஸந்தேகப்படுகிறவன், முயற்சியில்லாதவன், தாமஸஸ்வபாவமுள்ளவன், கோணலாயிருப்பவன், நிந்திக்கப்பட்டவன், குருதாரத்திற்செல்லத்துணிபவன், துன்பமுள்ள ஸமயத்தில்விலகிப்போகிறவன், கெட்டபுத்தியுள்ளவன், வெட்கமில்லாதவன், எல்லாவிடத்திலும் பாபத்தைப்பார்க்கிறவன், நாஸ்திகன், வேதத்தைநிந்திக்கிறவன், உலகத்தில் பலவிதமாகச்செல்லும் இந்திரியங்களுடையவன், 1 காமத்தில்பற்றுதலுடன் ஸஞ்சரிப்பவன், ஸபைக்குத்தகாதவன், உலகத்தால்பகைக்கப்பட்டவன், ப்ரதிஜ்ஞையில் உறுதியில்லாதவன், கோட்சொல்லுகிறவன், கல்வியறிவில்லாதவன், மாத்ஸர்யமுள்ளவன், கெட்ட எண்ணமுள்ளவன், கெட்ட இயற்கையுள்ளவன், நல்லமனமில்லாதவன், க்ரூரச்செய்கையுள்ளவன், கபடன், மித்ரர்களுடன்விரோதிப்பவன், எப்பொழுதும் பொருளாசையால் பொருளைக்குறித்து ஸஞ்சரிப்பவன், சக்திக்குத்தக்கபடி கொடுப்பவர்களிடமும் ஸந்தாஷமடையாத அல்பபுத்தியுள்ளவன், எப்பொழுதும் மித்ரனுக்கு அனர்யத்தையே உண்டுபண்ணும் அதமமனிதன், காரணமில்லாமல்கோபங்கொள்ளுகிறவன், காரணமில்லாமல்வெறுத்துக்கொள்ளுகிறவன், ஸ்நேகிதர்களையும் சுபகார்யங்களையும் வேகமாகவில்க்கும்பாவி, அறியாமற்செய்த அல்ப அபகாரத்தால் செய்தஉபகாரத்தை நினையாமலிருப்பவன், கார்யத்திற்குவேண்டி மித்திரர்களை அடுக்கும் மித்ரத்வேஷி, மித்திரனுக்கொப்பானமுகங்கொண்டசத்ரு, கோணலான பார்வையுள்ளவன், மாறுனபார்வையுள்ளவன், ஸூக்ஷமகாலத்தில் ஸந்தாஷமடையாதவன் ஆகிய இவ்விதமானமனிதர்களை விலக்கவேண்டும். குடியுள்ளவனும், பகையுள்ளவனும், கோபமுள்ளவனும், தயையில்லாதவனும், க்ரூரனுயிருப்பவனும், பிறரைத்துன்பப்படுத்துபவனும், மித்ரர்களுக்கு த்ரோகஞ்செய்பவனும், ப்ராணிகளைக்கொல்லுவதில் விருப்பமுள்ளவனும், நன்றிகொன்ற அதமனும், உலகத்தில் எவ்விதத்திலும் ஸ்நேஹிக்கத்தக்கவர்களல்லர். மித்ரர்களைப்பகைப்பவனும் ஸ்நேஹிக்கத்தக்கவனல்லன். ஸ்நேஹஞ்செய்யத்தக்கவர்களையும், என்னிடமிருந்துகேள். நற்குலத்திற்பிறந்தவர்களும், இன்சொல்கூறுகிறவர்களும், ஞானத்திலும் விசேஷமானஞானத்திலும் ஸாமர்த்தியமுள்ளவர்களும், நல்லரூபமுள்ளவர்களும், நற்குணமுள்ளவர்களும், ஆசையற்றவர்களும், ஸ்ரமத்தை ஜயித்தவர்களும், நல்லமித்ரர்களுள்ள

1 வேறுபாடம்.

வர்களும், நன்றியறிவுள்ளவர்களும், எல்லாமறிந்தவர்களும், லோபமில்லாதவர்களும், இனியகுணம் நிறைந்தவர்களும், ஸத்யமானசொல்லுள்ளவர்களும், இந்திரியங்களை வென்றவர்களும், எப்பொழுதும் ப்ரமத்தனடுத்துக்கொள்ளும் ஸ்வபாவமுள்ளவர்களும், 1நல்ல குலத்தைச் சேர்ந்தபுத்திரர்களும், குலத்தில் தலைமையாக இருப்பவர்களும், தோஷங்களால் விடுபட்டவர்களும், ப்ரவ்ருத்திபெற்றவர்களும் அரசர்களால் ஸ்நேகிக்கத்தக்கவர்கள். ப்ரபுவே! (இவர்கள்) சக்திக்குத்தக்கபடி காரியங்களைச்செய்து மிகவும் ஸந்தோஷப்படுத்துவார்கள். அகாரணத்தில் கோபமுள்ளவர்களும் காரணமின்றி வெறுப்படைந்தவர்களுமாக இருக்கமாட்டார்கள். வெறுப்படைந்தாலும் காரியத்தில் ஸமர்த்தர்களாயிருப்பவர்கள் மனத்தாலும் குற்றமுள்ளவர்களாகமாட்டார்கள். தம்மைக் கஷ்டப்படுத்திக்கொண்டாலது மித்ரகார்யத்தை மிகப்பரிதாகக்கொண்டவர்கள், ஆட்டுமயிரால்செய்து சிவப்புவர்ணங்கொடுத்த ஆடையானது நிறம்மாறுமலிருப்பதுபோல மித்ரர்களிடம் ஸ்நேஹம் மாறுமலிருப்பார்கள். நம்பிக்கையுள்ளவர்களும் பந்துக்களிடம் நேசமுள்ளவர்களுமான மித்ரர்கள் பொருள்களில்லோபம் ஸ்திரீகளிடம்மோகமுதலிய தோஷங்களைக் காண்பிக்கமாட்டார்கள். எவர்கள் மண்ணுங்கட்டியிலும் ஸுவர்ணத்திலும் ஸமமான எண்ணமுள்ளவர்களும் மித்ரர்களிடம் உறுதியானபுத்தியுள்ளவர்களும் அபிமானமற்றவர்களும் பொருளிலும் ஆபரணங்களிலும் ஆசையைவிட்டவர்களும் 2 பரிஜனத்தைச் சேர்க்கிறவர்களும் எப்பொழுதும் யஜமானனுடையபொருளைப் பரிதாகக்கொண்டவர்களுமாய் நடக்கிறார்களோ அவ்விதமான உத்தமபுருஷர்களுடன் எந்த அரசன் ஸ்நேஹத்தைச்செய்துகொள்ளுகிறானோ அந்த அரசனுடையராஜ்யமானது சந்திரனுடையசந்திரிகைபோலவிஸ்தாரமாகும். தைர்யமுள்ளவர்களும் கோபத்தை ஜயித்தவர்களும் எப்பொழுதும் யுத்தத்தில்பலமுள்ளவர்களும் பிறப்பில் அமைந்த நல்ல ஸ்வபாவமும் நல்லகுணமுமுடையவர்களுமான உத்தமபுருஷர்களை நேசித்துக்கொள்ளவேண்டும். தோஷமில்லாத அரசனே! தோஷத்துடன்கூடிய எந்தமனிதர்கள் என்னால்சொல்லப்பட்டார்களோ அவர்களுள்ளும் நன்றிகொன்றவர்களும் மித்திரர்களுக்குத்ரோஹஞ்செய்பவர்களுமாயிருப்பவர்கள் அதமர்களாவார்கள். கெட்டநடையுள்ளவர்கள் எல்லாராலும் விலக்கத்தக்கவர்களென்பது நிச்சயம்" என்றுசொன்னர்.

---

1 வேறுபாடம். 2 வேலைக்காரர்கள்.

நூற்றறுபத்தேழாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஒருபிராம்மணதமன் திருடர்களின் கிராமம்சென்று பாபத் தொழிலுள்ளவனுகி வஸித்ததையும், மற்றொருபிராம்மணன் அவனுக்கு நல்ல ஆசாரத்தை உபதேசித்ததையும் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "மித்திரர்களை த்ரோஹஞ்செய்பவனும் நன்றி கெட்டவனுமாகச் சொல்லப்படத் தக்கவனை எனக்குச் சொல்ல வேண்டும். இவ்விஷயத்தைப்பற்றிய இதிஹாஸத்தை உள்ளபடி விரிவாகக் கேட்கவிரும்புகிறேன்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"அரசனே! வடக்குத்திக்கில் மிலேச்சர்களிடம் நடந்த பழைய இதிஹாஸத்தை இப்பொழுது நான் உனக்குச் சொல்லுகிறேன். மத்தியதேசத்தி லுண்டானவனும் கறுத்த சரீரமுள்ளவனும் [1] வேதமோதாதவனுமான ஒரு பிராம்மணன், பொருளில் பேராசையால், திருட்டுக் கூட்டம் நிரம்பிய ஒரு கிராமத்திற்குச் சென்றான். அந்தக் கிராமத்தில் எல்லாஜாதிகளின் விசேஷங்களையும் அறிந்தவனும் பிராம்மணர்களுக்கு ஹிதனும் ஸத்தியமான சொல்லுள்ளவனும் தனமுள்ளவனுமான ஒரு திருடன் தானஞ்செய்வதில் அதிகப்ரியமுள்ளவனுயிருந்தான். உடனே, பிராம்மணன் அந்தத்திருடனுடைய வீட்டிற்குச்சென்று பிக்ஷையை யாசித்தான். அந்தத்திருடனவன் அந்தப் பிராம்மணனுக்கு வஸிக்கவேண்டியதற்காக இடத்தையும் வருஷத்திற்கு வேண்டிய பிக்ஷையையும் கரையுள்ள தானபுதிய வஸ்திரத்தையும் பதியில்லாதவளும் யௌவனப்பருவமுடையவளுமான ஒரு ஸ்திரீயையும் கொடுத்தான். அரசனே! கௌதமகோத்திரத்தில் பிறந்த அந்தப்பிராம்மணன் [2] திருடனிடமிருந்து இவற்றையெல்லாம் அவ்விதம் பெற்றுக்கொண்டு ஸந்தோஷமடைந்த மனமுள்ளவனுகிச் சிறந்ததான அந்த வீட்டில் அந்த ஸ்திரீயுடன்கூட ஸந்தோஷமாக இருந்தான்; திருடனுடைய குடும்பத்திற்கு வேண்டிய ஸஹாயத்தையும் செய்துகொண்டு வந்தான். அந்தப்ராம்மணன், ஸம்பத்து நிறைந்ததும் வேடர்களுக்கிருப்பிடமுமான அந்தக்கிராமத்தில் ஒருவருஷம் வஸித்துவந்தான். கௌதமன், (பிராணிகளை) அம்பிஞல் அடிப்பதில் பெரிய முயற்சியையும் செய்துகொண்டுவந்தான். அரசனே!

---

1 'வேதத்தில்கூறிய கர்மங்களைச் செய்யாதவனும்' என்பதுபழைய உரை.

2 வேறுபாடம்

ஸ்ரீ மஹாபாரதம்.

திருடர்களின் கூட்டங்கள்போல அந்தக் கௌதமப் பிராம்மணனும் ஒவ்வொருநாளும் நான்குபக்கங்களிலும் காடுகளிலிருப்பவைகளான அன்னபக்ஷிகளைக் கொன்றான். ஹிம்ஸிப்பதில் ஸாமர்த்தியமுள்ளவனும் தயையற்றவனும் எப்பொழுதும் பிராணிகளைக் கொல்வதில் பிரியமுள்ளவனுமான கௌதமன், சேர்ந்திருக்குங் காரணத்தால் திருடர்களுக்குச் சரியான தன்மையை அடைந்தான். அவ்விதம் திருடர்களின் கிராமத்தில் பலபக்ஷிகளைக்கொன்றுகொண்டு ஸுகமாக வஸித்துவரும் அந்தப் பிராம்மணனுக்குப் பல மாதங்கள் சென்றன. பிறகு, ஒரு ஸமயத்தில் ஜடையையும் மரவுரியையும் தோலையுந்தரித்தவரும் வேதாத்யயனத்தில் விடாமுயற்சியுள்ளவரும் பரிசுத்தருமான வேறு ஒரு பிராம்மணர் அந்தத்தேசத்திற்குவந்தார். வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் பயிற்சியுள்ளவரும் வேதாந்தங்களின் கரையைக் கண்டவருமான அந்தப்பிராம்மணர் அவ்விடத்தில் அந்தக் கௌதமனுக்கு ஸ்நேஹிதராகவே காணப்பட்டார். அவர், இந்தக்கௌதமன் எந்தக் கிராமத்திலிருந்தானோ அந்தத் திருடர்களுடைய கிராமத்தை அடைந்தார். சூத்திரர்களின் அன்னத்தை விலக்கிய அந்தப்பிராம்மணர் திருடர்கள் நிறைந்த அந்தக்கிராமத்தில் பிராம்மணர்களின் வீட்டைத் தேடிக்கொண்டு நான்குபுறத்திலும் ஸஞ்சரித்தார். பிறகு, அந்தப் பிராம்மணோத்தமர் கௌதமனுடைய வீட்டைஅடைந்தார். கௌதமனும் வந்தான். அவர்கள் ஒருவரோடொருவர் சேர்ந்துகொண்டார்கள். தோளில் அன்னப்புள்சுமையுள்ளவனும் கையில் வில்லேந்தியவனும் ஆயுதமெடுத்தவனும் உதிரத்தால் நனைந்த அங்கங்களுள்ளவனும் வீட்டின் வாயிலை அடைந்தவனும் மனிதர்களைத்தின்னும் ராக்ஷஸன் போன்ற சோபையுள்ளவனுமான அந்தக்கௌதமனைப் பார்த்து, அவனைப் பதிதனும் குறைவை அடைந்தவனுமாகத் தெரிந்துகொண்டு, பிராம்மணர் வெட்கமுற்று உடனே இந்தவசனத்தைச் சொல்லத்தொடங்கினர்.

'ஐயோ என்ன அவிவேகத்தால் செய்கிறாய்? நீ, நற்குலத்திற் பிறந்த பிராம்மணனன்றோ? மத்திய தேசத்தானென்று அறியப்பட்ட நீ எப்படித் திருடர்களின் நிலையை அடைந்தாய்? பிராம்மணனே! வேதத்தில் கரைகண்டவர்களும் ப்ரஸித்திபெற்றவர்களுமான உன் முன்னோர்களான ஸாதுக்களை நினைத்துப்பார். அந்தப் பெரியோர்களின் குலத்திற் பிறந்த நீ இவ்விதம் குலத்தைக்கெடுக்கிறாயே! பிராம்மணனே! நீ உன்னைப் புத்தியால் தெரிந்துகொண்டு ஸத்வகுணத்தையும் ஸ்வபாவத்தையும் வேதத்தையும் அடக்கத்தையும் தயையை

யும் நன்முக நினைத்துப்பார்த்து இவ்விடத்தில் வஸிப்பதை விலக்கிக்கொள்' என்றுசொன்னர். அரசனே! ஹிதத்தைவிரும்புகிறவரும் ஸ்நேஹஹிதருமான அந்தப்பிராம்மணரால் அவ்விடத்தில் இவ்விதஞ் சொல்லப்பட்டவுடனே, அந்தக் கௌதமன், அப்பொழுது துன்பமுள்ளவன்போலப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, 'பிராம்மணஸ்ரேஷ்டரே! நான் பொருளில்லாதவனையிருக்கிறேன். நான் வேதமறிந்தவனும் அல்லன். பிராம்மணர்களில்மிகச்சிறந்தவரே! பொருளுக்கு வேண்டி இவ்விடத்தில் வந்தவனென்று என்னை அறிந்துகொள்ளும். பிராம்மணஸ்ரேஷ்டரே! இப்பொழுது உம்மைக்கண்டவுடன் நான் கிருதார்த்தனாகிறேன். பிராம்மணரே! இன்றிரவு இங்குவஸித்துக்கொண்டிரும். நாளைத்தினம் சேர்ந்து வழியிற்செல்லுவோம்' என்று மறுமொழி சொன்னன். அந்தப்பிராம்மணர் வெட்கமுற்று ஒன்றையும் தொடாமல் அவ்விடத்தில் வஸித்தார். பசியுள்ள அவர் உபசரிக்கப்படுகிறவராலும் போஜனம்செய்ய விரும்பவில்லை.

நூற்றறுபத்தெட்டாவது அத்யாயம்.

ஆபத்தாமம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், கௌதமன் பொருள்தேடுவதற்காகச் சென்றதையும், ஒரு கொக்கினுடன் நட்புக்கொண்டதையும் கூறியது.)

அன்று இரவுவிடிந்ததும் அந்தப்பிராம்மணோத்தமரானவர் சென்றவுடன், கௌதமன் தனவிருப்பமுள்ளவனாகி வெளியில் கிளம்பிச்சென்று ஸஞ்சரிக்கத்தொடங்கினன். பிறகு, அவன் வழியில் சென்ற கடல்யாத்திரைசெய்யும் வர்த்தகர்களைக் கண்டான். அவன் அந்தக்கூட்டத்துடன்கூட ஸமுத்திரத்தைக்குறித்துப் பிரயாணஞ் செய்யத்தொடங்கினன். மஹாராஜனே! பிறகு, அந்தவர்த்தகக் கூட்டமானது ஒருமலையின்குகையிலுள்ள மதம்பிடித்தயானையால் பெரும்பாலும் கொல்லப்பட்டதாயிற்று. அப்பொழுது உயிரில் ஆசையுள்ளவனும், 'எந்தத்திக்கில் செல்லுவேன்?' என்றுபயந்தவனுமான அந்தப்பிராம்மணன் மிக்கபிரயாஸத்தால் அந்தப்பயத்திலிருந்து விடுபட்டு வடதிசையைநோக்கி ஓடத்தொடங்கினன். பிறகு, கூட்டத்திலிருந்தும் தேசத்திலிருந்தும் காரியத்திலிருந்தும் நழுவுதலடைந்த அந்தப்பிராம்மணன் தாழ்ந்த மனிதனைப்போல ஸஹாயமில்லாமல் அந்த அரண்யத்தில் சுற்றிக்கொண்டிருந்தான். பிறகு, அவன் அப்பொழுது கடலுக்குச்செல்லும் வழியை அடைந்து பூத்தமரங்களுள்ளதும்

எல்லா ருதுக்களிலும் பூக்களுள்ளமாங்காடுகளால் அலங்கரிக்கப் பட்டதும் நந்தனவனத்தின் இடத்திற்கொப்பானதும் யக்ஷர்களாலும் கின்னரர்களாலும் அடையப்பட்டதும் [1]ஸாலம், பீன, வெள்வேல், அரசு, ஆல், அகில் இவைகளின்காடுகளாலும் சிறந்தசந்தனமரங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் அழகுள்ளதுமான பெரிய அரண்யத்தை அடைந்தான். அந்த அரண்யத்தில் ஸ்ரீகமானவாஸினியுள்ளவைகளும் ஸ்ரீகமுள்ளவைகளும் அழகுள்ளவைகளுமான மலையின் தாழ்வரைகளில் நான்குபக்கங்களிலும் மிகச்சிறந்தபக்ஷிகள் அழகாகச் சப்தித்துக்கொண்டிருந்தன. மனுஷ்யர்களின் முகம்போன்ற முகமுள்ளவைகளும் பாருண்டங்களென்று பிரஸித்திபெற்றவைகளுமான வேறுபக்ஷிகளும் கடலில் செல்லத்தக்க வேறுசிலபக்ஷிகளும் நான்குபுறங்களிலும் மேலே பறந்துகொண்டிருந்தன. அந்தக்கௌதமனென்ற பிராம்மணன் மிக்க அழகுள்ளவைகளும் மிகவும்மனத்தைக்கவரத்தக்கவைகளுமான பக்ஷிகளின்சப்தங்களைக் கேட்டுக்கொண்டே சென்றான். பிறகு, மிக்கஅழகான இடங்களில் பொன்மணல்கள் நிரம்பியதும் ஆச்சர்யமானதும் ஸ்வர்க்கலோகத்திலுள்ள தேசத்திற்குச் சரியான காந்தியுள்ளதும் மேடுபள்ளமில்லாததுமான அந்தப்ர தேசத்தின் ஒருபக்கத்தில் லக்ஷ்மியால் வஸிக்கப்பட்டதும் மிகப்பெரிதுமான ஓர் ஆலமரத்தைக்கண்டான். மரத்திற்குத்தகுதியான கிளைகளால் சூழப்பட்டதும் குடைபோன்றதும் உத்தமமானசந்தனஜலத்தால் நனைக்கப்பட்டதும் திவ்யமான புஷ்பங்களுடன்கூடியதும் சோபையுள்ளபிரம்மதேவரின் ஸபையை உபமானமாகக்கொண்டதுமான அந்தமரத்தின் அடியையும் மனத்திற்குப்பிரியமுள்ளதும் மிகஉத்தமமுமான அந்தமரத்தையும் கண்டு கௌதமன் பிரீதியுள்ளவனுய்ப் பரிசுத்தமானதும் தேவர்களின்வீடுபோல் விளங்குவதும் புஷ்பங்களுள்ளமரங்களால் சூழப்பட்டதுமான அந்த ஆலமரத்தினருகிற்சென்று ஸந்தோஷத்தை அடைந்து அந்த மரத்தினடியில் உட்கார்ந்தான். குந்தியின் குமாரனே அரசனே! அந்த மரத்தினடியில் உட்கார்ந்திருக்கும் கௌதமனுக்கு அப்பொழுது பூக்களை நன்றுகஸ்பர்சித்துக் கொண்டு அவனுடைய அங்கங்களை ஸந்தோஷப்படுத்துகிறதான ஸுகமான காற்றுனது நன்றுக வீசிற்று. அரசனே! மிகவும் ச்ரமமுற்ற அந்தப்ராம்மணன் உத்தமமான காற்றினால் வீசப்படவும் ஸுகமடைந்து உறக்கமுற்றான். ஸூர்யனும் அஸ்தமயமடைந்தான். பிறகு, ஸூர்யன் அஸ்தமயமடைந்து

---

1 ஆச்சாமரம்.

ஸந்தியாகாலம் வந்ததும், காஸ்யபருக்குப் பிள்ளையும் அறிவுள்ளவர்களில் பெரியதும் கொக்குக்களுக்கு அரசும் பிரம்மதேவருக்கு ஆஜைசத் தோழமையுள்ளதும் நாடீஜங்கனென்று ப்ரஸித்தி பெற்றதும் உத்தமமுமான பக்ஷியானது பிரம்மலோகத்திலிருந்து தன் வீடான அந்த ஆலமரத்திற்கு வந்தது. தேவ கன்னிகையின் பிள்ளையும் காந்தியுள்ளதும் அறிவுள்ளதும் தேவர்களுக்குச் சரியான காந்தியுள்ளதும் ராஜதர்மாவென்று பிரஸித்தி பெற்றதுமான அது பூமியில் ஒப்பற்றதாயிருந்தது. மெருகிட்ட தங்கத்தால் மறைக்கப்பட்டதும் ஸூர்யனுக்குச் சமமான ஆபரணங்களால் எல்லா அங்கங்களிலும் அலங்கரிக்கப்பட்டதும் தேவகுமாரனுமான அந்தப்பக்ஷியானது காந்தியால் ஜ்வலித்துக்கொண்டு வந்தது. கௌதமன், வந்த அந்தப்பக்ஷியைக் கண்டு ஆச்சர்யம் அடைந்தான். பசியும் தாகமும்சூழ்ந்த புத்தியுள்ள கௌதமன் அந்தப்பக்ஷியைக் கொல்லவேண்டுமென்று பார்த்தான். ராஜதர்மாவென்னும் பக்ஷியானது, 'ஓ! ப்ராம்மணரே! உமக்கு நல்லவரவா? (என்னுடைய) பாக்யத்தால் என் வீட்டை அடைந்தவராக இருக்கிறீர். ரவியும் அஸ்தமயத்தை அடைந்துவிட்டான். இதோ ஸந்தியாகாலம் வந்துவிட்டது. என்னுடைய வீட்டை அடைந்த குற்றமில்லாத நீர் பிரியமான அதிதியாகிறீர். விதியில் காணப்படும் கர்மப்படி பூஜிக்கப்பட்டு நீர் காலையில் பிரயாணப்படலாம்' என்றுசொல்லிற்று.

நூற்றறுபத்தோன்பதாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், கௌதமன் கோக்கினால் ஏவப்பட்டு, மனுவ்ராஜ நகரத்தை அடைந்து, அதன் அரசனால் உபசரிக்கப்பட்டதைச் சொல்லியது.)

அரசனே! கௌதமன் அப்பொழுது இனிமையான அந்தச் சொல்லைக்கேட்டு ஆச்சர்யமடைந்து குதூஹலத்துடன் ராஜதர்மாவென்னும் அந்தப் பக்ஷியைப்பார்த்தான். ராஜதர்மா, 'ஐயா! நான் காஸ்யபரின்புத்திரன். பதிவ்ரதையான தாக்ஷாயணி என்னுடைய தாய். நீர் நற்குணங்களையுடையவராயிருக்கிறீர். ப்ராம்மணோத்தமரே! உமக்கு நல்வரவா?' என்றுசொல்லிற்று. (சொன்னபின்), அந்த ராஜதர்மாவானது விதியில் காணப்படும் கர்மப்படி அந்த ப்ராம்மணனின்பொருட்டு மரியாதையைக் செய்தபின் ஸாலவிருக்ஷங்களின் புஷ்பங்களால் செய்யப்பட்ட திவ்யமான ஆஸனத்தை ஏற்படுத்திக் கங்காநதியால் பின்செல்

லப்பட்ட பகீரதரின்தேர் சென்ற இடங்களில் எந்தப்பெரிய மீன் கள் ஸஞ்சரிக்கின்றனவோ அவைகளையும் அந்தப் பிராமணனுக்கு ஹித்தஞ் செய்தது. காச்யபரின் புத்திரனான அந்தப்பக்ஷியா னது மிக்க பெரியவைகளான மீன்களையும் நன்றாக ஜ்வலிக்கும் அக்னியையும் அதிதியான கௌதமனுக்கு அளித்தது. பெரிய மனமுள்ள அந்தப்பக்ஷியானது, போஜனம் செய்தவனும் ஸந் தோஷமடைந்த மனமுள்ளவனுமான அந்த ப்ராம்மணனைக் களைப்பை மாற்றவேண்டியதற்காகச் சிறகுகளால் வீசிற்று. பிறகு, ஸ்ரமபரிகாரம் அடைந்து உட்கார்ந்திருக்கும் ப்ராம்மணனைக் கோத்திரத்தையும் நடக்கையையும் வினவிற்று. அந்தப்ராம் மணன், 'நான் கௌதமகோத்திரத்தில் பிறந்தவன்' என்றும், 'ப்ராம்மணன்' என்றும் கூறினன். அவன்பொருட்டு இலைகளால் செய்யப்பட்டதும் திவ்யமானே புஷ்பங்களால் வாஸனையுள்ளதாகச் செய்யப்பட்டதும் வாஸன நிறைந்ததுமான படுக்கையை அளித் தது. அந்தப்ராம்மணன் ஸுகமாக அந்தப்படுக்கையில் படுக்கத் தொடங்கினன். பிறகு, வாக்கியங்களை அறிந்தவைகளுள் சிறந்த தும் நல்லவாக்குள்ளதும் காச்யபரின் பிள்ளையுமான அந்தப் பக்ஷி யானது, படுக்கையில் உட்கார்ந்திருக்கும் கௌதமனைநோக்கி, 'வந்தகாரணம் என்ன?' என்று வினவிற்று. பாரத! உடனே கௌதமன், 'பெரிய புத்தியுள்ளவனே! நான் ஏழை. தனம் ஸம்பா திக்க வேண்டுமென்று கடலில் செல்லவிரும்பி வந்தேன்' என்று அந்தப்பக்ஷியிடம் சொன்னன். காச்யபரின் பிள்ளையான பக்ஷி யானது, ப்ரீதியுடன் அந்தப்ராம்மணனை நோக்கி, 'ஓ! ப்ராம்மண ஸ்ரேஷ்டரே! நீர் சோகத்தை அடையத்தக்கவரல்லர். காரியத் தைச் செய்துகொண்டவரும் திரவியங்களை உடையவருமாக வீடு செல்லப்போகிறீர். 'பொருளை அடையத்தக்க வழியானது மித்திர னும் கல்வியும் பொருளும் அறிஞர்கள் விரும்பத்தக்க புத்தியும் என நான்கு வகைப்படும்' என்று ப்ருஹஸ்பதி கூறியிருக்கிறார். நான் உமக்கு நண்பனாகிறேன். மித்திரத்தன்மையானது மிகவும் பெரிது. அவ்விதம் மித்திரனை நான் நீர் எவ்விதம் பொரு ளுள்ளவராவீரோ அவ்விதம் முயற்சிசெய்கிறேன்' என்றுசொல் லிற்று. பிறகு, பொழுதுவிடிந்த ஸமயத்தில் ஸுகப்ரபுன்னம் செய்த பின், 'அழகுள்ளவரே! இந்தவழியால் செல்லும். செய்யவேண்டியதைச் செய்து கொண்டவராவீர். இங்கிருந்து மூன்று யோஜனைதூரம் போன பின்பு, ராக்ஷஸர்களுக்கு அதிபதியும் மஹானும் விரூபாக்ஷனென்று பிரஸித்திபெற்ற வனும் மஹாபலசாலியுமான என்னுடைய ஸ்நேஹிதன்

ஒருவன் இருக்கிறான். ப்ராம்மணஸ்ரேஷ்டரே! நீர் அவனிடம் போய்ச் சேரும். அவன் என்னுடையவசனத்தால் ஏவப்பட்டு இஷ்டமானகாமங்களை உமக்குஅளிப்பான். இதில் ஸந்தேஹமில்லை' என்ற இவ்வசனத்தைச் சொல்லிற்று. அரசனே! இவ்விதம்சொல்லப்பட்ட கௌதமன் ப்ரமம்நீங்கினவனாகி அமிருதத்திற்கொப்பான கனிகளை இஷ்டம்போலப் புஜித்துக்கொண்டுசெல்லத்தொடங்கினன். மஹாராஜனே! அந்தவழியிலுள்ள சிறந்த சந்தனமும் அகிலுமாகிய மரங்களையும் நல்லஇலையும் பட்டையுமுள்ளகாடுகளையும் பார்த்துக்கொண்டு வேகமாகச் சென்றான். உடனே, கற்களால் கட்டப்பட்ட தோரணங்களுள்ளதும் கற்களால் அமைக்கப்பட்ட பிராகாரங்களும் தாழ்வரைகளுமுள்ளதும் சிலாமயமான யந்திரத்தாழ்களுள்ளதுமான [1]மஹாவ்ரஜமென்னும் நகரத்தை அடைந்தான். அரசனே! அவனை, ஸ்நேஹமிதனால் அனுப்பப்பட்டவனும் ஸந்தோஷிக்கத்தக்கவனுமான ப்ரியஅதிதியென்று புத்திமானான அந்தராக்ஷஸராஜன் அறிந்துகொண்டான். யுதிஷ்டிர! உடனே, அந்தராக்ஷஸராஜன், தன்வேலைக்காரர்களைநோக்கி, 'நகரின்துவாரத்திலிருந்து சீக்கிரமாகக் கௌதமனை அழைத்துவரவேண்டும்' என்றுசொன்னான். அந்த உத்தமமான பட்டணத்திலிருந்து வெண்மையான கவசமுள்ளபுருஷர்கள், 'கௌதம! கௌதம!' என்றுகூவிக்கொண்டு வேகமாக நகரின் கோட்டைவாயிலுக்கு வந்தார்கள். மஹாராஜனே! அப்பொழுது அரசனுடைய அந்தவேலைக்காரர்கள், அந்தப்ராம்மணனைநோக்கி, 'சீக்கிரப்படு; சீக்கிரமாக வா. ராக்ஷஸர்களுக்கு அதிபதியும் வீரரும் விரூபாக்ஷனென்று ப்ரஸித்தருமான அரசர் உன்னைப் பார்க்கவிரும்புகிறார். அவர் உன்னைப் பார்க்க அவஸரப்படுகிறார். ஆகையால், சீக்கிரஞ் செல்லவேண்டும்' என்று சொன்னார்கள். உடனே, அந்தப்ராம்மணன் ஆச்சர்யத்தால் ப்ரமம் நீங்கினவனாகி விரைந்துசென்றான். அப்பொழுது அந்தச் சிறந்தஸம்பத்தைப்பார்த்து மிகவும் வியப்படைந்தவனும் அந்தவேலைக்காரர்களுடன் கூடிச் சென்றவனுமான கௌதமனென்னும் ப்ராம்மணன் ராக்ஷஸராஜனுடைய தர்சனத்தை விரும்பிக்கொண்டு அவனுடையவீட்டை வேகமாக அடைந்தான்.

---

1 'மேருவ்ரஜம்' என்பது வேறுபாடம்.

ஸ்ரீ மஹாபாரதம்.

நூற்றெழுபதாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், விநபாக்ஷன் கௌதமனுக்கு ஸுவர்ணழுதலியவற்றைக் கொடுத்தனுப்பியதையும், அவன் திரும்பிக் கோக்கினிடம் வந்து உபசரிக்கப்பெற்று அந்தக்கோக்கைக்கொல்லத் துணிந்ததையும் சொல்லியது.)

பிறகு, அறியப்பட்ட அந்தக்கௌதமன் உத்தமமான ராக்ஷஸராஜன்வீட்டை அடைந்து அவனல் பூஜிக்கப்பட்டு உத்தமமான ஆஸனத்தில் உட்கார்ந்தான். அவன் கோத்திரத்தையும் ப்ரம்மசர்யத்தில்செய்த வேதாத்யயனத்தையும் வேதத்திலுள்ள ஸாகையையும் வினவப்பட்டான். அரசனல் ப்ரஸ்னஞ்செய்யப்பட்ட ப்ராம்மணன் ஒன்றையும் அறியவில்லை. பிறகு, கோத்திரத்தைமட்டில்சொன்னன். ப்ராம்மணர்களுக்குள்ள தேஜஸில்லாதவனும் வேதாத்யயனத்திலிருந்து விலகியவனும் கோத்திரத்தைமட்டில் அறிந்தவனுமான அந்தப்ராம்மணனுடைய இருப்பிடத்தைப்பற்றி அரசன் கேட்கத்தொடங்கினன். 'ஏ! கல்யாண! எவ்விடத்தில் உனக்குவாஸம்? உன்னுடையபார்யையானப்ராம்மணி எந்தக்கோத்திரத்திலுண்டானவள்? உண்மையைச்சொல்; பயப்படவேண்டாம்; ஸுகமாகஇருக்கும்படி ப்ரமபரிகாரம் செய்துகொள்' என்றுசொன்னன். கௌதமன், 'நான் மத்யதேசத்தில் பிறந்தவன். வேடர்களுக்கிருப்பிடமான ஒருசேரியில் எனக்கு வாஸம். இரண்டாவது தடவை விவாஹஞ்செய்யப்பட்ட சூத்ரஸ்த்ரீ என்னுடையமனைவி; உண்மையாக இதனை உன்னிடஞ்சொல்லுகிறேன்' என்றுசொன்னன். உடனே, அரசன் ஆலோசிக்கத் தொடங்கினன். 'எப்படி இது செய்யத்தக்கதாகும்? எனக்குப் புண்யந்தான் எவ்விதமுண்டாகக்கூடும்? இவன் பிறப்பில் ப்ராம்மணன்; மஹாத்மாவான அந்தராஜதர்மாவென்னும்பக்ஷிக்கு மித்ரன். காச்யபரின் பிள்ளையும் மஹாத்மாவுமான அந்தப்பக்ஷியால் இவன் அனுப்பப்பட்டிருக்கிறன். அந்தப்பக்ஷியோ எப்பொழுதும் என்னை அடுத்தது. நான் அதற்குப்பிரியத்தைச்செய்வேன். அந்தப்பக்ஷியானது எனக்கு உடன் பிறப்பும்பந்துவும்நட்புள்ளதும் பிரியமுள்ளதுமாயிருக்கிறது. இப்பொழுது கார்த்திகைமாதத்திய பூர்ணிமாதிதியில் என்னுடைய வீட்டில் உத்தமர்களான ஆயிரம் ப்ராம்மணர்கள் போஜனஞ்செய்யப்போகிறார்கள். அதில் இந்தப்ராம்மணனும் போஜனஞ்செய்யட்டும். இந்த ப்ராம்மணன்பொருட்டும் என்னுடையதனத்தைக் கொடுக்கவேண்டும். புண்யமான அந்தநாள் இப்பொழுதுவந்திருக்

கிறது. இந்தப்ராம்மணனும் அதிதியாகவந்திருக்கிறான். (அதற்காகத்).தனமும் ஸங்கல்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்குமேல் என்ன ஆலோசிக்கத்தக்கது' என்று புத்தியால் ஆலோசித்தான். பிறகு, ஸ்நானஞ் செய்தவர்களும் [1] பூசத்தக்கவைகளைப் பூசிக்கொண்டவர்களும் புதிய வெண்பட்டு ஆடையுள்ளவர்களும் அறிஞர்களுமான ஆயிரம்ப்ராம்மணர்கள் அலங்கரிக்கப்பட்டவர்களாய் வந்தார்கள். அரசனே! விரூபாக்ஷனென்ன வந்த அந்தப்ராம்மணஸ்ரேஷ்டர்களைச் சாஸ்திரவிதியில் காணப்படும்முறைப்படி யோக்யதைக்குத்தக்கபடி வரவேற்றான். பரதர்களில்மிகச் சிறந்தவனே! ராக்ஷஸராஜனுடைய உத்தரவுப்படி வேலைக்காரர்களால் அந்தப்ராம்மணர்களுக்கு உத்தமமான குஶங்களால்பரப்பப்பட்ட ஆஸனங்கள்பூமியிற்போடப்பட்டன. அந்த ஆஸனங்களில் உட்கார்ந்த அந்தப்ராம்மணஸ்ரேஷ்டர்கள் அரசனல்பூஜிக்கப்பட்டார்கள். பிறகு,ப்ராம்மணர்கள் விதிப்படியெள்ளாலும் தர்ப்பத்தாலும் ஜலத்தாலும் பூஜிக்கப்பட்டார்கள்; விஶ்வேதேவர்களாகவும் பித்ருக்களாகவும் அக்நிகளாகவும் ஏற்படுத்தப்பட்டார்கள். மஹாராஜனே! சந்தனம் பூசப்பெற்றவர்களும் புஷ்பங்களையணிந்தவர்களும் நன்றுகப்பூஜிக்கப்பட்டவர்களும்நல்ல ஆசாரமுள்ளவர்களுமான ப்ராம்மணர்கள் பலசந்திரர்கள்போல விளங்கினர்கள். பிறகு, வஜ்ரத்தால் அடையாளம் பண்ணப்பட்டவைகளும் பரிசுத்தமானவைகளும் அழகுள்ளவைகளும் சிறந்த அன்னங்களால் நிறைந்தவைகளும் நெய்யிலும் தேனிலும் நனைக்கப்பட்டவைகளுமான தங்கப்பாத்திரங்களை ப்ராம்மணர்களுக்குத்தானஞ்செய்தான். அவனுடைய வீட்டில் எப்பொழுதும் ஸ்ரேஷ்டமான ஆஷாடமாஸத்திய பூர்ணிமையிலும் மாகமாஸத்திய பூர்ணிமையிலும் பலப்ராம்மணர்கள் மரியாதையுள்ளதும் விரும்பத்தக்கதுமான சிறந்த போஜனத்தைப் பெறுவார்கள். விசேஷமாகச் சரத்காலத்தின் முடிவில் கார்த்திகைமாஸத்திய பூர்ணிமாதிதியில் ப்ராம்மணர்களின் பொருட்டு ரத்தினங்களைக்கொடுப்பானென்றுகேள்வி. பாரத! மிக்கபுகழ்பெற்ற அந்த விரூபாக்ஷன், தக்ஷிணைக்காகத் தங்கத்தையும் வெள்ளியையும் மணிகளையும் முத்துக்களையும் அதிகவிலையுள்ள வஜ்ரங்களையும் வைடூர்யங்களையும் தோல்களையும் கம்பளங்களையும் ரத்தினங்களுள்ள பாத்திரங்களையும் அளித்து ப்ராம்மண ஸ்ரேஷ்டர்களைநோக்கி, 'ஓ! ப்ராம்மணோத்தமர்களே! உத்ஸாஹம்போல வேண்டிய அளவு இந்த ரத்னங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். எந்தஎந்தப் பாத்திரங்களில் போஜனஞ்செய்தீர்களோ அந்த அந்தப்பாத்திரங்களையும்

---

1 'அநுலிப்தாநாம்' என்பதுமூலம்.

எடுத்துக்கொண்டு உம்வீடுகளுக்குச்செல்லுங்கள்' என்று சொன்னான். பாரத! மஹாத்மாவான அந்தராகூஷஸராஜன் இவ்விதவசனத்தைச் சொன்னவுடன், ப்ராம்மணஸ்ரேஷ்டர்கள் அந்தரத்தினங்களை இஷ்டப்படி எடுத்துக்கொண்டார்கள். பிறகு, அந்த அரசனால் மிகச் சிறந்த சுபமான அந்தரத்தினங்களால் பூஜிக்கப்பட்ட ப்ராம்மணர்கள் சுத்தமான ஆடையுள்ளவர்களும் மிகவும் ப்ரீதியுள்ளவர்களும் ஸந்தோஷமுள்ளவர்களுமானர்கள். பிறகு, ராகூஷஸர்களுக்குப்பதியான அந்த அரசன், பலதேசங்களிலிருந்துவந்திருக்கும் ப்ராம்மணர்களை மரியாதைசெய்து அவர்களைநோக்கித் திரும்பவும், 'ப்ராம்மணர்களே! இன்று ஒருநாள் உங்களுக்கு ஓரிடத்திலும் ராகூஷஸர்களிடமிருந்து பயமில்லை; ஸந்தோஷமடையுங்கள். தாமதமின்றி இஷ்டமான இடத்திற்குச் செல்லுங்கள்' என்ற வார்த்தையைச் சொன்னான். உடனே, எல்லா ப்ராம்மணக்கூட்டங்களும் நான்குபுறத்திலும் ஓடின. கௌதமனும் ஸுவர்ணத்தின் சுமையை எடுத்து அந்தப்பாரத்தைக் கஷ்டத்துடன் தூக்கிக்கொண்டு விரைவாக ஆலமரத்தை வந்தடைந்தான். அவன் ஸ்ரமமடைந்தவனும் வாடியவனும் பசியுள்ளவனுமாய் உட்கார்ந்தான். அரசனே! பிறகு, பக்ஷிகளில் உத்தமமான ராஜதர்மாவானது அந்தக் கௌதமனை வந்தடைந்தது. மித்ரர்களிடம் ஸ்நேகமுள்ள பக்ஷியானது கௌதமனை நல்வரவழைத்து ஸந்தோஷிப்பித்தது. புத்தியுள்ளகொக்கானது தன் சிறகின்நுனியை வீசுவதால் அவனுக்குள்ள ஸ்ரமத்தை விலக்கியது; விதிப்படி பூஜையையும் போஜனத்தையும் செய்வித்தது. பிறகு, அந்தப்பக்ஷிராஜனும் ப்ராம்மணனுமாகிய இருவர்களும் வார்த்தைசொல்லிக்கொண்டிருந்தார்கள். இரவில் கௌதமன் அந்தப்பக்ஷிக்கு அருகிலிருந்துகொண்டு ஆலோசிக்கத் தொடங்கினன். 'அழகான ஸுவர்ணத்தின்மிகப்பெரிய இச்சுமை பேராசையாலும் அவிவேகத்தாலும் என்னலடையப்பட்டது. எனக்குப் போகவேண்டிய இடமும் தூரமாக இருக்கிறது. வழியில் உயிரைக் காப்பாற்றத்தக்க போஜனமும் எனக்கு இல்லை. எதைச் செய்தால் நன்றுகச்செய்யப்பட்டதாகும்?' என்றுபெரியசிந்தை உள்ளவனானன். பிரபுவான புருஷப்புலியே! பிறகு, வழியில் பூஜிக்கத்தக்கதான ஒன்றையும் காணுதவனும் நன்றிகெட்டவனுமான அந்தக்கௌதமன், 'பக்கத்திலுள்ளதும் கொக்குக்களுக்குப் பதியுமான இந்தப்பக்ஷியானது நிறைந்தமாம்ஸப்பற்றுள்ளதும் பெரிதுமாயிருக்கிறது. இதைக்கொன்று இதன் மாம்ஸத்தை எடுத்துக்கொண்டு செல்வேன்' என்று மனத்தில் இந்த ஆலோசனையைச் செய்துகொண்டான்.

நூற்றெழுபத்தோராவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், கௌதமன் அந்தக்கோக்ஷைகக் கொன்று எடுத்துக்கொண்டு தன் கிராமத்தைக் குறித்துப் போனதையும், கோக்த தன்னிடம் வாராததால் விருபாக்ஷன் ஸந்தேஹித்துத் தன்புத்திரனை அனுப்பியதையும், அவன் கௌதமனைக் கொன்றதையும் சொல்லியது)

பிறகு, அவ்விடத்தில் பெரியஜ்வாலையுள்ளதும் காற்றை ஸஹாயமாகக்கொண்டதுமான தீயானது அந்தக்கௌதமனுக்குச் சமீபத்தில் ரக்ஷிக்குவேண்டிச் சிறந்தபக்ஷியால் உண்டுபண்ணப்பட்டிருந்தது. கொக்குக்களுக்கு அரசான அந்தப்பக்ஷியும் அப்பொழுது நம்பிக்கையுடன் பக்கத்தில் உறங்கத்தொடங்கிற்று. நன்றிகெட்டவனும் துஷ்டபுத்தியுள்ளவனுமான அந்தப்ராம்மணனே அந்தப்பக்ஷியைக்கொல்லவேண்டுமென்னும் விருப்பத்தினால் தூங்காமலிருந்தான். பிறகு, அவன், உறக்கமடைந்த அந்தப்பக்ஷியை எரிந்துகொண்டிருக்கும்கொள்ளியால் கொன்றான். கொன்றபின்னும் அவன் பாபத்தைநினையாமல் ஸந்தோஷத்துடனிருந்தான். அவன் அந்தப்பக்ஷியைச் சிறகையும் ரோமங்களையும் விலக்கி அப்பொழுது தீயினால் பாகஞ்செய்தான். பாகஞ்செய்த அந்தப்பக்ஷியையும் ஸுவர்ணத்தையும் எடுத்துக்கொண்டு அவன் மிகவும் வேகமாகப் புறப்பட்டான். பாரத! பிறகு, விரூபாக்ஷன் தாக்ஷாயணியின்பிள்ளையான அந்தப்பக்ஷி வராமலிருப்பதைப்பற்றி வருத்தமுற்றமனத்துடன் சிந்தையுள்ளவனானன். பிறகு, மறுநாள்சென்றவுடன், விரூபாக்ஷன் தன்புத்திரனைநோக்கிச் சொல்லத்தொடங்கினன். 'மகனே! பக்ஷிகளுள் உத்தமமான ராஜதர்மாவை இன்றும் நான் காணேன். அந்தப்பக்ஷியானது எப்பொழுதும் முதல்சந்தியில் பிரம்மதேவரை நமஸ்கரிக்கிறதற்காகப்போகும். அஃது ஒருபொழுதும் என்னைப்பாராமல் வீடுசெல்லுகிறதில்லை. அஃது இரண்டுநாள் இரண்டுஸந்திகளிலும் என்னுடைய வீட்டிற்கு வரவில்லை. ஆகையால், என்னுடைய எண்ணமானது தெளிவாயிருக்கவில்லை. ஸ்நேஹமுள்ள அதை அறியவேண்டும். வேதாத்யயனத்தைவிட்டுவிலகியவனும் ப்ராம்மணர்களுக்குரிய தேஜஸில்லாதவனுமான அந்தக்கௌதமன் அவ்விடத்திற்குச் சென்றிருக்கிறான். எனக்கு ஸந்தேகமாயிருக்கிறது. ப்ராம்மணர்களுள் அதமனை அந்தக்கௌதமன் அந்தப்பக்ஷியைக் கொல்லுவான். கெட்ட ஆசாரமுள்ள அந்தப்ராம்

மணன் துர்ப்புத்தியுள்ளவனென்று இங்கிதங்களால் என்னுணர்ந்
பட்டான். தயையில்லாதவனும் குரூரமான ஆகிருதியுள்ளவனும்
துஷ்டனும் திருடன்போல அதமனுமான அந்தக்கௌதமன்
அவ்விடத்திற்குச் சென்றிருக்கிறான். அதனால், என்னுடையமனம்
பயமடைந்திருக்கிறது. மகனே! சீக்கிரம் இவ்விடமிருந்து ராஜ
தர்மாவின் வீட்டிற்குப்போய்ப் பரிசுத்தமானபுத்தியுள்ள அந்த
ராஜதர்மாவானது ஜீவித்திருக்கிறதாவென்று 1 தாமதமின்றி
அறியவேண்டும்' என்றுசொன்னான். இவ்விதஞ்சொல்லப்பட்ட
அந்தப்புத்திரன் ராக்ஷஸர்களுடன்கூடிக்கொண்டு வேகமாகச்
சென்றான். உடனே, ஆலமரத்தடியில் ராஜதர்மா கொல்லப்பட்
டிருந்ததைக்கண்டான். அந்தராக்ஷஸன், அந்தராஜதர்மாவின்
பொருட்டுப் பலவிதமாகப் புலம்பி அழுது, பின் கோபங்கொண்டு,
கௌதமனைப்பிடிக்கவேண்டியதற்காகச் சென்றான். பாபியான
கௌதமன், மிகவும் கோபம் மேலிட்ட ராக்ஷஸர்களால் பிடிக்கப்
பட்டான். உடனே, ராஜதர்மாவினுடைய சரீரத்தின் எலும்
பும் எடுக்கப்பட்டது. உடனே, கோபத்தால் சிவந்தகண்ணுள்ள
வர்களும் கொடியவர்களுமான ராக்ஷஸர்கள் கௌதமனைக்கொலை
செய்வதில் உறுதியுள்ளவர்களாய் மனுவ்ரஜமென்னும் நகரை
அடைந்தார்கள். அரசன்முன்னிலையில் ராஜதர்மாவின் எலும்பு
வைக்கப்பட்டது. அதைக்கண்டவுடன், அரசன் மந்திரிகளுடனும்
மற்றக்கூட்டங்களுடனும் மனவருத்தமுள்ளவனான். காச்ய
பரின்பிள்ளையான கொக்குகொல்லப்பட்டதும், மஹாத்மாவான
அந்த அரசனுடையவீட்டில் ஸ்திரீக்கூட்டத்தினுடைய பெரிய
துக்கத்வனியானது மிகவும் கிளம்பியது. அரசன், புத்திரனை
நோக்கி, 'இந்தப்பாபியானகௌதமனைக் கொலைசெய்யவேண்டும்'
என்று சொன்னான். ராக்ஷஸர்கள், 'முன் பாபத்தைச்செய்தவ
னும் இப்பொழுது பாபத்தைச்செய்கிறவனும் பாபபுத்தியுள்ளவ
னும் பாபத்திலுறுதியுள்ளவனும் பாபவடிவமானவனும் நன்றி
கொன்றவனுமான இவன் கொலைசெய்யப்படவேண்டியவன்தான்;
இதில் ஸந்தேஹமில்லை. இவனுடையமாம்ஸத்தை நாமனைவரும்
ஒன்றுசேர்ந்து புஜித்துவிடுவோம்' என்று சொன்னார்கள். விரூ
பாக்ஷன், 'நன்றிகொன்றவனும் பாபச்செய்கையுள்ளவனுமான
இவனைப்புஜிப்பதற்கு எனக்கு உத்ஸாஹமில்லை. மித்திரத்ரோஹி
யும் புருஷர்களுள் அதமனுமான இவனை வேலைக்காரர்களுக்குக்
கொடுக்கவேண்டும்' என்றுசொன்னான். புருஷர்களிலுத்த
மனே! (பிறகு) அழைக்கப்பட்ட வேலைக்காரர்களெல்லாரும் அவ்

1 வேறுபாடம்.

நமீம மற்றராகூஸர்களும் நன்றிகெட்ட அந்தக்கௌதமனைப் புஜிப்பதற்கு விருப்பங்கொள்ளவில்லை. பிறகு, அவர்கள் வந்து தலைகளால் பூமியில்வணங்கி, 'மஹாராஜரே! பலாத்காரமாக 1 ஆஹாரத்திற்குவேண்டிக் கஷ்டமானபாபத்தை நீர் ஒருபொழுதும் கொடுக்கத்தக்கவரல்லீர்' என்றுசொன்னர்கள். பிறகு, 'பாபச்செய்கையுள்ள இவனை அறுக்கவேண்டும்; எரிக்கவேண்டும்; அல்லது தள்ளவேண்டும்; இவனை நமதுபார்வையிலிருந்து விலக்கவேண்டும்' என்று அரசனுக்குச் சொன்னர்கள். உடனே, அந்தவேலைக்காரர்கள் கோபமுள்ளவர்களும் சூலமும்கத்தியும் கையிலேந்தியவர்களுமாய் அவனை விகாரமாயிருக்கும்படி கண்டம் கண்டமாக வெட்டி மாம்ஸத்தைத்தின்னும்பிராணிகளிடம் போட்டார்கள். அரசஸ்ரேஷ்டனே! மாம்ஸத்தை ஆஹாரமாகக் கொண்டபிராணிகளும் விருப்பங்கொள்ளவில்லை. மாம்ஸம்தின்னும் பிராணிகள்கூட மரணமடைந்தவர்களாயினும் நன்றிகெட்டவர்களைப் புஜிக்கிறதில்லை. பிராம்மணர்களின்பொருளை அபஹரித்ததிருடனுக்கும் பிரம்மஹத்திசெய்தவனுக்கும் குருதாரத்திற் சென்றவனுக்கும் ஸாதுக்களால் பிராயச்சித்தம்விதிக்கப்பட்டிருக்கிறது. நன்றிகெட்டவனுக்குப் பிராயச்சித்தமில்லை. மித்திரர்களை த்ரோஹம் செய்பவனும் நன்றிகெட்டவனும் க்ரூரனுமான அதமமனிதனை மிருகங்களும் புழுக்களுங்கூட எப்பொழுதும் தின்பதே இல்லை.

நூற்றெழுபத்திரண்டாவது அத்யாயம்.

ஆபத்தர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், விநுபாகூஷன் கோக்ரைச் சிதையில் ஏற்றுவித்ததையும் அது திரும்ப உயிர்பெற்றெழுந்ததையும் அதன்முயற்சியால் கௌதமன் பிழைத்துச்சென்றதையும் சொல்லியது.)

அறிவுள்ள ராகூஸராஜன் ராஜதர்மாவுக்கு ஸம்ஸ்காரஞ் செய்வித்தான். அவன் பரபரப்பில்லாமல் பலசந்தனக்கட்டைகளால் பூஜிக்கத்தக்கபடி தஹனஞ்செய்வித்தான். கொக்குகளுக்கு அரசான (அந்தக்) கொக்கானது தேவனை இந்திரனுடைய வசனத்தால் அந்த இந்திரனிலேயே அமிருதத்தால் நனைக்கப்பட்டுத் திரும்பவும் உயிருள்ளதாகச்செய்யப்பட்டது. ராஜதர்மாவும், சத்துருக்களை அடக்கும் அந்த இந்திரனைநோக்கி,

---

1 வேறுபாடம்.

'கௌதமனென்னும் பிராம்மணனெங்கே? என்னுடைய ப்ரான் நண்பனை அவனை விடவேண்டும்' என்று சொல்லிற்று. தேவர்களில் மிகச்சிறந்தவனை இந்திரன் அந்தராஜதர்மாவின்வசனீத்தை அறிந்துகொண்டு கௌதமனுக்கும் அனுமதிகொடுத்துவிட்டுப் பிறகு ப்ரீதியுள்ளவனாகிப் புறப்படுவதில் உற்சாகமுள்ளவனானன். பிரஹித்திபெற்ற அழகான அந்தராஜதர்மாவும் தன் இருப்பிடம்போய்ச்சேர்ந்தது. க்ரூரனும் மித்திரத்ரோஹம்செய்தவனும் மனிதர்களில் அதமனும் விடப்பட்டவனுமான அந்தக் கௌதமன் பொருட்சுமையுடன் அப்பொழுது வேடச்சேரியை வந்தடைந்தான். அவ்விடத்தில் நரகத்திற்கொப்பான வேடஸ்திரீயின் சரீரத்தில் இவன் பிறப்படைந்தான். அப்பொழுது தேவக்கூட்டங்களால் அவனுக்கு இப்பரியசாபமிடப்பட்டது. பராக்ரமமுள்ளராகூஸராஜனுல் பக்ஷிராஜாவானது தஹிக்கப்படும்பொழுது சிதைக்குப்பக்கத்தில் கறந்துகொண்டிருக்கும் காமதேனுவானது அந்தராஜதர்மாவைப்பிழைக்கச்செய்தது. குற்றமில்லாதவனே! அப்பொழுது அக்காமதேனுவின்வாயிலிருந்து நழுவியபாலின் நுரையானது காற்றினுலிழுக்கப்பட்டு ராஜதர்மாவின் அந்தச்சிதையை அடைந்தது. அதன்பிறகு, தேவராஜன் விரூபாக்ஷனுடைய பட்டணத்தை அடைந்தான். அப்பொழுது விரூபாக்ஷனும் அந்த இந்திரனைநோக்கி, 'தேவனே! காச்யபரின் புத்திரனை என்ஸஹோதரன் ஜீவிக்கவேண்டும்' என்று திரும்பவும்திரும்பவும் வேண்டினன். ஈசனை இந்திரனும் விரூபாக்ஷனைநோக்கி, 'முன்னொருகாலத்தில் பிரம்மதேவர் கோபத்தால் ராஜதர்மாவைப்பார்த்துச்சொல்லத்தொடங்கினர். 'நீ என்னுடைய இச்சையை எப்பொழுதும் பார்க்கவராமலிருக்கிற காரணத்தால் தர்மஸ்வபாவமுள்ளதும் பரமாத்மாவை அறிந்ததுமான கொக்காகப் பிறக்கப்போகிறாய். பாபகார்யத்தைச் செய்கிறவனும் வேடச்சேரியிலிருப்பவனும் நன்றிகெட்டவனும் சூத்திரமடந்தைக்குப்பதியுமான ஒருபிராம்மணன் ஒருஸமயம் உன்னுடைய இருப்பிடத்திற்குவருவான். அவன் எப்பொழுது (உன்னைக்) கொல்வானே அப்பொழுது உனக்குவிடுதலைவரும்' என்று அந்தராஜதர்மாவுக்குச் சொன்னர். ஆகையால், இந்தராஜதர்மாவானது உத்தமஸ்தானத்திலிருக்கும்பிரம்மதேவரின் உலகத்தை அடைந்தது' என்றுசொன்னன். குலத்தைக்கெடுத்தவனும் கெட்டசெய்கை உள்ளவனுமான அந்தப்பிராம்மணனும் நரகத்தை அடைந்தான். அரசஸ்ரேஷ்டனே! ஸபாமத்தியத்தில் அந்தவாக்யமானது நாரதரால் சொல்லப்பட்டது. இதைக்கேட்டநானும் உனக்கு உள்ளபடி

ான்னேன். அரசனே! பிரம்மஹத்திசெய்தவனுக்கும் கள்குடித்தவனுக்கும் திருடனுக்கும் அப்படியே விரதத்திலிருந்து விலகியவனுக்கும் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. நன்றிகொன்றவனுக்குப் பிராயச்சித்தமில்லை. நன்றிகொன்றவனுக்கு யசஸ் ஏது? ஸ்தானமேது? ஸுகமேது? நன்றிகொன்றவன் நம்பத்தக்கவனல்லன். நன்றிகொன்றவனுக்குப் பிராயச்சித்தமில்லை. மனிதன் விசேஷமாக மித்திரர்களுக்குத் த்ரோஹத்தைச் செய்யாமலிருக்கவேண்டும். மித்ரர்களைத்துரோஹிப்பவன், கோரமானதும் முடிவில்லாததுமான நரகத்தை அடைவான். குற்றமில்லாதவனே! நன்றியறிவுள்ளமனத்துடனும் மித்திரத்தன்மையுடனும் இருக்கவேண்டும். மித்திரனிடமிருந்து யாவுமுண்டாகும். மித்திரன் சிறந்த பாக்கியமென்று கூறப்படுகிறான். தனலாபம் மித்திரலாபம் இவ்விரண்டினுள்ளும் மித்திரலாபம் சிறந்ததாகும். மித்திரனால் தனங்கள் எளிதில் கிடைக்கக்கூடும். மித்திரனால் முயற்சிசெய்யக்கூடும். மித்திரனைவன் அபிமானிக்கப்பட்டதும் ஸ்நேஹமுள்ளதுமான பயனுவான். ஸாதுக்களுக்குள்ள பயனை மித்திரனே அறிவுள்ளவன் தன்ஜனங்களுடன்கூடி மரியாதைகளுடன் பூஜிக்கவேண்டும். அறிவுள்ளவர்கள் கிருபணனும் குலத்தைக் கெடுத்தவனும் மித்திரர்களுக்குத் த்ரோஹஞ்செய்பவனும் குலத்துக்குக் கொள்ளிபோன்றவனும் குலத்திற்கு அதமனுமான பாபியை விலக்கவேண்டும். குற்றமில்லாதவனே! ஸாதுக்களின் சேர்க்கையைப்பற்றியதும் மித்திரர்களைத்ரோஹஞ்செய்யும் நன்றிகெட்டவனைப்பற்றியதுமான இந்த அறிவு என்னால் கூறப்பட்டது. திரும்பவும் எதைக்கேட்க விரும்புகிறாய்?" என்று சொன்னார். ஜனமேஜயரே! பிறகு, மஹாத்மாவான பீஷ்மரால் சொல்லப்பட்ட இந்த வாக்யத்தைக்கேட்டு யுதிஷ்டிரரானவர் ஸந்தோஷமடைந்த மனமுள்ளவராயிருந்தார்.

ஆபத்தர்மம் முற்றிற்று.